முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், மதுரை.

முன்னிலை : திரு.க.முத்துக்குமரன் பி.எஸ்.சி., எம்.எல்.,

முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, மதுரை

அமர்வு வழக்கு எண்.470/2020

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6–ம் நாள் திங்கட்கிழமை

CNR.No.TNMD01–009503–2020

*****

| | |
|---|---|
| புகார்தாரர் | தமிழ்நாடு அரசு, சிபிஐ கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர் திரு. விஜய்குமார் சுக்லா மூலம் |
| குற்ற எண் | இவ்வழக்கு முதலில் கோவில்பட்டி காவல் நிலையத்தில் குற்ற எண்.649/2020 மற்றும் குற்ற எண்.650/2020–ன் கீழ் பதிவு செய்யப்பட்டு பின்னர் CBCID க்கு மாற்றப்பட்டு CBCID ல் குற்ற எண்.1/2020 மற்றும் குற்ற எண் 2/2020–ன் கீழ் மறுபதிவு செய்யப்பட்டு பின்னர் CBI க்கு மாற்றப்பட்டு CBI–ல் குற்ற எண் RC 0502020 S 0008/ CBI/SC–2/New Delhi மற்றும் RC 0502020 S 0009 /CBI/SC–2/New Delhi ஆக மறுபதிவு செய்யப்பட்டுள்ளது |
| எதிரிகள் | 1. திரு.எஸ்.ஸ்ரீதர், (வயது 61/2020)<br>தபெ.சண்முகம்<br>எண்.226, பாப்பம்மாள்புரம், ஆண்டிப்பட்டி தாலுகா, தேனி மாவட்டம். |

| | |
|---|---|
| | 2. திரு.க.பாலகிருஷ்ணன், (வயது 42/2026) த.பெ.கொடிவேல், எண்.18/22B, ஆவரையூர், ஆத்தூர் அஞ்சல், திருச்செந்தூர் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.<br><br>3. பி.ரகுகணேஷ்,<br>(வயது 50/2026) த.பெ.பரமசிவம்,<br>எண்.11/C கோட்டை விஷ்வகர்மா தெரு,<br>களக்காடு, நாங்குனேரி தாலுகா, திருநெல்வேலி மாவட்டம்.<br><br>4. எஸ்.முருகன், (வயது 51/2026)<br>த.பெ.சுயம்பு, எண்.13/65A பாரதி தெரு, கண்ணன்குளம், ராதாபுரம் தாலுகா, திருநெல்வேலி மாவட்டம்.<br><br>5. எ.சாமதுரை, (வயது 51/2026)<br>த.பெ.அய்யாபிள்ளை,<br>சொக்கனூர், திருக்கலூர் அஞ்சல்,<br>ஏரல் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.<br><br>6.எம்.முத்துராஜா, (வயது 36/2026)<br>த.பெ.முருகன், எண்.1/113 நடுத்தெரு, பூசனூர், விளாத்திகுளம் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.<br><br>7.எஸ்.செல்லத்துரை, (வயது 45/2026) |

| | |
|---|---|
| | த.பெ.சுப்பையா<br>கதவு எண்.1/44B, நடுத்தெரு, குப்பன்னபுரம், கடம்பூர் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.<br><br>8. சே.தாமஸ் பிரான்சிஸ், (வயது 38/2026)<br>த.பெ.சேவியர் பிரான்சிஸ்,<br>D1 பிளாக், காவலர் குடியிருப்பு,<br>தட்டார் மடம்,<br>சாத்தான்குளம் தாலுகா,<br>தூத்துக்குடி மாவட்டம்.<br><br>9.எஸ்.வெயிலுமுத்து, (வயது 42/2026)<br>த.பெ.சண்முகவேல்,<br>எண்.1/2026, பிள்ளையார்கோவில் தெரு, ஓனமாக்குளம், இளவேங்கல் அஞ்சல், கயத்தாறு தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.<br><br>(10ம் எதிரி A. பால்துரை இறந்துவிட்டதால் அவர் மீதான வழக்கு அற்றுப்போய் விட்டதாக முதல் நிலை விசாரணை நீதிமன்றத்தில் 10.08.2020 ம் தேதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது) |
| குற்ற நிகழ்வு நாள் | 19.06.2020 மற்றும் 20.06.2020 |
| புகார் அளிக்கப்பட்ட நாள், நேரம் | கோவில்பட்டி காவல் நிலைய குற்ற எண்.649/2020 தொடர்பான புகார் 22.06.2020ம் தேதி 22.30 மணிக்கும்,<br>கோவில்பட்டி காவல் நிலைய குற்ற |

| | |
|---|---|
| | எண்.650/2020 தொடர்பான புகார் 23.06.2020ம் தேதி காலை 06.45 மணிக்கும், கொடுக்கப்பட்டுள்ளது. |
| முதல் தகவல் பதிவு செய்யப்பட்ட நாள், நேரம் | கோவில்பட்டி காவல் நிலைய குற்ற எண்.649/2020 தொடர்பான முதல் தகவல் அறிக்கை 22.06.2020ம் தேதி 22.30 மணிக்கும், கோவில்பட்டி காவல் நிலைய குற்ற எண்.650/2020 தொடர்பான முதல் தகவல் அறிக்கை 23.06.2020 ம் தேதி காலை 06.45 மணிக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது,<br><br>CBCID ல் குற்ற எண்.1/2020 தொடர்பான முதல் தகவல் அறிக்கை 30.06.2020 ம் தேதி 22.30 மணிக்கும், குற்ற எண். 2/2020 தொடர்பான முதல் தகவல் அறிக்கை 30.06.2020-ம் தேதி 23.30 மணிக்கும், பதிவு செய்யப்பட்டுள்ளது.<br><br>CBI-ல் குற்ற எண் RC 0502020 S 0008 / CBI/SC-2/New Delhi தொடர்பான முதல் தகவல் அறிக்கை 07.07.2020-ம் தேதி 17.00 மணிக்கும் மற்றும் RC 0502020 S 0009 / CBI/SC-2/New Delhi தொடர்பான முதல் தகவல் அறிக்கை 07.07.2020-ம் தேதி 17.30 மணிக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது, |
| எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்துள்ள நாட்கள் | 1, 2, 4-ம் எதிரிகள் 02.07.2020-ம் தேதியிலிருந்தும் 3ம் எதிரி 01.07.2020-ம் |

| | |
|---|---|
| | தேதியலிருந்தும் 6ம் எதிரி 03.07.2020–ம் தேதியலிருந்தும் 5, 7, 8, 9 எதிரிகள் 08.07.2020–ம் தேதியலிருந்தும் இன்றுவரை சிறையில் இருந்து வருகின்றனர். |
| குற்ற இறுதியறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச் சாட்டுகள் | 1ம் எதிரிக்கெதிராக இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 342, 201, 182, 193, 211, 218 உ/இ 34, ன் கீழும்<br>2ம் எதிரிக்கெதிராக இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 342, 201 உ/இ 34, ன் கீழும்<br>3ம் எதிரிக்கெதிராக இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 342, 201, 182, 193, 211, 218 உ/இ 34, –ன் கீழும்<br><br>4ம் எதிரிக்கெதிராக இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 342, 201, 182, 193, 211, 218 உ/இ 34, –ன் கீழும்<br><br>5ம் எதிரிக்கெதிராக இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 342, 201, உ/இ 34, –ன் கீழும்<br><br>6ம் எதிரிக்கெதிராக இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 342, 201, 182, 193, 211, 218 உ/இ 34, ன் கீழும்<br><br>7ம் எதிரிக்கெதிராக இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 342, 201 உ/இ 34 (எண்ணிக்கையில் 2), |

| | |
|---|---|
| | –ன் கீழும்<br><br>8ம் எதிரிக்கெதிராக இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 342, 201 உ/இ 34, 328, 120(பி) –ன் கீழும்<br><br>9ம் எதிரிக்கெதிராக இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 342, 201, உ/இ 34, 328, 120(பி)–ன் கீழும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது. |
| எதிரிகளுக்கு எதிராக வனையப்பபட்டுள்ள குற்றச்சாட்டுகள் | 1ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்) மற்றும் அதற்கு மாற்றாக இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 109 உ/இ இதச பிரிவு 114, (2எண்ணம்) ன் கீழும்<br><br>2ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்) இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்)–ன் கீழும்<br><br>3ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 182, இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 |

| | |
|---|---|
| | உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்) ன் கீழும்<br><br>4ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்) இதச பிரிவு 201 (2எண்ணம்) , இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்) ன் கீழும்<br><br>5ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்) இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34 (2எண்ணம்) கீழும்<br><br>6ம் எதிரி இதச பிரிவுகள் 342 (2 எண்ணம்), 201 (2 எண்ணம்), இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்) ன் கீழும்<br><br>7ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்)–ன் கீழும்<br><br>8ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச |

| | |
|---|---|
| | பிரிவு 201 (2 எண்ணம்), 302 உ/இ இதச பிரிவு இதச பிரிவு 109 உ/இ இதச பிரிவு 114 ன் கீழும் (2 எண்ணம்)<br><br>9ம் எதிரி இதச பிரிவுகள் 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்)– ன் கீழும் குற்றம் இழைத்துள்ளதாக குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. |
| தீர்மானம் | 1ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ , இதச பிரிவு 34 மற்றும் இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 109 உ/இ இதச பிரிவு 114, (2எண்ணம்) –ன் கீழும்<br><br>2ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்)–ன் கீழும்<br><br>3ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 182, இதச பிரிவு 195 உ/இ, இதச பிரிவு 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ , இதச பிரிவு 34 (2 |

| | |
|---|---|
| | எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ, இதச பிரிவு 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ , இதச பிரிவு 34 (2எண்ணம்) ன் கீழும்<br><br>4ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்) இதச பிரிவு 201(2 எண்ணம்),, இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்) ன் கீழும்<br><br>5ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201(2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34 (2எண்ணம்)ன் கீழும்<br><br>6ம் எதிரி இதச பிரிவுகள் 342 (2 எண்ணம்), 201 (2 எண்ணம்), இதச பிரிவு 195 உ/இ , இதச பிரிவு 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ , இதச பிரிவு34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ , இதச பிரிவு 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ , இதச பிரிவு 34 (2எண்ணம்) ன் கீழும்<br><br>7ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்)—ன் கீழும் |

<table>
<tr>
<td></td>
<td>8ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34 மற்றும், இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 109 உ/இ இதச பிரிவு 114 ன் கீழும் (2 எண்ணம்)<br><br>9ம் எதிரி இதச பிரிவுகள் 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்)– ன் கீழும் குற்றவாளிகள் என தீர்மானம்</td>
</tr>
<tr>
<td colspan="2"><u>தீர்ப்பு</u><br>1ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ , இதச பிரிவு 34 மற்றும் இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 109 உ/இ இதச பிரிவு 114, (2எண்ணம்) –ன் கீழும்<br><br>2ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்)–ன் கீழும்<br><br>3ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 195 உ/இ, இதச பிரிவு 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ , இதச பிரிவு 34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ, இதச பிரிவு 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ , இதச பிரிவு 34 (2எண்ணம்) ன் கீழும்<br><br>4ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்) இதச பிரிவு 201(2 எண்ணம்),, இதச பிரிவு 195 உ/இ</td>
</tr>
</table>

34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்) ன் கீழும்

5ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201(2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34 (2எண்ணம்)ன் கீழும்

6ம் எதிரி இதச பிரிவுகள் 342 (2 எண்ணம்), 201 (2 எண்ணம்), இதச பிரிவு 195 உ/இ , இதச பிரிவு 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ , இதச பிரிவு34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ , இதச பிரிவு 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ , இதச பிரிவு 34 (2எண்ணம்) ன் கீழும்

7ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்)–ன் கீழும்

8ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34 மற்றும், இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 109 உ/இ இதச பிரிவு 114 ன் கீழும் (2 எண்ணம்)

9ம் எதிரி இதச பிரிவுகள் 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்)– ன் கீழும்

குற்றவாளிகள் என தீர்மானித்து கீழ்க்கண்டவாறு எதிரிகளுக்கு தண்டனை வழங்கி குவிமுச பிரிவு 235 (2) ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது

1ம்எதிரி

| | |
|---|---|
| இதச பிரிவு 342 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் ஓராண்டு கடுங்காவல் |

| | |
|---|---|
| | சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 342 (2 count) Rs.1000+1000= Rs.2000/-<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 201 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் 7 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 201 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000/-<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும்<br><br>தலா 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 195 r/w 34 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் தலா 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை |

| | |
|---|---|
| | தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 211 r/w 34 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் தலா 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 195 r/w 34 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது. |
| இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 109 உ/இ இதச பிரிவு 114, மற்றும் இதச 302 உ/இ 34 (2எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் சாகும் வரை தூக்கிலிடும்படி மரண தண்டனையும் அபராதமாக தலா ரூபாய் 12,00,000 விதிக்கப்படுகின்றது தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது<br>Total fine for offence u/s 302 r/w 109 r/w 114, (2எண்ணம்) IPC Rs 12,00,000+ Rs12,00,000<br>= Rs 24,00,000/ |

For A1 total fine Rs 24,10,000/

2ம் எதிரி

| | |
|---|---|
| இதச பிரிவு 342 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் ஓராண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட |

| | |
|---|---|
| | தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 342 (2 count) Rs 1000+1000= Rs 2000<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 201 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் 7 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 201 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்)– | ஒவ்வொரு எண்ணத்திற்கும் சாகும் வரை தூக்கிலிடும்படி மரண தண்டனையும் அபராதமாக தலா ரூபாய் 8,25,000 விதிக்கப்படுகின்றது தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 302 r/w 34 (2எண்ணம்) IPC Rs 8,25,000+8,25,000<br><br>= Rs 16, 50, 000 / |

For A2 total fine Rs 16,54.000

3ம் எதிரி

| | |
|---|---|
| இதச பிரிவு 342 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் ஓராண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 342 (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 201 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் 7 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 201 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் தலா 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 195 r/w 34 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க |

| | |
|---|---|
| | உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் தலா 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 211 r/w 34 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது. |
| இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் தலா 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 195 r/w 34 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது. |
| இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் சாகும் வரை தூக்கிலிடும்படி மரண தண்டனையும் அபராதமாக தலா ரூபாய் 2,60.000 லட்சமும் விதிக்கப்படுகின்றது தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது.<br>Total fine for offence u/s 302 r/w 34 (2எண்ணம்) IPC Rs 2,60,000+2,60,000= Rs 5,20,000/- |

| | |
|---|---|
| | |

For A3 total fine Rs 5,30,000./

4ம் எதிரி

| | |
|---|---|
| இதச பிரிவு 342 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் ஓராண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 342 (2 count) Rs 1000+1000= Rs 2000/-<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 201 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் 7 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 201 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000/-<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் தலா 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது |

| | |
|---|---|
| | Total fine for offence u/s 195 r/w 34 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் தலா 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 211 r/w 34 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் தலா 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 195 r/w 34 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் சாகும் வரை தூக்கிலிடும்படி மரண தண்டனையும் அபராதமாக தலா ரூபாய் 5.00,000லட்சமும் விதிக்கப்படுகின்றது தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |

| | |
|---|---|
| | Total fine for offence u/s 302 r/w 34 (2எண்ணம்) IPC Rs 5,00,000+5,00,000= Rs 10,00,000 |

For A4 total fine Rs 10,10,000/

5ம் எதிரி

| | |
|---|---|
| இதச பிரிவு 342 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் ஓராண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 342 (2 count) Rs 1000+1000= Rs 2000<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 201 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் 7 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 201 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34 (2எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் சாகும் வரை தூக்கிலிடும்படி மரண |

| | |
|---|---|
| | தண்டனையும் அபராதமாக தலா ரூபாய் 2,75,000/ விதிக்கப்படுகின்றது தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது<br>Total fine for offence u/s 302 r/w 34 (2எண்ணம்) IPC Rs.5,50,000/- |

For A2 total fine Rs 5,54,000/

6ம் எதிரி

| | |
|---|---|
| இதச பிரிவு 342 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் ஓராண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 342 (2 count) Rs 1000+1000= Rs 2000/-<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 201 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் 7 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 201 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |

| | |
|---|---|
| இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் தலா 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது.<br>Total fine for offence u/s 195 r/w 34 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் தலா 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 211 r/w 34 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் தலா 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 195 r/w 34 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் |

| | |
|---|---|
| | சாகும் வரை தூக்கிலிடும்படி மரண தண்டனையும் அபராதமாக தலா ரூபாய் 1,60,000/ விதிக்கப்படுகின்றது தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 302 r/w 34 (2எண்ணம்) IPC Rs 3,20,000 |

For A6 total fine Rs 3,30,000/

7ம் எதிரி

| | |
|---|---|
| இதச பிரிவு 342 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் ஓராண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 342 (2 count) Rs 1000+1000= Rs 2000<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 201 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் 7 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 201 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |

| | |
|---|---|
| இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் சாகும் வரை தூக்கிலிடும்படி மரண தண்டனையும் அபராதமாக தலா ரூபாய் 7,20,000/ விதிக்கப்படுகின்றது தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது<br>Total fine for offence u/s 302 r/w 34 (2எண்ணம்) IPC Rs 7,20,000+ 7,20,000= Rs 14,40,000/- |

For A7 total fine Rs 14,44,000./

8ம்எதிரி

| | |
|---|---|
| இதச பிரிவு 342 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் ஓராண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 342 (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 201 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் 7 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 201 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது. |

| | |
|---|---|
| இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 109 உ/இ உ/இ இதச பிரிவு 114 மற்றும் இதச 302 உ/இ 34 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் சாகும் வரை தூக்கிலிடும்படி மரண தண்டனையும் அபராதமாக தலா ரூபாய் 5,25,000/- விதிக்கப்படுகின்றது தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது<br><br>Total fine for offence u/s.302 r/w 34 302 r/w 109 r/w 114, (2எண்ணம்) IPC Rs 5,25,000+ |

5,25,000= Rs 10,50,000

For A8 total fine Rs.10,54,000/-

9ம்எதிரி

| | |
|---|---|
| இதச பிரிவு 342 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் ஓராண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 342 (2 count) Rs 1000+1000= Rs 2000<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 201 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் 7 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 201 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |

| | |
|---|---|
| | |
| இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் சாகும் வரை தூக்கிலிடும்படி மரண தண்டனையும் அபராதமாக தலா ரூபாய் 5,25,000/- விதிக்கப்படுகின்றது தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 302 r/w 34 (2எண்ணம்) IPC Rs 5,25,000+ /-= 5,25,000= Rs 10,50,000 /- |

For A9 total fine Rs 10,54,000/

Total Fine in this Case is Rs.1,00,40,000/-

மேலும் மேற்படி எதிரிகள் அபராத தொகையை கட்டதவறினால் RRAct -ன் அடிப்படையில் மேற்படி எதிரிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் இருந்தோ GPF தொகையிலிருந்தோ CPS தொகையிலிருந்தோ வசூலிக்க தமிழக அரசுக்கு உத்தரவிடப்படுகின்றது

எதிரிகள் ஏற்கனவே விசாரணை காலத்தில் சிறையிலிருந்துள்ள நாட்களை தண்டனை காலத்திலிருந்து கழித்துக்கொள்ள உத்தரவிடப்படுகின்றது

| | |
|---|---|
| தீர்ப்பு வழங்குவதில் காலதாமதம் இருப்பின் அதற்கு காரணம் | பெரும் எண்ணிக்கையிலான சாட்சிகளின் வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலிக்க வேண்டி இருந்ததால் காலதாமதம் |
| வழக்கு சொத்து குறித்த உத்தரவு | மேல்முறையீடு செய்யப்படவில்லை எனில் மேல் முறையீட்டு காலத்திற்குப் பின் அ.சா.பொ.10, அ.சா.பொ.21, அ.சா.பொ.22, அ.சா.பொ.26 அதன் DVRஆகியவற்றை தூத்துக்குடி காவல்துறை கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது. |

| | |
|---|---|
| | மேல்முறையீடு செய்யப்படவில்லை எனில் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் அ.சா.பொ. 24–ஐ சாட்சி பிரபுவிடம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.<br><br>மேல்முறையீடு செய்யப்படவில்லை எனில் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் அ.சா.பொ. 39 முதல் 45 மற்றும் 47 முதல் 50–ஐ செல்வராணியிடம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது<br><br>மேல்முறையீடு செய்யப்படவில்லை எனில் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் அ.சா.பொ.1 முதல் 9, 11 முதல் 20, 23, 25, 27 முதல் 38, 46 51 முதல் 57 ஐ அழிக்க உத்தரவிடப்படுகிறது.<br><br>மேல்முறையீடு செய்யப்படவில்லை எனில் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் எ.சா.பொ.1 முதல் 4–ஐ எ.சா.8–யிடம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.<br>மேல்முறையீடு செய்யப்படவில்லை எனில் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் RPR.No.1/2026ல் கண்ட DVR–ஐ தூத்துக்குடி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது. |

| | |
|---|---|
| | மேல்முறையீடு செய்யப்பட்டால் தரப்பினர்கள் வழக்கு சொத்துக்களை பொறுத்து மேல்முறையீட்டு நீதிமன்ற உத்தரவுப்படி நடந்து கொள்ள உத்தரவிடப்படுகிறது. |
| இழப்பீடு குறித்த உத்தரவு | மொத்த அபராத தொகை ரூ.1,00,40,000/–ஐ அசா 3 செல்வராணிக்கு இழப்பீடாக வழங்க உத்தரவிடப்படுகின்றது. மேற்படி இழப்பீடு போதுமானதாக இல்லாதிருக்கும் பட்சத்தில் மதுரை மாவட்ட இலவச சட்ட உதவி மையத்தை நாடி victim compensation Scheme– ன் கீழ் கூடுதல் இழப்பீடு பெற்றுக் கொள்ள பாதிக்கப்பட்ட தரப்பினர்களுக்கு உத்தரவிடப்படுகிறது. அதற்கு ஏதுவாக இந்த தீர்ப்பின் நகல் ஒன்றை மதுரை மாவட்ட இலவச சட்ட உதவி ஆணையத்திற்கு அனுப்பி வைக்க உத்தரவிடப்படுகிறது. |

மொத்த இழப்பீட்டுத்தொகை Rs 1,00,40,000/–

இவ்வழக்கில் அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்குரைஞர் திரு.S.விஜயன் எம்.ஏ., எம்.எல்., அவர்களும், பாதிக்கப்பட்டவர் தரப்பில் திரு.V.ராஜீவ் ரூஃபஸ் பி.ஏ.,பி.எல்., அவர்களும், 1–ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.T.வினாத் கேம்பிலி பி.ஏ.,பி.எல்., அவர்களும், 2–ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.K.மணிகண்டன் பி.ஏ.,பி.எல்., அவர்களும், 3–ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.Ka.ராமகிருஷ்ணன் பி.ஏ.,பி.எல்., அவர்களும், 4–ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.G.மாரியப்பன் பி.ஏ.,பி.எல்., அவர்களும், 5–ம் எதிரி

தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.N.செல்வராஜ் அவர்களும், 6–ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.K.வேலுச்சாமி பி.ஏ.,பி.எல்., அவர்களும், 7–ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.S.சிவசூர்யநாராயணன் பி.காம்.,பி.எல்., அவர்களும், 8–ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.C.முத்துமோகன் பி.ஏ.,பி.எல்., அவர்களும், 9–ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.S.சிவக்குமார் எம்,காம், எம்.எட், எம்.ஏ., எம்.எல்., அவர்களும் ஆஜராகியுள்ளனர். எதிரிகள் சார்பில் வழக்கை நடத்த உதவிட மாவட்ட இலவச சட்ட உதவி வழக்குரைஞர் Amicus திரு.M.இராமசுப்பிரமணியன் எம்.ஏ., எம்.எல்., அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வழக்கு 02.03.2026–ம் தேதி என் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது உபயதரப்பு வாதம் கேட்கப்பட்டு 9–ம் எதிரி தரப்பில் வழக்குரைஞர் ஆஜராகாததால் Amicus திரு.M.இராமசுப்பிரமணியன் எம்.ஏ., எம்.எல்., அவர்களது வாதம் கேட்கப்பட்டு வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டு இதுகாறும் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

## தீர்ப்புரை

### 1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்

1.1. ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் தந்தையும் மகனும் ஆவர். பென்னிக்ஸ் சாத்தான்குளம் இடக்குடித்தெருவில் கதவு எண்.2/26–ல் ஏ.பி.ஜே மொபைல் சிட்டி என்ற பெயரில் கைபேசி கடை நடத்தி வந்துள்ளார். அவரது தகப்பனார் ஜெயராஜ் அந்த கடை பின்பகுதியில் பெர்லின் டிரேடர்ஸ் என்ற பெயரில் பனங்கட்டை வியாபாரம் செய்து வந்துள்ளார்.

1.2 18.06.2020–ம் தேதி இரவு 08.30 மணியளவில் பென்னிக்சின் மொபைல் கடையருகே ஜெயராஜ் நின்றிருந்தபோது, சில தொழிலாளர்கள் அவர்களது முதலாளியிடம் சம்பளம் பெறுவதற்காக அருகே நின்றிருந்துள்ளனர். அப்போது, அங்கு ரோந்து வந்த சாத்தான்குளம் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் பாலகிருஷ்ணன் அங்கிருந்தவர்களை கலைந்து செல்லும்படியும், திரும்பி வரும்போது யாராவது இருந்தால் தோலை உரித்துவிடுவேன் என்றும் சொல்லியுள்ளார். அவர் சென்ற பின்

ஜெயராஜ் அங்கிருந்தவர்களிடம், காவல்துறையினர் அவர்களது முரட்டுத்தனமான/மோசமான நடத்தைக்காக அடிக்கப்பட வேண்டியவர்கள் என்றும்

எஸ்.ஐ ஏன் நம்மை துஷ்பிரயோகம் செய்கிறார். நமது கருத்தில் நாம் உறுதியாக இருக்க வேண்டும் என்றும் யதார்த்தமாக சொல்லியுள்ளார். அச்சமயத்தில் சாத்தான்குளம் காவல்நிலையத்தை சார்ந்த தலைமை காவலர் குண்டாஸ் பாலு என்ற பாலசுப்பிரமணியன், ஆட்டோ ஸ்டாண்டில் இருந்துள்ளார்.

1.3 ஜெயராஜ் சொன்னதை சீரியசாக எடுத்துக்கொண்டு 19.06.2020–ம் தேதி காலை 07.30 மணியளவில் குண்டாஸ் பாலு இசக்கித்துரையிடம் ஜெயராஜ் பற்றியும் அவரது வசிப்பிடம் பற்றியும் விசாரித்துள்ளார்.

1.4 இந்நிலையில் 19.06.2020–ம் தேதி இரவு 07.30 மணிக்கு சாத்தான்குளம் காமராஜர் சிலை அருகே உள்ள வண்டிமறிச்சியம்மன் கோவில் அருகே ஆய்வாளர் ஸ்ரீதர் சார்பு ஆய்வாளர் பாலகிருஷ்ணன் முதல்நிலை காவலர் முத்துராஜா, ஆய்வாளரது காவல்துறை சுமோ வாகனத்தில் வந்து போலீசாரை பற்றி யார் ஏசியது என விசாரித்து ஜெயராஜை ஆய்வாளரது காவல் வாகனத்தில் ஏற்றியுள்ளனர். இதுபற்றி தகவல் அறிந்து பென்னிக்ஸ் காவல்துறை வாகனத்தை நோக்கி சென்று ஏன் என் தகப்பனாரை கைது செய்துள்ளீர்கள் என கேட்டுள்ளதற்கு, காவல் நிலையத்திற்கு வரும்படி கூறிவிட்டு ஜெயராஜை மட்டும் காவல் நிலையம் கொண்டு சென்று, சட்டவிரோதமாக காவல் நிலையத்தில் அடைத்து வைத்துள்ளனர்.

1.5 பின்னால் பென்னிக்ஸ் அவரது நண்பர் ரவிசங்கருடன் இராஜாராமுக்கு சொந்தமான பைக்கில் சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு சென்றுள்ளார். அங்கு ஜெயராஜை பாலகிருஷ்ணன் அடித்துள்ளார். அதை பார்த்த பென்னிக்ஸ் ஏன் என் அப்பாவை அழைத்து வந்து கொடுமைப்படுத்துகின்றீர்கள் என கேட்டுள்ளார். அதை பாலகிருஷ்ணன் குற்றமாக கருதி பென்னிக்ஸ் உடன் வாக்குவாதம் செய்துள்ளார். பாலகிருஷ்ணன் தள்ளுமுள்ளில் ஈடுபட்டு முத்துராஜாவுடன் பென்னிக்சை அடக்க

முயன்றுள்ளார். பென்னிக்ஸ் தன்னை தற்காத்துக்கொள்ள முத்துராஜாவை தள்ளிவிட்டுள்ளார். அதனால் பாலகிருஷ்ணன் பென்னிக்சை தாக்க முயன்றுள்ளார். அப்போது பென்னிக்ஸ் தடுத்ததில் பாலகிருஷ்ணன் நிலைதடுமாறி விழுந்துள்ளார். அதனால் பென்னிக்சை காவல் நிலையத்தில் சட்டவிரோதமாக தடுத்து வைத்து பாலகிருஷ்ணன் அடித்துள்ளார். இந்த நிலையில் ஸ்ரீதர் தலையிட்டு போலீசாரிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என பாடம் கற்பிக்க மற்ற எதிரிகளுடன் சதித்திட்டம் தீட்டி ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை சட்டவிரோதமாக காவல் நிலையத்தில் அடைத்து வைத்து அடிக்க மற்ற எதிரிகளை தூண்டியுள்ளார். அதனடிப்படையில் மற்ற எதிரிகள் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை காவல் நிலையத்தில் சட்டவிரோதமாக அடைத்து வைத்து மணிக்கணக்கில் அடித்து சித்திரவதை செய்துள்ளனர்.

1.6 ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை கடுமையாக தாக்கும்படி ஸ்ரீதர் திரும்ப திரும்ப சொல்லியுள்ளார். எப்போதெல்லாம் சத்தம் கேட்கவில்லையோ அப்போதெல்லாம் ஸ்ரீதர் ஏன் சத்தம் கேட்கவில்லை என அடுத்த சுற்று அடிக்க மற்ற எதிரிகளை தூண்டியுள்ளார். ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை ஆடைகளை களைந்து ஜட்டியுடன் மேஜையில் குனிய வைத்து தற்காத்துக் கொள்ள முடியாத வகையில் கை கால்களை எதிரிகள் பிடித்துக்கொள்ள ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை மரலத்தியால் புட்டம் மற்றும் உடல் முழுவதும் எதிரிகள் மாறி மாறி அடித்து காயத்தை ஏற்படுத்தியுள்ளனர். தனக்கு உயர் இரத்த அழுத்தமும் சர்க்கரை வியாதியும் உள்ளது என்றும் தன்னால் தாங்கிக்கொள்ள முடியாது என்றும் ஜெயராஜ் கூறியும் அதனைப் பொருட்படுத்தாமல் 19.06.2020 அன்று இரவு சுமார் 07:45 மணி முதல் 20.06.2020-ம் தேதி அதிகாலை சுமார் 03:00 மணி வரை ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை பலமுறை இடைவெளிவிட்டு இடைவெளிவிட்டு எதிரிகள் கடுமையாக அடித்துக் கொடுமைப்படுத்தியுள்ளனர்.

1.7 ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள காயங்கள் இயற்கையின் சாதாரண போக்கில் அவர்களுக்கு மரணத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதை நன்கு அறிந்திருந்தும் எதிரிகள் மேற்படி காயங்களை ஏற்படுத்தி உள்ளனர்.

1.8 அந்த நேரத்தில் வெளியில் வழக்கறிஞர்களும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் உறவினர்களும் கூடியிருந்ததை அறிந்து தங்களையும் மற்ற எதிரிகளையும் குற்றச்சாட்டுகளிலிருந்து தற்காத்துக்கொள்ள எதிரிகள் A1 ஸ்ரீதர் A2 பாலகிருஷ்ணன் A3 ரகுகணேஷ், A4 முருகன் A5 முத்துராஜா சதித்திட்டம் தீட்டி ஸ்ரீதர் ஆலோசனைப்படி புகார் தயாரிக்கப்பட்டு, அதில் A4 முருகன் புகார்தாரராகவும், A6 முத்துராஜா சம்பவத்தை அறிந்த சாட்சியாகவும் கையெழுத்து செய்து A3 ரகுகணேசிடம் கொடுத்து ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு எதிராக குற்ற எண் 312/2020—ல் இதச பிரிவுகள் 188, 269, 294(பி), 353, 506(ii)—ன் கீழ் பொய்யான வழக்கு ஒன்றை பதிவு செய்துள்ளனர்.

1.9 விசாரணையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் 19.06.2020—ம் தேதி கோவிட்—19 கட்டுப்பாடுகளை மீறியதாகவோ, போலீசாரிடம் தகராறு செய்ததாக தெரியவில்லை. ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் கைது செய்யப்பட்டதாக கூறப்படும் காமராஜர் சிலை அருகே அப்போது முருகன் இருந்திருக்கவில்லை. ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு எதிராக சட்டப்படி வழக்கு தொடர போதிய முகாந்திரம் இல்லை என தெரிந்தும் மேற்படி பொய்வழக்கை பதிவு செய்துள்ளனர். மேலும் சித்ரவதை செய்த சமயத்தில் தடயத்தை அழிக்கும் பொருட்டு பென்னிக்சிடம் அவரது பனியனை கொண்டு தரையில் சிந்திய இரத்தத்தை துடைக்கும்படி கூறியுள்ளனர். மேலும் எஞ்சிய இரத்தத்தடயத்தை அழிக்கும் பொருட்டு மறுநாள் காலை துப்புரவு தொழிலாளியைக் கொண்டு ஸ்ரீதர் காவல் நிலையத்தை சுத்தம் செய்துள்ளார்.

1.10 மேற்படி குற்ற வழக்கில் நீதித்துறை நடுவர் முன் ஆஜர்படுத்த ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை மறுநாள் காலை சாத்தான்குளம் அரசு மருத்துவர் வினிலாவிடம்

அழைத்துச் சென்றுள்ளனர். அப்போது உயர் இரத்த அழுத்தம் சர்க்கரை வியாதி இருப்பது தெரிந்தும் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது என்பது தெரிந்தும் மருத்துவரிடம் தகுதிச்சான்று பெற்றுள்ளனர்.

1.11 தடயங்களை அழிக்கும் பொருட்டு இரத்தம்படிந்த ஆடைகளை சாத்தான்குளம் காவல் நிலைய குப்பையில் போட்டுள்ளனர். மேலும் தடயங்களை அழிக்கும் பொருட்டு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்கு முன்பும் மருத்துவமனையில் வைத்தும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் உடுத்தி இருந்த இரத்தம்படிந்த ஆடைகளை மாற்றி உள்ளனர். மேலும் தடயங்களை அழிக்கும் பொருட்டு இரத்தம் படிந்த ஆடைகளை சாத்தான்குளம் அரசு மருத்துவமனை குப்பைத்தொட்டியில் போட்டுள்ளனர்.

1.12 வீட்டிலிருந்து கடைக்கு சென்றபோது ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் நல்ல உடல் நிலையுடன் தான் சென்றுள்ளனர். மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்ட போது ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு புட்டப்பகுதியில் கடுமையான காயங்கள் இருந்துள்ளது. அப்போது அவர்களது புட்டப்பகுதியில் இரத்தம் கசிந்து உள்ளது. அவர்கள் நடக்க முடியாமல் நொண்டி நொண்டி நடந்து சென்றுள்ளனர். மேற்படி காயங்கள் 19.06.2020–ம் தேதி ஜெயராஜ் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட பின்பு 20.06.2020–ம் தேதி ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வரப்படுவதற்கும் முன்பு இடைப்பட்ட இரவில் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் வைத்து எதிரிகளால் தாக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ளது.

1.13 பின்னர் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இருவரும் கோவில்பட்டி கிளை சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு 3635 மற்றும் 3636 எண் கைதிகளாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். சிறைச்சாலையில் அனுமதிக்கும்போது கைதிகள் அனுமதி பதிவேட்டில் மேற்படி இருவருக்கும் புட்டத்திலும், உடலிலும் காயங்கள் இருப்பது பற்றி பதிவு செய்யப்பட்டுள்ளது. சிறையில் அறை எண். 3–ல் 6

கைதிகளுடன் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அடைக்கப்பட்டிருந்தனர். பென்னிக்ஸ் தங்களுக்கு ஏற்பட்ட காயங்களை காட்டி எதிரிகள் தங்களுக்கு இழைத்த கொடுமைகளை சக விசாரணை கைதிகளிடம் விவரித்துள்ளனர்.

1.14 22.06.2020–ம் தேதி ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு கோவில்பட்டி கிளைச்சிறைசாலையில் மருத்துவர் வெங்கடேஷ் சிகிச்சை அளித்துள்ளார். அதுகுறித்து மருத்துவக்குறிப்பு எழுதியுள்ளார். 22.06.2020–ம் தேதி இரவு 07.35 மணிக்கு மூச்சுத்திணறல் காரணமாக பென்னிக்ஸ் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பலன் இன்றி அவர் அன்று இரவு 09.00 மணியளவில் இறந்துள்ளார். இதுபற்றி தெரிவிக்க ஜெயராஜை அழைத்தபோது அவருக்கு காய்ச்சல் இருந்துள்ளது. அவரும் உடனே கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் 22.06.2020–ம் தேதி காலை 5.40 மணிக்கு ஜெயராஜ் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார். பென்னிக்சின் இறப்பு குறித்து கோவில்பட்டி கிளை சிறைச்சாலையின் கண்காணிப்பாளர் திரு.சங்கர் கொடுத்துள்ள புகாரின் பேரில் கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் குற்ற எண்.649/2020 வழக்கு குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 176(1–A)(i)–ன் கீழும், ஜெயராஜின் இறப்பு குறித்து கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலையின் கண்காணிப்பாளர் திரு.சங்கர் கொடுத்துள்ள புகாரின் பேரில் கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் குற்ற எண்.650/2020–ல் குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 176(1–A)(i)–ன் கீழும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கை கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய ஆய்வாளர் திரு.சுதேசன் புலனாய்வுக்கு எடுத்துக்கொண்டுள்ளார். இறந்துபோனவர்கள் விசாரணை கைதிகள் என்பதால் குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 176(1–A)(i)–ன் கீழ் விசாரணை நடத்த நீதித்துறை நடுவர் ஒருவரை நியமிக்கும்படி தூத்துக்குடி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு கடிதம் எழுதியுள்ளார். மேற்படி இருவரது இறப்பு குறித்தும் கோவில்பட்டி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, திரு.பாரதிதாசன் பிரேத விசாரணை நடத்தியுள்ளார். இந்நிலையில் கோவில்பட்டி நீதித்துறை நடுவர்

எண்.1, திரு.பாரதிதாசன் பென்னிக்சின் இறப்புக்கான காரணம் குறித்து பென்னிக்சின் உறவினர்கள் முன்னிலையில் 24.06.2020-ம் தேதியன்று மதியம் 03.20 மணிக்கு பிரேத விசாரணையை துவக்கி 04.30 மணிக்கு முடித்துள்ளார். ஜெயராஜின் இறப்புக்கான காரணம் குறித்து அதே சாட்சிகள் முன்னிலையில் 24.06.2020-ம் தேதியன்று மாலை 04.30 மணிக்கு தொடங்கி மாலை 05.15 மணிக்கு பிரேத விசாரணையை முடித்துள்ளார். அந்த பிரேத விசாரணையின்போது அவர்கள் இருவரது உடம்பிலும் தலா 18 காயங்கள் காணப்பட்டுள்ளதாக பிரேத விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 23.06.2020-ம் தேதியே இரவு 09.45 மணிக்கு கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1, திரு.பாரதிதாசன் கோவில்பட்டி கிளைச்சிறைசாலைக்கு சென்று அங்கு பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் இருந்த அறையில் சக கைதியாக அடைக்கப்பட்டிருந்த திரு.சுனில் என்பவரது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். இந்நிலையில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதி பேராணை மனு எண்.7042/2020-ல் 23.06.2020-ம் தேதி பிறப்பித்துள்ள உத்தரவின்படி தூத்துக்குடி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மேற்படி ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் இறப்பு குறித்து குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 176(1)(A)(i)-ன் கீழ் நீதி விசாரணை நடத்த, கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 திரு.பாரதிதாசன் அவர்களை விசாரணை அதிகாரியாக நியமித்துள்ளார். மேலும் மேற்படி நீதிப்பேரணை மனுவில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவின்படி திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை டீன், ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் உடலை பிரேத பரிசோதனை செய்ய டாக்டர்.எ.செல்வமுருகன், டாக்டர். பிரசன்னா, டாக்டர்.சுதன் ஆகியோர் அடங்கிய மருத்துவக்குழுவை அமைத்து உத்தரவிட்டுள்ளார்.

1.15 இந்நிலையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் உடலை பிரேத பரிசோதனை செய்ய 24.06.2020-ம் தேதி கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்கள் திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி தடய அறிவியல் பேராசிரியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளார்.

1.16 அதனடிப்படையில் முதலில் பென்னிக்ஸ் என்பவரின் பிரேதத்தை காவலர் எண்.1292 திரு.சிவக்குமார் என்பவர் அடையாளம் காட்ட கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 முன்னிலையில் பென்னிக்சின் பிரேதத்தை மேற்படி மருத்துவக்குழு 24.06.2020 அன்று இரவு 08.20 மணிக்கு பிரேத பரிசோதனை செய்ய தொடங்கி 10.15 மணி வரையிலும், ஜெயராஜின் உடலை காவலர் திரு.கருப்பசாமி அடையாளம் காட்ட 24.06.2020 அன்று இரவு 10.15 மணிக்கு தொடங்கி 11.30 மணி வரை ஜெயராஜின் உடலையும் பிரேத பரிசோதனை செய்துள்ளனர். மேற்படி பிரேத பரிசோதனை முழுவதுமாக புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்கப்பட்டுள்ளது.

1.17 பிரேத பரிசோதனையின் போது விசரா பரிசோதனைக்காக இருவரது உடல் உள்ளுறுப்புகளும் கொரோனா பரிசோதனைக்காக இருவரது தொண்டையில் இருந்தும் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதில் இருவரது உடல் உள்ளுறுப்புகளிலும் விஷத்தன்மை இல்லை என்றும் இருவருக்கும் கொரோனா தொற்று எதுவும் இல்லை என்றும் அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது.

1.18 மேலும் இருவருடைய நோயியல் அறிக்கைகள் (Pathological report)–ம் பெறப்பட்டுள்ளது. மேற்படி இருவரும் அவர்களுக்கு ஏற்பட்ட மழுங்கிய காயங்களின் பின் விளைவுகளினால் இறந்திருக்கலாம் என பிரேத பரிசோதனை நடத்தியுள்ள மருத்துவர் குழுவினர் அறிக்கைகள் சமர்பித்துள்ளனர்.

1.19 கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்–1 பாரதிதாசன் அவர்கள் 23.06.2020ம் தேதி கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அடைக்கப்பட்ட அறையை பார்வையிட்டுள்ளார். அப்போது சிறை அறையின் சுவற்றில் பல்வேறு இடங்களில் கறைகள் காணப்பட்டுள்ளது. அந்த கறைகளை தகுந்த தடயவியல் ஆய்வாளர்கள் வந்து பார்வையிடும் வரை துடைக்க வேண்டாமென்று

கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1, சிறைத்துறை கண்காணிப்பாளரிடம் அறிவுறுத்தியுள்ளார்.

1.20 மேலும் இறந்த ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்கள் பயன்படுத்தியிருந்த மாத்திரைகள், ஆயின்மெண்ட்கள், இரத்தம் படிந்த துணிகள் மற்றும் இதர பொருட்களை குவிமுச பிரிவு 104–ன் கீழ் அளிக்கப்பட்டிருந்த அதிகாரத்தை பயன்படுத்தி நீதிமன்ற கட்டுப்பாட்டில் கொண்டு வந்து அவற்றிற்கு வழக்குச் சொத்து எண்.337/2020 வழங்கியுள்ளார். பின்னர் மாண்புமிகு மதுரை, உயர்நீதிமன்ற கிளையின் 02.07.2020–ம் தேதியிட்ட உத்தரவு மூலம் வழக்கானது தூத்துக்குடி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு மாற்றப்பட்டதால் அந்த நீதிமன்றத்திற்கே கைப்பற்றப்பட்ட பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1.21 26.06.2020 மற்றும் 27.06.2020–ம் தேதிகளில் இறந்த ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்களுடன் கோவில்பட்டி கிளைச்சிறையில் அடைக்கப்பட்டிருந்த மற்ற கைதிகளின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. சிறையில் இருந்த இவ்வழக்கு தொடர்புடைய பதிவேடுகளின் பக்கங்களின் உண்மை நகல்கள் பெறப்பட்டுள்ளது.

1.22 28.06.2020–ம் தேதி விசாரணையின் தொடர்ச்சியாக கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு சென்று மதியம் 12.45 மணியளவில் சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 தொடர்புடைய வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு காவல்நிலைய பதிவேடுகளின் பக்கங்களின் உண்மை நகல்கள் பெற்றுள்ளார்.

1.23 29.06.2020–ம் தேதி சாத்தான்குளம் காவல்நிலையம் சென்று சி.சி.டி.வி கேமரா பதிவுகளை கைப்பற்ற வேண்டி அதன் D.V.R–ஐ தூத்துக்குடி மாவட்ட நீதிமன்றத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்த கணினி அலுவலர் திரு.சுரேஷ் முன்னிலையில்

பார்வையிட்டுள்ளார். அப்போது அது 1T.B. அளவுடைய Hard Disk ஆக இருந்த போதிலும், அதன் பதிவுகள் தினமும் அழியும் வண்ணம் அமைக்கப்பட்டிருப்பதும் அதில் 19.06.2020ம் தேதி தொடர்புடைய பதிவுகள் எதுவும் இல்லை என்பதும் தெரிய வந்துள்ளது. அவ்வாறு அழிந்திருந்த பதிவுகளை கணினி தடய அறிவிவியல் துறை மூலம் மீட்டெடுக்க அந்த Hard Disk–ஐ சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியுள்ளார். காவல்நிலையத்தின் அமைப்பினை பார்வையிட்டு புகைப்படங்களும், ஒளிப்பதிவும் செய்துள்ளார். சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 தொடர்புடைய வழக்கின் அசல் ஆவணங்கள் அனைத்தையும் கைப்பற்றியுள்ளார். பிறகு காவலர் மகாராஜன் என்பவரது வாக்குமூலம் பதிவு செய்யபட்டுள்ளது. அதனை தொடர்ந்து பெண் தலைமை காவலரான திருமதி.ரேவதி அவர்களின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அங்கிருந்த நிலைய காவலர்கள் அனைவரது லத்திகளையும் ஒப்படைக்க சொல்லி மொத்தமாக பத்து லத்திகளும், ஒரு பிளாஸ்டிக் பைப்பும் கைப்பற்றப்பட்டுள்ளது. அவற்றுள் சார்பு ஆய்வாளர் அறையிலிருந்து கைப்பற்றப்பட்ட ஒரு லத்தியில் இரத்தக்கறை காணப்பட்டுள்ளது. காவலர் மகாராஜன் அவரது லத்தி தொலைந்துவிட்டதாக எழுத்துமூலமாக தெரிவித்துள்ளார். காவலர் சாமதுரையிடம் அவரது லத்தியை கேட்டபோது அவர் ஓடிச்சென்று காவல்நிலையத்திற்கு அருகில் நிறுத்தி வைத்திருந்த காரின் மீது ஏறி குதித்து இருட்டில் மறைந்துள்ளார். கைப்பற்றப்பட்ட லத்திகள் மற்றும் பிளாஸ்டிக் பைப்பிற்கு வழக்குச் சொத்து எண்.339/2020 வழங்கப்பட்டு புகைப்படம் எடுக்கப்பட்டு, புகைப்படம் நீதிவிசாரணை அறிக்கையுடன் இணைப்பு H ஆக தாக்கல் செய்யப்பபட்டுள்ளது. 29.06.2020–ம் தேதி ஒரு இடைக்கால அறிக்கையை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்திற்கும், மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளைக்கும், மாண்புமிகு தூத்துக்குடி முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களுக்கும், மாண்புமிகு தூத்துக்குடி தலைமை குற்றவியல் நீதிபதி அவர்களுக்கும் மின்னஞ்சல் மூலமாக சமர்ப்பித்துள்ளார். 29.06.2020 அன்று செல்வராணியிடமிருந்து இரத்தம் படிந்த ஆடை மற்றும் போர்வைகள் அத்தாட்சி மூலம் கைப்பற்றப்பட்டுள்ளது. அதன் பின்னர் 30.06.2020–ம் தேதி வட்டார தடயவியல் ஆய்வகத்தின் துணை இயக்குநர் திருமதி.விஜயலதா அவர்களின் தலைமையில்

மூன்று பேர் கொண்ட குழுவினர் பெண் தலைமைக்காவலர்கள் ரேவதி மற்றும் ப்யூலா செல்வகுமாரி மற்றும் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 முன்னிலையில் சாத்தான்குளம் காவல்நிலையத்தை ஆய்வு செய்து சாத்தான்குளம் காவல்நிலையத்தின் உள்ளே பிரதான நுழைவுவாயில் அருகேயும், சார்பு ஆய்வாளரின் அறைக்கு வெளியேயும், படிக்கட்டுகளின் அருகேயும், கழிவறைக்கு அருகேயும் ஆக மொத்தம் 18 இடங்களிலிருந்து இரத்த மாதிரிகளை சேகரித்துள்ளனர். அதில் ஒன்று ஆய்வாளரின் அறையிலிருந்து சேகரித்துள்ளனர். மேலும் அவர்கள் சாத்தான்குளம் காவல்நிலையத்தின் பின்பக்கத்தில் குவிக்கப்பட்டிருந்த குப்பைகளுக்கு நடுவேயிருந்து இரத்தம் படிந்த துணிகள் மற்றும் இதர பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர். அப்பொழுது சாட்சி ரேவதி, தடயவியல் அலுவலர்களிடம் எவ்வாறு போலீசார்கள் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை தாக்கினார்கள் என்று விவரித்து கூறி தடயங்களை சேகரிக்க உதவியுள்ளார். அது புகைப்படமாகவும், வீடியோவாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1.24 தடயஅறிவியல் குழுவினர் சேகரித்த இரத்தமாதிரிகள், இரத்தம்படிந்த துணிகள் மற்றும் இதர பொருட்கள் 30.06.2020–ம் தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு வழக்குச்சொத்து எண்.341/2020 அளிக்கப்பட்டுள்ளது.

1.25 30.06.2020–ம் தேதி சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு சென்று நீதிமன்ற விசாரணையை தொடங்கி அங்கிருந்த இவ்வழக்கு சம்பவம் தொடர்பான நாட்களுக்குரிய சி.சி.டி.வி பதிவுகளை சாட்சி பொறியாளர் பிஜு உதவியுடன் கைப்பற்றி அவற்றிற்கு கணினியின் உடைமை பொறுப்பு வகித்த மருத்துவர்.ஆத்திகுமார் அவர்களிடம் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65 B–வின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளபடி சான்று பெற்றுள்ளார். பின்னர் மருத்துவமனையில் இவ்வழக்கு சம்பவம் தொடர்புடைய நாட்களுக்குண்டான பதிவேடுகளின் பக்கங்களின் உண்மை நகலை பெற்றுள்ளார். அதன்பின்னர் 01.07.2020 முதல் 03.07.2020–ம் தேதி வரை சாட்சிகளின்

வாக்குமூலங்களை பதிவு செய்து 31.07.2020–ம் தேதி விசாரணையை முடித்து ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் இறப்பிற்கான காரணங்கள் குறித்த அறிக்கையை தனித்தனியாக தாக்கல் செய்துள்ளார்.

1.26 இந்நிலையில் 30.06.2020–ம் தேதி மாண்புமிகு உயர்நீதிமன்றம், மதுரை கிளையானது WP(MD)No.7042/2020 உத்தரவு மூலம் மேற்படி இருவழக்குகளையும் சி.பி.சி.ஐ.டி–க்கு மாற்றம் செய்ய உத்தரவிட்டதன்படி இவ்வழக்கை திருநெல்வேலி குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை காவல்துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்துள்ள திரு.அனில்குமார் அன்று 21.00 மணிக்கு கோவில்பட்டி உட்கோட்ட காவல்துணை கண்காணிப்பாளர் திரு.P.கலைகதிரவன் அவர்களிடம் மேற்படி வழக்குக்கோப்புகளை பெற்று 22.30 மணிக்கு கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண்.649/2020–ல் குவிமுச பிரிவு 176(1)(A)(i)–ன் கீழ் பதிவான வழக்கை தூத்துக்குடி குற்றப்பிரிவு குற்ற புலனாய்வுத்துறை குற்ற எண்.1/2020–ல் குவிமுச சட்டப்பிரிவு 176(1)(A)(i)–ன் கீழும், 23.30 மணிக்கு கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண்.650/2020 ல் குவிமுச சட்டப்பிரிவு 176(1)(A)(i)–ன் கீழ் பதிவான வழக்கை தூத்துக்குடி குற்றப்பிரிவு குற்ற புலனாய்வுத்துறை குற்ற எண்.2/2020–ல் குவிமுச பிரிவு 176(1)(A)(i)–ன் கீழும் மறு பதிவு செய்துள்ளார்.

1.27 பின்னர் சாத்தான்குளம் காவல்நிலையத்தை சோதனையிட வேண்டி புலனாய்வுக்கு உதவியாக கைவிரல் ரேகை நிபுணர், தடய அறிவியல் துறையினர், வீடியோ மற்றும் போட்டோ கிராபர்கள் மற்றும் சைபர் செல் ஆகியோர்களை 01.07.2020–ம் தேதி சாத்தான்குளத்திற்கு வர வேண்டி 30.06.2020–ம் தேதி வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளார். மேலும், புலனாய்வுக்கு உதவி செய்ய கிராம நிர்வாக அதிகாரி, கிராம உதவியாளர், சர்வேயர், வரைபட நிபுணரை 01.07.2020–ம் தேதி சாத்தான்குளத்திற்கு வரவேண்டி தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு 30.06.2020–ம் தேதி வேண்டுகோள் கடிதம் அனுப்பியுள்ளார். DNA பகுப்பாய்வுக்கு பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜின் எஞ்சிய விசராவை மதுரை, தடய அறிவியல்

ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்க திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1, 30.06.2020-ம் தேதி கடிதம் அனுப்பியுள்ளார்.

1.28 01.07.2020-ம் தேதியன்று சி.பி.சி.ஐ.டி தலைமை அலுவலக உத்தரவு R.C.No.Crime-I (1)/149/06492/2020 தேதி 01.07.2020-ன்படி திரு.பிறைச்சந்திரன் Inspector of Police, O.C.U. C.B.C.I.D, Tirunelveli, திருமதி.தேவி, Inspector of Police, O.C.U. Tirunelveli, திருமதி.உலகராணி, Inspector of Police, C.B.C.I.D, Tirunelveli, திருமதி.சாவித்ரி, Inspector of Police, C.B.C.I.D, Virudhunagar, திருமதி.சந்தானலெட்சுமி, Inspector of Police, C.B.C.I.D, Dindigul, திருமதி.சித்ராதேவி, Inspector of Police, C.B.C.I.D, Theni, திரு.S.வேல்முருகன், Inspector of Police, O.C.U. C.B.C.I.D, Madurai, திருமதி.சாந்தலெட்சுமி, Inspector of Police, O.C.U. C.B.C.I.D, Madurai, திரு.S.சேகர், Inspector of Police, C.B.C.I.D, Madurai, திரு.B.சரவணகுமார், Inspector of Police, C.B.C.I.D, Madurai, திரு.V.சரவணகுமார், Inspector of Police, C.B.C.I.D, Ramanathapuram, திருமதி.S.சபிதா, Inspector of Police, C.B.C.I.D, Thoothukudi ஆகியோர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

1.29 01.07.2020-ம் தேதி சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு சுமார் காலை 10.00 மணிக்கு சென்று, உதவி புலன் விசாரணை அதிகாரியான திரு.சரவணன், காவல்துணை கண்காணிப்பாளர், கள்ளநோட்டு தடுப்பு பிரிவு, மதுரை, திரு.முரளி, காவல்துணை கண்காணிப்பாளர், ஒருங்கிணைந்த குற்றப்பிரிவு, மதுரை மற்றும் காவல் குழுவினருடன் விசாரணையை துவங்கி சாத்தான்குளம் கிராம நிர்வாக அதிகாரி, திரு.சுரேஷ்ராஜா மற்றும் சாத்தான்குளம் கிராம உதவியாளர் திருமதி.வள்ளிசுந்தரி மற்றும் திருநெல்வேலி, தடய அறிவியல் உதவி இயக்குநர், திருமதி.ஆனந்தி விரல்ரேகை பிரிவு, காவல்துணை கண்காணிப்பாளர், திருமதி.அகஸ்டா கனகமணி, திருநெல்வேலி சைபர் செல் மு.நி.கா.திரு.சுரேஷ், ஆகியோர்கள் உதவியுடன் சம்பவ இடத்தை சாத்தான்குளம் நில அளவையர், மணிலால் மற்றும் திருமதி.தேவிகா ஆகியோர்கள் முன்னிலையில் காலை 10.00 மணி முதல் 11.30 மணி வரை

பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். சாத்தான்குளம் காவல்நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகளில் தடயங்களை சேகரிக்க விருதுநகர், சி.பி.சி.ஐ.டி. காவல் ஆய்வாளர், திருமதி.சாவித்ரி, திண்டுக்கல் சி.பி.சி.ஐ.டி, காவல் ஆய்வாளர் சந்தானலெட்சுமி ஆகியோரை நியமித்துள்ளார். அந்த குழுவினர் சேர்ந்து காவல்நிலையத்தை சுற்றியுள்ள கம்பிவேலிக்கு அருகே அறுந்த நிலையில் இருந்த காலனியை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி தயாரித்து கைப்பற்றியுள்ளனர். மதுரை சி.பி.சி.ஐ.டி கள்ளநோட்டு தடுப்புப்பிரிவு, காவல்துணை கண்காணிப்பாளர், திரு.சரவணன் அவர்கள் மற்றும் அவர்களது குழுவினர் சம்பவ இடமான சாத்தான்குளம் காவல்நிலையத்தில் 01.07.2020–ம் தேதியன்று 12.00 மணி முதல் 21.15 மணி வரை சோதனை செய்து பக்கம் 1 முதல் 1069 உள்ள F.I.R Index பக்கம் 1 முதல் 297 உள்ள P.S.R.51, Sentry Relief Book consist பக்கம் 1 முதல் 509, பக்கம் 1 முதல் 272 Rough Duty Roaster (மொத்த பக்கம் 830 பக்கம் 1 முதல் 366) மற்றும் இதர ஆவணங்களை பட்டியல் தயாரித்து கைப்பற்றியுள்ளனர். இறந்தவர்களின் கடை அருகிலுள்ள கிங் எலக்ட்ரிக்கல்ஸ் உரிமையாளர் சாட்சி திரு.பிரபு என்பவர் 19.06.2020–ம் தேதி தனது கடையில் பதிவாகியிருந்த சி.சி.டி.வி கேமரா பதிவுகள் கொண்ட Hard Disc–ஐ தாமாக முன்வந்து குறிப்பாணை மூலம் ஒப்படைத்துள்ளார். அந்த Hik vision DVR –1, 2 Tera bite internal hard disc–1, A.C./D.C. adopter ஆகியவற்றை திருநெல்வேலி O.C.U காவல் ஆய்வாளர் திருமதி.தேவி என்பவர் 01.07.2020–ம் தேதி 19.00 மணிக்கு கைப்பற்றி விசாரணை அதிகாரியிடம் குறிப்பாணையுடன் ஒப்படைத்துள்ளார். ஜெயராஜின் மனைவி திருமதி.செல்வராணி மற்றும் சாட்சிகள் திருமதி.ஜெயா, திரு.ஜோசப், திரு.தேசிங்குராஜா, திரு.துரை, திரு.வீரபாண்டி, திரு.அர்வின், ஜெயசீலன், தாவீது ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. விசாரணையின்போது கைப்பற்றிய ஒரு ஜோடி செருப்பை தனது மகன் பென்னிக்ஸ் என்பவருடையது என்று செல்வராணி அடையாளம் காட்டியுள்ளார்.

1.30 01.07.2020–ம் தேதி விசாரணையின் போது சாட்சி செல்வராணி ஒப்படைத்த ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோரது full size photo copy, Passport size photo நான்கு குறிப்பாணை மூலம் பெறப்பட்டுள்ளது. சாத்தான்குளம் காவல்நிலையம், பென்னிக்ஸின் செல்போன் கடை மற்றும் அருகிலுள்ள இடங்களில் கிடைத்த தடயங்கள், சாட்சிகள், செல்வராணி, ஜெயா, ஜோசப், தேசிங்குராஜா, துரை, வீரபாண்டி, அர்வின், ஜெயசீலன், தாவீது ஆகியோர்களின் வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் 01.07.2020–ம் தேதி இவ்வழக்கின் சட்டப்பிரிவு குவிமுச பிரிவு 176(1)(A) என்பதிலிருந்து இதச பிரிவுகள் 342, 302, 201 ஆக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

1.31 சார்பு ஆய்வாளர் ரகுகணேஷ், என்பவர் தூத்துக்குடி மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மேற்குப்பக்கம் வைத்து கைது செய்யப்பட்டு அவரது வாக்குமூலம் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.ராதா, கிராம உதவியாளர் திரு.குமாரலிங்கம் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு அவர் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். 02.07.2020–ம் தேதியன்று அதிகாலை சுமார் 02.15 மணிக்கு தூத்துக்குடி குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை அலுவலகத்தில் ஆஜரான தலைமைக்காவலர் முருகன் என்பவரும், 02.07.2020–ம் தேதி அதிகாலை 04.00 மணிக்கு தூத்துக்குடி குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுதுறை அலுவலகத்தில் ஆஜரான சார்பு ஆய்வாளர் திரு.பாலகிருஷ்ணன் என்பரும், அன்று காலை 07.00 மணிக்கு தூத்துக்குடி குற்றப்புலனாய்வுத்துறை அலுவலகத்தில் ஆஜரான ஆய்வாளர் ஸ்ரீதர் என்பவரும் கைதிற்கான காரணம் கூறி கைது செய்யப்பட்டு, அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.ராதா, கிராம உதவியாளர் திரு.குமாரலிங்கம் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு தூத்துக்குடி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் முன்பு ஆஜர்படுத்தி காவல் அடைப்பு செய்யப்பட்டுள்ளனர். பின்னர் இவ்வழக்கில் சாட்சிகளான அழகர்சாமி, சங்கர், மாரிமுத்து, செந்துர்ராஜன், செல்வராஜ், கணேஷ்குமார் ஆகியோர்கள் தனித்தனியே விசாரிக்கப்பட்டு அவர்களது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. 03.07.2020–ம்

தேதி தூத்துக்குடி தலைமை நீதித்துறை நடுவர் அவர்களிடம் சாட்சி திருமதி.ரேவதியின் சாட்சியத்தை கு.வி.மு.ச.164–ன் கீழ் பதிவு செய்ய வேண்டுகோள் கொடுக்கப்பட்டு அவரது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அன்று இரவு 23.00 மணிக்கு புலனாய்வு அதிகாரி முன்பு ஆஜரான காவலர் M.முத்துராஜா கைதிற்கான காரணம் கூறி கைது செய்யப்பட்டு அவர் கொடுத்துள்ள வாக்குமூலம் சாட்சிகள் திருமதி.ராதா, திரு.குமாரலிங்கம் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, முத்துராஜா நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். 04.07.2020–ம் தேதி இவ்வழக்கின் சாட்சிகளான ஆறுமுகம், மருத்துவர் தாம்சன், ஹபீப்ரகுமான், கந்தசாமி, பாண்டி, பிரபு, சாந்தி, ரவிராஜன், சுப்பிரமணியன், பேச்சிப்பாண்டி, ரேவதி ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டு அவர்களது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1.32 05.07.2020–ம் தேதி சாட்சிகள் மணிமாறன், ரவிச்சந்திரன், ராஜாராம், ரவிசங்கர், சங்கரலிங்கம், எலிசா, கோகுல்சுந்தரேசன், ஜான்சன்துரை, கண்ணன், இராமகிருஷ்ணன் ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டு அவர்களது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1.33 06.07.2020–ம் தேதி குற்றவியல் நீதித்துறை நடுவர் முன்பு சாட்சி ரேவதி கொடுத்த வாக்குமூலத்தின் நகல் பெறப்பட்டுள்ளது. மேலும் சாட்சிகள் சந்தனகுமார், ஜெயசேகர், ஆரோக்கியசாமி, மைக்கேல் என்ற மிகவேல் இசக்கிதுரை, சிவசுப்பிரமணியம், High Court பெருமாள், ராஜீவ் ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டு அவர்களது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. சாத்தான்குளத்தில் உள்ள தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி மேலாளர் பாலசுப்பிரமணியன் என்பவர் வழங்கிய பென்டிரைவ், அதற்கான இந்தியச்சாட்சிய சட்டம் 65–பி சான்றிதழ், கூட்டுறவு சிக்கன நாணய சங்க செயலாளர் வழங்கிய சிசிடிவி கேமரா பதிவு பென்டிரைவ் அதற்கான இந்தியச்சாட்சிய சட்டம் பிரிவு 65–பி சான்றிதழ், சுப்புலெட்சுமி ஜவுளிக்கடை உரிமையாளர் வழங்கிய சிசிடிவி கேமரா பதிவு பென்டிரைவ் அதற்கான இந்தியச்சாட்சிய சட்டம் பிரிவு 65–பி சான்றிதழ், சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் உள்ள சி.சி.டி.வி கேமரா பதிவு

பென்டிரைவ் அதற்கான இந்தியச்சாட்சிய சட்டம் பிரிவு 65–பி சான்றிதழ், கிங் எலக்ட்ரிக்கல் உரிமையாளர் பிரபு என்பவர் வழங்கிய சிசிடிவி கேமரா பதிவு பென்டிரைவ் அதற்கான இந்தியச்சாட்சிய சட்டம் பிரிவு 65–பி சான்றிதழ் ஆகியவற்றை திருநெல்வேலி மாவட்டம், ஒருங்கிணைந்த குற்றப்பிரிவு, காவல் ஆய்வாளர் தேவி பெற்று விசாரணைக்காக ஒப்படைத்துள்ளார்.

1.34 07.07.2020–ம் தேதி வழக்கின் சாட்சிகள் சாமர்வேல் செல்வின்ராஜ், மணி, ப்யூலாசெல்வகுமாரி, ஆறுமுகசாமி, அழகுமாரிச்செல்வம் ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டு அவர்களது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. 08.07.2020ம் தேதி வழக்கின் சாட்சியங்களின் அடிப்படையிலும், வாக்குமூலங்களின் அடிப்படையிலும், ஆவண சாட்சியங்களின் அடிப்படையிலும், மேற்படி வழக்கில் சட்டப்பிரிவுகள் இதச 342, 302, 201 என்பதிலிருந்து இதச பிரிவு 342, 302, 201 உ/இ 109 என மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தூத்துக்குடி சி.பி.சி.ஐ.டி அலுவலகத்தில் ஆஜரான காவலர்கள் செல்லத்துரை, பால்துரை, சார்பு ஆய்வாளர், சாமதுரை, வெயிலுமுத்து, தாமஸ் பிரான்சிஸ் ஆகியோர்களிடம் கைதிற்கான காரணம் கூறி கைது செய்யப்பட்டு, அவர்கள் தனித்தனியாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்கள் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.ராதா கிராம உதவியாளர் திரு.குமாரலிங்கம் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், தூத்துக்குடி அவர்களிடம் உத்தரவு பெற்று காவல் அடைப்பு செய்யப்பட்டுள்ளனர்.

1.35 09.07.2020–ம் தேதி வழக்கின் சாட்சி ப்யூலா செல்வகுமாரியை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1.36 இந்நிலையில் தமிழ்நாடு அரசு வெளியிட்ட 29.06.2020–ம் தேதியிட்ட அறிவிப்பின்படியும், அதைத் தொடர்ந்து இந்திய அரசு வெளியிட்ட 06.07.2020–ம் தேதி Dellhi Special Police Establishment சட்டத்தின் பிரிவு 5–ன் படியும் இவ்வழக்கு சிபிஐ–க்கு மாற்றப்பட்டு, 07.07.2020 அன்று CBI, SC–II, புதுதில்லி காவல் கண்காணிப்பாளராக

இருந்த ஸ்ரீ.தன்மய பெஹெராவால் மேற்படி இரு வழக்குகளும் CBI–ல் RC 050–2020–S0008 மற்றும் RC 049–2020–S0009 என மறுபதிவு செய்யப்பட்டு, அதன் நகல்கள் மதுரை தலைமை நீதித்துறை நடுவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் தூத்துக்குடி தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு நிலுவையில் உள்ள நீதித்துறை கோப்புகள் மற்றும் ஆவணங்களை மதுரை, தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு மாற்ற தூத்துக்குடி தலைமை நீதித்துறை நடுவருக்கு கோரிக்கை மனு அனுப்பி வைக்கப்பட்டது.

1.37 10.07.2020 அன்று தூத்துக்குடி CBCID அலுவலகத்திற்குச் சென்று, கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தின் FIR எண்கள்.649/2020 மற்றும் 650/2020 தொடர்பான ஆவணங்கள் மற்றும் வழக்கு கோப்பு தொடர்புடைய ஆவணங்களை தூத்துக்குடி CBCID DSP V.அனில்குமாரிடமிருந்து பெற்றுள்ளார்.

1.38 குற்றம் நடந்த இடத்தை ஆய்வு செய்வதற்காக CFSL நிபுணர்களைக் கொண்ட பல்துறை குழுவை அமைக்க CFSL இயக்குநரிடம் கோரிக்கை விடப்பட்டு 11.07.2020–ம் தேதி CBI குழு CFSL நிபுணர்கள் குழுவினருடன் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையின் மருத்துவமனை வளாகத்தை பார்வையிடப்பட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரித்துள்ளனர்.

1.39 12.06.2020–ம் தேதி சாத்தான்குளம் காவல் நிலையத்தை ஆய்வு செய்து வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. சாத்தான்குளம் காவல் நிலையத்தில் நியமிக்கப்பட்ட காவல்துறை அதிகாரிகளின் பெயரளவிலான பட்டியல் இன்ஸ்பெக்டர் பெர்னார்ட் சேவியரிடமிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது.

1.40 13.07.2020–ம் தேதி ஆரம்ப விசாரணையின் அடிப்படையில் CBI FIR–ன் பிரிவுகளை குவிமுச பிரிவு 176(1–A) என்பதிலிருந்து இதச பிரிவுகள் 302, 342, 201 r/w 109–க்கு மாற்றி மதுரை, தலைமை நீதித்துறை நடுவருக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

1.41 15.07.2020–ம் தேதி புலன் விசாரணைக்கு உதவியாக தமிழ் அறிந்த அதிகாரியை நியமிக்கக்கோரி, மதுரை, வருமானவரி இணை ஆணையருக்கு ஒரு கடிதமும், மற்றொரு கடிதம் மத்திய கலால் துறையின் இணை ஆணையர், மதுரை அவர்களுக்கும் அனுப்பப்பட்டு, வருமானவரி ஆய்வாளர் ஸ்ரீ.உமா சிதம்பரம் மற்றும் ஜி.எஸ்.டி மற்றும் மத்திய கலால் துறை ஆய்வாளர் ஸ்ரீ.எம்.கிருஷ்ணன் நியிமிக்கப்பட்டு 15.07.2020 அன்று வருமானவரி ஆய்வாளர் ஸ்ரீ.உமா சிதம்பரம் மற்றும் ஜி.எஸ்.டி மற்றும் மத்திய கலால் துறை ஆய்வாளர் ஸ்ரீ.எம்.கிருஷ்ணன் ஆகியோருடன் சாத்தான்குளம் காவல்நிலைய வளாகத்தில் குற்றம் நடந்த இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளது. 19.06.2020 அன்று மாலை மற்றும் 20.06.2020 காலைக்கு இடைப்பட்ட இரவில் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் நடந்த நிகழ்வுகளின் வரிசையை உறுதிப்படுத்த, சம்பவம் நடந்த நேரத்தில் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் பணியில் இருந்த WHC ப்யூலா செல்வகுமாரி மற்றும் WHC ரேவதி ஆகிய இரு பெண் காவலர்களும் சுட்டிக்காட்டியது தொடர்பாக சம்பவ காட்சிகளின் மறு உருவாக்கம் தொடர்பான நடவடிக்கைகள் (proceedings of reconstruction of scene of occurance) பதிவு செய்யப்பட்டுள்ளது. அப்போது சித்ரவதை செய்ய பயன்படுத்தியதாக கூறப்படும் மரமேசை ஒன்று சப் இன்ஸ்பெக்டர் அறையில் இருந்து கைப்பற்றப்பட்டு பாதுகாப்பு கருதி சாத்தான்குளம் காவல்நிலைய துணை ஆய்வாளர் அறையில் வைக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளது.

1.42 16.07.2020–ம் தேதி ரகுகணேஷ், பாலகிருஷ்ணன், முருகன், ஸ்ரீதர் மற்றும் முத்துராஜா ஐந்து குற்றம் சாட்டப்பட்ட நபர்களின் புகைப்படங்கள் மற்றும் கைரேகைகளை விசாரணை நோக்கத்திற்காக எடுக்குமாறு மதுரை தடய அறிவியல் பிரிவு பொறுப்பாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டு புகைப்படங்கள் மற்றும் கைரேகைகள் எடுக்கப்பட்டுள்ளது.

1.43 சேகரிக்கப்பட்ட சொத்துக்கள் 17.07.2020-ம் தேதி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், தூத்துக்குடி அவர்களுக்கு படிவம் 91 மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1.44 18.07.2020-ம் தேதி கோவில்பட்டி கிளை சிறைச்சாலைக்கு சென்று இறந்த இருவரும் அடைக்கப்பட்டிருந்த அறை எண்.3-ஐ ஆய்வு செய்து 18.07.2020 தேதி பார்வை மகஜர் மற்றும் வரைபடம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. விசாரணை நோக்கத்திற்காக கைதிகளின் அனுமதி புத்தகம், மருத்துவர் பதிவேடு 16.06.2020 முதல் 21.06.2020 வரையிலான காலகட்டத்திற்கான கைதிகளின் பெயரளவு பட்டியல் சிறைச்சாலையின் அதிகாரிகளின் உள்/வெளி பதிவேட்டின் சான்றளிக்கப்பட்ட பிரதி, பென்னிக்ஸ் உடன் அடைக்கப்பட்டிருந்த ஆறு கைதிகளின் விவரங்கள் அடங்கிய ஆவணம், பென்னிக்ஸின் ரிமாண்ட் வாரண்டுகளின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்கள் கோவில்பட்டி துணைச் சிறைச்சாலையின் அப்போதைய சிறை கண்காணிப்பாளர் திரு.எம்.சங்கரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

1.45 20.07.2020-ம் தேதி கோவில்பட்டி அரசு மருத்துவமனையின் மூத்த உதவி அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர்.டி.பாலசுப்பிரமணியனிடமிருந்து இவ்வழக்கு தொடர்புடைய ஆவணங்களை CBI SC-II இன் இன்ஸ்பெக்டர் பூரன்குமார் 20.07.2020-ம் தேதி கைப்பற்றியுள்ளார்.

1.46 22.07.2020 அன்று, மதுரை உதவி ஆணையர் ஐ.எஸ்.அவர்களுக்கு குற்றம் சாட்டப்பட்ட மூன்று நபர்களான செல்லதுரை (A7), சாமதுரை (A5) மற்றும் வெயிலுமுத்து (A9) ஆகியோரின் புகைப்படங்கள் மற்றும் கைரேகைகளை எடுக்க சில அதிகாரிகளை நியமிக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டு மூன்று குற்றவாளிகளின் புகைப்படம் கைரேகை பதிவுகள் எடுக்கப்பட்டன.

1.47 23.07.2020–ம் தேதியன்று புலனாய்வு தொடர்பாக அதுவரை சேகரிக்கப்பட்ட ஆவணங்கள் படிவம் 91–ன் கீழ் ஆவணங்கள் மதுரை சி.பி.ஐ, சௌத்சோன் அலுவலகத்தில் சிபிஐ புலனாய்வு அதிரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

1.48 31.07.2020–ம் தேதி தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டு 15.06.2020 முதல் 30.06.2020 வரையிலான காலத்திற்கான Duty Register பெறப்பட்டுள்ளது.

1.49 31.07.2020–ம் தேதி தூத்துக்குடி மாவட்ட ஆட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டு ஊரடங்கு உத்தரவை அமல்படுத்துவதற்காக வெளியிடப்பட்ட அனைத்து உத்தரவுகள், சுற்றறிக்கைகள்/நிலையான உத்தரவுகள்/ அறிவுறுத்தல்களின் சான்றளிக்கப்பட்ட நகல்கள் பெறப்பட்டுள்ளது.

1.50 இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 10 நபர்களின் Service register வழங்கக்கோரி தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு 31.07.2020–ம் தேதி கடிதம் அனுப்பப்பட்டு குற்றம் சாட்டப்பட்ட நபர்களின் Service Register–ம் பெறப்பட்டுள்ளது. RPR No.11/2020 முதல் RPR No.14/2020–ல் சேகரிக்கப்பட்ட பொருள்களை தடய ஆய்வு செய்ய 06.08.2020–ம் தேதி மதுரை, தலைமை நீதித்துறை நடுவர் CFSL–க்கு கடிதத்துடன் அனுப்பியுள்ளார்.

1.51 மரபணு பரிசோதனைக்கு திருமதி.செல்வராணி அவர்களின் இரத்த மாதிரிகளை சேகரிப்பதற்காக 01.09.2020–ம் தேதி FDA அட்டை கேட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அன்று Cat No.WC120410 Lot No.9813430 எண் கொண்ட FDA Card மதுரை, தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பெறப்பட்டு டி.என்.ஏ பரிசோதனைக்கு திருமதி.ஏ.செல்வராணி அளித்த ஒப்புதல் பெறப்பட்டு மதுரை வட்டார தடய அறிவியில் ஆய்வகம் வழங்கிய FDA அட்டை/இரத்த அட்டையில், இறந்த ஜெயராஜின் மனைவி திருமதி.செல்வராணியின் இரத்த மாதிரி புகைப்படம் ஒட்டப்பட்டு உரிய படிவத்தில்

டாக்டர்.பிரகாஷ் போஸ் அவர்களால் முறைப்படி சேகரிக்கப்பட்டுள்ளது. செல்வராணின் FDA Card–ல் எடுக்கப்பட்ட மாதிரி இரத்தத்தை சேகரிக்கபட்ட பொருள்களில் உள்ள சந்தேகத்திற்கிடமான கறைகளுடன் ஒப்பீடு செய்ய 03.09.2020–ம் தேதி மதுரை. தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் புதுடெல்லி, மத்திய தடய அறிவியல் ஆய்வக இயக்குநருக்கு சிபிஐ, எஸ்.ஐ தல்ஜீத்சிங் மூலம் கொடுத்து அனுப்பியுள்ளார். சாத்தான்குளம் நீதித்துறை நடுவர் இறந்த ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்களுக்கு நீதிமன்ற காவல் வழங்கி பிறப்பிக்கப்பட்ட 20.06.2020–ம் தேதியிட்ட அசல் ரிமாண்ட் உத்தரவு கோவில்பட்டி துணை சிறைச்சாலை சிறை கண்காணிப்பாளரிடமிருந்து 03.09.2020–ம் தேதி பெறப்பட்டுள்ளது.

1.52 08.09.2020–ம் தேதி பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜின் மரணத்திற்கான காரணத்தை உறுதிசெய்யவும் அவர்களது இறப்புகுறித்து முழுமையான கருத்தை வழங்குவதற்காகவும் சம்பவம் நடந்த இடத்தை பார்வையிடுமாறு கோரிக்கை விடுத்து பல்துறை மருத்துவ வாரியத்தின் தலைவர் பேராசிரியர் திரு.ஆதர்ஷ்குமாருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட CFSL குழுவை அனுப்புமாறு கோரி, 08.09.2020–ம் தேதி CFSL, புது தில்லி இயக்குநருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

1.53 04.09.2020–ம் தேதி நிணநீர் அறிக்கையும் 08.09.2020–ம் தேதி மற்றும் 17.09.2020, 08.9.2020 ஆகிய தேதிகளில் மரபணு அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளது.

1.54 14.09.2020–ம் தேதி ஜெயராஜ், பென்னிக்ஸ் மற்றும் எதிரிகளது CDRகள், CAF மற்றும் SDR ஆகியவற்றை வழங்குமாறு கோரி தமிழ்நாடு BSNL–ன் வட்ட நோடல் அதிகாரிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

1.55 22.09.2020–ம் தேதி அரசு அதிகாரிகள் சாத்தான்குளம் காவல்நிலையம் மற்றும் சாத்தான்குளம் பழைய பேருந்து நிலையம் அருகே காமராஜர் சிலை வளாகம் ஆகியவற்றை பார்வையிட்டு அது சம்மந்தமாக அரசு அதிகாரிகள் குறிப்பாணை தயாரித்துள்ளனர்.

1.56 23.09.2020–ம் தேதி கோவில்பட்டி கிளைச்சிறைசாலையில் செல் எண்.3ல் சுவர்களில் படிந்துள்ள இரத்தம் கைப்பற்றப்பட்டுள்ளது.

1.57 கோவில்பட்டி கிளைச்சிறையில் இருந்து 23.09.2020–ம் தேதி CFSL சேகரித்த சந்தேகிக்கப்படும் இரத்தக்கறைகளை சேகரிக்கப்பட்ட இதர தடயங்களுடன் தடய அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்தி ஒப்பிடுவதற்கு கேள்வித்தாளுடன், மதுரை, தலைமை நீதித்துறை நடுவரால் 29.09.2020–ம் தேதி CFSL–க்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது, அதுகுறித்து 02.11.2020–ம் தேதி அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது.

1.58 01.10.2020–ம் தேதி தேசிங்குராஜாவிடமிருந்து ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் புகைப்படங்கள் பெறப்பட்டுள்ளன.

1.59 19.05.2021–ம் தேதி சாத்தான்குளம் காவல்நிலைய Hard Disk சாத்தான்குளம் காவல்நிலையத்தில் கைப்பற்றப்பட்ட Samsung cellphone அதிலுள்ள 2 மெமரி கார்டு கிங் எலக்ரிகல்ஸ் தொடர்பான சிசிடிவி தொடர்பான DVR அதன் Hard Disk ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் கடைக்கு அருகிலுள்ள கடைகள் மற்றும் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையிலிருந்து கைப்பற்றப்பட்ட ஹார்டு டிஸ்க்குகளின் DVR–கள் தடய அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்த CFSL இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. Hard Disk, Cellphone, DVR ஆகியவற்றை பரிசோதனை செய்தது சம்மந்தமாக குஜராத், தடய அறிவியல் ஆய்வக இயக்குநரிடமிருந்து 07.06.2021–ம் தேதி அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது.

1.60 19.05.2021–ம் தேதி பென்னிக்சின் கடைக்கு அருகேயுள்ள கடையில் இருந்த DVR மற்றும் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையிலிருந்த CCTV Hard Disk ஆகியவற்றை தடய அறிவியல் பரிசோதனை செய்ய சிபிஐ துணை கண்காணிப்பாளர், புதுடெல்லி மத்திய தடய அறிவியல் ஆய்வகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டு அதுகுறித்து, அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளது. 20.12.2021–ம் தேதி சிசிடிவி காட்சிகளுடன் புகைப்படங்களை ஒப்பீடு செய்து குஜராத் தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது. 08.06.2021–ம் தேதி Hard Disk, Cellphone, DVR ஆகியவற்றை பரிசோதனை செய்தது சம்மந்தமாக குஜராத், தடய அறிவியல் ஆய்வக இயக்குநரிடமிருந்து 20.12.2021–ம் தேதிய அறிக்கையும் சிசிடிவி காட்சிகளுடன் புகைப்படங்களை ஒப்பீடு செய்து குஜராத், தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து 07.02.2022–ம் தேதிய அறிக்கை புதுடெல்லி, மத்திய தடய அறிவியல் ஆய்வகத்தின் 08.02.2022–ம் தேதிய கடிதம் மூலம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், மதுரை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1.61 டாக்டர்.திரு.ஆகாஷ்குமார் தலைமையில் அமைக்கப்பட்ட பல்நோக்கு மருத்துவர் குழு MIMB (Multi Institutional Medical Board) இருவரது இறப்பு குறித்து Delayed complications of hemorrhage shock consequent to multiple blunt force injuries" என கருத்துரைத்துள்ளது. மேலும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இருவருக்கும் ஏற்பட்ட காயங்கள் கூட்டாக இயற்கையின் சாதாரண போக்கில் மரணத்தை ஏற்படுத்தும் அளவுக்கு போதுமானதாக இருந்தன என்றும் இருவருக்கும் ஏற்பட்டுள்ள காயங்கள் குச்சி/தண்டம்/லத்தி/ போன்ற நீண்ட உருளைப் பொருளால் மீண்டும் மீண்டும் மழுங்கிய பலத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அந்த அறிக்கையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு சிகிச்சை அளித்துள்ளதில் மருத்துவர்கள் தரப்பில் கவனக்குறைவு எதுவும் இருப்பதாக தெரியவில்லை என்றும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுத்துள்ளதில் கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலை அதிகாரிகளிடம் கவனக்குறைவு எதுவும் இருப்பதாக தெரியவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனை

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களுடன் தாங்கள் ஒத்துப் போவதாகவும் பல்நோக்கு மருத்துவ குழுவினர் அந்தஅறிக்கையில்குறிப்பிட்டுள்ளனர்.

1.62 சேகரிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களிலிருந்து எதிரிகள் அவர்களிடையே நடந்த குற்றச் சதித்திட்டத்தின் கீழ், பொதுவான நோக்கத்தின் பேரில் 19.06.2020 அன்று மாலை சுமார் 07.30 மணியளவில், ஜெயராஜை கைது செய்து, சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர் என்பதும், அதுபற்றி கேட்க அவரது மகன் பென்னிக்ஸ் காவல்நிலையத்திற்கு வந்தபோது, பென்னிக்ஸிற்கும் குற்றம் சாட்டப்பட்ட காவல்துறை அதிகாரிகளுக்கும் வாக்குவாதங்கள் ஏற்பட்டு 19.06.2020 மற்றும் 20.06.2020–க்கு இடைப்பட்ட இரவில் சாத்தான்குளம் காவல்நிலையத்தின் மூடிய சுவர்களுக்குள் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இருவரும் சட்டவிரோதமாக அடைத்து வைத்து கொடூரமாக அடித்து சித்ரவதை செய்து காயப்படுத்தியுள்ளனர் என்பதும், அந்த காயங்கள் இயற்கையின் சாதாரண போக்கில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸிற்கு மரணத்தை விளைவிக்க போதுமானதாக இருந்துள்ளது என்பதும், மேற்கூறிய தவறுகளை மறைக்கும் பொருட்டும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸிற்கு காயங்கள் ஏற்படுத்தியதிலிருந்து தங்களையும் மற்ற எதிரிகளையும் காப்பாற்ற வேண்டுமேன்ற பொதுவான உட்கருத்துடன் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் மீது சாத்தான்குளம் காவல்நிலையத்தில் 19.06.2020–ம் தேதியிட்ட குற்ற எண்.312/2020 குற்ற வழக்கை 1, 3, 4 மற்றும் 6 எதிரிகள் பொய்யாகப் பதிவு செய்துள்ளனர் என்பதும் சாட்சியங்களை அழித்துள்ளனர் என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் மேலும் குற்றம் சாட்டப்பட்ட A1 – ஸ்ரீதர், A2 – பாலகிருஷ்ணன், SI மற்றும் A3 – ரகுகணேஷ், SI ஆகியோர்கள் தங்கள் காவலில் உள்ள நபர்களை இதுபோன்ற கொடூரமான சித்ரவதை செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது என்றும் இரண்டு வழக்குகளிலும், குற்றச்சாட்டுகளின் தன்மை, வழக்கின் சூழ்நிலைகள், நடந்த இடம், சம்பவத்தின் தேதி மற்றும் நேரம் மற்றும் குற்றத்தைச் செய்தவர்கள், குற்றத்திற்கான சாட்சிகள், ஆவணங்கள் மற்றும்

செயல்பட்டுள்ள முறை போன்றவை ஒரே மாதிரியாக இருந்ததால், இரண்டு வழக்குகளிலும் 1–ம் எதிரி இதச பிரிவுகள் 120(பி) உ/இ இதச பிரிவுகள் 302, 342, 201, 182, 193, 211, 218 உ/இ இதச 34–ன் கீழும், 2–ம் எதிரி இதச பிரிவு 120(பி) உ/இ இதச பிரிவுகள் 302, 342, 201 உ/இ இதச 34–ன் கீழும், 3–ம் எதிரி இதச பிரிவுகள் 120(பி) உ/இ 302, 342, 201, 182, 193, 211, 218 உ/இ இதச 34–ன் கீழும், 4–ம் எதிரி 120(பி) உ/இ 302, 342, 201, 182, 193, 211, 218 உ/இ இதச 34–ன் கீழும், 5–ம் எதிரி 120(பி) உ/இ 302, 342, 201, உ/இ இதச பிரிவு 34–ன் கீழும், 6–ம் எதிரி 120(பி) உ/இ 302, 342, 201, 182, 193, 211, 218 உ/இ இதச 34–ன் கீழும், 7–ம் எதிரி 120(பி) உ/இ 302, 342, 201 உ/இ இதச பிரிவு 34 (எண்ணிக்கையில் 2)–ன் கீழும், 8–ம் எதிரி 120(பி) உ/இ 302, 342, 201 உ/இ 34–ன் கீழும், 9–ம் எதிரி 120(பி) உ/இ 302, 342, 201, உ/இ இதச பிரிவு 34–ன் கீழும், குற்றம் இழைத்துள்ளதாக முதன்மை குற்ற இறுதியறிக்கை –ம் தேதி 25–09–2020ம்தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 10–ம் எதிரி A.பால்துரை இறந்துவிட்டதால் அவர் மீதான வழக்கு அற்றுப்போய்விட்டதாக முதல்நிலை விசாரணை நீதிமன்றத்தில் 10.08.2020–ம் தேதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1.63 22.09.2020–ம் தேதி பல்நோக்கு தடய அறிவியல் குழு CFSL காவல் நிலைய கட்டிடத்தின் உள்ளேயும் வெளியேயும் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை குழு எடுத்துள்ளது. சம்பவம் நிகழ்ந்த விதம் குறித்து சாத்தான்குளம் காவல்நிலையம் பென்னிக்சின் மொபைல் கடை ஆகியவற்றை சாட்சிகள் பிரபு, ஜேசுராஜ், சுப்பிரமணியன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு இசக்கித்துரை விளக்கிகூற 19.06.2020–ம் தேதி ஜெயராஜ் காவல்நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்ட சம்பவ நிகழ்வு குறித்து மறுகட்டமைப்பு செய்து பார்க்கப்பட்டுள்ளது. அதன்பின் சாத்தான்குளம் காவல்நிலையம் சென்று மேற்படி தடய அறிவியல் குழுவினரால் சாட்சிகள் ரேவதி மற்றும் ப்யூலா செல்வகுமாரி விளக்கிக்கூற 19.06.2020–ம் தேதி இரவு சாத்தான்குளம் காவல்நிலையத்தில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் சித்ரவதை செய்யப்பட்ட நிகழ்வு குறித்து மறுகட்டமைப்பு செய்து பார்க்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி காவல்நிலையத்தில் இருந்த சந்தேகத்திற்கிடமான

கறைகள் கைவிரல் ரேகைகள் பருத்தி நூலால் உயிரியல் பிரிவு தடய அறிவியல் நிபுணர்களால் சேகரிக்கப்பட்டு, அதுகுறித்த நடவடிக்கை தொடர்பாக குறிப்பாணை தயாரிக்கப்பட்டுள்ளது. கோவில்பட்டி கிளைச் சிறைச் சாலையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அடைத்து வைக்கப்பட்டிருந்த அறை எண்.3–ஐ பார்வையிட்டு மேற்படி கிளைச் சிறைச் சாலையின் கண்காணிப்பாளர் திரு.சங்கர் முன்னிலையில் மேற்படி அறையின் சுவர்களில் 8 இடங்களில் இருந்த சந்தேகத்திற்கிடமான கறை உயிரியல் பிரிவு தடய அறிவியல் நிபுணர்களால் பருத்தி நூலால் தொய்ந்தெடுக்கப்பட்டு சேகரிக்கப்பட்டுள்ளது. பின்னர் சாத்தான்குளம் காவல்நிலையம் மற்றும் கோவில்பட்டி கிளைச் சிறைச் சாலையில் சேகரிக்கப்ட்ட தடயங்கள் புதுடெல்லி, தடய அறிவியல் ஆய்வகத்தற்கு நீதிமன்றம் மூலம் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. செல்வராணியிடமிருந்து இரத்த மாதிரி சேகரிக்கப்பட்டு தடய அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. 08.09.2020, 17.09.2020 ஆகிய தேதிகளில் கிடைக்கப் பெற்றுள்ள தடய அறிவியல் அறிக்கைகளானது 19.06.2020 மற்றும் 20.06.2020–ம் தேதிகளுக்கு இடைப்பட்ட இரவில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் சித்ரவதைக்கு உள்ளாக்கப்பட்டதை நிரூபிப்பதாக உள்ளது. மேலும் அது பிரேத பரிசோதனை அறிக்கையின் முடிவை ஒத்துரைப்பதாக உள்ளது. 03.11.2021–ம் தேதியிட்ட கடிதம் மூலம் கிடைக்கப்பெற்ற 02.11.2020–ம் தேதியிட்ட உயிரியல் பரிசோதனை அறிக்கையில் பென்னிக்சின் ஆடையில் இருந்த இரத்தத்தில் உள்ள மரபணுமும் செல்வராணியின் மாதிரி இரத்தத்தில் உள்ள மரபணுவும் ஒத்துப்போவதாகவும் இறந்தவர்களின் ஆடை மற்றும் காவல் நிலையம் சிறைசாலை சுவர்களில் இருந்து சேகரிக்கப்பட்ட ரத்த தடயங்களில் மனித ரத்தம் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பல்நோக்கு மருத்துவர் குழு பிரேத விசாரணை அறிக்கை, பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் அதுகுறித்த வீடியோ ஆகியவற்றை பரிசீலித்தும் மருத்துவ ஆவணம் மற்றும் தடய அறிவியல் ஆவணங்களை பரிசீலித்தும் சிகிச்சை அளித்த மருத்துவர்கள் மற்றும் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர்கள் ஆகியோர்களை விசாரித்தும் சாத்தான்குளம் காவல்நிலையம் கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலை, சாத்தான்குளம் அரசு மருத்துவமனை ஆகியவற்றை பார்வையிட்டு முதல் கட்ட மற்றும் இறுதி கட்ட

அறிக்கையை சமர்பித்துள்ளனர். அதில் பிரேத பரிசோதனை அறிக்கையுடன் ஒத்துப்போவதாகவும் மருத்துவர்களிடமும் சிகிச்சை அளித்த நடவடிக்கை எடுத்ததில் கிளைச்சிறைச்சாலை அதிகாரிகளிடமும் கவனக்குறைவு இருப்பதாக தெரியவில்லை என்றும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இருவரும் மழுங்கிய காயங்களாலும் அதனால் ஏற்பட்ட இரத்தப்போக்கு மற்றும் அதிர்ச்சியின் பின் விளைவுகளாலும் இறந்திருக்கலாம் என்றும், மேற்படி இருவரது புட்டத்திலும் கை, கால், பாதங்களிலும், மொலிகளிலும் பரந்த அளவில் கன்றிய காயங்கள் காணப்பட்டதாகவும், அதுதொடர்ந்து சீராக அடிக்கப்பட்ட காரணத்தால் ஏற்படுத்தக்கூடும் என்றும் இருவருக்கும் சர்க்கரை வியாதி இருந்துள்ளது என்றும் மேற்படி நபர்களுக்கு காயம் ஏற்பட்டு தோராயமாக 3 நாட்கள் ஆகியிருக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. சிசிடிவி காட்சிகளை பார்த்து பியூலா மற்றும் ரேவதி ஜெயராஜை அழைத்துச் சென்ற சமயத்தில் எதிரிகள் பாலகிருஷ்ணன் முத்துராஜா இருந்ததையும் மற்றும் டாட்டா சுமோவையும் அடையாளம் காட்டியுள்ளனர்,மருத்துவமனையில் உள்ள சிசிடிவி காட்சிகளில் பாலகிருஷ்ணன் சாமதுரை முத்துராஜ் செல்லதுரை இருந்துள்ளதை அடையாளம் காட்டியுள்ளனர்.,பேய்குளம் ஜெயக்குமார் என்பவரது மரணம் சம்மந்தமாக ராஜா சிங் என்பவரை கைது செய்து அடித்துள்ளனர் என்பது தூத்துக்குடி சிபிசிஐடி தெற்கு காவல் நிலைய குற்ற எண் 3/20 வழக்கிலிருந்து தெரிய வருகிறது மேற்படி ராஜா சிங்கிடம் ஜெயராஜ் மற்றும் பெனிக்ஸ் தங்களுக்கு ஏற்பட்ட சித்திரவதைகள் குறித்து வாக்குமூலம் கொடுத்துள்ளனர், தூத்துக்குடி சிபிசிஐடி தெற்கு காவல் நிலைய குற்ற எண் 4/20 வழக்கிலிருந்து இதேபோல் ரகுகணேஷ் மற்றும் ஸ்ரீதர், மகேந்திரன் என்ற நபரை கைது செய்து, அடித்துள்ளதில் 13.06.2020-ம் தேதி மேற்படி மகேந்திரன் இறந்துள்ளதாக தெரியவருகிறது. இதிலிருந்து எதிரிகள் மேற்படி காயங்களை ஏற்படுத்தி கைதிகளை சித்ரவதை செய்வதை வழக்கமாக கொண்டிருந்துள்ளனர் என தெரியவருகிறது. மேலும் தாங்கள் ஏற்படுத்திய காயங்கள் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு இயற்கையின் சாதாரண போக்கில் மரணம் விளைவிக்க போதுமானது என்பதை அறிந்தே எதிரிகள் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை சித்ரவதை செய்துள்ளனர். விசாரணையில் காவல் நிலையத்தில் இருந்த ரத்தத்தை

அழித்துள்ளதும் பெனிக்சை அவரது உடை கொண்டு தரையில் சிந்திய ரத்தத்தை துடைக்க சொல்லியுள்ளதும் தெரிய வந்துள்ளது. ஸ்ரீதர் ஜெயராஜ் மற்றும் பெனிக்சை அடிக்க தூண்டியுள்ளார் என்பதும் தாமஸ் பிரான்சிஸ் கதவருகே நின்று யாரும் வராமல் காவல் காத்து உள்ளார் என்பதும் தெரிய வருகிறது. மேலும் ஸ்ரீதர், ரகுகணேஷ், முருகன், பாலகிருஷ்ணன் சதித்திட்டம் தீட்டி முருகனிடம் புகாரைப்பெற்று முத்துராஜாவிடம் சாட்சி கையெழுத்து பெற்று பொய்யான காரணங்களைக் கூறி குற்ற எண்.312/2020 வழக்கை ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு எதிராக கொடுத்துள்ளனர் என்றும் மேற்படி புகாரில் குறிப்பிட்டுள்ள சமயத்தில் முருகன் அதில் குறிப்பிட்ட சம்பவ இடத்தில் இல்லை என்றும் அதில் குறிப்பிட்டுள்ள நேரத்தில் ஜெயராஜ் பிரச்சனை எதுவும் செய்யவில்லை எனபதும் கோவிட் விதிமுறை மீறப்படவில்லை என்பதும் புலன் விசாரணையில் தெரியவருகிறது. ஜெயராஜ் மற்றும் பெனிக்ஸ் பிரச்சினை செய்ததாகவும் உருண்டு புரண்டதாகவும் சிசிடிவி காட்சிகளில் பதிவுகள் காணப்படவில்லை . இது அவர்கள் மீது தொடரப்பட்ட வழக்கு பொய்யானது என்பதை நிரூபிப்பதாக உள்ளது. குற்றத்தை மறைக்க ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் உடுத்தியிருந்த இரத்தம் படிந்த ஆடைகளை மாற்றி குப்பையில் எதிரிகள் போட்டு அழித்துள்ளனர். மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லும் போதும் மருத்துவமனையில் வைத்தும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் ஆடைகளில் உள்ள இரத்தக்கறைகளை மறைப்பதற்காக அவர்களது ஆடைகளை எதிரிகள் மாற்றியுள்ளனர். எதிரிகள் சதித்திட்டம் தீட்டி ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை சட்டவிரோதமாக காவல்நிலையத்தில் வைத்து மரணம் விளைவிக்கும் அளவிற்கு அடித்து சித்ரவதை செய்து மரணத்தை விளைவித்துள்ளனர் என சிபிஐ தரப்பில் 12.08.2022 அன்று கூடுதல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்நிலையில் 1 முதல் 9 எதிரிகளுக்கு எதிரான இந்த வழக்கு முதல்நிலை விசாரணை வழக்கு எண்.208/2020 ஆக கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ்

10.12.2020–ம் தேதி இவ்வழக்கு ஆவணங்கள் இலவசமாக வழங்கப்பட்டு, வழக்கு கோப்பு பரீசிலிக்கப்பட்டு மேல் விசாரணைக்கு மதுரை, முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதில், அங்கு இவ்வழக்கு அமர்வு வழக்கு எண்.470/2020 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மேல் விசாரணைக்கு இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

3. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளதில் 10.03.2021–ம் தேதி வழக்கு கோப்பு குறித்த சங்கதிகள் எதிரிகளுக்கு விளக்கிக்கூறி விளக்கப்பட்டுள்ளதில் எதிரிகள் மேற்படி சங்கதிகளை மறுத்துள்ளார்கள். உபயதரப்பு கேட்கப்பட்டு வழக்கு கோப்பு பரீசிலிக்கப்பட்டு 1 முதல் 9 எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவு 342 (எண்ணிக்கையில் 2)–ன் கீழும், 1 முதல் 7 மற்றும் 9 எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவு 201, 302 உ/இ இதச பிரிவு 34 (எண்ணிக்கையில் 2)–ன் கீழும், 3–ம் எதிரிக்கு எதிராக இதச பிரிவு 193, 211 மற்றும் 218–ன் கீழும், 4–ம் எதிரிக்கு எதிராக இதச பிரிவு 182, 211 மற்றும் 218–ன் கீழும், 8–ம் எதிரிக்கு எதிராக இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 109–ன் கீழும், குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு மேற்படி குற்றச்சாட்டுகள் குறித்து எதிரிகளிடம் விளக்கிக்கூறி வினவியுள்ளதில் எதிரிகள் மேற்படி குற்றச்சாட்டுகளை புரிந்துகொண்டு மேற்படி குற்றச்சாட்டுகளை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் அல்ல என எடுத்துரைத்துள்ளார்கள். 23.04.2021–ம் தேதி 3 மற்றும் 4 எதிரிகள் மீது இதச பிரிவு 211 மற்றும் 218–ன் கீழ் குற்றச்சாட்டு மாற்றி வனையப்பட்டு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. சிபிஜ தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.52 விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ. 271 ஆவணங்கள் மற்றும் அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.57 குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 216–ன் மனுவின் கீழான விசாரணையில் சதித்திட்டம் தீட்டியதாக புலனாகவில்லை என்பதாலும் ஒப்புதல் வாக்குமூலம் பெற வேண்டுமென்ற எண்ணத்தில் குற்றம் இழைக்கப்பட்டதாக தெரியவரவில்லை என்பதாலும் இதச பிரிவு 120(B) மற்றும் 328–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்படவில்லை. மேலும் Crl.RC.MD.No.274/2023 and

Crl,MP.MD.No.2735/2023 date:03.09.2021 உத்தரவில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை பிறப்பித்துள்ள தீர்ப்பின் சாரம்சத்தை பரிசீலித்த வகையில் இதச பிரிவு 183 (188)–ன் கீழான குற்றச்சாட்டு பொருத்து 3–ம் எதிரி விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. எனவே இதச பிரிவு 183–ன் கீழ் மற்ற எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டு வனையப்படவில்லை. 3–ம் எதிரியை பொருத்த வரையில் இதச பிரிவு 183 தனி புகார் இல்லாத நிலையில் ஈர்க்கப்படுவதாக இல்லை. எனினும் இதச பிரிவு 211, 201, 218, 195–ன் கீழான குற்றச்சாட்டுகளை பொருத்த வரையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு எதிராக கொடுக்கப்பட்டுள்ள குற்ற எண் 312–20புகார் பொய்யானது என்றும் அது நீதிமன்றத்திற்கு வெளியே வைத்து தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் சிபிஐ தரப்பில் கூறப்படுகின்ற நிலையில் எங்கே தீங்கு உள்ளதோ அங்கு தீர்வு இருக்க வேண்டும் என்பதற்காகவும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இறந்துள்ள நிலையில் மேற்படி புகார் பொய்யானது என அரசு தரப்பில் கூறப்படுவது குறித்து தீர்மானிக்க வேண்டியது அவசியமாக உள்ளதாலும் அந்த புகார் நீதிமன்றத்திற்கு வெளியே சாத்தான்குளம் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டதாககுற்றம்சாட்டப்பட்டுள்ளதையும்கருத்தில் கொண்டு இந்நீதிமன்றம் 25.11.2025–ம் தேதி தேதி Crmp 5137–2025 மனுவில் பிறப்பித்துள்ள உத்தரவின் படி 1,3,4,6 எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவு 201, 211 உ/இ 34 , 218 உ/இ 34 , 195 உ/இ 34 –ன் கீழ் குற்றச்சாட்டு வனையத்தக்கது என இந்த நீதிமன்றம் தீர்மானித்து அதன்படி 1,3,4,6 எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவு 201 , 211 உ/இ 34 , 218 உ/இ 34, 195– உ/இ 34 ன் கீழ் 25.11.2025–ம் தேதி இந்நீதிமன்றம் கூடுதல் குற்றச்சாட்டுகள், மாற்று குற்றச்சாட்டுகள் வனைந்தும் மற்றும் சில குற்றச்சாட்டுகளை மாற்றி வனைந்தும் உள்ளது. அதன்படி

| |
|---|
| 1–ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்) மற்றும் அதற்கு மாற்றாக இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 109 உ/இ இதச பிரிவு 114, (2எண்ணம்)– |

ன் கீழும்

2–ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்) இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்)–ன் கீழும்

3–ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 182, இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ 34 (2 எண்ணம்)–ன் கீழும்

4–ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2எண்ணம்), இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்)–ன் கீழும்

5–ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்) இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34 (2எண்ணம்) கீழும்

6–ம் எதிரி இதச பிரிவுகள் 342 (2 எண்ணம்), 201 (2 எண்ணம்), இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்)–ன் கீழும்

7–ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்)–ன் கீழும்

8–ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201(2 எண்ணம்), 302 உ/இ

இதச பிரிவு 109 உ/இ இதச பிரிவு 109 உ/இ இதச பிரிவு 114–ன் கீழும்

9–ம் எதிரி இதச பிரிவுகள் 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்)–ன் கீழும் குற்றம் இழைத்துள்ளதாக குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது.

5. கூடுதல் குற்றச்சாட்டுகள், மாற்று குற்றச்சாட்டு மற்றும் மாற்றி வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக கூடுதல் சாட்சியம் அளிக்க அனுமதியளிக்கப்பட்டது. குவிமுச பிரிவு 161–ன் கீழான வாக்குமுலங்களை முழுவதுமாக குறியீடு செய்ய இயலாது என்பதால் அதுகுறித்து குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளிக்கும் வகையில் அ.சா.52–யும் மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யவும் அனுமதியளிக்கப்பட்டது. அரசுதரப்பில் கூடுதல் சாட்சியம் ஏதும் முன்னிடப்படவில்லை. 1–ம் எதிரி தரப்பில் அ.சா.37, 40, 52 மீண்டும் அழைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளனர். மற்ற எதிரிகள் தரப்பில் மீண்டும் சாட்சிகளை அழைத்து விசாரிக்க வேண்டியதில்லை என தெரிவிக்கப்பட்டது.

6. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் –</u>

6.1 ஜெயராஜின் மகள் ப்யூலா ஜெயராஜ், அரசு தரப்பில் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில், பென்னிக்ஸ் தன் அண்ணன் என்றும், ஜெயராஜ் தன் தகப்பனார் என்றும், தன் அண்ணன் இடக்குடித்தெருவில் கதவு எண்.2/26–ல் முன் பகுதியில் ஏ.பி.ஜே மொபைல் சிட்டி என்ற பெயரில் கைபேசி கடை வைத்திருந்தார் என்றும், பின்பகுதியில் தன் தகப்பனார் பெர்லின் டிரேடர்ஸ் என்ற பெயரில் பனங்கட்டை வியாபாரம் செய்து வந்தார் என்றும், தன் அண்ணனின் கைபேசி எண். 9994068656 என்றும், தன் தகப்பனாரின் கைபேசி எண்.9443871591 என்றும், 19.06.2020–ம் தேதி இரவு சுமார் 07.50 மணியளவில் தன் தகப்பனாரை சாத்தான்குளம் போலீசார் கைது செய்துவிட்டதாக தன் அண்ணன் பென்னிக்ஸ் தனக்கு கைபேசி

மூலம் தகவல் சொன்னார் என்றும் மேலும், தன் சித்தப்பா தனசிங் என்பவரின் கைபேசி எண்ணை அனுப்பி வைக்கும்படி தன் அண்ணன் சொன்னதாகவும், அந்த எண்ணை வாட்ஸ் அப்பில் தன் அண்ணனுக்கு அனுப்பிவிட்டு அவருக்கு கைபேசிக்கு அழைப்பு விடுத்ததாகவும் பலமுறை அழைப்பு விடுத்தும் தன் அண்ணன் பென்னிக்ஸ் அழைப்பை எடுக்கவில்லை என்றும் பென்னிக்ஸ் தனக்கு சொன்ன தகவல் குறித்து பெர்சிசிடம் தெரிவித்தாகவும் பிறகு தன் தகப்பனாரையும், அண்ணன் பென்னிக்சையும் போலீசார் கைது செய்த விபரத்தை தன் மாமா தேசிங்குராஜா மூலம் தெரிந்து கொண்டதாகவும், தன் மாமா தன் தகப்பனாரையும், அண்ணன் பென்னிக்சையும் போலீசார் காவல் நிலையத்தில் வைத்து தாக்கியதாக சொன்னார் என்றும், 22.06.2020 அன்று இரவு தன் கணவரின் கைபேசி எண்ணுக்கு தொடர்பு கொண்டு தன் அண்ணன் இறந்துவிட்டதாக தன் மாமா தகவல் சொன்னார் என்றும், 22.06.2020 அன்று இரவு தாங்கள் பொள்ளாச்சியில் இருந்து கிளம்பி சாத்தான்குளம் வந்ததாகவும், வந்த பிறகு 23.06.2020 அன்று காலையில் தன் தகப்பனாரும் இறந்துவிட்டதாக சாத்தான்குளத்தில் இருந்த ஒருவர் தங்களிடம் சொன்னதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.2 கோவில்பட்டி கிளைச்சிறை கண்காணிப்பாளராக பணியில் இருந்துள்ள திரு.சங்கர் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் 01.03.2019 முதல் கோவில்பட்டி கிளைச்சிறை கண்காணிப்பாளராக பணியில் இருந்து வருவதாகவும், தான் மேற்படி கிளைச்சிறையில் பணியில் இருந்தபோது 20.06.2020 அன்று பிற்பகல் 2.30 மணியளவில் சாத்தான்குளம் காவல்நிலையக் குற்ற எண்.312/2020 சம்பந்தப்பட்ட இருவரை காவல் அடைப்பிற்காக சாத்தான்குளம் காவல்நிலைய காவலர்களான A6 முத்துராஜா, A7 செல்லத்துரை ஆகியோர்கள் மேற்படி கிளைச்சிறைக்கு கொண்டு வந்தார்கள் என்றும், அப்போது மேற்படி கிளைச்சிறையில் முதல்நிலை தலைமைக் காவலர்.திரு.அழகர்சாமி, தலைமைக் காவலர் திரு.மாரிமுத்து ஆகிய இருவரும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்களுக்கான ரிமாண்ட் வாரண்ட், மருத்துவ ஆவணங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்து தன்னிடம் கொண்டுவந்ததாகவும்,

மருத்துவ ஆவணங்களில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்களுக்கு உடலில் காயங்கள் இருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது என்றும், அதுகுறித்து மேற்படி மாரிமுத்து அனுமதி பதிவேட்டில் பதிவு செய்த பிறகு தான் அவர்களை சிறைவாசியாக எடுக்க ஆணையிட்டதாகவும், தன்னிடம் அழைத்து வந்தபோது ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் நொண்டி நொண்டி நடந்து வந்தார்கள் என்றும், அவர்களிடம் என்ன வழக்கு என்று விசாரித்ததாகவும், ஊரடங்கு சமயத்தில் மாவட்ட நிர்வாகம் விதித்திருந்து விதிமுறைகளை மீறி கடையைத் திறந்து வைத்திருந்ததாக போலீசாருடன் தகராறு என்று சொன்னார்கள் என்றும், இருவருக்கும் புட்டத்திலும். இரண்டு கை மணிக்கட்டிலும். கால் பாதங்களிலும் வீக்கங்கள் இருந்தன என்றும், எதனால் காயம் ஏற்பட்டதென்று கேட்டதாகவும், சாத்தான்குளம் போலீசார் தங்களை தாக்கியதாக சொன்னார்கள் என்றும், இருவரும் கையில் மாத்திரைகளை வைத்திருந்தார்கள் என்றும், சாத்தான்குளம் போலீசார் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று தங்களுக்கு சிகிச்சை அளித்து மாத்திரைகளை வாங்கி கொடுத்ததாகவும் தற்போது கொஞ்சம் பரவாயில்லை என்றும் சொன்னார்கள் என்றும், மேற்படி இருவரும் சிறைக்கு வரும்போது லுங்கியும், சட்டையும் அணிந்திருந்தார்கள் என்றும், இருவருக்கும் லுங்கிகளில் இரத்தக்கறை இருந்தது என்றும், லுங்கியின் பின்புறத்தில் இரத்தக்கறை இருந்தது என்றும் மருத்துவ உதவி வேண்டுமா என்று கேட்டதாகவும், தற்போது தான் மருத்துமனையில் இருந்து வருகிறோம் என்று சொன்னார்கள் என்றும், அவர்களுக்கு காயம் ஏற்பட்டிருப்பதால் உடனடி மருத்துவ சிகிச்சை தேவைப்படும் என்ற எண்ணத்தில் தன் அலுவலகத்திற்கு சுமார் அருகில் சுமார் 15 அடி துாரத்திலிருந்த சிறை அறை எண்.3—ல் அவர்களை வைத்திருக்கும்படி சொன்னதாகவும், அப்போது அந்த அறையில் வேறு ஒரு காயம் அடைந்த சிறைவாசி தமிழ்ச்செல்வன் என்பவரும் இருந்தார் என்றும், மேற்படி கிளைச்சிறையில் பராமரிக்கப்படும் அனுமதிப்பதிவேடு அ.சா.ஆ.1 என்றும், அதில் சாத்தான்குளம் காவல்நிலைய போலீசார் செல்லத்துரை மற்றும் முத்துராஜா ஆகியோரின் கையொப்பம் உள்ளது என்றும் மற்றும் மேற்படி ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்களின் கைரேகைகள் மற்றும் கையொப்பங்கள் உள்ளன என்றும், அதில் ஜெயராஜ் மற்றும்

பென்னிக்ஸ் ஆகியோர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றிய விபரங்கள் உள்ளது என்றும், அதில் என்ன வழக்கு என்பதற்காக அந்த பதிவேட்டில் அந்த பகுதியில் பென்சிலால் போலீசாருடன் தகராறு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், 22.06.2020 அன்று காலை 08.00 மணியளவில் முதல் தலைமைக் காவலர் திரு.செல்வராஜ் அவர்களிடம் பென்னிக்ஸ் வலி இருப்பதாக கூறியுள்ளார் என்றும் அப்போது பென்னிக்ஸ் புட்டத்தில் தோல் உரிந்து நச்சுத்தண்ணீர் கசிந்து கொண்டிருந்துள்ளது என்றும், தான் உடனே கோவில்பட்டி அரசு மருத்துவமனை மருத்துவர்.திரு.வெங்கடேஷ் என்பவருக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வரச்சொன்னதாகவும், அவர் வந்து ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்களுக்கு காயங்களை சுத்தம் செய்து சிகிச்சை அளித்தார் என்றும், அப்போது மேற்படி மருத்துவர் மறுநாள் இரண்டு நோயாளிகளையும் மருத்துவமனைக்கு அழைத்து வரும்படி பதிவேட்டில் பதிவு செய்தார் என்றும், சிறைச்சாலைக்கு மருத்துவர்கள் வருவது சம்ந்தமான பதிவேடு அ.சா.ஆ.2 என்றும், அதில் பக்கம் எண்.81–ல் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்களுக்கு மேற்படி மருத்துவர் சிகிச்சை அளித்த விபரங்கள் உள்ளன என்றும் அது அ.சா.ஆ.3 என்றும், மேற்படி மருத்துவர் சிகிச்சை அளித்துவிட்டு சென்றுவிட்டார் என்றும், சிறை அதிகாரிகள் பணி சமயத்தில் உள்ளே வரும் நேரமும், வெளியே செல்லும் நேரமும் குறித்து பராமரிக்கப்படும் பதிவேட்டின் சான்றிடப்பட்ட நகல் அ.சா.ஆ.4 என்றும், அன்று இரவு 07.30 மணியளவில் மேற்படி அழகர்சாமி தன்னை கைப்பேசியில் தொடர்பு கொண்டு பென்னிக்ஸ் என்பவர் மூச்சு விட சிரமப்படுவதாக சொன்னார் என்றும், உடனே அவரை மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லும்படி சொன்னதாகவும், தான் 07.40 மணியளவில் சிறைச்சாலைக்கு வந்துவிட்டதாகவும், மேற்படி மாரிமுத்து வேல்முருகன் ஆகியோர்களுடன் ஒரு ஆட்டோ மூலமாக கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக பென்னிக்சை அனுப்பியதாகவும், அன்று இரவு 08.30 மணியளவில் மேற்படி மாரிமுத்து தன்னை கைப்பேசியில் தொடர்பு கொண்டு ECG பிரச்சனை இருப்பதால் மேற்படி பென்னிக்சை தூத்துக்குடி அரசு கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும்படி மருத்துவர் பரிந்துரைத்ததாக தன்னிடம் சொன்னார் என்றும், தான் மருத்துவரை

விசாரித்து, தனது கட்டுப்பாடு அதிகாரியான பாளையங்கோட்டை மத்திய சிறை கண்காணிப்பாளரிடம் மேற்படி பென்னிக்சை தூத்துக்குடி அரசுக் கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்துச்செல்ல அனுமதி பெற்று 108 ஆம்புலன்சிற்காக காத்துக் கொண்டிருந்ததாகவும், இரவு 09.00 மணியளவில் மாரிமுத்து தன்னை கைப்பேசியில் தொடர்புகொண்டு, மேற்படி பென்னிக்ஸ் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார் என்றும், அதுகுறித்து தான் மேலதிகாரிகளுக்கு தகவல் சொன்னதாகவும், பென்னிக்ஸ் வீட்டிற்கு கணேஷ்குமார் என்ற காவலர் தகவல் சொன்னார் என்றும், அது சம்பந்தமாக போலீசில் புகார் கொடுக்க ஏற்பாடு செய்ததாகவும், பென்னிக்ஸ் இறப்பு குறித்து தகவல் சொல்ல ஜெயராஜை அழைத்து வரச்சொன்னதாகவும், அவருக்கு கடுமையான காய்ச்சல் இருந்தது என்றும், அவரையும் உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார் என்றும், பின்னிட்டு தான் கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் எழுத்துமூலமான புகார் கொடுத்ததாகவும், அந்த புகார் அ.சா.ஆ.5 என்றும் அதனடிப்படையில் போலீசார் வழக்கு பதிவு செய்தார்கள் என்றும் அது அ.சா.ஆ.5 என்றும், அதன் பின்புறத்தில் அப்புகாரை 22.06.2020 அன்று இரவு 22.30 மணியளவில் பெற்றுக்கொண்டதாக மேற்குறிப்பு செய்து நிலைய அதிகாரி நிலையக் குற்ற எண்.649/2020 என்ற எண்ணில் குவிமுச பிரிவு 176(1)(A)(1)–ன் படி வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், அன்று இரவு மாரிமுத்து மூலமாக பென்னிக்ஸ் என்பவரின் உடலை திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பியதாகவும், 23.06.2020 அன்று காலை 05.40 மணியளவில் பணியிலிருந்து வேல்முருகன் தனக்கு கைப்பேசியில் தொடர்பு கொண்டு மேற்படி ஜெயராஜ் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக தகவல் சொன்னார் என்றும், அதுகுறித்து உயர் அதிகாரிகளுக்கு தகவல் சொல்லிவிட்டு கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் ஜெயராஜின் இறப்பு குறித்து மீண்டும் ஒரு புகார் கொடுத்ததாகவும், அந்த புகார் அ.சா.ஆ.6 என்றும் அந்த புகாரை 23.06.2020 அன்று பெற்றுக்கொண்டதாக மேற்குறிப்பு செய்து அதனடிப்படையில் நிலையக் குற்ற எண்.650/2020 என்ற எண்ணில் குவிமுச பிரிவு 176(A)(1)–ன் படி வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்றும்,

இரண்டு புகார்களுக்கான முதல் தகவல் அறிக்கையின் நகல்களை பெற்றுக் கொண்டதாகவும், மேற்படி ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இருந்த 3−ம் எண் சிறை அறையில் 22.06.2020 அன்று மொத்தம் 8 சிறைவாசிகள் இருந்தார்கள் என்றும், மேற்படி ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் உடன் இருந்த மற்ற சிறைவாசிகளின் விபரங்கள் அடங்கிய ஆவணம் சான்றிடப்பட்ட நகல் அ.சாஆ.7 என்றும், 18.07.2020 அன்று சிபிஐ அதிகாரிகளிடம் அனுமதி பதிவேடு உள்ளிட்ட சில ஆவணங்களை ஒப்படைத்தாகவும், அதற்கான கைப்பற்றுதல் ஆவணம் அ.சா.ஆ.8 என்றும், 18.07.2020 அன்று சிபிஐ அதிகாரிகள் தன் முன்னிலையில் சிறை வளாகத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயாரித்தார்கள் என்றும், அந்த பார்வை மகசரில் தன்னிடமும், மேற்படி அழகர்சாமியிடமும் கையொப்பம் பெற்றார்கள் என்றும் அது அ.சா.ஆ.9 என்றும் மேற்படி வரைபடத்திலும் தானும், மேற்படி அழகர்சாமியும் கையொப்பமிட்டதாகவும், அந்த வரைபடம் அ.சா.ஆ.10 என்றும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை சிறைச்சாலைக்கு கொண்டு வரப்படும்போது, பெறப்பட்ட ரிமாண்ட் வாரண்ட் மற்றும் மருத்துவ அறிக்கை ஆகியவை அடங்கிய தொகுப்புகள் அ.சா.ஆ.11 மற்றும் அ.சா.ஆ.12 என்றும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோரிடம் காயங்கள் எப்படி வந்தது என்று தான் கேட்டதாகவும், சாத்தான்குளம் காவல்நிலையத்தில் காவலர்களால் தாக்கப்பட்டதாகச் சொன்னார்கள் என்றும், மேற்படி பென்னிக்ஸ் புட்டதிலும், உடல் முழுவதும் வலி இருப்பதாக சொன்னார் என்றும், மேற்படி பென்னிக்ஸ் புட்டத்தில் இரத்தமும், நச்சுத்தண்ணீரும் கசிந்து கொண்டிருந்தது என்றும், சிபிஐ போலீசார் தன்னை விசாரிக்கும்போது பிரேத பரிசோதனை அறிக்கையை தன்னிடம் காட்டினார்கள் என்றும் மேலும், அனுமதி பதிவேட்டையும் வைத்து தன்னை விசாரித்தார்கள் என்றும் வெளிப்புற காயங்களைப் பொறுத்த வரையில் தனக்குத் தெரிந்ததை அனுமதி பதிவேட்டில் பதிவு செய்வோம் என்று சொன்னதாகவும், 16.06.2020 முதல் 21.06.2020 வரையில் சிறையில் இருந்த சிறைவாசிகளின் விபரங்களை சிபிஐ போலீசார் தன்னிடம் கேட்டு பெற்றுக் கொண்டார்கள் என்றும், அந்த விபரம் அடங்கிய ஆவணங்களின் சான்றிடப்பட்ட நகல்களின் தொகுப்பு அ.சா.ஆ.13 என்றும் சாட்சியம் அளித்துள்ளார். 17.06.2020 முதல்

20.06.2020 வரையிலான காலத்திற்கான கோவில்பட்டி கிளைச்சிறைசாலையின் சிறைவாசி சிறை அடைப்பு பதிவேடு அ.சா.ஆ.14 ஆக அ.சா.2 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6.3 ஜெயராஜின் மனைவி செல்வராணி அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் 19.06.2020 அன்று இரவு சுமார் 07.00 மணியளவில் தன் கணவர் வீட்டிற்கு வந்து பால் வாங்கி தந்துவிட்டு சென்றார் என்றும், 08.00 மணிக்கு கடையை பூட்டிவிட்டு வருவதாகச் சொன்னவர் 08.00 மணிக்கு வரவில்லை என்றும், தன் கணவரின் தம்பியான ஜெயசீலனிடம் என்ன என்று பார்த்துவிட்டு வாருங்கள் என்று சொன்னதாகவும், அவர் பஜாரில் போய் விசாரித்து விட்டு அவருடைய மனைவி சாந்தாவிற்கு போன் செய்து அண்ணன் போலீஸ் ஸ்டேசனில் இருப்பதாகவும், பென்னிக்சும் போலீஸ் ஸ்டேசன் போயிருப்பதாகவும் சொன்னார் என்றும், பிறகு தன் பெரியப்பா மகன் தாவீது மற்றும் தேசிங்குராஜாவிற்கு போன் செய்து சொன்னதாகவும், அவர்கள் போலீஸ் ஸ்டேசன் சென்று பார்த்துவிட்டு ஸ்டேசன் பூட்டியிருப்பாகவும் உள்ளே போய் பார்க்க முடியவில்லை என்றும் சொன்னார்கள் என்றும், அடுத்த நாள் காலையில் பென்னிக்சின் நண்பரான சுடலைமுத்து மற்றும் இரவிசங்கர் வந்து தன் கணவர் மற்றும் மகனுக்கு மாற்றுவதற்கு துணி வேண்டுமென்று கேட்டார்கள் என்றும், தான் இரண்டு சாரம், ஒரு வேட்டி, ஒரு வெள்ளைசட்டை, ஒரு ஆரஞ்சு கலருடன் வெள்ளை கலருள்ள சட்டை மற்றும் ஜட்டி பனியனை 7.00 மணிக்கு கொடுத்துவிட்டதாகவும், பின்னர் 9.00 மணியளவில் தன் தம்பி தேசிங்குராஜா தன்னிடம் போலீசார் டார்க்கலர் துணி கேட்கிறார்கள் என்று சொன்னதால் 2 டார்க்கலர் சாரம், 2 துண்டு வேட்டி, 2 போர்வை கொடுத்துவிட்டதாகவும், சனிக்கிழமை மதியம் 12.30 மணியளவில் தன் மகன் தனக்கு போன் செய்து போலீஸ்காரங்க தன்னை அடித்து ரொம்ப துன்புறுத்தினார்கள் நைட் பூராவும் அடித்தார்கள், இரத்தம் வருகிறது, இப்போது கோவில்பட்டி கொண்டு செல்கிறார்கள் என்று பேச முடியாமல் சொல்லி போனை தன் கணவரிடம் கொடுத்ததாகவும், தன் கணவர் தன்னிடம் நடந்தது நடந்துவிட்டது நீ தம்பி வீட்டிற்கு போ என்று சொன்னதாகவும், இருவரும் கணீர் கணீர் என்று பேசுவார்கள்

என்றும் அன்று பேச முடியாமல் பேசினார்கள் என்றும், அப்பா முன்பு பிள்ளையை அடித்து கொடுமைப்படுத்தியதாக பையன் அழுதுகொண்டே சொன்னதாகவும், பையனை அப்பா முன்பு அடித்துள்ளார்கள் என்றும், தேசிங்குராஜா திங்கட்கிழமை கோவில்பட்டி போய் பார்த்துவிட்டு பெட்சீட், டவல், பிஸ்கட் வாங்கிக்கொடுத்துவிட்டு வந்ததாக சொன்னார் என்றும், இரவு சுமார் 08.00 முதல் 08.30 மணியளவில் தன் மகனுக்கு உடல்நிலை சரியில்லை என்றும், கோவில்பட்டி கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரியில் சேர்த்திருப்பதாக ஜெயிலில் இருந்து சொன்னதாகவும், ஆழ்வார் திருநகரி அருகில் ஒரு பாலம் அருகில் சென்று கொண்டிருந்த போது பையன் இறந்துவிட்டதாகவும், பார்க்க முடியாது என்றும் போனில் சொன்னார்கள் என்றும், தன் கணவரைப் பற்றி போனில் பேசியவரிடம் கேட்டபோது அவர் நன்றாக இருப்பதாகவும், ஜெயிலில் இருப்பதாகவும் சொன்னார் என்றும், அடுத்த நாள் காலையில் தன் கணவர் இறந்துவிட்டதாக சொந்தக்காரர்கள் சொல்லித் தெரியவந்ததாகவும், கோவில்பட்டி நீதிபதி தன்னை விசாரித்தார் என்றும், அவரிடம் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அவரிடம் இரத்தக்கறை படிந்த போர்வை மற்றும் இரத்தக்கறை படிந்த சட்டையை கொடுத்ததாகவும், அதை தன் கணவரின் தங்கை கணவர் ஜோசப் கொடுத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.4 பென்னிக்சின் அக்கா திருமதி.பெர்சிஸ் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தன் தம்பி பென்னிக்ஸ் ஏ.பி.ஜே மொபைல் என்ற பெயரில் கடையும் நடத்தி வந்ததாகவும், தன் தகப்பனாரின் மொபைல் எண்.9443871591 என்றும் தன் தம்பியின் மொபைல் எண்.9994068656 என்றும் 19.06.2020 அன்று இரவு 07.50 மணியளவில் தன் தம்பி பென்னிக்ஸ் தனக்கு போன் செய்ததாகவும், அப்போது தான் வேறு ஒரு காலில் பேசிக் கொண்டிருந்ததால் அதை அட்டெண்ட் செய்யவில்லை என்றும், கொஞ்சநேரத்தில் தன் தங்கை ப்யூலா தனக்கு போன் செய்ததாகவும், தான் அப்போது வேறு காலில் பேசிக் கொண்டிருந்ததால் அதையும் அட்டெண்ட் செய்யவில்லை என்றும், தான் பேசி முடித்தவுடன் தன் தங்கைக்கு போன் செய்து என்ன என்று கேட்டதாகவும், தம்பி பென்னிக்ஸ் தனக்கு போன் செய்ததாகவும், அப்பாவை போலீஸ்

விசாரணைக்காக போலீஸ் ஸ்டேசன் கூப்பிட்டு போவதாகவும், தான் பின்னாடி போலீஸ் ஸ்டேசன் செல்வதாகவும் தன் தம்பி சொன்னதாக தன் தங்கை தன்னிடம் சொன்னார் என்றும், அதன் பிறகு தான் தன் தம்பிக்கு கால் செய்ததாகவும், ரிங் போனது என்றும், தன் தம்பி எடுக்கவில்லை என்றும், தான் உடனே தன் சித்தப்பா ஜெயசீலனுக்கு போன் செய்து தங்கை ப்யூலா சொன்னது குறித்து விசாரித்து வரும்படி சொன்னதாககவும், தன் சித்தப்பா விசாரித்துவிட்டு அப்பாவை போலீஸ் ஸ்டேசன் அழைத்துச் சென்றிருப்பதாகவும், தம்பி பின்னால் போயிருப்பதாகவும் தன்னிடம் சொன்னார் என்றும் அதன்பிறகு தன் தம்பியின் நண்பர் வக்கீல் இராஜாராமுக்கு போன் செய்து என்னவென்று விசாரிக்கச் சொன்னதாகவும், அதற்கு அவர் தான் போலீஸ் ஸ்டேசன் முன்னால் இருப்பதாகவும், ஸ்டேசனுக்குள் அப்பா, தம்பி இருப்பதாகவும் போலீஸ் ஸ்டேசன் கதவு பூட்டப்பட்டிருப்பதாகவும் தன்னிடம் சொன்னார் என்றும், போலீஸ் ஸ்டேசனுக்குள் கதவை பூட்டிவிட்டு இரண்டு பேரையும் அடிப்பதாகவும், இரண்டு பேரும் அம்மா, அம்மா என்று சொல்வதாகவும் சொன்னார் என்றும், அதன் பிறகு அவர்கள் இருவரும் கடுமையாக தாக்கப்பட்டதாக தன் தம்பியின் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் மூலம் தெரிந்து கொண்டதாகவும், பிறகு 20.06.2020–ம் தேதி தேசிங்குராஜா மூலமாக தன் அப்பா மற்றும் தன் தம்பியிடம் பேசுவதற்கு முயற்சி செய்ததாகவும், அப்போது தன் தம்பியிடம் மட்டும் பேசியதாகவும், வலி தாங்க முடியாமல் அக்கா என்ற ஒரு வார்த்தை மட்டும் தன் தம்பி சொன்னதாகவும், அதற்கு மேல் பேச முடியவில்லை என்றும், அதன் பிறகு 22.06.2020–ம் தேதி இரவில் தன் மாமா தேசிங்குராஜா தனக்கு போன் செய்து தம்பி இறந்துவிட்டதாக சொன்னார் என்றும், அதன்பிறகு விஜயவாடாவில் இருந்து தன் குழந்தைகள் மற்றும் கணவருடன் புறப்பட்டு 23.06.2020–ம் தேதி இரவில் தான் சாத்தான்குளம் வந்ததாகவும், சாத்தான்குளம் வந்த பிறகுதான் தன் அப்பா இறந்த விபரம் தனக்குத் தெரியும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.5 அ.சா.3 செல்வராணியின் சகோதரர் தேசிங்குராஜா அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில், 19.06.2020–ம் தேதி இரவு 07.45 மணியளவில் தன் அக்கா

மகன் பென்னிக்ஸ் தனக்கு போன் செய்து அப்பாவை சாத்தான்குளம் போலீசார் கூட்டிச்செல்வதாக சொன்னதாகவும், என்ன காரணத்திற்காக என்று கேட்டதற்கு முந்தைய நாள் லாக்டவுன் காலத்தில் கடையை மூட எட்டு மணிக்கு மேல் ஆகிவிட்டது என்பது சம்பந்தமாக விசாரிப்பதற்காக அழைத்துச் செல்வதாக கூறினார் என்றும், தானும் தன் பெரியப்பா மகன் தாவீதும் சாத்தான்குளம் போலீஸ் ஸ்டேசனுக்கு தன்னுடைய மோட்டார் சைக்கிளில் 09.10 மணிக்கு சென்றதாகவும், அங்கு போகும் போது ஸ்டேசனுக்கு வெளியே லைட் ஆப் ஆகியிருந்தது என்றும், தன் அண்ணன் இறங்கி உள்ளே போனதாகவும், அங்கு ராஜாராம், மணிமாறன் மற்றும் பென்னிக்சின் நண்பர்கள் இருந்ததாகவும், அருகில் தன் மோட்டார் சைக்கிளை நிறுத்தியதாகவும், அப்போது உள்ளே போன தன் அண்ணன் திரும்பி வந்து வெளியில் உள்ள லைட்டும் ஆப் ஆகியுள்ளது என்றும், கதவும் பூட்டியுள்ளது என்றும், உள்ளே அடிக்கும் சத்தம் மற்றும் கதறல் சத்தம் கேட்பதாகவும் சொன்னார் என்றும், உள்ளே செல்வதற்கு காவலர் யாரும் அனுமதிக்கவில்லை என்றும், அதனால் திரும்பி வந்துவிட்டதாகவும் சொன்னார் என்றும், 09.30 மணியளவில் உதவி ஆய்வாளர் ரகுகணேஷ் உள்ளே போனார் என்றும், அவர் உள்ளே போய் கொஞ்சநேரத்தில் ப்யூலா ஸ்கூட்டி வண்டியில் வெளியே சென்றார் என்றும், ராஜாராம் உள்ளே போய்விட்டு வந்து ரகுகணேசும் சேர்ந்து இரண்டு பேரை அடிக்கிறார் என்று சொன்னார் என்றும், அதன்பிறகு சுமார் 11.30 மணியளவில் உள்ளே இருந்து தாமஸ் என்ற போலீஸ்காரர் வந்தார் என்றும், அவரிடம் தான் உதவி கேட்டதாகவும், அவர் ஹெல்ப் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டார் என்றும், அதன்பிறகு சுமார் 12.30 மணியளவில் உள்ளே இருந்து ஒரு போலீஸ்காரர் வந்து இனிமேல் உங்கள் அத்தானை விடுவது கஷ்டம், நீங்கள் காலையில் வாருங்கள் என்று சொன்னார் என்றும், சுமார் 11.00 மணியளவில் ஒரு போலீஸ்காரர் ஸ்டேசனில் இருந்து வெளியே வந்து கை கழுவியதாகவும், ராஜாராமிடம் கேட்டபோது அவர் பாலகிருஷ்ணன் என்று சொன்னார் என்றும், மறுநாள் 20.06.2020 அன்று காலை 07.00 மணிக்கு தானும் தன் அண்ணனும் சாத்தான்குளம் காவல்நிலையம் சென்றதாகவும், தாங்கள் ஸ்டேசனுக்குள் நுழையும்போது ஸ்டேசனில் இருந்து போலீஸ் வண்டி வெளியே வந்து ஜி.ஹெச்சுக்குள் நுழைவதைப் பார்த்ததாகவும், தான் வண்டியை

நிறுத்திவிட்டு முன்னால் சென்றதாகவும், தூரத்தில் இருந்து உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் கையை நீட்டி தடுத்ததாகவும், அதன்பிறகு சுமார் 08.00 மணியளவில் உதவி ஆய்வாளரிடம் கேட்டு வடை மற்றும் டீயை வாங்கிவிட்டு வந்து ஜீப்பின் பின்னால் உள்ள கதவை திறந்த போது இரண்டு பேர் இடுப்பிலும் இரத்தக்கசிவும், கைகளில் வீக்கக்காயமும், முகம் மிகவும் வேதனையில் மோசமான கண்டிசனில் நடக்க முடியாத நிலையில் இருந்தார்கள் என்றும், கை வீங்கி இருந்தது என்றும், ரொம்ப நேரம் கழித்து ஜீப்பில் இருந்து இறக்கி ஆஸ்பத்திரி உள்ளே அழைத்துச் சென்றார்கள் என்றும், இடுப்பிற்கு கீழே உள்ள துணியில் இரத்தக்கசிவாக இருந்தது என்றும், நடக்க முடியாமல் நொண்டி நடந்து சென்றார்கள் என்றும், உள்ளே டாக்டரை பார்த்துவிட்டு பின்பக்கம் உள்ள ஓட்டை போடப்பட்ட இரும்புச்சேரில் உட்கார வைத்தார்கள் என்றும், கொஞ்சநேரம் அங்கு இருந்தார்கள் என்றும், டாக்டர் கூப்பிடுவதாக சொன்னவுடன் அழைத்துச் சென்றார்கள் என்றும், அப்போது அத்தானின் வேஷ்டியிலும், அவர் மகன் லுங்கியிலும் இரத்தம் ஊறிப்போயிருந்தது என்றும், அந்தச் சேரிலும் இரத்தம் படிந்திருந்தது என்றும், அங்கிருந்த கான்ஸ்டபிளிடம் இரத்தமாக இருக்கிறது என்று சொன்னதாகவும், மாற்றுவதற்கு டார்க் கலரில் துணி எடுத்து வாருங்கள் என்று சொன்னார் என்றும், தான் அக்கா வீட்டிற்கு சென்று சுமார் 09.00 மணி அளவில் அக்காவிடம் துணி கேட்டதாகவும், அவர் லுங்கி பெட்சீட், பனியன், ஜட்டி, சட்டை, டவல், கர்சீப்–ஐ ஒரு பையில் வைத்து கொடுத்தார் என்றும், அதை வாங்கி வந்து கொடுத்து இருவரும் துணியை மாற்றினார்கள் என்றும், இரத்தம் படிந்து ஈரமாக இருந்த வேஷ்டி மற்றும் லுங்கியை தன்னிடம் கொடுத்தார்கள் என்றும், அதை போடச்சொன்னார்கள் என்றும் தான் அருகிலிருந்த ஒரு டஸ்ட்பின்னில் போட்டதாகவும், கொஞ்சநேரம் கழித்து இட்லி வாங்கி கொடுத்ததாகவும், எதிரே ஒரு பெஞ்சில் உட்கார முடியாமல் சாப்பிட்டார்கள் என்றும், முழுமையாக சாப்பிட முடியவில்லை என்றும், சாப்பிடுவதற்கு தன் அத்தானின் தங்கை ஜெயா அவருக்கு உதவி செய்தார் என்றும், அப்போது தன் அத்தானின் தங்கை கணவர் ஜோசப் மற்றும் பென்னிக்சின் நண்பர்கள் ராஜாராம், மணிமாறன், அத்தானின் தம்பி ஜெயசீலன் ஆங்காங்கே நின்று கொண்டிருந்தார்கள் என்றும், திரும்பவும் ஆஸ்பத்திரிக்கு உள்ளே

அழைத்துச் சென்று சுமார் 3 மணிநேரம் கழித்து கோர்ட்டிற்கு அழைத்துச் செல்வதற்கு ஜீப் பக்கத்தில் வந்தார்கள் என்றும், அப்போது பென்னிக்ஸ் போட்டிருந்த ஒரு சந்தனக்கலர் மற்றும் ஆரஞ்சு கலர் சேர்ந்த கலருடைய சட்டை பின்புறமும் இரத்தம் ஊறியிருந்தது என்றும், அதை மாற்றுவதற்கு பேக்கில் இருந்து கோடு போட்ட டார்க்கலர் சட்டையை எடுத்து கொடுத்ததாகவும், அன்றைய தினம் காலையில் இருந்தே தன் அக்கா மகள் பெர்சிஸ் அப்பாவிடமும், தம்பியிடமும் பேச வேண்டுமென்று தனக்கு போன் செய்து கொண்டிருந்தார் என்றும், துணி மாற்றும் போது தான் போன் செய்து பேச வைத்ததாகவும் அதன்பிறகு அங்கிருந்து கோர்ட்டிற்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள் என்றும் தானும் பின்னால் சென்றதாகவும், அங்கு ரோட்டிலேயே போலீஸ் ஜீப்பை நிறுத்திவிட்டு அருகில் யாரையும் அனுமதிக்கவில்லை என்றும், அவர்கள் உள்ளேயிருந்து வெளியே வரும்போது இரத்தக்கசிவோடு இருந்தார்கள் என்றும், அப்போது தன் அத்தானிடம் பேசியதாகவும், அவர் பெயிலுக்கு ரெடி பண்ணு என்று சொன்னதாகவும், பென்னிக்சுக்கு அடிபட்டதில் செருப்பு இல்லை என்றும், காயம் உள்ளது என்றும், ஏதாவது வலிநிவாரணி வாங்கிக்கொண்டு வரும்படி சொன்னதாகவும், தான் ஒரு செருப்பு, ஒரு வாலினி மற்றும் ஒரு அயோடக்ஸ் வாங்கி கொடுத்ததாகவும், தான் கோர்ட்டில் காத்திருக்கும்போது துணி மற்றும் பெட்சீட் உள்ள பையை தன் அத்தானிடம் கொடுத்ததாகவும், சுமார் 12.20 மணியளவில் அக்காவீட்டிற்கு வந்ததாகவும், போலீஸ்காரர் நம்பருக்கு போன் செய்து அக்காவை இருவரிடமும் பேச வைத்ததாகவும், பிறகு தன் வீட்டிற்கு கிளம்பிவிட்டதாகவும், அடுத்த நாள் 21.06.2020–ம் தேதி அக்கா வீட்டிற்கு வந்ததாகவும், அடுத்தநாள் கோவில்பட்டிக்கு போவதாக சொன்னதாகவும், அப்போது தன் அக்கா அத்தான் சாப்பிடும் சுகர் மாத்திரையை தந்ததாகவும் தானும் தன் உறவினர்கள் மைக்கேல் மற்றும் ஜேசுதாஸ் புறப்பட்டு கோவில்பட்டி சப்ஜெயிலுக்கு 10.30 மணிவாக்கில் சென்றதாகவும், பின்னால் அடிபட்டிருப்பதால் அவர்கள் துணி கட்டுவதற்கு சிரமமாக இருக்கிறது என்றும், டவல் வாங்கி தருமாறு சொன்னார்கள் என்றும், பக்கத்தில் உள்ள ஒரு கடையில் நாலு டவலும், மற்றும் இரண்டு லுங்கியும் சேர்த்து வாங்கி கொடுத்ததாகவும், அதன்பிறகு ரொம்ப நேரம் கழித்த பிஸ்கட், பிரட், ரஸ்க் வாங்கி கொடுததாகவும், பார்க்க

அனுமதிக்காததால் 4 மணி அளவில் கிளம்பி ஊருக்கு வந்துவிட்டதாகவும், 09.30 மணியளவில் அக்கா செல்வராணி போன் செய்து பென்னிக்ஸ் சீரியஸாக இருப்பதாக கோவில்பட்டி சப் ஜெயிலில் இருந்து போன் வந்ததாக சொன்னதாகவும், கோவில்பட்டிக்கு கிளம்பி செல்லும் போது இடையில் தன் அத்தான் ஜெயராஜின் தங்கை கணவர் ஜோசப் போன் செய்து பென்னிக்ஸ் இறந்துவிட்டதாக சொன்னார் என்றும், காலையில் அத்தானும் இறந்துவிட்டதாக சொன்னார்கள் என்றும், சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன், சாமதுரை, செல்லத்துரை, முத்துராஜா மற்றும் டிரைவர் வண்டியில் இருந்தார்கள் என்றும், கோர்ட்டிற்கு போகும்போது செல்லத்துரையும், முத்துராஜாவும் இருந்தார்கள் என்றும், கோவில்பட்டி சப் ஜெயிலுக்கு அழைத்துச்செல்லும் போது செல்லத்துரையும், முத்துராஜாவும் இருந்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் எதிரிகளை அ.சா.5 நீதிமன்றத்தில் அடையாளமும் காட்டியுள்ளார்.

6.6 ஜெயராஜின் உறவினர் ஜோசப் அ.சா.6 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில், ஜெயராஜ் தன்னுடைய அத்தான் என்றும், 20.06.2020–ம் தேதி தன்னுடைய இளைய அத்தான் ஜெயசீலன், தன் மனைவி ஜெயாவிற்கு காலை 5.30 மணியளவில் போன் செய்து ஜெயராஜ் அத்தானை 19.06.2020 அன்று சுமார் 07.30 மணியளவில் போலீஸ் அழைத்துச் சென்றுவிட்டதாகவும், அவரை கூப்பிடச் சென்ற பென்னிக்சையும் கைது செய்துவிட்டதாகவும், அதனால் நீங்களும் சாத்தான்குளம் புறப்பட்டு வாருங்கள் என்று தகவல் சொன்னதாகவும், இட்டமொழியில் இருந்து தானும் தன் மனைவியும் மோட்டார் சைக்கிளில் புறப்பட்டு ஜெயராஜ் அத்தான் வீட்டிற்கு வந்ததாகவும், அங்கு செல்வராணி அக்காவிடம் இரவில் நடந்த விசயங்கள் பற்றி பேசிக் கொண்டிருந்தததாகவும் ஜெயசீலன் போன் செய்து ஜெயராஜையும், பென்னிக்சையும் போலீசார் சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்துவிட்டதாகவும், நீங்கள் அங்கே வாருங்கள் என்று சொன்னார் என்றும், அப்போது காலை சுமார் 08.20 மணி இருக்கும் என்றும், தானும், தன் மனைவியும் அதன்பின்பு ஆஸ்பத்திரி போனதாகவும், அங்கே பிளட் பிரஷ்ஷர் பரிசோதனை செய்யும் அறைக்கு அருகில் ஓட்டை போடப்பட்ட

இரும்புச்சேரில் இருவரையும் உட்கார வைத்திருந்தார்கள் என்றும், அவர்கள் அந்த நேரத்தில் சரியாகக்கூட உட்கார முடியவில்லை என்றும், அவர்களை சுற்றி ஐந்து, ஆறு போலீசார் நின்று கொண்டிருந்தார்கள் என்றும், அதில் சப்–இன்ஸ்பெக்டர் பாலகிருஷ்ணன் பென்னிக்ஸ் அருகில் உட்கார்ந்திருந்தார் என்றும், தன் அத்தானிடம் முந்திய நாள் இராத்திரி என்ன நடந்தது என்று கேட்டதாகவும் அவர் போலீசார் இராத்திரி முழுவதும் தன்னை ஈவு இரக்கம் பார்க்காமல் அடித்துவிட்டார்கள் என்றும், சாப்பாடு கூட வாங்கித் தரவில்லை என்று சொன்னதாகவும், அப்போது அவர் முகம் மிகவேதனையோடு வெளிறிப்போய் காணப்பட்டது என்றும், தன்னை 100 அடிக்கு மேல் அடித்துவிட்டதாகவும், மகனை 250 அடிக்கு மேல் பிரம்பு மற்றும் இரும்புக்கம்பியால் அடித்ததாகவும் அவர் சொன்னார் என்றும், தன்னிடம் என்ன சொன்னாரோ, அதே கதையைத் தான் தன் மனைவியிடமும் ஜெயராஜ் சொன்னதாகவும், பிளட் பிரஷ்ஷர் டெஸ்ட் செய்வதற்காக இருவரையும் எழுப்பினார்கள் என்றும், அப்போது புட்டத்தில் இரத்தக்கறை இருந்தது என்றும், சேரில் இரத்தம் படிந்திருந்தது என்றும், அப்போது தாவீது அண்ணனும், தேசிங்குராஜாவும் அங்கு இருந்தார்கள் என்றும், இரத்தம் படிந்த துணியை மாற்ற ஒரு போலீசார், திக்கான கலரில் லுங்கி எடுத்துவாருங்கள் என்று சொன்னதாகவும் தேசிங்குராஜா செல்வராணி வீட்டிற்கு சென்று துணியை எடுத்து வந்ததாகவும் அது லைட் கலராக இருப்பதாகவும் திக் கலரில் துணி வேண்டும் என்றும் போலீசார் கேட்டதாகவும் அதன்பின் தேசிங்குராஜா திக்கான கலரில் துணியை வாங்கி போலீசாரிடம் கொடுத்ததாகவும், அந்த சமயத்தில் இரத்தம் படிந்த மாற்றிய துணியை தேசிங்குராஜா கையில் கொடுத்து டஸ்ட்பின்னில் போடும்படி சொன்னதாகவும், பென்னிக்ஸ் இட்லியை கையில் எடுத்த வாய்க்கு கொண்டு செல்லும் போது கையின் மொளியில் அடிபட்டு இருந்ததால் இட்லியை வாய்க்கு கொண்டு செல்ல முடியாமல் கீழே விட்டுவிட்டார் என்றும், அப்போது தன் மனைவி சாப்பிடுவதற்கு உதவியதாகவும், மருத்துவமனையைச் சுற்றி 4, 5 போலீசார்கள் இருந்தார்கள் என்றும், அவர்களில் ஒருவர் தாங்கள் நின்று கொண்டிருந்த இடத்திற்கு அருகிலுள்ள பைப் அருகில் நின்றுகொண்டு யாரையும் உள்ளே விடக்கூடாது என்று சொன்னதாகவும், டாக்டருக்கு நேராக ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை நிறுத்தவில்லை என்றும், ஒதுக்கி

நிறுத்தியிருந்தார்கள் என்றும், டாக்டர் அவர்களை பார்க்கவில்லை என்றும், அப்போது ஜெயராஜூம், பென்னிக்சும் கைப்பகுதியை சுவரில் வைத்து சாய்ந்து நின்று கொண்டிருந்தார்கள் என்றும், டாக்டரிடம் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் அவர்கள் வழுக்கி விழுந்துவிட்டதாக எழுதுங்கள் என்று ஒரு முறைக்கு இரண்டு முறை சொன்னார் என்றும், பின்வழியாக சென்று தன் மனைவி உள்ளே போய் பார்த்த போது, போலீசார் அடித்ததில், இடுப்புபகுதி மற்றும் புட்டத்தில் காயமாக இருப்பதாக பென்னிக்ஸ் சொன்னார் என்றும், தன் மனைவி அவரின் இடுப்புப்பகுதியில் கை வைத்தவுடன் தன் மனைவியின் கை முழுவதும் இரத்தமாகிவிட்டது என்றும், பென்னிக்சின் சட்டையின் இடுப்புப்பகுதியில் இரத்தம் படிந்திருந்ததை பார்த்த ஒரு போலீசார் சட்டையை மாற்றும்படி சொன்னார் என்றும், அந்த சட்டை சந்தனக்கலரும் மற்றும் மஞ்சள்கலரும் சேர்ந்த கலருடையதாக இருந்தது என்றும், உடனே தேசிங்குராஜா பையில் வைத்திருந்த டார்க்கலர் கட்டம் போட்ட சட்டையை போடும்படி எடுத்துக் கொடுத்தார் என்றும், அதன்பிறகு அவர் சட்டையை மாற்றினார் என்றும், 11.00 மணியளவில் அங்கு போலீஸ் ஜீப் வந்தது என்றும், அதில் அவர்களை ஏற்றிக்கொண்டு நேராக சாத்தான்குளம் நீதிமன்றத்திற்கு கொண்டு போய்விட்டார்கள் என்றும், தானும் தன் மனைவியும் தன் அத்தானின் உறவினர்களும் மற்றும் பென்னிக்ஸ் நண்பர்களும் நீதிமன்றத்திற்கு சென்றதாகவும், அங்கு போலீசார் நீதிமன்ற வாசலுக்குள் விடாமல் ரோட்டிற்கு அந்தப்பக்கம் விரட்டிவிட்டார்கள் என்றும், தன் அத்தானும், பென்னிக்சும் 4, 5 போலீசாருடன் உள்ளே சென்றார்கள் என்றும், தனக்கு தெரிந்த வரையில் அவர்களை கோவில்பட்டி சிறைக்கு அனுப்புவதாக சொன்னார்கள் என்றும், உடனே போலீசார் கோவில்பட்டி சிறைக்கு கொண்டு செல்ல ஒரு வண்டி பிடித்துதருமாறு சொன்னார்கள் என்றும், பென்னிக்ஸ் நண்பர்தான் வண்டி பிடித்துக் கொடுத்தார் என்றும், மறுபடியும் அவர்களின் புட்டம் பகுதியில் இரத்தம் கசிந்திருந்தது என்றும், பையில் இருந்து ஒரு போர்வையை எடுத்து வண்டியின் பின்சீட்டில் தாங்கள் விரித்துக் கொடுத்ததாகவும், பென்னிக்சும், ஜெயராஜ் அத்தானும் கட்டாயத்தின் பேரில் பின்னால் பெட்சீட்டின் மேல் உட்கார்ந்தார்கள் என்றும், அந்த வண்டியில் இரண்டு போலீசார்களை துணைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், பின்சீட்டில் பென்னிக்ஸ்

மற்றும் ஜெயராஜுடன் ஒரு போலீசாரும், முன்பகுதியில் டிரைவர் சீட்டின் பக்கவாட்டில் மற்றொரு போலீசாரும் உட்கார்ந்தார்கள் என்றும், அவர்கள் புறப்படும்போது பேக்கில் கர்சீப், கோல்கேட் போன்றவற்றை வைத்துக் கொடுத்துவிட்டதாகவும், வண்டி அங்கிருந்து கிளம்பியதும் தானும், தன் மனைவியும் இட்டமொழி சென்றுவிட்டதாகவும், ஆஸ்பத்திரியில் இருந்து கோர்ட்டிற்கு செல்லும்போது, ஆரஞ்சு மற்றும் மஞ்சள் நிறமுள்ள சட்டையை குப்பைத்தொட்டியில் போடாமல் தன் மனைவி கையில் வைத்துக் கொண்டார் என்றும், பின்னர் 22.06.2020–ம் தேதி இரவு சுமார் 08.45 மணிக்கு கோவில்பட்டி சிறைச்சாலையில் இருந்து செல்வராணி அக்காவின் மொபைல் போனிற்கு போன் வந்தது என்றும் பென்னிக்ஸிற்கு பீ.பீ அதிகமாகிவிட்டது. உடனே பார்க்க வாருங்கள் என்று சொன்னார்கள் என்றும் கோவில்பட்டி சிறைக்கு புறப்பட்டுச் சென்றபோது, ஆழ்வார் திருநகரி அருகில் சிறைச்சாலையில் பென்னிக்ஸ் இறந்துவிட்டதாக போனில் சொன்னதாகவும், அடுத்தநாள் காலை 06.30 மணிக்கு தன் அத்தான் இறந்துவிட்டதாக தங்களுக்கு தகவல் வந்தது என்றும், வண்டியில் விரித்திருந்த போர்வையை பென்னிக்சின் நண்பர்கள் கொண்டுவந்து தன்னிடம் கொடுத்தார்கள் என்றும், அந்த போர்வையையும் தன் மனைவி வாங்கி வைத்த சட்டையையும் செல்வராணி அக்காவிடம் கொடுத்ததாகவும், தான் அன்று பார்த்த பாலகிருஷ்ணன் மற்றும் போலீசார் இன்று நீதிமன்றத்தில் உள்ளார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.7 பென்னிக்ஸின் நண்பர் திரு.சங்கரலிங்கம் அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் பென்னிக்ஸ் தனக்கு 15 வருடங்களாக பழக்கம் என்றும், இருவரும் ஒரே பள்ளியில் படித்தாகவும், 19.06.2020 அன்று இரவு 08.45 மணியளவில் நண்பர் ராஜாராம் தனக்கு போன் செய்து பென்னிக்சையும், அவர் அப்பாவையும் போலீஸ் பிடித்துக்கொண்டு, சாத்தான்குளம் போலீஸ் ஸ்டேசன் கொண்டு சென்றதாக சொன்னார் என்றும், அப்போது தான் சாத்தான்குளத்தில் தன் நண்பர் ராஜ்குமாருடன் பேசிக்கொண்டு இருந்ததாகவும், ராஜ்குமாரும், பென்னிக்ஸ்க்கு நண்பர் என்றும், தானும் ராஜ்குமாரும், ராஜ்குமாரின் காரில் போலீஸ் ஸ்டேசனுக்கு 09.15 மணியளவில் சென்றதாகவும்,

தாங்கள் போகும்போது ஸ்டேசன் வாசல் கதவு பூட்டியிருந்தது என்றும், வெளியே பென்னிக்சின் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் நின்று கொண்டிருந்தார்கள் என்றும், வக்கீல் மணிமாறன், வக்கீல் ராஜாராம், வக்கீல் ரவிச்சந்திரன் ஆகியோர்கள் இருந்தார்கள், என்றும் மேலும் நாகராஜன், ரவிசங்கர், சுடலைமுத்து, பென்னிக்சின் மாமா, சித்தப்பா, உறவினர்கள் இருந்தார்கள் என்றும், அப்போது உள்ளே இருந்து எங்களை விட்ருங்க, எங்களால் தாங்க முடியவில்லை, அடிக்காதீர்கள், அம்மா, அப்பா என்று அலறல் சத்தம் கேட்டது என்றும், அப்போது ஆய்வாளர் ஸ்ரீதர் வெளியே சுமோ பக்கத்தில் நின்று போன் பேசி கொண்டிருந்ததாகவும், பின்னர் மறுபடியும் உள்ளே சென்றுவிட்டார் என்றும், 09.30 மணியளவில் எஸ்.ஐ ரகுகணேஷ் உள்ளே போனார் என்றும், 11.00 மணி வரை தாங்கள் ஸ்டேசன் வாசலில் காத்திருந்ததாகவும், அதுவரை விடவில்லை என்றும், உள்ளேயிருந்து தொடர்ந்து அடிக்காதீர்கள் விட்டுவிடுங்கள் என்று பத்து நிமிடம் இடைவெளிவிட்டு இடைவெளிவிட்டு இரண்டு, மூன்று தடவை கேட்டது. பின்னர் 20.06.2020 அன்று காலை 06.30 மணியளவில் தான், தன் நண்பர் சுடலைமுத்து, நாகராஜன், போலீஸ் ஸ்டேசனுக்கு சென்றதாகவும், தான் போய் சுமார் 2 நிமிடத்தில் ரவிசங்கர் அங்கு வந்துவிட்டார் என்றும், அப்போது ஸ்டேசன் பூட்டப்பட்டிருந்தது என்றும், வெளியே ஒரு போலீஸ்காரர் இருந்தார் என்றும், அவர் தங்களை யாரென்று கேட்டதாகவும், டீ வாங்கி கொடுக்கச் சொன்னதாகவும், தானும் சுடலைமுத்துவும் டீ வாங்கி கொண்டு ஸ்டேசனுக்கு வந்ததாகவும், நாகராஜன் டீயை உள்ளே கொண்டு சென்று ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு கொடுத்துவிட்டு வந்தார் என்றும், வெளியே வரும் போது மிகவும் சோகமாக இருந்தார் என்றும், என்னவென்று கேட்டபோது, உள்ளே பென்னிக்ஸ் மற்றும் அவரது அப்பாவை ஜட்டியோடு உட்கார வைத்திருப்பதாக சொன்னார் என்றும், அதன் பிறகு உள்ளேயிருந்து எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் வந்தார் என்றும், அவர் வெளியே வந்து இருவருக்கும் சட்டை, லுங்கி, பனியன் வாங்கி வரச்சொன்னார் என்றும், தானும் சுடலைமுத்துவும், ரவிசங்கரும் பென்னிக்ஸ் வீட்டிற்கு 07.00 மணியளவில் சென்றதாகவும், சுடலைமுத்துவும், ரவிசங்கரும் உள்ளே சென்று பையில் வாங்கி வந்தார்கள் என்றும், ரவிசங்கர் தனக்கு வீட்டில் வேலை உள்ளது என்று சொல்லி வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றும், தானும் சுடலைமுத்துவும்

டிரஸ்ஸை எடுத்துக் கொண்டு ஸ்டேசன் சென்றதாகவும், அங்கே எஸ்.ஐ. பாலகிருஷ்ணன் ஸ்டேசன் வாசலில் இருந்தார் என்றும், அவர் கையில் அந்த பையை ஒப்படைத்ததாகவும், அவர் தங்களிடம் வண்டியை ரெடி பண்ணுங்கள் என்று சொன்னார் என்றும், 07.30 மணியளவில் போலீஸ் வாகனத்தில் பென்னிக்சையும் அவரது அப்பாவையும் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றார்கள் என்றும், தான் உடனே வீட்டிற்கு சென்று பணத்தை எடுத்துக்கொடுத்து நாகராஜிடம் அவரது வெள்ளை நிற செவர்லைட் பீட் வாகனத்தை டீசல் போட்டு கொண்டு வரச்சொன்னதாகவும், மருத்துவமனைக்கு சென்றபோது பென்னிக்ஸ் மற்றும் அவரது அப்பாவை போலீஸ் வாகனத்தில் பின்புறம் உட்கார்ந்திருந்தார்கள் என்றும், அப்போது சுமார் 10.00 மணிக்குள் இருக்கும் என்றும் மருத்துவ பரிசோதனைக்காக பென்னிக்ஸ் மற்றும் அவரது அப்பாவை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லும்போது இருவரும் நடக்க முடியாமல் சிரமப்பட்டு நடந்து சென்றார்கள் என்றும், அங்கு இரண்டு, மூன்று மணிநேரம் காத்திருக்கும்போது வக்கீல் மணிமாறன் மற்றும் வக்கீல் ராஜாராம் ஆகியோர்கள் பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜிடம் பேசினார்கள் என்றும், அந்த சந்தர்ப்பத்தில் தானும், பென்னிக்ஸ் அருகில் சென்று பார்த்ததாகவும், அப்போது பென்னிக்ஸ் கை, கால்களில் வீக்கம் மற்றும் இரத்தக்கசிவு இருந்தது என்றும், உட்கார முடியாமல் இரும்புச்சேரில் உட்கார்ந்திருந்தார்கள் என்றும், 11.00 மணியளவில் மருத்துவமனையில் இருந்து கோர்ட்டிற்கு ரிமாண்ட் செய்ய அழைத்துச்சென்றார்கள் என்றும், அப்போது பென்னிக்சின் சட்டையில் இரத்தக்கசிவு இருந்ததால் மாற்றச் சொன்னார்கள் என்றும், டார்க்கலர் ப்ளூ கலரில் சட்டையை மாற்றிக் கொடுத்து வண்டியில் ஏற்றி கோர்ட்டிற்கு போனார்கள் என்றும், அவர்கள் பின்னால் தானும் சுடலைமுத்துவும் டுவீலரில் சென்றதாகவும், கோர்ட்டில் அனுமதி இல்லாத காரணத்தினால் கோர்ட்டின் எதிரில் இருந்த டீக்கடையில் நின்று கொண்டிருந்ததாகவும், அந்த நேரத்தில் எஸ்.ஐ ரகுகணேஷ் கோர்ட்டிற்குள் போனார் என்றும், 12.00 மணியளவில் பென்னிக்ஸ் மற்றும் அவரது அப்பாவை வெளியே அழைத்துக் கொண்டு கோர்ட் வாசலுக்கு வந்தார்கள் என்றும், நாகராஜ் காரில் முன்னால் ஒரு போலீசும், பின்னால் பென்னிக்ஸ், அவர் அப்பா மற்றும் ஒரு போலீசாரும் உட்கார்ந்தார்கள் என்றும் பென்னிக்ஸ் மற்றும்

அவரது அப்பாவின் புட்டத்தில் இரத்தக்கசிவு இருந்ததால் பையில் இருந்த போர்வையை எடுத்து பின்சீட்டில் விரித்தார்கள் என்றும், அதில் அவர்கள் உட்கார்ந்தார்கள் என்றும், அதன்பின்னர் தான் வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும், அதே நாளில் சாயங்காலம் நாகராஜன் தனக்கு போன் செய்து, வண்டியில் இருந்த பெட்சீட்டில் இரத்தக்கசிவாக உள்ளது என்ன செய்ய என்று கேட்டதாகவும், தான் பென்னிக்ஸ் வந்த பின்னர் வீட்டில் ஒப்படைத்துவிடலாம் அதுவரை வைத்திரு என்று சொன்னதாகவும், பென்னிக்ஸ் இறந்த பின்னர் அடுத்தநாள் போர்வையை வண்டியில் வைக்க முடியவில்லை பிளட்டாக உள்ளது என்ன செய்ய என்று கேட்டதாகவும், நாகராஜனிடம் அந்த பெட்சீட்டை வாங்கி வக்கீல் ரவிச்சந்திரன், மணிமாறன் சேம்பரில் தான் பத்திரமாக வைத்துவிட்டதாகவும், அடுத்த நாள் வக்கீல் ராஜாராம் தனக்கு போன் செய்து, அந்த பெட்சீட் எங்கே, அது வழக்கு விசாரணைக்கு தேவைப்படும் என்று சொன்னதாகவும், தான் அது மணிமாறன் சேம்பரில் பத்திரமாக உள்ளது, நீ எடுத்துக்கோ என்று சொன்னதாகவும், அடுத்தநாள் அதை எடுத்து பென்னிக்ஸ் வீட்டில் ஒப்படைத்துவிட்டதாக ராஜாராம் தன்னிடம் சொன்னார் என்றும், ஆஸ்பத்திரியில் பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜை சுற்றி சாமதுரை, செல்லத்துரை, முத்துராஜா, எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் மற்றும் இரண்டு போலீசார்கள் இருந்தார்கள் என்றும், அவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள் என்றும் அ.சா.7 சாட்சியம் அளித்துள்ளார்.

6.8 பென்னிக்ஸின் நண்பர் திரு.ரவிசங்கர் அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் பென்னிக்ஸ் தனக்கு 15 வருடங்களாக நண்பர் என்றும், 19.06.2020 அன்று இரவு சுமார் 07.15 மணியளவில் பென்னிக்ஸ் கடைக்கு எதிரே தானும் ராஜாராம், கல்யாணசுந்தரம் மற்றும் இரண்டு ஆட்டோ டிரைவர்களும் பேசிக் கொண்டிருந்ததாகவும், அப்போது 07.30 மணியளவில் வண்டிகளை மறிப்பதற்காக போலீசார் வண்டிமறிச்சிஅம்மன் கோவில் அருகில் வந்து நின்றார்கள் என்றும், அப்போது பென்னிக்ஸ் கடைக்கு வெளியே அவர் அப்பா நின்று கொண்டிருந்தார் என்றும், அருகில் மணி என்ற ஒரு ஆட்டோ டிரைவர் இருந்தார் என்றும், அப்போது ஒரு போலீசார் ஆட்டோ டிரைவர் மணியிடம் விசாரித்து விட்டுப் போனார் என்றும், தான்

பென்னிக்ஸ் அப்பாவிடம் என்ன என்று விசாரித்ததாகவும், அதற்கு அவர் நேற்று யாரோ போலீசை ஏசினார்களாம், அதுபற்றி கேட்டார் என சொன்னதாகவும், அதன்பின்பு தானும், ராஜாராமும் பென்னிக்ஸ் கடைக்கு உள்ளே சென்றுவிட்டதாகவும், 07.45 மணியளவில் பாண்டி என்ற ஆட்டோ டிரைவர் பென்னிக்ஸ் அப்பாவை ஒரு போலீஸ் வண்டியில் ஏற்றிக்கொண்டதாக சொன்னார் என்றும், தான் உடனே பென்னிக்ஸ் கடையில் இருந்து எட்டிப் பார்த்ததாகவும், பென்னிக்ஸ் அப்பா சுமோ வண்டியில் பேக்சீட்டில் கடைசியில் உட்கார்ந்திருந்தார் என்றும், தான் உடனே பென்னிக்சிடம் அப்பாவை போலீஸ் பிடித்திருப்பதாக சொன்னதாகவும், அவன் உடனே வெளியே வந்து நேராக போலீஸ் வண்டி அருகில் சென்றதாகவும், உடன் ராஜாராமும் சென்றதாகவும், அவர்கள் பேசிவிட்டு வந்தததாகவும் என்னாச்சு என்று கேட்டதற்கு எதுவானாலும் ஸ்டேசனுக்கு வாருங்கள் பேசிக் கொள்ளலாம் என்று அவர்கள் கூறியதாக சொன்னதாகவும், தான் உடனே ராஜாராமனிடம் லோக்கல் அட்வகேட், மணிமாறனுக்கு போன் அடி அவருக்கு ஸ்டேசனில் உள்ளவர்களை தெரியும் என்று சொன்னதாகவும், அவர் ஏற்கனவே தான் ஒரு கேஸ் விசயமாக ஸ்டேசனில் இருப்பதாகவும் நீங்கள் வாருங்கள் என்று சொன்னதாகவும், பேண்ட் மாற்றி வந்துவிடுவதாகவும் ராஜாராம் வீட்டிற்கு போய்விட்டதாகவும், தான் ராஜாராம் வண்டியில் பென்னிக்சை அழைத்துக்கொண்டு ஸ்டேசன் சென்றதாகவும், காவல்நிலையத்திற்கு வெளியே வண்டியை நிறுத்திவிட்டு உள்ளே தானும், பென்னிக்சும் போனதாகவும், மணிமாறன் ஏற்கனவே போலீஸ் ஸ்டேசன் வராண்டாவில் நின்று கொண்டிருந்தார் என்றும், பென்னிக்ஸ் அப்பாவை லாக்அப்பில் தள்ளினார்கள் என்றும், அப்போது இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர் இவர்களை ரிமாண்ட் செய்தால்தான் புத்தி வருமென்று சொன்னார் என்றும், பென்னிக்ஸ் ஸ்டேசன் வாசலில் இருந்து உள்ளே எட்டிப் பார்த்தாகவும், உனக்கு என்ன வேண்டுமென்று உள்ளே இருந்து எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் கேட்டார் என்றும், ஒன்றும் பேசாதே என்று பென்னிக்சை தானும், மணிமாறனும் வெளியே கையை பிடித்து படிக்கட்டை விட்டு கீழே இறக்கியதாகவும், அதற்குள் வெளியே இருந்து சத்தம் போடுகிறான் அவனை உள்ளே கூப்பிடுங்கள் என்று எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் சொன்னதாகவும், உள்ளே இருந்து போலீசார்கள் வந்து பென்னிக்சின் கையை பிடித்து

உள்ளே அழைத்துச் சென்றார்கள் என்றும், கூட மணிமாறனும் உள்ளே சென்றார் என்றும், தான் வராண்டாவில் நின்று கொண்டதாகவும், எஸ்.ஐ.சார் பென்னிக்சிடம் உனக்கு என்ன வேண்டும், எதற்கு சத்தம் போடுகிறாய் என்று கேட்டார் என்றும், அதற்கு எதற்கு சார் என் அப்பாவை பிடித்து வந்தீர்கள் என்று பென்னிக்ஸ் கேட்டதாகவும், உனக்கு என்ன செய்யணும் என்று சொல்லி அடிக்க கையை ஓங்கியதாகவும், அப்போது பென்னிக்ஸ் அதை தடுத்ததாகவும், அப்போது எஸ்.ஐ.சார் தடுமாறி சேரில் உட்கார்ந்தார் என்றும், பின்னர் எஸ்.ஐ.சார் எழுந்து ஓங்கி பென்னிக்சை அடித்தார் என்றும், பென்னிக்ஸ் தடுமாறி அங்கிருந்த டேபிள் மீது விழுந்தாகவும், மணிமாறன் தடுக்க முயற்சி செய்ததாகவும், அதற்குள் 2, 3 போலீசார்கள் சேர்ந்து பென்னிக்சை அடிக்க ஆரம்பித்தார்கள் என்றும், தான் உடனே போனை எடுத்து சற்று தள்ளி நின்றுகொண்டு பென்னிக்சை அடிக்கிறார்கள், உடனே வா என்று ராஜாராமுக்கு போன் செய்ததாகவும், ராஜாராம் வருவதற்கு முன்னர் மணிமாறனை வெளியே தள்ளி ஸ்டேசன் கதவை பூட்டிவிட்டார்கள் என்றும், அதன்பின்னர் 8.10 மணியில் இருந்து வெளியே தான் நின்று கொண்டிருந்ததாகவும், சுமார் 10.30 மணிவரை அடிக்கும் சத்தமும், அம்மா அப்பா, அடிக்காதீங்க, அடிக்காதீங்க என்ற சத்தமும் கேட்டது என்றும், பத்து பத்து நிமிடம் இடைவெளியில் விட்டு விட்டு அம்மாதிரி சத்தம் கேட்டது என்றும், 09.30 மணியளவில் எஸ்.ஐ ரகுகணேஷ் உள்ளே சென்றார் என்றும், அவர் போன பிறகும் சத்தம் கேட்டது என்றும், 10.30 மணிக்கு மேல் சத்தம் இல்லை என்றும், இனிமேல் ஒன்றும் செய்ய முடியாது, காலையில் பார்த்துக் கொள்ளலாம் என்று மணிமாறன் சொன்னார் என்றும் அதன்பின்னர் தாங்கள் 11.30 மணிக்கு வீட்டிற்கு திரும்பிவிட்டதாகவும், மறுநாள் 20.06.2020–ம் தேதி காலை 06.35 முதல் 06.40 மணியளவில் சங்கரலிங்கம் தனக்கு போன் செய்து பென்னிக்சுக்கு டீ வாங்கி கொடுக்கப்போகிறோம், வா என்று கூப்பிட்டதாகவும், தானும், கூடப் போனதாகவும், நாகராஜன் உள்ளே போய் டீயை கொடுத்துவிட்டு வெளியே வரும் போது 07.15 மணியளவில் எஸ்.ஐ.சார் வந்தார் என்றும், டிரஸ் வாங்கி வாருங்கள் என்று எஸ்.ஐ சொன்னார் என்றும், உடனே தானும் சங்கரலிங்கமும், சுடலைமுத்துவும் பென்னிக்ஸ் வீட்டிற்கு போய் டிரஸ் வாங்கியதாகவும், பின்னர் தான் வீட்டிற்கு போய்விட்டு

வருகிறேன் என்று சொல்லிவிட்டு டிரஸ்சை கொடுத்துவிட்டு வாருங்கள் என்று சங்கரலிங்கம் மற்றும் சுடலைமுத்துவிடம் தான் சொன்னதாகவும், தான் வீட்டிற்கு போய்விட்டு 2 நிமிடத்தில் புறப்பட்டு ஸ்டேசனுக்கு வந்து காம்பவுண்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது சுமார் 07.30 மணியளவில் பென்னிக்சையும், அவர் அப்பாவையும் சுமோ ஜீப்பில் ஏற்றிக் கொண்டு ஜி.ஹெச்சுக்கு போனார்கள் என்றும், சுமார் 10 நிமிடத்தில் இறங்கி இருவரும் ஆஸ்பத்திரிக்கு போனார்கள் என்றும் இருவரும் நொண்டி நொண்டி நடந்து சென்றார்கள் என்றும், அதன்பிறகு சுமார் 10.00, 10.45, 11.00 மணியளவில் இருவரையும் ரிமாண்டிற்கு கோர்ட்டிற்கு அழைத்துச் சென்றார்கள் என்றும், 12.10 மணியளவில் அவர்களை வண்டியில் ஏற்றி கோவில்பட்டிக்கு அழைத்துச் சென்றார்கள் என்றும், நாகராஜின் செவர்லைட் வண்டியில் பின்னால் ஒரு போர்வையை விரித்து அழைத்துச் சென்றார்கள் என்றும், கோர்ட்டிற்கு ரகுகணேஷ் சார் பைக்கில் வந்திருந்தார் என்றும், ரிமாண்ட் செய்து அவர்களை அழைத்துச் சென்ற பின்னர் தாங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும், தான் காவல்நிலையத்தில் பார்த்த இன்ஸ்பெக்டர் மற்றும் எஸ்.ஐ இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள் என்றும், போலீஸ் ஸ்டேசனில் அன்று சுமார் 10, 12 போலீசார்கள் இருந்தார்கள் என்றும், அவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.9 பென்னிக்ஸின் நண்பரும் வழக்குரைஞருமான திரு.மணிமாறன் அ.சா.9 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் கடந்த 15 வருடங்களாக சாத்தான்குளம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக தொழில் செய்து வருவதாகவும், கடந்த 5 வருடமாக தூத்துக்குடி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கட்டிடத்தின் எதிர்மாடியில் அலுவலகம் வைத்துள்ளதாகவும், 20 வருடங்களாக பள்ளியில் படித்த காலம் முதலே பென்னிக்சை தனக்குத் தெரியும் என்றும், 18.06.2020 அன்று பேய்க்குளத்தில் உள்ள ஒரு இடப்பிரச்சனை சம்பந்தமாக சாத்தான்குளம் காவல்நிலைய விசாரணைக்கு போயிருந்ததாகவும், 19.06.2020 அன்று இரவு சுமார் 07.30 மணியளவில் தன்னுடைய ஜூனியர் வழக்கறிஞர் இரவிச்சந்திரன் தனக்கு போன்

செய்து அந்த வழக்கு சம்பந்தமாக மீண்டும் விசாரணைக்கு வரும்படி தன்னை அழைத்தார் என்றும் அதன்பிறகு சுமார் 5 நிமிடத்தில் தான் காவல்நிலையம் சென்றுவிட்டதாகவும், 07.45 மணியளவில் ராஜாராம் என்ற வழக்கறிஞர் தனக்கு போன் செய்ததாகவும் பென்னிக்ஸ் கடை அருகே பேசிக் கொண்டிருக்கும் போது ஆய்வாளர், சப்–இன்ஸ்பெக்டர் மற்றும் போலீசார் வந்து சுமோவில் பென்னிக்ஸ் அப்பாவை காவல்நிலையம் அழைத்துச் சென்றதாகவும், என்ன ஏது என்று கேட்டபோது காவல்நிலையம் வந்து பேசிக் கொள்ளுமாறு சொன்னதாகவும் கூறியதாகவும், தான் ஒரு வழக்கு சம்பந்தமாக ஸ்டேசனில் தான் இருப்பதாக சொன்னதாகவும், டிரஸ் மாற்றிவிட்டு வந்துவிடு விடுவதாக ராஜாராம் சொன்னதாகவும், போனை கட் பண்ண சமயத்தில் சுமோவில் இருந்து ஆய்வாளர், உதவி ஆய்வாளர், டிரைவர், ஒரு போலீஸ்காரர் மற்றும் ஜெயராஜ் ஆகியோர்கள் இறங்கினார்கள் என்றும், ஜெயராஜ் நல்ல மனுசன், எதற்கு அழைத்து வந்திருக்கிறீர்கள் அவர் எந்த பிரச்சனையிலும் ஈடுபடாத நபர் என்று சொன்னதற்கு ஆய்வாளர் மணிகண்டா அவனைப் பற்றி உனக்குத் தெரியாது, எதுவாக இருந்தாலும் பிறகு பேசிக்கொள்ளலாம் என்று லாக்அப்பில் வையுங்கள் என்று போலீசாரிடம் சொல்லிவிட்டு அவர் ரூமுக்கு சென்றுவிட்டார் என்றும், தான் வெளியே வந்ததாகவும், அப்போது பென்னிக்ஸ் அவர் நண்பர் ரவிசங்கருடன் பைக்கில் காவல்நிலையம் வந்து வெளியே இருந்தார்கள் என்றும், உள்ளேயிருந்து முத்துராஜா என்ற கான்ஸ்டபிள் வந்து எஸ்.ஐ கூப்பிடுவதாக சொன்னார் என்றும், அப்போது பென்னிக்ஸ் தன் கையை தட்டிவிட்டு காவல்நிலையத்திற்கு உள்ளே போய்விட்டான் என்றும், தான் பின்னாலேயே போனதாகவும், உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் டேபிள் முன்பு என் அப்பா என்ன தப்பு செய்தார், ஏன் உள்ளே வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு கோபப்பட்டு பென்னிக்சை பாலகிருஷ்ணன் அடிக்க முற்பட்டார் என்றும், அந்த அடி பென்னிக்சின் மீது விழவில்லை என்றும், டேபிளை மறுபடி சுற்றி வந்து அவர் பென்னிக்சை மறுபடியும் அடிக்க முற்பட்டார் என்றும், தான் அப்போது பென்னிக்ஸ் பின்னால் இருந்ததாகவும், பென்னிக்ஸ் அதை கையை வைத்து தடுத்தார் என்றும், எஸ்.ஐ. நிலைதடுமாறி டேபிளில் சரிந்துவிட்டார் என்றும், உள்ளேயிருந்த ரைட்டர் ரூமில்

இருந்து ப்யூலா செல்வகுமாரி போலீஸ் ஸ்டேசன் உள்ளே வந்து, போலீஸ் கிட்டயே தகராறு செய்கிறாயா என்று கத்தினார் என்றும், மறுபடியும் சுதாரித்து எஸ்.ஐ அடிக்க முயற்சி செய்யும்போது பென்னிக்ஸ் பின்னால் பால்துரை, அழகுமுத்து என்ற போலீஸ், டிரைவர் ஜெயசேகர், முத்துராஜா ஆகியோர்கள் மேலே விழுந்து பென்னிக்சை அமுக்கி பிடித்தார்கள் என்றும், மேலே விழவும் தான் நகன்று வெளியே வந்துவிட்டதாகவும், அப்போது இன்ஸ்பெக்டர் ரூமில் இருந்து இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர் வெளியே வந்தார் என்றும், வக்கீலை வெளியே அனுப்பு, கதவை மூடு என்று சொன்னார் என்றும், தான் வெளியே வந்த மறுகணத்தில் இருந்து அம்மா அடிக்காதீர்கள், அப்பா அடிக்காதீர்கள் வலி தாங்க முடியவில்லை என்ற சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது என்றும், 08.00 மணிக்கு மேல் ஏட்டு சாமதுரை, எஸ்.எஸ்.ஐ.ரவிச்சந்திரன், பெண் போலீஸ் ரேவதி, செல்லத்துரை என்ற போலீஸ், முருகன் என்ற போலீஸ், எஸ்.பி.சி.ஐ.டி.சந்தனகுமார் ஆகியோர்கள் ஒவ்வொருத்தராக வர ஆரம்பித்து ஸ்டேசனுக்குள் சென்றார்கள் என்றும், ஒரு சில பேர் மூடியிருந்த கதவைத் திறந்து வெளியே வந்தார்கள் என்றும், தான் அவர்களிடம் இப்படி அடிக்கிறீர்களே, அவன் என்ன தப்பு பண்ணான் என்று கேட்டதாகவும், எதுவாக இருந்தாலும் நீங்கள் அதிகாரியிடம் தான் பேசிக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள் என்றும், முருகன் போலீஸ் வெளியே வரும் போது கேட்டதற்கு ப்ரஸ் பீஸ் கிடைத்துள்ளது, அடிப்பதற்கு டிரைனிங் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார் என்றும், அந்த சமயத்தில் சந்தனகுமார் என்ற எஸ்.பி.சி.ஐ.டி வெளியே வந்தார் என்றும், தான் அவரிடம் நீங்களாவது காப்பாற்றுங்கள், அவன் என்ன தப்பு செய்தான் என்று சொன்னதாகவும், அதற்கு அவர் போனில் போலீஸ் அசால்ட், சாத்தான்குளத்தில் பிடித்து வைத்திருக்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தார் என்றும், அந்த சமயத்தில் சுமார் 09.00 மணிக்கு மேல் பென்னிக்சின் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வர ஆரம்பித்தார்கள் என்றும், சுமார் 09.30 மணி வாக்கில் எஸ்.ஐ ரகுகணேஷ் பைக்கில் பின்னால் எலிசா என்ற கொரோனா வாலன்டியருடன் வந்தார் என்றும், அவன் கையில் தான் அப்போது வாக்கிடாக்கி இருந்தது என்றும், பின்னால் மற்றொரு பைக்கில் இரண்டு வாலன்டியர்ஸ் வந்தார்கள் என்றும், ஸ்டேசனுக்குள் இருந்து எலிசா வந்து அந்த இரண்டு வாலன்டியர்களிடம்

ஏதோ சொன்னதாகவும், அதன்பிறகு புல்லட்டில் இருந்து லத்தியை எடுத்துக்கொண்டு அந்த வாலன்டியர்கள் உள்ளே போனார்கள் என்றும், இந்த சம்பவம் நடந்து கொண்டிருக்கும் போதே இன்ஸ்பெக்டர் டிரைவர் ஜெயசேகர் வெளியே வந்து, எதுவாக இருந்தாலும் நாளைக்கு பேசிக் கொள்ளலாம் என்று இன்ஸ்பெக்டர் சொன்னதாக சொன்னார் என்றும், ஒருசில சமயம் இந்த சம்பவத்திற்கு இடையில் இன்ஸ்பெக்டர் வெளியே வரும்போது தான் பேசியதாகவும், அவன் எந்த தப்பும் பண்ணாதவன், முன்னப்பின்ன போலீஸ் ஸ்டேசன் வந்து பழக்கம் கிடையாது. 75 செக்சனாகவது போட்டு வெளியே விடுங்கள், நாங்கள் ஆஸ்பத்திரியில் வைத்து பார்ததுக் கொள்கிறோம், பிரைவேட் கம்ப்ளைண்ட் எதுவும் கொடுக்க மாட்டோம் என்று தான் சொன்னதாகவும், எதுவாக இருந்தாலும் பிறகு பேசிக் கொள்ளலாம் என்று அவர் மழுப்பிவிட்டு உள்ளே சென்றுவிட்டார் என்றும், 11.00 மணிவாக்கில் இன்ஸ்பெக்டர் டிரைவர் வெளியே வந்து, எதுவாக இருந்தாலும் காலையில் பேசிக் கொள்ளலாம் இனிமேல் இங்கு நிற்க வேண்டாம் என்று சொன்னார் என்றும், அந்த சமயத்தில் அலறல் சத்தம் கொஞ்சம் குறைந்திருந்தது என்றும், தான் வீட்டிற்கு வந்துவிட்டதாகவும், அன்று காவல்நிலையத்திற்கு முதலில் செல்லும் போது, கம்ப்யூட்டர் செக்சனில் வெயிலுமுத்து, தாமஸ் ஆகியோர்கள் இருந்தார்கள் என்றும், அவர்கள் மாடியில் கம்ப்யூட்டர் செக்சனில் இருந்தார்கள் என்றும், அவர்களும் சிலநேரம் மூடியிருந்த கதவை திறந்து வெளியே வரும்போது தான் அவர்களிடம் பேசியதாகவும் அவர்கள் எங்களால் எதுவும் செய்ய முடியாது, எதுவாக இருந்தாலும் அதிகாரிகளிடம் பேசிக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள் என்றும், தான் காவல்நிலையத்திற்கு உள்ளே செல்லும் போது ரைட்டர் ரூமில் ப்யூலா செல்வகுமாரி இருந்தார் என்றும், எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் டேபிளுக்கு நேர் எதிரில் சேர் போட்டு எஸ்.ஐ பால்துரை இருந்தார் என்றும், இன்ஸ்பெக்டர் ரூமுக்கு அருகில் இருந்த கம்ப்யூட்டரில் ஒரு வாலன்டியர் பையனும், அழகுமுத்து என்று கான்ஸ்டபிளும் இருந்தார்கள் என்றும், அன்று தான் காவல்நிலையத்தில் பார்த்த நபர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள் என்றும், மறுநாள் காலை 07.45 மணியளவில் மறுபடியும் ராஜாராம் தனக்கு போன் செய்து பென்னிக்சையும், அவர் அப்பாவையும் சாத்தான்குளம் அரசு ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்திருப்பதாகவும்,

நீங்கள் உடனே வாருங்கள் என்றும் சொன்னதாகவும், தான் சென்றபோது ஆஸ்பத்திரியில் ஒரு கருப்புகலர் சேரில் பென்னிக்சும், அவர் அப்பாவும் உட்கார்ந்திருந்தார்கள் என்றும், வெளியூரில் இருந்து வக்கீல் வரச்சொல்லவா என்று கேட்டதற்கு பென்னிக்ஸ் மறுவார்த்தையில் பயந்து அப்படி எதுவும் செய்ய வேண்டாம், வெளியே வந்து தொழில் செய்ய வேண்டும், பெயில் எடுக்கும் வேலையைப் பார் என்று சொன்னார் என்றும், பென்னிக்சிடம் எப்படி இருக்கிறாய் அடி தாங்கி கொள்வாயா என்று கேட்டதற்கு ஒன்றும் இல்லை அண்ணே, பார்த்துக் கொள்கிறேன் என்று சொன்னதாகவும், அவன் கை, கால்கள், முகம் வீங்கி இருந்தது என்றும், அவருடைய கை, முகங்களில் சிறிய பொட்டுக்காயங்கள் இருந்தது என்றும், அடித்ததால் விலா பகுதியில் வலி இருப்பதாக சொன்னதாகவும், அந்த நேரம் போலீஸ் தங்களை சுற்றித்தான் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன், ஏட்டு செல்லத்துரை, ஏட்டு சாமதுரை, போலீஸ் முத்துராஜா இருந்தார்கள் என்றும், டாக்டரிடம் செக் பண்ண வேண்டும் என்று அழைத்துச் சென்றார்கள் என்றும், அவர்கள் எழுந்தவுடன் சேரில் புட்டப்பகுதியில் இருந்து தண்ணியாக வடிந்து உட்கார்ந்திருந்த இடத்தில் சேரிலும், அவர்கள் அணிந்திருந்த சாரம், மற்றும் வேட்டியின் பின்புறத்திலும் இருந்தது என்றும், 10.30 மணிக்கு மேல் டாக்டர்.வினிலா Fitness Certificate கொடுத்துவிட்டதாகவும், கோர்ட் கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தார்கள் என்றும், பென்னிக்சின் சட்டை ஒரு மாதிரி ரொம்ப கசங்கியிருந்தது என்றும், சட்டையின் சில இடங்களில் இரத்தக்கறை இருந்தது என்றும், 10.30 மணிக்கு மேல் அவர்கள் சுமோவில் ஏற்றிக்கொண்டு கோர்ட்டிற்கு போனார்கள் என்றும், பின்னால் பென்னிக்ஸ் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருடன் தானும் பைக்கில் சென்றதாகவும், கொரோனா காலகட்டம் என்பதால் கோர்ட்டிற்குள் யாரையும் அனுமதிக்காததால், கோர்ட்டிற்கு வெளியே இருக்கும் டீக்கடையில் தாங்கள் உட்கார்ந்திருந்ததாகவும், போலீஸ் மூன்று பேர் கோர்ட்டிற்குள் போனார்கள். எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் கேட்டில் நின்றார் என்றும், அப்போது எஸ்.ஐ.ரகுகணேஷ் ஒருபைக்கில் ஒரு வாலன்டியருடனும், மற்றொரு பைக்கில் இரண்டு வாலன்டியர்களும் வந்தார்கள் என்றும், அப்போது ரகுகணேஷ் புல்லட்டில் அவருடைய ரிவால்வருடன் வந்திருந்தார் என்றும், 12.00

மணிக்கு மேல் நீதிபதியிடம் ஆஜர்படுத்திவிட்டு, வெளியே அழைத்து வந்தார்கள் என்றும், வண்டியை அரேஞ்ச் செய்யுங்கள் என்று சங்கரலிங்கத்திடம் போலீசார் சொன்னதன் பேரில் அவர் நாகராஜனின் ஒயிட் கலர் செவர்லைட் வண்டியை ஏற்பாடு செய்திருந்தார் என்றும், அந்த வண்டி எண்.TN92 9302 என்றும், தான் கிட்டத்தில் போனதாகவும், வண்டியில் உட்கார முடியாமல் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும், ஜெயிலுக்குத் தேவையான சாரம், சட்டை பொருட்களை அவர்களுடைய உறவினர்கள் கொடுத்து அவர்கள் வைத்திருந்தார்கள் என்றும், அதிலிருந்து ஒரு போர்வையை எடுத்து பின்சீட்டில் விரித்து அவர்கள் இருவரையும் பின்சீட்டில் அமர வைத்தார்கள் என்றும், முத்துராஜா, செல்லத்துரை, ஜெயராஜ், பென்னிக்ஸ், டிரைவர் நாகராஜ் வண்டியில் கோவில்பட்டிக்கு போனார்கள் என்றும், 21.06.2020–ம் தேதி தன் பெயரிலும், ராஜாராம், ரவிச்சந்திரன் பெயரிலும் குற்ற எண்.312/2020 வழக்கில் பிணைய மனு தாக்கல் செய்ததாகவும், பென்னிக்ஸ் அப்பா ஏற்கனவே சுகர், பிரஷ்ஷர் நோயாளி என்று தெரியும் என்பதாலும், பென்னிக்சுக்கு கல்அடைப்பு சம்பந்தமான எக்ஸ்ரே மற்றும் குலசேகரம் ஆஸ்பத்திரி குறிப்பை ஏற்கனவே தான் கேட்டதன்பேரில் ராஜாராம் தன்னிடம் கொடுத்ததாலும், அந்த அடிப்படையில் பிணையமனு தாக்கல் செய்ததாகவும், நடந்த விசயத்தை நீதிமன்ற அலுவலர் மூலம் நீதிபதிக்கு சொன்னதாகவும், கடுமையாக அவர்கள் தாக்கப்பட்டதாக சொன்னதாகவும், அன்றைய தினமே 21.06.2020 அன்று 3 மணிக்கு வீடியோ கான்பரன்ஸ் மூலம் பேச சொன்னதன்பேரில் தான் நீதிபதியிடம் பேசியதாகவும், நீங்கள் நேற்றே சொல்லி இருக்கலாமே என்று நீதிபதி கேட்டதற்கு அவர்கள் இருவரும் பயந்து போய் இருந்தார்கள் என்று சொன்னதாகவும், அவர் மறுநாள் 22.06.2020–ம் தேதிக்கு மனுவை ஒத்தி வைப்பதாகவும் அன்று விசாரணையில் பார்த்துக் கொள்ளலாம் என்றும் சொன்னார் என்றும், இந்த சூழ்நிலையில் 21.06.2020–ம் தேதி இரவு 10.00 மணிக்கு தன் ஆபிஸ் அருகில் சங்கரலிங்கமும், தானும், மற்றும் பென்னிக்சின் நண்பர்களும் பேசிக்கொண்டிருந்தபோது கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் வைத்து பென்னிக்ஸ் இறந்துவிட்டதாக சங்கரலிங்கத்திற்கு போனில் தகவல் வந்தது என்றும், ஏற்கனவே 19.06.2020–ம் தேதி அடித்த விசயம், சாத்தான்குளத்தில் இருக்கும்

பெரும்பாலானோருக்கு தெரியும் என்றும், அதனால் பக்கத்தில் உள்ளவர்கள், தெரிந்தவர்கள், தெருவில் உள்ளவர்கள், கடைக்காரர்கள் காமராஜர் சிலை முன்பு கூடிவிட்டார்கள் என்றும், மறுநாள் 22.06.2020–ம் தேதி 09.30 மணிக்கு பென்னிக்ஸ் அப்பாவும் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள் என்றும், இரண்டு பேருக்கும் ஏற்பட்ட காயம் தனக்கு ஏற்பட்டிருந்தால் தான் இறந்திருக்ககூடும் என்றும், 20.06.2020–ம் தேதி பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் தன்னிடம் ஒருசில வார்த்தைகள் தான் பேசினார்கள் என்றும், ரொம்ப பயந்திருந்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.10 பென்னிக்ஸ் நண்பர் திரு.ராஜாராம் அ.சா.10 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் 2011–ம் ஆண்டு முதல் தான் வழக்கறிஞராக தொழில் செய்ததாகவும், பென்னிக்ஸ் தன் நண்பர் என்றும், அவரை சுமார் 25 வருடங்களாகத் தெரியும் என்றும், 19.06.2020–ம் தேதி இரவு சுமார் 07.15, 07.30 மணியளவில் தானும் ரவிசங்கர், கல்யாணசுந்தரம் மற்றும் ஆட்டோ டிரைவர்கள் இரண்டு பேர்களும் பென்னிக்ஸ் கடைக்கு எதிரில் ஆட்டோ ஸ்டாண்ட் அருகில் பேசிக் கொண்டிருந்ததாகவும், அப்போது வண்டிமறிச்சி அம்மன் கோவில் அருகில் இன்ஸ்பெக்டரின் சுமோ வண்டி வந்து நின்றது என்றும் அங்கு எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் மற்றும் மூன்று போலீசார்கள் இருந்தார்கள் என்றும், இன்ஸ்பெக்டரும் இருந்தார் என்றும், அங்கு Vehicle Checkup செய்து கொண்டு மாஸ்க் போடச் சொல்லிக் கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது ஒரு போலீசார் ஆட்டோ ஸ்டாண்ட் அருகில் மணி என்பவரிடம் விசாரித்துக் கொண்டிருந்தார் என்றும், பக்கத்தில் பென்னிக்ஸ் அப்பா நின்று கொண்டிருந்தார் என்றும், ரவிசங்கர் பென்னிக்ஸ் அப்பாவிடம் போலீஸ் என்ன விசாரித்தார்கள் என்று கேட்டார் என்றும், நேற்று ஏதோ போலீசை அடித்துவிடுவோம் என்று சொன்னார்கள் என்றும், அது சம்பந்தமாக போலீசார் கேட்டுச்சென்றதாக அவர் சொன்னதாகவும் ரவிசங்கர் தன்னிடம் சொன்னதாகவும், கொஞ்சநேரத்தில் தானும் ரவிசங்கரும் பென்னிக்ஸ் கடைக்குள் போய்விட்டதாகவும், கடைக்குள் நான் இருக்கும் போது எஸ்.ஐ.பாலகிருஷ்ணனும், ஒரு போலீசாரும் பென்னிக்ஸ் அப்பாவிடம் விசாரித்துக் கொண்டிருந்தார்கள் என்றும் தான் கடைக்குள் இருந்து வெளிப்பக்கமாக பார்த்துக் கொண்டிருந்ததால் அது தனக்குத்

தெரிந்தது என்றும், 07.45 மணியளவில் ஆட்டோடிரைவர் பாண்டி என்பவர் கடைக்குள் வந்து பென்னிக்ஸ் உன் அப்பாவை வண்டியில் உட்கார வைத்துள்ளார்கள் என்று சொன்னார் என்றும், உடனே நானும், ரவிசங்கரும் வெளியே வந்து எட்டிப் பார்த்துவிட்டு, ஆமாம் பென்னிக்ஸ் வண்டியில் உட்கார வைத்துள்ளார்கள் என்று சொன்னதாகவும், பென்னிக்ஸ் உடனே சுமோ அருகில் சென்றதாகவும் தானும் பின்னாடியே சென்றதாகவும் பென்னிக்ஸ் எதற்காக என் அப்பாவை பிடித்திருக்கிறீர்கள் என்று கேட்டதாகவும், அதற்கு ஆய்வாளர் எதுவாக இருந்தாலும் ஸ்டேசனில் வந்து பேசிக் கொள்ளுங்கள் என்று சொன்னதாகவும் அவரிடம் தான் அட்வகேட், எதற்காக பிடித்து வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டதாகவும் அதற்கு அவர் ஸ்டேசனில் வந்து பேசிக்கொள்ளுங்கள் என்று சொன்னதாகவும் இரவிசங்கர் உடனே தன்னை மணிமாறனுக்கு போன் செய்யச் சொன்னதாகவும் தான் உடனே மணிமாறனுக்கு போன் செய்ததாகவும், அப்போது மணிமாறன் தான் ஏற்கனவே ஸ்டேசனில் தான் இருப்பதாகவும், தன்னை ஸ்டேசன் வரச்சொன்னதாகவும் தான் அப்போது லுங்கியில் இருந்ததால் வீட்டிற்கு போய் டிரஸ் மாற்றி வருவதாக சொன்னதாகவும் அதன் பிறகு தன்னுடைய மோட்டார் சைக்கிளை எடுக்க முயற்சித்தபோது அதன் சாவி பென்னிக்ஸ் கடைக்குள் இருந்தது தெரிந்தது என்றும், உடனே ரவிசங்கர் அவனுடைய பைக் சாவியை தன்னிடம் கொடுத்து, நீ போய் வா என்று சொன்னான் என்றும், தன்னுடைய சாவியை எடுத்துக் கொண்டு பென்னிக்சும், ரவிசங்கரும் காவல்நிலையம் சென்றார்கள் என்றும், தான் வீட்டிற்கு சென்று பேண்ட் மாற்றிவிட்டு, புறப்படும் போது இரவிசங்கர் போன் செய்து, பென்னிக்சை அடிக்கிறார்கள் சீக்கிரம் வா என்று சொன்னதாகவும் தான் உடனே சுமார் 08.05 மணியளவில் ஸ்டேசன் போய்விட்டதாகவும், தான் போய் பார்க்கும்போது ஸ்டேசன் கதவு அடைத்திருந்தது என்றும் தான் பார்க்கும்போது எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் லத்தியால் பென்னிக்ஸ் கையில் அடித்துக்கொண்டிருந்தார் என்றும், தான் அதை கண்ணாடி வழியாக பார்த்ததாகவும், உடனே மணிமாறனிடம் வாங்க பேசுவோம் என்று சொன்னதாகவும் அதற்கு அவர் கொஞ்சம் வெயிட் பண்ணுவோம் என்று சொன்னதாகவும் தாங்கள் ஸ்டேசனுக்கு வெளியே நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது பென்னிக்ஸ் மாமா,

சொந்தக்காரர்கள் வந்தார்கள் என்றும் தன்னுடைய நண்பர்களும் நின்று கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது சுமார் 09.30 மணியளவில் எஸ்.ஐ.ரகுகணேஷ் பைக்கில் ஒரு ப்ரண்ட்ஸ் ஆப் போலீஸ் நபர் பின்புறம் உட்கார்ந்து வந்து, காவல்நிலையத்திற்கு உள்ளே போனார்கள் என்றும், அவர்கள் பின்னாடியே மற்றொரு பைக்கில் ப்ரண்ட்ஸ் ஆப் போலீஸ் அமைப்பின் இரண்டு நபர்கள் வந்து காவல்நிலையம் சென்றார்கள் என்றும், தான் அதன்பிறகு ஸ்டேசனுக்கு பத்து அடி தள்ளி நின்று போய் பார்த்ததாகவும், அப்போது எஸ்.ஐ.ரகுகணேஷ் ப்ரண்ட்ஸ் ஆப் போலீஸ் நபரிடம் வண்டியிலிருந்து லத்தியை எடுத்து வரச் சொன்னார் என்றும், லத்தியை எடுத்துக்கொண்டு போனவுடன் ரகுகணேஷ் வாங்கிக்கொண்டு பென்னிக்சை கையை நீட்டச்சொல்லி அடித்தார் என்றும், தான் அங்கு நிற்க முடியாமல் காம்பவுண்டிற்கு வெளியே வந்துவிட்டதாகவும், அப்போது அப்பா, அம்மா அடிக்காதீர்கள் என்ற சத்தம் கேட்டது என்றும், அதற்கு முன்பும் அந்த சத்தம் கேட்டது என்றும், பத்து நிமிடம் விட்டுவிட்டு அந்த சத்தம் கேட்டது என்றும், அம்மாதிரி 10.30 மணி வரை சத்தம் கேட்டது என்றும், 11.00 மணிவாக்கில் ஒரு எஸ்.எஸ்.ஐ தனக்கு போன் செய்து ஸ்டேசன் வாசல் அருகில் வரச் சொன்னார் என்றும், வாங்க பென்னிக்ஸ் கடையை பூட்டிவிட்டு வருவோம் என்று தன்னை அழைத்தார் என்றும், அப்போது பக்கத்திலிருந்த பென்னிக்ஸ் சித்தப்பா ஏற்கனவே வீட்டில் இருந்த ஒரு சாவியை வைத்து கடையை பூட்டிவிட்டதாக சொன்னார் என்றும், சாவியை கொண்டு போகலாமா என்று எஸ்.எஸ்ஐ.யிடம் கேட்டதாகவும், அதற்கு அவர் இன்ஸ்பெக்டரிடம் கேட்டுதான் தருவேன் என்று சொல்லி ஸ்டேசனுக்குள் போனார் என்றும் உடனே இன்ஸ்பெக்டர் அழைத்து தன்னை வாசல் அருகில் நிற்க வைத்து, கடை சாவியை தன்னிடம் கொடுக்கும்படி எஸ்.எஸ்.ஐயிடம் சொன்னார். அப்போது பாலகிருஷ்ணன் எஸ்.ஐ.இன்ஸ்பெக்டர் மற்றும் நான்கு போலீசார்கள் இருந்தார்கள் என்றும், அப்போது தான் இன்ஸ்பெக்டரிடம் பென்னிக்சை பார்க்கலாமா என்று கேட்டதாகவும், அதற்கு அவர் காலையில் வாருங்கள் என்று சொன்னார் என்றும், தான் கடை சாவியை வாங்கி பென்னிக்ஸ் மாமாவிடம் கொடுத்துவிட்டதாகவும் 11.30 வரை அங்கு நின்றதாகவும் எல்லா போலீசாரும் காலையில் வாருங்கள் என்று சொன்னதால் தாங்கள்

திரும்பிவிட்டதாகவும் பென்னிக்ஸ் சொந்தக்காரர்கள் அங்கு நின்று கொண்டிருந்தார்கள் என்றும், மறுநாள் காலை 07.30 மணியளவில் ரவிசங்கர் தனக்கு போன் செய்து, ரிமாண்டிற்கு கொண்டு செல்கிறார்கள், ஆதார் கார்டு கொண்டு வரச்சொல்லி சொல்கிறார்கள், நீ கிளம்பி வா என்று சொன்னதாகவும், அதன்பிறகு தான் உடனே மணிமாறனுக்கு போன் செய்து, ரிமாண்டிற்கு கொண்டு போகிறார்களாம், நீயும் வா என்று சொன்னதாகவும். அதன்பிறகு 08.00 மணிவாக்கில் தான் ஸ்டேசன் வரும்போது சுமோ ஆஸ்பத்திரியில் நிற்பதை பார்த்ததாகவும் அதில் பென்னிக்சும், அவரது அப்பாவும், பின்னால் உட்கார்ந்திருந்தார்கள் என்றும் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் வெளியே சைடில் நின்று கொண்டிருந்தார் என்றும் அப்போது தான் அவரிடம் தான் அட்வகேட், அவர்களை பார்க்க வேண்டுமென்று சொன்னதாகவும் அவர்கள் கதவை திறந்துவிட்டார்கள் என்றும் தான் பார்த்ததாகவும், அதன்பிறகு மணிமாறன் வந்ததாகவும், தான் பார்க்கும்போது இருவரும் உட்கார முடியாமல் உட்கார்ந்திருந்தார்கள் என்றும் அதன்பிறகு தான் மணிமாறனிடம் வீடு வரை போய்வருகிறேன் என்று சொன்னதாகவும், கொஞ்சநேரத்தில் தான் வீட்டிற்கு போய்விட்டு வந்தபோது பென்னிக்ஸ், அவர் அப்பா ஆஸ்பத்திரி சைடிலுள்ள ஒரு இரும்புச்சேரில் உட்கார்ந்திருந்தார்கள் என்றும் சுற்றி போலீசார் இருந்தார்கள் என்றும் அப்போது எஸ்.ஐ.பாலகிருஷ்ணனை தனக்குத் தெரியும் என்றும் மற்ற போலீசார் பெயர்கள் அப்போது தனக்குத் தெரியாது என்றும், அதன்பிறகு தெரியும் என்றும் அங்கு எஸ்.ஐ.பாலகிருஷ்ணன், சாமதுரை, செல்லத்துரை, முத்துராஜா, ஜெயசேகர் ஆகியோர் அங்கு இருந்தார்கள் என்று தெரியும் என்றும் அப்போது மணிமாறனிடம் இவ்வளவு நேரமாகிவிட்டது, ரிமாண்டிற்கு கூட்டிப்போகவில்லையா என்று தான் கேட்டதாகவும் இரண்டு பேருக்கும், High Blood Pressure ஆக உள்ளது என்றும், இருவருக்கும் மாத்திரை கொடுத்து உட்கார வைத்துள்ளார்கள் என்று சொன்னதாகவும் தான் பென்னிக்சிடம் ரொம்ப முடியவில்லை என்றால் சொல், ஆஸ்பத்திரியில் சேர்ப்பதற்கு ஏதாவது செய்வோம் என்று சொன்னதாகவும் அதற்கு அவன் இல்லை வலி இருக்கிறது, பார்த்துக்கொள்கிறேன், வெளியில் எடுப்பதற்கு சீக்கிரம் ஏற்பாடு செய்யுங்கள் என்று சொன்னதாகவும் பார்க்கும்போது அவன் கை, கால், முகம் இரத்தக்காயமாகவும்,

வீக்கமாகவும் இருந்தது என்றும், அதன்பின்பு மெடிக்கல் சர்டிபிகேட் கொடுத்த பின்பு ரிமாண்டிற்கு அழைத்துச் செல்லும்போது பென்னிக்ஸ் சட்டையில் இரத்தக்கறையாக இருந்தது என்றும் உடனே மணிமாறன் எஸ்.ஐ.பாலகிருஷ்ணனிடம் சட்டையை மாற்றச் சொல்லவா என்று கேட்டதாகவும் அவர் மாற்றச் சொல்லுங்கள் என்று சொன்னதாகவும் அதன்பிறகு பென்னிக்ஸ் சட்டையை மாற்றியதாகவும் வண்டியில் ஏறும்போது நடக்க முடியாமல் நொண்டி, நொண்டி நடக்க முடியாமல் இருவரும் சென்றார்கள் என்றும் பின்னால் புட்டத்தில் இருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது என்றும் அப்போது அவர்களுக்கு ரொம்ப அடிபட்டுள்ளது, கடுமையான காயம் உள்ளது என்று தான் தெரிந்து கொண்டதாகவும் சுமார் 10.30 மணிவாக்கில் கோர்ட்டிற்கு அழைத்துச் சென்றார்கள் என்றும் கோர்ட்டிற்கு அழைத்துச் செல்லும்போது தாங்களும் பின்னாடியே சென்றதாகவும் கொரோனா கால கட்டம் என்பதால், தங்களை கோர்ட்டிற்குள் விடவில்லை என்றும் எதிரிலுள்ள டீக்கடையில் இருந்ததாகவும் பென்னிக்ஸ் சொந்தக்காரர்கள், தன்னுடைய நண்பர்கள் அங்கு இருந்ததாகவும் அதன்பிறகு உள்ளே சென்று, ரிமாண்டை முடித்துவிட்டு வெளியில் வந்தார்கள் என்றும், வெளியில் வரும்போது பென்னிக்ஸ் அப்பா தன்னிடம் கோவில்பட்டி ஜெயிலுக்கு கொண்டு செல்கிறார்கள், நீங்களும், மணிமாறனும், பெயிலுக்கு என்ன என்று பாருங்கள் என்று தன்னிடம் சொன்னார் என்றும், ஏற்கனவே சங்கரலிங்கம் சொல்லி, நாகராஜ் வண்டியை ஏற்பாடு செய்திருந்ததாகவும் பென்னிக்ஸ் மற்றும் அவருடைய அப்பாவிற்கு பின்புறத்தில் இரத்தம் வடிந்திருந்ததால், காரின் பின்சீட்டில் போர்வையை விரித்து, அதில் பென்னிக்சும், அவரது அப்பாவும் உட்கார்ந்தார்கள் என்றும் முன்னால் ஒரு போலீசும், பின்னால் ஒரு போலீசும் உட்கார்ந்து கொண்டார்கள் என்றும் அப்போது அவர்கள் பெயர் தனக்குத் தெரியாது என்றும் பின்னால் அவர்கள் செல்லத்துரை, முத்துராஜா என்று தெரிந்துகொண்டதாகவும், அதன்பிறகு எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் அவர்களுடைய சொந்தக்காரர்களை அழைத்து வந்து, Things–ஐ வாங்கிச் செல்லுங்கள் என்று தன்னிடம் கோர்ட் வாசலில் வைத்து சொன்னார் என்றும் அதன்பிறகு அவர்களை ரிமாண்டிற்கு அனுப்பிவிட்டு, தான் மணிமாறன், பென்னிக்ஸ் மாமா, சித்தப்பா ஆகியோர்கள் காவல்நிலையம் போனதாகவும், அங்கு

எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் இன்ஸ்பெக்டரிடம் கேட்டுவிட்டு தருகிறேன் என்று, இன்ஸ்பெக்டருக்கு போன் செய்தார் என்றும் அவர்கள் பெயிலில் வந்த பின்னர்,Things–ஐ கொடுத்துக்கொள்ளலாம் என்று இன்ஸ்பெக்டர் சொன்னதாக எஸ்.ஐ. பாலகிருஷ்ணன் தன்னிடம் சொன்னார் என்றும் பென்னிக்ஸ் அப்பா பைக் கடை அருகில் நிற்பதால், அந்த சாவியை மட்டும் கொடுங்கள் என்று கேட்டதற்கு, ரைட்டர் ப்யூலாவிடம் சொல்லி பைக் சாவியை மட்டும் கொடுங்கள் என்று எஸ்.ஐ சொன்னார் என்றும் அதை வாங்கி பென்னிக்ஸ் சித்தப்பா கையில் தான் கொடுத்ததாகவும் அவர்களை ரிமாண்டிற்கு கொண்டு போகும்போது சுமார் 12.00 மணி இருக்கும் என்றும் 19.06.2020–ம் தேதி காவல்நிலையம் சென்றபோது, காவல்நிலையத்தில் 10, 12 போலீசார்கள் இருந்தார்கள் என்றும் மணிமாறன் அவர்களிடம் கொஞ்சம், கொஞ்சம் பேசிவிட்டு வந்ததாகவும் மணிமாறன் அவர்களிடம் எப்படியாவது விடுங்கள் என்று சொன்னதாகவும் அதற்கு அவர்கள் எதுவாக இருந்தாலும் அதிகாரிகளிடம் பேசிக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள் என்றும், தான் அன்று பார்த்த போலீசார் அனைவரும் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி உள்ளார்கள் என்றும் 20.06.2020–ம் தேதி தான் பார்க்கும்போது இருவருக்கும் கொடுங்காயங்கள் இருப்பதாக தனக்கு தெரிந்தது என்றும் பென்னிக்ஸ் இறந்து இரண்டு நாட்களுக்குள் சங்கரலிங்கத்திற்கு போன் செய்து, பெட்சீட் எங்கே என்று கேட்டதாகவும், அது மணிமாறன் ஆபிசில் உள்ளது என்று அவர் சொன்னதாகவும் அதை வாங்கி கொண்டு வந்து, தான் பென்னிக்ஸ் மாமா ஜோசப்பிடம் கொடுத்துவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

6.11 அ.சா.11 தன் அம்மா அன்னமரியாள் சாத்தான்குளத்திலுள்ள அனிஸ் பழமுதிர்சோலை கடையில் பணிபுரிவதாகவும், அந்தக்கடை இரவிராஜ் என்பவருக்குச் சொந்தமானது என்றும், அந்தக்கடை காமராஜர் சிலை அருகில் உள்ளது என்றும், தான் அந்தக்கடைக்கு விடுமுறை நாட்களில் அம்மாவிற்கு உதவியாக செல்வது உண்டு என்றும், மாலை நேரங்களில் தான் அம்மாவின் கடைக்கு செல்வது உண்டு என்றும், தன் அம்மா வேலை பார்க்கும் பழக்கடைக்கு பக்கத்துக்கடை பென்னிக்ஸ் ஏ.பி.ஜே மொபைல்ஸ் ஷாப் உள்ளது என்றும், கடந்த 19.06.2020–ம் தேதி சுமார் இரவு 07.30

மணியளவில் பழக்கடையை எடுத்து வைத்துக்கொண்டிருந்த சமயத்தில் வண்டிமறிச்சி அம்மன் கோவில் அருகில் போலீஸ் ஜீப் வந்து நின்றது என்றும், வெகிக்கல் செக்அப் மற்றும் மாஸ்க் செக்அப் செய்து கொண்டிருந்தார்கள் என்றும், அங்கு இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், எஸ்.ஐ.பாலகிருஷ்ணன், கான்ஸ்டபிள்ஸ் ஆகியோர்கள் மொத்தமாக சுமார் 5, 6 பேர்கள் இருந்தார்கள். கொஞ்சநேரம் கழித்து எஸ்.ஐ.சாரும், ஒரு கான்ஸ்டபிளும் மொபைல் ஷாப், பழக்கடை பக்கம் வந்தார்கள் என்றும், அங்கு வந்து எஸ்.ஐ நேற்று யாரோ போலீசை தப்பாக பேசினார்கள், அவர்கள் யாரென்று சொல்லுங்கள் என்று இப்போது சொல்லுங்கள் பார்ப்போம் என்று சத்தம் போட்டதாகவும், கெட்ட வார்த்தைகளை உபயோகித்ததாகவும், தைரியம் இருந்தால் இப்போது சொல்லுங்கள் பார்ப்போம் என்று சொன்னதாகவும், எல்லோரும் அமைதியாக இருந்தார்கள் என்றும், அப்போது ஜெயராஜ் கடைப்பக்கத்தில் நின்று கொண்டிருந்தார் என்றும், அவரிடம் நேற்று போலீசை சத்தம் போட்டது யாரென்று தெரியுமா என்று கேட்டார் என்றும், ஜெயராஜ் அப்போது யாரென்று தெரியாது என்று சொன்னார் என்றும், அதன்பிறகு எஸ்.ஐ.சாரும், கான்ஸ்டபிளும் ஜீப் அருகே போய்விட்டார்கள் என்றும், கொஞ்சநேரந்தில் ஒரு கான்ஸ்டபிள் சார் வந்து ஜெயராஜிடம் ஐயா கூப்பிடுகிறார்கள் என்று சொன்னதாகவும், கூப்பிட்டவுடன் ஜெயராஜும் வேகமாக ஜீப் அருகில் போனார் என்றும், சத்தம் போட்டது நீங்கள் தான் என்று தெரிந்துவிட்டது, வண்டியில் ஏறுங்கள் என்று சொன்னார்கள் என்றும், ஜெயராஜ் அப்போது தான் சொல்லவில்லை, யார் சொன்னார்கள் என்று தெரியாது என்று சொன்னார் என்றும், அப்புறம் வண்டியில் ஏறுங்கள் நீங்கள் தான் சொல்லியிருக்கிறீர்கள் என்று சொன்னார்கள் என்றும், ஜெயராஜை வண்டியில் தள்ளினார்கள் என்றும், ஜெயராஜ் வண்டியின் பேக்சீட்டில் இருந்தார் என்றும், தான் இந்த மாதிரி சொல்லவில்லை, சொல்லமாட்டேன் என்று அவர் சொன்னதாகவும், அப்போது இன்ஸ்பெக்டர் சார் முன்னாடியிருந்து திரும்பி பார்த்துவிட்டு நீங்கள் தான் சொன்னீர்கள் என்று தெரிந்துவிட்டது. அமைதியாக இருங்கள் என்று சொன்னதாகவும், அப்பாவை போலீசார் அழைத்துவிட்டார்கள் என்று யாரோ சொன்னதன்பேரில் கடையிலிருந்த பென்னிக்ஸ் ஜீப்அருகில் வந்தார் என்றும், என் அப்பாவை எதற்கு அழைத்து செல்கிறீர்கள் என்று பென்னிக்ஸ் கேட்டதற்கு,

எதுவாக இருந்தாலும் ஸ்டேசனில் வந்து பேசிக்கொள் என்று சொன்னார்கள் என்றும், அப்புறம் ஜீப் கிளம்பிவிட்டது என்றும், அதற்குப் பின்னால் பென்னிக்சும், அவர் நண்பரும் பைக்கில் போனார்கள் என்றும், அப்போது அவர்கள் நல்ல உடல் திறத்துடன் இருந்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.11 நீதிமன்றத்தில் எதிரிகள் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் மற்றும் ஸ்ரீதர் இருப்பதாக சாட்சியம் அளித்துள்ளார்.

6.12 அ.சா.12 தான் சாத்தான்குளத்திலுள்ள ஜி.ஜி.பாக்கியம் ஹார்டுவேர்ஸ் என்ற கடையில் வேலை பார்த்து வருவதாகவும், அந்தக்கடை பென்னிக்ஸ் கடைக்கு ஒரு கடை விட்டு அடுத்து உள்ளது என்றும், 18.06.2020 அன்று இரவு ஜி.ஜி.பாக்கியம் கடையை பூட்டிக் கொண்டிருந்தபோது 2, 3 கொத்தனார்கள் வேலைக்குப் போனதற்கு சம்பளம் வாங்குவதற்காக தங்கள் கடைக்கு வெளியே நின்று கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது 08.30 மணியளவில் எஸ்.ஐ பாலகிருஷ்ணனும், ஒரு கான்ஸ்டபிளும் பைக்கில் அங்கு வந்தார்கள் என்றும், எதற்கு நிற்கிறீர்கள், கடையை பூட்டியாச்சுல்ல போக வேண்டியது தானே என்று பொதுவாக சொன்னார்கள் என்றும், அப்போது தான் ஓனர் வருகிறார், சம்பளம் வாங்கி கொடுக்க வேண்டுமென்று சொன்னதாகவும், அதற்கு எஸ்.ஐ பாலகிருஷ்ணன் 5 நிமிடத்தில் தான் வருவேன், யாராவது நின்றீர்கள் என்றால், அடித்து தோலை உரித்துவிடுவேன் என்று சொன்னதாகவும், அப்போது ஜெயராஜ் அங்கு இருந்தார் என்றும், அவர் வழக்கம்போல் காமெடியாக பேசுவார் எந்த விசயத்தையும் மறைத்து பேச மாட்டார் என்றும், எதையும் ஓப்பனாக பேசுவார் என்றும், அப்போது அவர் பொதுமக்களை இப்படி அடாவடியாக பேசியிருக்கிறார், முதலில் அவருக்கு தான் தண்டனை கொடுக்க வேண்டும் என்று சொன்னார் என்றும், சொன்னவுடன் ஆட்டோஸ்டாண்டில் குண்டாஸ் பாலு என்று போலீஸ் இருந்துள்ளார் என்றும், அவரது முழுப்பெயர் தனக்கு தெரியாது என்றும், அப்போது அவர் கேட்டுக்கொண்டு இருந்துள்ளார் என்றும், 19.06.2020–ம் தேதி காலையில் தான் வீட்டிற்கு பால் வாங்க போய் கொண்டிருந்ததாகவும், அப்போது பென்னிக்ஸ் கடை அருகில் குண்டாஸ் பாலு தன்னிடம் நேற்று போலீசாரை அப்படி யார் பேசினார்கள், அவர் பெயர் என்ன, வீடு எங்கு உள்ளது என்று கேட்டதாகவும், அதற்கு தான் அவர் பெயர்

ஜெயராஜ், அவர் வீடு எங்கு உள்ளது என்று தனக்கு தெரியாது என்று சொன்னதாகவும், அதன்பிறகு 09.30, 10.00 மணியளவில் தான் ஜெயராஜிடம், குண்டாஸ்பாலு உங்களை விசாரித்து சென்றார் என சொன்னதாகவும், அதற்கு அவர் ஜாலியாக சொல்வதாக நினைத்துக் கொண்டு சரிவிடு, பார்த்துக் கொள்வோம் என்று அசால்டாக சொன்னார் என்றும், அதன்பிறகு இரவு 07.30 மணியளவில் மாஸ்க் போடாதவர்கள் மற்றும் ஹெல்மெட் போடாதவர்களை ஐந்து போலீசார்கள் பிடித்துக்கொண்டு இருந்தார்கள் என்றும், அப்போது ஒரு கான்ஸ்டபிள் வந்து, ஆட்டோ ஸ்டாண்ட் மணியிடம் நேற்று யார் எஸ்.ஐ பாலகிருஷ்ணனை ஏசியது என்று கேட்டுக் கொண்டிருந்தார் என்றும் கேட்கும்போது யாரும் இல்லை என்றும் தான் தெரியவில்லை என்று சொல்லிவிட்டதாகவும், அதன்பிறகு எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் வந்தார் என்றும், அவர் வந்து சொல்ல முடியாத வார்த்தைகளை சொல்லி, போலீசை எதிர்ப்பதற்கு யார் இருக்கிறார்கள், வம்பாக நெஞ்சை கீறிவிடுவேன் என்று சொல்லிவிட்டு ஜெயராஜ் அண்ணனிடம் போய் யார் சொன்னார்கள் என்று அவரிடம் கேட்டதாகவும், அதற்கு அவர் தெரியவில்லை என்று சொல்லிவிட்டு அங்கு நின்று கொண்டிருந்தார்என்றும், அதன்பிறகு குண்டாஸ் பாலு போனில் யாரிடமோ தூண் அருகில் நிற்கிறார் வெள்ளை வேட்டி, வெள்ளை சட்டை போட்டிருப்பவர், அவர்தான் என்று சொன்னதாகவும், அப்போது ஒரு கான்ஸ்டபிள் ஜெயராஜை வாங்க என்று கூப்பிட்டதாகவும், ஜெயராஜும் போனதாகவும், என்ன பேசினார்கள் என்று கேட்கவில்லை என்றும், அப்படியே ஜீப்பில் தள்ளி உட்கார வைத்துவிட்டார்கள் என்றும், அதன்பிறகு பென்னிக்ஸ், இராஜாராம் மற்றும் ரவி அண்ணன் வந்து கேட்டதற்கு என்ன சொன்னார்கள் என்று தெரியவில்லை என்றும், வரும்போது ராஜாராம் போனில் யாரிடமோ, எதுவானாலும் ஸ்டேசனில் வந்து பேசிக் கொள்ளுங்கள் என்று சொல்வதாக சொன்னார் என்றும், அப்போது இராஜாராம் லுங்கி கட்டியிருந்ததால் பென்னிக்சிடம் நீ போ, தான் வீட்டில் போய் பேண்ட் மாற்றி வருகிறேன் என்று சொல்லி போனார் என்றும், அதன்பிறகு பென்னிக்சும் ரவியும் பைக்கில் போய்விட்டார்கள் என்றும், அப்போது போலீசார் ஜீப்பில் வண்டிமறிச்சிஅம்மன் கோவிலுக்கு எதிரில் நின்று கொண்டிருந்தார்கள் என்றும் போலீஸ் ஜீப்பில் இன்ஸ்பெக்டர், எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் மற்றும் கான்ஸ்டபிள்கள்

இருந்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.12, 1, 2, 6–ம் எதிரிகளை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டியுள்ளார்.

6.13 அ.சா.13 தான் சொந்தமாக ஆட்டோ ஓட்டி வருவதாகவும், தன்னுடைய ஆட்டோ ஸ்டேண்ட் பென்னிக்ஸ் கடைக்கு எதிரில் உள்ளது என்று அருகில் பூங்கா, காமராஜர் சிலை, பழைய பஸ் ஸ்டாண்ட் உள்ளது என்றும், 2020 ஆம் வருடம் ஜூன் மாதம் 18 ஆம் தேதி இரவு 08.30 மணியளவில் தான் ஆட்டோ ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தபோது எஸ்.ஐ.பாலகிருஷ்ணனும், ஒரு கான்ஸ்டபிளும் பென்னிக்ஸ் கடை அருகில் பைக்கில் வந்தார்கள் என்றும், பக்கத்து கடையில் சம்பளம் வாங்குவதற்காக 4, 5 பேர்கள் நின்று கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது எஸ்.ஐ சார் அவர்கள் லாக்டவுன் சமயத்தில் 08.30 மணிவரை ஏன் நிற்கிறீர்கள் என்று கேட்டார் என்றும், சம்பளம் வாங்குவதற்காக நின்று கொண்டிருக்கிறோம், ஓனர் ஆஸ்பத்திரிக்கு போய் இருக்கிறார் என்று அவர்கள் சொன்னார்கள் என்றும், தான் போய்விட்டு வரும் போது நின்றீர்கள் என்றால், தோலை உரித்துவிடுவேன் என்று எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் சொன்னார் என்றும், ஜெயராஜ் அப்போது அவர் கடை வாசலில் நின்று கொண்டிருந்தார் என்றும், ஜெயராஜ் அங்கிருந்த பசங்களிடம் போலீஸ் ஏன் சத்தம் போட்டு போகிறது என்று கேட்டார் என்றும், அப்போது அவர்கள் தாங்கள் சம்பளம் வாங்குவதற்காக நின்று கொண்டிருந்ததாகவும், முதலாளி வந்த பின்னர் போக வேண்டுமென்றதால் போலீஸ் சத்தம் போட்டதாக சொன்னார்கள் என்றும், ஜெயராஜ் உடனே அதற்கான விளக்கத்தை நீங்கள் போலீசிடம் கொடுக்க வேண்டியதுதானே, போலீஸ் என்ன கடவுளா என்று சொன்னார் என்றும், தான் அப்போது எதிரில் குண்டாஸ் பாலு என்ற ஏட்டு சரக்கு அடித்துக் கொண்டிருப்பதாகவும், போலீசை சத்தம் போடாதீர்கள், அவர் எஸ்.ஐ.க்கு போனில் தகவல் சொல்லிவிடுவார் என்றும் சொன்னதாகவும், வீட்டிற்கு மாவு வாங்கப் போவதாக ஜெயராஜ் கிளம்பி போய்விட்டார் என்றும், ஜூன் 19 ஆம் தேதி இரவு 07.45 மணிக்கு தான் சவாரி போய்விட்டுவந்து, ஸ்டாண்டில் ஆட்டோவை நிறுத்திவிட்டு வந்தபோது, ஜெயராஜை சுமோவில் ஏற்றி வைத்திருந்தார்கள் என்றும், இதை பார்த்துவிட்டு தான் பென்னிக்சிடம் போய் அப்பாவை சுமோவில் ஏற்றி

வைத்திருக்கிறார்கள் என்று சொன்னதாகவும், பென்னிக்சும், ராஜாராமும் ஸ்டேசன் இன்ஸ்பெக்டரிடம் பேச போனார்கள் என்றும், அவர்கள் என்ன பேசினார்கள் என்று தனக்குத் தெரியாது என்றும், அதன்பிறகு சுமோ ஸ்டேசன் கிளம்பி போய்விட்டது என்றும், பென்னிக்சும், ரவிசங்கரும் பைக்கில் பின்னால் சென்றுவிட்டார்கள் என்றும், ராஜாராமும் பைக்கில் வெளியே கிளம்பி போய்விட்டார் என்றும், அதன்பிறகு தான் பென்னிக்சை பார்க்கவில்லை என்றும், ஜூன் 20–ம் தேதி இன்ஸ்பெக்டரும், எஸ்.ஐ–யும் ஆட்டோ ஸ்டாண்ட் எதிரில் சுமோவை நிறுத்தி பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும், இன்று நீதிமன்றத்தில் இன்ஸ்பெக்டரும், எஸ்.ஐ–யும் ஆஜராகியுள்ளார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.14 சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் ஊழியராக பணிபுரிந்துள்ள O.P. சீட்டு கொடுக்கும் திரு.நடராஜன் அ.சா.14 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில், 20.06.2020–ம் தேதி காலை 08.00 மணிக்கு தான் சாத்தான்குளம் மருத்துவமனையில் பணியில் இருந்தபோது சாத்தான்குளம் காவல்நிலையத்தில் இருந்து எஸ்.ஐ.பாலகிருஷ்ணன், வெயிலுமுத்து, சாமதுரை இன்னும் 2, 3 காவலர்கள் உடன் ஜெயராஜ் மற்றும் அவருடைய மகன் பென்னிக்சை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள் என்றும், அவர்களின் கைகள் மற்றும் கால்களில் இரத்தக்காயம் மற்றும் வீக்கம் இருந்தது என்றும், தான் அவர்களுக்கு O.P. சீட்டு போட்டு மருத்துவரிடம் அனுப்பி வைத்ததாகவும், தான் எஸ்.ஐ.பாலகிருஷ்ணனிடம் அவர்கள் நல்ல மனிதர்கள், அவர்கள் மீது எந்த வழக்கும் கிடையாது எதற்காக இப்படி அழைத்து வந்திருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, அவர் கொரோனா விதிமுறைகளை மீறி கடையை திறந்து வைத்ததற்காக பிடித்த வழக்கு என்று சொன்னார் என்றும், அதன்பின்னர் மருத்துவர் வெண்ணிலாவிடம் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை அவர்கள் அழைத்துச் சென்றார்கள் என்றும், பின்னர் மருத்துவரை பார்த்துவிட்டு வெளியே வந்தார்கள் என்றும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் கைகள் மற்றும் கால்களில் இரத்தக்காயமும் வீக்கமும் இருந்தது என்றும், தான் அவர்களுக்கு புட்டப்பகுதியில் உள்ள காயங்களுக்கும் மருந்து போட்டதாகவும், அதன்பிறகு அவர்கள் வெளிஅறையில் உட்கார்ந்திருந்தார்கள்

என்றும், இயற்கை அழைப்பிற்காக அந்த வழியாக போகும்போது அவர்கள் மிகவும் சோர்வாக இருந்தார்கள் என்றும், வேஷ்டியில் இரத்தம் அதிகமாக இருந்ததால் துணி மாற்றி இருந்தார்கள் என்றும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிடம் தான் போசியபோது அவர்கள் இரவில் காவல்நிலையத்திற்கு அழைத்துச்சென்று போலீசார் அடித்ததாக சொன்னார்கள் என்றும், தான் அன்று சாத்தான்குளம் மருத்துவமனையில் பார்த்த போலீசார் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.15 சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்துள்ள திருமதி.கிருபை கிரனேப்பு அ.சா.15 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் 20.06.2020 ஆம் தேதி Hospital worker ஆன P.நடராஜன் தன்னிடம் போனில் தொடர்பு கொண்டு இரண்டு பேர் ஊசி போட காத்திருப்பதாக சொன்னதாகவும், தான் உடனே ஊசி போடும் பகுதிக்கு வரும்போது ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அங்கு இருந்தார்கள் என்றும், அவர்களுடைய இருவருடைய கையிலும் மருத்துவர் வினிலா எழுதிக் கொடுத்த மருந்துச்சீட்டு இருந்தது என்றும், Injection – diclofinac – 1, amp.i.m. injection – T.T. 1/2 c.c.i.m. என்று சீட்டில் எழுதியிருந்தது என்றும், இரண்டு பேருக்குமே ஒரே மாதிரியான இன்ஜெக்சன் தான் எழுதியிருந்தது என்றும், அந்த ஊசியை இடுப்புபகுதியில் போட வேண்டும் என்பதால் அதற்கு இடுப்புப்பகுதி துணியை ஒதுக்கி தயாராக வைத்திருங்கள் என்று சொன்னதாகவும், இடுப்புப்பகுதியில் துணியை இறக்குவதற்கு இரண்டு பேருமே கையை கஷ்டப்பட்டு தூக்குவதை பார்த்ததாகவும், இடுப்புப்பகுதியில் ஊசி போடும் போது அந்த இடத்தில் இரத்தக்கட்டு (haematoma) இருந்தது என்றும், இருவருக்கும் தலா 2 ஊசி இடுப்பின் இரண்டு பகுதியிலும் போடும்போது இரண்டு பக்கமும் இரத்தக்கட்டு இருந்ததை பார்த்ததாகவும், அதோடு அவர்களின் லுங்கியில் இரத்தக்கறை இருந்ததையும் கவனித்ததாகவும், ஊசி போட்டுவிட்டு செல்லும்போது பென்னிக்ஸ் நொண்டி நொண்டி நடந்ததையும், காலில் வீக்கம் இருந்ததையும் பார்த்ததாகவும், இருவரின் கையிலும் மணிக்கட்டுப்பகுதியிலும் வீக்கம் இருந்ததையும் பார்த்ததாகவும், மருத்துவர் வினிலாவின் கையெழுத்து தனக்குத் தெரியும் என்றும் தன்னிடம்

காட்டப்படும் அ.சா.ஆ.18 கையெழுத்து மருத்துவர் வினிலாவின் கையெழுத்து தான் என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.16 புறநோயாளிச் சீட்டின் பின்புறம் எழுதப்பட்டுள்ள இரத்த அழுத்த விபரத்தின் கீழே உள்ளது மருத்துவர் வினிலாவின் கையெழுத்து தான் என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.17 கையெழுத்து மருத்துவர் வினிலாவின் கையெழுத்துதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.16 அ.சா.16 திரு.இன்ஃபெண்ட் அந்தோணி பிஜு, தான் 2013–ம் வருடம் முதல் கதவு எண்.1/4, இட்டமொழி ரோடு, சாத்தான்குளம் என்ற விலாசத்தில் B.R.N. Infotech என்ற பெயரில் C.C.T.V.Camera, Computer உதிரிபாகங்கள் sales and service செய்து வருவதாகவும், தான் கூட்டுறவு வங்கி மற்றும் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் சி.சி.டி.வி கேமரா பொருத்தியுள்ளதாகவும், அவர்கள் அழைத்தால் service செய்து தருவது வழக்கம் என்றும், சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் ஏற்கனவே 8 சி.சி.டி.வி கேமராக்கள் பொருத்தியிருந்தார்கள் என்றும், அதை upgrade செய்ய வேண்டுமென்று கேட்டதால் 2018–ம் ஆண்டு கூடுதலாக 8 சி.சி.டி.வி கேமராக்களும் மற்றும் 16 சேனல் டி.வி.ஆர், 4000 G.B Harddisc பொருத்தியதாகவும், சி.சி.டி.வி கேமராவின் recording capacityயை பொறுத்து ஒரு கேமராவில் 24G.B ஒரு நாளைக்கு பதிவாகும் என்றும், முதலில் பொருத்தப்பட்ட 8 கேமராவில் அதனுடைய அளவு 10 G.B ஆக இருந்தது என்றும், டி.வி.ஆர் 4000 அளவு கொண்டதில் 16 கேமராவின் பதிவுகள் சுமார் இரண்டு வாரங்கள் வரை இருக்கும் என்றும், இரண்டு வாரங்கள் கழிந்த பின்னர் முதலில் பதிவானது அழிந்து over ride ஆகிக்கொண்டு இருக்கும் என்றும், 30.06.2020 ஆம் தேதி கோவில்பட்டி நீதித்துறை நடுவர் தன்னை சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து 20.06.2020–ம் தேதி ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் சம்பந்தமாக கேமராவில் பதிவான பதிவுகளை காண்பிக்குமாறு சொன்னதாகவும், அவர்கள் இருவரும் மருத்துவமனைக்கு வந்தது முதல் வெளியே போனது வரை தான் play செய்து காண்பித்தாகவும், நீதித்துறை நடுவர் தன்னிடம் ஒரு pen drive கொடுத்து அதை பதிவு செய்து கொடுக்கச் சொன்னார் என்றும், அதை தான் பதிவு செய்து கொடுத்ததாகவும், சி.சி.டிவி.கேமராவில் பதிவான விசயங்களை மாற்ற முடியாது

என்றும், கேமராவில் என்ன பதிவாகியுள்ளதோ அது அப்படியே இருக்கும் என்றும், வேறு எதுவும் insert செய்ய முடியாது என்றும், நீதித்துறை நடுவர் முன்பு அப்பொழுதே தான் பதிவுகளை pen drive–ல் பதிவு செய்து கொடுத்துவிட்டதாகவும், அந்த pen drive தன்னிடம் காட்டப்படுவது என்றும், அந்த pen drive அ.சா.பொ.1 என்றும், சாட்சியம் அளித்துள்ளார். மேலும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் வழக்கு சம்பந்தமாக கோவில்பட்டி, நீதித்துறை நடுவர் எண்.1 சாத்தான்குளம் காவல்நிலையத்தை பார்வையிட்டபோது தன்னை உதவிக்கு அழைத்திருந்ததாகவும் தான் போயிருந்ததாகவும் அப்போது தன்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.பொ.26 Hard Disk கைப்பற்ற தான் உதவி செய்ததாகவும், அப்போது அதை இயக்கி பார்க்க Password 666666 உபயோகிக்கப்பட்டது என்றும் 19.06.2020–ம் தேதிய பதிவு எதுவும் அப்போது அ.சா.பொ.26 Hard Disk–ல் காணப்படவில்லை என்றும், அதில் 24 மணி நேரம் மட்டும் ரெகார்டு ஆகும் படி settings இருந்தது என்றும் அதனால் அதில் உள்ள விபரத்தை retrieve செய்ய இயலவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.17 கோவில்பட்டி கிளைச்சிறையில் கைதி அறை எண் 3–ல் பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் உடன் இருந்துள்ள திரு.கருப்பசாமி அ.சா.17 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் எட்டையாபுரம் காவல்நிலைய வழக்கு சம்பந்தமாக கோவில்பட்டி கிளைச்சிறையில் 02.12.2019–ம் தேதி முதல் 2020–ம் வருடம் ஆகஸ்டு மாதம் வரை விசாரணைக் கைதியாக இருந்ததாகவும், ஜூன் மாதம் 2020–ம் ஆண்டு ஒருநாள் பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜை ஒரு சனிக்கிழமை மாலையில் கோவில்பட்டி கிளைச்சிறைக்கு கொண்டு வந்தார்கள் என்றும், திங்கள் கிழமை காலையில் O.P. பார்ப்பதற்கு டாக்டர் வந்தார் என்றும், எல்லோரும் வரிசையில் போய் நின்றதாகவும், பென்னிக்ஸ் பின்னால் தான் நின்றதாகவும், அப்போது அவர் பின்புறம் கைலியில் இரத்தமாக வடிந்திருந்தது என்றும், தான் அவரிடம் உங்களுக்கு என்ன கேஸ் என்று கேட்டதாகவும், சாத்தான்குளத்தில் தான் கடை வைத்திருப்பதாகவும், கடையை லேட்டாக மூடியதால் அப்பாவை போலீஸ்காரர்கள் கூப்பிட்டு சென்றதாகவும், பின்னால் தான் போய் எதற்காக அப்பாவை அழைத்துச் சென்றீர்கள் என்று கேட்கப் போனதாகவும்,

அப்போது போலீஸ்காரர்களுக்கும், தனக்கும் வாய்தகராறு ஆகிவிட்டதாகவும், தன்னையும் சட்டையை பிடித்து போலீஸ்காரர்கள் உள்ளே இழுத்து சென்றுவிட்டதாகவும், உள்ளே அழைத்துச் சென்று லாக் அப்பில் கையை பிடித்து வைத்துக் கொண்டு பின்னால் அடித்ததாகவும், பின்னால் அடித்ததால் தனக்கு இரத்தம் வருவதாகவும் சொன்னார் என்றும், அப்போது அவர் துண்டு கட்டியிருந்தார் என்றும், துண்டை கழற்றி காண்பித்ததாகவும், அப்போது அவருடைய பிட்டியில் அறுத்து எடுத்து மாதிரி இருந்தது என்றும், இப்படி அடித்துள்ளார்களே உண்மையில் இந்த கேஸ் தானா என்று கேட்டதாகவும், உண்மையில் இந்த கேஸ் தான், பக்கத்தில் படுத்திருப்பவர் என் அப்பா என்று அவரைக் காட்டினார் என்றும், பின்னாடி இப்படி அடித்துள்ளார்களே எவ்வளவு அடி அடித்தார்கள் என்று கேட்டதாகவும், பின்னால் இருநூறு அடிக்கு மேல் அடித்திருப்பார்கள் என்று சொன்னதாகவும், விலா எலும்பில் மூச்சு விட முடியவில்லை, அங்கு வலிக்கிறது என்று சொன்னார் என்றும், அந்த இடத்தை தான் காட்டச் சொன்னதாகவும், அங்கு இரத்தம் கட்டியது போன்று கருப்பாக இருந்தது என்றும், இங்கே எப்படி காயமானது என்று கேட்டதாகவும், அதற்கு அவர் கையை இரண்டையும் கட்டி, மேலே தூக்கி வைத்து மண் வைத்து, பைப்பால் அடித்ததாக சொன்னார் என்றும், அதனால் மூச்சுவிட முடியவில்லை என்று சொன்னார் என்றும், எத்தனை பேர் இப்படி அடித்தார்கள் என்று கேட்டதாகவும், எல்லோரும் சேர்ந்து அடித்தார்கள் என்று சொன்னார் என்றும், கொஞ்சநேரத்தில் இருட்டிய பின்பு பென்னிக்ஸ் ஊ ஊ என்று சத்தம் கொடுக்க ஆரம்பித்தார் என்றும், என்ன என்று கேட்டதற்கு அவர் தன்னால் மூச்சுவிட முடியவில்லை என்று சைகை காட்டினார் என்றும், தான் உடனே கேட் அருகே சென்று ஜெயில் ஏட்டையாவை அழைத்ததாகவும், பணியில் இருந்த அழகர்சாமி வந்து என்னடா ஆச்சு என்று கேட்டு சூப்பிரண்டு சாரையும் அழைத்து வந்துவிட்டார் என்றும், கைலியை மேல் இருந்து கட்டிவிட்டு தானும், செந்திலும் தோளில் அவருடைய கையைப் போட்டு கைத்தாங்கலாக வெளியே கொண்டு வந்து ஆட்டோவில் ஏற்றிவிட்டதாகவும் அழகர்சாமி பென்னிக்சை ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டதாகவும் அதை அவர் அப்பாவிடம் சொல்வதற்கு தங்கள் ரூமிற்கு வந்ததாகவும், அவரது அப்பாவை எழுப்பியபோது, அவர் உடல் சூடாக காய்ச்சல்

அடித்துக் கொண்டிருந்தது என்றும், ஆஸ்பத்திரி போய் ஒரு ஊசி போட்டுவருகிறீர்களா என்று கேட்டதற்கு அவர் சரி என்று சொன்னார் என்றும், உடனே அழகர்சாமி ஆட்டோ பிடித்து வரபோனார் என்றும், அவர் ஆட்டோ பிடித்து வருவதற்குள் அவருடைய கைலி இரத்தமாக இருந்ததால் அதை மாற்றிவிட்டதாகவும், சட்டையை மாட்டிவிட்டதாகவும், ஆட்டோ வந்த பின்னர் கணேசனும், செந்திலும் அவரை கைத்தாங்கலாக அழைத்துச் சென்றார்கள் என்றும், ஆட்டோவில் ஏற்றிவிட்டு மறுபடியும் ரூமிற்கு வந்துவிட்டதாகவும், மறுநாள் டீ போடுவதற்காக கிச்சன் சாவி வாங்குவதற்காக சூப்பிரண்டு சாரை பார்க்கப் போனபோது சூப்பிரண்டு தன்னிடம் பென்னிக்ஸ் இறந்துவிட்டதாக சொன்னார் என்றும், பின்னர் சூப்பிரண்டு சார் மறுபடியும் தன்னை அழைத்து அனைவரையும், வரச்சொல்லி அப்பா, மகன் இறந்துவிட்டதாகவும், என்ன நடந்தது என்று பென்னிக்ஸ் சொன்னாரோ அதை சொல்லுங்கள் என்று சொன்னார் என்றும், இரண்டு நாட்கள் கழித்து நீதிபதி வந்து தனித்தனியாக விசாரித்தார் என்றும், நடந்ததை தான் அப்படியே அவரிடம் சொன்னதாகவும், சி.பி.ஐ போலீசார் விசாரிப்பதற்கு முன்பு சி.பி.சி.ஐ.டி போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், ஜெயராஜ், பென்னிக்ஸ் ரூமில் இருக்கும்போது அவர்களுடைய கைலியில் இரத்தம் இருந்தது என்றும், தாங்கள் மூன்றுமுறை மாற்றிவிட்டதாகவும், அவர்கள் ஒரு இடத்தில் உட்கார்ந்து, அதன்பின்னர் மாற்றி உட்காரும் போது அந்த இடம் முழுவதும் இரத்தமாக இருந்தது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.18 கோவில்பட்டி கிளைச்சிறையில் 22.06.2020–ம் தேதி காலை ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு சிகிச்சை அளித்துள்ள கோவில்பட்டி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.வெங்கடேஷ் அ.சா.18 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில், 22.06.2020–ம் தேதி தான் பணிமருத்துவராக மருத்துவமனையில் இருந்தபோது கோவில்பட்டி கிளைச்சிறையின் கண்காணிப்பாளர் திரு.சங்கர் என்பவர் சிறையிலுள்ள ஒரு கைதிக்கு பின்புட்டத்தில் வலி இருப்பதாக கூறியதால் சுமார் 11.00 மணியளவில் கிளைச்சிறைக்கு சென்றதாகவும், ஐந்து நோயாளிகள் வந்தனர் என்றும், முதல் மூன்று நோயாளிகள் தையல் பிரிப்பதற்காக வந்தனர் என்றும், நான்காவதாக திரு.பென்னிக்ஸ் என்பவர்

அவருக்கு B.P இருப்பதாக கூறினார் என்றும், அவருடைய ஆடையில் பின்பகுதியில் இரத்தக்கசிவு இருப்பதை பார்த்து இது என்ன காயம் என்று கேட்டதாகவும், அவர் போலீசார் தன்னை தாக்கியதாக கூறினார் என்றும், அவரை பரிசோதித்ததாகவும், அவருக்கு பின்புட்டத்தில் இருபக்கத்திலும் வரிசையாக வரிவரியாக காயங்கள் இருந்தது என்றும், அந்தக்காயத்தில் இருந்து இரத்தமும், நீரும் கசிந்து கொண்டிருந்தது என்றும், தான் அவரை மருத்துவமனைக்கு வந்து மருந்து கட்டுமாறு கூறியதாகவும், அவர் தனக்கு பெயில் கிடைத்துவிடும் என்றும், அதற்காக மருந்து கட்டுமாறு சொன்னார் என்றும், தான் அவரது புண்ணுக்கு மருந்து கட்டி மாத்திரைகள் கொடுத்ததாகவும், மறுநாள் காலை கண்டிப்பாக அரசு மருத்துவமனைக்கு வரவேண்டும் என்றும், எக்ஸ்ரே எடுக்க வேண்டுமென்றும் கூறி பதிவேட்டில் பதிவு செய்ததாகவும், அடுத்ததாக திரு.ஜெயராஜ் என்பவர் தனக்கு பிரஷ்ஷர், சுகர் இருப்பதாக கூறினார் என்றும், அதற்கான மாத்திரைகளை கையில் வைத்திருந்தார் என்றும், அவருக்கு பின்புட்டத்தில் வரிவரியாக காயங்கள் இருந்தது என்றும், காயங்கள் எவ்வாறு ஏற்பட்டது என்று கேட்டற்கு அவர் போலீசார் தன்னை அடித்ததாக கூறினார் என்றும், காயம் காய்ந்திருந்தது என்றும், அவருக்கு மருந்து போட்டு மாத்திரை கொடுத்தாகவும், அவரை உள்நோயாளியாக சேர்ப்பதற்கு மருத்துவமனைக்கு வரச்சொன்னதாகவும், அவர் பெயில் இன்று கிடைத்துவிடும் என்றும், அதனால் மருந்து கட்டுமாறு சொன்னார் என்றும், மேற்சொன்ன விசயங்களை தான் பதிவேட்டில் பதிவு செய்ததாகவும், பென்னிக்ஸ் இரத்த அழுத்த நோய்க்காக Amlodipine மற்றும் Enlapril மாத்திரைகள் கையில் வைத்திருந்தார் என்றும், தான் இருவருக்கும் cipro 500 m.g., Diclo 50 m.g, Omez 20 m.g மாத்திரைகளை காலையிலும், சாயங்காலமும் சாப்பிடுமாறு கூறியதாகவும், மேற்படி மாத்திரைகள் கிளைச்சிறையிலேயே இருக்கும் என்றும், Dressing செய்வதற்கு தான் அரசு மருத்துவமனைக்கு தகவல் சொல்லி வரச்சொல்லி காயத்திற்கு மருந்து போட்டு, மேலே ஜி–பேட் வைத்து பிளாஸ்டர் போட்டதாகவும், இருவரின் இரண்டு புட்டங்கள் முழுவதும் வரிவரியாக அடித்த காயங்களாக இருந்தது என்றும், மேற்படி காயங்கள் சிகப்பு ஊதா கலரில் இருந்தது என்றும், மேற்படி காயங்கள் வரிவரியாக அடித்ததனால் ஏற்பட்டவை என்றும் பொதுவாக அடித்தவுடன் இரத்தக்கட்டு ஏற்படும் என்றும்,

அதன்பின்னர் காயத்தின் நிறம் மாறி கன்றிய காயம் ஆகும் என்றும், பென்னிக்சிற்கு இடதுகாலின் மூட்டில் காயம் இருந்தது என்றும் சிகிச்சை அளிக்க அரசு மருத்துவமனைக்கு வரச் சொன்னதாகவும், மேற்படி காயங்களால் Heart Attack, Pulmonary Embolism ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றும், அதனால் இறப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றும், தன்னிடம் காட்டப்படுவது கிளைச்சிறையில் பராமரிக்கப்படும் மருத்துவரின் பதிவேடு என்றும், மேற்படி பதிவேட்டில் 22.06.2020–ம் தேதியிட்டு தான் மேலே சொன்ன இருவருக்கும் தான் சோதனை செய்தது சம்பந்தமாகவும் மற்றும் காயங்கள் குறித்தும் பதிவு செய்துள்ளதாகவும், அது ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அதில் தான் கையெழுத்து செய்துள்ளதாகவும், அ.சா.ஆ.3–ல் தான் பென்னிக்சிற்கு பின்புட்டம் – Multiple marks present என்றும், Right Knee–ல் வீக்கம் இருந்தது என்றும், Dressing செய்யப்பட்டது என்றும், அவர் Amlodipine மற்றும் Enlapril மாத்திரைகள் எடுத்துக் கொண்டிருப்பதாகவும், மறுநாள் வலதுமுட்டியில் எக்ஸ்ரே எடுப்பதற்கும், சக்கரை அளவு பார்ப்பதற்கும் கோவில்பட்டிக்கு வருமாறு எழுதியுள்ளதாகவும், அ.சா.ஆ.3–ல் ஜெயராஜ்–க்கு இரத்த அழுத்தத்திற்கும், சர்க்கரை நோய்க்கும் மாத்திரை சாப்பிட்டுக் கொண்டிருப்பதாகவும், பின்புட்டத்தில் Multiple marks present என்றும், Dressing செய்ததாகவும், மறுநாள் அரசு மருத்துவமனைக்கு வருமாறும் hints எழுதியுள்ளதாகவும், கோவில்பட்டி கிளைச்சிறைக்கு 22.06.2020–ம் தேதி 11.00 மணிக்கு தான் உள்ளே சென்றுவிட்டு 11.30 மணிக்கு வெளியே வந்ததாகவும் தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.4 In–Out பதிவேட்டில் தான் கைப்பட எழுதியுள்ளதாகவும், தான் 22.06.2020–ம் தேதி கிளைச்சிறையில் இருவருக்கும் இரத்த அழுத்தம் பரிசோதனை செய்யும்போது அது Normal ஆக இருந்தது என்றும், தான் தற்போது சொன்ன விபரத்தை தான் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் விசாரணையின் போது வாக்குமூலமாக சொன்னதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.19 கோவிட் விதிமுறை பதிவிறக்கம் தொடர்பாக திரு.பொன்ராஜ் அரசு தரப்பில் அ.சா.19 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் தற்போது ஓட்டப்பிடாரம் காவல்நிலையத்தில் இரண்டாம்நிலை காவலராக பணிபுரிவதாகவும், ஆகஸ்ட் 2018

முதல் ஜூன் 2020 வரை தான் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் பணிபுரிந்ததாகவும், தான் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் பணியில் இருந்த போது மாவட்ட ஆட்சியர் மற்றும் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் Mail மூலம் வரும் கடிதத்தொடர்புகளை பெற்று, சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் பார்வைக்கு வைப்பது வழக்கம் என்றும், 2020−ம் ஆண்டு மார்ச் 24−ல் கோவிட் 19 ஆரம்பமானது என்றும், அதுகுறித்து mail வந்தது என்றும், அப்போது ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. குவிமுச பிரிவு 144−ன் கீழும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், ஒவ்வொரு மாதமும் 15 நாட்களுக்கு ஒருமுறை ஊரடங்கு உத்தரவு நீட்டிக்கப்பட்டு வந்தது என்றும், 31.05.2020−ம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து mail வந்தது என்றும், அதை தான் பெற்றதாகவும், அதன்படி கடைகள் இரவு 8 மணி வரைக்கும் தான் திறந்திருக்க வேண்டுமென்று கூறப்பட்டிருந்தது என்றும், அந்த mail மூலம் ஊரடங்கு உத்தரவு 30.06.2020 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டது என்றும், தன்னிடம் காட்டப்படும் 31.05.2020−ம் தேதியிட்ட தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் R.O.C.No.C2/8583/2020 குவிமுச பிரிவு 144−ன் கீழான உத்தரவின் mail என்றும் தான் அதை printout எடுத்து ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தாகவும், தன்னிடம் காண்பிக்கப்படுவது தான் printout எடுத்த மேற்படி நடவடிக்கையின் அசல் உத்தரவு அ.சா.ஆ.21 என்றும், அதன் நகலை தான் printout எடுத்துக் கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.20 சாத்தான்குளம் காவல்நிலையத்தில் பணியாற்றியுள்ள திரு.ரவிச்சந்திரன் அ.சா.20 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் 01.03.2016 முதல் 30.06.2020 வரை தான் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் பணிபுரிந்ததாகவும், சாத்தான்குளம் காவல்நிலையத்தில் தன்னுடைய பணி ஆய்வாளர் மற்றும் சார்பு ஆய்வாளருக்கு C.D.file எழுதுவது மற்றும் கணினியில் தட்டச்சு செய்வது என்றும், எப்போதாவது தன்னை வெளிப்பணிக்கு அமர்த்துவது உண்டு என்றும், 19.06.2020−ம் தேதி சாத்தான்குளம் காவல்நிலையத்தில் தானும் ஆய்வாளர் ஸ்ரீதர், உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன், உதவி ஆய்வாளர் ரகுகணேஷ், உதவி ஆய்வாளர் பால்துரை, தலைமைக்காவலர் முருகன், தலைமைக்காவலர் சாமதுரை, முதல்நிலைக்காவலர் வெயிலுமுத்து,

முதல்நிலைக்காவலர் செல்லத்துரை, முதல்நிலைக்காவலர் தாமஸ் பிரான்சிஸ் மற்றும் தலைமைக்காவலர் ப்யூலாசெல்வகுமாரி, தலைமைக்காவலர் ரேவதி, தலைமைக்காவலர் ஜெயசேகர், முதல்நிலைகாவலர் அழகுமாரிசெல்வம், காவலர் முத்துராஜா ஆகியோரும் பணியில் இருந்ததாகவும் 19.06.2020–ம் தேதி காலையில் உதவி ஆய்வாளர் பால்துரை தட்டார்மடம் காவல்நிலையத்தில் இருந்து பணிக்கு வந்தார் என்றும், தாமஸ் பிரான்சிஸ் தட்டார்மடம் காவல்நிலையத்தில் இருந்து மாற்றுப்பணியாக சாத்தான்குளம் காவல்நிலையத்தில் CCTNS விபரங்கள் பராமரிக்கும் பிரிவில் பணியாற்றினார் என்றும், 19.06.2020–ம் தேதி தான் காவல்நிலையத்தில் மாடியிலுள்ள அறையில் CCTNS பணி பார்த்துக் கொண்டிருந்ததாகவும், 19.06.2020–ம் தேதி காலை 08.30 மணிக்கு தான் காவல்நிலையத்திற்கு பணிக்கு வந்து பின்னர் மதிய உணவிற்காக 02.00 மணிக்கு சென்றுவிட்டு, மீண்டும் மாலை 05.00 மணிக்கு காவல்நிலையம் திரும்பி வந்ததாகவும், 05.00 மணிக்கு தான் காவல்நிலையம் திரும்பி வரும்போது பாரா பணியில் தலைமைக்காவலர் ரேவதி இருந்தார் என்றும், சிறிதுநேரத்தில் நிலைய எழுத்தர் ப்யூலா செல்வகுமாரி காவல்நிலையம் வந்தார் என்றும், தான் தன்னுடைய பணியைப் பார்ப்பதற்காக மாடியிலுள்ள CCTNS அறைக்கு சென்றுவிட்டதாகவும், கொஞ்ச நேரத்தில் CCTNS அலுவல் பணியை செய்யக்கூடிய வெயிலுமுத்துவும், தாமஸ் பிரான்சிஸ்சும் வந்தார்கள் என்றும், தாங்கள் மூவரும் முதல்மாடி அறையில் இருந்ததாகவும், சுமார் 08.30 மணியளவில் தரைதளத்தில் அடிக்கும் சத்தமும், அய்யோ அம்மா என்று அலறும் சத்தமும் கேட்டது என்றும், உடனே வெயிலுமுத்துவும், தாமஸ் பிரான்சிசும் கீழே பார்க்கச் சென்றார்கள் என்றும், மீண்டும் அடிக்கும் சத்தம் கேட்டதால் தான் 20 நிமிடம் கழித்து கீழே சென்றதாகவும், அப்போது உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் அவரது இருக்கையில் இருந்தார் என்றும், அவர் அருகில் சுவர் ஓரம் பென்னிக்சும், லாக்அப் அறை அருகில் ஜெயராஜூம் நின்று கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணனிடம் என்ன சார் என்று கேட்டதாகவும், அதற்கு அவர் நேற்று 18.06.2020–ம் தேதி இரவில் ஜெயராஜ், பென்னிக்ஸ ஆகியோர்கள் போலீசை தரக்குறைவாக பேசியுள்ளார்கள், இதை லீவில் இருந்த தலைமைக்காவலர் பாலசுப்பிரமணியன் உதவி ஆய்வாளருக்கு தகவல்

சொன்னதன்பேரில் விசாரணைக்காக ஜெயராஜை அழைத்து வந்ததாகவும், ஜெயராஜை விசாரிக்கும்போது அந்த நேரம் பென்னிக்ஸ் ஸ்டேசன் வந்தபோது உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணனை ஜெயராஜ் கடுமையாக பேசியதால் ஜெயராஜை உதவி ஆய்வாளர் அடித்ததாகவும், இதை பார்த்த பென்னிக்ஸ் உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணனை அடிக்கப்போக காவலர் முத்துராஜா அதை தடுத்தபோது முத்துராஜாவை பிடித்து தள்ளி சட்டையை கிழித்துவிட்டதாகவும், அதனால் அங்கிருந்தவர்கள் அவர்களை அடிக்க வேண்டியதாகிவிட்டது என்றும் தன்னிடம் சொன்னார் என்றும், அதன் பின்னர் காவலர் முத்துராஜாவிடம் தான் கேட்டதற்கு அவரும் அதையே தான் சொன்னார் என்றும், அதன்பின்னர் தான் தன்னுடைய வேலையைப் பார்க்க மாடிக்கு சென்றுவிட்டதாகவும், பின்னர் 09.30 மணியளவில் ஆய்வாளர் ஸ்ரீதர் தன்னை அழைத்ததாகவும், ஆய்வாளர் அறையில் ஆய்வாளர் ஸ்ரீதர், உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன், தலைமைக்காவலர் முருகன், காவலர் முத்துராஜா ஆகியோர்கள் இருந்தார்கள் என்றும், அப்போது ஆய்வாளர் பென்னிக்சும், ஜெயராஜூம் உதவி ஆய்வாளரை அடிக்கப்போய், காவலர் முத்துராஜாவின் சட்டையை கிழித்ததால், ஜெயராஜையும், பென்னிக்சையும் அடிக்க வேண்டியதாயிற்று என்றும், அடித்ததில் அவர்களுக்கு இரத்தக்காயம் ஏற்பட்டதால் இப்போது வெளியில் அனுப்ப முடியாது என்றும், அவர்களை ரிமாண்ட் செய்ய வேண்டும் என்றும், முருகனும், முத்துராஜாவும் புகார் கொடுப்பார்கள் என்றும், அந்தப்புகாரை பதிவு செய்து, ரிமாண்டிற்கு அனுப்ப வேண்டும் என்றும் சொன்னார் என்றும், தான் முருகனும், முத்துராஜாவும் சொன்ன விபரத்தை எழுதிக்கொண்டு ஆய்வாளர் சொன்னதன்பேரில் கணினியில் அழகுமாரிச்செல்வம் என்பவர் தட்டச்சு செய்து புகார் தயார் செய்ததாகவும், தானும், அழகுமாரிச்செல்வமும் புகார் தட்டச்சு செய்து கொண்டிருக்கும்போது காவல்நியைத்தில் கதவு பூட்டப்பட்டிருந்தது என்றும், அப்போது உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் ஜெயராஜையும், பென்னிக்சையும் லத்தியால் அடிக்க அங்கிருந்த முருகன், முத்துராஜா, வெயிலுமுத்து, தாமஸ்பிரான்சிஸ், செல்லத்துரை, சாமதுரை ஆகியோர்கள் பிடித்துக்கொண்டார்கள் என்றும், தட்டச்சு செய்த புகாரை ஆய்வாளரிடம் காண்பித்து, அவர் ஒரு சில corrections சொன்னார் என்றும், மேற்படி புகாரில் முருகனும், முத்துராஜாவும் ரவுண்ட்ஸ் போகும் போது,

காமராஜர் சிலை அருகில் பென்னிக்ஸ் கடை முன்பு ஜெயராஜ், பென்னிக்ஸ் மற்றும் சிலர் கூட்டமாக இருந்தவர்களை கலைந்து போக சொன்னதற்கு மற்றவர்கள் கலைந்து போக ஜெயராஜும் பென்னிக்சும் கலைந்து செல்லாமல் அவர்களுடன் தகராறு செய்து, கீழே உருண்டு பிரண்டதாகவும் கூறப்பட்டிருந்தது என்றும், அந்த புகாரை சரி செய்து ஆய்வாளரிடம் கொடுத்ததாகவும், அந்தப் புகாரில் தலைமைக்காவலர் முருகனும், காவலர் முத்துராஜாவும் படித்துப் பார்த்து கையொப்பம் செய்தார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகாரானது அப்போது அழகுமாரிச்செல்வம் தட்டச்சு செய்து கொடுத்து முருகனும், முத்துராஜாவும் கையெழுத்து செய்து கொடுத்தது என்றும், அது அ.சா.ஆ.22 என்றும், அது முடிந்த பின்னர் புலன்விசாரணை அதிகாரி யார் என்று தான் ஆய்வாளரிடம் கேட்டதற்கு அவர் உதவி ஆய்வாளர் ரகுகணேஷ் என்று சொன்னார் என்றும், தான் மாடிக்கு சென்று வேலைகளை பார்த்துக் கொண்டிருந்ததாகவும், மற்றவர்கள் தரைத்தளத்தில் இருந்தார்கள் என்றும், அப்போது மீண்டும் அடிக்கும் சத்தம் கேட்டது என்றும், பின்னர் வெயிலுமுத்து சிறிதுநேரத்தில் மேலே வந்து முதல்தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றும், தன்னிடம் கைது அறிவிப்பை ஆய்வாளர் வாங்கி வரச்சொன்னதாக வெயிலுமுத்து சொன்னார் என்றும், தான் கீழே வந்து காவல்நிலையத்திற்கு வெளியே நின்ற வழக்கறிஞர் மணிமாறன் மற்றும் ஜெயராஜின் மைத்துனர் தேசிங்குராஜாவிடம் பெயர், முகவரியை கேட்டுவிட்டு மீண்டும் மாடிக்குச் சென்றதாகவும், அப்போது ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை தாமஸ் பிரான்சிஸ் போட்டோ எடுத்து மாடிக்கு வந்த பின்னர் வெயிலுமுத்து மற்றும் தாமஸ் பிரான்சிஸ் Arrest card, arrest intimation, remand report தயார் செய்தார்கள் என்றும், அவற்றை தயார் செய்த பின்னர் கீழே போய் கொடுத்துவிட்டார்கள் என்றும், தான் சுமார் 01.00 மணியளவில் கீழே வந்து ஆய்வாளரிடம் தன்னுடைய பணி முடிந்தது, வீட்டிற்கு செல்கிறேன் என்று சொன்னதாகவும், அதற்கு ஆய்வாளர் remand report–ல் உதவி ஆய்வாளர் ரகுகணேஷ் கையெழுத்து வாங்கவேண்டும், arrest intimation–ல் தேசிங்குராஜா கையெழுத்து வாங்க வேண்டும் என்று சொன்னார் என்றும், இந்த தகவலை தான் காவலர் முத்துராஜாவிடம் சொல்லிவிட்டு வீட்டிற்கு போய்விட்டதாகவும், தன்னிடம் காட்டப்படும் குற்ற எண்.312/2020 முதல்தகவல் அறிக்கையில் முருகனும், உதவி ஆய்வாளர்

ரகுகணேசும் கையெழுத்து செய்துள்ளார்கள். அந்த முதல்தகவல் அறிக்கையை வெயிலுமுத்து தயார் செய்தார் என்றும் தன்னிடம் காட்டப்படும் அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.23 என்றும், மறுநாள் காலையில் 09.00 மணிக்கு காவல்நிலையம் வந்ததாகவும், அப்போது காவலர் பாராவில் மகாராஜன் இருந்தார் என்றும், அவரிடம் கேட்டபோது ஜெயராஜூம், பென்னிக்சும் ரிமாண்டிற்கு கொண்டு செல்லப்பட்டதாக சொன்னார் என்றும், பின்னர் மாலையில் சாமதுரையிடம் கேட்டபோது கோவில்பட்டி சிறையில் அவர்களை அடைத்ததாக சொன்னார் என்றும், பின்னர் 22.06.2020–ம் தேதி தான் தன்னுடைய வேலையை முடித்து வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும், பின்னர் இரவு சுமார் 10.30 மணியளவில் ஆய்வாளர் தன்னுடைய செல்போனில் கோவில்பட்டி கிளைச்சிறையில் பென்னிக்ஸ் இறந்துவிட்டார் என்றும், உடனே நிலையத்திற்கு வருமாறும் சொன்னார் என்றும், தான் நிலையத்திற்கு வந்ததாகவும், குற்ற எண்.312/2020 வழக்கில் ஏற்கனவே உதவி ஆய்வாளர் ரகுகணேஷ் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜரை draft ஆக தயார் செய்து வைத்திருந்ததை உதவி ஆய்வாளர் ரகுகணேஷ் சொல்ல சொல்ல தயார் செய்து, 161–ன் கீழான வாக்குமூலம் பதிவு செய்து first diary தயார் செய்து சுமார் 05.30 மணியளவில் முடித்ததாகவும், அப்போது ஜெயராஜூம் இறந்துவிட்டதாக தகவல் வந்தது என்றும், தான் வழக்கு கோப்பை ஆய்வாளரிடம் கொடுத்துவிட்டு வீட்டிற்கு ஓய்விற்கு சென்றுவிட்டதாகவும், 30.04.2020 முதல் 01.07.2020 வரை எழுதப்பட்ட சாத்தான்குளம் காவல்நிலைய 19.06.2020–ம் தேதியிட்ட நடவடிக்கைகள் பொதுநாட்குறிப்பில் பக்கம் எண்.493 முதல் 503 வரை எழுதப்பட்டுள்ளது என்றும் குற்ற எண்.312/2020 வழக்கின் காவல் அடைப்பு அறிக்கை அ.சா.ஆ.24 என்றும் அதில் உதவி ஆய்வாளர் ரகுகணேஷ் 19.06.2020 என தேதி குறிப்பிட்டு கையெழுத்து செய்துள்ளார் என்றும் ஜெயராஜின் கைது படிவம் அ.சா.ஆ25 என்றும் அதில் உதவி ஆய்வாளர் ரகுகணேஷ் கையெழுத்து செய்துள்ளார் என்றும் பென்னிக்சின் கைது படிவம் அ.சா.ஆ.26 என்றும் அதில் உதவி ஆய்வாளர் ரகுகணேஷ் 19.06.2020 என தேதி குறிப்பிட்டு கையெழுத்து செய்துள்ளார் என்றும் ஜெயராஜின் கைது குறிப்பாணை அ.சா.ஆ.27 என்றும் பென்னிக்சின் கைது குறிப்பாணை அ.சா.ஆ.28 என்றும் அதில் உதவி ஆய்வாளர் ரகுகணேஷ் 19.06.2020

என தேதி குறிப்பிட்டு கையெழுத்து செய்துள்ளார் என்றும் குவிமுச பிரிவு 41(1) (b) (2)–ன் கீழான ஜெயராஜின் படிவம் என்றும் அது அ.சா.ஆ.29 என்றும் குவிமுச பிரிவு 41(1)(b)(2)–ன் கீழான பென்னிக்சின் படிவம் அ.சா.ஆ.30 என்றும் அவைகளில் ரகுகணேஷ் 19.06.2020ஆம் தேதி குறிப்பிட்டு கையெழுத்து செய்துள்ளார் என்றும் குற்ற எண்.312/2020 வழக்கில் பதிவு செய்யப்பட்ட முருகன், முத்துராஜா, மார்ட்டின், முருகன், ரவிக்குமார், முருகன் ஆகியோர்களின் குவிமுச 161(3)–ன் கீழ் பதிவு செய்யப்பட்டதாக உள்ள வாக்குமூலங்களை தான் கணினியில் அவர் சொல்லி தட்டச்சு செய்ததாகவும், மேற்படி ஆறு வாக்குமூலங்கள் அ.சா.ஆ.31 வரிசை (எண்ணம் 6) என்றும், மேற்படி குற்ற எண்ணில் தயார் செய்யப்பட்ட பார்வை மகஜர் அ.சா.ஆ.32 என்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.33 என்றும் மாதிரி வரைபடத்தில் உதவி ஆய்வாளர் ரகுகணேஷ் கையெழுத்து உள்ளது என்றும் பார்வை மகஜரில் அவருடைய கையெழுத்து இல்லை என்றும் மாதிரி வரைபடத்தை உதவி ஆய்வாளர் ரகுகணேஷ் சொல்லி தான் தயார் செய்ததாகவும், 19.06.2020–ம் தேதி காவல்நிலைய நடவடிக்கைகள் 19.06.2020–ம் தேதி காலை 07.00 மணிக்கு ஆரம்பித்து, மறுநாள் 20.06.2020–ம் தேதி காலை 07.00 மணிக்கு முடிந்ததை பொதுநாட்குறிப்பில் குறிப்பிட்டு உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் கையெழுத்து செய்துள்ளார் என்றும் 19.06.2020–ம் தேதியிட்ட பொதுநாட்குறிப்பில் பதிவு செய்யப்பட்ட நடவடிக்கைகள் அ.சா.ஆ.34 என்றும் அ.சா.ஆ.34–ல் பக்கம் எண்.497–ன் பின்பக்கம் 21.00 மணிக்கு உதவி ஆய்வாளர் ரகுகணேஷ் மாலை ரோந்து அலுவல் முடித்து நிலையம் வந்ததாக குறிப்பிட்டு ரகுகணேஷ் கையெழுத்து செய்துள்ளார் என்றும் இந்த வழக்கு சம்பந்தமாக சி.பி.ஐ போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.21 பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் இறப்பதற்கு சற்று முன் பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜிற்கு இறுதியாக சிகிச்சை அளித்துள்ள மருத்துவர் திரு.பாலசுப்பிரமணியன் அ.சா.21 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் தற்போது கோவில்பட்டி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 22.06.2020–ம் தேதி அதே மருத்துவமனையில் தேதி காலை

07.30 மணி முதல் மறுநாள் 23.06.2020–ம் தேதி காலை 07.30 மணி வரை பணியாற்றியதாகவும், 22.06.2020 அன்று இரவு 08.00 மணிக்கு பென்னிக்ஸ் என்பவரை கோவில்பட்டி கிளைச்சிறையில் இருந்து சிறைக்காவலர்கள் மாரிமுத்து மற்றும் வேல்முருகன் என்பவர்கள் சிகிச்சைக்காக அழைத்து வந்தார்கள் என்றும் பென்னிக்ஸ் தன்னிடம் படபடப்பாக இருப்பதாகவும், மூச்சுவிட சிரமப்படுவதாகவும், அதிக வியர்வை வருவதாகவும் சொன்னார் என்றும் அவரை தான் பரிசோதித்த போது அவர் சுயநினைவோடு இருந்தார் என்றும் மூச்சுவிடுவதில் கொஞ்சம் சிரமம் இருந்தது என்றும் நாடித்துடிப்பு 120 p.m. என்ற அளவில் அதிகமாக இருந்தது என்றும் இரத்த அழுத்தம் 130/100 என்ற அளவில் இருந்தது என்றும் இரத்தத்தில் ஆக்ஸிஜன் அளவு Sp.O.2 ஆனது 85 என்ற அளவில் குறைவாக இருந்தது என்றும் அவருக்கு பின்பக்க இரண்டு புட்டங்களிலும் பெரியகாயம் வலதுபக்கம் 25 X 20 செ.மீ என்ற அளவிலும், இடதுபக்கம் 20 X 20 செ.மீ என்ற அளவிலும் இரத்தம் மற்றும் நீர் கசிந்த நிலையிலும் இருந்தது என்றும் எவ்வாறு அந்த காயம் ஏற்பட்டது என்று கேட்டபோது சாத்தான்குளம் போலீசார் அடித்ததாக கூறியதாகவும், அப்போது E.C.G. எடுக்கப்பட்டது என்றும், அதில் அவருக்கு இதயத்துடிப்பு கொஞ்சம் அதிகமாக காணப்பட்டது என்றும், அவருக்குத் தேவையான முதலுதவி சிகிச்சை அளித்ததாகவும் Nasal Oxygen, Inj. Dexamethasone, Inj. Deriphylline, Inj. Hydrocortisone கொடுக்கப்பட்டது என்றும் இவை அனைத்தும் கொடுத்தும் அவருடைய ஆக்ஸிஜன் அளவில் முன்னேற்றம் இல்லாததால் அவரை மேல் சிகிச்சைக்காக அனுப்புவதற்காக முடிவு செய்ததாகவும் சிறைக் காவலர்களிடம் தெரிவித்து Referral Slip தயார் செய்து 108 ஆம்புலன்சுக்கு தகவல் சொன்னதாகவும் 108 ஆம்புலன்ஸ் வருவதற்கு முன்னால் அவருடைய உடல்நிலை சற்று அதிகமாக மோசமானது என்றும், அதற்கு தேவையான அவசரசிகிச்சை அளித்ததாகவும் அந்த சிகிச்சை பலனளிக்காமல் இரவு 09.00 மணிக்கு அவர் இறந்துவிட்டார் என்றும் E.C.G எடுத்து அதை உறுதி செய்ததாகவும், அதை சிறைக்காவலர்களிடம் தான் தெரிவித்து பின்னர் விபத்து பதிவேட்டில் இந்த விபரத்தை பதிவு செய்து, இறந்தவரின் உடலை கோவில்பட்டி அரசு மருத்துவமனை பிணவறையில் வைக்க ஏற்பாடு செய்ததாகவும் இறந்தவர் சிறைக்கைதி என்பதால் Expert Opinion–க்காக இறந்தவரின் உடலை பிரேத

பரிசோதனைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் அதே தினம், 22.06.2020 அன்று இரவு 10.45 மணியளவில் ஜெயராஜ் 55 வயது என்பவரை கோவில்பட்டி கிளைச்சிறையில் இருந்து சிறைக்காவலர்கள் செந்தூர்ராஜா மற்றும் வேல்முருகன் ஆகியோர்கள் சிகிச்சைக்காக அழைத்து வந்தார்கள் என்றும் அவர் தனக்கு காய்ச்சல் இருப்பதாகவும், இரண்டு புட்டங்களிலும் வலி இருப்பதாகவும் சொன்னார் என்றும், மேலும் அவர் தனக்கு சுகர், பிரஷ்ஷர் இருப்பதாகவும் சொன்னார் என்றும் அவரை பரிசோதித்துப் பார்த்ததில் அவர் சுயநினைவுடன் இருந்தார் என்றும் நாடித்துடிப்பு 82 p.m என்ற அளவில் Normal ஆக இருந்தது என்றும் இரத்தக்கொதிப்பு 170/100 என்ற அளவில் அதிகமாக இருந்தது என்றும் சுகர் 437 என்ற அளவில் அதிகமாக இருந்தது என்றும் இரத்தத்தில் Sp.O.2 – 99 என்ற அளவில் normal ஆக இருந்தது என்றும் அவருக்கு இரண்டு புட்டங்களிலும் வலதுபக்கம் 25 X 20 செ.மீ அளவிலும், இடதுபக்கம் 20 X 20 செ.மீ என்ற அளவிலும் காயங்கள் இருந்தது என்றும் இரத்தமும், நீரும் கசிந்த நிலையில் இருந்தது என்றும் எவ்வாறு இந்த காயம் ஏற்பட்டதென்று விசாரித்தபோது சாத்தான்குளம் போலீசார் அடித்ததாக சொன்னார் என்றும் அவருக்கு சுகர், பிரஷ்ஷர் அதிகமாக இருந்ததால் அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்ததாகவும் அவருக்கு E.C.G எடுக்கப்பட்டது என்றும் அது normal ஆக இருந்தது என்றும் 11.00 மணிக்கு அவரை Accidental Emergency Ward–க்கு சிகிச்சைக்காக மாற்றியதாகவும் அவருக்குத் தேவையான முதலுதவி சிகிச்சைகள் கொடுத்ததாகவும் I.V.F, Inj. Human insulin actrapid – 10 units sc, Human insulin mono trad –10 units sc, inj. cefotaxime – 1 gm. inj. Amikacin – 500 mg, inj. Metronidazole – 500 mg, inj. Dexamethasone, inj. Ranitidine, Tap – Paracetamol – 500 mg, tap – Amlodipine – 5 mg, கொடுத்ததாகவும் மற்றும் காயத்திற்கு மருந்து போடப்பட்டது என்றும் அவருடைய சுகர் மற்றும் பிரஷ்ஷர் அளவை ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை பரிசோதனை செய்யுமாறு வார்டு பணியிலிருந்த செவிலியர் புகழ்வாசுகியிடம் சொன்னதாகவும், பின்னர் அவர் மறுநாள் அதிகாலை 05.00 மணி வரை Stable ஆக இருந்தார் என்றும் 23.06.2020–ம் தேதி அதிகாலை 05.20 மணிக்கு திடீரென உடல்நிலை மோசமாகி மூச்சுத்திணறல் அதிகமாகிவிட்டது என்றும் அவருக்குத்

தேவையான அவசர சிகிச்சை கொடுத்ததாகவும் சிகிச்சை பலனளிக்காமல் 05.40 மணியளவில் அவர் இறந்துவிட்டார் என்றும் அதை E.C.G எடுத்து உறுதிப்படுத்திக் கொண்டதாகவும் இந்த விபரத்தை சிறைக்காவலரிடம் தெரிவித்து பின்னர் விபத்துப் பதிவேட்டில் பதிவு செய்ததாகவும் இறந்தவரின் உடலை கோவில்பட்டி அரசு மருத்துவமனை பிணவறையில் வைக்க ஏற்பாடு செய்ததாகவும் இறந்தவர் சிறைக்கைதி என்பதால் Expert Opinion–காக பிரேத பரிசோதனைக்கு திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், இரண்டு பேருக்கும் இரண்டு புட்டங்களில் இருந்த காயங்களுக்கு தான் மருந்து போட்டதாகவும் சி.பி.ஐ போலீசாரிடம் தான் ஆவணங்களைக் கொடுத்ததாகவும், தான் சி.பி.ஐ போலீசாரிடம் கொடுத்த ஆவணங்களின் பட்டியல் அ.சா.ஆ.37 என்றும் இறந்து போனவர்களின் உடல்களை பிணவறைக்கு அனுப்பியதற்கு மருத்துவமனையில் பராமரிக்கப்படும் பிணவறைப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது அந்த பதிவேட்டின் நகல் அ.சா.ஆ.38 என்றும் தங்கள் மருத்துவமனையில் பராமரிக்கப்படும் Discharge Summary புத்தகத்தில் பென்னிக்ஸ் சம்பந்தப்பட்ட Referral Slip–ஐ தான் எழுதியதாகவும் அது அ.சா.ஆ.39 என்றும் ஜெயராஜின் Case Sheet அ.சா.ஆ.40 என்றும் பென்னிக்ஸ் இறந்தவுடன் அதுகுறித்து போலீசாருக்கு தான் கொடுத்த தகவலின் அடிக்கட்டை நகல் அ.சா.ஆ.41 (அடிக்கட்டை எண்.5367) என்றும் ஜெயராஜ் இறந்தவுடன் அதுகுறித்து போலீசாருக்கு தான் கொடுத்த தகவலின் அடிக்கட்டை நகல் அ.சா.ஆ.42 (அடிக்கட்டை எண்.5369) என்றும் பென்னிக்ஸ் சம்பந்தப்பட்ட காயச்சான்று நகல் என்றும் அது அ.சா.ஆ.43 என்றும் ஜெயராஜ் சம்பந்தப்பட்ட காயச்சான்று நகல் அ.சா.ஆ.44 என்றும், 22.06.2020–ம் தேதி தான் பணியில் இருந்ததை காட்ட மருத்துவமனையில் வழங்கப்பட்ட பணி விபரச்சான்று அ.சா.ஆ.45 என்றும் 22.06.2020–ம் தேதி யார் யார் பணியில் இருந்தார்கள் என்பதை காட்டக்கூடிய Ward Duty Register நகல் அ.சா.ஆ.46 என்றும் அதில் 22.06.2020–ம் தேதி மருத்துவர். திரு.வெங்கடேஷ் என்பவருக்கு கிளைச்சிறைப்பணி ஒதுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் பென்னிக்சின் O.P. Ticket, இறந்த பிறகு எடுக்கப்பட்ட E.C.G., Casualty Ward Death Register நகல் அ.சா.ஆ.47 (மொத்தம் நான்கு தாள்கள்)

என்றும் சிபி.ஐ போலீசார் தன்னை விசாரிப்பதற்கு முன்னர் நீதித்துறை நடுவர் விசாரித்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6.22 கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் செவிலியராக பணிபுரியும் திருமதி.புகழ்வாசுகி அ.சா.22 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் நிரந்தர செவிலியராக 2018–ம் ஆண்டு முதல் பணிபுரிந்து வருவதாகவும் 22.06.2020–ம் தேதி தான் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் இரவுப்பணியில் இருந்ததாகவும், இரவுப்பணி என்பது இரவு 07.00 மணி முதல் மறுநாள் காலை 07.00 மணி வரை என்றும், 22.06.2020–ம் தேதி இரவு 10.56 மணியளவில் ஜெயராஜ் என்ற நோயாளியை ஸ்டெக்சரில் கொண்டு வந்தார்கள் என்றும் நோயாளி ஒருக்களித்த நிலையில் படுத்த நிலையில் இருந்தார் என்றும் ஏன் ஒருக்களித்த நிலையில் படுத்திருக்கிறார் என்று ஸ்டெக்சரை தள்ளிக்கொண்டு வந்த மருத்துவமனை பணியாளரை கேட்டபோது காயங்களுக்கு Dressing போட்டு வருவதால் அவ்வாறு இருப்பதாக பணியாளர் சொன்னார் என்றும், தான் நோயாளியை ஸ்டெக்சரில் இருந்து படுக்கைக்கு மாற்றியதாகவும் நோயாளி படுத்திருந்த ரப்பர் சீட்டோடு படுக்கைக்கு மாற்றியதாகவும், நோயாளியை படுக்க வைத்துவிட்டு, அவருக்கு இரத்த அழுத்தம், நாடித்துடிப்பு, சுவாசத்தின் அளவு ஆகியவற்றை பரிசோதித்ததாகவும் பணியில் இருந்த மருத்துவர் என்ன சிகிச்சை அளிக்க வேண்டுமென்று எழுதியிருந்தாரோ, அதன்படி தான் சிகிச்சை அளித்ததாகவும் நோயாளியால் படுக்க முடியவில்லை என்றும் மாறி மாறி உழட்டிக் கொண்டிருந்தார் என்றும், கொஞ்சநேரத்தில் எழுந்து படுக்கைக்கு அருகிலேயே சிறுநீர் கழித்தார் என்றும் அப்போது அவருடைய கைலி கீழே விழுந்துவிட்டது என்றும், அப்போது அவருக்கு அங்கங்கே காயங்கள் இருந்ததை தான் பார்த்ததாகவும் தொடைப்பகுதி, விலா எலும்புபகுதி, புட்டத்தில் கொஞ்சம் பெரியகாயம் இருந்ததை பார்த்தாகவும், அவருக்கு கைலியை கட்டிவிட்டு, படுக்கையில் படுக்க வைத்துவிட்டு, மற்றொரு மருத்துவப்பணியாளரை அழைத்து சிறுநீர் கழிக்க ஏதுவாக, சி.பி.டி போட்டுவிட்டதாகவும் அவரை படுக்க வைத்துவிட்டு, காயங்கள் எப்படி ஏற்பட்டது என்று அவரிடம்

கேட்டதற்கு போலீஸ் அடித்தார்கள் அம்மா என்று சொன்னார் என்றும் அவருக்கு இரத்த அழுத்தம் அதிகமாகவே இருந்தது என்றும் சர்க்கரையின் அளவு அதிகமாக இருந்ததால் மருத்துவ அதிகாரி இன்சுலின் போடச் சொல்லி case sheet–ல் எழுதியிருந்தார் என்றும் அதன்படி தான் இன்சுலின் ஊசி கையில் போட்டதாகவும் அப்புறம் நோயாளி ஐந்து மணி வரை stable ஆக இருந்தார் என்றும் ஆனாலும், நோயாளிக்கு பயம் இருந்தது என்றும் புண்ணில் வலி தாங்காமல் அவர் படுக்கையில் உழட்டிக் கொண்டிருந்தார் என்றும் சுமார் 05.15 மணியளவில் நோயாளி மூச்சுவிட சிரமப்படுவதாகவும், அவர் ஆபத்தான கட்டத்தில் இருப்பதாகவும் தெரிந்தது என்றும் அதுபற்றி பணிமருத்துவருக்கு தகவல் சொன்னதாகவும் பணிமருத்துவர் அங்கு வந்து, முதலுதவிக்குத் தேவையான அனைத்து சிகிச்சைகளையும் செய்யத்தாகவும் ஊசி போட்டு அனைத்தும் செய்தும், பலனில்லாமல் போய்விட்டது என்றும் அதன் பிறகு மற்றொரு நடவடிக்கையாக ஊசி போடச்சொன்னார் என்றும் தான் போட்டதாகவும் அதுவும் பலனளிக்கவில்லை என்றும் அதன்பிறகு E.C.G எடுக்கச்சொன்னார் என்றும் E.C.G எடுத்து மருத்துவ அதிகாரியிடம் காண்பித்ததாகவும் அவர் நோயாளி இறந்துவிட்டதாக சொன்னார் என்றும் அப்போது மணி அதிகாலை 05.40 இருக்கும் என்றும் தனக்கு 22.06.2020–ம் தேதி Accidental Emergency @ Quarantine ward–ல் பணி ஒதுக்கி இருந்தார்கள் என்றும் நோயாளியை அனுமதிக்கும்போது E.C.G எடுக்கப்பட்டது என்றும் அப்போது normal ஆக இருந்தது என்றும் Death Detail Register பதிவேட்டில் ஜெயராஜ் இறப்பை தான் பதிவு செய்ததாகவும் அது அ.சா.ஆ.38 என்றும் நோயாளியின் உடலை பின்னர் பிணவறைக்கு மாற்றிவிட்டதாகவும் அதன்பின்பு போலீஸ் கேஸ் என்பதால் திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்ததாகவும் தன்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.40 case sheet–ல் முதல் பக்கத்தில் Expired on 23.06.2020 at 05.40 a.m. என்று உள்ளது தான் எழுதியது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.40 case sheet–ல் பக்கம் 2 முதல் 7 வரை உள்ள தாள்களில் நோயாளியின் சிகிச்சை விபரங்களை தான் எழுதியதாகவும் அதில் 4, 7–வது தாள்களில் தான் கையெழுத்து செய்துள்ளதாகவும் 10–வது தாளில் பின் பக்கத்தில் மருத்துவ அதிகாரி என்ன சிகிச்சை அளிக்க

வேண்டுமென்று எழுதிக் கொடுத்துள்ளார் என்றும் நோயாளி அனுமதிக்கப்பட்ட போது போலீஸ் கேஸ் என்பதால் அரசு மருத்துவமனை புறக்காவல்நிலையத்திற்கு தகவல் சொன்னதாகவும் தன்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.40 case sheet–ல் 14–வது தாளுக்குப் பின்புறம் நோயாளியின் நிலைமை குறித்தும், இறந்த விபரத்தையும் தான் எழுதியதாகவும் இறந்த பின்னர் உடலை பிணவறைக்கு வைப்பது குறித்து தான் எழுதியதாகவும், அப்போது உடனிருந்த போலீஸ் அதில் கையெழுத்து செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6.23 கோவில்பட்டி தலைமை மாவட்ட அரசு மருத்துவமனையில் Male Nursing Assistant ஆக பணிபுரியும் திரு.அருணாச்சலபெருமாள் அ.சா.23 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில், 22.06.2020–ம் தேதி இரவு 07.00 மணி முதல் 23.06.2020 வரை தான் casualty ward–ல் பணியில் இருந்ததாகவும், அன்றைய தேதியில் பணிமருத்துவராக மருத்துவர். பாலசுப்பிரமணியன் இருந்தார் என்றும், அன்று இரவு சுமார் 08.00 மணியளவில் கோவில்பட்டி கிளைச்சிறையில் இருந்து இரண்டு வார்டன்கள் பென்னிக்ஸ் என்பவரை சிகிச்சைக்காக அழைத்து வந்தார்கள் என்றும் மருத்துவர்.பாலசுப்பிரமணியன் தன்னிடம் புட்டத்தில் பெரியகாயங்கள் இருப்பதாகவும், அதற்கு dressing செய்யுமாறும் சொன்னார் என்றும் தான் அதன்பின்னர் dressing செய்ததாகவும் Dressing செய்யும்போது தொடைப்பகுதியிலும், விலாபகுதியிலும் காயங்கள் இருந்ததைப் பார்த்ததாகவும் புட்டத்தில் இருந்த காயத்தில் இருந்து இரத்தமும், நீரும் வடிந்து கொண்டிருந்தது என்றும் தான் அவரிடம் ஏன் இவ்வளவு பெரிய காயமானது என்று கேட்டதற்கு பென்னிக்ஸ் தன்னை சாத்தான்குளம் போலீசார் அடித்துவிட்டதாக சொன்னார் என்றும் தனக்குத் துணையாக அப்போது வனலெட்சுமி என்ற Female Nursing Assistant இருந்தார் என்றும் அதன்பிறகு கொஞ்சநேரம் கழித்து அவர் இறந்துவிட்டதாக தெரிந்தது என்றும் அதன்பிறகு இரவு 10.45 மணிவாக்கில் கோவில்பட்டி கிளைச்சிறையில் இருந்து ஜெயராஜ் என்பவரை இரண்டு வார்டன்கள் சிகிச்சைக்காக அழைத்து வந்தார்கள் என்றும் மருத்துவர். பாலசுப்பிரமணியன் அவரை பார்த்துவிட்டு புட்டத்தில் பெரிய, நிறைய காயங்கள் இருக்கிறது என்றும், அதற்கு

Dressing செய்துவிடுமாறு சொன்னார் என்றும் தான் dressing செய்ததாகவும் புட்டம் முழுவதும் காயமாக இருந்தது என்றும் அதிலிருந்து இரத்தமும், நீரும் வடிந்து கொண்டிருந்தது என்றும் Dressing செய்யும்போது ஏன் இவ்வளவு பெரிய காயமானது என்று கேட்டதற்கு அவர் தன்னை சாத்தான்குளம் போலீசார் அடித்துவிட்டதாக சொன்னார் என்றும் Dressing செய்யும் போது அவருக்கு விலாபகுதியிலும், தொடைப்பகுதியிலும் காயங்கள் இருப்பதைப் பார்த்ததாகவும் இரவு 11.30 மணிவாக்கில் A.E.Quarantine Ward–ல் பணியில் இருந்த செவிலியர் புகழ்வாசுகி தன்னிடம் ஜெயராஜிற்கு சிறுநீரகப்பை மாட்டுவதற்கு உதவி செய்யுமாறு சொன்னார் என்றும் தான் கஷ்டப்பட்டு சிறுநீரகப்பை மாட்டிவிட்டதாகவும் தான் மாட்டும்போது அவர் அனத்திக் கொண்டே இருந்தார் என்றும் அதன்பிறகு அவர் காலையில் இறந்துவிட்டதாக தான் தெரிந்து கொண்டதாகவும் தங்கள் மருத்துவமனையில் A.R.Register பராமரிக்கப்படுகிறது என்றும் தன்னிடம் காட்டப்படும் A.R.Register அ.சா.ஆ.43, அ.சா.ஆ.44 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6.24 கோவில்பட்டி கிளைச்சிறையில் அடைக்கப்படுவதற்காக ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அழைத்து வரப்பட்டபோது அவர்களை பரிசோதித்து கிளைசிறைச்சாலை பதிவேடுகளில் குறிப்பு எழுதியுள்ள சிறை அதிகாரி திரு.மாரிமுத்து அ.சா.24 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் அவர் தான் கோவில்பட்டி கிளைச்சிறையில் பிப்ரவரி மாதம் 2020 முதல் முதல்நிலை காவலராக ஆக பணிபுரிவதாகவும் கடந்த 20.06.2020–ம் தேதி சுமார் 02.30 மணியளவில் கோவில்பட்டி கிளைச்சிறையில் வாயில் பாரா பணியில் இருந்தபோது சாத்தான்குளம் காவல்நிலையத்தில் இருந்து செல்லத்துரை மற்றும் முத்துராஜா என்ற இரண்டு காவலர்கள் இரண்டு சிறைவாசிகளை அனுமதிக்காக அழைத்து வந்தார்கள் என்றும் அவர்கள் நடக்க முடியாத நிலையில் வந்தார்கள் என்றும் கையில் ஒரு மாத்திரை பையும் மற்றும் துணிப்பையும் வைத்திருந்தார்கள் என்றும் வந்த காவலர்களிடம் ஆவணங்களை வாங்கி அழகர்சாமியிடம் கொடுத்ததாகவும் அவர் அதைப்பார்த்து விசாரித்தார் என்றும் பின்பு Admission Register–ல் தன்னை எழுதச் சொன்னார் என்றும் அவர் சொன்னதை தான் அப்படியே எழுதியதாகவும் இரண்டு

சிறைவாசிகளுக்கும் அடிப்பட்டிருந்தது என்றும் அதை எழுதச் சொன்னார் என்றும் அனுமதியின்போது அவர்களுடைய இரண்டு கால்முட்டி மற்றும் கைமுட்டி வீங்கி காயங்களாக இருந்தது என்றும் அவர்கள் உடுத்தியிருந்த உடைகளில் இரத்தம் கசிந்திருந்தது என்றும் அதுபற்றி அழகர்சாமி கேட்டதற்கு அவர்கள் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் தாக்கியதாக சொன்னார்கள் என்றும் துணியை விலக்கி அவர்களுடைய பின்பகுதி புட்டப்பகுதியை பார்த்தபோது இரத்தம் கசிந்த நிலையில் இரண்டு பக்கமும் புட்டம் முழுவதும் காயங்கள் இருந்தது என்றும் அழகர்சாமி சொன்னதை தான் பதிவேட்டில் எழுதிவிட்டு, அதன்பின்னர் கிளைச்சிறை கண்காணிப்பாளர் சங்கரிடம் தானும், அழகர்சாமியும் அவர்களை அழைத்துச் சென்றதாகவும் அதன்பிறகு, ஆவணத்தை பார்த்த பின்னர் கண்காணிப்பாளர் என்னப்பா, இப்படி அடிபட்டுள்ளது என்று கேட்டார் என்றும் அவர்கள் காவல்நிலையத்தில் தாக்கப்பட்டதாக சொன்னார்கள் என்றும் இங்கு உங்களுக்குத் தேவையான மருத்துவ உதவி செய்கிறோம் உங்களுக்கு என்ன தேவை என்று சொல்லுங்கள் என்று இரண்டு சிறைவாசிகளிடமும் கண்காணிப்பாளர் சொன்னார் என்றும் அதற்கு எதுவும் தேவை என்றால் சொல்லுகிறோம் என்று சிறைவாசிகள் சொன்னார்கள் என்றும் அந்த நேரத்தில் உடன் வந்த சாத்தான்குளம் காவலர்களை வெளியே அனுப்புவதற்காக தான் வாயிலுக்கு வந்துவிட்டதாகவும் அன்றைய பணியை தொடர்ந்து 21.06.2020–ம் தேதி காலை வரை பார்த்து பணியை முடித்து, வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும் மீண்டும் 22.06.2020–ம் தேதி பணிக்கு வந்ததாகவும் எல்லா சிறைவாசிகளையும் கணக்கு எடுத்ததாகவும் அப்போது ஜெயராஜ் மற்றும் பென்னிக்சும் வலியாக இருப்பதாக சொன்னார்கள் என்றும் சாப்பாடு எல்லோருக்கும் கொடுத்தது போல் கொடுக்கப்பட்டது என்றும் அவர்கள் கொஞ்சமாக சாப்பிட்டார்கள் என்றும் டீ சாப்பிட்டார்கள் என்றும் அன்று 11.00 மணியளவில் மருத்துவர் திரு.வெங்கடேஷ் கிளைச்சிறைக்கு வந்தார் என்றும் மேற்படி இரண்டு சிறைவாசிகளையும் பார்த்து மருந்து எழுதிக் கொடுத்தார் என்றும் அன்று இரவு சுமார் 07.30 மணியளவில் பென்னிக்சுக்கு உடல்நிலை சரியில்லை என்று பாராவில் இருந்த காவலர் அழகர்சாமியிடம் வந்து சொன்னார் என்றும் அவர் கண்காணிப்பாளருக்கு தொலைபேசி மூலமாக தகவல் சொன்னார்

என்றும் தன்னை ஆட்டோவை பிடித்து வருமாறு அழகர்சாமி சொன்னார் என்றும் இதற்கிடையில் கண்காணிப்பாளர் சங்கரும் அங்கு வந்துவிட்டார் என்றும் அவரும் தன்னிடம் ஆட்டோ பிடித்து வருமாறு சொன்னார் என்றும் ஆட்டோவை தான் அழைத்து வந்து வாசலில் நிறுத்தியதாகவும் உள்ளேயிருந்து இரண்டு சிறைவாசிகள் பென்னிக்சை கைத்தாங்கலாக அழைத்து வந்தார்கள் என்றும் தான் அவர்களை ஆட்டோவில் ஏற்றிவிட்டு, வேல்முருகன் என்ற காவலரை அழைத்துக்கொண்டு கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு வந்ததாகவும் அங்கு Causality பிரிவிற்கு கைத்தாங்கலாக அழைத்துச் சென்றதாகவும் அங்கிருந்த மருத்துவர் ஏற்கனவே ஒரு நோயாளியை அப்போது பார்த்துக் கொண்டிருந்தார் என்றும் பின்னர் பென்னிக்சிடம் மருத்துவர் விசாரித்தார் என்றும் காயம் ஏன் இப்படி இருக்கிறது என்று கேட்டார் என்றும் காவல்நிலையத்தில் தாக்கப்பட்டதாக அவர் சொன்னார் என்றும் E.C.G எடுத்துப் பார்க்க வேண்டுமென்று மருத்துவர் சொன்னார் என்றும் அதற்கு பக்கத்து அறையில் தான் விட்டு விட்டு வெளியில் காத்திருந்ததாகவும் ஐந்து நிமிடத்தில் இ.சி.ஜி Report வந்தவுடன் மேல்சிகிச்சைக்கு தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டுமென்று மருத்துவர் சொன்னார் என்றும் தான் உடனே கண்காணிப்பாளர் சங்கருக்கு தகவல் சொன்னதாகவும் அவர் மருத்துவர் என்ன சொல்கிறாரோ அதையே செய்யுங்கள் என்று சொன்னார் என்றும் உடனே 108 ஆம்புலன்ஸ் வருவதற்காக ஏற்பாடு செய்து கொண்டிருந்ததாகவும், ஆம்புலன்ஸ் வரக்கூடிய நேரத்தில் உயிர் பிரிந்துவிட்டது என்று மருத்துவர் சொன்னார் என்றும் இந்த தகவலை தான் கண்காணிப்பாளர் சங்கரிடம் சொன்னதாகவும், அதன் பிறகு மருத்துவர் பிணவறைக்கு மாற்றச் சொன்னார் என்றும் அங்கிருந்து ஒரு மணிநேரத்தில் பிரேத பரிசோதனைக்காக திருநெல்வேலி மருத்துவமனைக்கு மாற்றச் சொன்னார் என்றும் தான் பென்னிக்ஸ் உடலுடன் திருநெல்வேலி மருத்துவமனை சென்றதாகவும் பென்னிக்ஸ் இறந்தவுடன், வேல்முருகன் பணிக்கு சென்றுவிட்டார் என்றும் மறுநாள் கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் இருந்து சிவசங்கர் என்ற தலைமைக்காவலர் தன்னிடம் கடவுச்சீட்டில் திருநெல்வேலி மருத்துவமனையில் வைத்து கையெழுத்து செய்து கொடுத்தார் என்றும் தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1

Admission Register–ல் 20.06.2020–ம் தேதிய விபரங்களை தான் தன் கைப்பட எழுதியதாகவும் அந்த பக்கத்தில் பென்சிலில் போலீஸ் உடன் தகராறு என்று வழக்கு விபரத்தை தான் எழுதியதாகவும் தினமும் அனுமதிக்கப்படும் சிறைவாசிகள் சம்பந்தப்பட்ட வழக்கு விபரத்தை பாளையங்கோட்டை மத்தியசிறைக்கு தெரிவிக்க வேண்டும் என்பதற்காக அதை எழுதியதாகவும் அதே பக்கத்தில் சிறைவாசிகளை அழைத்து வந்த காவலர்கள் செல்லத்துரை மற்றும் முத்துராஜா கையெழுத்து செய்துள்ளார்கள் என்றும் மேற்படி செல்லத்துரை மற்றும் முத்துராஜா இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள் என்றும் பென்னிக்சை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதற்கான கடவுச்சீட்டின் ஜெராக்ஸ் நகல் அ.சா.ஆ.11 என்றும் அந்த கடவுச்சீட்டில் கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய ஏட்டு சிவசங்கரன் கையெழுத்து செய்துள்ளார் என்றும் தன்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.12 கடவுச்சீட்டு ஜெராக்ஸ் நகலில் சிறைக்கண்காணிப்பாளர் சங்கர் கையெழுத்து செய்துள்ளார் என்றும் தன்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.43 ஆவணத்தின் பின்புறமுள்ளது தன்னுடைய கையெழுத்து என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6.25 சம்பவ சமயத்தில் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் நில வழக்கு ஒன்று சம்மந்தமாக விசாரணைக்கு ஆஜராகியிருந்ததாக கூறப்படும் திரு.ஆரோக்கியசாமி அ.சா.25 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தூத்துக்குடி புறநகர் கிளை பணிமனையில் நடத்துனராக பணிபுரிவதாகவும் உறவினர் நிலத்தின் மீது பெட்டிசன் கொடுத்தது சம்மந்தமாக 17.06.2020–ம் தேதி சாத்தான்குளம் காவல்நிலையத்தில் இருந்து SI பாலகிருஷ்ணன் வர சொன்னதாகவும், 18.06.2020 அன்று தானும் தனது தாயாரும் வழக்கறிஞர்கள் ரவிச்சந்திரன், மணிமாறன் ஆகியோருடன் சேர்ந்து காவல்நிலையத்திற்கு சென்றதாகவும், அப்போது உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் விசாரித்துவிட்டு அனுப்பிவிட்டார் என்றும் மறுநாள் 19.6.2020 அன்று மதியம் 11.30 மணியளவில் SI பாலகிருஷ்ணனும் கான்ஸ்டபிள் முத்துராஜாவும் இரவு காவல்நிலையத்திற்கு வாருங்கள் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார் என்றும் தான் இரவு 07.00 மணியளவில் சாத்தான்குளம்

காவல்நிலையம் சென்றதாகவும் 07.15 மணியளவில் வழக்கறிஞர் மணிமாறன் வந்ததாகவும் பாலகிருஷ்ணன் அவர்களை பார்ப்பதற்காக காத்து கொண்டிருந்ததாகவும் அப்போது 07.45 மணியளவில் காவல்நிலையம் உள்ளே காவல்துறை ஜீப் ஒன்று உள்ளே வந்தது என்றும் அதில் முன்பக்கத்தில் இருந்து இன்ஸ்பெக்டர் அவர்களும் பின்பக்கத்தில் இருந்து பாலகிருஷ்ணன் அவர்களும், அவர்களுடன் 2 காவலர்களும், ஒரு வெள்ளை வேஷ்டி வெள்ளைச்சட்டை அணிந்த பெரியவர் ஒருவரும் வந்தார்கள் என்றும் பாலகிருஷ்ணன் கொஞ்சம் பொறுங்கள் முக்கியமான விசாரணை இருக்கிறது, அதை முடித்த பின்னர் உங்களை கூப்பிடுகிறோம் என்று சொல்லி அனுப்பிவிட்டார் என்றும் வெளியில் காத்துக் கொண்டிருந்த சமயத்தில் மோட்டார் சைக்கிளில் இரண்டு வாலிபர்கள் வந்தார்கள் என்றும், மோட்டார் சைக்கிளில் பின்னால் உட்கார்ந்திருந்த நபர் காவல் நிலையத்தின் உள்ளே சென்றார் என்றும் அவருடன் தன்னுடைய வழக்கறிஞர் மணிமாறன் அவர்கள் உடன் சென்றதாகவும் சிறிது நேரம் கழித்து மணிமாறன் வழக்கறிஞர் வெளியே வந்த பின்னர், காவல் நிலையத்தின் கதவு மூடப்பட்டது என்றும் மூடியவுடன் உள்ளே இருந்து அடிக்கும் சத்தம் கேட்டது என்றும் உள்ளே இருந்த நபர்கள் அய்யோ, அப்பா, அம்மா என்று கத்தினார்கள் என்றும் இந்த சம்பவம் நடந்து கொண்டிருக்கும்போது காவல்நிலையத்தின் வெளியே ஏராளமான மக்கள் வெளியே இருந்து கூடிவிட்டார்கள் என்றும் 10.00 மணி ஆகிவிட்டதால் ஊருக்கு 16 கி.மீ அப்பால் செல்ல வேண்டி கிளம்பி வந்து விட்டதாகவும் வழக்கறிஞர்கள் அங்கேயே இருந்தார்கள் என்றும் தன்னுடைய வழக்கறிஞர்களிடம் இரண்டு நாட்கள் கழித்து 19.06.2020 அன்று காவல்நிலையத்தில் நடந்த சம்பவத்தில் 2 பேரும் இறந்து விட்டார்கள், அதனால் உங்களுடைய விசாரணையை பின்பு பார்த்து கொள்வோம் என்று சொல்லிவிட்டார்கள் என்றும் தான் காவல்நிலையத்தில் பார்த்த நபர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள் என்றும் எதிரிகளை பார்த்து சாட்சியமளித்துள்ளார்.

6.26 1–ம் எதிரியின் ஜீப் ஓட்டுனர் திரு.ஜெயசேகர் அ.சா.26 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் 19.06.2020–ம் தேதி காலை 09.30 மணியளவில் ஆய்வாளர்

அவர்களை சாத்தான்குளம் பஜாரிலுள்ள அவரது வீட்டிற்கு சென்று அழைத்து, சாத்தான்குளம் பஜார், தச்சமொழி பகுதியில் ரோந்து சென்று, 12.30 மணியளவில் சாத்தான்குளம் காவல்நிலையம் திரும்பி வந்ததாகவும், பின்னர் மதியம் 02.00 மணிக்கு ஆய்வாளர் அவர்களை மதிய உணவிற்கு வீட்டில் இறக்கிவிட்டு, சாத்தான்குளம் காவல்நிலையத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு, தான் ஓய்விற்கு குடியிருப்பிற்கு சென்றதாகவும் பின்பு மாலை 04.30 மணியளவில் ஆய்வாளர் அவர்களை அழைத்துக் கொண்டு காவல்நிலையம் வந்ததாகவும், அப்போது காவலர் முத்துராஜா காவல் வாகனமான டாடா சுமோவில் வந்தார் என்றும் பஜாரில் ரோந்து செய்து, அருணா டீக்கடை முன்பு வரும்போது எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் வாகனத்தில் ஏறிக் கொண்டார் என்றும் செட்டிக்குளத்தில் நடந்த மணல் பிரச்சனை சம்பந்தமாக இடத்தை பார்வையிட பண்ணம்பாறை விலக்கு வழியாக செட்டிகுளம் சென்று விசாரித்து, சாத்தான்குளம் பேருந்து நிலையம் வழியாக காமராஜர் சிலை முன்பு வண்டிமறிச்சி அம்மன் கோவில் அருகில் சுமார் 07.15 மணியளவில் வாகனத்தை நிறுத்தியதாகவும், அப்போது ஆய்வாளர் வாகனத்தின் முன்புறம் உட்கார்ந்திருந்தார் என்றும் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன், காவலர் முத்துராஜா, ஜெயராஜை அழைத்து வந்து வாகனத்தின் பின்புறம் ஏற்றினார்கள் என்றும் அப்போது மணி 07.45 இருக்கும் என்றும் ஆய்வாளர் வாகனத்தை நிலையத்திற்கு கொண்டு போகச் சொன்னார் என்றும் நிலையம் சென்று கொண்டிருக்கும்போது, எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் ஜெயராஜிடம் போலீசை ஏசினாயா என்று கேட்டார் என்றும், அதற்கு ஜெயராஜ் ஏசவில்லை என்று சொன்னார் என்றும், அதற்கு எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் பொய் சொல்கிறாய் என்று சொன்னார் என்றும், சாத்தான்குளம் காவல்நிலையம் வந்தவுடன், ஆய்வாளர், எஸ்.ஐ.பாலகிருஷ்ணன், ஜெயராஜ், முத்துராஜா ஆகியோர்கள் காவல்நிலையத்திற்குள் சென்றார்கள் என்றும் தான் வாகனத்தை திருப்பி நிறுத்திவிட்டு பக்கத்திலுள்ள குடியிருப்பிற்கு இயற்கை உபாதைக்காக சென்று, மீண்டும் 08.05 மணியளவில் காவல்நிலையம் வந்ததாகவும் காவல்நிலைய கதவு சாத்தப்பட்டிருந்தது என்றும் தான் உள்ளே போனதாகவும் பதற்றமாக இருந்தது என்றும் பென்னிக்ஸ் உள்ளே இருந்தார் என்றும் தான் போகும்போது ஆய்வாளர், எஸ்.ஐ.பாலகிருஷ்ணன், தலைமைக்காவல் முருகன்,

சாமதுரை, வெயிலுமுத்து, தாமஸ், செல்லத்துரை, ப்யூலா, பால்துரை, முத்துராஜா ஆகியோர்கள் காவல்நிலையத்தில் இருந்தார்கள் என்றும் முத்துராஜாவிடம் என்ன என்று கேட்டதற்கு ஜெயராஜ் போலீசை ஏசியதால் காவல்நிலையம் அழைத்து வந்ததாகவும், ஜெயராஜை ஏன் அடிக்கிறீர்கள் என்று பென்னிக்ஸ் கேட்டு, தன்னை தள்ளிவிட்டதாகவும் சட்டை பட்டன் அறுந்துவிட்டதாகவும் முத்துராஜா சொன்னார் என்றும் ஆய்வாளர் போலீஸ் மேல் கை வைத்தால் சும்மா விடக் கூடாது என்று சொன்னார் என்றும் தன்னை இரவு உணவு ஆய்வாளர் வாங்கி வரச் சொன்னார் என்றும் தான் சாத்தான்குளம் பஜார் சென்று, உணவருந்தி, ஆய்வாளருக்கு உணவு வாங்கி வந்ததாகவும் இரவு 9.15 மணிக்கு காவல்நிலையம் உள்ளே செல்லும்போது பென்னிக்ஸ் ஜட்டியுடன் இருந்தார் என்றும் ஜெயராஜ் ஜட்டியுடன் லாக்அப் அருகில் இருந்தார் என்றும் தான் ஆய்வாளரிடம் உணவைக் கொடுத்துவிட்டு பார்க்கும்போது தலைமைக்காவலர் முருகன், முத்துராஜா, பென்னிக்ஸ் கையை பிடித்துக் கொண்டார்கள் என்றும் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் லத்தியால் பென்னிக்ஸ் ஓங்கி புட்டத்தில் அடித்தார். அங்கிருந்த காவலர்கள் மாறி மாறி பிடிக்க அடித்தார்கள் என்றும், ஆய்வாளர் அவர்கள் அடிக்கச் சொன்னார்கள் என்றும், மனக்கஷ்டமாக இருந்ததால் காவல்நிலையத்தை விட்டு 09.25 மணியளவில் வெளியே வந்துவிட்டதாகவும் 09.30 மணியளவில் எஸ்.ஐ.ரகுகணேஷ் காவல்நிலையம் உள்ளே சென்றார் என்றும் அவர் சென்ற சிறிது நேரத்தில் அடிக்கும் சத்தமும், அலறும் சத்தமும் கேட்டது என்றும் அய்யோ, அம்மா என்று அலறும் சத்தம் கேட்டது என்றும் 09.45 மணியளவில் சிறப்பு சார்பு ஆய்வாளர் செல்வின் சாமர்வேல் காவல்நிலையம் உள்ளே போனார் என்றும் எஸ்.ஐ.ரகுகணேஷ் 10.30 மணியளவில் வெளியே சென்றுவிட்டு, 11.00 மணியளவில் உள்ளே வந்தார் என்றும் 11.30 மணியளவில் தான் வாகனம் பக்கத்தில் இருக்கும்போது ஆய்வாளர் வெளியே வரும்போது, வழக்கறிஞர் மணிமாறன் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை வெளியே விடுங்கள் என்று கேட்டார் என்றும் ஆய்வாளர் வழக்குப்பதிவு செய்து, Remand செய்கிறேன் என்று சொன்னார் என்றும் இரவு சுமார் 02.15 மணியளவில் ஆய்வாளரை பஜாரிலுள்ள அவருடைய வீட்டில் இறக்கிவிட்டதாகவும் மறுநாள் காலையில் 06.30 மணியளவில் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் அவர்கள் அரசு

மருத்துவமனைக்கு போக வேண்டுமென்று சொன்னார் என்றும் பாராவில் ரேவதி இருந்தார் என்றும் பென்னிக்சின் உறவினர்கள் உடைகளை மாற்றுவதற்கு கொடுத்தார்கள் என்றும் உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் வாகனத்தின் முன்புறம் ஏறிக் கொண்டார் என்றும் காவலர் முத்துராஜா வாகனத்தின் நடுவில் ஏறிக் கொண்டார் என்றும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் நொண்டி, நொண்டி வந்து வாகனத்தின் பின்னால் ஏறிக் கொண்டார்கள் என்றும் அவர்களுடைய உடைகளில் இரத்தம் இருந்தது என்றும் செல்லத்துரையும் பின்னால் ஏறிக் கொண்டார் என்றும் காலை 07.15 மணியளவில் சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு போகச் சொன்னதாகவும் உறவினர்கள் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ்–க்கு டீ வாங்கி கொடுத்தார்கள் என்றும் பின்பு ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இறங்கி நொண்டி நொண்டி அரசு மருத்துவமனைக்கு உள்ளே சென்றார்கள் என்றும் புட்டத்தில் இரத்தக்கசிவு இருந்தது என்றும் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் காவல்நிலையம் சென்று, Medical Memo வாங்கி வரச் சொன்னார் என்றும் தான் அரசு மருத்துவமனையில் இருந்த ஒருவரிடம் பைக்கை வாங்கி, காவல்நிலையம் சென்று ரேவதியிடம் Medical Memo வாங்கி எஸ்.ஐ. பாலகிருஷ்ணனிடம் கொடுத்ததாகவும் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் Medical memo–வை எழுதி ரேவதியிடம் கையெழுத்து வாங்கி வரச் சொன்னார் என்றும் ரேவதியிடம் கையெழுத்து போடச் சொன்னதற்கு அவர் மறுத்துவிட்டார் என்றும் எஸ்.ஐ பாலகிருஷ்ணன் உங்களிடம் போனில் பேசுவதாக சொன்னார் என்றவுடன் தயக்கத்துடன் கையெழுத்து செய்தார் என்றும் தான் அதை அரசு மருத்துவமனைக்கு கொண்டுவந்து எஸ்.ஐ.பாலகிருஷ்ணனிடம் கொடுத்ததாகவும் மாற்று ஓட்டுநர் வந்ததும் ஓய்வில் சென்றுவிட்டதாகவும் 22.06.2020–ம் தேதி இரவு சுமார் 10.00 மணியளவில் மாற்று ஓட்டுநர் ஆறுமுகசெல்வம் தனக்கு போன் செய்து பென்னிக்ஸ் இறந்துவிட்டதாக கூறினார் என்றும் மறுநாள் ஜெயராஜ் இறந்துவிட்டதாக தெரிந்து கொண்டதாகவும் தான் வாகனத்தில் இருக்கும்போது இரவில் 11.30 மணியளவில் அடிக்கும் சத்தமும், அலறும் சத்தமும் மாறி மாறி கேட்டது என்றும் ஐந்து நிமிடம் கழித்து வேறு ஒரு குரலில் அலறும் சத்தம் கேட்டது என்றும் தான் ஓட்டுநராக பணிபுரிந்த வாகனத்தின் பதிவு எண்.TN69G 0635 என்றும் தன்னிடம் காட்டப்படுவது

கோவில்பட்டி நீதித்துறை நடுவரிடம் தான் கொடுத்த வாக்குமூலம் என்றும் அதில் தான் கையெழுத்து செய்துள்ளதாகவும் அ.சா.பொ.23 ஆன சி.சி.டி.வி கேமரா பதிவுகள் திறந்த நீதிமன்றத்தில் போட்டு காண்பிக்கப்பட்டு அதனடிப்படையில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டுள்ளதில் அ.சா.பொ.23 ஆன 19.06.2020–ம் தேதி பதிவில் 21.31.02 கால அளவில் தான் ஜீப்பில் இருந்து இறங்கி பழக்கடையில் வந்து பழம் சம்பந்தமாக விசாரித்துக் கொண்டிருந்ததாகவும், அந்த நபர் தான் என்று தான் அடையாளம் காட்டியதாகவும் 21.35.31 கால அளவில் காவலர் முத்துராஜா வந்து ஆட்டோ ஸ்டாண்டில் விசாரித்துக் கொண்டிருப்பதாவும் 21.43.00 கால அளவில் இருந்து 21.44.12 வரை எஸ்.ஐ.பாலகிருஷ்ணன், காவலர் முத்துராஜா ஆகியோர்கள் ஜெயராஜிடம் பேசிக் கொண்டிருப்பதாகவும், மேற்படி பதிவில் வாகனமான போலீஸ் ஜீப் வந்து நிறுத்திய இடம் வண்டிமறிச்சியம்மன் கோவில் என்றும் அதன் அருகில் ஏ.பி.ஜே மொபைல் ஷாப் உள்ளது என்றும் தான் மேற்படி ஏ.பி.ஜே மொபைல் ஷாப்பிற்கு ரீசார்ஜ் செய்ய சென்றுள்ளதாகவும், தான் சாத்தான்குளம் ஆய்வாளருக்கு ஒரு வருட காலமாக ஓட்டுனராக மேற்படி ஜீப்பை ஓட்டி வருவதாகவும் அந்த போலீஸ் ஜீப்பின் சாவி தன்னுடைய கையில் தான் இருக்கும் என்றும் 21.45.58 கால அளவில் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன், ஜெயராஜை அழைக்க ஜெயராஜ் வண்டியை நோக்கி செல்லும் பதிவு உள்ளது என்று,ம் அதன்பின்பு ஜெயராஜை வண்டியின் பின்பு ஏற்றினார்கள் என்றும் 19.06.2020 அன்று இரவு காவல் ஆய்வாளரை காவல்நிலையத்தில் இறக்கிவிட்டு வந்த பிறகு தன்னுடைய கையில் தான் ஜீப்பின் சாவி இருந்தது என்றும் அதன்பிறகு அந்த ஜீப்பை சுமார் 02.15 மணியளவில் தான் ஆய்வாளரை வீட்டிற்கு விடுவதற்காக எடுத்ததாகவும் அதுவரையில் தான் ஜீப்பை எடுக்கவில்லை என்றும் ஆய்வாளர் அவர்கள் காவல்நிலையத்தில் சுமார் 02.15 வரையில் இருந்தார். தான் ஆய்வாளருக்கு இரவு சாப்பாடு வாங்குவதற்காக சுமார் 08.45 மணிக்கு மேல் சென்றதாகவும் தான் ஆய்வாளருக்கு இரவு சாப்பாடு சாத்தான்குளம் பஜாரிலுள்ள பழைய கோர்ட் அருகில் இட்லி வாங்கி வந்து கொடுத்ததாகவும், தான் சாப்பாடு வாங்க கடைக்கு சென்ற நேரம் சுமார் 09.00 மணி இருக்கும் என்றும் போலீஸ் என்றால் சாப்பாட்டிற்கு சொல்லி வைத்திருப்பார்கள் என்றும் போலீஸ் வந்தாலே கடையில்

சாப்பாடு கொடுப்பார்கள் என்றும் காவல்நிலையத்தை சேர்ந்த காவலர்கள் கடையில் இரவுச் சாப்பாட்டிற்காக எப்போதும் சொல்லி வைப்போம் என்றும் காவல்நிலையத்தில் இரவுப் பணிக்கு வரும் காவலர்கள் இரவுச்சாப்பாடு வீட்டில் இருந்து எடுத்துக் கொண்டு வரமாட்டார்கள் என்றும் கடையில் தான் வாங்கி சாப்பிடுவார்கள் என்றும் ஆய்வாளர், எஸ்.ஐ.பாலகிருஷ்ணன், முருகன் தவிர மற்றவர்கள் எல்லாம் அன்று இரவு இரவு சாப்பாட்டிற்கு கடைக்கு சென்று சாப்பிட்டு வந்தார்கள் என்றும் காவலர் செல்லத்துரை மற்றும் தாமஸ் பிரான்சிஸ் ஆகியோர் உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன், முருகன் மற்றும் ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோர்களுக்கு இரவு சாப்பாடு வாங்கி வந்தார்கள் என்றும் தான் சாப்பாடு வாங்க செல்லும்போது ப்யூலா செல்வகுமாரி, ரேவதி ஆகியோரைப் பார்த்ததாகவும் தான் அவர்களிடம் பேசவில்லை என்றும் ரேவதி அப்போது தான் காவல்நிலையத்திற்கு இருசக்கரவாகனத்தில் வந்தார் என்றும் ப்யூலா செல்வகுமாரி ஸ்டேசன் வெளியே வராண்டாவில் நின்று கொண்டிருந்தார் என்றும் தான் சந்தனகுமாரிடம் வெளியே பேசிக் கொண்டிருந்ததாகவும், தான் 19.06.2020-ம் தேதியன்று இரவு சுமார் 3 முதல் 4 தடவைகள் காவல் நிலையத்திற்கு உள்ளே சென்று வந்ததாகவும் உள்ளே சென்று 3 முதல் 4 தடவை பார்க்கும்போது ஜெயராஜ், பென்னிக்சை காவலர்கள் மாறி மாறி பிடித்து, மாறி மாறி அடித்தார்கள் என்றும், அவர்களை மாடிப்படிக்கட்டு மற்றும் கைதி அறை சுவற்றில் வைத்து அடித்துக்கொண்டிருந்தார்கள் என்றும், மேலும் எஸ்.எஸ்.ஐ.ரவிச்சந்திரன் உபயோகப்படுத்தும் டேபிளில் அவர்களை படுக்க வைத்து அடித்துக் கொண்டிருந்தார்கள் என்றும், அந்த டேபிளை பார்த்தால் தன்னால் அடையாளம் காண்பிக்க முடியும் என்றும் அந்த டேபிள் நீதிமன்றத்தில் உள்ளது என்றும் அது ஏற்கனவே அ.சா.பொ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அடிக்க உபயோகப்படுத்திய லத்தியை காண்பித்தால் தன்னால் அடையாளம் காண்பிக்க முடியும் என்றும் காவலர்கள் காவல்நிலையத்தில் இருந்தாலும் அவர்களுக்கு இடையில் கைபேசியில் பேசுவதுண்டு என்றும், அதுமாதிரி காவல்நிலையத்திற்குள் தானும், மற்ற காவலர்களும் பேசிக் கொள்வோம் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். வாகனம் ஓட்டுநர்

எழுதிய தினசரி டைரி குறித்து 1–ம் எதிரி RTI மூலம் பெற்று தாக்கல் செய்துள்ள ஆவணம் எ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6.27 அ.சா.27 திரு.கருப்பசாமி தான் 2020–ம் ஆண்டு முதல் தற்போது வரை கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வருவதாகவும் 24.06.2020–ம் தேதி கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய ஆய்வாளர் சுதேசன் என்பவரின் உத்தரவுப்படி குற்ற எண்.650/2020 ஜெயராஜ் என்பவரின் சந்தேக மரணம் வழக்கு சம்பந்தப்பட்ட பிரேத பரிசோதனை பணிக்காக கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களிடம் காலை 09.00 மணியளவில் திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் Report செய்ததாகவும் அவர் மருத்துவக்கல்லூரி டீன் அவர்களிடம் Report செய்யச் சொன்னார் என்றும் தான் டீனைப் பார்த்து Report செய்ததாகவும் அன்று இரவு 10.15 மணிக்கு ஜெயராஜின் உடலின் மீது பிரேத பரிசோதனை ஆரம்பமானது என்றும் இரத்தம்படிந்த ஜெயராஜின் வெள்ளைக்கலர் அரைக்கைசட்டை, நீலக்கலர், வெள்ளைக்கலர், கருப்பு கட்டம் போட்ட இரத்தம்படிந்த லுங்கி ஒன்று ஆகியவற்றை நீதித்துறை நடுவர் தன்வசம் ஒப்படைத்து காவல்நிலையத்தில் பாதுகாப்பில் வைத்திருக்குமாறு சொன்னார் என்றும், இரவு 10.15 மணி முதல் 11.30 மணி வரை பிரேத பரிசோதனை நடந்தது என்றும் பிரேத பரிசோதனை முடிந்த பின்னர் அன்றைய தேதியில் இறந்தவரின் உடலை கொடுக்க முடியவில்லை என்றும் நீதித்துறை நடுவரின் உத்தரவுப்படி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் பிணவறையில் உடல் வைக்கப்பட்டது என்றும் 25.06.2020–ம் தேதி மதியம் 02.00 மணிவாக்கில் இறந்தவரின் உறவினர்களிடம் உடல் ஒப்படைக்கப்பட்டது என்றும் மருத்துவர் காவல்நிலையத்திற்கு கொடுத்த தகவலின்படி 29.06.2020–ம் தேதி இறந்தவரின் உள்ளுறுப்புகளை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து பெற்று திருநெல்வேலி தடய அறிவியல் துறையில் ஆய்விற்கு ஒப்படைத்ததாகவும் 01.07.2020–ம் தேதி தன்னிடம் கொடுக்கப்பட்ட சட்டை மற்றும் லுங்கியை கோவில்பட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1–ல் ஒப்படைதத்தாகவும், மருத்துவர் பிரேத கூறாய்வு அறிக்கையும், கொரோனா சான்றும் மருத்துவமனையில் தயாராக

இருப்பதாக சொன்னதன் அடிப்படையில், மேற்படி சான்றுகளை மருத்துவமனையில் இருந்து பெற்று, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தான் ஒப்படைத்ததாகவும், தன்னை கோவில்பட்டி நீதித்துறை நடுவர் விசாரித்ததாகவும் தன்னிடம் காட்டப்படுவது அன்று தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட இரத்தக்கறை படிந்த சட்டை என்றும் அது அ.சா.பொ.2 என்றும் தன்னிடம் காட்டப்படுவது அன்று தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட இரத்தக்கறை படிந்த லுங்கி என்றும் அது அ.சா.பொ.3 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6.28 அ.சா.28 திரு.சிவக்குமார், தான் கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் இரண்டாம் நிலைக்காவலராக 2019–ம் வருடம் நவம்பர் மாதம் முதல் பணிபுரிவதாகவும் 24.06.2020 அன்று கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய ஆய்வாளர் திரு.சுதேசன் அவர்கள் உத்தரவின்பேரில் கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய கு.எ.ண்.649/2020 பிரிவு 176 (1) (A1) வழக்கில் இறந்துபோன பென்னிக்ஸ் என்பவரது பிரேத பரிசோதனை அலுவல் பணியாக திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று கோவில்பட்டி நீதித்துறை நடுவர் முன்பு தான் ஆஜராகி Report செய்ததாகவும் அவர் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி டீன் அவர்களிடம் பணி அறிக்கை செய்ய சொன்னார் என்றும் தான் டீன் முன்பு சென்று பணி அறிக்கை செய்ததாகவும் அன்று இரவு 08.20 மணிக்கு பென்னிக்ஸ் என்பவரின் பிரேத பரிசோதனை ஆரம்பமானது என்றும், மருத்துவர்.திரு.செல்வமுருகன் என்பவர் பென்னிக்ஸ் அணிந்திருந்த கைலி, ஒரு முழுக்கை சட்டை ஆகியவற்றை நீதித்துறை நடுவரிடம் ஒப்படைத்தார் என்றும், நீதித்துறை நடுவர் அதை தன்னிடம் பத்திரமாக காவல்நிலையத்தில் வைத்திருங்கள் என்றும், தான் கேட்கும்போது தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் சொன்னார் என்றும், தான் அந்த கைலி மற்றும் சட்டையை வாங்கி பார்க்கும்போது அந்த கைலியானது வெள்ளை நிறத்தில் கருப்பு கோடு போட்ட கலரில் இரத்தம் படிந்திருந்தது என்றும், அந்த முழுக்கை சட்டையானது ஊதா நிறத்தில் நீலம், வெள்ளைகோடு மற்றும் கட்டம் போடப்பட்ட கலரில் இரத்தம் படிந்திருந்தது என்றும், 08.20 மணிக்கு பென்னிக்சின் உடலின் மீது பிரேத பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டு 10.15 மணிக்கு முடிந்தது என்றும், அன்று இரவு

நேரமாகிவிட்டதால் பென்னிக்சின் உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை என்றும், தானும் தன்னுடன் பணிபுரியும் கருப்பசாமி என்ற காவலரும் கிழக்கு காவல் நிலைய ஆய்வாளர் திரு.சுதேசன் அவர்களிடம் ஆடைகளை ஒப்படைத்ததாகவும் அதை அவர் காவல்நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கச் சொன்னார் என்றும், கருப்பசாமி கொண்டு வந்த ஆடைகளை தன்னிடமே கொடுத்து அதை நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கச் சொன்னார் என்றும் அதன்பிறகு, தான் கொண்டு வந்த ஆடைகளையும், கருப்பசாமி கொண்டு வந்த ஆடைகளையும் நிலையத்தில் பாதுகாப்பாக வைத்ததாகவும் 25.06.2020 அன்று திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்று பென்னிக்ஸ் என்பவரது உடலை மதியம் 02.00 மணிக்கு அவரது அக்கா, அம்மா ஆகியோரிடம் ஒப்படைத்ததாகவும், பின்பு 29.06.2020 அன்று மருத்துவனையிலிருந்து தகவல் கிடைத்து தான் பென்னிக்சின் உள்ளுறுப்புகளை பெற்று திருநெல்வேலி வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்ததாகவும் கருப்பசாமியும் ஜெயராஜின் உள்ளுறுப்புகளை ஜெயராஜின் உள்ளுறுப்புகளை திருநெல்வேலி வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்ததாகவும், 01.07.2020 அன்று கோவில்பட்டி, நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்திலிருந்து வந்த தகவலின்பேரில், நிலையத்தில் பாதுகாப்பாக பேக்கிங் செய்து வைத்திருந்த ஆடைகளை ஆய்வாளர் சொன்னதின்பேரில், காவல்நிலையத்தில் கொடுத்த கடிதத்தின் அடிப்படையில் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1, நீதிபதியிடம் தாங்கள் இருவரும் ஒப்படைத்ததாகவும் வெள்ளை நிறத்தில் கருப்பு கோடு போட்ட இரத்தம் படிந்த கைலி ஒன்று மற்றும் ஊதா நிறத்தில் நீலம், வெள்ளை கோடு, கட்டம்போட்ட இரத்தம் படிந்த முழுக்கை சட்டை ஒன்று ஆகியவற்றை ஒப்படைத்ததாகவும் திருநெல்வேலி மருத்துவமனையில் கிடைத்த தகவலின் பேரில் காவல்நிலையத்தில் சொன்னதின் அடிப்படையில் திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்குச் சென்று, பிரேத விசாரணை அறிக்கையும், கொரோனா சான்றினையும் பெற்று கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களிடம் ஒப்படைத்ததாகவும், கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களிடம் ஆடைகளை தான் ஒப்படைத்தற்கான அத்தாட்சி அ.சா.ஆ.48, என்றும், கருப்பசாமி அவ்வாறு

ஆடைகளை ஒப்படைத்தற்கான அத்தாட்சி அ.சா.ஆ.49 என்றும் தான் ஒப்படைத்த கைலி அ.சா.பொ.4 என்றும் தான் ஒப்படைத்த சட்டை அ.சா.பொ.5 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6.29 அ.சா.29 திரு.முருகன், தான் கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் பணிபுரிந்தபோது கடந்த 22.06.2020 அன்று இரவு சுமார் 10.30 மணியளவில் நிலைய பொறுப்பில் தான் இருந்தபோது கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலை கண்காணிப்பாளர் திரு.சங்கர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று, கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய கு.எ.ண்.649/2020 சட்டப்பிரிவு 176 (1)(A)(1) சி.ஆர்.பி.சி படி வழக்கினை பதிவு செய்ததாகவும் மேற்படி புகார் சாத்தான்குளம் காவல்நிலைய கு.எண்.312/2020 வழக்கின் விசாரணை சிறைவாசியாக கிளைச்சிறைச்சாலையில் இருந்த பென்னிக்ஸ் வயது 31 என்பவரை கோவில்பட்டி அரசுமருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தாகவும், சிகிச்சை பலனளிக்காமல் இறந்துவிட்டதாகவும், சிறைவாசியின் மரணம் குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் புகார் கொடுக்கப்பட்டதாகவும், அந்த புகார் மனுவை பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கையை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்ததாகவும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், விசாரணைக்காக ஒரு நகலை நிலைய ஆய்வாளர் திரு.சுதேசன் அவர்கள் பார்வைக்கும் வைத்ததாகவும், அந்த புகார் அ.சா.ஆ.5 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அதில் தான் கையெழுத்து செய்துள்ளதாகவும் அதனடிப்படையில் தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.50 என்றும் மறுநாள் 23.06.2020 அன்று காலை 06.45 மணியளவில் தான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலை கண்காணிப்பாளர் திரு.சங்கர் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று மேற்படி நிலைய கு.எண்.650/2020 சட்டப்பிரிவு 176 (1)(ஏ)(1) சிஆர்பிசி–ன் படி வழக்கு பதிவு செய்ததாகவும், புகாரானது சாத்தான்குளம் காவல்நிலைய கு.எண்.312/2020 வழக்கின் விசாரணை சிறைவாசியாக கிளைச்சிறையிலிருந்த ஜெயராஜ் வயது 58 என்பவர்

சிகிச்சைக்காக கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர், சிகிச்சை பலனளிக்காமல் இறந்துவிட்டதாகவும், சிறைவாசியின் மரணம் குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் புகார் கொடுக்கப்பட்டது என்றும் அந்த புகார் அ.சா.ஆ.6 ஆக ஏற்கனவே குறியீடு செய்யபட்டுள்ளது என்றும் அதில் தான் கையெழுத்து செய்துள்ளதாகவும், அதனடிப்படையில் தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.51 என்றும் முதல் தகவல் அறிக்கையை கணம் குற்றவியல் நடுவர் எண்.1 கோவில்பட்டி அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை புலன்விசாரணைக்காக ஆய்வாளர் திரு.சுதேசன் அவர்கள் பார்வைக்கும் வைத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

6.30 ஜெயராஜின் உறவினர் தாவீது அ.சா.30 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் ஷேர் ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருவதாகவும் சி.பி.ஐ போலீசார், நீதிபதி மற்றும் சி.பி.சி.ஐ.டி தன்னை விசாரித்தார்கள் என்றும் இறந்துபோன ஜெயராஜ் தன்னுடைய அத்தான் என்றும் தன்னுடைய தம்பி தேசிங்குராஜா 19.06.2020 அன்று இரவு 08.00 மணியளவில் தன் வீட்டிற்கு வந்து ஜெயராஜை சாத்தான்குளம் போலீசார் பிடித்துக் கொண்டு சென்றுவிட்டார்கள் என்றும், அங்கு போகணும் நீங்களும் அங்கு வர வேண்டுமென்று தன்னை கூப்பிட்டார் என்றும், பின்பு தானும், தேசிங்குராஜாவும் பைக்கில் சாத்தான்குளம் காவல்நிலையம் சென்றதாகவும், போகும் வழியில் தனது தம்பி தேசிங்குராஜா பென்னிக்சை போனில் தொடர்பு கொண்டார் என்றும், ஆனால் பென்னிக்ஸ் போனை எடுக்கவில்லை என்றும் பின்னர் இரவு சுமார் 09.10 மணியளவில் சாத்தான்குளம் காவல்நிலையம் சென்றதாகவும், தேசிங்குராஜா வெளியே பைக்கை நிறுத்திவிட்டு நின்று கொண்டிருந்தார் என்றும் தான் காவல்நிலைய வாசல் அருகில் சென்றபோது அங்கு அடிக்கும் சத்தமும், அலறல் சத்தமும் கேட்டது என்றும் தான் உள்ளே முன்னோக்கி செல்லும்போது காவல்நிலையக்கதவு சாத்தப்பட்டிருந்தது என்றும், அப்போது கண்ணாடிகதவு வழியே பார்த்தபோது, பென்னிக்சை சில போலீசார்கள் பிடித்துக் கொண்டிருந்தார்கள் என்றும் சில போலீசார் அடித்தார்கள் என்றும் அதை தான் பார்த்ததாகவும் அப்போது, வெளியில் நின்ற சில போலீசார்

தன்னை பிடித்துத் தள்ளி உனக்கும் இந்த நிலைமை தான் ஏற்படும் இங்கு நிற்காதே என்று சொன்னதாகவும் அப்போது நிறைய பேர் நின்று கொண்டிருந்தார்கள் என்றும் ஒரு நபர் வழக்கறிஞர் ராஜாராம் மற்றொரு நபர் ரவிசங்கர் என்றும் எதற்காக ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை பிடித்து வந்திருக்கிறார்கள் என்று கேட்டதற்கு அவர் முந்தையநாள் ஜெயராஜ், பென்னிக்ஸ் கடையை அதிகநேரம் திறந்து வைத்ததால், அவர்களை விசாரிப்பதற்காக கொண்டு வந்துள்ளார்கள் என்று சொன்னார் என்றும், 12.00 மணி வரை காவல்நிலையத்தில் இருந்ததாகவும் அதுவரையில் எந்தவித தகவலும் எங்களுக்குத் தெரியவில்லை என்றும் பிறகு வழக்கறிஞர் ராஜாராம், ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் இப்போது ஜாமீனில் எடுக்க முடியாது என்றும் சொன்னார் என்றும், இரவு சுமார் 12.45 மணியளவில் தாங்கள் செல்வராணி வீட்டிற்கு சென்றதாகவும் தான் காவல்நிலையம் சென்றபோது, கீழ்தளத்தில் இருட்டாக இருந்தது என்றும் மேல்தளத்தில் வெளிச்சமாக இருந்தது என்றும் அலறல் சத்தம் தன்னுடைய அத்தான் சத்தமாக இருந்ததால் தான் அருகில் சென்றதாகவும், அவ்வாறு தான் பார்க்கும் போது போலீசார் அடித்துக் கொண்டிருந்தார்கள் என்றும் மறுநாள் காலை 06.45 மணிக்கு மேல் சாத்தான்குளம் காவல்நிலையம் சென்றபோது சாத்தான்குளம் காவல்நிலையத்தில் இருந்து டாடா சுமோ வெளியே வந்து சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு வந்தது என்றும் அந்த வண்டியில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இருந்தார்கள் என்றும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் வண்டியில் இருந்து இறங்கி மருத்துவமனையின் உள்ளே சென்றார்கள் என்றும் அப்போது ஜெயராஜின் வேஷ்டி முழுவதும் இரத்தமாக இருந்தது என்றும் பென்னிக்சின் சாரத்தில் இரத்தமாக இருந்தது என்றும் அவர்கள் இருவரும் நடக்க முடியாமல் குனிந்து மருத்துவமனைக்குள் சென்றார்கள் என்றும் அப்போது பென்னிக்ஸ் தன்னைப் பார்த்து தன்னை எப்படியாவது காப்பாற்றுங்கள், வெளியே எடுங்கள் என்று சொன்னார் என்றும் பின்னர் 22.06.2020–ம் தேதி தனது தம்பி தேசிங்குராஜா பென்னிக்ஸ் இறந்துவிட்டதாக தன்னிடம் சொன்னார் என்றும் பின்னர் மறுநாள் காலை 07.00 மணியளவில் ஜெயராஜூம் இறந்துவிட்டதாக தகவல் கிடைத்தது என்றும், பின்னர் 24.06.2020 அன்று தன்னை பிரேத விசாரணைக்கு

நீதிபதி அவர்கள் அழைத்தார்கள் என்றும் தானும், வினோத், பொன்சேகர் ஆகியோர்கள் நீதிபதி நடத்திய பிரேத விசாரணைக்கு சென்றதாகவும், 24.06.2020 அன்று சுமார் 03.15 மணியளவில் பென்னிக்ஸ் உடம்பை நீதிபதி அவர்கள் பிரேத விசாரணை செய்தார் என்றும், பென்னிக்சின் உடம்பில் சுமார் 25 காயங்களுக்கு மேல் இருந்தது என்றும், பின்பக்கம் புட்டத்தில் சதையே இல்லை என்றும், சதையை பிய்த்து எடுத்தது போல் இருந்தது என்றும், ஆசணவாய் இரண்டு பகுதியிலும் கம்பை வைத்து குத்தியது போல் இருந்தது என்றும், இடது கை மற்றும் வலது கை, உள்ளங்கை, தோள்பட்டை, விலாவிலும், குதிக்கால், உள்ளங்கால் ஆகிய இடங்களில் ஏகப்பட்ட காயங்கள் இருந்தது என்றும், பிறகு ஆய்வு முடிந்ததும் பென்னிக்சை கொண்டு போய் வைத்துவிட்டார்கள் என்றும், பின்னர் ஜெயராஜின் பிரேதவிசாரணை சுமார் 04.15 மணியளவில் நடந்தது என்றும் அந்த பிரேத விசாரணையிலும் தான் பார்த்த வரையில் சுமார் 25 காயங்களுக்கு மேல் இருந்தது என்றும் மேலும், உயிர்நாடிக்கு கீழ் விரைக்கொட்டையில் அடித்து கொப்புளம் போல் இருந்தது என்றும், மேலும், ஆசணவாயில் இருபகுதியிலும் குத்தியது போல் இருந்தது என்றும் முதுகில் கம்பை வைத்து அடித்தது போல் தடம் இருந்தது என்றும் மூக்கில் அடியும், கையில் அடியும் மற்றும் பல இடங்களில் ஏகப்பட்ட காயங்கள் இருந்தது என்றும், தான் பிரேத விசாரணை அறிக்கையில் கையெழுத்து செய்துள்ளதாகவும், அந்த பிரேதவிசாரணை அறிக்கை பக்கம் எண்.6–ல் வரிசை எண்.16–ல் உள்ள முதல் கையெழுத்து தன்னுடைய கையெழுத்து தான் என்றும், இரண்டாவது உள்ள கையெழுத்து பொன்சேகரின் கையெழுத்து என்றும், மூன்றாவதாக உள்ள கையெழுத்து வினோத் அவர்களின் கையெழுத்து என்றும், மேற்படி ஜெயராஜ் என்பவரின் பிரேத விசாரணை அறிக்கையில் உள்ள தன்னுடைய கையெழுத்து அ.சா.ஆ.52 என்றும் தன்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ளது தன்னுடைய கையெழுத்து என்றும் அது அ.சா.ஆ.53 என்றும், பென்னிக்ஸ் என்பவரின் பிரேத விசாரணை அறிக்கையில் உள்ள கையெழுத்து தன்னுடைய கையெழுத்து என்றும் அது அ.சா.ஆ.54 என்றும் தன்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையது என்றும், அந்த கையெழுத்து அ.சா.ஆ.55 என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான்

நீதிபதி அவர்கள் முன்பு தான் கொடுத்த வாக்குமூலம் என்றும், அதில் ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அந்த கையெழுத்துக்கள் அ.சா.ஆ.56 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6.31 அ.சா.2 கொடுத்த புகாரின் பேரில் பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜின் இறப்பு குறித்து முதல் தகவலறிக்கை பதிவு செய்துள்ள காவல் ஆய்வாளர் திரு.சுதேசன் அ.சா.31 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் 2020–ம் வருடம் ஜூன் மாதம் கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய காவல் ஆய்வாளராக பணிபுரிந்ததாகவும் தன்னை சி.பி.ஐ போலீசார் 03.09.2020–ம் தேதியன்று விசாரித்தாகவும், 22.06.2020–ம் தேதி கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு.முருகன் என்பவர் நிலையப்பணியில் இருக்கும்போது அன்று இரவு 10.30 மணியளவில் திரு.சங்கர், கண்காணிப்பாளர் கிளைச்சிறைச்சாலை கோவில்பட்டி என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமாக கொடுத்த புகாரினைப் பெற்று, அந்த புகாரின் தன்மைப்படி பதிவு செய்யப்பட்ட கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையக்குற்ற எண்.649/2020 பிரிவு 176, 1 (A), (i), Cr.P.C–ன் படி பதிவு செய்யப்பட்ட வழக்கினை தனது விசாரணைக்கு வைத்ததை தான் பெற்றுக்கொண்டதாகவும், நீதிமன்றக்காவலில் இருந்த நபர் சிறைக்காவலில் இருக்கும்போது உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தவர், சிகிச்சை பலனின்றி இறந்து போனதாக தெரியவந்ததால், இந்த வழக்கின் விசாரணை அதிகாரியாக ஒரு குற்றவியல் நீதிமன்ற நடுவர் அவர்களை நியமிக்கக்கோரி தூத்துக்குடி மாவட்ட முதன்மை குற்றவியல் நடுவர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் வைத்ததாகவும், அந்த வேண்டுகோளின்படி கோவில்பட்டி குற்றவியல் நடுவர் எண்.1, அவர்களை மாவட்ட தலைமை குற்றவியல் நடுவர் அவர்கள் நியமித்து ஒரு ஆணை பிறப்பித்ததாகவும், அந்த ஆணையை கோவில்பட்டி குற்றவியல் நடுவர் எண்.1 அவர்களிடம் ஒப்படைத்ததாகவும், அதனைப் பெற்றுக்கொண்ட கோவில்பட்டி குற்றவியல் நடுவர் எண்.1 தனக்கு உதவியாக இரண்டு காவலர்களை நியமிக்கும்படி கோரியிருந்தார் என்றும், அதன்படி காவலர் கருப்பசாமி மற்றும் சிவக்குமார் ஆகியோரை நியமித்ததாகவும், அதே நேரத்தில்

23.06.2020–ம் தேதி கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு.முருகன் அவர்கள் நிலையப்பணியில் இருக்கும்போது காலை 06.45 மணியளவில் கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலை கண்காணிப்பாளர் திரு.சங்கர் என்பவர் நிலையம் ஆஜராகி அந்த கிளைச்சிறைச்சாலையில் விசாரணை கைதியாக இருந்த ஜெயராஜ் என்பவர் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக உள்நோயாளியாக சேர்க்கப்பட்டிருந்தவர் சிகிச்சை பலனின்றி அதிகாலை 05.40 மணியளவில் இறந்துவிட்டதாகவும், இதுகுறித்து சட்ட நடவடிக்கை எடுக்கும்படி எழுத்துமூலமாக கொடுத்த புகாரினைப் பெற்று கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண்.650/2020 பிரிவு 176,1 (A), (i), Cr.P.C–ன் படி பதிவு செய்யப்பட்ட வழக்கினை தனது விசாரணைக்கு வைத்ததை தான் பெற்றுக்கொண்டு நீதிமன்றக்காவலில் இருந்த நபர் சிறைக்காவலில் இருக்கும் போது உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தவர், சிகிச்சை பலனின்றி இறந்து போனதாக தெரிய வந்ததால், இந்த வழக்கின் விசாரணை அதிகாரியாக ஒரு குற்றவியல் நீதிமன்ற நடுவர் அவர்களை நியமிக்கக்கோரி தூத்துக்குடி மாவட்ட தலைமை குற்றவியல் நடுவர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் வைத்ததாகவும், அந்த வேண்டுகோளின்படி கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களை மாவட்ட தலைமை குற்றவியல் நடுவர் அவர்களை நியமித்து ஒரு ஆணை பிறப்பித்ததாகவும், அந்த ஆணையை கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களிடம் ஒப்படைத்ததாகவும், கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்கள் இந்த வழக்கின் புலன் விசாரணை செய்து கொண்டிருக்கும் போது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை Writ Petition (MD) No.7042/2020 dated on 26.06.2020ம் தேதியிட்ட உத்தரவின்படி தன்னிடம் விசாரணைக்கு இருந்த கோவில்பட்டி காவல்நிலையக் குற்ற எண். 649/2020 மற்றும் 650/2020 பிரிவு 176, 1(A), (i) of Cr.P.C. வழக்கின் கோப்புகளை கோவில்பட்டி உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளர் அவர்களிடம் ஒப்படைத்ததாகவும், காவல்நிலையக்குற்ற எண்.649/2020–கான கோப்பு அ.சா.ஆ.57

என்றும், காவல்நிலைய குற்ற எண்.650/2020–கான கோப்பு அ.சா.ஆ.58 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6.32 மாற்றுத்திறனாளி அ.சா.33 திரு.வேல்முருகனின் சாட்சியத்தை அ.சா.32 திரு.சுப்பிரமணியன் மொழி பெயர்த்து கூறியுள்ளார். அவர் தான் நல்லாயன் செவித்திறன் குறையுடையோர் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருவதாகவும், தமிழ்நாடு அரசுப் பள்ளிக்கல்வித்துறையில் தான் தூத்துக்குடியில் வேலை செய்வதாகவும் சி.பி.ஐ போலீசார் வேல்முருகன் அவர்களை விசாரிக்கும்போது தன்னை உதவியாக இருக்க சொல்லி வரச்சொன்னதாகவும், வேல்முருகன் என்பவருக்கு வாய் பேச முடியாது என்றும், செவித்திறன் கிடையாது என்றும், வேல்முருகன் சொல்வதை மொழிபெயர்த்து வரச் சொன்னதாகவும், சி.பி.ஐ போலீசார் வேல்முருகன் அவர்கள் விசாரணையில் சொன்னதை தான் மொழிபெயர்த்து கூறியதாகவும், சாட்சியமளித்துள்ளார்.

6.33 அ.சா.33 திரு.வேல்முருகன் 20.06.2020–ம் தேதியை எழுதி காண்பித்து காலையில் காவல்நிலையத்தை சுத்தம் செய்ய சென்றதாகவும், அங்கு பணியில் இருந்தவர் அனைத்து இடங்களையும் சுத்தம் செய்ய சொன்னதாகவும் மற்றும் டேபிள், சுவரில் இருந்த கறைகளை சுத்தம் செய்ததாகவும் மோசமான வாசம் வந்ததாகவும், கறைகளை துடைத்துவிட்டு, வாசனைக்காக லிக்விட் தெளிக்கச் சொன்னார்கள் என்றும் எல்லாவற்றையும் சுத்தம் செய்துவிட்டு, ஒரு துணி மற்றும் கம்பு அதை எடுத்துவிட்டு வெளியே சென்றுவிட்டு, சாப்பிடுவதற்காக பைசா கொடுத்துவிட்டு சென்றுவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், இரத்தக்கறை என்றால் என்ன என்று கேட்கப்பட்டதற்கு சாட்சி இடதுகையை குறுக்குவட்டாக காண்பித்து சாட்சியம் அளித்துள்ளார். மொழிபெயர்ப்பாளர் நீதிமன்றத்தின் முன்பாக மொழி பெயர்த்து அவர் செய்த செய்கையானது இரத்தக்கறை என்று கூறியுள்ளார் அவர் காவல்நிலையத்திலுள்ள பூச்செடிகளுக்கும் தண்ணீர் பாய்ச்சுவதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் 20.06.2020–ம் தேதியில் காவலர் ஒருவர் காவல்நிலையத்தை

சுத்தம் செய்ய சொன்னார் என்றும், அங்கு இரத்தம் உறைந்து இருந்தது என்றும், கழுவிவிட்டு சுத்தம் செய்யும்படி கூறினார் என்றும், ஹால், சுவர் மற்றும் பாத்ரூமில் இரத்தம் இருந்ததை சுத்தம் செய்யச் சொன்னார்கள் என்றும், துர்நாற்றம் அடித்தது என்றும், தான் மேஜை, சுவர், ஹால், பாத்ரூம் ஆகியவற்றை பினாயில் ஊற்றி கழுவிவிட்டதாகவும், இரத்தம்படிந்த துணி மற்றும் கட்டையுடன் இருசக்கரவாகனத்தில் இரண்டு நபர்கள் வந்தார்கள் என்றும், இரத்தம்படிந்ததுணி, கட்டை ஆகியவற்றை தன்னுடன் வந்தவரிடம் கொடுத்ததாகவும், காவல்நிலையத்தில் ஒரு காவலர் தன்னை துடைக்க சொன்ன சொன்னார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் சாட்சி நீதிமன்ற கூண்டில் இருந்து இறங்கி, 1-ம் எதிரி ஸ்ரீதர் எனபவரை அடையாளம் காண்பித்து, அவர்தான் துடைக்கச் சொன்னதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் தன்னிடம் காண்பிக்கப்படும் நீதித்துறை நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அது அ.சா.ஆ.60 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.34 கோவிட்-19 தடை உத்தரவுகள் குறித்து சாட்சியமளித்துள்ள தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளராக பணியாற்றியுள்ள திரு.ஜான்சன் தேவசகாயம் அ.சா.34 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அலுவலக மேலாளராக (குற்றவியல்) 07.02.2020-ம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாகவும், சி.ஆர்.பி.சி.144-ன் கீழ் 01.06.2020 முதல் 30.06.2020 வரை தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், அந்த ஆவணத்தின் உத்தரவு நகலை சி.பி.ஐ போலீசாருக்கு கொடுத்தாகவும், அது அ.சாஆ.61 என்றும் அதில் 01.06.2020 முதல் 30.06.2020 வரை கோவிட் தொற்று காரணமாக பொதுமக்கள் வெளியில் செல்லக்கூடாது என்றும், அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் வெளியே செல்லலாம் என்றும், மேலும், உணவகங்கள், டீ ஸ்டால் ஆகியன காலை 06.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை திறந்திருக்க அனுமதி வழங்கியும் இதர கடைகள் மற்றும் டாஸ்மாக் கடைகள் காலை 10.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை திறந்திருக்கலாம் என்றும், அனுமதித்து மாவட்ட ஆட்சியரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், சி.பி.ஐ

விசாரணையின்போது மொபைல்ஸ் மற்றும் அக்சசரிஸ் கடைகள் இதர கடைகளில் வரும் எனவும், அவை காலை 10.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை திறந்திருக்க அனுமதிக்கப்பட்டதாக கூறியதாகவும், கோவில்பட்டி நீதித்துறை நடுவர் அவர்களுடைய விசாரணைக்கு சாத்தான்குளம் காவல்துறையினர் ஒத்துழைக்காத காரணத்தினால் மேற்படி சாத்தான்குளம் காவல்நிலையத்தை வருவாய்துறையினர் கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டும் என மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியதன் அடிப்படையில் 29.06.2020–ம் தேதியன்று திரு.செந்தூர்ராஜன் தனிவட்டாட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) மற்றும் திரு.சுவாமிநாதன், துணை வட்டாட்சியர் (தேர்தல்) ஆகியோர்களை நிர்வாக நடுவர்களாக நியமித்து சுழற்சி முறையில் பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் உத்தரவிடப்பட்டது என்றும், அது சம்மந்தமான ஆவணம் அ.சா.ஆ.62 என்றும், மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் நிர்வாக நடுவர்களாக நியமிக்கப்பட்ட திரு.செந்தூர்ராஜன் மற்றும் திரு.சுவாமிநாதன் ஆகியோர்களை 03.07.2020–ம் தேதியன்று திரும்ப பெறப்பட்டு மேற்படி பொறுப்பு சாத்தான்குளம் காவல்நிலைய அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும், அது சம்மந்தமான ஆவணம் அ.சாஆ.63 என்றும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து பிறப்பிக்கப்பட்ட 144 சி.ஆர்.பி.சி உத்தரவு குறித்த ஆவணங்கள் ஆவணங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக நேர்முக உதவியாளர், (பொது) அவர்களால் சி.பி.ஐ–க்கு கொடுக்கப்பட்டது என்றும், அது அ.சா.ஆ.64, அ.சா,ஆ.65 என்றும், அ.சா.ஆ.65 ஆவணத்தில் தூத்துக்குடி நகர்புறம் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டங்களிலும் கொரோனா காலத்தில் ஊரடங்கை மீறி செல்லும் நபர்கள் மீது அவர்களை கண்காணித்து நடவடிக்கை எடுக்கவும், உயர் அலுவலர்களுக்கு தகவல் தெரிவிக்கவும், கூடுதல் ஆட்சியர் அவர்களால் அலுவல்களை நியமித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.35 அ.சா.35 திரு.தாம்சன் தான் சாத்தான்குளம் காமராஜர் சிலை அருகில் ரத்னா பல் மருத்துவமனை என்ற பெயரில் சுமார் 14 வருடங்களாக பல் மருத்துவமனை வைத்துள்ளதாகவும், 18.06.2020 மற்றும் 19.06.2020 ஆகிய தேதிகளில் நோயாளிகளை பார்த்துக் கொண்டிருந்ததால் வெளியில் நடந்தது தனக்கு எதுவும் தெரியவில்லை என்று சி.பி.ஐ விசாரணையில் சொன்னதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.36 சாட்சி ரேவதியின் வாக்குமுலத்தை குவிமுச பிரிவு 164–ன் கீழ் பதிவு செய்துள்ள நீதித்துறை நடுவர் திரு.சக்திவேல் அ.சா.36 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் 2020–ம் வருடத்தில் நீதித்துறை நடுவர் எண்.3 ஆக தூத்துக்குடி மாவட்டத்தில் பணியில் இருந்த போது மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், தூத்துக்குடி அவர்களின் 01.07.2020ம் தேதியிட்ட உத்தரவுப்படி சாத்தான்குளம் குற்ற எண்.312/2020 சட்டப்பிரிவு 188, 269, 294பி, 353, 506(ii) மற்றும் தூத்துக்குடி சி.பி.சி.ஐ.டி குற்ற எண்.1/2020 சட்டப்பிரிவு 176(1–A) (1) Cr.P.C. @ 342, 302, 201 இ.த.ச பிரிவுகள் மற்றும் தூத்துக்குடி சி.பிசி.ஐ.டி குற்ற எண்.2/2020 சட்டப்பிரிவு 176(1–A) (1) Cr.P.C. @ 342, 302, 201 இ.த.ச பிரிவுகள் சம்பந்தமாக சாத்தான்குளம் தலைமைக்காவலர் சாட்சி ரேவதி என்பவரின் கு.வி.மு.ச. பிரிவு 164–ன் கீழான வாக்குமூலத்தை பதிவு செய்ய சாட்சிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டது என்றும், 03.07.2020–ன் தேதி அவர் நீதிமன்றத்தில் ஆஜரானார் என்றும், அவரிடமிருந்து சார்வு செய்யப்பட்ட அழைப்பாணை மற்றும் அடையாள அட்டை ஆகியவற்றை சரிபார்த்து நீதிமன்றத்தில் கதவுகளை பூட்டிய நிலையில், மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் சாட்சி ரேவதியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, ரேவதி சொன்ன வாக்குமூலங்கள் தன்னால் கைப்பட எழுதப்பட்டது என்றும், தான் வாக்குமூலம் எழுதும்போது நீதிமன்ற அறைகள் மற்றும் கதவுகள் மூடப்பட்ட நிலையில் இருந்தன என்றும், அலுவலக உதவியாளர் மற்றும் அலுவலகப்பணியாளர்கள் யாரும் இல்லை என்றும், தானும், சாட்சி ரேவதி என்பவர் மட்டுமே இருந்ததாகவும், பின்னர் அந்த வாக்குமூலத்தையும், டைப் செய்யப்பட்ட அதன் நகலையும் மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு கடித

எண்.535/2020 தேதி 04.07.2020-ம் தேதியன்று அனுப்பி வைத்தாகவும், குற்றவியல் பல்வகை மனு எண்.Cr.M.P.No.2306/2020 கொடுக்கப்பட்டு அந்த வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்றும், தான் கொடுத்த கடிதம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ரேவதியின் 164 கு.வி.மு.ச வாக்குமூலம் மற்றும் நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணை மற்றும் சாட்சி ரேவதி என்பவரின் அடையாள அட்டை ஆகியவைகள் அ.சா.ஆ.66 என்றும், ரேவதி தன் முன்னிலையில் சொல்லச் சொல்ல அதை தான் எழுதியதாகவும், அதை அவர் படித்துப் பார்த்து கையெழுத்து செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.37 ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் சடல கூறாய்வு குறித்த வீடியோ புகைப்படம் எடுத்துள்ள திரு.கோபி அ.சா.37 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் 2018 முதல் 2021 வரை தூத்துக்குடி மாவட்டத்தில் ஆயுதப்படையில் இரண்டாம்நிலைக் காவலராக பணியில் இருந்ததாகவும், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகைப்படப்பிரிவு என்று ஒரு பிரிவு உள்ளது என்றும், அந்த பிரிவில் தானும், முதல்நிலைக் காவலர் சுடலைமுத்து என்பவரும் பணியாற்றியதாகவும், நீதித்துறை நடுவர் தன்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார் என்றும், 23.06.2020-ம் தேதியன்று தூத்துக்குடி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலக தனிப்பிரிவில் இருந்து தங்கள் புகைப்பட பிரிவிற்கு தொலைபேசி மூலம் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனையை வீடியோ எடுக்க போக வேண்டும் என்று தகவல் கிடைத்தது என்றும், தனது மூத்த அதிகாரியான சுடலைமுத்து வேறு பணியில் இருந்ததால் தன்னை போகும்படி உத்தரவிடப்பட்டது என்றும், தான் கேமராக்களை எடுத்துக் கொண்டு அன்று திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்று ஆய்வாளர் சுதேசனிடம் report செய்ததாகவும், போஸ்ட்மார்ட்டம் நாளை தான் நடைபெறும் என அவர் தன்னிடம் கூறினார் என்றும், மறுநாள் காலை 08.00 மணியளவில் திருநெல்வேலி மருத்துவமனைக்கு சென்று சுதேசன் என்பவரிடம் தகவல் தெரிவித்ததாகவும், அன்று இரவு 08.30 மணியளவில் பிரேத பரிசோதனை அறைக்கு தன்னை அழைத்தார்கள் என்றும், பிரேத பரிசோதனை

அறைக்கு தான் செல்லும்போது நீதித்துறை நடுவர் அங்கு இருந்தார் என்றும், மூன்று மருத்துவர்கள் இருந்தார்கள் என்றும், இரண்டு போலீசார் இருந்தார்கள் என்றும், நீதித்துறை நடுவரின் உதவியாளர் ஒருவர் இருந்தார் என்றும், மருத்துவருக்கு பிரேத பரிசோதனை செய்வதற்கு உதவியாக உதவியாளர் ஒருவர் இருந்தார் என்றும், பிரேத பரிசோதனை அறையில் பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் ஆகியோருடைய உடல்கள் இருந்தது என்றும், மருத்துவர்கள் முதலில் பென்னிக்ஸ் என்பவரின் உடலில் ஏற்பட்ட காயங்கள் மற்றும் இரத்தக்கட்டுகள் ஆகியவற்றை தன்னிடம் ஒவ்வொன்றாக எடுத்துக் காட்ட தான் புகைப்படம் எடுத்ததாகவும், பின்னர் ஜெயராஜ் என்பவரின் உடலில் ஏற்பட்ட காயங்கள் மற்றும் இரத்தக்கட்டுகள் ஆகியவற்றை மருத்துவர் தன்னிடம் ஒவ்வொன்றாக எடுத்துக் காட்ட தான் அவற்றை புகைப்படம் எடுத்ததாகவும், பிறகு இரவு 08.50 மணியளவில் பென்னிக்ஸ் என்பவரின் பிரேத பரிசோதனை ஆரம்பித்தது என்றும், அதை வீடியோ பதிவு செய்ய சொன்னார்கள் என்றும், பென்னிக்ஸ் என்பவரின் பிரேத பரிசோதனை 08.50 மணி முதல் 10.10 வரை நடந்தது என்றும், அதை வீடியோவாக பதிவு செய்ததாகவும், வீடியோ பதிவு செய்த பிறகு memory card–ல் உள்ள பதிவுகள் சரியாக உள்ளதா என்று சரிபார்த்து அதை தனியாக எடுத்து, ஒரு கவரில் போட்டு வைத்ததாகவும், பின்னர் ஐந்து நிமிடம் கழித்து ஜெயராஜ் என்பவரின் பிரேத பரிசோதனை இரவு 10.15 மணியளவில் ஆரம்பித்தது என்றும், இரவு 11.30 வரை அது நடந்தது என்றும், அதை வீடியோவாக பதிவு செய்ததாகவும், வீடியோ பதிவு செய்த பிறகு memory card–ல் உள்ள பதிவுகள் சரியாக உள்ளதா என்று சரிபார்த்து அதை தனியாக எடுத்து, அதை தனியாக ஒரு கவரில் போட்டு வைத்ததாகவும், பின்னர் பென்னிக்சுக்கு புகைப்படம் எடுத்த ஒரு memory card (16 G.B)ம், மற்றும் வீடியோ பதிவு செய்த memory card (32 G.B.)–ம், ஜெயராஜிற்கு புகைப்படம் எடுத்த ஒரு memory card (8 G.B.)–ம் வீடியோ பதிவு செய்த ஒரு memory card (8G.B) மொத்தமாக நான்கு memory card–களை நீதித்துறை நடுவரிடம் கொடுத்ததாகவும், அந்த memory card–கள் Sandisk நிறுவனத்தை சார்ந்தவை என்றும், பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் ஆகியோருக்கு உடல் முழுவதும் காயங்கள் இருந்தது என்றும், இரத்தம் கன்றிய நிலையில் காயங்கள் இருந்தது என்றும், இருவரது புட்டத்திலும் காயங்கள் இருந்தது என்றும், மேற்படி காயங்களை

மருத்துவர்கள் பார்த்து எழுதிக் கொண்டார்கள் என்றும், தன்னிடம் காண்பிக்கப்படுவது sandisk ultra 8G.B containing Postmortem picture of Jeyaraj என்றும், அது அ.சா.பொ.6 என்றும், தன்னிடம் காண்பிக்கப்படுவது sandisk ultra 8G.B containing Postmortem Videos of Jeyaraj என்றும், அது அ.சா.பொ.7 என்றும், தன்னிடம் காண்பிக்கப்படுவது sandisk ultra 16 G.B containing Postmortem picture of Bennicks என்றும், அது அ.சா.பொ.8 என்றும், தன்னிடம் காண்பிக்கப்படுவது sandisk ultra 32 G.B containing Postmortem Videos of Bennicks என்றும், அது அ.சா.பொ.9 என்றும், தன்னிடம் காண்பிக்கப்படுவது நீதித்துறை நடுவர் அவர்களிடம் தான் கொடுத்த வாக்குமூலம் ஆகும். அதில் தன்னுடைய கையெழுத்து உள்ளது என்றும் அந்த கையெழுத்து அ.சா.ஆ.67 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.38 சென்னையில் பாரதி ஏர்டெல் லிமிடெட் என்ற நிறுவனத்தில் நோடல் ஆபிசராக பணியாற்றியுள்ள திரு.டேவிட் ஜோசப் பால்ராஜ் அ.சா.38 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் 1997–ம் வருடம் முதல் பணிபுரிந்து வருவதாகவும், 14.09.2020ம் தேதியன்று சி.பி.ஐ காவல்துறை கண்காணிப்பாளர் என்பவரிடமிருந்து கடிதம் வந்தது என்றும், கைபேசி எண்.9994068656 என்ற எண்ணிற்கான Customer application form மற்றும் 18.06.2020 முதல் 22.06.2020 வரை call data record கேட்டிருந்தார்கள் என்றும், அவர்கள் கேட்ட கடிதத்திற்கு தான் 16.09.2020–ம் தேதியன்று கடிதம் மூலம் customer application form விபரங்களையும், மற்றும் call data record விபரங்களை 65(B) சான்றிட்டு சி.பி.ஐ போலீசாருக்கு கொடுத்தாகவும், தான் கொடுத்த கடிதம், 65(B) சான்றிதழ், பென்னிக்ஸ் அவர்களின் customer application form மற்றும் call data records ஆகியவைகள் அடங்கிய கோப்பு அ.சா.ஆ.68 என்றும், அ.சா.ஆ.68–ல் தன்னுடைய கையொப்பம் உள்ளது என்றும் மற்றும் எல்லா ஆவணங்களிலும் தன்னுடைய கையொப்பம் உள்ளது என்றும், மேற்கண்ட அ.சா.ஆ.68–ல் 19.06.2020ம் தேதியன்று இரவு 07.00 மணிக்கு பின் மேற்படி பென்னிக்ஸ் என்பவரின் கைபேசியில் இருந்து மாலை 07.48 மணிக்கு 96 விநாடிகள் outgoing call சென்றுள்ளன என்றும், அந்த outgoing call கைபேசி எண்.9994068656–ல் இருந்து கைபேசி எண்.9965479899 என்ற கைபேசி

எண்ணிற்கு சென்றுள்ளது என்றும், அதே தேதியில் மாலை 07.51 மணிக்கு கைபேசி எண்.9994068656–ல் இருந்து கைபேசி எண்.6383702846 என்ற எண்ணிற்கு 27 விநாடிகள் outgoing call சென்றுள்ளது என்றும், அதன் பின்னர் கைபேசி எண்.9994068656–ல் இருந்து outgoing call எதுவும் சென்றதாக இல்லை என்றும், அதன்பிறகு incoming, S.M.S மட்டும் தான் வந்துள்ளது என்றும், பென்னிக்ஸ் பெயரில் கைபேசி எண்.9994068656 27.02.2018–ம் தேதியன்று வாங்கப்பட்டது என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

6.39 B.S.N.L. நிறுவனத்தில் பணியாற்றியுள்ள திரு.முரளிதரன் அ.சா.39 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் B.S.N.L. நிறுவனத்தில் ஜனவரி 31, 2020–ம் வருடம் முதல் கோட்டப் பொறியாளராக சேலம் மாவட்டத்தில் பணிபுரிந்து வருவதாகவும், கைபேசி எண்.9443871591 என்ற எண்ணுக்கு 18.06.2020 முதல் 24.06.2020 வரை உள்ள கைபேசி அழைப்பு விபரங்களை (call details records) 65–B certified செய்து சி.பி.ஐ அதிகாரிகளுக்கு Nodal Officer மூலமாக கொடுத்துள்ளதாகவும், கைபேசி எண்.9443871591 என்ற எண்ணுக்கு 18.06.2020 முதல் 24.06.2020 வரை உள்ள கைபேசி அழைப்பு விபரங்களை (call details records) கொடுக்குமாறு தனக்கு சி.பி.ஐ அதிகாரிகளிடமிருந்து கடிதம் வந்தது என்றும், அந்த கடிதம் அ.சா.ஆ.69 என்றும், கைபேசி எண்.9443871591 என்ற எண்ணுக்கு 18.06.2020 முதல் 24.06.2020 வரை உள்ள கைபேசி அழைப்பு விபரங்கள் (call details records) அ.சா.ஆ.70 என்றும், அ.சா.ஆ.70 ஆவணத்தின் அனைத்து பக்கங்களில் தான் கையொப்பம் செய்துள்ளதாகவும், மேற்படி அ.சா.ஆ.70 ஆவணமானது Nodal officer B.S.N.L. தமிழ்நாடு சர்க்கிள் மூலமாக சி.பி.ஐ–க்கு கொடுக்கப்பட்டது என்றும், மேற்படி கைபேசி எண்.9443871591 என்ற எண்ணானது P.ஜெயராஜ் பெயருக்கு கொடுக்கப்பட்டதாகும் என்றும், 19.06.2020–ம் தேதியன்று மாலை 07.00 மணிக்கு மேல் இரண்டு அழைப்புகள் அதாவது மாலை 07.00 மணி 11.00 செகண்டிற்கு outgoing call ஆனது 24 செகண்டிற்கு சென்றுள்ளது மற்றும் மாலை 07.00 மணி 45 நிமிடம் 13 செகண்ட்டில் incoming call ஆனது 9 செகண்டிற்கு வந்துள்ளது என்றும், மேற்படி இரண்டு அழைப்புகளுக்கு

பின்னர் எந்த அழைப்புகளும் 19.06.2020 முதல் 24.06.2020–ம் தேதி வரை வரவில்லை என்றும், அழைப்புகளும் செல்லவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.40 பி.எஸ்.என்.எல் நிறுவனத்தில் D.G.M. ஆக பணியாற்றியுள்ள திருமதி.திலகவதி அ.சா.40 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் தற்போது பி.எஸ்.என்.எல் நிறுவனத்தில் D.G.M. (Deputy General Manager) ஆக பணிபுரிந்து வருவதாகவும், தான் 31.01.2020 முதல் 20.04.2022 வரை தான் சென்னை பி.எஸ்.என்எல் நிறுவனத்தில் D.G.M., (Deputy General Manager) (Billing and Customer care service) ஆக பணிபுரிந்ததாகவும், மேலும் அந்த சமயத்தில் Alternate Nodal Officer for L.E.A ஆக பி.எஸ்.என்.எல் நிறுவனத்தில் பணிபுரிந்ததாகவும், Law Enforcement Agencies–ல் இருந்து வரும் கடிதங்களில் கண்டுள்ள விபரங்களை தான் கொடுக்க முடியும் என்றும், தனக்கு கீழ் Divisional Engineer, Sub Divisional Engineer இருந்தார்கள் என்றும், மேற்படி குழுவால் Law Enforcement Agenciesல் இருந்து வரும் கடிதங்களில் கண்டுள்ள விபரங்களுக்கு பதில் கொடுக்கப்படும் என்றும், தனக்கு 14.09.2020–ம் தேதியிட்ட சி.பி.ஐ–யில் இருந்து பி.எஸ்.என்.எல் நிறுவனத்தின் தமிழ்நாடு சர்க்கிள் nodal officer (L.E.A) மூலம் பத்து கைபேசி எண்ணுக்குரிய C.D.R. விபரங்களும் மற்றும் அதற்குண்டான C.A.F. (Consumer Application Form) கொடுக்கும்படி கடிதம் வந்தது என்றும், அந்த பத்து கைபேசி எண்ணுக்குரிய C.D.R. விபரங்களையும் அதற்குண்டான C.A.F. ஆவணங்களையும் தனக்கு கீழ் பணிபுரிந்த D.E. சௌந்தரராஜ் மற்றும் S.D.E., மதுசூதனன் ஆகியோர் கணினியில் இருந்து தன் முன்னிலையில் பதிவிறக்கம் செய்து அதை அவர்கள் கையொப்பம் இட்டு தன்னிடம் கொடுத்தார்கள் என்றும் அதை தான் அதை தான் 65–B certified செய்து சி.பி.ஐ–க்கு தமிழ்நாடு நோடல் ஆபிசர் மூலமாக 9498139704, 9498194320, 8300040800, 9443446371, 9498206358, 9498195523, 9498196032, 9498192918, 9498195257, 9498195527 ஆகிய எண்களுக்கு 18.06.2020 முதல் 24.06.2020 காலகட்டத்திற்கு உண்டான C.D.R. விபரங்களை கொடுத்ததாகவும், அந்த C.D.R. விபரங்கள் அடங்கிய கோப்பு அ.சா.ஆ.71 என்றும், அந்த C.D.R. எண்ணுக்குரிய C.A.F அ.சா.ஆ.72 என்றும்,

மேற்கண்ட அ.சா.ஆ.71, 72 ஆவணங்களை தான் 65–B certified செய்து கொடுத்துள்ளதாகவும், மேற்படி 65–B சான்றிதழ் அ.சா.ஆ.71–ன் முதல்பக்கத்தில் உள்ளது என்றும், மேற்படி ஆவண விவரங்களை தான் Nodal Officer Tamilnadu Circle வழியாக சி.பி.ஐ–க்கு கொடுத்ததாகவும், அது அ.சா.ஆ.73 என்றும், C.D.R. பதிவில் வரிசை எண்.128–ல் 2–ம் எதிரி பாலகிருஷ்ணன் என்பவரது போன் 19.06.2020–ம் தேதியன்று காலை 11.57 மணிக்கு பேய்குளம் டவரில் உள்ளது என்றும் அந்த டவரானது 11.57 முதல் 12.46 மணி வரை பேய்குளம் டவரில் இருந்துள்ளது என்றும், C.D.R. பதிவில் வரிசை எண்.90–ன் படி 20.06.2020ம் தேதியன்று voice call ஆனது சுமார் 426 seconds 9965479899 என்ற எண்ணில் இருந்து 7–ம் எதிரியான செல்லத்துரையின் கைபேசி எண்ணான 9498195523 என்ற எண்ணிற்கு அழைப்பு சென்றுள்ளது என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

6.41 தடயங்களை சேகரிக்க புலனாய்விற்கு உதவியாக இருந்துள்ள திருமதி.உமா சிதம்பரம் அ.சா.41 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் தற்போது வருமானவரித்துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், 2020–ம் வருடம் ஜூலை மாதம் தூத்துக்குடி வருமானவரித்துறை அலுவலகத்தில் ஆய்வாளராக பணிபுரிந்தபோது இணை ஆணையர், வருமானவரித்துறை, மதுரை அவர்களிடமிருந்து தனக்கு கைபேசி மூலமாக உத்தரவு வந்தது என்றும், அந்த உத்தரவில் சி.பி.ஐ போலீசாரால் சாத்தான்குளத்தில் ஒரு proceedings நடக்கவிருக்கிறது என்றும், அதில் தான் சாட்சியாக கலந்து கொள்ள வேண்டுமென்றும், இணை ஆணையர் கூறியதாகவும், அவரது உத்தரவின் பேரில் தான் சி.பி.ஐ காவல்துறையினரை தொடர்பு கொண்டதாகவும், சி.பி.ஐ போலீசார் தன்னை 15.07.2020ம் தேதியன்று இரவு 07.00 மணியளவில் சாத்தான்குளம் காவல்நிலையம் வருமாறு சொன்னதாகவும், தான் சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு இரவு 07.00 மணிக்கு சென்றதாகவும், அப்போது அங்கு G.S.T. Central Excise துறையை சேர்ந்த திரு.M.கிருஷ்ணன், ஆய்வாளர், அங்கு இருந்தார் என்றும், அங்கு சி.பி.ஐ போலீசார் இருந்தார்கள் என்றும், சாத்தான்குளம் காவல்நிலையத்தில் அந்த சமயத்தில் ஆய்வாளர் சேவியர் பெர்னான்ட், பெண்

காவலர்கள் ப்யூலா செல்வகுமாரி, ரேவதி ஆகியோர்கள் இருந்தார்கள் என்றும், சி.பி.ஐ போலீசார் தன்னிடம் இங்கு proceedings ஒன்று நடக்கப் போகிறது அதற்கு சாட்சியாக இருக்க வேண்டும் என்று கூறியதாகவும், மேற்படி proceedings—ல் தானும், G.S.T. Central Excise ஆய்வாளர், கிருஷ்ணன், பெண்காவலர்கள் ப்யூலா செல்வகுமாரி, ரேவதி, C.B.C.I.D. D.S.P. அனில்குமார் ,C.B.I.A.S.P., விஜயகுமார் சுக்லா ஆகியோர்கள் கலந்து கொண்டதாகவும், அந்த நடவடிக்கையில் பெண் காவலர் ப்யூலா செல்வகுமாரி இறந்து போன ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோரை காவல்துறையினர் இரவு 08.00 மணியளவில் காவல்நிலையத்திற்கு 19.06.2020—ம் தேதியன்று அழைத்து வந்தது குறித்தும் பின்னர் அவர்கள் இருவரையும் அடித்தது குறித்தும் விளக்கி சொன்னார் என்றும், மேலும் ப்யூலா செல்வகுமாரி, பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜை காவல்நிலையத்தில் எங்கு வைத்து அடித்தார்கள் என்று சொன்னார் என்றும், மேலும், டேபிளில் இரண்டு பேரையும் குப்புற படுக்க வைத்து அடித்ததை விவரித்து சொன்னார் என்றும், ப்யூலா செல்வகுமாரி விவரித்து சொன்ன விசயங்கள் அனைத்தையும் மாதிரி வரைபடம் தயாரித்து அவர்கள் இருவரையும் எந்தெந்த இடத்தில் எங்கு வைத்து அடித்தார்கள் என்பதை சிவப்பு மையினால் குறித்தார்கள் என்றும், பிறகு பெண் காவலர் ரேவதி என்பரையும் விசாரித்தார்கள் என்றும், பெண் காவலர் ரேவதியும் இறந்து போன பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜை காவல்நிலையத்தில் வைத்து அடித்த இடத்தையும் குறித்து அவர்கள் சொன்ன விபரங்களை ஒரு மாதிரி வரைபடம் தயாரித்தனர் என்றும், அவர்கள் இருவரையும் எந்தெந்த இடத்தில் எங்கு வைத்து அடித்தார்கள் என்பதை குறித்து சிவப்பு மையினால் குறித்துக்கொண்டனர் என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் பெண் காவலர் ரேவதி அவர்கள் சொன்னது விபரங்கள் குறித்து தயாரிக்கப்பட்ட மாதிரி வரைபடம் என்றும், அது அ.சா.ஆ.74 என்றும், மாதிரி வரைபடத்தில் தான் கையெழுத்திட்டதாகவும், அ.சா.ஆ.74—ல் எந்தெந்த இடத்தில் இரத்தக்கறை உள்ளது என்பதை சிவப்பு மையினால் காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் பெண் காவலர் ப்யூலா செல்வகுமாரி அவர்கள் சொன்னது விபரங்கள் குறித்து தயாரிக்கப்பட்ட மாதிரி வரைபடம் என்றும், அது அ.சா.ஆ.75 என்றும், அதில் தான் கையெழுத்திட்டுள்ளதாகவும், அ.சா.ஆ.75—ல்

எந்தெந்த இடத்தில் இரத்தக்கறை உள்ளது என்பதை சிவப்பு மையினால் காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், இறந்து போன ஜெயராஜ் மறறும் பென்னிக்ஸ் ஆகியோரை அடிக்க பயன்படுத்திய டேபிளை சி.பி.ஐ போலீசார் கைப்பற்றி சாத்தான்குளம் காவல்நிலையத்தில் உள்ள ஒரு அறையில் வைத்து பூட்டி சீல் வைத்தனர் என்றும், மேற்படி டேபிள் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் அ.சா.ஆ.76 என்றும், அ.சா.ஆ.76–ல் தன்னுடைய கையொப்பம் உள்ளது என்றும், அந்த டேபிள் அ.சா.பொ.10 என்றும் 15.07.2020–ம் தேதியன்று நடைபெற்ற நடவடிக்கையின் proceedings–ல் தான் அனைத்து பக்கங்களிலும் கையெழுத்து செய்துள்ளதாகவும், 22.09.2020–ம் தேதியன்று சி.பி.ஐ போலீசாரது இன்னொரு proceedings–காக சாட்சியாக செல்லவேண்டும் என்று வருமானவரித்துறை இணை ஆணையர், தன்னிடம் தொலைபேசியில் கூறினார் என்றும், 22.09.2020ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் தான் சாத்தான்குளம் காவல் நிலையத்திற்கு சென்றதாகவும், அப்போது மற்றொரு சாட்சியான G.S.T. Central Excise துறையை சார்ந்த M.கிருஷ்ணன் அவர்களும் வந்திருந்தார் என்றும், 22.09.2020–ம் தேதியன்று 01.30 மணியளவில் சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு சி.பி.ஐ போலீசார் வந்தார்கள் என்றும், அந்த சமயத்தில் C.F.S.L. துறையைச் சேர்ந்த எட்டு நபர்கள் அந்த நடவடிக்கையில் கலந்து கொண்டார்கள் என்றும், இறந்துபோன ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர் எவ்வாறு தாக்கப்பட்டார்கள் என்பது குறித்தும், அவர்களை எவ்வாறு போலீசார்கள் தாக்கினார்கள் என்பது குறித்தும், பெண் காவலர்கள் ப்யூலா செல்வகுமாரி, ரேவதி ஆகியோர் விளக்கி கூறினார்கள் என்றும், மேலும், C.F.S.L. துறையை சேர்ந்த நிபுணர்கள் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் எங்கெங்கு இரத்தக்கறை படிந்துள்ளது என்றும், எங்கெங்கு கைரேகை படிந்துள்ளது என்றும், பரிசோதித்தனர் என்றும், சுவர், டேபிளில் உள்ள இரத்தக்கறைகள், கைரேகைகள் மற்றும் வெவ்வேறு இடங்களில் இருந்து இரத்தக்கறை, கைரேகை ஆகியவற்றை பரிசோதனைக்காக சேகரித்துக் கொண்டார்கள் என்றும், அந்த நடவடிக்கையானது ஒரு proceedings ஆக தயார் செய்தார்கள் என்றும், அது அ.சா.ஆ.77 என்றும், அந்த proceedings–ல் தான் கையெழுத்து செய்துள்ளதாகவும், மேற்படி நடவடிக்கைகள் சுமார் மாலை 06.00 மணியளவில் முடிந்தது என்றும், அந்த

நடவடிக்கைகளில் பெண் காவலர்கள் ப்யூலா செல்வகுமாரி, ரேவதி ஆகியோர் இறந்துபோன ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்களை எவ்வாறு அடித்தார்கள் என்றும், மேஜையில் படுக்க வைத்து எவ்வாறு தாக்கினார்கள் என்றும், இரண்டு மாதிரி நபர்களை வைத்து ஒத்திகை நடத்திக் காண்பித்தார்கள் என்றும் மேற்படி நடவடிக்கைகள் முடிந்த பிறகு அந்த டேபிளை எடுத்த இடத்திலேயே மறுபடியும் வைத்து சீல் செய்தார்கள் என்றும், பின்னர் 11.08.2022–ம் தேதியன்று தனது மேல் அதிகாரியின் உத்தரவின் பேரில் தானும், கிருஷ்ணன் என்பவரும் சுமார் 11.00 மணியளவில் சாத்தான்குளம் காவல்நிலையம் சென்றதாகவும், அங்கு சி.பி.ஐ போலீசார் இருந்தார்கள் என்றும், அவர்கள் தங்களிடம் 15.07.2020–ம் தேதியன்று சாத்தான்குளம் காவல்நிலையத்தில் சீல் வைத்து பூட்டப்பட்ட டேபிளை நீதிமன்றத்தில் சான்றாவணமாக குறியீடு செய்வதற்காக எடுக்க வேண்டுமென்று கூறினர் என்றும், அதற்கு தானும், கிருஷ்ணன் என்பவரும் சாட்சியாக இருக்க வேண்டுமென்று கூறினர் என்றும், தாங்கள் சாட்சியாக இருந்ததாகவும், அ.சா.பொ.10 ஆன டேபிளை நீதிமன்றத்திற்கு அனுப்புவதற்கு உறுதுணையாக இருந்ததாகவும், அதற்கான படிவம் 91–ஐ சி.பி.ஐ போலீசார் தயார் செய்தார்கள் என்றும், அதில் தானும், கிருஷ்ணன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், மேற்படி படிவம் 91 மற்றும் அது சம்பந்தப்பட்ட Observation Memorandum அ.சா.ஆ.78 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.42 தடயங்களை சேகரிக்க புலனாய்விற்கு உதவியாக இருந்துள்ள திருமதி.விஜயலதா அ.சா.42 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் 2017–ம் ஆண்டு முதல் தற்போது வரை திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் துணை இயக்குநராக பணிபுரிந்து வருவதாகவும், தன்னை 29.06.2020–ம் தேதியன்று உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவின்படி இயக்குநர் தடய அறிவியல் துறை, சென்னை அவர்கள் சாத்தான்குளம் காவல்நிலையத்தை பார்வையிட்டு தடயபொருட்களை கைப்பற்றும் பொருட்டு தடய அறிவியல் துறையினரின் குழு ஒன்றை தனது தலைமையில் அமைத்து உத்தரவு பிறப்பித்தார் என்றும், அதன்படி இயங்கும் தடய அறிவியல் ஆய்வக உதவி இயக்குநர் திருமதி.கலாலெட்சுமி மற்றும்

வட்டார தடய அறிவியல் ஆய்வக உதவி இயக்குநர் பாலமுருகன் அவர்களுடன் 29.06.2020—ம் தேதியன்று சாத்தான்குளம் காவல்நிலையத்தை பார்வையிட சென்றதாகவும், அன்று சாத்தான்குளம் காவல்நிலைய அனைத்து அறைகளான தரைதளத்தில் உள்ள ஹால் மற்றும் ஐந்து அறைகளையும், முதல்தளத்திலுள்ள ஆறு அறைகளையும் சோதனையிட்டு தடயப் பொருட்களை அடையாளப்படுத்தியதாகவும், அதன்பின்னர் 30.06.2020—ம் தேதியன்று நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி, திரு.பாரதிதாசன் அவர்கள் முன்னிலையில் அனைத்து தடயப்பொருட்களையும் முதற்கட்ட பரிசோதனைக்கு உட்படுத்தியதாகவும், அவற்றில் ஆண்கள் லாக்—அப் அறையில் ஒன்பது இடங்களில் இருந்த இரத்தக்கறைகளை swab எடுத்ததாகவும், உதவி ஆய்வாளர் அறையில் வாயிலின் அருகே இரத்தக்கறை ஒன்று swab எடுக்கப்பட்டது என்றும், லாக்அப் அறையின் வெளிப்புறச்சுவற்றில் ஒரு இரத்தக்கறை swab எடுக்கப்பட்டது என்றும், தரைதளத்திலுள்ள கழிப்பறையினுள் இரண்டு இடங்களில் காணப்பட்ட இரத்தக்கறைகள் swab எடுக்கப்பட்டது என்றும், கழிப்பறையின் அருகே உள்ள மாடிக்கு செல்லும் படிக்கட்டு சுவற்றில் இரண்டு இடங்களில் இரத்தக்கறைகள் swab எடுக்கப்ட்டது என்றும், ஆய்வாளர் அறையின் வாயிலின் அருகே இரண்டு இடங்களில் காணப்பட்ட இரத்தக்கறைகளை swab எடுத்தாகவும், ஆய்வாளர் அறையின் உள்ளே தொங்கி கொண்டிருந்த நாள் கட்டியில் இருந்த இரத்தக்கறைகளை swab எடுத்ததாகவும், மேற்கண்ட 18 எண்ணிக்கை கொண்ட இரத்தக்கறையை swab எடுத்து அதை சீலிட்ட உறையில் நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி அவர்களிடம் ஒப்படைத்தாகவும், மேலும், காவல்நிலையத்தை சுற்றியுள்ள இடங்களை தடயப்பொருட்கள் ஏதாவது காணப்படுகிறதா என்று தேடிப் பார்த்ததில் காவல்நிலையத்திற்கு பின்பக்கத்தில் உள்ள காலியிடத்தில் குவிக்கப்பட்டிருந்த குப்பைகளின் நடுவே காணப்பட்ட வெள்ளைச்சட்டை —1, பச்சை பார்டர் போட்ட வெள்ளை வேஷ்டி —1, நீலக்கலர் ஜட்டி —1, வெள்ளைகலர் கையில்லாத முண்டாபனியன் —1, நீலம் வெள்ளை கட்டம் போட்ட கைக்குட்டை —1, வெள்ளை மற்றும் yellowish orange கட்டம் போட்ட முழுக்கை சட்டை —1, கருப்பு நிற பேண்ட் —1, பச்சை நிற ஜட்டி —1, bugle இல்லாத பெல்ட் —1 ஆகியவற்றை குப்பையின் நடுவே

கைப்பற்றியதாகவும், மேற்படி குப்பையில் கிடந்த பொருட்களை எடுத்து காவல் நிலையத்தில் இருந்த prisoners search Register–ஐ ஒப்பிட்டுப் பார்த்தாகவும், அவ்வாறு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி அவர்கள் உடன் இருந்தார் என்றும், அவ்வாறு எடுத்த பொருட்களை prisoners search register–ல் குறிப்பிட்டுள்ள ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோரின் உடைகளுடன் ஒப்பிட்டு பார்த்தபோது குப்பையில் இருந்து கிடைத்த துணிகளும் ஒன்றாக இருந்தது என்றும், அவைகள் அனைத்தையும் நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி அவர்களிடம் ஒப்படைத்ததாகவும், மேலும், ஜெயராஜ், பென்னிக்ஸ் இருவரையும் TN–92–9302 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தில் அழைத்து சென்றதாக கேள்விப்பட்டு அந்த வாகனத்தை ஆய்வு செய்ததில் வாகனத்தின் பின்புற சீட் உறையில் இரத்தம் இருந்தது கண்டறியப்பட்டது என்றும், அதனையும் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களிடம் ஒப்படைத்ததாகவும், TN–92–9302 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் ஓட்டுனரான நாகராஜ் என்பவரிடம் கேட்டபோது அவர் அந்த வாகனத்தின் பின்புற சீட் உறையை எடுத்துக் கொள்ள சம்மதித்தார் என்றும், வாய் பேச முடியாத துப்புரவு பணியாளர் காவல்நிலையத்தில் இருந்தார் என்றும், அவரை தாங்கள் கேட்டபோது காவல்நிலைய குப்பைகளை காவல்நிலையத்தின் பிறபுறத்திலுள்ள காலியிடத்தில் கொட்டுவதாக கூறினார் என்றும், தனது தலைமையிலான குழுவானது சாத்தான்குளம் காவல்நிலையத்தை தடய ஆய்வு செய்து நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி அவர்களுக்கு கொடுத்த அறிக்கையின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.79 என்றும், அந்த அறிக்கையில் நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி அவர்கள் உண்மை நகல் என்று கையெழுத்து செய்து கொடுத்துள்ளார் என்றும், சாத்தான்குளம் காவல்நிலையத்தில் தடய ஆய்வு சோதனையின் போது எடுத்த புகைப்படங்கள் அ.சா.ஆ.80 என்றும், மேற்படி புகைப்படங்களை தங்களுடன் வந்த தனது ஓட்டுனரான அனில்குமார் என்பவர் எடுத்தார் என்றும், அதன் தொடர்ச்சியாக 29.06.2020–ம் தேதியன்று கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண்.649/2020 சம்பந்தமாக இறந்துபோன பென்னிக்ஸ் என்பவரது உடல் உள் உறுப்புகளான வயிறு, சிறுகுடல், கல்லீரல், சிறுநீரகம் மற்றும் மாதிரி கரைசல் சரியாக முத்திரையிடப்பட்ட நான்கு

குப்பிகளில் வைத்து காவலர் எண்.1292, திரு.சிவக்குமார் என்பவர் மூலமாக தங்கள் ஆய்வகத்தில் பெறப்பட்டது என்றும், மேற்கண்ட உடல் உள் உறுப்புகளை பகுப்பாய்வு செய்ததில் அவை எதிலும் விஷம் காணப்படவில்லை என்றும், அதுகுறித்து கொடுத்த அறிக்கையின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.81 என்றும், அ.சா.ஆ.81 ஆவணத்தில் தானும் கலாலெட்சுமி, உதவி இயக்குநர், அறிவியல் அலுவலர் வேல்முருகன் கையொப்பம் செய்துள்ளதாகவும், ஆய்வு போக மீதமுள்ள மாதிரிகள் நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க சட்டம் சார்ந்த மருத்துவத்துறை பேராசிரியர் அவர்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டது என்றும், மேலும், கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண்.650/2020 சம்பந்தமாக இறந்து போன ஜெயராஜ் என்பவரது உடல் உள் உறுப்புகளான வயிறு, சிறுகுடல், கல்லீரல், சிறுநீரகம், மற்றும் மாதிரி கரைசல் சரியாக முத்திரையிடப்பட்ட நான்கு குப்பிகளில் வைத்து காவலர் எண்.2111, திரு.கருப்பசாமி என்பவர் மூலமாக தங்கள் ஆய்வகத்தில் பெறப்பட்டது என்றும், மேற்கண்ட உடல் உறுப்புகளை பகுப்பாய்வு செய்ததில் அவை எதிலும் விஷம் காணப்படவில்லை என்றும், அது சம்மந்தமான தாங்கள் கொடுத்த அறிக்கையின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.82 என்றும், அ.சா.ஆ.82 ஆவணத்தில் தானும், உதவி இயக்குநர், கலாலெட்சுமி,யும், அறிவியல் அலுவலர் வேல்முருகனும், கையொப்பம் செய்துள்ளதாகவும், இதன் ஆய்வு போக மீதமுள்ள மாதிரிகள் நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க சட்டம் சார்ந்த மருத்துவத்துறை பேராசிரியர் அவர்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டது என்றும், இரத்தக்கறை படிந்த கார் சீட்டின் உறை அ.சா.பொ.11 என்றும், தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் கிழிந்த வெள்ளை மற்றும் yellowish orange கட்டம் போட்ட முழுக்கை சட்டை அ.சா.பொ.12 என்றும், Sam STKM என டெய்லர் லேபிள் உள்ள வெள்ளை நிற சட்டை அ.சா.பொ.13 என்றும், வெள்ளைநிற முண்டா பனியன் அ.சா.பொ.14 என்றும், நீலம் மற்றும் வெள்ளை கட்டம் போட்ட கைக்குட்டை ஆகும். அது அ.சா.பொ.15 என்றும், நீலநிற ஜட்டி அது அ.சா.பொ.16 என்றும், பச்சைநிற பார்டர் போட்ட வெள்ளைநிற வேட்டி அது அ.சா.பொ.17 என்றும், லைட் பிரவுன் கலர் பக்கிள் இல்லாத பெல்ட் அ.சா.பொ.18 என்றும், பச்சைநிற ஜட்டி அது அ.சா.பொ.19 என்றும், கருப்புநிற பேண்ட் அது

அ.சா.பொ.20 என்றும், அ.சா.பொ.11 முதல் 20 வரையிலான சான்றுப்பொருட்களை கைப்பற்றி சீல் வைத்து நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி அவர்களிடம் ஒப்படைத்ததாகவும், சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு தாங்கள் சென்றபோது சி.சி.டி.வி.கேமரா இருந்தது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.43 ஜெயராஜ் மற்றும் பெனிக்சின் உடலை சடல கூறாய்வு செய்த மருத்துவர் திரு. செல்வமுருகன் அ.சா.43 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் தற்போது திருநெல்வேலி மருத்துவக்கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் பேராசரியர் மற்றும் துறைத்தலைவராக 2019–ம் வருடத்தில் இருந்து பணிபுரிந்து வருவதாகவும், சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் M.D., படித்துள்ளதாகவும், சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் 1999–ம் வருடத்தில் இருந்து பணியாற்றி வருவதாகவும், தான் சுமார் 5,000 பிரேத பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளதாகவும், வருடத்திற்கு சுமார் 4 அல்லது 5 police custody மற்றும் Judicial custody சம்பந்தப்பட்ட பிரேத பரிசோதனைகளை செய்துள்ளதாகவும், 24.06.2020 அன்று பணியில் இருந்தபோது கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களிடமிருந்து கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையக் குற்ற எண்.649/2020 மற்றும் 650/2020 வழக்குகள் சம்பந்தப்பட்ட இறந்துபோன திரு.பென்னிக்ஸ் மற்றும் திரு.ஜெயராஜ் ஆகியோர்களின் பிரேதங்களை பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதத்தை மாலை 07.30 மணிக்கு பெற்றுக் கொண்டதாகவும், அந்த பிரேதங்களை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் ஆணையின்படி மூன்று மருத்துவர்கள் அடங்கிய குழு பிரேத பரிசோதனை செய்ய வேண்டுமென்று தங்கள் கல்லூரி முதல்வரால் மருத்துவக்குழு ஏற்படுத்தப்பட்டது என்றும், அந்த குழுவில் தானும், தங்கள் துறையின் உதவிப்பேராசிரியாக பணிபுரியும் மருத்துவர் பிரசன்னா மற்றும் போதகர் மற்றும் பட்டமேற்படிப்பு இறுதியாண்டு மாணவர் மருத்துவர் சுதன், ஆகியோர்கள் இடம் பெற்றிருந்ததாகவும், நீதித்துறை நடுவர் அவர்களின் வேண்டுகோளில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் பிரேத பரிசோதனைகளை 24.06.2020 அன்றே மேற்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டிருந்ததால் வேண்டுகோள் கடிதத்தை பெற்ற பின்பு பிரேத பரிசோதனையை அன்று இரவு

தொடங்கியதாகவும், முதலில் பென்னிக்ஸ் என்பவரின் பிரேதத்தை பரிசோதனை செய்ததாகவும், அந்த பிரேதத்தை காவலர் எண்.1292 திரு.சிவக்குமார் என்பவர் அடையாளம் காட்டினார் என்றும், பிரேதத்தை 24.06.2020 அன்று இரவு 08.40 மணிக்கு பிரேத பரிசோதனை செய்ய தொடங்கியதாகவும், பிரேத பரிசோதனையின் போது கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்கள் உடனிருந்தார்கள் என்றும், பிரேத பரிசோதனை முழுவதுமாக புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்கப்பட்டது என்றும், நீதித்துறை நடுவர் அவர்களின் ஆணைப்படி அதை தூத்துக்குடி ஆயுதப்படை காவலர் படம் எடுத்தார் என்றும், பரிசோதனை செய்யப்பட்ட பிரேதத்தில் குளிர்பதன அறையில் வைக்கப்பட்டிருந்ததால் ஏற்பட்டிருந்த விறைப்புத்தன்மை உடல் முழுவதும் பரவி காணப்பட்டது என்றும், பிரேதத்தின் கை மற்றும் கால்விரல் நகங்கள் நீலநிறத்தில் காணப்பட்டன என்றும் இறந்த பின் உண்டாகும் திரவம் வாய் மற்றும் மூக்கு வழியே வழிந்து காணப்பட்டது என்றும் அதில் காணப்பட்ட கீழ்க்கண்ட காயங்கள் இறப்பிற்கு முன்பு ஏற்பட்டிருந்தது என்றும்,

1. 1.5 X 1 செ.மீ அளவுள்ள கருமைநிற சிராய்ப்புக்காயம் வலது முன்கையின் நடுவில் வெளிப்புறமாக காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்தபோது அதன் கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

2. 1 X 0.2 செ.மீ அளவுள்ள கருமைநிற சிராய்ப்புக்காயம் வலது ஆள்காட்டி விரலின் பின்புறம் காணப்பட்டது.

3. 2 X 0.5 செ.மீ அளவுள்ள கருமைநிற சிராய்ப்புக்காயம் இடது முழங்கையின் பின்புறம் காணப்பட்டது.

4. 8 X 5 செ.மீ அளவுள்ள கருமைநிற இரத்தக்கட்டு இடது மேல்கையின் உட்புறம் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்த போது அதன் கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

5. 0.5 X 0.5 செ.மீ அளவுள்ள கருமைநிற சிராய்ப்புக்காயம் இடது முழங்காலின் முன்புறம் காணப்பட்டது.

6. 2 X 0.5 செ.மீ அளவுள்ள கருமைநிற சிராய்ப்புக்காயம் இடதுகாலின் நடுவில் முன்புறம் காணப்பட்டது.

7. இறப்பதற்கு முன்பு ஏற்பட்ட தோல் உரிதல் சீரற்ற விழிம்புகளுடன் 8 முதல் 30 செ.மீ நீளத்துடனும், 8 முதல் 17 செ.மீ அகலத்துடனும் வலது புட்டிப்பகுதியில் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்தபோது அதன் கீழுள்ள சதைகளில் அதிகப்படியான கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

8. இறப்பதற்கு முன்பு ஏற்பட்ட தோல் உரிதல் சீரற்ற விழிம்புகளுடன் 7 முதல் 17 செ.மீ நீளத்துடனும், 6 முதல் 14 செ.மீ அகலத்துடனும் இடது புட்டத்தில் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்தபோது அதன் கீழுள்ள சதைகளில் அதிகப்படியான கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

9. 6 X 6 செ.மீ அளவுள்ள கருமைநிற இரத்தக்கட்டு இடது பாதத்தில் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்தபோது அதன் கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

10. 5 X 4 செ.மீ அளவுள்ள கருமைநிற இரத்தக்கட்டு வலது மேல்கையின் கீழ்புறம் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்தபோது அதன் கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது

11. 19 X 5 செ.மீ அளவுள்ள கருமைநிற இரத்தக்கட்டு வலது முன்கையின் உட்புறம் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்தபோது அதன் கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

12. 7 X 6 செ.மீ அளவுள்ள கருமைநிற இரத்தக்கட்டு இடது கையில் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்தபோது அதன் கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

13. உயிருடன் இருக்கும் பொழுது ஏற்பட்ட தோல் உரிதல் 7 X 5 செ.மீ அளவில் ஆசனவாயின் பின்புறம் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்தபோது அதன் கீழுள்ள சதைகள் நல்ல நிலையில் காணப்பட்டன.

மேற்குறிப்பிட்ட காயங்கள் அந்த நபர் இறப்பதற்கு 1 முதல் 3 நாட்களுக்குள் ஏற்பட்டது போல் காணப்பட்டது என்றும், உள்உறுப்புகள் பரிசோதனையில் மார்புக்கூடு மற்றும் வயிற்றுப்பகுதி நல்ல நிலையில் காணப்பட்டது என்றும் இரத்தம் கலந்த திரவம் எதுவும் காணப்படவில்லை என்றும் இருதயம் 250 கிராம் எடையுடன் காணப்பட்டது

என்றும், இருதயத்தின் இடது வென்ட்ரிக்கிள் பகுதியில் 3 X 2 செ.மீ அளவிற்கு சிவந்து காணப்பட்டது என்றும் வலது மற்றும் இடது வென்ட்ரிக்கிள்களுக்கு இடைப்பட்ட பகுதியில் சிவந்து காணப்பட்டது என்றும், இருதய இரத்தக்குழாய்கள் நல்ல நிலையில் காணப்பட்டன என்றும் மூச்சுக்குழாய் நல்லநிலையில் காணப்பட்டது என்றும், நாவடி எலும்பு நல்லநிலையில் காணப்பட்டது என்றும், இரைப்பை 600 கிராம் எடையுடையதாக இருந்தது என்றும், அதன் உள்ளே 500 கிராம் அளவிற்கு மஞ்சள் நிற சிறிதளவு செரிமானமான சமைத்த அரிசி உணவு காணப்பட்டது என்றும், அதில் குறிப்பிடத்தக்க எந்த வாடையும் இல்லை என்றும், உட்புறசவ்வு கணிந்து காணப்பட்டது என்றும் கணையம் நல்ல நிலையில் காணப்பட்டது என்றும், வலது மற்றும் இடது நுரையீரல்கள் 500 கிராம் எடையுடன் காணப்பட்டன. அவற்றின் குறுக்குவெட்டுத்தோற்றம் கணிந்து காணப்பட்டது என்றும் கல்லீரல் 2.5 கிலோ கிராம் எடையுடையதாக காணப்பட்டது என்றும் அதன் குறுக்குவெட்டுத் தோற்றம் கணிந்து காணப்பட்டது என்றும் மண்ணீரல் 100 கிராம் எடையுடன் காணப்பட்டது என்றும் அதன் குறுக்குவெட்டுத்தோற்றம் கணிந்து காணப்பட்டது என்றும், சிறுநீரகங்கள் வலது மற்றும் இடது 150 கிராம் எடையுடையதாக காணப்பட்டது என்றும், அதன் குறுக்குவெட்டுத் தோற்றம் கணிந்து காணப்பட்டது என்றும், சிறுகுடலில் 50 கிராம் அளவு மஞ்சள்நிற சிறிதளவு செரிமானமான சமைத்த அரிசி உணவு காணப்பட்டது என்றும், அதில் குறிப்பிடத்தக்க எந்த வாடையும் இல்லை என்றும் அதன் உட்புறச்சவ்வு கணிந்து காணப்பட்டது என்றும் பெருங்குடல், ஆசனவாய், மலக்குழாய் ஆகியவை நல்ல நிலையில் காணப்பட்டன என்றும், ஆசனவாயை சுற்றியுள்ள பகுதி நல்ல நிலையில் காணப்பட்டது என்றும், சிறுநீர்ப்பையில் 20 மி.லி அளவு சிறுநீர் காணப்பட்டது என்றும், மூளை 1.2 கி.கி எடையுடையதாக இருந்தது என்றும், அதன் வெளிப்புற இரத்தக்குழாய்கள் விரிந்து காணப்பட்டன என்றும், ஆணுறுப்பு, விதைப்பை மற்றும் விரைகள் நல்ல நிலையில் காணப்பட்டன என்றும், உள்உறுப்புகள் சேகரிக்கப்பட்டு இரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன என்றும் இருதயம், நுரையீரல், கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகம், மூளை ஆகியவற்றின் துண்டுகள் சேகரிக்கப்பட்டு நுண்ணோக்கி பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன என்றும் வாயின்

உட்புறத்தில் இருந்து தடவல் எடுக்கப்பட்டு கொரோனா பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது என்றும் பிரேத பரிசோதனை இரவு 10.10 மணிக்கு முடிக்கப்பட்டது என்றும் பிரேத பரிசோதனை செய்யப்பட்ட நபர் பிரேத பரிசோதனைக்கு முன்பு 1–ல் இருந்து 2 நாட்களுக்குள் இறந்ததாக காணப்பட்டது என்றும் கொரோனா பரிசோதனை அறிக்கையில் கொரோனா தொற்று இல்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றும், உள்உறுப்பு நுண்ணோக்கி பரிசோதனை அறிக்கையில் மூளையில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் எதுவும் இல்லை என்றும், நுரையீரல் பகுதியில் நீர் கோர்த்து கணிந்து காணப்பட்டது என்றும், கல்லீரல் செல்களில் சிறிதளவு கொழுப்பு சேர்ந்து காணப்பட்டது என்றும், மண்ணீரல் கணிந்து காணப்பட்டது என்றும், சிறுநீரகத்தில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் எதுவும் இல்லை என்றும், இருதயத்தில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் எதுவும் இல்லை என்றும், இருதய இரத்தக்குழாய்களில் கொழுப்பு படிவத்துடன் காணப்பட்டது என்றும், உள்உறுப்புகளில் இரசாயன பரிசோதனை அறிக்கையில் எந்தவித நச்சுப்பொருட்களும் கண்டறியப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றும், இந்த அறிக்கைகளை பெற்ற பின்பு மருத்துவக்குழுவின் இடம் பெற்றிருந்த மருத்துவர்கள் அனைவரும் கலந்துபேசி இறப்பிற்கான காரணம் குறிப்பிட்ட இறுதியறிக்கையினை வழங்கியதாகவும் அதில் பிரேதபரிசோதனை செய்யப்பட்ட நபர் அவருடைய உடம்பில் ஏற்பட்டிருந்த ஊமைக்காயங்களினால் உண்டான பின் விளைவுகளினால் இறந்திருக்கலாம் என்று கருத்து கூறியிருந்ததாகவும், மேற்படி பென்னிக்ஸ் என்பவரின் பிரேத பரிசோதனையை முடித்த பின்பு 24.06.2020ம் தேதியன்று இரவு 10.15 மணிக்கு ஜெயராஜ், வயது 55 என்பவரின் பிரேத பரிசோதனையை அதே மருத்துவக்குழு மேற்கொண்டது என்றும், அந்த பிரேதத்தை காவலர் எண்.2111 திரு.கருப்பசாமி என்பவர் அடையாளம் காட்டினார் என்றும், பிரேத பரிசோதனையின் போது கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்கள் உடனிருந்தார் என்றும், நீதித்துறை நடுவர் அவர்களின் ஆணைப்படி தூத்துக்குடி ஆயுதப்படை காவலர் பிரேதபரிசோதனை முழுவதுமாக புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்தாகவும், அதில் குளிர்பதன அறையில் வைக்கப்பட்டிருந்ததனால் உண்டான விரைப்புத்தன்மை உடல்

முழுவதும் பரவி காணப்பட்டது என்றும், அதன் கை மற்றும் கால்விரல் நகங்கள் நீலநிறத்தில் காணப்பட்டன என்றும், அதில் ஏற்பட்டிருந்த கீழ்கண்ட காயங்கள் இறப்பிற்கு முன்பு காணப்பட்டது என்றும்,

1. 3.5 X 1 செ.மீ அளவுள்ள கருமைநிற சிராய்ப்புக்காயம் முதுகின் இடதுபுறம் கீழ்பகுதியில் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்தபோது அதன் கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

2. 4 X 1 செ.மீ அளவுள்ள கருமைநிற சிராய்ப்புக்காயம் முதுகின் வலதுபுறம் கீழ்பகுதியில் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்தபோது அதன் கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

3. உயிருடன் இருக்கும் பொழுது உண்டாகும் தோல் உரிதல் சீரற்ற விழிம்புகளுடன் 8 முதல் 15 செ.மீ நீளத்திலும், 5 முதல் 8 செ.மீ அகலத்திலும் இடது புட்டப்பகுதியில் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்தபோது அதன் கீழுள்ள சதைகளில் அதிகப்படியான கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

4. இறப்பிற்கு முன்பு உண்டாகும் தோல் உரிதல் சீரற்ற விழிம்புகளுடன் 14 முதல் 20 செ.மீ நீளத்திலும், 9 முதல் 17 செ.மீ அகலத்திலும் வலது புட்டப்பகுதியில் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்தபோது அதன் கீழுள்ள சதைகளில் அதிகப்படியான கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

5. 10 X 9 செ.மீ அளவுள்ள கருமைநிற சிராய்ப்புக்காயம் இடது மேல்கையின் பின்புறம் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்ததபோது அதன் கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

6. 7 X 7 செ.மீ அளவுள்ள கருமைநிற இரத்தக்கட்டு வலது கால்பாதத்தில் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்தபோது அதன் கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

7. 7 X 6.5 செ.மீ அளவுள்ள கருமைநிற இரத்தக்கட்டு வலதுமேல் கையின் உட்புறம் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்தபோது அதன் கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

8. மூன்று கருமைநிற கீரல் சிராய்ப்புகள் 2.5 முதல் 3.5 செ.மீ நீளத்தில் வலதுமேல் கையின் உட்புறம் காணப்பட்டது.

9. கருமைநிற கீரல் சிராய்ப்பு 4 செ.மீ நீளத்தில் வலது மேல்கையின் கீழ்புறம் உட்பகுதியில் காணப்பட்டது.

10. 4.5 X 1.5 செ.மீ அளவுள்ள கருமைநிற சிராய்ப்புகாயம் வலது முழங்கையின் உட்புறம் காணப்பட்டது.

11. 1 X 0.5 செ.மீ அளவுள்ள கருமைநிற சிராய்ப்புக்காயம் வலது முழங்காலின் முன்புறம் காணப்பட்டது.

12. 6 X 5 செ.மீ அளவுள்ள கருமைநிற இரத்தக்கட்டு வலது முழங்கையின் பின்புறம் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்ததபோது அதன் கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

13. 4 X 3 செ.மீ அளவுள்ள கருமைநிற இரத்தக்கட்டு வலது கால் பாததத்தில் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்ததபோது அதன் கீழுள்ள சதைகளில் கருமநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

14. 4 X 3.5 செ.மீ அளவுள்ள கருமைநிற இரத்தக்கட்டு வலதுகையில் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்ததபோது அதன் கீழுள்ள சதைகளில் கருமநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

15. 30 X 28 செ.மீ அளவுள்ள கருமைநிற இரத்தக்கட்டு புட்டப்பகுதியின் கீழ்பகுதியில் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்தபோது அதன் கீழுள்ள சதைகளில் அதிககப்படியான இரத்தக்கட்டு காணப்பட்டது.

16. 26 X 13 செ.மீ அளவுள்ள கருமைநிற இரத்தக்கட்டு வலது தொடையின் பின்புறம் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்ததபோது அதன் கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

17. 4 X 1 செ.மீ அளவுள்ள கருமைநிற சிராய்ப்புக்காயம் இடதுகாலின் கீழ்பகுதியில் வெளிப்புறமாக காணப்பட்டது.

மேற்குறிப்பிட்ட காயங்கள் அந்த நபரின் மரணத்திற்கு முன்பு 1–ல் இருந்து 3 நாட்களுக்குள் ஏற்பபட்டது போல் காணப்பட்டது என்றும் இறப்பிற்கு பின்பு உண்டான

தோல் உரிதல் 1 X 0.5 செ.மீ அளவில் வலது மேல்கையின் உள்புறத்திலும், 3 X 2 செ.மீ அளவில் வலதுகால் முட்டியின் வெளிப்புறத்திலும், 3 X 2 செ,மீ அளவில் இடது மேல்கையின் வெளிப்புறத்தில் காணப்பட்டது என்றும் உள்உறுப்புகள் பரிசோதனையில் மார்பு மற்றும் வயிற்றுப்பகுதி நல்ல நிலையில் காணப்பட்டது என்றும், அவற்றின் உள்ளே இரத்தம் கலந்த திரவம் எதுவும் காணப்படவில்லை என்றும், இருதயம் 300 கிராம் எடையுடன் 15 X 14 X 6 செ.மீ அளவிற்கு விரிந்து காணப்பட்டது என்றும், இருதயம் மென்மையாக காணப்பட்டு அதன் முனைப்பகுதி சிவந்து காணப்பட்டது என்றும் வெளிப்புற இரத்தக்குழாய்கள் விரிந்து காணப்பட்டன என்றும், இருதய இரத்தக்குழாய்கள் நல்ல நிலையில் காணப்பட்டன என்றும், மூச்சுக்குழாய் நல்ல நிலையில் காணப்பட்டது என்றும், நாவடி எலும்பு நல்ல நிலையில் காணப்பட்டது என்றும், இரைப்பை 300 கிராம் எடையுடன் இருந்தது என்றும், அதன் உள்ளே 200 மி.லி மஞ்சள் கலந்த பழுப்புநிற திரவம் காணப்பட்டது என்றும், அதில் குறிப்பிடத்தக்க வாடை எதுவும் இல்லை என்றும், உட்புறச்சவ்வு மஞ்சள் நிறத்தில் காணப்பட்டது என்றும், நுரையீரல்கள் வலது மற்றும் இடது 500 கிராம் எடையுடன் காணப்பட்டது என்றும், அவற்றின் குறுக்குவெட்டுத்தோற்றம் கனிந்து காணப்பட்டது என்றும், கல்லீரல் 1.75 கி.கி. எடையுடன் காணப்பட்டது என்றும், அதன் குறுக்கு வெட்டுத்தோற்றம் மஞ்சள் நிறத்தில் காணப்பட்டது என்றும், கணையம் நல்ல நிலையில் காணப்பட்டது என்றும், மண்ணீரல் 200 கிராம் எடையுடன் காணப்பட்டது என்றும், அதன் குறுக்கு வெட்டுத்தோற்றம் கனிந்து காணப்பட்டது என்றும், வலது சிறுநீரகம் 150 கிராம் எடையுடன் காணப்பட்டது என்றும், அதில் நீர்க்கட்டி காணப்பட்டது என்றும், அதன் குறுக்குவெட்டுத்தோற்றம் கனிந்து காணப்பட்டது என்றும், இடது சிறுநீரகம் 200 கிராம் எடையுடன் காணப்பட்டது என்றும், அதன் குறுக்குவெட்டுத்தோற்றம் கனிந்து காணப்பட்டது என்றும், சிறுகுடலில் 150 மிலி அளவு மஞ்சள் நிற திரவம் காணப்பட்டது என்றும், அதில் குறிப்பிடத்தக்க வாடை எதுவும் இல்லை என்றும், அதன் உட்புறச்சவ்வு கனிந்து காணப்பட்டது என்றும், பெருங்குடல், மலக்குழாய், ஆசனவாய் ஆகியவை நல்ல நிலையில் காணப்பட்டன என்றும், ஆசனவாயின் சுற்றியுள்ள பகுதி நல்ல நிலையில் காணப்பட்டது என்றும்,

சிறுநீர்ப்பையில் 20 மிலி அளவில் சிறுநீர் காணப்பட்டது என்றும், மூளை 1.2 கிலோ எடையுடன் காணப்பட்டது என்றும், அதன் வெளிப்புற இரத்தக்குழாய்கள் விரிந்து காணப்பட்டன என்றும், அதன் குறுக்குவெட்டுத்தோற்றம் கனிந்து காணப்பட்டது என்றும், ஆணுறுப்பு பகுதியின் முன்தோல் பின்னால் இழுக்க முடியாததாக காணப்பட்டது என்றும், ஆணுறுப்பில் இருந்து சலம் வடிந்தது என்றும், உள் உறுப்புகள் சேகரிக்கப்பட்டு இரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன என்றும், இருதயம், நுரையீரல், மண்ணீரல், கல்லீரல், சிறுநீரகம் மற்றும் மூளையின் துண்டுகள் ஆகியவை சேகரிக்கப்பட்டு நுண்ணோக்கி பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன என்றும், வாயின் உட்புறத்தில் இருந்து தடவல் எடுக்கப்பட்டு கொரோனா பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது என்றும், பரிசோதனை செய்யப்பட்ட நபர் பரிசோதனைக்கு முன்பு 1–ல் இருந்து 2 நாட்களுக்குள் இறந்தது போல் காணப்பட்டது என்றும் கொரோனா பரிசோதனை அறிக்கையில் கொரோனா தொற்று இல்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றும், நுண்ணோக்கி பரிசோதனை அறிக்கையில் மூளையில் குறிப்பிடத்தக்க மாறுதல் இல்லை என்றும், நுரையீரலில் நீர்கோர்த்து காணப்பட்டது என்றும், கல்லீரல் செல் அருகில் கொழுப்பு காணப்பட்டது என்றும், மண்ணீரலில் குறிப்பிடத்தக்க மாறுதல் எதுவும் இல்லை என்றும் சிறுநீரகத்தில் Acute Pyelonephritis என்ற மாறுதல் காணப்பட்டது என்றும், இருதயத்தின் வலது வென்ட்ரிக்கிள் பகுதியில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் எதுவும் இல்லை என்றும், இடது வென்ட்ரிக்கிள் பகுதியில் பழைய நெஞ்சுவலி ஏற்பட்டதற்கான தடயம் காணப்பட்டது என்றும், இருதயத்திற்கான இரத்தக்குழாய்களில் கொழுப்பு படிந்து காணப்பட்டது என்றும், உள்உறுப்புகள் இரசாயன பரிசோதனை அறிக்கையில் எந்தவித நச்சுப்பொருட்களும் கண்டறியப்படவில்லை என குறிப்பிடப்பட்டிருந்தது என்றும், இந்த அறிக்கைகளை பெற்ற பின்பு மருத்துவக்குழுவில் இடம் பெற்றிருந்த மருத்துவர்கள் கலந்து ஆலோசித்து இறப்பிற்கான இறுதியறிக்கையினை வழங்கியதாகவும், அதில் பிரேத பரிசோதனை செய்யப்பட்ட நபருக்கு ஏற்பட்டிருந்த ஊமைக்காயங்களின் பின் விளைவுகளினால் இறந்திருக்கலாம் என்று கருத்து கூறியிருந்ததாகவும், தன்னுடைய கருத்துரையின்படி மேற்படி காயங்கள் இருவருக்கும் கூர்முனையில்லாத

ஆயுதங்களால் தாக்கும்பொழுது ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றும், பிரேத பரிசோதனை செய்து நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி அவர்கள் கொடுத்த வேண்டுகோள்கடிதம் அ.சா.ஆ.83 என்றும், அ.சா.ஆ.83-ல் ஜெயராஜ் அவர்களின் பிரேதத்தை பிரேத பரிசோதனையை அன்றைய தினமே அதாவது 24.06.2020 அன்றே மேற்கொள்ள வேண்டுமென்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி சிறப்பு ஆணை மூலம் உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி அவர்கள் கொடுத்த வேண்டுகோள்கடிதம் அ.சா.ஆ.84 என்றும், அதில் பென்னிக்ஸ் அவர்களின் பிரேதத்தை பிரேதபரிசோதனையை அன்றைய தினமே அதாவது 24.06.2020 அன்றே மேற்கொள்ள வேண்டுமென்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி சிறப்பு ஆணை மூலம் உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், கல்லூரி முதல்வரால் பிரேத பரிசோதனைக்காக அமைக்கப்பட்ட மூவர் மருத்துவக்குழு சம்மந்தமான உத்தரவு அ.சா.ஆ.85 என்றும், 24.06.2020-ம் தேதியிட்ட ஜெயராஜ் அவர்களின் பிரேத பரிசோதனையின் முதற்கட்ட அறிக்கை அ.சா.ஆ.86 என்றும், 24.06.2020-ம் தேதியிட்ட பென்னிக்ஸ் அவர்களின் பிரேத பரிசோதனையின் முதற்கட்ட அறிக்கை அ.சா.ஆ.87 என்றும், அ.சா.ஆ.86, 87-ஐ மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளைக்கு sealed cover மூலம் அனுப்பி வைத்ததற்கான முகப்பு கடிதம் மற்றும் அஞ்சல் உறை அ.சா.ஆ.88 என்றும், அ.சா.ஆ.88-ல் தங்கள் கல்லூரி முதல்வரின் கையெழுத்து உள்ளது என்றும், 02.07.2020-ம் தேதியிட்ட வட்டார தடய அறிவியல் ஆய்வகம், திருநெல்வேலியில் இருந்து பெறப்பட்ட ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோரின் உள்உறுப்பு இரசாயன பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.89 என்றும், பென்னிக்ஸ் அவர்களின் பிரேத பரிசோதனையின் இறுதியறிக்கை அ.சா.ஆ.90 என்றும், பென்னிக்ஸ் அவர்களின் கொரோனா பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.91 என்றும், பென்னிக்ஸ் அவர்களது தொடர்பான நுண்ணோக்கி பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.92 என்றும், ஜெயராஜ் அவர்களின் பிரேத பரிசோதனையின் இறுதியறிக்கை அ.சா.ஆ.93 என்றும், ஜெயராஜ் அவர்கள் தொடர்பான கொரோனா பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.94 என்றும், ஜெயராஜ் தொடர்பான நுண்ணோக்கி பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.95 என்றும், மேற்படி அ.சா.ஆ.86, அ.சா.ஆ.87, அ.சா.ஆ.90,

அ.சா.ஆ.93 ஆகிய அறிக்கைகளில் மருத்துவக்குழுவில் இடம் பெற்றுள்ள மூன்று நபர்கள் கையெழுத்திட்டுள்ளார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.44 சாத்தான்குளம் காவல்நிலையத்தில் நிலைய எழுத்தராக பணிபுரிந்துள்ள பெண்காவலர் திருமதி.ப்யூலா செல்வகுமாரி அ.சா.44 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் 19.06.2020–ம் தேதியன்று காலை 08.00 மணியில் இருந்து இரவு 21.00 (இரவு 09.00) மணி வரை நிலைய எழுத்தராக சாத்தான்குளம் காவல்நிலையத்தில் பணியில் இருந்ததாகவும், அப்போது தலைமைக்காவலர் எண்.860 ரேவதி என்பவர் பாராப்பணியில் இருந்தார் என்றும், அன்று மாலை 17.30 மணிக்கு ரேவதியை பாராவில் இருந்து இரவு உணவிற்காக வீட்டிற்கு அனுப்பிவிட்டு, தான் பாரா பணியையும் சேர்த்து பார்த்ததாகவும், தான் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் பாராபணி ஏற்கும்போது S.S.I. ரவிச்சந்திரன், தாமஸ் பிரான்சிஸ், வெயிலுமுத்து, சாமதுரை ஆகியோர்கள் நீதிமன்ற பணியை முடித்து விட்டு அவரவர் பணியை பார்த்து கொண்டிருந்தனர் என்றும், அன்று இரவு 07.45 மணிக்கு காவல் ஆய்வாளர் அவர்கள் வாகனத்தில் இருந்து பாலகிருஷ்ணன், இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்த ஜெயராஜ் என்பவரை அழைத்து காவல்நிலையம் வந்தனர் என்றும், அதன் பின்னர் காவலர் முத்துராஜா காவல்நிலையம் வந்தார் என்றும், அவரைத் தொடர்ந்து காவலர்கள் முருகன், செல்லத்துரை ஆகியோர் வந்தனர் என்றும், உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் அவர்கள் ஜெயராஜ் என்பவரை கைதி அறைக்கும், மாடிப்படி அறைக்கும் இடையில் நிற்க வைத்து, ஜெயராஜ் என்பவரை கையை நீட்டச் சொல்லி, லத்தியால் கையில் சாத்தான்குளத்தில் நீ பெரிய ரவுடியா, போலீசை அடிக்க வேண்டும் என்று சொன்னீங்களாமே, இப்போ போலீசை அடிங்க என்று சொல்லி ஜெயராஜை நான்கு, ஐந்து அடிகள் அடித்தார் என்றும், ஜெயராஜை அடித்துக் கொண்டிருக்கும்போது அவருடைய மகனான பென்னிக்ஸ் என்பவர் காவல்நிலையத்திற்குள் வந்தார் என்றும், உள்ளே வந்து தன்னுடைய அப்பாவை எதற்கு அழைத்து வந்தீர்கள், ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்டார் என்றும், எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் காவலர் முத்துராஜாவிடம் பென்னிக்சை வெளியில் இருக்கும்படியும், பின்னர் அழைப்பதாகவும் கூறினர் என்றும்,

காவலர் முத்துராஜா, பென்னிக்சை வெளியில் இருக்கும்படி கூறினார் என்றும், பென்னிக்ஸ் வெளியில் செல்லாமல் காவலர் முத்துராஜா என்பவருடைய காவலர் சட்டையை வலதுகையில் பிடித்து தள்ளிவிட்டார் என்றும், பின்னர் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன், பென்னிக்ஸ் என்பவரை அடிக்க சென்றார் என்றும், பென்னிக்சை பிடிக்க காவலர்கள் முத்துராஜா, முருகன், செல்லத்துரை, பால்துரை எஸ்.ஐ. ஆகியோர்கள் பென்னிக்சை பிடிக்க முயன்றார்கள் என்றும், அவரை பிடிக்க முடியவில்லை என்றும், எஸ்.ஐ.பால்துரை வலது முழங்கையை வைத்து பென்னிக்சின் முதுகின் பின்புறத்தில் குத்தினார் என்றும், பென்னிக்ஸ் நிலை தடுமாறி நின்றுவிட்டார் என்றும், காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் அவருடைய அறையில் இருந்து வெளியே வந்து, போலீசை தள்ளிவிட்டு விட்டான். நீங்கள் சும்மாவா இருக்கிறீர்கள் என்று போலீசாரை சத்தம் போட்டார் என்றும், பின்னர் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன், ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோரை உடைகளை கழற்றிவிட்டு வரும்படி கூறியதாகவும், அவர்கள் உடைகளை கழற்றிவிட்டு மேற்படி உடைகளை காவல்நிலையத்தில் இருந்த கூடையில் உடைகளை போடச் சொன்னார்கள் என்றும், பின்னர் ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகிய இருவரையும் காவல்நிலையத்தில் கைதி அறைக்கும், மாடிப்படி ஏறுவதற்கும் இடையே உள்ள இடத்தில் நிற்கவைத்து எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் அடித்தார் என்றும், காவலர்கள் முருகன், சாமதுரை, வெயிலுமுத்து, செல்லத்துரை ஆகியோர்கள் கையைப் பிடித்துக் கொண்டார்கள் என்றும், எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் லத்தியால் புட்டப்பகுதியில் அடித்ததாகவும், ஜெயராஜை எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் அடிக்கும்போது தனக்கு சுகர், பிரஷ்ஷர் உள்ளது என்று கூறியதால் அதன்பிறகு அவரை அடிக்கவில்லை என்றும், காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் தன்னுடைய அறையில் இருந்து வெளியே வந்து பாலு என்ன சத்தம் கேட்கவில்லை என்று கேட்டார் என்றும், அதன் பிறகு பென்னிக்சை மாடிப்படிக்கும், கைதி அறைக்கும் இடையே உள்ள சுவற்றிற்கு கீழே உட்கார வைத்தனர் என்றும், எஸ்.ஐ.பாலகிருஷ்ணன், எஸ்.ஐ.பால்துரை, காவலர்கள் முருகன், சாமதுரை, வெயிலுமுத்து ஆகியோர்கள் பென்னிக்சின் இரண்டு கால்களையும் விரித்தார்கள் என்றும், பென்னிக்ஸ் வலிக்குது, அய்யோ அம்மா என்று கத்தினார் என்றும், அப்போது ஜெயராஜ் கைதி அறையில்

இருந்தார் என்றும், அப்போது அவர் தனக்கு டி.எஸ்.பி. தெரியும் என்றும், அவரை வைத்து உங்களுடைய வேலையை காலி செய்துவிடுவேன் என்று சொன்னார் என்றும், சிறிது நேரத்தில் பென்னிக்ஸ் அங்கிருந்த அனைத்து காவலர்களிடமும் காலில் விழுந்து தான் தெரியாமல் செய்துவிட்டேன் தன்னை மன்னித்துவிடுங்கள் என்று மன்னிப்பு கேட்டார் என்றும், அதன்பிறகு சிறிதுநேரம் கழித்து காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் அவரது அறையில் இருந்து வந்து என்ன பாலு சத்தம் கேட்கல, இன்னும் அடிக்காமல் இருக்கீங்க என்று கூறினார் என்றும், அதன்பிறகு உதவி ஆய்வாளர் அறைக்கும், எழுத்தர் அறைக்கும் இடையில் உள்ள சுவற்றில் வைத்து பென்னிக்சின் வலது கையை தாமஸ் பிரான்சிஸ்சும், செல்லத்துரையும், இடது கையை சாமதுரை, வெயிலுமுத்து ஆகியோர் பிடித்திருந்தனர் என்றும், பென்னிக்சின் காலை நகர்ந்து போகாமல் இருக்க முருகன் காலை பிடித்துக் கொண்டார் என்றும், எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜை புட்டப்பகுதியில் லத்தியால் மாறிமாறி அடித்தார் என்றும், கொஞ்சநேரம் இடைவேளை விட்டார்கள் என்றும், பின்னர் பத்து நிமிடம் கழித்து பென்னிக்சையும் அதே இடத்தில் ஜட்டியை கழற்றிவிட்டு வைத்து அடித்தார்கள் என்றும், அவ்வாறு அடிக்கும்போது தன்னை வெளியில் செல்லும்படி எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் கூறினார் என்றும், தான் அவ்வாறு போகும்போது இரவு சுமார் 08.30 மணிக்கு மேலே இருக்கும் என்றும், அதன்பின்பு தான் வெளியே வந்து ரேவதிக்கு கைபேசியில் காவல் நிலையத்தில் பிரச்சனையாக உள்ளது, நீ எங்கே இருக்க சீக்கிரம் வா என்று கூறியதாகவும், சிறிதுநேரத்தில் ரேவதி காவல்நிலையத்திற்கு வந்தார் என்றும், ரேவதி இரவு 09.00 மணிக்கு காவல்நிலையம் வந்தார் என்றும், ரேவதி வந்தவுடன் தான் வீட்டிற்கு செல்வதற்காக தன்னுடைய கைப்பையை எடுக்க காவல்நிலையத்தில் உள்ளே சென்றதாகவும், அவ்வாறு போகும்போது ஹாலில் உள்ள டேபிளில் பென்னிக்சை குப்புற படுக்க வைத்திருந்தார்கள் என்றும் மற்ற காவலர்கள் பென்னிக்சை பிடித்திருந்தனர் என்றும் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் அவரை அடித்தார் என்றும், அவ்வாறு அடிக்கும் போது நீ செத்தாலும் பரவாயில்லை, என் சொத்தை விற்றாவது தான் வெளியே வந்துவிடுவேன் என்று கூறி அடித்தார் என்றும், சம்பவம் நடக்கும் போது காவல்நிலையம்

பூட்டப்பட்டிருந்தது என்றும், அடுத்த நாள் காலையில் தான் காவல்நிலையம் வரும் வழியில் ரேவதியை பார்த்ததாகவும், நேற்று இரண்டு பேர்களை கூட்டி வந்தார்களே என்ன ஆச்சு என்று கேட்டதாகவும், ரேவதி என்பவர் காவலர் முருகன் என்பவர் கொடுத்த புகாரின் மீது ஜெயராஜ், பென்னிக்ஸ் மீது வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துவிட்டதாகவும், மெடிக்கல் மெமோவை எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் எழுதிக் கொடுத்து ஜெயசேகர் தன்னிடம் வந்து கையெழுத்து வாங்கிக்கொண்டு சென்றதாகவும் தன்னிடம் கூறினார் என்றும், ரேவதியிடம் நீ ஏன் கையெழுத்து செய்தாய் என்று சத்தம் போட்டதாகவும், அதன்பின்னர் மறுநாள் காலை 08.30 மணியளவில் காவல்நிலையம் வந்ததாகவும், காவல்நிலையத்தில் கவுச்சி வாடை அடித்தது என்றும், துப்புரப்பணியாளர் வேல்முருகன் என்பவர் துடைத்துக் கொண்டிருந்தார் என்றும், அவருக்கு வாய் பேச முடியாது என்றும், காதும் கேட்காது என்றும், துடைப்பதற்கு பயன்படுத்திய Harbic, Lizol ஆகியவற்றை சைகையின் மூலமாக யார் வாங்கி கொடுத்தது என்று கேட்டதாகவும், காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் வாங்கி கொடுத்ததாக கூறினார் என்றும், தங்களுடைய காவல்நிலையத்தில் உள்ள குப்பைகளை காவல் நிலையத்திற்கு பின்புறமுள்ள காலியிடத்தில் துப்புரவு பணியாளர் போய் கொட்டுவார் என்றும், தான் பார்க்கும்போது ஜெயராஜ் என்பவர் வெள்ளை வேஷ்டி, அரைக்கை வெள்ளை சட்டை, வெள்ளை கலர் பனியன், ப்ளூ கலர் டிரவுசர் மாதிரியான ஜட்டி அணிந்திருந்தார் என்றும் பென்னிக்ஸ் பிளாக் கலர் பேண்ட், வெள்ளை நிற பனியன், மஞ்சள்நிற மற்றும் ஆரஞ்சு நிற உடைய கட்டம் போட்ட சட்டை, ப்ளூ கலர் ஜட்டி அணிந்திருந்தார் என்றும், பென்னிக்சை கைதி அறைக்கும், படிக்கட்டிற்கும் இடையில் வைத்து அடிக்கும்போது அவர் கையில் இருந்து இரத்தம் வந்தது என்றும், அந்த இரத்தம் சீராவதற்கு பென்னிக்சை சுவற்றில் கையை வைத்து அடிக்கச் சொன்னார்கள் என்றும், கையில் உள்ள இரத்தம் சீராவதற்காக அடிக்க சொன்னார்கள் என்றும், அந்த இரத்தம் சொட்டு சொட்டாக தரையில் விழுந்தது என்றும், காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், பென்னிக்ஸ் கூடையில் கழற்றி போட்டிருந்த அவருடைய பனியனை வைத்து இரத்தத்தை துடைக்கச் சொன்னார் என்றும், பிறகு பென்னிக்ஸ் பாத்ரூமில் போய் தண்ணீரில் நனைத்துவிட்டு வந்து சிதறிய இரத்தத்தை

துடைத்துவிட்டார் என்றும், காவல் நிலையத்திற்கு பென்னிக்ஸ் வரும்போது மணிமாறன் வழக்கறிஞர் இருந்தார் என்றும், காவல்நிலையத்திற்கு வெளியே பென்னிக்சின் உறவினர்கள் இருந்தார்கள் என்றும், ஜெயராஜ், பென்னிக்ஸ் மீது போடப்பட்ட வழக்கு பொய்யான புகாரின் பேரில் போடப்பட்டது என்றும், 19.06.2020-ம் தேதியன்று இரவு முழுவதும் முருகன், முத்துராஜா ஆகியோர்கள் காவல்நிலையத்தில் தான் இருந்தார்கள் என்றும் மற்றும் காவலர்கள் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், எஸ்.ஐ.பாலகிருஷ்ணன், சாமதுரை, வெயிலுமுத்து, பால்துரை எஸ்.ஐ, தாமஸ், செல்லத்துரை அனைவரும் காவல்நிலையத்தில் தான் இருந்தார்கள் என்றும், சி.பி.ஐ.போலீசார் தன்னிடம் ஆவணங்களை காட்டி விசாரித்தார்கள் என்றும், F.I.R. Index Register-ல் பக்கம் 859 மற்றும் 860-ல் குற்ற எண்.312/2020 சம்பந்தப்பட்ட சங்கதிகள் உள்ளது என்றும், பக்கம் எண்.860-ல் குற்ற எண்.312/2020-ன் கீழ் வழக்கின் சுருக்கம் உள்ளது என்றும், அந்த வழக்கின் சுருக்கத்தை ரேவதி எழுதியுள்ளார் என்றும், பக்கம் எண்.859-ல் எழுதியுள்ள சங்கதிகள் தன்னால் எழுதப்பட்டவை என்றும், மேற்படி பக்கம் எண்கள்.859, 860 ஆகியவைகள் அ.சா.ஆ.96 என்றும், D.S.R. ஆவணத்தில் பக்கம் எண்.623-ல் குற்ற எண்.312/2020 பற்றிய விபரங்கள் உள்ளது என்றும், அது அ.சா.ஆ.97 என்றும், அ.சா.ஆ.97-ல் கடைசியில் எஸ்.ஐ.ரகுகணேஷ் விசாரணை அதிகாரியாக காட்டப்பட்டுள்ளார் என்றும், G.D.(General Diary) அ.சா.ஆ.34 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அ.சா.ஆ.34-ல் பக்கம் எண்.500-ல் "20.00 மணிக்கு W.H.C. 860 இரவு பாராவாக நியமித்து தான் (2104) பாராவில் இருந்து relieve ஆவதாகவும், எழுதி கையெழுத்து செய்துள்ளதாகவும், அதற்கு மேலே உள்ள எழுத்து வேறு மை பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றும், அந்த கையெழுத்தை தான் போன பின்பு எழுதியுள்ளார்கள் என்றும், அந்த கையெழுத்தானது எஸ்.ஐ.பால்துரையின் கையெழுத்தாகும் என்றும், அதில் "20.00 மணிக்கு எஸ்.ஐ. பால்துரை ஆகிய நான், H.C. 258 (1064) பீட் முடித்து ஆஜர்" என்று எழுதி பால்துரை எஸ்.ஐ கையொப்பம் செய்துள்ளார் என்றும், தான் காவல்நிலையத்தை விட்டு வெளியே செல்லும்போது இரவு சுமார் 09.00 மணி இருக்கும் என்றும், அ.சா.ஆ.34-ல் 21.00 hours, 22.00 hours, 22.45 hours ஆகிய நேரங்களுக்குரிய சங்கதிகள் அனைத்தும் எஸ்.ஐ.ரகுகணேஷ்

எழுதியுள்ளார் என்றும், பக்கம் எண்.501–ல் 07.00 மற்றும் அதற்கு முன் do என்ற இடத்தில் எழுதியுள்ள சங்கதிகள் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் அவர்களின் கையெழுத்து ஆகும் என்றும், பக்கம் எண்.497–ல் உள்ள அனைத்து நேரங்களிலும் கண்ட சங்கதிகள் தன்னால் எழுதப்பட்டவை என்றும், பக்கம் எண்.501–ல் "மணிக்கு W.H.C 860 G.D பொறுப்பு பெற்றுக் கொண்டதாக எழுதியுள்ளது என்றும், அந்த கையெழுத்து ரேவதியின் கையெழுத்து என்றும், Rough Duty Register–ல் பக்கம் எண்.342, 343 ஆகியவைகள் ஏற்கனவே அ.சா.ஆ.35 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பக்கம் எண்.342–ல் serial no.5–ல் H.C. 258 அலுவல் விபரம் என்ற இடத்தில் Db என்பதை அடித்து Nb என்று எழுதியுள்ளது என்றும், அது காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் அவர்களின் எழுத்தாகும் என்றும், அந்த பக்கத்தில் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் கையெழுத்து செய்துள்ளார் என்றும், அந்த பக்கத்தில் leave particulars என்று சிவப்பு மையினால் எழுதியுள்ளது என்றும், 1.H.C 271 absent from 08.06.2020 என்று எழுதியுள்ளது என்றும், அந்த H.C 271 என்பவர் தலைமைக் காவலர் பாலசுப்பிரமணியம் என்றும், அவர் பெயரை குண்டாஸ் பாலு என்றும் அழைப்பார் என்றும், 2. Gr.I, 2431 C.L. 19.06.2020 என்று எழுதப்பட்டுள்ளது என்றும், அன்றைய தினம் Gr.I, 2431 அழகுமாரிச்செல்வம் விடுப்பு முடித்து அன்று பணிக்கு வந்தார் என்றும், தான் சொன்ன அன்றைய தினம் இரவு நேரத்தில் இருந்த காவலர்கள் அனைவரின் பதிவு எண்ணும் அலுவலக விபரமும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், Db என்றால் பகல் ரோந்து என்று அர்த்தம் என்றும், Nb என்றால் இரவு ரோந்து என்று அர்த்தம் என்றும், பக்கம் எண். 343–ல் D/b என்ற இடத்தில் வொயிட்னர் (whitener) போட்டு அடித்துவிட்டு GRI 796 என்று எழுதப்பட்டுள்ளது என்றும், அதன் கீழ் Sl.No.277/2020 என ஏற்கனவே எழுதப்பட்டுள்ளது என்றும், அதில் கடைசி எழுத்தாக உள்ள 7 அடிக்கப்பட்டு 8 ஆக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும், அடுத்து N/b என்ற இடத்தில் வொயிட்னர் (whitener) போட்டு அடித்துவிட்டு HC 258, PC 1064 என்று எழுதப்பட்டுள்ளது என்றும், அதன் கீழ் S.No. என்ற இடத்தில் 278/2020 என ஏற்கனவே எழுதப்பட்டுள்ளது என்றும், அதில் கடைசி எழுத்தாக உள்ள 8 அடிக்கப்பட்டு 9 ஆக மாற்றம் செய்யப் பட்டுள்ளது என்றும், H.C.258 மற்றும் 278, 279 என்று எழுதியுள்ளது காவலர்

முருகனின் கையெழுத்தாகும் என்றும், Sentry relief Book–ல் பக்கம் எண்.213 முதல் 218 வரை உள்ள பக்கங்கள் அ.சா.ஆ.98 என்றும், அ.சா.ஆ.98–ல் பக்கம் எண்.213ல் "10.00 மணிக்கு SI ரகுகணேஷ் ஆகிய நான் 380 revolver – 1. 380 rounds 10 ஆகியவற்றை காவல்நிலையத்தில் இருந்து எடுத்து செல்கிறேன்" என்று எழுதியுள்ளது என்றும், அது தன்னுடைய கையெழுத்து என்றும், SI ரகுகணேஷ் அவர்கள் அதனடியில் கையெழுத்திட்டுள்ளார் என்றும், அ.சா.ஆ.98–ல் பக்கம் எண்.214, 215 ஆகியவற்றில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் ரேவதி அவர்களின் கையெழுத்தாகும் என்றும், சுற்றுக்காவலரை நியமிக்கும் தலைமைக்காவலரின் ஒப்பம் மற்றும் சுற்றுக்காவலரான தன்னுடைய கையொப்பம் உள்ளது என்றும், பக்கம் எண்.215–ல் ரேவதி அவர்களால் எழுதப்பட்ட சங்கதிகளுக்கு கீழ் செல்லதுரை, முத்துராஜா ஆகியோரின் கையொப்பம் உள்ளது என்றும், பக்கம் எண்.218–ல் "09.30 மணிக்கு 380 revolver 1 தோட்டா 10 ஆகியவை எனது பாராவில் வரவு" என்று எழுதப்பட்டுள்ளது என்றும், அந்த கையெழுத்து காவலர் இன்பராஜ் அவர்களின் கையெழுத்தாகும் என்றும், மேற்படி revolver ஆனது கொடுத்த தேதியிலிருந்து ஒப்படைக்கும் தேதி வரை மேற்படி காவலர் ரகுகணேஷ் அவர் வசம் தான் இருந்தது என்றும், அ.சா.ஆ.98–ல் பக்கம் எண்.215–ல் குற்ற எண்.312/2020–காக பென்னிக்ஸ், ஜெயராஜ் ஆகியோர்களை காவலில் எடுத்து செல்கிறோம் என்று செல்லத்துரையும், முத்துராஜாவும் கையெழுத்திட்டுள்ளார்கள் என்றும், 18.06.2020 அன்று ஜெயராஜ் தன்னுடைய கடைக்கு முன்பு நின்று போலீசாரை தரக்குறைவாக பேசியதாகவும், அதை அங்கிருந்து காவலர் பாலசுப்பிரமணியம் என்ற குண்டாஸ்பாலு என்பவர் கேட்டு காவலர் முத்துராஜாவிற்கு கைபேசி மூலம் மேற்கண்ட தகவலை சொன்னதாகவும், அதை முத்துராஜா எஸ்.ஐ.பாலகிருஷ்ணனிடம் சொன்னதாகவும், அதன் பொருட்டு காவல் ஆய்வாளரிடம் சொல்லி இன்றையதினம் (19.06.2020) காவல் நிலையத்திற்கு அழைத்து வந்ததாகவும், முத்துராஜா தன்னிடம் கூறினார் என்றும், Prisoner Search Register அ.சா.ஆ.99 என்றும், அதில் பக்கம் எண்.45–ல் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோரின் பெயர் மற்றும் அடையாளங்கள், அவர்கள் உடுத்தியிருந்த உடைகள் பற்றிய விபரங்கள் உள்ளது என்றும், திரேக பரிசோதனையின்போது ஜெயராஜ் வெள்ளை வேஷ்டி, சட்டை,

வெள்ளை பனியன், ஜட்டி உடுத்தியிருந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதில் அவருடைய கைரேகை மற்றும் அவருடைய கையொப்பம் உள்ளது என்றும், திரேக பரிசோதனையின்போது பென்னிக்ஸ் மஞ்சள் சட்டை, பேண்ட், வெள்ளை பனியன், ஜட்டி உடுத்தியிருந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதில் பென்னிக்சின் கைரேகை, கையொப்பம் உள்ளது என்றும், பக்கம் எண்.45–ல் பைசலான தேதியும், உத்தரவு குறிப்பின் நம்பரும் என்ற இடத்தில் காவலர் முத்துராஜாவும், செல்லத்துரையும் கையெழுத்திட்டுள்ளனர் என்றும், பக்கம் எண்.45–ல் கடைசியில் எஸ்.ஐ.ரகுகணேஷ் முத்திரையிட்டு கையொப்பமிட்டுள்ளார் என்றும் Duty Roster அ.சா.ஆ.100 என்றும், அ.சாஆ.100–ல் பக்கம் எண்கள்.60 முதல் 63 வரையிலான பக்கங்கள் ஏற்கனவே அ.சா.ஆ.36 குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அ.சா.ஆ.23 முதல் தகவல் அறிக்கையில் காவலர் முருகன், எஸ்.ஐ.ரகுகணேஷ் ஆகியோர்களின் கையழுத்துகள் உள்ளது என்றும், அ.சா.ஆ.22 புகாரில் காவலர் முத்துராஜா அறிவேன் சாட்சி என்று எழுதி கையொப்பமிட்டுள்ளார் என்றும், முருகன் மேற்படி புகாரை கொடுத்ததற்கு கையொப்பம் செய்துள்ளார் என்றும், அதை வாங்கியதாக எஸ்.ஐ.ரகுகணேஷ் கையொப்பம் செய்துள்ளார் என்றும், அ.சா.ஆ.24 prayer for remand ஆவணத்தில் ரகுகணேஷ் அவர்களின் கையொப்பம் உள்ளது என்றும், அ.சா.ஆ.25, அ.சா.ஆ.26 ஆன Arrest/Court Surrender Form என்ற ஆவணத்தில் ரகுகணேஷ் கையொப்பமிட்டுள்ளார் என்றும், அ.சா.ஆ.27, அ.சா.ஆ.28 ஆன கைதி குறிப்பாணை ஆவணங்களில் ரகுகணேஷ் கையொப்பமிட்டுள்ளார் என்றும், அ.சா.ஆ.29, அ.சா.ஆ.30 check list for arrest u/s.41 என்ற ஆவணத்தில் ரகுகணேஷ் கையொப்பமிட்டுள்ளார் என்றும், தற்போது தன்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் குற்ற எண்.312/2020–க்கான வழக்கு நாட்குறிப்பு என்றும், அது அ.சா.ஆ.101 என்றும், அ.சா.ஆ.101–ல் உதவி ஆய்வாளர் சாத்தான்குளம் காவல்நிலையம் என்று எழுதப்பட்டுள்ள இடத்தில் யாருடைய கையொப்பமும் இல்லை என்றும், அ.சா.ஆ.31–ல் உள்ள 1 முதல் 4 வாக்குமூலங்களில் ரகுகணேஷ் அவர்களின் கையொப்பம் உள்ளது என்றும், அ.சா.ஆ.31–ல் 5, 6 வாக்குமூலங்களில் உதவி ஆய்வாளர் கையொப்பம் இல்லை என்றும், தான் 15.07.2020, 22.09.2020 ஆகிய தேதிகளில் பார்வை மகஜரில்

சாட்சியாக கையொப்பமிட்டுள்ளதாகவும், 15.07.2020ம் தேதியிட்ட Observation Memorandum–ல் அனைத்து பக்கங்களிலும் தன்னுடைய கையெழுத்து உள்ளது என்றும், அது அ.சா.ஆ.102 என்றும், அ.சா.ஆ.102 Observation Memorandum–ல் எங்கெங்கே எந்தெந்த இடத்தில் ஜெயராஜ், பென்னிக்சை காவலர்கள் வைத்து அடித்தார்கள் என்று தான் கூறியுள்ளதாகவும், மேற்படி நடவடிக்கையானது இரவு 08.30 மணிக்கு ஆரம்பித்து 09.05 மணிக்கு முடிந்தது என்றும், அந்த observation memorandum கூடவே ஒரு மாதிரி வரைபடம் தயாரிக்கப்பட்டது என்றும், அந்த மாதிரி வரைபடம் ஏற்கனவே அ.சா.ஆ.75 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த மாதிரி வரைபடத்தில் தன்னுடைய கையெழுத்து உள்ளது என்றும், அந்த மாதிரி வரைபடத்தில் எங்கெங்கு ஜெயராஜ், பென்னிக்சை அடித்தார்கள் என்று சிகப்பு மையினால் குறியீடு செய்து எழுதப்பட்டுள்ளது என்றும், அந்த இடத்திலும் தான் கையொப்பம் செய்துள்ளதாகவும், ஜெயராஜ், பென்னிக்சை எந்த டேபிளில் குப்புற படுக்க வைத்து அடித்தார்கள் என்பதை தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும், அந்த டேபிள் இன்று நீதிமன்றத்தில் உள்ளது என்றும், அது ஏற்கனவே அ.சா.பொ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், தான் observation memorandum–ல் சி.பி.ஐ போலீசாரிடம் இந்த டேபிள் தான் என்று அடையாளம் காண்பித்ததாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் memorandum ஏற்கனவே அ.சா.ஆ.77 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அ.சா.ஆ.77–ன் அனைத்து பக்கங்களிலும் தனது கையொப்பம் உள்ளது என்றும், மேற்படி memorandum–ல் குறிப்பிட்ட நடவடிக்கையானது 2 மணிக்கு ஆரம்பித்து 6 மணிக்கு முடிக்கப்பட்டது என்றும், அந்த நடவடிக்கை ஜெயராஜ் வந்தது முதல் பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜை காவல்நிலையத்தில் வைத்து காவலர்கள் எந்தெந்த இடத்தில் வைத்து, எந்தெந்த ஆயுதத்தை வைத்து எப்படி அடித்தார்கள் என்று ஒரு நாடகம் போல் நிகழ்த்தி காட்டப்பட்டது என்றும், அந்த நிகழ்வு வீடியோவாக பதிவு செய்யப்பட்டது என்றும் மற்றும் C.F.S.L. குழுவைச் சேர்ந்த நிபுணர்கள் தடயங்களை சேகரித்துக் கொண்டார்கள் என்றும், தான் நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி அவர்களிடம் கொடுத்த வாக்குமூலம் அ.சா.ஆ.103 என்றும், அ.சா.ஆ.103–ல் அனைத்து பக்கங்களிலும் தன்னுடைய கையெழுத்து உள்ளது என்றும், சி.பி.ஐ போலீசார் தன்னை

சாத்தான்குளம் காவல்நிலையம், அரசு மாளிகை திருச்செந்தூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் வைத்து விசாரித்தார்கள் என்றும், கோயம்புத்தூரில் வைத்து தன்னை விசாரிக்கும்போது காமராஜர் சிலை அருகில் நடந்த சம்பவத்தின் சி.சி.டி.வி பதிவுகளையும் மற்றும் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் இருந்த சி.சி.டி.வி.பதிவுகளையும் காண்பித்து காவலர்களை மற்றும் ஜெயராஜ், பென்னிக்சை அடையாளம் காட்ட சொன்னார்கள் என்றும், தான் அந்த சி.சி.டி.வி பதிவுகளில் இருந்த காவலர்கள் மற்றும் ஜெயராஜ், பென்னிக்சை அடையாளம் காட்டியதாகவும், தாமஸ் பிரான்சிஸ் அவர்களின் பாக்கெட் டைரி அ.சா.ஆ.104 என்றும், சாமதுரை அவர்களின் பாக்கெட் டைரி அ.சா.ஆ.105 என்றும், பால்துரை அவர்களின் பாக்கெட் டைரி அ.சா.ஆ.106 என்றும், தான் சம்பவம் நடந்த பின்பு 30.06.2020 வரை காவல்நிலையத்தில் பணிபுரிந்ததாகவும், காவல் நிலையமானது வருவாய் துறையின் கட்டுப்பாட்டில் இருந்தது என்றும், வருவாய் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும் போது திருநெல்வேலி தடய அறிவியல் துறை நிபுணர்கள் காவல்நிலையத்திற்கு வந்து தடயங்களை சேகரித்துக்கொண்டு எடுத்துச் சென்றார்கள் என்றும், சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் இருந்து எடுத்த சி.சி.டி.வி. பதிவுகள் நீதிமன்றத்தில் போட்டு காண்பிக்கப்பட்டதில் அந்த சி.சி.டி.வி பதிவுகளில் இருந்த காவலர்கள் எஸ்.ஐ. பாலகிருஷ்ணன், டிரைவர் ஜெய்சேகர், சாமதுரை, செல்லத்துரை, முத்துராஜா மற்றும் ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோர்களை அடையாளம் காட்டியும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர் நொண்டி நொண்டி நடந்து சென்றார்கள் என்றும், அவர்கள் பின்னால் இரத்தக்கறை இருந்தது என்றும், மேலும், மருத்துவமனையில் பென்னிக்ஸ் அவரது உடைகளை மாற்றியதும் பதிவாகியதை அடையாளம் காண்பித்தும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் மேற்படி ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோர்கள் காவல்நிலைய ஊர்தியான வெள்ளை நிற சுமோவில் இருந்து இறங்கி மருத்துவமனைக்குள் சென்றார்கள் என்றும், 19.06.2020–ம் தேதியன்று இரவு காவல்நிலையத்தில் கொரோனா வாலண்டியர்ஸ் மற்றும் ப்ரண்ட்ஸ் ஆப் போலீஸ் யாரும் இல்லை என்றும், பென்னிக்ஸ் இரத்தத்தை துடைத்த பனியன் எந்த கூடையில் இருந்து எடுக்கப்பட்டதோ அந்த கூடையிலேயே போடப்பட்டது என்றும், லத்தி மற்றும் சிலம்பு

கம்பால் 10 நிமிடம் இடைவெளி விட்டு விட்டு அடித்தார்கள் என்றும், அன்றைய தினம் தான் சுமார் 09.00 மணியளவில் தன்னுடைய கைப்பையை எடுக்க செல்லும்போது பாலகிருஷ்ணன் பென்னிக்சை அடித்துக் கொண்டிருந்தார் என்றும், மாடிப்படியிலிருந்து ரவிச்சந்திரன் இறங்கி வந்து கொண்டிருந்தார் என்றும், காவல்நிலையத்தின் வாயிற்கதவு இரண்டு கதவுகளாக இருக்கும் என்றும், கீழ்பகுதி மரப்பலகையுடனும், மேல்பகுதி கண்ணாடி கதவாகவும் இருக்கும் என்றும் கண்ணாடி கதவின் வழியாக வெளியில் இருந்து பார்த்தால் உள்ளே நடப்பது தெரியும் என்றும், உள்ளே இருந்து பார்த்தால் வெளியில் நடப்பது தெரியும் என்றும், காவல்நிலையத்தில் நுழைந்தவுடன் வலது பக்கம் ஒரு கம்ப்யூட்டர் டேபிள் இருக்கும் என்றும், அதை ஒட்டினார் போல் காவல் ஆய்வாளர் அறை இருக்கும் என்றும், இடதுபக்கம் ஒரு டேபிள் இருக்கும் என்றும், அதை ஒட்டினார் போல் உதவி ஆய்வாளர் அறை இருக்கும் என்றும், அதற்கடுத்து எழுத்தர் அறை இருக்கும் என்றும், எழுத்தர் அறையை ஒட்டினார் போல் ஆயுத அறை இருக்கும் என்றும், அந்த ஆயுத அறையானது நுழைவு வாயிலுக்கு நேராக இருக்கும் என்றும், ஆயுத அறைக்கு பக்கத்தில் கைதிகள் அறை இருக்கும் என்றும், கைதிகள் அறை பக்கத்தில் மாடிக்கு செல்லும் படிக்கட்டு இருக்கும் என்றும், படிக்கட்டில் ஏறும்போது வலதுபக்கம் கழிவறை இருக்கும் என்றும், பென்னிக்சிடமிருந்து கோல்ட் கலர் வாட்ச், ஒரு மோதிரம், ஒரு வெள்ளி கொடி, ஒரு செல்போனும் மற்றும் ஜெயராஜிடமிருந்து ஒரு பட்டன் செல்போன், கார்டுகள் அடங்கிய ஒரு பவுச் மற்றும் அதில் பணம் இருந்தது என்றும், மேற்படி பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் அணிந்த பொருட்களை காவலர் முருகன் தன்னிடம் வாங்கி கொடுத்தார் என்றும், மேற்படி பொருட்களை தான் வாங்கி காவல் நிலையத்தில் உள்ள பீரோவில் வைத்ததாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் கம்புகள் மற்றும் லத்திகள் தான் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை அடிக்க உபயோகப்படுத்திய கம்புகள் மற்றும் லத்திகள் என்றும் அவை அ.சா.பொ.21 வரிசை என்றும், (எண்ணிக்கையில் மொத்தம் – 11 (சிறிய கம்பு ஒன்றும், இரண்டு லத்தியும், பிளாஸ்டிக் பைப் ஒன்றும் அதில் அடக்கம்) 19.06.2020–ம் தேதியன்று பென்னிக்ஸ் அணிந்திருந்த உடைகள் ஏற்கனவே அ.சா.பொ.12 மற்றும் அ.சா.பொ.20 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், 19.06.2020–ம் தேதியன்று

ஜெயராஜ் அணிந்திருந்த உடைகள் ஏற்கனவே அ.சா.பொ.13 மற்றும் அ.சா.பொ.17 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், CBI விசாரணையில் 19.06.2020–ம் தேதியன்று காமாராஜர் சிலை அருகே எந்தெந்த போலீசார்கள் இருந்தார்கள் என்றும், ஜெயராஜை யார் கூட்டிச் சென்றார்கள் என்றும், அதை தொடர்ந்து பென்னிக்ஸ் வந்ததையும், சி.சி.டி.வி பதிவுகளில் அடையாளம் காண்பித்ததாகவும், அந்த சி.சி.டி.வி. பதிவில் 19.06.2020–ம் தேதியன்று ஜெயராஜை காவலர்கள் பாலகிருஷ்ணன் மற்றும் முத்துராஜா ஆகியோர்கள் கூட்டிச்சென்று காவல் ஆய்வாளர் வாகனத்தில் ஏற்றினார்கள் என்றும், காவல் ஆய்வாளர் வாகனத்தில் இருந்தார் என்றும், மேற்படி வாகனத்தில் ஜெயசேகரும் இருந்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் குறுக்கு விசாரணையில் Daily Situation Report பக்கம் 620, 621–ல் உள்ள சங்கதிகள் காவலர் முருகனால் எழுதப்பட்டுள்ளது என்று அ.சா.44 சாட்சியம் அளித்துள்ளார். Daily Situation Report பக்கம் 620, 621 அ.சாஆ.107 ஆகவும் சென்ட்ரி புக்கில் பக்கம் 219 எ.ம.சா.ஆ.1 ஆகவும் பொதுநாட்குறிப்பில் பக்கம் 513–ல் 20.06.2020–ம் தேதிய குறிப்புகள் எ.மா.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6.45 20.06.2020 அன்று காவல் அடைப்பு கோரி சாத்தான்குளம் நீதித்துறை நடுவர் முன்பாக கொண்டு செல்வதற்கு முன் உடல் தகுதிச்சான்று பெற ஜெயராஜையும் பென்னிக்சையும் சாத்தான்குளம் மருத்துவமனைக்கு போலீசார் கொண்டு சென்றபோது ஜெயராஜையும் பென்னிக்சையும் மருத்துவ பரிசோதனை செய்துள்ள மருத்துவர் வினிலா அ.சா.45 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் 05.09.2019–ம் தேதி முதல் ஜூலை 2020 கடைசி வரையில் மெடிக்கல் ஆபிசராக பணிபுரிந்ததாகவும், 20.06.2020–ம் தேதியன்று காலை 8 மணியிலிருந்து மதியம் 2 மணி வரை தான் மெடிக்கல் ஆபிசராக பணியில் இருந்தபோது O.P. பார்த்துக் கொண்டிருந்ததாகவும் அன்று காலை சுமார் 8.30 மணியளவில் ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோரை இரண்டு காவலர்கள் அழைத்து வந்தார்கள் என்றும் ஜெயராஜ், பென்னிக்ஸ் வருவதற்கு முன்பு அவர்களுடைய எடை, பி.பி, நாடித்துடிப்பு, உடல் வெப்பநிலை ஆகியவற்றை பார்த்துவிட்டு வந்தார்கள் என்றும், தன்னுடைய

அறைக்கு சிகிச்சைக்காக ஜெயராஜ், பென்னிக்ஸ் வரும்போது இரண்டு காவலர்களும் உடன் வந்தார்கள் என்றும் ஜெயராஜ், பென்னிக்ஸ் வரும் போது நடக்க கஷ்டப்பட்டு தாங்கி தாங்கி வந்தார்கள் என்றும் இரண்டு காவலர்களும் தன்னிடம் மெடிக்கல் மெமோவை காண்பித்து ஜெயராஜ், பென்னிக்ஸ் இரண்டுபேரும் 19.06.2020–ம் தேதியன்று புரண்டு புரண்டு பிரச்சனை செய்ததால் அவர்களுக்கு அடிப்பட்டுள்ளது என்றும், அவர்களுக்கு சிசிக்சை அளிக்கும்படி மெமோ கொடுத்தார்கள் என்றும், முதலில் ஜெயராஜ் என்பவருக்கு தான் சிகிச்சை அளித்ததாகவும், அவருடைய பெயர், முகவரி, வயது, அடையாள குறிப்புகள் மற்றும் மெமோ விபரங்களையும் A.R entry–ல் பதிவு செய்ததாகவும், ஜெயராஜ் தனக்கு சுகர் பிரச்சனை இருக்கிறது என்றும், அதற்கு மாத்திரை எடுத்து வருவதாகவும், வேறு நோய் எதுவும் இல்லை என்றும், தன்னிடம் சொன்னார் என்றும், அவருக்கு பி.பி 190/80 அளவில் இருந்தது என்றும், BP உள்ளதா என்று கேட்டதற்கு ஜெயராஜ் தனக்கு BP இல்லை என்று சொன்னார் என்றும், தன் முன் ஜெயராஜ் அமர்ந்திருந்தபோது பதற்றத்துடனும், அழுத்தத்துடனும் இருந்தார் என்றும், பின்பு ஜெயராஜ் தனக்கு உடல் முழுவதும் வலி உள்ளது என்று சொன்னார் என்றும், அதன்பின்னர் ஜெயராஜிடம் எப்படி வலி ஏற்பட்டது, காவல்துறையினர் எதுவும் அடித்தார்களா என்று தான் கேட்டதாகவும், முதலில் ஜெயராஜ் பதில் எதுவும் கூறவில்லை என்றும், அமைதியாக இருந்தார் என்றும், அதன்பின்னர் ஜெயராஜிடம் மெடிக்கல் மெமோவில் இருந்த சம்பவத்தை பற்றி கேட்டபோது, அவர் தன்னிடம் போலீஸ் துரத்தும்போது காமராஜர் சிலை அருகே விழுந்து காயம் அடைந்ததாக சொன்னார் என்றும், அதன்பின்பு ஜெயராஜ் தன்னுடைய புட்டப்பகுதியில் காயம் உள்ளது என்று கூறி தன்னுடைய புட்டப்பகுதியில் இருந்த உடையை கீழே இறக்கி தன்னிடம் காண்பித்தார் என்றும், அப்போது ஜெயராஜ் என்பவருக்கு இரண்டு புட்டத்திலும் பரவலாக காயங்கள் இருந்தது என்றும், தோல் உறிந்து இரத்தக்கசிவும் இருந்தது என்றும், அவர் உடுத்தியிருந்த துணியிலும் இரத்தக்கசிவு இருந்தது என்றும், தான் பார்த்த காயத்தின் அளவை தோராயமாக A.R.entry–ல் பதிவு செய்துள்ளதாகவும், ஜெயராஜ் தனக்கு வேறு எந்த தொந்தரவோ, நெஞ்சுவலியோ, மூச்சு விடுவதில் சிரமமோ இல்லை என்று கூறினார் என்றும் ஜெயராஜ் வேறு எந்தக் காயங்களை பற்றியும்

தன்னிடம் தெரிவிக்கவில்லை என்றும், தான் ஜெயராஜ் அணிந்திருந்த உடைகளை கழற்றி நிர்வாணமாக பார்க்கவில்லை என்றும், அதன் பின்னர் தான் காயத்தை சுத்தம் செய்ய சொல்லி பி.பி.க்கு மாத்திரை எழுதிக் கொடுத்ததாகவும், டி.டி.இன்ஜெக்சன் மற்றும் வலிக்குரிய ஊசியை பரிந்துரை செய்ததாகவும், ஜெயராஜ் அவர்கள் பதற்றத்துடனும், அழுத்தத்துடனும் இருந்ததால் பி.பி.மாத்திரையை பரிந்துரை செய்து ஒருமணி நேரம் கழித்து வரச் சொன்னதாகவும், மெடிக்கல் மெமோவில் குறிப்பிட்டுள்ளது போல் புரண்டு புரண்டு பிரச்சனை செய்தாலோ, போலீஸ் துரத்தும் போது கீழே விழுந்தாலோ, காயம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என்று தான் ஜெயராஜிடம் கேட்டதற்கு ஜெயராஜ் பதில் எதுவும் சொல்லவில்லை என்றும், மேற்படி காயங்களை பார்க்கும்போது கட்டையில் அடித்த காயம் போல் இருந்தது என்றும், பிறகு ஜெயராஜை ஒரு மணிநேரம் கழித்து வந்து தன்னை பார்க்க சொன்னதாகவும், அதன்பிறகு பென்னிக்ஸின் வயது, முகவரி, அவருடைய அடையாள குறிப்புகள் ஆகியவற்றை A.R.entry–ல் பதிவு செய்ததாகவும், பென்னிக்சுக்கு பி.பி அளவு 180/100 என்ற அளவில் இருந்தது என்றும், அவர் பி.பி. சுகரும் இல்லை என்றும், சிறுநீரகத்தில் கல் இருந்தது என்றும், அதற்கு மருத்துவம் செய்து கொண்டதாகவும், இப்போது எந்த பிரச்சனையும் இல்லை என்றும், தன்னிடம் சொன்னார் என்றும், பென்னிக்ஸ் உடம்பு வலி இருப்பதாக கூறினார் என்றும், பென்னிக்சின் கையை பார்க்கும்போது அவருக்கு வலது கையின் ஆள்காட்டி விரலில் வீக்கம் இருந்தது என்றும், அதில் சிராய்ப்புக்காயமும் இருந்தது என்றும், அவருடைய இடதுகாலின் பாதப்பகுதியின் முன்பகுதியில் வீக்கக் காயம் இருந்தது என்றும், பென்னிக்ஸ் தனக்கு புட்டப்பகுதியில் காயம் இருப்பதாக கூறினார் என்றும், உடையை கீழே இறக்கி காயத்தை தன்னிடம் காண்பித்தார் என்றும், இரண்டு புட்டப்பகுதியிலும் பரவலாக காயங்கள் இருந்தன என்றும், இரத்தக்கசிவும் இருந்தது என்றும், மேற்படி புட்டப்பகுதியில் இருந்த காயமானது தோல் உரிந்து இரத்தம் கசிந்து இருந்தது என்றும், அதன் அளவு தோராயமாக சுமார் 4 செ.மீ ஆக இருந்தது என்றும், பென்னிக்ஸ் தன்னிடம் வேறு காயங்கள் பற்றி சொல்லவில்லை என்றும், தானும் அவரை உடைகளை அகற்றி நிர்வாணமாக பார்க்கவில்லை என்றும், பென்னிக்ஸ் அவர்களுக்கு புட்டப்பகுதியில்

காயங்கள் மெடிக்கல் மெமோவில் குறிப்பிட்டுள்ள காரணத்தினாலோ அல்லது போலீஸ் துரத்தும்போது விழுந்த காரணத்தினாலோ ஏற்பட்ட காயங்கள் இல்லை என்றும், காயங்கள் வேறுவிதமாக உள்ளது என்றும் போலீஸ் அடித்தார்களா என்று அவரிடம் கேட்டபோது, அவர் எதுவும் பதில் கூறவில்லை என்றும், அமைதியாக இருந்தார் என்றும், பென்னிக்சுக்கும் பி.பி. அதிகமாக இருந்தது என்றும் அவரும் பதற்றத்துடனும், அழுத்தத்துடனும் இருந்தார் என்றும் மேற்படி மெமோவில் குறிப்பிட்டுள்ளது போல் அல்லது போலீஸ் துரத்தும் போது விழுந்து ஏற்பட்ட காயங்கள் போல் தான் பார்த்த காயங்கள் இல்லை என்றும், அந்த காயங்கள் கட்டையால் அடித்தாற் போல் ஏற்பட்ட காயங்கள் ஆக இருந்தது என்றும், தான் மேற்படி பென்னிக்சுக்கு சிகிச்சைக்கான காயங்களை சுத்தம் செய்ய சொல்லியும், டி.டி. ஊசி மற்றும் வலி ஊசி மற்றும் மாத்திரை ஆகியவைகளை பரிந்துரை செய்து அவரையும் உட்கார சொல்லி ஒரு மணி நேரம் கழித்து என்னை வந்து பார்க்குமாறு சொன்னதாகவும், ஜெயராஜ், பென்னிக்சை அழைத்து வந்த காவலர்கள் மாஸ்க் அணிந்திருந்தார்கள் என்றும், அவர்களது எண்ணை தான் A.R Entry–ல் பதிவு செய்துள்ளதாகவும், அதன்பிறகு ஜெயராஜ் ஒரு மணிநேரம் கழித்து திரும்பி பி.பி. பார்த்துவிட்டு வந்தார் என்றும், அவருக்கு பி.பி. அளவு 160/80 ஆக குறைந்து சீராக இருந்தது என்றும், மேலும், ஜெயராஜூக்கு காய்ச்சல் இருந்ததா மற்றும் வெளியூர் எதுவும் சென்று வந்தீர்களா, கொரோனா தொற்று உள்ளவரிடம் தொடர்பில் இருந்தீர்களா என்று விசாரித்ததாகவும், அவர் இல்லை என்று கூறினார் என்றும், ஜெயராஜூக்கு காய்ச்சலும் இல்லை என்றும், உடல் வெப்பநிலையும் சீராக இருந்தது என்றும், அதனால் அவருக்கு கொரோனா அறிகுறி இல்லை என்று தான் Remand Form–ல் பதிவு செய்ததாகவும், ஜெயராஜ் அந்த சமயத்தில் clinically stable ஆக இருந்த காரணத்தினால் அவருக்கு பி.பி.மாத்திரை பரிந்துரை செய்து, அவ்வப்போது பி.பி. அளவு சரிபார்க்க வேண்டுமென்று பரிந்துரை செய்து Fit for Remand என எழுதிக்கொடுத்தாகவும், பென்னிக்ஸ் 45 நிமிடம் கழித்து பி.பி பார்த்துவிட்டு வந்தார். அவருக்கு பி.பி–யின் அளவு 170/100 அளவில் இருந்தது என்றும், அவருக்கு மறுபடியும் பி.பி மாத்திரை பரிந்துரை செய்து ஒரு மணி நேரம் கழித்து பி.பி அளவு பார்த்துவிட்டு வருமாறு சொன்னதாகவும், திரும்ப ஒரு மணிநேரம் கழித்து பென்னிக்ஸ்

வந்த போது அவரின் பி.பி அளவானது 150/90 ஆக குறைந்து சீராக இருந்தது என்றும், அவருக்கும் கொரோனா அறிகுறி எதுவும் இல்லை என்றும், மேற்படி விபரங்களை Remand Form–ல் பதிவு செய்ததாகவும், பென்னிக்ஸ் அந்த சமயத்தில் clinically stable ஆக இருந்த காரணத்தினால் அவருக்கு பி.பி.மாத்திரை பரிந்துரை செய்து, அவ்வப்போது பி.பி. அளவு சரிபார்க்க வேண்டுமென்று பரிந்துரை செய்து Fit for Remand என எழுதிக்கொடுத்தாகவும், பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் ஆகியோரை நின்ற நிலையில் பரிசோதனை செய்ததாகவும், படுக்க வைத்து பரிசோதனை செய்யவில்லை என்றும், மேற்படி பென்னிக்ஸ், ஜெயராஜ் ஆகியோரின் புட்டப்பகுதியில் பார்த்த காயங்கள் போலீசார் அடித்த காயங்கள் போல் இருந்தது என்றும், சி.பி.ஐ போலீசார் பிரேத பரிசோதனை மற்றும் உடல்கூறாய்வு ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள காயங்கள் பற்றி விசாரித்தபோது தான் அந்த காயங்கள் நாளடையில் அதிகமாக தெரியும் என்றும், அதனுடைய complication வந்திருக்கலாம் என்று சொன்னதாகவும், ஜெயராஜ் பெயரிலுள்ள OP சீட்டு அ.சா.ஆ.15 என்றும், அந்த O.P.சீட்டின் பின்புறம் height, weight, B.P. temperature, repeat B.P. ஆகியவைகளை பணியாளர்கள் எழுதியுள்ளார்கள் என்றும், மீதமுள்ள விபரங்களை தான் எழுதியுள்ளதாகவும், அ.சா.ஆ.19 proforma for Health screening of prisoners on admission to jail என்றும், அதில் மையினால் எழுதியுள்ள விபரங்கள் தன்னால் எழுதப்பட்டவை என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடைய கையொப்பம் என்றும், அது ஏற்கனவே அ.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி அ.சாஆ.17 ஆன ஆவணத்தில் abrasion (diffuse) 2 X 3 C.m in buttock region, No travel history, no contact history, asymptomatic and no symptoms of Covid 19 என்று எழுதியுள்ளதாகவும், அ.சா.ஆ.17–ல் கீழ் இடதுபக்கத்தில் தான் பரிந்துரைத்த மருந்துகளின் விபரங்கள் கண்டுள்ளது என்றும், பென்னிக்ஸ் பெயரிலுள்ள OP சீட்டு அ.சா.ஆ.16 என்றும், அந்த O.P.சீட்டின் பின்புறம் height, weight, B.P. temperature, repeat B.P., repeat B.P. ஆகியவைகளை பணியாளர்கள் எழுதியுள்ளார்கள் என்றும், மீதமுள்ள விபரங்களை தான் எழுதியுள்ளதாகவும், அ.சா.ஆ.20 proforma for Health screening of prisoners on admission to jail என்றும், அதில் மையினால் எழுதியுள்ள விபரங்கள் தன்னால் எழுதப்பட்டவை என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடைய கையொப்பம்

என்றும், அந்த கையொப்பம் ஏற்கனவே அ.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி அ.சாஆ.18 ஆன ஆவணத்தில் swelling of left foot sole side, 0.2 X 0.1 C.M abrasion with swelling in right index finger, abrasion in buttocks, No travel history, no contact history, asymptomatic and no symptoms of Covid 19 என்று எழுதியுள்ளதாகவும், மேற்படி அ.சா.ஆ.18–ல் கீழ் இடது பக்கத்தில் தான் பரிந்துரைத்த மருந்துகளின் விபரங்கள் கண்டுள்ளது என்றும், மெடிக்கல் மெமோ புத்தகம் அ.சா.ஆ.111 என்றும், அதில் பக்கம் எண்.19–ல் Sl. No.B6729919 உள்ள ஆவணம் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் மெடிக்கல் மெமோ என்றும், அதில் வலதுபக்கம் உதவி மருத்துவ அதிகாரி அரசு மருத்துவமனை சாத்தான்குளம் என்று முத்திரையிட்டு தான் கையெழுத்து இட்டுள்ளதாகவும், மேற்படி மெடிக்கல் மெமோவை கொண்டு வந்த காவலர்களின் எண்ணானது P.C.1064 மற்றும் Grade–I 796 என்றும், சாத்தான்குளம் அரசு மருத்துவமனையின் A.R. Book–ன் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.112 என்றும், அ.சா.ஆ.112–ல் பக்கம் எண்.3–ல் மெடிக்கல் மெமோ உள்ளது என்றும், பக்கம் எண்.4–ல் ஜெயராஜ் அவர்களின் A.R. உள்ளது என்றும், அதில் எந்த காவலர்கள் மேற்படி ஜெயராஜை கூட்டி வந்தார்கள் என்ற குறிப்பு உள்ளது என்றும், அதில் தான் alleged history of accidental injury in buttocks while he was chased by police at around 8.30 p.m. near Kamaraj statue on 19.06.2020 என்று ஜெயராஜ் சொன்னதை எழுதியுள்ளதாகவும், மேலும், pain in buttocks region, abrasion 2 X 3 c.m. in buttocks region என்று எழுதியுள்ளதாகவும், மேற்படி Medical Officer என்ற இடத்தில் தன்னுடைய கையொப்பம் உள்ளது என்றும், பென்னிக்ஸ் அவர்களின் A.R.–ல் எந்த காவலர்கள் மேற்படி பென்னிக்சை கூட்டி வந்தார்கள் என்ற குறிப்பு உள்ளது என்றும், அதில் தான் alleged history of accidental injury in left leg and right index finger at around 8.30 p.m. near Kamaraj statue on 19.06.2020 என்ற பென்னிக்ஸ் சொன்னதை எழுதியுள்ளதாகவும், மேலும், pain, swelling in left foot sole side, 0.2 X 0.1 c.m. abrasion in right index finger with swelling, abrasion in buttocks region என்று எழுதியுள்ளதாகவும், மேற்படி Medical Officer என்ற இடத்தில் தன்னுடைய கையொப்பம் உள்ளது என்றும், N.C.D Screening Register–ன் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.113 என்றும், அ.சா.ஆ.113–ல் பக்கம் எண்.7–ல் பென்னிக்ஸ்

மற்றும் ஜெயராஜ் ஆகியோரின் height, weight, B.P. குறிப்புகள் உள்ளது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். நீதித்துறை நடுவர் திரு.பாரதிதாசன் அவர்களிடம் மருத்துவர்.வினிலா கொடுத்துள்ள வாக்குமூலம் அ.சா.ஆ.114 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6.46 கோவில்பட்டி கிளைச்சிறையில் பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் உடன் சக கைதியாக இருந்துள்ள திரு.இராஜாசிங் அ.சா.46 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் கோவில்பட்டி கிளைச்சிறையில் வழக்கில் சிறை கைதியாக இருந்தபோது 21.06.2020–ம் தேதியன்று சுமார் 11.00 மணி முதல் 12.00 மணியளவில் ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோர்களை கோவில்பட்டி சிறைச்சாலையிலுள்ள சாப்பிடும் இடத்தில் வைத்து பார்த்தாகவும், அப்போது ஜெயராஜ், பென்னிக்ஸ் இருவரும் நடக்க முடியாத நிலையில் இருந்தனர் என்றும், ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகிய இருவருக்கும் அவர்களது புட்டத்தில் இரத்தம் வழிந்து கொண்டே இருந்தது என்றும், அவர்கள் தன்னிடம் தாங்கள் சாத்தான்குளத்தை சேர்ந்தவர்கள் என்றும், செல்போன் கடை நடத்தி வருவதாகவும், அதை அடைப்பதற்கு நேரம் ஆகிவிட்டது என்றும், அப்போது பாலகிருஷ்ணன் எஸ்.ஐ வந்து ஜெயராஜிடம் கடையை அடைக்க சொன்னபோது ஜெயராஜ் கடையை அடைத்துவிடுவோம் என்று கூறியதாகவும், பிறகு பாலகிருஷ்ணன் ஜெயராஜை காவல்நிலையத்திற்கு விசாரிப்பதற்காக கூட்டிச் சென்றுவிட்டார்கள் என்றும், தன்னிடம் சொன்னதாகவும், சாத்தான்குளம் காவல்நிலையம் போனபோது இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், ரகுகணேஷ் எஸ்.ஐ மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோர்கள் ஜெயராஜை பெஞ்சில் குப்புற படுக்க வைத்து அவரது புட்டப்பகுதியில் அடித்ததாக தன்னிடம் சொன்னார் என்றும், மேலும், ரகுகணேஷ், பாலகிருஷ்ணன் ஆகியோர்கள் அடித்ததாக தன்னிடம் சொன்னார் என்றும், தகவல் தெரிந்து தன்னுடைய பையன் பென்னிக்ஸ் காவல்நிலையம் வந்ததாகவும், அப்போது பென்னிக்சிடம் தன்னிடமே இவ்வளவு திமிராக பேசுவாயா என்று கூறி தன்னுடைய மகனையும் அதே பெஞ்சில் குப்புற படுக்க வைத்து அடித்துவிட்டார்கள் என்றும், ஆய்வாளர் ஸ்ரீதர் ஜெயராஜ், பென்னிக்சை அடிக்க சொன்னதாகவும், விடிய விடிய குப்புற படுக்க வைத்து அடிக்க சொன்னதாகவும் தன்னிடம் சொன்னார் என்றும், மேலும் தாங்கள் கெஞ்சியும் தங்களை

இன்ஸ்பெக்டர் அடிங்க என்று அவர்களிடம் சொன்னதன்பேரில் அவர்கள் அடித்தார்கள் என்று சொன்னதாகவும், சாப்பிடும் இடத்தில் அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்தில் இரத்தக்கறைகள் நிறைய இருந்தது என்றும், தான் அப்போது காயத்தையும், இரத்தக்கறையையும் பார்த்துவிட்டு அவர்களிடம் நாளை மருத்துவர் வருவார் என்றும், அவரிடம் காட்டுங்கள் என்று கூறியதாகவும், மேலும் தனக்கும் புட்டத்தில் இருந்த காயங்களை அவர்களிடம் காட்டியதாகவும், தன்னை எஸ்.ஐ.பாலகிருஷ்ணன், ரகுகணேஷ் ஆகியோர் இதேபோல் தான் அடித்ததாகவும் அப்போது ஆய்வாளர் ஸ்ரீதர் இதேபோல் தான் தூண்டி விட்டதாகவும் தான் அவர்களிடம் கூறியதாகவும், மறுநாள் மருத்துவர் வந்தார் என்றும், தனக்கு ஏற்கனவே மாத்திரை, மருந்துகள் இருந்ததால் தான் மருத்துவரை சென்று பார்க்கவில்லை என்றும், தான் சிறை எண்.4–ல் இருந்ததாகவும், ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோர் சிறை எண்.3–ல் இருந்தார்கள் என்றும் ஜெயராஜ், பென்னிக்ஸ் மருத்துவரை சென்று பார்ப்பதற்கு சிறை எண்.3–ல் இருந்து வெளியே வரும்போது தான் பார்த்ததாகவும், 18.05.2020–ம் தேதியன்று பேய்க்குளம் பக்கத்திலுள்ள மீரான்குளம் என்ற இடத்திற்கு தான் தன்னுடைய நண்பர்களுடன் திருமண நிகழ்விற்காக சென்றிருந்ததாகவும், கல்யாண வீட்டில் சாப்பிட்டுவிட்டு தான் மீரான்குளத்தில் இருந்ததாகவும், 19.05.2020–ம் தேதியன்று அதிகாலை 2.30 மணியளவில் சுமார் ஐந்து பேர் தங்களை அடித்து சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு கூட்டி வந்தார்கள் என்றும், தங்களை சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு கூட்டி வரும்போது ஆய்வாளர் ஸ்ரீதர் காவல்நிலையத்தில் இருந்தார் என்றும், தங்களை கூட்டி வந்தவர்கள் காவலர்கள் என்று கூறினார்கள் என்றும், ஆனால் அவர்கள் சீருடை அணியவில்லை என்றும், ஆய்வாளர் ஸ்ரீதர் அப்போது தங்களை விசாரித்தார் என்றும், 18ம் தேதி மாலை 6 மணியளவில் கொலை நடந்துள்ளது என்றும், அதை யார் செய்தனர் என்றும் தன்னிடம் கேட்டார் என்றும், தாங்கள் கல்யாணத்திற்கு சென்று அங்கு தான் இருந்தோம் தங்களுக்கு நடந்த விசயங்கள் எதுவும் தெரியாது என்று ஆய்வாளரிடம் கூறியதாகவும், அப்போது ரகுகணேஷ் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் எஸ்.ஐ ஆகியோர்கள் காவல்நிலையத்திற்கு வந்தார்கள் என்றும், ஆய்வாளர் ஸ்ரீதர் இவர்கள் எதுவும் வழக்கு சம்பவம் குறித்து

சொல்ல மாட்டேன் என்கிறார்கள் அவர்களையும் மேஜையில் குப்புற படுக்க வைத்து அடிங்கள் என்று கூறினார் என்றும், தங்களை தனித்தனியாக பெஞ்சில் படுக்க வைத்து கையில் விளங்கு போட்டு பூட்டிவிட்டு குப்புற படுக்க வைத்து புட்டப்பகுதியில் ஒரு ஒரு தடவையும் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம், ஒன்றரை மணி நேரம் அடித்தாகவும், தங்களை அடிக்கும் போது ஆய்வாளர் ஸ்ரீதர் அடித்துக் கொண்டே இருங்கள், சத்தம் மாடி வரைக்கும் கேட்க வேண்டும் என்று சொல்லுவார் என்றும், இரவும், பகலுமாக தங்களை 3 நாள்கள் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் வைத்து அடித்தார்கள் என்றும், தங்களை ரிமாண்ட் செய்வதற்கு கூப்பிட்டார்கள் என்றும், அப்போது தன்னுடைய கைகள், மற்றும் தன்னுடன் அழைத்து வந்த மற்ற நபர்களுடைய இரண்டு கைகளிலும் வீக்கம் இருந்தது என்றும், பின்னாடி புட்டப்பகுதியில் இரத்தம் வந்து கொண்டிருந்தது என்றும், அப்போது வீக்கத்தில் ஐஸ்கட்டி தடவி வீக்கம் குறைவதற்கு செய்தார்கள் என்றும், பின்பு வீக்கம் கொஞ்சம் குறைந்த பிறகு குதிக்கச் சொல்லி இரண்டு கைகளையும் சுவற்றில் தட்டச் சொன்னார்கள் என்றும், மருத்துவமனை செல்ல வேண்டும் அங்கு மருத்துவர் போலீசார் அடித்தார்களா என்று கேட்பார்கள் நீங்கள் எதுவும் சொல்லக் கூடாது மீறி சொன்னால் இரண்டு கால்களையும் உடைத்து மறுபடியும் சிறைக்கு தான் அனுப்புவோம் என்று ரகுகணேஷ், பாலகிருஷ்ணன் ஆகியோர்கள் கூறினார்கள் என்றும், பிறகு அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும், அங்கு ஒரு பெண் மருத்துவர் இருந்தார் என்றும், போலீசார் அருகில் இருந்தார்கள் என்றும், தாங்கள் பயந்து மருத்துவரிடம் எதுவும் சொல்லவில்லை என்றும், தலைவலி, உடம்புவலி உள்ளது என்று சொன்னதாகவும், மருத்துவர் சீட்டு எழுதி ரகுகணேஷ், பாலகிருஷ்ணன் மற்றும் இரண்டு போலீசார்காரர்களிடம் கொடுத்துவிட்டார் என்றும், அதன்பின்னர் வெளியே கூட்டி வந்து நீதிமன்றத்திற்கு ரிமாண்டிற்கு அழைத்துச் செல்கிறோம், நீதிபதி போலீசார் அடித்தார்களா என்று கேட்பார் அப்போது எதுவும் சொல்லக்கூடாது என்று சொன்னதாகவும், இரத்தம் வந்த அடையாளம் தெரியாமல் தங்களை பேண்ட் போடச் சொன்னார்கள் என்றும், தாங்கள் பேண்ட் போட்டு மேற்படி இரத்தம் வந்த இடங்களை மறைத்துவிட்டதாகவும், மேலும், நீதிபதி போலீஸ் அடித்தார்களா என்று கேட்கும்போது அடிக்கவில்லை என்று சொல்ல வேண்டும்

என்றும் சொன்னார்கள் என்றும், அப்படி மீறி சொன்னால் உங்களை ரிமாண்டே பண்ணாமல் காலை உடைத்து வீட்டில் கொண்டு போட்டு விடுவோம் என்று சொன்னார்கள் என்றும், அதன்பிறகு தங்களை நீதிமன்றத்திற்கு கூட்டிச் சென்றார்கள் என்றும், நீதிமன்றத்தில் நீதிபதி அவர்கள் தங்களிடம் போலீசார் அடித்தார்களா என்று கேட்டார்கள் என்றும், கால்களை உடைத்து விடுவார்கள் என்ற பயத்தில் தாங்கள் காவல்துறையினருக்கு பயந்து தங்களை அடிக்கவில்லை என்று நீதிபதியிடம் கூறியதாகவும், பிறகு தங்களை பேரூரணி சிறையில் அடைத்தார்கள் என்றும், சிறையில் அடைக்கும்போது அங்கிருந்த சிறைக்காவலர்கள் தங்களை பார்த்தார்கள் என்றும், அப்போது தங்களுக்கு புட்டப்பகுதியில் சதை கிழிந்து இரத்தம் வந்ததை பார்த்தார்கள் என்றும், மேலும், எங்கெங்கு காயங்கள் உள்ளது என்றும், எங்கெங்கு இரத்தம் வருகிறது என்றும் ஆவணத்தில் குறித்துக்கொண்டார்கள் என்றும், ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோர் இறந்த பிறகு கோவில்பட்டி நீதித்துறை நடுவர் கோவில்பட்டி சிறைச்சாலைக்கு வந்து விசாரித்தார்கள் என்றும், அப்போது தன்னையும் விசாரித்தார்கள் என்றும், தான் அவர்களிடம் உடம்பில் இருந்த காயங்களை காட்டியதாகவும், அப்போது தான் நீதிபதியிடம் எல்லா காயங்களையும் காட்டியதாகவும் புட்டப்பகுதியிலுள்ள காயங்களையும் காட்டியதாகவும், அவர்கள் எல்லாவற்றையும் எழுதிக்கொண்டார்கள் என்றும், தன்னிடம் யார் அடித்தார்கள் என்று நீதிபதி கேட்டார் என்றும், தான் நீதிபதியிடம் சாத்தான்குளம் காவல்நிலையத்தை சேர்ந்த ரகுகணேஷ், பாலகிருஷ்ணன் ஆகியோர்கள் அடித்தார்கள் என்றும், அவர்கள் எப்படி அடித்தார்கள் என்றும், அனைத்து விபரத்தையும் நீதிபதியிடம் சொன்னதாகவும், மேலும், ஆய்வாளர் ஸ்ரீதர் தூண்டுதலின் பேரில் ரகுகணேஷ், பாலகிருஷ்ணன் தன்னை அடித்தார்கள் என்ற விபரத்தையும் தான் சொன்னதாகவும், தான் சொன்ன விபரத்தை நீதிபதி பதிவு செய்தார் என்றும், பதிவு செய்ததை தன்னிடம் படித்து பார்க்கும்படி சொன்னார் என்றும், தான் படித்துப்பார்த்து மேற்படி வாக்குமூலத்தில் கையெழுத்து போட்டதாகவும், தான் பெயிலில் வெளியே வந்த பிறகு தன்னை அடித்தது சம்பந்தமாக ரகுகணேஷ், பாலகிருஷ்ணன் மீது வழக்கு பதிந்துள்ளதை தெரிந்து கொண்டதாகவும், தான் கோவில்பட்டி கிளைச்சிறைக்கு சென்றபோது தனக்கு இருந்த காயங்களை

காட்டியதாகவும், அவை அனைத்தையும் கோவில்பட்டி சிறைச்சாலையில் இருந்த காவலர்கள் குறித்து கொண்டார்கள் என்றும், அந்த ஆவணத்தில் தான் கையெழுத்து செய்ததாகவும், அ.சா.ஆ.1 பதிவேட்டில் தனது கையெழுத்து உள்ளது என்றும், அதிலுள்ள கைநாட்டு தன்னுடைய கைநாட்டு என்றும், தன் கையெழுத்துக்கு மேல் சிவப்பு மையினால் உள்ள விபரங்கள் சிறைக்காவலர்களால் எழுதப்பட்டது என்றும், அதிலுள்ள கையெழுத்து மற்றும் கைரேகை அ.சா.ஆ.115 என்றும், நீதித்துறை நடுவரிடம் தான் கொடுத்த வாக்குமூலத்தின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.116 என்றும், அதில் தன்னுடைய கையொப்பம் உள்ளது என்றும், தன்னை அடித்த காவலர்கள் எஸ்.ஐ.ரகுகணேஷ் மற்றும் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன், ஆய்வாளர் ஸ்ரீதர் ஆகியோர்கள் இந்நீதிமன்றத்தில் உள்ளார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.47 சாத்தான்குளம் காவல்நிலையத்தில் பணிபுரிந்துள்ள பெண்காவலர் திருமதி.ரேவதி அ.சா.47 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் 2016 முதல் 2020 வரை சாத்தான்குளம் காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்ததாகவும் சி.பி.ஐ.போலீசார் சி.பி.சி.ஐ.டி போலீசார் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் விசாரணை செய்ததாகவும் 19.06.2020–ம் தேதி சாத்தான்குளம் காவல்நிலையத்தில் காலை 08.00 மணி முதல் 20.06.2020–ம் தேதி காலை 08.00 மணி வரை தனக்கு பாராகாவல் பணி ஒதுக்கப்பட்டது என்றும், 19.06.2020 அன்று காவலர்கள் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ், தலைமைக்காவலர் முருகன், சாமதுரை, பெண் தலைமைக்காவலர் ப்யூலாசெல்வகுமாரி, த.கா. ஜெயசேகரன், சிறப்பு உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன், செல்வின், மு.நி.கா.செல்லத்துரை, தாமஸ் பிரான்சிஸ், அழகுமாரிச்செல்வம், மகாராஜா, காவலர் முத்துராஜா ஆகியோர் தன்னுடன் பணியில் இருந்தனர் என்றும், நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரிகள் அனைவரும் 19.06.2020 அன்று பணியில் இருந்தனர் என்றும், 19.06.2020–ம் தேதியன்று மாலை 06.00 மணியிலிருந்து 08.00 மணி வரை தனக்கு ஓய்வு நேரம் என்றும், அந்த ஓய்வு நேரத்தில் தான் வீட்டிற்கு சென்று குழந்தைகளுக்கு சாப்பாடு கொடுத்துவிட்டு 8.30 மணியளவில் காவல் நிலையத்திற்கு பணிக்கு கிளம்பியதாகவும், சாத்தான்குளம்

காவல்நிலையம் வரும்போது தலைமைக்காவலர் ப்பூலா செல்வகுமாரி தனக்கு கைபேசியில் தொடர்பு கொண்டு காவல்நிலையத்தில் பிரச்சனையாக உள்ளது. காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் பாரா போலீஸ் எங்கே என உன்னைத் தேடுகிறார் என்று சொன்னதாகவும், 08.50 மணியளவில் தான் சாத்தான்குளம் காவல் நிலையத்திற்கு சென்றதாகவும், தான் சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு செல்லும்போது வெளியிலுள்ள விளக்குகள் அணைந்திருந்தது என்றும், காவல்நிலையத்தில் வலது புறமாக சாய்வான படிக்கட்டு இருந்தது என்றும், அதில் தலைமைக்காவலர் ப்பூலா செல்வகுமாரி நின்று கொண்டிருந்தார் என்றும், இடதுபக்கம் வேப்பமரத்திற்கு கீழே டிரைவர் ஜெயசேகரன் மற்றும் காவலர் சந்தனகுமார் நின்று கொண்டிருந்தனர் என்றும், காவல்நிலைய கதவு உட்புறமாக பூட்டப்பட்டிருந்தது என்றும், காவல் நிலையத்திற்குள் யாரும் உள்ளே செல்லாதவாறு காவலர் தாமஸ் பிரான்சிஸ் என்பவர் நின்று கொண்டிருந்தார் என்றும், தாமஸ் பிரான்சிஸ்சிடம் காவல்நிலையத்திற்குள் செல்ல வேண்டுமென்று கூறியதாகவும், அப்போது தாமஸ் பிரான்சிஸ் தன்னிடம் உள்ளே காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் மற்றும் உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் இரண்டு ஆண்களையும் ஜட்டியுடன் நிற்க வைத்து விசாரித்து கொண்டிருப்பதாகவும், அதனால் தன்னை வெளியில் நிற்கும்படியும் கூறினார் என்றும், அதனால் தான் சுமார் 10 நிமிடங்கள் காவல்நிலைய வாசலில் நின்று கொண்டிருந்ததாகவும், ஏற்கனவே தாமதமாக வந்துள்ளேன், காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் தன்னை ஏசுவார், எனவே உள்ளே விடு என்று கூறியதாகவும், அப்போது தாமஸ் பிரான்சிஸ் காவல்நிலைய கதவுகளை தட்டியவுடன் கதவு திறக்கப்பட்டது என்றும், தான் உள்ளே சென்றபோது இடதுபக்கத்தில் பெரிய மேஜை இருந்தது என்றும், அந்த மேஜையில் ஒரு வாலிப பையனை ஜட்டியுடன் குப்புற படுக்க வைத்திருந்தார்கள் என்றும், அந்த பையனின் ஒரு கையை சாமதுரையும், மற்றொரு கையை வெயிலுமுத்துவும் பிடித்திருந்தார்கள் என்றும், வாலிபர் ஜட்டியுடன் படுக்க வைக்கப்பட்டிருந்ததால் காலை பிடித்தவர்கள் யார் என்று தான் கவனிக்கவில்லை என்றும், அப்போது எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் ஒரு நீளமான கம்பை வைத்து பென்னிக்சை புட்டப்பகுதியில் அடித்துக் கொண்டிருந்தார் என்றும், நேரே சென்று காவல் ஆய்வாளர் அறைக்கு சென்று அவருக்கு வணக்கம்

வைத்துவிட்டு, வெளியே வந்ததாகவும், அப்போது பாலகிருஷ்ணன் தன்னிடம் ரேவதி இவன் என்ன செய்தான் என்று தெரியுமா, நம்ம போலீஸ் முத்துராஜாவை தள்ளிவிட்டு தன் டேபிளில் இருந்த பொருளையும் சிதறவிட்டுவிட்டான் என்றும், உன் பங்கிற்கு நீயும் அடி என்று தன்னிடம் சொன்னார் என்றும், தான் யாரையும் அடிக்க மாட்டேன் என்று அவரிடம் கூறியதாகவும், நீங்களும் அடிக்காதீர்கள் என்று பாலகிருஷ்ணனிடம் கூறியதாகவும், அவர் என்ன பிரச்சனை வந்தாலும் தனது சொத்தை விற்று தான் பார்த்துக் கொள்வேன் என்று தன்னிடம் சொன்னார் என்றும், தான் எழுத்தர் அறைக்கு சென்று உட்கார்ந்ததாகவும், அப்போது காவலர் முருகன் வந்து தன்னிடம் குற்ற எண்.311/2020 கொண்ட D.S.R ஐ எஸ்.பி. ஆபிசிற்கும், கேம்ப் ஆபிசிற்கும் வாசிக்கும்படி தன்னிடம் சொன்னார் என்றும், எஸ்.பி.அலுவலகத்திற்கு தான் சொல்லிவிடுகிறேன். கேம்ப்ஆபிசிற்கு நீங்கள் சொல்லி விடுங்கள் என்று முருகனிடம் கூறியதாகவும், அதற்கு காவலர் முருகன் கேம்ப் ஆபிசிற்கு வாட்ஸ்அப்–ல் போட்டோ எடுத்து அனுப்பி விடுவதாக கூறினார் என்றும், தான் எஸ்.பி.ஆபிசிற்கு மேற்படி குற்ற எண்.311/2020–ல் வாசித்து விட்டு அடித்த பையனை பார்க்க போனதாகவும், அப்போது பென்னிக்ஸ் மாடிப்படிக்கட்டின் கீழே படிக்கட்டில் சாய்ந்தார் போல் படுத்திருந்தார் என்றும், அப்போது அவரிடம் சென்று அவருடைய பெயரை கேட்டதாகவும், அதற்கு அவர் பென்னிக்ஸ் என்று கூறினார் என்றும், எதற்கு உன்னை போலீசார் அடிக்கிறார்கள் என்று கேட்டதாகவும், அதற்கு பென்னிக்ஸ் தன்னுடைய அப்பாவை காவல்நிலையத்தில் போலீசார் ரொம்ப அடித்தார்கள் என்றும், அதற்கு தன்னுடைய அப்பாவை அடிக்காதீர்கள் என்று போலீசாரிடம் கூறியதாகவும், அதனால் தனக்கும், போலீசாருக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றும் கூறினார் என்றும், பென்னிக்சிடம் நீ ஊரிலுள்ள பெரிய ஆட்கள் இரண்டு பேரை அழைத்து வர வேண்டியது தானே ஏன் தனியாக வந்தாய் என்றும் கேட்டதற்கு பென்னிக்ஸ் வெளியில் ஆட்கள் நின்று கொண்டிருக்கிறார்கள் என்று கூறினார் என்றும், அதன் பின்னர் பென்னிக்ஸ் குடிக்க தண்ணீர் கேட்டார் என்றும், தான் தண்ணீர் கொடுத்ததாகவும், அதன்பிறகு பென்னிக்சின் அப்பாவும் காவல்நிலைய கைதி அறையில் இருப்பதாக கேட்டு தான் கைதிஅறைக்கு சென்று பார்த்ததாவும், அப்போது ஜெயராஜ் டிரவுசர் மாடல் ஜட்டியுடன்

கைதி அறையில் இருந்தார் என்றும், அவரிடம் பெயர் என்ன என்று கேட்டதற்கு அவர் ஜெயராஜ் என்று கூறினார் என்றும், அவரிடம்  என்ன பிரச்சனை என்று கேட்டதற்கு செய்யாத தப்புக்கு தன்னையும், தன்னுடைய மகனையும் இப்படி அடிக்கிறார்கள் என்று சொன்னார் என்றும், செய்யாத தப்புக்கு ஏன் போலீசார் இப்படி அடிக்கிறார்கள் என்று கேட்டதற்கு நேற்று இரவு தான் கடையை பூட்டிவிட்டு வெளியில் நின்று கொண்டிருந்த போது எஸ்.ஐ.பாலகிருஷ்ணனும், ஒரு போலீசும் ரவுண்ட்ஸ் வந்தார்கள் என்றும், அப்போது எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் இங்கே இப்படி கூட்டமாக இருக்கக் கூடாது என்றும், தான் திரும்பி வரும்போது இங்கே யாராவது நின்று கொண்டிருந்தால், தோலை உரித்துவிடுவேன் என்றும் அதற்கு ஜெயராஜ் எதார்த்தமாக தானும் அவரது தோலை உரித்துவிடுவேன் என்று சொன்னதாகவும், அதை யாரோ பாலகிருஷ்ணனிடம் சொன்னதாகவும், அதற்கு தான் இன்று தன்னையும், தன் மகனையும் கூட்டி வந்து அடிக்கிறார்கள் என்று ஜெயராஜ் கூறியதாகவும், அப்போது ஜெயராஜ் தன்னிடம் குடிக்க தண்ணீர் கிடைக்குமா என்று கேட்டார் என்றும், தான் தண்ணீர் கொண்டு போய் கொடுத்ததாகவும், பிறகு காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் தன்னுடைய அறையில் இருந்து என்ன முருகா, என்ன பாலா சத்தம் கேட்கல என்று சொன்னார் என்றும், திரும்பவும் போலீசார் அனைவரும் அதே மேஜையில் பென்னிக்சை குப்புறபடுக்க வைத்து அடித்தார்கள் என்றும், இவன் நல்ல அடி தாங்குவான், நல்ல குண்டா இருக்கான், நல்லா நூறு இட்லி சாப்பிடுவான் போல என்று சொல்லி சுழற்சி முறையில் போலீசார் அனைவரும் மாற்றி மாற்றி அடித்தார்கள் என்றும், முதலில் முருகன் அடித்தார் என்றும், பின்னர் பாலகிருஷ்ணன், முத்துராஜா, வெயிலுமுத்து, சாமதுரை, தாமஸ் பிரான்சிஸ், செல்லத்துரை ஆகியோர் மாற்றி மாற்றி பிடிக்க மாற்றி மாற்றி அடித்தார்கள் என்றும், அவ்வாறு அடித்தபோது பென்னிக்சின் உடம்பிலிருந்து இரத்தம் சுவற்றில் சிதறியது என்றும், பின்னர் தான் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் அறைக்கு சென்று அவரிடம் அடிக்க வேண்டாம் என்று சொல்லுங்கள் என்று சொன்னதாகவும், தனக்கு பின்னால் முருகன் வந்தார் என்றும், ஆய்வாளர் முருகனிடம் தன்னுடைய புருசனையும் இவ்வாறு தான் அடிக்க வேண்டும் பார்த்துக் கொள் என்று கூறியதாகவும், உடனே ஆய்வாளரிடம் தன் புருசனை பற்றி புகார் எதுவும் கொடுத்தேனா, ஏன் இப்படி சொல்கிறீர்கள் என்று

கேட்டதாகவும், பின்பு தான் நடந்த சம்பவத்தை பார்க்க முடியாமல் காவல்நிலைய கதவிற்கு உள்ளேயே நின்றதாகவும், அப்போது ரவி மாடியில் இருந்து வந்து காவல் ஆய்வாளர் அறைக்கு சென்றார் என்றும், அப்போது அவரை தொடர்ந்து உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் மற்றும் அனைத்து போலீசாரும் ஆய்வாளர் அறைக்கு உள்ளே சென்றார்கள் என்றும், அப்போது காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் இவர்களுக்கு காயம் அதிகமாகிவிட்டது, ஏதாவது கேஸ் போட்டு உள்ளே அடைக்கணும் வெளியே விடமுடியாது என்று எஸ்.ஐ.பாலகிருஷ்ணனிடம் சொன்னார் என்றும், பிறகு காவலர் முருகனிடம் பஜாரில் இவர்கள் பிரச்சனை செய்ததாக புகார் ஒன்று கொடு என்றும், முத்துராஜாவிடம் அறிவேன் சாட்சியாக கையெழுத்து போட வேண்டுமென்றும், சொன்னார் என்றும், பிறகு முருகன் ஒரு புகார் ஒன்று தயாரித்து காவல் ஆய்வாளர் ஸ்ரீதரிடம் கொடுத்தார் என்றும், காவல் ஆய்வாளர் திருத்தம் செய்து, ரவிச்சந்திரனிடம் அடிக்கும்படி கொடுத்தார் என்றும், பிறகு ரவிச்சந்திரன் சொல்ல சொல்ல அழகுமாரிச்செல்வம் அந்த புகாரை கணினியில் அடித்தார் என்றும், பின்னர் அந்த புகாரில் முருகன் புகார்தாரராக கையெழுத்திட்டார் என்றும், அந்த புகாரில் அறிவேன் சாட்சியாக முத்துராஜா கையெழுத்து போட்டார் என்றும், புகார் கொடுத்தவுடனே D.S.R. எழுதப்பட்டது என்றும், அந்த D.S.R.ஐ வெயிலுமுத்து தன்னிடம் கொடுத்து எஸ்.பி.அலுவலகத்திற்கும், கேம்ப் அலுவலகத்திற்கும் வாசிக்கும்படி சொன்னார் என்றும், தான் அந்த D.S.R–ஐ எஸ்.பி.அலுவலகத்திற்கும், கேம்ப் அலுவலகத்திற்கும் வாசித்ததாகவும், தான் வாசித்த D.S.R ஆனது குற்ற எண்.312/2020 என்றும், இரவு ரிமாண்டிற்கு செல்லாத கைதிகள் இருந்தால் shadow duty போடுவார்கள் என்றும், Shadow duty எஸ்.ஐ.பாலகிருஷ்ணன், த.கா.முருகன், சாமதுரை, மு.நி.கா.அழகுமாரிச்செல்வம், முத்துராஜா ஆகியோர்கள் பெயரை எஸ்பி ஆபிசிற்கும், கேம்ப் ஆபிசிற்கும், காவல் கட்டுப்பாட்டு அறைக்கும் தன்னை சொல்லும்படி சொன்னார் என்றும், தான் அங்கு தகவல் சொன்னதாகவும், பின்னர் சுமார் 11.30 மணியளவில் ரகுகணேஷ் சிவில் டிரஸ்சில் உள்ளே வந்தார் என்றும், இவர் ஏற்கனவே 09.30 மணியிலிருந்து 10.30 மணி வரை அடித்துவிட்டு சென்றிருந்தாரே, மறுபடியும் சிவில் டிரஸ்சில் வருகிறாரே வந்தால் ரொம்ப அடிப்பார் என்று தான் கம்பை எடுத்து

எஸ்.ஐ.அறையில் இருக்கும் பீரோவிற்கு அடியில் மறைத்து வைத்ததாகவும், ரகுகணேஷ் சிவில் டிரஸ்சில் நேராக வந்து காவல் ஆய்வாளர் அறைக்கு சென்றார் என்றும், அப்போது காவல் ஆய்வாளர் இந்த வழக்கிற்கான புலன் விசாரணை அதிகாரி என்று அவரிடம் சொன்னார் என்றும், அப்போது ஜெயராஜ், பென்னிக்சை காவல் ஆய்வாளர் அறைக்கு காவலர்கள் கூட்டி சென்றார்கள் என்றும், அப்போது ரகுகணேஷ் அவர்களிடம் நாளை நீதிபதியிடம் ரிமாண்டிற்கு கூட்டி செல்வார்கள் அப்போது நீங்கள் நீதிபதியிடம் என்ன சொல்வீர்கள் என்று கேட்டதற்கு ஜெயராஜ் அப்போது ஒன்றும் சொல்லாமல் நின்று கொண்டிருந்தார் என்றும், ஆனால் பென்னிக்ஸ் போலீஸ் ரொம்ப அடித்தார்கள் என்று சொல்வேன் என்று சொன்னார் என்றும், அப்போது ரகுகணேஷ் போலீஸ் அடிச்சாங்களா இனிமேல் தான் போலீஸ் அடியே இருக்கு என்று சொல்லி ஜெயராஜ், பென்னிக்சை கைதி அறைக்கும், மாடிப்படிக்கும் இருக்கும் சுவற்றில் வைத்து கையை நீட்ட சொல்லி அடித்ததாகவும், கையை மேலே தூக்க சொல்லி இப்படி சொல்வியா என்று ஜெயராஜ் முன் பென்னிக்சையும், பென்னிக்ஸ் முன் ஜெயராஜையும் மாறி மாறி அடித்தார் என்றும், அவர் புட்டப்பகுதி, கை மற்றும் அவர் மனம் போனபோக்கில் எல்லா இடத்திலும் அடித்தார் என்றும், பென்னிக்சை அடிக்கும்போது பென்னிக்ஸ் உடம்பிலிருந்து இரத்தம் சொட்டு சொட்டாக தரையில் வடிந்து கொண்டிருந்தது என்றும், அப்போது பென்னிக்ஸ் தான் தெரியாமல் சொல்லிவிட்டதாக அங்கு நின்று கொண்டிருந்த அனைத்து காவலர்களின் கால்களிலும் விழுந்தார் என்றும், சொட்டு சொட்டாக தரையில் விழுந்த இரத்தத்தை ரகுகணேஷ் பென்னிக்சிடம் துடைக்குமாறு சொன்னார் என்றும், அப்போது பென்னிக்ஸ் நடக்க முடியாத நிலையில் சென்று பாத்ரூமில் இருந்து பெயிண்ட் டப்பா போல இருக்கும் ஒரு டப்பாவில் தண்ணீர் எடுத்து வந்து தான் அணிந்திருந்த பனியனை வைத்து இரத்தக்கறையை பென்னிக்ஸ் துடைத்தார் என்றும், அந்த துடைத்த பனியனானது பாத்ரூம் பக்கத்தில் போட்டிருந்தார்கள் என்றும், பிறகு எஸ்.ஐ.ரகுகணேஷ் அவர்கள் சாப்பிட்டார்களா என்று அங்கிருந்த காவலர்களிடம் கேட்டார் என்றும், அப்போது அவர்கள் சாப்பிடவில்லை என்று காவலர்கள் சொன்னார்கள் என்றும், அப்போது ரகுகணேஷ் போலிஸ் வாங்கி கொடுத்த சாப்பாடை சாப்பிட மாட்டார்களா,

இவனுங்களுக்கு அவ்வளவு ரோசமா என்று கேட்டார் என்றும், பிறகு அந்த சாப்பாடை கைதி அறையில் கொண்டு போய் வைத்துவிட்டார்கள் என்றும், பிறகு ரகுகணேஷ் கைதி அறைக்கு சென்று ஏன் சாப்பிட மாட்டீர்களா என்று அவர்களை அடித்தார் என்றும், அந்த அடிக்கிற சத்தம் தனக்கு கேட்டது என்றும், அப்போது பென்னிக்ஸ் தான் சாப்பிடுகிறேன் என்று சொன்னார் என்றும், அவ்வாறு பென்னிக்ஸ் சொன்னவுடன் ரகுகணேஷ் வெளியே வந்துவிட்டார் என்றும், தான் காவல்நிலையம் வந்த பிறகு 09.30 மணிக்கு ரகுகணேஷ் யூனிபார்மில் வந்துவிட்டு, 10.30 மணிக்கு திரும்பி போய்விட்டு 11.30 மணிக்கு சிவில் டிரஸ்சில் வந்தார் என்றும், ஜெயராஜ், பென்னிக்சை இடைவெளி விட்டுவிட்டு சுமார் 01.00 மணி வரை அடித்தார்கள் என்றும், காவல் ஆய்வாளர் அடிக்கவில்லை என்றும், ஆனால் உள்ளே இருந்து தூண்டிவிட்டு என்ன முருகா, என்ன பாலா சத்தம் கேட்கல என்று அடிக்கடி சொல்லி அடிக்க சொன்னார் என்றும், நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் எதிரிகள் அனைவரும் மாற்றி மாற்றி பிடிக்க ஒவ்வொருத்தராக அடித்தார்கள் என்றும், தான் காவல்நிலையம் சென்றது முதல் விடியற்காலை 01.30 மணி வரை காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் அவர்கள் என்ன பாலா, முருகா சத்தம் கேட்கல என்று அடிக்கடி சொல்லியதன் பேரில் மற்ற எதிரிகள் அடித்தார்கள் என்றும், விடியற்காலை சுமார் 02.30 மணி முதல் 03.00 மணி அளவில் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், உதவி ஆய்வாளர் ரகுகணேஷ், பாலகிருஷ்ணன் ஆகியோர் வெளியே கிளம்பினார்கள் என்றும், அப்போது காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் அவர்கள் டேபிளில் குப்புற போட்டு அடிப்பது புது டிராக்கா இருக்குல்ல இன்னொரு ரவுண்டு அடிப்போமா என்று கேட்டார் என்றும், மீண்டும் ஆய்வாளர் அவர்கள் முருகனிடம் இருவரும் கைதி அறையில் உடைகள் இல்லாமல் அம்மணமாக இருக்கட்டும் என்று உத்தரவிட்டு சென்றார் என்றும், முருகன் அவ்வாறு செய்ய வேண்டாம் என்று காவல் ஆய்வாளரிடம் சொன்னார் என்றும், விடியற்காலை சுமார் 02.30 மணி முதல் 03.00 மணிக்குள் காவல் ஆய்வாளர், ரகுகணேஷ், பாலகிருஷ்ணன் ஆகியோர்கள் ஒவ்வொருவராக காவல்நிலையத்தில் இருந்து வெளியே சென்றார்கள் என்றும், அவர்கள் போன பிறகு தான் ஜெயராஜ், பென்னிக்சை போய் பார்த்ததாகவும், அவர் குப்புற படுத்திருந்தார் என்றும், முனங்கிக்கொண்டே இருந்தார் என்றும்,

ஜெயராஜ் உட்கார முடியாமல் ஒருபக்கமாக சாய்ந்து உட்கார்ந்திருந்தார் என்றும், தான் அவர்களிடம் ஏதாவது உதவி வேண்டுமா என்று கேட்டதாகவும், ஏதாவது உபாதை ஏற்பட்டால் உடனே சொல்லுங்கள் என்று சொன்னதாகவும், அப்போது அவர்கள் தங்களுக்கு கொஞ்சம் தண்ணி கொடுங்கள் என்று கேட்டனர் என்றும், தான் தண்ணி கொடுத்ததாகவும், காவல்நிலையத்தில் வலி மருந்து Moov இருந்தது என்றும், அதை தான் ஜெயராஜ், பென்னிக்சிடம் கொடுத்ததாகவும், அது சாமதுரைக்கு தெரியும் என்றும், ப்ளாஸ்கில் டீ இருந்தது அதை ஜெயராஜ், பென்னிக்சிடம் கொடுக்கலாமா என்று சாமதுரையிடம் கேட்டதாகவும், சாமதுரை அவர்கள் டீ எல்லாம் கொடுக்க கூடாது என்று சொல்லிவிட்டார் என்றும், சிறிதுநேரம் இடைவெளி விட்டு விட்டு ஜெயராஜ், பென்னிக்சை பார்த்துக் கொண்டிருந்ததாகவும், இரவு முழுவதும் பென்னிக்ஸ் முணங்கிக் கொண்டே இருந்தார் என்றும், ஜெயராஜ் இதுமாதிரி தன்னையும், தன் மகனையும் பண்ணீட்டாங்களே என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார் என்றும், தான் அவர்களிடம் காவலர்கள் அதிகாரிகளை எதிர்த்து எதுவும் செய்ய முடியாது என்று சொன்னதாகவும், விடியற்காலை சுமார் 06.00 மணியளவில் காவல் ஆய்வாளருக்கு போன் செய்து ஸ்டேசனில் எந்த விசயமும் இல்லை பென்னிக்ஸ், ஜெயராஜ் மட்டும் தான் இருக்கிறார்கள் என்று சொன்னதாகவும், அப்போது காவல்ஆய்வாளர் ஸ்ரீதர் ஊர்க்கார்கள் எல்லாம் கூடிவிடுவார்கள், அவர்களுக்கு காயம் அதிகமாக உள்ளது அதனால் உடனே எஸ்.ஐ பாலகிருஷ்ணனுக்கு போன் செய்து ரிமாண்டிற்கு அவர்களை கூட்டி செல்லுமாறு தன்னிடம் சொன்னார் என்றும், தான் எஸ்.ஐ.பாலகிருஷ்ணனுக்கு போன் செய்து ரிமாண்டிற்கு ஜெயராஜ், பென்னிக்சை தாங்கள் எடுத்து செல்ல வேண்டும் என்று காவல்ஆய்வாளர் சொன்னதாக அவரிடம் தெரிவித்ததாகவும், கொஞ்சநேரத்தில் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் காவல் நிலையம் வந்தார் என்றும், அவர் வந்தபிறகு காவல்நிலையத்திற்குள் பாத்ரூமிற்கு சென்றுவிட்டதாகவும், தான் பாத்ரூமில் இருந்து வெளியே வந்தபோது ஜட்டியுடன் இருந்த ஜெயராஜ், பென்னிக்சிற்கு உடைகளை காவலர்கள் முத்துராஜாவும், செல்லத்துரையும் மாற்றிக் கொண்டிருந்தார்கள் என்றும், சுமார் 07.00 மணியளவில் காவல் ஆய்வாளர் டாடா சுமோவில் காவலர்கள் செல்லத்துரை, முத்துராஜா, பாலகிருஷ்ணன், டிரைவர்

ஜெயசேகர் ஆகியோர்கள் காவல்நிலையத்தில் இருந்து ஜெயராஜ், பென்னிக்சை கூட்டிச் சென்றார்கள் என்றும், அந்த வாகனத்தை தொடர்ந்து காவலர் சாமதுரையும் பைக்கில் சென்றார் என்றும், பிறகு ஜெயசேகர் அவர்களை மருத்துவமனையில் விட்டுவிட்டு காவல்நிலையம் வந்து தன்னிடம் மெடிக்கல் மெமோ புத்தகம் கேட்டார் என்றும், தான் உடனே மெடிக்கல் மெமோ புக்கை எடுத்து ஜெயசேகரிடம் கொடுத்துவிட்டதாகவும், பின்பு மருத்துவமனைக்கு சென்று மறுபடியும் காவல்நிலையம் வந்து மெடிக்கல் மெமோவில் எழுதி கையெழுத்து போட வேண்டும் என்று தன்னிடம் சொன்னார் என்றும், தான் எழுதமாட்டேன் என்று சொன்னதாகவும், பின்பு மருத்துவமனைக்கு சென்று திரும்பவும் காவல்நிலையம் வந்து மெடிக்கல் மெமோவில் கையெழுத்து போடுமாறு பாலகிருஷ்ணன் சொன்னார் என்று தன்னிடம் சொன்னார் என்றும், அந்த மெடிக்கல் மெமோவை பாலகிருஷ்ணன் எழுதியிருந்தார் என்றும், அந்த சமயத்தில் ஆய்வாளரிடம் இருந்து போன் வந்தது என்றும், ரிமாண்ட் எடுத்து போய் விட்டார்களா என்று கேட்டார் என்றும், தான் அதற்கு ரிமாண்ட் போய்விட்டது. ஆனால் மெடிக்கல் மெமோ புக்கில் தன்னை கையெழுத்து போடச் சொல்கிறார்கள் என்று அவரிடம் சொன்னதாகவும், அதற்கு காவல் ஆய்வாளர் தன்னை கையெழுத்து போட சொன்னதாகவும், அதிகாரி சொன்னதன்பேரில் தான் மெடிக்கல் மெமோவில் கையொப்பம் செய்ததாகவும், மேற்படி ரிமாண்ட்க்கு சென்ற பிறகு காவல்நிலையத்தில் வேலை பார்க்கும் துப்புரவு பணியாளர் வந்தார் என்றும், அவர் வாய் பேசாத ஊமை என்றும், அவர் வரும்போது அவர் கையில் Harpic, Lizol உடன் வந்தார் என்றும், அவர் உள்ளே வரும்போது மூக்கை பொத்திக் கொண்டும், தலையில் அடித்துக் கொண்டும் காவல் ஆய்வாளர் அறையை பார்த்து சைகையில் ஏதோ செய்தார் என்றும், Harpic, Lizol போட்டு காவல்நிலையத்தை சுத்தப்படுத்தினார் என்றும், பிறகு 08.00 மணியளவில் காவலர் மகாராஜா காவல்நிலையம் வந்தார் என்றும், அவர் வந்த பிறகு அவர் தன்னிடம் ஸ்டேசனில் ஏதாவது விசேசமா என்று கேட்டார் என்றும், அதற்கு தான் அவரிடம் இரவு இரண்டு ஆம்பளைகள் இருந்தார்கள் என்றும், அவர்களை ரிமாண்டிற்கு கூட்டிச் சென்றுவிட்டதாக சொன்னதாகவும், அதற்கு மகாராஜா நம்ம ஸ்டேசனில் யாரையாவது பிடித்து விட்டு வந்தால் இரண்டு நாட்கள் கழித்து தானே ரிமாண்ட் போகும், இன்றைக்கு

ஏன் சீக்கிரம் போய்விட்டது என்று தன்னிடம் கேட்டார் என்றும், அதற்கு தான் அவரிடம் ஸ்டேசனில் அவர்களை ரொம்ப அடித்துவிட்டார்கள் அவர்களுக்கு காயம் அதிகமாகிவிட்டது ஊர்க்காரர்கள் கூடிவிடுவார்கள் என்று ஆய்வாளர் உடனே ரிமாண்ட் எடுத்து செல்லும்படி சொன்னதால் சீக்கிரமாக அந்த இரண்டு நபர்களை ரிமாண்டிற்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள் என்று சொன்னதாகவும், தான் வீட்டிற்கு கிளம்பும் போது எதிரே ப்யூலா செல்வகுமாரி வந்தார் என்றும், ப்யூலா தன்னிடம் என்ன ஆச்சு என்று கேட்டதாகவும், தான் அவரிடம் ரொம்ப அடிச்சாங்க, காயம் அதிகமாக இருந்ததனால் காவல் ஆய்வாளர் சீக்கிரம் ரிமாண்ட் எடுத்து போக சொன்ன விபரத்தை அவரிடம் சொன்னதாகவும், மேலும், தன்னை மெடிக்கல் மெமோ புக்கில் கையெழுத்து போட சொன்னார் என்று சொன்னதாகவும், அதற்கு ப்யூலா ஏன் மெடிக்கல் மெமோ புக்கில் கையெழுத்து போட்டாய் என்று தன்னை திட்டியதாகவும், அதிகாரிகளை மீறி எப்படி கையெழுத்து போடாமல் இருக்க முடியும் என்று தான் அவரிடம் சொன்னதாகவும், 20.06.2020ம் அன்று இரவு காவல் ஆய்வாளர் ரவுண்ட்ஸ் முடித்து காவல்நிலையம் வந்தார் என்றும், அதன்பிறகு பாலகிருஷ்ணன் வந்தார் என்றும், அப்போது காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் பாலகிருஷ்ணனிடம் இப்போது பஜாரில் மக்கள் எப்படி இருக்காங்க என்று கேட்க அவர் பஜாரில் இப்போ எல்லோரும் கப்சிப் என்று இருக்காங்க எதுவும் பேசுறதில்லை என்று பாலகிருஷ்ணன் சொன்னார் என்றும், 22.06.2020-ம் தேதியன்று இரவு தான் வேலை முடித்து கிளம்பும் சமயத்தில் பென்னிக்ஸ் இறந்துவிட்டார் என்று தகவல் வந்தது என்றும், அப்போது காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் காவல்நிலையத்தில் அனைத்து காவலர்களையும் அழைத்து ஸ்டேசனில் எதுவும் நடக்காதது போல் காண்பித்துக் கொள்ள வேண்டும் என்றும், ஸ்டேசனில் யாரும் அடிக்காதது போல் காண்பித்துக் கொள்ள வேண்டும் என்றும், கோவில்பட்டி கிளைச்சிறையில் தான் அவர்கள் இறந்துவிட்டார்கள் அங்கு நடந்த சம்பவம் போல் இருக்கட்டும் என்றும் தங்களிடம் சொன்னார் என்றும், மேலும், பென்னிக்ஸ் இறந்த தகவல் கேட்டவுடன் காவல்நிலையத்தில் இருந்த ஆவணங்களை மாற்றினார்கள் என்றும், G.D., Rough Duty Roaster மாற்றினார்கள் என்றும், குற்ற எண்.312/2020 வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை அவர்களுக்கு தகுந்தாற் போல்

மாற்றிக் கொண்டார்கள் என்றும், அவர்களுக்கு தெரிந்த நபர்கள் பெயர்களை போட்டு Statement எழுதிக் கொண்டார்கள் என்றும், காவல் ஆய்வாளர் அந்த சமயத்தில் சி.சி.டி.வி கேமராவில் உள்ள பதிவுகளை அழித்துவிடணும் என்று வெயிலுமுத்து மற்றும் தாமஸ் பிரான்சிஸ் அவர்களிடம் சொன்னார் என்றும், வெயிலுமுத்து மற்றும் தாமஸ் பிரான்சிஸ் ஆகியோர்கள் சி.சி.டி.வி கேமராவில் இருந்த பதிவுகளை அழித்துவிட்டார்கள் என்றும், 23.06.2020–ம் தேதியன்று ஜெயராஜ் இறந்த செய்தியை தான் கேள்விப்பட்டதாகவும், ஜெயராஜ் இறந்த பின்பு காவல்நிலையம் பதற்றமாக இருந்தது என்றும், காவல்நிலையத்திற்கு காவலர்கள் யாரும் வரவில்லை என்றும், நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள ஒரு சில காவலர்கள் மட்டும் காவல்நிலையத்திற்கு வந்து சென்றார்கள் என்றும், சி.பி.ஐ போலீசார் தன்னை 15.07.2020 மற்றும் 09.06.2022 ஆகிய தேதிகளில் விசாரித்தார்கள் என்றும், 09.06.2022–ம் தேதியில் தன்னை விசாரிக்கும் போது சாத்தான்குளம் பொதுஅரசு மருத்துவமனை, காமராஜர் சிலை அருகில் எடுக்கப்பட்ட சி.சி.டி.வி பதிவுகளை காண்பித்து விசாரித்தார்கள் என்றும், அந்த பதிவுகளில் இருந்த காவலர்கள் யார் யார் என்று சொன்னதாகவும், காமராஜர் சிலை அருகில் எடுக்கப்பட்ட சி.சி.டி.வி. பதிவுகளில் சி.பி.ஐ போலீசார் தன்னை 15.07.2020 மற்றும் 09.06.2022 ஆகிய தேதிகளில் விசாரித்தார்கள் என்றும், 09.06.2022ம் தேதியில் தன்னை விசாரிக்கும் போது சாத்தான்குளம் பொதுஅரசு மருத்துவமனை, காமராஜர் சிலை அருகில் எடுக்கப்பட்ட சி.சி.டி.வி பதிவுகளை காண்பித்து விசாரித்தார்கள் என்றும் அந்த பதிவுகளில் இருந்த காவலர்கள் யார் யார் என்று சொன்னதாகவும், காமராஜர் சிலை அருகில் எடுக்கப்பட்ட சி.சி.டி.வி. பதிவுகளில் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், பாலகிருஷ்ணன் மற்றும் முத்துராஜா ஆகியோர் இருந்தனர் என்றும், அந்த பதிவில் ஜெயராஜ் போலீஸ் ஜீப் நோக்கி செல்வதும் அவரை போலீஸ் வண்டியில் ஏற்றுவதும் உடனே பென்னிக்சும் வேகமாக காவல் வாகனத்தின் அருகே செல்வதும் அப்போது வாகனம் நகருவதும் பின்பு பென்னிக்ஸ் ஒருவர் பைக்கில் பின்னால் அமர்ந்து கொண்டு காவல்வாகனத்தை தொடர்ந்து செல்வதும் பதிவாகி இருந்தது என்றும் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் இருந்த சி.சி.டி.வி பதிவுகளில் ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோர் நடந்து செல்ல முடியாமல் நடந்து செல்வதும் அங்கு

செல்லத்துரை, பாலகிருஷ்ணன், முத்துராஜா ஆகியோர்கள் இருந்ததும் பதிவாகியுள்ளது என்றும், சாமதுரை அவர்கள் ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோருக்கு உடைகள் மாற்றும் பதிவும் சி.சி.டி.வி பதிவுகளில் இருந்தது என்றும் மெடிக்கல் மெமோ அ.சா.ஆ.111–ல் B 6729919 என்ற வரிசை எண் கொண்ட தாளில் உள்ளது தன்னுடைய கையொப்பம் என்றும், அதில் எழுதியுள்ள சங்கதிகள் பாலகிருஷ்ணன் அவர்களால் எழுதப்பட்டவை என்றும், அதில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.118 என்றும், தான் நீதித்துறை நடுவர் எண்.3, தூத்துக்குடி அவர்களிடம் 164 வாக்குமூலம் கொடுத்துள்ளதாகவும், அந்த வாக்குமூலம் ஏற்கனவே அ.சா.ஆ.66 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த வாக்குமூலத்திலுள்ள கையொப்பங்கள் தன்னுடைய கையொப்பங்கள் என்றும், அந்த வாக்குமூலம் தான் சொல்ல சொல்ல நீதித்துறை நடுவரால் எழுதப்பட்டது என்றும், தான் சி.பி.ஐ தயாரித்த பார்வைமகஜரில் கையொப்பம் செய்துள்ளதாகவும், தான் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் அவர்களிடம் கொடுத்த வாக்குமூலத்தின் சான்றிடப்பட்ட ஆவணம் அ.சா.ஆ.119 என்றும், அ.சா.ஆ.119–ல் உள்ள கையொப்பங்கள் தன்னுடைய கையொப்பங்கள் என்றும், 15.07.2020–ம் தேதியன்று சாத்தான்குளம் காவல்நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த டேபிள் எடுக்கப்பட்டது என்றும், அன்றைய தினம் தான் சம்பவத்தின் போது எந்தெந்த இடத்தில் வைத்து காவல்துறையினர் அடித்தார்கள் என்று சொன்னதாகவும், அதை ஒரு proceedings ஆக தயாரித்தார்கள் என்றும், அதில் தான் கையெழுத்து போட்டதாகவும், பின்னர் வரைபடம் ஒன்று தயாரித்தார்கள் என்றும், அதில் தான் கையெழுத்து போட்டதாகவும், அந்த proceedings–ல் வெளியே இருந்து இரண்டு சாட்சிகள் வந்து பங்கேற்றார்கள் என்றும், அதில் அவர்கள் கையெழுத்து செய்தார்கள் என்றும், சாத்தான்குளம் காவல்நிலையத்தை சிபிஐ அதிகாரிகள் பார்வையிட்டது சம்மந்தமாக தயாரிக்கப்பட்ட பார்வை மகஜர் அ.சா.ஆ.102–ல் தன் கையொப்பம் செய்துள்ளதாகவும், வரைபடம் ஏற்கனவே அ.சா.ஆ.74 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த வரைபடத்தில் A,B,C,D என்று குறிக்கப்பட்ட இடமானது காவலர்கள் ஜெயராஜ், பென்னிக்சை அடித்த இடம் என்றும், அந்த ஆவணத்திலும் தனது கையொப்பம் உள்ளது என்றும், பின்பு 22.09.2020–ம்

தேதியன்று ஒரு proceedings நடந்தது என்றும், அதிலும் தான் கலந்து கொண்டதாகவும், அந்த proceedings–ன் போது மகஜர் தயாரிக்கப்பட்டது என்றும், அதில் தான் கையெழுத்து செய்துள்ளதாகவும் அந்த proceeding–ன் போது எவ்வாறு தாக்கப்பட்டார்கள் என்று ஒத்திகை நடத்தினார்கள் என்றும், அந்த ஒத்திகையை வீடியோவாக பதிவு செய்தார்கள் என்றும், மேலும், C.F.S.L. அதிகாரிகள் அங்கிருந்த இரத்தக்கறைகள் மற்றும் கைரேகைகளை சேகரித்துக் கொண்டார்கள் என்றும், அதுசம்பந்தமாக தயாரிக்கப்பட்ட மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.77 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அ.சா.ஆ.104 தாமஸ்பிரான்சிஸ் அவர்களின் நோட்டுப்புத்தகம் என்றும், அ.சா.ஆ.104–ல் உள்ள கையெழுத்துக்கள் அவருடைய கையெழுத்துக்கள் என்றும், அ.சா.ஆ.105 ஆனது சாமத்துரை அவர்களின் நோட்புக் என்றும், அ.சா.ஆ.105–ல் உள்ள கையெழுத்துக்கள் சாமதுரையின் கையெழுத்துக்கள் என்றும், அ.சா.ஆ.106 ஆனது பால்துரை அவர்களின் நோட்புக் என்றும், அ.சா.ஆ.106–ல் உள்ள கையெழுத்துக்கள் பால்துரை அவர்களின் கையெழுத்துக்கள் என்றும், அ.சா.ஆ.22–ல் இப்படிக்கு என்று கையெழுத்திட்டுள்ள நபர் காவலர் முருகன் என்றும், அறிவேன் சாட்சி என்று எழுதி கையெழுத்திட்டவர் காவலர் முத்துராஜா என்றும், தற்போது தன்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் அ.சா.ஆ.23, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33 ஆகிய ஆவணங்களில் உள்ள கையொப்பங்கள் உதவி ஆய்வாளர் ரகுகணேஷ் அவர்களின் கையொப்பங்கள் என்றும், அ.சா.ஆ.101–ல் உதவி ஆய்வாளர் என்ற இடத்தில் எந்த கையொப்பமும் இல்லை என்றும், தற்போது தன்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.101, 31, 32, 33 ஆகிய ஆவணங்கள் பென்னிக்ஸ் இறந்த பிறகு தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்றும், அ.சா.ஆ.98ல் பக்கம் எண்.214–ல் சிகப்பு மையினால் எழுதப்பட்ட சங்கதிகள் தன்னால் எழுதப்பட்டவை என்றும், சிகப்பு மையினால் எழுதப்பட்ட சங்கதிகளின் கீழ் உள்ள கையொப்பங்கள் காவலர் செல்லத்துரை மற்றும் முத்துராஜா ஆகியோரின் கையொப்பம் என்றும், அ.சா.ஆ.96–ல் brief என்ற தலைப்பின் கீழ் எழுதப்பட்ட சங்கதிகள் தன்னுடைய கையெழுத்து என்றும், மேற்படி சங்கதிகள் சம்பவத்திற்கு பின்பு எழுதப்பட்ட சங்கதிகள் என்றும், காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் அவர்கள் எழுதச் சொன்னதால் தான் எழுதியதாகவும், Prisoner Search Register அ.சா.ஆ.120 என்றும்,

அ.சாஆ.35–ல் ஒயிட்னர் போட்டு அழித்து சிகப்பு மையினால் சங்கதிகள் எழுதப்பட்டுள்ளது. என்றும், மேற்படி சங்கதிகள் பென்னிக்ஸ் இறந்த பிறகு ஒயிட்னர் போட்டு எழுதப்பட்ட சங்கதிகள் என்றும், சாத்தான்குளம் காவல்நிலையத்தில் பராமரிக்கப்படும் பொதுநாட்குறிப்பு அ.சா.ஆ.108–ல் அ.சா.ஆ.34 உள்ளது என்றும், அ.சா.ஆ.34–ல் 19.06.2020–ம் தேதியில் 00.45 மேல் உள்ள do என்ற இடத்தில் எழுதப்பட்ட சங்கதி தன்னுடையது கையெழுத்து என்றும், 20–ம் தேதியில் கண்ட பொதுநாட்குறிப்புகள் பென்னிக்ஸ் இறந்த பிறகு அதற்கு தகுந்தாற்போல் எழுதப்பட்ட சங்கதிகள் என்றும், பென்னிக்ஸ், ஜெயராஜை குப்புற படுக்க வைத்து அடித்த டேபிள் தன்னிடம் காண்பிக்கப்படும் டேபிள் தான் என்றும், அது ஏற்கனவே அ.சா.பொ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், தற்போது தன்னிடம் காண்பிக்கப்படும் லத்தி பென்னிக்ஸ், ஜெயராஜை அடிக்க பயன்படுத்தப் பட்டதாகும் என்றும், அது ஏற்கனவே அ.சா.பொ.21 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், கம்பு அ.சா.பொ.22 என்றும், பால்துரை எஸ்.எஸ்.ஐ.காவல் நிலையத்தில் தான் இருந்தார் என்றும், ரகுகணேஷ் இரவு 09.30 மணியளவில் வரும்போது எஸ்.எஸ்.ஐ. பால்துரை வெளியே சென்றார் என்றும், அ.சா.பொ.10 டேபிளை எஸ்.எஸ்.ஐ.ரவிச்சந்திரன் பயன்படுத்தி வந்தார் என்றும், சாத்தான்குளம் காமராஜர் சிலை அருகில் பென்னிக்ஸ் கடை முன்பு எடுக்கப்பட்ட 18.06.2020 மற்றும் 19.06.2020 தேதிய பதிவுகளும், 20.06.2020–ம் தேதியன்று சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் எடுக்கப்பட்ட பதிவுகளும் அடங்கிய சி.டி. அ.சா.பொ.23 என்றும், அதிலுள்ள பதிவுகளில் 18.06.2020 அன்று இரண்டு காவலர்கள் வந்த பதிவும், 19.06.2020–ல் ஜெயராஜ், பென்னிக்ஸ் மற்றும் பாலகிருஷ்ணன், முத்துராஜ் இருந்த பதிவும் உள்ளதென்றும், 20.06.2020–ம் தேதியன்று சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் எடுக்கப்பட்ட பதிவுகளில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ், உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன், செல்லத்துரை, சாமதுரை, முத்துராஜா ஆகியோர்கள் இருந்த பதிவும் உள்ளதென்றும், 20.06.2020–ம் தேதி கொண்ட பதிவில் காவலர் சாமதுரை ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோருக்கு உடையை மாற்றிய பதிவும் காவலர் வண்டி வந்த பதிவும், ஜெயராஜ் அவர்களுக்கு புட்டப்பகுதியில் இருபுறமும் இரத்தக்கறை இருந்ததும், பென்னிக்சும், ஜெயராஜூம் நடக்க முடியாமல்

மருத்துவமனைக்குள் சென்றதும் 19.06.2020–ம் தேதிய பதிவில் பென்னிக்ஸ் மஞ்சள் நிற சட்டையும், கருப்பு நிற பேண்ட்டும் அணிந்திருந்ததும், ஜெயராஜ் வெள்ளைநிற சட்டையும், வெள்ளை நிற வேஷ்டியும் அணிந்திருந்ததும் 19.06.2020 அன்று உள்ள பதிவில் ஜெயராஜ், பென்னிக்சும் ஆரோக்கியமாக நடந்து சென்றதும், மறுநாள் காலை அரசு மருத்துவமனைக்கு நடக்க முடியாமல் இரத்தக்கறையுடன் உள்ளே சென்றதும், அ.சா.பொ.23 பதிவில் உள்ளது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.குவிமுச பிரிவு 164 விசாரணை சம்மந்தமான அழைப்பாணை எ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6.48 இவ்வழக்கில் இந்திய அரசின் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் சுகாதார சேவைகள் இயக்குநர் ஜெனரலின் உத்தரவின் பேரில் அமைக்கப்பட்டுள்ள MIMB மருத்துவ குழுவின் தலைவராக செயல்பட்டுள்ள மருத்துவர் திரு.அர்விந்த்குமார் அ.சா.48 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் 2017 முதல் புது தில்லியில் உள்ள லேடி ஹார்டிங்கே மருத்துவக் கல்லூரியில் தடயவியல் மருத்துவத்துறையில் பேராசிரியராக பணியாற்றி வருவதாகவும், இந்திய அரசின் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் சுகாதார சேவைகள் இயக்குநர் ஜெனரலின் உத்தரவின் பேரில் இந்த MIMB அமைக்கப்பட்டுள்ளது என்றும், அதில் தானும் எய்ம்ஸ், புது தில்லி, அவர் வாரியத்தின் தலைவராக செயல்பட்ட பேராசிரியர், டாக்டர் ஆதர்ஷ் குமார், மற்றும் VMMC New Delhi பேராசிரியர் டாக்டர் மனிஷ் குமார் ஆகியோரும் உறுப்பினர்கள் என்றும், மேற்படி மருத்துவக்குழு இந்த வழக்கில் நிபுணர் கருத்தை வழங்கியுள்ளது என்றும், 23.09.2020 தேதியிட்ட அறிக்கை ஆரம்ப அறிக்கை என்றும், அது அ.சாஆ.121 என்றும், அந்த அறிக்கையில் தானும், டாக்டர் ஆதர்ஷ் குமார் மற்றும் டாக்டர் மனிஷ் குமாரும் கையெழுத்திட்டுள்ளதாகவும், 06.03.2021 தேதியிட்ட அறிக்கை இறுதி அறிக்கை என்றும், அது அ.சா.ஆ.122 என்றும், அதிலும் தானும், டாக்டர் ஆதர்ஷ் குமார் மற்றும் டாக்டர் மனிஷ் குமாரும் கையெழுத்திட்டுள்ளதாகவும், மேற்கூறிய அறிக்கையில், பாதிக்கப்பட்ட இருவருக்கும் ஏற்பட்ட காயங்கள் கூட்டாக இயற்கையின் சாதாரண போக்கில் மரணத்தை ஏற்படுத்தும் அளவுக்கு போதுமானதாக இருந்தன என்று வாரியம் முடிவு செய்துள்ளது. மேலும் காயங்கள் குச்சி/லத்தி/தண்டா

போன்ற நீண்ட உருளைப்பொருளால் மீண்டும் மீண்டும் அடித்ததால் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி அறிக்கையில் கேள்வி எண்.6 இல் காயங்களின் தன்மை, தீவிரம் மற்றும் காயங்களின் வடிவம் அவை காவல் அடைப்பு சித்திரவதை/முறையாக அடிப்பது அல்லது மற்ற வகையில் காயம் ஏற்பட்டதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், புட்டம் மீது பரவலான பெரிய காயங்கள், கைகால்கள், உள்ளங்கால்கள் மற்றும் உள்ளங்கைகளில் உள்ள பல்வேறு காயங்கள், ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகிய இருவரும் மீண்டும் மீண்டும் அடிக்கப்பட்டுள்ளதை காட்டுவதாக அமைந்துள்ளது என்றும், கேள்வி எண்.14 இல், "இறந்தவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் மற்றும் இறந்த இருவரின் பிரேத பரிசோதனையை நடத்திய மருத்துவர்களிடம் அலட்சியம் எதுவும் இல்லை" என்று வாரியம் கருத்து தெரிவித்துள்ளது என்றும், பல்வேறு ஆவணங்கள் மற்றும் பல்வேறு மருத்துவர்கள் / அதிகாரிகளுடனான தனிப்பட்ட தொடர்புகளைப் பார்த்த பிறகு, சித்திரவதை செய்யப்பட்ட பாதிக்கப்பட்டவரின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்ய தேவையான சிகிச்சையை வழங்குவதன் மூலமோ அல்லது நோயாளியை மருத்துவமனைக்கு மாற்றுவதன் மூலமோ நடவடிக்கை எடுப்பதில் சிறை / காவல் அதிகாரிகளிடம் எந்த நிர்வாகத் தோல்வியும் தெரியவில்லை" என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், கேள்வி எண்.9 இல், "இரண்டு நிகழ்வுகளிலும் பல மழுங்கிய காயங்களின் விளைவாக ஏற்படும் ரத்தக்கசிவு அதிர்ச்சியின் தாமத விளைவுகளால் மரணம் ஏற்பட்டிருக்கலாம் என வாரியம் கருத்து தெரிவித்துள்ளது என்றும், காயங்களின் அளவு மற்றும் தன்மை மற்றும் மென்மையான திசு சேதம் உள்ளிட்ட பல காரணிகளைப் பொறுத்து வெவ்வேறு நபர்களில் உடல்நிலை மோசமடைதல் மாறுபடலாம்" என்றும், சம்பவங்கள் நடந்ததாகக் கூறப்படும் இடமான சாத்தான்குளம் காவல் நிலையம், கோவில்பட்டி துணை சிறை, கோவில்பட்டி அரசு மருத்துவமனை, திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் சாத்தான்குளம் அரசு மருத்துவமனை ஆகியவற்றை மருத்துவர் குழு பார்வையிட்டதாகவும், மருத்துவமனைக்கு வருகை தந்த நேரத்தில், காயமடைந்த ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ்சை பரிசோதித்த அப்போதைய பணி மருத்துவராக

இருந்த டாக்டர்.வினிலாவுடன் மருத்துவர் குழு கலந்துரையாடியதாகவும், கோவில்பட்டி அரசு மருத்துவமனையின் மூத்த சிவில் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர். ஸ்ரீ வெங்கடேஷ் அவர்களுடனும் மருத்துவர் குழு கலந்துரையாடியதாகவும், கோவில்பட்டி சப் ஜெயிலில் பாதிக்கப்பட்ட ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ்சை பரிசோதித்த மருத்துவரிடமும் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர்கள் குழுவினரிடமும் காவல்துறையினரிடமும் மருத்துவர் குழு கலந்துரையாடியதாகவும் தங்களது அறிக்கை இறுதி அறிக்கையின் பக்கம் 1–ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.49 பென்னிக்ஸ் நடத்திவந்த ஏ.பி.ஜே மொபைல் கடைக்கு அருகேயுள்ள கிங் எலக்ட்ரிகல்ஸ்–ன் உரிமையாளர் திரு.பிரபு அ.சா.49 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் சாத்தான்குளத்தில் 4/25, இடக்குடி தெரு, சாத்தான்குளம் என்ற முகவரியில் கிங் எலக்ட்ரிகல்ஸ் என்ற பெயரில் 30 வருடங்களுக்கு மேலாக எலக்ட்ரிகல்ஸ் கடை நடத்தி வருவதாகவும், தனது கடைக்கு வலதுபக்கம் ஜி.ஜி.பாக்கியம் என்ற ஹார்ட் வேர் கடை உள்ளது என்றும், தனது கடைக்கு இடதுபக்கத்தில் ஏ.பி.ஜே மொபைல் கடை உள்ளது என்றும், அந்த ஏபிஜே மொபைல் கடையை பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் வைத்திருந்தார்கள் என்றும், ஏ.பி.ஜே மொபைல் கடைக்கு பக்கத்தில் அனீஸ் பழக்கடை இருந்தது என்றும், தனது கடை பாதுகாப்பிற்காக தான் சி.சி.டி.வி கேமரா போட்டு வைத்துள்ளதாகவும், தனது கடையில் மொத்தம் ஏழு கேமராக்கள் கொண்ட சி.சி.டி.வி உள்ளது என்றும், சி.சி.டி.வி கேமராவில் பதிவாகும் பதிவுகள் சுமார் 15 முதல் 20 நாட்கள் வரை பராமரிக்கப்படும் என்றும், தான் சி.சி.டி.வி கேமரா உபகரணங்கள் அனைத்தையும் சி.பி.சி.ஐ.டி–க்கு 01.07.2020–ம் தேதியன்று கொடுத்ததாகவும், மேற்படி சி.சி.டி.வி கேமரா உபகரணங்களை தான் certify செய்து கொடுத்ததாகவும், சி.சி.டி.வி கேமரா உபகரணங்களை இரண்டு காவல்துறை அதிகாரிகள் வாங்கினார்கள் என்றும், அதில் ஒருவர் பெண் போலீஸ் என்றும், மற்றொருவர் சி.பி.சி.ஐ.டி காவலர் முருகன் என்றும், தான் கொடுத்த சான்றிதழ் அ.சா.ஆ.123 என்றும், அ.சா.ஆ.123–ல் தன்னுடைய கையொப்பமும் மற்றும் தன்னுடைய கடையின் சீல் உள்ளது என்றும்,

மேற்படி சான்றிதழை காவலர்கள் கொண்டு வந்தார்கள் என்றும், அந்த சான்றிதழில் உள்ள விபரங்களை தனக்கு படித்துக் காண்பித்தார்கள் என்றும், தானும் படித்து பார்த்ததாகவும் விபரம் தெரிந்தது என்றும் அதன்பிறகு மேற்படி சான்றிதழை கொடுத்ததாகவும், தற்போது தன்னிடம் காண்பிக்கப்படும் சான்றுப் பொருள் D.V.R. 2 T.B. internal Hard disc A.C. – DC Adapter சா.பொ.24 என்றும், மேற்படி சான்றுப் பொருளானது 18.06.2020 மற்றும் 19.06.2020 பதிவுகள் குறித்தது என்றும், 01.07.2020 அன்று மேற்படி 18.06.2020 மற்றும் 19.06.2020 பதிவுகளை அவர்கள் பார்த்தார்கள் என்றும், அந்த பதிவுகளை தானும் பார்த்தாகவும், அந்த பதிவுகளில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்களை அவர்களது கடையிலிருந்து போலீசார்கள் அழைத்து சென்றதை பார்த்தாகவும், அந்த பதிவில் 19.06.2020–ம் தேதியன்று ஜெயராஜை போலீசார்கள் அழைத்து சென்றார்கள் என்றும், அதனை தொடர்ந்து பென்னிக்ஸ் அவரது நண்பரின் பைக்கில் ஏறிச் சென்ற பதிவுகள் இருந்தது என்றும், தனது கடையின் கேமராவில் time settings இரண்டு மணி நேரம் கூடுதலாக இருக்கும் என்றும், அது கொரோனா காலம் என்பதால் தான் அந்த சமயத்தில் அந்த time settings–ஐ தான் சரிசெய்யவில்லை என்றும், உதாரணமாக 10.00 மணி நிகழ்வு கொண்ட பதிவுகள் 12.00 மணி என்று காண்பிக்கும் என்றும், நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் 18.06.2020 மற்றும் 19.06.2020 சி.சி.டி.வி பதிவுகள் தனது கடையில் உள்ள சி.சி.டி.வி கேமராவில் இருந்து எடுக்கப்பட்டது என்றும், தான் ஏற்கனவே முதல்விசாரணையில் குறிப்பிட்டுள்ள சி.சி.டி.வி கேமராவில் உள்ள பதிவுகள் தனது கடைக்கு வெளியே ரோட்டைப் பார்த்து உள்ள 3–ம் நம்பர் கேமராவில் பதிவான பதிவுகள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.50 ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ்–ன் இறப்பு குறித்து குவிமுச பிரிவு 176 (1A) (i)–ன் கீழ் வசிாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்துள்ள நீதித்துறை நடுவர் திரு.பாரதிதாசன் அ.சா.50 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் 23.06.2020–ம் தேதி தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 ஆக பணியாற்றியபோது கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் இருந்து கோவில்பட்டி கிளைச்சிறையில்

கைதியாக சிறை வைக்கப்பட்டிருந்த ஜெயராஜ் மகன் பென்னிக்ஸ் என்பவர் இறந்தது தொடர்பாக பதிவு செய்யப்பட்ட குற்ற எண்.649/2020 குவிமுச பிரிவு 176 (1A) (i)–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல்தகவல் அறிக்கையும், கோவில்பட்டி கிளைச் சிறையில் கைதியாக சிறை வைக்கப்பட்டிருந்த பொன்ராஜ் என்பவர் மகன் ஜெயராஜ் என்பவர் இறந்தது தொடர்பாக பதிவு செய்யப்பட்ட குற்ற எண். 650/2020 குவிமுச பிரிவு 176 (1A) (i)–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையும் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்திற்கு வரப்பெற்று தன்னால் அதில் வரப்பெற்ற நேரம் பற்றியும் அதனை அளித்த காவலர் பற்றியும் குறிப்பு எழுதப்பட்டது என்றும், மேற்படி இரண்டு நபர்களும் சாத்தான்குளம் நீதித்துறை நடுவரால் அங்கீகரிக்கப்பட்ட காவல்அடைப்பின் பேரில் கோவில்பட்டி கிளைச்சிறையில் சிறை வைக்கப்பட்டிருந்த காலத்தில் அவர்கள் மரணமடைந்ததால், அவர்களது மரணத்தைப் பொறுத்து நீதித்துறை விசாரணை நடத்த மாண்புமிகு தூத்துக்குடி தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் மேற்படி நீதிமன்றத்தின் நடவடிக்கை எண். A1–113/2020 மற்றும் A1–114/2020ன் மூலம் 23.06.2020–ம் தேதி தனக்கு அதிகாரம் அளித்து உத்தரவிட்டதாகவும் அதன்பேரில் தான் குவிமுச பிரிவு 176 (1A) (i)–ன் கீழ் நீதித்துறை விசாரணை நடத்த துவங்கியதாகவும், அதன் தொடர்ச்சியாக 23.06.2020–ம் தேதி திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த மேற்படி இறந்த பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் ஆகியோரது பிரேதத்தின் பிரேதவிசாரணை மேற்கொள்வதற்காக மேற்படி மருத்துவமனைக்கு சென்றதாகவும், அங்கு மேற்படி இறந்த நபர்களின் உறவினர்கள் மேற்படி நபர்களின் இறப்பிற்கு காரணமான காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியும், நஷ்டஈடு வேண்டியும், அரசு வேலை வேண்டியும் போராட்டம் நடத்திக் கொண்டிருந்ததால் இரவு 08.30 மணி வரை காத்திருந்து வந்துவிட்டதாகவும், 23.06.2020–ம் தேதியே இரவு 09.45 மணிக்கு கோவில்பட்டிக்கு சென்று கோவில்பட்டி கிளைச்சிறையில் பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் சிறை வைக்கப்பட்டிருந்த அறையில் கைதியாக அடைக்கப்பட்டிருந்த சுனில் என்பவரது வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், அதனை தொடர்ந்து கிளைச்சிறையில் மேற்படி நபர்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்த சிறையை

பார்வையிட்டு அதனை புகைப்படங்கள் எடுத்தாகவும், அப்போது சிறை அறையின் சுவற்றில் பல்வேறு இடங்களில் கறைகள் காணப்பட்டது என்றும், அதுகுறித்து சிறை கண்காணிப்பாளரிடம் கேட்ட போது இறந்த பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் ஆகியோரது உடம்பில் இருந்து வெளி வந்த இரத்தம் போன்ற திரவம் பட்டுதான் மேற்படி கறைகள் ஏற்பட்டதாக தெரிவித்தார் என்றும், அதனால் சிறை கண்காணிப்பாளரை மேற்படி இறந்த பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் அடைக்கப்பட்டிருந்த சிறை அறையில் இருந்த மற்ற கைதிகளை வேறு சிறை அறைக்கு மாற்றம் செய்ய சொல்லியும், மேற்படி இரத்தம் போன்ற திரவத்தினால் ஏற்பட்ட கறைகளை தகுந்த தடயவியல் ஆய்வாளர்கள் வந்து பார்வையிடும் வரை துடைக்க வேண்டாமென்று அறிவுறுத்தியதாகவும், மேலும், இறந்த ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோரது உடைமையில் இருந்த மாத்திரைகள், ஆயின்மெண்ட்கள், இரத்தம்படிந்த துணிகள் மற்றும் இதர பொருட்கள் சிறையில் இருப்பது தெரிய வந்தது என்றும், அவற்றை சிறைக் கண்காணிப்பாளர் தன் முன்பு ஆஜர்படுத்தினார் என்றும், அப்பொழுது போலீசாரின் விசாரணை தொடர பெறாத காரணத்தினாலும், மேற்படி பொருட்கள் வழக்கில் சான்றுப் பொருள்களாக ஆஜர் செய்யப்படலாம் என்பதாலும் அவற்றை சிறையிலேயே விட்டுச் சென்றால் அதன் சாட்சியத்தன்மை மாறும் என்ற காரணத்தினாலும், குவிமுச பிரிவு 104–ன் கீழ் அளிக்கப்பட்டிருந்த அதிகாரத்தை பயன்படுத்தி மேற்படி பொருட்களை சிறைக்கண்காணிப்பாளர் முன்னிலையில் கைப்பற்றி, நீதிமன்ற கட்டுப்பாட்டில் கொண்டு வந்து அவற்றிற்கு வழக்குச் சொத்து எண்.337/2020 அளிக்கப்பட்டு அவை கோவில்பட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் பாதுகாப்பான பொறுப்பில் வைக்கப்பட்டது என்றும், மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்ற கிளையின் 02.07.2020–ம் தேதியிட்ட உத்தரவு மூலம் வழக்கானது தூத்துக்குடி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு மாற்றப்பட்டதால் அந்த நீதிமன்றத்திற்கே மேற்படி கைப்பற்றப்பட்ட பொருட்களும் பின்னர் அனுப்பி வைக்கப்பட்டது என்றும், பிறகு 24.06.2020–ம் தேதி ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் உறவினர்களான தாவீது, பொன்சேகர், வினோத்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் பென்னிக்சின் பிரேத விசாரணையானது 24.06.2020–ம் தேதியன்று மதியம் 03.20 மணிக்கு தொடங்கி 04.30

மணிக்கு முடிக்கப்பட்டது என்றும், ஜெயராஜ் என்பவரது பிரேதத்தின் மீது பிரேதவிசாரணையானது 24.06.2020–ம் தேதியன்று மாலை 04.30 மணிக்கு தொடங்கி மாலை 05.15 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் செய்து முடிக்கப்பட்டது என்றும், அந்த பிரேத விசாரணையில் மேற்படி பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் ஆகியோரது உடம்பில் பல்வேறு இடங்களில் காணப்பட்ட கன்றிய காயங்களையும், சிராய்ப்புக் காயங்களையும் தனது அறிக்கையில் விபரமாக குறிப்பிட்டுள்ளதாகவும், மேற்படி பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் ஆகியோரது பிரேதங்களில் மீதான பிரேதவிசாரணையின் போது அவர்கள் இருவரது உடம்பிலும் தலா 18 காயங்கள் காணப்பட்டது என்றும், அவற்றை தனது விசாரணை அறிக்கையில் விபரமாக குறிப்பிட்டுள்ளதாகவும், மேற்படி இரண்டு நபர்கள் குறித்தும் பிரேத விசாரணை செய்து, படிவம் 85 மற்றும் படிவம் 86 ஆகியவற்றுடன் 24.06.2020–ம் தேதியிட்ட இரண்டு பிரேத விசாரணை அறிக்கைகளை தனித்தனியே தயார் செய்ததாகவும், ஜெயராஜ் என்பவருடைய பிரேதவிசாரணை அறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட படிவம் 85 மற்றும் 86 அ.சா.ஆ.124 என்றும், சாட்சிகள் பிரேத விசாரணையில் பங்கேற்க ஒப்புதல் அளித்த ஆவணம் அ.சா.ஆ.125 என்றும், பென்னிக்ஸ் என்பவருடைய பிரேத விசாரணை அறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட படிவம் 85 மற்றும் 86 அ.சா.ஆ.126 என்றும், சாட்சிகள் பிரேதவிசாரணையில் பங்கேற்க ஒப்புதல் அளித்த ஆவணம் அ.சா.ஆ.127 என்றும், அவ்வாறு பிரேத விசாரணையை முடித்த பிறகு தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்கள் இரவு நேரத்திலும் பிரேத பரிசோதனை மேற்கொள்ளலாம் என்ற சிறப்பு உத்தரவின் காரணத்தினால் 24.06.2020–ம் தேதியே மருத்துவர் திரு.செல்வமுருகன் அவர்களது தலைமையிலான மூன்று மருத்துவர்கள் அடங்கிய மருத்துவக் குழுவினால் பிரேத பரிசோதனையானது தனது முன்னிலையில் செய்யப்பட்டு அது மாண்புமிகு மதுரை, உயர்நீதிமன்ற கிளையின் 24.06.2020–ம் தேதியிட்ட உத்தரவுப்படி முழுவதுமாக புகைப்படம் எடுக்கப்பட்டு ஒளிப்பதிவு செய்யப்பட்டது என்றும், பென்னிக்ஸ் என்பவரது பிரேத பரிசோதனையானது இரவு 08.45 மணிக்கு தொடங்கி இரவு 10.10 மணிக்கு முடிக்கப்பட்டது என்றும், பிரேதபரிசோதனையின் போது செய்யப்பட்ட நடவடிக்கைகள்

அனைத்தும் தனது விசாரணை அறிக்கையில் விளக்கமாக குறிப்பிட்டுள்ளதாகவும், ஜெயராஜ் என்பவரது பிரேத பரிசோதனையானது இரவு 10.15 மணிக்கு தொடங்கி இரவு 11.25 மணிக்கு முடிக்கப்பட்டது என்றும், மேற்படி இரண்டு நபர்களின் பிரேத பரிசோதனையும் முழுவதுமாக ஒளிப்பதிவு செய்யப்பட்டது என்றும், புகைப்படங்கள் எடுக்கப்பட்டது என்றும், அவ்வாறு எடுக்கப்பட்ட பதிவுகள் அடங்கிய Memory Card–ஐ தனது அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளதாகவும், திருநெல்வேலி தடயவியல் பகுப்பாய்வு துணை இயக்குநருக்கு வேண்டுகோள் கடிதம் மூலம் இறந்த நபர்களின் உள்ளுறுப்புகளில் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும், பின்னர் 26.06.2020 மற்றும் 27.06.2020–ம் தேதிகளில் இறந்த ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்களுடன் கோவில்பட்டி கிளைச்சிறையில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த மற்ற கைதிகளின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது என்றும், அன்றையதினமே மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்ற கிளையின் உத்தரவுப்படி சிறையில் இவ்வழக்கு தொடர்புடைய பதிவேடுகளின் பக்கங்களின் உண்மை நகல்கள் பெறப்பட்டது என்றும், பின்னர் 28.06.2020–ம் தேதி விசாரணையின் தொடர்ச்சியாக சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு மதியம் 12.45 மணியளவில் சென்று மதியம் 01.00 மணியளவில் விசாரணை தொடங்கியதாகவும், இறந்த ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டது சம்மந்தமான சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 தொடர்புடைய வழக்கு ஆவணங்களை பார்வையிட்டதாகவும், பிறகு அன்றையதினமே மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்ற கிளையின் உத்தரவுப்படி இவ்வழக்கு தொடர்புடைய காவல்நிலைய பதிவேடுகளின் பக்கங்களின் உண்மை நகல்கள் பெறப்பட்டது என்றும், அதே சமயத்தில் மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவுப்படி காவல்நிலையத்தின் சி.சி.டி.வி கேமரா பதிவுகளை கைப்பற்ற வேண்டி அதன் D.V.R–யை தூத்துக்குடி மாவட்ட நீதிமன்றத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்த கணினி அலுவலர் சுரேஷ் முன்னிலையில் பார்வையிட்ட போது அது 1T.B. அளவுடைய Hard Disk ஆக இருந்த போதிலும் அதன் பதிவுகள் தினமும் அழியும் வண்ணம் அமைக்கப்பட்டிருப்பதும் அதில் 19.06.2020–ம் தேதி தொடர்புடைய பதிவுகள் எதுவும்

இல்லை என்பதும் தெரிய வந்தது என்றும், அவ்வாறு அழியப்பட்டிருந்த பதிவுகளை கணினி தடயவியல் துறை மூலம் மீட்டெடுக்க அந்த hard disk ஆனது சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி அதற்கு வழக்குச் சொத்து எண்.338/2020 அளிக்கப்பட்டது என்றும், அவ்வாறு கைப்பற்றிய பிறகு அதனிடத்தில் புதிதாக ஒரு hard disk மாற்றி அமைக்கப்பட்டது என்றும், அதில் தனிச்சையாக பதிவுகள் அழியும் வண்ணம் மாற்ற வேண்டாம் என்றும் தொடர்ந்து பதிவுகள் செய்வதை உறுதி செய்ய வேண்டியும் அப்போதிருந்த (பொறுப்பு) ஆய்வாளர் அவர்களிடம் அறிவுறுத்தி எழுத்துமூலமான கடிதம் வழங்கப்பட்டது என்றும், பிறகு காவல்நிலையத்தின் அமைப்பினை தெரிந்துகொள்ள காவல்நிலையம் முழுவதும் பார்வையிட்டு புகைப்படங்களும், ஒளிப்பதிவும் செய்யப்பட்டது என்றும், அதே சமயத்தில் சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 தொடர்புடைய வழக்கின் அசல் ஆவணங்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டது என்றும், பிறகு காவலர் மகாராஜன் என்பவரது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து பெண் தலைமை காவலரான திருமதி.ரேவதி அவர்களின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்றும், அவர் தனது வாக்குமூலத்தில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்கள் இருவரையும் போலீசார் காவல்நிலைய மேஜையின் மீது படுக்க வைத்து ஒரு இரவு முழுவதும் லத்தியால் அடித்து இருவருக்கும் இரத்தக்காயம் ஏற்படுத்தியதாகவும், அதனால் ஏற்பட்ட இரத்தக்கறைகளை ஏற்கனவே பாதி அழித்துவிட்டதாகவும், எனவே லத்தி மற்றும் அந்த மேஜையினை பாதுகாக்க வேண்டும் என்றும் கூறினார் என்றும், போலீஸ் விசாரணை துவங்காமல் இருப்பதை கருத்தில்கொண்டு ஏற்கனவே இரத்தக்கறைகள் மற்றும் முக்கிய சாட்சியங்கள் அழிக்கப்பட்டிருப்பதை கருத்தில்கொண்டு அங்கிருந்த நிலையக் காவலர்கள் அனைவரது லத்திகளையும் ஒப்படைக்க சொல்லி மொத்தமாக பத்தி லத்திகளும், ஒரு பிளாஸ்டிக் பைப்பும் கைப்பற்றப்பட்டது என்றும், அவற்றுள் சார்பு ஆய்வாளர் அறையிலிருந்து கைப்பற்றப்பட்ட ஒரு லத்தியில் இரத்தக்கறை காணப்பட்டது என்றும், காவலர் மகாராஜன் அவரது லத்தி தொலைந்துவிட்டதாக எழுத்துமூலமாக தெரிவித்தார் என்றும், காவலர் சாமதுரையிடம் அவரது லத்தியை கேட்டபோது அவர் ஓடிச்சென்று

காவல்நிலையத்திற்கு அருகில் நிறுத்தி வைத்திருந்த காரின் மீது ஏறி குதித்து இருட்டில் மறைந்துவிட்டார் என்றும், அவ்வாறு கைப்பற்றப்பட்ட லத்திகள் மற்றும் பிளாஸ்டிக் பைப்பிற்கு வழக்குச் சொத்து எண்.339/2020 வழங்கப்பட்டு அது நீதிமன்றத்தில் பாதுகாப்பான பொறுப்பில் வைக்கப்பட்டது என்றும், அவ்வாறு கைப்பற்றப்பட்ட பொருட்களின் புகைப்படத்தை எனது விசாரணை அறிக்கையுடன் இணைப்பு H ஆக தாக்கல் செய்துள்ளதாகவும், காவல்நிலையத்தில் சூழ்நிலையானது முற்றிலும் அமைதியற்ற முறையிலும், விசாரணைக்கு உகந்ததாகவும் இல்லாததால் ஒரு இடைக்கால அறிக்கையை 29.06.2020–ம் தேதி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்திற்கும், மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளைக்கும், மாண்புமிகு தூத்துக்குடி முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களுக்கும், மாண்புமிகு தூத்துக்குடி தலைமை குற்றவியல் நீதிபதி அவர்களுக்கும் மின்னஞ்சல் மூலமாக அறிக்கையை சமர்ப்பித்ததாகவும், அதன்பின்னர் 30.06.2020–ம் தேதி வட்டார தடயவியல் ஆய்வகத்தின் துணை இயக்குநர் திருமதி.விஜயலதா அவர்களின் தலைமையில் மூன்று பேர் கொண்ட குழுவினர் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் உள்ள தடயங்களை கைப்பற்ற வேண்டி வந்திருக்கும் தகவல் அறிந்து சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு சென்ற பிறகு அவர்கள் தடயங்களை சேகரித்தார்கள் என்றும், அப்பொழுது சம்பவத்தின் முக்கிய கண்ணுற்ற சாட்சிகளான பெண் தலைமை காவலர்கள் ரேவதி மற்றும் ப்யூலா செல்வகுமாரி ஆகியோர்களை சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டார்கள் என்றும், தடயவியல் ஆய்வின் போது சாத்தான்குளம் காவல்நிலையத்தின் உள்ளே பிரதான நுழைவுவாயில், சார்பு ஆய்வாளரின் அறைக்கு வெளியே, படிக்கட்டுகளின் அருகேயும், கழிவறைக்கு அருகேயும் போன்ற வெவ்வேறான 18 இடங்களிலிருந்து இரத்தத்தின் மாதிரிகளை சேகரித்தார்கள் என்றும், அதில் ஒன்று ஆய்வாளரின் அறையிலிருந்து சேகரித்தார்கள் என்றும், மேலும், அவர்கள் இரத்தம்படிந்த துணிகள் மற்றும் இதர பொருட்களையும் கைப்பற்றினார்கள் என்றும், அப்பொழுது அங்கிருந்த சாட்சி ரேவதி தடயவியல் அலுவலர்களுக்கு எவ்வாறு போலீசார் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை தாக்கினார்கள் என்று விவரித்து கூறி அதனடிப்படையில் தடயங்களை சேகரிக்க உதவினார் என்றும்,

அவ்வாறு அவர் விளக்கிக் கூறியது புகைப்படமாகவும், வீடியோ பதிவும் செய்யப்பட்டு தனது அறிக்கையுடன் அ.சா.பொ.3 என்ற சான்றுப்பொருளாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், காவல்நிலையத்தில் காணப்பட்ட இரத்தக்கறைகளில் பெரும்பாலனவை சுவற்றின் கீழ்பகுதியில் காணப்பட்டது என்றும், அது காயமடைந்து இறந்த ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் பிட்டத்தில் இருந்த காயத்தின் உயரத்திற்கு ஒத்திசைவதாக அமைந்திருந்தது என்றும், தடயவியல் குழுவினர் சேகரித்த இரத்தமாதிரிகள், இரத்தம்படிந்த துணிகள் மற்றும் இதர பொருட்கள் 30.06.2020-ம் தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக நீதிமன்றம் வசம் ஒப்படைக்கப்பட்டது என்றும், அந்த கடிதமானது தனது விசாரணை அறிக்கையுடன் ஆவண எண்.22 ஆக இணைக்கப்பட்டுள்ளது என்றும், அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட சான்றுப் பொருட்களுக்கு வழக்குச் சொத்து எண்.341/2020 அளிக்கப்பட்டு அவை நீதிமன்ற பொறுப்பில் பாதுகாக்கப்பட்டது என்றும், பின்னர் அதே நாளான 30.06.2020-ம் தேதி தான் சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு சென்று நீதிமன்ற விசாரணையை தொடங்கி அங்கிருந்த இவ்வழக்குச் சம்பவம் தொடர்பான நாட்களுக்குரிய சி.சி.டி.வி பதிவுகளை சாட்சி பொறியாளர் பிஜூ உதவியுடன் கைப்பற்றி அவற்றிற்கு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65 ஆ- வின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளபடி கணினியின் உடைமை பொறுப்பு குறித்து மருத்துவர்.ஆத்திக்குமார் அவர்களிடம் சான்று பெற்றதாகவும், அதனை தனது அறிக்கையுடன் ஆவண எண்.24 ஆக சமர்ப்பித்துள்ளதாகவும், பின்னர் மருத்துவமனையில் இவ்வழக்குச் சம்பவம் தொடர்புடைய நாட்களுக்குண்டான பதிவேடுகளின் பக்கங்களின் உண்மை நகலை பெற்றதாகவும், அதன்பின்னர் பல்வேறு தேதிகளில் பல்வேறு சாட்சிகளிடமிருந்து வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டு விசாரணையானது 31.07.2020-ம் தேதி முடிக்கப்பட்டது என்றும், சாட்சிகளின் வாக்குமூலங்கள் Oaths Act-ன் படியும், குற்றவியல் நடைமுறை விதிகள் 2019 விதி எண்.94(3)-ன் படியும் முறையாக சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது என்றும், நீதிமன்ற விசாரணையின் முடிவில் இறந்து போன ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்கள் சாத்தான்குளம் காவல்நிலைய காவல் நிலைய குற்ற எண்.312/2020-ல் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டு, அதனடிப்படையில்

கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டது தெரிய வந்தது என்றும், எனவே அவர்கள் சிறைக்கு செல்ல காரணமான வழக்கைப் பற்றி ஆராய்ந்தபோது மேற்படி ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர் 19.06.2020-ம் தேதி இரவு சுமார் 21.15 மணியளவில் வழக்கின் புகார்தாரரான காவலர் முருகன் மற்றும் காவலர் முத்துராஜா ஆகியோர்கள் கொரோனா வைரஸ் தொற்று சம்பந்தமாக சாத்தான்குளம் காமராஜர் சிலை அருகே சென்ற பொழுது காமராஜர் சிலையின் வடபுறம் உள்ள ஏ.பி.ஜே மொபைல்ஸ் கடை அரசு அனுமதி அளித்த நேரத்திற்கு பிறகும், திறந்திருந்ததாகவும், அந்த கடையின் முன்பு கடையின் உரிமையாளரான இறந்து போன ஜெயராஜும் அவரது மகன் பென்னிக்சும் சிலருடன் நின்று பேசிக் கொண்டிருந்ததாகவும், அவர்களை மேற்படி இரண்டு காவலர்கள் கலைந்து போக சொல்லியும், கலைந்து போக முடியாது என்று கூறி, தரையில் அமர்ந்து அசிங்கமாக பேசி தரையில் புரண்டதில் அவர்களுக்கு ஊமைக்காயம் ஏற்பட்டதாகவும், மேற்படி காவலர்களை அடித்துக கொன்றுவிடுவோம் என்று கொலைமிரட்டல் விடுத்ததாகவும், முருகன் என்ற காவலர் அளித்த புகாரின் பேரில் மேற்படி குற்ற எண்ணில் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, அதனடிப்படையில் மேற்படி இருவரும் சிறையில் அடைக்கப்பட்ட விபரம் நீதிமன்ற விசாரணையில் தெரிய வந்தது என்றும், ஆனால் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டதில் சாட்சியான தலைமைக் காவலர் ஜெயசேகர் என்பவர் அவரின் வாக்குமூலத்தில் மாலை சுமார் 07.45 மணியளவிலேயே ஜெயராஜை காவல்நிலையத்திற்கு காவலர் முத்துராஜாவும், உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணனும் அழைத்துச் சென்றதாக கூறியுள்ளார் என்றும், சாட்சி ரவிசங்கர் அவரது வாக்குமூலத்தில் 19.06.2020-ம் தேதி இரவு 7.30 மணியளவிலேயே ஒரு ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர் மற்றும் மூன்று காவலர்கள் வந்ததாகவும், அவர் சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு வெளியே காத்திருந்த போது சாத்தான்குளம் காவல்நிலைய கதவு மூடப்பட்டிருந்ததாகவும், இரவு சுமார் 08.00 மணி முதல் 10.30 மணி வரை காவல்நிலையத்தின் உள்ளேயிருந்து ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோரின் அலறல் சத்தம் கேட்டதாகவும் கூறியுள்ளார் என்றும், சாட்சி ராஜாராம் தனது வாக்குமூலத்தில் 19.06.2020-ம் தேதியன்று அவர் இரவு சுமார் 07.50 மணியளவில்

சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு சென்று பார்த்த போது உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் பென்னிக்சை அடித்துக் கொண்டிருந்ததாக பார்த்ததாக கூறியுள்ளார் என்றும், மேலும், சாட்சி ப்யூலா செல்வகுமாரி அவரது வாக்குமூலத்தில் 19.06.2020–ம் அன்று சாத்தான்குளம் காவல்நிலையத்தில் மாலை 06.00 மணி முதல் இரவு 09.00 மணி வரை பணியில் இருந்ததாகவும், அப்போது இரவு சுமார் 07.45 மணிக்கு காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் மற்றும் உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் ஜெயராஜ் என்பவரை அவர்களது காவல் வாகனத்தில் நிலையம் அழைத்து வந்ததாகவும், அவரை பெரிய ரவுடியா என்று கேட்டு அடித்ததாகவும், அதனை பார்த்த அவரது மகன் பென்னிக்ஸ் காவல்நிலையத்திற்கு உள்ளே நுழைந்ததாகவும் கூறியுள்ளார் என்றும், மேலும், சாட்சி ரேவதி தனது வாக்குமூலத்தில் இரவு சுமார் 08.50 மணியளவில் காவல்நிலையம் சென்றதாகவும் அப்போது உள்ளிருந்து யாரோ ஒருவர் அம்மா வலிக்குது, என்னை விட்ருங்க, என்னை விட்ருங்க என்றும், தான் செஞ்சது தப்பு தான் என்றும் கத்தி அழும் சத்தம் கேட்டதாகவும் அப்பொழுது உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் ஸ்டேசனுக்கு உள்ளேயே வந்து தகராறு பண்ணுவியா, நீ என்ன பெரிய ஆளா என்று கூறும் சத்தமும் லேசாக கேட்டது என்றும், அவர் சென்றபோது அந்த நபரை இரத்தம் சொட்ட சொட்ட நன்கு அடித்துக் கொண்டிருந்தார்கள் என்றும் கூறியுள்ளார் என்றும், மேற்படி சாட்சியங்களின் வாக்குமூலங்களை கூட்டாக ஆய்வு செய்ததில் இறந்து போன ஜெயராஜை இரவு சுமார் 07.30 மணிக்கு முன்பாகவே சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்றிருப்பதும், அதனை தொடர்ந்து அவரது மகனான பென்னிக்சும் காவல்நிலையத்திற்கு சென்றிருப்பதும் அங்கு அவர்களை 07.30 மணிக்கு முன்பாகவே தாக்க தொடங்கியிருப்பதும் தெரிய வந்தது என்றும், மேலும், ஜெயராஜை போலீசார் அழைத்து போது அவர் எவ்வித மறுப்பும் தெரிவிக்காமல் போலீசார் வாகனத்தில் ஏறிச் சென்றதும், சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்து தெரிய வந்தது. இவ்வாறாக இருக்கும்பட்சத்தில் சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 என்ற வழக்கின் புகாரில் கூறியுள்ளபடி ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோர் இரவு 9.00 மணிக்கு மேல் அவர்களது கடையை திறந்து வைக்கவில்லை என்பதும், அவர்களை போலீசார் கலைந்து போக

சொல்லவில்லை என்பதும், அவ்வாறு சொன்னபோது அவர்கள் தரையில் விழுந்து புரளவில்லை என்பதும், அவர்கள் கொரோனா நோய் தொற்று பரவும் விதமாக செயல் எதுவும் செய்யவில்லை என்பதும், போலீசாரை அசிங்கமாக பேசவில்லை என்பதும், அவர்களது அரசுப்பணியை செய்யவிடாமல் தடுக்கவில்லை என்பதும், கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்பதும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்கள் அரசு நிர்ணயித்திருந்த இரவு 09.00 மணி வரையிலான கொரோனா கால வரையறைக்கு முன்பாகவே அவர்கள் காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்று தாக்கப்பட்டு அவ்வாறு தாக்கப்பட்டதன் விளைவாக ஏற்பட்ட காயங்களுடன் வெளியே சென்றால் அவர்களது உறவினர்கள் பிரச்சனை செய்வார்கள் என்ற காரணத்தினால் அவர்கள் மீது குற்ற எண்.312/2020 என்ற வழக்கை பொய்யாக பதிவு செய்து, அவர்களை அந்த வழக்கில் காவல் அடைப்பு பெற்று, சிறையில் அடைத்திருப்பது தெரிய வந்தது என்றும், சாட்சிகள் தாமஸ் பிரான்சிஸ், ப்யூலா செல்வகுமாரி, ரேவதி ஆகியோர் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை சாத்தான்குளம் காவல்நிலைய போலீசார் யார் யார் தாக்கினார்கள் என்றும், எவ்வாறு தாக்கினார்கள் என்றும், எதனால் தாக்கினார்கள் என்றும், யார் தாக்கியதற்கு யார் துணைபுரிந்தார்கள் என்றும், யார் அவர்களை தாக்க தூண்டினார்கள் என்றும் தெளிவாக வாக்குமூலம் அளித்துள்ளார்கள் என்றும், தனது விசாரணையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இறந்தது தொடர்பாக மொத்தமாக 43 சாட்சிகளின் வாக்குமூலங்களை பதிவு செய்து, இருவரது இறப்பு குறித்தும் தனித்தனியே விசாரணை அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், அவர்களில் தனது அறிக்கையில் முதலாவதாக காட்டப்பட்டுள்ள சாட்சியான 1–ம் எதிரி ஸ்ரீதர் என்பவரது காவல் வாகன ஓட்டுனரான காவலர் ஜெயசேகர் அவரது வாக்குமூலத்தில் எதிரிகளான பாலகிருஷ்ணன், முத்துராஜாவும் சேர்ந்து ஜெயராஜை காவல் வாகனத்தில் ஏற்றி அழைத்துச் சென்றதைப் பற்றியும், அவ்வாறு ஏற்றிச் சென்ற போது ஜெயராஜ் எவ்வித மறுப்பும் தெரிவிக்காமல் வாகனத்தில் ஏறிச் சென்றது பற்றியும், அப்பொழுது எதிரி ஸ்ரீதர் வாகனத்தை இயக்கச்சொன்னது பற்றியும், அவ்வாறு வாகனத்தில் அழைத்துச்சென்ற போது எதிரி பாலகிருஷ்ணன் ஜெயராஜை பார்த்து நீ போலீசை ஏசினாயா என்று கூறியதை பற்றியும், அவ்வாறு காவல்நிலையத்திற்குள் சென்ற பிறகு அவர்களை

தொடர்ந்து எதிரி முத்துராஜா, எதிரி ஸ்ரீதர், பாலகிருஷ்ணன் காவல்நிலையத்திற்குள் சென்றது பற்றியும், பிறகு அவர் பார்த்த போது பென்னிக்சை காவல்நிலையத்தில் வைத்து எதிரி முருகன், எதிரி முத்துராஜா ஆகியோர்கள் பென்னிக்சின் ஒரு கையை பிடித்துக் கொள்ள, எதிரி பாலகிருஷ்ணன் அவரை தாக்கியது பற்றியும், அவ்வாறு 5 நிமிடத்திற்கு ஒரு முறையும், 10 நிமிடத்திற்கு ஒரு முறையும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் அலறல் சத்தம் மாறி மாறி கேட்டது பற்றியும், பிறகு இரவு 02.15 மணிக்கு தான் எதிரி ஸ்ரீதர் காவல்நிலையத்தில் இருந்து அவரது வீட்டிற்கு கிளம்பினார் என்றும், அவரை காவலர் ஜெயசேகர் தான் வீட்டில் இறக்கிவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் மேலும், அடுத்த நாள் காலை காயம்பட்ட ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை காவல் வாகனத்தில் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற விபரம் பற்றியும், அவ்வாறு அழைத்துச் சென்ற போது ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோரின் பின்பக்கத் துணிகளில் இரத்தம் படிந்திருந்ததை பார்த்தது பற்றியும், மேலும் இதர விபரங்களை கூறி வாக்குமூலம் அளித்தார் என்றும், அந்த வாக்குமூலத்தை தனது விசாரணை அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ளதாகவும், தனது விசாரணையில் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள ஆட்டோ டிரைவரான வீரபாண்டியன் என்பவர் ஜெயராஜை 19.06.2020-ம் தேதி எதிரி பாலகிருஷ்ணன் காவல் வாகனத்தில் வந்து எதிரி ஸ்ரீதரிடம் ஏதோ பேசிவிட்டு, ஜெயராஜை அழைத்துக் கொண்டு ஜெயராஜின் தோளில் கை வைத்து போலீஸ் வாகனமான Sumo-வின் பின்பக்க கதவில் ஏற்றி அழைத்துச் சென்றதை பற்றியும், மற்றும் இதர விபரங்களை கூறி வாக்குமூலம் அளித்தார் என்றும், அந்த வாக்குமூலத்தை தனது விசாரணை அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ளதாகவும், தனது விசாரணையில் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள எதிரி தாமஸ் பிரான்சிஸ் அவரது வாக்குமூலத்தில் அவர் காவல்நிலையத்தின் முதல்தளத்தில் இருந்து அலறல் சத்தம் கேட்டு, தரைத்தளத்திற்கு சென்று பார்த்தபோது எதிரி பாலகிருஷ்ணன் பென்னிக்சை லத்தியால் அடித்துக் கொண்டிருந்தார் என்றும், அவர் பென்னிக்சை அடித்து முடித்த பிறகு, அவரது தந்தையான ஜெயராஜை அடித்தார் என்றும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இருவரையும் ஒவ்வொருவராக தனித்தனியே காவல்நிலையத்தில் எழுத்தர் அறைக்கும், உதவி ஆய்வாளர் அறைக்கும் இடையே

இருக்கும் சுவற்றில் முகத்தை அணைத்தவாறு நிற்க வைத்து, அவர்கள் இருகைகளையும் உதவி ஆய்வாளர் அறையிலிருந்து எதிரிகள் சாமதுரையும், செல்லதுரையும் பிடித்துக் கொண்டதாகவும், எழுத்தர் அறையிலிருந்து எதிரிகள் வெயிலுமுத்துவும், முருகனும் பிடித்துக் கொண்டதாகவும் அவ்வாறு பிடித்துக் கொண்ட பிறகு எதிரி பாலகிருஷ்ணன் பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜை மாறி மாறி நிற்க வைத்து லத்தியால் அவர்களது பிட்டத்தில் ஓங்கி ஓங்கி அடித்ததாகவும், முதலில் பென்னிக்சை எதிரி பாலகிருஷ்ணன் சுமார் 20 முறைக்கு மேலாக தொடரந்து அடித்தார் என்றும், அதன்பிறகு அந்த லத்தியை வாங்கிய எதிரி பால்துரை தனது இருகைகளால் பிடித்துக் கொண்டு அடிக்க ஆரம்பித்ததகாவும், பால்துரை 5 அடிகள் அடித்ததாகவும், அதன்பிறகு பென்னிக்ஸ் கழிவறைக்கு செல்ல வேண்டுமென்று கெஞ்சியவுடன் அடிப்பதை நிறுத்திவிட்டு அவரை கழிவறைக்கு செல்ல அனுமதித்ததாகவும், சென்றுவிட்டு மீண்டும் வந்த பிறகு மீண்டும் அதே நபர்கள் பிடித்துக் கொள்ள எதிரி பாலகிருஷ்ணன் அடிக்கத் தொடங்கியதாகவும், அவ்வாறு எதிரி பாலகிருஷ்ணன் அடித்துக்கொண்டிருந்த போது, எதிரி ஸ்ரீதர் அவரது அறையிலிருந்து பாலு அடிக்கும் சத்தம் நன்றாக கேட்கவில்லை என்று கூறி பலமாக அடிக்கச் சொன்னதாகவும், அதனை கேட்டு எதிரி பாலகிருஷ்ணன் அடித்துக் கொண்டே இருந்ததாகவும், அப்பொழுது எதிரி பாலகிருஷ்ணன் எதிரி தாமஸ் பிரான்சிஸ்சை பார்த்து நீயும் அடி என்று கூறியதாகவும், அதற்கு எதிரி தாமஸ் பிரான்சிஸ் பென்னிக்ஸ் அவரது நண்பர் என்றும், அவரை அடிக்க சொல்ல வேண்டாமென்றும் கூறிவிட்டு, கதவு ஓரமாக நின்று கொண்டதாகவும், அதன்பிறகு அதே போன்று ஜெயராஜையும் சுவற்றில் நிற்க வைத்து, அதே நபர்கள் பிடித்துக் கொள்ள பாலகிருஷ்ணன் அடித்ததாகவும், அப்பொழுது பென்னிக்ஸ் எதிரி தாமஸ் பிரான்சிஸிடம் வந்து எஸ்.ஐ, பாலகிருஷ்ணனிடம் கொஞ்சம் பேசி அடிக்க வேண்டாமென்று கூற சொன்னதாகவும், அதே போன்று ரவிச்சந்திரனிடமும் சென்று சிபாரிசு செய்ய சொல்லி கெஞ்சியதாகவும், அப்பொழுது எதிரி பாலகிருஷ்ணன் அவரது டேபிளுக்கு அருகே நின்று போன் பேசிக் கொண்டிருந்ததாகவும், அதன் பிறகு சுமார் 15 நிமிடங்கள் இடைவெளி விட்ட பிறகு மீண்டும் பென்னிக்சை எதிரிகள் வெயிலுமுத்து,

செல்லத்துரை, சாமதுரை, முத்துராஜா ஆகியோர்கள் பிடித்து அங்கிருந்து டேபிள் மேலே குப்புற படுக்க வைத்தார்கள் என்றும், பென்னிக்சின் கையை எதிரிகள் சாமதுரையும், முத்துராஜாவும் ஒவ்வொரு பக்கமாக பிடித்துக் கொண்டார்கள் என்றும், பென்னிக்சின் கால்களை எதிரிகள் வெயிலுமுத்துவும், முருகனும் பிடித்துக்கொள்ள எதிரி பாலகிருஷ்ணன் அதே லத்தியால் பென்னிக்சின் புட்டத்தில் அடிக்க ஆரம்பித்தார் என்றும், அவ்வாறு அடிக்கும் போது பென்னிக்சின் புட்டத்தில் இருந்து மேல்தோல் பிய்ந்திருந்தது என்றும், அவ்வாறு அடிக்கும்போது பென்னிக்ஸ் வலி தாங்க முடியாமல் திமிறி தன்னை பிடித்துக் கொண்டிருந்தவர்களிடம் இருந்து கையையும், காலையும் பலமாக உதறி டேபிளில் இருந்து கீழே விழுந்தார் என்றும், அதனைப் பார்த்த எதிரி பாலகிருஷ்ணன் அவனை விடு, அடுத்து அவனது அப்பாவை கூப்பிட்டு, படுக்க வை என்று பிடித்துக் கொண்டிருந்தவர்களிடம் கூறினார் என்றும், உடனே ஜெயராஜை அழைத்து வந்து பென்னிக்சை படுக்க வைத்தது போன்றே படுக்க வைத்து, பென்னிக்சை பிடித்துக் கொண்டது போன்றே அதே நபர்கள் பிடித்துக் கொண்டதகாவும், அப்போது எதிரி தாமசை பார்த்து எதிரி பாலகிருஷ்ணன் அடிக்க சொன்னதாகவும், அதற்கு எதிரி தாமஸ் மறுக்கவும் என்ன நீங்க எல்லாம் ஒரே ஜாதி என்ற காரணத்தினால் அடிக்க மாட்டியா என்று மிரட்டியதாகவும், அதற்கு எதிரி தாமஸ் முடியாது என்று கெஞ்சவும், சரி நீ அடிக்க வேண்டாம் காலை மட்டும் பிடி என்று ஜெயராஜின் காலை பிடிக்க சொன்னதாகவும், எதிரி தாமஸ் பிரான்சிஸிடம் அவ்வாறு காலை பிடித்துக் கொண்ட பிறகு ஜெயராஜை சுமார் 10 அடிகள் அதே லத்தியால் எதிரி பாலகிருஷ்ணன் அடித்ததாகவும், அப்பொழுது எதிரி பாலகிருஷ்ணன் கோர்ட்டில் அடித்தார்களா என்று கேட்டால் என்ன சொல்வாய் என்று ஜெயராஜிடம் கேட்டதாகவும், அதற்கு ஜெயராஜ் அடித்ததை கூறுவேன் என்று சொன்னதற்கு எதிரி ரகுகணேஷ் எதிரி பாலகிருஷ்ணனிடம் இருந்த லத்தியை வாங்கி இரண்டு அடி புட்டத்திலும், இரண்டு அடி கைகளிலும் அடித்ததாகவும், அதன்பிறகு எதிரி ரகுகணேஷ் பென்னிக்சிடம் சென்று அவரை தரையில் காலை நீட்டி உட்கார வைத்ததாகவும், அப்பொழுது பென்னிக்ஸ் அவரது புட்டத்தின் மேலிருந்து சதை முழுவதும் பிய்ந்து இருந்ததாகவும், அவர் வலியால் உட்கார முடியாமல் திணறிய போது அவரை

கட்டாயப்படுத்தி உட்கார வைத்தார்கள் என்றும், அவ்வாறு உட்கார வைத்த பிறகு அவரது பாதத்தில் அதே லத்தியை கொண்டு எதிரி பாலகிருஷ்ணன் அடித்ததாகவும், அதன்பிறகு எதிரி சாமத்துரை பென்னிக்சின் ஒரு பக்கத்தொடை மீதும், எதிரி முருகன் மறுபக்கத் தொடை மீதும் ஏறி நின்று மிதித்ததாகவும், அதன்பிறகு தொடையில் இருந்து இறங்கி ஷூ காலால் பென்னிக்சின் பாதத்திற்கு ஓரமாக தரையில் தேய்த்தவாறே இடதுபக்கத்தில் இருந்து எதிரி முருகனும், வலதுபக்கத்தில் இருந்து எதிரி சாமதுரையும் கால்களை விரித்தவாறு தங்களது ஷூ கால்களை நகர்த்திச் சென்றதாகவும், அப்பொழுது பென்னிக்ஸ் வலி தாங்க முடியாமல், நாங்கள் கோர்ட்டில் சொல்ல மாட்டோம் சார், விட்ருங்க சார் என்று சொல்லி வலியால் கத்தியதாகவும், பிறகு அவரை விட்டு விட்டதாகவும், அந்த சமயத்திலேயே அந்த அடித்த இடத்தில் இருந்த தரை முழுவதும் இரத்தம் சிதறியிருந்ததால் ஒரே இரத்தவாடை அடித்ததாகவும், பின்னர் எதிரி பாலகிருஷ்ணன் பென்னிக்சை அழைத்து அந்த இரத்தக்கறைகளை துடைக்கச் சொன்னதாகவும், அதற்கு பென்னிக்சும் அவரது வெள்ளை பனியனை பிளாஸ்டிக் டப்பாவில் இருந்த தண்ணீரையும் எடுத்துக்கொண்டு தரையை துடைத்ததாகவும் எதிரி தாமஸ் தன்னிடம் அளித்த வாக்குமூலத்தில் கூறியுள்ளார் என்றும், மேலும், எதிரி தாமஸ் தன்னிடம் அளித்த வாக்குமூலத்தில் அவ்வாறு இரண்டு பேரையும் அடித்த பிறகு, எதிரி பாலகிருஷ்ணன் எதிரி முத்துராஜை அனுப்பி ஒரு ஐந்து ரூபாய் தேங்காய் எண்ணெய் வாங்கி வரச் சொன்னதாகவும், அதற்கு எதிரி முத்துராஜா சுமார் 5 பாக்கெட்டுகள் வாங்கி வந்ததாகவும், எதிரி முத்துராஜாவை பார்த்து எதிரி பாலகிருஷ்ணன் அந்த தேங்காய் எண்ணெய் பாக்கெட்டுகளை பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜிடம் கொடுக்க சொல்லி இரண்டு பேரையும் கழிவறைக்கு சென்று அவர்களது புட்டத்தில் தேய்த்துக் கொள்ளுமாறு சொன்னதாகவும் வாக்குமூலம் அளித்தார் என்றும், மேலும், எதிரி தாமஸ் பிரான்சிஸ் தன்னிடம் அளித்த வாக்குமூலத்தில் எதிரி ஸ்ரீதரைப் பற்றியும், அவரது குணங்களை பற்றியும், அவர் காவலர்களை கொச்சையான வார்த்தைகளால் ஏசுவதைப் பற்றியும், எதிரி ஸ்ரீதர் எப்பொழுதும் வழக்கின் புகார்தாரர்களிடமும், குற்றம் சுமத்தப்பட்ட நபர்களிடமும் பேரம் பேசி எதிரி முருகன் மூலமாக லஞ்சம் வாங்குவார் என்றும், அதைப்பற்றி அனைவருக்கும் தெரியும் என்றும்,

மேலும் எதிரி பாலகிருஷ்ணனும், எதிரி முருகனும் திசையன்விளை காவல்நிலையத்தில் பணி செய்தபோது லஞ்சம் வாங்கியதால் ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாகவே அவர்கள் சம்பவத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்னர் சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு மாற்றப்பட்ட விபரம் பற்றி கூறியும் வாக்குமூலம் அளித்தார் என்றும், மேலும், எதிரி தாமஸ் பிரான்சிஸ் தன்னிடம் அளித்த வாக்குமூலத்தில் அவ்வாறு காவல்நிலையத்திற்குள் நடந்த சம்பவங்கள் அனைத்தையும் எதிரி தாமஸ் பிரான்சிஸ் நேரில் பார்த்ததாகவும், அந்த சம்பவங்கள் அனைத்தும் 19.06.2020–ம் தேதி இரவு சுமார் 08.30 மணிக்கு தொடங்கி இரவு சுமார் 01.30 மணி வரை நடந்ததாகவும், அதுவரை எதிரி தாமஸ் பிரான்சிஸ் காவல்நிலையத்தில் தான் இருந்ததாகவும், பிறகு ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் மீது பதியப்பட்ட வழக்கு ஆவணங்களை தயார் செய்து எதிரி பாலகிருஷ்ணனிடம் கொடுத்துவிட்டு இரவு சுமார் 01.30 மணியளவில் அவரது குடியிருப்பிற்கு சென்றுவிட்டதாக தன்னிடம் வாக்குமூலம் அளித்தார் என்றும், அந்த வாக்குமூலத்தை தனது விசாரணை அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ளதாகவும் அதேபோல் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் தாக்கப்பட்டதை நேரில் பார்த்த மற்றொரு சாட்சியான பெண் காவலர் ப்யூலா செல்வராணி தன்னிடம் அளித்த வாக்குமூலத்தில் 19.06.2020–ம் தேதியன்று சாத்தான்குளம் காவல்நிலையத்தில் மாலை 06.00 மணி முதல் இரவு 09.00 மணி வரை பணியில் இருந்ததாகவும், அப்பொழுது இரவு சுமார் 07.45 மணியளவில் எதிரி ஸ்ரீதர், எதிரி பாலகிருஷ்ணன் ஆகியோர் ஜெயராஜை காவல்வாகனத்தில் ஏற்றி அழைத்து வந்ததாகவும், அவர்களை தொடர்ந்தவாறே ஜெயராஜின் மகன் பென்னிக்சும் இருசக்கரவாகனத்தில் காவல்நிலையம் வந்ததாகவும், அவ்வாறு காவல்நிலையத்திற்குள்ளே வந்த உடனே எதிரி பாலகிருஷ்ணன் ஜெயராஜை பார்த்து, நீ என்ன சாத்தான்குளத்தில் பெரிய ரவுடியா என்று கேட்டு தனது கையில் வைத்திருந்த லத்தியால் ஜெயராஜை கையை நீட்ட சொல்லி சுமாராக 3 அடிகள் அடித்ததாகவும், அதைப்பார்த்த அவரது மகன் பென்னிக்ஸ் காவல்நிலையத்திற்குள் நுழைய முயலும் போது, எதிரி பாலகிருஷ்ணன், எதிரி முத்துராஜை பார்த்து பென்னிக்சை வெளியே இருக்க சொல் என்று கூறியதாகவும், எனவே எதிரி முத்துராஜா பென்னிக்சை தடுக்க முயன்றபோது பென்னிக்ஸ் எதிரி

முத்துராஜா சட்டையை பிடித்து தள்ளிவிட்டு விட்டதாகவும், அதன்பிறகு பென்னிக்ஸ் தனது தந்தையை எதிரி பாலகிருஷ்ணன் அடிப்பதை பார்த்து அவரையும் அடிக்கப் போனதாகவும், இதனால் அங்கு சத்தம் அதிகமாகி முதல் தளத்தில் இருந்த காவலர்கள் அனைவரும் தரைத்தளத்திற்கு வந்து பென்னிக்சை அடக்க முயற்சித்து பிடித்துக் கொண்ட பிறகு, எதிரி பால்துரை தனது வலது கை முட்டியால் பென்னிக்சின் முதுகில் ஓங்கி குத்தியதில் பென்னிக்ஸ் நிலை தடுமாறி ஓரமாக சென்று சுவரில் சாய்ந்தபடி நின்றுவிட்டதாகவும், எதிரி ஸ்ரீதர் அவரது அறையிலிருந்து என்ன சத்தம் என்று கேட்டதாகவும், அதற்கு காவலர்கள் அங்கு நடந்த கைகலப்பு பற்றி கூறியதாகவும், அதை கேட்ட எதிரி ஸ்ரீதர் போலிசையே அடிச்சவனை ஏன் விட்டு வைக்கிறீங்க என்று கூறி அனைத்து காவலர்களையும் பென்னிக்சை அடிக்க சொன்னார் என்றும், ஆனால் மற்ற காவலர்கள் யாரும் அடிக்க முன்வரவில்லை என்றும், அதனால் எதிரி ஸ்ரீதர் மற்ற காவலர்களை பார்த்து பிடித்தால் தானே அடிக்க முடியும், ஒழுங்கா பிடிங்க என்று திட்டியதாகவும் உடனே எதிரிகள் முருகன், செல்லத்துரை, வெயிலுமுத்து, சாமதுரை ஆகியோர் பென்னிக்சை பிடித்தவுடன் எதிரி பாலகிருஷ்ணன் பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜை கைதி அறைக்குள் சென்று ஆடைகளை அகற்றிவிட்டு வருமாறு கூறியதாகவும், அவ்வாறு ஆடைகளை அகற்றிவிட்டு வந்த பென்னிக்சை லத்தியால் எதிரி பாலகிருஷ்ணன் அடிக்க தொடங்கிய சிறிது நேரத்தில் அவரது கைவிரலில் காயம் ஏற்பட்டு இரத்தம் வந்தது என்றும், அவ்வாறு அடித்த பின்பு கையில் இரத்த ஓட்டம் சீராக இருக்க பென்னிக்சை நிலையச்சுவற்றில் தட்டச் சொன்னதாகவும், அவ்வாறு தட்டிய போது பென்னிக்ஸ் கையிலிருந்து இரத்தம் சொட்டு சொட்டாக கைதி அறைக்கும், படிக்கட்டுகளுக்கும் இடையேயான வழிப்பாதையில் தரைகளிலும், சுவற்றிலும் பட்டதாகவும், அதைக் கண்ட எதிரி ஸ்ரீதர் தரையிலுள்ள இரத்தத்தை துடைக்கச் சொன்னதாகவும், உடனே பென்னிக்ஸ் அவர் கழற்றிப் போட்ட அவரது பனியனை எடுத்து, அங்குள்ள கழிவறைக்கு சென்று தண்ணீரில் நனைத்து தரையை சுத்தம் செய்ததாகவும், பிறகு எதிரி ஸ்ரீதர் பென்னிக்சை அங்கேயே தரையில் கீழே உட்கார வைத்து அந்த படிக்கட்டுகளுக்கும், கைதி அறைக்கும் இடையே இருந்த இடத்தில் பென்னிக்சை தரையில் அமர வைத்து அவரது கால்களை விரித்து

ஒருபக்கமாக எதிரி பாலகிருஷ்ணனும் மற்றொரு பக்கம் பால்துரையும் அவர்களது ஷூ காலை வைத்து தரையில் தேய்த்தவாறே பென்னிக்சின் கால்களை விரித்ததாகவும், இதனால் பென்னிக்ஸ் வலியில் துடித்ததாகவும், அதன்பிறகு 10 நிமிடங்களுக்கு எழுந்திரிக்க முடியாமல் பென்னிக்ஸ் கொஞ்சம் கொஞ்சமாக வலியில் துடித்தவாறே எழுந்து நின்றதகாவும், அப்போது எதிரி ஸ்ரீதர் அவரது அறையிலிருந்து வெளியில் வந்து எதிரி பாலகிருஷ்ணனிடம் பாலு சத்தம் கேட்கல, சத்தம் கேட்கல என்று இரண்டு முறை கூறியவுடன் எதிரி பாலகிருஷ்ணன் பென்னிக்சை அடிப்பதற்காக அழைத்ததாகவும், அதைப் பார்த்த பென்னிக்ஸ் எதிரி பாலகிருஷ்ணனின் காலில் விழுந்து, சார் எங்கப்பாவை அடிச்சீங்கன்னு ஒரு வேகத்தில் தெரியாமல் செய்துவிட்டேன் என்றும், மன்னித்துவிடுமாறு கூறி கெஞ்சியதாகவும், மற்ற எதிரிகளான சாமதுரை, தாமஸ் பிரான்சிஸ், வெயிலுமுத்து, செல்லத்துரை, முருகன் ஆகிய அனைவரிடமும் சென்று சார் என்னை விடச் சொல்லுங்க சார், எனக்கு வலிக்குது சார் என்று கெஞ்சியதாகவும், சற்றுநேரத்தில் வெளியில் வந்த எதிரி ஸ்ரீதர் எதிரி பாலகிருஷ்ணனை பார்த்து, பாலு சத்தம் கேட்கவில்லை, ஏன் சும்மா நிற்கிறீர்கள் என்று எதிரி முருகனை அழைத்து அடிக்க சொன்னார் என்றும், அவர் அடிக்காததால் பிறகு எதிரி தாமசிடம் பிடிக்கச் சொன்னதாகவும், அவர் பென்னிக்ஸ் நண்பர் என்று கூறி பிடிக்க மறுத்துவிட்டதாகவும், பிறகு எதிரி ஸ்ரீதர் மீண்டும் மிரட்டியதால், எதிரிகள் செல்லத்துரை, வெயிலுமுத்து, முருகன் ஆகியோர் பென்னிக்சை பிடித்துக் கொள்ள எதிரி பாலகிருஷ்ணன் லத்தியை எடுத்து வந்த பென்னிக்சின் ஜட்டியை கீழே இறக்கிவிட்டு, லத்தியால் பென்னிக்சின் பின்பக்க புட்டத்தை நோக்கி ஓங்கி ஓங்கி அடித்ததாகவும், அப்பொழுது சாட்சி ப்யூலா செல்வகுமாரி சென்று பென்னிக்ஸ் தான் மன்னிப்பு கேட்டுவிட்டாரே பாவம் சார் விட்டுடுங்க என்று கூறியதாகவும், அவ்வாறு சாட்சி ப்யூலா செல்வகுமாரி கெஞ்சியவுடன் எதிரி பாலகிருஷ்ணன் பென்னிக்சை அடிப்பதை சிறிது நேரம் நிறுத்தியதாகவும், உடனே மீண்டும் எதிரி ஸ்ரீதர் தனது அறையிலிருந்து வெளியே வந்து பாலு சத்தம் கேட்கவில்லை, பாலு சத்தம் கேட்கவில்லை என்று இரண்டு முறை கூறிவிட்டு, அவர் அறைக்கு சென்றுவிட்டதாகவும், அதைக் கேட்ட எதிரி பாலகிருஷ்ணன் பென்னிக்சை

அடிப்பதை நிறுத்திவிட்டு ஜெயராஜை மீண்டும் அழைத்து உதவி ஆய்வாளர் அறைக்கும், எழுத்தர் அறைக்கும் உள்ள சுவற்றில் நிறுத்தி அவரது இரண்டு கைகளையும் எதிரிகள் செல்லத்துரையும், வெயிலுமுத்துவும், முருகனும் பிடித்துக் கொள்ள எதிரி பாலகிருஷ்ணன் மாறி மாறி ஜெயராஜின் புட்டத்தில் அடித்ததாகவும், வலியால் கத்திய ஜெயராஜ் அவருக்கு சுகர் உள்ளது என்றும், பீ.பீ. உள்ளது என்றும் கூறி அவரை விட்டுவிடுமாறு கெஞ்சியதாகவும், அதனால் எதிரி பாலகிருஷ்ணன் அடிப்பதை நிறுத்தி பிறகு அதன்பிறகு சாட்சி ப்யூலா செல்வகுமாரியை எதிரி பாலகிருஷ்ணன் காவல்நிலையத்திற்கு வெளியே அனுப்பிவிட்டதாகவும், வெளியே சென்ற பிறகு சாட்சி ரேவதிக்கு போன் செய்து சாட்சி ரேவதியை சீக்கிரமா வா, இங்கு ஸ்டேசனில் பிரச்சனையாக உள்ளது என்றும் சாட்சி ப்யூலா செல்வகுமாரி வீட்டிற்கு போக வேண்டும் என்று கூறி சாட்சி ரேவதியை சீக்கிரமாக வரச் சொன்னதாகவும், சற்றுநேரத்தில் சாட்சி ரேவதியும் காவல்நிலையத்திற்கு வந்துவிட்டதாகவும், பிறகு சாட்சி ப்யூலா செல்வகுமாரி அவரது பையை எடுப்பதற்காக அவரது இருக்கைக்கு சென்ற போது எதிரி பாலகிருஷ்ணன் பென்னிக்சை காவல்நிலையத்தில் இருந்த மேஜை மீது படுக்க வைத்து மற்ற போலீசார் பிடித்துக் கொள்ள பென்னிக்சின் புட்டத்தில் லத்தியால் அடித்து கொண்டிருந்தார் என்றும், அப்போது வலியால் கத்திய பென்னிக்சிடம் எதிரி பாலகிருஷ்ணன் நீ செத்தாலும் பரவாயில்லை, தான் தனது சொத்தை வித்தாவது வெளியில் வந்துவிடுவேன் என்று கூறிக்கொண்டே அடித்ததாகவும், அதை பார்க்க விருப்பம் இல்லாத சாட்சி ப்யூலா செல்வகுமாரி ஆய்வாளரான எதிரி ஸ்ரீதரிடம் கூறிவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும், வெளியே சென்றபோது பென்னிக்சின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் பலர் செய்வது அறியாது நின்று கொண்டிருந்ததாகவும் வாக்குமூலம் அளித்துள்ளார் என்றும், அவரது வாக்குமூலத்தை தனது விசாரணை அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளதாகவும், அதேபோல் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் தாக்கப்பட்டதை நேரில் பார்த்த மற்றொரு சாட்சியான பெண் தலைமைக் காவலர் ரேவதி தன்னிடம் அளித்த வாக்குமூலத்தில் 19.06.2020-ம் தேதியன்று அவர் இரவு சுமார் 08.50 மணியளவில் காவல்நிலையம் சென்றதாகவும், அப்போது காவல்நிலையக் கதவுகள் உள்பக்கமாக

பூட்டியிருந்ததாகவும், காவல்நிலையத்தை சுற்றி மின்விளக்குகள் அணைக்கப்பட்டிருந்ததாகவும், ஆனால் காவல்நிலையத்தின் உள்ளே மின்விளக்குகள் எரிந்து கொண்டிருந்ததகாவும், அப்போது காவல்நிலையத்தில் சந்தனக்குமார் மற்றும் ஜெயசேகர் வெளியே உள்ள வேப்பமரத்தின் கீழ் இருந்ததாகவும், சாட்சி ப்யூலா செல்வகுமாரி காவல்நிலையத்திற்கு வெளியே உள்ள கொடிக்கம்பத்திற்கு அருகே நின்று கொண்டிருந்ததாகவும், எதிரி தாமஸ் பிரான்சிஸ் நிலைய கதவிற்கு அருகே யாரும் உள்ளே சென்றுவிடாதவாறு தடுக்கும் பொருட்டு நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது இரண்டு நபர்களை எதிரி ஸ்ரீதரும், பாலகிருஷ்ணனும் விசாரித்ததாக சொன்னதால் அவர் சிறிது நேரம் வெளியே காத்துக் கொண்டிருந்ததாகவும், காவல்நிலையத்தின் உள்ளே இருந்து யாரோ ஒருவர் அம்மா வலிக்குது, தன்னை விட்டுடுங்க என்றும் தான் செய்தது தப்பு தான் என்றும் கத்தி அழும் சத்தம் கேட்டதாகவும், அப்போது எதிரி பாலகிருஷ்ணன் ஸ்டேசனுக்கு உள்ளேயே வந்து தகராறு பண்ணுவியா நீ என்ன பெரிய ஆளா என்றும் கூறும் சத்தம் கேட்டதாகவும், அப்போது சாட்சி ரேவதி மைக் அட்டன் செய்யும் பணி செய்ய வேண்டும் என்று கூறியவுடன், எதிரி தாமஸ் பிரான்சிஸ் தடுக்காமல் உள்ளே செல்ல அனுமதித்ததாகவும், சாட்சி ரேவதி நிலையத்தின் உள்ளே சென்றபோது கதவு அருகே இடதுபக்கமாக டேபிளின் மீது ஒருவர் குண்டாகவும், வாட்டசாட்டமாகவும், மாநிறமாகவும் 30 வயது மதிக்கப்பெற்ற ஆண்நபரை காவல்நிலைய இடதுபக்க கதவு அருகே உள்ள சாட்சி ரவிச்சந்திரன் டேபிள் மீது குறுக்காக குப்புற படுக்க வைத்து அவரது பட்டக்ஸ் மட்டும் டேபிளின் மத்தியில் இருக்கும்படி அந்த நபரை டேபிளின் நான்குபுறமும் நான்கு பேர் நின்று கொண்டு அவர்கள் கை மற்றும் கால்களை பிடித்துக்கொண்டு இவன் நல்லா குண்டா இருக்கான், நல்லா அடி தாங்குவான் என்று சொல்லிக் கொண்டே அடித்தனர் என்றும், சாட்சி ரேவதி சென்றபோது அந்த நபரை இரத்தம் சொட்ட சொட்ட நன்கு அடித்துக் கொண்டிருந்தனர் என்றும், அடித்து முடித்த பின்னர் கீழே வழிந்த இரத்தத்தை எதிரி ஸ்ரீதர் அந்த அடி வாங்கிய நபரையே துடைக்க சொன்னார் என்றும், அந்த நபரும் படிக்கட்டிற்கு அருகில் இருக்கும் பாத்ரூம்மில் இருந்து ஒரு பெயிண்ட் டப்பா போன்ற கப்பில் தண்ணீர் கொண்டு வந்து அந்த இரத்தக்கறையை அவரது

துணியை வைத்து துடைத்தார் என்றும், எதிரி சாமதுரை ஒரு பக்க கையை பிடித்துக் கொண்டதாகவும், எதிரி வெயிலுமுத்து கால்களை பிடித்துக் கொண்டதாகவும், சாட்சி ரேவதி பார்த்த போது எதிரி பாலகிருஷ்ணன் அடித்துக் கொண்டிருந்ததாகவும் அப்பொழுது எதிரி பாலகிருஷ்ணன் சாட்சி ரேவதியையும் கொஞ்சம் அடி என்று கூறியதாகவும், அவர் மறுத்துவிட்டு வேறு வேலைக்காக சென்றுவிட்டு பின்னர் காலை சுமார் 06.30 மணிக்கு காலையிலேயே அடித்த இருவரையும் ரிமாண்ட் அனுப்புமாறும், ஊர்க்காரர்கள் கூட்டம் கூடி பிரச்சனை ஆகிவிடும் என்று கூறியதாகவும், வந்து பார்த்தபோது அவ்வாறு தாக்கப்பட்ட நபர் காவல்நிலைய படிக்கட்டிற்கு கீழே இரண்டு கை கால்களை விரித்து ஒரு கையை முதற்படிக்கட்டில் முட்டு குடுத்து தலையை வைத்து குப்புற படுத்திருந்தார் என்றும், அதை பார்த்து சாட்சி அந்த அடி வாங்கிய நபரிடம் சென்று ஏன்பா ஏன் இங்க தனியா வந்த என்று கேட்டதாகவும், அதற்கு அந்த அடி வாங்கிய நபர் இல்லங்க தான் இங்க பிரச்சனை பண்ண வரல அவங்க எங்கப்பாவை அடிச்சாங்க, அதனை அவர் தடுக்க சென்றபோது பிரச்சனை ஆகிவிட்டது என்ன நடந்தது என்று தெரியவில்லை என்று கூறியதாகவும், சாட்சி ரேவதியிடம் அந்த அடி வாங்கிய நபர் தண்ணீர் கேட்டதாகவும், சாட்சி ரேவதி அவருக்கு தண்ணீர் கொடுத்ததாகவும், அப்போது எதிரி ஸ்ரீதர், எதிரி முருகனை பார்த்து என்ன முருகா சத்தம் நின்றுச்சு அடுத்த ரவுண்டு போவோமா என்று கேட்டதாகவும், உடனே படுத்திருந்த பென்னிக்சை மீண்டும் அழைத்து வந்து மீண்டும் அதே டேபிளில் படுக்க வைத்து எதிரிகள் முருகன், தாமஸ் பிரான்சிஸ், முத்துராஜா, சாமதுரை, வெயிலுமுத்து மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோர் மாற்றி மாற்றி ஒருவர் அடிக்க மற்றவர்கள் பிடிக்க மீண்டும் மீண்டும் சுழற்சியாக போலீசாருக்கு வழங்கப்படும் மூங்கில் லத்தியை கொண்டு அடிக்கத் தொடங்கியதாகவும், அவரது அலறல் சத்தம் காதில் கேட்டு சாட்சி ரேவதி சற்று நேரம் காதை மூடிக்கொண்டு அவரது இருக்கையில் இருந்தவாறே அமர்ந்துவிட்டதாகவும், அந்த சமயத்தில் அடிபட்ட நபரின் தந்தை ஜெயராஜை ஏற்கனவே அடித்து கைதி அறையில் அடைத்திருந்தார்கள் என்றும், ஜெயராஜ் மிகவும் சோகமாகவும், இறுக்கமாகவும் சுவரின் ஒருபக்கம் சாய்ந்து உட்கார்ந்திருந்தார் என்றும், அதன்பின்னரும் அவர்களை அடிப்பதை நிறுத்தாததால் சாட்சி ரேவதி எதிரி ஸ்ரீதரிடம்

சென்று ஐயா அவர் பாவம் என்று சொன்னதாகவும், அவர் சொன்னதற்காகவே அதிகமாக முருகா என்ன சத்தம் சரியா கேட்கலை என்று சொல்லி அவரை நன்றாக அடிக்கச் சொன்னதாகவும், அதை பார்த்த சாட்சி ரேவதி மீண்டும் எதிரி ஸ்ரீதரிடம் சென்று ஐயா அவர் பாவம் ரொம்ப அடிக்காதீங்க இரத்தம் எல்லாம் ரொம்ப வருது வேண்டாம் அடிக்காதீங்க என்று கெஞ்சியதாகவும், அதற்கு எதிரி ஸ்ரீதர் அவன் என்ன உனக்கு சொந்தக்காரனா என்று கேட்டதாகவும், சாட்சி ரேவதியின் கணவர் குடித்துவிட்டு வந்து சண்டை போடும் விபரம் தெரிந்திருந்த எதிரி ஸ்ரீதர் சாட்சி ரேவதியின் கணவரையும் அவ்வாறு தான் கூட்டி வந்து வெளுக்கணும் என்று சொன்னதாகவும், அதனால் கோபமடைந்த சாட்சி ரேவதி தான் என்ன உங்களிடம் புகாரா கொடுத்தேன் அவருடைய personal விசயத்தை பேசுறீங்க என்று கேட்டுவிட்டு வெளியே வந்துவிட்டதாகவும், அப்பொழுது எதிரி ஸ்ரீதர் சிறப்பு உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரனை அழைத்து இவர்களுக்கு ரொம்ப காயமாகிருச்சு, இவர்களை சும்மா விட முடியாது அதனால் அவர்கள் மேல் நல்ல கேஸ் போட நல்ல பெட்டிசன் டிராப்ட் பண்ணுங்க என்றும், வெளியில யார்ட்டயாவது கம்ப்ளைண்ட் எழுதி வாங்கி கொள்ளலாம் என்று எதிரி ஸ்ரீதர் கூறியதாகவும், பிறகு எதிரி ஸ்ரீதரே வெளியில யாரும் கையெழுத்து போட மாட்டாங்க அதனால நம்ம ஸ்டேசனில் இருக்க ஆளுங்ககிட்டயே கம்ப்ளைண்ட் வாங்கி கொள்ளலாம் என்று கூறியதாகவும், அந்த கம்ப்ளைண்டை எதிரி முருகன் கொடுத்ததாகவும், அதற்கு காலை சுமார் 06.30 மணிக்கு காலையிலேயே அடித்த இருவரையும் ரிமாண்ட் அனுப்புமாறும், ஊர்க்காரர்கள் கூட்டம் கூடி பிரச்சனை ஆகிவிடும் என்று கூறியதாகவும், அறிவேன் சாட்சியாக எதிரி முத்துராஜா என்பவரும் கையொப்பம் செய்ததாகவும், அந்த வழக்கிற்கான D.S.R–ஐ எதிரி வெயிலுமுத்து எழுதினார் என்றும், பிறகு இரவு சுமார் 11.30 மணியளவில் எதிரி ரகுகணேஷ் சிவில் உடையில் வந்து எதிரி ஸ்ரீதரை பார்த்ததாகவும் அப்போது எதிரி ஸ்ரீதர் எதிரி ரகுகணேசிடம் இவன் தான் நம்ம ஸ்டேசனிலேயே வந்து தகராறு பண்ணினாங்க என்று கூறியதாகவும், உடனே பென்னிக்ஸ் மற்றும் அவரது அப்பாவை எதிரி ஸ்ரீதர் ஆய்வாளர் அறைக்கு அழைத்து விசாரித்தார்கள் என்றும், அப்பொழுது உள்ளே அவர்களை பார்த்து போலீஸ்காரர்கள் உங்களை அடித்தார்களா என்று கேட்டதாகவும், அதற்கு

பென்னிக்சும், ஜெயராஜும் அடித்தார்கள் என்று சொன்னவுடன் அவர்கள் இருவரையும் கூட்டிச் சென்று கைகளை நீட்ட சொல்லி அடித்ததாகவும், கையை நீட்ட மறுத்ததால், கையை உயர்த்த சொல்லி பட்டக்சில் அடித்ததாகவும், அப்பொழுது பென்னிக்ஸ் நாங்க செஞ்சது தப்பு தான், எங்களை மன்னிச்சுருங்க என்றும், தெரியாமல் செஞ்சுட்டோம் நீங்க என்ன சொல்றீங்களோ அதை செய்கிறோம் என்றும் கூறி அவர்களை விட்டுவிடுமாறு எதிரி ஸ்ரீதரின் காலில் விழுந்து அழுததாகவும், பின்னர் பென்னிக்கையும், ஜெயராஜையும் கைதி அறையில் அடைத்ததாகவும், அப்பொழுது எதிரி ஸ்ரீதர் எதிரி ரகுகணேசும் ஜெயராஜ், பென்னிக்ஸ் சாப்பிட்டார்களா என்று கேட்டதற்கு காலை சுமார் 06.30 மணிக்கு காலையிலேயே அடித்த இருவரையும் ரிமாண்ட் அனுப்புமாறும், ஊர்க்காரர்கள் கூட்டம் கூடி பிரச்சனை ஆகிவிடும் என்று கூறியதாகவும், அதற்கு சாட்சி ரேவதி இல்லை என்று கூறியதற்கு எதிரி ரகுகணேஷ் கைதி அறைக்கு உள்ளே சென்று உங்களால் சாப்பிட முடியாதா என்று கேட்டு மறுபடியும் இருவரையும் அடித்ததாகவும், அவ்வாறு அடித்ததில் ஜெயராஜாவும், பென்னிக்சும் சாப்பிட்டு விடுகிறோம் சாப்பிட்டுவிடுகிறோம் விட்டு விடுங்கள் என்று கத்தினார்கள் என்றும், பின்னர் அவர்கள் பயந்து கொண்டு கொஞ்சம் சாப்பிட்டார்கள் என்றும் அந்த நிகழ்வுகளை சாட்சி ரேவதியால் பார்க்க முடியாமல் வெளியே வந்து உட்கார்ந்துவிட்டதாகவும் தனது விசாரணையில் வாக்குமூலம் அளித்தார் என்றும், அவர் மேலும் தனது வாக்குமூலத்தில் எதிரி பாலகிருஷ்ணனும், ஸ்ரீதரும் கிளம்பும்போது இன்னொரு ரவுண்ட் அடிப்போமா என்று பேசிக் கொண்டதாகவும், அதற்கு சாட்சி ரேவதி வேண்டாம் ஐயா பாவம் என்று கூறியதாகவும், பின்னர் எதிரிகள் ஸ்ரீதர், பாலகிருஷ்ணன் வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும் சாட்சி காலை சுமார் 06.30 மணிக்கு காலையிலேயே அடித்த இருவரையும் ரிமாண்ட் அனுப்புமாறும், ஊர்க்காரர்கள் கூட்டம் கூடி பிரச்சனை ஆகிவிடும் என்று கூறியதாகவும், ரேவதி ஜெயராஜிடமும், பென்னிக்சிடமும் சென்று எதுவும் வேண்டுமா என்று கேட்ட போது ஜெயராஜ் தண்ணீர் மட்டும் கொஞ்சம் குடும்மா என்று கேட்டதாகவும், சாட்சி ரேவதி தண்ணீர் கொடுத்ததாகவும், பிறகு ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை அவர்கள் பெயரை சொல்லி சாட்சி ரேவதி கூப்பிட்டுக் கொண்டே இருந்தார் என்றும், பென்னிக்ஸ் இரண்டு கை

கால்களை விரித்து ஒருபக்கமாக ஒருக்களித்து விரித்தபடி படுத்திருந்தார் என்றும், செய்யாத தப்பிற்கு தானும், தனது மகனும் அடி வாங்கியதாக ஜெயராஜ் சொன்னதாகவும் காலை சுமார் 06.30 மணிக்கு காலையிலேயே அடித்த இருவரையும் ரிமாண்ட் அனுப்புமாறும், ஊர்க்காரர்கள் கூட்டம் கூடி பிரச்சனை ஆகிவிடும் என்று கூறியதாகவும், எதிரி பாலகிருஷ்ணனுக்கு சாட்சி ரேவதி போன் செய்ததாகவும், எதிரி பாலகிருஷ்ணன் காவல்நிலையம் வந்த பிறகு ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் டிரஸ் முழுவதும் இரத்தமாக இருந்ததால் வேறு டிரஸ் மாத்தி மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், எதிரி பாலகிருஷ்ணனிடம் எதிரி செல்லத்துரை மற்றும் முத்துராஜா ஆகியோர்களை ஓட்டுனர் காவலர் ஜெயசேகர் போலீஸ் வாகனத்தில் ஏற்றிச் சென்றதாகவும், பிறகு எதிரி பாலகிருஷ்ணன் மெடிக்கல் மெமோ புத்தகத்தில் கையொப்பம் செய்து வாங்கி வர சொன்னதாக சொல்லி ஓட்டுனர் ஜெயசேகரன் ரேவதியிடம் கையெழுத்து கேட்டதாகவும், அதற்கு சாட்சி ரேவதி முதலில் மறுத்து பிறகு வேறு வழியில்லாமல் கையொப்பம் செய்து கொடுத்ததாகவும், தனது விசாரணையின் போது வாக்குமூலம் அளித்தார் என்றும், அவரது வாக்குமூலத்தை தனது விசாரணை அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளதாகவும், மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான எதிரி தாமஸ் பிரான்சிஸ், சாட்சி ப்யூலா செல்வகுமாரி மற்றும் சாட்சி ரேவதி ஆகியோர்கள் அளித்த வாக்குமூலத்தை உறுதிப்படுத்தும் விதமாக மற்ற சம்பவயிட சாட்சிகளான கதிரேசன், ராஜாராம், ரவிசங்கர் ஆகியோர் வாக்குமூலங்கள் அளித்துள்ளார்கள் என்றும், அவர்களது வாக்குமூலத்தை தனித்தனியே பதிவு செய்து தனது விசாரணை அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளதாகவும், தனது விசாரணையில் சாட்சி வேல்முருகன் என்பவர் வாய் பேச முடியாதவராகவும், காது கேட்க இயலாதவராகவும் இருந்ததால் இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 119-ன் படி அவரது வாக்குமூலத்தை பதிவு செய்து புரிந்து விளக்கிக்கூறுபவராக அவரது சைகை மொழி நன்கு தெரிந்தவரான அவரின் மனைவி இசக்கியம்மாள் உதவியுடன் அவரது வாக்குமூலத்தை எழுத்துமூலமாக பதிவு செய்து மேற்படி பிரிவின் கீழ் கூறப்பட்டுள்ளபடி அவரது வாக்குமூலத்தை வீடியோ பதிவும் செய்ததாகவும், அந்த வீடியோ பதிவை சான்றுப் பொருள் 3-ல் பதிவு செய்து தனது அறிக்கையுடன்

சமர்ப்பித்துள்ளதாகவும், மேற்படி சாட்சி வேல்முருகன் தனது வாக்குமூலத்தில் வெளியேயும், பாத்ரூமிலும் சுத்தம் செய்யும் போது அங்கு இரத்தம் காணப்பட்டதாகவும் போலீசார் இரத்தம்படிந்த துணிகள் மற்றும் லத்தியை ஒரு பேப்பரில் மடக்கி வைத்திருந்தார்கள் என்றும், சாட்சி வேல்முருகனிடம் அதை கொடுத்து வண்டியில் உட்கார வைத்து புதிதாக கட்டியுள்ள நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்று அவரிடம் 50 ரூபாய் கொடுத்து சாப்பிட அனுப்பிவிட்டதாகவும் சைகை மொழியில் தெரிவித்தார் என்றும், அவர் மேலும் அந்த இரத்தம்பட்ட லத்தியை பார்த்ததாகவும், அது மண்வெட்டிக்கு போடுகின்ற கம்பை போன்று இருந்ததாகவும் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அவரது மனைவி பொருள் விளக்கி கூறியதன் மூலம் அவரது வாக்குமூலமானது எழுத்துமூலமாக பதிவு செய்யப்பட்டது என்றும், தனது விசாரணையில் காவலர் மகாராஜன் அவரது வாக்குமூலத்தில் 20.06.2020-ம் தேதி காலை 08.00 மணிக்கு அவர் சாத்தான்குளம் காவல்நிலைய பணிக்காக சென்று Sentry பதிவேட்டில் அவரது வருகையை பதிவு செய்தபோது அந்த Sentry பதிவேட்டில் காலை 06.00 மணியளவிலேயே இரண்டு கைதிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி காவல் அடைப்பு பெறுவதற்காக நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்ற விபரம் அதில் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும், ஆனால் வழக்கமாக சாத்தான்குளம் காவல்நிலையத்தில் காலை நேரத்தில் கைதிகளை அழைத்துச் சென்றால் மருத்துவமனையில் மருத்துவர்கள் இருக்கமாட்டார்கள் என்பதற்காகவும், நீதிபதி குடியிருப்புக்கு காலை நேரத்தில் செல்வது தொந்தரவாக இருக்கும் என்பதாலும், அவ்வாறு காலை நேரத்தில் அழைத்துச் செல்லமாட்டார்கள் என்றும் ஆனால் வழக்கத்திற்கு மாறாக காலை நேரத்திலேயே எதிரி முத்துராஜா, எதிரி செல்லத்துரை கைதிகளை அழைத்துச் சென்றுள்ளனர் என்றும், எதிரி முத்துராஜாவிற்கு போன் செய்து கேட்டபோது அவர் மருத்துவமனையில் பென்னிக்ஸ், ஜெயராஜ் இருப்பதாக போனில் கூறியதாகவும் தன்னிடம் வாக்குமூலம் அளித்துள்ளார் என்றும், அவரது வாக்குமூலத்தை தனது விசாரணை அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளதாகவும், தனது விசாரணையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் உறவினரான சாட்சி தாவீது என்பவர் அளித்துள்ள வாக்குமூலத்தில் 19.06.2020-ம் தேதி இரவில் அவரும், அவரது தம்பி

தேசிங்குராஜாவும் சாத்தான்குளம் காவல்நிலையம் சென்றபோது ஒரே கூட்டமாக இருந்ததாகவும், அதில் பென்னிக்சுடன் படித்த நண்பர்களான ராஜாராமன், ரவிச்சந்திரன் இருந்ததாகவும், அவர் காவல்நிலையத்திற்கு வெளியே நின்று கொண்டிருந்தபோது, காவல்நிலையத்தின் உள்ளே இருந்து அலறல் சத்தம் கேட்டதாகவும், அதனால் அவர் பென்னிக்சையும், ஜெயராஜையும் உள்ளே சென்று பார்க்கலாம் என்று முயற்சித்தபோது அங்கிருந்த காவலர்கள் அவரது சட்டையை பிடித்து வெளியே தள்ளிவிட்டதாகவும், வெளியே காத்துக்கொண்டிருந்தபோது பச்சை மட்டையால் அடிப்பது போன்று பட்டு பட்டு என்று சத்தம் கேட்டதாகவும், காவல்நிலையத்தில் உள்ளேயிருந்து பென்னிக்சும், ஜெயராஜூம் அலறிய சத்தம் கேட்டதாகவும், அந்த அலறல் சத்தம் 10.15 மணி வரை கேட்டுக் கொண்டே இருந்ததாகவும், பிறகு அவர் நள்ளிரவு 01.40 மணி வரை காத்துக்கொண்டிருந்து விட்டு கிளம்பிவிட்டதாகவும், மறுநாள் காலை ஜெயராஜூக்கும் பென்னிக்சுக்கும் இட்லி வாங்கி சென்றதாகவும், அதைக் கூட கொடுக்கவிடாமல் போலீஸ்காரர்கள் தடுத்துவிட்டதாகவும், பிறகு பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜை மருத்துவமனைக்கு அழைத்து வரும் விபரம் தெரிந்து அங்கு அவர்கள் காத்துக் கொண்டிருந்தபோது சுமார் 4, 5 போலீசார் பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜை சூழ்ந்து கொண்டு யாரையும் அருகில் வரவிடாமல் மருத்துவமனைக்குள் அழைத்துச் சென்றதாகவும், அப்படி பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் இருவரும் இடுப்பின் பின்புறமாக கை வைத்துக் கொண்டு குனிந்த நிலையில் சரியாக கூட நடக்க முடியாமல் ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து மெதுவாக நடந்ததாகவும், அப்போது பென்னிக்ஸ் அவரை பார்த்து காப்பாத்துங்க மாமா சீக்கிரம் பெயிலில் எடுங்க என கூறியதாகவும், ஜெயராஜ் அவரிடம் ரொம்ப வலிப்பதாக கூறியதாகவும், மருத்துவமனையில் நடந்த இதர விபரங்களையும் பிறகு தான் நடத்திய பிரேத விசாரணையில் பங்கேற்ற விபரம் பற்றியும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் உடலில் இருந்த காயங்கள் பற்றியும் அதை தான் குறித்துக் கொண்டது பற்றியும் பிரேத விசாரணை பற்றிய இதர விபரங்களை கூறியும் வாக்குமூலம் அளித்தார் என்றும், அவரது வாக்குமூலத்தை தனது விசாரணை அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளதாகவும், மேற்படி சாட்சி தாவீதுடன் சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு வெளியேயும்

மருத்துவமனையிலும் இருந்த மற்றொரு சாட்சியான தேசிங்குராஜா என்பவரது வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், அவரும் தனது வாக்குமூலத்தில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகிய இருவரையும் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் இருந்து சாத்தான்குளம் மருத்துவமனைக்கு காவல்நிலைய போலீசார் அழைத்து வந்த விபரத்தையும், அவர்களுக்கு இரத்தக்கொதிப்பு அளவை பொறுத்து எடுக்கப்பட்ட பரிசோதனைகள் பற்றியும், பிறகு ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோரை சாத்தான்குளம் நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்ற விபரத்தையும், அவர்களை கோவில்பட்டி கிளைச்சிறைக்கு அழைத்துச் செல்ல வாடகை கார் ஏற்பாடு செய்து தந்த விபரத்தையும் கூறி வாக்குமூலம் அளித்தார் என்றும், அவரது வாக்குமூலத்தையும் தனியே பதிவு செய்து அதனை தனது விசாரணை அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளதாகவும், இரண்டு பிரேத விசாரணை சாட்சிகளான பொன்சேகர் மற்றும் வினோத்குமார் பிரேத விசாரணையில் பங்கேற்றது பற்றியும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்களது உடலில் இருந்த காயங்கள் பற்றியும் அதை தான் குறித்துக் கொண்டது பற்றியும் பிரேத விசாரணை பற்றிய இதர விபரங்களை கூறியும் வாக்குமூலம் அளித்தார்கள் என்றும், அவற்றையும் தனித்தனியே பதிவு செய்து தனது விசாரணை அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளதாகவும், பிறகு ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை போலீசார் 20.06.2020–ம் தேதியன்று காலை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோது அவர்களை பார்த்த அவர்களது உறவினர்களான சாட்சி ஜெயா மற்றும் சாட்சி ஜோசப் ஆகியோர்கள் 20.06.2020–ம் தேதி காலை 08.00 மணியளவில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ்சை சாத்தான்குளம் காவல்நிலைய போலீசார் சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்த விபரத்தையும், அவர்களிடம் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர் போலீசார் அவர்களை அடித்த விபரத்தையும் அவர்கள் அணிந்திருந்த உடைகளின் பின்னால் இரத்தக்கறைகள் காணப்பட்டது பற்றியும் வாக்குமூலம் அளித்துள்ளார்கள் என்றும், அதில் சாட்சி ஜோசப் என்பவர் அவரது வாக்குமூலத்தில் போலீசார் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை கோவில்பட்டி சிறைக்கு அழைத்து செல்ல ஒரு வாடகை கார் பிடித்துத் தரும்படி கூறியதாகவும், அவர்கள் அவ்வாறு வாடகை கார் ஏற்பாடு செய்து தந்ததாகவும், அந்த

கார் சீட்டில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்களின் இரத்தம் படிந்து விடக்கூடாது என்பதற்காக அவர்கள் போர்வை வாங்கி கொடுத்த விபரம் பற்றியும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இறந்த பிறகு அந்த போர்வை மீண்டும் பெற்றுக்கொண்ட விபரத்தை பற்றியும் வாக்குமூலம் அளித்துள்ளார்கள் என்றும், அவர்களது வாக்குமூலத்தை தனித்தனியே பதிவு செய்து தனது விசாரணை அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளதாகவும், தனது விசாணையில் ஜெயராஜின் மனைவியும், பென்னிக்சின் தாயாருமான செல்வராணி மேற்படி ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகிய இருவரும் நல்ல ஆரோக்கியத்துடனும், எந்த உடல் உபாதையும் இன்றி வீட்டில் சாப்பிட்டு சென்றதாகவும், பென்னிக்ஸ் ஒரு கபடி விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்ளும் நபர் என்றும், அவர் எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பார் என்றும், மேற்படி இருவருக்கும் இறப்பை ஏற்படுத்தக்கூடிய நோய் எதுவும் இல்லை என்றும், வாக்குமூலம் அளித்துள்ளார் என்றும், அவர் மேலும், பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் ஆகியோரின் உடைகளை பென்னிக்சின் நண்பரிடம் கொடுத்து அனுப்பிய விபரத்தை குறித்து வாக்குமூலம் அளித்துள்ளார் என்றும், இரத்தம்படிந்த ஒரு சாம்பல் மற்றும் சிவப்பு நிறம் கலந்த பெட்சீட்டையும், ஒரு இரத்தம்படிந்த மஞ்சள் நிற சட்டையையும் தனது விசாரணையின்போது தன்னிடம் அளித்து அவை ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அணிவதற்காக கொடுத்து அனுப்பியது என்றும், அந்த பெட்சீட்டானது அவர்கள் சென்ற காரின் சீட்டில் இரத்தக்கறை படியக்கூடாது என்ற காரணத்திற்காக கொடுத்ததாகவும் கூறினார் என்றும், அவற்றையும் விசாரணையில் கைப்பற்றி அவரது வாக்குமூலத்தை தனியே பதிவு செய்து அதை தன்னுடைய விசாரணை அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளதாகவும், தனது விசாரணையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை சாத்தான்குளம் மருத்துவமனையில் பரிசோதித்த மருத்துவர் வினிலா மற்றும் அவருக்கு உதவியாக இருந்த செவிலியர்கள் அனிஷா டெர்மிட் மற்றும் கிருபை கிரோனேப்பு ஆகியோரின் வாக்குமூலத்தையும் தனித்தனியே பதிவு செய்து அதை தன்னுடைய விசாரணை அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளதாகவும், மேலும் தனது விசாரணையில் சாத்தான்குளம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் பணியில் இருந்த கற்றறிந்த நீதித்துறை நடுவர் அவர்களிடம் அவர்களது காவல் அடைப்பு

உத்தரவு பற்றியும் மற்றும் இதர விபரங்கள் பற்றியும் வாக்குமூலம் பதிவு செய்து அதை தன்னுடைய விசாரணை அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளதாகவும், மேலும் தனது விசாரணையில் நீதிமன்ற காவல் அடைப்பு பெற்ற பின்னர் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோரை சாத்தான்குளம் நீதிமன்றத்தில் இருந்து கோவில்பட்டிகிளைச்சிறைக்கு அழைத்துச் செல்ல ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோரின் உறவினர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட தனியார் காரில் ஓட்டுனரான நாகராஜன் என்பவரது வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், அவர் தனது வாக்குமூலத்தில் 20.06.2020-ம் தேதி காலை 08.00 மணியளவில் பென்னிக்சின் நண்பரான சங்கரலிங்கம் போன் செய்து வாடகைக்கு கார் கேட்டதாகவும், அதன்பேரில் அவர் TN-92 9302 என்ற பதிவெண் கொண்ட செரோலெட் பீட் காரை எடுத்துக்கொண்டு சாத்தான்குளம் மருத்துவமனைக்கு சென்றதாகவும், பின்பு அங்கிருந்து நீதிமன்றத்திற்கு சென்று அங்கு காத்துக் கொண்டிருந்தபோது ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை சாத்தான்குளம் காவல்நிலைய போலீசார் அழைத்து வந்ததாகவும், போலீசார் வண்டி எங்கே என்று கேட்டதாகவும், அதனால் சாட்சி நாகராஜன் வண்டியை எடுத்துக் கொண்டு சென்றதாகவும், பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜிற்கு பின்பகுதியில் இரத்தம் அதிகமாக வந்துள்ளது தெரிந்ததால் பென்னிக்சின் மாமா கொடுத்த போர்வையை அவரது பின்பக்க சீட்டில் விரித்த பிறகு ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இருவரும் காரின் பின்பக்க சீட்டில் அமர்ந்தார்கள் என்றும், அவர்கள் பக்கத்தில் எதிரி முத்துராஜா, சாட்சி நாகராஜின் பக்கத்தில் எதிரி செல்லத்துரையும் அமர்ந்து கொண்டார் என்றும், சாத்தான்குளம் நீதிமன்றத்தில் இருந்து கோவில்பட்டி கிளைச்சிறைக்கு சென்று அங்கு பென்னிக்சையும், ஜெயராஜையும் இறக்கிவிட்டதாகவும், வாக்குமூலம் கொடுத்துள்ளதாகவும், அதை பதிவு செய்து தனது விசாரணை அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளதாகவும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்கள் கோவில்பட்டி கிளைச்சிறைக்கு நாகராஜன் என்பவரது காரில் அழைத்துச் செல்லப்பட்டபோது அவர்களது உடலில் இருந்து வெளிவந்து காரின் பின்பக்க சீட்டில் ஏற்பட்ட இரத்தக்கறை படிந்த கார் சீட்டின் கவரையும், பிறகு வட்டார தடயவியல் துறையினர் கைப்பற்றினார்கள் என்றும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர் கோவில்பட்டி

கிளைச்சிறையில் அடைக்கப்பட்ட பின்னர் அவர்களுடன் ஒரே சிறை அறையில் அடைக்கப்பட்டிருந்த மற்ற கைதிகளான தமிழ்செல்வன், லட்சுமணன், கருப்புசாமி, செந்தில், கணேசமூர்த்தி, சுனில் ஆகியோரது வாக்குமூலங்களையும் பதிவு செய்து தனது விசாரணை அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ளதாகவும், பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் ஆகியோருடன் ஒரே சிறையில் அடைக்கப்பட்டிருந்த கைதி தமிழ்செல்வன் என்பவர் அவரது வாக்குமூலத்தில் பென்னிக்சிடம் என்ன நடந்தது என்று கேட்டதாகவும், அதற்கு பென்னிக்ஸ் செல்போன் கடை வைத்திருப்பதாகவும் அதில் ஏற்பட்ட பிரச்சனையால் போலீசார் அவரது அப்பாவையும், அவரையும் காவல்நிலையத்தில் வைத்து அடித்ததாக சொன்னதாகவும், சிறையில் இருந்தபோது ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் பின்பக்கம் நிற்காமல் நீர் வடிந்து கொண்டிருந்ததாகவும், முதல் நாள் லேசான ஈரம் தான் இருந்தது என்றும், மூன்றாம் நாள் தான் அதிகமாக நீர் வடிந்தது என்றும், அவர்களது பின்புறத்தில் இருந்து வடிந்த அந்த நீர் தண்ணீர் போன்று மஞ்சளாகவும், சிவப்பு நிறம் கலந்தும், அவர்களது பட்டக்சிலும், பின்தொடைகளும் தண்ணீரில் நனைத்தது போன்று பின்பக்கத்தில் ஒட்டிக் கொண்டிருந்ததாகவும், அதிலிருந்து மீன் மார்க்கெட்டில் அடிக்கும் துர்நாற்றத்தை போன்று கவுச்சி வாடை வீசியபடி இருந்ததாகவும், சிறையில் அடைத்த முதல் இரண்டு நாட்கள் அவரால் கொஞ்சம் பக்கவாட்டில் இருந்த சுவரைப் பிடித்தும், கழிவறை சுவற்றை பிடித்தும் நடக்க முடிந்தது என்றும், அனைத்து கைதிகளையும் மூன்று வேளை சாப்பிடும் போது வரிசையாக அமரச் சொல்லி எண்ணும் போது கூட பென்னிக்சாலும், அவரது அப்பாவாலும் தரையில் அமர முடியாமல் பக்கவாட்டிலுள்ள சுவற்றை பிடித்தபடியே நிற்பார்கள் என்றும், மூன்றாவது நாள் பென்னிக்சால் கொஞ்சம் கூட நடக்க முடியாமலும், நிற்க முடியாமலும், படுக்க முடியாமலும், சாப்பிடும் போது கூட யானையை போன்று இரண்டு கைகளையும் தரையில் ஊன்றியும், இரண்டு கால் முட்டிகளையும் தரையில் முட்டி போட்டுக் கொண்டும், மிகவும் சிரமப்பட்டு கொஞ்சமாக சாப்பிட்டு, மிச்சம் வைத்துவிடுவார் என்றும் சாட்சி தமிழ்செல்வன் பென்னிக்சுடன் சிறையில் இருந்த நாட்களில் அந்த சிறையில் இருந்த காவலர்கள் யாரும் பென்னிக்சையும், ஜெயராஜையும் அடிக்கவில்லை வேறு எதுவும் செய்யவுமில்லை

என்று வாக்குமூலம் அளித்தார் என்றும், அவரது வாக்குமூலத்தை விளக்கமாக பதிவு செய்து தனது அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ளதாகவும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்களுடன் ஒரே சிறை அறையில் அடைக்கப்பட்டிருந்த மற்றொரு கைதியான லட்சுமணன் தன்னிடம் அளித்த வாக்குமூலத்தில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்கள் சிறையில் ஒரு மூலையிலும், சாட்சி லெட்சுமணன் ஒரு மூலையிலும் படுத்திருந்ததாகவும், பென்னிக்ஸ மற்றும் ஜெயராஜ் ஆகியோர்கள் உடம்பில் நிறைய காயங்கள் இருந்ததாகவும், அவர்கள் வலி தாங்க முடியாமல் அங்கும் இங்கும் நடந்து இடம் மாறிக் கொண்டிருந்ததால் அவர்களுக்கு ஒரு பக்கமாக இடம் ஒதுக்கிவிட்டதாகவும் சாட்சி லட்சுமணன் பென்னிக்சிடம் கேட்டபோது போலீஸ்காரர்கள் அடித்ததாக கூறியதாகவும், எதற்கு அடித்தார்கள் என்று கேட்டபோது அவர்கள் செல்கடை வைத்திருப்பதால் அந்த கடையை அடைக்க லேட் ஆகிருச்சு என்று அடித்ததாக பென்னிக்ஸ் அவரிடம் கூறியதாகவும், பென்னிக்சின் குண்டியில் இருந்து மஞ்சள் மற்றும் சிவப்பு நிறம் கலந்த சலமாக நிற்காமல் வடிந்து கொண்டிருந்தது என்றும், பென்னிக்ஸ் அணிந்திருந்த லுங்கி அந்த சலத்தால் நனைந்து ஈரமாக இருக்கும் என்றும், அவற்றை அவர் அவ்வப்பொழுது மாற்றிக் கொண்டே இருப்பார் என்றும், டாக்டர்கள் பார்த்து காயத்தை துடைக்கும் பொழுது பென்னிக்ஸ் வலி தாங்க முடியாமல் கத்தினார் என்றும், மேலும் பென்னிக்ஸ் சிறை கைதிகளை உறங்கவிடாத அளவிற்கு எம்மா எம்மா என்று கத்திக்கொண்டும், மூச்சுவிட முடியாமல் திணறிக் கொண்டும், தனது மார்பு பகுதியை மூச்சுவிடும் போது உயர்த்தி உயர்த்தி சிரமப்பட்டு மூச்சுவிடுவார் என்றும், அவரது திணறல் சத்தம் சிறை கைதிகளை தூங்கவிடாமல் கேட்டுக் கொண்டே இருக்கும் என்றும், பென்னிக்சால் கீழே அமர முடியாமல் குழந்தையை போல் முட்டி போட்டுக் கொண்டும், தனது கையையும், தலையையும் தரையில் வைத்துக் கொண்டு இடுப்பு பகுதியை மேற்பக்கமாக தூக்கிக் கொண்டு முட்டாங்கால் போட்டு படுத்துக் கிடப்பார் என்றும், சற்று நேரம் கழித்து பக்கவாட்டில் படுத்துக் கொள்வார் என்றும், பிறகு குப்புற படுத்துக் கொள்வார் என்றும், திங்கள் கிழமை இரவு சாப்பிட்ட சுமார் ஒன்றரை மணி நேரம் கழித்து பென்னிக்ஸ் நெஞ்சு வலிக்குது என்று கத்த ஆரம்பித்துவிட்டதாகவும், பென்னிக்ஸ் மற்றும்

ஜெயராஜ் ஆகியோர் சிறையில் பட்ட சிரமங்களை பற்றி கூறி வாக்குமூலம் அளித்தார் என்றும், சாட்சி லட்சுமணன் அவரது வாக்குமூலத்தில் பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் சிறையில் இருந்த மூன்று நாட்களும் சிறையின் ஜெயிலரோ மற்ற சிறையில் பணியிலிருந்த காவலர்களோ பென்னிக்சையும், அவரது அப்பாவான ஜெயராஜையும் எதுவும் துன்புறுத்தவில்லை என்று வாக்குமூலம் அளித்தார் என்றும், அவரது வாக்குமூலத்தை விளக்கமாக பதிவு செய்து தனது அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ளதாகவும், அதே போன்று பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் ஆகியோருடன் ஒரே சிறை அறையில் அடைக்கப்பட்டிருந்த மற்றொரு கைதியான கருப்புசாமி என்பவரும் பென்னிக்ஸ் போலீஸ் அடித்தார்கள் என்றும், பேச முடியவில்லை என்றும் கூறிவிட்டு படுத்துக் கொண்டதாகவும், கருப்புசாமி பென்னிக்சிடம் இரண்டு பேரையும் ஒன்னாத்தான் அடிச்சிருக்காங்களா ஒரே கேஸா என்று கேட்டதற்கு அவர் ஆமாம் என்று கூறியதாகவும் சாட்சி கருப்புசாமி எந்த ஸ்டேசனில் வைத்து அடித்தார்கள் என்று கேட்டதற்கு பென்னிக்ஸ் சாத்தான்குளம் போலீஸ் ஸ்டேசனில் வைத்து அடித்ததாக தனது விசாரணையின் போது வாக்குமூலம் அளித்ததாகவும், அவரது வாக்குமூலத்தை விளக்கமாக பதிவு செய்து தனது அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ளதாகவும், கோவில்பட்டி கிளைச்சிறையில் கண்காணிப்பாளரான சங்கர் பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் ஆகியோரது உடம்பில் இருந்த காயங்களை பற்றியும், அவர்களுக்கு ஏற்பட்ட உடல்நலமின்மையை பற்றியும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்கள் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் அனுமதித்தது பற்றியும், அவர்கள் இறந்த பின்னர் கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தது பற்றியும் வாக்குமூலம் அளித்துள்ளார் என்றும், அவரது வாக்குமூலத்தை விளக்கமாக பதிவு செய்து தனது அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ளதாகவும், அதன்பிறகு கோவில்பட்டி கிளைச்சிறையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்களின் காயங்களுக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் வெங்கடேஷ் அவர்களின் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், அவர் பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜை பரிசோதனை செய்தது பற்றியும், அவர்களது இரு புட்டங்களிலும் பல்வேறு கன்றிய காயங்கள் காணப்பட்டதாகவும், அந்த காயங்களின் மேலுள்ள தோல் உரிந்து அதிலிருந்து திரவம் வெளியேறிக்

கொண்டிருந்ததாகவும், காயத்தை பற்றியும் கேட்டபோது அவர்கள் அந்த காயங்கள் சாத்தான்குளம் போலீசார் அடித்ததால் ஏற்பட்டதாக கூறியதாகவும், தன்னிடம் வாக்குமூலம் அளித்தார் என்றும், அவரது வாக்குமூலத்தை விளக்கமாக பதிவு செய்து தனது அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ளதாகவும், பென்னிக்ஸ் கோவில்பட்டி கிளைச்சிறையில் இருந்தபோது அவர் உடல்நலம் பாதிப்பு பற்றி தெரிவித்த பின்னர் அவரை கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று வழிக்காவல் அலுவல் புரிந்து மருத்துவமனையில் அனுமதித்த சிறைக் காவலர்கள் மாரிமுத்து மற்றும் வேல்முருகன் ஆகியோர்களது வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்ததாகவும், அவர்களது வாக்குமூலத்தை விளக்கமாக பதிவு செய்து தனது அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ளதாகவும், ஜெயராஜ் கோவில்பட்டி கிளைச்சிறையில் இருந்தபோது அவர் உடல்நலம் பாதிப்பு பற்றி தெரிவித்த பின்னர் அவரை கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று வழிக்காவல் அலுவல் புரிந்து மருத்துவமனையில் அனுமதித்த சிறைக் காவலர்கள் அழகர்சாமி மற்றும் செந்தூர்ராஜா ஆகியோரது வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்ததாகவும், அவர்களது வாக்குமூலத்தை விளக்கமாக பதிவு செய்து தனது அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ளதாகவும், அவ்வாறு ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்களை கோவில்பட்டி கிளைச்சிறையில் இருந்து கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற ஆட்டோ ஓட்டுனரான மாடசாமி என்பவரையும் விசாரித்து அவரது வாக்குமூலத்தையும் பதிவு செய்ததாகவும், அவரது வாக்குமூலத்தையும் தனது விசாரணை அறிக்கையுன் தாக்கல் செய்துள்ளதாகவும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர் கோவில்பட்டி கிளைச்சிறையில் அடைக்கப்பட்டிருந்து, உடல்நலம் பாதித்த பின்பு கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது அவர்களுக்கு சிகிக்சை அளித்த மருத்துவர் பாலசுப்பிரமணியன் என்பவரது வாக்குமூலத்தையும் விளக்கமாக பதிவு செய்து தனது அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ளதாகவும், பின்னர் பென்னிக்சின் பிரேதத்தை திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்த காவலர் கருப்பசாமி அந்த அலுவல்பணி பற்றியும், மருத்துவர்கள் பாதுகாத்து வைத்திருந்த பென்னிக்சின் உடல் உள்உறுப்பு மாதிரிகளை

(Visera) பெற்று திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்த அலுவல்பணி பற்றியும், பென்னிக்சின் பிரேதத்தின் மீது இருந்து வெள்ளை நிறத்தில் கருப்பு நிற கோடு போட்ட இரத்தம் படிந்திருந்த கைலி ஒன்றையும், ஊதா நிறத்தில் நீலம் வெள்ளை கோடு போட்ட கட்டம் போட்ட முழுக்கை சட்டை ஆகியவற்றையும் நீதிமன்றத்தில் ஒப்படைத்தது பற்றியும், பிறகு மருத்துவர்கள் அளித்த சீல் செய்யப்பட்ட கொரோனா பரிசோதனை அறிக்கை மற்றும் இறுதி பிரேதவிசாரணை அறிக்கை அடங்கிய தபால் உறையை உரிய நடைமுறையை பின்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைத்தது பற்றியும் கூறிய வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், பின்னர் ஜெயராஜின் பிரேதத்தை திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்த காவலர் சிவக்குமார், அந்த அலுவல்பணி பற்றியும், மருத்துவர்கள் பாதுகாத்து வைத்திருந்த ஜெயராஜின் உடல் உள்உறுப்பு மாதிரிகளை (Visera) பெற்று திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்த அலுவல்பணி பற்றியும், ஜெயராஜின் பிரேதத்தின் மீது இருந்த இரத்தம்படிந்த வெள்ளை நிற அரைக்கை சட்டையையும், சிமெண்ட் வெள்ளை மற்றும் கருப்பு நிறங்கள் கலந்த கட்டம் போட்ட லுங்கி ஆகியவற்றையும் நீதிமன்றத்தில் ஒப்படைத்தது பற்றியும், பிறகு மருத்துவர்கள் அளித்த சீல் செய்யப்பட்ட கொரோனா பரிசோதனை அறிக்கை மற்றும் இறுதி பிரேதவிசாரணை அறிக்கை அடங்கிய தபால் உறையை உரிய நடைமுறையை பின்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைத்தது பற்றியும் அளித்த வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், அதன்பின்னர் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்களது பிரேதங்களின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவக்குழுவை சேர்ந்த மருத்துவர்களான மருத்துவர் செல்வமுருகன், மருத்துவர் பிரசன்னா, மருத்துவர் சுதன் ஆகியோர்களது வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்ததாகவும், அவர்கள் தங்களது வாக்குமூலத்தில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோரின் பிரேதங்களின் மீது செய்யப்பட்ட பிரேத பரிசோதனையை பற்றியும், அது தொடங்கி முடிக்கப்பட்ட நேரம் பற்றியும், பிரேதம் காணப்பட்ட தன்மை பற்றியும், பிரேதத்தில் இருந்த காயங்கள் பற்றியும், பிரேதவிசாரணை மேற்கொண்டு மாதிரிகள் சேகரிக்க செய்த நடைமுறைகள் பற்றியும் வாக்குமூலம் அளித்தார்கள் என்றும், அவர்கள் பிரேதங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட

உள்உறுப்புகளின் மாதிரிகளை இரசாயன பரிசோதனை செய்து பார்த்ததில் எந்தவித நச்சுப்பொருளும் காணப்படவில்லை என்றும், அவர்களது பிரேதங்களின் தொண்டையில் இருந்து எடுக்கப்பட்ட கொரோனா பரிசோதனை மாதிரி தடவல் சேகரித்தது பற்றியும், அந்த கொரோனா பரிசோதனையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு எவ்வித கொரோனா நோய்தொற்றும் இல்லை என்று கூறி அறிக்கை பெற்றது பற்றியும் வாக்குமூலம் அளித்தார்கள் என்றும், அவர்கள் அதன் இறுதியறிக்கையை பெற்ற பின்னர் இறுதி பிரேதபரிசோதனை அறிக்கையை வழங்கியது பற்றியும், மருத்துவக்குழுவினர் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்களது உடம்பில் காணப்பட்ட காயங்களின் பின் விளைவுகளினால் இறந்திருக்கலாம் என்றும், அந்த காயங்கள் அவர்கள் கீழே விழுந்து உருண்டு புரளும் பட்சத்தில் ஏற்பட வாய்ப்பில்லை என்றும், அந்த காயங்கள் மழுங்கலான பொருட்களால் பலம் கொண்டு தாக்கும் பொழுது ஏற்பட்டதை போன்று காணப்பட்டதாக கூறி வாக்குமூலம் அளித்தார்கள் என்றும், அந்த மூன்று மருத்துவர்களின் வாக்குமூலங்களை தனித்தனியே விளக்கமாக பதிவு செய்து தனது விசாரணை அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளதாகவும், பிரேத பரிசோதனையின்போது பிரேத பரிசோதனையினை புகைப்படம் மற்றும் வீடியோ பதிவு செய்த கோபி என்பவரது வாக்குமூலத்தையும் விளக்கமாக பதிவு செய்ததாகவும், அவர் பிரேத பரிசோதனையை புகைப்படம் எடுத்தது பற்றியும், அவ்வாறு எடுக்கப்பட்ட புகைப்படம் மற்றும் வீடியோ பதிவுகள் அடங்கிய மெமரி கார்டினை உடனடியாக தன்னிடம் ஒப்படைத்த விபரம் பற்றியும் வாக்குமூலம் அளித்துள்ளார் என்றும், அவரது வாக்குமூலத்தை விளக்கமாக பதிவு செய்து தனது விசாரணை அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளதாகவும், சாத்தான்குளம் காவல்நிலையத்தில் சி.சி.டி.வி பதிவுகள் அடங்கிய hard disk–ஐ கைப்பற்ற உதவியாக இருந்த பொறியாளர் பிஜூ என்பவரது அவரது வாக்குமூலத்தை விளக்கமாக பதிவு செய்து தனது விசாரணை அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளதாகவும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்கள் இறந்தபின்பு கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் கு.வி.மு.ச பிரிவு 176(1–A)(i)ன் கீழ் குற்ற எண்கள் 649/2020, 650/2020 ஆகிய வழக்குகளில் அப்போதைய விசாரணை அதிகாரியாக இருந்த ஆய்வாளர் சுதேசன்

அவர்களின் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், அவரது வாக்குமூலத்தில் இருந்து அவர் தனது விசாரணை முடிக்கப்படும் வரையிலும் காவல்துறை சார்பாக எவ்வித புலன்விசாரணையும் செய்யவில்லை என்பது தெரிய வந்தது என்றும், அவரது வாக்குமூலத்தை தனது விசாரணை அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளதாகவும், தனது விசாரணையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகிய இருவரது மரணம் தொடர்பாக விசாரிக்கப்பட்ட சாட்சியங்களின் வாக்குமூலங்கள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருட்களின் அடிப்படையில் தனது விசாரணை அறிக்கையை இரு தலைப்புகளின் கீழ் பதிவு செய்துள்ளதாகவும், மேற்படி ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோரின் இறப்பிற்கு வழிவகுத்த சூழ்நிலைகள் என்ற ஒரு தலைப்பிலும், அவர்களது மரணத்திற்கான காரணம் என்ற மற்றொரு தலைப்பின் கீழ் முடிவு செய்து எனது விசாரணை அறிக்கையை சமர்ப்பித்துள்ளதாகவும், விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையிலும், சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருட்களின் அடிப்படையிலும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோரின் இறப்பிற்கு வழிவகுத்த சூழ்நிலைகளையும் அவர்களது மரணத்திற்கான காரணங்களாக அமைந்த நிகழ்வுகளையும் பின்வருமாறு பட்டியலிடுவதாகவும் தெரிவித்துள்ளார்.

6.50.1 முதலாவதாக 19.06.2020–ம் தேதி இரவு சுமார் 7.30 முதல் 8.00 மணிக்குள் ஜெயராஜை சாத்தான்குளம் போலீசார் சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளதாக சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்து தெரிய வருகிறது என்றும்

6.50.2. அவ்வாறு அழைத்துச் செல்லும்போது ஜெயராஜ் எவ்வித மறுப்பும் தெரிவிக்காமல் சாத்தான்குளம் போலீசார் அழைத்ததற்கு ஒத்துழைத்து அவர்களது வாகனத்தில் ஏறிச்சென்றுள்ளதாக சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்து தெரியவருகிறது என்றும்

6.50.3. அவ்வாறு ஜெயராஜை அழைத்துச் செல்லும் விபரம் தெரிந்து கொண்டு அவரது மகன் பென்னிக்ஸ் இருசக்கரவாகனத்தில் சாத்தான்குளம் போலீசாரின் வாகனத்தை

பின்தொடர்ந்து சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு சென்றுள்ளதாக சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்து தெரிய வருகிறது என்றும்

6.50.4. அவ்வாறு அழைத்துச் செல்லப்பட்ட ஜெயராஜை காவல்நிலையத்தில் வைத்து சாத்தான்குளம் காவல்நிலைய போலீசார் தாக்கியுள்ளதாக சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்து தெரிய வருகிறது என்றும்

6.50.5. அதனை பார்த்த அவரது மகன் பென்னிக்ஸ் அந்த தாக்குதலை தடுக்க முயற்சித்துள்ளதாக சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்து தெரிய வருகிறது என்றும்

6.50.6. இதனால் பிரச்சனை ஏற்பட்டு ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகிய இருவரையும் சாத்தான்குளம் போலீசார் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் வைத்து ஆய்வாளரான எதிரி ஸ்ரீதரின் தூண்டுதலின் பேரில் உதவி ஆய்வாளர்களான எதிரிகள் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ், பால்துரை ஆகியோரும், மற்ற காவலர்களான எதிரிகள் முருகன், தாமஸ், முத்துராஜா, சாமத்துரை, செல்லத்துரை, வெயிலுமுத்து ஆகியோர்கள் எதிரிகள் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ் தாக்குவதற்கு ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் கை, கால்களை பிடித்ததன் மூலம் உதவி செய்து எதிரி பாலகிருஷ்ணன் தாக்குவதற்கு உதவியாகவும், தொடர்ந்து அவர்களில் சிலர் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை பிடித்துக் கொள்ளவும் மற்றவர்கள் தாக்கவும், அவ்வாறு மாற்றி மாற்றி பிடித்து தாக்கியுள்ளதாக சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்து தெரிய வருகிறது என்றும்

6.50.7. அவ்வாறு எதிரிகள் முருகன், தாமஸ், முத்துராஜா, சாமதுரை, செல்லத்துரை, வெயிலுமுத்து ஆகியோர்கள் தாக்குவதற்கு உதவி செய்து பின்னர் அவர்களும் தாக்கியுள்ளதாக சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்து தெரிய வருகிறது என்றும்

6.50.8. அவ்வாறு பலமுறை மாற்றி மாற்றி நீண்ட நேரத்திற்கு கடுமையான முறைகளை பின்பற்றியும், சுவற்றிற்கு இடையே ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்களின் ஆடைகளை கழற்றச் செய்த பிறகு நிற்க வைத்து லத்தியால் அடித்தும், காவல்நிலைய டேபிள் மீது படுக்க வைத்து கை, கால்களை பிடித்துக் கொண்டு தாக்கவும் செய்துள்ளதாக சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்து தெரிய வருகிறது என்றும்

6.50.9. அவ்வாறு எதிரிகளால் தாக்கப்பட்டதில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்கள் கடுமையாக காயமடைந்தும், அவர்களது இரத்தம் சாத்தான்குளம் காவல்நிலையத்தின் உள்ளே பல இடங்களில் சிதறப்பட்டுள்ளதும், அவ்வாறு சிதறியதில் ஏற்பட்ட இரத்தக்கறைகளை பென்னிக்சை வைத்தே எதிரிகள் துடைக்கச் செய்துள்ளதாக சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்து தெரிய வருகிறது என்றும்

6.50.10. அவ்வாறு 19.06.2020–ம் தேதி இரவு 7.30 மணி முதலே சாத்தான்குளம் காவல்நிலையத்தில் வைத்து தாக்கப்பட்ட ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை காயங்களுடன் வெளியே அனுப்பினால் அவர்களது உறவினர்களால் பிரச்சனை ஏற்படும் என்ற காரணத்தினால் அவர்கள் இருவர் மீதும் சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 என்ற வழக்கில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகிய இருவரும் 19.06.2020–ம் தேதி இரவு 9.00 மணிக்கு அவர்களது கடையை மூடச் சொன்னபோது அதனை மறுத்து தரையில் விழுந்து புரண்டதில் தான் அவர்கள் இருவருக்கும் பின்பகுதியில் ஊமைக் காயம் ஏற்பட்டதாக பொய்யான விபரத்தை கூறி உண்மையில் எதிரிகளால் ஏற்படுத்தப்பட்ட காயங்களை மறைக்க வேண்டுமென்று ஒரு பொய்யான புகாரை எதிரி ஸ்ரீதரின் அறிவுறுத்தலின்படியும், தூண்டுதலின்படியும் எதிரி முருகனிடம் பெற்றும், அதில் அறிவேன் சாட்சியாக எதிரி முத்துராஜாவிடம் கையொப்பம் பெற்றும் ஒரு பொய்யான முதல்தகவல் அறிக்கையினை பதிவு செய்து அந்த பொய் வழக்கின் அடிப்படையில் நீதிமன்ற காவலுக்கு ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை உட்படுத்தியுள்ளதாக சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்து தெரிய வருகிறது என்றும்

6.50.11. அவ்வாறு பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டு சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்கள் இருவரின் பின்பக்கத்திலும் இரத்தக்கசிவு ஏற்படுமளவிற்கும், அந்த இரத்தக்கசிவானது அவர்களின் ஆடையில் ஊறி வெளியேறும் அளவிற்கு ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகிய இருவருக்கும் காயங்கள் இருந்ததாக சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்து தெரிய வருகிறது என்றும்

6.50.12. அவ்வாறு அவர்களிடம் காணப்பட்ட காயங்களை சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் மருத்துவர் அவரது மருத்துவ ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளார் என்றும்

6.50.13. இதன்மூலம் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகிய இருவருக்கும் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் இருந்து காலை நேரத்தில் சாத்தான்குளம் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோதே கடுமையான காயங்கள் இருந்தது சாட்சியங்களின் விசாரணையின் போதும், மருத்துவ ஆவணங்களில் இருந்தும் தெரிய வருகிறது என்றும்

6.50.14. ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோது அவர்களது காயங்களை மறைப்பதற்காக அவர்களது உறவினர்களிடமிருந்தே மாற்று உடைகளை எதிரிகள் பெற்றிருப்பதும், அந்த உடைகளை கொடுத்து ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை உடை மாற்ற செய்திருப்பதும், சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்தும், சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் இருந்து கைப்பற்றப்பட்ட சி.சி.டி.வி பதிவுகளிலிருந்தும் தெரிய வருகிறது. அந்த சி.சி.டி.வி பதிவுகளையும் தனது விசாரணை அறிக்கையுடன் அ.சா.பொ.3–ல் பதிவேற்றம் செய்து சமர்ப்பித்துள்ளார் என்றும்

6.50.15. அவ்வாறு சாத்தான்குளம் அரசு மருத்துவமனையின் மருத்துவரிடம் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை ஆஜர்படுத்திய பிறகு அவர்கள் இருவரையும் நீதிமன்ற காவல் வேண்டி காலை நேரத்திலேயே சாத்தான்குளம் நீதித்துறை நடுவர் முன்னிலையில் ஆஜர்படுத்தியிருப்பதும் பொய்யாக பதியப்பட்ட வழக்கின் அடிப்படையில் நீதிமன்ற காவல் உத்தரவு பெற்றிருப்பதும் சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்தும், சாத்தான்குளம் நீதித்துறை நடுவர் நீதிமன்ற ஆவணங்களில் இருந்தும் தெரிய வருகிறது என்றும்,

6.50.16. அவ்வாறு நீதிமன்ற காவல் உத்தரவு பெற்ற பிறகு ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை காவல் வாகனத்தில் சிறைக்கு அழைத்துச் செல்லாமல் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் உறவினர்களிடமே வாடகை கார் ஒன்றை ஏற்பாடு செய்ய சொல்லி அந்த காரில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்களை எதிரிகள் முத்துராஜா, செல்லத்துரை ஆகியோர் கோவில்பட்டி கிளைச்சிறைக்கு அழைத்துச் சென்றுள்ளது சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்து தெரிய வருகிறது என்றும்,

6.50.17. அவ்வாறு கோவில்பட்டி கிளைச்சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு சிறையில் அடைக்கப்படுவதற்கு முன்பே ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் உடம்பில் காயங்கள் காணப்பட்டது சிறை ஆவணங்களில் எழுதப்பட்டுள்ள குறிப்புகளில் இருந்து தெரிய வருகிறது என்றும், அது தொடர்பான சிறை ஆவணங்களை எனது அறிக்கையுடன் இணைப்பு D ஆக தாக்கல் செய்துள்ளதாகவும், அதில் பென்னிக்சுக்கு கோவில்பட்டி கிளைச்சிறையில் அனுமதிக்கப்படும் சமயத்திலேயே அனுமதி பதிவேட்டில் இரண்டு புட்டத்திலும் இரத்தம் கசிந்த நிலையில் உள்ளது என்றும், இரண்டு கை மணிக்கட்டிலும், கால் பாதத்திலும் வீக்கம் காணப்பட்டது என்றும், குறிப்பு எழுதப்பட்டுள்ளது. மேலும், அதேபோன்று ஜெயராஜிற்கு கோவில்பட்டி கிளைச்சிறையில் அனுமதிக்கப்படும் சமயத்திலேயே அவரது இருபுட்டத்திலும் இரத்தம் கசிந்த நிலையில் காயம் காணப்பட்டதாகவும், அவருக்கு உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு

நோய் இருப்பதாகவும் கூறியதாக அனுமதி பதிவேட்டில் 20.06.2020–ம் தேதியிட்ட குறிப்புகள் காணப்படுகிறது என்றும்,

6.50.18. அவ்வாறு கோவில்பட்டி கிளைச்சிறையினுள் காயங்களுடன் அனுமதிக்கப்பட்ட ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகிய இருவரும் கடுமையான காயங்களுடன் காணப்பட்டதும், அந்த காயங்களினால் அவர்கள் அவதிப்பட்டதும், அந்த காயங்களானது சாத்தான்குளம் காவல்நிலையத்தில் சாத்தான்குளம் போலீசார் தான் ஏற்படுத்தியதாக பென்னிக்ஸ் சக கைதிகளிடம் கூறியிருப்பதும் மேலும் கோவில்பட்டி கிளைச்சிறையின் உள்ளே எவ்வித காயமும் புதிதாக ஏற்படவில்லை என்பதும், கோவில்பட்டி கிளைச்சிறை காவலர்கள் யாரும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை எவ்விதத்திலும் துன்புறுத்தவில்லை என்பதும் சாட்சிகளின் வாக்குமூலங்களின் மூலம் தெரிய வருகிறது என்றும்,

6.50.19. அவ்வாறு சாத்தான்குளம் காவல்நிலையத்தில் வைத்து எதிரிகளால் தாக்கப்பட்டு காயமடைந்து, கோவில்பட்டி கிளைச்சிறையில் அனுமதிக்கப்பட்ட இரண்டு தினங்களில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகிய இருவரின் உடல்நிலை மிகவும் மோசமடைந்து அவர்கள் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு கோவில்பட்டி கிளைச்சிறை காவலர்களால் ஆட்டோவில் அழைத்துச் செல்லப்பட்டிருப்பதும், அங்கு அவர்களுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை பலனளிக்காமல் அவர்கள் மரணமடைந்ததும் சாட்சிகளின் வாக்குமூலங்களின் இருந்தும், கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் இருந்து உண்மை நகல் பெறப்பட்ட ஆவணங்களில் இருந்தும் தெரியவருகிறது என்றும், அது தொர்பான கோவில்பட்டி அரசு மருத்துவமனை ஆவணங்கள் எனது அறிக்கையில் இணைப்பு E ஆக சமர்ப்பித்துள்ளதாகவும்,

6.50.20. அவ்வாறு ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகிய இருவரும் இறந்த பிறகு அவர்களது பிரேதமானது திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு, அங்கு தான் பிரேத விசாரணை மேற்கொண்டபோது அவர்கள் இருவரது பிரேதத்திலும்

காயங்கள் காணப்பட்டது என்றும், அவ்வாறு காணப்பட்ட காயங்களை பிரேத விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டு சமர்ப்பித்துள்ளார் என்றும்,

6.50.21. பிரேத விசாரணை முடிக்கப்பட்ட பிறகு ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகிய இருவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை தனது முன்னிலையில் மூன்று மருத்துவர்கள் அடங்கிய மருத்துவக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டது என்றும்,

6.50.22. அவ்வாறு பிரேத பரிசோதனை செய்வதற்கு முன்பு ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகிய இருவரின் உடல்களிலிருந்தும் கொரோனா நோய் தொற்று ஏதேனும் ஏற்பட்டுள்ளதா என்பதை கண்டறிய மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்விற்கு அனுப்பப்பட்டதில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகிய இருவருக்கும் எவ்வித கொரோனா நோய் தொற்றும் இல்லை என்று அறிக்கை பெற்றதால் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகிய இருவரும் கொரோனா நோய் தொற்றின் காரணமாக இறக்கவில்லை என்பது தெரிய வருகிறது என்றும்,

6.50.23. மேலும் பிரேதபரிசோதனையின் போது ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகிய இருவரின் உள்உறுப்புகளிலிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளை பகுப்பாய்விற்கு அனுப்பி அறிக்கை பெற்றதில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகிய இருவரும் எவ்வித நச்சுத்தன்மையாலோ, விஷம் உட்கொண்டதாலோ இறக்கவில்லை என்பது தெரிய வருகிறது என்றும்,

6.50.24. மேலும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இருவரின் முதற்கட்ட (Preliminary) பிரேதபரிசோதனை அறிக்கையில் அவர்கள் இருவரது உடம்பில் இருந்த காயங்கள் அனைத்தையும் மருத்துவர்கள் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு தனித்தனி அறிக்கைகளாக குறிப்பிட்டு அந்த காயங்கள் பிரேதபரிசோதனைக்கு 1 முதல் 3 நாட்களுக்குள் ஏற்பட்டிருக்கலாம் என்று மருத்துவர்களால் முதற்கட்ட பிரேத பரிசோதனை அறிக்கை (Preliminary Postmortem Report) அளிக்கப்பட்டுள்ளது. ஜெயராஜ்

மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்கள் தாக்கப்பட்டு காயம் ஏற்படுத்தப்பட்ட நாட்களை உறுதிப்படுத்துவதாக அமைகிறது என்றும்,

6.50.25. மேலும் பிரேதபரிசோதனை செய்த மருத்துவக்குழுவினர் அவர்களது இறுதி பிரேதபரிசோதனை அறிக்கையில் இறந்த ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகிய இருவரும் மழுங்கிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஏற்படுத்தப்பட்ட பல காயங்களினால் ஏற்பட்ட விளைவுகளின் காரணமாகவே ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகிய இருவரின் இறப்பு ஏற்பட்டதாக அறிக்கை அளித்துள்ளது என்றும், சாட்சிகள் கூறியுள்ளபடி ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகிய இருவரும் எதிரிகளால் தாக்கப்பட்டு அதனால் ஏற்படுத்தப்பட்ட காயங்களின் விளைவாகவே இருவரும் இறந்துள்ளார்கள் என்று சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்தும், சான்றாவணங்களில் இருந்தும் தெரிய வருகிறது என்றும்,

6.50.26 இறுதியாக, 19.06.2020–ம் தேதி இரவு சுமார் 7.30 மணிக்கு தொடங்கி ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை எதிரி ஸ்ரீதரின் தூண்டுதலின் பேரில் உதவி ஆய்வாளர்களான எதிரிகள் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ், பால்துரை ஆகியோரும், மற்ற காவலர்களான எதிரிகள் முருகன், தாமஸ், முத்துராஜா, சாமதுரை, செல்லத்துரை, வெயிலுமுத்து ஆகியோர்கள் எதிரிகள் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ் தாக்குவதற்கு ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் கை, கால்களை பிடித்து உதவி செய்துள்ளதாகவும் தொடரந்து அவர்களில் சிலர் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை பிடித்துக் கொள்ளவும் மற்றவர்கள் தாக்கவும், அவ்வாறு மாற்றி மாற்றி பிடித்து தாக்கியுள்ளதாகவும் சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்து தெரிய வருவதாகவும், எதிரிகள் முருகன், தாமஸ், முத்துராஜா, சாமதுரை, செல்லத்துரை, வெயிலுமுத்து ஆகியோர்கள் தாக்குவதற்கு உதவி செய்து பின்னர் அவர்களும் தாக்கியுள்ளதாக சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்து தெரிய வருவதாகவும், அவ்வாறு பலமுறை மாற்றி மாற்றி நீண்ட நேரத்திற்கு கடுமையான முறைகளை பின்பற்றியும், சுவற்றிற்கு இடையே ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோரை ஆடைகளை கழற்றச் செய்த பிறகு நிற்க

வைத்து லத்தியால் அடித்தும், காவல்நிலைய டேபிள் மீது படுக்க வைத்து கை, கால்களை பிடித்துக்கொண்டு தாக்கியதாக தெரிய வருவதாகவும், அவ்வாறு எதிரிகளால் தாக்கப்பட்டதில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர் கடுமையாக காயமடைந்து அந்த காயங்களின் விளைவுகளினால் மட்டுமே ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகிய இருவரின் மரணம் ஏற்பட்டுள்ளதாக தெரிய வருவதாகவும், அதனை தனது விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாகவும், பென்னிக்ஸ் தொடர்பான தனது நீதித்துறை விசாரணை அறிக்கை மற்றும் அந்த அறிக்கை அத்துடன் இணைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் வாக்குமூலங்கள், பென்னிக்சின் மீது பிரேதவிசாரணையின் போது அவரது உடலில் காணப்பட்ட காயங்களின் புகைப்படங்கள் மற்றும் சான்றாவணங்கள் இணைப்பு 'A' முதல் 'J' வரை ஆன கோப்பு என்றும், மேற்படி அறிக்கை அ.சா.ஆ.128 என்றும், ஜெயராஜ் தொடர்பான தனது நீதித்துறை விசாரணை அறிக்கை மற்றும் அந்த அறிக்கை அத்துடன் இணைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் வாக்குமூலங்கள், ஜெயராஜின் மீது பிரேத விசாரணையின்போது அவரது உடலில் காணப்பட்ட காயங்களின் புகைப்படங்கள் மற்றும் சான்றாவணங்கள் இணைப்பு 'A' முதல் 'J' வரை ஆன கோப்பு என்றும் அது அ.சா.ஆ.129 என்றும், 06.07.2020–ம் தேதி மாண்புமிகு தூத்துக்குடி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு தான் அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.130 என்றும், கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 ஆக தான் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தடயவியல் துறை பேராசிரியருக்கு பென்னிக்சின் பிரேதத்தின் மீது மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டிய அனுப்பிய 24.06.2020 தேதியிட்ட வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.84 என்றும், கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 ஆக தான் திருநெல்வேலி வட்டார தடயவியல் ஆய்வக துணை இயக்குநருக்கு பென்னிக்சின் உள் உறுப்பு மாதிரிகளை (Visera) அனுப்பி அதனின் மருத்துவ ஆய்வு மேற்கொள்ள வேண்டி அளிக்கப்பட்ட வழக்குச் சரித்திரத்துடன் கூடிய வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.131 (2 தாள்கள்) என்றும், பென்னிக்சின் உள்உறுப்பு மாதிரிகளை (Visera) அனுப்பி அதனை திருநெல்வேலி வட்டார தடயவியல் ஆய்வக துணை இயக்குநர் அலுவலகத்தில் பெற்றுக் கொண்டதற்கு அனுப்பப்பட்ட ஒப்புகைச் சீட்டு அ.சா.ஆ.132 (1 தாள்) என்றும்,

காவலர் சிவக்குமாருக்கு அளிக்கப்பட்ட கடவுச்சீட்டு அ.சா.ஆ.133 (1 தாள்) என்றும், காவலர் சிவக்குமார் அவர்கள் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு பிரேதத்துடன் இருந்த உடைமைகளை ஒப்படைத்தது தொடர்பாக அளிக்கப்பட்ட கடிதம் அ.சா.ஆ.134 என்றும், கோவில்பட்டி கிளைச்சிறையில் விசாரணையின்போது ஒப்படைக்கப்பட்டு கைப்பற்றப்பட்ட பொருட்களின் அத்தாட்சியுடன் கூடிய பட்டியல் ஆகும். அது அ.சா.ஆ.135 என்றும், சாத்தான்குளம் காவல்நிலையத்தில் விசாரணையின்போது ஒப்படைக்கப்பட்டு கைப்பற்றப்பட்ட Hard disk–க்கான அத்தாட்சியுடன் கூடிய பட்டியல் ஆகும். அது அ.சா.ஆ.136 என்றும், சாத்தான்குளம் காவல்நிலையத்தில் விசாரணையின் போது ஒப்படைக்கப்பட்டு கைப்பற்றப்பட்ட லத்திகள் மற்றும் P.V.C பைப்புக்கான அத்தாட்சியுடன் கூடிய பட்டியல் அ.சா.ஆ.137 என்றும், ஜெயராஜின் மனைவியான செல்வராணி அவர்களால் ஒப்படைக்கப்பட்டு கைப்பற்றப்பட்ட இரத்தம்படிந்த ஆடை மற்றும் போர்வைக்கான அத்தாட்சியுடன் கூடிய பட்டியல் அ.சா.ஆ.138 என்றும், திருநெல்வேலி வட்டார தடயவியல் ஆய்வத்தின் துணை இயக்குநரால் சேகரிக்கப்பட்ட தடய மாதிரிகளை ஒப்படைப்பு செய்ததற்கான 30.06.2020–ம் தேதியிட்ட கடிதம் அ.சா.ஆ.139 என்றும், ஜெயராஜின் இறப்பு பற்றி தான் மேற்கொண்ட நீதித்துறை விசாரணை அறிக்கையில் ஆவணங்களாக மேற்கோள் காட்டி தாக்கல் செய்யப்பட்டுள்ள 30 ஆவணங்களை கொண்ட ஆவணங்களின் தொகுப்பு அ.சா.ஆ.140 என்றும், அந்த தொகுப்பிலுள்ள ஆவணங்களில் சில ஏற்கனவே அ.சா.ஆ.49, அ.சா.ஆ.79, அ.சா.ஆ.82 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பென்னிக்சின் இறப்பு பற்றி தான் மேற்கொண்ட நீதித்துறை விசாரணை அறிக்கையில் ஆவணங்களாக மேற்கோள் காட்டி தாக்கல் செய்யப்பட்டுள்ள 30 ஆவணங்களை கொண்ட ஆவணங்களின் தொகுப்பு அ.சா.ஆ.141 என்றும், அந்த தொகுப்பிலுள்ள ஆவணங்களில் சில ஏற்கனவே அ.சா.ஆ.48, அ.சா.ஆ.81, அ.சா.ஆ.116, அ.சா.ஆ.117 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மருத்துவக்குழுவினரால் பென்னிக்சின் மரணம் பற்றி அளிக்கப்பட்ட முதன்மை பிரேத பரிசோதனை அறிக்கை (Preliminary Postmortem Report) அ.சா.ஆ.142 (2 தாள்கள்) என்றும், தூத்துக்குடி சி.பி.சி.ஐ.டி. தெற்கு போலீசாரால் குற்ற எண்.1/2020 குவிமுச பிரிவு 176 (1A) (i)–ன் கீழ் பதியப்பட்டு

கோவில்பட்டி நீதித்துறை எண்.1 ஆக தான் பணிபுரிந்தபோது அனுப்பப்பட்ட முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.143 என்றும், மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளையில் Suo Moto W.P.(MD)No.7042/2020 என்ற மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் Web copy அ.சா.ஆ.144 என்றும், திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தின் துணை இயக்குநருக்கு ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோரின் உள்உறுப்புகளின் மீதங்களை (Unexpended Portion of Visera) மதுரை, வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தின் துணை இயக்குநருக்கு D.N.A. பரிசோதனை செய்ய வேண்டி அனுப்பக்கோரிய வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.145 என்றும், திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தின் துணை இயக்குநர் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1, நீதிமன்றத்தில் சமர்ப்பித்த தடயப்பொருட்களின் பட்டியல் அ.சா.ஆ.146 என்றும், பென்னிக்சின் பிரேத பரிசோதனையின்போது அவர் அணிந்திருந்த இரத்தம்படிந்த ஆடைகளை கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய காவலர் சிவக்குமார் ஒப்படைத்தார் என்றும், அந்த இரத்தம்படிந்த துணிகளின் விபரப்பட்டியல் அ.சா.ஆ.147 என்றும், பென்னிக்சின் பிரேத விசாரணையின் அறிக்கை சிறப்பு அழைப்பாணை, படிவம் 85, படிவம் 86 ஆகியவை உள்ளடக்கியது அ.சா.ஆ.148 என்றும், தூத்துக்குடி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவரிடம் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 ஆக தான் சமர்ப்பித்த வழக்குச்சொத்து பட்டியல்கள் அடங்கிய 06.07.2020ம் தேதியிட்ட கடிதம் அ.சா.ஆ.149 என்றும், ஜெயராஜின் பிரேதபரிசோதனையின் புகைப்படங்கள் அடங்கிய 8 G.B. Sandisk Ultra SD card ஏற்கனவே அ.சா.பொ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், ஜெயராஜின் பிரேத பரிசோதனையின் போது எடுக்கப்பட்ட வீடியோ பதிவுகள் அடங்கிய 8 G.B. Sandisk Ultra SD card அ.சா.பொ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் எடுக்கப்பட்ட சி.சி.டி.வி பதிவுகள், சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் எடுக்கப்பட்ட சி.சி.டி.வி பதிவுகள், என்றும், சாத்தான்குளம் காவல்நிலையத்தில் Hard disk–ஐ மாற்றி கைப்பற்றியபோது எடுக்கப்பட்ட வீடியோ பதிவுகள், என்றும், பென்னிக்சின் பிரேத விசாரணையின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள், தடயவியல் துறையினர் நடத்திய ஆய்வின் புகைப்படங்கள், கோவில்பட்டி கிளைச்சிறையில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள், தடயவியல்

துறையினரின் ஆய்வின்போது சாட்சி ரேவதி சம்பவம் பற்றி விளக்கிக் கூறிய வீடியோ பதிவு, சாத்தான்குளம் காவல்நிலையத்தில் இருந்த இரத்தக்கறைகளின் பதிவுகள், அந்த இரத்தக்கறைகளை துடைத்து சுத்தம் செய்த சாட்சி வேல்முருகனின் சாட்சியம் பதிவு செய்த வீடியோ பதிவுகள் அடங்கிய 32 G.B. Sandisk Ultra Pendrive ஏற்கனவே அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பென்னிக்சின் பிரேத பரிசோதனையின் புகைப்படங்கள் அடங்கிய 16 G.B. Sandisk Ultra SD card, ஏற்கனவே அ.சா.பொ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பென்னிக்சின் பிரேதபரிசோதனையின்போது எடுக்கப்பட்ட வீடியோ பதிவுகள் அடங்கிய 32 G.B. Sandisk Ultra SD card ஏற்கனவே அ.சா.பொ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் எடுக்கப்பட்ட சி.சி.டி.வி பதிவுகள், சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் எடுக்கப்பட்ட சி.சி.டி.வி பதிவுகள், சாத்தான்குளம் காவல்நிலையத்தில் Hard disk–ஐ மாற்றி கைப்பற்றியபோது எடுக்கப்பட்ட வீடியோ பதிவுகள், பென்னிக்சின் பிரேத விசாரணையின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள், தடயவியல் துறையினர் நடத்திய ஆய்வின் புகைப்படங்கள், கோவில்பட்டி கிளைச்சிறையில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள், தடயவியல் துறையினரின் ஆய்வின் போது சாட்சி ரேவதி சம்பவம் பற்றி விளக்கிக்கூறிய வீடியோ பதிவு, சாத்தான்குளம் காவல்நிலையத்தில் இருந்த இரத்தக்கறைகளின் பதிவுகள், அந்த இரத்தக்கறைகளை துடைத்து சுத்தம் செய்த சாட்சி வேல்முருகனின் சாட்சியம் பதிவு செய்த வீடியோ பதிவுகள் அடங்கிய 32 G.B. Sandisk Ultra Pendrive அ.சா.பொ.25 என்றும், நீதித்துறையின் விசாரணையின்போது பதிவு செய்யப்பட்ட சாட்சி ரேவதி அசல் வாக்குமூலம் அ.சா.ஆ.150 என்றும், 06.07.2020–ம் தேதியிட்ட கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 ஆக தான் மாண்புமிகு தூத்துக்குடி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.151 என்றும், 24.06.2020 தேதியிட்ட கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 ஆக தான் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை தடயவியல் துறை பேராசிரியருக்கு ஜெயராஜின் பிரேதத்தின் மீது மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டிய அனுப்பிய வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.152 (1 தாள்) என்றும், திருநெல்வேலி வட்டார தடயவியல் ஆய்வக

துணை இயக்குநருக்கு ஜெயராஜின் உள்உறுப்பு மாதிரிகளை (Visera) அனுப்பி அதனின் மருத்துவ ஆய்வு மேற்கொள்ள வேண்டி அளிக்கப்பட்ட வழக்குச் சரித்திரத்துடன் கூடிய வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.153 என்றும், மருத்துவக்குழுவினரால் ஜெயராஜின் பிரேதத்தில் செய்யப்பட்ட பிரேத பரிசோதனையின் முதற்கட்ட பிரேதபரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.154 என்றும், ஜெயராஜின் உள்உறுப்பு மாதிரிகளை (Visera) அனுப்பி அதனை திருநெல்வேலி வட்டார தடயவியல் ஆய்வக துணை இயக்குநர் அலுவலகத்தில் பெற்றுக்கொண்டதற்கு அனுப்பப்பட்ட ஒப்புகைச் சீட்டு அ.சா.ஆ.155 (1 தாள்) என்றும், தற்போது காவலர் கருப்புசாமிக்கு அளிக்கப்பட்ட கடவுச்சீட்டு என்றும், அது அ.சா.ஆ.156 என்றும், காவலர் கருப்புசாமி அவர்கள் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு பிரேதத்துடன் இருந்த உடைமைகளை ஒப்படைத்தது தொடர்பாக அளிக்கப்பட்ட கடிதம் அ.சா.ஆ.157(1 தாள்) என்றும், தூத்துக்குடி சி.பி.சி.ஐ.டி. தெற்கு போலீசாரால் குற்ற எண்.2/2020 குவிமுச பிரிவு 176 (1A) (i)–ன் கீழ் பதியப்பட்டு கோவில்பட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.158 என்றும், திருநெல்வேலி வட்டார தடயவியல் ஆய்வத்தின் துணை இயக்குநரால் சேகரிக்கப்பட்ட தடய மாதிரிகளை ஒப்படைப்பு செய்ததற்கான 30.06.2020–ம் தேதியிட்ட கடிதம் அ.சா.ஆ.159 என்றும், ஜெயராஜின் பிரேத விசாரணை அறிக்கை சிறப்பு அழைப்பாணை, படிவம் 85, படிவம் 86 ஆகியவை உள்ளடக்கிய அறிக்கை அ.சா.ஆ.160 என்றும், கோவில்பட்டி கிளைச்சிறையில் கைப்பற்றப்பட்ட பொருட்களின் புகைப்படங்கள், சாத்தான்குளம் காவல்நிலையத்தில் கைப்பற்றப்பட்ட லத்திகள் மற்றும் பிளாஸ்டிக் பைப்பின் புகைப்படங்கள், செல்வராணியால் ஒப்படைக்கப்பட்ட போர்வை மற்றும் சட்டையின் புகைப்படம், பிரேத பரிசோதனைக்குப் பிறகு ஒப்படைக்கப்பட்ட ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்களின் ஆடைகளின் புகைப்படங்கள் அ.சா.ஆ.161 (எண்ணிக்கையில் 17) என்றும், சாத்தான்குளம் காவல்நிலையத்தில் தன்னால் கைப்பற்றப்பட்ட 9 லத்திகள், 1 கம்பு மற்றும் 1 பிளாஸ்டிக் பைப் ஏற்கனவே அ.சா.பொ.21 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், சாத்தான்குளம் காவல்நிலையத்தில் சி.சி.டி.வி

பதிவுகளை கைப்பற்றுவதற்காக தன்னால் கைப்பற்றப்பட்ட WD Purple 1.0 T.B. என்று எழுதப்பட்ட hard disk அ.சா.பொ.26 என்றும், சாத்தான்குளம் காவல்நிலையத்தில் தான் விசாரணை செய்தபோது சாட்சிகள் ரேவதி மற்றும் ப்யூலா ஆகியோர்களால் தனக்கு அடையாளம் காண்பிக்கப்பட்ட மேஜை ஏற்கனவே அ.சா.பொ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த மேஜையில் தான் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை படுக்க வைத்து அடித்ததாக சாட்சிகளின் வாக்குமூலங்களில் தெரிய வருகிறது என்றும், சாட்சி செல்வராணி தன்னிடம் ஒப்படைத்த இரத்தம்படிந்த போர்வை அ.சா.பொ.27 என்றும், சாட்சி செல்வராணி தன்னிடம் ஒப்படைத்த இளமஞ்சள் நிறமுடைய அதன் பின்பக்க அடிப்பகுதியில் இரத்தக்கறையுடைய சட்டை அ.சா.பொ.28 என்றும், வெள்ளை கலரில் கருப்பு கலர் கோடு போட்ட இரத்தம்படிந்த கைலி தான் பென்னிக்சின் பிரேத பரிசோதனையின் போது எடுத்து தன்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும், அது ஏற்கனவே அ.சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், ஊதா கலரில் நீலம் வெள்ளை கோடு மற்றும் கட்டம் போட்ட இரத்தம் படிந்த முழுக்கை சட்டை பென்னிக்சின் பிரேத பரிசோதனையின்போது எடுத்து தன்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும், அது ஏற்கனவே அ.சா.பொ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், இரத்தம்படிந்த வெள்ளை நிற அரைக்கை சட்டை ஜெயராஜின் பிரேத பரிசோதனையின் போது எடுத்து தன்னிடம் ஒப்படைக்கப்பட்டதாகும் என்றும், அது ஏற்கனவே அ,சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், இரத்தக்கறை படிந்த சிமிண்டு கலர், நீல நிற வெள்ளை கருப்பு கட்டம் போட்ட கைலி ஜெயராஜின் பிரேத பரிசோதனையின்போது எடுத்து தன்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும், அது ஏற்கனவே அ.சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், திருநெல்வேலி வட்டார தடயவியல் துணை இயக்குநரான விஜயலதா அவர்கள் தலைமையில் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் தன் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் ஏற்கனவே அ.சா.பொ.11 முதல் அ.சா.பொ.20 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், திருநெல்வேலி வட்டார தடயவியல் துணை இயக்குநரான விஜயலதா அவர்கள் தலைமையில் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் 18 இடங்களிலிருந்து தன் முன்னிலையில் எடுக்கப்பட்ட இரத்த மாதிரிகளின்

தடயப்பொருட்கள் அ.சா.பொ.29 (எண்ணிக்கையில் 18) என்றும், கோவில்பட்டி கிளைச்சிறையில் தன்னால் கைப்பற்றப்பட்ட பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜூக்கு சொந்தமான viking brand ஜட்டி –1, 80 செ.மீ அளவுள்ள SKC Brand ஜட்டி – 1, 100 செ.மீ அளவுள்ள Poomex ஜட்டி – 1, நீல கைகுட்டை மற்றும் வெள்ளை நிற கைகுட்டை தலா – 1, லேசான சந்தன நிறத்தில் உள்ள துணி முககவசங்கள் – 2, 100 செமீ அளவுள்ள Viking பனியன் – 1, 80 செ.மீ அளவுள்ள viking பனியன் – 1, இரத்தக்கறை போன்று லேசான சிவப்பு நிற கறை படிந்த 90 செ.மீ அளவுள்ள Poomex பனியன் – 1, இரத்தக்கறை போன்று லேசான சிவப்பு நிற கறை படிந்த 80 செ.மீ அளவுள்ள Viking பனியன் – 1, இரத்தக்கறை போன்று லேசான சிவப்பு நிற கறை படிந்த அரக்கு மற்றும் வெள்ளை நிற கட்டம் போட்ட துண்டு–1 ஆகியவை அ.சா.பொ.30 வரிசை என்றும், கோவில்பட்டி கிளைச்சிறையில் தன்னால் கைப்பற்றப்பட்ட பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜூக்கு சொந்தமான கட்டம் போட்ட வெள்ளை மற்றும் மங்கலான காக்கி கலர் ஸ்ரீஜோதிலிங்கம் துணிக்கடை ரூ.150/– என லேபிள் ஒட்டப்பட்ட புதிய துண்டு – 1 சா.பொ.31 என்றும்,கோவில்பட்டி கிளைச்சிறையில் தன்னால் கைப்பற்றப்பட்ட பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜூக்கு சொந்தமான லேசான சிவப்பு நிற கறை படிந்த வெள்ளை மற்றும் நீல நிற பெரிய கட்டம் போட்ட லுங்கி – 1, அ.சா.பொ.32 என்றும், கோவில்பட்டி கிளைச்சிறையில் தன்னால் கைப்பற்றப்பட்ட பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜூக்கு சொந்தமான SAM டெய்லரிங் SKTM என்று காலரில் எழுதப்பட்ட ஒரு வெள்ளை அரைக்கை சட்டை – 1 என்றும், அது அ.சா.பொ.33 என்றும், கோவில்பட்டி கிளைச்சிறையில் தன்னால் கைப்பற்றப்பட்ட பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜூக்கு சொந்தமான இரத்தம் போன்று லேசான கறை படிந்திருந்த வெள்ளை கலரில் கருப்பு கோடு போட்ட லுங்கி – 1 ஆகும். அது அ.சா.பொ.34 என்றும், கோவில்பட்டி கிளைச்சிறையில் கைப்பற்றப்பட்ட பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜூக்கு சொந்தமான Povidone Iodine Ointment USP – 1, Silver Sulpaadiazine Cream 1% W/W – 1, Sodium Fusidate (Sofinox Cream) – 1, பெயரை படிக்க இயலாத நிலையில் உள்ள மாத்திரைகள் இல்லாத மாத்திரை அட்டைகள் – 4 அ.சா.பொ.35 வரிசை என்றும், கோவில்பட்டி கிளைச்சிறையில் தன்னால் கைப்பற்றப்பட்ட பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜூக்கு

சொந்தமான தலா 40 ரூபாய் விலையுள்ள Sugerfree Unibic பிஸ்கட் பாக்கெட்டுகள் – 3 (அதில் ஒன்று மட்டும் உபயோகிகப்பட்டுள்ளது), கோவில்பட்டி கணேஷ் பேக்கரியின் பெயரில் பிரட் பாக்கெட்டுகள் – 2, கோவில்பட்டி கணேஷ் பேக்கரியின் பெயரில் ரஸ்க் பாக்கெட் – 1, சேவு, முறுக்கு மற்றும் சீவல் பாக்கெட்டுகள் தலா – 1 (மொத்தம் 3), வாழைப்பழம் – 1 (காய்ந்துள்ளது) ஆகும். அவைகள் அ.சா.பொ.36 வரிசை என்றும் கோவில்பட்டி கிளைச்சிறையில் தன்னால் கைப்பற்றப்பட்ட பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜூக்கு சொந்தமான VVD தேங்காய் எண்ணெய் – 1, Hamam சோப்பு – 1, Pepsodent Tooth Paste – 1, Greenlife என்று எழுதப்பட்ட கம்பு நீக்கப்பட்ட பை – 1, ஆகும். அவைகள் அ.சா.பொ.37 வரிசை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்களின் காவல் அடைப்பு கோரிக்கையில் நீதித்துறை நடுவர் எழுதியுள்ள மேற்குறிப்பு எ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6.51 இவ்வழக்கை புலனாய்வு செய்துள்ள CBCID திருநெல்வேலி குற்றப்பிரிவு குற்றபுலனாய்புத்துறை காவல்துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்துள்ள திரு.அனில்குமார் அ.சா.51 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் 20.01.2016 முதல் 03.10.2021–ம் தேதி வரை திருநெல்வேலி குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை காவல்துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து அதன்பின்னர் பணி மாறுதலில் திருப்பூர் மாநகர உதவி ஆணையராக தற்போது பணிபுரிந்து வருவதாகவும், தான் திருநெல்வேலி குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை காவல்துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வந்தபோது கடந்த 30.06.2020–ம் தேதி மாண்புமிகு உயர்நீதிமன்றம் மதுரை கிளையானது தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் பகுதியைச் சார்ந்த ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர் இறந்து போன வழக்கினை உத்தரவு எண்.WP(MD) No.7042/2020 படி தாமாக முன்வந்து, விசாரணைக்கு எடுத்துக்கொண்டு தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண்.649/2020 குவிமுச சட்டப்பிரிவு 176(1)(A)(i) மற்றும் குற்ற எண்.650/2020 குவிமுச சட்டப்பிரிவு 176(1)(A)(i) வழக்கினை சி.பி.சி.ஐ.டி–க்கு மாற்றம் செய்து, தன்னை புலன்விசாரணை அதிகாரியாக நியமனம் செய்தது என்றும், அதன்பேரில் உயர் அதிகாரிகள் மற்றும் மாண்புமிகு மதுரை

உயர்நீதிமன்ற உத்தரவுப்படி காவல்துணை தலைவர், திருநெல்வேலி சரகம் அவர்களின் அலுவலகம் சென்று 18.00 மணிக்கு காவல்துணை தலைவர், திருநெல்வேலி சரகம் அவர்களிடம் சீலிடப்பட்ட கவரில் இருந்த மாண்புமிகு உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை பெற்று, தூத்துக்குடி குற்ற புலனாய்வுத்துறை அலுவலகம் வந்து அன்றையதினம் 21.00 மணிக்கு கோவில்பட்டி உட்கோட்ட காவல்துணை கண்காணிப்பாளர் திரு.P.கலைகதிரவன் அவர்களிடம் கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண்.649/2020 குவிமுச சட்டப்பிரிவு 176(1)(A)(i) மற்றும் கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய குற்ற எண்.650/2020 குவிமுச சட்டப்பிரிவு 176(1)(A)(i) ஆகிய வழக்கு கோப்பினை பெற்று, முழுமையாக பார்வையிட்டு, உயரதிகாரிகளின் அறிவுரையை பெற்று, அன்றையதினம் 22.30 மணிக்கு கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண்.649/2020–ல் குவிமுச சட்டப்பிரிவு 176(1)(A)(i)–ன் கீழ் பதிவான வழக்கை தூத்துக்குடி குற்றப்பிரிவு குற்ற புலனாய்வுத்துறை குற்ற எண்.1/2020 குவிமுச சட்டப்பிரிவு 176(1)(A)(i)–ன் கீழ் மறுபதிவு செய்ததாகவும், அது ஏற்கனவே அ.சா.ஆ.143 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த முதல் தகவல் அறிக்கையில் தனது கையொப்பம் உள்ளது என்றும், மேலும் 23.30 மணிக்கு கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண்.650/2020 குவிமுச சட்டப்பிரிவு 176(1)(A)(i)–ஐ மறுபதிவாக தூத்துக்குடி குற்றப்பிரவு குற்றப்புலனாய்வுத்துறை குற்ற எண்.2/2020–ல் சட்டப்பிரிவு குவிமுச சட்டப்பிரிவு 176(1)(A)(i)–ன் கீழ் பதிவு செய்ததாகவும், மேற்படி குற்ற எண். 2/2020–ன் முதல்தகவல் அறிக்கை ஏற்கனவே அ.சா.ஆ.158 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த முதல் தகவல் அறிக்கையில் தனது கையொப்பம் உள்ளது என்றும், வழக்குகளின் முதல்தகவல் அறிக்கையின் ஒரு நகல் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தாகவும், மேலும், தலா ஒரு நகலினை தனது புலன் விசாரணைக்காக வைத்துக் கொண்டதாகவும், மேலும், வழக்கில் தொடர்புடைய சாத்தான்குளம் காவல்நிலையத்தை சோதனையிட்டு, தடயங்கள் சேகரிக்க அனுமதி கேட்டு கனம் குற்றவியல் நீதித்துறை

நடுவர் எண்.1, கோவில்பட்டி அவர்களுக்கு கடிதம் கொடுத்ததாகவும், அந்த கடிதம் அ.சா.ஆ.162 என்றும், அதில் தன்னுடைய கையொப்பம் உள்ளது என்றும், மேலும், மேற்படி வழக்குகளை பதிவு செய்த விபரத்தினை மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்ற பதிவாளர் அவர்களுக்கும், மற்றும் சி.பி.சி.ஐ.டி தலைமை அலுவலகத்திற்கும் தெரிவித்தாகவும் மேலும் திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு மேற்படி சம்பவயிடமான சாத்தான்குளம் காவல்நிலையத்தை சோதனையிட வேண்டி புலனாய்வுக்கு உதவியாக கைவிரல் ரேகை நிபுணர், தடய அறிவியல் துறையினர், வீடியோ மற்றும் போட்டோகிராபர்கள் மற்றும் சைபர் செல் ஆகியோர்களை 01.07.2020-ம் தேதி சாத்தான்குளத்திற்கு வர வேண்டி C.No.85/DSP/CBCID-TIN/2020 Dated 30.06.2020-ன் படி வேண்டுகோள் கடிதம் கொடுத்தாகவும், மேலும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு புலனாய்வுக்கு உதவி செய்ய கிராம நிர்வாக அதிகாரி, கிராம உதவியாளர், சர்வேயர், வரைபட நிபுணர்கள் 01.07.2020-ம் தேதி சாத்தான்குளத்திற்கு வர வேண்டி C.No.85-2/DSP/CBCID-TIN/2020 Dated 30.06.2020-ன் படி வேண்டுகோள் கடிதம் கொடுத்தாகவும், 01.07.2020-ம் தேதியன்று சி.பி.சி.ஐடி தலைமை அலுவலக R.C.No.Crime-I (1)/149/06492/2020 Dated 01.07.2020 உத்தரவுப்படி திரு.பிறைச்சந்திரன் Inspector of Police, O.C.U. C.B.C.I.D, Tirunelveli, திருமதி. தேவி, Inspector of Police, O.C.U. Tirunelveli, திருமதி.உலகராணி, Inspector of Police, C.B.C.I.D, Tirunelveli, திருமதி.சாவித்ரி, Inspector of Police, C.B.C.I.D, Virudhunagar, திருமதி. சந்தானலெட்சுமி, Inspector of Police, C.B.C.I.D, Dindugal, திருமதி.சித்ராதேவி, Inspector of Police, C.B.C.I.D, Theni, திரு.S.வேல்முருகன், Inspector of Police, O.C.U. C.B.C.I.D, Madurai, திருமதி. சாந்தலெட்சுமி, Inspector of Police, O.C.U. C.B.C.I.D, Madurai, திரு.S.சேகர், Inspector of Police, C.B.C.I.D, Madurai, திரு.B.சரவணகுமார், Inspector of Police, C.B.C.I.D, Madurai, திரு.V.சரவணகுமார், Inspector of Police, C.B.C.I.D, Ramanathapuram, திருமதி. S.சபிதா, Inspector of Police, C.B.C.I.D, Thoothukudi ஆகியோர்கள் நியமிக்கப்பட்டதற்கான உத்தரவு பெற்றதாகவும், அதன்பின்னர் 01.07.2020-ம் தேதி சம்பவ இடமான சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு சுமார் காலை 10.00 மணிக்கு சென்று, உதவி புலன்விசாரணை

அதிகாரியான மதுரை கள்ளநோட்டு தடுப்பு பிரிவு, காவல்துணை கண்காணிப்பாளர், திரு.சரவணன், மதுரை ஒருங்கிணைந்த குற்றப்பிரிவு, காவல்துணை கண்காணிப்பாளர், திரு.முரளி, மற்றும் காவல் குழுவினருடன் விசாரணையை துவங்கியதாகவும் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் ஆஜரான சாட்சிகள் சாத்தான்குளம் கிராம நிர்வாக அதிகாரி, திரு.சுரேஷ்ராஜா மற்றும் சாத்தான்குளம் கிராம உதவியாளர், திருமதி.வள்ளிசுந்தரி, மற்றும் நிபுணர், திருநெல்வேலி, தடய அறிவியல் உதவி இயக்குநர், திருமதி.ஆனந்தி விரல் ரேகை பிரிவு, காவல்துணை கண்காணிப்பாளர், திருமதி.அகஸ்டாகனகமணி, திரு.சுரேஷ், மு.நிகா.சைபர் செல், திருநெல்வேலி ஆகியோர்கள் உதவியுடன் சம்பவ இடத்தை சாட்சிகள் சாத்தான்குளம் நில அளவையர், மணிலால், திருமதி.தேவிகா ஆகியோர் முன்னிலையில் காலை 10.00 மணி முதல் 11.30 மணி வரை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, சாட்சிகள் மணிலால் மற்றும் தேவிகா ஆகியோரிடம் கையொப்பம் வாங்கி, தானும் கையொப்பம் இட்டதாகவும், மேலும், மேற்படி சம்பவ இடமான சாத்தான்குளம் காவல்நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகளில் தடயங்களை சேகரிக்க விருதுநகர், சி.பி.சி.ஐ.டி. காவல் ஆய்வாளர், திருமதி.சாவித்ரி, திண்டுக்கல் சி.பி.சி.ஐ.டி, காவல் ஆய்வாளர், சந்தானலெட்சுமி, ஆகியோர்களை நியமித்ததாவும் குழுவினர் சேர்ந்து காவல்நிலையத்தை சுற்றியுள்ள கம்பிவேலிக்கு அருகே அறுந்த நிலையில் இருந்த காலணியை அத்தாட்சியில் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியதாகவும், அந்த அத்தாட்சி அ.சா.ஆ.163 என்றும், அந்த அத்தாட்சியில் தனது கையொப்பமும், சாட்சிகள் மணிலால், தேவிகா ஆகியோரின் கையொப்பமும் உள்ளது என்றும், அத்தாட்சி மூலம் கைப்பற்றப்பட்ட பொருட்களை நீதித்துறை நடுவர் முன்பு சமர்ப்பித்ததாகவும், நீதித்துறை நடுவருக்கு அனுப்பட்ட சொத்து பட்டியல் அ.சா.ஆ.164 என்றும் அதில் தன்னுடைய கையொப்பம் உள்ளது என்றும் குவிமுச பிரிவு 165(3)படி மதுரை சி.பி.சி.ஐ,டி கள்ளநோட்டு தடுப்பு பிரிவு, காவல்துணை கண்காணிப்பாளர், திரு.சரவணன் மற்றும் அவர்கள் குழுவினர் சம்பவ இடமான சாத்தான்குளம் காவல்நிலையத்தில் 01.07.2020ம் தேதியன்று 12.00 மணி முதல் 21.15 மணி வரை சோதனை செய்து பக்கம் 1 முதல் 1069 உள்ள F.I.R Index 872 பக்கம், பக்கம் 1 முதல் 297 உள்ள P.S.R. 51 Sentry

Relief Book consist பக்கம் 1 முதல் 1 to 509, 224 pages பக்கம் 1 முதல் 272 Rough Duty Roaster மற்றும் இதர ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. அது சம்மந்தமான Search List அ.சா.ஆ.165 என்றும் அ.சா.ஆ.165 search list–ல் 18 வரிசை எண்கள் கொண்ட ஆவணங்கள் மற்றும் பொருட்கள் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது என்றும் அ.சா.ஆ.165–ல் திரு.சரவணன் அவர்களின் கையெழுத்து உள்ளது என்றும் கைப்பற்றப்பட்ட பொருட்களை விசாரணைக்காக அவர் தன்னிடம் ஒப்படைத்தார் என்றும் மேலும், இறந்தவர்களின் கடை அருகிலுள்ள கிங் எலக்ட்ரிகல்ஸ் உரிமையாளர் சாட்சி திரு.பிரபு என்பவர் 19.06.2020–ம் தேதி தனது கடையில் பதிவாகியிருந்த சி.சி.டி.வி கேமரா பதிவுகள் கொண்ட hard disc ஐ தாமாக முன்வந்து production memo மூலம் ஒப்படைத்தார் என்றும் Hik vision DVR –1, 2 Tera bite intenal hard disc – 1, A.C. / D.C. adopter ஆகியவற்றை திருமதி.தேவி, காவல்ஆய்வாளர் O.C.U, திருநெல்வேலி என்பவர் 01.07.2020–ம் தேதி 19.00 மணிக்கு கைப்பற்றி அதை என்னிடம் விசாரணைக்காக ஒப்படைத்தார் என்றும் அதுகுறித்த Production Memo அ.சா.ஆ.166 என்றும் அதில் அ.சா.பொ.24 கைப்பற்றப்பட்டது என்றும் அ.சா.ஆ.166–ல் தேவி அவர்களின் கையொப்பம் உள்ளது என்றும், அதில் கிங் எலக்ட்ரிகல்ஸ் உரிமையாளர் திரு.பிரபு அவர்கள் கையொப்பம் செய்துள்ளார் என்றும் சாத்தான்குளம், அரசரடி விநாயகர் கோவில் தெருவிலுள்ள இறந்துபோன ஜெயராஜ் ஆகியோர்கள் வீட்டிற்கு தனது குழுவினருடன் சென்று இறந்துபோன ஜெயராஜின் மனைவி திருமதி.செல்வராணி மற்றும் திருமதி.ஜெயா, திரு.ஜோசப், திரு.தேசிங்குராஜா, திரு.துரை, திரு.வீரபாண்டி, திரு.அர்வின், ஜெயசீலன், தாவீது ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் சாட்சி திருமதி.செல்வராணியிடம் விசாரணையின்போது கைப்பற்றிய ஒரு ஜோடி செருப்பை காட்டி விசாரித்ததாகவும் அந்த செருப்பு தனது மகன் இறந்து போன பென்னிக்ஸ் என்பவருடையது என்று கூறினார் என்றும் பின்பு 01.07.2020–ம் தேதி விசாரணையின் போது சாட்சி செல்வராணி ஒப்படைத்த இறந்து போன ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோரது full size photo copy, Passport size photo copy ஆகிய நான்கு போட்டோக்களை production memo மூலம் பெற்றதாகவும் பின்பு சம்பவம் தொடர்பாக சாத்தான்குளம்

காவல்நிலையம் மற்றும் இறந்து போன ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோரது செல்போன் கடை மற்றும் அருகிலுள்ள இடங்களில் கிடைத்த தடயங்கள், சாட்சிகள், செல்வராணி, ஜெயா, ஜோசப், தேசிங்குராஜா, துரை, வீரபாண்டி, அர்வின், ஜெயசீலன், தாவீது ஆகியோரின் வாக்குமூலங்களிலும் மற்றும் ஆவணங்களிலும் இருந்து 01.07.2020–ம் தேதி இவ்வழக்கின் சட்டப்பிரிவை 176(1)(A)குவிமுச விலிருந்து இதச பிரிவுகள் 342, 302, 201 ஆக மாற்றம் செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும் பின்பு வழக்கில் தொடர்புடைய ரகுகணேஷ், சார்பு ஆய்வாளர் என்பவரை தூத்துக்குடி மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மேற்குப்பக்கம் வைத்து கைது செய்து அவரது வாக்குமூலத்தை சாட்சிகள் திருமதி.ராதா, கிராம நிர்வாக அலுவலர், திரு.குமாரலிங்கம் கிராம உதவியாளர் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்து பின்பு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததாகவும் பின்பு 02.07.2020–ம் தேதியன்று அதிகாலை சுமார் 2.15 மணிக்கு தூத்துக்குடி குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு துறை அலுவலகத்தில் இருந்த போது தலைமைக் காவலர் முருகன் என்பவர் தன் முன் ஆஜரானவரை கைதிற்கான காரணம் கூறி கைது செய்ததாகவும் பின்பு அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சாட்சிகள் திருமதி.ராதா, கிராம நிர்வாக அலுவலர், திரு.குமாரலிங்கம் கிராம உதவியாளர் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்ததாகவும் பின்பு 02.07.2020–ம் தேதி அதிகாலை 4.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு.பாலகிருஷ்ணன் என்பவர் தூத்துக்குடி குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வு துறை அலுவலகத்தில் தன் முன் ஆஜரானவரை கைதிற்கான காரணம் கூறி கைது செய்ததாகவும் பின்பு அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சாட்சிகள் திருமதி.ராதா, கிராம நிர்வாக அலுவலர், திரு.குமாரலிங்கம் கிராம உதவியாளர் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்ததாகவும் பின்பு காலை 7.00 மணிக்கு ஆய்வாளர் ஸ்ரீதர் என்பவர் தூத்துக்குடி குற்றப் புலனாய்வுத்துறை அலுவலகத்தில் தன் முன் ஆஜரானவரை கைதிற்கான காரணம் கூறி கைது செய்ததாகவும் பின்பு அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சாட்சிகள் திருமதி.ராதா, கிராம நிர்வாக அலுவலர், திரு.குமாரலிங்கம் கிராம உதவியாளர் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்ததாகவும் பின்பு இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட மேற்சொன்ன மூன்று

பேர்களையும் அதே நாள் தக்க வழிக்காவல் மூலம் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று, மருத்துவ பரிசோதனை செய்த பின்பு கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், தூத்துக்குடி அவர்கள் முன்பு ஆஜர்படுத்தி தூத்துக்குடி, பேராவூரணி கிளைச்சிறையில் ஒப்படைத்ததாகவும், பின்னர் இவ்வழக்கில் சாட்சிகளான அழகர்சாமி, சங்கர், மாரிமுத்து, செந்துர்ராஜன், செல்வராஜ், கணேஷ்குமார் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் பின்பு 03.07.2020–ம் தேதி கனம் தலைமை நீதித்துறை நடுவர், தூத்துக்குடி அவர்களிடம் சாட்சி திருமதி.ரேவதி, தலைமை காவலர் என்பவரின் குவிமுச 164 படியான வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டுகோள் கடிதம் கொடுத்ததாகவும் பின்பு அதே நாள் இரவு 23.00 மணிக்கு இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட காவலர் M.முத்துராஜா தன் முன்பு ஆஜரானதாகவும் அவரை கைதிற்கான காரணம் கூறி கைது செய்து அவர் கொடுத்த வாக்குமூலத்தை மேற்சொன்ன சாட்சிகளான திருமதி. ராதா, கிராம நிர்வாக அலுவலர், திரு.குமாரலிங்கம் கிராம உதவியாளர் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்ததாகவும் பின்பு முத்துராஜா என்பவரை தகுந்த வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததாகவும் பின்பு 04.07.2020–ம் தேதி இவ்வழக்கின் சாட்சிகளான ஆறுமுகம், மருத்துவர் தாம்சன், ஹபீப்ரகுமான், கந்தசாமி, பாண்டி, பிரபு, சாந்தி, ரவிராஜன், சுப்பிரமணியன், பேச்சிப்பாண்டி, ரேவதி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாததாகவும் பின்பு 05.07.2020–ம் தேதி சாட்சிகள் மணிமாறன், ரவிச்சந்திரன், ராஜாராம், ரவிசங்கர், சங்கரலிங்கம், எலிசா, கோகுல்சுந்தரேசன், ஜான்சன்துரை, கண்ணன், ராமகிருஷ்ணன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் பின்பு 06.07.2020–ம் தேதி கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் முன்பு சாட்சி ரேவதி கொடுத்த வாக்குமூலத்தின் நகல் பெற்றததாகவும், மேலும் சாட்சிகள் சந்தனகுமார், ஜெயசேகர், ஆரோக்கியசாமி, மிகவேல் என்ற மைக்கேல், இசக்கித்துரை, சிவசுப்பிரமணியம், ஹைகோட் பெருமாள், ராஜீவ் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்களை பதிவு செய்ததாகவும், மேலும் திருநெல்வேலி மாவட்டம், ஒருங்கிணைந்த குற்றப்பிரிவு, காவல் ஆய்வாளர் தேவி, அவர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கி மேற்படி சம்பவம்

சம்பந்தமாக சாத்தான்குளம் காவல்நிலைய சி.சி.டி.வி கேமராக்களை ஆய்வு செய்து வர அனுப்பியதன் பேரில் மேற்படி காவல் ஆய்வாளர் சம்பவம் தொடர்பாக சாத்தான்குளத்தில் உள்ள தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி மேலாளர் பாலசுப்பிரமணியன் என்பவர் வழங்கிய பென்டிரைவ், அதற்கான இந்திய சாட்சிய சட்டம் 65பி சான்றிதழ், கூட்டுறவு சிக்கன நாணய சங்க செயலாளர் வழங்கிய சிசிடிவி கேமரா பதிவு பென்டிரைவ் அதற்கான இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65பி சான்றிதழ், சுப்புலெட்சுமி ஜவுளிக்கடை உரிமையாளர் வழங்கிய சிசிடிவி கேமரா பதிவு பென்டிரைவ் அதற்கான இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65பி சான்றிதழ், சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் உள்ள சி.சி.டி.வி கேமரா பதிவு பென்டிரைவ் அதற்கான இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65பி சான்றிதழ், கிங் எலக்ட்ரிக்கல் உரிமையாளர் பிரபு என்பவர் வழங்கிய சிசிடிவி கேமரா பதிவு பென்டிரைவ் அதற்கான இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65பி சான்றிதழ் ஆகியவற்றை தன்னிடம் விசாரணைக்காக ஒப்படைத்தார்கள் என்றும், மேலும் காவல் ஆய்வாளர் திருமதி.தேவி, தனிஅறிக்கை சமர்பித்ததாகவும் பின்பு 07.07.2020-ம் தேதி வழக்கின் சாட்சிகளான சாமர்வேல், செல்வின்ராஜ், மணி, ப்யூலா செல்வகுமாரி, ஆறுமுகசாமி, அழகுமாரிச்செல்வம் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் பின்பு மதுரை சி.பி.சி.ஐ.டி, காவல் ஆய்வாளர், திரு.சேகர் என்பவர் சமர்ப்பித்த தனி அறிக்கையை தனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டதாகவும் பின்பு 08.07.2020-ம் தேதி வழக்கில் சாட்சியங்களின் அடிப்படையிலும், வாக்குமூலங்களின் அடிப்படையிலும், ஆவண சாட்சியங்களின் அடிப்படையிலும், மேற்படி வழக்கில் சட்டப்பிரிவுகளை 342, 302, 201 இதச பிரிவுகளில் இருந்து 342, 302, 201 உ/இ 109 இதச பிரிவுகளாக மாற்றம் செய்து அந்த தகவலை முதன்மை குற்றவியல் நீதிமன்றம், தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பி வைத்ததாகவும் பின்பு இந்த வழக்கு சம்பவத்தில் தொடர்புடைய காவலர்கள் செல்லத்துரை, பால்துரை, சார்பு ஆய்வாளர், சாமதுரை, வெயிலுமுத்து, தாமஸ்பிரான்சிஸ் ஆகியோர்கள் தன் முன் தூத்துக்குடி சி.பி.சி.ஐ.டி அலுவலகத்தில் ஆஜரானதாகவும், கைதிற்கான காரணம் கூறி அவர்களை கைது செய்ததாகவும், அவர்கள் தனித்தனியாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களை,

திருமதி.ராதா கிராம நிர்வாக அலுவலர், திரு.குமாரலிங்கம், கிராம உதவியாளர் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்ததாகவும் மேற்படி ஐந்து பேர்களையும் அன்றையதினம் தக்க வழிக்காவல் மூலம் தூத்துக்குடி அரசு மருத்துவமனை மருத்துவ அதிகாரிகள் மருத்துவ பரிசோதனை மேற்கொண்டதாகவும், பால்துரை, தாமஸ் பிரான்சிஸ் ஆகியோருக்கு உடல்நலக்குறைவு உள்ளதாக சான்றளித்தனர் என்றும் பிறகு கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், தூத்துக்குடி அவர்களிடம் காவல் அடைப்பை பெற்று கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களின் அறிவுரையின் பேரில் பால்துரை, தாமஸ் பிரான்சிஸ் ஆகியோருக்கு அரசு மருத்துவமனையில் உரிய பாதுகாப்பு வழங்கக்கோரி சிறை அலுவலருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டது என்றும் செல்லத்துரை, சாமதுரை, வெயிலுமுத்து ஆகியோர்களை பேராவூரணி கிளைச்சிறையில் ஒப்படைத்ததாகவும் மேலும் 09.07.2020-ம் தேதி வழக்கின் சாட்சி ப்யூலா செல்வகுமாரியை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் பின்னர் 10.07.2020ம் தேதி இரண்டு வழக்கு கோப்புகளையும் உத்தரவு பெற்று, சி.பி.ஐ விசாரணை அதிகாரியிடம் விசாரணைக்காக ஒப்படைத்ததாகவும் சி.பி.ஐ விசாரணை அதிகாரி தன்னை விசாரித்தார் என்றும் Production cum receipt memo அ.சா.ஆ.167 என்றும் அதன் மூலம் சி.பி.ஐ அதிகாரியான திரு.விஜயகுமார் சுக்லா-க்கு 10 வரிசை கொண்ட ஆவணங்களை ஒப்படைத்ததாகவும் அதில் தன்னுடைய கையொப்பம் உள்ளது என்றும் கோவில்பட்டி காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் விசாரணைக்காக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவுப்படி தன்னிடம் கொடுத்த ஆவணங்களின் கோப்பு அ.சா.ஆ.57 மற்றும் 58 என்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பிய கடிதம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட படிவம் 91 மூலம் Property Receipt No.337/2020, P.R.No.338/2020, P.R.No.339/2020, P.R.No.340/2020, P.R.No.341/2020, P.R.No.342/2020, P.R.No.343/2020-ல் கண்ட Property ஒப்படைக்கப்பட்டது என்றும் அந்த படிவம் 91 அ.சா.ஆ.168 வரிசை என்றும் தான் அனுப்பிய கடிதத்தில் தன்னுடைய கையொப்பம் உள்ளது என்றும், 10.07.2020-ம் தேதியிட்ட Production cum Receipt Memo அ.சா.ஆ.169 என்றும் அ.சா.ஆ.169 வரிசையில்

கண்ட 8 ஆவணங்களை சி.பி.ஐ அதிகாரி திரு.விஜய்குமார் சுக்லா தன்னிடம் இருந்து விசாரணைக்காக பெற்றுக் கொண்டார் என்றும் அ.சா.ஆ.169−ல் தன்னுடைய கையொப்பம் உள்ளது என்றும் சாத்தான்குளம் காவல்நிலையத்தை பார்வையிட்டு சாட்சிகள் மணிலால், ப.தேவிகா ஆகியோர் முன்னிலையில் தன்னால் தயார் செய்யப்பட்ட 01.07.2020−ம் தேதியிட்ட பார்வைமகஜர் அ.சா.ஆ.170 என்றும் அதில் தன்னுடைய கையொப்பம் உள்ளது என்றும் அதில் சாட்சிகள் கையொப்பமும் உள்ளது என்றும் 01.07.2020−ம் தேதியிட்ட முதல் வரைபடமானது சாத்தான்குளம் காவல்நிலையத்தின் கீழ்தளத்திற்கு உரிய வரைபடம் என்றும் இரண்டாவது வரைபடமானது சாத்தான்குளம் காவல்நிலையத்தின் முதல்தளத்திற்கு உரியதாகும் என்றும் அந்த வரைபடங்கள் அ.சா.ஆ.171 வரிசை என்றும் அதில் தன்னுடைய கையொப்பம் உள்ளது என்றும் அந்த வரைபடங்களில் கருப்பு கலர் செப்பல் எங்கிருந்து கைப்பற்றப்பட்டது என்று குறிக்கப்பட்டுள்ளது என்றும் சி.சி.டி.வி கேமரா எங்கே பொருத்தப்பட்டுள்ளது என்று குறிக்கப்பட்டுள்ளது என்றும் சம்பவ இடங்களும் x என்று குறியீடு செய்து குறிக்கப்பட்டுள்ளது என்றும் 01.07.2020−ம் தேதியிட்ட சாத்தான்குளம் காவல்நிலையத்தில் தயார் செய்த தன்னுடைய செயல்முறை அறிக்கை அ.சா.ஆ.172 என்றும் அதில் தன்னுடைய கையொப்பம் உள்ளது என்றும் அந்த செயல்முறை அறிக்கையில் கலந்து கொண்ட சாட்சிகளின் கையொப்பமும் அதில் உள்ளது என்றும் அதில் மதுரை சி.பி.சி.ஐ.டி, இன்ஸ்பெக்டர் சாந்தகுமாரி, அவர்களும் கையொப்பம் செய்துள்ளார் என்றும் 01.07.2020−ம் தேதி செல்வராணி அவர்களிடமிருந்து இறந்து போன பென்னிக்ஸ், ஜெயராஜ் ஆகியோரின் 4 வரிசை எண்கள் கொண்ட Passport size photo மற்றும் Full size photo ஆகியவற்றை விசாரணைக்காக பெற்றுக் கொண்டதாகவும் அது குறித்த Production Memo அ.சா.ஆ.173 என்றும் அதில் தன்னுடைய கையொப்பம் உள்ளது என்றும் அதில் செல்வராணி என்பவரின் கையொப்பமும் உள்ளது என்றும் சி.பி.சி.ஐ.டி காவல் ஆய்வாளர், தேவியிடம் 06.07.2020−ம் தேதி தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி, சாத்தான்குளம் திரு.பாலசுப்பிரமணியன், மேலாளர் அவர்கள் கொடுத்த சி.சி.டி.வி கேமரா பதிவுகளுக்கான 65பி சான்றிதழ் அ.சா.ஆ.174 என்றும் அதில் மேற்சொன்ன தேவி அவர்களின் கையொப்பம் உள்ளது என்றும் 06.07.2020−ம்

தேதியிட்ட சி.பி.சி.ஐ.டி காவல் ஆய்வாளர், தேவி அவர்களிடம் சுப்புலெட்சுமி சில்க்ஸ், சாத்தான்குளம் உரிமையாளர் திரு.P.மோதிலால் அவர்கள் கொடுத்த சி.சி.டி.வி கேமரா பதிவுகளுக்கான 65பி சான்றிதழ் என்றும் அது அ.சா.ஆ.175 என்றும் அதில் மேற்சொன்ன தேவி அவர்களின் கையொப்பம் உள்ளது என்றும் 06.07.2020-ம் தேதியிட்ட சி.பி.சி.ஐ.டி காவல் ஆய்வாளர், தேவி, அவர்களிடம் சாத்தான்குளம் தாலுகா டீச்சர்ஸ் கோ-ஆப்ரேட்டிவ் thrift மற்றும் credit society அவர்கள் கொடுத்த சி.சி.டி.வி கேமரா பதிவுகளுக்கான 65பி சான்றிதழ் அ.சா.ஆ.176 என்றும் அதில் தேவி அவர்களின் கையொப்பம் உள்ளது என்றும் 06.07.2020-ம் தேதியிட்ட சி.பி.சி.ஐ.டி காவல் ஆய்வாளர், தேவி அவர்களிடம் மருத்துவ அதிகாரி, அரசு மருத்துவமனை, சாத்தான்குளம் அவர்கள் கொடுத்த சி.சி.டி.வி கேமரா பதிவுகளுக்கான 65பி சான்றிதழ் அ.சா.ஆ.177 என்றும் அதில் மேற்சொன்ன தேவி அவர்களின் கையொப்பம் உள்ளது என்றும் 06.07.2020-ம் தேதியிட்ட சி.பி.சி.ஐ.டி காவல் ஆய்வாளர், தேவி அவர்களிடம் கிங் எலக்ட்ரிகல்ஸ், எடக்குடி தெரு, சாத்தான்குளம் உரிமையாளர் திரு.பிரபு அவர்கள் கொடுத்த சி.சி.டி.வி கேமரா பதிவுகளுக்கான 65பி சான்றிதழ் ஏற்கனவே அ.சா.ஆ.123 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அதில் மேற்சொன்ன தேவி அவர்களின் கையொப்பம் உள்ளது என்றும் சி.பி.சி.ஐ.டி காவல் ஆய்வாளர், தேவி, அவர்கள் மருத்துவ அதிகாரி, அரசு மருத்துவமனை, சாத்தான்குளம் அவர்களுக்கு குவிமுச பிரிவு 91-ன் கீழ் கொடுத்த அறிவிப்பு அ.சா.ஆ.178 என்றும் அதில் மேற்சொன்ன தேவி அவர்களின் கையொப்பம் உள்ளது என்றும் 23.07.2020-ம் தேதியன்று தன்னால் கையொப்பமிடப்பட்டு, சி.பி.ஐ அலுவலகம், சௌத்சோன் மதுரை அலுவலகத்திற்கு படிவம் 91-ன் கீழ் ஒப்படைக்கப்பட்ட ஆவணங்களின் விபரம் மற்றும் மதுரை, தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட சான்றுப் பொருட்களின் விபரம் உள்ளது என்றும் அந்த ஆவணங்களின் கோப்பு அ.சா.ஆ.179 என்றும் நீதித்துறை நடுவரால் சான்றுப் பொருள்கள் ஒப்படைத்தற்கு R.P.R.No. கொடுக்கப்பட்டுள்ளது என்றும் 01.07.2020-ம் தேதியிட்டு தான் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், தூத்துக்குடி அவர்களிடம் சமர்ப்பித்த Alteration Report அ.சா.ஆ.180 என்றும் அதில் தன்னுடைய கையொப்பம் உள்ளது என்றும் 28.07.2010-ம் தேதியிட்ட

Gazette Notification மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட 06.09.2013–ம் தேதியிட்ட D.I.G., C.B.C.I.D. அவர்களின் Circular அ.சா.ஆ.181 என்றும் நீதித்துறை நடுவர் கோவில்பட்டி அவர்களுக்கு அனுப்பி வைத்த குவிமுச பிரிவு 165 (3)–ன் கீழான அறிக்கை அ.சா.ஆ.182 என்றும் அதில் தன்னுடைய கையொப்பம் உள்ளது என்றும் தூத்துக்குடி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்த Alteration Report அ.சா.ஆ.183 என்றும் VKC Pride கருப்பு கலர் செப்பல் – 1 ஜோடி அ.சா.பொ.38 என்றும் அது பென்னிக்ஸ் அவர்களின் செப்பல் என்றும் அ.சா.பொ.38 ஆனது சாத்தான்குளம் காவல்நிலையத்தை சுற்றியுள்ள கம்பி வேலிக்கு அருகே கைப்பற்றியதாகும் என்றும் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் சோதனையின் போது Samsung கருப்பு கலர் செல்போன் பட்டன் டைப் மற்றும் அதனுடன் உள்ள பேட்டரி கைப்பற்றப்பட்டது என்றும் அது அ.சா.பொ.39 என்றும் அதனுடன் இணைந்த பேட்டரி, 4G Airtel Sim, Jio Sim, Black colour KDM 8 G.P. Memory Card அ.சா.பொ.40 என்றும் ஜெயராஜூடைய தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியின் இரண்டு விசா கார்டுகள் அ.சா.பொ.41 என்றும் ப்ரவுன் கலர் ATM Card pouch அ.சா.பொ.42 என்றும் பென்னிக்சின் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் Rupay Card அ.சா.பொ.43 என்றும் பென்னிக்சின் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியின் விசா கார்டு அ.சா.பொ.44 என்றும் ஜெயராஜ் அவர்களின் பேன் கார்டு மற்றும் தமிழ்நாடு அரசு வணிக நல வாரியம், சென்னை வழங்கிய அடையாள அட்டை, ஆதார் அடையாள அட்டை மற்றும் ஓட்டுநர் உரிமம் அட்டை அ.சா.பொ.45 என்றும் பென்னிக்சின் தாயாரும், ஜெயராஜின் மனைவியுமான செல்வராணி அவர்களிடம் இருந்து தான் பெற்ற ஜெயராஜ் அவர்களின் Photos, பென்னிக்ஸ் அவர்களின் Photos அ.சா.பொ.46 என்றும் Titan கோல்டு கலர் வாட்ச் அ.சா.பொ.47 என்றும் கோமேதக கல் பதித்த தங்க மோதிரம் அ.சா.பொ.48 என்றும் வெள்ளி அரைஞாண் கொடி அ.சா.பொ.49 என்றும் மூன்று ரூ.500/– நோட்டுக்கள், இரண்டு ரூ.200/– நோட்டுக்கள், நான்கு ரூ.100/– நோட்டுக்கள், இரண்டு ரூ.10/– நோட்டுக்கள் மற்றும் ஒரு பத்து ரூபாய் நாணயம் ஆகும் ஆக மொத்தமாக ரூ.2,330/– அ.சா.பொ.50 என்றும் அ.சா.பொ.39 முதல் அ.சா.பொ.45, அ.சா.பொ.47 முதல் அ.சா.பொ.50 வரையிலான சான்றுப் பொருட்கள் சாத்தான்குளம்

காவல்நிலையத்தில் இருந்து சோதனையின்போது D.S.P., C.B.C.I.D., திரு.சரவணன் அவர்களால் கைப்பற்றப்பட்டு, தனது விசாரணைக்கு கொடுக்கப்பட்டது என்றும் மேற்படி சான்றுப்பொருட்கள் அ.சா.ஆ.165 ஆன Search List மூலம் சாட்சிகள் சுரேஷ்ராஜா, கிராம நிர்வாக அலுவலர், சாத்தான்குளம், வள்ளி சுந்தரி, கிராம உதவியாளர், சாத்தான்குளம், D.செந்தூர்ராஜன், Special Tahsildar, சாத்தான்குளம், A.சாமிநாதன், துணை வட்டாட்சியர், சாத்தான்குளம் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது என்றும் wooden stick small நீளம் 2 அடி 8 inch, Diameter 6 inch அளவு கொண்டது ஏற்கனவே அ.சா.பொ.22 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அது சாத்தான்குளம் காவல்நிலையத்தில் நுழைந்தவுடன் இடதுபக்கமுள்ள ரேக்குகளுக்கு பின்னால் இருந்து D.S.P, CBCID, திரு.சரவணன் அவர்களால் சாத்தான்குளம் காவல்நிலைய சோதனையின்போது கைப்பற்றப்பட்டது என்றும் 17.07.2020–ம் தேதியிட்டு தான் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், மதுரை அவர்களுக்கு அனுப்பிய கடிதம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள Form 91 அ.சா.ஆ.184 என்றும் அ.சா.ஆ.184 அ.சா.ஆ.163 முதல் 165 ஆவணங்கள் உள்ளடங்கியதாகும் என்றும் மேற்படி ஆவணத்தில் 17.07.2020–ம் தேதியிட்டு தனது கையொப்பம் உள்ளது என்றும் தனது விசாரணையில் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் சம்பவ தினமான 19.06.2020 அன்று கொரோனா வாலண்டியர்ஸ் யாரும் இல்லை என்று தான் தெரிந்து கொண்டதாகவும் தனது விசாரணையில் இந்த வழக்கில் இறந்து போன ஜெயராஜ் கடந்த 18.06.2020–ம் தேதி இரவு சுமார் 08.30 மணிக்கு அவரது கடை முன்பு நின்று கொண்டிருந்தார் என்றும், அவரை பார்த்து உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் எதற்காக நின்று கொண்டிருக்கிறீர்கள் கிளம்புங்கள் என்று கூறியதாகவும், அதன்பின்பு ஜெயராஜ் பாலகிருஷ்ணனை தரக்குறைவாக ஏசியதை அங்கிருந்த பாலு தலைமை காவலர் கேட்டுள்ளதாகவும், அதன் காரணமாகவும், அதன் தொடர்ச்சியாகவும், 19.06.2020–ம் தேதி இரவு சுமார் 7.30 மணியளவில் இந்த வழக்கில் இறந்து போன ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோர்களை சாத்தான்குளம் காவல்நிலையத்தில் அடித்து துன்புறுத்தியதன் விளைவாக அவர்கள் இறந்துள்ளார்கள் என்றும், சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்தும், ஆவணங்களில் இருந்தும் தனது விசாரணையில் தான்

தெரிந்து கொண்டதாகவும் ஆஜர் எதிரிகள் சம்பவ தினத்தில் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் தான் இருந்தார்கள் என்றும், அவர்களால் தான் இறந்து போன ஜெயராஜ், பென்னிக்ஸ் தாக்கப்பட்டார்கள் என்றும், தனது விசாரணையில் தெரிந்து கொண்டதாகவும் கோவில்பட்டி கிளைச்சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோர்கள் எந்தவித துன்புறுத்தலுக்கும் ஆளாகவில்லை என்று தனது விசாரணையில் தெரிந்து கொண்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

தூத்துக்குடி CBCID குற்ற எண் 1/2020 சட்டப்பிரிவை குவிமுச பிரிவு 176(1A) (i)–ல் இருந்து இதசபிரிவு 342, 302, 201–ன் கீழ் மாறுதல் செய்து திருநெல்வேலி சரக குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு துறை காவல்துறை துணை கண்காணிப்பாளர் தூத்துக்குடி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு அனுப்பியுள்ள அறிக்கை அ.சா.ஆ.185 ஆகவும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் போட்டோ சம்மந்தமான படிவம் 91 அ.சா.ஆ.186 ஆகவும் சாத்தான்குளம் TMB வங்கி கூட்டுறவு சிக்கன நாணய சங்கம் சுப்புலட்சுமி சில்க்ஸ் அரசு மருத்துவமனையில் உள்ள CCTV கேமரா பதிவுகளில் இருந்து Pen Drive–ல் நகல் தொடர்பான படிவம் 91 அ.சா.ஆ.187 ஆகவும் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் கைப்பற்றப்பட்ட ஜெயராஜின் உடமைகள் குறித்து படிவம் 91 அ.சா.ஆ.188 ஆகவும் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் கைப்பற்றப்பட்ட 3 துண்டு சீட்டு மற்றும் ரூ.2,330/– சம்மந்தமான படிவம் 91 அ.சா.ஆ.189 ஆக சாத்தான்குளம் Kings Electricals–ல் கைப்பற்றப்பட்ட Video Recorded 2 TB internal Hard Disk AC DC Adapter தொடர்பான படிவம் 91 அ.சா.ஆ190 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சாட்சிகள் செல்வராணி, ஜோசப், துரை, அர்வின், வீரபாண்டியன் ஆகியோர்களது குவிமுச பிரிவு 161(3)–ன் கீழான வாக்குமூலம் எ.சா.ஆ.6 ஆகவும் மற்றும் எதிரிகள் முருகன், பாலகிருஷ்ணன், ஸ்ரீதர் ஆகியோர்களது காவல் அடைப்பு உத்தரவு எ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6.52 இவ்வழக்கை புலனாய்வு செய்துள்ள CBI கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.விஜய்குமார் சுக்லா அ.சா.52 தான் புது தில்லியில் உள்ள தேசிய புலனாய்வு நிறுவனத்தில் புலனாய்வு நிபுணராகப் பணியாற்றி வருவதாகவும், 2020–ம் ஆண்டில்,

புது தில்லியில் உள்ள சிபிஐயின் எஸ்சி–II கிளையில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராகப் பணியாற்றி வந்ததாகவும் தமிழ்நாடு அரசு வெளியிட்ட DSPE சட்டத்தின் 29.06.2020 தேதியிட்ட அறிவிப்பின்படியும், அதைத் தொடர்ந்து இந்திய அரசு வெளியிட்ட 06.07.2020 தேதியிட்ட DSPE சட்டத்தின் 5–ம் பிரிவின் படியான உத்தரவுபடியும் 07.07.2020 அன்று, CBI, SC–II, புது தில்லி காவல் கண்காணிப்பாளராக இருந்த ஸ்ரீ.தன்மய பெஹெராவால் CBI வழக்குகள் RC 050–2020–S0008 மற்றும் RC 049–2020–S0009 ஆகியவற்றின் FIRகள் பதிவு செய்யப்பட்டன என்றும் அவை Ex.P.191 மற்றும் Ex.P.192 என்றும் அவற்றை 07.07.2020 அன்று, விசாரணைக்கு பெற்றுக்கொண்டதாகவும், 29.06.2020 தேதியிட்ட அறிவிப்பு Ex.P.193 என்றும் 06.07.2020 தேதியிட்ட அறிவிப்பு Ex.P.194 என்றும் இரண்டு FIRகளும் கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தின் FIR எண்கள்.649/2020 மற்றும் 650/2020 ஆகியவற்றின் அடிப்படையில் இருந்தன என்றும் கோவிட்–19 காரணமாக இரண்டு CBI FIRகளும் அதே நாளில் CBI வழக்குகளுக்கான தகுதி வாய்ந்த நீதிமன்றமான மதுரை தலைமை நீதித்துறை நடுவருக்கு சிறப்பு தூதர் மூலம் அனுப்பப்பட்டு 10.07.2020–ம் தேதி மதியம் வழங்கப்பட்டது என்றும் அதன் பிறகு, தூத்துக்குடி தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு நிலுவையில் உள்ள நீதித்துறை கோப்புகள் மற்றும் ஆவணங்களை மதுரை தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு மாற்ற தூத்துக்குடி தலைமை நீதித்துறை நடுவருக்கு கோரிக்கை மனு அனுப்பியதாகவும் அது Ex.P.195 என்றும் 10.07.2020 அன்று தூத்துக்குடி CBCID அலுவலகத்திற்குச் சென்று, கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தின் FIR எண்கள்.649/2020 மற்றும் 650/2020 தொடர்பான ஆவணங்கள் மற்றும் வழக்கு கோப்புகள் மற்றும் மேற்கூறிய CBI வழக்குகள் தொடர்பான அனைத்து தொடர்புடைய ஆவணங்களையும் தூத்துக்குடி CBCID DSP V.அனில்குமாரிடமிருந்து பெற்றதற்கான ரசீது குறிப்பாணை Ex.P.167 என்றும் விசாரணையின்போது, தொடர்புடைய சாட்சிகளை சிபிஐ விசாரித்து அவர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளனர் என்றும், இவ்வழக்கில் உள்ள சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, குற்றம் நடந்த இடத்தை ஆய்வு செய்வதற்காக CFSL நிபுணர்களைக் கொண்ட பல்துறை குழுவை அமைக்க CFSL இயக்குநரிடம்

கோரப்பட்டது என்றும் விசாரணையின் போது, சாத்தான்குளம் காவல் நிலையம் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையின் மருத்துவமனை வளாகம் மற்றும் கோவில்பட்டி துணைச் சிறைச்சாலையின் அறை எண்.3 ஆகியவற்றை தானும் CFSL நிபுணர்கள் குழுவும் ஆய்வு செய்ததாகவும் CBCID–யின் புலனாய்வு அதிகாரி ஏற்கனவே FIR–ன் பிரிவுகளை பிரிவு.176(1–A) Cr.P.C–யிலிருந்து பிரிவுகள் 302, 342, 201 r/w 109 IPC–க்கு மாற்றியுள்ளார் என்றும், அதன்படி, CBCID–யால் நடத்தப்பட்ட விசாரணை மற்றும் தான் மேற்கொண்ட ஆரம்ப விசாரணையின் அடிப்படையில் CBI FIR–ன் பிரிவுகளும் பிரிவு 176(1–A) Cr.P.C–யில் இருந்து பிரிவுகள் 302, 342, 201 r/w 109 IPC–க்கு மாற்றப்பட்டன என்றும், மேலும் இது மதுரை தலைமை நீதித்துறை நடுவருக்கு தெரிவிக்கப்பட்டது என்றும், சாத்தான்குளம் அரசு மருத்துவமனையின் வளாகம், குற்றம் நடந்த இடம், கோவில்பட்டி துணை சிறைச்சாலையின் அறை எண்.3 ஆகியவற்றை CBI குழு ஆய்வு செய்து தோராயமான தள வரைபடங்கள் வரையப்பட்டன என்றும் 11.07.2020–ம் தேதிய பார்வை மகசர் அ.சா.ஆ.196 என்றும் அதில் பொது நபர் சாட்சிகள் S.ஜோசப் மற்றும் I.தேசிங்குராஜா ஆகியோர்கள் கையொப்பமிட்டுள்ளனர் என்றும் மேற்படி குறிப்பாணையில் CBI, SC–II கிளை, புது தில்லியைச் சேர்ந்த ஸ்ரீ.அனுராக் சின்ஹா, இன்ஸ்பெக்டர், ஸ்ரீ.சுஷில்குமார் வர்மா, சப் இன்ஸ்பெக்டர் மற்றும் ஸ்ரீ.சச்சின், சப் இன்ஸ்பெக்டர் ஆகியோர் கையொப்பமிடுள்ளனர் என்றும் மேற்படி பார்வை மகஜர் 20.06.2020 அன்று காலை, P.ஜெயராஜையும் அவரது மகன் பென்னிக்ஸினையும் மருத்துவ பரிசோதனைக்காக குற்றம் சாட்டப்பட்ட சில காவல்துறை அதிகாரிகள் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தபோது நடந்த நிகழ்வுகளின் வரிசையுடன் தொடர்புடையது என்றும் மேற்படி பார்வை மகஜரில் கையொப்பமிட்ட பொதுநபர் சாட்சிகள், மேற்படி நிகழ்வுகளை வரிசைப்படுத்தியும் சாட்சியங்களை அழிக்கும் நோக்கில் இறந்த இருவரின் இரத்தக்கறை படிந்த ஆடைகள் வீசப்பட்ட குப்பைத்தொட்டியை அடையாளம் காட்டியும் சாட்சியமளித்துள்ளனர் என்றும், அது 01.07.2020–ம் தேதியிட்ட பார்வை மகஜர் அ.சா.ஆ.196–ல் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் மேற்கூறிய நடவடிக்கைகளின் போது இட அடையாளத்தின் தோராயமான வரைபடமும் தயாரிக்கப்பட்டது என்றும்

அதுவும் இரண்டு பொதுநபர் சாட்சிகள் உட்பட சம்பந்தப்பட்ட அனைவராலும் கையொப்பமிடப்பட்டது என்றும் மேலும் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையின் மருத்துவ அதிகாரிகளாலும் கையொப்பமிடப்பட்டது என்றும் அந்த வரைபடம் அ.சா.ஆ.197 என்றும் இரண்டு பொதுநபர் சாட்சிகள் அளித்த சாட்சியத்தின்படி மாதிரி வரைபடத்தில் இறந்த இருவரும் மருத்துவமனை கட்டிடத்திற்குள் அழைத்துச் செல்லப்பட்ட இடங்களும், இறந்த இருவரின் இரத்தக்கறை படிந்த ஆடைகள் வீசப்பட்ட குப்பைத் தொட்டிகளும் குறிக்கப்பட்டுள்ளன என்றும் 12.07.2020 அன்று, சாத்தான்குளம் காவல் நிலைய வளாகத்தை தான் பார்வையிட்டதாகவும் 19.06.2020–20.06.2020–க்கு இடைப்பட்ட இரவில் இறந்தவர்கள் வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட காவல் நிலைய கட்டிடத்திற்குள் உள்ள இடங்களின் ஒரு தோராயமான வரைபடம் சாத்தான்குளம் காவல் நிலையத்தின் அப்போதைய காவல் ஆய்வாளராக இருந்த இன்ஸ்பெக்டர் பெர்னார்ட் சேவியர் முன்னிலையில் தயாரிக்கப்பட்டது என்றும் அதில் காவல் ஆய்வாளர் உட்பட சம்பந்தப்பட்ட அனைவரும் கையொப்பமிட்டனர் என்றும் அந்த வரைபடம் அ.சா.ஆ.198 என்றும் அதில் விசாரணை CBI–க்கு மாற்றப்படுவதற்கு முன்பு CFSL சேகரித்த இரத்தம் தொய்ந்த புள்ளிகளும் சிவப்பு மையால் குறிப்பிடப்பட்டுள்ளன என்றும் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் நியமிக்கப்பட்ட காவல்துறை அதிகாரிகளின் பெயரளவிலான பட்டியலை இன்ஸ்பெக்டர் பெர்னார்ட் சேவியரிடமிருந்து சேகரித்ததாகவும், அவர் அந்த பட்டியலின் மூன்று பக்கங்களிலும் கையொப்பமிட்டுள்ளார் என்றும் அந்த பட்டியல் அ.சா.ஆ.199 என்றும் குற்றம் சாட்டப்பட்ட அனைத்து காவல்துறை அதிகாரிகளும் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் தொடர்புடைய தேதி மற்றும் நேரத்தில் பணியமர்த்தப்பட்டதை அ.சா.ஆ.199 உறுதி செய்கிறது என்றும், மேலும் வழக்கு தொடர்பான 35 மொபைல் எண்களின் CDRகள், CAF மற்றும் SDR ஆகியவற்றை வழங்குமாறு கோரி தமிழ்நாடு BSNL–இன் வட்ட நோடல் அதிகாரிக்கு 14.07.2020–ம் தேதி கடிதம் அனுப்பப்பட்டது என்றும் அந்த கடிதம் அ.சா.ஆ.200 என்றும் அதில் தனது கையொப்பம் உள்ளது என்றும் சாத்தான்குளத்தில் மேலும் சில நடவடிக்கைகளை நடத்த வேண்டியிருந்ததால், மேற்கூறிய நடவடிக்கைகளுக்காக தமிழ் அறிந்த அதிகாரியை

நியமிக்கக் கோரி, மதுரை, வருமான வரி இணை ஆணையருக்கு 15.07.2020–ம் தேதி ஒரு கடிதம் அனுப்பியதாகவும் அந்த கடிதம் அ.சா.ஆ.201 என்றும் அதில் தனது கையெழுத்து உள்ளது என்றும் அதேபோல், 15.07.2020–ம் தேதியிட்ட மற்றொரு கடிதம், மத்திய கலால்துறையின் இணை ஆணையர், மதுரை அவர்களுக்கு அனுப்பியதாகவும் அந்த கடிதம் அ.சா.ஆ.202 என்றும் 15.07.2020 அன்று, தானும் சிபிஐ குழு உறுப்பினர்களும் பொதுநபர் சாட்சிகளான வருமான வரி ஆய்வாளர் ஸ்ரீ.உமா சிதம்பரம் மற்றும் ஜி.எஸ்.டி மற்றும் மத்திய கலால்துறை ஆய்வாளர் ஸ்ரீ.எம். கிருஷ்ணன் ஆகியோரும் சாத்தான்குளம் காவல் நிலைய வளாகத்தில் குற்றம் நடந்த இடத்தை பார்வையிட்டதாகவும் 19.06.2020 அன்று மாலை மற்றும் 20.06.2020 காலைக்கு இடைப்பட்ட இரவில் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் நடந்த நிகழ்வுகளின் வரிசையை உறுதிப்படுத்த, சம்பவம் நடந்த நேரத்தில் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் பணியில் இருந்த WHC பியூலா செல்வகுமாரி மற்றும் WHC ரேவதி ஆகிய இருபெண் காவலர்களும் சுட்டிக்காட்டியதன்படி நடத்தப்பட்ட முழு நடவடிக்கைகள் குறித்தும் பார்வை மகஜர் தயார் செய்யப்பட்டது என்றும் அதில் தானும் மேற்படி இரண்டு பெண் காவலர்களும் பொதுநபர் சாட்சிகளும் CBCID–யின் முந்தைய புலனாய்வு அதிகாரி ஸ்ரீ.வி.அனில்குமார் உட்பட சம்பந்தப்பட்ட அனைவரும் கையொப்பமிடப்பட்டுள்ளதாகவும் அது Ex.P.102 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அதில் கொடூரமாக சித்திரவதை செய்த இடங்கள், வரைபடத்தில் சிகப்பு மையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அது ஏற்கனவே Ex.P.74 மற்றும் Ex.P.75 எனக் குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும் Ex.P.74 வரைபடத்தில் ரேவதி உட்பட சம்பந்தப்பட்ட அனைவரும் கையொப்பமிட்டுள்ளனர் என்றும் Ex.P.75 வரைபடத்தில் WHC பியூலா செல்வகுமாரி உட்பட சம்பந்தப்பட்ட அனைவரும் கையொப்பமிட்டுள்ளனர் என்றும் மேற்கூறிய நடவடிக்கைகளின் போது, சப் இன்ஸ்பெக்டர் அறையில் கிடந்த மர மேசை இறந்த நபர்களை கொடூரமாக சித்திரவதை செய்ய பயன்படுத்தப்பட்டது என்பது பெண் காவலர்களால் சுட்டிக்காட்டப்பட்டது என்றும் அது பொதுநபர் சாட்சிகளான உமா சிதம்பரம் மற்றும் எம்.கிருஷ்ணன் முன்னிலையில் 15.07.2020–ம் தேதியிட்ட குறிப்பாணை மூலம் கைப்பற்றப்பட்டது என்றும் அந்த கைப்பற்றுகை குறிப்பாணை

அ.சா.ஆ.76 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் மர மேசை பாதுகாப்பு கருதி சாத்தான்குளம் காவல் நிலைய துணை ஆய்வாளர் அறையில் வைக்கப்பட்டது என்றும் மேலும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அந்த அறை பொதுநபர் சாட்சிகள் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டது என்றும் பாதுகாப்பாக வைத்திருக்கவும், தேவைப்படும்போது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் கோரி 15.07.2020-ம் தேதியிட்ட ஒரு கடிதமும் சாத்தான்குளம் காவல் நிலைய காவல் அதிகாரியடம் வழங்கப்பட்டது என்றும் அந்தக் கடிதம் அ.சா.ஆ.203 என்றும் கைப்பற்றப்பட்ட மேஜை ஏற்கனவே M.O.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் காவலில் உள்ள ஐந்து குற்றம் சாட்டப்பட்ட நபர்களின் புகைப்படங்கள் மற்றும் கைரேகைகளை விசாரணை நோக்கத்திற்காக எடுக்குமாறு 16.07.2020-ம் தேதி மதுரை தடய அறிவியல் பிரிவு பொறுப்பாளருக்கு கடிதம், அனுப்பப்பட்டது என்றும் அந்த கடிதம் அ.சா.ஆ.204 என்றும் 18.07.2020 தான் சிபிஐ குழுவுடன் கோவில்பட்டி துணை சிறைச்சாலைக்கு சென்று இறந்த இருவரும் அடைக்கப்பட்டிருந்த அறை எண்.3-ன் பதிவுகளை ஆய்வு செய்ததாகவும் அந்த நடவடிக்கைகள் குறித்து 18.07.2020-ம் தேதி பார்வை மகஜர் ஒன்று தயாரித்ததாகவும் அதில் கோவில்பட்டி துணை சிறைச்சாலை கண்காணிப்பாளர் திரு.எம்.சங்கர் மற்றும் கோவில்பட்டி துணை சிறைச்சாலையின் தலைமை வார்டன் திரு.கே.அழகர்சாமி உட்பட சம்பந்தப்பட்ட அனைவரும் கையொப்பமிட்டுள்ளனர் என்றும் மேற்கூறிய நடவடிக்கைகளின் போது, அறை எண்.3-ல் இறந்த இருவருடனும் அடைக்கப்பட்டிருந்த மூன்று கைதிகள் நீதிமன்றக் காவலில் இருந்தனர் என்றும் அவர்களும் பரிசோதிக்கப்பட்டனர் என்றும் மேலும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ்க்கு கடுமையான காயங்கள் ஏற்பட்டிருந்ததை அவர்கள் உறுதிப்படுத்தினர் என்றும் மேற்கூறிய நடவடிக்கைகளின் போது, விசாரணை நோக்கத்திற்காக முக்கியமான சில ஆவணங்கள் பறிமுதல் குறிப்பாணை மூலம் கோவில்பட்டி துணைச் சிறைச்சாலையின் அப்போதைய சிறை கண்காணிப்பாளர் ஸ்ரீ.எம்.சங்கரிடமிருந்து கைப்பற்றப்பட்டன என்றும் அவை ஏற்கனவே அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் 18.07.2020-ம் தேதியிட்ட பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் 18.07.2020-ம்

தேதியிட்ட பறிமுதல் மகஜர் மூலம் கைப்பற்றப்பட்ட கைதிகளின் அனுமதி புத்தகம் ஏற்கனவே அ.சா.ஆ.205 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அதே தேதியில் பறிமுதல் செய்யப்பட்ட மருத்துவர் பதிவேடு ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் 16.06.2020 முதல் 21.06.2020 வரையிலான காலகட்டத்திற்கான கைதிகளின் பெயரளவு பட்டியல் ஏற்கனவே அ.சா.ஆ.13 ஆகவும் கோவில்பட்டி துணை சிறைச்சாலையின் அதிகாரிகளின் உள் / வெளி பதிவேட்டின் சான்றளிக்கப்பட்ட பிரதி ஏற்கனவே அ.சா.ஆ.4 ஆகவும், குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் பென்னிக்ஸ் உடன் அடைக்கப்பட்டிருந்த ஆறு கைதிகளின் விவரங்கள் அடங்கிய ஆவணம் ஏற்கனவே அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் பென்னிக்ஸின் ரிமாண்ட் வாரண்டுகளின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்கள் ஏற்கனவே அ.சா.ஆ.206 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அதில் அ.சா.ஆ.1, 16, 18 மற்றும் 20 ஆகியவை அடங்கும் என்றும் அவை அனைத்தும் அ.சா.ஆ.8 பறிமுதல் குறிப்பாணை மூலம் கைப்பற்றப்பட்டது என்றும் ஜெயராஜின் ரிமாண்ட் வாரண்டுகளின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்கள் ஏற்கனவே அ.சா.ஆ.207 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அதில் அ.சா.ஆ.12, அ.சா.ஆ.15, அ.சா.ஆ.17 மற்றும் அ.சா.ஆ.19 ஆகியவை அடங்கும் என்றும் அவை அனைத்தும் அ.சா.ஆ.8 பறிமுதல் குறிப்பாணை மூலம் கைப்பற்றப்பட்டது என்றும் 18.07.2020–ம் தேதி கோவில்பட்டி துணை சிறைச்சாலையின் அறை எண்.3 குறித்து தோராயமான வரைபடம் தயாரிக்கப்பட்டது என்றும் அதில் சிறை கண்காணிப்பாளர் ஸ்ரீ.எம்.சங்கர் உட்பட சம்பந்தப்பட்ட அனைவராலும் கையொப்பமிட்டுள்ளனர் என்றும் 10.07.2020 தேதியிட்ட CBCID–யிடமிருந்து தான் கையகப்படுத்திய ஆவணங்களில் கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண்.649/2020 வழக்கு நாட்குறிப்பு (அ.சா.ஆ.57) மற்றும் குற்ற எண்.650/2020–ன் வழக்கு நாட்குறிப்பு (அ.சா.ஆ.58) தூத்துக்குடி தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் டி.எஸ்.பி., சி.பி.சி.ஐ.டி. தாக்கல் செய்த 06.07.2020–ம் தேதியிட்ட கடிதம், கோவில்பட்டி நீதித்துறை நடுவரால் கைப்பற்றப்பட்ட பொருட்கள் மற்றும் தூத்துக்குடி தலைமை நீதித்துறை நடுவர் காவலில் உள்ள சொத்துக்களின்

பட்டியலைப் பார்க்க அனுமதி கோரிய கடிதம் அ.சா.ஆ.168 இறந்த ஜெயராஜ் மற்றும் ஜெ.பென்னிக்ஸ் ஆகியோரின் அசல் பிரேத பரிசோதனை அறிக்கைகள் அ.சா.ஆ.86, அ.சா.ஆ.87 திருமதி.ஆர்.ரேவதி கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.I. அவர்களிடம் அளித்த வாக்குமூலம் அ.சா.ஆ.150 உள்ளடங்கும் என்றும் தூத்துக்குடி நீதித்துறை நடுவர் எண்.3 அவர்களிடம் ரேவதி குவிமுசபிரிவு 164–ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்தின் உண்மைநகல் அ.சா.ஆ.208 என்றும் சென்னை உயர்நீதிமன்றத்தின் மாண்புமிகு மதுரை கிளை பதிவாளர் (நீதித்துறை) அவர்களின் 30.06.2020 தேதியிட்ட கடிதம் மற்றும் அதன் இணைப்புகள் அ.சா.ஆ.209 என்றும் அதே நாளில், 10.07.2020 தேதி சிபிசிஐடி டிஎஸ்பி ஸ்ரீ.வி.அனில்குமார் (பி.டபிள்யூ.51) அவர்களிடமிருந்து மேலும் சில ஆவணங்கள் பெறப்பட்டன என்றும் அவை ஏற்கனவே அ.சா.ஆ.169 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் கோவில்பட்டி அரசு மருத்துவமனையின் மூத்த உதவி அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர்.டி.பாலசுப்பிரமணியனிடமிருந்து தொடர்புடைய ஆவணங்களை CBI SC–II இன் இன்ஸ்பெக்டர் பூரன்குமார் 20.07.2020 தேதி அ.சா.ஆ.37 குறிப்பாணை மூலம் கைப்பற்றியுள்ளார் என்றும் 22.07.2020 அன்று, மதுரை உதவி ஆணையர் ஐ.எஸ்., அவர்களுக்கு 22.07.2020 தேதியிட்ட ஒரு கடிதம் அனுப்பப்பட்டது என்றும் அதில், குற்றம் சாட்டப்பட்ட மூன்று நபர்களான செல்லத்துரை (A7), சாமதுரை (A5) மற்றும் வெயிலுமுத்து (A9) ஆகியோரின் புகைப்படங்கள் மற்றும் கைரேகைகளை எடுக்க சில அதிகாரிகளை நியமிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது என்றும் அதன்படி மேற்கண்ட மூன்று குற்றவாளிகளின் கைரேகை பதிவுகள் எடுக்கப்பட்டன என்றும் அந்த ஆவணங்கள் Ex.P.210 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் மேலும், 15.06.2020 முதல் 30.06.2020 வரையிலான காலத்திற்கான சாத்தான்குளம் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தின் ஜூன் 2020 மாதத்திற்கான பணிப் பதிவேட்டை வழங்குமாறு தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளருக்கு 31.07.2020 தேதி கடிதம் அனுப்பியதாகவும் அந்த கடிதம் அ.சா.ஆ.211 என்றும் ஊரடங்கு உத்தரவை அமல்படுத்துவதற்காக வெளியிடப்பட்ட அனைத்து உத்தரவுகள், சுற்றறிக்கைகள்/நிலையான உத்தரவுகள்/அறிவுறுத்தல்களின் சான்றளிக்கப்பட்ட

நகல்களை வழங்குமாறு தூத்துக்குடி மாவட்ட ஆட்சியருக்கு 31.07.2020 தேதி கடிதம் அனுப்பப்பட்டது என்றும் அந்த கடிதம் அ.சா.ஆ.212 என்றும் இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள 10 குற்றம் சாட்டப்பட்ட நபர்களின் பணிப் பதிவேடுகளை வழங்குமாறு கோரி தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு 31.07.2020 தேதியிட்ட கடிதம் அனுப்பப்பட்டது என்றும் அந்த கடிதம் அ.சா.ஆ.213 என்றும் 31.07.2020 தேதியிட்ட தனது கடிதத்திற்கு பதிலளிக்கும் விதமாக, தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி., இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள 10 குற்றம் சாட்டப்பட்ட காவல்துறை அதிகாரிகளின் பணிப்பதிவுகளின் சான்றளிக்கப்பட்ட நகல்களை 01.08.2020–ம் தேதியிட்ட கடிதத்தின் மூலம் அனுப்பியுள்ளார் என்றும் அவை அ.சா.ஆ.214 என்றும் 14.07.2020 தேதியிட்ட ஜெயராஜின் இறுதி மரண அறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள் அ.சா.ஆ.215 என்றும் 14.07.2020 தேதியிட்ட பென்னிக்ஸின் இறுதி பிரேத பரிசோதனை அறிக்கையின் சான்றளிக்கப்பட்ட நகல் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள் அ.சா.ஆ.216 என்றும் ஜெயராஜின் 24.06.2020 தேதியிட்ட ஆரம்ப பிரேத பரிசோதனை அறிக்கையின் சான்றளிக்கப்பட்ட நகல் அ.சா.ஆ.217 என்றும் பென்னிக்சின் பிரேத பரிசோதனையை நடத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கோரி, கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1, எம்.எஸ்.பாரதிதாசன் (பி.டபிள்யூ.50), திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரிக்கு 24.06.2020 தேதி அனுப்பியுள்ள கடிதம் அ.சா.ஆ.218 என்றும் பென்னிக்ஸின் 24.06.2020 தேதியிட்ட ஆரம்ப பிரேத பரிசோதனை அறிக்கையின் சான்றளிக்கப்பட்ட நகல் அ.சா.ஆ.219 என்றும் மதுரை தலைமை நீதித்துறை நடுவர், இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட பொருட்களை வேதியியல் பரிசோதனை மற்றும் அறிக்கைக்காக புது தில்லியின் CFSL இயக்குநருக்கு அனுப்பியது சம்மந்தமான 06.08.2020 தேதியிட்ட கடிதத்தின் நகல், இணைப்பு–I, II, வழக்கின் வரலாறு ஆகியவை அ.சா.ஆ.220 என்றும் அதை தான் முன்மொழிந்து 06.08.2020 தேதி CFSL, இயக்குநர், புது தில்லிக்கு அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.221 என்றும் புது தில்லி CFSL–ல் இருந்து 10.08.2020 தேதி பெறப்பட்ட ஒப்புகை அ.சா.ஆ.222 என்றும் நீதிமன்ற காவலின் போது பால்துரை இறந்துவிட்டதற்கு பெறப்பட்ட கணினிமயமாக்கப்பட்ட இறப்புச்சான்றிதழ் அ.சா.ஆ.223

என்றும் 24.03.2020 தேதி 18.00 மணி முதல் 01.04.2020—ம் தேதி 06.00 மணி வரையிலான காலத்திற்கான தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் பொது சுகாதார சட்டத்தின் Cr.P.C. r/w பிரிவு 75—ன் பிரிவு 144—ன் படி பிறப்பித்த கோவிட் வழிகாட்டுதல் தொடர்பாக தமிழ்நாடுஅரசு பிறப்பித்துள்ள ஆணை அ.சா.ஆ.224 என்றும் 31.05.2020 தேதியிட்ட சுற்றறிக்கையின் மூலம் 30.06.2020 வரை அது மேலும் நீட்டிக்கப்பட்டது என்றும் அதில் அ.சா.ஆ.21 அடங்கும் என்றும் தூத்துக்குடி கூடுதல் ஆட்சியர், நிர்வாக நடுவரை விடுவித்து 26.08.2020 தேதி பிறப்பிக்கப்பட்ட நடவடிக்கைகளின் நகல் அ.சா.ஆ.225 என்றும் டி.என்.ஏ பரிசோதனைக்கு ஏ.செல்வராணி அளித்த ஒப்புதல், இறந்த ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்களின் இறப்புச் சான்றிதழ்கள், இறந்த ஜெயராஜின் மனைவி செல்வராணியின் இ—பான் கார்டின் நகல்கள் அ.சா.ஆ.226 என்றும் மதுரை, தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவரது உத்தரவுக்கு இணங்க, FSL, மதுரை வழங்கிய FDA அட்டை/இரத்த அட்டையில், இறந்த ஜெயராஜின் மனைவி மற்றும் இறந்த பென்னிக்ஸின் தாயார் திருமதி.செல்வராணியின் இரத்த மாதிரிகளை சேகரிக்க ஏற்பாடு செய்யுமாறு கோரி, திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையின் டீனுக்கு 01.09.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டது என்றும் அக்கடிதத்திற்கு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியின் விபத்து மருத்துவ அதிகாரி டாக்டர் கே.பிரகாஷ் போஸ் ஒப்புகை அளித்துள்ளார் என்றும் அது அ.சா.ஆ.227 என்றும், திருமதி.செல்வராணி (P.W.3) அவர்களின் இரத்த மாதிரிகளை சேகரிப்பதற்காக ஆய்வகத்தால் எண்.Cat எண்.WB120410 மற்றும் லாட் எண்.98123430 ஆகியவற்றைக் கொண்ட ஒரு FDA அட்டை வழங்கப்பட்டதாக மதுரை பிராந்திய தடய அறிவியல் ஆய்வகத்தின் துணை இயக்குநர், மதுரை தலைமை நீதித்துறை நடுவருக்கு 01.09.2020 தேதியிட்ட கடிதத்தை அனுப்பியுள்ளார் என்றும் அக்கடிதம் அ.சா.ஆ.228 என்றும் டி.என்.ஏ பரிசோதனைக்கு பொதுநபர் சாட்சிகள் முன்னிலையில் செல்வராணியின் இரத்த மாதிரியை சேகரித்தது தொடர்பாக திருமதி.செல்வராணியின் புகைப்படம் அடங்கிய டி.என்.ஏ சோதனைக்கான உயிரியல் மாதிரி சேகரிப்பு படிவம் அந்த இடத்திலேயே நிரப்பப்பட்டு தயாரிக்கப்பட்டது என்றும், அதில் தானும் டாக்டர்

கே.பிரகாஷ் போஸ், மற்றும் சாட்சி தெசிங்குராஜாவும் கையெழுத்திட்டுள்ளதாகவும் அந்த படிவம் அ.சா.ஆ.229 என்றும் சாத்தான்குளம் நீதித்துறை நடுவர் மன்றத்தால் இறந்த ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்களுக்கு நீதிமன்ற காவல் வழங்கி பிறப்பிக்கப்பட்ட 20.06.2020 தேதியிட்ட அசல் ரிமாண்ட் உத்தரவு கோவில்பட்டி துணை சிறைச்சாலை சிறை கண்காணிப்பாளரிடமிருந்து 03.09.2020 தேதி பெறப்பட்டது என்றும் அது குறித்த கடிதம் அ.சா.ஆ.230 என்றும் சாத்தான்குளம் காவல் நிலையத்தின் காவல்துறையினரின் பெயரளவிலான பட்டியல் விசாரணை நோக்கத்திற்காகப் பெறப்பட்டது என்றும் அது அ.சா.ஆ.231 என்றும் மேலும் சாத்தான்குளம் காவல் நிலையத்தின் பொது குறிப்புப் பதிவேடும் விசாரணை நோக்கத்திற்காகப் பெறப்பட்டது என்றும் அதில் 1 முதல் 66 வரை எழுதப்பட்டிருந்தது என்றும் பொதுகுறிப்புப்பதிவேடு அ.சா.ஆ.232 என்றும் மேலும் சாத்தான்குளம் காவல் நிலையத்தின் மருத்துவக் குறிப்பு பதிவேடும் விசாரணை நோக்கத்திற்காகப் பெறப்பட்டது என்றும் அது அ.சா.ஆ.111 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அதில் பக்கம் பக்கங்கள் 1 முதல் 24 எழுதப்பட்டுள்ளது என்றும் தூத்துக்குடியின் கற்றறிந்த நீதித்துறை நடுவர் எண்.III ஸ்ரீ.கே.சக்திவேல் அவர்களால் Cr.P.C. பிரிவு 164–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட WHC ரேவதியின் வாக்குமூலத்தின் சான்றளிக்கப்பட்ட நகலும் அதன் தட்டச்சு செய்யப்பட்ட பதிப்பும் அ.சா.ஆ.233 என்றும் CFSL, புது தில்லியின் 07.09.2020 தேதியிட்ட ஒப்புகை ரசீது அ.சா.ஆ.234 என்றும் இறந்த பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜின் மரணத்திற்கான காரணம் மற்றும் வழக்கு தொடர்பான வேறு ஏதேனும் கருத்து குறித்து முழுமையான கருத்தை வழங்குவதற்காக மருத்துவ வாரியத்தால் சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிடுமாறு கோரிக்கை விடுத்து இந்த வழக்கில் அமைக்கப்பட்ட பல்துறை மருத்துவ வாரியத்தின் தலைவர் பேராசிரியர் ஆதர்ஷ் குமாருக்கு 08.09.2020–ம் தேதி கடிதம் அனுப்பப்பட்டது என்றும் அந்த கடிதம் அ.சா.ஆ.235 என்றும் சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட CFSL குழுவை அனுப்புமாறு கோரி, 08.09.2020 தேதி CFSL, புது தில்லி இயக்குநருக்கு கடிதம் அனுப்பப்பட்டது என்றும் அந்த கடிதம் அ.சா.ஆ.236 என்றும் CFSL–ன் பயோ பிரிவால் மாதிரி முத்திரைகளுடன் ஒரு சீல் செய்யப்பட்ட பார்சலைப் பெற்றது சம்மந்தமான CFSL,

புது தில்லியின் 07.09.2020 தேதியிட்ட ஒப்புகை ரசீது அ.சா.ஆ.237 என்றும் மொபைல் போன் தொடர்பாக இந்திய சாட்சியச்சட்டத்தின் u/s.65–B சான்றிதழுடன், CDR/CAF போன்றவற்றை வழங்குமாறு கோரி, சென்னை பாரதி ஏர்டெல்லின் நோடல் அதிகாரிக்கு 14.09.2020 தேதியிட்ட கடிதம் அனுப்பப்பட்டது என்றும் அந்த கடிதம் அ.சா.ஆ.238 என்றும் 06.08.2020 தேதியிட்ட D.No.1391–ல் உள்ள கடிதம் மூலம் தான் சேகரிக்கப்பட்ட பொருட்களில் உள்ள இரத்தம்/இரத்தக் கறைகளை ஒப்பிட்டுப் பார்க்குமாறு கோரியதாகவும், அது தொடர்பாக மதுரை, தலைமை நீதித்துறை நடுவர் 03.09.2020 தேதி CFSL, புது தில்லிக்கு கோரிக்கை சேகரிக்கப்பட்ட பொருட்களில் உள்ள இரத்தம்/இரத்தக்கறைகளை ஒப்பிட்டுப் பார்க்குமாறும், கடிதம் அனுப்பினார் என்றும் அது தொடர்பாக 04.09.2020–ம் தேதி டெல்லி CFSL–க்கு தான் கடிதம் அனுப்பியதாகவும் அது அ.சா.ஆ.239 என்றும் மதுரை தலைமை நீதித்துறை நடுவர் திருமதி செல்வராணி (P.W.3) அவர்களின் இரத்த மாதிரியை அனுப்பிய 03.09.2020 தேதியிட்ட கடிதத்தின் நகல் அ.சா.ஆ.240 என்றும் செல்வராணின் இரத்த மாதிரி எடுக்கப்பட்ட FTA Card–ஐ இரத்தம் படிந்த மற்ற வழக்கு சொத்துடன் மரபணு ஒப்பீடு செய்து அறிக்கை தாக்கல் செய்யக்கோரி மதுரை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் புதுடெல்லி மத்திய தடய அறிவியல் ஆய்வக இயக்குநருக்கு அனுப்பியுள்ள கடிதம் அ.சா.ஆ.241 என்றும் புதுடெல்லி தடய அறிவியல் ஆய்வக வல்லுநர் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் சுவர்களில் படிந்திருந்த இரத்த தடய மாதிரிகளை சேகரித்தது தொடர்பான கைப்பற்றுகை அத்தாட்சி அ.சா.ஆ.242 என்றும் புதுடெல்லி தடய அறிவியல் ஆய்வக வல்லுநர் கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலை சுவர்களில் 8 இடங்களில் படிந்திருந்த இரத்த தடய மாதிரிகளை சேகரித்தது தொடர்பான கைப்பற்றுகை அத்தாட்சி அ.சா.ஆ.243 என்றும் மேற்படி வழக்கு தொடர்பாக, 18 சீல் செய்யப்பட்ட பார்சல்கள் மற்றும் ஒன்பது சீல் செய்யப்படாத புகைப்படப் பார்சல்கள் (20 புகைப்படங்களைக் கொண்டவை) ஆகியவற்றை ஆய்வு செய்வது தொடர்பாக 06.08.2020–ம் தேதியிட்ட கடிதம் எண்.1391–க்கு பதிலளிக்கும் விதமாக, புது தில்லியின் CFSL ஆல் வழங்கப்பட்ட 08.09.2020 தேதியிட்ட உயிரியல் பரிசோதனை மற்றும் DNA விவரக்குறிப்பு அறிக்கை அ.சா.ஆ.244 என்றும் அது இவ்வழக்கு

தொடர்பாக மதுரை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவரால் அனுப்பிவைக்கப்பட்ட 18 சீல் செய்யப்பட்ட பார்சல்கள் மற்றும் ஒன்பது சீல் செய்யப்படாத புகைப்படப் பார்சல்கள் (20 புகைப்படங்களைக் கொண்டவை) ஆகியவற்றை ஆய்வு செய்தது தொடர்பான அறிக்கை என்றும் அதில் சேகரிக்கப்பட்ட Q–3 (துண்டு), Q–4 (லுங்கி), Q–5 (லுங்கி), Q–6 (பெட்ஷீட்), Q–9–1 (பருத்தி நூல்கள்), Q–9–4 (பருத்தி நூல்கள்), Q–12–1 (பருத்தி நூல்கள்) மற்றும் Q–12–2 (பருத்தி நூல்கள்) ஆகியவற்றிலிருந்து பகுத்தறியப்பட்ட DNA மனித ஆண் இனத்தை சார்ந்தது என்றும், அது Q–19–1 (இறந்த ஜெயராஜின் லுங்கி) மற்றும் Q–19–2 (இறந்த ஜெயராஜின் சட்டை) ஆகியவற்றிலிருந்து பகுத்தறியப்பட்ட DNA சுயவிவரத்துடன் அது ஒத்துப்போகிறது என்றும் நிபுணர் தெளிவுபட கருத்து தெரிவித்துள்ளார் என்றும் அதேபோல், Q–7 (சட்டை), Q–13–1 (பருத்தி நூல்கள்), Q–14–1 (பருத்தி நூல்கள்), Q–15 (பருத்தி நூல்கள்) மற்றும் Q–20 (லத்தி) ஆகியவற்றிலிருந்து பகுத்தறியப்பட்ட DNA மனித ஆண் இனத்தை சார்ந்தது என்றும், அவை Q–16–1 (இறந்த பென்னிக்ஸின் லுங்கி மற்றும் Q–16–2 (இறந்த பென்னிக்ஸின் சட்டை ஆகியவற்றிலிருந்து பகுத்தறியப்பட்ட DNA சுயவிவரத்துடன் ஒத்துப்போகிறது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் இது சாத்தான்குளம் காவல்நிலையத்தில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் கடுமையாக தாக்கப்பட்டதையும் அவர்களுக்கு இரத்த காயங்கள் ஏற்படுத்தப்பட்டதையும் உறுதிபடுத்துவதாக உள்ளது என்றும் நிணநீர் பரிசோதனை சம்மந்தமாக புது தில்லியில் உள்ள CFSL இன் சீராலஜி பிரிவால் வழங்கப்பட்ட 04.09.2020 தேதியிட்ட அறிக்கை அ.சா.ஆ.245 என்றும் புது தில்லியில் உள்ள CFSL இன் உயிரியல் பிரிவால் வழங்கப்பட்ட 17.09.2020 தேதியிட்ட DNA சுயவிவர அறிக்கை அ.சா.ஆ.246 என்றும் அதில் சேகரிக்கப்பட்ட Q–7 (சட்டை), Q–13–1 (பருத்தி நூல்கள்), Q–14–1 (பருத்தி நூல்கள்), Q–15 (பருத்தி நூல்கள்), Q–20 (லத்தி) மற்றும் Q–16–1 மற்றும் Q–16–2 (இறந்த பென்னிக்ஸின் ஆடை) ஆகியவற்றிலிருந்து பகுத்தறியப்பட்ட DNA சுயவிவரம், 06.08.2020–ம் தேதியிட்ட கடிதம் எண்.1391 மூலம் அனுப்பப்பட்ட திருமதி.ஜே.செல்வராணியின் FDA அட்டையிலிருந்த இரத்தத்தில் இருந்து பகுதறியப்பட்ட DNA சுயவிவரத்துடனும் Q–3 (துண்டு) Q–4 (லுங்கி), Q–5 (லுங்கி), Q–6 (பெட்ஷீட்), Q–9–1 (பருத்தி நூல்கள்), Q–9–4

(பருத்தி நூல்கள்), Q–12–1 (பருத்தி நூல்கள்) மற்றும் Q–12–2 (பருத்தி நூல்கள்), மற்றும் ஜெயராஜின் உடைகளான Q–19–1 மற்றும் Q–19–2 ஆகியவற்றிலிருந்து பகுத்தறியப்பட்ட DNA சுயவிவரத்துடன் ஒத்துப்போகிறது என்றும் கண்டறியப்பட்டுள்ளது என்றும் 01.10.2020 தேதி தேசிங்குராஜா (P.W.5) என்பவரிடமிருந்து P.ஜெயராஜின் ஒரு புகைப்படத்தையும், இறந்த J.பென்னிக்ஸின் ஒரு புகைப்படத்தையும் பெற்றதாகவும் அதுகுறித்த இரசீது அ.சா.ஆ.247 என்றும் இறந்த ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்களின் அருகிலுள்ள கடைகள் மற்றும் சாத்தான்குளம் அரசு மருதுவமனையிலிருந்து கைப்பற்றப்பட்ட ஹார்டு டிஸ்க்குகளின் DVR–கள் போன்ற காட்சிப் பொருட்களிலிருந்து கிடைக்கும்/மீட்டெடுக்கப்பட்ட தரவுகளை ஒப்பிட்டுப் பார்க்க, 19.05.2021–ம் தேதியிட்ட CFSL இயக்குநருக்கு தான் அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.248 என்றும் DVRகள்/ஹார்டு டிஸ்க்குகள்/செல்போன்/சிம்கார்டுகள் மற்றும் மெமரி கார்டு போன்றவற்றை ஆய்வு செய்தது தொடர்பாக 07.06.2021 தேதி குஜராத் மாநில தடய அறிவியல் இயக்குநரகத்தின் அறிக்கை புதுடெல்லி DFS இயக்குநரால் இந்திய சாட்சியச்சட்டத்தின் u/s.65B (4)(c) சான்றிதழுடன் 08.06.2021 அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கை அ.சா.ஆ.249 என்றும் கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண்.649/2020 தொடர்பான CBI RC 0502020S0008 வழக்கின் சட்டப்பிரிவுகளை குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 176 (1–A) (i)–ஐ இதச பிரிவு 342, 302, 201, r/w 109 ஆக மாற்றியது சம்மந்தமான அறிக்கை அ.சா.ஆ.250 என்றும் கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண்.650/2020 தொடர்பான CBI RC0502020S0009 வழக்கின் சட்டப்பிரிவுகளை குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 176 (1–A) (i)–ஐ இதச பிரிவு 342, 302, 201, r/w 109 ஆக மாற்றியத சம்மந்தமான அறிக்கை அ.சா.ஆ.251 என்றும் கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண்.649/2020 மற்றும் குற்ற எண்.650/2020 தொடர்பான இரண்டு CBI வழக்குகளை இணைத்து 25.09.2020–ம் தேதிய பொதுவான குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்ய அனுமதி கோரி தாக்கல் செய்த மனு அ.சா.ஆ.252 என்றும் வேதியியல் பகுப்பாய்வு மற்றும் அறிக்கைகளை ஆய்வு செய்வதற்காக புது

தில்லி CFSL, இயக்குநருக்கு மதுரை தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் 06.08.2020-ம் தேதி அனுப்பியுள்ள D.No.1391 கடிதம் அ.சா.ஆ.253 என்றும் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் கைப்பற்றப்பட்ட மரடேபிள் சம்மந்தமான கைப்பற்றுகை அத்தாட்சி அ.சா.ஆ.254 என்றும் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் வழக்கு சம்பவத்தை மறுபுனரமைப்பதற்காகவும், சாத்தான்குளம் பழைய பேருந்து நிலையம் அருகே காமராஜர் சிலை அருகே புது தில்லியில் உள்ள CFSL-ன் பல்துறைக் குழுவுடன் இணைந்து CBI குழு நடத்திய நடவடிக்கைகளைக் காட்டுவது சம்மந்தமாக 22.09.2020 தேதி தயாரிக்கப்பட்ட பார்வை மகஜர் அ.சா.ஆ.255 என்றும் சேகரிக்கப்பட்ட 1 முதல் 28 மாதிரி பொருட்களை புது தில்லி CFSL, இயக்குநருக்கு மதுரை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அனுப்பி வைத்தது சம்மந்தமான 29.09.2020 தேதியிட்ட 1706 கடிதம் எண் அ.சா.ஆ.256 என்றும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோர்களின் இரத்த மாதிரியை எடுக்க FTA அட்டையை வழங்குமாறு துணை இயக்குநர், FSL, மதுரைக்கு CJM, அனுப்பியுள்ள 01.09.2020 தேதியிட்ட D.No.1524/20 கடிதம் அ.சா.ஆ.257 என்றும் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையின் மருத்துவ அதிகாரியால் வழங்கப்பட்ட பென்னிக்ஸின் 20.06.2020 தேதியிட்ட விபத்து பதிவேடு நகல் அ.சா.ஆ.258 என்றும் அதில் பென்னிக்ஸின் உடலில் இருந்த காயங்கள் மற்றும் அவரது உடல் நிலை மற்றும் அவர் மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவ அதிகாரி முன் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரது மருத்துவநிலை பற்றிய விவரங்கள் உள்ளன என்றும் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையின் மருத்துவ அதிகாரியால் வழங்கப்பட்ட 20.06.2020 தேதியிட்ட ஜெயராஜின் அசல் விபத்து பதிவேடு நகல் அ.சா.ஆ.259 என்றும் ஆகும். ஜெயராஜை மருத்துவ அதிகாரி முன் மருத்துவ பரிசோதனைக்காக ஆஜர்படுத்தியபோது அவரது உடல் மற்றும் அவரது மருத்துவ நிலை குறித்த விவரங்கள் அதில் உள்ளன என்றும் 01.10.2020 தேதி தேசிங்குராஜாவிடமிருந்து இறந்த ஜெயராஜின் ஒரு புகைப்படத்தையும், இறந்த ஜே.பென்னிக்ஸின் ஒரு புகைப்படத்தையும் கைப்பற்றியதைக் காட்டும் ரசீது குறிப்பாணை Ex.P.247 என்றும் இறந்த ஜெயராஜின் புகைப்படம் Ex.P.260 என்றும் ஜே.பென்னிக்ஸின் புகைப்படம் Ex.P.261 என்றும் கோவில்பட்டி துணைச் சிறையில்

இருந்து CFSL சேகரித்த சந்தேகிக்கப்படும் இரத்தக் கறைகள் குறித்த 23.09.2020 தேதியிட்ட பறிமுதல் குறிப்பாணை Ex.P.262 என்றும் கைப்பற்றிய இரத்த மாதிரியையும் சேகரிக்கப்பட்ட இரத்த மாதிரிகளையும் ஒப்பிடுவதற்கு கேள்வித்தாளுடன், மதுரை CJM–ஆல் 03.09.2020 தேதி CFSL–க்கு கடிதம் அனுப்பப்பட்டது என்றும் அந்த கடிதம் அ.சா.ஆ.263 என்றும் 29.09.2020 தேதியிட்ட D.No.1706 கடிதத்திற்கு பதிலளிக்கும் விதமாக. CFSL, புது தில்லியால் வழங்கப்பட்ட 02.11.2020 தேதியிட்ட உயிரியல் பரிசோதனை மற்றும் DNA விவரக்குறிப்பு அறிக்கை Ex.P.264 என்றும் அந்த அறிக்கையில் பார்சல் 1–ல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 20 பொருட்கள் அ.சா.பொ.51 (வரிசை ) என்றும் அதில் பார்சல் 2–ல் குறிப்பிடப்பட்டுள்ள 21 முதல் 28 பொருட்கள் அ.சா.பொ.52 (வரிசை) என்றும் (ஆய்வகத்தில் குறியீடு செய்யப்பட்ட) Exhibit 5 (பருத்தி நூல்கள்) மற்றும் Exhibit 6 (பருத்தி நூல்கள்) Q–7 (சட்டை), ஆகியவை ஏற்கனவே அசாபொ28 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும் Q–13–1 (பருத்தி நூல்கள்), Q–14–1 (பருத்தி நூல்கள்) Q–15 (பருத்தி நூல்கள்), ஏற்கனவே அ.சா.பொ 29 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும் Q–20 (லத்தி), ஏற்கனவே M.O.22 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும் Q–16–1 (இறந்த பென்னிக்ஸின் லுங்கி) ஏற்கனவே M.O.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும் Q–16–2 (இறந்த பென்னிக்ஸின் சட்டை) ஏற்கனவே அசாபொ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும் அவை CFSL–க்கு 06.08.2020 தேதியிட்ட குறிப்பாணை எண்.1391 மூலம் சமர்ப்பிக்கப்பட்டது என்றும் 20.12.2021 தேதியிட்ட குஜராத்தின் காந்தி நகரில் உள்ள தடயவியல் அறிவியல் இயக்குநரகத்தின் புகைப்படப் பிரிவின் அறிக்கை அ.சா.ஆ.265 என்றும், அதில் DFS இன் மாதிரி முத்திரையுடன் கூடிய S1 முதல் S10 வரையான (MarkCP–1 முதல் CP–15 என குறியீடு செய்யப்பட்ட) பார்சல் அ.சா.பொ.53 வரிசை என்றும் மேற்கூறிய அறிக்கையின் இணைப்பு B–1 இல் இணைக்கப்பட்டுள்ள புகைப்படங்கள் அ.சா.பொ.54 வரிசை என்றும் சிசிடிவி வீடியோ காட்சிகளிலிருந்து முக அடையாளம் கண்டறிந்தது தொடர்பான 07.02.2022–ம் தேதியிட்ட CFSL, புது தில்லியின் அறிக்கை அ.சா.ஆ.266 என்றும் மேற்கூறிய அறிக்கையில், CFSL, புது தில்லியால் QPD–33 எனக் குறிக்கப்பட்ட PQ – 33, (சோனி 32 ஜிபி ஃபிளாஷ் டிரைவ்).

அ.சா.பொ.55 என்றும் மேற்கூறிய அறிக்கையில் QPD-33 இன் உள்ளடக்கங்களை CFSL விளக்கியுள்ளது என்றும் மேற்கூறிய அறிக்கையின் கடைசி பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின்படி, மேற்கூறிய CFSL அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள புகைப்படங்கள் அ.சா.பொ.56 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையின்படி, கண்காட்சி QPD-33-ல் வீடியோக்களில் இருந்த காட்சிகள் தொடர்ச்சியாக இருந்தன என்றும் மேற்படி வீடியோ காட்சிகளுக்கு இடையில் எந்த கையாளுதல் அல்லது சேதப்படுத்துதலுக்கான அறிகுறியும் இல்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் குஜராத்தின் காந்தி நகரில் உள்ள தடய அறிவியல் இயக்குநரகத்தின் 08.06.2021-ம் தேதியிட்ட அறிக்கை ஏற்கனவே அ.சா.ஆ.249 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்கூறிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இணைப்பு-1, இணைப்பு - A, இணைப்பு - B மற்றும் இணைப்பு-C ஆகியவை அ.சா.பொ.57 என்றும் அதுகுறித்த இந்திய சாட்சியச்சட்டத்தின் பிரிவு 65(B) சான்றிதழ் அ.சா.ஆ.249 என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள Exh-Q-32, Exh-Q-32/S1, Exh-Q-32/S2, Exh-Q-32/M ஏற்கனவே அ.சா.பொ.40 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள Exh-Q-1 ஏற்கனவே அ.சா.பொ.26 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள Exh-Q-34 மற்றும் Exh-Q34/H ஏற்கனவே அ.சா.பொ.24 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் சிபிஐ நடத்திய விசாரணையின் போது சாத்தான்குளம் காவல் நிலையத்தில் இறந்த ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் மீது பதிவு செய்யப்பட்ட 19.06.2020 தேதியிட்ட குற்ற எண்.312/2020 வழக்கு, இறந்த ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகிய இருவர் மீதும் குற்றம் சாட்டப்பட்ட காவல்துறை அதிகாரிகள் தங்கள் தவறுகளையும் தங்கள் தரப்பில் உள்ள குற்றங்களையும் மறைப்பதற்காக பொய்யாகப் பதிவு செய்துள்ளனர் என்றும் 19.06.2020-ம் தேதியிட்ட குற்ற எண்.312/2020 குற்ற ஆவணக் கோப்பின் நகல் அ.சா.ஆ.267 என்றும் BSNL CBI-க்கு 23.09.2020 தேதியிட்ட TN/PGM(NWO-CM/சான்றளிக்கப்பட்ட CDR forwarding/2020-2021/6) கடிதம் மூலம் சான்றளிக்கப்பட்ட CDRகள் மற்றும் CAF-இன் நகல்கள் பிரிவு 65-B சான்றுச் சட்டத்தின் கீழ் சான்றிதழுடன் அ.சா.ஆ.268 என்றும்

இறந்த ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸின் இறப்பு விவரப் பதிவேட்டின் சான்றளிக்கப்பட்ட நகல் முதல் பக்கம் ஏற்கனவே அ.சா.ஆ.38 என குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் இரண்டாவது பக்கம் அ.சா.ஆ.269 என்றும் 25.02.2022 தேதியிட்ட CFSL-2020/B-0390/655 கடிதம் அ.சா.ஆ.270 என்றும் விசாரணையின்போது, குற்றம் சாட்டப்பட்ட 8 காவல்துறை அதிகாரிகளின் காவல் பெறப்பட்டு, அவர்கள் காவலில் விசாரிக்கப்பட்டுள்ளனர் என்றும் சிபிஐ நடத்திய விசாரணையின் போது, கிடைத்த சாட்சிகளின் வாக்குமூலங்கள், பல்வேறு மருத்துவ/தடயவியல்/அறிவியல் கருத்துக்கள் உட்பட சேகரிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் பிற தொடர்புடைய பொருட்கள் மூலம் 18.06.2020 அன்று மாலையில் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட மற்றொரு போலீஸ் அதிகாரி இரவு 8.30 மணியளவில் காமராஜர் சவுக்கிற்குச் சென்றபோது, இறந்த ஜெயராஜ் காமராஜர் சவுக்கில் உள்ள தனது கடைக்கு அருகில் நின்று கொண்டிருப்பதைக் கண்டு கோவிட் வழிகாட்டுதல்களை மீறி அங்கு நிற்பதற்கான காரணங்கள் குறித்து அவர்களிடம் விசாரித்தபோது, எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் சில மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்தி, அவர்கள் வெளியேறாவிட்டால் அவர்களின் தோலை உரித்துவிடுவேன் என்று மிரட்டியுள்ளார் என்றும் ஜெயராஜ், எஸ்.ஐ.பாலகிருஷ்ணனின் முரட்டுத்தனமான நடத்தை குறித்து கண்டனம் தெரிவித்துள்ளார் என்றும் ஜெயராஜின் வார்த்தைகளைக் கேட்ட ஒருவர் இந்த உண்மையை எஸ்.ஐ.பாலகிருஷ்ணனுக்குத் தெரிவித்துள்ளார் என்றும் அதனால் இறந்தவருக்கு தகுந்த பாடம் கற்பிக்கும் நோக்கில் குற்றம் சாட்டப்பட்ட காவல்துறை அதிகாரிகள் சதித்திட்டம் தீட்டி அதன்படி 19.06.2020 அன்று இரவு 7.30 மணியளவில் 1-ம் எதிரி ஸ்ரீதர் மற்றும் 2-ம் எதிரி பாலகிருஷ்ணன், எஸ்.ஐ. உள்ளிட்ட குற்றம் சாட்டப்பட்ட காவல்துறை அதிகாரிகளால் அவர்களிடையே நடந்த குற்றச் சதித்திட்டத்தின் கீழ், பொதுவான நோக்கத்தின் பேரில் காமராஜர் சவுக்கில் உள்ள ஜெயராஜின் கடைக்கு அருகில் இருந்து, ஜெயராஜ் சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டு சாத்தான்குளம் காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு காவல் நிலைய கட்டிடத்திற்குள் தவறாக அடைத்து வைக்கப்பட்டிருந்துள்ளார் என்பதும் அவரது மகன் பென்னிக்ஸ் தனது தந்தை ஜெயராஜை எப்படி, ஏன் காவல்

நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள் என்பதை அறிய காவல் நிலையத்திற்கு வந்தபோது, பென்னிக்ஸ் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட காவல்துறை அதிகாரிகளுக்கு இடையே சில வாக்குவாதங்கள் ஏற்பட்டுள்ளது என்பதும் அதன் பின்னர் பென்னிக்ஸ் சாத்தான்குளம் காவல்நிலைய கட்டிடத்திற்குள் முறையற்ற வகையில் அடைக்கப்பட்டுள்ளார் என்பதும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இருவரும் குற்றம் சாட்டப்பட்ட காவல்துறை அதிகாரிகளால் இரக்கமின்றி தாக்கப்பட்டுள்ளனர் என்பதும் மேலும் 19.06.2020 மாலை மற்றும் 19.06.2020–20/6/2020 இடைப்பட்ட இரவில் சாத்தான்குளம் காவல் நிலையத்தின் மூடிய சுவர்களுக்குள் குற்றம் சாட்டப்பட்ட காவல்துறை அதிகாரிகளால் கொடூரமாக சித்ரவதை செய்யப்பட்டுள்ளனர் என்பதும் மேற்கூறிய கொடூரமான சித்திரவதையின் போது, குற்றம் சாட்டப்பட்ட காவல்துறை அதிகாரிகளால் இறந்த இருவரின் மீதும்இரத்தப்போக்கு மற்றும் பல அப்பட்டமான காயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதும் அவை இயற்கையின் சாதாரண போக்கில் இறந்த ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸின் மரணத்திற்கு போதுமானவை என்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது என்றும் குற்றவியல் சதி மற்றும் பொதுவான நோக்கத்தின் கீழ், குற்றம் சாட்டப்பட்ட காவல்துறை அதிகாரிகள், மேற்கூறிய தவறுகளையும், அவர்களின் செயல்களையும் மறைப்பதற்காக, பொய்யான புகார் உட்பட பல பொய்யான மற்றும் ஜோடிக்கப்பட்ட ஆவணங்களை உருவாக்கி, 19.06.2020 அன்று இறந்த இருவருக்கும் எதிராக சாத்தான்குளம் காவல் நிலையத்தில் குற்ற எண்.312/2020–ல் பொய்யான வழக்கைப் பதிவு செய்துள்ளனர் என்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது என்றும் கோவிட் வழிகாட்டுதல்களின்படி, கடைகள் இரவு 8.00 மணிக்கு மூடப்பட வேண்டியிருந்த நிலையில், இறந்த ஜெயராஜ் 19.06.2020 அன்று மாலை 7.30 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் ஆனால் மேலே கூறப்பட்ட FIR–இல் இறந்தவர் கோவிட் வழிகாட்டுதல்களை மீறியதாக தவறாகக் காட்டப்பட்டுள்ளது என்றும் வேண்டுமென்றே அதிகாலை 03.00 மணி வரை தொடர்ந்தது கொடூரமாக சித்திரவதை செய்து இயற்கையின் சாதாரண போக்கில் இறந்த இருவரின் மரணத்திற்கு போதுமானவை என்பதை நன்கு அறிந்திருந்தும் இரத்தப்போக்கு/மழுங்கிய காயங்களை குற்றம் சாட்டப்பட்ட எதிரிகள் ஏறபடுத்தியுள்ளது

அப்பட்டமாக விசாரணையில் தெரியவந்துள்ளது என்றும், மேலும் குற்றம் சாட்டப்பட்ட A1 – ஸ்ரீதர், A2 – பாலகிருஷ்ணன், SI மற்றும் A3 – ரகுகணேஷ், SI ஆகியோர் தங்கள் காவலில் உள்ள நபர்களை இதுபோன்ற கொடூரமான சித்திரவதை செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது என்றும் மொபைல் கடைக்கு அருகிலுள்ள கடைகளில் இருந்து சேகரிக்கப்பட்ட இறந்தவர்களின் சிசிடிவி காட்சிகள், 18.06.2020 அன்று நடந்த மேற்கூறிய சம்பவம் மற்றும் 19.06.2020 மாலையில் நடந்த சம்பவம், குற்றம் சாட்டப்பட்ட காவல்துறை அதிகாரிகளால் இறந்த ஜெயராஜை சட்டவிரோதமாக அழைத்துச் சென்றது என்பதை உறுதிப்படுத்துகின்றன என்றும் மேலும், குற்றம் சாட்டப்பட்ட காவல்துறை அதிகாரிகள், காயங்களிலிருந்து இரத்தம் கசிந்து சுத்தம் செய்யப்பட்டு மதிப்புமிக்க ஆதாரங்களை அழித்துள்ளது விசாரணையில் தெரியவந்துள்ளது என்றும் இறந்தவர்களின் இரத்த கறை படிந்த துணிகளை மருத்துவமனையின் குப்பைத் தொட்டியிலும் வேறு சில இடங்களிலும் வீசி எறிந்தும் சாத்தான்குளம் காவல் நிலையத்தின் சிசிடிவி காட்சிகளை குற்றம் சாட்டப்பட்ட காவல்துறை அதிகாரிகள் வேண்டுமென்றே நீக்கியும் உள்ளனர் என்றும் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையின் சிசிடிவி காட்சிகள் குற்றம் சாட்டப்பட்ட காவல்துறை அதிகாரிகள் சாட்சியங்களை அழித்ததை உறுதிப்படுத்துகின்றன என்றும் புது தில்லியில் உள்ள CFSL–ன் பல்துறை நிபுணர் குழு சாத்தான்குளம் காவல் நிலையம், கோவில்பட்டி துணை சிறை மற்றும் சாத்தான்குளம் அரசு மருத்துவமனை ஆகியவற்றில் SOC–ஐ ஆய்வு செய்ததிலிருந்தும் சாத்தான்குளம் காவல்நிலையம் மற்றும் கோவில்பட்டி துணை சிறை ஆகியவற்றில் கிடைத்த இரத்த மாதிரிகள் CFSL, புது தில்லியின் கருத்துக்கள் இறந்த இருவருக்கும் இரத்தப்போக்கு காயங்கள் ஏற்பட்டதை உறுதிப்படுத்துகின்றன என்றும் மருத்துவ மற்றும் தடயவியல் சிக்கல்களைக் கையாள்வதற்காக, அமைக்கப்பட்ட தடயவியல் மருத்துவ நிபுணர்களின் மருத்துவக்குழு உறுப்பினர்கள் குற்ற நிகவிடத்தை பார்வையிட்டு தொடர்புடைய அனைத்து மருத்துவ/தடயவியல் பதிவுகளையும் ஆராய்ந்து, கோவில்பட்டி, துணை சிறைகாவலர்கள் இறப்பதற்கு முன்பு சிகிச்சை அளித்த பிரேத பரிசோதனை செய்த மருத்துவர்களுடன் உரையாடி தாக்கல் செய்துள்ள

அறிக்கை மற்றும் நீதித்துறை விசாரணை அறிக்கைகளை இணைத்து பார்க்கும்போது இறந்த ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இருவரின் மரணமும் 19.06.2020 அன்று மாலை மற்றும் 19.06.2020–20.06.2020 அன்று இடைப்பட்ட இரவில் சாத்தான்குளம் காவல் நிலைய வளாகத்தில் குற்றம் சாட்டப்பட்ட காவல்துறை அதிகாரிகளினால் மேற்கூறிய சித்திரவதையின்போது இறந்த இருவருக்கும் ஏற்பட்ட காயங்கள் ஒட்டுமொத்தமாக இயற்கையில் மரணத்தை ஏற்படுத்த போதுமானதாக இருந்தன என்பதை தெளிவாக நிறுவியுள்ளது என்றும் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மற்றும் இறந்த இருவரின் சிடிஆர்கள் குற்றம் சாட்டப்பட்ட காவல்துறை அதிகாரிகள் மற்றும் இறந்த இருவரும் சம்பவ தேதி மற்றும் நேரத்தில் சாத்தான்குளம் காவல் நிலையத்தை உள்ளடக்கிய ஒரே கோபுரத்தில் இருந்ததை தெளிவாகக் காட்டுகிறது என்றும் விசாரணையின்போது சேகரிக்கப்பட்ட போதுமான ஆதாரங்களின் அடிப்படையிலும் வாய்மொழி, ஆவணப்படம் மற்றும் தொழில்நுட்ப, அறிவியல், மருத்துவ மற்றும் தடயவியல் அடிப்படையிலும் 25.09.2020 தேதியிட்ட குற்றப்பத்திரிகை மற்றும் துணை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் துணை குற்றப்பத்திரிகையில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்தின்படி, மேலும் ஒரு பிரிவு 348–ஐபிசி சேர்க்கப்பட்டுள்ளது என்றும் குற்றம் சாட்டப்பட்ட பால்துரை விசாரணையின்போது இறந்துவிட்டதால், அவருக்கு எதிரான நடவடிக்கைகளைத் நிறுத்துமாறு 25.09.2020 தேதியிட்ட குற்றப்பத்திரிகையில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் மேலும், RC 0502020 S 0008/CBI/SC–2/New Delhi மற்றும் RC 0502020 S 0009 / CBI/SC–2/New Delhi ஆகிய இரண்டு வழக்குகளிலும், குற்றச்சாட்டுகளின் தன்மை, வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகள், நடந்த இடம், சம்பவத்தின் தேதி மற்றும் நேரம், குற்றத்தைச் செய்தவர்கள், குற்றத்திற்கான சாட்சிகள், ஆவணங்கள் மற்றும் செயல்படும்முறை போன்றவை ஒரே மாதிரியாக இருந்ததால், 25.09.2020–ம் தேதி, இரண்டு வழக்குகளிலும் பொதுவான குற்றப்பத்திரிகை 05.08.2022 அன்று தனக்கு உதவியாக இருந்த, அப்போதைய கூடுதல் எஸ்பி, சிபிஐ, எஸ்சி–II, புது தில்லி, ஸ்ரீ ஜி. கலைமணி அவர்களால் தாக்கல் இந்த வழக்கில், சென்னை உயர்நீதிமன்றத்தின் மாண்புமிகு மதுரை கிளை தானாக முன்வந்து ரிட் மனு எண்.7042/2020–ல் பிறப்பித்த

உத்தரவின்படி, கோவில்பட்டியைச் சேர்ந்த திரு. பாரதிதாசன், ஜே.எம். I அவர்களால் நீதி விசாரணை நடத்தப்பட்டது என்றும் சிபிஐ தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து குற்றச்சாட்டுகளும் நீதி விசாரணை அறிக்கையின் கண்டுபிடிப்பால் முறையாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்றும் நீதி விசாரணையின் போது, காவலர் தாமஸ் பிரான்சிஸ், 19.06.2020 மாலை மற்றும் 19.06.2020–20.06.2020 இடைப்பட்ட காலத்தில் இந்த வழக்கில் நடந்த நிகழ்வுகளின் வரிசையை உண்மையாகவும் முழுமையாகவும் வெளிப்படுத்தியுள்ளார் என்றும் அவரது வாக்குமூலம் நீதித்துறை விசாரணையில் ஒரு பகுதியாக உள்ளது என்றும் சாட்சியமளித்துள்ளாார். கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களிடம் நீதிசார் பிரேத விசாரணையில் ஜெயசேகர் கொடுத்துள்ள வாக்குமூலம் எ.சா.ஆ.8 ஆகவும், இரவிச்சந்திரன் CBI விசாரணையில் குவிமுச பிரிவு 161(3)–ன் கீழ் கொடுத்துள்ள வாக்குமூலம் எ.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ரேவதி CBI விசாரணையில் குவிமுச பிரிவு 161(3)–ன் கீழ் கொடுத்துள்ள வாக்குமூலம் எ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. அரசுத்தரப்பில் வேறு சாட்சியம் எதுவும் முன்னிடப்படாத நிலையில் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிகளுக்கு எதிராக உள்ள சாட்சியங்கள் குறித்து 1 முதல் 9 எதிரிகளிடம் குவிமு பிரிவு 313–ன் கீழ் வினவப்பட்டது. எதிரிகள் மேற்படி சாட்சியங்களை மறுத்து விளக்கம் அளித்துள்ளனர். அது பதிவு செய்யப்பட்டுள்ளது. 1, 4, 7 எதிரிகள் தரப்பில் எழுத்து மூலமாகவும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அது குவிமுச பிரிவு 313–ன் கீழான வாக்குமூலத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

8. எதிரிகள் தரப்பில் 1ம் எதிரி எ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார், 1–ம் எதிரிதரப்பில் சாட்சிகள் எ.சா.2 முதல் எ.சா.7 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர் 1–ம் எதிரி தரப்பில் எ.சா.ஆ.11 முதல் எ.சா.ஆ.26 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 7–ம் எதிரி தரப்பில் 7–ம் எதிரியின் மனைவி எ.சா.8 ஆகவும் 7–ம் எதிரி எ.சா.9 ஆகவும்

விசாரிக்கப்பட்டுள்ளனர், 7–ம் எதிரி தரப்பில் எ.சா.ஆ.27 முதல் எ.சா.ஆ.34 வரையும் எ.சா.பொ.1 முதல் எ.சா.பொ.4–ம் குறியீடு செய்யப்பட்டுள்ளன மற்ற எதிரிகள் தரப்பில் வாய்மொழி சாட்சியமோ ஆவண சாட்சியங்களோ முன்னிடப்படவில்லை. இந்நிலையில் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

9. நீதிமன்ற சாட்சியாக நீ.ம.சா.1 முதல் நீ.ம.சா.6 விசாரிக்கப்பட்டுள்ளனர். நீ.ம.சா.ஆ 1 ம் குறியீடு செய்யப்பட்டுள்ளன

10. எதிரிகள் தரப்பு சாட்சியத்தின் சுருக்கம் –

10.1 1ம் எதிரி தான் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக 2019–ம் வருடம் முதல் 22.06.2020–ம் தேதி வரை பணிபுரிந்ததாகவும், கடந்த 19.06.2020–ம் தேதி மாலை 4.30 மணிக்கு கொரோனா நோய் தடுப்பு சம்பந்தமாக ரோந்து பணிக்கு தான் சாத்தான்குளம் பஜார் அரிசி கடை தெருவில் குடியிருந்த வீட்டிலிருந்து புறப்பட்டதாகவும், அன்று 18.00 மணி வரை சாத்தான்குளம் பஜார், தச்சமொழி, தோப்புவனம், சாத்தான்குளம் பஸ் ஸ்டாண்ட் ஆகிய இடங்களில் ரோந்து பணி செய்ததாகவும், அந்த நேரம் கொரோனா வைரஸ் நோய் கடுமையாக இருந்தது என்றும், அப்போது நோடல் ஆபிசராக தானும், சாத்தான்குளம் மருத்துவர் ஆத்திகுமாரும் இருந்ததாகவும், வெளியூரிலிருந்து சாத்தான்குளத்திற்குள் வருபவர்களை தணிக்கை செய்து அவர்களை சாத்தான்குளத்தில் மனோ பெண்கள் கல்லூரியில் தனிமைபடுத்த வேண்டிய பணியை தாங்கள் மேற்கொண்டிருந்ததாகவும், உள்ளூரிலிருந்து வெளியே செல்பவர்களை மாஸ்க் போட அறிவுறுத்துவது, அவர்களுக்கு வைரஸ் நோய் இருக்கிறதா என்று மருத்துவமனையில் ஆஜர்படுத்தி தனிமைபடுத்துவது சமூக இடைவெளியை கடைபிடிப்பது ஆகிய பணிகள் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது என்றும், அன்றைய தினம் 18.10 மணிக்கு பண்ணம்பாறை விலக்கு, 18.18 மணிக்கு செட்டியபத்து, நொச்சிகுளம் சென்றதாகவும், பின்னர் மீண்டும் 18.30 மணிக்கு சாத்தான்குளம் பஸ் ஸ்டாண்ட் வந்து மேற்படி பணியை செய்ததாகவும், பின்னர் மீண்டும் 19.26 மணிக்கு மீண்டும் பண்ணம்பாறை சென்றதாகவும், பின்னர் அங்கிருந்து புறப்பட்டு 19.30 மணிக்கு சாத்தான்குளம் பஸ் ஸ்டாண்ட் வந்ததாகவும் அங்கு 20.30

மணி வரை மேற்படி நோய் தடுப்பு பணியை மேற்கொண்டிருந்ததாகவும், அன்று சுமார் 19.30 மணியளவில் சாத்தான்குளத்தைச் சேர்ந்த பாலசுந்தரம், த/பெ.மாணிக்கம், அம்மன் கோவில் காலனி, சாத்தான்குளம் என்ற விலாசத்தை சார்ந்தவரை விசாரித்து அவருக்கு மாஸ்க் கொடுத்ததாகவும், அவர் எந்த ஊர்காரர் என பரிசோதிக்க அவரது ஆதார் கார்டை வாங்கி தணிக்கை செய்ததாகவும், அது சம்பந்தமாக அவர் கொடுத்த ஆதார் கார்டின் ஜெராக்ஸ் நகலை தாக்கல் செய்ததாகவும், அது எ.சா.ஆ.11 என்றும், அன்று 20.30 மணிக்கு அதே பஸ் ஸ்டாண்டில் வைத்து சிலுவைராஜ் என்பவரை பரிசோதித்ததாகவும், அவர் கொடுத்த ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகலை தாக்கல் செய்ததாகவும், அது எ.சா.ஆ.12 என்றும், அன்று 21.00 மணிக்கு பண்ணம்பாறை விலக்கில் தணிக்கை செய்ததாகவும், பின்னர் 21.30 மணிக்கு ரோந்து பணியை முடித்து தனது குடியிருப்புக்கு வந்ததாகவும், அந்த சமயம் சாத்தான்குளத்தை சார்ந்த குருசாமி என்பவர் தனக்கு சப்பாத்தி கொண்டு வந்து கொடுத்ததாகவும், அவரது ஆதார் கார்டை தணிக்கை செய்ததாகவும், 21.30 மணிக்கு அவர் கொடுத்த ஆதார் கார்டின் ஜெராக்ஸ் நகலின் ஒருபக்கம் மட்டுமே தன்னிடம் உள்ளது என்றும், அதை தாக்கல் செய்ததாகவும், அது எ.சா.ஆ.13 என்றும், அன்று இரவு 22.00 மணி முதல் இரவு 02.00 மணி வரை தனது போலீஸ் வாகனமான TN-59-0635 என்ற வாகனத்தில் ஜெயசேகர் ஓட்ட ரோந்து பணிக்கு சென்றதாகவும், அன்றைய தினம் 20.45 மணிக்கு தான் A2 பாலகிருஷ்ணனை தொடர்பு கொண்டதாகவும், பின்னர் பண்ணம்பாறை, தச்சமொழி, அமுதன்னகுடி, சாத்தான்குளம் பஜார், சாத்தான்குளம் பஸ் ஸ்டாண்ட் ஆகிய இடங்களில் ரோந்து சென்றதகாவும், அப்போது ரோந்து சென்றபோது அங்கு வந்த முத்து என்பவரை தணிக்கை செய்து அவரது ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகலை பெற்றதாகவும், அதில் தான் கையெழுத்து செய்துள்ளதாகவும், அதை தனது தரப்பில் ஆவணமாக தாக்கல் செய்ததாகவும், அது எ.சா.ஆ-14 என்றும், பின்னர் 20.06.2020-ம் தேதி அதிகாலை 01.00 மணிக்கு சுப்புராயபுரத்தில் சுரேஷ், த/பெ.சுடலைமணி என்பவரை தணிக்கை செய்து அவர் கொடுத்த ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகலை பெற்று அதில் நேரம் குறிப்பிட்டு கையெழுத்து செய்துள்ளதாகவும், அது எ.சா.ஆ.15 என்றும், அன்று அதிகாலை 01.30 மணிக்கு தச்சமொழி சென்று முத்து,

த.பெ.செல்லப்பா என்பவரை தணிக்கை செய்து அவர் கொடுத்த ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகலை பெற்று நேரம் குறித்து கையெழுத்து செய்துள்ளதாகவும், ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் எ.சா.ஆ.16 என்றும், அன்று 02.00 மணிக்கு சாத்தான்குளத்தை சேர்ந்த மாசாணிமுத்து என்பவரை தணிக்கை செய்ததாகவும், அவரை மாஸ்க் கொடுத்து அதிகாலை என்பதால் வீட்டிற்கு செல்ல அறிவுறுத்தியதாகவும், அவர் கொடுத்த ID card–ல் 02.00 மணிக்கு கையெழுத்து செய்ததாகவும், அந்த ஆவணம் எ.சா.ஆ.17 என்றும், பண்ணம்பாறை விலக்கிற்கு சுமார் 01.00 மணியளவில் போனதாகவும், அங்கு ஒரு நபர் கொடுத்த ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகலை பெற்றதாகவும், அவர் பெயர் தனக்கு ஞாபகம் இல்லை என்றும், அவர் கொடுத்த ஆதார் அட்டையில் கையெழுத்து செய்ததாகவும், அது எ.சா.ஆ.18 என்றும், அன்று காலை 02.00 மணியளவில் ரோந்து பணியை முடித்து சாத்தான்குளம் பஸ் ஸ்டாண்டில் இருந்து கிளம்பி 02.15 மணிக்கு தனது வீட்டிற்கு சென்றடைந்ததாகவும், 02.15 மணிமுதல் காலை 06.00 மணி வரை வீட்டில் ஓய்வில் இருந்ததாகவும், 20.06.2020–ம் தேதி காலை 06.45 மணிக்கு நிலைய பாரா காவலர் ரேவதி தன்னிடம் செல்போனில் பேசினார் என்றும், அன்று காலை சுமார் 07.28 மணிக்கு மீண்டும் அன்று காலை 07.40 மணிக்கும் ரேவதி தன்னிடம் செல்போனில் பேசினார் என்றும், 20.06.2020–ம் தேதி காலை 11.00 மணிக்கு பண்ணம்பாறை விலக்கிற்கு சென்று தன்னுடைய இருசக்கர வாகனத்தில் ரோந்து பணி செய்ததாகவும், மதியம் 02.00 மணியளவில் ரோந்து பணியை முடித்து பின்னர் அன்று மாலை 04.30 மணி வரை சாத்தான்குளம் வீட்டில் ஓய்வு எடுத்துவிட்டு மீண்டும் மாலை ரோந்து சென்றுவிட்டதாகவும், 19.06.2020–ம் தேதி எனது டெய்லி டைரியை தாக்கல் செய்ததாகவும், தனித்தாளாக உள்ள இரண்டு பக்கம் கொண்ட அந்த தாள் எ.சா.ஆ.19 என்றும், 20.06.2020–ம் தேதிய எனது டெய்லி டைரியை தாக்கல் செய்கிறேன். தனி தாளாக உள்ள ஒரு பக்க தாள் எ.சா.ஆ.20 என்றும், 19.06.2020–ம் தேதி காலை 07.00 மணிக்கு சாத்தான்குளம் காவல்நிலையத்தில் வாகனத்தில் இருந்தபடி அ.சா.ஆ.35 rough duty register–ல் காவலர்களுக்கான பணிகளை rough–ஆக அதில் குறியீடு செய்ததாகவும், அதை SI பாலகிருஷ்ணனிடம் கொடுத்து அதில் கண்டவாறு பணி நியமிக்கும்படி

சொன்னதாகவும், அதன் பிறகு 19.06.2020–ம் தேதி காலை 07.15–ல் இருந்து மாலை 04.15 மணி வரை தன்னுடைய குடியிருப்பிலிருந்து கொரோனா காலம் என்பதால் தன்னுடைய பணியை மேற்கொண்டதாகவும், 19.06.2020–ம் தேதி மாலை 04.30 மணி முதல் இரவு 02.00 மணி வரை போலீஸ் வாகனமான TN–59–G–0635 வாகனத்தில் அ.சா.26 ஜெயசேகரனுடன் மேற்சொன்ன இடங்களில் தான் ரோந்து செய்ததாகவும், அந்த நேரம் உதவி ஆய்வாளர் ரகுகணேஷ் சாத்தான்குளம் காவல்நிலைய நிலைய பொறுப்பு அதிகாரியாக பணியாற்றினார் என்றும், 19.06.2020–ம் தேதி காலை 08.30 மணி முதல் சாயங்காலம் 06.00 மணி வரை அ.சா.44 பியூலா செல்வகுமாரி நிலைய பொறுப்பு அதிகாரியாக இருந்தார் என்றும், தான் நியமிக்கவில்லை என்றும், அதன்பிறகு சிலமணிநேரம் GD படி பாலகிருஷ்ணன் நிலைய பொறுப்பு அதிகாரியாக இருந்துள்ளார் என்றும், அன்று 21.00 மணிக்கு A3 ரகுகணேஷ் ரோந்து பணி முடித்து சாத்தான்குளம் காவல்நிலையம் வந்து பொறுப்பு அதிகாரியாக இருந்துள்ளார் என்றும், 19.06.2020–ம் தேதி காலை 07.00 மணியிலிருந்து மறுநாள் காலை 07.00 மணி வரை தான் சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு செல்லவில்லை என்றும், அந்த சமயத்தில் தான் நிலைய பொறுப்பு அதிகாரியாகவும் இல்லை என்றும், 21.06.2020ம் தேதியும் 22.06.2020ம் தேதியும் சாத்தான்குளம் முதல் பண்ணம்பாறை வரை ரோந்து பணியில் இருந்ததாகவும், 22.06.2020–ம் தேதி இரவு சுமார் 21.45 மணியளவில் SP office inspector பாலமுருகன் தன்னை போனில் தொடர்பு கொண்டு கோவில்பட்டி sub jail–ல் பென்னிக்ஸ் என்பவர் 22.06.2020–ம் தேதி இரவு 09.00 மணிக்கு இறந்துவிட்டார் என்றும் அவர் சாத்தான்குளம் வழக்கு சம்பந்தபட்டவர் என்றும் சொன்னார் என்றும், அதுபற்றி விபரம் கேட்டார் என்றும், தான் செக் பண்ணி சொல்வதாக சொன்னதாகவும், அதன்பிறகு தனது செல்போனிலிருந்து அவரை தொடர்பு கொண்டு அந்த வழக்கு சம்பந்தமான விபரங்களை சேகரித்து சொன்னதாகவும், அப்போது மணி சுமார் 21.45 மணி இருக்கும் என்றும், 19.06.2020–ம் தேதி A4–முருகன் என்பவர் ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோர்கள் மீது ஒரு புகார் ஒன்றை தயார் செய்து SI ரகுகணேசிடம் இரவு 21.30 மணியளவில் கொடுத்ததாகவும், அதை அவர் 22.00 மணிக்கு பெற்று சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 ஆக பதிவு செய்ததாகவும்

தெரிந்து கொண்டதாகவும், தான் காவல்நிலையத்தில் இல்லாததால் அதுபற்றிய விபரத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், 23.06.2020-ம் தேதி அதிகாலை 05.40 மணியளவில் ஜெயராஜ் என்பவர் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டதாக தனக்கு தகவல் கிடைத்தது என்றும், குற்ற எண்.312/2020 வழக்கு FIR பற்றி என்னிடம் ரகுகணேஷ் தகவல் எதுவும் சொல்லவில்லை என்றும், அதனை அவரே பெற்று புலன் விசாரணை அதிகாரியாக இருந்துள்ளார் என்றும், 19.06.2020-ம் தேதி 23.30 மணிக்கு ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோர்களை ரகுகணேஷ் கைது செய்து பாரா வசம் ஒப்படைத்ததாக கேள்விபட்டதாகவும் ரகுகணேஷ் சரியாக புலன் விசாரணை செய்யாமல் சட்ட விரோதமாக ஜெயராஜ், பென்னிக்சை கைது செய்து காவல்நிலையத்தில் சட்ட விரோதமாக வைத்து காலை 06.00 மணிக்கு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்பதை தனக்கு கிடைத்த தகவல் மூலம் தெரிந்து கொண்டதாகவும், குற்ற எண்.312/2020 வழக்கு கோப்பை அவர் இதுவரை தன்னிடம் காட்டவில்லை என்றும், மேற்படி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை வைத்து தெரிந்து கொண்டதாகவும், அ.சா.ஆ.22 புகாரில் முருகன் கையெழுத்து செய்த விபரம், அ.சா.ஆ.23 FIR, கைது குறிப்பாணை, அ.சா.ஆ.27, அ.சா.ஆ.28 ஆகிய ஆவணங்களை பற்றி நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள ஆவணங்கள் மூலம் தெரிந்து கொண்டதாகவும், அந்த ஆவணங்களில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் காயத்தை மறைத்து நீதிமன்றத்தை ஏமாற்றி அவரே நீதிமன்றத்தில் ரிமாண்டு உத்தரவு பெற்று அவர்களை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என தான் தெரிந்து கொண்டதாகவும், அந்த வழக்கை அவர் முறையாக புலன் விசாரணை செய்யாமல் தன்னிச்சையாக செயல்பட்டுள்ளார் என தெரிந்துகொண்டதாகவும், அந்த வழக்கு பதிவு செய்த விபரம் பற்றி தனக்கு தகவல் சொல்லவில்லை என்றும், அந்த வழக்கு கோப்பை 168crpc படி தன்னிடம் அவர் சமர்ப்பிக்கவில்லை என்றும், 19.06.2020-ம் தேதி முதல் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இறக்கும் வரை காவல்நிலையம் இயல்பாக செயல்பட்டது என்றும், 19.06.2020-ம் தேதி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் தான் காவல்நிலையத்திற்கு செல்லவில்லை என்றும், நீதிமன்றத்தில் உள்ள ஆவணங்கள் அதை நிரூபிக்கும் என்றும், இந்த வழக்கில் A3-ரகுகணேஷ் தன்னை

காப்பாற்றி கொள்ள வேண்டும் என்பதற்காக 19.06.2020–ம் தேதி இரவு 21.30 மணிக்கு தான் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் இருந்ததாகவும் தன்னுடைய நிர்பந்தத்தின்படி குற்ற எண்.312/2020 வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும் பொய்யாக கூறியுள்ளார் என்றும், இந்த வழக்கிற்கும் தனக்கும் சம்பந்தமுமில்லை என்றும், அவர் தனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எந்த விபரமும் தெரிவிக்கவில்லை என்றும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அழைத்து வந்த விபரத்தையும், வழக்கு பதிவு செய்த விபரத்தையும் அவர்கள் இறக்கும் வரை தன்னிடம் சொல்லவில்லை என்றும், சட்டவிரோதமாக ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை சிறையில் அடைத்து அவர்களை கடுமையாக அடித்து அவர்களது மரணத்திற்கு காரணமாக இருந்துள்ளார் என்றும், நீதிபதியையும், மருத்துவரையும் ஏமாற்றி, சிறைதுறை அதிகாரிகளை ஏமாற்றி ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை காவல் அடைப்பிற்கு உட்படுத்தியுள்ளார் என்றும், குற்ற எண் 312/2020 வழக்கை விசாரிக்காமலும், குவிமுச 161–ன் கீழான வாக்குமூலங்களில் கையெழுத்து போடாமல் ரகுகணேஷ் இருந்துள்ளார் என்பதை தெரிந்துகொண்டதாகவும், தான் எந்த குற்றத்திலும் ஈடுபடவில்லை என்றும், இந்த வழக்கில் 02.07.2020–ம் தேதி காலை 10.00 மணிக்கு CBCID DSP PW.51 அவரிடம் தான் விசாரணைக்கு ஆஜரானபோது அவர் இரத்தம் பட்ட துணியையும், கம்பையும் தூக்கி எறிந்ததாகவும் சம்பவத்தில் ஈடுபட்டதாகவும் சொல்லி சாட்சிகள் செல்வராணி, ஜோசப், ஜெயசிங், அர்வின், வீரபாண்டி, ரவிசங்கர், ஜெயா, தேசிங்குராஜா ஆகியோர்களின் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைது செய்ததாகவும் சொல்லி தன்னை தவறுதலாக நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், மேற்படி சாட்சிகள் தான் இரத்தம்பட்ட துணியை தூக்கி எறிந்ததாகவோ, இரத்தம்பட்ட லத்தியை தூக்கி எறிந்ததாகவோ அவரிடம் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், அதன்பின்னர் சாட்சி ரேவதியையும், பியூலா செல்வகுமாரியையும் விசாரணை செய்துள்ளார் என்றும், மேற்படி ஜெயராஜ், பென்னிக்ஸ் இறந்தது சம்பந்தமாக கோவில்பட்டி நீதித்துறை நடுவர் தன்னை விசாரிக்கவில்லை. ரேவதி, பியூலா செல்வகுமாரி அவர்கள் கொடுத்த பொய்யான வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ் அவர்களை தூண்டி ஜெயராஜ், பென்னிக்சை அடிக்க சொன்னதாக விசாரணை

அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றும், தான் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை அடிக்க சொல்லவில்லை என்றும், எந்த எதிரியையும் தூண்டவில்லை என்றும், குற்ற எண்.312/2020 வழக்கு சம்பந்தமாக எந்த ஆலோசனையும் செய்யவில்லை என்றும், தான் பொதுவான உட்கருத்துடன் மேற்படி வழக்கில் செயல்படவில்லை என்றும், 19.06.2020–ம் தேதி நடந்த சம்பவத்திற்கு தான் பொறுப்பு அல்ல என்றும், ரகுகணேஷ் தான் பொறுப்பு என்றும், கைது செய்யப்பட்ட ஜெயராஜ், பென்னிக்ஸ் பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்துவது A3–ரகுகணேஷ் தான் பொறுப்பு ஆவார் என்றும், தான் 19.06.2020–ம் தேதி ரோந்து சென்ற விபரங்கள் எ.சா.ஆ.4 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அதன்படி தான் ரோந்து சென்றதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

10.2 எ.சா.2 தான் சாத்தான்குளத்திலிருந்து தன் தாத்தா காலத்திலிருந்து குடியிருந்து வருவதாகவும், 19.06.2020–ம் தேதி இரவு 07.30 மணிக்கு பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்ததாகவும், டீ சாப்பிடுவதற்காக போயிருந்ததாகவும், அங்கு Inspector ஸ்ரீதர் இங்கு கூட்டம் போட்டு நிற்க கூடாது. எல்லாரும் வீட்டிற்கு போங்க என்று சத்தம் போட்டார் என்றும், எந்த ஊர் என்று கேட்டார் என்றும், தான் இந்த ஊர் தான் என்று சொன்னதாகவும், அப்போது ஆதார் கார்டு கேட்டார் என்றும், 1–ம் எதிரி வண்டியை விட்டு இறங்கியதும் வண்டி மேற்கே போய்விட்டது என்றும், 1–ம் எதிரி ஒருவர் மட்டுமே அங்கு இருந்தார் என்றும், ஆதார் தன்னிடம் இல்லை ஜெராக்ஸ் உள்ளது என்று சொன்னதாகவும், அதை எடுத்து கொடுத்ததாகவும், அதை பார்த்துவிட்டு நாளை காலை வந்து அந்த ஆதார் ஜெராக்சை பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு தன்னை அனுப்பிவிட்டார். என்றும் அதில் எதுவும் எழுதப்பட்டதா என்று தனக்கு தெரியாது. என்றும் ஒரு மாஸ்க் கொடுத்தார் என்றும், எ.சா.2 சாட்சியம் அளித்துள்ளார். எ.சா.2 கொண்டு வந்துள்ள ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் எ.ம.சா.ஆ.21 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

10.3 எ.சா.3 தான் சாத்தான்குளத்தில் 30 வருடமாக குடியிருந்து வருவதாகவும், 19.06.2020ம் தேதி இரவு 08.30 மணியளவில் சாத்தான்குளம் புது பஸ் ஸ்டாண்ட் அருகே தான் நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது 1—ம் எதிரியை தன்னை விசாரித்ததாகவும், கூட்டமாக நிற்கிறீர்கள் என்ன என்று கேட்டார் என்றும், வழக்கம் போல் நிற்கிறேன் என்று சொன்னதாகவும், கொரோனா டைம் இங்கு நிற்க கூடாது. வீட்டிற்கு போங்க என்று சத்தம் போட்டு அனுப்பிவிட்டார் என்றும், மாஸ்க் கொடுத்து அனுப்பிவிட்டார் என்றும், தன்னிடம் 1—ம் எதிரி ஆதார் கார்டு ஜெராக்சை வாங்கி கொண்டார் என்றும், காலையில் வந்து வாங்கிட்டு போங்க என்று சொன்னார் என்றும், முகவரியை தணிக்கை செய்தார் என்றும், இது சம்பந்தமாக வேறு எதுவும் தனக்கு தெரியாது என்றும் எ.சா.3 சாட்சியம் அளித்துள்ளார். எ.சா.3 கொண்டு வந்த ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் எ.ம.சா.ஆ.22 ஆக என்றும் சாட்சியமளித்துள்ளார்.

10.4 எ.சா.4 தான் சாத்தான்குளத்தில் 45 வருடங்களாக பிறந்ததிலிருந்தே குடியிருந்து வருவதாகவும், 19.06.2020—ம் தேதி இரவு 09.00 மணியளவில் சாத்தான்குளம் மெயின்ரோட்டில் ஜோதி ஸ்டோர் அருகே நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது மார்டின் என்ற நண்பர் வந்தார் என்றும், Inspector sir—க்கு சாப்பாடு கொடுக்க வேண்டும். தான் வெளியில் போகிறேன். நீ ரெடி செய்து கொடுத்துவிடு என்று சொன்னார் என்றும், தான் வீட்டில் போய் சப்பாத்தி எடுத்து கொண்டு வந்து அவரது வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்ததாகவும், தான் போய் கொடுத்ததாகவும், அப்போது மணி இரவு 09.30 இருக்கும் என்றும், கொரோனா நேரம் என்பதால் நீங்கள் யார் என்று கேட்டார் என்றும், மார்டின் சாப்பாடு கொடுக்க சொன்னதாக சொன்னதாகவும், தனது ஆதார் கார்டை காட்டியதாகவும், அவரிடம் தனது ஆதாரின் ஜெராக்சை கொடுத்ததாகவும், முகவரியை பார்த்தார் என்றும், தான் கிளம்பிவிட்டதாவும் சாட்சியம் அளித்துள்ளார். எ.சா.4 கொண்டு வந்த ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் எ.ம.சா.ஆ.23 ஆக என்றும் சாட்சியமளித்துள்ளார்.

10.5 எ.சா.5 தான் சாத்தான்குளத்தில் 29/12 வீர இடைக்குடி தெருவில் குடியிருந்து வருவதாகவும், தான் பிறந்ததிலிருந்து அங்கு தான் குடியிருந்து வருவதாகவும், 19.06.2020–ம் தேதி இரவு 10.00–10.30 மணி வாக்கில் சாத்தான்குளம் நாசரேத்து ரோட்டில் உள்ள என்னுடைய வயகாட்டிற்கு தண்ணீர் பாய்ச்ச போனதாகவும், அப்போது சாத்தான்குளம் காமராஜர் சிலை அருகே 1–ம் எதிரியை அடையாளம் காட்டி sir–ம் 2, 3 பேரும் செக் செய்து கொண்டிருந்தார்கள் என்றும், நைட் வரக்கூடாது என்று சத்தம் போட்டார்கள் என்றும், தான் தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்ச போறேன் என்று சொன்னதாகவும், ஆதார் அட்ரஸ் புரூப் தன்னிடம் கேட்டார் என்றும், இல்லை என்று சொன்னதாகவும், வேலைக்கு application செய்த பேப்பரை ஒன்றை பாக்கெட்டில் வைத்திருந்ததாகவும் அதை எடுத்து 1–ம் எதிரியிடம் கொடுத்ததாகவும், தான் கொடுத்த பேப்பரில் தன்னுடைய முகவரி மட்டும் இருந்தது என்றும், அதை பார்த்துவிட்டு தன்னை விட்டுவிட்டார் என்றும், மாஸ்க் இல்லை என்று சத்தம் போட்டார் என்றும், அப்போது இரவு சுமார் 10.00–10.30 மணி இருக்கும் என்றும், திரும்பி தண்ணீர் பாய்ச்சிவிட்டு வரும்போது சாத்தான்குளம் பழைய பஸ் ஸ்டாண்ட் அருகே காமராஜர் சிலை அருகே திரும்பவும் 1–ம் எதிரி என்னை விசாரித்தார் என்றும், ஏற்கனவே உங்களை பார்த்துவிட்டு தான் போனேன் என்று சொன்னதாகவும், இனிமேல் வராதீர்கள் என்று சத்தம் போட்டு அனுப்பிவிட்டார் என்றும், அப்போது நேரம் அதிகாலை 02.00 மணி இருக்கும் என்றும், எ.சா.5 சாட்சியம் அளித்துள்ளார். எ.சா. 5 கொண்டு வந்த ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் எ.ம.சா.ஆ.24 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

10.6 எ.சா.6 தான் சாத்தான்குளத்தில் தச்சன்மொழி தெற்கு தெருவில் 28 வருடமாக குடியிருந்து வருவதாகவும், கொரோனா டைத்தில் தான் வேலை இல்லாமல் இருந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். பின்னிட்டு காய்கறி வியாபாரம் பார்த்ததாகவும் வெங்கடேஷ் என்பவர் குடோன் சுப்புராயபுரத்தில் உள்ளது என்றும், 19.06.2020–ம் தேதி தன் வீட்டிலிருந்து இரவு 11.30 மணிக்கு போன் செய்து அவரது குடோனில் காய்கறி இறக்க வேண்டுமென்று போனில் வரச்சொன்னார் என்றும், 12.55 மணிக்கு

குடோனில் இருந்து வேலை முடித்து திரும்பி வந்தபோது 01.00 மணி வாக்கில் சுப்புராயபுரம் மெயின் ரோட்டில் வைத்து 1-ம் எதிரி தன்னை பிடித்துகொண்டதாகவும், கொரோனா டைத்தில் உன்பாட்டுக்கு அலையுரேயே என்று 1-ம் எதிரி சத்தம் போட்டதாகவும், இரவு அடிக்கடி போலீசார் பிடிப்பார்கள் என்பதால் ஆதார் கார்டு ஜெராக்சை வைத்திருந்ததாகவும், தன்னுடைய ஆதார் அட்டையின் ஜெராக்சை காண்பித்ததாகவும், அதை பார்த்துவிட்டு சத்தம் போட்டு போ என்று சொல்லிவிட்டார் என்றும், வெளியில் வரக்கூடாது என்று சொல்லி அனுப்பினார் என்றும், காலையில் வந்து பார்க்கும்படி என்னிடம் சொன்னார் என்றும், போலீசார் வழக்கு எதுவும் போட்டுவிடுவார்கள் என்று பயந்து போய் தான் காலையில் காவல்நிலையம் போகவில்லை என்றும் எ.சா.6 சாட்சியம் அளித்துள்ளர். எ.சா.6 கொண்டு வந்த ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் எ.ம.சா.ஆ.25 ஆக என்றும் சாட்சியமளித்துள்ளார்.

10.7 எ.சா.7 தான் பண்ணம்பாறையில் 30 வருடமாக குடியிருந்து வருவதாகவும், தான் ஏரலில் உள்ள ரகுமான் டிபார்மெண்ட் ஸ்டோரில் வேலை பார்ப்பதாகவும், (சாட்சி பின்னிட்டு தர்மா கடையில் வேலை பார்த்தாக தான் சொன்னதாக கூறியுள்ளார்) தான் காய்கறி அத்தியாவசிய பொருட்களை அந்த கடையில் ஏற்றி, இறக்கும் தொழில் செய்து வந்ததாகவும், 19.06.2020-ம் தேதி இரவு வேலை முடித்து வந்து கொண்டிருந்தபோது 20.06.2020-ம் தேதி அதிகாலை 00.30 மணியளவில் பண்ணம்பாறை விளக்கு பகுதியில் 1-ம் எதிரி இருந்தார் என்றும், ஹெல்மட்டை கழட்டும்படி சொன்னார் என்றும், எங்கு போய்விட்டு வருகிறீர்கள் என்று கேட்டார் என்றும், தன்னுடைய ஐடி கார்டை கேட்டார் என்றும், தன்னுடைய ஆதார் கார்டு ஜெராக்சை ஸ்ரீதரிடம் கொடுத்ததாகவும், எதற்கு மாஸ்க் போடவில்லை என்று கேட்டார் என்றும், ஹெல்மட் போட்டிருந்ததால் போடவில்லை என்று சொன்னதாகவும், பிறகு மாஸ்க் ஒன்றை கொடுத்து போட்டுக்கொண்டு போகும்படி சொன்னார் என்றும், வேலையை சீக்கிரம் முடித்து விட்டு செல்ல வேண்டுமென்று சொன்னார் என்றும், ஐடி கார்டில் உள்ள முகவரியை சோதனை செய்தார் என்றும், எ.சா.7 சாட்சியம் அளித்துள்ளார். எ.சா. 7

கொண்டு வந்த ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் எ.ம.சா.ஆ.26 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

10.8 7–ம் எதிரியின் மனைவி இசக்கியம்மாள் எ.சா.8 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தன் கணவர் சிறைக்கு சென்ற பின் அவருடைய செல்போன் தன்னிடம் இருந்து வருகிறது என்றும், அதில் அழித்தல், திருத்தம் எதுவும் தான் செய்யவில்லை என்றும் மேற்படி செல்போன் தன் பாதுகாப்பில் தான் உள்ளது என்றும் அதை கொண்டு வந்துள்ளதாகவும் அதில் உள்ள இந்த வழக்கு சம்பந்தமான 6 புகைப்படங்களை CD–1 ஐ தாக்கல் செய்ததாகவும் அது சம்பந்தமாக BNSS 63 (4) (c) part A சான்றிதழை தாக்கல் செய்வதாகவும், அந்த செல்போனின் password pattern lock C என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அந்த I என குறியீடு செய்யப்பட்ட CD எ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் உள்ள 6 file எ.சா.ஆ.27 வரிசையாக குறியீடு செய்யப்பட்டுள்ளது BNSS 63 (4) (c) part A சான்றிதழ் எ.சா.ஆ.28 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த செல்போன் எ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சார்ஜர் எ.சா.பொ.3 ஆகவும் கேபிள் எ.சா.பொ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10.9 7–ம் எதிரி எ.சா.9 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் 21.03.2020–ம் தேதி முதல் 29.06.2020–ம் தேதி வரை சாத்தான்குளம் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வந்ததாகவும், தான் பணிபுரிந்த காலத்தில் தங்கள் காவல்நிலையத்திற்கு என்று தனியாக whatsapp group இருந்தது என்றும் அது சாத்தான்குளம் PS 2018 என்ற பெயரில் இருந்து வந்தது என்றும் அந்த group–க்கு admin ஆக A1 ஸ்ரீதர், A2 பாலகிருஷ்ணன் இருந்தார்கள் என்றும் அந்த whatsapp group மூலமாக தங்களுக்கு பணி வழங்கப்படும் என்றும் அந்த பணியை முடித்து அந்த whatsapp group–ல் உள்ள எல்லோரும் பார்க்கும் வகையில் அந்த group–ல் பதிவுகள் செய்யப்படும் என்றும் தான் அந்த காலகட்டத்தில் vivo 1603 android version 6.0.1 என்ற கைபேசியை பயன்படுத்தி வந்தேன். அதில் இரண்டு சிம் கார்டுகளும் உபயோகபடுத்தி வந்ததாகவும், அதில் ஒரு நம்பர் 9498195523 என்றும் அது அரசு எனக்கு வழங்கிய செல்போன் எண் என்றும்

அதன் மூலம் ஒரு காவலர் மற்றொரு காவலருக்கு இலவசமாக பேசி கொள்ளலாம் என்றும் மற்றொரு சிம் நம்பர் 8248369805 என்றும் அது Jio சிம் என்றும் 19.06.2020—ம் தேதி காலை 07.00 மணிக்கு ஆஜர் அணிவகுப்பில் ஆஜரானதாகவும் தனக்கு 08.00 மணிக்கு பகல் ரோந்து பணி ஒதுக்கப்பட்டது என்றும் அதற்கு P டிக்கெட் கொடுக்கப்பட்டது என்றும் அதில் காலை 08.00 மணி முதல் மதியம் 02.00 மணி வரை சாத்தான்குளம் பஜார், காய்கறி சந்தை, RC தெரு ஆகிய இடங்களில் மக்களுக்கு மாஸ்க் அணியுமாறு அறிவுறுத்தும் பணியும், சமூக இடைவெளியை கடைபிடிக்கும் பணியும் ஒதுக்கப்பட்டிருந்தது என்றும் மதியம் 02.00 மணி வரை பார்த்த பணி சம்பந்தமாக P டிக்கெட்டில் குறிப்பிட்டு கடைகளில் இருந்த ஓனர்களிடம் கையெழுத்து பெற்றதாகவும் மதியம் 02.00 முதல் மாலை 05.00 மணி வரை சாத்தான்குளம் புதிய பேருந்து நிலையத்தில் Duty பார்த்ததாகவும், மாலை 05.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை பேய்குளத்தில் மேற்படி பணியை செய்ய பணிக்கப்பட்டிருந்ததாகவும், 19.06.2020—ம் தேதி மாலை 17.15 மணிக்கு SI பாலகிருஷ்ணன் பண்ணம்பாறை அருகே உள்ள செட்டிகுளம் கண்மாயில் மண் அள்ளும் பிரச்சனை சம்பந்தமாக JCB டிரைவரை அந்த ஊர்காரர்கள் அடித்து விட்டதாக தகவல் சொன்னார் என்றும், அதனால் பேய்குளத்திலிருந்து செட்டிகுளத்திற்கு மாலை 05.30 வாக்கில் சென்றுவிட்டதாகவும் அங்கிருந்து SI பாலகிருஷ்ணனுக்கு போன் செய்து இங்கு யாரும் இல்லை என்று சொன்னதாகவும் செட்டிகுளம் கிராமத்தில் சென்று விசாரிக்கும்போது JCB டிரைவரை தாக்கியதாகவும், ஜாதி பிரச்சனை உள்ளதாகவும் தெரிந்து கொண்டதாகவும், காயம்பட்டவர் நாடார் சமூகத்தைச் சார்ந்தவர் என எனக்கு தெரியவந்தது என்றும், தாக்கியவர் SC சமூகத்தை சார்ந்தவர் என தனக்கு தெரிய வந்தது என்றும், தாக்கியவர் எங்கிருக்கிறார் என விசாரித்து கொண்டிருந்தபோது எதிரி A9 வெயிலுமுத்து என்பவர் தனக்கு போன் செய்து என்ன விபரம் என்று கேட்டார் என்றும் விசாரித்ததில் தாக்கியவர்கள் சாத்தான்குளம் RC தெருவில் இருப்பதாக தெரிய வந்தது என்று சொன்னதாகவும் தான் இரவு 07.30 மணிக்கு சாத்தான்குளம் RC தெருவிற்கு போனதாகவும், அரைமணி நேரம் அங்கு விசாரித்ததாகவும் இரவு 08.30 மணிக்கு எனக்கு Duty முடிந்தது என்றும் அப்போது Grade I 1477 மகாராஜன் என்பவர்

அவருடைய செல்போன் 9498108126–ல் இருந்து தனக்கு போன் செய்து தான் பார்க்க வேண்டிய இரவு பணியை நீங்கள் தான் பார்க்க வேண்டும், தனக்கு மறு நாள் பாரா போட்டுள்ளார்கள் என்று தகவல் சொன்னார் என்றும் தான் நேராக இரவு 08.45 மணிக்கு quarters வந்து சிறிது நேரம் ஓய்வு எடுத்துவிட்டு இரவு 09.10 மணிக்கு கிளம்புபோது கயத்தாறில் இருந்த தன் மனைவிக்கு போன் செய்து இரவு Duty போட்டுவிட்டார்கள் வீட்டிற்கு வர முடியாது என்று சொன்னதாகவும் இரவு 09.20–க்கு மகாராஜனுக்கு போன் செய்து அரசு பைக்–ஐ பஞ்சர் ஆக்கிவிட்டீர்கள் என்று சத்தம் போட்டதாகவும் பிறகு தன்னுடைய பைக்கில் ஒயின்ஷாப் செக்கிங்காக அமித்ராங்குடிக்கு போனதாகவும் அது சாத்தான்குளத்தில் இருந்து 3 கி.மீ தூரத்தில் உள்ளது என்றும் ஒயின் ஷாப்–ஐ செக் பண்ணிவிட்டு வாட்ச்மேன்–ஐ அலார்ட் செய்துவிட்டு அங்குள்ள பட்டா புக்கில் கையெழுத்து போட்டுவிட்டு அங்கிருந்து 5கி.மீ தள்ளி உள்ள தச்சன்மொழி ஒயின் ஷாப்பை பார்வையிட்டதாகவும், பிறகு காந்தி நகர் ஒயின் ஷாப்பிற்கு போகும்போது இரவு 10.00 மணிக்கு A4 முருகனிடமிருந்து பேய்குளம் அருகே உள்ள கீழ்பனைக்குளத்தில் சென்னையிலிருந்து கொரோனா பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் வந்துள்ளதாகவும், அவரை அழைத்து வந்து சாத்தான்குளம் அரசு மகளிர் கலைக்கல்லூரியில் ஒப்படைக்க வேண்டுமென்று சொன்னார்கள் என்றும் அது குறித்த address–ஐ ஸ்டேசன் whatsapp group–ல் இரவு 10.10க்கு பகிர்ந்தார் என்றும் தன்னுடைய போலீஸ் நம்பருக்கும் அங்கிருந்து செய்தி அனுப்பியிருந்தார் என்றும் அந்த முகவரியில் அப்பா பெயர் இல்லாமல் இருந்தது என்றும் அதுபற்றி முருகனிடம் போன் செய்து கேட்டதாகவும் கன்ட்ரோலில் இருந்து அப்படி தான் address போட்டார்கள். நீ போய் விசாரித்து கொள் என்று சொன்னார் என்றும் அந்த address கீழ் இரண்டு VAO நம்பர் கொடுத்து அவர்களிடம் போன் போட்டு கேட்டுக்கொள்ளும்படி சொன்னார் என்றும் தான் அவர்களுக்கு போன் செய்த போது இரண்டு நம்பரும் switch off ஆகி இருந்தது என்றும் கீழபனைக்குளம் சென்றபோது வழியில் செட்டிகுளம் கிராமத்தைச் சார்ந்த எசக்கி சிவசுப்பிரமணியன் என்பவருக்கு பிறந்த நாள் கொண்டாடி கொண்டிருந்தார்கள் என்றும் அவர் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் கொரோனா volunteer ஆக பணிபுரிந்து வந்தார் என்றும் அப்போது அங்கு முருகேசராஜா, சிதம்பரம்,

செட்டிகுளத்தைச் சேர்ந்த யோகேஷ்வரன் ஆகியோர்கள் இருந்தார்கள் என்றும் அந்த 4 நபர்களையும் அழைத்துக்கொண்டு கீழபனைக்குளத்திற்கு சென்றதாகவும் அங்கு விசாரித்தபோது அந்த பையன் யார் என்று சொல்ல பயந்தார்கள் என்றும் அரைமணி நேரம் அந்த பையனை தேடியதாகவும் ஒருவழியாக அந்த பையனை கண்டுபிடித்து அவரை secure செய்த விஷயத்தை A4 முருகனிடம் போன் செய்து சொன்னதாகவும் அழைத்து செல்வதற்கு அருகில் ஆட்டோ எதுவும் இல்லை. முக்கால் மணி நேரம் ஆட்டோவிற்காக காத்திருந்தேன். எந்த வாகனமும் கிடைக்கவில்லை என்றும் பிறகு அந்த வழியாக ஒரு டாடா ஏசி வந்தது என்றும் அவர் விருதுநகரிலிருந்து தட்டார்மடம் சென்று சொண்டிருந்தார் என்றும் தன்னுடைய நிலைமையை எடுத்துச்சொல்லி அந்த வண்டியில் இருந்த சிறிது இடத்தில் அவரை ஏற்றிவிட்டதாகவும் தான் அந்த வண்டியை follow செய்ததாகவும் செட்டிகுளத்திற்கு இசக்கி சுப்பிரமணியமும், யோகேஷ்-ம் அவர்கள் வீட்டிற்கு சென்றுவிட்டார்கள் என்றும் தானும், முருகேசராஜா, சிதம்பரமும் 00.53 மணிக்கு quarantine பணிபுரிந்த WPC 2504 கணபதியம்மாளுக்கு போன் செய்து கொரோனா பாதிக்கப்பட்ட நபரை கொண்டு வருகிறேன் என்று விபரம் சொன்னதாகவும் காலை 01.05 மணிக்கு சாத்தான்குளம் whatsapp group-ல் தான் பார்த்த பணி சம்பந்தமாக கலை கல்லூரி முன் கொரோனா பாதிக்கப்பட்ட ஜான்சன் பிரவீனை நிறுத்தி தன் செல்போனில் போட்டோ தெளிவாக இருக்காது என்பதால் தன்னுடன் வந்த சிதம்பரம் என்பவரது செல்போனில் ஜான்சன் பிரவீனை படம் எடுத்து தன்னுடைய செல்போனுக்கு அனுப்பி வைத்ததாகவும் அதுகுறித்த செய்தியை காலை 01.05க்கு ஸ்டேசன் whatsapp group-க்கு எல்லோரும் பார்க்குமாறு அனுப்பி வைத்ததாகவும் காலை 01.06 மணிக்கு quarantine duty பார்த்த WPC 2504 கணபதியம்மாளுக்கு போன் செய்து அந்த பையன் ரொம்ப அழுகுறான் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொன்னதாகவும், SP ஏட்டையா சந்தனக்குமாருக்கும் போன் செய்து சொன்னதாகவும் அவர் அட்டன் செய்துவிட்டு கட் பண்ணி விட்டார் என்றும் பிறகு சாத்தான்குளம் பஜாருக்கு காலை 01.30 மணிக்கு வந்துவிட்டதாகவும் பிறகு புது பஸ் ஸ்டாண்ட்-ல் காலை 06.00 மணி வரை round அடித்ததாகவும் பிறகு காலை 06.30 மணிக்கு தன்னுடைய சாத்தான்குளம் குடியிருப்பிற்கு வந்து சிறிது நேரம் ஓய்வெடுத்ததாகவும், அப்போது A2

பாலகிருஷ்ணன் 20.06.2020–ம் தேதி காலை 07.15 மணிக்கு தனக்கு போன் செய்து எஸ்கார்டு போக வேண்டும் சீக்கிரம் கிளம்பி வாங்க என்று சொன்னார் என்றும் தான் கிளம்பி கொண்டிருக்கும்போது quarantine செய்தவரின் தகப்பனார் தனக்கு போன் செய்து பையனை பார்க்கவேண்டுமென்று சொன்னார் என்றும் அவரது போன் நம்பர் 6381503010 என்றும் தான் காலை 07.50 மணிக்கு எஸ்கார்டு duty–க்கு போய்விட்டதாகவும் மதியம் 02.30 மணிக்கு ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை கோவில்பட்டி கிளை சிறைக்கு கொண்டு போய் அடைத்ததாகவும் அதுபற்றிய விபரத்தை Inspector–க்கு சொன்னதாகவும், அவர் போன் எடுக்கவில்லை என்றும் IO SI ரகு கணேஷ்க்கு போன் செய்து மேற்படி இருவரையும் நல்லபடியாக ஜெயிலில் விட்டதாக சொன்னதாகவும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை நாகராஜன் வண்டியில் கோவில்பட்டி கிளை சிறைக்கு அழைத்து சென்றதாகவும் அவர் கொரோனா volunteer என்றும் 22.06.2020–ம் தேதி தான் தபால் பணியை முடித்து கயத்தாறில் உள்ள தன்னுடைய வீட்டிற்கு 22.06.2020–ம் தேதி மாலை 06.00 மணிக்கு சென்றதாகவும் இரவு 10.00 மணிக்கு பென்னிக்ஸ் இறந்துவிட்டதாக கேள்விபட்டதாகவும், மறுநாள் காலை 06.30 மணிக்கு ஜெயராஜ் இறந்துவிட்டதாக கேள்விபட்டதாகவும் சிபிசிஐடி போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக தன்னை 02.07.2020–ல் இருந்து 07.07.2020 வரை விசாரித்தார்கள் என்றும் அதில் இந்த வழக்கிற்கும் தனக்கும் சம்பந்தம் எதுவும் இல்லை என்று சொன்னதாகவும் தன்னுடைய பாக்கெட் டைரியை கைப்பற்றினார்கள் என்றும் அதில் தான் சென்ற இடங்கள் குறித்து குறிப்பிட்டிருந்ததாகவும் அந்த நோட் புக் தனக்கு சாதகமாக இருப்பதால் அதை வாங்கி வைத்துக்கொண்டு தரவில்லை என்றும் பாக்கெட் டைரியையும், P டிக்கெட்டையும் RTI மூலமாக தகவல் கேட்டதாகவும் அதை CBI–யிடம் கொடுத்துவிட்டதாக தகவல் சொன்னார்கள் என்றும் சிறைத்துறை மூலம் தான் அனுப்பிய விண்ணப்பத்தை தாக்கல் செய்வதாகவும் அது எ.சா.ஆ.29 என்றும் அதில் எனக்கு RTI–ல் தனக்கு கிடைத்த பதிலை தாக்கல் செய்வதாகவும் அது எ.சா.ஆ.30 என்றும் கணபதியம்மாளின் செல்போன் 9080943544 என்றும் ஜான்சன் பிரவீன் அப்பா செல்போன் நம்பர் 6381305010 என்றும் செல்போன் சம்பந்தமாக Sec 63 (4) (c)படி Part A சான்றிதழை நான் தாக்கல் செய்வதாகவும் அது எ.சா.ஆ.32 என்றும்

சாட்சியம் அளித்துள்ளார். (நீதிமன்ற அனுமதியின்றி சாட்சி பேப்பர் ஒன்றை எடுத்து பார்த்துள்ளார். அது அரசுதரப்பில் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தப்பட்டு எதிரியிடமிருந்த கைப்பற்றப்பட்ட அந்த பேப்பர் எ.சா.ஆ.31 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). சாட்சி எச்சரிக்கப்பட்டு மேற்படி சாட்சியின் சாட்சி தன்மை குறித்து வழக்கு விசாரணையின் இறுதியில் தீர்மானிக்கபடும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

11. Dr.Pon Esakky சமர்ப்பித்ததாக கூறப்படும் அறிக்கை குறித்து தாக்கல் செய்ய Medical and Rural Health Service Department Director அவர்களுக்கு அழைப்பாணை அனுப்பியதில் ஆஜரான சாட்சி ஜெயந்தி நீ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில், அந்த ஆவணத்தை சமர்ப்பிப்பதற்கு கால அவகாசம் கோரியுள்ளார். பின்னிட்டு அவர் ஆவணங்களை தாக்கல் செய்துள்ள போது எதிரி தரப்பில் எ.சா.10 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் Directorate of Medical and Rural Health Service Department–ல் நிர்வாக அலுவலராக பணியாற்றி வருவதாகவும் The Director of Medical and Rural Health Service அவர்கள் SC.No.470/2020 வழக்கு சம்பந்தமாக கொடுத்து அனுப்பிய ஆவணத்தை தாக்கல் செய்வதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் கொண்டு வந்த இணை இயக்குநர் நல பணிகள் (பொ) மருத்துவர் பொன் இசக்கி, சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநருக்கு அனுப்பியுள்ள 08.07.2020ம் தேதியிட்ட ந.க.எண்.2310/நி1/ 2020–1 அறிக்கை covering letter உடன் மொத்தம் 21 பக்கம்) கொண்ட ஆவண நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு மருத்துவர் முலம் குறியீடு செய்ய கோப்பில் வைக்கப்பட்டு அசல் சாட்சியிடம் திருப்பி கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் பின்னிட்டு மருத்துவரை விசாரிக்கவில்லை என எதிரி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

12. ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் சாத்தான்குளம் நீதித்துறை நடுவரிடம் ஆஜர் படுத்தப்பட்ட சமயத்தில் என்னென்ன ஆவணங்கள் 3–ம் எதிரி தரப்பில் சாத்தான்குளம் நீதித்துறை நடுவரிடம் சமர்பிக்கப்பட்டது என்பது குறித்து அறிந்துகொள்ள மேற்படி

ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டதில் அவை இந்நீதிமன்றத்திற்கு E-mail மூலமாகவும் தபால் மூலமாகவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதுகுறித்து உறுதி செய்ய தற்போதைய சாத்தான்குளம் நீதித்துறை நடுவர் நீ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 வழக்கு சம்பந்தமாக மொத்தம் 1 முதல் 140 பக்கம் கொண்ட கோப்பானது தனது நீதிமன்றத்திலிருந்து கடித எண்.2456/2025 நாள்.21.11.2025 கடிதம் மூலம் இந்நீதிமன்றத்திற்கு கிடைக்கப்பெற்றது தான் என்று சாட்சியமளித்துள்ளார். அந்த கோப்பு அது நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

13. அ.சா.பொ.26-ஐ இயக்கிப்பார்க்க Username and password குறித்து அறிந்துகொள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் படை 9-வது அணியில் மணிமுத்தாறில் பணியாற்றும் திரு.மாரியப்பன் நீ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் 19.06.2020-ம் தேதி தூத்துக்குடி SP அலுவலகத்தில் காவல் உதவி ஆய்வாளராக தொழில்நுட்ப பிரிவில் பணியாற்றியதாகவும், 19.06.2020-ம் தேதி சாத்தான்குளம் காவல்நிலையத்தில் பராமரிக்கப்பட்ட CCTV சம்பந்தமாக user name, password தனக்கு ஞாபகம் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. அ.சா.பொ.26-ஐ இயக்கி பார்க்க 19.06.2020-ம் தேதி தூத்துக்குடி SP அலுவலகத்தில் காவல் ஆய்வாளராக தொழில்நுட்ப பிரிவில் பணியாற்றியுள்ள திரு.கிருஷ்ணசாமி நீ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில், தான் தற்போது திருநெல்வேலி மாநகர காவல்துறையில் துணை காவல் கண்காணிப்பாளராக தொழில்நுட்ப பிரிவில் பணியாற்றுவதாகவும், 19.06.2020-ம் தேதி தூத்துக்குடி SP அலுவலகத்தில் காவல் ஆய்வாளராக தொழில்நுட்ப பிரிவில் பணியாற்றியதாகவும், 19.06.2020-ம் தேதி சாத்தான்குளம் காவல்நிலையத்தில் பராமரிக்கப்பட்ட CCTV சம்பந்தமாக user name, password தற்போது தனக்கு ஞாபகம் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

15. 7–ம் எதிரி தரப்பில் எதிரி தரப்பு சாட்சியமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள புகைப்படம் எந்த தேதியில் எடுக்கப்பட்டது என்பது குறித்து அறிந்துகொள்ள தற்போது மதுரை மாவட்டம், சைபர் கிரைம் காவல்நிலையத்தில் Sub Inspector (Technical) ஆக பணியாற்றும் திருமதி.சுதர்சனா நீ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் கடந்த 6 வருடங்களாக பணிபுரிந்து வருவதாகவும் செல்போனில் whats app–ல் forwarded ஆன புகைப்படம் எந்த தேதியில், எத்தனை மணிக்கு வந்தது என்பதை கண்டறிய முடியும் என்றும் ஆனால் அந்த புகைப்படம் முதன்முதலாக எப்போது எந்த செல்போனில் capture செய்யப்பட்டதோ அந்த செல்போனில் Internal Storage–ல் உள்ள புகைப்படத்தை வைத்து அது எந்த தேதியில், எத்தனை மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்பதை கண்டறிய முடியும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

16. CDR–ஐ இயக்கி பார்க்கவும் அ.சா.பொ.26–ல் உள்ள விபரங்களை retrieve செய்யவும் தடய அறிவியல் வல்லுநரை வரவழைக்க உத்தரவிடப்பட்டதில் புலன்விசாரணையின்போது அ.சா.பொ.26–ஐ இயக்கி பார்த்து பரிசோதித்து அறிக்கையை அளித்துள்ள திரு.ஹிட்டேஸ் திரிவேதி நீ.சா.6 ஆக விசாரிக்கப்பட்டதில் ஹார்ட் டிஸ்க்–ஐ ஆய்வு செய்ய (to examine) DVR தேவையில்லை என்றும் தனது ஆய்வகத்தில் உள்ள DVR Examiner கருவியில் பரிசோதித்ததாகவும், அது பெரிய அளவிலானது என்பதால் அதனை நீதிமன்றத்திற்கு எடுத்த வரமுடியவில்லை என்று ஹார்ட் டிஸ்க் இன் உள்ளடக்கத்தை நீதிமன்றத்தில் காட்ட (to display) DVR தேவைப்படுகிறது என்றும் மேலும் ஹார்ட் டிஸ்க்–ஐ DVR–ல் சொருகினால் ஹார்ட் டிஸ்க்கை format செய்ய வேண்டியிருக்கும் என்றும் Ex.P.249 அறிக்கையில், 13.06.2020 முதல் 21.06.2020 வரையிலான தேதிகளில் எடுக்கப்பட்ட CCTV காட்சிகள் ஹார்ட் டிஸ்க் Q–1–ல் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் 13.06.2020 முதல் 21.06.2020 வரையிலான CCTV காட்சிகளை மீட்டெடுக்க முயற்சித்ததாகவும் ஆனால் தன்னால் மீட்டெடுக்க முடியவில்லை என்றும் 19.06.2020 மற்றும் 20.06.2020 தேதிகளுக்கான Q–1 ஹார்ட் டிஸ்க்கில் தனது பரிசோதனையில் எந்தத் தகவலையும் தன்னால் பார்க்க முடியவில்லை என்றும் DVR–ல் உள்ள சிக்கலைச்

சரிசெய்ய தனக்கு இயந்திர அறிவு இல்லை என்றும் Q–1–ஐ எந்த கணினியிலும் பார்க்க முடியுமா என்றதற்கு சிறப்பு கருவிகளைப் பயன்படுத்தி DVR மூலம் மட்டுமே CCTV ஹார்ட் டிஸ்க்கைக் காண முடியும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார் மேலும் 1–ம் எதிரி செய்துள்ள குறுக்கு விசாரணயில் CCTV ஹார்ட் டிஸ்க் பதிவு செய்யப்பட்டிருந்தால் அதை நீக்க முடியாது என்று சொன்னால் அது சரியல்ல என்றும் அதிலுள்ளதை மீட்டெடுக்க முடியும் என்று சொன்னால் கோப்பு மற்றும் ஹார்ட் டிஸ்க்கின் அளவைப் பொறுத்தது என்றும் பயனர்பெயர், நிர்வாகி ஐடி, கடவுச்சொல் இல்லாமல் ஹார்ட் டிஸ்க்கின் உள்ளடக்கத்தைக் காண முடியாது என்றுசொன்னால் பயனர் பெயர், நிர்வாகி ஐடி, கடவுச்சொல் இல்லாமல் DVR விஷயத்தில் அதை இயக்க முடியாது என்றும் ஆனால் CCTV ஹார்ட் டிஸ்க்–ன் உள்ளடக்கத்தை சிறப்பு கருவிகளைப் பயன்படுத்தி ஆய்வகத்தில் ஆராயலாம் என்றும் மின் கோளாறு அல்லது இயந்திரக் கோளாறு அல்லது தொழில்நுட்பக் கோளாறு காரணமாக சில நேரங்களில் வீடியோ காட்சிகள் பதிவு செய்யப்படாமல் போகலாம் என்று சொன்னால் மின்சாரம் செயலிழந்தால் அது பதிவு செய்யப்படாமல் போகலாம் என்றும் 13.06.2020 முதல் 21.06.2020 வரை ஏதேனும் மின் செயலிழப்பு ஏற்பட்டதா என்பதை தான் சரிபார்க்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் நீதிமன்ற கேள்விக்கு பதிலளிக்கையில் Ex.P.249 தன்னால் கொடுக்கப்பட்டது என சாட்சியம் அளித்துள்ளார்.

17. இந்நிலையில் Dr.Pon Esakky–ஐ விசாரிக்க அனுமதியளித்த நிலையில் அவரை விசாரிக்கவில்லை என 3–ம் எதிரி தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

18. தீர்வு காணவேண்டிய வினா

1–ம் எதிரிக்கு எதிராக இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்) மற்றும்

அதற்கு மாற்றாக இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 109 உ/இ இதச பிரிவு 114, (2எண்ணம்)–ன் கீழும்

2–ம் எதிரிக்கு எதிராக இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201, இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்)–ன் கீழும்

3–ம் எதிரிக்கு எதிராக இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 182, இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்)–ன் கீழும்

4–ம் எதிரிக்கு எதிராக இதச பிரிவு 342 (2 எண்ணம்) இதச பிரிவு 201, இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்)–ன் கீழும்

5–ம் எதிரிக்கு எதிராக இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201, இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34 (2எண்ணம்)–ன் கீழும்

6–ம் எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 342 (2 எண்ணம்), 201, இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்)–ன் கீழும்

7–ம் எதிரிக்கு எதிராக இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201, இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்)–ன் கீழும்

8–ம் எதிரிக்கு எதிராக இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201, 302 உ/இ இதச பிரிவு 109 உ/இ இதச பிரிவு 114–ன் கீழும் (2 எண்ணம்)

9–ம் எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201, இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்)–ன் கீழும் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்மானிக்க வேண்டிய விசயமாகும்.

<u>உபயதரப்பு வாதங்கள்</u>

19.1 அரசு தரப்பு வாதம் – சாத்தான்குளம் காவல் நிலைய குற்ற எண்.312/2020 வழக்கில் நீதிமன்ற காவலில் கோவில்பட்டி கிளை சிறைச்சாலையில் விசாரணை கைதியாக இருந்த பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் இறந்தது சம்பந்தமாக புகார் கொடுத்தது குறித்து கோவில்பட்டி கிளை சிறைச்சாலையின் கண்காணிப்பாளர் அ.சா.2 சங்கரும் புகாரைப்பெற்று பென்னிக்சின் இறப்பு சம்பந்தமாக குற்ற எண்.649/2020 வழக்கையும் ஜெயராஜ் இறப்பு சம்பந்தமாக குற்ற எண்.650/2020 வழக்கையும் பதிவு செய்தது குறித்த கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய பொறுப்பு அதிகாரியாக இருந்துள்ள அ.சா.28 திரு.முருகனும் சாட்சியமளித்துள்ளனர் என்றும் பென்னிக்சின் இறப்பு சம்பந்தமாக அ.சா.2 கொடுத்துள்ள புகார் அ.சா.ஆ.5 ஆகவும் ஜெயராஜ் இறப்பு சம்பந்தமாக அ.சா.2 கொடுத்துள்ள புகார் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும் பென்னிக்சின் இறப்பு சம்பந்தமாக கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் குற்றவியல் விசாரணை முறை சட்டப்பிரிவு 176(1)(A)–(i)–ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையின் நகல் அ.சா.ஆ.50 ஆகவும் ஜெயராஜின் இறப்பு சம்பந்தமாக கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் குற்றவியல் விசாரணைமுறை சட்டப்பிரிவு 176(1)(A)–(i)–ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையின் நகல் அ.சா.ஆ.51 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும் மேற்படி இரு வழக்குகளையும் கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய ஆய்வாளராக இருந்துள்ள அ.சா.32 திரு.சுதேசன் புலனாய்விற்கு எடுத்துக்கொண்டு விசாரணை கைதியாக இருந்துள்ளபோது, மேற்படி இருவரும் இறந்துள்ள காரணத்தால் நீதி விசாரணை நடத்தக்கோரி தூத்துக்குடி தலைமை குற்றவியல் நீதித்துறை

நடுவருக்கு கடிதம் அனுப்பியுள்ளார் என்றும் 24.06.2020-ம் தேதி மாலை 03.20 மணிக்கு பென்னிக்ஸ் உடல் சம்பந்தமாகவும் மாலை 04.35 மணிக்கு ஜெயராஜ் உடல் சம்பந்தமாகவும் அன்று மேற்படி இருவரது உறவினர்கள் தாவீது முன்னிலையில் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 பிரேத விசாரணை நடத்தியுள்ளார் என்றும் அதில் இருவரது உடலிலும் தலா 18 காயங்கள் இருந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது என்றும், ஜெயராஜின் பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.124 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பென்னிக்சின் பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.126 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் பிரேத விசாரணையில் கலந்து கொண்ட தாவீது அ.சா.30 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் லத்தியால் ஏற்பட்ட காயங்களால் இறந்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் இந்நிலையில் 23.06.2020-ம் தேதி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிப்பேராணை மனு எண்.1742/2020 மூலம் மேற்படி வழக்கை தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் இறப்பு சம்பந்தமாக நீதி விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்ய நீதித்துறை நடுவரை நியமிக்கும்படி தூத்துக்குடி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு உத்தரவிட்டுள்ளது என்றும், மேலும் இறந்துபோன ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் உடலை நீதித்துறை நடுவர் முன் பிரேத பரிசோதனை செய்ய மூன்று மருத்துவர்கள் கொண்ட குழுவை அமைக்கவும் பாளையங்கோட்டை அரசு மருத்துவமனை டீன் அவர்களுக்கு உத்தரவிட்டுள்ளது என்றும் மேற்படி பிரேத பரிசோதனையை புகைப்படம் எடுக்கவும் வீடியோ பதிவு செய்யவும் உத்தரவிட்டுள்ளது என்றும் அதன்படி மேற்படி இரு வழக்கிலும் தூத்துக்குடி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 திரு. பாரதிதாசன் அவர்களை குவிமுச பிரிவு 176-ன் கீழ் விசாரணை நடத்த விசாரணை அதிகாரியாக நியமித்துள்ளார் என்றும், அவர் 43 சாட்சிகளை விசாரித்து மேற்படி இருவரின் இறப்பு சம்மந்தமாகவும் தனித்தனியாக நீதி விசாரணை அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என்றும், பென்னிக்சின் இறப்பு சம்மந்தமான நீதி விசாரணை அறிக்கை அ.சா.ஆ.128 ஆகவும், ஜெயராஜின் இறப்பு சம்மந்தமான நீதி விசாரணை அறிக்கை அ.சா.ஆ.129 ஆகவும் குறியீடு

செய்யப்பட்டுள்ளது என்றும், அது குறித்து கோவில்பட்டி நீதித்துறை நடுவர் அ.சா.50 விரிவாக சாட்சியமளித்துள்ளார் என்றும் அதில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அவர்களுக்கு ஏற்பட்ட பலதரப்பட்ட மழுங்கிய காயங்களினால் ஏற்பட்ட பின் விளைவுகளினால் இறந்திருக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் இந்நிலையில் மேற்படி நீதிப்ரோணை மனுவில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை பிறப்பித்துள்ள உத்தரவின் படி திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை புலத்தலைவர் (Dean) ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் பிரேதத்தை பிரேத விசாரணை செய்ய மூன்று மருத்துவர்கள் கொண்ட குழுவை நியமித்து அவர்கள் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் முன்னிலையில் பிரேத பரிசோதனை நடத்தியுள்ளனர் என்றும் ஜெயராஜின் பிரேதத்தை அடையாளம் காட்டியது குறித்து கருப்பசாமியும் பென்னிக்சின் பிரேதத்தை அடையாளம் காட்டியது குறித்து சிவக்குமாரும் சாட்சியமளித்துள்ளனர் என்றும் ஜெயராஜின் பிரேதத்தை 24.06.2020-ம் தேதி இரவு 08.40 மணிக்கு தொடங்கி 10.10 வரையிலும் பென்னிக்சின் பிரேதத்தை இரவு 10.15 மணிக்கு தொடங்கி 11.30 வரையும் பிரேத பரிசோதனை செய்துள்ளனர் என்றும் அப்போது ஜெயராஜின் பிரேதத்திலிருந்த உடைகளை கருப்பசாமியும் பென்னிக்சின் பிரேதத்திலிருந்த உடைகளை சிவக்குமாரும் பெற்று கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களிடம் ஒப்படைத்துள்ளனர் என்றும் அதுகுறித்த கடிதம் அ.சா.ஆ.48, அ.சா.ஆ.49 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும் ஜெயராஜின் முதல் கட்ட பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.86-ல் ஜெயராஜுக்கு உடலில் 17 காயங்கள் காணப்பட்டதாகவும் பென்னிக்சின் முதல்கட்ட பிரேத பரிசோதனை அறிக்கை அ.சாஆ.87-ல் பென்னிக்சிற்கு உடலில் 13 காயங்களும் காணப்பட்டுள்ளன என்றும் பிரேத பரிசோதனை குறித்து மருத்துவர் கலைவாணன் அ.சா.43 விசாரிக்கப்பட்டுள்ளார் என்றும், அவர் மேற்படி ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் உடலில் இருந்த காயங்கள் குறித்து விரிவாக சாட்சியமளித்துள்ளார் என்றும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் முதல்கட்ட பிரேத பரிசோதனை அறிக்கைகளில் மேற்படி ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் நாவடி எலும்பு சீராக உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் பிரேத பரிசோதனையின் போது விசரா பரிசோதனைக்கு ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின்

உடல் உள்உறுப்புகளும் கொரோனா பரிசோதனைக்கு தொண்டைப் பகுதியிலிருந்து திரவமும் சேகரிக்கப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதில் மேற்படி ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் உடல் உள்ளுறுப்புகளில் விஷத்தன்மை எதுவும் இல்லை என்று அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது என்றும் பென்னிக்ஸின் Viscera அறிக்கையின் உண்மைநகல் அ.சா.ஆ.81 ஆகவும் ஜெயராஜின் Viscera அறிக்கையின் உண்மை நகல் அ.சா.ஆ.82 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும் மேலும் பென்னிக்சின் கொரோனா பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.91 ஆகவும் ஜெயராஜின் கொரோனா பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.94 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும் அதில் இருவருக்கும் கொரோனா எதுவும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் பென்னிக்சின் Histo Pathology Report அ.சாஆ.92 ஆகவும் ஜெயராஜின் Histo-pathology report அ.சாஆ.95 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும் அவற்றில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு உடனடியாக இறப்பை ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு பெரிய அளவில் நோய் எதுவும் இருப்பதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றும் அவற்றை பரிசீலித்து பிரேத பரிசோதனை நடத்தியுள்ள மூவர் மருத்துவர் குழு மேற்படி ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் இறப்பிற்கான காரணங்கள் குறித்து இறுதி அறிக்கைகள் சமர்ப்பித்துள்ளனர் என்றும் ஜெயராஜின் பிரேத பரிசோதனை சம்மந்தமான இறுதி அறிக்கை அ.சா.ஆ.93 ஆகவும், பென்னிக்சின் பிரேத பரிசோதனை சம்மந்தமான இறுதி அறிக்கை அ.சா.ஆ.90 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அதில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அவர்களுக்கு ஏற்பட்ட மழுங்கிய காயங்களாலும் அதன்பின் விளைவுகளாலும் இறந்திருக்கக் கூடும் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் இறப்பிற்கான காரணத்தை உறுதி செய்ய AIIMS மருத்துவமனை மருத்துவர்கள் அடங்கிய MIMB குழு அமைக்கப்பட்டு அவர்கள் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு சிகிச்சை அளித்த மருத்துவர்களை விசாரித்தும் சாத்தான்குளம் அரசு மருத்துவமனை, கோவில்பட்டி அரசு மருத்துவமனை, கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலை ஆகிவற்றை பார்வையிட்டும் முன்னிடப்பட்ட மருத்துவ ஆவணங்களை பரிசீலித்தும் உரிய விசாரணை நடத்தி முதல் கருத்துரு

ஒன்றையும் பின்னர் இறுதி கருத்துரு ஒன்றையும் அளித்துள்ளனர் என்றும், அவை முறையே அ.சாஆ.121 மற்றும் அ.சா.ஆ.122 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும் அவற்றில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் புட்டப்பகுதியில் பரந்த கன்றிய காயம் காணப்பட்டதாகவும், கால், கை பாதங்களிலும் மூட்டுகளிலும் காயங்கள் காணப்பட்டன என்றும், அவை தொடர்ந்து மேற்படி இருவரும் சீராக அடித்து காயப்படுத்தப்பட்டதால் ஏற்பட்டிருக்கலாம் என்றும் மேற்படி ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அவர்களுக்கு ஏற்பட்ட பல மழுங்கிய காயங்களாலும் அதனால் ஏற்பட்ட இரத்தப்போக்கு மற்றும் அதிர்ச்சியின் பின் விளைவுகளாலும் இறந்திருக்கக்கூடும் என கருத்து தெரிவித்துள்ளனர் என்றும், மேற்படி காயங்கள் லத்தி, குச்சி போன்ற பொருட்களால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும், மேற்படி நபர்களுக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் கூட்டாக இயற்கையின் சாதாரணபோக்கில் மேற்படி இருவருக்கும் மரணத்தை விளைவிக்க போதுமானதாக இருந்துள்ளது என்றும் பிரேத பரிசோதனை நடத்தியுள்ள மருத்துவர்களின் கருத்துடன் தாங்கள் ஒத்துபோவதாகவும், மேலும் மருத்துவர்கள் தரப்பில் கவனக்குறைவு எதுவும் இருப்பதாக தெரியவில்லை என்றும், மருத்துவ சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுத்ததில் கிளை சிறைச்சாலை அதிகாரிகளிடம் கவனக்குறைவு எதுவும் இருப்பதாக தெரியவில்லை என்றும் இறுதியறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர் என்றும், இதிலிருந்தே மேற்படி ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் இறப்பு இயற்கையானதல்ல என்பதும், மேற்படி ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அவர்களுக்கு ஏற்பட்ட பல மழுங்கிய காயங்களாலும் அதனால் ஏற்பட்ட இரத்தப்போக்கு மற்றும் அதிர்ச்சியின் பின் விளைவுகளாலும் இறந்துள்ளனர் என்பது நன்கு நிரூபணமாகும் என்றும், நீதித்துறை நடுவரிடம் நீதி விசாரணையின் போது தாமஸ் பிரான்சிஸ் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றும், அதில் பாரா 1 முதல் 4—ல் நடந்த சம்பவங்கள் பற்றி விளக்கி கூறியுள்ளார் என்றும், அதில் பென்னிக்சை பாலகிருஷ்ணன் லத்தியால் அடித்ததாகவும் அதன்பின் ஜெயராஜை அடித்ததாகவும் சாமதுரை, முருகன், செல்லத்துரை, வெயிலுமுத்து பிடித்ததாகவும் தாமஸ் பிரான்சிஸ் கூறியுள்ளார் என்றும், மேலும் இரத்தம் சிதறியிருந்தது குறித்தும், அந்த வாக்குமூலத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார் என்றும், உடன் குற்றவாளியின் அந்த

வாக்குமூலம் மற்ற எதிரிகளையும் கட்டுப்படுத்தும் என்றும், 18.06.2020–ம் தேதி இரவு 08.30 மணியளவில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் கடையருகே நான்கு ஐந்து பேர் அவர்களது முதலாளிடம் சம்பளம் பெறுவதற்காக நின்றிருந்துள்ளனர் என்றும் அப்போது அவ்வழியே ரோந்து வந்துள்ள எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் அவர்களை பார்த்து எதற்கு நிற்கிறீர்கள், கடையை பூட்டியாச்சுல்ல போக வேண்டியது தானே என்று சொல்லியுள்ளனர் என்றும் அப்போது ஓனர் வருகிறார், சம்பளம் வாங்கி கொண்டுபோக வேண்டுமென அவர்கள் கூறினர் என்றும் அதற்கு எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் "5 நிமிடத்தில் நான் வருவேன், யாராவது நின்றீர்கள் என்றால், அடித்து தோலை உரித்துவிடுவேன்" என்று சொல்லிவிட்டு சென்றுள்ளார் என்றும், அப்போது ஜெயராஜ் பொதுமக்களை இப்படி அடாவடியாக பேசியிருக்கிறார், முதலில் அவருக்கு தான் தண்டனை கொடுக்க வேண்டும் என்று சொல்லியுள்ளார் என்றும் இதுகுறித்து அ.சா.12 மற்றும் அ.சா.13 சாட்சியமளித்துள்ளனர் என்றும் 20.06.2020–ம் தேதி காலை சுமார் 07.30 மணிக்கு குண்டாஸ் பாலு ஜெயராஜை பற்றியும் அவரது இருப்பிடம் பற்றியும் விசாரித்துள்ளார் என்றும் இதுகுறித்த அ.சா.13 சாட்சியம் அளித்துள்ளார் என்றும் அ.சா.பொ.23 சிசிடிவி காட்சி பதிவுகளில் 18.06.2020–ம் தேதி பென்னிக்ஸ் கடை அருகே உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் சில நபர்கள் நின்று பேசிக் கொண்டிருப்பதும் பின்னர் அவர்கள் கலைந்து செல்வதும், 2 காவலர்கள் மோட்டார் சைக்கிளில் வருவதும் தெளிவாகத் தெரிகிறது என்றும், மேலும் 19.06.2020–ம் தேதிய சிசிடிவி காட்சி பதிவுகளில் இரவு 07.30 மணிக்கு ஆய்வாளர் ஜீப் வண்டிமறிச்சி அம்மன் கோவில் அருகே வந்து நிற்பதும், போலீசார் வந்து விசாரிப்பதும், பின்னர் ஜெயராஜ் போலீஸ் வாகனம் நோக்கி செல்வதும், அ.சா.பொ.23–ல் தெளிவாக தெரிகிறது என்றும் இதிலிருந்து 18.06.2020–ம் தேதி போலீசார் ரோந்து சென்றுள்ளனர் என்பதும் ஜெயராஜ் போலீசாரை பற்றி விமர்சித்துள்ளதால், 19.06.2020–ம் தேதி ஜெயராஜை போலீசார் விசாரித்துள்ளனர் என்பதும் நன்கு நிரூபணமாகும் என்றும், மேற்படி சிசிடிவி காட்சிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நேரம் நிகழ்வு நேரத்தை விட இரண்டு மணி நேரம் கூடுதலாக காட்டுவதாக உள்ளது என்றும், கோவிட் தொற்று காலம் என்பதால் அதை சரி செய்ய இயலவில்லை என்றும் அ.சா.49 சாட்சியமளித்துள்ளார் என்றும் அது

குறித்து இந்திய சாட்சியச்சட்டம் பிரிவு 65–பி சான்றிதழ் செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி சிசிடிவி காட்சிகளில் வெட்டுதலோ, ஒட்டதலோ இல்லை என தடய அறிவியல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் மேலும் அ.சா.பொ.23–ல் இரவு 07.45 மணி அளவில் ஜெயராஜை போலீசார் அவர்களது வாகனத்தில் காவல் நிலையம் அழைத்துச் செல்வதும் பின்னால் பென்னிக்ஸ் அவரது நண்பருடன் இருசக்கர வாகனத்தில் செல்வதும் தெளிவாக தெரிகிறது என்றும் இதுகுறித்து அ.சா.5 முதல் அ.சா.10, அ.சா.11, அ.சா.12, அ.சா.13 மற்றும் அ.சா.26 தெளிவுபட சாட்சியம் அளித்துள்ளனர் என்றும் 19.06.2020–ம் தேதி இரவு 07:30 மணியளவில் வண்டிமறிச்சி அம்மன் கோயில் அருகே நடந்த சம்பவங்கள் குறித்து அ.சா.8, அ.சா.10 முதல் அ.சா.13, அ.சா.26 தெளிவுபட சாட்சியமளித்துள்ளனர் என்றும், 19.06.2020–ம் தேதி 08.00 மணியளவில் பாரா பணியில் ப்யூலா செல்வகுமாரி இருந்துள்ளார் என்றும் ஸ்ரீதர் ஜெயராஜை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்துள்ளதை அவர் நேரில் கண்டுள்ளார் என்றும் இதுகுறித்து அவரும் சாட்சியம் அளித்துள்ளார் என்றும் அதனை ஒத்துரைத்து இடப்பிரச்சனை சம்பந்தமாக விசாரணைக்கு வந்துள்ள வழக்காடி அ.சா.25–ம் அவரது வழக்குரைஞர் மணிமாறன் அ.சா.9 மணிமாறனும் மேற்படி காவல் நிலையத்தில் சி.சி.டி.என்.எஸ் பணிபுரியும் காவலர் அ.சா.20 ரவிச்சந்திரனும் தெளிவுபட சாட்சியம் அளித்துள்ளனர் என்றும், காவல் நிலையத்தில் அடிக்கும் சத்தம் கேட்டது குறித்தும் அலறல் சத்தம் கேட்டது குறித்தும் அ.சா.5 முதல் அ.சா.10, அ.சா.20, அ.சா.25, அ.சா.26, அ.சா.30 தெளிவுபட சாட்சியமளித்துள்ளனர் என்றும், காவல் நிலையத்தின் உள்ளே நடந்த நிகழ்வுகள் குறித்து அ.சா.10, அ.சா.20, அ.சா.26, அ.சா.44 மற்றும் அ.சா.47 தெளிவுபட சாட்சியமளித்துள்ளனர் என்றும், பாலகிருஷ்ணன் ஜெயராஜை அடித்தது குறித்தும் பென்னிக்ஸ் காவல் நிலையத்திற்கு அவரது நண்பருடன் மோட்டார் சைக்கிளில் வந்தது குறித்தும் பாலகிருஷ்ணனிடம் "ஏன் என் தகப்பனாரை அழைத்து வந்தீர்கள்?" என்று முறையிட்டது குறித்தும் அப்போது காவல் நிலையத்தில் நடைபெற்றுள்ள சம்பவங்கள் குறித்தும் ஆய்வாளர் தன்னை வெளியே தள்ளிக் கதவை மூடுமாறு கட்டளையிட்டது குறித்தும் அ.சா.9 தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும் 19.06.20 அன்று மாலை சுமார் 07.45 மணியளவில் ஜெயராஜ் ஆய்வாளரது

வாகனத்தை நோக்கி எவ்வித மறுப்பும் தெரிவிக்காமலும், அமைதியான முறையில் சாதாரணமாக நடந்து செல்வது தெரிகின்றது என்றும் ஆய்வாளர் ஸ்ரீதர் தன்னை வண்டியை எடுக்க சொன்னது குறித்தும் காவல் நிலையத்தில் இறக்கி விட்டு இயற்கை உபாதைக்கு சென்று திரும்பியபோது சாத்தான்குளம் காவல் நிலைய கதவு பூட்டப்பட்டிருந்தது குறித்தும் ஆய்வாளர் பாலகிருஷ்ணன், முருகன், சாமதுரை, வெயிலுமுத்து, தாமஸ் பிரான்சிஸ், செல்லதுரை, ப்யூலா, பால்துரை, முத்துராஜா காவல் நிலையத்தில் இருந்தது குறித்தும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை ஜட்டியுடன் வைத்து பாலகிருஷ்ணன், முருகன், முத்துராஜா மாறி மாறி அடித்தது குறித்தும் ஜெயராஜ், பென்னிக்ஸ் நொண்டி நொண்டி நடந்தது குறித்தும் அவர்களது உடையில் இரத்தக்கறை இருந்தது குறித்தும் அ.சா.26 சாட்சியம் அளித்துள்ளார் என்றும் குற்ற எண்.312/20 தொடர்பான பார்வை மகஜரில் அ.சா.3–ன் கையெழுத்து எதுவும் காணப்படவில்லை என்றும் அ.சா.ஆ.24 காவல் அடைப்பு கோரிக்கையில் ஜெயராஜ், பென்னிக்ஸ் இருவருக்கும் கொரோனா பரிசோதனை செய்யப்பட்டதாகவும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு கொரோனா பாதிப்பு இல்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் இதிலிருந்து காவல் அடைப்பிற்கு அழைத்துச் செல்லும்வரை ஜெயராஜ் மற்றும் பென்னிஸ்க்கு கொரோனா பாதிப்பு எதுவும் இல்லை என்பது நன்கு விளங்கும் என்றும் அ.சா.ஆ.94 மற்றும் அ.சா.ஆ91–ன் படி இறந்த பிறகும் ஜெயராஜ் மற்றும் பெனிஸ்க்கு கொரோனா பாதிப்பு என்பது இல்லை என்பது நன்கு நிரூபணமாகும் என்றும், மேலும் தாக்க பயன்படுத்தப்பட்ட லத்திகள் அ.சா.பொ.21 வரிசை என்றும் அடிக்க பயன்படுத்திய டேபிள் அ.சா.பொ.10 ஆகியவற்றை ரேவதி அடையாளம் காட்டியுள்ளார் என்றும் ஜெயராஜ், பென்னிக்சின் உடைகள் அ.சா.பொ.12, அ.சா.பொ.20, அ.சா.பொ.13, அ.சா.பொ.17 குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும் அ.சா.ஆ.101, அ.சா.ஆ.31, அ.சா.ஆ.32, அ.சா.ஆ.33 ஆவணங்கள் இந்த வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளன என்றும் உடல் தகுதி சான்று வழங்கியபோது உடைகளை அகற்றி பரிசோதிக்கவில்லை என மருத்துவர் சாட்சியம் அளித்துள்ளார் என்றும் இதிலிருந்தே அவர் மேலோட்டமாக காயங்களை விபத்து பதிவேடுகளில் எழுதி உள்ளார் என்பதும் காயங்களை முழுமையாக பதிவு செய்யவில்லை என்பது தெரிய

வரும் என்றும் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் வைத்து ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை பார்த்தது குறித்து அ.சா.5 முதல் அ.சா.10, அ.சா.26, அ.சா.30 சாட்சியமளித்துள்ளனர் என்றும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை கோவில்பட்டி கிளை சிறைச்சாலையில் அனுமதித்தது குறித்து கோவில்பட்டி கிளை சிறைச்சாலையின் கண்காணிப்பாளர் அ.சா.2 சாட்சியமளித்துள்ளார் என்றும் அப்போதே ஜெயராஜுக்கும் பென்னிக்சுக்கும் புட்டத்திலும், உடலிலும் காயங்கள் இருந்துள்ளது கைதிகள் அனுமதி பதிவேடு அ.சா.ஆ.1 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அ.சா.2–ன் சாட்சியத்தை ஒத்துரைத்து கிளை சிறைச்சாலையின் காவலர் அ.சா.24 சாட்சியமளித்துள்ளார் என்றும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்க்கு 22.06.2020–ம் தேதி சிகிச்சை அளித்தது குறித்து மருத்துவர் அ.சா.18 சாட்சியம் அளித்துள்ளார் என்றும் கிளை சிறைச்சாலையின் மருத்துவபதிவேடு அ.சா.ஆ.2 ஆகவும் சிகிச்சை அளிக்கப்பட்ட விவரம் அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், 22.06.2020–ம் தேதி இரவு 07.00 மணியளவில் பென்னிக்சை மருத்துவ சிகிச்சைக்கு அனுமதித்தது குறித்தும் அவர்களுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை விபரம் குறித்தும் அன்று இரவு 10:30 மணிக்கு ஜெயராஜ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது குறித்தும் அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை விபரம் குறித்தும் அ.சா.21 தெளிவுபட சாட்சியமளித்துள்ளார் என்றும் அப்போது ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு செவிலியம் பார்த்துள்ள மருத்துவமனை ஊழியர்கள் அ.சா.14 மற்றும் அ.சா.15 ஆக விசாரிக்கப்பட்டுள்ளனர் என்றும் கோவில்பட்டி கிளை சிறைச்சாலையில் விசாரணைக் கைதியாக இருந்துள்ள அ.சா.17 மற்றும் அ.சா.46 ஆக விசாரிக்கப்பபட்டுள்ளனர் என்றும், சாத்தான்குளம் காவல் நிலையத்தில் வைத்து தாங்கள் தாக்கப்பட்டதாக ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் தங்களிடம் வாக்குமூலம் கொடுத்ததாக அவர்கள் கூறியுள்ளனர் என்றும் பிரேத பரிசோதனையின்போது உடன் இருந்தது குறித்தும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் உடல்களை மருத்துவருக்கு அடையாளம் காட்டியது குறித்தும் பிரேத பரிசோதனையின்போது ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் ஆடைகளை பெற்று கோவில்பட்டி நீதித்துறை நடுவரிடம் ஒப்படைத்தது குறித்தும் அ.சா.27 மற்றும் அ.சா.28 சாட்சியமளித்துள்ளனர் என்றும் கோவிட் விதிமுறைகள் குறித்து மெயில் கடிதங்களை

டவுன்லோட் செய்து செய்தது குறித்து அ.சா.19–ம் ரேவதியின் சாட்சியத்தை குவிமுச பிரிவு 164–ன் கீழ் பதிவு செய்தது குறித்து அ.சா.35–ம் மாவட்ட ஆட்சித் தலைவர் பிறப்பித்துள்ள கோவிட் விதிமுறைகள் தடை உத்தரவுகள் குறித்து அ.சா.34–ம் சாத்தான்குளம் அரசு மருத்துவமனை ஜெயராஜ் மற்றும் கடைக்கு அருகே உள்ள கடைகளில் உள்ள சிசிடிவி காட்சிகள் ஆகியவற்றை பென்டிரைவில் பதிவு செய்தது குறித்தும் சாத்தான்குளம் காவல்நிலைய ஹார்ட் டிஸ்க்கை கைப்பற்றியது குறித்தும் அ.சா.16 தெளிவுபட சாட்சியம் அளித்துள்ளார் என்றும், பென்னிக்ஸ் கடைக்கு அருகே உள்ள கிங் எலக்ட்ரிகல்ஸ் கடை, ஜி.ஜி. பாக்கியம் கடை, கார்ப்பரேட் சொசைட்டி ஜவுளிக்கடை ஆகியவற்றில் உள்ள சிசிடிவி காட்சி பதிவுகள் அ.சா.பொ.23 மற்றும் அ.சா.பொ.24 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், சாத்தான்குளம் காவல் நிலையத்தில் குப்பையின் நடுவே இருந்து ரத்தம் படிந்த ஆடைகள், அருந்த நிலையில் செருப்பு கைப்பற்றப்பட்டது குறித்தும், இரத்தத் தடயங்கள் சேகரிக்கப்பட்டது குறித்தும் அ.சா.41 மற்றும் அ.சா.42 தெளிவுபட சாட்சியம் அளித்துள்ளனர் என்றும், ஜெயராஜ், பென்னிக்ஸ் மற்றும் எதிரிகளுடைய கைபேசி தொடர்பான சிடிஆர் விவரங்கள் குறித்தும், சிம் கார்டு தொடர்பான விண்ணப்பங்கள் குறித்தும் அ.சா.38 முதல் அ.சா.40 வரை தெளிவுபட சாட்சியம் அளித்துள்ளனர் என்றும், எவரும் ஒருவருடைய செல்போனை பயன்படுத்த முடியும் என்றும், பொதுவாக கைபேசியில் பேசும்போது பல டவர்களில் எந்த டவருக்கான அலைக்கற்றை செறிவு மிகுந்ததாக உள்ளதோ அந்த டவர்தான் சிடிஆர் விவரங்களில் பதிவாகும் என்றும், சிடிஆர் விவரங்களை வைத்து எதிரிகள் வெளியிடங்களில் இருந்ததாக கூறப்படுவது ஏற்புடையது அல்ல என்று அ.சா.ஆ.244, அ.சா.ஆ.245, அ.சா.ஆ.246, அ.சா.ஆ.254, அ.சா.ஆ.249, அ.சா.ஆ.265 ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதிகோரி Crmp.No.432/22 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், மரபணு பரிசோதனையில் Q–11 மனித இரத்தம் என்றும் அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளது என்றும், அ.சா.ஆ.246–ன் படி Q–13–1, Q–14–1, Q–16–1, Q–16–2 ஆகியவற்றில் உள்ள இரத்தம் பென்னிக்சின் இரத்தம் என அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது என்றும், சாத்தான்குளம் ஹார்ட் டிஸ்கில்

13.06.2021 முதல் 21.06.2021 வரை காட்சிப்பதிவுகள் காணப்படவில்லை என்று அ.சா.50 தெளிவுபட சாட்சியமளித்துள்ளார் என்றும், சிசிடிவி காட்சிகள் அழிக்கப்பட்ட விவரத்தை ரேவதி தெளிவுபட சாட்சியம் அளித்துள்ளார் என்றும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை சட்டவிரோதமாக காவல் நிலையத்தில் எதிரிகள் அடைத்து வைத்தது குறித்து அ.சா.5, அ.சா.8 முதல் அ.சா.13, அ.சா.20, அ.சா.25, அ.சா.26, அ.சா.30, அ.சா.44, அ.சா.47, அ.சா.48 தெளிவுபட சாட்சியமளித்துள்ளனர் என்றும், மேலும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை சித்ரவதை செய்தது பற்றி ரேவதி குவிமுச பிரிவு 164–ன் கீழான வாக்குமூலத்திலும், 8–ம் எதிரி நீதித்துறை நடுவர் விசாரணையில் அளித்துள்ள வாக்குமூலத்திலும் தெளிவுபட குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், எதிரிகள் தடயங்களை அழித்தது குறித்து அ.சா.5, அ.சா.6, அ.சா.33, அ.சா.32, அ.சா.44, அ.சா.47 தெளிவுபட சாட்சியம் அளித்துள்ளனர் என்றும், இதச பிரிவு 195–ன் கீழான குற்றச்சாட்டுகள் குறித்து அ.சா.20, அ.சா.47, அ.சா.44, அ.சா.26 தெளிவுபட சாட்சியம் அளித்துள்ளனர் என்றும், 1–ம் எதிரி குவிமுச பிரிவு 313–ன் கீழான விசாரணை பக்கம் அ.சா.414, அ.சா.479, அ.சா.481, அ.சா.490, அ.சா.491–ல் அளித்துள்ள பதிலிலும், 5–ம் எதிரி குவிமுச பிரிவு 313–ன் கீழான விசாரணையில் பக்கம் 234–ல் அளித்துள்ள பதிலிலும், 6–ம் எதிரி குவிமுச பிரிவு 313–ன் கீழான விசாரணையில் பக்கம் 239–இல் அளித்துள்ள பதிலிலும் குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்டு பதில் அளித்துள்ளனர் என்றும், இதச பிரிவு 300–ன் படி காயங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் எதிரிகளுக்கு இருந்தாலே போதுமானது என்றும், ஏற்படுத்தப்பட்ட காயங்கள் இழப்பை ஏற்படுத்த போதுமானதாக இருக்கும் பட்சத்தில் தகுந்த சிகிச்சை அளித்திருந்தால் காப்பாற்றியிருக்க முடியும் என வாதம் எதையும் எதிரிகள் முன் வைக்க முடியாது என்றும், எதிரிகள் ஏற்படுத்தியுள்ள காயங்கள் குறித்து பிரேத பரிசோதனை அறிக்கையில் தெளிவுபட குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், இறப்புக்கான காரணம் குறித்து எம்.ஐ.எம்.பி மருத்துவக்குழு அளித்துள்ள அறிக்கையிலும் தெளிவுபட குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், சம்பவ சமயத்தில் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் தாங்கள் இல்லை என்பது போல் 1 மற்றும் 7 எதிரிகள் பொய்யான ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளனர் என்றும், 7–ம் தேதி

தாக்கல் செய்துள்ள புகைப்படம் எந்த தேதியில் எடுக்கப்பட்டது என்பது குறித்து நிரூபிக்க அந்த எந்த செல்போனில் அந்த புகைப்படம் எடுக்கப்பட்டதாக கூறப்படுகிறதோ, அந்த செல்போனை 7–ம் எதிரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், அது அந்த புகைப்படம் forward முலம் பெறப்பட்டதாக கூறப்படும் தனது செல்போனையே 7–ம் எதிரி தாக்கல் செய்துள்ளார் என்றும் அது ஏற்புடைய சட்சியமல்ல என்றும் 1–ம் எதிரி தாக்கல் செய்துள்ள எ.சா.ஆ.18 ஆவணத்தில் 2024–ம் வருடம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், இதிலிருந்து அந்த ஆவணம் இந்த வழக்குக்காக பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்பது நன்கு விளங்கும் என்றும், கேஸ் டைரி தொடர்ச்சியாக எண்ணிடப்பட வேண்டிய ஆவணம் என்றும், மேலும் அது பைண்டு செய்யப்பட வேண்டிய ஆவணம் என்றும், ஆனால் 1–ம் எதிரி தாக்கல் செய்துள்ள ஆவணம் வரிசையாக எண்ணிடப்படவுமில்லை பைண்டு செய்யப்படவுமில்லை என்றும், அது இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றும், Ramesh and another –vs– State of Uttar Pradesh என்ற வழக்கில் சிறு சிறு முரண்பாடுகள் சிபிஐத்தரப்பு வழக்கை பாதிக்காது என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே முன்னிடப்பட்டுள்ள சாட்சிகளை பரிசீலித்து எதிரிகளுக்கு எதிராக தக்க தண்டனை வழங்க வேண்டும் என்றும் அரசு தரப்பில் கற்றறிந்த வாதிட்டுள்ளார்.

19.2 பாதிக்கப்பட்ட நபர் தரப்பில் ஜெயராஜின் மகள் அ.சா.1 ப்யூலா ஜெயராஜ் தன் தகப்பனார் எந்த தவறும் செய்யவில்லை என்றும், தன் சகோதரரும் தவறு எதுவும் செய்யவில்லை என்றும், ஸ்ரீதரின் தூண்டுதலால் மேற்படி குற்றம் நிகழ்ந்துள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

19.3 ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை காவல் அடைப்பு செய்ய உத்தரவு பெற்றபோது கோவிட் காலம் என்பதால் நீதித்துறை நடுவரை அணுக விடவில்லை என்றும், சார்பு ஆய்வாளர் அறையில் இருந்து கைப்பற்றப்பட்ட லத்தி மற்றும் ஆய்வாளர் அறையில்

காலண்டரில் மனித இரத்தக்கறைகள் இருந்துள்ளது தடய அறிவியல் ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இதுகுறித்து தடை அறிவியல் ஆய்வு அறிக்கைகள் 239, 243, 246, 264 ஆகியவற்றில் தெளிவுபட குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், Q–7 சட்டை, Q–13–1 cotton thread, Q–14–1 cotton thread, Q–15 cotton thread, Q–20 லத்தி, Q–16–1 மற்றும் Q–16–2 பென்னிக்ஸ் ஆடைகள் ஆகியவற்றில் உள்ள இரத்தத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மரபணுக்களும் செல்வராணியின் மாதிரி இரத்தத்தில் இருந்து எடுக்கப்பட்ட மரபணுவும் ஒத்துப்போவதாக மேற்படி அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அலைபேசியில் எந்த டவரின் அலைக்கற்றை செறிவு மிக்கதாக உள்ளதோ அந்த டவர்தான் சிடிஆர் காண்பிக்கப்படும் என 2–ம் எதிரி தரப்பிலேயே குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் சிடிஆர் பதிவுகளை வைத்து எதிரிகள் சாத்தான்குளம் காவல் நிலையத்திற்கு வெளியே இருந்ததாக கூற முடியாது என்றும், மேலும் காவல் நிலையத்தில் இருந்து கொண்டே ஒருவர் மற்றொருவருக்கு போனில் பேச முடியும் என்றும், எ.சா.பொ.1 சிடியில் உள்ள புகைப்படங்களில் 7–ம் எதிரி காணப்படவில்லை என்றும், அந்த புகைப்படம் எந்த செல்போனில் பதிவு செய்யப்பட்டதோ, அந்த செல்போனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், அந்த ஆவணம் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் 7–ம் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணம் சாட்சிய மதிப்பற்றது என்றும், கைது செய்யப்பட்ட சமயத்தில் ஜெயராஜ் வெள்ளை வேஷ்டியும், பென்னிக்ஸ் ஜீன்ஸ்ம் அணிந்திருந்துள்ளனர் காவல் அடைப்புகோர அவற்றை மாற்ற வேண்டிய அவசியம் என்ன என்பதை எதிரிகள் விளக்கவில்லை என்றும், மருத்துவமனையில் வைத்து ஆடைகள் மாற்றப்பட்டது சிசிடிவி காட்சிகளில் பதிவாகியுள்ளது என்றும், இவ்வழக்கில் நடத்தப்பட்ட அரசு விசாரணை, சிபிசிஐடி விசாரணை, நீதித்துறை விசாரணை அனைத்திலும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அடித்து சித்திரவதை செய்யப்பட்டு அதில் ஏற்பட்ட காயத்தால் இறந்துள்ளனர் என்பது தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், அ.சா.14–ஐ குறுக்கு விசாரணை செய்கையில் கொரோனா பணி சம்பந்தமாக மருத்துவமனையில் ஆய்வு செய்து கொண்டிருந்தது போல முதலில் 1–ம் எதிரி

எதிர்வாதம் ஒன்றை எழுப்பி இருந்தார் என்றும், பின்னிட்டு தற்போது ரோந்து சென்றதாக 1–ம் எதிரி எதிர்வாதம் எழுப்பி வருகிறார் என்றும், இதிலிருந்து எப்படியாவது இந்த வழக்கில் இருந்து தப்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் முன்னுக்குப் பின் முரணாக பொய்யான சங்கதிகளை கூறி 1–ம் எதிரி எதிர்வாதம் செய்து வருகிறார் என்பது நன்கு விளங்கும் என்றும், 1–ம் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எ.சா.ஆ.18 ஆவணத்தில் 2024–ம் வருடம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், இதிலிருந்து அந்த ஆவணம் இந்த வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்பது நன்கு விளங்கும் என்றும், எனவே 1–ம் எதிரி பொய் சாட்சியம் அளித்த குற்றத்திற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட நபர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டுள்ளார்.

19.4 அரசு தரப்பில் எழுத்து மூலமாக வாத உரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் பாதிக்கப்பட்ட நபர்கள் தரப்பிலும் எழுத்துமூலமாக வாத உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

19.5 1–ம் எதிரி தரப்பு வாதம் – இரத்தம் படிந்த ஆடைகள் அறுந்த செருப்பை சாத்தான்குளம் காவல் நிலைய குப்பைக்கூடத்தில் 1–ம் எதிரி போட்டதாக செல்வராணி, ஜெயா ஜோசப், துரை வீரபாண்டி, அரவிந்த் ஜெயசீலன், தாவீது ஆகியோர்கள் வாக்குமூலம் கொடுத்துள்ளதாகக் கூறி அ.சா.51 மேற்படி இரு வழக்குகளிலும் சட்டப்பிரிவுகளை குவிமுச பிரிவு 174 என்பதிலிருந்து இதச பிரிவுகள் 342, 201, 302 என மாற்றம் செய்து 1–ம் எதிரியை கைது செய்துள்ளார் என்றும், ஆனால் மேற்படி சாட்சிகளின் வாக்குமூலங்களில் 1–ம் எதிரி இரத்தம் படிந்த ஆடைகளையோ அறுந்த செருப்பையோ சாத்தான்குளம் காவல்நிலைய குப்பைக்கூடத்தில் போட்டதாக குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றும் அதை அ.சா.51 குறுக்குவிசாரணை பக்கம் 27, 28–ல் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், மேலும் 1–ம் எதிரியை கைது செய்த பின்னரே சாட்சி ரேவதியையும், ப்யூலாவையும் விசாரணை செய்துள்ளார் என்றும், சாத்தான்குளம்

காவல்நிலையத்தின் பின்புறம் இரத்தம்பட்ட ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோரின் துணிகளை கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரிதான் என அ.சா.51 பக்கம் 36–ல் குறிப்பிட்டுள்ளார் என்றும், 1–ம் எதிரி அடிக்கத் தூண்டியதாக காவல் அடைப்பு வேண்டுகோள் கடிதத்தில் குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை என்றும், பிரேத பரிசோதனை இறுதி அறிக்கை 14.07.2020–ம் தேதி கிடைக்கப்பெற்றுள்ளது என்றும் ஆனால் அதற்கு முன்பே குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 176(1) (A)–ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையில் சட்டப்பிரிவை மாறுதல் செய்து இதச பிரிவு 342, 302, 201 என சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதில் 1–ம் எதிரி கொலை செய்ய தூண்டியதாகவோ 1–ம் எதிரி ஸ்ரீதரின் தூண்டுதலின் பேரில் மற்ற எதிரிகள் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை அடித்ததாகவோ குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் உறவினர் எவரும் 1–ம் எதிரி தாக்கியதாக எவ்வித புகாரும் கொடுக்கவில்லை என்றும், முதல் தகவல் அறிக்கை எதிலும் 1–ம் எதிரி ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ்சை அடித்ததாகவோ அடிக்கத் தூண்டியதாகவோ குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை என்றும், காவல் அடைப்பு கோரிக்கையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ்சை அடித்ததாகவோ அடிக்கத் தூண்டியதாகவோ 1–ம் எதிரி இரத்தத்தை துடைக்கச் சொன்னதாகவோ குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை என்றும், இவ்வழக்கில் பதிவு செய்யப்பட்டுள்ள முதல்தகவல் அறிக்கைகளில் 1–ம் எதிரி எந்த குற்றச்செயலிலும் ஈடுபட்டதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றும், கைதுக்கான காரணம் எதுவும் 1–ம் எதிரிக்கு தெரிவிக்கப்படவில்லை என்றும், அரசியல் காரணங்களுக்காகவும், ஊடக அழுத்தத்திற்காகவும், எவ்வகை அடிப்படை ஆதாரமும் இன்றி 1–ம் எதிரி மீது அரசு தரப்பில் பொய்யாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது என்றும் மேலும் 18.06.2020 அன்று ஜெயராஜ் அவரது கடை முன் நின்று கொண்டிருந்ததாகவும், அவர் போலீசை ஏசியதாகவும் அதை குண்டாஸ் பாலு என்ற காவலர் பார்த்ததாகவும் அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது என்றும் ஆனால் அது சம்பந்தமாக குண்டாஸ் பாலு அரசு தரப்பில் சாட்சியாக அழைத்து விசாரிக்கப்படவில்லை என்றும் சாத்தான்குளம் காவல் நிலைய பொது நாள் குறிப்பு அ.சா.34–ல் 19.06.2020–ம்

தேதி இரவு 07.30 மணியிலிருந்து 20.06.2020–ம் தேதி காலை 06.00 மணி வரை 1–ம் எதிரி இருந்ததாகவோ அன்று காவல் நிலைய பொறுப்பு அதிகாரியாக செயல்பட்டதாகவோ பதிவு எதுவும் காணப்படவில்லை என்றும், 19.06.2020–ம் தேதி காலை 07.00 மணிக்கு சாத்தான்குளம் காவல் நிலைய Rough duty சம்பந்தமாக அறிவுரைகளை வழங்கிவிட்டு சார்பு ஆய்வாளர் பாலகிருஷ்ணனிடம் நிலைய பொறுப்பை ஒப்படைத்துவிட்டு 1–ம் எதிரி ரோந்து சென்றுவிட்டார் என்றும் இது சம்பந்தமாக Rough duty ரிஜிஸ்டரில் வில்லேஜ் விசிட் என ஆய்வாளரது பெயருக்கு நேரே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், 19.06.2020–ம் தேதி டிரைவர் அ.சா.26 ஜெயசேகருடன் பன்னம்பாறை, தட்சமொழி உள்ளிட்ட பல இடங்களுக்கு கொரோனா சம்பந்தமாக 1–ம் எதிரி ரோந்து சென்றுவிட்டு 02.15 மணிக்கு 1–ம் எதிரி அவரது வீட்டிற்கு சென்றுள்ளார் என்றும், 19.06.2020–ம் தேதி 1–ம் எதிரி ரோந்து சென்ற விபரங்கள் அடங்கிய ஆய்வாளரது வாகன log புத்தகம் எ.சா.ஆ.4 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அதை 20.06.2020–ம் தேதி காலையிலேயே எழுதிவிட்டதாகவும் அப்போது ஆய்வாளர் வீட்டிலிருந்தார் என்றும் அ.சா.26 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், 19.06.2020–ம் தேதிய டெய்லி டைரி எ.சா.ஆ.19 ஆகவும் 20.06.2020–ம் தேதிய டெய்லி டைரி எ.சா.ஆ.20 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், 1–ம் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சாட்சியங்களை பரிசீலித்து பார்த்தால் 1–ம் எதிரி 19.06.2020–ம் தேதி இரவு ரோந்து சென்றுள்ளது நிருபணமாகும் என்றும் 20.06.2020 அதிகாலை 02.15 மணி முதல் காலை 06.00 மணி வரை 1–ம் எதிரி வீட்டில் ஓய்வில் இருந்துள்ளார் என்றும், குற்றம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் 1–ம் எதிரி சாத்தான் குளம் காவல் நிலைய பொறுப்பு அதிகாரியாக இல்லை என்றும் மேற்படி காவல் நிலையத்திலும் அப்போது அவர் இல்லை என்றும் அ.சா.49 பிரபு சி.சி.டி.வி பதிவில் இரண்டு மணி நேரம் கூடுதலாக காணப்பட்டதாக தன்னிடம் குறிப்பிட்டு சொல்ல வில்லை என அ.சா.51 சாட்சியம் அளித்துள்ளார் என்றும் 19.06.2020–ம் தேதி 21.00 மணிக்கு A3 ரகுகணேஷ் ரோந்து பணி முடித்து சாத்தான்குளம் காவல்நிலையம் வந்து பொறுப்பு அதிகாரியாக இருந்துள்ளார் என்றும் அப்போது 1–ம் எதிரி காவல்நிலைய பொறுப்பு அதிகாரியாக இல்லை என்றும்

22.06.2020–ம் தேதி இரவு சுமார் 21.45 மணியளவில் SP office Inspector பாலமுருகன் போனில் தொடர்பு கொண்டபோது, தான் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் மீது வழக்கு போடப்பட்ட விவரமே 1–ம் எதிரிக்கு தெரிய வந்தது என்றும் அதுவரை குற்ற எண்.312/2020 வழக்கு FIR பற்றி ரகுகணேஷ் 1–ம் எதிரியிடம் தகவல் எதுவும் சொல்லவில்லை என்றும், மேற்படி ஜெயராஜ், பென்னிக்ஸ் இறந்தது சம்பந்தமாக கோவில்பட்டி நீதித்துறை நடுவர் 1–ம் எதிரியை விசாரிக்கவில்லை என்றும், 20.06.2020–ம் தேதி காலை 3 முறை ரேவதி 1–ம் எதிரியுடன் போனில் பேசியுள்ளார் என்றும், அன்று காலை 06.00 மணிக்கு 6–ம் எதிரி முத்துராஜா, 7–ம் எதிரி செல்லத்துரை எதிரிகள் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை காவல் அடைப்பிற்கு உட்படுத்த தங்கள் பொறுப்பில் எடுத்து சென்றுள்ளனர் என்றும், இதிலிருந்தே ஆட்கள் கூடிவிடுவார்கள் என்றும், அவர்களை உடனே ரிமாண்டுக்கு அழைத்துச் செல்லும்படி காலை 07.00 மணிக்கு ஆய்வாளர் போனில் தகவல் சொன்னதாகவும், ரேவதி அளித்துள்ள சாட்சியம் பொய்யானது என்பது விளங்கும் என்றும், 1–ம் எதிரி ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை அடிக்க சொல்லவில்லை என்றும், அடிக்கும்படி எந்த எதிரியையும் 1–ம் எதிரி தூண்டவில்லை என்றும், குற்ற எண்.312/2020 வழக்கு சம்பந்தமாக 1–ம் எதிரி எந்த ஆலோசனையும் செய்யவில்லை என்றும், 1–ம் எதிரி பொதுவான உட்கருத்துடன் மேற்படி வழக்கில் செயல்படவில்லை என்றும், 19.06.2020–ம் தேதி நடந்த சம்பவத்திற்கு 1–ம் எதிரி பொறுப்பு அல்ல என்றும், குற்ற எண்.312/2020 வழக்கில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் கைது செய்யப்பட்டு உச்ச நீதிமன்ற விதிமுறைகள் கடைபிடிக்கப்பட்டு குமரன் மற்றும் சின்ன இசக்கி என்பவர்களிடம் கைது பற்றி தெரிவிக்கப்பட்டு இரவு நேரம் என்பதால் மருத்துவ பரிசோதனைக்கு மறுநாள் அதிகாலை காலை 06.00 மணிக்கே ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு மருத்துவ பரிசோதனை முடிக்கப்பட்டு முறையாக காவல் அடைப்பு பெறப்பட்டு நீதித்துறை நடுவர் முன் ஆஜர்படுத்தப்பட்டு கோவில்பட்டி கிளை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்றும், அ.சா.ஆ.27 கைது குறிப்பாணையில் ஜெயராஜூம், அ.சா.ஆ.28 கைது குறிப்பாணையில் பென்னிக்சும் கையெழுத்திட்டுள்ளனர் என்றும்,

உறவினர்களுக்கு SMS மூலம் கைது விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், ரகுகணேஷ் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை கைது செய்து பாரா ரேவதியிடம் ஒப்படைத்துள்ளார் என்றும் ரேவதி மெடிக்கல் மெமோவில் கையெழுத்து போட்டுள்ளார் என்றும், இந்நிலையில் தன்னை காப்பாற்றிக்கொள்வதற்காக ரேவதி பொய் சாட்சியம் அளித்துள்ளார் என்றும் குற்ற எண்.312/2020 தொடர்பான ஆவணம் எதிலும் 1–ம் எதிரி கையெழுத்திடவில்லை என்றும், 1–ம் எதிரியின் அறிவுரைப்படி அந்த ஆவணங்கள் தயாரிக்கப்பட்டதாகவும், அதில் குறிப்பு எதுவும் இல்லை என்றும் மருத்துவர் அ.சா.45–ம் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு இரண்டு காயங்கள் இருப்பதாக மட்டுமே குறிப்பிட்டுள்ளார் என்றும், இந்நிலையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு ஏற்பட்ட மற்ற காயங்கள் குறித்து அரசு தரப்பில் விளக்கப்படவில்லை என்றும் அ.சா.பொ.23 வீடியோ பதிவு காட்சிகளில் 19.06.2020–ம் தேதி 07.30 மணிக்கு வண்டிமறிச்சியம்மன் கோவில் அருகே ஸ்ரீதர் இருந்ததாக பதிவு ஏதும் காணப்படவில்லை என்றும், குஜராத் புகைப்பட பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.266–லும் ஸ்ரீதர் முகம் காணப்படவில்லை என்றே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேற்படி சிசிடிவி காட்சிகளை நீதிமன்றத்தில் போட்டு காட்டப்பட்டபோது அதில் 1–ம் எதிரி காணப்படவில்லை என்றே அ.சா.44 குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார் என்றும் பிரேத விசாரணை அறிக்கையில் 15–ம் தொகுதியில் 1–ம் எதிரி ஜெயராஜை வாகனத்தில் அழைத்து சென்றதாகவோ, காயப்படுத்தியதாகவோ குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையிலும் ஜெயராஜை 19.06.2020–ம் தேதி இரவு 07.30 முதல் 08.00 மணிக்குள் 1–ம் எதிரி காவல் நிலையத்திற்கு அழைத்துசென்றதாக சொல்லப்படவில்லை என்றும், நீதி விசாரணை அறிக்கை அ.சா.ஆ 128 மற்றும் 129–ல் 19.06.2020 அன்று இரவு 07.45 மணிக்கு ஸ்ரீதர் ஜெயராஜை வாகனத்தில் அழைத்து சென்றதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றும், 07.15 மணியளவில் வண்டிமறிச்சி அம்மன் கோவில் அருகில் வாகனத்தை நிறுத்தியபோது ஆய்வாளர் ஸ்ரீதர் வாகனத்தின் முன்புறம் உட்கார்ந்திருந்தார் என்று ஜெயசேகர் அ.சா.50 அவர்களிடம் சாட்சியம் அளிக்கவில்லை என்றும் ஸ்ரீதர் வண்டியை எடுக்க சொன்னதாக ஜெயசேகர் தன்னிடம் வாக்குமூலம் கொடுத்ததாக தன்னுடைய விசாரணை அறிக்கைகள்

அ.சா.ஆ.128, 129–ல் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று அ.சா.50 சாட்சியம் அளித்துள்ளார் என்றும் 1–ம் எதிரி மற்ற எதிரிகளை அடிக்கத்தூண்டியதாக ஜெயசேகர் தன்னிடம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும் அ.சா.50 சாட்சியம் அளித்துள்ளார் என்றும் எதிரிகள் தடயங்களை அழித்தாக அ.சா.42 அவரது அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை ஜட்டியுடன் நிற்க வைத்திருந்ததாக அ.சா.47 ரேவதி அசா.50 அவர்களிடம் கூறியிருக்கவில்லை என்றும் 19.06.2020–ம் தேதி காமராஜர் சிலை அருகே சார்பு ஆய்வாளர், ஆய்வாளரும் பேசியதாகவோ, பாலகிருஷ்ணன் ஆட்டோ டிரைவர் மீது தோளில் கைவைத்து பேசியதாகவோ நீதி விசாரணை அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றும் செல்போன் கடையில் ஏற்பட்ட பிரச்சனையால் போலீசார் பென்னிக்சையும் அவரது அப்பாவையும் காவல் நிலையத்தில் வைத்து அடித்ததாக சுனில் என்பவரிடம் பென்னிக்ஸ் கூறியதாக தமிழ்செல்வம் நீதித்துறை நடுவரது விசாரணையில் குறிப்பிட்டுள்ளார் என்றும், இதிலிருந்து போலீசாரை ஜெயராஜ் ஏசியதாகவும் அதனால் உள்நோக்கம் கொண்டு ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை போலீசார் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றதாகவும் கூறப்படுவது உண்மையானதல்ல என்பது நன்கு விளங்கும் என்றும், மேலும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை பழிவாங்க வேண்டும் என்று எதிரிகள் திட்டம் எதுவும் திட்டி இருக்கவில்லை என்றும், 1–ம் எதிரி ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை சட்டவிரோதமாக அடைத்து வைத்ததாக ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் சக கைதிகளிடம் கூறியதாக சக கைதிகள் எவரும் குறிப்பிட்டு வாக்குமூலம் ஏதும் அளிக்கவில்லை என்றும், 1–ம் எதிரி சட்டவிரோதமாக ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை அடைத்து வைத்திருந்ததாக ரேவதி குவிமுச 164–ன் கீழான வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியிருக்கவில்லை என்றும், 1–ம் எதிரி சட்டவிரோதமாக ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை அடைத்து வைத்திருந்ததாக அ.சா.9, அ.சா.10 மற்றும் அ.சா.20 சாட்சியம் அளிக்கவில்லை என்றும், கடையை லேட்டாக மூடியதால் போலீசார் அழைத்து வந்ததாக ஜெயராஜ் அ.சா.46 அ.சா.17, அ.சா.9, அ.சா.20, அ.சா.8–யிடம் வாக்குமூலம் அளித்துள்ளனர் என்றும், அது மரணம் வாக்குமூலத்திற்கு ஒப்பானது என்றும், இதிலிருந்தே கடையை தாமதமாக மூடியதால் ஜெயராஜ் மற்றும்

பென்னிக்சுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது நன்கு விளங்கும் என்றும், SP CID சந்தனக்குமாரை அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை 1–ம் எதிரி அழைத்து வந்ததாகவோ, 1–ம் எதிரியிடம் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் தகராறு செய்ததாகவோ நிரூபிக்கப்படாத நிலையில் இதச பிரிவு 342–ன் கீழான குற்றச்சாட்டை பொருத்து 1–ம் எதிரியை விடுதலை செய்யவேண்டும் என்றும், டாக்டர் வெங்கடேஷ் கருமை நிற காயத்திலிருந்து இரத்தம் வர வாய்ப்பில்லை என்றும், ஆள்காட்டி விரலில் 0.2 x 0.1 அளவில் சிராய்ப்பு மற்றும் வீக்க காயம் இருந்ததாகவும் அதிலிருந்து இரத்தம் வர வாய்ப்பு இல்லை என்றும், பென்னிக்சின் பிரேத விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள காயங்களில் 3–வது காயத்தில் இருந்து இரத்தம் வர வாய்ப்பு இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார் என்றும், டாக்டர் வினிலா 0.2 X 0.1 c.m abrasion காயத்தில் இருந்து இரத்தம் சொட்டு சொட்டாக சிந்துவதற்கு வாய்ப்பில்லை என சாட்சியம் அளித்துள்ளார் என்றும், எந்த விரலில் காயம் ஏற்பட்டது என ஞாபகம் இல்லை என அ.சா.47 நீதித்துறை நடுவர் விசாரணையில் கூறியுள்ளார் என்றும் எந்த கையில் இருந்து இரத்தம் வந்தது என்று தனக்கு ஞாபகமில்லை என ப்யூலா செல்வகுமாரி நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார் என்றும், தாமஸ் இரத்தம் சிந்தியதை பற்றி குறிப்பிட்டு கூறவில்லை என நீதித்துறை நடுவர் அ.சா.50 சாட்சியம் அளித்துள்ளார் என்றும் 1–ம் எதிரியை நேரில் பார்த்ததாக அ.சா.33 தன்னிடம் அளித்த வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என நீதித்துறை நடுவர் அ.சா.50 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், மேலும் எப்போதும் ஆய்வாளர் சுத்தமாக இருக்க வேண்டும் என்று சொன்னதன் பேரில் சுத்தம் செய்ததாக அ.சா.33 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், தடயத்தை அழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் சுத்தம் செய்யச் சொன்னதாக அ.சா.33 தன்னிடம் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றும் அ.சா.50 சாட்சியம் அளித்துள்ளார் என்றும் 20.06.2020–ம் தேதி காலை 07.00 மணிக்கு 1–ம் எதிரி காவல் நிலையத்திற்கு வந்ததாகவோ, சாட்சிகளை அழிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இரத்தத்தை துடைக்கச் சொன்னதாகவோ அ.சா.44, அ.சா.33, அ.சா.47 அ.சா.50 அவர்களிடம் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றும், ஸ்ரீதர் இரத்தத்தை துடைக்க சொன்னதாகவோ,

பென்னிக்ஸ் இரத்தத்தை துடைத்ததை பார்த்ததாகவோ தாமஸ் அ.சா.50–யிடம் நீதித்துறை விசாரணையில் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், சிசிடிவி பதிவுகள் எப்போது அழிக்கப்பட்டது என அ.சா.52 குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எப்போது சிசிடிவி காட்சிகள் அழிக்கப்பட்டது என ரேவதி குவிமுச பிரிவு 164–ன் கீழான வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், 1–ம் எதிரி சிசிடிவி காட்சி பதிவுகளை அழிக்கும்படி வெயிலுமுத்து மற்றும் தாமஸ் பிரான்சிஸிடம் சொன்னதாக ரேவதி தன்னிடம் வாக்குமூலம் அளிக்கவில்லை என்று அ.சா.52 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், DVR–ல் உள்ள பதிவுகளை அழிக்க முடியாது என்றும், ஒருவேளை அளிக்கப்பட்டாலும் அதில் மீண்டும் மறுபதிவு செய்யப்படாத வரை அதை மீட்டெடுக்க முடியும் என்றும், அதை இயக்கும் அளவிற்கு 1–ம் எதிரிக்கு பயிற்சி கொடுக்கப்படவில்லை என்றும், அது சம்பந்தமான பாஸ்வேர்டு எஸ்.பி அலுவலகத்தில் அதனை பராமரிப்பவர்களிடம் தான் இருக்கும் என்றும், அது லாக் அவுட் செய்யப்பட்டதா என்பதை கால் லாக் ஹிஸ்டரி லாக்கு மூலம் அறிந்து கொள்ள முடியும் என்றும், காவல்நிலையத்தில் மின் கோளாறாலோ அல்லது தொழில்நுட்பக் கோளாறாலோ ஹார்ட் டிஸ்கில் காட்சிகள் பதிவாகாமல் போயிருக்கலாம் என்றும் அதற்கும் 1–ம் எதிரிக்கும் சம்பந்தம் எதுவும் இல்லை என்றும், எனவே இதச பிரிவு 201–ன் கீழ் 1–ம் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டிலிருந்து 1–ம் எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் 1–ம் எதிரியின் தூண்டுதலின் பேரிலும் அறிவுறுத்தலின் பேரிலும் பொய்யான புகார் முருகனிடமிருந்து பெறப்பட்டதாகவும், அதில் முத்துராஜா சாட்சி கையெழுத்து போட்டதாகவும், அந்த வழக்கு ஆய்வாளரின் தூண்டுதலின்பேரில் பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும் தனது விசாரணையில் தான் விசாரித்த 43 சாட்சிகள் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்று அ.சா.50 சாட்சியமளித்துள்ளார் என்றும், காயத்தை மறைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் குற்ற எண்.312/2020 வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவோ, அது சம்மந்தமாக அ.சா.ஆ.23 முதல் 33 மற்றும் 101 ஆவணங்கள் தயாரிக்கப்பட்டதாகவோ நீதி விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றும், 1–ம் எதிரி ஆவணங்களை தயாரித்ததாக எவரும் குவிமுச பிரிவு 313–ன் கீழான வாக்குமூலத்தில்

குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், பென்னிக்ஸ் இறந்த பிறகு அன்று இரவு 09.30 மணிக்கு 1–ம் எதிரி பணிமாற்றம் செய்யப்பட்டுவிட்டார் என்றும், 19.06.2020 மற்றும் 20.06.2020 ஆகிய தேதிகளில் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் என்ன நடந்தது என்று 1–ம் எதிரிக்கு எதுவும் தெரியாது என்றும், புகாரை தயரிக்கும்படி 1–ம் எதிரி ரவிச்சந்திரனிடம் கூறியதாகவும் ரவிச்சந்திரன் சொல்ல சொல்ல அழகுமாரிசெல்வம் புகாரை டைப் செய்ததாகவும் ரேவதி கோவில்பட்டி நீதித்துறை நடுவர் அ.சா.50 அவர்களிடம் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றும், பஜாரில் இவர்கள் பிரச்சினை செய்ததாக புகார் கொடு என 1ம் எதிரி முருகனிடம் சொன்னதாகவும், சாட்சியாக கையெழுத்து போடு என முத்துராஜாவிடம் சொன்னதாகவும் ரேவதி தன்னிடம் அளித்த வாக்குமூலம் அ.சா.ஆ.119–ல் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று அ.சா.50 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், புகாரை தயாரிக்க வேண்டிய அவசியம் அ.சா.20–க்கு இல்லை என்றும் அவருக்கு பாஸ்வேர்டு தெரியாது என்றும், சம்பவம் நடந்ததாகக் கூறப்படும்போது இரவிச்சந்திரன், அழகுமாரிச்செல்வம் ஆகியோர்கள் எங்கு இருந்தார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை என ரேவதி சாட்சியம் அளித்துள்ளார் என்றும், குற்ற எண்.312/2020 வழக்கு தயார் செய்யப்பட்டதாக கூறப்படும் சமயத்தில் ப்யூலா செல்வகுமாரி இருந்திருக்கவில்லை என்றும் முருகன் புகாரை தயார் செய்ததாக ரேவதி சாட்சியம் அளித்துள்ளார் என்றும், இதிலிருந்தே புகார் உண்மையில் யாரால் தயாரிக்கப்பட்டது என்பது நிருபிக்கப்படவில்லை என்பது நன்கு விளங்கும் என்றும், எனவே இதச பிரிவு 195, 211, 218 ஆகிய பிரிவுகளின் கீழ் 1–ம் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டிலிருந்து 1–ம் எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் யாரும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை லத்தியால் அடிக்கச் சொல்லவில்லை என அ.சா.52 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், 1–ம் எதிரி மற்ற எதிரிகளுடன் தொடர்பு எதுவும் கொள்ளவில்லை என்றும், பொது எண்ணம் எதையும் பகிர்ந்து கொள்ளவில்லை என்றும், எதிரிகள் அடித்ததாக 8–ம் எதிரி குவிமுச பிரிவு 313–ன் கீழான விசாரணையில் குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றும், விபத்து பதிவேட்டில் இரண்டு காயங்கள் மட்டுமே இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் பொய்யானது அல்ல என மருத்துவர்

அ.சா.43 சாட்சியம் அளித்துள்ளார் என்றும் மற்ற காயங்கள் எவ்வாறு ஏற்பட்டதென அரசு தரப்பில் நிருபிக்கப்படவில்லை என்றும் அ.சா.9 ஆரோக்கியசாமி சம்மந்தமான புகாரே 20.06.2020-ம் தேதி பெறப்பட்டதாகத்தான் ஆவணங்களில் உள்ளது என்றும் அவர் 19.06.2020-ம் தேதி சாத்தான்குளம் காவல் நிலையத்தில் விசாரணைக்கு ஆஜராகியிருந்ததாக கூறப்படுவது பொய்யானது என்றும் போலீசை அடித்தவனை ஏன் விட்டுவைத்தீர்கள் என்று 1-ம் எதிரி சொன்னதாகவும் போலீஸ் மேல் கை வைத்தால் சும்மா விடக்கூடாது என 1-ம் எதிரி சொன்னதாகவும் இவர்களை ரிமாண்ட் செய்தால் தான் புத்தி வரும் என 1-ம் எதிரி சொன்னதாகவும் புலன் விசாரணையில் சாட்சிகள் கூறியிருக்கவில்லை என்றும் இடைவெளி விட்டு இடைவெளி விட்டு அடித்ததாகவும் என்ன முருகா என்ன பாலா என சொல்லி 1-ம் எதிரி அடிக்க தூண்டியதாகவும் புலன் விசாரணையில் சாட்சிகள் கூறியிருக்கவில்லை என்றும், 1-ம் எதிரியுடன் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் தகராறு எதுவும் செய்ததாக அ.சா.44 குறிப்பிட்டு எதுவும் சாட்சியமளிக்கவில்லை என்றும் 03.07.2020-ம் தேதி ரேவதியின் குவிமுச பிரிவு 164-ன் கீழான வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அதுவரை ரேவதி 1-ம் எதிரி பற்றி எதுவும் சொல்லியிருக்கவில்லை என்றும் தன் மீது குற்றம் சுமத்தி விடுவார்கள் என்ற பயத்தில் ரேவதி மற்றும் பியூலா சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இறந்ததும் ஆவணங்கள் மாற்றப்பட்டதாக ரேவதி தன்னிடம் கூறவில்லை என அ.சா.52 சாட்சியமளித்துள்ளார் என்றும், 19.06.2020-ம் தேதி 11.30 மணிக்கு இரவிசந்திரன் சொல்ல சொல்ல அழகுமாரிசெல்வம் தட்டச்சு செய்ததாக காவல்துறை விசாரணையில் ரேவதி கூறியிருக்கவில்லை என்றும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் உடைகளை காவலர்கள் முத்துராஜா, செல்லத்துரை மாற்றியதாக கோவில்பட்டி நீதித்துறை நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் ரேவதி குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றும், 18.06.2020 மற்றும் 20.06.2020 தேதியிட்ட பதிவுகளில் எதிரிகள் மாற்றம் செய்தார்களா என்றால் தான் பார்க்கவில்லை என ரேவதி சாட்சி அளித்துள்ளார் என்றும் பால்துரை 08.40 மணிக்கு சென்றுவிட்டதாக CDR பதிவுகள் உள்ளது என்றும், சிசிடிவி குறித்து நீ.மா.சா.2 மற்றும் நீ.மா.சா.3-க்கு தான் தெரியும் என்றும், ரொம்ப காயம் ஆயிடுச்சு, யாரிடமாவது ஸ்டேட்மெண்ட் வாங்குங்கள்,

அதில் முத்துராஜாவிடம் கையெழுத்து வாங்குங்கள் என்று 1–ம் எதிரி சொன்னதாக ரேவதி குவிமுச பிரிவு 164–ல் குறிப்பிடவில்லை என்றும், என்ன முருகா என்ன பாலா என 1–ம் எதிரி சொன்னதாக அரசு விசாரணையிலும் நீதித்துறை நடுவர் விசாரணையிலும் சிபிசிஐடி விசாரணையிலும் ரேவதி குறிப்பிட்டு சொல்லியிருக்கவில்லை என்றும், அவ்வாறு எந்த நேரம் சொன்னார் என தனக்கு ஞாபகம் இல்லை என ரேவதி சாட்சியம் அளித்துள்ளார் என்றும், இரத்தம் தரையின் லாக் அப் அறையில் சிதறி இருந்ததாக அரசு விசாரணையில் ரேவதி சொல்லி இருக்கவில்லை என்றும் 1–ம் எதிரி புகார் எதையும் திருத்திக் கொடுத்ததாக நிரூபிக்க, 1–ம் எதிரியின் கையெழுத்து அடங்கிய திருத்தப்பட்ட புகார் எதுவும் அரசு தரப்பில் ஆவணமாகத் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், போலீசை தள்ளிவிட்டவனை சும்மாவா விட்டிங்க என்று 1–ம் எதிரி சொன்னதாக சிபிஐ, CBCID, நீதித்துறை நடுவர் வாக்குமூலங்களிலும், குவிமுச பிரிவு 164–ன் கீழான வாக்குமூலத்திலும் ரேவதி குறிப்பிட்டு எதுவும் சொல்லியிருக்கவில்லை என்றும், இசக்கித்துரை கடையிலிருந்து பார்த்ததாக சிசிடிவி காட்சிகளில் பதிவு எதுவும் இல்லை என்றும் ரிமாண்ட் பண்ணா புத்தி வரும் என ஸ்ரீதர் சொன்னதாக அ.சா.8 புலன் விசாரணையில் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றும், பென்னிக்ஸ் கைதான பிறகு தான் காவல்நிலையம் சென்றதாக தான் அ.சா.10 சாட்சியம் அளித்துள்ளார் என்றும் கலைவாணன் ரேவதியை காலதாமதமாக விசாரித்துள்ளதற்கு விளக்கம் ஏதும் அளிக்கப்படவில்லை என்றும், அரசு புலனாய்வு அதிகாரி கலைவாணன் சரவணன் மற்றும் பிரேத பரிசோதனை செய்த மற்ற மருத்துவர்களை சாட்சியாக அழைத்து விசாரிக்கவில்லை என்றும், ஜிஜி ஹார்ட்வேர்டு உரிமையாளருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அதனால் அ.சா. 12 எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும் அ.சா.13–க்கும் அவரது உறவினருக்கும் இடையேயான பிரச்சனை சம்ந்தமாக சாத்தான்குளம் காவல்நிலயத்தில் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும் பின்னிட்டு சமாதானமாக போய்விட்டதால் அந்த வழக்கில் அ.சா.13 விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றும் மேலும் ஆட்டோ ஓட்டுநர் சங்கத்திற்கும் சாத்தான்குளம் போலீசாருக்கும் இடையே பிரச்சனை இருந்து வருகிறது

என்றும் அதனால் அ.சா.13 பொய் சாட்சியமளித்துள்ளார் என்றும் கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணமோ நோக்கமோ 1–ம் எதிரிக்கு இல்லை என்றும், 1–ம் எதிரியிடமிருந்து லத்தி எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும், சாட்சிகள் ஜெயசேகர் ரவிசந்திரன், ரேவதி மற்றும் ப்யூலா செல்வகுமாரியின் நோட்புக் முன்னிடப்படவில்லை என்றும், சாட்சிகளுடைய வாக்குமூலங்கள், பிரேத பரிசோதனை அறிக்கைகள், முதல் தகவல் அறிக்கை, வாகன டைரி, டெய்லி டைரி, கேஸ் டைரி, பொது நாட்குறிப்பு CDR ஆகியவற்றை பரிசீலிக்காமல் 1–ம் எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 1–ம் எதிரி குற்றம் எதுவும் செய்யவில்லை என்றும், எனவே 1–ம் எதிரியை இதச பிரிவு 302 தொடர்பாக வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என்றும் 1–ம் எதிரி தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. 1–ம் எதிரி தரப்பில் வாதமூலமான வாதஉரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

19.6 2–ம் எதிரி தரப்பு வாதம்:

அ.சா.26 ஓட்டுநர் என்பதாலும், இன்ஸ்பெக்டரை காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்வது மட்டுமே அவரது வேலை என்பதாலும் காவல் நிலையத்திற்குள் என்ன நடந்தது என்பது அவருக்குத் தெரிந்திருக்க முடியாது என்றும், குற்றம் சாட்டப்பட்ட தேதிக்கு வெகு நாளுக்கு பிறகு, ரேவதி மற்றும் ப்யூலா செல்வகுமாரி 28.06.2020 மற்றும் 01.07.2020 அன்று விசாரிக்கப்பட்டுள்ளனர் என்றும், அந்த கால தாமதத்திற்கு CBI தரப்பில் சரியான விளக்கம் அளிக்கவில்லை என்றும், எனவே அவர்களின் சாட்சியங்கள் நம்பகத்தகுந்தவை அல்ல என்றும், அ.சா.20 இரவிச்சந்திரனை CBCID விசாரிக்கவில்லை என்றும், மேலும் CBI தாமதமாக அ.சா.20–ன் சாட்சியத்தைப் பதிவு செய்துள்ளது என்றும், ரேவதி மற்றும் ப்யூலா தங்கள் வேலையை சரியாகச் செய்திருந்தால், இத்தகைய குற்றம் நடந்திருக்காது என்றும், ரேவதி உயர் அதிகாரிகளுக்கு பொய்யான வழக்கு கோப்பை படித்துள்ளார் என்றும், மேலும் ப்யூலா செல்வகுமாரி போலீஸ் ஸ்டேசன் உள்ளே வந்து, போலீஸ்கிட்டயே தகராறு செய்கிறாயா என்று சொன்னதாக அ.சா.9 சாட்சியமளித்துள்ளார் என்றும் சம்பவம் நடந்ததாகக்

கூறப்படும் நேரத்தில் SPCID சந்தனகுமாரும் இருந்ததாகக் கூறப்படுகிறது என்றும், அரசு தரப்பு வழக்கின்படி பார்த்தால், குற்றம் குறித்து உயர் அதிகாரிகளுக்கு உடனடியாகத் தகவல் தெரிவிக்கப்படாததால், காவல் நிலையத்திற்குள் இருந்த அனைவரையும் இணைக் குற்றவாளிகளாகக் கருத வேண்டும் என்றும், ரேவதியை இணைக் குற்றவாளியாக கருதாமல் சட்ட விதிமுறைகளைப் பின்பற்றாமல் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 164–ன் கீழ் அவரது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், ரேவதியின் வாக்குமூலங்கள் இவ்வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக அவரால் சொல்லப்பட்டது போல் உள்ளன என்றும், சாத்தான்குளம் காவல் நிலையத்தின் பொது நாள் குறிப்பில் ரேவதிக்கு 08.00 மணிக்கு பாராபணி மாற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால் அதில் ரேவதி 08.00 மணிக்குப் பொறுப்பேற்றதாக அதில் குறிப்பிடப்படவில்லை என்றும் ரேவதியை போனில் அழைத்து விரைவாக வரச் சொன்னதாக அ.சா.44 ப்யூலா சாட்சியம் அளித்துள்ளார் என்றும், 09.00 மணிக்கு காவல் நிலையத்திற்கு வந்ததாக ரேவதி சாட்சியமளித்துள்ளார் என்றும் சத்தத்தைக் கேட்டு 20.00 மணிக்கு மாடியில் இருந்து இரவிச்சந்திரன் கீழே வந்ததாக அ.சா.44 ப்யூலா செல்வகுமாரி சாட்சியமளிக்கவில்லை என்றும், இரவு 09.00 மணி வரை பணியில் இருந்ததாக ப்யூலா செல்வகுமாரி தன்னிடம் கூறியதாக அ.சா.50 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அதன்பின் அவர் காவல்நிலையத்தில் இருந்திருக்கவில்லை என்றும், 2–ம் எதிரி சொத்தை விற்றாவது வழக்கை கவனித்துக் கொள்வேன் என்று கூறியதாக அ.சா.44 அரசு விசாரணையில் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றும், 18.06.2020 அன்று காவல்துறையினர் தண்டிக்கப்பட வேண்டும் என்று ஜெயராஜ் கூறியதாக அரசு தரப்பு குற்ற இறுதியறிக்கையில் குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை என்றும், அதுகுறித்து யாரும் சாட்சியமளிக்கவில்லை என்றும், இடைநிலை காரணங்களால் மரணம் நிகழ்ந்துள்ளது என்றும், குண்டாஸ் பாலு சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றும், அரசு தரப்பில் சொல்லப்படுவது போல் அசா.பொ.23 சிசிடிவி காட்சிகளில் எந்த சம்பவங்களும் காணப்படவில்லை என்றும், மேலும் அ.சா.10 முதல் விசாரணையில் இன்ஸ்பெக்டரும் போலீசாரும் வண்டிமறிச்சியம்மன் கோயில் அருகே வாகனத்தைச் சோதனை செய்து

முககவசம் அணியச் சொன்னதாக சாட்சியமளித்துள்ளார் என்றும், இதிலிருந்தே ஜெயராஜையும் பென்னிக்ஸ்ஸையும் அடித்து காயப்படுத்தும் நோக்கத்துடன் அவர்கள் அங்கு வரவில்லை என்பது தெளிவாகும் என்றும், அ.சா.10 நீதித்துறை நடுவர் அ.சா.50 அவர்களிடம் அளித்த வாக்குமூலத்தில், பென்னிக்ஸ் கைது செய்யப்பட்ட விவரங்களைக் கேட்டபிறகு சாத்தான்குளம் காவல்நிலையத்திற்குச் சென்றதாகக் கூறியுள்ளார் என்றும், அப்போது ரேவதி இருந்ததாக அவர் குறிப்பிடவில்லை என்றும், மேலும் 3 கொரோனா தன்னார்வலர்கள் ரகுகணேசுடன் வந்தனர் என்றும், ரகுகணேஷ் லத்தியை கேட்டபோது அவர்களில் ஒருவர் வாகனத்திலிருந்து லத்தியை எடுத்து வந்து ரகுகணேசிடம் கொடுத்ததாகவும் அ.சா.10 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், ஆனால் கொரோனா தன்னார்வலர்கள் யாரும் எதிரிகளாக சேர்க்கப்படவில்லை என்றும், மணிமாறனை சிபிசிஐடி போலீசார் விசாரிக்கவில்லை என்றும், 2–வது எதிரிக்கு ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை கொல்லும் நோக்கம் இல்லை என்றும் அவர் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்றும் இந்த வழக்கில் எந்த கொடிய ஆயுதமும் பயன்படுத்தப்பட்டதாக நிரூபிக்கப்படவில்லை என்றும், "நீ செத்தாலும் பரவாயில்லை, என் சொத்தை விற்றாவது வழக்கை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று 2–வது எதிரி சொன்னதாக அ.சா.20 மற்றும் அ,சா.44 சாட்சியம் அளிக்கவில்லை என்றும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோருக்கு ஏற்பட்ட காயங்கள் உடலின் முக்கிய உறுப்புகளில் ஏற்படவில்லை என்றும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் கோவில்பட்டி கிளைச்சிறையில் அனுமதிக்கப்பட்டபோது அ.சா.ஆ.1–ல் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இருவரின் பிட்டத்திலும் காயங்கள் இருந்ததாகவும், அவர்களின் மணிக்கட்டு மற்றும் கால்களில் இரத்தப்போக்கு மற்றும் வீக்கம் இருந்ததாகவும் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த நேரத்தில் கொப்புளங்கள் மற்றும் வீக்கம் இருந்துள்ளன என்றும், அவை நீரிழிவு நோயால் ஏற்பட்டிருக்கலாம் என்றும், எனவே சட்ட வரையறையின்படி பார்த்தாலும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் மரணம் கொலையாகாது என்றும், எனவே 2–ம் எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் 2–ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டுள்ளார்.

19.7 3–ம் எதிரி தரப்பு வாதம் –

ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு வெளிப்புறம் 13 காயங்கள் இருந்ததாக பிரேத பரிசோதனை அறிக்கை குறிப்பிடப்பட்டிருந்தாலும், உள் உடல் உறுப்புகளில் காயம் எதுவும் இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் கோவிட்–19 தொற்றால் இறந்திருக்கலாம். மேலும் ஜெயராஜிற்கு சர்க்கரை வியாதியும், பெனிக்ஸிற்கு கல் அடைப்பு, கல்லீரலில் கொழுப்பு இருப்பதாகவும், வலது ஆர்டிக்களில் அடைப்பு இருப்பதாகவும், இடது வென்ட்ரிக்கிளுக்கு இடைப்பட்ட பகுதியிலும் மூச்சுக்குழாயிலும் பிரச்சனை இருப்பதாகவும் நோயியல் அறிக்கையில் (pathological report) குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், எனவே ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் இறப்பு அவர்களுக்கு ஏற்பட்ட காயத்தால் தான் ஏற்பட்டது எனக் கூற முடியாது என்றும், பிரேத பரிசோதனை அறிக்கை உடனடியாக வழங்கப்படவில்லை என்றும், பின் விளைவு என்பது ஒரு வியாதியால் ஏற்படக்கூடிய மற்றொரு வியாதியைத்தான் குறிக்கும் என்றும், பின்னால் ஏற்படும் வியாதி முன்னால் ஏற்பட்ட வியாதியை துரிதப்படுத்துவதாக இருக்க வேண்டும் என்றும், அப்போதுதான் அதை பின் விளைவாக கருத முடியும் என்றும், இந்நிலையில் மேற்படி காயங்களால் ஏற்பட்ட பின் விளைவுகள் என்ன என்பது குறித்து பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் குறிப்பிட்டு விளக்கம் எதுவும் அளிக்கவில்லை என்றும், எம்.ஐ.எம்.பி (Multi Institutional Medical Board) அறிக்கையில் இரத்தக்கசிவு இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மூச்சுத்திணறல் ஏற்பட்டதாகவும், ஆக்சிஜன் அளவு குறைவாக இருந்ததாகவும் மருத்துவ அறிக்கைகளில் கூறப்பட்டுள்ளது என்றும், அதனை பரிசீலிக்காமலேயே பிரேத பரிசோதனை இறுதி அறிக்கை வழங்கப்பட்டுள்ளது என்றும், இதிலிருந்து இறப்பிற்கான காரணம் அரசு தரப்பில் தெளிவுபட நிரூபிக்கப்படவில்லை என்பது நன்கு விளங்கும் என்றும், மழுங்கிய ஆயுதத்தால் பிட்டத்தில் ஏற்பட்டதாக கூறப்படும் காயத்தால் இறப்பு ஏற்பட்டதாக கூறப்படுவது ஏற்புடையதல்ல என்றும், மட்டைப்பந்து வீரர் சித்து வழக்கிலும் இந்த நிலைப்பாடு உச்சநீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்றும், உடலில் முக்கிய உறுப்புகளில் காயம் ஏற்பட்டதாக நிரூபிக்கப்படவில்லை

என்றும், உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தால் அவர்கள் இருவரும் இறந்திருக்க வாய்ப்பில்லை என்றும், இரவு 07.45 மணி முதல் காலை 01.30 வரை ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் தொடர்ச்சியாக அடிக்கப்பட்டிருந்தால் இரத்த ஆறு ஓடி இருக்கும் என்று ஆனால் அவ்வாறு நிகழ்ந்ததாக அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும், அ.சா.5, அ.சா.7, அ.சா.8, அ.சா.9–ன் சாட்சியங்களின் படி பார்க்கும்போது 19.06.2020 அன்று இரவு 11.00 மணியளவில் அவர்கள் காவல் நிலையத்தை விட்டு சென்றுவிட்டதாக உள்ளது என்றும், இந்நிலையில் அ.சா.20, அ.சா.26, அ.சா.44 மற்றும் அ.சா.47 ஆகியோர்களுடைய சாட்சியங்கள் மட்டுமே பரிசீலிக்கத்தக்கதாக உள்ளது என்றும், 3–ம் எதிரி 19.06.2020 அன்று இரவு எத்தனை மணிக்கு காவல் நிலையம் வந்தார் என அரசு தரப்பில் தெளிவுபடுத்தப்படவில்லை என்றும், 3–ம் எதிரி குறித்து அ.சா.44, அ.சா.47, அரசு மற்றும் நீதித்துறை நடுவரது வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை என்றும், ரேவதி குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 164–ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திலும் 3–ம் எதிரி குறித்து குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றும், அ.சா.20 இரவிசந்திரன் 3–ம் எதிரி பற்றி குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றும், மாண்புமிகு உயர்நீதிமன்றம் 23.06.2020–ம் தேதி மேற்படி வழக்கு சம்பந்தமாக தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு ஏற்றபோது 3–ம் எதிரி பற்றி குறிப்பிட்ட காரணத்தால் மட்டுமே 3–ம் எதிரிக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 28.06.2020–ம் தேதி ரேவதி வாக்குமூலம் அளிக்கும் வரை 3–ம் எதிரிக்கு எதிராக எவரும் எதுவும் கூறி இருக்கவில்லை என்றும், கோவில்பட்டி காவல் நிலைய பொறுப்பு அதிகாரி எவ்வித விசாரணையும் நடத்திருக்கவில்லை என்றும், சம்பவம் நடந்ததாக கூறப்படும் நேரத்தில் ரேவதி இருந்திருக்கவில்லை என்றும், இறப்பு பற்றி கேள்விப்பட்டதும் நீதித்துறை நடுவர் உடனடியாக உடலை பார்க்க மருத்துவமனைக்கு செல்லாமல் கிளை சிறைச்சாலைக்கு சென்றுள்ளார் என்றும், கோவில்பட்டி நீதித்துறை நடுவர் நீதி விசாரணையில் இறப்பு எதனால் ஏற்பட்டது என்று தான் கண்டறிந்து இருக்க வேண்டும் என்றும், ஆனால் அவர் முழு விசாரணையே நடத்தி யார் குற்றவாளி

என்பது குறித்து அறிக்கை தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதல்ல என்றும், அவர் விசாரித்துள்ள 45 சாட்சிகளையும் குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் தரப்புக்கு அனுமதி அளிக்கப்படவில்லை என்றும், இந்நிலையில் நீதித்துறை நடுவரது விசாரணை அறிக்கையை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், இறந்தவர்களின் உறவினர் எவரையும் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் விசாரிக்கவில்லை என்றும், மேற்படி குற்றச்செயல் குற்ற எண்ணத்துடன் செய்யப்பட்டதாக நிரூபிக்கப்படவில்லை, ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை கொலை செய்ய வேண்டுமென்ற குற்ற எண்ணமோ நோக்கமோ 3-ம் எதிரிக்கு இல்லை என்றும், பென்னிக்ஸ் ஆத்திர மூட்டியதால் குற்றச்செயல் நடைபெற்றதாக அரசு தரப்பில் கூறப்படுவதில் இருந்தே எதிரிகளுக்கிடையே குற்றத்தை செய்ய வேண்டுமேன்ற முன் திட்டமிடல் எதுவும் இருந்திருக்கவில்லை என்பது நன்கு விளங்கும் என்றும், பொய் சாட்சியம் அழித்தல் குற்றத்திற்காக ஒருவரை தண்டிப்பதற்கு அவர் அந்த குற்றத்தை குற்றமுறு எண்ணத்துடன் செய்திருக்க வேண்டும் என்றும், இந்த வழக்கை பொறுத்தவரை முதல் தகவல் அறிக்கை, கைது மெமோ, கைது அட்டை, கைது குறிப்பாணை, காவல் அடைப்பு கோரிக்கை ஆகிய அனைத்தையும் இரவிச்சந்திரன் சொல்ல அழகுமாரி செல்வம் தயாரித்ததாக அ.சா.20 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், மேலும் முருகன் முத்துராஜா சொன்னதைக் கேட்டு மேற்படி புகாரை தான் தயாரித்ததாக அ.சா.20 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், இந்நிலையில் மேற்படி அ.சா.20 மற்றும் அழகுமாரி செல்வம் இந்த வழக்கில் எதிரிகளாக சேர்க்கப்படவில்லை என்றும், ஆய்வாளர் 3-ம் எதிரியை புலனாய்வு அதிகாரியாக நியமித்ததாக ரேவதி சொன்னதன் பேரில் தான் மேற்படி ஆவணங்களில் 3-ம் எதிரி கையெழுத்திட்டுள்ளார் என்றும் அந்த வழக்கின் சங்கதிகள் பற்றி 3-ம் எதிரிக்கு எதுவும் தெரியாது என்றும், குற்றப் புகார் ஒன்று கொடுக்கப்பட்டால் அது பதிவு செய்யப்பட வேண்டும் என்பது சட்ட விதி என்றும், அதில் கூறப்பட்டுள்ள சங்கதி உண்மையா பொய்யா என்பதை விசாரித்தபின் தான் தெரியும் என்றும், எனவே 3-ம் எதிரி வழக்கை பதிவு செய்ததை குற்றமாக கருத முடியாது என்றும், குற்ற எண்.312/2020 வழக்கில் விசாரணை

எதுவும் நடத்தப்படவில்லை என்றும், அது பொய்யான வழக்கு என குற்ற இறுதியறிக்கை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், இந்நிலையில் மேற்படி வழக்கு பொய்யானது எனக் கூற இயலாது என்றும், அ.சா.20–ஐ எதிரியாக சேர்க்க மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், குற்ற எண்.312/2020 தொடர்பான ஆவணங்களை வெயிலுமுத்து தயாரித்ததாகவும் கூறப்படுகிறது என்றும், குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் இறந்து விட்டதாலேயே அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு பொய்யானது எனக் கூற முடியாது என்றும், 3–ம் எதிரி பொய்யான புகாரை தயார் செய்ததாக அ.சா.20 மற்றும் அ.சா.47 குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றும், 3–ம் எதிரி வேறு எந்த எதிரியிடனும் பொதுவான எண்ணத்தை பகிர்ந்து கொள்ளவில்லை என்றும், குற்றம் செய்ய வேண்டுமென்ற எண்ணமும் 3–ம் எதிரிக்கு இல்லை என்றும், 3–ம் எதிரி கைது செய்யப்பட்ட பிறகு 04.07.2020–ம் தேதி ரேவதி விசாரிக்கப்பட்டுள்ளார் என்றும், 3–ம் எதிரிக்கு எதிராக முன்னிடப்பட்டுள்ள சாட்சியங்கள் 3–ம் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க போதுமானதல்ல என்றும், எனவே 3–ம் எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் 3–ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டுள்ளார்.

<u>19.8 4–ம் எதிரி தரப்பு வாதம் –</u>

எதிரிகளால் காயம் ஏற்பட்டதாகவும், காயத்தால் மரணம் ஏற்பட்டதாகவும் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும், முன் விரோதம் இருப்பதாகவும் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும், அரசு தரப்பில் முன்னிடப்பட்டுள்ள தடய அறிவியல் அறிக்கைகள் குற்றச்சாட்டை நிரூபிக்க போதுமானதாக இல்லை என்றும், 4–ம் எதிரியின் பொறுப்பில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இருந்திருக்கவில்லை என்றும், குற்றம் நடந்ததாக கூறப்படும் தேதிக்கும் இறப்பு ஏற்பட்டதாக கூறப்படும் தேதிக்கும் இடையே மூன்று நாட்கள் இடைவெளி இருந்துள்ளது என்றும், குற்ற இறுதி அறிக்கையில் இதச பிரிவுகள் 193, 195, 21, 211, 228 குறித்த சங்கதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன என்ற காரணங்களுக்காக, அதை புகாராக கருதி இதச பிரிவு 193, 195, 21, 211, 228–ன் கீழான குற்றச்சாட்டுகளை பொறுத்து நேரடியாக இந்த நீதிமன்றம்

புலன் கொள்ள முடியாது என்றும், குற்ற எண்.312/2020 தொடர்பான வழக்கை விசாரிக்க சிபிஐ–க்கு அதிகாரம் இல்லை என்றும், அது சம்பந்தமான வழக்கு முடிவுக்கு வரவில்லை என்றும், இந்நிலையில் குற்ற எண்.312/2020 வழக்கு பதிவு செய்யப்பட்டதற்கான நோக்கத்தை அரசு நிரூபித்து விட்டதாக கூற முடியாது என்றும், 18.06.2020–ம் தேதி ஜெயராஜ் போலீசாரை திட்டியதாக கூறப்படுவது குறித்து நிரூபிக்க குண்டாஸ்பாலு என்பவரை அரசு சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும், 19.06.2020–ம் தேதி ஜெயராஜ் கோவிட் விதிமுறைகளுக்கு முரணாக கடையை இரவு 09.15 வரை திறந்து வைத்திருந்ததால், புலன்கொள் வழக்கை ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் புரிந்திருந்ததால் சட்ட விதிகளின்படி அவர்களுக்கு எதிராக குற்ற புகார் கொடுக்கப்பட்டு அது பதிவு செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளது என்றும், மெடிக்கல் மெமோவில் ரேவதி கையெழுத்து உள்ளது என்றும், அன்று 19.06.2020 அன்று 11.30 முதல் மறுநாள் காலை 06.00 மணி வரை அ.சா.47 ரேவதி பொறுப்பில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இருந்துள்ளனர் என்றும், பின்னர் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு நீதித்துறை நடுவர் முன் நிறுத்தப்பட்டு காவல் அடைப்பு பெறப்பட்டு கோவில்பட்டி கிளை சிறைச்சாலையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அடைக்கப்பட்டுள்ளனர் என்றும், அதன்பின் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு என்ன நேர்ந்தது என்பதற்கு சிறைத்துறை அதிகாரிகள் தான் பொறுப்பாவார்கள் என்றும், பென்னிசுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது என்றும், முதல் தகவல் அறிக்கையில் இந்த எதிரிகளின் பெயர் எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றும், நீதித்துறை நடுவர், அரசு மருத்துவர்கள், கோவில்பட்டி கிளை சிறைச்சாலை கண்காணிப்பாளர் ஆகிய அனைவரது கவனக்குறைவும் உள்ளது என்றும், அதனை இறப்புக்கான இடைநிலை காரணங்களாக கருத வேண்டும் என்றும், காவல் அடைப்பு பெறும்போது நீதித்துறை நடுவரிடம் 4–ம் எதிரி பற்றி குற்றச்சாட்டு எதுவும் கூறப்பட்டிருக்கவில்லை என்றும், 18.6.2020–ம் தேதி சம்பவம் குறித்து அ.சா.11, அ.சா.12, அ.சா.13 அளித்துள்ள சாட்சியங்களுக்கும் சிசிடிவி காட்சி பதிவுகளுக்கும் பொருத்தம் எதுவும் இல்லை என்றும், அதில் 4–ம் எதிரி இருப்பதாக சாட்சிகள் எவரும் அடையாளம் காட்டவில்லை என்றும், நீதித்துறை நடுவரது விசாரணையில் அ.சா.50 முதன்முதலாக விசாரித்துள்ள

சிறைவாசி சுனில், பென்னிக்ஸ் கடையை திறந்தது வைத்ததால் கைது செய்யப்பட்டதாக தன்னிடம் சொன்னதாக தமிழரசன் என்பவர் காவல்துறை விசாரணையில் குறிப்பிட்டுள்ளார் என்றும், அது இறந்தவருடைய மரணவாக்கு மூலமாக கருதப்பட வேண்டும் என்றும், கோவிட் விதிமுறைகளின்படி எட்டு மணிக்கு கடை அடைக்கப்பட வேண்டும் என அ.சா.34 சாட்சியமளித்துள்ளார் என்றும், ஆனால் இரவு 09.15 வரை கடை திறக்கப்படிருந்துள்ளது என்றும், இதிலிருந்தே ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் உண்மையானது என்பது நன்கு விளங்கும் என்றும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் காயத்தாலும் அதன் பின் விளைவுகளாலும் இறந்ததாக கூறப்படுகின்ற நிலைகள் பின் விளைவுகள் என்ன என்பது மருத்துவரால் விளக்கப்படவில்லை என்றும், புகாரை தயாரித்ததாக அ.சா.20 சாட்சியம் அளித்துள்ளார் என்றும் அதை 4-ம் எதிரி தயாரிக்கவில்லை கோவிட்டால் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இறந்திருக்க கூடும் என்றும், குண்டாஸ் பாலுவை விசாரிக்கவில்லை என்றும், குற்றத்திற்கான நோக்கம் நிரூபிக்கப்படவில்லை என்றும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு அளிக்கப்பட்ட சிகிச்சை விபரங்கள் குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், போலீஸ்கிட்டே தகராறு செய்கிறாயா என்று அ.சா.44 சொன்னதாகவும், ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோர்களை அ.சா.20 ரவிசந்திரனும் அமுக்கியதாகவும் அ.சா.9 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அவர்கள் எதிரிகளாக சேர்க்கப்படவில்லை என்றும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ்க்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ள அரெஸ்ட் கார்டு, அரெஸ்ட் இன்டிமேஷன், ரிமாண்ட் ரிப்போர்ட் ஆகிவற்றை அழகுமாரி செல்வம் தட்டச்சு செய்ததாக அ.சா.20 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், 4-ம் எதிரி அதை தயாரிக்கவில்லை என்றும் குற்ற எண் 311/20 வழக்கை இரவு 08.00 மணிக்கு பாலகிருஷ்ணன் பதிவு செய்துள்ளார் என்றும், அந்த புகாரை தலைமைகாவலர் 2584 பெற்றுள்ளார் என்றும், அந்த புகாரை பதிவு செய்திருக்க சுமார் ஒரு மணியிலிருந்து இரண்டு மணி நேரம் பிடித்திருக்கும் என்றும், இந்நிலையில் மேற்படி குற்றச்செயல் நடந்திருக்க வாய்ப்பில்லை என்றும், சிசிடிஎன்எஸ் கடவுச்சொல் 4-ம் எதிரிக்கு தெரியாது என்றும், அ.சா.21 பாலசுப்ரமணியனுக்கு இரவு பணி இல்லை என்றும், அவர் அளித்துள்ள சாட்சியம்

நம்பதகுந்ததல்ல என்றும், அ.சா.20–ன் பாக்கெட் நோட்புக் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ளது போல் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் விசாரணையிலும் அரசு விசாரணையிலும் அ.சா.26 சாட்சியம் அளித்திருக்க வில்லை என்றும், அ.சா.44–க்கு ஏற்கனவே ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை தெரியாது என்றும், அவர் சிசிடிவி காட்சிகளில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை அடையாளம் காட்டியுள்ளது ஏற்புடையதாக இல்லை என்றும் 19.06.2020–ம் தேதி இரவு ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை ரேவதி தான் பொறுப்பில் எடுத்துள்ளார் என்றும், 18.06.2020–ம் தேதிய சிசிடிவி பதிவுகளில் மோட்டார் சைக்கிளில் செல்லும் நபர்கள் யார் என நிருபிக்கப்படவில்லை என்றும், மேலும் அந்த சமயத்தில் ஜெயராஜ் இருந்ததாக சிசிடிவி காட்சிகளில் பதிவு எதுவும் இல்லை என்றும், 22:34:19 மணியளவில் ஜெயராஜ் வந்ததாக அதில் காட்சிப்பதிவு உள்ளது என்றும், ஆனால் அப்போது ஜெயராஜ் மற்றும் பாலகிருஷ்ணன் பேசியதாக காட்சி பதிவு எதுவும் இல்லை என்றும், 4–ம் எதிரியின் வீட்டிலிருந்து கம்பு கைப்பற்றப்பட்டதாக கூறப்படுவது பொய்யானது என்றும், 22.06.2020–ம் தேதி ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இறந்ததாக கூறப்படுகின்றன நிலையில் 01.07.2020–ம் தேதி தான் கோவிட் அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளது என்றும், நுரையீரலில் இருந்து கோவிட் மாதிரி எடுக்கப்படவில்லை என்றும், எனவே அந்த அறிக்கை ஏற்புடையதல்ல என்றும், புட்டத்தில் அடித்து இருந்தால் இதச பிரிவு 304 தான் பொருந்தும் என்றும், எனவே 4–ம் எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும், 4–ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டுள்ளார்.

19.9 <u>5ம் எதிரி தரப்பு வாதம் –</u>

ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை அறை எண்.3–ல் அடைத்ததாக அ.சா.2 குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றும், சாத்தான்குளம் காவல் நிலையத்தில் விளக்குகள் அணைக்கப்பட்டு இருந்ததாக அ.சா.5 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், எந்த வெளிச்சத்தில் பார்த்து தெரிந்து கொண்டீர்கள் என கேட்டு தெரிந்து கொண்டதாக அ.சா.51 குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை என்றும், 100 அடி 250 அடி கம்பியால் அடித்ததாக ஜெயராஜ் சொன்னதாக அ.சா.5 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், ஆனால்

கம்பி எதுவும் அரசு தரப்பில் சாட்சியமாகவும் முன்னிடப்படவில்லை என்றும், 09.15 மணிக்கு தங்களை விட்ருங்க, தங்களால் தாங்க முடியவில்லை, அடிக்காதீர்கள், அம்மா, அப்பா என்று அலறல் சத்தம் கேட்டதாக அ.சா.7 சாட்சியமளித்துள்ளார் என்றும், அவ்வாறு சத்தம் கேட்டதாக ப்யூலா செல்வகுமாரி, ரவிச்சந்திரன் சாட்சியமளிக்கவில்லை என்றும், தன் மீது எழிழரசன் என்பவர் தொடர்ந்த வழக்கு உள்ளது என அ.சா.9 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அந்த வழக்கில் 5-ம் எதிரி சாட்சி என்றும், ரகுகணேஷ் பிரண்ட்ஸ் ஆப் போலீஸ் உடன் காவல் நிலையம் வந்ததாக அ.சா.10 சாட்சியமளித்துள்ளார் என்றும், ஆனால் பிரண்ட்ஸ் ஆப் போலீஸ் எவரும் எதிரியாக சேர்க்கப்படவில்லை என்றும், அ.சா.20 வெயிலுமுத்து சிசிடிஎன்எஸ் பணியில் மாடியில் இருந்ததாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், 5-ம் எதிரி கீழே வந்ததாக அ.சா.20 அரசு விசாரணையில் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றும், ஜெயசேகர் அடிக்கடி உள்ளேயும் வெளியேயும் சென்று வந்ததாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், எனவே அவருடைய சாட்சியங்களை முழுமையாக ஏற்க முடியாது என்றும், நீதித்துறை நடுவரிடம் சாட்சியமளித்தாகவும் அவர் சாட்சியம் முடிந்துவிட்டது என பதிய மறுத்ததாகவும் அ.சா.47 சாட்சியம் அளித்துள்ளது உண்மையானதல்ல என்றும், மேலும் பிணை மனுவில் காயம் இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றும், அ.சா.5, அ.சா.6, அ.சா.7 ஆகியோர்கள் 18-ம் தேதி சம்பவம் பற்றியும் 5-ம் எதிரி பற்றியும் குறிப்பிட்டு சாட்சியம் ஏதும் அளிக்கவில்லை என்றும், 09.00 மணி வரை அ.சா.44 இருந்ததாகவும் 09.00 மணிக்கு பிறகு காலை 08.00 மணி வரை அ.சா.47 இருந்ததாகவும் சாட்சியமளித்துள்ளனர் என்றும், இதிலிருந்தே 09.00 மணிக்கு பின் என்ன நடந்தது என்பது அ.சா.44-க்கும் 09.00 மணிக்கு முன் என்ன நடந்தது என்பது அ.சா.47-க்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றும், மரணம் ஊமைகாயங்களின் பின் விளைவுகளால் ஏற்பட்டதாக கூறப்படுகின்ற நிலையில் என்ன பின்விளைவு என்பது பற்றி மருத்துவர்கள் விளக்கவில்லை என்றும், உடலில் எந்த பாகத்தை 5-ம் எதிரி பிடித்தார் எதை வைத்து அடித்தார் என அ.சா.50 நீதிவிசாரணை அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று 5-ம் எதிரியை பற்றி அ.சா.26 ஜெயசேகர் நீதித்துறை விசாரணையில் குறிப்பிட்டு சாட்சியம்

அளிக்கவில்லை என்றும் செல்வின் சாமர்வேல் என்பவர் அரசு தரப்பில் விசாரிக்கப்படவில்லை என்றும் 5–ம் எதிரி பற்றி பொது நாட்குறிப்பில் குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை என்றும் ஒன்பது மணிக்கு மேல் 5–ம் எதிரி காவல் நிலையத்தில் இல்லை என்றும், 5–ம் எதிரி எத்தனை மணிக்கு சாத்தான்குளம் காவல்நிலையம் வந்தார் என்றால் தனக்கு ஞாபகமில்லை என அ.சா.47 சாட்சியமளித்துள்ளார் என்றும், 5–ம் எதிரி காலால் மிதித்தாக அ.சா.44 மற்றும் அ.சா.47 குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை என்றும், 5–ம் எதிரி கம்போ, லத்தியோ பயன்படுத்தவில்லை என்றும், காவல் நிலையத்தில் கைப்பற்றப்பட்ட கம்பில் இரத்தம் இருந்ததாக அ.சா.44 சாட்சியமளிக்கவில்லை என்றும், பென்னிக்சின் உடம்பிலிருந்து இரத்தம் சுவற்றில் சிதறியதாக அ.சா.47 சாட்சியமளித்துள்ளார் என்றும், மற்ற இடங்களில் இரத்தம் சிதறியிருந்ததாக அ.சா.47 குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், காவல் நிலையத்தில் இரத்தம் சிதறியிருந்ததாக அ.சா.20 மற்றும் அ.சா.26 குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றும், பென்னிக்சும், அ.சா.33–ம் இரத்தத்தை துடைத்ததாக கூறப்படுகின்ற நிலையில் அதன் பிறகும் இரத்தக்கறை தடயம் சேகரிக்கப்பட்டதாக அரசு தரப்பில் கூறப்படுவது நம்பதகுந்ததல்ல என்றும், 19.06.2020–ம் தேதி காவல் நிலையத்திற்கு 08.30 மணிக்கு வந்ததாகவும், அப்போது ஜட்டியுடன் விசாரித்துக் கொண்டிருந்தார்கள் என்றும் அ.சா.47 சாட்சியமளித்துள்ளார் என்றும், ஆனால் பொது நாட்குறிப்பில் அ.சா.47 ரேவதி 08.30 மணிக்கு பாரா பொறுப்பை பெற்றுக் கொண்டதாக குறிப்பு எதுவும் இல்லை என்றும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை 5–ம் எதிரி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாக எவரும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றும், அழகுமாரிச்செல்வம் விசாரிக்கப்படவில்லை என்றும், ரேவதி சுழற்சி முறையில் எங்கு எந்த ஆயுதத்தால் அடித்தார் என குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றும், மெடிக்கல் மெமோ ரேவதி கொடுத்துள்ளதால் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், யார் முதன்முதலாக இறந்தவரை பார்த்தார்கள் என பிரேத விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றும், பிரேத விசாரணை அறிக்கை தொகுதி 11–ல் 5–ம் எதிரியின் பெயர் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும், பிரேத விசாரணை

அறிக்கை பிரேத பரிசோதனைக்கு முன் தயார் செய்யப்பட வேண்டும் என்றும், 5–ம் எதிரியிடம் லத்தியை கேட்டபோது 5–ம் எதிரி கார் மேலே ஏறி குதித்து ஓடி விட்டதாக நீதித்துறை நடுவர் பொய்யாக சாட்சியமளித்துள்ளார் என்றும், காவல்துறை காரா அல்லது தனியார் காரா என கேட்டதற்கு அது நிறுத்தப்பட்டிருந்த இடம் இருட்டாக இருந்ததால் தான் அதை கவனிக்கவில்லை என சாட்சியமளித்துள்ளார் என்றும் பென்னிக்சிற்கு இசிஜி பிரச்சனை இருந்துள்ளது என்றும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் சாத்தான்குளம் போலீசாரால் தாக்கப்பட்டதாக எந்த ஆவணத்திலும் எந்த குறிப்பும் இல்லை என்றும், அ.சா.3 செல்வராணி முதல் விசாரணையில் சொன்ன விசயங்கள் பற்றி நீதித்துறை நடுவர் விசாரணையில் எதுவும் சொல்லவில்லை என்றும், குறுக்கு விசாரணையில் ஊர்க்காரர்கள் புகார் தயார் செய்தார்கள் என்றும் தான் கையெழுத்து போட்டுக் கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார் என்றும், ஆனால் செல்வராணி புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும் செல்வராணி எவரையும் விசாரிக்கவில்லை என்றும் ஜெயசீலன் சாந்தா மூலம் வழக்கு விவரங்களை அறிந்துகொண்டதாக செல்வராணி சாட்சியமளித்துள்ளர் என்றும் இந்நிலையில் ஜெயசீலன், சாந்தா இருவரையும் சாட்சிகளாக விசாரிக்காமல் செல்வராணியின் சாட்சியத்தை ஏற்க முடியாது என்றும், அ.சா.4 புளியங்குடியில் குடியிருந்து வருகிறார் என்றும் அவரது சாட்சியம் கேள்விப்பட்ட சாட்சியம் என்றும், சாத்தான்குளம் போலீஸ் ஸ்டேசனில் பிடித்து வைத்திருப்பதாக கேள்விப்பட்டு தானும் தாவீதும் மோட்டார் சைக்கிளில் 09.10 காவல் நிலையத்துக்கு போனதாகவும் அப்போது வெளி லைட் ஆஃப் இருந்தது என்றும் 09.30 மணிக்கு ஸ்கூட்டியில் பியூலா செல்வகுமாரி வெளியே சென்றதாகவும் இரவு 01.30 மணி வரை காவல் நிலையத்தில் வெளியே இருந்ததாகவும், அதன் பின்பு வீட்டிற்கு போய்விட்டதாகவும் அ.சா.5 சாட்சியமளித்துள்ளார் என்றும், சாத்தான்குளம் மருத்துவமனையில் 5–ம் எதிரியை பார்த்தாக அ.சா.5 மற்றும் அ.சா.6 குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றும், போலீஸ் ஸ்டேசன் உள்ளே இருந்து 09.15 மணிக்கு எங்களை விட்டு விடுங்கள் எங்களால் தாங்க முடியவில்லை அப்பா அம்மா என்று சத்தம் கேட்டதாக அ.சா.47 ரேவதி, அ.சா.26 ஜெய்சேகர், அ.சா.20 இரவிச்சந்திரன் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், அ.சா.8 இரவிசங்கர் 5–ம்

எதிரியை பற்றி சாட்சியம் அளிக்கவில்லை என்றும், அ.சா.9 மணிமாறன் உள்ளே இருந்த ரைட்டர் பியூலா செல்வக்குமாரி போலீஸ் ஸ்டேசன் உள்ளே வந்து போலீசாரிடமே தகராறு செய்கிறாயா என்று கத்தினார் என்று சாட்சியமளித்துள்ளார் அ.சா.16 இன்பன்ட் அந்தோணி பிஜூ மருத்துவமனையில் இருந்த சிசிடிவி வீடியோ பதிவுகளை பற்றி சாட்சியளித்துள்ளார் என்றும், அவர் 65–B சான்றிதழ் எதுவும் வழங்கவில்லை என்றும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் எந்த இடத்தில் வைத்து தாக்கப்பட்டனர், எந்த நேரத்தில் தாக்கப்பட்டனர் எத்தனை நபர்கள் தாக்கினார்கள், எத்தனை காயங்கள் இருந்தது, எந்த ஆயுதத்தால் தாக்கப்பட்டார்கள் என அரசு தரப்பில் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கப்படவில்லை என்றும், அ.சா.21 பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் ஆகிய இருவருக்கும் இரண்டு புட்டத்தில் தலா ஒரு காயம் இருந்ததாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும் ஆயுதம் பற்றியோ காயத்தின் தன்மையைப் பற்றியோ அவர் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், அ.சா.43 மருத்துவர் செல்வமுருகன், பென்னிக்ஸ்க்கு ஆறு சிராய்ப்பு காயங்கள், ஏழு இரத்தக்கட்டு காயங்கள் புட்டத்தில் இருந்ததாக சொல்லியுள்ளார் என்றும், ஜெயராஜ்க்கு 11 சிராய்ப்பு காயங்கள் ஆறு இரத்தக்கட்டு காயங்களும் புட்டத்தில் இருந்ததாக சொல்லியுள்ளார் என்றும், மேற்படி காயங்கள் எந்த ஆயுதத்தால் ஏறப்ட்டது என அவர் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றும், காயங்களின் விளைவால் இறந்தவர்களின் அடிப்படை உடல் செயல்பாடுகள் எந்த வகையில் பாதித்தது என்று அ.சா.43 சாட்சியம் அளிக்கவில்லை என்றும், அ.சா.45 வினிலா இருவருக்கும் புட்டப்பகுதியில் தலா ஒரு காயம் இருந்ததாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், சிராய்ப்பு காயங்களின் வகை பற்றி கூறினால் தான் பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தை கணிக்க முடியும் என்றும் காயங்களின் வகை பற்றி தெரியாது என்று அ.சா.45 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அ.சா.20 இரவிச்சந்திரன் தானும் வெயிலுமுத்துவும் CCTNS பணியிலிருந்ததாக சாட்சியமளித்துள்ளார் என்றும் அவர் எந்த சம்பவத்தையும் பார்த்திருக்க முடியாது என்றும் 5–வது எதிரி சாமதுரை காவல் நிலையத்தில் இருந்ததாக அ.சா.20 குறிப்பிட்ட சாட்சியம் அளிக்கவில்லை என்றும், 08.30 மணிக்கு தானும் கீழே இறங்கிப் போனதாக சி.பி.ஐ விசாரணையில் அ.சா.20 சொல்லவில்லை என்றும் 20 நிமிடம் கழித்து கீழே

சென்றதாக சாட்சியமளித்துள்ளார் என்றும், புகாரை தட்டச்சு செய்யும்போது அழகுமாரிசெல்வம் உடன் இருந்ததாக சொல்லியுள்ளார் என்றும் ஆனால் அழகுமாரி செல்வத்தை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும், அசா 47 உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை லத்தியால் அடிக்க அங்கிருந்த முருகன், முத்துராஜா, வெயிலுமுத்து, தாமஸ் பிரான்சிஸ், செல்லத்துரை, சாமதுரை ஆகியோர்கள் பிடித்துக் கொண்டார்கள் என முதல் விசாரணையில் மொட்டையாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும் யார் எந்த இடத்தில் அடித்தார்கள் என்றும் யார் உடலில் எந்த பகுதியில் பிடித்தார்கள் என்றும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றும் மேற்படி விவரத்தை நீதித்துறை நடுவர் பாரதிதாசனிடமும் சொல்லவில்லை என்றும், ஆகவே மேற்படி சாட்சியத்தின் உண்மைத்தன்மை மிகுந்த சந்தேகத்திற்கு உரியதாகும் என்றும் அ.சா.47 ரேவதி, அ.சா.20 இரவிச்சந்திரன் சொல்லியுள்ளது போல் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், மேஜையில் அடித்துக் கொண்டிருந்தார்கள் என்று மட்டும் சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அ.சா.26 ஜெய்சேகர், அ.சா.44 பியூலா செல்வகுமாரி, அ.சா.47 ரேவதி 5–ம் எதிரியை காவல் நிலையத்தில் பார்த்ததாக சாட்சியம் அளிக்கவில்லை என்றும், 19.06.2020 அன்று காவல் நிலையத்தை விட்டு வெளியே வருவதற்கு முன்பு பென்னிக்ஸ் உறவினர்களை பார்த்ததில்லை என்று அ.சா.44 குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும் இந்நிலையில் பென்னிக்சின் உறவினர்களை பார்த்ததாக அ.சா.44 சாட்சியமளித்துள்ளது நம்பும்படியாக இல்லை என்றும் பென்னிக்ஸ், ஜெயராஜை அடிக்க பயன்படுத்திய கம்பு, லத்தி, சிலம்பு கம்புகளை அடையாளம் காட்ட முடியும் என்று நீதித்துறை நடுவரிடம் அ.சா.44 சொல்லவில்லை என்றும், இரவிச்சந்திரன், வெயிலுமுத்து, சாமதுரை நீதிமன்ற பணியை முடித்துவிட்டு அவரவர் பணிகளை செய்து கொண்டிருந்தார்கள் என்று நீதித்துறை விசாரணையில் சொல்லவில்லை என்றும், மாடிப்படிக்கும் கைதி அறைக்கும் இடையே உள்ள சுவற்றிற்கு கீழ் SI பாலகிருஷ்ணன், பால்துரை, முருகன் சாமதுரை, வெயிலுமுத்து ஆகியோர்கள் கால்களை விரித்தார்கள் என்றும் அ.சா.44 தன்னிடம் வாக்குமூலம் கொடுக்கவில்லை என அ.சா.50சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அடிக்கும்போது இரத்தம் வந்ததாகவும் அ.சா.44 புலன் விசாரணையில்

குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றும் அ.சா.47 ரேவதி ஜட்டியுடன் படுக்க வைக்கப்பட்டிருந்த நபரது காலை பிடித்து இருந்தவர் யார் என்று பார்க்கவில்லை என்று சாட்சியமளித்துள்ளார் என்றும், மேலும் ஜட்டியுடன் படுக்க வைத்து அடிக்கப்பட்டதாக ரேவதி குவிமுச பிரிவு 164–ன் கீழான வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றும், முதலில் முருகன் அடித்தார் தொடர்ந்து மற்றவர்கள் அடித்தார்கள் என்றும் அ.சா 47 குவிமுச பிரிவு 164–ன் கீழான வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றும், எதிரிகளின் உடைகளில் இரத்தம் பட்டதா என்றும் விளக்கப்படவில்லை என்றும் ஜெயராஜ் பென்னிக்ஸ் தாக்கப்படும்போது அ.சா.20 இரவிச்சந்திரன் அ.சா.26 ஜெய்சேகர் மற்றும் அழகுமாரிச்செல்வம் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சாட்சியம் அளிக்கவில்லை என்றும், சாட்சிகள் சொல்வது போல் சம்பவம் நடந்திருக்க வாய்ப்பு இல்லை என்றும், சாட்சிகள் சம்பவத்தை பார்த்திருக்க வாய்ப்புகள் இல்லை என்றும், மெடிக்கல் மெமோ கொடுத்ததால் தன்னை இந்த வழக்கில் எதிரியாக சேர்த்து விடுவார்கள் என்று பயந்து தன்னை காப்பாற்றிக் கொள்ள மெடிக்கல் மெமோவை மேலதிகாரி கொடுக்க சொன்னதாக ரேவதி பொய்யாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அ.சா.30 இறந்தவரின் உறவினர் என்றும் அவர் முதல் விசாரணையில் காவல் நிலையத்தில் கீழ் தளம் இருட்டாக இருந்தது என சாட்சியம் அளித்துள்ளார் என்றும் என்றும் பிரேத விசாரணை அறிக்கை பிரேத பரிசோதனைக்கு முன்பு தயாரிக்கப்பட வேண்டும் என்றும், ஆனால் பிரேத விசாரணை அறிக்கை பிரேதம் நல்லடக்கம் செய்யப்பட்ட பின்பு தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் முறையாக பிரேத விசாரணை அறிக்கை தயாரிக்கப்படவில்லை என்றும், 30.06.2020 தேதியில் 5–ம் எதிரியிடம் லத்தியை கேட்ட நேரம் நினைவில்லை என்று சாமதுரையை அதற்கு முன்பு எங்கும் பார்க்கவில்லை என்றும் அவர் ஏறி குதித்த கார் காவல்துறை காரா, தனியார் காரா என்றால் இருட்டாக இருந்ததால் தெரியவில்லை என்றும் அ.சா.50 சாட்சியமளித்துள்ளார் என்றும் பென்னிக்ஸ் சாரத்தில் இரத்தக்கசிவு இருந்ததாக தனது விசாரணை அறிக்கையில் சொல்லவில்லை என்றும் அ.சா.50 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், 28.06.2020 முதல் 30.06.2020 வரை விசாரணை அதிகாரியாக இருந்துள்ள கலைக்கதிரவனை விசாரிக்கவில்லை என்றும் சம்பவம்

இரவு நேரத்தில் நடந்திருப்பதால் அந்த நேரத்தில் மின்சாரம் இருந்தது என்பதை உறுதி செய்ய மின்சார வாரிய அதிகாரிகளை விசாரிக்கவில்லை என்றும், பார்வை மகஜர் மற்றும் வரைபடம் 25.09.2020 அன்று தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கில் உள்ள எந்த எதிரிக்கும் குவிமுச 164–ன் வாக்குமூலம் பெற முயற்சி செய்யவில்லை என்று அ.சா.51 சாட்சியம் அளித்துள்ளார் என்றும் பார்வை மகஜர் வரைபடத்தில் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் உட்புறம் உள்ள கதவு மூடுவதற்கான தாழ்பால் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றும், சிபிசிஜடி விசாரித்த அனைத்து சாட்சிகளையும் அ.சா.52 விசாரிக்கவில்லை என்றும் முக்கியமான சாட்சிகளை மட்டும் விசாரித்ததாக அ.சா.52 சாட்சியமளித்துள்ளார் என்றும் காவல்நிலையத்தில் குப்பைத்தொட்டி இருந்ததாக பார்வை மகஜர், வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றும் அ.சா.52 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், 5–ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் 5–வது எதிரி சாமதுரை தலைமறைவானதாக யாரும் சாட்சியம் அளிக்கவில்லை என்றும் 5–வது எதிரி கொண்டு வந்த கம்பால் அடித்ததாகவோ, வேறு நபர்களிடமிருந்து கம்பை வாங்கி அடித்ததாகவோ, கம்பை கொண்டு வந்ததாகவோ, கம்பை கொண்டு சென்றதாகவோ சாட்சியம் அளிக்கவில்லை என்றும் 5–ம் எதிரியிடமிருந்து எந்த சான்று பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றும் நீதிமன்ற காவலர் என்பதால் இறந்த நபர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்வதாக தகவல் தெரிந்து 5–ம் எதிரி மருத்துவமனைக்கு சென்றுள்ளார் என்றும் மேற்கண்ட விவரத்தை தனது 313–ன் கீழான குவிமுச–வில் பதில் அளித்துள்ளார் என்றும், 5–ம் எதிரிக்கு எதிரான வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும் எனவே 5–ம் எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்றும் 5–ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டுள்ளார்.

19.10 <u>6ம் எதிரி தரப்பு வாதம்–</u>

18.06.2020–ம் தேதி 2–ம் எதிரியுடன் எந்த காவலர் ரோந்து வந்தார் என அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும் கோவில்பட்டி கிளை சிறைச்சாலைக்கு அழைத்துச்

சென்றபோது  அ.சா.2 அங்கு இல்லை என்றும் In– out Book மருத்துவர் வெங்கடேஷ் 11.00 மணிக்கு உள்ளே  சென்றதாகவும் அதற்கு கீழே 11.32–க்கு வெளியேறியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அதற்கும் கீழே கையெழுத்திட்டுள்ளவர் 11.20–க்கு வந்ததாக கையெழுத்திட்டுள்ளார் என்றும் எனவே அந்த ஆவணம் நம்பதகுந்தல்ல என்றும் 18.06.2020–ம் தேதி நடந்ததாக கூறப்படும் சம்பவம் இரவு நேரம் நடந்ததாக கூறப்படுகின்ற நிலையில் 6–ம் எதிரி பென்னிக்ஸ் கடை முன் இருந்ததாக அ.சா.12, அ.சா.13 குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றும் இத்தகைய வழக்கில் சட்ட அனுமானம் எதுவும் இல்லை என்றும் எனவே அரசு தரப்பு வழக்கை அரசு தரப்பே நிரூபிக்க வேண்டும் என்றும் 6–ம் எதிரியிடமிருந்து லத்தி எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் புகைப்படங்கள் குறித்த சாட்சியங்கள் 19.06.2020–ம் தேதி 08.00 மணி வரை மட்டுமேயான சங்கதிகளுக்கு பொருந்தும் என்றும் அகமதாபாத் புகைப்பட பிரிவிலிருந்து கிடைக்கப்பட்டுள்ள அறிக்கை 265–ல் 6–ம் எதிரி இருப்பதாக தெரியவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் காவல் நிலையத்தில் மின்சாரம் இல்லை என்று கூறப்படுகின்ற நிலையில் யார் காயத்தை ஏற்படுத்தினார்கள் என்று அறுதியிட்டு கூற முடியாது என்றும் மேலும்   அ.சா.ஆ.1–ல் ரெண்டே காயங்கள் இருப்பதாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸுக்கு பிபி, சுகர் ,சிறுநீரக கல், மூச்சு விடுவதில் சிரமம் மற்றும் ஆக்ஸிஜன் குறைபாடு இருந்துள்ளது என்றும், கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டது சம்பந்தமான விபத்து பதிவேடு நகல்கள்  அ.சா.ஆ.43,  அ.சா.ஆ.44–ல் Cardiac arrest என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு சரியான சிகிச்சைகள் அளிக்கப்படவில்லை என்றும், வேறு காயம் எதையும் பார்க்கவில்லை என அ.சா.21 சாட்சியம் அளித்துள்ளார் என்றும்,  இறப்பு எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்த சாட்சியங்கள் உள்நோக்கத்துடன் மறைக்கப்பட்டுள்ளது என்றும் 6–ம் எதிரி ஜீப்பில் வரவில்லை என்றும், தனியாக வாகனத்தில் வந்ததாகவும் அ.சா.26 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், 1–ம் எதிரியும் பாலகிருஷ்ணனும் ஜெயராஜை காவல்நிலையத்திற்கு கூட்டி வந்ததாகவும், பென்னிக்ஸ் வந்தபோது 6–ம் எதிரி வந்ததாகவும் அ.சா.44 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அ.சா.பொ.23–ஐ

பரிசீலித்து பார்த்தால் இரவு 09.15 மணி வரை ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் கடை நடத்தி வந்துள்ளனர் என்பதும் சட்டப்படி நடவடிக்கை தான் அவர்கள் மீது எடுக்கப்பட்டுள்ளது என்பதும் நன்கு விளங்கும் என்றும் சாட்சிய சட்டம் பிரிவு 65–ன் கீழான சான்றிதழை போலீசார் கொண்டு வந்ததாக அ.சா.49 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், எவரும் காயப்படுத்திய நபரை பற்றி குறிப்பிடாமல் இருக்க முடியாது என்றும், போலீசார் அடித்தார்களா என்று மருத்துவர் அ.சா.45 வினவியுள்ளபோது, ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் போலீசார் அடித்ததாக குறிப்பிட்டு கூறவில்லை என்றும், நீதித்துறை நடுவரிடம் காவல் அடைப்பு உத்தரவு பெறப்பட்ட சமயத்தில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் போலீசார் அடித்ததாக குறிப்பிட்டு எதுவும் கூறி இருக்கவில்லை என்றும், போலீசார் துரத்தும் போது காமராஜர் சிலைக்கு அருகே விழுந்து காயம் அடைந்ததாக ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் கூறியதாக அ.சா.45 காயச்சான்றிதழில் பதிவு செய்துள்ளார் என்றும், அதில் ஆக்சிடென்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், பிரேத பரிசோதனை செய்வதற்கு கொடுக்கப்பட்ட வழக்கு சரிதத்தில் போலீசார் தாக்கியதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றும், பிரேத விசாரணை அறிக்கையில் ஐயத்துக்குரிய நபர்கள் எவரேனும் உண்டா என்பது குறித்த பதிலில் லத்தியால் தாக்கி காயம் ஏற்பட்டுள்ளது, அது காவல் நிலையத்தில் ஏற்படுத்தப்பட்டதா, சிறை துறை அதிகாரிகளால் ஏற்பட்டதா என்பது குறித்து சந்தேகம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் காவலர்கள் முகம் சிசிடிவி காட்சி பதிவுகளில் தெரியவில்லை என்றால் அது சரிதான் என அ.சா.44 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், சாட்சிகளை விசாரித்த பிறகு அ.சா.ஆ.72 ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், அதில் 6–ம் எதிரி என்ன ஆயுதம் உபயோகித்தார், எந்த காயத்தை ஏற்படுத்தினார் என அரசு தரப்பில் குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை என்றும், குற்ற எண்.312/2020 வழக்கு சம்பந்தமான எஃப்.ஐ.ஆர் இண்டெக்ஸ் ரேவதி மற்றும் ப்யூலா செல்வராணியால் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், புகாரை 6–ம் எதிரி தயாரித்ததாக ரேவதி சாட்சியம் அளிக்கவில்லை என்றும், 19.06.2020–ம் தேதி யார் யார் இருந்தனர் என கேட்டதற்கு மாலை ரோல் கால் எதுவும் நடத்தவில்லை என்று அ.சா.44 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், கீழ்தளத்தில் இருட்டாக இருந்ததாக அ.சா.30 சாட்சியம் அளித்துள்ளார்

என்றும், கீழ்தளத்தில் மின் வெளிச்சம் எதுவும் இருந்ததாக அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும், சில எதிரிகள் பற்றி நீதித்துறை நடுவர் அ.சா.36 அவர்களிடம் சொன்னதாகவும், அவர் வாக்குமூலம் பதிவு முடிக்கப்பட்டுவிட்டது என்றும், ஏதேனும் கூற வேண்டும் என்றால் நீதிமன்றத்தில் கூறிக் கொள்ளலாம் என தெரிவித்து விட்டதாகவும் அ.சா.47 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், ஆனால் அவ்வாறு கூறியதாக நீதித்துறை நடுவர் அ.சா.36 சாட்சியம் அளிக்கவில்லை என்றும் 12.07.2020–ம் தேதி சிபிசிஐடி தயாரித்ததாக சொல்லப்படும் நடவடிக்கையில் ரேவதி கையெழுத்திடவில்லை என்றும், இவ்வழக்கில் அ.சா.51–ஐ புலன் விசாரணை அதிகாரியாக உயர்நீதிமன்றம் நியமிக்கப்பட்டிருந்தும் மற்ற போலீசாரால் சாட்சியம் சேகரிக்கப்பட்டுள்ளது என்றும், 6–ம் எதிரி காவல் நிலைய பொறுப்பில் இருந்திருக்கவில்லை என்றும், இந்நிலையில் அங்கு நடைபெற்றதாக கூறப்படும் தடய அழிப்பிற்கும் 6–ம் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், அ.சா.5 அரசு மருத்துவமனையில் துணியை மாற்றியதாகவும், அந்தத் துணியை வாங்கி ஆஸ்பத்திரி குப்பைத்தொட்டியில் போட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அதற்கும் 6–ம் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், அ.சா.22 புகாரில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் பொய்யானது என்றால் தான் இதச பிரிவு 211 மற்றும் 218 வகையங்கள் ஈர்க்கப்படும் என்றும், ஆனால் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை 6–ம் எதிரி காவல் நிலையத்திற்குள் கூட்டிச் சென்றதாக எவ்வித சாட்சியமும் இல்லை என்றும், பென்னிக்ஸ் தாமாகவே காவல் நிலையத்திற்கு வந்ததாக சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ளனர் என்றும், 2–ம் எதிரிக்கும் பென்னிக்சிற்கும் இடையே திடீரென வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதால் சம்பவம் நடந்ததாக அரசு தரப்பில் கூறப்படுகின்ற நிலையில் அதற்கும் 6–ம் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், எனவே 6–ம் எதிரியை மேற்படி வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று 6–ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டுள்ளார்.

19.11 <u>7–ம் எதிரி தரப்பு வாதம் –</u>

மருத்துவ நிபுணர் கருத்து இறுதியானது அல்ல என்றும், அரசு தரப்புக்கு சாதகமாக கருத்துரை வழங்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே அ.சா.43 கருத்துரை வழங்கியுள்ளார் என்றும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு சிராய்ப்பு காயம் இருந்ததாக மட்டுமே அ.சா.45 அ.சா.ஆ.17, அ.சா.ஆ.18 ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளார் என்றும், அதில் பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிட்ட காயங்கள் பற்றி குறிப்பிடப்படவில்லை என்றும், கிளை சிறைச்சாலை அனுமதி பதிவேட்டிலும் 2 காயங்களே இருப்பதாக மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதிலிருந்தே காவல் அடைப்பு செய்யப்பட்டது வரை ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு உடலில் 2 காயங்களே இருந்துள்ளன என்பதும் மற்ற காயங்கள் கிளை சிறைச்சாலையில் ஏற்பட்டுள்ளது என்பதும் நன்கு விளங்கும் என்றும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் சிறையில் அடைக்கப்பட்ட பின் அவர்களுக்கு என்ன ஆனது என்பது குறித்து சிறைத்துறை அதிகாரிகள் தான் விளக்க வேண்டும் என்றும், இரண்டே காயங்கள் மட்டுமே இருந்ததாக அ.சா. 21–ம் சாட்சியம் அளித்துள்ளார் என்றும், நோயியல் அறிக்கையில் நுரையீரலில் பிரச்சனை இருந்ததாகவும், இதயத்தில் அடைப்பு, கல்லீரலில் கொழுப்பு இருந்ததாகவும், சிறுநீரக கல் அடைப்பு இருந்ததாகவும், இதய பிரச்சனை இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஒருவர் சிறையில் அடைக்கப்பட்டாலும் இதய நோய் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும், எனவே மேற்படி இறப்புக்கு 7–ம் எதிரி காரணமாக முடியாது என்றும், கோவில்பட்டி கிளை சிறைச்சாலைக்கு கைதிகளை அழைத்துச் சென்றபோது அ.சா.2 அங்கு இல்லை என்றும் குற்ற எண்.312/2020 வழக்கு பொய்யானது என இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என்றும் அ.சா.50 பதிவு செய்துள்ள வாக்குமூலங்கள் சத்திய பிரமாணத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளதால் அவற்றை சாட்சியமாக கருத வேண்டும் என்றும், ஊர்க்காவல்படை சின்னப் பசங்க லாக்அப் கம்பி வழியாக கையை இழுத்து பிடிச்சிக்கிட்டாங்க என்று அ.சா.17 கருப்பசாமி தன்னிடம் வாக்குமூலம் கொடுத்ததாக அ.சா.50 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை யார் யார் அடித்தார்கள் என்று அ.சா.44 குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றும், இரவு 08.00 மணிக்கு பொது நாட்குறிப்பு முடிக்கப்பட்டுள்ளது

என்றும், ரேவதிக்காக காத்திருந்ததாக பொதுநாட்குறிப்பில் குறிப்பிடப்படவில்லை, நீதித்துறை நடுவரது அறிக்கையில் 7–ம் எதிரியின் பற்றி குறிப்பிடப்படவில்லை என்றும், அ.சா.44, அ.சா.47 மூலம் நடத்தப்பட்டுள்ள மீள் காட்சி நடவடிக்கை அ.சா.ஆ.74, அ.சா.ஆ.75 சாட்சிய மதிப்பற்றது என்றும், அரசு தரப்பே அரசு தரப்பு வழக்கை உண்மையானது என்பதை முதலில் நிரூபிக்க வேண்டும் என்றும், எதிர் தரப்பு சாட்சியத்தை எதிரி நிரூபிக்க தவறி விட்டால் கூட அதனால் எதிரி குற்றம் இழைத்ததாக கருத முடியாது என்றும், சம்பவ இடத்தில் தான் இல்லை என்பதை நிகழ்த்த தரவுகளின் அடிப்படையில் நிரூபித்தாலே போதுமானது என்றும், அதனை அரசு தரப்பு போல் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், அ.சா.47 மற்றும் அ.சா.44 நீதித்துறை நடுவரிடம் கொடுத்துள்ள வாக்கு மூலத்திற்கும் சிபிஐயிடம் கொடுத்துள்ள வாக்குமூலத்திற்கும் பெருத்த முரண்பாடுகள் உள்ளது என்றும், அழகுமாரி செல்வம் சந்தனகுமார் சாமுவேல் செல்வின்ராஜ் ஆகியோர்கள் 7–ம் எதிரி இருந்ததாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றும், சம்பவத்தை கேள்விப்பட்டு போனதாகத்தான் அ.சா.30 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அ.சா.25 குறிப்பிடும் புகாரே 20.06.2020–ம் தேதி தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், அ.சா.25, 19.06.2020–ம் தேதி சாத்தான்குளம் காவல் நிலையம் வந்ததாக காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், வேண்டுமென்றே கோபத்தில் அடித்தார்களா கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் அடித்தாரா என அரசு தரப்பில் விளக்கப்படவில்லை என்றும், 7–ம் எதிரியை பார்த்ததாக அ.சா.26 அரசு மற்றும் நீதித்துறை நடுவர் நடத்திய நீதி விசாரணையில் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றும், டவர் லொகேஷன் படி 7–ம் எதிரி 19.06.2020–ம் தேதி 23:55:52–க்கு 60 வினாடி பேய்க்குளத்தில் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், சாத்தான்குளம் காவல் நிலையத்திலிருந்து பேய்க்குளம் 15 கிலோ மீட்டர் தூரம் என்றும், 19.06.2020–ம் தேதி 7–ம் எதிரி ஒருநபரை தனிமைப்படுத்துதல் பணிக்கு அரசு மருத்துவமனைக்குச் கூட்டிச்சென்றுவிட்டு 20.06.2020–ம் தேதி பணிக்குத் திரும்பியுள்ளார் என்றும், அதன்பின் தொடர்ந்து காவல் நிலையத்தில் ஆஜராகி உள்ளார் என்றும், 7–ம் எதிரி தேதி பாக்கெட் டைரி அரசு தரப்பில் உள்ளது என்றும் அதை அரசு

தாக்கல் செய்யவில்லை என்றும், அ.சா.26 ஜெயசேகர் நீதித்துறை நடுவரிடம் கொடுத்துள்ள வாக்குமூலத்தில் 7–ம் எதிரியைப் பார்த்ததாகக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றும், எனவே 7–ம் எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று 7–ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டுள்ளார்.

19.12 8–ம் எதிரி தரப்பு வாதம் –

8–ம் எதிரி பென்னிக்சின் சாதியைச் சார்ந்தவர் என்றும், கிறிஸ்தவர் என்றும், மேலும் அவர் பென்னிக்சின் நண்பர் என்றும், அவர் எவரையும் அடிக்கவில்லை என்றும், அடிக்கவும் தூண்டவில்லை என்றும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை அடிக்க வேண்டும் என்ற எண்ணம் 8–ம் எதிரிக்கு இருக்கவில்லை என்றும், சிசிடிஎன்எஸ் பணியினை மேற்படி காவல் நிலையத்தின் மேல் மாடியில் 8–ம் எதிரி செய்து வந்தார் என்றும், அவருக்குக் கீழே என்ன நடந்தது என்பது தெரியாது என்றும், இந்த வழக்கின் முக்கிய குற்றவாளிகள் 01.07.2020–ம் தேதி கைது செய்யப்பட்ட நிலையில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் செய்ததால் 02.07.2020–ம் தேதி கட்டாயப்படுத்தி 8–ம் எதிரியிடம் வாக்குமூலம் பெற்று 8–ம் எதிரியையும் இந்த வழக்கில் ஒரு எதிரியாக சேர்த்துள்ளனர் என்றும், 8–ம் எதிரியின் வாக்குமூலத்தை நீதித்துறை நடுவர் பதிவு செய்தபோது 8–ம் எதிரி சாதாரணமான மனநிலையில் இல்லை என்றும், அவர் மிகுந்த மன அழுத்தத்தில் இருந்துள்ளார் என்றும், அந்த வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் 8–ம் எதிரிக்கு வாசித்துக் காட்டப்படவில்லை என்றும், நீதி விசாரணை என்பது இறப்புக்கான காரணத்தைக் கண்டறிவதற்காக மட்டுமே செய்யப்படுகிறது என்றும், நீதி விசாரணையின் இடையில் காவல்துறையினருக்கும் நீதித்துறை நடுவருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டதால் நீதித்துறை நடுவர் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் காவலர்கள் தாக்கப்பட்டு இறந்துவிட்டதாக அறிக்கையை கொடுத்துள்ளார் என்றும், அ.சா.47–ன் குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டப்பிரிவு 164–ல் குறிப்பிட்டுள்ள சங்கதிகளுக்கும் சிபிசிஐடி–யில் கூறியுள்ள சங்கதிகளுக்கும், சிபிஐ–யில் கூறியுள்ள சங்கதிகளுக்கும் நீதி விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளுக்கும் முரண்பாடுகள் உள்ளது என்றும், 03.07.2020–ம் தேதி ரேவதி குற்றவியல் விசாரணை முறைச்

சட்டப்பிரிவு 164–ல் அளித்துள்ள வாக்குமூலத்தில் 8–ம் எதிரி பற்றி குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றும், பின்னிட்டு 8–ம் எதிரியின் பெயரை சொல்லாமல் விட்டு விட்டதாகக் கூறி பின்னிட்டு வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றும், நீதி விசாரணையில் நீதித்துறை நடுவர் பதிவு செய்துள்ள வாக்குமூலங்கள் சட்டப்படி சாட்சியமாக ஏற்கத்தக்கதல்ல என்றும், எத்தனை மணிக்கு அடித்தார்கள் என்று நேரம் எதுவும் நீதி விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை என்றும், எனவே 8–ம் எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று 8–ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டுள்ளார்.

19.13 <u>9–ம் எதிரி தரப்பு வாதம் :–</u>

9–ம் எதிரி தரப்பில் தனித்த வாதம் எதுவும் முன்னிடப்படவில்லை, அவரது தரப்பில் இலவச சட்ட உதவி வழக்குரைஞர் amicus வாதிட்டுள்ளதில் 9–ம் எதிரி சீருடை அணியாத காவலர் என்றும், அவர் சாத்தான்குளம் காவல் நிலைய மாடியில் சி.சி.டி.என்.எஸ் பணியில் இருந்துள்ளார் என்றும், ரேவதி 19.06.2020 அன்று இரவு 08.50 மணிக்கு சாத்தான்குளம் காவல் நிலையத்திற்கு வந்ததாகக் காட்டவும், அ.சா.44 ப்யூலா செல்வகுமாரி சாத்தான்குளம் காவல் நிலையத்தில் 19.06.2020–ம் தேதி இரவு 08.00 மணிக்கு மேல் இருந்ததாகக் காட்டவும் அரசு தரப்பில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் சமயத்தில் எஸ்.பி அலுவலக காவலர் சந்தனகுமார் இருந்ததாகக் கூறப்படுகின்ற நிலையில் அவரை அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும், நுரையீரல் பகுதியில் பென்னிக்சிற்கு பாதிப்பு இருந்ததாக மருத்துவர் சாட்சியம் அளித்துள்ளார் என்றும், மேலும் பென்னிக்சுக்கு சிறுநீரக பிரச்சனையும், ஜெயராஜுக்கு சர்க்கரை வியாதியும் இருந்துள்ளது என்றும், அவர்கள் இருவருக்கும் இருந்துள்ள நோய்களின் காரணமாக அவர்கள் இறந்துள்ளனர் என்றும், காவல் நிலையத்தின் கீழ் தளத்தில் தாக்கப்பட்டதாக அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது என்றும், சி.சி.டி.என்.எஸ் பணியை இடையில் நிறுத்திவிட்டு 9–ம் எதிரியால் கீழே வர முடியாது என்றும், எனவே சந்தேகத்தின்

பலனை 9-ம் எதிரிக்கு வழங்கி 9-ம் எதிரியை வழக்கில் இருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டுள்ளது.

<u>முன்னிடப்பட்டுள்ள முன்தீர்ப்புகள்</u>

20. அரசு தரப்பில் முன்னிடப்பட்டுள்ள முன்தீர்ப்புகள் –

20 1. In Anda and Others –vs– State of Rajasthan–(1966 AIR SC 148)

The Hon'ble Supreme court has held that

When the injuries intended to be caused were sufficient in the ordinary course of nature to cause death the assault is murderous and it must have been apparent to all the assailants that the injuries they were inflicting in furtherance of the common intention of all were sufficient in the ordinary course of nature to cause death. In these circumstances it cannot be said that the offence was not murder but only culpable homicide not amounting to murder.

20.2 In Virsa Singh –vs– State of Punjab AIR 1958 SC 465

The Hon'ble Supreme court has held that to bring a case U/s.300 thirdly

(a) First, it must be established, quite objectively, that a bodily injury is present.

(b) Secondly the nature of the injury must be proved; These are purely objective investigations.

(c)Thirdly, it must be proved that there was an intention to inflict that particular bodily injury. That is to say, that it was not accidental or unintentional, or that some other kind of injury was intended.

(d) Once these three elements are proved to be present, the enquiry proceeds further and.

(e) Fourthly, it must be proved that the injury of the type just described made up of the three elements set out above is sufficient to cause death in the ordinary course of nature. This part of the enquiry is purely objective and inferential and it has nothing to do with the intention of the offender.

Once these four elements are established by the prosecution (and, of course, the burden is on the prosecution throughout) the offence is murder under section 300 "thirdly". It does not matter that there was no intention even to cause an injury of a kind that is sufficient to cause death in the ordinary course of nature (not that there is any real distinction between the two). It does not even matter that there is no knowledge that an act of that kind will be likely to cause death. One the intention to cause the bodily injury actually found to be present is proved, the rest of the enquiry is purely objective and the only question is whether, as a matter of purely objective inference, the injury is sufficient in the ordinary course of nature to cause death. No one has a licence to run around inflicting injuries that are sufficient to cause death in the ordinary course of nature and claim that they are not guilty of murder. If they inflict injuries of that kind, they must face the consequences; and they can only escape if it can be shown, or reasonable deducted, that the injury was accidental or otherwise unintentional.

20.3 In State of Andhra Pradesh –vs– Rayavarapu Punnayya and another 1977 SCR 1 601

When Question arose in a case where no significant injury had been inflicted on a vital part of the body, and the weapons used were ordinary lathis, and the accused could not be said to have the intention of causing death, Whether the offence would be "murder" or merely "culpable homicide not amounting to murder". The Hon'ble Supreme Court speaking through Honourable Justice Hidayathullah, J. after explaining the comparative scope of and the distinction between section 299 and 300, answered the question in these terms:

"The injuries were not on a vital part of the body and no weapon was used which can be described as specifically dangerous. Only lathis were used. It cannot, therefore, be said safety that there was an intention to cause the death of Bherun within the fires clause of section 300. At the same time, it is obvious that his hands and legs were smashed and numerous bruises and lacerated wounds were caused. The number of injuries shows that everyone joined in beating him. It is also clear that the assailants aimed at breaking his arms and legs. Looking at the injuries caused to Bherun in furtherance of the common intention of all it is clear that the injuries intended

to be caused were sufficient to cause death in the ordinary course of nature even if it cannot be said that his death was intended. This is sufficient to bring the case within thirdly of Section.300".

20. 4 In Tomaso Bruno and another -vs- State of Uttar Pradesh,(2015) 7 SCC 178:

The Hon'ble Supreme court has held that with the advancement of information technology, scientific temper in the individual and at the institutional level is to pervade the methods of investigation. With the increasing impact of technology in everyday life and as a result, the production of electronic evidence in cases has become relevant to establish the guilt of the accused or the liability of the defendant. Electronic documents stricto sensu are admitted as material evidence. Secondary evidence of contents of document can also be led under section 65 of the Evidence Act. Production of scientific and electronic evidence in court as contemplated under section 65-B of the Evidence Act is of great help to the investigating agency and also to the prosecution.

20.5 In Bhagawan Jagannath Markad and others -vs- State of Maharashtra,In (2016) 10 SCC 537

The Hon'ble Supreme court has held that burden of proof is always on prosecution and the Prosecution has to prove its case beyond reasonable doubt and accused is entitled to benefit of reasonable doubt - The reasonable doubt is one which occurs to a prudent and reasonable man - S,3, Evidence Act, refers to two situations in which a fact is said to be proved: (I) when a person feels absolutely certain and thinks it so extremely probable that a prudent man would, under the circumstances, act on the assumption of its existence - The doubt which the law contemplates is not of a confused mind but of prudent man who is assumed to possess the capacity to separate the chaff from the grain - The degree of proof need not reach certainly but must carry a high degree of probability

20.6 Ramesh and another -vs- State of Uttar Pradesh with Maniram -vs- State of Uttar Pradesh with Ramkumar -vs- State of Uttar Prades (2009) 15 SCC 513

The Hon'ble Supreme Court has held that Minor contradictions in testimonies of PWs and non-examination of independent witness, on facts, was insignificant. Contradiction in the testimony of PW's are bound to be there and in fact go to support that truthfulness of the witnesses. If prosecution proves its case the court can convict the accused.

20.7 In Rammi Alias Rameshwar -vs- State of M.P with Bhura Alias Sajjan kumar -vs- State of M.P (1999) 8 SCC 649

The Hon'ble Supreme Court has held that- in the Appreciation of evidence - Post-event conduct of witness cannot be predicted - It varies from person to person as different people react differently to what they witness - Occurrence taking place in a bus - Witness, a passenger, not informing the family members of the deceased nor bringing the matter to the notice of the police - Held, in the circumstances, conduct of the witness not abnormal

20. 8 In Sahebrao Mohan Berad -vs- State of Maharashtra,CDJ 2011 SC 271,

The Hon'ble Supreme Court has held that it is needless to say that the doctor who has examined the deceased and conducted the postmortem is the only competent witness to speak about the nature of injuries and the cause of death. Unless there is something inherently defective the court cannot substitute its opinion for that of the doctor".

20.9 In Nankaunoo -vs- State of Uttar Pradesh, (2016) 3 SCC 317

In a case fall under S.300 Thirdly - The Hon'ble Supreme Case has explained how to determine and he has held the ingredients to be established and explained that regarding intention to cause injury is concerned the prosecution has to prove from the given facts and circumstances that the intention of the accused was to cause that particular injury and regarding whether said injury was sufficient in ordinary course of nature to cause death whether said injury/injuries are

sufficient to cause death, an objective enquiry has to be conducted and it is a matter of inference or deduction from the particulars of the injury. Further the Hon'ble Supreme Court has held that when a witness is giving consistent version of incident – No reason to disbelieve their evidence – Their credibility is established beyond doubt.

20. 10 In Mukesh and another –vs– State (NCT of Delhi) (2017) 6 SCC 1 The Hon'ble Supreme Court has held :– Brutal, barbaric gang rape, unnatural sex and assault leading to death of victim – Principles of balancing of aggravating and mitigating circumstances, applied (per curiam), and death sentence confirmed even though there were many mitigating factors

– Held (Per curiam), the court should consider cumulative effect of both factors is aggravating and mitigating circumstances and has to strike a balance between two to see towards which side scale/balance of justice tilts.

In Present case even if there were mitigating circumstances like young age of victims, dependants and ailing parents, post crime remorse and good behaviour in jail and absence of criminal antecedents, aggravating circumstances outweighed them, warranting confirmation of death sentence.

21. 3 ம் எதிரி தரப்பில் முன்னிடப்பட்டுள்ள முன்தீர்ப்புகள்

21.1. The State of Haryana –vs– Chandvir and others, the Hon'ble Supreme court has held No common object or intention to kill deceased established – Free fight between accused party and the prosecution party on account of quarrel between the families – Some of the accused suffering injuries in same transaction – Prosecution not explaining injuries on them – Constructive liability, held cannot be pressed into service liability of each of the accused, held has to be considered independently.

21.2 In (2025) 2 SCC (Cri) 222, Ravi –vs– State of Punjab the Hon'ble Supreme Court has held that

(A) Doctor opined the cause of death to be asphyxia due to hanging with ligature marks on the neck – However, in the cross examination, he admitted that the ligature marks could be on account of the long journey of the dead body – Further, he also deposed that the cause of death of the deceased could also be due to chronic tuberculosis – Therefore, his evidence held to have not conclusively established the cause of the death.

(B) The prosecution does not stand absolved from its initial liability to prove the offence and it is only when such an onus is discharged and a prima facie case of guilt is made out that the provisions of S.106 of the Evidence Act may come into play.

21.3. In (2025) 2 SCC (Cri) 552, State of Madhya Pradesh –vs– Shyamlal and others the Hon'ble Supreme Court has held that Murder or culpable homicide – Delayed dead, absence of cause of death and absence of proof as to homicidal death, as factors for recording conviction Under S.304 Pt.II r/w S.149.

21. 4. In (2018) 3 MLJ (Crl) 727 (SC), Rupinder Singh Sandhu –vs– State of Punjab and others Etc., the Hon'ble Supreme Court of India has held that Held, no discussion regarding identity of 2nd accused or role played by him in incident – No evidence either to prove presence of 2nd accused along with 1st accused at the time of occurrence or role played by 2nd accused in incident – Evidence of Pw-3 and Pw-4 was recorded after 7 years of incident – Not trustworthy evidence regarding his presence along with 1st accused at the time of offence – It was not safe to convict 2nd accused on basis of evidence of Pws 3 and 4 – Judgment of High Court insofar as 2nd accused set aside – Medical evidence was absolutely uncertain regarding cause of death of victim – Only fact established on evidence was that 1st accused gave single fist blow on head of victim – No weapon was used, nor was there any past enmity between accused and deceased – In right of medical evidence on record, 1st accused could not be held guilty of causing death of victim – Judgment under appeal set aside.

21.5. K.Jeevanantham –vs– State Represented by on 12th October 2001 the Hon'ble Madras High Court has held It is well – settled by a serious of decisions of this court that cognizance cannot be taken unless there is at least some material indicating the guilt of the accused vide R.P.Kapur vs. State of Punjab (1960) 3 SCR 388, State of Haryana vs. Bhajan Lal (1992) Suppl (1) SCC 335, Janta Dal vs. H.S Chowdhary (1992) 4 SCC 305, Raghubir Saran (Dr) vs. State of Bihar (1964) 2 SCR 336, State of Karnataka vs.M.Devendrappa (2002) 3 SCC 89 and Zandu Pharmaceutical Works Ltd. vs. Mohd.Saraful Haque (2005) 1 SCC 122.

21. 6 In (2011) 2 Supreme Court Cases (Cri) 375 and (2010) 13 Supreme Court Cases 657 Sunil Kumar Sambhudayal Gupta (DR.) and others Vs. State of Maharashtra The Hon'ble Supreme Court has held that,

(B) Criminal Trial – Appreciation of evidence – Contradictions, inconsistencies, exaggerations or embellishments – Rules relating to – Restated – Nature of contradiction – Material or minor – Held, court has to judge whether contradiction/omission is of such a magnitude that it materially affects trial – Minor contradictions inconsistencies, embellishments or improvements on trivial matters which do not affect core of prosecution case, cannot be a ground to reject evidence entirely – Marginal variation between statement made to police and evidence given in court, held need not necessarily be improvement in real sense – Such variation may in fact be elaboration of statement made earlier by witness – The omission which in effect amounts to contradiction in material particulars and goes to root of the case, renders the evidence unreliable – On facts held, testimony of a doctor who improved his statement while giving evidence in court involved material contradictions and inconsistencies and hence was not reliable – Criminal procedure Code, 1973 – S.161 – Statement of witness recorded by police – Improvement in statement while testifying before court – When unreliable

(C) Criminal Trial – Appreciation of evidence – Credibility of witness – Held, trial court after considering entire evidence should form opinion about credibility of witnesses – Appellate court, in normal course, should not review the same without justifiable reason.

21. 7 In 2024 (2) MWN (Cr.) 39 (DB) A.Kalidass, Sub-Inspector of Police (Now under suspension) Vs. State, rep by Deputy Superintendent of Police, CB-CID, Madurai Range, Madurai the Hon'ble Madurai Bench of Madras High Court has held that,

Deceased a suspect brought to police station in connection with Complaint given by PW.8 for attempt to murder – Knife, which deceased carried to PW8's shop recovered and kept on accused's table – Deceased took knife from table and attacked Accused causing injuries on body of Accused and damage to table top glass – Accused, using his service Revolver, opened fire at deceased – No evidence to show any animosity between accused and deceased – No Eyewitness to occurrence – Prosecution case against Accused based on circumstantial evidence – Cry of Accused "he is stabbing" from SI Rood followed by Gunshot sound and Accused coming out with torn shirt and bleeding injuries – Res gestate evidence, admissible under Section 6, Evidence Act and in support of plea of Self- defence – Danger apprehended by Accused not self-created – No premeditation – Reasonable ground to apprehend death/grievous injuries at hands of deceased – Whether defensive attack by accused reasonably proportionate – Contradiction about number of Bullet injuries and number of Bullets fired at deceased – As per Prosecution case, 3 rounds fired and 3 cartridges produced – Post-mortem Certificate showing 4 Gunshot wounds at different parts of body – Gunshots fired not aiming at any fixed point but fired at random- Person apprehending danger cannot be expected to fire at particular target in precise manner – Angle of Bullets which caused Injuries 1 & 2 is from upward to downward – Held, Accused probabilised plea of Self- defence and proved reasonable apprehension of getting grievously hurt at hands of deceased – Accused entitled to protection under Section 100 – Act of Accused falls under 2nd Exception to Section 300 – Accused entitled to acquittal from all charges – Conviction under Section 302 & 342, set aside.

(A) Code of Criminal Procedure 1973 (2 of 1974), Section 176(1-A) – Enquiry Report of Magistrate under – Admissible in evidence – However, opinion of Magistrate in Enquiry Report not conclusive proof – Statements of persons examined by Magistrate also not substantive piece

of evidence – Witnesses who made statements to be testified before Trial Court on oath – And, Accused to be given opportunity to cross – examine those Witnesses.

21.8. Krishnamoorthy Vs. State on 29 January, 2018 the Hon'ble Madurai Bench of Madras High Court has held that, Even though, PW.1 and PW.2 admit that they maintain a pocket notebook and entry is made in the general diary, Pw.16 in his evidence states that he did not collect the pocket notebook of PW.1 and PW.2 or take any steps to summon the entry made in GD in either of the police stations–

21. 9 A.Vijaya Kumar Vs.The State Represented by on 13 January, 2020 the Hon'ble Madurai Bench of Madras High Court has held that, The sole function of the Magistrate in this case was to discover the cause of death. The cause of death was obviously that the death was due to bullet injuries. But then the learned Magistrate has virtually conducted a trial and he has pronounced the petitioner guilty. He had also stated that the investigation must be done by the State CBCID. As rightly pointed out by the learned senior counsel appearing for the petitioner, a learned judge of this court in Crl.O.P(MD)Nos.3027 and 3042 of 2010 vide order dated 04.02.2016 held that if the order of the Magistrate directs investigation by particular agency, that would amount to breach of the dictate of the Hon'ble Supreme Court in Chandrababu @ Moses vs. State Tr. Inspector of police and others (Criminal Appeal No.866 of 2015). In this case, the learned judicial Magistrate, Nanguneri could not have given such a direction. In fact the statement of Thiru.P.Karuppusamy, Deputy Superintendent of Police recorded under Section 161 of Cr.P.c refers to the finding given by the learned Judicial Magistrate, Nanguneri. Therefore there can be no doubt that the report of the learned Judicial Magistrate has case a shadow on the defence of the petitioner herein. I have no hesitation to set aside the report dated:16.08.2012 submitted by the learned Judicial Magistrate, Nanguneri Under Section 176(1)(A) of Cr.P.C. It is accordingly set aside.

21.10 In 2015-1-L.W. (Crl.) 379 Tmt.R.Kasthuri Vs. State by the District Collector, Cuddalore and others, the Hon'ble High Court has held that Inquiry by a judicial Magistrate under Section 176(1A) is not confined only to the cause of death or cause for the disappearance or cause for rape – It has wider scope – Magistrates, Executive Magistrate, Judicial Magistrates/ Metropolitan Magistrates, shall record evidence on oath.

Inquiry by an EM – Inquiry held by a Judicial Magistrate/Metropolitan Magistrate shall not be a bar for the police to investigate – Inquiry held by the JM or Metropolitan Magistrate, cannot be equated to an investigation by the police.

To sum up, the conclusion is as follows: –

1)Any information relating to the death or disappearance of any person or rape of a woman while such person or woman was in the custody of the police or in any other custody authorized by a magistrate or Court, shall be registered as a case under section 154 of the code.

2) Soon after the registration of the case, the Station House Officer shall forward the FIR to the jurisdictional Judicial Magistrate/ Metropolitan Magistrate.

3) The jurisdictional Magistrate shall thereafter hold an inquiry under section 176(1A) of the Code.

4)During such inquiry under Section 176 (1A) of the Code the Judicial Magistrate/Metropolitan Magistrate shall have power to record evidence on oath.

5) On completing the inquiry, the Judicial Magistrate/Metropolitan Magistrate shall draw a report and keep the statements of the witness's documents collected and the report drawn by him as part of case records.

6)The Judicial Magistrate/Metropolitan Magistrate shall furnish copies of the statements of the witnesses recorded during inquiry under section 176(1A) of the code, the documents collected and the report drawn by him to the investigating police officer without delay.

7)The investigating police officer shall, without being hindered by the inquiry by the Judicial Magistrate/Metropolitan Magistrate, conduct investigation under Chapter XII of the Code thoroughly and submit a final report to the jurisdictional Magistrate/ Court under Section 173 of the Code.

8)If the case relates to police encounter, as directed by the Hon'ble Supreme Court in people's Union for Civil Liberties and another V. State of Maharastra and others, 2014 (11) Scale 119, the investigation shall be entrusted to either CBCID or a police team of another police station under the supervision of a senior police officer (at least a level above the head of the police party engaged in the encounter)

9) The Judicial Magistrate/Metropolitan Magistrate shall not forward the original records of the inquiry under Section 176(1A) of the code either to the district collector or to the Government.

21. 11. In (2006) 1 Supreme Court Cases (Cri) 678 Ramesh Kumari Vs. State (NCT of Delhi) and others, The Hon'ble Supreme Court has held that, It is therefore manifestly clear that if any information disclosing a cognizable offence is laid before an officer in charge of a police station satisfying the requirements of Section 154 (1) of the Code, the said police officer has no other option except to enter the substance thereof in the prescribed form, that is to say, to register a case on the basis of such information.

21.12. In CDJ 2025 SC 1186 Anurag Bhatnagar & another Vs. State (Nct of Delhi) & Another, The Hon'ble Supreme Court has held that, It has been well settled that successive FIRs in respect of a same cognizable offence are not maintainable provided that on the basis of the earlier FIR, investigation have been completed and the trial had either resulted in conviction or acquittal of the accused. இந்த வழக்கில் குற்ற எண் 312/20 வழக்கு சம்பந்தமாக வேறு எந்த நீதிமன்றத்திலும் விசாரணை நடத்தப்படவில்லை எதிரிகள் விடுவிக்கப்பட்டிருக்கும் இல்லை

21. 13. K.Ammaiappan Vs. P.Suresh on 23 August 2023, The Hon'ble Madurai Bench of Madras High Court has held that, as per section 195 Cr.P.C in order to take cognizance for the offence under Sections 193 to 196, 199, 200, 205 to 211 and 228 IPC, the complaint has to be given in writing by the court or some other court. Which is subordinate. But in this case, procedures

under Sections 195 and 340 Cr.P.c were not followed to take cognizance for the offence under Sections 193, 196, 200, 206, 207, 209.

21.14. In (2025) 2 Supreme Court Cases (Cri) 692 and (2025) 5 Supreme Court Cases 433 Constable 907 Surendra Singh and another Vs.State of Uttarakhand, the Hon'ble Supreme Court has held that, For convicting the accused with the aid of S.34, the prosecution, held, must establish prior meeting of minds – Prosecution, held must establish that all the accused had pre–planned and shared a common intention to commit the crime with the accused who actually committed the crime – Prosecution, held, also required to establish that the criminal act was done in furtherance of the common intention of all the accused

22. 4ம் எதிரி தரப்பில் முன்னிடப்பட்டுள்ள முன் தீர்ப்புகள்

22. 1. In Vinod Jaswantray Vyas (Dead) through Lrs. –vs– The State of Gujarat 2024 (SC) 554, The Hon'ble Supreme Court of India has held that

(A) Conviction based on custodial violence leading to death of Jeeva – Court found insufficient evidence to support conviction, highlighting contradictions in witness testimonies and medical evidence. (Paras 1, 3, 50, 52)

(B) Eye witness Testimony – The credibility of eye witnesses is crucial; their conduct and the timing of complaints can affect reliability – The court emphasized that unnatural conduct and unexplained circumstances can lead to discrediting witness testimony. (Paras 26, 30, 32)

22. 2. In Murthi –vs– State Rep by Inspector of Police, 2025(2) MWN (Cr.) 216,

The Hon'ble Madras High Court has held that maintainability of proceeding at instance of police – police not competent person to register FIR for offence Under section 188 – As per section 195(1)(a), for taking cognizance of offence Under section 188, Public Servant should lodge a complaint in writing – FIR/Final Report for offence under section 188 liable to be quashed.

22. 3. In Balasubramanian and others – vs– State rep by Inspector of Police, 2023(2) MWN (Cr.) 401,

The Hon'ble High Court has held that as per section 195, no court shall take cognizance of any offence under sections 172 to 188 except on complaint in writing by Public Servant concerned – For causing inconvenience to public instead of proceeding under Madras City Police Act, charging petitioners for offence under sections 143, 341 & 188, held, not permissible – FIR liable to be quashed.

22.4. In Chandra Mohan –vs– The State Rep by Inspector of Police, 2023 (SC) (Online) (MAD) 1356,

The Hon'ble Madras High Court has held that the positive DNA report cannot be therefore accepted by the trial court in isolation, i.e. as sole piece of evidence to record the conviction of accused Under section 376, 366 of Indian Penal code

22.5. In Kattavellai @ Devakar –vs– State of Tamilnadu, 2025 (SC) 1063,

The Hon'ble Supreme Court has held that the conviction was based on circumstantial evidence including last seen theory, confession by accused, and DNA evidence, However, discrepancies regarding witness reliability, investigation procedures, and the handling of evidence were significant. The court stated: 'None of the circumstances posited by the prosecution are found to be conclusively proved against the Appellant – convict' – Appeals allowed. (Paras 45, 46)

23. 5ம் எதிரி தரப்பில் முன்னிடப்பட்டுள்ள முன் தீர்ப்புகள்

23.1 In Ranganathan –vs– the State of Tamilnadu on 24 February, 2022, the Hon'ble Supreme court has held that

Though, according to the medical opinion, it was the first injury which was responsible for the death, the opinion did not indicate, in any way about the resultant effect of that injury or in what manner it had affected the basic functions of Bose Raj.

At the initial stage of investigation nothing had come up on record to entertain any suspicion against the accused. The statements of Pws 2 to 4 were recorded after six months of the incident which were relied upon by the subsequent Investigation Officer to convert the case to one under Section 302 IPC. There was nothing on record to indicate either directly or inferentially that the injury on the person of the deceased – Bose Raj was caused by any of the accused. The circumstances proved on record did not thus conclusively establish the guilt of the accused.

23.2. In Singh @ Bhagavathsingh –vs– Deputy Superintendent of Police 2017(3) MWN (Crl) 207: (2017) 4 MLJ (Crl) 433,

The Hon'ble Madurai Bench of Madras High Court has held that Contradictory witness statements (Pw-1, Pw-2, Pw-3) regarding the place, manner of occurrence, present of accused, and light conditions – Improvement in testimony at different stages – Inability of medical evidence to corroborate injury with alleged weapon (MOI) – contradictory statements to medical officer and in FIR regarding number of assailants – Accused identification issues – Implication of unrelated persons in FIR and subsequent deletion – False implication due to prior alterations cannot be ruled out when considering injured witness testimony. (Paras 6,9,10,11,12,13, 16)

24. 6ம் எதிரி தரப்பில் முன்னிடப்பட்டுள்ள முன் தீர்ப்புகள்

24.1. In Arunachalam –vs– State (2021) 2 MLJ (Crl) 579, the Hon'ble Madras High Court has held that No test identification parade conducted and petitioner identified for the first time by victims/Pw.1 and P.W.2 in court – Other than identification of petitioner for first time in court after three and half years, no other substantive piece of evidence had been let in by prosecution – Evidence regarding arrest, confession and recovery was also highly doubtful– There was confusion with regard to weapon used and by whom it was used – prosecution had not proved case beyond reasonable doubt and lower courts without property appreciating evidence had found petitioner guilty and convicted him – Conviction and sentence made by lower courts set aside – Revision allowed.

24.2 In Ashoksinh Jeyendrasingh – State of Gujarat, (2019) 2 SCC (Crl_) 875, The Hon'ble Supreme Court has held that Author of fatal firearm wounds – Ascertainment of – Identification of accused at night/darkness – No evidence as to any source of light – Medical evidence also not establishing whether fatal wounds caused by double – barreled or single – barreled gun – Hence, appellant alone could not be held responsible for fatal firearm wounds on body of deceased – Conviction reversed

24.3. பொதுவான எதிர்வாதங்கள் குறித்த பரிசீலனை

24.3 1. வழக்கு கோப்பை பரிசீலித்து பார்க்கும்போது காவல் அடைப்புக்கோரிக்கையில் 1 மற்றும் 4 எதிரிகள் சரண்டர் ஆனதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் கைது பற்றிய விவரம் தெரிவிக்கப்படவில்லை என்றும் காரணமின்றி கைது செய்யப்பட்டதாகவும் வாதிட்டுள்ளது ஏற்புடைய வாதமாக இல்லை. மேலும் குப்பையில் இருந்த பொருள்கள் அ.சா.42–ஆல் கைப்பற்றப்பட்டுள்ளது அப்போது நீதித்துறை நடுவரும் இருந்துள்ளார். அதை அ.சா.51 கைப்பற்றியிருக்கவில்லை இந்நிலையில் அது கைப்பற்றபடவே இல்லை என்பது போல் முன்வைத்துள்ள வாதம் ஏற்புடையவாதமாக இல்லை. பிரேத விசாரணை அறிக்கையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு உடலில் காயங்கள் இருப்பது 24.06.2020–ம் தேதியே கண்டறியப்பட்டுள்ளது, அது இயற்கையானதல்ல என்னும் போது யார் மரணத்தை விளைவித்தார் என்பதை கண்டறியவேண்டியது அவசியமானது. எனவே சட்டபிரிவை மாற்றியதில் தவறு இருப்பதாக தோன்றவில்லை. மேலும் Paras Yadav & ors. vs. State of Bihar 1999 (2) SCC 126 என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் the lapse on the part of the Investigating Officer should not be taken in favour of the accused, may be that such lapse is committed designedly or because of negligence. Hence, the prosecution evidence is required to be examined de hors such omissions to find out whether the said evidence is reliable or

not என தீர்ப்பளித்துள்ளது. எனவே சட்டமுறையின்றி கைது செய்யப்பட்டதாக வாதிட்டுள்ளது ஏற்புடையவாதமாக இல்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது,

24.3.2 காவல்நிலைய ஆவணங்கள் அனைத்தும் எதிரிகள் பொறுப்பில் இருந்துள்ள நிலையில் மேற்படி ஆவணங்களில் எதிரிகள் காவல்நிலையத்தில் இருந்ததாக பொது நாட்குறிப்பில் குறிப்பிடவில்லை என்ற வாதம் ஏற்புடைய வாதமாக இல்லை. குறிப்பாக காவலர்கள் வெளியில் செல்லும்போது எங்கு செல்கிறோம் என்று பொதுநாட்குறிப்பில் குறிப்பிடவேண்டியது அவசியமாகும். இந்நிலையில் பொதுநாட்குறிப்பில் எப்போது எதற்காக 1–ம் எதிரி வெளியே சென்றார் என குறிப்பு எதுவும் காணப்படவில்லை. இந்நிலையில் பொதுநாட்குறிப்பு முதலிய ஆவணங்களில் உள்ள சங்கதிகளை தனக்கு சாதகமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று எதிரிகள் தரப்பில் வாதிட்டுள்ளது ஏற்புடைய வாதமாக இல்லை,

24.3.3 எதாவது கேஸ் போட்டு உள்ளே அடைக்கனும் என்று ஸ்ரீதர் பாலகிருஷ்ணனிடம் சொன்னதாக ரேவதி தனது விசாரணையில் குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்று அ.சா.50 சாட்சியமளித்துள்ளதாக, 1–ம் எதிரி வாதிட்டுள்ளார், ஆனால் இவன்களை வெளியே அப்படியே விட கூடாது யாதாவது ஒரு கேஸ் போட்டு உள்ளே அடைக்கனும் என்று இன்ஸ்பெக்டர் எஸ்.ஐ பாலகிருஷ்ணன், SSI ரவிச்சந்திரன் என்பவர்களிடம் சொன்னார் என அ.சா.47 குவிமுச பிரிவு 164–ன் கீழான வாக்கு்முலத்தில் குறிப்பிட்டுள்ளார். அதில் பெருத்த முரண்பாடு இல்லை. In Birbal Nath vs State of Rajasthan 2023 INSC 957 wherein it was held that No doubt statement given before police during investigation under section 161 are "previous statements" under section 145 of the Evidence Act and therefore can be used to cross examine a witness. But this only for a limited purpose, to "contradict" such a witness. Even if the defense is successful in contradicting a witness, it would not always mean that the contradiction in her two statements would result in totally discrediting this witness என மாண்புமிகு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

24.3.4. சாட்சியங்களை பரிசீலித்து பார்க்கும்போது ஆட்டோடிரைவர்களுடன் பென்னிக்ஸ் கடைக்கு எதிரில் ஆட்டோ ஸ்டாண்டில் அ.சா.10 இருந்துள்ளார் பின் உடை மாற்ற அவரது வீட்டிற்கு சென்றுள்ளார். இந்நிலையில் பென்னிக்சை அடிப்பதாக தகவல் கிடைக்கப்பெற்று அவர் சாத்தான்குளம் காவல் நிலையம் சென்றுள்ளார் என்பதும் தெரிய வருகிறது. எனவே அவரது சாட்சியத்தில் பெருத்த முரண்பாடு இருப்பதாக தோன்றவில்லை. மேலும் In Mahendran Vs. State of Tamil Nadu, AIR 2019 SC 1719 It has been held that , even if a major portion of the evidence is found to be deficient, in case residue is sufficient to prove guilt of an accused conviction can be maintained. It is the duty of the court to separate the grain from the chaff. Where chaff can be separated from the grain, it would be open to the court to convict an accused notwithstanding the fact that evidence has been found to be deficient to prove guilt of other accused persons. Falsity of a particular material witness or material particular would not ruin it from the beginning to end. The maxim "falsus in uno, falsus in omnibus" has no application in India and the witnesses cannot be branded as liar எனவே ஒரு சாட்சியின் சாட்சியத்தில் உள்ள நம்பதகுந்த பகுதிகளை புறந்தள்ளமுடியாது.

24.3. 5. அ.சா.26 தன்னிடம் அளித்த வாக்குமூலத்தில் 2–வது பாராவில் கீழிருந்து 3–வது வரியில் நேரத்தை குறிப்பிட்டு எதிரி ஸ்ரீதர் வண்டியை எடுக்க சொன்ன விபரத்தை கூறி வாக்குமூலம் அளித்துள்ளார் என அ.சா.50 சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் ஸ்ரீதர் வண்டியை எடுக்கச்சொன்ன விவரத்தை அ.சா.26 அ.சா.50 அவர்களிடம் கூறியிருக்கவில்லை என 1–ம் எதிரி தரப்பில் வாதிட்டுள்ளது ஏற்புடைய வாதமாக இல்லை.

24.3.6 பிரேத விசாரணை மற்றும் நீதி விசாரணை அறிக்கை என்பது இறப்பிற்கான காரணத்தை கண்டறிவதற்கான விசாரணை ஆகும். அந்த விசாரணைகளில் எதிரிகள் பற்றி குறிப்பிடவில்லை என்றும் அதனால் பின்னிட்டு கொடுக்கப்பட்டுள்ள வாக்குமூலங்கள் தங்களை கட்டுப்படுத்தாது என்று எதிரிகள் கூறமுடியாது. குறிப்பாக

இந்ததகைய வழக்குகளில் எந்த காவல்துறையினரும் மற்ற காவல்துறையினருக்கு எதிராக சாட்சியம் அளிக்க முன்வருவதில்லை. இந்நிலையில் இத்தகயை வழக்குகளில் முதன் முதலாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தாலும் அதை எளிதில் புறந்தள்ளிவிட முடியாது.

24.3.7 விசாரணை கைதிகள் மருத்துவமனையில் இறந்துள்ள காரணத்தால் உரிய காரணத்தை கண்டறியும் பொருட்டு குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 176–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது விசாரணைக்கு பிறகுதான் குற்றவாளி யார் என்பது அறுதியிட்டு தெரியவரும் என்பதால் முதல் தகவல் அறிக்கையிலோ, பிரேத விசாரணை அறிக்கையிலோ, எதிரிகளின் பெயர் குறிப்பிடவில்லை என்றும், எனவே இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றும் எதிரிகள் தரப்பில் முன்வைத்துள்ள வாதம் ஏற்புடைய வாதமாக இல்லை.

24.3.8 புகாரிலேயே காயம் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் பிணை மனுவில் காயம் இருப்பதாக குறிப்பிடவில்லை என்பது ஏற்புடைய வாதமாக இல்லை 5–ம் எதிரி எத்தனை மணிக்கு சாத்தான்குளம் காவல்நிலையம் வந்தார் என்றால் தனக்கு ஞாபகமில்லை என அ.சா.47 சாட்சியமளித்துள்ளார் என்றும், 5–ம் எதிரி இரவு காவல்நிலையத்திற்கு வரவில்லை என தெரிவித்துள்ளார். ஆனால் அவர் வேறு எங்கும் இருந்ததாக அவரது தரப்பில் அயலிட சாட்சியம் (Alibi) எதுவும் முன்னிடவில்லை.

24.3.9 மருத்துவமனை சம்மந்தமான சிசிடிவி காட்சி பதிவு காட்சிகளுக்கு பிஜூவிடமிருந்து இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65பி–ன் கீழான சான்றிதழ் பெறப்படவில்லை என எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. மருத்துவமனை சம்மந்தமான சிசிடிவி காட்சி பதிவு காட்சிகளுக்கு மருத்துவரிடமிருந்து இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65–பி சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. எனவே அ.சா.16 சான்றிதழ் வழங்கவில்லை என்ற வாதம் ஏற்புடைய வாதமாக இல்லை.

24.3.10 செல்போன் கடையில் ஏற்பட்ட பிரச்சனையால் போலீசார் பென்னிக்சையும் அவரது அப்பாவையும் காவல் நிலையத்தில் வைத்து அடித்ததாக சுனில் என்பவரிடம் பென்னிக்ஸ் கூறியதாக தமிழ்செல்வம் நீதித்துறை நடுவரது விசாரணையில் குறிப்பிட்டுள்ளார் என்றும், 1–ம் எதிரி தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. அதன்படி பார்த்தாலும் காவல் நிலையத்தில் வைத்து அடித்ததாக தான் கூறப்பட்டுள்ளது எனவே யார் அடித்தார்கள் என்பதே தீர்மானிக்க வேண்டிய விசயமாகும்.

24.3.11 அரசு உத்தரவு படி அரசு வழக்கை விசாரித்துள்ளது. அரசு அதிகாரிகளுக்கும் எதிரிகளுக்கும் விரோதம் இருப்பதாக நிரூபிக்கப்படவில்லை. மொத்தம் 6 மருத்துவர்கள் இறப்பிற்கான காரணம் குறித்து அறிக்கை வழங்கியுள்ளனர். இந்நிலையில் அரசு தரப்பிற்கு சாதகமாக அந்த கருத்து வழங்கப்பட்டதாக வாதிட்டுள்ளது ஏற்புடைய வாதமாக இல்லை.

தீர்வு காண வேண்டிய வினாக்களுக்கான தீர்வு:–

25. ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் மீது சாத்தான்குளம் காவல்நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள குற்ற எண் 312/2020 தொடர்பான புகார் அ.சா.ஆ22 ஐ பரிசீலித்துப் பார்க்கும் போது எதிரிகள் A4.முருகன் மற்றும் A6.முத்துராஜா இருவரும் 19.06.2020ம் தேதி இரவு 9.15 மணியளவில் சாத்தான்குளம் காமராஜர் சிலை அருகே உள்ள APJ மொபைல் கடை அருகே கொரோனா தொற்று சம்மந்தமாக ரோந்து சென்ற போது கடை நடத்த அரசு விதித்திருந்த உத்தரவை மீறி ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் கடையை திறந்து வைத்திருந்ததாகவும் கடைமுன் ஜெயராஜூம் பென்னிக்சும் மற்றும் சிலரும் நின்றுகொண்டிருந்ததாகவும் கூட்டம் போட வேண்டாம் வீட்டிற்கு செல்லுங்கள் என எதிரிகள் A4 முருகன் மற்றும் A6. முத்துராஜா சொன்னதற்கு மற்றவர்கள் கலைந்து சென்றுவிட்டதாகவும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் மட்டும் தரையில் அமர்ந்துகொண்டு அசிங்கமாக பேசி எதிரிகள் A4.முருகன் மற்றும் A6. முத்துராஜா வை பணி செய்யவிடாமல் தடுத்து கொலை மிரட்டல் விடுத்தனர் என்றும் தரையில்

உருண்டு பிரண்டதில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ்க்கு ஊமை காயம் ஏற்பட்டது என்றும் எனவே அவர்களை அழைத்து வந்து புகார் கொடுப்பதாகவும் குறிப்பிட்டு அந்த புகார் கொடுக்கப்பட்டுள்ளது தெரியவருகின்றது, மேலும் அந்த புகாரை பரிசீலித்து பார்க்கும் போது 4-ம் எதிரி முருகன் புகார்தாரர் என்ற முறையிலும் 6-ம் எதிரி முத்துராஜா அறிவேன் சாட்சி என்ற முறையிலும் அதில் கையெழுத்திட்டுள்ளனர் என்பதும் அந்த புகாரை இரவு 10.00 மணிக்கு பெற்றதாக குறிப்பிட்டு அதன் அடிப்படையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு எதிராக சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண் 312/2020-ல் இதச பிரிவுகள் 188, 269, 353, 294(பி), 506(ii)-ன் கீழ் குற்ற வழக்கை பதிவு செய்வதாக குறிப்பிட்டு 3-ம் எதிரி ரகுணேஷ் அதில் கையெழுத்திட்டுள்ளார் என்பதும் தெரியவருகிறது.

26. ஜெயராஜ்-ன் கைது குறிப்பாணை அ.சா.ஆ27ஆகவும் பென்னிக்ஸ்-ன் கைது குறிப்பாணைஅ.சா.ஆ28 ஆகவும் குறியீடுசெய்யப்பட்டுள்ளது. அவற்றை பரிசீலித்து பார்க்கும் போது ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண் 312/2020 வழக்கு சம்மந்தமாக 19.06.2020ம் தேதி இரவு 23:30 மணிக்கு கைது செய்யப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.ஆ.24-ஐ பரிசிலித்து பார்க்கும் போது சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 வழக்கு சம்மந்தமாக ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை காவல் அடைப்பு செய்யக்கோரி A3 ரகுகணேஷ் சாத்தான்குளம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வேண்டுகோள் அறிக்கை கொடுத்துள்ளார் என்பது தெரியவருகிறது. அது நகல் என்பதால் நீதிபதியின் கையெழுத்து அடங்கிய மேற்குறிப்பை பரிசீலிக்க சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண் 312/2020 வழக்கு சம்மந்தமான கோப்பின் சான்றிட்ட நகல் சாத்தான்குளம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலிருந்து வரவழைக்கப்பட்டு நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் உள்ள காவல் அடைப்பு கோரிக்கையை பரிசீலித்துப்பார்க்கும்போது சாத்தான்குளம் நீதித்துறை நடுவர் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 வழக்கு தொடர்பாக

03.07.2020 ம் தேதி வரை காவல் அடைப்பு செய்ய உத்தரவிட்டுள்ளார் என்பது தெரியவருகிறது.

27. கோவில்பட்டி கிளைச்சிறைசாலையின் கண்காணிப்பாளர் திரு சங்கர் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் மேற்படி கிளைச்சிறைசாலையில் பணியில் இருந்தபோது 20.06.2020 அன்று பிற்பகல் 2.30 மணியளவில் சாத்தான்குளம் காவல்நிலையக் குற்ற எண்.312/2020 வழக்கு சம்பந்தப்பட்ட இருவரை காவல் அடைப்பிற்காக சாத்தான்குளம் காவல்நிலையக் காவலர்களான A6 எம்.முத்துராஜா, மற்றும் A7 செல்லத்துரை மேற்படி கிளைச்சிறைச்சாலைக்கு கொண்டு வந்ததாகவும் அப்போது மேற்படி கிளைச்சிறையில் முதல்நிலை காவலர், திரு. அழகர்சாமியும் தலைமைக் காவலர் திரு. மாரிமுத்து ஆகிய இருவரும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ்–ன் ரிமாண்ட் வாரண்ட், மருத்துவ ஆவணங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்து தன்னிடம் கொண்டுவந்ததாகவும், மருத்துவ ஆவணங்களில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோருக்கு உடலில் காயங்கள் இருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது என்றும், அதுகுறித்து மேற்படி மாரிமுத்து கைதிகள் அனுமதி பதிவேட்டில் பதிவுசெய்த பிறகு அவர்களை சிறைவாசியாக எடுக்க தான் ஆணையிட்டதாகவும் தன்னிடம் அழைத்து வந்தபோது ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் நொண்டி நொண்டி நடந்து வந்தார்கள் என்றும், என்ன வழக்கு என்று விசாரித்ததாகவும் ஊரடங்கு சமயத்தில் மாவட்ட நிர்வாகம் பிறப்பித்திருந்த உத்தரவை மீறி கடையை திறந்து வைத்திருந்ததால் போலீசாருடன் தகராறு என்று சொன்னதாகவும் இருவருக்கும் பிட்டத்திலும். இரண்டு கை மணிக்கட்டிலும். கால் பாதங்களிலும் வீக்கங்கள் இருந்தன என்றும், இருவரும் சிறைக்கு வரும்போது லுங்கியும், சட்டையும் அணிந்திருந்தார்கள் என்றும், இருவருக்கும் லுங்கியின் பின்புறத்தில் இரத்தக்கறை இருந்தது என்றும் காயங்கள் எப்படி வந்தது என்று தான் கேட்டதாகவும், சாத்தான் குளம் காவல் நிலையத்தில் காவலர்களால் தாக்கப்பட்டதாகச் சொன்னார்கள் என்றும், காயம் ஏற்பட்டிருந்ததால் உடனடி மருத்துவ சிகிச்சை தேவைப்படும் என்ற எண்ணத்தில் தன் அலுவலகத்திற்கு அருகில் சுமார் 15 அடி தூரத்திலிருந்த சிறை அறை எண்.3 ல் அவர்களை

வைத்திருக்கும்படி சொன்னதாகவும், அப்போது அந்த அறையில் வேறு ஒரு காயம் அடைந்த சிறைவாசி தமிழ்ச்செல்வன் என்பவரும் இருந்தார் என்றும், மேற்படி கிளைச்சிறையில் பராமரிக்கப்படும் கைதிகள் அனுமதிப்பதிவேடு அ.சா.ஆ.1 என்றும், அதில் சாத்தான்குளம் காவல்நிலைய போலீசார் செல்லதுரை மற்றும் முத்துராஜ் ஆகியோரின் கையொப்பம் உள்ளது என்றும், அதில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோருக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றிய விபரங்கள் உள்ளது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

28. கோவில்பட்டி கிளை சிறைச்சாலையின் கைதிகள் அனுமதி பதிவேடு அ.சா.ஆ.1–ஐ பரிசீலித்து பார்க்கும்போது அதில் கைதி எண்.3635 பென்னிக்சுக்கு 2 புட்டத்திலும் இரத்தம் கசிந்த நிலையில் காயம் இருந்ததாகவும் 2 கை மணிக்கட்டிலும் கால் பாதத்திலும் வீக்க காயம் இருந்ததாகவும் கைதி எண்.3636 ஜெயராஜூக்கு 2 புட்டத்திலும் இரத்தம் கசிந்த நிலையில் காயம் இருந்ததாகவும் உயர் இரத்த அழுத்தம் மற்றும் நிரிழிவு நோய் இருந்ததாக ஜெயராஜ் தெரிவித்ததாகவும் அதில் பதிவு செய்யப்பட்டுள்ளது ,

29. தாங்கள் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ்சை கோவில்பட்டி கிளை சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றபோது அ.சா.2 அங்கு இல்லை என A6 மற்றும் A7 எதிரிகள் தரப்பில் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது

30. ஆனால் இதுகுறித்து கோவில்பட்டி கிளைசிறைசாலையின் முதல் நிலைகாவலர் மாரிமுத்து அ.சா.24 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் நடக்க முடியாதநிலையில் வந்தார்கள் என்றும் வந்த காவலர்களிடம் ஆவணங்களை வாங்கி அழகர்சாமியிடம் கொடுத்ததாகவும் அவர் அதைப் பார்த்து விசாரித்ததாகவும் பின்பு Admission Register ல் தன்னை எழுதச் சொன்னார் என்றும் அவர் சொன்னதை தான் அப்படியே எழுதியதாகவும் இரண்டு சிறைவாசிகளுக்கும் அடிப்பட்டிருந்தது என்றும் அனுமதியின் போது அவர்களுடைய இரண்டு கால்முட்டி மற்றும் கைமுட்டில் வீக்க காயங்கள் இருந்தது என்றும் அவர்கள் உடுத்தியிருந்த உடைகளில் இரத்தம்

கசிந்திருந்தது என்றும் என்ன காயம் என்று அழகர்சாமி கேட்டதற்கு, அவர்களை சாத்தான்குளம் காவல்நிலையத்தில் காவலர்கள் தாக்கியதாக சொன்னார்கள் என்றும் துணியை விலக்கி அவர்களுடைய பின்பகுதி புட்டப்பகுதியை பார்த்த போது இரத்தம் கசிந்த நிலையில் இரண்டு பக்கமும் புட்டம் முழுவதும் காயங்கள் இருந்தது என்றும் அழகர்சாமி சொன்னதை தான் பதிவேட்டில் எழுதிவிட்டு, அதன்பின்னர் கிளைச்சிறை கண்காணிப்பாளர் சங்கரிடம் தானும், அழகர்சாமியும் அவர்களை அழைத்துச் சென்றதாகவும் கண்காணிப்பாளர் என்னப்பா, இப்படி அடிபட்டுள்ளது என்று கேட்டார் என்றும் அவர்கள் காவல் நிலையத்தில் தாக்கப்பட்டதாக சொன்னார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்,

31. மேற்படி சாட்சியங்களின் அடிப்படையில் பார்க்கும்போது 20.06.2020–ஆம் தேதி மதியம் சுமார் 2:30 மணியளவில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ், சாத்தான்குளம் காவல் நிலைய குற்ற எண் 312/2020 வழக்கு சம்மந்தமாக எதிரிகள் A6 எம்.முத்துராஜா, மற்றும் A7 செல்லத்துரை ஆகியோரால் கோவில்பட்டி கிளை சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்பதும் அப்போது அ.சா.2ம் அங்கு இருந்துள்ளார் என்பதும் அப்போதே ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு பிட்டத்திலும் உடலிலும் காயங்கள் இருந்துள்ளது என்பதும் அவர்கள் நொண்டி நொண்டி நடந்து சென்றுள்ளனர் என்பதும் அவர்களது இரண்டு கால்முட்டி மற்றும் கைமுட்டி வீங்கி காயங்கள் இருந்துள்ளது என்பதும் அவர்கள் உடுத்தியிருந்த உடைகளில் இரத்தம் கசிந்திருந்தது என்பதும் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் தாக்கப்பட்டதாக ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அசா.2 மற்றும் 24 இடம் தெரிவித்திருந்துள்ளனர் என்பதும் தெரியவருகிறது.

32. 22.06.2020 அன்று காலை 8.00 மணியளவில் தலைமைக் காவலர் திரு. செல்வராஜ் பென்னிக்ஸ் என்பவருக்கு வலி இருப்பதாக தன்னிடம் அவரை அழைத்து வந்ததாகவும் அவர் தனக்கு வலி இருப்பதாக சொன்னார் என்றும் அப்போது பென்னிக்ஸ்–ன் பிட்டத்தில் தோல் உரிந்து நச்சு தண்ணீர் கசிந்து கொண்டிருந்தது

என்றும் தான் உடனே கோவில்பட்டி அரசு மருத்துவமனை மருத்துவர் ஸ்ரீ வெங்கடேஷ் என்பவரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வரச்சொன்னதாகவும் அவர் வந்து ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோருக்கு காயங்களை சுத்தம் செய்து சிகிச்சை அளித்ததாகவும் அசா 2 சாட்சியமளித்துள்ளார்.

33. இதுகுறித்து கோவில்பட்டி அரசு மருத்துவமனை மருத்துவர் வெங்கடேஷ் அ.சா.18 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் கோவில்பட்டி கிளைச்சிறையின் கண்காணிப்பாளர் திரு.சங்கர் அழைத்ததன் பேரில் 22.06.2020-ம் தேதி காலை 11.00 மணிக்கு கோவில்பட்டி கிளைசிறைச்சாலைக்கு சென்றதாகவும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ்க்கு சிகிச்சைக்கு வந்ததாகவும் இருவரின் இரண்டு புட்டங்கள் முழுவதும் வரிவரியாக அடித்த காயங்களாக இருந்தது என்றும் மேற்படி காயங்கள் சிகப்பு ஊதா கலரில் இருந்தது என்றும் ஜெயராஜின் ஆடையில் பின்பகுதியில் இரத்தக்கசிவு இருப்பதை பார்த்ததாகவும் இது என்ன காயம் என்று கேட்டதாகவும் அவர் போலீசார் தன்னை தாக்கியதாக கூறினார் என்றும் பென்னிக்சிற்கு இடதுகாலின் மூட்டில் காயம் இருந்ததாகவும் பின்புட்டத்தில் பல காயங்கள் இருந்ததாகவும்,வலது முழங்காலில் வீக்கம் இருந்ததாகவும் தான் இருவருக்கும் மருந்து போட்டுவிட்டதாகவும் மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை எடுத்துக்கொள்ளுமாறு சொன்னதாகவும் சாட்சியமளித்துள்ளார். வேறு காயங்கள் இருப்பதாக அவர்கள் தன்னிடம் காட்டவில்லை என்றும் அதை தான் பரிசோதனை செய்யவில்லை என்றும் குறுக்கு விசாரணையில் சாட்சியமளித்துள்ளார்

34. சிறை சாலைக்கு உள்ளேயும் வெளியேயும் செல்பவர்கள் குறித்த பதிவேடு In- out Book அ.சா.ஆ.4- ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் மருத்துவர் வெங்கடேஷ் 11.00 மணிக்கு உள்ளே சென்றதாகவும் அதற்கு கீழே 11.32க்கு வெளியேறியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கும் கீழே கையெழுத்திட்டுள்ளவர் 11. 20 க்கு வந்ததாக கையெழுத்திட்டுள்ளார் என்றும் எனவே அந்த ஆவணம் நம்பதகுந்தல்ல என்றும் எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது.

35. சோதனை செய்தது சம்பந்தமாக காயங்கள் குறித்து பதிவு செய்துள்ளதாகவும் மேற்படி விபரங்களை முழுமையான வரிகளாக எழுதாமல் hints போன்று எழுதியுள்ளதாகவும் அசா 18 சாட்சியமளித்துள்ளார், இந்நிலையில் கோவில்பட்டி கிளை சிறைச்சாலையில் பராமரிக்கப்படும் மருத்துவ பதிவேடு அ.சா.ஆ.2 –ல் உள்ள அ.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள பக்கம் 81–ஐ பரிசீலித்து பார்க்கும்போது 22–6–2020ம் தேதி மருத்துவர் கிளை சிறைசாலைக்கு வந்துள்ளார் என்பதும், பென்னிக்சிற்கு புட்ட பகுதியில் பல காயங்கள் இருந்ததாகவும் வலது காலில் வீக்கம் இருந்ததாகவும் ஜெயராஜிற்கு புட்ட பகுதியில் பல காயங்கள் இருந்ததாகவும் குறிப்பு எழுதியுள்ளார் என்பதும் தெரியவருகின்றது. அ.சா.24 11.00 மணியளவில் மருத்துவர் வெங்கடேஷ் கிளைச்சிறைக்கு வந்து மேற்படி இரண்டு சிறைவாசிகளையும் பார்த்து மருந்து எழுதிக்கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இது மருத்துவர் அசா 18 கோவில்பட்டி கிளை சிறைச்சாலைக்கு 22–6–2020 அன்று காலை 11 மணிக்கு வந்து ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு சிகிச்சை அளித்துள்ளார் என்பதை உறுதிபடுத்துவதாக உள்ளது ,

36. 22–6–20 அன்று இரவு 7:30 மணியளவில் அழகர்சாமி தன்னை கைப்பேசியில் தொடர்பு கொண்டு பென்னிக்ஸ் என்பவர் மூச்சு விட சிரமப்படுவதாக சொன்னார் என்றும் மாரிமுத்து, வேல்முருகன் ஆகியோருடன் ஒரு ஆட்டோ மூலமாக கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக பென்னிக்சை அனுப்பி வைத்ததாகவும் ECG பிரச்சினை இருப்பதால் மேற்படி பென்னிக்சை தூத்துக்குடி அரசு கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து செல்லும்படி மருத்துவர் பரிந்துரைத்ததாக அவர் தன்னிடம் சொன்னார் என்றும் மருத்துவரை விசாரித்து தன்னுடைய கட்டுப்பாடு அதிகாரியான பாளையங்கோட்டை மத்திய சிறை கண்காணிப்பாளரிடம் அனுமதி கேட்டதாகவும் உடனே அழைத்து செல்ல அனுமதி வழங்கப்பட்டதாகவும் 108 ஆம்புலன்சிற்காக காத்துக் கொண்டிருந்தபோது இரவு 9 மணியளவில் பென்னிக்ஸ் இறந்துவிட்டதாக மாரிமுத்து தகவல் சொன்னதாகவும் பென்னிக்ஸ் –ன் இறப்பு

குறித்து தகவல் சொல்ல ஜெயராஜை அழைத்து வரச்சொன்னதாகவும் அப்போது ஜெயராஜ்க்கு கடுமையான காய்ச்சல் இருந்தது என்றும் எனவே அவரை உடனடியாக மருத்துவமனக்கு அனுப்பி வைத்ததாகவும் அங்கு ஜெயராஜ் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற நிலையில் 23.06.2020 அன்று காலை 5:40 மணியளவில் இறந்துவிட்டதாகவும் பென்னிக்சின் இறப்பு குறித்து தான் கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் எழுத்துமூலமான புகார் கொடுத்ததாகவும் அந்த புகார் அ.சா.ஆ.5 என்றும் அதனடிப்படையில் போலீசார் குற்ற எண்.649/2020 வழக்கை குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 176(1)(A)(i)–ன் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும் ஜெயராஜின் இறப்பு குறித்து தான் கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் அந்த புகார் அ.சாஆ.6 என்றும் அதனடிப்படையில் போலீசார் குற்ற எண்.650/2020 வழக்கை குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 176(1)(A)(i)ன்கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

37. கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்துள்ள முருகன் அ.சா.29 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் பணிபுரிந்தபோது 22.06.2020 அன்று இரவு சுமார் 10.30 மணியளவில் நிலைய பொறுப்பில் தான் இருந்தபோது கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலை கண்காணிப்பாளர் திரு.சங்கர் என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று, புகாரின் தன்மைக்கேற்ப கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய கு.எ.ண்.649/2020 ல் குற்றவியல் விசாரணை நடைமுறைச்சட்டம் பிரிவு 176 (1)(A)(i) ன் கீழ் வழக்கினை பதிவு செய்ததாகவும் அதனடிப்படையில் தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.50 என்றும் தான் பெற்ற புகார் அ.சா.ஆ.5 என்றும் மறுநாள் 23.06.2020 அன்று காலை 06.45 மணியளவில் தான் நிலைய பொறுப்பில் இருந்தபோது கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலை கண்காணிப்பாளர் திரு.சங்கர் அவர்கள் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று மேற்படி புகாரின் தன்மைக்கேற்ப நிலைய கு.எண்.650/2020 ல் குற்றவியல் விசாரணை நடைமுறைச்சட்டம் பிரிவு 176 (1)(A)(i) சிஆர்பிசி –ன் படி வழக்கு பதிவு

செய்ததாகவும் தான் பெற்ற புகார் அ.சா.ஆ.6 என்றும் அதனடிப்படையில் தான் பதிவுசெய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.51 என்றும், தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை கோவில்பட்டி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், அனுப்பிவைத்ததாகவும் ஒரு நகலை புலன்விசாரணைக்காக ஆய்வாளர் திரு.சுதேசன் அவர்கள் பார்வைக்கு வைத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அதன் அடிப்படையில் பார்க்கும்போது மேற்படி புகார் உரிய நேரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது என்பதும் அது உரிய நேரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகிறது,

38. மேற்படி வழக்கை புலனாய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ள கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய ஆய்வாளராக இருந்த சுதேசன் அசா.31 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில், நீதிமன்ற காவலில் இருந்த போது ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இறந்துள்ளதால், நீதிவிசாரணை நடத்த நீதித்துறை நடுவரை நியமிக்கும்படி தூத்துக்குடி தலைமை குற்றவியல் நடுவருக்கு கடிதம் எழுதியதாகவும் கோவில்பட்டி நீதித்துறை நடுவருக்கு உதவியாக கருப்பசாமி மற்றும் சிவக்குமார் ஆகியோரை நியமித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்,

39. இந்நிலையில் பென்னிக்சின் இறப்புக்கான காரணம் குறித்து 24.06.2020ம் தேதியன்று மதியம் 3.20 மணிக்கு பிரேதவிசாரணையை துவக்கி 4.30 மணிக்கு முடித்தாகவும் ஜெயராஜ்-ன் இறப்புக்கான காரணம் குறித்த பிரேதவிசாரணையை அதே சாட்சிகள் முன்னிலையில் 24.06.2020ம் தேதியன்று மாலை 4.30 மணிக்கு தொடங்கி மாலை 5.15 மணிக்கு முடித்தாகவும் அந்த பிரேதவிசாரணையின் போது அவர்கள் இருவரது உடம்பிலும் தலா 18 காயங்கள் காணப்பட்டது என்றும் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் அ.சா.50 சாட்சியம் அளித்துள்ளார்.

40. ஜெயராஜ் என்பவருடைய பிரேதவிசாரணை அறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட படிவம் 85 மற்றும் 86 அ.சா.ஆ.124 ஆகவும் ஜெயராஜின் பிரேதவிசாரணையில் பங்கேற்க சாட்சிகள் ஒப்புதல் அளித்தது குறித்த ஆவணம் அ.சா.ஆ.125 ஆகவும், பென்னிக்ஸ் என்பவருடைய பிரேதவிசாரணை அறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட படிவம் 85 மற்றும் 86 அ.சா.ஆ.126 ஆகவும் பென்னிக்ஸ் –ன் பிரேதவிசாரணையில் பங்கேற்க சாட்சிகள் ஒப்புதல் அளித்தது குறித்த ஆவணம் அ.சா.ஆ.127 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரேதவிசாரணை அறிக்கையை பரிசீலித்து பார்க்கும்போது பிரேத விசாரணையில் அசா 30 தாவீது கலந்து கொண்டுள்ளார் என்பது தெரியவருகின்றது,

41. மேற்படி பிரேத விசாரணையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு கீழ்கண்ட காயங்கள் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

List of Injuries of Jeyaraj

1. A contusion measuring 7 x 6.5 cm is present in the inner side of the right arm.

2. Multiple line of abrasions like nail scratches are noted in the right elbow, maximum being 11 cm, another one being 7.5 cm, another being 7 cm, near to them few more little abrasions found next to next.

3. A contusion measuring 4 x 3 cm is present inside of the right palm.

4. A contusion measuring 25 x 15 cm is present in the right thigh.

5. Peeling of skin measuring 2.5 x 1 cm is present between the connecting area of right thigh and genital area.

6. A fluid filled sac measuring 6 x 2 cm is found below the left testicle near anal region.

7. An abrasion measuring 1 x 1 cm is present over the right knee joint.

8. A contusion measuring 4 x 3 cm is present in the middle of right sole.

9. An abrasion measuring less than 0.5 cm is present in the left knee joint.

10. An abrasion measuring 4.5 x 1 cm is present in the Left leg just above ankle.

11. A contusion measuring 3 x 2 cm is present inside the left palm.

12. Skin is found peeled around the mole on the middle of left side back.

13. No other external injuries are present close to the anal region.

14. An abrasion measuring 4.5 x 2 cm is present in the middle of the left back side.

15. Peeling of skin measuring 32 x 22 cm is present over the right buttocks.

16. Peeling of skin measuring 9 x 14 cm is present over the left buttocks.

17. An extensive contusion is seen starting from the middle of the back which extends downwards to the back of the middle thigh.

18. An abrasion measuring 5 x 2 cm is present in the middle of the right back side.

List of Injuries of Bennicks

1. A contusion measuring 9 x 9.5 cm near to the right arm pit.

2. An abrasion is present below the right elbow.

3. An abrasion measuring 0.5 cm present over the tip of the index finger just above the nail in right hand.

4. Right hand index finger nail is alone seen bluish in colour.

5. A contusion is present all over the right palm.

6. A diffused contusion is present on the middle sole area of the right foot.

7. An abrasion measuring less than 0.5 cm is present just above the right heal which is slightly healed.

8. A contusion measuring 20 x 7 cm is present over the right thigh inner aspect close to the right side testicle and anus with skin peeled.

9. An abrasion is present on both sides near anus on the right side; it measures 2.5 x 2 cm; In the left side it measures 1.5 x 1.5 cm.

10. A contusion is present over the inner aspect of left leg ankle extending towards the middle aspect of sole.

11. An abrasion which is slightly healed upon a dried skin is seen having size of 3.5 x 1.5 cm present just above the outside ankle of left leg.

12. An abrasion measuring less than 0.5 cm which is slightly healed present on the left side knee.

13. A contusion is seen on the inner surface of the left palm and fingers.

14. An abrasion measuring 1.0 cm is present over the left little finger and an abrasion looks like nail scratches is present over Ring finger.

15. A contusion measuring 8 x 10 cm is present over the inner aspect of left upper arm.

16. An abrasion similar to nail scratches is present near the left inner arm pit measuring 9 cm and another abrasion which also looks like a nail scratches is present next to it.

17. A contusion measuring 34 x 33 cm is present over the right buttocks, within which skin is peeled having size of 24 x 19.5 cm is seen with oozing of wet blood over it. Beside the same, a fluid filled sac of 8 cm is seen in the right side.

18. A contusion measuring 23 x 20 cm is present over left buttocks, within which 20.5 x 13 cm is seen with peeled skin with oozing of wet blood over it in a reddish colour.

மேற்படி பிரேதவிசாரணை அறிக்கைகளில் லத்தியால் தாக்கப்பட்டதாக கூறப்படுகின்றது என்றும், லத்தியால் தாக்கியது – காவல்துறை அதிகாரிகளா –சிறைத்துறை அதிகாரிகளா –என்பதில் சந்தேகம் உள்ளது என்றும் கோவில்பட்டி நீதித்துதுறை நடுவர் அசா 50 குறிப்பிட்டுள்ளார்.

42. இந்நிலையில் Crl.OP(MD) No,6651/2020ல் 23.06.2020ம் தேதி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை இவ்வழக்கின் தீவிர தன்மையை கருத்தில் கொண்டு ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் இறப்பு குறித்து குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 176 (1A) (i)–ன் கீழ் நீதித்துறை விசாரணையை நடத்த நீதி துறை நடுவரை நியமிக்கும்படி தூத்துக்குடி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கும் மேற்படி வழக்கில் இறந்து போன ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் உடலை பிரேத பரிசோதனை நடத்த மூன்று மருத்துவர்கள் அடக்கிய குழு வை நியமிக்கும்படியும் அதனை வீடியோ பதிவு செய்து புகைப்படம் எடுக்கும்படியும் அந்த

அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் படியும் பாளையங்கோட்டை மருத்துவ கல்லூரி மருத்துவமனை டீன் அவர்களுக்கு உத்தரவிட்டுள்ளது தெரியவருகின்றது.

43. அ.சாஆ.83 ஐ பரிசிலித்து பார்த்து பார்க்கும் போது ஜெயராஜின் உடலை பிரேத பரிசோதனை செய்யவும், அ.சா.ஆ.84 ஐ பரிசிலித்து பார்த்து போது பென்னிக்சின் உடலை பிரேத பரிசோதனை செய்யவும் 24-6-2020 ம்தேதி கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்கள் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி தடய அறிவியல் பேராசிரியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளார் என்பது தெரியவருகிறது

44. கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய குற்ற எண் 649-20 வழக்கு சம்பந்தமான கோப்பு அசா ஆ 57ல் பக்கம் 8-ஐ பரிசீலித்து பார்க்கும் போது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை Crl.OP(MD) No,6651/2020ல் 23.06.2020ம் தேதி பிறப்பித்துள்ள உத்தரவின் அடிப்படையில் பென்னிக்சின் இறப்பு சமம்மந்தமாக நீதிவிசாரணை நடத்த 23.06.2020ம் தேதிய A1 113/2020 உத்தரவு மூலமாகவும் கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய குற்ற எண் 650- 20 வழக்கு சம்பந்தமான கோப்பு அசா ஆ 58ல் பக்கம் 8ஐ பரிசீலித்து பார்க்கும் போது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை Crl.OP(MD) No,6651/2020ல் 23.06.2020ம் தேதி பிறப்பித்துள்ள உத்தரவின் அடிப்படையில் ஜெயராஜின் இறப்பு சம்மந்தமாக நீதிவிசாரணை நடத்த 23.06.2020ம் தேதிய A1 114/2020 உத்தரவு மூலமாகவும் தூத்துக்குடி மாவட்ட தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள், கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 திரு.பாரதிதாசன் அவர்களை விசாரணை அதிகாரியாக நியமித்துள்ளார் என்பதும் அதன் அடிப்படையில் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 திரு.பாரதிதாசன் குவிமுச பிரிவு 176 (1A) (i)-ன் கீழ் நீதிவிசாரணை நடத்தி 43 சாட்சிகளை விசாரித்து பென்னிக்ஸின் இறப்பு தொடர்பான அறிக்கையை இணைப்பு ஆவணங்கள் A to J வரை இணைத்து அசா ஆ 128 ஆகவும் ஜெயராஜ் -ன் இறப்பு தொடர்பான அறிக்கையை இணைப்பு ஆவணங்கள் A to J வரை

இணைத்து அசா ஆ 129 ஆகவும் தாக்கல் செய்துள்ளார். அதில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இருவருக்கும் கீழ் கண்ட காயங்கள் இருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

List of Injuries of Jeyaraj

1. A contusion measuring 7 X 6.5 cm is present in the inner side of the right arm.

2. Multiple line of abrasions like nail scratches are noted in the right elbow, maximum being 11 cm, another one being 7.5 cm, another being 7 cm, near to them few more little abrasion found next to next. (Pic. No.2 & 3)

3. A contusion measuring 4 X 3 cm is present inside of the right palm.

4. A contusion measuring 25 X 15 cm is present in the right thigh.

5. Peeling of skin measuring 2.5 X 1 cm is present between the connecting area of right thigh and genital area.

6. A fluid filled sac measuring 6 X 2 cm is found below the left testicle near anal region. (Pic. No.4)

7. An abrasion measuring 1 X 1 cm is present over the right knee joint (Pic. No.5)

8. A contusion measuring 4 X 3 cm is present in the middle of right sole (Pic. No.6)

9. An abrasion measuring less than 0.5 cm is present in the left knee joint.

10. An abrasion measuring 4.5 X 1 cm is present in the Left leg just above ankle. (Pic. No.7)

11. A contusion measuring 3 X 2 cm is present inside the left palm.

12. Skin is found peeled around the mole on the middle of left side back.

13. No other external injuries are present close to the anal region.

14. An abrasion measuring 4.5 X 2 cm is present in the middle of the left back side. (Pic. No.8)

15. Peeling of skin measuring 32 X 22 cm is present over the right buttocks. (Pic. No.9)

16. Peeling of skin measuring 9 X 14 cm is present over the left buttocks. (Pic.No.10)

17. An extensive contusion is seen starting from the middle of the back which extends downwards to the back of the middle thigh. (Pic.No.10)

18. An abrasion measuring 5 X 2 cm is present in the middle of the right back side.

List of Injuries of Bennicks

1. A contusion measuring 34 X 33 cm was present over the right buttocks, within which skin was peeled having size of 24 X 19.5 cm was seen with oozing of wet blood over it in a reddish colour. Beside the same, a fluid filled sac of 8 cm was seen in the right side. (Pic. nos. 1 and 2)

2. A contusion measuring 23 X 20 cm was present over left buttocks, within which 20.5 X 13 cm was seen with peeled skin with oozing of wet blood over it in a reddish colour. (Pic. nos. 3 and 4)

3. A contusion measuring 9 X 9.5 cm near to the right arm pit. (Pic. no. 5 )

4. An abrasion was present on both sides near anus on the right side; it measures 2.5 X 2 cm; In the left side it measures 1.5 X 15. cm. (Pic. nos. 6 and 7)

5. An abrasion measuring 0.5 cm was present over the tip of the index finger just above the nail in right hand. (Pic. no.8)

6. Right hand index finger nail was seen bluish in colour. (Pic. no.8)

7. A contusion was present all over the right palm. (Pic. no.9)

8. A diffused contusion was present on the middle sole area of the right foot.

9. An abrasion measuring less than 0.5 cm was present just above the right heal which was slightly healed.

10. A contusion measuring 20 X 7 cm was present over the right thigh inner aspect close to the right-side testicle and anus with skin peeled.

11. An abrasion was present below the right elbow.

12. A contusion was present over the inner aspect of left leg ankle extending towards the middle aspect of sole. (Pic. no.10)

13. An abrasion which is slightly healed upon a dried skin was seen having size of 3.5 X 1.5 cm present just above the outside ankle of left leg.

14. An abrasion measuring less than 0.5 cm which was slightly healed present on the left side knee.

15. A contusion is seen on the inner surface of the left palm and fingers. (Pic.no.11)

16. An abrasion measuring 1.0 cm was present over the left little finger and an abrasion looks like nail scratches was present over Ring finger. (Pic. no. 12)

17. A contusion measuring 8 X 10 cm was present over the inner aspect of left upper arm. (Pic. no. 13)

18. An abrasion similar to nail scratches was present near the left inner arm pit measuring 9 cm and another abrasion which also looks like a nail scratches was present next to it.

மேலும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இருவரும் அவர்களுக்கு ஏற்பட்ட மழுங்கிய காயங்களாலும் அதனால் ஏற்பட்ட பின்விளைவுகளாலும் இறந்துள்ளதாக கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 திரு.பாரதிதாசன் அவர்கள் அவரது அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அந்த முடிவுக்கு அவர் வந்தற்கான காரணங்களை அவரது அறிக்கை அ.சாஆ.128 மற்றும் 129ல் தெளிவுபட குறிப்பிட்டுள்ளார், மேலும் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 திரு,பாரதிதாசன் அவர்கள் அசா 50 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் அ,சா.ஆ.128 மற்றும் 129 அறிக்கைகள் சம்மந்தமாக விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் பரிசீலிக்கப்பட்ட ஆவணங்கள் குறித்து தெளிவுபட சாட்சியமளித்துள்ளார்.

45. அ.சா.ஆ85-ஐ பரிசீலித்து பார்க்கும்போது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் பிறப்பிக்கப்பட்டுள்ள மேற்படி உத்தரவின் அடிப்படையில் திருநெல்வேலி மருத்துவ கல்லூரி மருத்துவமனை டீன், ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் பிரேத பரிசோதனையை நடத்துவதற்கு டாக்டர். எ.செல்வமுருகன் டாக்டர். பிரசன்னா டாக்டர். சுதன் அடங்கிய மருத்துவர் குழுவை அமைத்து 24-6-2020ம் தேதி உத்தரவிட்டுள்ளார் என்பது தெரியவருகிறது.

46. ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் உடல்களை பிரேத பரிசோதனை செய்தது சம்மந்தமாக, மேற்படி மூவர் மருத்துவர் குழுவில் இடம் பெற்றுள்ள மருத்துவர்

திரு.எ.செல்வமுருகன் என்பவர் அ.சா.43–ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் முதலில் பென்னிக்ஸ் என்பவரின் பிரேதத்தை பரிசோதனை செய்ததாகவும் அந்த பிரேதத்தை காவலர் எண்.1292 திரு.சிவக்குமார் என்பவர் அடையாளம் காட்டினார் என்றும் 24.06.2020 அன்று இரவு 8.40 மணிக்கு பிரேதபரிசோதனை செய்ய தொடங்கியதாகவும் பிரேதபரிசோதனையின் போது கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்கள் உடனிருந்தார்கள் என்றும் பிரேதபரிசோதனை முழுவதையும் தூத்துக்குடி ஆயுதப்படை காவலர் திரு.கோபி புகைப்படமாகவும் வீடியோவாகவும் எடுத்தார் என்றும் பிரேதம் குளிர்பதன அறையில் வைக்கப்பட்டிருந்ததால் ஏற்பட்டிருந்த விறைப்புத்தன்மை உடல் முழுவதும் பரவி காணப்பட்டது என்றும் பிரேதத்தின் கை மற்றும் கால்விரல் நகங்கள் நீலநிறத்தில் காணப்பட்டன என்றும் இறந்த பின் உண்டாகும் திரவம் வாய் மற்றும் மூக்கு வழியே வழிந்து காணப்பட்டது என்றும் அதில் கீழ்கண்ட இறப்பிற்கு முன்பு ஏற்பட்டகாயங்கள் காணப்பட்டதென்றும்

1. 1.5 X 1 செ.மீ அளவுள்ள கருமைநிற சிராய்ப்புக்காயம் வலது முன்கையின் நடுவில் வெளிப்புறமாக காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்த போது அதன் கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

2. 1 X 0.2செ.மீ அளவுள்ள கருமைநிற சிராய்ப்புக்காயம் வலது ஆள்காட்டி விரலின் பின்புறம் காணப்பட்டது.

3.2 X 0.5 செ.மீ அளவுள்ள கருமைநிற சிராய்ப்புக்காயம் இடது முழங்கையின் பின்புறம் காணப்பட்டது.

4. 8 X 5 செ.மீ அளவுள்ள கருமைநிற இரத்தக்கட்டு இடது மேல்கையின் உட்புறம் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்த போது அதன் கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

5. 0.5 X 0.5செ.மீ அளவுள்ள கருமைநிற சிராய்ப்புக்காயம் இடது முழங்காலின் முன்புறம் காணப்பட்டது.

6. 2 X 0.5செ.மீ அளவுள்ள கருமைநிற சிராய்ப்புக்காயம் இடதுகாலின் நடுவில் முன்புறம் காணப்பட்டது.

7. இறப்பதற்கு முன்பு ஏற்பட்ட தோல் உரிதல் சீரற்ற விழிம்புகளுடன் 8 முதல் 30 செ.மீ நீளத்துடனும், 8 முதல் 17 செ.மீ அகலத்துடனும் வலது பிட்டிப்பகுதியில் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்த போது அதன் கீழுள்ள சதைகளில் அதிகப்படியான கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

8. இறப்பதற்கு முன்பு ஏற்பட்ட தோல்உரிதல் சீரற்ற விழிம்புகளுடன் 7 முதல் 17 செ.மீ நீளத்துடனும், 6 முதல் 14 செ.மீ அகலத்துடனும் இடதுபிட்டியில் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்த போது அதன் கீழுள்ள சதைகளில் அதிகப்படியான கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

9. 6 X 6 செ.மீ அளவுள்ள கருமைநிற இரத்தக்கட்டு இடதுபாதத்தில் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்த போது அதன் கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

10. 5 X 4 செ.மீ அளவுள்ள கருமைநிற இரத்தக்கட்டு வலதுமேல்கையின் கீழ்புறம் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்த போது அதன் கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது

11. 19 X 5 செ.மீ அளவுள்ள கருமைநிற இரத்தக்கட்டு வலது முன்கையின் உட்புறம் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்த போது அதன் கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

12. 7 X 6 செ.மீ அளவுள்ள கருமைநிற இரத்தக்கட்டு இடது கையில் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்த போது அதன் கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

13. உயிருடன் இருக்கும் பொழுது ஏற்பட்ட தோல் உரிதல் 7 X 5 செ.மீ அளவில் ஆசனவாயின் பின்புறம் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்த போது அதன் கீழுள்ள சதைகள் நல்லநிலையில் காணப்பட்டன.

மேற்குறிப்பிட்ட காயங்கள் அந்த நபர் இறப்பதற்கு 1 முதல் 3 நாட்களுக்குள் ஏற்பட்டது போல் காணப்பட்டது என்றும் உள்உறுப்புகள் பரிசோதனையில் மார்புக்கூடு மற்றும் வயிற்றுப்பகுதி நல்லநிலையில் காணப்பட்டது என்றும் இரத்தம் கலந்த திரவம் எதுவும் காணப்படவில்லை என்றும் இருதயம் 250 கிராம் எடையுடன் காணப்பட்டது

என்றும் இருதயத்தின் இடது வென்ட்ரிக்கிள் பகுதியில் 3 X 2 செ.மீ அளவிற்கு சிவந்து காணப்பட்டது என்றும் வலது மற்றும் இடது வென்ட்ரிக்கிள்களுக்கு இடைப்பட்ட பகுதியில் சிவந்து காணப்பட்டது என்றும் இருதய இரத்தக்குழாய்கள் நல்லநிலையில் காணப்பட்டன என்றும் மூச்சுக்குழாய் நல்லநிலையில் காணப்பட்டது என்றும் நாவடி எலும்பு நல்லநிலையில் காணப்பட்டது என்றும் இரைப்பை 600 கிராம் எடையுடையதாக இருந்தது என்றும் அதன் உள்ளே 500 கிராம் அளவிற்கு மஞ்சள் நிற சிறிதளவு செரிமானமான சமைத்த அரிசி உணவு காணப்பட்டது என்றும் அதில் குறிப்பிடத்தக்க எந்த வாடையும் இல்லை என்றும் உட்புறசவ்வு கணிந்து காணப்பட்டது என்றும் கணையம் நல்லநிலையில் காணப்பட்டது என்றும் வலது மற்றும் இடது நுரையீரல்கள் 500 கிராம் எடையுடன் காணப்பட்டன என்றும் அவற்றின் குறுக்குவெட்டுத்தோற்றம் கணிந்து காணப்பட்டது என்றும் கல்லீரல் 2.5 கிலோ கிராம் எடையுடையதாக காணப்பட்டது என்றும் அதன் குறுக்குவெட்டுத் தோற்றம் கணிந்து காணப்பட்டது என்றும் மண்ணீரல் 100 கிராம் எடையுடன் காணப்பட்டது என்றும் அதன் குறுக்குவெட்டுத்தோற்றம் கணிந்து காணப்பட்டது என்றும் சிறுநீரகங்கள் வலது மற்றும் இடது 150 கிராம் எடையுடையதாக காணப்பட்டது என்றும் அதன் குறுக்குவெட்டுத் தோற்றம் கணிந்து காணப்பட்டது என்றும் சிறுகுடலில் 50 கிராம் அளவு மஞ்சள்நிற சிறிதளவு செரிமானமான சமைத்த அரிசி உணவு காணப்பட்டது என்றும் அதில் குறிப்பிடத்தக்க எந்த வாடையும் இல்லை என்றும் அதன் உட்புறச்சவ்வு கணிந்து காணப்பட்டது என்றும் பெருங்குடல், ஆசனவாய், மலக்குழாய் ஆகியவை நல்லநிலையில் காணப்பட்டன என்றும் ஆசனவாயை சுற்றியுள்ள பகுதி நல்லநிலையில் காணப்பட்டது என்றும் சிறுநீர்ப்பையில் 20 மி.லி அளவு சிறுநீர் காணப்பட்டது என்றும் மூளை 1.2 கி.கி எடையுடையதாக இருந்தது என்றும் அதன் வெளிப்புற இரத்தக்குழாய்கள் விரிந்து காணப்பட்டன என்றும் ஆணுறுப்பு, விதைப்பை மற்றும் விரைகள் நல்லநிலையில் காணப்பட்டன என்றும் உள்உறுப்புகள் சேகரிக்கப்பட்டு இரசாயனபரிசோதனைக்கு அனுப்பபட்டன என்றும் இருதயம், நுரையீரல், கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகம், மூளை ஆகியவற்றின் துண்டுகள் சேகரிக்கப்பட்டு நுண்ணோக்கி பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன என்றும் வாயின்

உட்புறத்தில் இருந்து தடவல் எடுக்கப்பட்டு கொரோனா பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது என்றும் பிரேதபரிசோதனை இரவு 10.10 மணிக்கு முடிக்கப்பட்டது என்றும் பிரேதபரிசோதனை செய்யப்பட்ட நபர் பிரேதபரிசோதனைக்கு முன்பு 1 ல் இருந்து 2 நாட்களுக்குள் இறந்தததாக காணப்பட்டது என்றும் கொரோனா பரிசோதனை அறிக்கையில் கொரோனா தொற்று இல்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றும் உள்உறுப்பு நுண்ணோக்கி பரிசோதனை அறிக்கையில் மூளையில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் எதுவும் இல்லை என்றும், நுரையீரல் பகுதியில் நீர் கோர்த்து கணிந்து காணப்பட்டது என்றும், கல்லீரல் செல்களில் சிறிதளவு கொழுப்பு சேர்ந்து காணப்பட்டது என்றும், மண்ணீரல் கணிந்து காணப்பட்டது என்றும், சிறுநீரகத்தில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் எதுவும் இல்லை என்றும், இருதயத்தில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் எதுவும் இல்லை என்றும், இருதய இரத்தக்குழாய்களில் கொழுப்பு படிவத்துடன் காணப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது என்றும் உள்உறுப்புகள் இரசாயன பரிசோதனை அறிக்கையில் எந்தவித நச்சுப்பொருட்களும் கண்டறியப்படவில்லை என்று குறிப்பிடப் பட்டிருந்தது. இந்த அறிக்கைகளை பெற்ற பின்பு மருத்துவக்குழுவின் இடம் பெற்றிருந்த மருத்துவர்கள் அனைவரும்கலந்து பேசி இறப்பிற்கான காரணம் குறிப்பிட்ட இறுதியறிக்கையினை வழங்கியதாகவும் அதில் பிரேதபரிசோதனை செய்யப்பட்ட நபர் அவருடைய உடம்பில் ஏற்பட்டிருந்த ஊமைக்காயங்களினால் உண்டான பின்விளைவுகளினால் இறந்திருக்கலாம் என்று கருத்து கூறியிருந்ததாகவும் மேற்படி காயங்கள் கூர்முனையில்லாத ஆயுதங்களால் தாக்கப்படும் போது ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் மேற்படி பென்னிக்ஸ் என்பவரின் பிரேதபரிசோதனையை முடித்த பின்பு 24.06.2020ம் தேதியன்று இரவு 10.15 மணிக்கு ஜெயராஜ், வயது 55 என்பவரின் பிரேதபரிசோதனையை அதே மருத்துவக்குழு மேற்கொண்டது என்றும் அந்த பிரேதத்தை காவலர் எண்.2111 திரு.கருப்பசாமி என்பவர் அடையாளம் காட்டியதாகவும் பிரேதபரிசோதனையின் போது கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்கள் உடனிருந்தார்கள் என்றும் பிரேதபரிசோதனையை மேற்படி திரு.கோபி புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்தாகவும் குளிர்பதன அறையில் வைக்கப்பட்டிருந்ததனால்

உண்டான விரைப்புத்தன்மை உடல் முழுவதும் பரவி காணப்பட்டது என்றும் அதன் கை மற்றும் கால்விரல் நகங்கள் நீலநிறத்தில் காணப்பட்டன என்றும் அதில் கீழ்கண்ட இறப்பிற்கு முன்பு ஏற்பட்டிருந்த காயங்கள் காணப்பட்டது என்றும்

1. 3.5 X 1 செ.மீ அளவுள்ள கருமைநிற சிராய்ப்புக்காயம் முதுகின் இடதுபுறம் கீழ்பகுதியில் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்த போது அதன் கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

2. 4 X 1 செ.மீ அளவுள்ள கருமைநிற சிராய்ப்புக்காயம் முதுகின் வலதுபுறம் கீழ்பகுதியில் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்த போது அதன் கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

3. உயிருடன் இருக்கும் பொழுது உண்டாகும் தோல்உரிதல் சீரற்ற விழிம்புகளுடன் 8 முதல் 15 செ.மீ நீளத்திலும், 5 முதல் 8 செ.மீ அகலத்திலும் இடதுபிட்டிப்பகுதியில் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்த போது அதன் கீழுள்ள சதைகளில் அதிகப்படியான கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

4. இறப்பிற்கு முன்பு உண்டாகும் தோல்உரிதல் சீரற்ற விழிம்புகளுடன் 14 முதல் 20 செ.மீ நீளத்திலும், 9 முதல் 17 செ.மீ அகலத்திலும் வலதுபிட்டிப்பகுதியில் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்த போது அதன் கீழுள்ள சதைகளில் அதிகப்படியான கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

5. 10 X 9 செ.மீ அளவுள்ள கருமைநிற சிராய்ப்புக்காயம் இடதுமேல்கையின் பின்புறம் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்தத போது அத்ன கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

6. 7 X 7 செ.மீ அளவுள்ள கருமைநிற இரத்தக்கட்டு வலதுகால்பாதத்தில் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்த போது அதன் கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

7. 7 X 6.5 செ.மீ அளவுள்ள கருமைநிற இரத்தக்கட்டு வலதுமேல் கையின் உட்புறம் காணப்பட்டது.அதை அறுத்துப பார்த்த போது அதன் கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

8. மூன்று கருமைநிற கீரல் சிராய்ப்புகள் 2.5 முதல் 3.5 செ.மீ நீளத்தில் வலதுமேல் கையின் உட்புறம் காணப்பட்டது.

9. கருமைநிற கீரல் சிராய்ப்பு 4 செ.மீ நீளத்தில் வலதுமேல்கையின் கீழ்புறம் உட்பகுதியில் காணப்பட்டது.

10. 4.5 X 1.5 செ.மீ அளவுள்ள கருமைநிற சிராய்ப்புகாயம் வலது முழங்கையின் உட்புறம் காணப்பட்டது.

11. 1 X 0.5 செ.மீ அளவுள்ள கருமைநிற சிராய்ப்புக்காயம் வலது முழங்காலின் முன்புறம் காணப்பட்டது.

12. 6 X 5 செ.மீ அளவுள்ள கருமைநிற இரத்தக்கட்டு வலதுமுழங்கையின் பின்புறம் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்தத போது அதன் கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

13. 4 X 3 செ.மீ அளவுள்ள கருமைநிற இரத்தக்கட்டு வலது கால் பாதத்தில் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்தத போது அதன் கீழுள்ள சதைகளில் கருமநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

14. 4 X 3.5 செ.மீ அளவுள்ள கருமைநிற இரத்தக்கட்டு வலதுகையில் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்தத போது அதன் கீழுள்ள சதைகளில் கருமநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

15. 30 X 28 செ.மீ அளவுள்ள கருமைநிற இரத்தக்கட்டு பிட்டிப்பகுதியின் கீழ்பகுதியில் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்த்த போது அதன் கீழுள்ள சதைகளில்அதிககப்படியான இரத்தக்கட்டு காணப்பட்டது.

16. 26 X 13 செ.மீ அளவுள்ள கருமைநிற இரத்தக்கட்டு வலதுதொடையின் பின்புறம் காணப்பட்டது. அதை அறுத்துப் பார்தத போது அதன் கீழுள்ள சதைகளில் கருமைநிற இரத்தக்கட்டு காணப்பட்டது.

17. 4 X 1 செ.மீ அளவுள்ள கருமைநிற சிராய்ப்புக்காயம் இடதுகாலின் கீழ்பகுதியில் வெளிப்புறமாக காணப்பட்டது.

மேற்குறிப்பிட்ட காயங்கள் அந்த நபரின் மரணத்திற்கு முன்பு 1 ல் இருந்து 3 நாட்களுக்குள் ஏற்பட்டது போல் காணப்பட்டது என்றும் இறப்பிற்கு பின்பு உண்டான

தோல்உரிதல் 1 X 0.5 செ.மீ அளவில் வலது மேல்கையின் உள்புறத்திலும், 3 X 2 செ.மீ அளவில் வலதுகால் முட்டியின் வெளிப்புறத்திலும், 3 X 2 செ,மீ அளவில் இடது மேல்கையின் வெளிப்புறத்தில் காணப்பட்டது என்றும் உள்உறுப்புகள் பரிசோதனையில் மார்பு மற்றும வயிற்றுப்பகுதி நல்லநிலையில் காணப்பட்டது என்றும் அவற்றின் உள்ளே இரத்தம் கலந்த திரவம் எதுவும் காணப்படவில்லை என்றும் இருதயம் 300 கிராம் எடையுடன் 15 X 14 X 6 செ.மீ அளவிற்கு விரிந்து காணப்பட்டது என்றும் இருதயம் மென்மையாக காணப்பட்ட. அதன் முனைப்பகுதி சிவந்து காணப்பட்டது என்றும் வெளிப்புற இரத்தக்குழாய்கள் விரிந்து காணப்பட்டன என்றும் இருதய இரத்தக்குழாய்கள் நல்லநிலையில் காணப்பட்டன என்றும் மூச்சுக்குழாய் நல்லநிலையில் காணப்பட்டது என்றும் நாவடிஎலும்பு நல்லநிலையில் காணப்பட்டது என்றும் இரைப்பை 300 கிராம் எடையுடன் இருந்தது என்றும் அதன் உள்ளே 200 மி.லி மஞ்சள் கலந்த பழுப்புநிற திரவம் காணப்பட்டது என்றும் அதில் குறிப்பிடத்தக்க வாடை எதுவும் இல்லை என்றும் உட்புறச்சவ்வு மஞ்சள்நிறத்தில் காணப்பட்டது என்றும் நுரையீரல்கள் வலது மற்றும் இடது 500 கிராம் எடையுடன் காணப்பட்டது என்றும் அவற்றின் குறுக்குவெட்டுத் தோற்றம் கணிந்து காணப்பட்டது என்றும் கல்லீரல் 1.75 கி.கி. எடையுடன் காணப்பட்டது என்றும் அதன் குறுக்கு வெட்டுத்தோற்றம் மஞ்சள்நிறத்தில் காணப்பட்டது என்றும் கணையம் நல்லநிலையில் காணப்பட்டது என்றும் மண்ணீரல் 200 கி எடையுடன் காணப்பட்டது என்றும் அதன் குறுக்குவெட்டுத்தோற்றம் கணிந்து காணப்பட்டது என்றும் வலது சிறுநீரகம் 150 கிராம் எடையுடன் காணப்பட்டது என்றும் அதில் நீர்க்கட்டி காணப்பட்டது என்றும் அதன் குறுக்குவெட்டுத்தோற்றம் கணிந்து காணப்பட்டது என்றும் இடது சிறுநீரகம் 200 கிராம் எடையுடன் காணப்பட்டது என்றும் அதன் குறுக்குவெட்டுத் தோற்றம் கணிந்து காணப்பட்டது என்றும் சிறுகுடலில் 150 மிலி அளவு மஞ்சள்நிற திரவம் காணப்பட்டது என்றும் அதில் குறிப்பிடத்தக்க வாடை எதுவும் இல்லை என்றும் அதன் உட்புறச்சவ்வு கணிந்து காணப்பட்டது என்றும் பெருங்குடல், மலக்குழாய், ஆசனவாய் ஆகியவை நல்ல நிலையில் காணப்பட்டன என்றும் ஆசனவாயின் சுற்றியுள்ள பகுதி நல்ல நிலையில் காணப்பட்டது என்றும் சிறுநீர்ப்பையில் 20 மிலி அளவில் சிறுநீர்

காணப்பட்டது என்றும் மூளை 1.2 கிலோ எடையுடன் காணப்பட்டது என்றும் அதன் வெளிப்புற இரத்தக்குழாய்கள் விரிந்து காணப்பட்டன என்றும் அதன் குறுக்குவெட்டுத் தோற்றம் கனிந்து காணப்பட்டது என்றும் ஆணுறுப்பு பகுதியின் முன்தோல் பின்னால் இழுக்க முடியாததாக காணப்பட்டது என்றும் ஆணுறுப்பில் இருந்து சலம் வடிந்தது என்றும் உள்உறுப்புகள் சேகரிக்கப்பட்டு இரசாயனபரிசோதனைக்கு அனுப்பப்பட்டன என்றும் இருதயம், நுரையீரல், மண்ணீரல், கல்லீரல், சிறுநீரகம் மற்றும் மூளையின் துண்டுகள் ஆகியவை சேகரிக்கப்பட்டு நுண்ணோக்கி பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன என்றும் வாயின் உட்புறத்தில் இருந்து தடவல் எடுக்கப்பட்டு கொரோனா பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது என்றும் பரிசோதனை செய்யப்பட்ட நபர் பரிசோதனைக்கு முன்பு 1 ல் இருந்து 2 நாட்களுக்குள் இறந்தது போல் காணப்பட்டது என்றும் கொரோனா பரிசோதனை அறிக்கையில் கொரோனா தொற்று இல்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றும் நுண்ணோக்கி பரிசோதனை அறிக்கையில் மூளையில் குறிப்பிடத்தக்க மாறுதல் இல்லை என்றும், நுரையீரலில் நீர்கோர்த்து காணப்பட்டது என்றும், கல்லீரல் செல் அருகில் கொழுப்பு காணப்பட்டது என்றும், மண்ணீரலில் குறிப்பிடத்தக்க மாறுதல் எதுவும் இல்லை என்றும் சிறுநீரகத்தில் Acute Pyelonephritis என்ற மாறுதல் காணப்பட்டது என்றும், இருதயத்தின் வலது வென்ட்ரிக்கிள் பகுதியில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் எதுவும் இல்லை என்றும், இடது வென்ட்ரிக்கிள் பகுதியில் பழைய நெஞ்சுவலி ஏற்பட்டதற்கான தடயம் காணப்பட்டது என்றும், இருதயத்திற்கான இரத்தக்குழாய்களில் கொழுப்பு படிந்து காணப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது என்றும் உள்உறுப்புகள் இரசாயனபரிசோதனை அறிக்கையில் எந்தவித நச்சுப்பொருட்களும் கண்டறியப் படவில்லை என குறிப்பிடப்பட்டிருந்தது என்றும் இந்த அறிக்கைகளை பெற்ற பின்பு மருத்துவக்குழுவில் இடம் பெற்றிருந்த மருத்துவர்கள் கலந்து ஆலோசித்து இறப்பிற்கான இறுதியறிக்கையினை வழங்கியதாகவும் அதில் பிரேதபரிசோதனை செய்யப்பட்ட நபருக்கு ஏற்பட்டிருந்த ஊமைக்காயங்களின் பின்விளைவுகளினால் இறந்திருக்கலாம் என்று கருத்து கூறியிருந்ததாகவும் மேற்படி காயங்கள் இருவருக்கும்

கூர்முனையில்லாத ஆயுதங்களால் தாக்கும் பொழுது ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

| |
|---|
| பென்னிக்சின் பிரேத பரிசோதனை இறுதி அறிக்கை அ.சாஆ.90ல் The deceased would appear to have died of complications of blunt injury sustained என குறிப்பிடப்பட்டுள்ளது. |
| ஜெயரஜின் பிரேத பரிசோதனை இறுதி அறிக்கை அ.சாஆ.93ல் The deceased would appear to have died of complications of blunt injury sustained என குறிப்பிடப்பட்டுள்ளது. |

47. அ.சா.ஆ.81 ஆவணத்தை பரிசிலித்து பார்க்கும் போது இறந்து போன பென்னிக்ஸ் உடல் உள் உறுப்புகளை பகுப்பாய்வு செய்ததில் அதில் விஷம் எதுவும் காணப்படவில்லை என்று அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது தெரியவருகிறது.

48. அ.சா.ஆ.82 ஆவணத்தை பரிசிலித்து பார்க்கும் போது இறந்து போன ஜெயராஜின் உடல் உள் உறுப்புகளை பகுப்பாய்வு செய்ததில் அதில் விஷம் எதுவும் காணப்படவில்லை என்று அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது தெரியவருகிறது.

49. ஜெயராஜின் முதற்கட்ட பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ86 ல் நாவடி எலும்பு சீராக இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது பென்னிக்சின் முதற்கட்ட பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ87 லும் நாவடி எலும்பு சீராக இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

50. ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது என்றும் பென்னிக்சுக்கு ஆக்சிஜன் அளவு குறைவாக இருந்துள்ளது என்றும் அதனால் அவர்கள் கோவிட்–19 தொற்றால் இறந்திருக்கலாம் என்றும் எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது.

51. ஆனால் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் உடலை பிரேதபரிசோதனை செய்துள்ள மருத்துவர் அசா.43 செல்வமுருகன் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு கோவிட் தொற்று ஏற்பட்டதாகவோ, கோவிட் தொற்றால் அவர்கள் மரணமடைந்ததாகவோ குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை.

52. ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் கோவிட்–19 தொற்றால் பாதிக்கப்பட்டிருந்ததாக நிரூபிக்கவும் எதிரிகள் தரப்பில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

53. கொரோனா பரிசோதளை அறிக்கை அ.சா.ஆ.94 ஐ பரிசிலித்து பார்க்கும் போது 25.06.2020ம் தேதி ஜெயராஜ்க்கு கொரோனா தொற்று இல்லை என அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது தெரிவருகிறது. கொரோனா பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.91 பரிசிலித்து பார்க்கும் போது 25.06.2020ம் தேதி பென்னிக்சுக்கு கொரோனா தொற்று இல்லை என அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது தெரியவருகிறது.

54. எதிரிகள் தரப்பில் முன்னிடப்பட்டுள்ள மருத்துவ துண்டு பிரசுரத்தில் Interim Guidance என்றும் Recommended என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. வெறும் அறிக்கைகள் சாட்சியமாகாது. சட்டப்படி நுரையீரலில் இருந்து தான் மாதிரி எடுக்கப்பட வேண்டும் என நிரூபிக்க அதனை பிரசுரித்த நபரை எதிரிகள் தரப்பில் சாட்சியாக அழைத்து விசாரிக்கவில்லை. தொண்டையில் இருந்து திரவம் எடுக்கப்பட்டால் கோவிட் 19 நோய் தொற்று உள்ளதா என கண்டறிய இயலாது என நிரூபிக்கவும் எதிரிகள் தரப்பில் தக்க சாட்சியம் எதுவும் முன் வைக்கப்படவில்லை.

55. ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் மீது தொடரப்பட்ட குற்ற எண்.312/2020 வழக்கின் கோப்பின் சான்றிட்ட நகல் நீ.ம.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை காவல் அடைப்பு செய்யுமாறு 3ம் எதிரி ரகுகணேஷ் கையெழுத்திட்டு சாத்தான்குளம் நீதித்துறை நடுவரிடம் வேண்டுகோள் அறிக்கை சமர்பித்துள்ளது தெரியவருகின்றது, அதில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு

கொரோனா பரிசோதனை செய்யப்பட்டதாகவும் அவர்களுக்கு கொரோனா தொற்று இல்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

56. எனவே முன்னிடப்பபட்டுள்ள சாட்சியங்களின் அடிப்படையில் பார்க்கும் போது இறக்கும் வரை ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் கொரோனா தொற்றால் பாதிக்கப்படவில்லை என சிபிஐ தரப்பில் ஆவணங்கள் மற்றும் மருத்துவரது சாட்சியங்கள் மூலம் நிருபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது,

57. பென்னிக்சின் முதற்கட்ட பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.87ல் பென்னிக்சிற்கு 13 காயங்கள் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது ஜெயராஜின் முதற்கட்ட பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.86 ல் ஜெயராஜிற்கு 17 காயங்கள் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது ,

58. ஜெயராஜ் மற்றும் பெனிக்சின் உடலில் பல காயங்கள் இருந்துள்ள நிலையில் அந்த காயங்கள் ஏன், எப்போது, எங்கு, யாரால், எப்படி, ஏற்பட்டது என்பதையும் அந்த காயங்கள் இறப்பை ஏற்படுத்த போதுமானதா என்பதையும் அந்தக் காயங்கள் மற்றும் அதன் பின் விளைவுகளால் ஜெயராஜ் மற்றும் பெனிக்சிற்கு இறப்பு ஏற்பட்டுள்ளதா என்பதையும் பற்றி இனி அடுத்தடுத்து ஒவ்வொன்றாக தீர்மானிக்கலாம்

<u>ஏன்</u>

59. 18-6-2020 ம்தேதி இரவு 8.30 மணியளவில் பெனிக்சின் மொபைல் கடையருகே ஜெயராஜ் நின்றிருந்தபோது, சில தொழிலாளர்கள் அவர்களது முதலாளியிடம் சம்பளம் பெறுவதற்காக அருகே நின்று கொண்டிருந்துள்ளனர் என்றும், அப்போது, அங்கு ரோந்து வந்த சாத்சாத்தான்குளம் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் A2 பாலகிருஷ்ணன் அங்கிருந்தவர்களை கலைந்து செல்லும்படியும் திரும்பி வரும்போது யாராவது இருந்தால் தோலை உரித்துவிடுவேன் என்றும் சொல்லியுள்ளார் என்றும் அவர் சென்ற பின் ஜெயராஜ் அங்கிருந்தவர்களிடம், காவல்துறையினர் அவர்களது முரட்டுத்தனமான/ மோசமான நடத்தைக்காக அடிக்கப்படவேண்டியவர்கள் என்றும்

எஸ்ஐ ஏன் நம்மை துஷ்பிரயோகம் செய்கிறார் நமது கருத்தில் நாம் உறுதியாக இருக்கவேண்டும் என்றும் யதார்தமாக சொன்னதாகவும் அச்சமயத்தில் சாத்தான்குளம் காவல்நிலையத்தை சார்ந்த தலைமை காவலர் குண்டாஸ்பாலு என்ற பாலசுப்பிரமணியன், ஆட்டோஸ்டாண்டில் இருந்துள்ளார் என்றும், ஜெயராஜ் சொன்னதை அவர் சீரியசாக எடுத்துக்கொண்டு 19.06.2020ம் தேதி காலை 7.30 மணியளவில் இசக்கிதுரையிடம் ஜெயராஜ் மற்றும் அவரது முகவரி பற்றி விசாரித்துள்ளார் என்றும், இந்நிலையில் போலீசாரை தரக்குறைவாக பேசியவரை கண்டறிந்து தண்டிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 19.06.2020ம் தேதி மாலை 7.30 மணியளவில், சாத்தான்குளம் காமராஜர் சிலை அருகே உள்ள வண்டிமறிச்சியம்மன் கோவிலருகே, எதிரிகளான ஆய்வாளர் ஸ்ரீதர், சார்பு ஆய்வாளர் பாலகிருஷ்ணன், காவலர் முத்துராஜா ஆகியோர் ஆய்வாளரது டாடா சுமோ வாகனத்தில் வந்து அங்கிருந்த ஆட்டோகாரரையும் ஜெயராஜையும் விசாரித்துள்ளனர் என்றும் அப்போது குண்டாஸ் பாலு கைபேசி மூலம் A2 பாலகிருஷ்ணனுக்கு ஜெயராஜை அடையாளம் காட்டி சமிக்கை செய்துள்ளார் என்றும், அதன்பேரில் எதிரிகள் A1 ஸ்ரீதர், A2 பாலகிருஷ்ணன் , A6 முத்துராஜா ஆகியோர்கள் ஜெயராஜை 19.06.2020ம் தேதி மாலை சுமார் 07.45 மணியளவில் ஆய்வாளரது டாடா சுமோ வாகனத்தில் காவல்நிலையம் அழைத்து சென்றுள்ளனர் என்றும் அப்போது பாலகிருஷ்ணன் ஜெயராஜை அடித்துள்ளார் என்றும் பின்னால் மோட்டார் சைக்கிளில் பென்னிக்ஸ் அவரது நண்பருடன் சாத்தான்குளம் காவல் நிலையம் சென்றுள்ளார் என்றும் ஏன் என் தகப்பனாரை கொண்டு வந்துள்ளீர்கள் என்று கேட்டதற்கு, பாலகிருஷ்ணனனுக்கும் பென்னிக்சுக்கும் பிரச்சனை ஏற்பட்டுள்ளது என்றும் அதனால் எதிரிகள் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை காவல் நிலையத்தில் சட்டவிரோதமாக அடைத்து வைத்து அடித்து சித்திரவதை செய்து காயத்தை ஏற்படுத்தி அதன் விளைவாக ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு மரணத்தை ஏற்படுத்தியுள்ளனர் என்றும் தாங்கள் செய்த குற்றத்திலிருந்து தங்களையும் மற்ற எதிரிகளையும் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் 1ம் எதிரி சொன்னதன் பேரில் , 4ம் எதிரி 19.06.2020ம் தேதி இரவு 09.15 மணிக்கு கோவிட் விதிமுறைகளுக்கு முரணாக தொற்று நோய் பரப்பும் வகையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் கடை திறந்து வைத்திருந்ததாகவும்

அவர்களது கடைமுன் 4,5 நபர்களுடன் நின்றிகொண்டிருந்ததாகவும் அனைவரையும் கலைந்து வீட்டிற்கு செல்லுமாறு 4,6 எதிரிகள் சொன்னதற்கு மற்ற நபர்கள் கலைந்து சென்றுவிட்டதாகவும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் மட்டும் கடையை அடைக்காமலும் கலைந்துசெல்லாமலும் தரையில் அமர்ந்து கொண்டு போலீசாரை ஆபாசமான வார்த்தைகளால் திட்டி பணி செய்யவிடாமல் தடுத்து கொலை மிரட்டல் விடுத்ததாகவும் அவர்கள் தரையில் உருண்டு பிரண்டதால் அவர்களுக்கு காயம் ஏற்பட்டுள்ளது என்றும் பொய்யான புகார் ஒன்றை தயாரித்து அதில் 4ம் எதிரி கையெழுத்து செய்துள்ளார் என்றும் 6ம் எதிரி அதில் சாட்சி கையெழுத்திட்டுள்ளார் என்றும் 3ம் எதிரி அந்த புகாரை பெற்று ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு எதிராக சாத்தான்குளம் காவல் நிலைய குற்ற எண் 312/20 ல் இதச பிரிவு 188, 294(பி), 269, 353 மற்றும் 506(2) ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், குற்ற எண். 312/2020ல் குறிப்பிட்டுள்ளது போல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அசிங்கமாக பேசியதாகவோ கொலை மிரட்டல் விடுத்ததாகவோ தரையில் உருண்டு புரண்டதாகவோ பணி செய்ய விடாமல் தடுத்ததாகவோ சிசிடிவி காட்சிகளில் எவ்வித பதிவும் இல்லை என்றும் இதிலிருந்து சாத்தான்குளம் காவல் நிலைய குற்ற எண் 312/20 ல் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பொய்யானது, உள்நோக்கம் கொண்டது என்பதும் போலீசாரை ஏசிய காரணத்திற்காக ஜெயராஜை எதிரிகள் ஸ்ரீதர், பாலகிருஷ்ணன், முத்துராஜா காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்று சட்டவிரோதமாக தடுத்து வைத்து காயப்படுத்தியுள்ளனர் என்பதும் அது குறித்து கேட்கபோன பென்னிக்சையும் காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்று சட்டவிரோதமாக தடுத்து வைத்து காயப்படுத்தியுள்ளனர் என்பதும் மேற்படி காயங்களின் விளைவாக ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இறந்துள்ளனர் என்பதும் நன்கு நிருபணமாகும் என்றும் சிபிஐ தரப்பில் வாதம் முன்னிடப்பட்டுள்ளது

60. ஜெயராஜ் போலீசாரை 18–6–20 ஆம் தேதி இரவு 8:30 மணிக்கு ஏசியதாக கூறப்படுவதும் அதனால் 19 –6 –20 ஆம் தேதி எதிரிகள் ஜெயராஜை மட்டும் கைது செய்து காவல் நிலையம் கொண்டு சென்றதாக கூறப்படுவதும் பென்னிக்ஸ் பின்னிட்டு

அவரது நண்பருடன் மோட்டார் சைக்கிளில் சாத்தான்குளம் காவல் நிலையம் சென்றதாக கூறப்படுவதும் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் வைத்து எதிரிகள் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை அடித்ததாக கூறப்படுவதும் பொய்யானது என்றும் கோவிட் விதிமுறைகளை பின்பற்றாததாலும் அது குறித்து 4 மற்றும் 6 எதிரிகள் எடுத்துரைத்ததற்கு பொது இடத்தில் அசிங்கமாக பேசியதாலும் பணி செய்யவிடாமல் தடுத்ததாலும் கொலைமிரட்டல் விடுத்தாலும் இருவரும் காவல் நிலையம் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்றும் தரையில் உருண்டு பிரண்டதால் அவர்களுக்கு காயம் ஏற்பட்டுள்ளது என்றும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு எதிராக முறையாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் இரவு நேரம் என்பதால் மறுநாள் அதிகாலை காலை 6 மணிக்கே ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு மருத்துவ பரிசோதனை முடிக்கப்பட்டு முறையாக காவல் அடைப்பு பெறப்பட்டு கோவில்பட்டி கிளை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்றும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை அடித்து காயப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் எதிரிகளுக்கு இருந்ததாக கூறப்படுவது உண்மையானதல்ல என்றும் அவ்வாறு சிபிஐ தரப்பில் நிரூபிக்கப்படவும் இல்லை என்றும் எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது

61. 18.06.2020ம் தேதி இரவு 08.30 மணிக்கு பென்னிக்ஸ் மொபைல் கடை அருகே நடந்ததாக கூறப்படும் சம்பவம் குறித்து சிபிஐ தரப்பில் அ.சா.12,13 விசாரிக்கப்பட்டுள்ளனர். சிசிடிவி காட்சி பதிவுகள் சிபிஐ தரப்பில் அ.சா.பொ.23 மற்றும் அ.சா.பொ.57 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன.

62. அ.சா.12 இசக்கிதுரை, தான் சாத்தான்குளத்திலுள்ள ஜி.ஜி.பாக்கியம் ஹார்டுவேர்ஸ் என்ற கடையில் வேலை பார்த்து வருவதாகவும், அந்தக்கடை பென்னிக்ஸ் கடைக்கு ஒரு கடை விட்டு அடுத்து உள்ளது என்றும், 18.06.2020 அன்று இரவு ஜி.ஜி.பாக்கியம் கடையை பூட்டிக் கொண்டிருந்தபோது 2, 3 கொத்தனார்கள் வேலைக்குப் போனதற்கு சம்பளம் வாங்குவதற்காக தங்கள் கடைக்கு வெளியே நின்று கொண்டிருந்ததாகவும் அப்போது 8.30 மணியளவில் எஸ்.ஐ பாலகிருஷ்ணனும், ஒரு கான்ஸ்டபிளும் பைக்கில்

அங்கு வந்தார்கள் என்றும், எதற்கு நிற்கிறீர்கள், கடையை பூட்டியாச்சுல்ல போக வேண்டியது தானே என்று பொதுவாக சொன்னார்கள் என்றும், அப்போது ஓனர் வருகிறார், சம்பளம் வாங்கி கொடுக்க வேண்டுமென்று தான் சொன்னதாகவும், அதற்கு எஸ்.ஐ பாலகிருஷ்ணன் 5 நிமிடத்தில் நான் வருவேன், யாராவது நின்றீர்கள் என்றால், அடித்து தோலை உரித்துவிடுவேன் என்று சொன்னதாகவும், அப்போது ஜெயராஜ் பொதுமக்களை இப்படி அடாவடியாக பேசியிருக்கிறார், முதலில் அவருக்கு தான் தண்டனை கொடுக்க வேண்டும் என்று சொன்னார் என்றும், அப்போது ஆட்டோஸ்டாண்டில் குண்டாஸ் பாலு என்று போலீஸ் அதை கேட்டுக் கொண்டு இருந்துள்ளார் என்றும், 19 ஆம் தேதி காலையில் தான் வீட்டிற்கு பால் வாங்க போய் கொண்டிருந்ததாகவும், அப்போது பென்னிக்ஸ் கடை அருகில் குண்டாஸ் பாலு தன்னிடம் நேற்று போலீசாரை அப்படி யார் பேசினார்கள், அவர் பெயர் என்ன, வீடு எங்கு உள்ளது என்று கேட்டதாகவும் மேலும் அன்று இரவு 7.30 மணியளவில் மாஸ்க் போடாதவர்கள் மற்றும் ஹெல்மெட் போடாதவர்களை ஐந்து போலீசார்கள் பிடித்துக் கொண்டு இருந்தார்கள் என்றும், அப்போது ஒரு கான்ஸ்டபிள் வந்து, ஆட்டோஸ்டாண்ட் மணியிடம் நேற்று யார் எஸ்.ஐ பாலகிருஷ்ணனை ஏசியது என்று கேட்டுக் கொண்டிருந்தார் என்றும் அப்போது போலீசார் ஜீப் வண்டிமறிச்சிஅம்மன் கோவிலுக்கு எதிரில் நின்றிருந்ததாகவும் போலீஸ் ஜீப்பில் இன்ஸ்பெக்டர், எஸ்.ஐ பாலகிருஷ்ணன், மற்றும் கான்ஸ்டபிள்கள் இருந்தார்கள் என்றும் அசா 12 சாட்சியமளித்துள்ளார்,

63. அசா.13 பேச்சிபாண்டி தான் சொந்தமாக ஆட்டோ ஓட்டி வருவதாகவும், தன்னுடைய ஆட்டோ ஸ்டாண்ட் பென்னிக்ஸ் கடைக்கு எதிரில் உள்ளது என்றும் 2020 ஆம் வருடம் ஜூன் மாதம் 18 ஆம் தேதி இரவு 8.30 மணியளவில் தான் ஆட்டோஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தபோது எஸ்.ஐ பாலகிருஷ்ணனும், ஒரு கான்ஸ்டபிளும் பென்னிக்ஸ் கடை அருகில் பைக்கில் வந்தார்கள் என்றும், பக்கத்து கடையில் சம்பளம் வாங்குவதற்காக 4, 5 பேர்கள் நின்று கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது எஸ்.ஐ சார் அவர்கள் லாக்டவுன் சமயத்தில் 8.30 மணிவரை ஏன் நிற்கிறீர்கள்

என்று கேட்டார் என்றும், சம்பளம் வாங்குவதற்காக நின்று கொண்டிருக்கிறோம், ஓனர் ஆஸ்பத்திரிக்கு போய் இருக்கிறார் என்று அவர்கள் சொன்னார்கள் என்றும், நான் போய்விட்டு வரும் போது நின்றீர்கள் என்றால், தோலை உரித்துவிடுவேன் என்று எஸ்.ஐ பாலகிருஷ்ணன் சொன்னார் என்றும், ஜெயராஜ் அப்போது அவர் கடை வாசலில் நின்று கொண்டிருந்தார் என்றும், ஜெயராஜ் அங்கிருந்த பசங்களிடம் போலீஸ் ஏன் சத்தம் போட்டு போகிறது என்று கேட்டார் என்றும், அப்போது அவர்கள் தாங்கள் சம்பளம் வாங்குவதற்காக நின்று கொண்டிருந்ததாகவும், முதலாளி வந்த பின்னர் போக வேண்டுமென்று சொன்தாகவும் அதற்காக போலீஸ் சத்தம் போட்டதாகவும் சொன்னார்கள் என்றும், ஜெயராஜ் உடனே அதற்கான விளக்கத்தை நீங்கள் போலீசிடம் கொடுக்க வேண்டியதுதானே, போலீஸ் என்ன கடவுளா என்று சொன்னார் என்றும், தான் அப்போது போலீசை சத்தம் போடாதீர்கள் எதிரில் குண்டாஸ் பாலு என்ற ஏட்டு சரக்கு அடித்துக் கொண்டிருப்பார் அவர் எஸ்.ஐ.க்கு போனில் தகவல் சொல்லிவிடுவார் என்று சொன்னதாகவும், ஜூன் 19 ஆம் தேதி இரவு 7.45 மணிக்கு தான் சவாரி போய்விட்டுவந்து, ஸ்டாண்டில் ஆட்டோவை நிறுத்திவிட்டு வந்த போது, ஜெயராஜை சுமோவில் ஏற்றி வைத்திருந்தார்கள் என்றும் இதை பார்த்துவிட்டு பென்னிக்சிடம் போய் அப்பாவை சுமோவில் ஏற்றி வைத்திருக்கிறார்கள் என்று தான் சொன்னதாகவும் பென்னிக்சும், ராஜாராமும் ஸ்டேசன் இன்ஸ்பெக்டரிடம் பேசப் போனார்கள் என்றும் தான் கடை வாசலில்தான் நின்று கொண்டிருந்ததாகவும் அவர்கள் என்ன பேசினார்கள் என்று தனக்குத் தெரியாது என்றும் அதன்பிறகு சுமோ, ஸ்டேசன் கிளம்பி போய்விட்டது என்றும் பென்னிக்சும், ரவிசங்கரும் பைக்கில் பின்னால் சென்றுவிட்டார்கள் என்றும் ராஜாராமும் பைக்கில் வெளியே கிளம்பி போய்விட்டார் என்றும் அசா 13 சாட்சியமளித்துள்ளார்

64. ஜிஜி ஹார்ட்வேர்டு உரிமையாளருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அதனால் அசா 12 எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும் எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. ஜிஜி ஹார்ட்வேர்டு உரிமையாளருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக எதிரிகள் தரப்பில் கூறப்பட்டாலும் அசா 1 2

க்கும் எதிரிகளுக்கும் தனிப்பட்ட விரேதம் இருப்பதாக நிரூபிக்கப்படவில்லை. இந்நிலையில் ஜி.ஜி ஹார்ட்வேர்டு உரிமையாளருக்கு எதிராக வழக்கு உள்ளது எனக் காரணம் காட்டி அசா 12 –ன் சாட்சியத்தை நிராகரிக்க வேண்டும் என எதிரிகள் தரப்பில் கோருவது ஏற்புடைய வாதமாக இல்லை

65. அ.சா.13 க்கும் அவரது உறவினருக்கும் இடையேயான பிரச்சனை சம்மந்தமாக சாத்தான்குளம் காவல்நிலயத்தில் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும் பின்னிட்டு சமாதானமாக போய்விட்டதால் அந்த வழக்கில் அ.சா.13 விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றும் மேலும் ஆட்டோ ஒட்டுநர் சங்கத்திற்கும் சாத்தான்குளம் போலீசாருக்கும் இடையே பிரச்சனை இருந்து வருகிறது என்றும் அதனால் அ.சா.13 பொய் சாட்சியமளித்துள்ளார் என்றும் அவரது சாட்சியம் ஏற்புடையது அல்ல என்றும் எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது.

66. அ.சா.13க்கும் அவரது உறவினருக்கும் சமரசம் ஏற்பட்டு ஏற்கனவே அசா 13 விடுதலை ஆகிவிட்டதாக கூறப்படுகின்ற நிலையில் அ.சா.13க்கு எதிரிகளை பழிவாங்கும் எண்ணம் இருந்ததாக கருதிட எதிரிகள் தரப்பில் தக்க சாட்சியம் எதுவும் முன் வைக்கப்படவில்லை. ஆட்டோ சங்கத்திற்கும் சாத்தான்குளம் போலீசாருக்கும் இடையே என்ன பிரச்சனை உள்ளது என்பது குறித்தும் எதிரிகள் தரப்பில் தக்க விளக்கம் அளிக்கப்படவில்லை. மேலும் எதிரிக்கும் ஒரு சாட்சிக்கும் இடையே விரோதம் இருப்பதாக கூறப்படுவதாலேயே அந்த சாட்சியின் சாட்சியத்தை அப்படியே ஒட்டுமொத்தமாக நிராகரிக்க முடியாது.

67. அசா 12 பென்னிக்ஸ் கடைக்கு அருகே உள்ள கடையில் வேலை செய்து வருவதாகவும் அசா 13 பென்னிக்ஸ் கடைக்கு எதிரே உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டுவதாக சாட்சியமளித்துள்ளனர். எனவே அவர்கள் அச்சம்பவ இடத்தில் இருந்திருக்க கூடிய இயற்கையான சாட்சிகளாவர்.

68. இந்நிலையில் அசா.11 அர்வின் என்பவர் தன்னுடைய தாயார் பென்னிக்ஸ் கடைக்கு அருகில் உள்ள பழக்கடையில் வேலை செய்து வருவதாகவும் அவருக்கு

உதவியாக விடுமுறை நாட்களிலும் மாலை வேலைகளிலும் தான் அந்த கடைக்கு செல்வதுண்டு என்றும் 19.06.2020 ஆம் தேதி சுமார் இரவு 7.30 மணியளவில் பழக்கடையை எடுத்து வைத்துக் கொண்டிருந்த சமயத்தில் வண்டிமறிச்சிஅம்மன் கோவில் அருகில் போலீஸ் ஜீப் வந்து நின்றது என்றும் வெகிக்கல் செக்அப் மற்றும் மாஸ்க் செக்அப் செய்து கொண்டிருந்தார்கள் என்றும் அங்கு இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், எஸ்.ஐ. பாலகிருஷ்ணன், கான்ஸ்டபிள்ஸ் ஆகியோர்கள் மொத்தமாக சுமார் 5, 6 பேர்கள் இருந்தார்கள் என்றும் கொஞ்ச நேரம் கழித்து எஸ்.ஐ.சாரும், ஒரு கான்ஸ்டபிளும் மொபைல் ஷாப், பழக்கடை பக்கம் வந்ததாகவும் நேற்று யாரோ போலிசை தப்பாக பேசினார்கள், அவர்கள் யாரென்று இப்போது சொல்லுங்கள் பார்ப்போம் என்று எஸ்.ஐ சத்தம் போட்டார் என்றும், சாட்சியம் அளித்துள்ளார். இது 18–6–20;ம் தேதி இரவு ஜெயராஜ் போலீசாரை ஏசியதாக அசா 12,13 அளித்துள்ள சாட்சியத்தை ஒத்துரைக்கும் வகையில் அமைந்துள்ளது.

69. இவ்வழக்கில் Crl.RC.MD.No.886/2025 மனுவில் 17.07.2025ம் தேதி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை பிறப்பித்துள்ள உத்தரவில் தேவைப்பட்டால் சிபிஐ தரப்பில் விசாரிக்கத் தவறிய சாட்சிகளை விசாரித்துக்கொள்ள எதிரிகள் தரப்பிற்கு உரிமை உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் குண்டாஸ் பாலுவையும் எதிரிகளின் வாதங்களில் குறிப்பிட்டுள்ள இதர சாட்சிகளையும் ஏன் தங்கள் தரப்பில் எதிரிகள் சாட்சியாக அழைத்து விசாரித்துக்கொள்ளவில்லை என்பதற்கு எதிரிகள் தரப்பில் தக்க விளக்கம் ஏதும் அளிக்கப்படவில்லை , இந்நிலையில் குண்டாஸ் பாலுவையும் இதர சாட்சிகளையும் சிபிஐ தரப்பில் சாட்சியாக அழைத்து விசாரிக்கவில்லை என்றும் அதனால் சிபிஐ தரப்பு வழக்கை நிராகரிக்க வேண்டும் என்றும் எதிரிகள் தரப்பில் வாதிட்டுள்ளது ஏற்புடைய வாதமாக தோன்றவில்லை.

70. King electricals மற்றும் சாத்தான்குளம் அரசு மருத்துவமனை சிசிடிவி பதிவு காட்சிகள் அடங்கிய சிடி அ.சா.பொ.23 ஆக குறியீடுசெய்யப்பட்டுள்ளது. Cooperative Society, Kings Electricals, சாத்தான்குளம் அரசு மருத்துவமனை, Subbulakshmi textiles, TMB

Bank, CCTV சம்மந்தமான காட்சி கோப்புகள் அடங்கிய Sony 2 GB Pendrive அசாபொ 55 ஆகவும் Kings Electricals, சிசிடிவி காட்சி பதிவுகள் அடங்கிய பென்டிரைவ் அ.சா.பொ.57 உடன் Annexure–B ஆகவும் குறியீடு செய்யபப்ட்டுள்ளது.

71. King electricals நிறுவனர் பிரபு வழங்கியுள்ள 65–B ன் கீழான சான்றிதழ் அசா ஆ 168 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சாத்தான்குளம் அரசு மருத்துவமனை மருத்துவர் வழங்கியுள்ள 65 பி சான்றிதழ் அசா ஆ 177 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. Cooperative Society,Subbulakshmi textiles, TMT Bank சிசிடிவி காட்சிகள் சம்மந்தமாக வழங்கப்பட்டுள்ள 65 பி சான்றிதழ் முறையே அ.சாஆ.176, 175, 174 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது ,

72. கிங் எலக்ட்ரிகல்ஸ் சிசிடிவி கட்சிகள் சம்பந்தமாக சாட்சிய சட்டம் பிரிவு 65 ன் கீழான சான்றிதழ் அசா 49 பிரபுவால் தயாரிக்கப்படவில்லை என்றும் அது காவலர்களால் தயாரிக்கப்பட்டு அதில் அவரது கையெழுத்து பெறப்பட்டுள்ளது என்றும் அது ஏற்புடையதல்ல என்றும் எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது, அதை படித்துப் பார்த்து கையெழுத்துப் போட்டதாக அசா 49 சாட்சியம் அளித்துள்ளார் மேலும் மேற்படி சான்றிதழின் நோக்கமே அந்த ஆவணத்தின் உண்மை தன்மையே உறுதிப்படுத்துவதற்கு தான் , இந்நிலையில் இந்த வழக்கில் மேற்படி சிசிடிவி காட்சிகள் தடைய அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது அதில் கிடைக்கப் பெற்றுள்ள அறிக்கை அசா ஆ 249ஆக குறியீடு செய்யப்ப்டடுள்ளது.

73. அசா ஆ 249 ஐ பரிசீலித்து பார்க்கும் போது கிங் எலக்டிக்கல்ஸ் சிசிடிவி சம்மந்தமான Hard Disk –Exh.Q–34/H ஆக குறியீடு செய்யப்பட்டு குஜராத், காந்தி நகர் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது என்பதும் அதில் மேற்படி Exh.Q–34/Hல் உள்ள காட்சி பதிவுகளில் Edit/Alteration/Modification செய்யப்படவில்லை என்று அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது தெரியவருகின்றது, இந்நிலையில் அ.சா.49 வழங்கிய சான்றிதழில் குறைபாடு உள்ளது என்றும் எனவே அது சாட்சிய தன்மையற்றது என்றும் எதிரிகள் தரப்பில் வாதிடுவது ஏற்புடைய வாதமாக தோன்றவில்லை.

74. தனது கடையின் கேமராவில் time settings இரண்டு மணி நேரம் கூடுதலாக இருக்கும் என்றும், அது கொரோனா காலம் என்பதால் தான் அந்த சமயத்தில் அந்த time settings–ஐ தான் சரிசெய்யவில்லை என்றும், உதாரணமாக 10.00 மணி நிகழ்வு கொண்ட பதிவுகள் 12.00 மணி என்று காண்பிக்கும் என்றும், நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் 18.06.2020 மற்றும் 19.06.2020 சி.சி.டி.வி பதிவுகள் தனது கடையில் உள்ள சி.சி.டி.வி கேமராவில் இருந்து எடுக்கப்பட்டது என்றும் அசா 49 சாட்சியமளித்துள்ளார்,

75. அவ்வாறு ஒரு விளக்கத்தை அ.சா.49 காவல்துறை விசாரணையில் கூறியிருக்கவில்லை என எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது.

76. In Esher Singh Vs. State of A.P., AIR 2004 SC 3030. (ii) Aadam Kasam Shaikh Vs. State of Maharashtra, 2006 CrLJ 4585 என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம்

The evidence of a witness cannot be discarded merely because he has made improvements over his police statements by stating some of the facts for the first time in his deposition before the court. If the facts stated for the first time before the court are in the nature of elaboration, do not amount to contradiction, and the evidence of the witness does not militate against his earlier version, his evidence cannot be discarded. என தீர்ப்பளித்துள்ளது, எனவே சிசிடிவி காட்சிகளில் ஏன் நேரவித்தியாசம் உள்ளது என்பதற்கு அசா 49 அளித்துள்ள விளக்கத்தை முரண்பாடாக கருத இயலாது

77. மேலும் ஒரு சாட்சி நீதிமன்றத்தில் அளிக்கும் சாட்சியமே நிலையுறுத்து சாட்சியமாகும். இந்நிலையில் Alamgir Vs. State of NCT, Delhi, (2003) 1 SCC 21 என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம்

"If a relevant fact is not mentioned in the statement of the witness recorded under Section 161 CrPC but the same has been stated by the witness before the court as P.W., then that would not be a ground for rejecting the evidence of the P.W. if his evidence is otherwise creditworthy and acceptable. Omission on the part of the police officer would not take away the nature and character of the evidence எனத் தீர்ப்பளித்துள்ளது.

78. மேற்படி முன்தீர்ப்பின் அடிப்படையில் பார்க்கும்போது ஒரு சங்கதி குறித்து சாட்சி ஒருவர் முதன் முதலாக நீதிமன்றத்தில் சாட்சி அளித்திருந்தாலும் அது நம்பத்தகுந்ததாக இருக்கும் பட்சத்தில் அதனை நிராகரிக்க முடியாது என்பது நன்கு விளங்குகிறது

79. பொதுவாக மாலை 6,30 மணிக்குள் இருட்டிவிடும்,

80. Google search படியும் சாத்தான்குளத்தில் 18–6–20 மற்றும் 19–6–20ம் தேதி சூர்ய அஸ்தமனம் மாலை 6:38 என குறிப்பிடப்பட்டுள்ளது,

81. ஆனால் அ.சா.பொ.23 ல் முதல் கோப்பில் முதலாவது பதிவில் 18.06.2020ம் தேதி 20.45.25க்கு காட்சி பதிவு ஆரம்பிப்பதாக உள்ளது அப்போது மாலை வெளிச்சம் சிறிது உள்ளது,

82. மேலும் அ.சா.பொ.57 ல் Annexure B Pendrive ல் – 19.06.2020–ம் தேதிய CH03 கோப்பில் உள்ள 4வது Video பதிவு 20.17.43ல் ஆரம்பிப்பதாக உள்ளது. அதில் மாலை வெளிச்சம் மிகபிரகாசமாக தெரிகிறது.

83. தமிழ்நாட்டின் எந்தப் பகுதியிலும் இரவு 8 மணிக்கு மாலை வெளிச்சம் இருக்காது. ஆனால் பென்னிக்ஸ் கடைக்கு அருகே உள்ள கிங் எலக்டிக்கல்ஸ் சிசிடிவி காட்சி பதிவுகள் அடங்கிய அசாபொ 23 மற்றும் அசாபொ 57 ன் இணைப்பு B ல் உள்ள சிசிடிவி காட்சிகளில் இரவு 20.30 மணிக்கு மாலை வெளிச்சம் இருப்பது தெரிவதனடிப்படையில் பார்க்கும்போது மேற்படி வீடியோ காட்சி பதிவுகளில் காணப்படும் சம்பவம் அது நிகழ்ந்த நேரத்தை விட இரண்டு மணி நேரம் கூடுதலாக காட்டப்படுகிறது என அ.சா.ஆ.49 அளித்துள்ள விளக்கம் ஏற்புடைய விளக்கமாகவே உள்ளது.

84. எனவே அசாபொ 23 மற்றும் அசாபொ 57 இணைப்பு B தொடர்புடைய சிசி டிவி காட்சிகளில் காணப்படும் நேரத்தைவிட சுமார் 2 மணிநேரத்தை கழித்து பார்த்தால் ( 22.18.50–2.00.00=20.18.50) 18.06.2020 ம் தேதி இரவு சுமார் 08: 18: 50க்கு ஜெயராஜ் கடையை பூட்டியுள்ளார் என்பதும் அன்று இரவு 08: 24:30 மணியளவில் சுமார்

4 க்கும் மேற்பட்ட நபர்கள் பென்னிக்ஸ் கடையருகே உள்ள ஆட்டோ ஸ்டாண்ட் அருகே கூடி நின்றிருந்துள்ளனர் என்பதும் அப்போது வண்டி போக்குவரத்து இருந்துள்ளது என்பதும் 18.06.2020ம் தேதி இரவு சுமார் 08:33:17 மணிவாக்கில் மேற்படி நபர்கள் கலைந்து சென்றுள்ளதும் அதை தொடர்ந்து பைக்கில் 2 போலீசார் அமர்ந்து சென்றுள்ளதும் தெரியவருகின்றது ,

85. மேலும் 19.06.2020 ஆம் தேதி இரவு சுமார் 07.15-7.30 மணியளவில் தானும், ரவிசங்கர், கல்யாணசுந்தரம் மற்றும் ஆட்டோ டிரைவர்கள் இரண்டு பேரும் பென்னிக்ஸ்கடைக்கு எதிரில் ஆட்டோஸ்டாண்ட் அருகில் பேசிக் கொண்டிருந்தபோது வண்டிமறிச்சி அம்மன்கோவில் அருகில் இன்ஸ்பெக்டரின் சுமோ வண்டி வந்து நின்றது என்றும், அங்கு எஸ்.ஐ பாலகிருஷ்ணன் மற்றும் மூன்று போலீசார்கள் இருந்தார்கள் என்றும், இன்ஸ்பெக்டரும் இருந்தார் என்றும், அங்கு Vehicle Checkup செய்து கொண்டு மாஸ்க் போடச் சொல்லிக் கொ்ண்டிருந்தார்கள் என்றும், அப்போது ஒரு போலீசார் ஆட்டோஸ்டாண்ட் அருகில் மணி என்பவரிடம் விசாரித்துக் கொண்டிருந்தார் என்றும், பக்கத்தில் பென்னிக்ஸ் அப்பா நின்று கொண்டிருந்தார் என்றும், ரவிசங்கர் பென்னிக்ஸ் அப்பாவிடம் போலீஸ் என்ன விசாரித்தார்கள் என்று கேட்டதற்கு நேற்று ஏதோ போலீசை அடித்துவிடுவோம் என்று சொன்னது சம்பந்தமாக போலீசார் கேட்டுக் சென்றதாக சொன்னதாகவும் கொஞ்சநேரத்தில் தானும் ரவிசங்கரும் பென்னிக்ஸ் கடைக்குள் போய்விட்டதாகவும், கடைக்குள் இருக்கும் போது எஸ்.ஐ.பாலகிருஷ்ணனும், ஒரு போலீசாரும் பென்னிக்ஸ் அப்பாவிடம் விசாரித்துக் கொண்டிருந்தார்கள் என்றும், தான் கடைக்குள் இருந்து வெளிப்பக்கமாக பார்த்துக் கொண்டிருந்ததாகவும் அ.சா.10 சாட்சியமளித்துள்ளார்.

86. சாத்தான்குளம் வண்டிமறிச்சிஅம்மன் கோவில் அருகில் சுமார் 7:15 மணியளவில் வாகனத்தை நிறுத்தியதாகவும் அப்போது ஆய்வாளர் வாகனத்தின் முன்புறம் உட்கார்ந்திருந்தார் என்றும் எஸ்.ஐ. பாலகிருஷ்ணன், காவலர் முத்துராஜ், ஜெயராஜை அழைத்து வந்து வாகனத்தின் பின்புறம் ஏற்றினார்கள் என்றும் அப்போது மணி 7.45

இருக்கும் என்றும் ஆய்வாளர் வாகனத்தை நிலையத்திற்கு கொண்டு போகச் சொன்னார் என்றும் 1ம் எதிரியின் வாகன ஓட்டுநரான அசா 26 ம் சாட்சியமளித்துள்ளார்

87. மேலும் அ.சா.பொ.57 ல் Annexure B Pendrive ல் – 19.06.2020–ம் தேதிய CH03 கோப்பில் உள்ள 4வது Video பதிவில் (21.30.22 – 2 = 19.30.22 ) 2 மணி நேரத்தை கழித்தால் 07.30.22 மணியளவில் போலீஸ் ஜீப் வண்டி மரிச்சியம்மன் கோவில் அருகே வந்து நிற்பது தெரியவருகிறது.

88. அ.சா.பொ.57 ல் Annexure B Pendrive ல் – 19.06.2020–ம் தேதிய CH03 கோப்பில் உள்ள 4வது Video பதிவில் (21.35.17 –2 = 19.35.17) 07.35.17 மணிக்கு போலீஸ் வந்து ஆட்டோ அருகே நிற்பவர்களிடம் விசாரிப்பதாக தெரிகிறது.

89. அ.சா.பொ.57 ல் Annexure B Pendrive ல் – 19.06.2020–ம் தேதிய CH03 கோப்பில் உள்ள 4வது Video பதிவில் (21.43.01–2= 19.43.01) 7.43.01 க்கு இரண்டு போலீசார் ஜெயராஜ் அருகே வருவதும் அவரிடம் விசாரித்துவிட்டு (21.44.14–2=19.44.14) 07.44.14 க்கு அமைதியாக போலீஸ் ஜீப்பை நோக்கி செல்வதும் தெரிகிறது.

90. அ.சா.பொ.57 ல் Annexure B Pendrive ல் – 19.06.2020–ம் தேதிய CH03 கோப்பில் உள்ள 4வது Video பதிவில் 19.06.2020ம் தேதி சுமார் (21.45.55–2=19.45.55) 7.45.55 மணிக்கு ஜெயராஜ் காவல்துறை சுமோ வண்டியை நோக்கி செல்வதாக பதிவு காட்சிகள் காணப்படுகிறது

91. அ.சா.பொ.57 ல் Annexure B Pendrive ல் – 19.06.2020–ம் தேதிய CH03 கோப்பில் உள்ள 4வது Video பதிவில் (21.48.38–2 =19.48.38) 07.48.38 க்கு ஜீப் கிளம்புவது தெரிகிறது.

92. அ.சா.பொ.57 ல் Annexure B Pendrive ல் – 19.06.2020–ம் தேதிய CH03 கோப்பில் உள்ள 4வது Video பதிவில் (21.50.38–2=19.50.38) 07.50.38 க்கு பென்னிக்ஸ் தனது நண்பருடன் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்றதற்கான காட்சிகள் பதிவாகியுள்ளது.

93. தூத்துக்குடி மாவட்ட ஆட்சியாளரது மேலாளர் ஜான்சன் தேவசகாயம் அசா 34 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார் அவர் மூலம் 01.06.2020 முதல் 30.06.2020 வரையான கோவிட் தடை உத்தரவு நகல் அ.சா.ஆ.61 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

94. அ.சா.ஆ.61 ஆவணத்தை பரிசிலித்து பார்க்கும் போது கோவிட் காலத்தில் அத்தியாவசிய் கடைகள் காலை 8.00 மணிமுதல் இதரவு 8.00 மணிவரை திறந்திருக்க அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதும் மற்ற கடைகள் காலை 10.00 மணிமுதல் இரவு 08.00 மணிவரை திறந்திருக்க அனுமதிக்கப்பட்டிருந்தது என்பதும் தெரியவருகிறது.

95. அ.சா.பொ.23 மற்றும் அ.சா.பொ.57 இணைப்பு தொடர்பான சிசிடிவி காட்சிகளை பரிசீலித்து பார்க்கும்போது கோவிட் தொற்று காலத்தில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் 19.06.2020ம் தேதி இரவு 8 மணிக்கு முடிவடைவதற்கு முன்பாகவே ஜெயராஜ் சாத்தான்குளம் போலீசாரால் ஆய்வாளரது வாகனத்தில் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் என்பதும் அதன் பின் அவரது மகன் அவரது நண்பருடைய இருசக்கர வாகனத்தில் பின் செல்வதும் தெரிகிறது

96. விதிமுறைகளை மீறியதால் காவல்துறையினர் தங்களைஅழைத்து வந்ததாக ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அசா 2, 5, 14,17,46 கூறியுள்ளனர் என்றும் இதில் இருந்தே அவர்கள் மீது சுமத்தப்பட்ட வழக்கு உண்மையானது என்பது நன்கு விளங்கும் என்றும் எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது.

97. 19.06.2020 ஆம் தேதி இரவு 7.45 மணியளவில் தன் அக்கா மகன் பென்னிக்ஸ் தனக்கு போன் செய்து அப்பாவை சாத்தான்குளம் போலீசார் கூட்டிச் செல்வதாக சொன்னார் என்றும் என்ன காரணத்திற்காக என்று கேட்டதாகவும் அதற்கு முந்தையநாள் லாக்டவுன் காலத்தில் கடையை மூட 8 மணிக்கு மேல் ஆகிவிட்டது என்பது சம்பந்தமாக விசாரிப்பதற்காக அழைத்துச் செல்வதாக கூறினார் என்றும் அசா 5 சாட்சியமளித்துள்ளார், அதனடிப்படையில் பார்ததாலும் 18-6-20ம்தேதி தான் கடையை அடைக்க சற்று நேரமாகியுள்ளது தெரிய வருகின்றது, 18-6-20ம் தேதி

ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு எதிராக எந்த குற்ற வழக்கும் பதிவு செய்யப்பட்டிருக்கப்படவில்லை

98. ஊரடங்கு சமயத்தில் மாவட்ட நிர்வாகம் விதித்திருந்த விதிமுறைகளை மீறி கடையைத் திறந்து வைத்திருந்ததாக போலீசாருடன் தகராறு என்று ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் சொன்னதாக அசா 2 சாட்சியமளித்துள்ளார் ஆனால் எந்த தேதி விதிமுறைகளை மீறி கடையைத் திறந்து வைத்திருந்ததாக ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் சொன்னார்கள் என அ.சா.2 தெளிவுபட சாட்சியம் அளிக்கவில்லை.

99. கடையை லேட்டாக மூடியதால் அப்பாவை போலீஸ்காரர்கள் கூப்பிட்டு சென்றதாகவும், பின்னால் தான் போய் எதற்காக அப்பாவை அழைத்துச் சென்றீர்கள் என்று கேட்கப் போனதாகவும், அப்போது போலீஸ்காரர்களுக்கும், தனக்கும் வாய்தகராறு ஆகிவிட்டதாகவும்,தன்னையும் சட்டையை பிடித்து போலிஸ்காரர்கள் உள்ளே இழுத்து சென்றுவிட்டதாகவும் பென்னிக்ஸ் சொன்னதாக அசா 17 சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் எந்த தேதி எத்தனை மணிக்கு கடையை மூடியதால் பிரச்சனை ஏற்பட்டது என பென்னிக்ஸ் சொன்னதாக என அ.சா.17 தெளிவுபட சாட்சியம் அளிக்கவில்லை.

100. எஸ்.ஐ பாலகிருஷ்ணன் கொரோனா விதிமுறைகளை மீறி கடையை திறந்து வைத்ததற்காக பிடித்த வழக்கு என்று சொன்னார் என அ.சா.14 சாட்சியம் அளித்துள்ளார். எந்த தேதி விதிமுறை மீறப்பட்டது என பாலகிருஷ்ணன் சொன்னார் என்றும் அ.சா.14குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை.

101. கடையை அடைப்பதற்கு நேரம் ஆகிவிட்டது என்றும், அப்போது பாலகிருஷ்ணன் எஸ்.ஐ வந்து ஜெயராஜிடம் கடையை அடைக்க சொன்ன போது ஜெயராஜ் கடையை அடைத்துவிடுவோம் என்று கூறியதாகவும், பிறகு பாலகிருஷ்ணன் ஜெயராஜை காவல்நிலையத்திற்கு விசாரிப்பதற்காக கூட்டிச் சென்றுவிட்டார்கள் என்று தன்னிடம் சொன்னார் என்றும் அ.சா.46 சாட்சியம் அளித்துள்ளார். எந்த தேதி கடையை அடைக்க நேரமானது என ஜெயராஜ் சொன்னார் என அ.சா.46 குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை.

102. அ.சா.பொ 23 மற்றும் அ.சா.பொ.57 இணைப்பு B சம்மந்தமான சிசிடிவி காட்சிகளை பரிசிலித்து பார்க்கும் போது அதில் 19.06.2020ம்தேதி இரவு 07.30 மணிக்கோ குற்ற எண்.312/2020 புகாரில் குறிப்பிட்டுள்ளது போல் 21.15 மணிக்கோ போலீசார் எவரும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிடம் கடையை அடைக்க சொன்னது போலவோ அவர்கள் போலீசாரை பார்த்து அசிங்கமாக பேசியதுபோலவோ கொலை மிரட்டல் விடுத்தது போலவோ தரையில் உருண்டு பிரண்டது போலவோ பணி செய்யவிடாமல் தடுத்தது போலவோ காட்சி பதிவு எதுவும் காணப்படவில்லை. அதில் ஜெயராஜ் ஆய்வாளர் வாகனத்தை நோக்கி செல்லும் போது அமைதியாக செல்வது போலவே காட்சி அமைந்துள்ளது. மேலும் அப்போது ஜெயராஜின் வேஷ்டி மற்றும் சட்டையில் தரையில் உருண்டு பிரண்டதுபோல் கறை எதுவும் காணப்படவில்லை. அவருக்கு அப்போது காயம் எதுவும் ஏற்பட்டதாகவும் தெரியவில்லை. அதே போல் அவருக்கு பின் பென்னிக்ஸ் அவரது இருசக்கர வாகனத்தில் காலை மேலே தூக்கி போட்டு அமர்ந்து செல்வது போன்ற காட்சி காணப்படுகிறது. அப்போது பென்னிக்சின் பேண்ட் மற்றும் சட்டையில் கறை எதுவும் இருப்பதாக காணப்படவில்லை. அப்போது பென்னிக்சிற்கு காயம் எதுவும் ஏற்பட்டதாகவும் தெரியவில்லை. அவர்கள் இயல்பாதான் செல்கின்றனர்,

103. இந்நிலையில் கடையை அடைக்க காலதாமதமானதாக ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் மேற்படி சாட்சிகளிடம் சொல்லியிருந்ததாக வாதத்திற்காக வைத்துக் கொண்டாலும் முன்னிடப்பட்டுள்ள சாட்சியங்களின் அடிப்படையில் பார்க்கும் போது உண்மையில் 19– 6– 20 ஆம் தேதி ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் கோவிட் விதிமுறை முறையை மீறியிருக்கவில்லை என்பது தெரியவருகிறது. சிசிடிவி காட்சி பதிவுகளின் படி பார்க்கும்போது ஜெயராஜ் மட்டுமே காவல்துறையினரால் ஜீப்பில் அழைத்து செல்லப்பட்டுள்ளார் என்பதும் அப்போது பக்கத்து கடைகளும் இயங்கி இருந்துள்ளன என்பதும் அசாஆ 22 புகாரில் குறிப்பிட்டுள்ளது போல் சம்பவம் எதுவும் நடைபெற்றிருக்கவில்லை என்பதும் தெளிவுபட நிரூபணமாகிறது

104. இந்நிலையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு எதிராக தொடரப்பட்ட சாத்தான்குளம் குற்ற எண் 312/2020 வழக்கு சம்மந்தமான கோப்பு சாத்தான்குளம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலிருந்து வரவழைக்கப்பட்டு சாத்தான்குளம் நீதித்துறை நடுவர் நீ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் அந்த ஆவணக் கோப்புகள் நீ.மா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் குற்ற எண்.312/2020 தொடர்பான புகாரில் A4 முருகன் கையெழுத்திட்டு A6 முத்துராஜா அறிவேன் சாட்சி என கையெழுத்திட்டு அது A3 ரகுகணேசால் பதிவு செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அந்த கையெழுத்துக்களை A3,4,6 மறுக்கவில்லை. ஆய்வாளர் அந்த வழக்கை விசாரிக்கச்சொன்னதாக ரேவதி சொன்னதாகவும் அதனால் அதில் கையெழுத்திட்டதாகவும் A3 தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. ஆய்வாளர் அந்த வழக்கை விசாரிக்கச் சொன்னதாக ரேவதி A3யிடம் சொன்னதை நிரூபிக்க 3ம் எதிரி தரப்பில் எவரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. மேலும் மேற்படி குற்ற எண்.312/2020 வழக்கு சம்மந்தமாக மதுரை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இருந்து பெறப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள நகல் அ.சா.ஆ.267–ஐ பரிசீலித்து பார்க்கும்போது காவல் அடைப்பு கோரிக்கையில் இரவு 22.30 மணிக்கு அந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டதாகவும் 22.45 மணிக்கு சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் வரைபடம் தயார் செய்ததாகவும் பின்னர் சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து குவிமுச பிரிவு 161–ன் கீழ் வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் கைது 23.30 மணிக்கு செய்யப்பட்டதாக கைது குறிப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அ.சாஆ.267ல் சாட்சி ரவிக்குமார் த.பெ.கணபதி ஆசாரி தைக்கா தெரு, சாத்தான்குளம் என்ற நபர் குவிமுச பிரிவு 161(3)–ன் கீழ் அளித்ததாக பதிவு செய்யப்பட்டுள்ள வாக்குமூலத்தில் 3–ம் எதிரி ரகுகணேசின் கையெழுத்து காணப்படவில்லை. 20.06.2020 அன்று அதிகாலை 00.15 மணிக்கு பென்னிக்ஸ் மொபைல் கடை முன் 3–ம் எதிரி சம்பவ இடத்தை பார்வையிட்டது போல் பார்வை மகஜர் தாக்கல் செய்யப்ட்டுள்ளது. ஆனால் பார்வை மகஜரிலும் 3–ம் எதிரி ரகுகணேஷ்–ன் கையெழுத்து காணப்படவில்லை. 3ம் எதிரி 20.06.2020ம் தேதி அதிகாலை 00.15 மணிக்கு குற்ற எண்.312/2020 வழக்கு

தொடர்பான இடத்தை பார்வையிட்டதாகவோ அப்போது சாட்சிகள் ரவிக்குமார் முருகேசன் இருந்தது போலவோ சிசிடிவி காட்சி பதிவுகளில் பதிவு எதுவும் காணப்படவில்லை. குற்ற எண்.312/2020 வழக்கு சம்மந்தமாக சம்பவ இடம் எதையும் தான் பார்வையிட்டதாக 3ம் எதிரியும் குறிப்பிட்டு சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. நீ.ம,சா,ஆ.1–ஐ பரிசீலித்து பார்க்கும்போது குற்ற எண்.312/2020 வழக்கு தொடர்பான சாட்சிகளின் வாக்குமூலமோ பார்வை மகஜரோ வரைபடமோ ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை காவல் அடைப்பு கோரியபோது சாத்தான்குளம் நீதித்துறை நடுவர் முன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கப்படவில்லை என்பதும் தெரியவருகின்றது

105. இந்நிலையில் முன்னிடப்பட்டுள்ள சாட்சியங்களின் அடிப்படையில் பார்க்கும்போது 19.6.20 ஆம் தேதி இரவு 9,15 மணிக்கு ஜெயராஜ் மற்றும் பெனிக்ஸ் நோய் பரப்பும் வகையில் கடையை திறந்து வைத்திருந்ததாகவும் கடைமுன் நின்றிருந்ததாகவும் போலீசார் அவர்களிடம் கலைந்து போகும் படி சொன்னதாகவும் அங்கிருந்த மற்றவர்கள் கலந்து போய்விட்டதாகவும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் மட்டுமே தரையில் உருண்டு பிரண்டதாகவும் கொலை மிரட்டல் விடுத்ததாகவும் அசிங்கமாக பேசியதாகவும் பணி செய்ய விடாமல் தடுத்ததாகவும் ஜெயராஜ் மற்றும் பென்னிசுக்கு எதிராக சாத்தான்குளம் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள குற்ற எண் 312/20 வழக்கு பொய்யானது என சிபிஐ தரப்பில் நிருபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது,

106. In Murthi –vs– State Rep by Inspector of Police, 2025(2) MWN (Cr.) 216,

The Hon'ble Madras High Court has held that maintainability of proceeding at instance of police – police not competent person to register FIR for offence Under section 188 – As per section 195(1)(a), for taking cognizance of offence Under section 188, Public Servant should lodge a complaint in writing – FIR/Final Report for offence under section 188 liable to be quashed. என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் கோவிட் விதிமுறைகளை மீறியதாக வருவாய்த்துறை அதிகாரிகள் எவரும் இதசபிரிவு 188–ன் கீழ் புகார் கொடுத்திருக்கவில்லை. இந்நிலையில் 19.06.2020–ம் தேதி இரவு 09.15 மணிக்கு

ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் கோவிட் விதிமுறைகளை மீறியதாக வழக்கு பதிவு செய்துள்ளது அடிப்படையற்றது.

107. இந்நிலையில் இடபிரச்சனை ஒன்று சம்மந்தமாக 19.6.2020 அன்று இரவு தான் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் காத்திருந்ததாகவும் சுமார் 7.45 மணியளவில் காவல்நிலையத்தின் உள்ளே காவல்துறை ஜீப் ஒன்று வந்தது என்றும் அதில் முன்பக்கத்தில் இருந்து இன்ஸ்பெக்டர் அவர்களும் பின்பக்கத்தில் இருந்து பாலகிருஷ்ணன் அவர்களும், அவர்களுடன் 2 காவலர்களும், ஒரு வெள்ளைவேஷ்டி வெள்ளைசட்டை அணிந்த பெரியவர் ஒருவரும் வந்தார்கள் என்றும் அசா 25 சாட்சியமளித்துள்ளார்,

108. அ.சா.25 தொடர்பான புகார் 20.06.2020ம் தேதி பெறப்பட்டதாகத்தான் ரசீது புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் 19.06.2020 அன்று அ.சா.25 காவல்நிலையத்திற்கு வந்திருக்க வாய்ப்பில்லை என்றும் எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது.

109. காவல்நிலைய ஆவணங்கள் அனைத்தும் எதிரிகளின் கட்டுப்பாட்டில் இருந்துள்ள நிலையில் அவர்கள் அசா 25 தொடர்பான புகாரை எப்போது வேண்டுமானாலும் பதிந்திருக்கலாம் இந்நிலையில் மேற்படி புகார் உண்மையில் என்று கொடுக்கப்பட்டது என நிரூபிக்க அந்த புகார் எதிரிகள் தரப்பில் சாட்சியமாக முன்னிடப்படவில்லை.

110. மேலும் அசா 25 க்கும் எதிரிகளுக்கும் தனிப்பட்ட விரோதம் இருப்பதாகவும் எதிரிகள் தரப்பில் குறிப்பிட்டு சாட்சியம் ஏதும் முன்னிடப்படவில்லை,

111. மேலும் அ.சா.25ன் சாட்சியத்தை ஒத்துரைத்து அவரது வழக்குரைஞர் அ.சா.9 சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் அசா 25ன் சாட்சியத்தை நிராகரிக்க வேண்டுமென எதிரிகள் தரப்பில் வாதிட்டுள்ளது ஏற்புடைய வாதமாக இல்லை.

112. அசா 9க்கு எதிராக வழக்கு உள்ளது என்றும் அதில் 5ம் எதிரி சாட்சி என்றும் எனவே அசா 9ன் சாட்சியத்தை நிராகரிக்க வேண்டுமென்றும் எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது.

113. சாட்சிக்கு எதிராக வழக்கு உள்ளதாலேயே அவரது சாட்சியத்தை நிராகரிக்கவேண்டுமென்பதில்லை. அவரது சாட்சியத்தில் உண்மை உள்ளதா என்பதே பரிசீலிக்கத்தக்க விசயமாகும். அ.சா.25ன் சாட்சியம் அ.சா.9ன் சாட்சியத்தை ஒத்துரைக்கும் வகையில் அமைந்துள்து. இந்நிலையில் அ.சா.9 ன் சாட்சியங்களை நிராகரிக்க வேண்டும் என எதிரிகள் தரப்பில் வாதிட்டுள்ளது ஏற்புடைய வாதமாக இல்லை.

114. சாத்தான்குளம் காவல்நிலைய எழுத்தர் அசா 44 பியூலா செல்வக்குமாரி 19 –6 –20 ஆம் தேதி இரவு 7,45 மணி அளவில் ஆய்வாளர் ஸ்ரீதரும் சார்பாய்வாளர் பாலகிருஷ்ணனும் ஜெயராஜை காவல் நிலையம் அழைத்து வந்ததாக சாட்சி யமளித்துள்ளார்,

115. இந்நிலையில் முன்னிடப்பட்டுள்ள சாட்சியங்களையும் அ.சா.பொ.23 மற்றும் அ.சா.பொ.57ன் இணைப்பு –B ல் உள்ள சிசிடிவி காட்சி பதிவுகளையும் கருத்தில் கொண்டு பார்க்கும்போது 18–6–20 ம்தேதி இரவு 08.30 மணியளவில் ஜெயராஜ் போலீசாரைபற்றி ஏசியுள்ளார் என்றும் அதனால் 19–6–20 அன்று இரவு சுமார் 7,30 மணியளவில் எதிரிகள் ஸ்ரீதர் பாலகிருஷ்ணன் முத்துராஜா ஆய்வாளரது வாகனத்தில் வண்டிமறிச்சியம்மன் கோவிலருகே வந்துள்ளனர் என்பதும் எதிரிகள் பாலகிருஷ்ணன் முத்துராஜா ஜெயராஜை மட்டும் ஆய்வாளரது வாகனத்தில் ஏற்றியுள்ளனர் என்பதும் ஸ்ரீதர் வாகனத்தின் முன்புறம் இருந்துள்ளார் என்பதும் 7:48:38 மணி வாக்கில் சாத்தான் குளம் காவல் நிலையத்திற்கு ஜெயராஜை மட்டும் அழைத்துச் சென்றுள்ளனர் என்பதும் பென்னிக்ஸ் அவரது நண்பருடன் இருசக்கர வாகனத்தில் பின்னிட்டு சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு கிளம்பி சென்றுள்ளார் என்பதும் சிபிஐ தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது, மேலும் உடன் முத்துராஜ் காவல்நிலையத்திற்கு ஜீப்பில் செல்லவில்லை என்று வைத்துக் கொ்ண்டாலும் அசா44 " ஜெயராஜ் என்பவரை அழைத்து காவல்நிலையம் வந்தனர். அதன் பின்னர் காவலர் முத்துராஜ் காவல்நிலையம் வந்தார். அவரைத் தொடர்ந்து காவலர்கள் முருகன், செல்லத்துரை

ஆகியோர் வந்தனர்" என அசா 44ன் சாட்சியமளித்துள்ளார், அதனடிப்படையில் பார்க்கும்போது பென்னிக்ஸ் காவல் நிலையத்திற்குள் சென்றபோது பின்னால் முத்துராஜாவும் முருகன், செல்லத்துரையும் காவல் நிலையத்திற்குள் சென்றுள்ளார் என்பது தெரியவருகின்றது,

116. In State of Haryana vs. Sher Singh and Others, 1981 (2) SCC 300, என்ற வழக்கில் Absence of motive does not disperse a prosecution case if the prosecution succeed in proving the same. The motive is always in the mind of person authoring the incident. Motive not being apparent or not being proved only requires deeper scrutiny of the evidence by the courts while coming to a conclusion. When there are definite evidence proving an incident and eye-witness account prove the role of accused, absence in proving of the motive by prosecution does not affect the prosecution case என மாண்புமிகு உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

எனவே மேற்படி முன் தீர்ப்பின் அடிப்படையில் பார்க்கும்போது ஜெயராஜ் போலீசாரை ஏச வில்லை என்றும் குற்றத்திற்கான உண்மையான நோக்கத்தை சிபிஐ தரப்பு நிரூபிக்க தவறியுள்ளது என்றும் ஒரு வாதத்திற்காக வைத்துக் கொண்டாலும் அது சிபிஐ தரப்பு வழக்கை எவ்வகையிலும் பாதிக்காது,

இனி எப்போது எங்கு ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு காயம் ஏற்பட்டது என்பது குறித்து பரிசீலிக்கலாம்,

## எங்கே எப்போது

117. காவல் அடைப்பிற்காக கிளைச்சிறைச்சாலைக்கு கொண்டு வரப்பட்டபோதே ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் நொண்டி நொண்டி நடந்து வந்தார்கள் என்றும், இருவருக்கும் பிட்டத்திலும், இரண்டு கை மணிக்கட்டிலும், கால் பாதங்களிலும் வீக்கங்கள் இருந்தன என்றும் இருவரும் சிறைக்கு வரும்போது லுங்கியும், சட்டையும் அணிந்திருந்தார்கள் என்றும், இருவருக்கும் லுங்கியின் பின்புறத்தில் இரத்தக்கறை இருந்தது என்றும் கோவில்பட்டி கிளை சிறைச்சாலை கண்காணிப்பாளர் அசா 2

சாட்சியமளித்துள்ளார். கோவில்பட்டி கிளை சிறைச்சாலை கைதிகள் அனுமதி பதிவேடு அ.சா.ஆ.1ல் கைதி எண்.3635 பென்னிக்சுக்கு 2 புட்டத்திலும் இரத்தம் கசிந்த நிலையில் இருந்ததாகவும் 2 கை மணிக்கட்டிலும் கால் பாதத்திலும் வீக்க காயம் இருந்ததாகவும் கைதி எண்.3636 ஜெயராஜூக்கு 2 புட்டத்திலும் இரத்தம் கசிந்த நிலையில் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

118. சிறைச்சாலையில் அனுமதிக்கப்ப்ட்டபோது அவர்களுடைய இரண்டு கால்முட்டி மற்றும் கைமுட்டில் வீக்க காயங்கள் இருந்தது என்றும் அவர்கள் உடுத்தியிருந்த உடைகளில் இரத்தம் கசிந்திருந்தது துணியை விலக்கி அவர்களுடைய பின்பகுதி

புட்டப்பகுதியை பார்த்தபோது இரத்தம் கசிந்த நிலையில் இரண்டு பக்கமும் புட்டம் முழுவதும் காயங்கள் இருந்தது என்றும் கோவில்பட்டி கிளை சிறைச்சாலை முதல்நிலை காவலர் அ.சா.24 சாட்சியமளித்துள்ளார்.

119. இந்நிலையில் எழுதப்படாத தாளில் தங்களிடம் கிளை சிறைச்சாலையில் கையெழுத்து பெற்றுக்கொண்டதாக எதிரிகள் தரப்பில் வாதம் முன் வைக்கப்பட்டுள்ளது.

120. கோவில்பட்டி கிளை சிறைச்சாலை அதிகாரிகளுக்கு 6, 7 எதிரிகளிடம் வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை. வாதத்திற்காக வெள்ளை பேப்பரில் கையெழுத்து போடும்படி கோவில்பட்டி கிளை சிறைச்சாலையில் கூறியிருந்தால் அது பற்றி உயர் அதிகாரிகளுக்கு 6,7 எதிரிகள் தெரியப்படுத்தி இருக்க வேண்டும் ஆனால் அவ்வாறு ஒரு சம்பவம் நடந்ததாகவோ 6,7 எதிரிகள் உயரதிகாரிகளிடம் புகார் எதுவும் சொன்னதாகவோ 6,7 எதிரிகள் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை.

121. ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ்க்கு காயம் இருந்ததாக குற்ற எண் 312/2020 வழக்கு தொடர்பான காவல் அடைப்பு கோரிக்கையிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

122. மேலும் குற்ற எண்.312/2020 வழக்கு தொடர்பான கோப்பு அ.சா.ஆ.267–ல் பக்கம் 18,19,20,21,22 ஆகியவற்றில் உள்ள குவிமுச பிரிவு 161(3)–ன் கீழான

வாக்குமூலங்களில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ்க்கு பெடக்ஸ் மற்றும் உடலிலும் காயங்கள் ஏற்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

123. இந்நிலையில் எழுதப்படாத நிலையில் தங்களிடம் கையெழுத்துப் பெற்றுக் கொண்டதாகவும் பின்னிட்டு அந்த காயங்களை கோவில்பட்டி கிளை சிறைச்சாலையில் பதிவேட்டில் எழுதிக் கொண்டனர் என்றும், எதிரிகள் தரப்பில் முன் வைத்துள்ள வாதம் அடிப்படையற்றவாதமாகவே உள்ளது. அது ஏற்புடைய வாதமாக இல்லை.

மேலே கண்ட சாட்சிகளின் அடிப்படையில் பார்க்கும்போது கோவில்பட்டி கிளை சிறைச்சாலைக்கு அழைத்து வரப்படுவதற்கு முன்பே ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு பிட்டத்திலும் உடலிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளது நிரூபிக்கப்பட்டுள்ளது என்ற இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது

124. காவல் அடைப்பு கோர உடல் தகுதிச்சான்று பெற சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனைக்காக ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆஜர் படுத்தப்பட்டுள்ளதில் அவர்களை மருத்துவர் அ.சா.45 வினிலா பரிசோதித்துள்ளார். இதுகுறித்து அவர் சாட்சியமளிக்கையில் 20.06.2020ம் தேதியன்று காலை சுமார் 8.30 மணியளவில் ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோரை இரண்டு காவலர்கள் அழைத்து வந்தார்கள் என்றும் ஜெயராஜ், பென்னிக்ஸ் வரும்போது நடக்க கஷ்டப்பட்டு தாங்கி தாங்கி வந்தார்கள் என்றும் இரண்டு காவலர்களும் தன்னிடம் மெடிக்கல் மெமோவை காண்பித்து ஜெயராஜ், பென்னிக்ஸ் இரண்டு பேரும் 19.06.2020-ம் தேதியன்று புரண்டு புரண்டு பிரச்சனை செய்ததால் அவர்களுக்கு அடிப்பட்டுள்ளது என்றும் அவர்களுக்கு சிசிக்சை அளிக்கும்படியும் மெமோ கொடுத்தார்கள் என்றும், ஜெயராஜ் தனக்கு உடல் முழுவதும் வலி உள்ளது என்று சொன்னார் என்றும் ஜெயராஜ் தன்னுடைய புட்டப்பகுதியில் காயம் உள்ளது என்று கூறி தன்னுடைய புட்டப்பகுதியில் இருந்த உடையை கீழே இறக்கி தன்னிடம் காண்பித்தார் என்றும், அப்போது ஜெயராஜ் என்பவருக்கு இரண்டு புட்டத்திலும் பரவலாக காயங்கள் இருந்தது என்றும், தோல் உறிந்து இரத்தக்கசிவும் இருந்தது

என்றும், அவர் உடுத்தியிருந்த துணியிலும் இரத்தக்கசிவு இருந்தது என்றும், பென்னிக்ஸ் உடம்பு வலி இருப்பதாக கூறினார் என்றும், அவருக்கு வலதுகையின் ஆள்காட்டி விரலில் வீக்கம் இருந்தது என்றும், சிராய்ப்புக்காயமும் இருந்தது என்றும், அவருடைய இடதுகாலின் பாதப்பகுதியின் முன்பகுதியில் வீக்கக் காயம் இருந்தது என்றும், பென்னிக்ஸ் தனக்கு புட்டப்பகுதியில் காயம் இருப்பதாக கூறினார் என்றும், உடையை கீழே இறக்கி காயத்தை தன்னிடம் காண்பித்தார் என்றும், இரண்டு புட்டப்பகுதியிலும் பரவலாக காயங்கள் இருந்தன என்றும், இரத்தக்கசிவும் இருந்தது என்றும், மேற்படி புட்டப்பகுதியில் இருந்த காயமானது தோல் உரிந்து இரத்தம் கசிந்து இருந்தது என்றும்,அதன் அளவு தோராயமாக சுமார் 4 செ.மீ ஆக இருந்தது என்றும், பென்னிக்ஸ் தன்னிடம் வேறு காயங்கள் பற்றி சொல்லவில்லை என்றும், அ.சா.45 சாட்சியமளித்துள்ளார்.

125. இந்நிலையில் சாத்தான்குளம் மருத்துவமனையில் O.P.சீட்டு வழங்கும் ஊழியர் திரு. நடராஜன் அ.சா.14 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் 20.06.2020 ஆம் தேதி காலை 8 மணிக்கு தான் சாத்தான்குளம் மருத்துவமனையில் பணியில் இருந்தபோது சாத்தான்குளம் காவல்நிலையத்தில் இருந்து எஸ்.ஐ பாலகிருஷ்ணன், வெயில்முத்து, சாமதுரை இன்னும் 2, 3 காவலர்கள் உடன் ஜெயராஜ் மற்றும் அவருடைய மகன் பென்னிக்சை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள் என்றும், அவர்களின் கைகள் மற்றும் கால்களில் இரத்தக்காயம் மற்றும் வீக்கம் இருந்தது என்றும் தான் அவர்களுக்கு O.P. சீட்டு போட்டு மருத்துவரிடம் அனுப்பி வைத்ததாகவும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு தான் மருந்து போட்டுவிட்டதாகவும் புட்டப்பகுதியில் உள்ள காயங்களுக்கு தான் மருந்து போட்டுவிட்டதாகவும் அதன்பிறகு அவர்கள் வெளி அறையில் உட்கார்ந்திருந்தார்கள் என்றும், இயற்கை அழைப்பிற்காக அந்த வழியாக போகும்போது அவர்கள் மிகவும் சோர்வாக இருந்தார்கள் என்றும், வேஷ்டியில் இரத்தம் அதிகமாக இருந்ததால் துணி மாற்றி இருந்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

126. சாத்தான்குளம் அரசு மருத்துவமனையின் செவிலியர் கிருபை கிரனேப்பு அ.சா.15 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் 20.06.2020 ஆம் தேதி Hospital worker ஆன

P.நடராஜன் தன்னிடம் போனில் தொடர்பு கொண்டு இரண்டு பேர் ஊசி போட காத்திருப்பதாக சொன்னதாகவும், நான் உடனே ஊசி போடும் பகுதிக்கு வரும்போது ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அங்கு இருந்தார்கள் என்றும், அவர்கள் இருவருடைய கையிலும் மருத்துவர் வினிலா எழுதிக்கொடுத்த மருந்துச்சீட்டு இருந்தது என்றும், ஊசியை இடுப்புபகுதியில் போட வேண்டும் என்பதால் அதற்கு இடுப்புபகுதி துணியை ஒதுக்கி தயாராக வைத்திருங்கள் என்று சொன்னதாகவும், இடுப்புபகுதியில் துணியை இறக்குவதற்கு இரண்டு பேருமே கையை கஷ்டப்பட்டு தூக்குவதை பார்த்ததாகவும், இடுப்புபகுதியில் ஊசி போடும் போது அந்த இடத்தில் இரத்தக்கட்டு (haematoma) இருந்தது என்றும், இருவருக்கும் தலா 2 ஊசி இடுப்பின் இரண்டு பகுதியிலும் போடும் போது இரண்டு பக்கமும் இரத்தக்கட்டு இருந்ததை பார்த்ததாகவும், அதோடு அவர்களின் லுங்கியில் இரத்தக்கறை இருந்ததையும் கவனித்ததாகவும், ஊசி போட்டுவிட்டு செல்லும் போது பென்னிக்ஸ் நொண்டி நொண்டி நடந்ததையும், காலில்

வீக்கம் இருந்ததையும் பார்த்ததாகவும், இருவரின் கையிலும் மணிக்கட்டுப்பகுதியில் வீக்கம் இருந்ததையும் பார்த்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

127. மேலும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் உறவினரான அ.சா.5 தேசிங்குராஜா 20.06.2020 அன்று காலை 7 மணிக்கு போலீஸ் வண்டி ஜி.ஹெச்சுக்குள் நுழைவதைப் பார்த்ததாகவும், 8 மணியளவில் உதவிஆய்வாளரிடம் கேட்டு வடை மற்றும் டீயை வாங்கிவிட்டு வந்து ஜீப்பின் பின்னால் உள்ள கதவை திறந்த போது இரண்டு பேர் இடுப்பிலும் இரத்தக்கசிவும், கைகளில் வீக்கக்காயமும், முகம் மிகவும் வேதனையில் மோசமான கண்டிசனில் நடக்க முடியாத நிலையில் இருந்தார்கள் என்றும், கை வீங்கி இருந்தது என்றும், இடுப்பிற்கு கீழே உள்ள துணியில் இரத்தக்கசிவாக இருந்தது என்றும், நடக்க முடியாமல் நொண்டி நடந்து சென்றார்கள் என்றும், உள்ளே டாக்டரை பார்த்துவிட்டு பின்பக்கம் உள்ள ஓட்டை போடப்பட்ட இரும்பு சேரில் உட்கார வைத்தார்கள் என்றும், கொஞ்சநேரம் அங்கு இருந்தார்கள் என்றும், டாக்டர் கூப்பிடுவதாக சொன்னவுடன் அழைத்துச் சென்றார்கள் என்றும், அப்போது அத்தானின் வேஷ்டியிலும், அவர் மகன் லுங்கியிலும் இரத்தம் ஊறிப்போயிருந்தது என்றும், அந்தச்

சேரிலும் இரத்தம் படிந்திருந்தது என்றும், பென்னிக்ஸ் போட்டிருந்த ஒரு சந்தனக்கலர் மற்றும் ஆரஞ்சு கலர் சேர்ந்த கலருடைய சட்டை பின்புறமும் இரத்தம் ஊறியிருந்தது என்றும், அதை மாற்றுவதற்கு பேக்கில் இருந்து கோடு போட்ட டார்க்கலர் சட்டையை எடுத்து கொடுத்ததாகவும், உள்ளேயிருந்து வெளியே வரும்போது இரத்தக்கசிவோடு இருந்தார்கள் என்றும் சாட்சி யமளித்துள்ளார்.

128. ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் உறவினரான அ.சா.6 ஜோசப், 20.06.2020 ஆம் தேதிகாலை சுமார் 8.20 மணியளவில், தானும், தன் மனைவியும் அதன்பின்பு ஆஸ்பத்திரி போனதாகவும், அங்கே பிளட் பிரஷ்ஷர் பரிசோதனை செய்யும் அறைக்கு அருகில் ஓட்டை போடப்பட்ட இரும்புச்சேரில் இருவரையும் உட்கார வைத்திருந்தார்கள் என்றும், பிளட்பிரஷ்ஷர் டெஸ்ட் செய்வதற்காக இருவரையும் எழுப்பினார்கள் என்றும், அப்போது புட்டத்தில் இரத்தக்கறை இருந்தது என்றும், சேரில் இரத்தம் படிந்திருந்தது என்றும், பென்னிக்ஸ் இட்லியை கையில் எடுத்த வாய்க்கு கொண்டு செல்லும்போது கையின் மொலியில் அடிபட்டு இருந்ததால் இட்லியை வாய்க்கு கொண்டு செல்ல முடியாமல் கீழே விட்டு விட்டார் என்றும், இடுப்பு பகுதியில் கை

வைத்தவுடன் தன் மனைவி கை முழுவதும் இரத்தமாகிவிட்டது என்றும், பென்னிக்சின் சட்டையின் இடுப்புபகுதியில் இரத்தம் படிந்திருந்தது என்றும் புட்டம்பகுதியில் இரத்தம் கசிந்திருந்தது என்றும், பையில் இருந்து ஒரு போர்வையை எடுத்து வண்டியின் பின்சீட்டில் விரித்துக் கொடுத்ததாகவும், பென்னிக்சும், ஜெயராஜ் அத்தானும் கட்டாயத்தின் பேரில் பின்னால் பெட்சீட்டின் மேல் உட்கார்ந்தார்கள் என்றும் சாட்சி யமளித்துள்ளார்.

129. பென்னிக்சின் நண்பரான அ.சா.7 சங்கரலிங்கம், 20.06.2020 அன்று மருத்துவ சோதனைக்காக பென்னிக்ஸ் மற்றும் அவரது அப்பாவை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லும் போது இருவரும் நடக்க முடியாமல் சிரமப்பட்டு நடந்து சென்றார்கள் என்றும், அப்போது பென்னிக்ஸ் கை, கால்களில் வீக்கம் மற்றும் இரத்தக்கசிவு இருந்தது என்றும், உட்கார முடியாமல் இரும்புச்சேரில் உட்கார்ந்திருந்தார்கள் என்றும், 11 மணியளவில் மருத்துவமனையில் இருந்து கோர்ட்டிற்கு ரிமாண்ட் செய்ய அழைத்துச்

சென்றார்கள் என்றும், அப்போது பென்னிக்சின் சட்டையில் இரத்தக்கசிவு இருந்ததால் மாற்றச் சொன்னார்கள் என்றும், பென்னிக்ஸ் மற்றும் அவரது அப்பாவின் புட்டத்தில் இரத்தக்கசிவு இருந்ததால் பையில் இருந்த போர்வையை எடுத்து பின்சீட்டில் விரித்தார்கள் என்றும், அதில் அவர்கள் உட்கார்ந்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

130. பென்னிக்சின் நண்பரான அ.சா.8 ரவிசங்கர், (20.06.2020 ம் தேதி) 7.30 மணியளவில் பென்னிக்சையும், அவர் அப்பாவையும் சுமோ ஜீப்பில் ஏற்றிக்கொண்டு ஜி.ஹெச்சுக்கு போனார்கள் என்றும், சுமார் 10 நிமிடத்தில் இறங்கி இருவரும் ஆஸ்பத்திரிக்கு போனார்கள் என்றும் இருவரும் நொண்டி நொண்டி நடந்து சென்றார்கள் என்றும், அதன்பிறகு சுமார் 10, 10.45, 11 மணியளவில் இருவரையும் ரிமாண்டிற்கு கோர்ட்டிற்கு அழைத்துச் சென்றார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

131. பென்னிக்சின் நண்பரான அசா.9 மணிமாறன், (20.06.2020 ம் தேதி) மருத்துவமனையில் போய் பார்த்தபோது பென்னிக்சுக்கு கை, கால்கள், முகம் வீங்கி இருந்தது என்றும் அவருடைய கை, முகங்களில் சிறிய பொட்டுக்காயங்கள் இருந்தது என்றும் அடித்ததால் விலா பகுதியில் வலி இருப்பதாக சொன்னதாகவும் அந்த நேரம் சுற்றி எஸ்.ஐ பாலகிருஷ்ணன், ஏட்டு செல்லத்துரை, ஏட்டு சாமதுரை, போலீஸ் முத்துராஜா இருந்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

132. பென்னிக்சின் நண்பரான அசா 10 ராஜாராம் , 20-6-20ம் தேதி காலை 8 மணிக்கு ஸ்டேசன் வரும் போது சுமோ ஆஸ்பத்திரியில் நிற்பதை பார்த்ததாகவும் தானும் மணிமாறனும் பாத்தபோது இருவரும் உட்கார முடியாமல் உட்கார்ந்திருந்தார்கள் என்றும் பென்னிக்ஸ, அவர் அப்பா ஆஸ்பத்திரி சைடிலுள்ள ஒரு இரும்புச்சேரில் உட்கார்ந்திருந்தார்கள் என்றும் பென்னிக்சுக்கு கை, கால், முகம் இரத்தக்காயமாகவும், வீக்கமாகவும் இருந்தது என்றும் ரிமாண்டிற்கு அழைத்துச் செல்லும் போது பென்னிக்ஸ் சட்டையில் இரத்தக்கறையாக இருந்தது என்றும் மணிமாறன் எஸ்.ஐ.பாலகிருஷ்ணனிடம் சட்டையை மாற்றச் சொல்லவா என்று கேட்டவுடன், அவர் மாற்றச் சொல்லுங்கள் என்று சொன்னார் என்றும் அதன்பிறகு பென்னிக்ஸ்

சட்டையை மாற்றியதாகவும் வண்டியில் ஏறும் போது நடக்க முடியாமல் நொண்டி, நொண்டி நடக்க முடியாமல் இருவரும் சென்றார்கள் என்றும் பின்னால் புட்டத்தில் இருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது என்றும் கொரோனா கால கட்டம் என்பதால், தங்களை கோர்ட்டிற்குள் விடவில்லை என்றும் தாங்கள் எதிரிலுள்ள டீக்கடையில் இருந்ததாகவும் சிறைசாலைக்கு கொண்டு செல்ல நாகராஜ் வண்டியை ஏற்பாடு செய்திருந்ததாகவும் பென்னிக்ஸ் மற்றும் அவருடைய அப்பாவிற்கு பின்புறத்தில் இரத்தம் வடிந்திருந்ததால், காரின் பின்சீட்டில் போர்வையை விரித்து, அதில் பென்னிக்சும், அவரது அப்பாவும் உட்கார்ந்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

133. 1ம் எதிரியின் வாகன ஓட்டுநர் அசா 26 ஜெயசேகர் (20-6-20 அன்று ) காலையில் 6.30 மணியளவில் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் அவர்கள் அரசு மருத்துவமனைக்கு போக வேண்டுமென்று சொன்னார் என்றும் பாராவில் ரேவதி இருந்தார் என்றும் பென்னிக்சின் உறவினர்கள் உடைகளை மாற்றுவதற்கு கொடுத்தார்கள் என்றும் உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் வாகனத்தின் முன்புறம் ஏறிக் கொண்டார் என்றும் காவலர் முத்துராஜா வாகனத்தின் நடுவில் ஏறிக் கொண்டார் என்றும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் நொண்டி, நொண்டி வந்து வாகனத்தின் பின்னால் ஏறிக் கொண்டார்கள் என்றும் அவர்களுடைய உடைகளில் இரத்தம் இருந்தது என்றும் செல்லத்துரையும் பின்னால் ஏறிக் கொண்டார் என்றும் காலை 7.15 மணியளவில் சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு போகச் சொன்னார் என்றும் உறவினர்கள் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ்-க்கு டீ வாங்கி கொடுத்தார்கள் என்றும் பின்பு ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இறங்கி நொண்டி நொண்டி அரசு மருத்துவமனைக்கு உள்ளே சென்றார்கள் என்றும் புட்டத்தில் இரத்தக்கசிவு இருந்தது என்றும் அசா 26 சாட்சியம் அளித்துள்ளார்.

134. பென்னிக்சின் உறவினர் அசா 30 தாவீது, மறுநாள் (20-6-20 அன்று) காலை 6.45 மணிக்கு மேல் சாத்தான்குளம் காவல்நிலையம் சென்றபோது சாத்தான்குளம் காவல்நிலையத்தில் இருந்து டாடா சுமோ வெளியே வந்து சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு வந்தது என்றும் அந்த வண்டியில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ்

இருந்தார்கள் என்றும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் வண்டியில் இருந்து இறங்கி மருத்துவமனையின் உள்ளே சென்றார்கள் என்றும் அப்போது ஜெயராஜின் வேட்டி முழுவதும் இரத்தமாக இருந்தது என்றும் பென்னிக்சின் சாரத்தில் இரத்தமாக இருந்தது என்றும் அவர்கள் இருவரும் நடக்க முடியாமல் குனிந்து மருத்துவமனைக்குள் சென்றார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

135. மேலும் 20.06.2020 தேதியிட்ட பென்னிக்ஸின் விபத்து பதிவேடு நகல் அ.சா.ஆ.258 ல் பென்னிக்ஸ்க்கு காலில் வீக்கம் , வலது ஆள்காட்டி விரலில் சிராய்ப்பு காயம், பிட்டத்தில் சிராய்ப்பு காயம்இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.ஆ.259 ல் ஜெயராஜூக்கு பிட்டப் பகுதியில் வலி இருந்ததாகவும் 2 x 3 cm அளவு சிராய்ப்பு காயம் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

136. மேலும் சாத்தான்குளம் அரசு மருத்துவமனை காட்சி பதிவுகள் அடங்கிய பென்டிரைவ் அ.சா.பொ.1ல் 11வது வீடியோவில் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் 20.06.2020ன் தேதி சுமார் 10.02 மணியளவில் சேரில் உட்கார்ந்திருந்த ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் எழும்பி நொண்டி நொண்டி செல்வது போலவும் பென்னிக்ஸ் பிட்டத்தில் ஈரம் இருப்பது போலவும் காட்சிகள் பதிவாகியுள்ளது.

137. அ.சா.பொ.1ல் 8வது வீடியோவில் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் 20.06.2020ன் தேதி சுமார் 09:11:00 மணிதுளியில் பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் இருவரும் நொண்டி நொண்டி நடந்து வருவது போல் காட்சி பதிவாகியுள்ளது மேலும் அச்சமயத்தில் பென்னிக்ஸ்–ன் பிட்டப்பகுதியில் கைலியில் கறை இருப்பது போல் தெரிகிறது.

138. ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் குளித்துவிட்டு வந்ததாகவும் அதனால் பிட்ட பகுதியில் ஈரம் இருப்பது போல் கைலியில் காணப்படுகிறது என்றும் அது அழுக்கு போல் தெரிவதாகவும் எதிரிகள் தரப்பில் கூறப்பட்டது.

139. அ.சா.பொ.1ல் சாத்தான்குளம் அரசு மருத்துவமனை சிசிடிவி பதிவில் 12வது வீடியோவில் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் பென்னிக்ஸ் லேசான மஞ்சள்

கலர் சட்டையை கழற்றி ப்ளூ கலர் சட்டை மாற்றுவது போல் காட்சிகள் பதிவாகியுள்ளது. ஏற்கனவே குளித்துவிட்டு வந்திருந்தால் மருத்துவமனையில் மீண்டும் உடையை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

140. மேற்படி சாட்சியங்களின் அடிப்படையில் பார்க்கும்போது குறிப்பாக 20.06.2020ம் தேதி சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு ஜெயராஜ் மற்றும் பெனிக்ஸ் கொண்டுவரப்பட்ட போதே அவர்களுக்கு பிட்டத்திலும் உடலிலும் காயங்கள் ஏற்பட்டிருந்துள்ளது என்பதும் அவர்களது ஆடைகளில் ரத்தம் படிந்து இருந்துள்ளது என்பதும் நிரூபணம் ஆகிறது.

141. இந்நிலையில் காயச் சான்றிதழில் Accidental என எனக்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு இரண்டு காயங்கள் மட்டுமே இருந்துள்ளது என்றும் கோவில்பட்டி கிளை சிறைச்சாலை சுவர்களிலும் ரத்தக்கரை இருந்ததாக தடய அறிவியல் வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள் என்றும், இதிலிருந்து மற்ற காயங்கள் கிளை சிறைச்சாலையில் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடும் என்றும் எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது.

142. 20.06.2020 தேதி ஜெயராஜ் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் மருத்துவர் அ.சா.45 வினிலா முன் ஆஜர்படுத்தப்பட்டுள்ளபோது பதிவுசெய்யப்ப்ட்டுள்ள விபத்து பதிவேடு நகல் அ.சா.ஆ.259–ஐ பரிசீலித்துப்பாக்கும் போது அதில் தாக்கி காயப்படுத்தப்பட்டதாக (assaulted) என குறிப்பிடப்பட்டு அது பின் அடிக்கப்பட்டு Accidental injury என குறிப்பிடப்பட்டுள்ளது, அதில் இரவு 8.30 மணிக்கு காமராஜர் சிலை அருகே போலீசார், துரத்திய போது ஏற்பட்டதாக குறிப்பிடபட்டுள்ளது. அவ்வாறு ஒரு நிகழ்வு நடந்தாகவோ அதில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு காயம் ஏற்பட்டதாவோ ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு எதிரான சாத்தான்குளம் குற்ற எண் 312/2020 வழக்கில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. அ.சா.பொ.23 மற்றும் 57 இணைப்பு B காட்சிபதிவுகளிலும் போலீசார் துரத்தியதாகவோ அதில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் கீழே விழுந்ததாகவோ காட்சிபதிவு எதுவும் காணப்படவில்லை. ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் பிரேத பரிசோதனை சம்பந்தமான வீடியோ காட்சிகள் திரையிட்டு

பரிசீலிக்கப்பட்டது. அது சம்பந்தமான புகைப்படங்களும் பரிசீலிக்கப்பட்டது அதனை பரிசீலித்துப்பாக்கும் போது ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு பிட்டங்களில் தீவிரமான காயங்கள் ஏற்ப்பட்டுள்ளது தெரியவருகின்றது. அந்தக் காயங்கள் தரையில் விழுந்து புரளுவதால் ஒருவரால் தனக்கு தானே ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்ற முடிவிற்கு சாதாரண விவேகம் உள்ள எந்த ஒரு மனிதனாலும் வர இயலாது. இந்நிலையில் காவல்துறையினர் தாக்கியதைதான் அசால்ட் என மருத்துவர் அ.சா.45 எழுதியிருக்கக்கூடும் என்றும் பின்னிட்டு காவலர்களுக்கு பயந்து அதை ஆக்சிடென்ட் என எழுதி இருக்க கூடும் என்றே கருதத் தோன்றுகிறது.

143. தான் பார்த்த காயத்தின் அளவை தோராயமாக A.R.entry–ல் பதிவு செய்துள்ளதாகவும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் வேறு எந்தக் காயங்களை பற்றியும் தன்னிடம் தெரிவிக்கவில்லை என்றும், படுக்க வைத்து பரிசோதிக்கவில்லை என்றும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அணிந்திருந்த உடைகளை கழற்றி நிர்வாணமாக பார்க்கவில்லை என்றும் அ.சா.45 சாட்சியமளித்துள்ளார். அதன் அடிப்படையில் பார்க்கும்போது ஜெயராஜ் மற்றும் பெனிக்சுக்கு ஏற்பட்ட காயங்களை அசா 45 மேலோட்டமாகவே பதிவு செய்துள்ளார் என்பதும் முழுமையாக பதிவு செய்திருக்கவில்லை என்பது தெரிய வருகிறது, கைதிகள் வருகை பதிவேட்டில் வெளிப்புற காயங்களைப் பொறுத்தவரையில் எனக்குத் தெரிந்ததை அனுமதி பதிவேட்டில் பதிவு செய்வோம் என்பதாகவே அசா 2 ம் சாட்சியம் அளித்துள்ளார். அதன் அடிப்படையில் பார்க்கும்போது ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு ஏற்பட்ட காயங்களை கைதிகள் வருகை பதிவேட்டிலும் மேலோட்டமாகவே பதிவு செய்துள்ளார்என்பதும் முழுமையாக பதிவு செய்திருக்கவில்லை என்பது தெரிய வருகிறது, அ.சா.18ம் வேறு காயங்கள் இருப்பதாக அவர்கள் தன்னிடம் காட்டவில்லை என்றும் அதை தான் பரிசோதனை செய்யவில்லை என்றும் குறுக்கு விசாரணையில் சாட்சியமளித்துள்ளார்

144. ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ்க்கு பிட்டத்தில் இருந்துள்ள காயங்கள் தவிர மற்ற காயங்கள் சிராய்ப்பு மற்றும் கன்றிய காயங்களாக உள்ளன. பிட்டத்திலிருந்துள்ள

காயங்கள் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டுள்ள போதே இருந்துள்ளது. மேலும் அப்போது அவர்களது பிட்டபகுதியில் இருந்து ரத்தமும் நீரும் வடிந்து இருந்துள்ளது இது குறித்து அ.சா.5 முதல் 10, 14, 15, அ.சா.26, 30 தெளிவுபட சாட்சி அளித்துள்ளனர். அது குறித்து ஏற்கனவே விரிவாக கண்டுள்ளோம். இந்நிலையில் மேற்படி பிட்டத்தில் இருந்த காயத்திலிருந்த வடிந்த இரத்தம் கலந்த நீர் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் எழுந்து நடக்க முடியாமல் மேற்படி கிளைச்சிறைச்சாலையில் சுவற்றை பிடித்து நடந்துள்ளபோது ஏற்பட்டிருக்கக்கூடும்.

145. குறிப்பாக பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் ஆகியோருடன் ஒரே சிறையில் அடைக்கப்பட்டிருந்துள்ள கைதி தமிழ்செல்வன் சிறையில் இருந்த போது ஜெயராஜுக்கும் அவரது மகன் பென்னிக்சின் பின்பக்கம் நிற்காமல் நீர் வடிந்து கொண்டிருந்ததாகவும், முதல்நாள் லேசான ஈரம் தான் இருந்தது என்றும், மூன்றாம் நாள் தான் அதிகமாக நீர் வடிந்தது என்றும், அவர்களது பின்புறத்தில் இருந்து வடிந்த அந்த நீர் தண்ணீர் போன்று மஞ்சளாகவும், சிவப்பு நிறம் கலந்தும், அவர்களது பட்டக்சிலும், பின்தொடைகளும் தண்ணீரில் நனைத்தது போன்று பின்பக்கத்தில் ஒட்டிக் கொண்டிருந்ததாகவும், அதிலிருந்து மீன் மார்க்கெட்டில் அடிக்கும் துர்நாற்றத்தை போன்று கவுச்சி வாடை வீசியபடி இருந்ததாகவும், சிறையில் அடைத்த முதல் இரண்டு நாட்கள் அவரால் கொஞ்சம் பக்கவாட்டில் இருந்த சுவரைப் பிடித்தும், கழிவறை சுவற்றை பிடித்தும் நடக்க முடிந்தது என்றும், அனைத்து கைதிகளையும் மூன்று வேளை சாப்பிடும் போது வரிசையாக அமரச் சொல்லும்போது கூட பென்னிக்சாலும், அவரது அப்பாவாலும் தரையில் அமர முடியாமல் பக்கவாட்டிலுள்ள சுவற்றை பிடித்தபடியே நிற்பார்கள் என்றும், மூன்றாவது நாள் பென்னிக்சால் கொஞ்சம் கூட நடக்க முடியாமலும், நிற்க முடியாமலும், படுக்க முடியாமலும், சாப்பிடும் போது கூட யானையை போன்று இரண்டு கைகளையும் தரையில் ஊன்றியும், இரண்டு கால் முட்டிகளையும் தரையில் முட்டி போட்டுக் கொண்டும், மிகவும் சிரமப்பட்டு கொஞ்சமாக சாப்பிட்டு, மிச்சம் வைத்துவிடுவார் என்றும்

தன்னிடம் கைதி தமிழ்செல்வன் தன்னிடம் வாக்குமூலம் கொடுத்தாக அ.சா.50 திரு.பாரதிதாசன் சாட்சியம் அளித்துள்ளார்.

146. மேலும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுடன் கோவில்பட்டி கிளை சிறையில் அடைக்கப்பட்டிருந்த மற்றொரு கைதியான லட்சுமணன் பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் ஆகியோர் உடம்பில் நிறைய காயங்கள் இருந்ததாகவும், அவர்கள் வலி தாங்க முடியாமல் அங்கும் இங்கும் நடந்து இடம் மாறிக் கொண்டிருந்ததால் அவர்களுக்கு ஒரு பக்கமாக இடம் ஒதுக்கிவிட்டதாகவும் பென்னிக்சின் குண்டியில் இருந்து மஞ்சள் மற்றும் சிவப்பு நிறம் கலந்த சலமாக நிற்காமல் வடிந்து கொண்டிருந்தது என்றும், பென்னிக்ஸ் அணிந்திருந்த லுங்கி அந்த சலத்தால் நனைந்து ஈரமாக இருக்கும் என்றும், அவற்றை அவர் அவ்வப்பொழுது மாற்றிக் கொண்டே இருப்பார் என்றும் தன்னிடம் வாக்குமூலம் கொடுத்தாக அசா50 திரு.பாரதிதாசன் சாட்சியம் அளித்துள்ளார். இது பிட்டத்தில் வடிந்திருந்த நீரை துடைத்துள்ளதாலும் சுவரில் கை வைத்து நடந்துள்ளதாலும் கோவில்பட்டி கிளை சிறைச்சாலையில் கைதி அறை எண் 3–ன் சுவர்களில் மேற்படி ரத்தக் கறைகள் படிந்திருந்துள்ளது என்பதை உறுதிபடுத்துவதாக உள்ளது.

147. குறிப்பாக கோவில்பட்டி கிளை சிறைச்சாலையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோருடன் சிறையில் இருந்துள்ள கைதிகள் எவரும் கிளை சிறைச்சாலையில் எவரும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை தாக்கி காயப்படுத்தியதாக குறிப்பிட்டு சாட்சி எதுவும் அளிக்கவில்லை.

a) In K. Gopal Reddy v. State of A.P., (1979) 1 SCC 355 : 1979 SCC (Cri) 305 : 1978 SCC OnLine SC 335

A reasonable doubt", does not mean some light, airy, insubstantial doubt that may flit through the minds of any of us about almost anything at some time or other; it does not mean a doubt

begotten by sympathy out of reluctance to convict; it means a real doubt, a doubt founded upon reasons

. As observed by Lord Denning in Miller v Minister of Pensions "Proof beyond a reasonable doubt does not mean proof beyond a shadow of a doubt. The law would fail to protect the community if it admitted fanciful possibilities to deflect the course of justice. If the evidence is so strong against a man as to leave only a remote possibility in his favour, which can be dismissed with the sentence "of course it is possible but not in the least probable", the case is proved beyond reasonable doubt, but nothing short of that will suffice." என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

b) In Khem Kara v.State of U.P. [(1974) 4 SCC 603 : 1974 SCC (Cri) 689 : AIR 1974 SC 1567] ல் மாண்புமிகு உச்சநீதிமன்றம்

"Neither mere possibilities nor remote possibilities nor mere doubts which are not reasonable can, without danger to the administration of justice, be the foundation of the acquittal of an accused person, if there is otherwise fairly credible testimony."என தீர்ப்பளித்துள்ளது.

அதனடிப்படையில் பார்க்கும்போது போதுமான நம்பகத்தன்மை வாய்ந்த சாட்சியம் இருக்கும் பட்சத்தில், வெறும் சாத்தியக்கூறுகளோ, தொலைதூரச் சாத்தியக்கூறுகளோ, அல்லது நியாயமற்ற வெறும் ஐயங்களோ ஒரு குற்றம் சாட்டப்பட்டவரை விடுதலை செய்வதற்கான அடிப்படையாக அமைய இயலாது என்பது தெளிவாகின்றது.

148. இந்நிலையில் கிளை சிறைச்சாலையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என தனது விசாரணையில் தெரியவருவதாக நீதி விசாரணை நடத்தியுள்ள நீதித்துறை நடுவர் அ.சா.50-ம் தனது அறிக்கை அ.சா.ஆ. 128 மற்றும் அ.சா.ஆ.129 ல் குறிப்பிட்டுள்ளார்.

149. எனவே கோவில்பட்டி கிளை சிறைச்சாலைக்கு கொண்டு செல்லும் முன் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ்க்கு சில காயங்கள் மட்டுமே இருந்துள்ளது என்றும் மற்ற

காயங்கள் கோவில்பட்டி கிளை சிறைச்சாலையில் ஏற்பட்டுள்ளது என்றும் எதிரிகள் தரப்பில் முன் வைத்துள்ள வாதம் ஏற்புடைய வாதமாக தோன்றவில்லை.

150. குறிப்பாக கோவில்பட்டி கிளை சிறைச்சாலையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோருடன் சிறையில் இருந்துள்ள கைதிகள் திரு.கருப்பசாமி, அசா 17 ஆகவும் திரு.ராஜாசிங் அ.சா.47 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளத்தில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் கோவில்பட்டி கிளை சிறைச்சாலையில் எவரும் தங்களை தாக்கி காயப்படுத்தியதாக தங்களிடம் தெரிவித்ததாக குறிப்பிட்டு சாட்சியம் எதுவும்அளிக்கவில்லை.

151. இந்நிலையில் தக்க சாட்சியங்கள் ஏதுமின்றி மற்ற காயங்கள் கிளை சிறைசாலையில் ஏற்பட்டுள்ளதாக எதிரிகள் தரப்பில் வாதிட்டுள்ளது ஏற்புடைய வாதமாக இல்லை

152. இறப்பதற்கு முன் இறந்துபோனவர் தனக்கு ஏற்பட்ட காயம் குறித்து அது எந்த யாரால் எப்படி ஏற்படுத்தப்பட்டது என்பது பற்றி கொடுக்கப்படும் வாக்குமூலம் மரண வாக்குமூலமாகவே கருதப்பட வேண்டியதாகும்.

153. இந்நிலையில் எதற்காக அப்பாவை அழைத்துச் சென்றீர்கள் என்று கேட்கப் போனதாகவும், அப்போது போலீஸ்காரர்களுக்கும், தனக்கும் வாய்தகராறு ஆகிவிட்டதாகவும், தன்னையும் சட்டையை பிடித்து போலிஸ்காரர்கள் உள்ளே இழுத்து சென்றுவிட்டதாகவும், உள்ளே அழைத்துச் சென்று லாக்அப்பில் கையை பிடித்து வைத்துக் கொண்டு பின்னால் அடித்ததாகவும், பின்னால் அடித்ததால் தனக்கு இரத்தம் வருவதாகவும் பென்னிக்ஸ் சொன்னார் என்றும், அப்போது அவர் துண்டு கட்டியிருந்தார் என்றும், துண்டை கழற்றி காண்பித்ததாகவும், அப்போது அவருடைய பிட்டத்தில் அறுத்து எடுத்து மாதிரி இருந்தது என்றும்,பின்னால் இருநூறு அடிக்கு மேல் அடித்திருப்பார்கள் என்று சொன்னதாகவும் கையை இரண்டையும் கட்டி, மேலே தூக்கி வைத்து மண் வைத்து, பைப்பால் அடித்ததாக சொன்னார் என்றும், அதனால் மூச்சுவிட முடியவில்லை என்று சொன்னார் என்றும், சககைதி அசா 17 கருப்பசாமி,

சாட்சியமளித்துள்ளார். கருப்பசாமி மீது வழக்கு இருப்பதாக கூறப்படும் ஒரே காரணத்திற்காக அவரது சாட்சியத்தை நிராகரிக்க வேண்டும் என கோருவது ஏற்புடையதாக தோன்றவில்லை.

154. சாத்தான்குளம் காவல்நிலையம் போனபோது இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், ரகுகணேஷ் எஸ்.ஐ, மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோர் ஜெயராஜை பெஞ்சில் குப்புற படுக்க வைத்து அவரது புட்டப்பகுதியில் அடித்ததாக தன்னிடம் சொன்னார் என்றும், மேலும், ரகுகணேஷ், பாலகிருஷ்ணன் ஆகியோர் அடித்ததாக தன்னிடம் சொன்னார் என்றும், தகவல் தெரிந்து தன்னுடைய பையன் பென்னிக்ஸ் காவல்நிலையம் வந்ததாகவும், அப்போது பென்னிக்சிடம் என்னிடமே இவ்வளவு திமிராக பேசுவாயா என்று கூறி தன்னுடைய மகனையும் அதே பெஞ்சில் குப்புற படுக்க வைத்து அடித்துவிட்டார்கள் என்றும், ஆய்வாளர் ஸ்ரீதர் ஜெயராஜ், பென்னிக்சை அடிக்க சொன்னதாகவும், விடிய விடிய விடிய குப்புற படுக்க வைத்து அடிக்க சொன்னதாகவும் தன்னிடம் ஜெயராஜ் சொன்னதாக சக கைதி அ.சா.46 திரு. ராஜாசிங் சாட்சியமளித்துள்ளார். ராஜாசிங் மீது வழக்கு இருப்பதாக கூறப்படும் ஒரே காரணத்திற்காக அவரது சாட்சியத்தை நிராகரிக்க வேண்டும் என கோருவதும் ஏற்புடையதாக தோன்றவில்லை.

155 மேலும் போலீஸ்காரர்கள் அடித்ததாக பென்னிக்ஸ் தன்னிடம் கூறியதாக சிறைவாசி லட்சுமணன் தன்னிடம் வாக்குமூலம் கொடுத்தாக அ.சா.50 திரு. பாரதிதாசன் சாட்சியம் அளித்துள்ளார்.

156. ஒன்றல்ல இரண்டல்ல மேலும் 9 சாட்சிகள் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் காயம் யாரால் எப்படி தங்களுக்கு ஏற்படுத்தப்பட்டது என்பது பற்றி கொடுத்துள்ள மரண வாக்குமூலம் குறித்து சாட்சியம் அளித்துள்ளனர் அவற்றைப் பார்ப்போம்.

157. சிறையில் அனுமதிக்கும்போது எதனால் காயம் ஏற்பட்டதென்று கேட்டதாகவும், சாத்தான்குளம் போலீசார் தங்களை தாக்கியதாக ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் சொன்னார்கள் என்றும் கோவில்பட்டி கிளை சிறைசாலை கண்காணிப்பாளர் அ.சா.2 சங்கர் சாட்சியமளித்துள்ளார்.

158. மேலும் தன் அத்தானிடம் முந்தினநாள் இராத்திரி என்ன நடந்தது என்று கேட்டதாகவும் அவர் போலீசார் இராத்திரி முழுவதும் தன்னை ஈவு இரக்கம் பார்க்காமல் அடித்துவிட்டார்கள் என்று சொன்னதாக அசா 6 சாட்சியமளித்துள்ளார்.

159. மேலும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிடம் தான் போசியபோது அவர்கள் இரவில் காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்று போலீசார் அடித்ததாக சொன்னார்கள் என்றும் அசா 14 சாட்சியமளித்துள்ளார்.

160. மேலும் அ.சா.22 கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் நிரந்தர செவிலியராக 2018 ஆம் ஆண்டு முதல் பணிபுரிந்து வருவதாகவும் 22.06.2020 ஆம் தேதி இரவு 10.56 மணியளவில் ஜெயராஜ் என்ற நோயாளியை ஸ்டெக்சரில் கொண்டு வந்தார்கள் என்றும் அவருடைய கைலி கீழே விழுந்துவிட்டது. என்றும் அப்போது அவருக்கு அங்கங்கே காயங்கள் இருந்ததை தான் பார்த்த்தாகவும் தொடைப்பகுதி, விலாஎலும்புபகுதி, புட்டத்தில் கொஞ்சம் பெரியகாயம் இருந்ததை பார்த்த்தாகவும் அவரை படுக்க வைத்துவிட்டு, காயங்கள் எப்படி ஏற்பட்டது என்று அவரிடம் கேட்டதற்கு போலீஸ் அடித்தார்கள் அம்மா என்று சொன்னார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

161. மேலும் அசா 23 கோவில்பட்டி தலைமை மாவட்ட அரசு மருத்துவமனையில் 2015 ஆம் ஆண்டு முதல் Male Nursing Assistant ஆக பணியில் இருந்து வருவதாகவும் 22.06.2020 ஆம் தேதி இரவு சுமார் 8 மணியளவில் கோவில்பட்டி கிளைச்சிறையில் இருந்து இரண்டு வார்டன்கள் பென்னிக்ஸ் என்பவரை சிகிச்சைக்காக அழைத்து வந்தார்கள் என்றும் மருத்துவர்.பாலசுப்பிரமணியன் தன்னிடம் புட்டத்தில் பெரியகாயங்கள் இருப்பதாகவும், அதற்கு dressing செய்யுமாறும் சொன்னார் என்றும் தான் அதன்பின்னர் dressing செய்ததாகவும் Dressing செய்யும்போது தொடைப்பகுதியிலும், விலாபகுதியிலும் காயங்கள் இருந்ததைப் பார்த்ததாகவும் புட்டத்தில் இருந்த காயத்தில் இருந்து இரத்தமும், நீரும் வடிந்து கொண்டிருந்தது என்றும் தான் அவரிடம் ஏன் இவ்வளவு பெரியகாயமானது என்று கேட்டதற்கு

பென்னிக்ஸ் தன்னை சாத்தான்குளம் போலீசார் அடித்துவிட்டதாக சொன்னார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

162. மேலும் கோவில்பட்டி கிளை சிறைசாலை காவலர் அசா 24 அனுமதியின் போது ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ்ன் இரண்டு கால்முட்டி மற்றும் கைமுட்டி வீங்கி காயங்களாக இருந்தது என்றும் அவர்கள் உடுத்தியிருந்த உடைகளில் இரத்தம் கசிந்திருந்தது என்றும் என்ன என்று அழகர்சாமி கேட்டதற்கு அவர்கள் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் தாக்கியதாக சொன்னார்கள் என்றும் அ.சா.24 சாட்சியமளித்துள்ளார்.

163. பென்னிக்ஸ் 22.06.2020ம் தேதி இரவு 7.30 மணியளவில் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டு இரவு 9.00 மணிக்கு இறந்துள்ளார். ஜெயராஜ் 22.06.2020ம் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டு 23.06.2020 அதிகாலை 05.40 மணிக்கு இறந்துள்ளார். இந்நிலையில் 22.06.2020–ம் தேதி காலை 11.00 மணிக்கு கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு சிகிச்சை அளித்துள்ள மருத்துவர் வெங்கடேஷ் அ.சா.18 ஆக விசாரிக்கபட்டுள்ளதில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் பின்புட்டத்தில் வரிவரியாக காயங்கள் இருந்தது என்றும், காயங்கள் எவ்வாறு ஏற்பட்டது என்று கேட்டற்கு அவர் போலீசார் தன்னை அடித்ததாக கூறினார் என்றும் அசா 18 சாட்சியமளித்துள்ளார்.

164. அவை எல்லாவற்றுக்கும் மேலாக ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இறப்பதற்கு சில மணிநேரம் முன்பாக ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு சிகிச்சை அளித்துள்ள மருத்துவர் அ.சா.21 எவ்வாறு இந்த காயம் ஏற்பட்டதென்று விசாரித்தபோது, சாத்தான்குளம் போலீசார் அடித்ததாக ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் சொன்னார்கள் என குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார்.

165. அசா 45 மருத்துவர் வினிலா, ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு ஏற்பட்டிருந்த காயங்கள் வரிவரியாக இருந்தது என்றும் போலீசார் அடித்த காயம் போல் இருந்தது என்றும் சாட்சியளித்துள்ளார்.

166. மருத்துவர் பணி பதிவேடு நகல் அ.சா.ஆ.45-ல் 22.06.2020-ம் தேதி இரவு பணி இராமலட்சுமி என்பவருக்கு ஒதுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அன்று அ.சா.21 ம் மருத்துவப் பணியில் இருந்துள்ளார். 22.06.2020ஆம் தேதி இரவு அ.சா.21 இரவு பணியில் இருந்திருக்கவில்லை என வாதத்திற்காக வைத்துக் கொண்டாலும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இறப்பதற்கு சற்று முன் அவர்களுக்கு செவிலியம் பார்த்துள்ள சாட்சிகளான அ.சா.22 மற்றும் 23 அளித்துள்ள சாட்சியங்களை கருத்தில் கொண்டு பார்க்கும் போது சாத்தான்குளம் போலீசார் அடித்ததால் தான் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு காயம் ஏற்பட்டுள்ளது என சிபிஐ தரப்பில் நிருபிக்கப்பட்டுள்ளது என்ற இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

167. அ.சா.3 செல்வராணி தன் கணவர் பால் வாங்கி கொடுத்துவிட்டு கடைக்கு சென்றதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.11 அர்வின் போலீசார் ஜெயராஜை ஜீப்பில் அழைத்து சென்றதாகவும் பென்னிக்ஸ் அவரது நண்பருடன் பைக்கில் போனதாகவும் அதுவரை அவர்கள் நல்ல உடல் நலத்துடன் இருந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

168. அ.சா.பொ.23 மற்றும் அ.சா.பொ.57ல் Annexure -Bல் உள்ள காட்சி பதிவுகளில் 19.06.2020-ம் தேதி இரவு 7:45 :55 மணியளவில் ஜெயராஜ் ஜீப்பை நோக்கி செல்லும் போது வெள்ளை வேஷ்டி வெள்ளை சட்டை அணிந்து அமைதியாக போலீஸ் ஜீப்பை நோக்கி செல்வது தெரிகிறது. அப்போது அவருக்கு பிட்டத்தில் காயம் எதுவும் இருப்பதாக காணப்படவில்லை. அதன்பின் பென்னிக்ஸ் இருசக்கர வாகனத்தில் அவரது நண்பருடன் செல்லும்போது காலை நன்றாக மேலே தூக்கி இருசக்கர வாகனத்தில் போட்டு பென்னிக்ஸ் சென்றுள்ளது தெரியவருகிறது. அப்போது அவருடைய பிட்டத்திலும் காயம் எதுவும் இருப்பதாக காணப்படவில்லை.

169. மேற்படி சாட்சியங்களின் அடிப்படையில் பார்க்கும் போது 19.06.2020ம் தேதி இரவு 7:48:38 மணியளவில் ஜெயராஜை போலீசார் ஜீப்பில் ஏற்றி சென்ற நிமிடம் வரை ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ்க்கு பிட்டத்திலும் உடலிலும் காயம் எதுவும் இல்லை என்றும் அதுவரை அவர்கள் நல்ல உடல் நலத்துடன் இருந்துள்ளனர் என்பதும் அதன்பின்னரே அவர்களுக்கு காயம் ஏற்பட்டுள்ளது என்பதும் நிரூபணமாகிறது.

170. மேலும் 20.06.2020ம் தேதி ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது அவர்களுக்கு பிட்டத்திலும் உடலிலும் காயங்கள் இருந்துள்ளது என்பதும் அவர்கள் நொண்டி நொண்டி நடந்து வந்துள்ளனர் என்பதும் அவர்களது ஆடைகளில் இரத்தம் படிந்திருந்துள்ளது நிருபிக்கப்பட்டுள்ளது என்பது குறித்தும் ஏற்கனவே விவரிவாக தீர்மானித்துள்ளோம்.

எனவே 19.06.2020ம் தேதி மற்றும் 20.06.2020ம் தேதிக்கு இடைப்பட்ட இரவில்தான் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ்க்கு காயம் ஏற்பட்டுள்ளது தெரியவருகின்றது.

171. செல்வராணியின் சகோதரர் தேசிங்குராஜா அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் 19.06.2020 ஆம் தேதி இரவு 7.45 மணியளவில் என் அக்காமகன் பென்னிக்ஸ் எனக்கு போன் செய்து தன் அப்பாவை சாத்தான்குளம் போலீசார் கூட்டிச் செல்வதாக அவர் சொன்னார் என்றும் தானும் தன் பெரியப்பா மகன் தாவீதும் சாத்தான்குளம் போலீஸ்ஸ்டேசனுக்கு தன்னுடைய மோட்டார்சைக்கிளில் 9.10 மணிக்கு சென்றதாகவும் அங்கு போகும் போது ஸ்டேசனுக்கு வெளியே லைட் ஆப் ஆகியிருந்தது. தன் அண்ணன் இறங்கி உள்ளே போனதாகவும் தன் அண்ணன் வந்து வெளியில் உள்ள லைட்டும் ஆப் ஆகியுள்ளது, கதவும் பூட்டியுள்ளது, உள்ளே அடிக்கும் சத்தம் மற்றும் கதறல் சத்தம் கேட்பதாக சொன்னார் என்று சாட்சியமளித்துள்ளார்.

172. பென்னிக்சின் நண்பர் சங்கரலிங்கம் அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தானும் ராஜ்குமாரும் போலீஸ் ஸ்டேசனுக்கு 9.15 மணியளவில் சென்றதாகவும் அப்போது ஸ்டேசன் வாசல் கதவு பூட்டியிருந்தது என்றும் உள்ளே இருந்து அலறல் சத்தம் கேட்டது என்றும் எங்களை விட்ருங்க, எங்களால் தாங்க முடியவில்லை, அடிக்காதீர்கள், அம்மா, அப்பா என்று அலறல் சத்தம் கேட்டது என்றும் அப்போது ஆய்வாளர் ஸ்ரீதர் போன் பேசிக் கொண்டே வெளியே சுமோ பக்கத்தில் நின்று கொண்டு பேசிய பின்னர் மறுபடியும் உள்ளே சென்றுவிட்டார் என்றும் உள்ளேயிருந்து தொடர்ந்து பத்துநிமிடம் அடிக்காதீர்க்ள் விட்டுவிடுங்கள் என்று கேட்டது என்றும் அம்மாதிரி பத்துநிமிடம் இடைவெளிவிட்டு இடைவெளிவிட்டு இரண்டு, மூன்று தடவை கேட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

173. பென்னிக்சின் நண்பர் ரவிசங்கர் அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தான் ராஜாராம் வண்டியில் பென்னிக்சை அழைத்துக் கொண்டு ஸ்டேசன் சென்றதாகவும் மணிமாறன் ஏற்கனவே போலீஸ்ஸ்டேசன் வராண்டாவில் நின்று கொண்டிருந்தார் என்றும் பென்னிக்ஸ் அப்பாவை லாக்அப்பில் தள்ளினார்கள் என்றும் அப்போது இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர் இவர்களை ரிமாண்ட் செய்தால்தான் புத்தி வருமென்று சொன்னார் என்றும் பென்னிக்ஸ் ஸ்டேசன் வாசலில் இருந்து உள்ளே எட்டிப் பார்த்ததாகவும் உனக்கு என்ன வேண்டுமென்று உள்ளே இருந்து எஸ்.ஐ பாலகிருஷ்ணன் கேட்டார் என்றும் ஒன்றும் பேசாதே என்று தானும், மணிமாறனும் பென்னிக்சின் கையை பிடித்து படிக்கட்டை விட்டு கீழே இறக்கியதாகவும் அதற்குள் வெளியே இருந்து சத்தம் போடுகிறான் அவனை உள்ளே கூப்பிடுங்கள் என்று எஸ்.ஐ பாலகிருஷ்ணன் சொன்னார் என்றும் உள்ளே இருந்து போலீசார்கள் வந்து பென்னிக்சின் கையை பிடித்து உள்ளே அழைத்துச் சென்றார்கள் என்றும் கூட மணிமாறனும் உள்ளே சென்றார் என்றும் எதற்கு சார் என் அப்பாவை பிடித்து வந்தீர்கள் என்று பென்னிக்ஸ் கேட்டதற்கு உனக்கு என்ன செய்யணும் என்று சொல்லி அடிக்க கையை ஓங்கியதாகவும் அப்போது பென்னிக்ஸ் அதை தடுத்ததாகவும் அப்போது எஸ்.ஐ.சார் தடுமாறி சேரில் உட்கார்ந்தார் என்றும் பின்னர் எஸ்.ஐ.சார் எழுந்து ஓங்கி

பென்னிக்சை அடித்தார் என்றும் பென்னிக்ஸ் தடுமாறி அங்கிருந்த டேபிள் மீது விழுந்துவிட்டார் என்றும் மணிமாறன் தடுக்க முயற்சி செய்தார் என்றும் அதற்குள் 2, 3 போலீசார்கள் சேர்ந்து பென்னிக்சை அடிக்க ஆரம்பித்தார்கள் என்றும் உடனே வா என்று ராஜாராமுக்கு தான் போன் செய்வதாகவும் ராஜாராம் வருவதற்கு முன்னர் மணிமாறனை வெளியே தள்ளி ஸ்டேசன் கதவை பூட்டிவிட்டார்கள் என்றும் அதன்பின்னர் 8.10 மணியில் இருந்து 10.30 மணிவரை அம்மா அப்பா, அடிக்காதீங்க, அடிக்காதீங்க என்ற சத்தம் கேட்டதாகவும் பத்து பத்து நிமிடம் இடைவெளியில் விட்டுவிட்டு அம்மாதிரி சத்தம் கேட்டதாகவும் 9.30 மணியளவில் எஸ்.ஐ ரகுகணேஷ் உள்ளே சென்றார் என்றும் அவர் போன பிறகும் சத்தம் கேட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

174. பென்னிக்ஸ்—ன் நண்பரும் வழக்குரைஞருமான திரு. மணிமாறன் அ.சா.9 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் பேய்க்குளத்தில் உள்ள ஒரு இடப்பிரச்சனை சம்பந்தமாக சாத்தான்குளம் காவல்நிலைய விசாரணைக்கு 19.06.2020 அன்று இரவு சென்றிருந்ததாகவும் ராஜாராம் என்ற வழக்கறிஞர் தனக்கு 07.45 மணிக்கு போன் செய்து பென்னிக்ஸ் கடை அருகே பேசிக் கொண்டிருக்கும் போது ஆய்வாளர், சப் இன்ஸ்பெக்டர் மற்றும் போலீசார் வந்து சுமோவில் பென்னிக்ஸ் அப்பாவை காவல்நிலையம் அழைத்துச் சென்றதாகவும், என்ன ஏது என்று கேட்டபோது காவல்நிலையம் வந்து பேசிக் கொள்ளுமாறு சொன்னதாகவும் கூறினார் என்றும் தான் ஒரு வழக்கு சம்பந்தமாக ஸ்டேசனில்தான் இருப்பதாக சொன்னதாகவும், டிரஸ் மாற்றிவிட்டு வந்து விடுவதாக ராஜாராம் சொன்னதாகவும், போனை கட் பண்ண சமயத்தில் சுமோவில் இருந்து ஆய்வாளர், உதவிஆய்வாளர், டிரைவர், ஒரு போலீஸ்காரர் மற்றும் ஜெயராஜ் ஆகியோர் இறங்கினார்கள் என்றும், ஜெயராஜ் நல்லமனுசன், எதற்கு அழைத்து வந்திருக்கிறீர்கள் அவர் எந்த பிரச்சனையிலும் ஈடுபடாத நபர் என்று சொன்னதற்கு ஆய்வாளர் மணிகண்டா அவனைப் பற்றி உனக்குத் தெரியாது, எதுவாக இருந்தாலும் பிறகு பேசிக் கொள்ளலாம் என்று லாக்அப்பில் வையுங்கள் என்று போலீசாரிடம் சொல்லிவிட்டு அவர் ரூமுக்கு

சென்றுவிட்டார் என்றும், தான் வெளியே வந்ததாகவும், அப்போது பென்னிக்ஸ் அவர் நண்பர் ரவிசங்கருடன் பைக்கில் காவல்நிலையம் வந்து வெளியே இருந்தார்கள் என்றும், உள்ளேயிருந்து முத்துராஜ் என்ற கான்ஸ்டபிள் வந்து எஸ்.ஐ கூப்பிடுவதாக சொன்னார் என்றும், அப்போது பென்னிக்ஸ் தன் கையை தட்டிவிட்டு காவல்நிலையத்திற்கு உள்ளே போய்விட்டதாகவும் தான் பின்னாலேயே போனதாகவும், உதவிஆய்வாளர் பாலகிருஷ்ணன் டேபிள் முன்பு என் அப்பா என்ன தப்பு செய்தார், ஏன் உள்ளே வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு கோபப்பட்டு பென்னிக்சை பாலகிருஷ்ணன் அடிக்க முற்பட்டார் என்றும், அந்த அடி பென்னிக்சின் மீது விழவில்லை என்றும், டேபிளை மறுபடி சுற்றி வந்து அவர் பென்னிக்சை மறுபடியும் அடிக்க முற்பட்டார் என்றும், தான் அப்போது பென்னிக்ஸ் பின்னால் இருந்ததாகவும், பென்னிக்ஸ் அதை கையை வைத்து தடுத்தார் என்றும், எஸ்.ஐ நிலைதடுமாறி டேபிளில் சரிந்துவிட்டார் என்றும், உள்ளேயிருந்த ரைட்டர் ரூமில் இருந்து ப்யூலா செல்வகுமாரி போலீஸ்ஸ்டேசன் உள்ளே வந்து, போலீஸ்கிட்டயே தகராறு செய்கிறாயா என்று கத்தினார் என்றும், மறுபடியும் சுதாரித்து எஸ்.ஐ அடிக்க முயற்சி செய்யும் போது பென்னிக்ஸ் பின்னால் பால்துரை, அழகுமுத்து என்ற போலீஸ், டிரைவர் ஜெயசேகர், முத்துராஜா ஆகியோர்கள் மேலே விழுந்து பென்னிக்சை அமுக்கி பிடித்தார்கள் என்றும், மேலே விழவும் தான் நகன்று வெளியே வந்துவிட்டதாகவும், அப்போது இன்ஸ்பெக்டர் ரூமில் இருந்து இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர் வெளியே வந்தார் என்றும், வக்கீலை வெளியே அனுப்பு, கதவை மூடு என்று சொன்னார் என்றும், தான் வெளியே வந்த மறுகணத்தில் இருந்து அம்மா அடிக்காதீர்கள், அப்பா அடிக்காதீர்கள் வலி தாங்க முடியவில்லை என்ற சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது என்றும், 8 மணிக்கு மேல் ஏட்டு சாமத்துரை, எஸ்.எஸ்.ஐ.ரவிச்சந்திரன், பெண் போலீஸ் ரேவதி, செல்லத்துரை என்ற போலீஸ், முருகன் என்ற போலிஸ், எஸ்.பி.சி.ஐ.டி சந்தனகுமார் ஆகியோர்கள் ஒவ்வொருத்தராக வர ஆரம்பித்து ஸ்டேசனுக்குள் சென்றார்கள் என்றும், ஒரு சில பேர் மூடியிருந்த கதவைத் திறந்து வெளியே வந்தார்கள் என்றும், நான் அவர்களிடம் இப்படி அடிக்கிறீர்களே, அவன் என்ன தப்பு பண்ணான் என்று கேட்டதாகவும், எதுவாக இருந்தாலும் நீங்கள் அதிகாரியிடம் தான் பேசிக்கொள்ள வேண்டுமென்று

சொன்னார்கள் என்றும், போலீஸ் முருகன் வெளியே வரும்போது கேட்டதற்கு ப்ரஸ் பீஸ் கிடைத்துள்ளது, அடிப்பதற்கு டிரைனிங் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார் என்றும், சுமார் 9.30 மணி வாக்கில் எஸ்.ஐ ரகுகணேஷ் பைக்கில் பின்னால் எலிசா என்ற கொரோனா வாலன்டியருடன் வந்தார் என்றும், பின்னால் மற்றொரு பைக்கில் இரண்டு வாலன்டியர்ஸ் வந்தார்கள் என்றும், ஸ்டேசனுக்குள் இருந்து எலிசா வந்து அந்த இரண்டு வாலன்டியர்களிடம் ஏதோ சொன்னதாகவும், அதன்பிறகு புல்லட்டில் இருந்து லத்தியை எடுத்துக்கொண்டு அந்த வாலன்டியர்கள் உள்ளே போனார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

175. பென்னிக்சின் நண்பர் ராஜாராம் அ.சா.10 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் பென்னிக்ஸ் கடையில் இருந்து தான் வீட்டிற்கு சென்று பேண்ட் மாற்றிவிட்டு, புறப்படும் போது ரவிசங்கர் போன் செய்து, பென்னிக்சை அடிக்கிறார்கள் சீக்கிரம் வா என்று சொன்னதாகவும் தான் உடனே சுமார் 8.05 மணியளவில் ஸ்டேசன் போய்விட்டதாகவும், தான் போய் பார்க்கும் போது ஸ்டேசன் கதவு அடைத்திருந்தது. என்றும் தான் பார்க்கும் போது எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் லத்தியால் பென்னிக்ஸ் கையில் அடித்துக் கொண்டிருந்தார் என்றும், தான் அதை கண்ணாடி வழியாக பார்த்ததாகவும், உடனே மணிமாறனிடம் வாங்க பேசுவோம் என்று சொன்னதாகவும் அதற்கு அவர் கொஞ்சம் வெயிட் பண்ணுவோம் என்று சொன்னதாகவும் தாங்கள் ஸ்டேசனுக்கு வெளியே நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது பென்னிக்ஸ் மாமா, சொந்தக்காரர்கள் வந்தார்கள் என்றும் தன்னுடைய நண்பர்களும் நின்று கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது சுமார் 9.30 மணியளவில் எஸ்.ஐ.ரகுகணேஷ் பைக்கில் ஒரு ப்ரண்ட்ஸ்ஆப் போலீஸ் நபர் பின்புறம் உட்கார்ந்து வந்து, காவல்நிலையத்திற்கு உள்ளே போனார்கள் என்றும், அவர்கள் பின்னாடியே மற்றொரு பைக்கில் ப்ரண்ட்ஸ் ஆப் போலீஸ் அமைப்பின் இரண்டு நபர்கள் வந்து காவல்நிலையம் சென்றார்கள் என்றும், தான் அதன்பிறகு ஸ்டேசனுக்கு பத்து அடி தள்ளி நின்று போய் பார்த்ததாகவும், அப்போது எஸ்.ஐ.ரகுகணேஷ் ப்ரண்ட்ஸ்ஆப்போலீஸ் நபரிடம் வண்டியிலிருந்து லத்தியை எடுத்து வரச் சொன்னார் என்றும், லத்தியை எடுத்துக்

கொண்டு போனவுடன் ரகுகணேஷ் வாங்கி கொண்டு பென்னிக்சை கையை நீட்டச் சொல்லி அடித்தார் என்றும்,தான் அங்கு நிற்க முடியாமல் காம்பவுண்டிற்கு வெளியே வந்துவிட்டதாகவும், அப்போது அப்பா, அம்மா அடிக்காதீர்கள் என்ற சத்தம் கேட்டது என்றும், அதற்கு முன்பும் அந்த சத்தம் கேட்டது என்றும், பத்து நிமிடம் விட்டுவிட்டு அந்த சத்தம் கேட்டது என்றும், அம்மாதிரி 10.30 மணி வரை சத்தம் கேட்டது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

176. சாத்தான்குளம் காவல்நிலையத்தில் பணியாற்றியுள்ள திரு. ரவிச்சந்திரன் அ.சா.20 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் 19.06.2020 ஆம் தேதி தான் காவல்நிலையத்தில் மாடியிலுள்ள அறையில் CCTNS பணி பார்த்துக் கொண்டிருந்ததாகவும், 19.06.2020ம் தேதி இரவு சுமார் 8.30 மணியளவில் தரைதளத்தில் அடிக்கும் சத்தமும், அய்யோ அம்மா என்று அலறும் சத்தமும் கேட்டது என்றும், உடனே வெயிலுமுத்துவும் தாமஸ்பிரான்சிசும் கீழே பார்க்கச் சென்றார்கள் என்றும், மீண்டும் அடிக்கும் சத்தம் கேட்டதால் தான் 20 நிமிடம் கழித்து கீழே சென்றதாகவும், அப்போது உதவிஆய்வாளர் பாலகிருஷ்ணன் அவரது இருக்கையில் இருந்தார் என்றும், அவர் அருகில் சுவர் ஓரம் பென்னிக்சும், லாக்அப் அறை அருகில் ஜெயராஜூம் நின்று கொண்டிருந்தார்கள் என்றும், ஆய்வாளர் சொன்னதன் பேரில் கணினியில் தானும் அழகுமாரிச்செல்வமும் புகார் தட்டச்சு செய்து கொண்டிருந்ததாகவும் அப்போது காவல்நியைத்தில் கதவு பூட்டப்பட்டிருந்தது என்றும் அப்போது உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் ஜெயராஜையும், பென்னிக்சையும் லத்தியால் அடிக்க அங்கிருந்த முருகன், முத்துராஜா, வெயிலுமுத்து, தாமஸ்பிரான்சிஸ், செல்லத்துரை, சாமதுரை ஆகியோர்கள் பிடித்துக் கொண்டார்கள் என்றும் அ.சா.20 சாட்சியமளித்துள்ளார்.

177. 1ம் எதிரியின் ஜீப் ஓட்டுனர் திரு.ஜெயசேகர் அ.சா.26 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் 19.06.2020ம் தேதி இரவு பக்கத்திலுள்ள குடியிருப்பிற்கு இயற்கை உபாதைக்காக சென்று, மீண்டும் 8.05 மணியளவில் காவல்நிலையம் வந்ததாகவும் காவல்நிலையக் கதவு சாத்தப்பட்டிருந்தது. என்றும் தான் உள்ளே போனதாகவும் பதற்றமாக இருந்தது

என்றும் பென்னிக்ஸ் உள்ளே இருந்தார் என்றும் தான் போகும் போது ஆய்வாளர், எஸ்.ஐ.பாலகிருஷ்ணன், தலைமைக்காவல் முருகன், சாமதுரை, வெயில்முத்து, தாமஸ், செல்லத்துரை, ப்யூலா, பால்துரை, முத்துராஜா ஆகியோர்கள் காவல்நிலையத்தில் இருந்தார்கள் என்றும் முத்துராஜாவிடம் என்ன என்று கேட்டதற்கு ஜெயராஜ் போலீசை ஏசியதால் காவல்நிலையம் அழைத்து வந்ததாகவும் ஜெயராஜை ஏன் அடிக்கிறீர்கள் என்று பென்னிக்ஸ் கேட்டு, தன்னை தள்ளிவிட்டதாகவும் சட்டைபட்டன் அறுந்துவிட்டதாகவும் முத்துராஜா சொன்னார் என்றும் ஆய்வாளர் போலீஸ் மேல் கை வைத்தால் சும்மா விடக் கூடாது என்று சொன்னார் என்றும் தன்னை இரவு உணவு ஆய்வாளர் வாங்கி வரச் சொன்னார் என்றும் தான் சாத்தான்குளம் பஜார் சென்று, உணவருந்தி, ஆய்வாளருக்கு உணவு வாங்கி வந்ததாகவும் இரவு 9.15 மணிக்கு காவல்நிலையம் உள்ளே செல்லும் போது பென்னிக்ஸ் ஜட்டியுடன் இருந்தார் என்றும் ஜெயராஜ் ஜட்டியுடன் லாக்அப் அருகில் இருந்தார் என்றும் தான் ஆய்வாளரிடம் உணவைக் கொடுத்துவிட்டு பார்க்கும் போது தலைமைக்காவலர் முருகன், முத்துராஜா பென்னிக்ஸ் கையை பிடித்துக் கொண்டார்கள் என்றும் எஸ்.ஐ பாலகிருஷ்ணன் லத்தியால் பென்னிக்சை ஓங்கி புட்டத்தில் அடித்தார் என்றும் அங்கிருந்த காவலர்கள் மாறி மாறி பிடிக்க அடித்தார்கள் என்றும் ஆய்வாளர் அவர்கள் அடிக்கச் சொன்னார்கள் என்றும், 9.30 மணியளவில் எஸ்.ஐ.ரகுகணேஷ் காவல்நிலையம் உள்ளே சென்றார் என்றும் அவர் சென்ற சிறிது நேரத்தில் அடிக்கும் சத்தமும், அலறும் சத்தமும் கேட்டது என்றும் அய்யோ, அம்மா என்று அலறும் சத்தம் கேட்டது என்றும் இரவு சுமார் 2.15 மணியளவில் ஆய்வாளரை பஜாரிலுள்ள அவருடைய வீட்டில் இறக்கிவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

178. ஜெயராஜ்-ன் உறவினர் தாவீது அசா 30 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் இரவு சுமார் 9.10 மணியளவில் சாத்தான்குளம் காவல்நிலையம் சென்றதாகவும் தேசிங்குராஜா வெளியே பைக்கை நிறுத்திவிட்டு நின்று கொண்டிருந்தார் என்றும் தான் காவல்நிலைய வாசல் அருகில் சென்றபோது அங்கு அடிக்கும் சத்தமும், அலறல் சத்தமும் கேட்டது என்றும் தான் உள்ளே முன்னோக்கி செல்லும் போது

காவல்நிலையக்கதவு சாத்தப்பட்டிருந்தது என்றும் அப்போது கண்ணாடி கதவு வழியே பார்த்த போது, பென்னிக்சை சில போலீசார்கள் பிடித்துக் கொண்டிருந்தார்கள் என்றும் சில போலீசார் அடித்தார்கள் என்றும் 12 மணி வரை காவல்நிலையத்தில் இருந்ததாகவும் அதுவரையில் எந்தவித தகவலும் தங்களுக்குத் தெரியவில்லை என்றும் அ.சா.30 சாட்சியமளித்துள்ளார்.

179. லைட் ஆப் ஆகியிருந்தது என்று அ.சா.5 மற்றும் 30 சாட்சியமளித்துள்ளனர் என்றும் இந்நிலையில் சாத்தான்குளம் காவல் நிலையத்தினுள் என்ன நடந்தது என்பது குறித்து சாட்சிகள் யாருக்கும் எதுவும் தெரிந்திருக்கவாய்ப்பில்லை என்றும் எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது.

எதிரிகள் தரப்பில் முன்னிடப்பட்டுள்ள முன்தீர்ப்பு Ashoksinh Jeyendrasingh – State of Gujarat, (2019) 2 SCC (Crl_) 875, ல் No evidence as to any source of light – Medical evidence also not establishing whether fatal wounds caused by double – barreled or single – barreled gun – Hence, appellant alone could not be held responsible for fatal firearm wounds on body of deceased – Conviction reversed என தீர்பளிக்கப்ட்டுள்ளது.

மேற்படி காவல் நிலையத்தில் சம்பவ தேதியன்று இரவு கணினிகளில் ஆவணங்கள் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. வழக்கு கோப்புகள் சம்பந்தமான விவரங்கள் எஸ் பி அலுவலகத்திற்கு மைக்கில் வாசித்துக் காட்டப்பட்டுள்ளது. அ.சா.47 ரேவதி காவல்நிலையத்திற்கு உள்ளே விளக்குகள் எரிந்து கொண்டிருந்தது என்றும் சாட்சியமளித்துள்ளார். சிசிடிஎன்எஸ் பணிகளும் நடைபெற்றுள்ளன. அதனடிப்படையில் பார்க்கும்போது சம்பவ தினத்தன்று சம்பவ நேரத்தில் சாத்தான் குளம் காவல் நிலையத்தில் மின்சாரம் இல்லை என்றும் இதுகுறித்து மின்துறை அதிகாரிகளை விசாரிக்கவில்லை என்றும் அதனால் எந்த சாட்சியின் சாட்சியத்தையும் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று எதிரிகள் தரப்பில் வாதிட்டுள்ளது ஏற்புடைய வாதமாக இல்லை, இந்நிலையில் (2019) 2 SCC (Crl_) 875 வழக்கின் முன் தீர்ப்பு இவ்வழக்கின் சங்கதி சூழ்நிலைகளுக்கு பொருந்துவதாக இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது

180. மேலும் இத்தகைய வழக்குகளில் முதல் நோக்கில் அரசு தரப்பால் காவல் நிலையத்தில் கைதிகள் அடிக்கப்பட்டதாக நிரூபிக்கப்பட்டாலே போதுமானதாகும் அவர்களை தங்கள் அடிக்கவில்லை என்பதையும் கைதிகளுக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்பதையும் எதிரிகள் தான் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 106 இன் படி நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள்.

கீழ்க்கண்ட முன் தீர்ப்புகள் இதனை வலியுறுத்துவதாகவே உள்ளது

180. 1) In Munshi Singh Gautam v. State of M.P., (2005) 9 SCC 631– Rarely in cases of police torture or custodial death, direct ocular evidence is available of the complicity of the police personnel, who alone can only explain the circumstances in which a person in their custody had died. Bound as they are by the ties of brotherhood, it is not unknown that police personnel prefer to remain silent and more often than not even pervert the truth to save their colleagues – and the present case is an apt illustration – as to how one after the other police witnesses feigned ignorance about the whole matter.

180. 2) K.H. Shekarappa v. State of Karnataka, (2009) 17 SCC 1 "When the deceased, who were brought to the police station, were alive and were produced dead before the medical officer, it is for the appellants to explain as to in which circumstances they had died. The deceased were in the custody of the appellants, who were police officials. During the time when they were in police custody they had expired. Therefore, it was within the special knowledge of the appellants as to how they had expired. In view of the salutary provisions of Section 106 of the Evidence Act, 1872, it was for the appellants to offer explanation regarding the death of the two deceased.

180. 3) Bhagwan Singh v. State of Punjab, (1992) 3 SCC 249 :. If a person is in police custody then what has happened to him is peculiarly within the knowledge of the police officials who have taken him into custody. When the other evidence is convincing enough to establish that the deceased died because of the injuries inflicted by the accused the circumstances would only lead to an irresistible inference that the police personnel who caused his death must also have caused

the disappearance of body. It is a pity that some of the police officers, as it has happened in this case, have not shed such methods even in the modern age. They must adopt some scientific methods than resorting to physical torture. If the custodians of law themselves indulge in committing crimes then no member of the society is safe and secure. If police officers who have to provide security and protection to the citizens indulge in such methods they are creating a sense of insecurity in the minds of the citizens. It is more heinous than a game-keeper becoming a poacher."

180. 4) State of M.P. v. Shyamsunder Trivedi, reported in (1995) 4 SCC 262 "16. ... The High Court erroneously overlooked the ground reality that rarely in cases of police torture or custodial death, direct ocular evidence of the complicity of the police personnel would be available, when it observed that 'direct' evidence about the complicity of these respondents was not available. Generally speaking, it would be police officials alone who can only explain the circumstances in which a person in their custody had died. Bound as they are by the ties of brotherhood, it is not unknown that the police personnel prefer to remain silent and more often than ot even pervert the truth to save their colleagues, and the present case is an apt illustration, as to how one after the other police witnesses feigned ignorance about the whole matter.

180. 5) State of U.P. v. Ram Sagar Yadav, reported in (1985) 1 SCC 552 "20.- Before we close, we would like to impress upon the Government the need to amend the law appropriately so that policemen who commit atrocities on persons who are in their custody are not allowed to escape by reason of paucity or absence of evidence. Police officers alone, and none else,can give evidence as regards the circumstances in which a person in their custody comes to receive injuries while in their custody. Bound by ties of a kind of brotherhood, they often prefer to remain silent in such situations and when they choose to speak, they put their own gloss upon facts and pervert the truth. The result is that persons, on whom atrocities are perpetrated by the police in the sanctum sanctorum of the police station, are left without any evidence to prove who the offenders are. The law as to the burden of proof in such cases may be re-examined by the Legislature so

that handmaids of law and order do not use their authority and opportunities for oppressing the innocent citizens who look to them for protection."

180. 6) Shakila Abdul Gafar Khan v. Vasant Raghunath Dhoble, reported in (2003) 7 SCC 749 It has been held that rarely in cases of police torture or custodial death is there direct ocular evidence of the complicity of the police personnel alone who can only explain the circumstances in which a person in their custody had died. Bound as they are by the ties of brotherhood, it is not unknown that the police personnel prefer to remain silent and more often than not even pervert the truth to save their colleagues – and the present case is an apt illustration

180. 7) Prithipal Singh v. State of Punjab, reported in (2012) 1 SCC 10- All the appellant-accused failed to explain any inculpating circumstance even in their respective statements under Section 313 CrPC. Such a conduct also provides for an additional in the chain of circumstances. The fact as to what had happened to the victim after his abduction by the accused persons, has been within the special knowledge of the accused persons, therefore, they could have given some explanation. In such a fact situation, the courts below have rightly drawn the presumption that the appellants were responsible for his abduction, illegal detention and murder." (emphasis added) In this case, the appellants never gave any explanation during the questioning under Section 313 Cr.P.C., relating to the above occurrence and the injuries on the deceased in their custody. In these type of cases, it is the duty of the police officers to give proper answer to the incriminating circumstances available against them. This court finds no explanation on the side of the appellants during their questioning under Section 313 Cr.P.C., also. In view of the above discussion this court finds no merit in the submission of the learned senior counsel that the prosecution has not proved the case beyond reasonable doubt. The learned trial judge has considered the demeanor of the witnesses and their trustworthiness and has come to the correct conclusion that the prosecution proved the case beyond reasonable doubt.

181. குற்ற எண்.311/2020 வழக்கு சம்பந்தமாக எவரும் 19.06.2020-ம் தேதி இரவு 8.00 மணிக்கு புகார் கொடுக்க யாரும் வந்ததாக சாத்தான்குளம் காவல் நிலைய பொது நாட்குறிப்பில் விவரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இந்நிலையில் குற்ற எண்.311/2020 வழக்கு சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யும் பணியில் இரண்டாம் எதிரி பாலகிருஷ்ணன் ஈடுபட்டு இருந்ததாகவும் அதனால் மேற்படி குற்றத்தை செய்திருக்க வாய்ப்பில்லை என்றும் எதிரிகள் தரப்பில் வாதிட்டுள்ளது ஏற்புடைய வாதமாக தோன்றவில்லை. குறிப்பாக முன்னிடப்பட்டுள்ள சாட்சியங்களின் அடிப்படையில் பார்க்கும்போது இரவு 7.30 மணிக்கு மணி அளவில் வண்டி மறிச்சியம்மன் கோவில் அருகே ஆய்வாளருடன் பாலகிருஷ்ணன் இருந்துள்ளது நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் ஸ்ரீதரும் பாலகிருஷ்ணனும் தான் ஜெயராஜை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்துள்ளனர். இந்நிலையில் வேறு வழக்கு நடவடிக்கையில் 2-ம் எதிரி ஈடுபட்டிருந்ததாக கூறப்படுவது நம்பும் படியாக இல்லை.

182. ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இருவரது புட்டத்திலும் இரத்தம் கசிந்திருந்ததாக அ.சா.45 சாட்சியம் அளித்துள்ளார். ஆடைகளிலும் ஆய்வாளரது அறையின் காலண்டிரிலும், காவல் நிலைய சுவர்களிலும் சார்பு ஆய்வாளர் அறையிலிருந்து கைப்பற்றப்பட்ட லத்தியிலும் இரத்தம் படிந்திருந்துள்ளது. மரபணு பரிசோதனை மூலமும் நிரூபணமாகியுள்ளது. இரத்த வாடை அடித்ததாகவும் சுவர்களில் இரத்தத்தை துடைத்ததாகவும், லைசால் போட்டதாகவும் அ.சா.33 சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் இரத்தம் வழியவில்லை என எதிரிகள் தரப்பில் வாதிட்டுள்ளது ஏற்புடைய வாதமாக இல்லை.

<u>183. தடய அறிவியல் சான்றுகள் –</u>

<u>183. </u>1 நீதித்துறை விசாரணையின் போது 29.06.2020-ம் தேதி கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 மொத்தமாக பத்து லத்திகளும், ஒரு பிளாஸ்டிக் பைப்பும் கைப்பற்றியுள்ளார். அவை அ.சா.பொ.21 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன. ஒரு லத்தியை 01.07.2020-ம் தேதி CBCID D.S.P திரு.சரவணன் கைப்பற்றியுள்ளார். அது

அ.சா.பொ.22 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. காவலர் மகாராஜன் அவரது லத்தி தொலைந்துவிட்டதாக எழுத்துமூலமாக தெரிவித்தார் என்றும் காவலர் சாமதுரையிடம் அவரது லத்தியை கேட்டபோது அவர் ஓடிச் சென்று காவல்நிலையத்திற்கு அருகில் நிறுத்தி வைத்திருந்த காரின் மீது ஏறி குதித்து இருட்டில் மறைந்துவிட்டார் என்றும், அ.சா.50 சாட்சியம் அளித்துள்ளார். நீதிபதிக்கும் சாமதுரைக்கும் முன்விரோதம் ஏதுமிருப்பதாக சாமதுரை தரப்பில் சாட்சியம் ஏதும் முன்வைக்கப்படவில்லை. இந்நிலையில் இருட்டாக இருந்ததால் அது காவல்துறை வாகனமா தனியார் வாகனமா என கவனிக்கவில்லை என அ.சா.50 அளித்துள்ள சாட்சியம் இயற்கையானதாகவே தோன்றுகிறது. இந்நிலையில் சாமதுரை காரின் மீது ஏறி குதித்து இருட்டில் மறைந்துவிட்டார் என கோவில்பட்டி நீதித்துறை நடுவர் அளித்துள்ள சாட்சியத்தை பொய்யானது என சாமதுரை கூறுவது ஏற்புடையதாக இல்லை.

183. 2 இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட லத்திகள் அ.சா.பொ.21 மற்றும் அ.சா.பொ.22 தடய அறிவியல் ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளதில் நீதித்துறை நடுவர் அ.சா.50–ஆல் சார்பு ஆய்வாளர் அறையிலிருந்து கைப்பற்றப்பட்ட 73 செ.மீ நீளமுள்ள லத்தி Q–20–ல் மட்டும் இரத்தக்கறை இருந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

183.3 தடய அறிவியல் அறிக்கை அ.சாஆ.246ல் 8.1–ல் பென்னிக்ஸ் உடைகளில் உள்ள இரத்தத்தில் உள்ள மரபணுக்களும் Q_20 ல் உள்ள மரபணுக்களும் செல்வராணியின் மாதிரி இரத்தத்தில் உள்ள மரபணுக்களும் ஜெயராஜின் உடைகளில் உள்ள இரத்தத்தில் உள்ள மரபணுக்களும் ஒத்துபோவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

183.4 மேலும் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் இவ்வழக்கு சம்பவத்திற்கு பயன்பட்டதாக கூறப்படும் மரடேபிள் ஒன்று CBCID புலனாய்வு அதிகாரி திரு.கலைமணியால் அ.சா.41 முன்னிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது. அது அ.சா.பொ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மரடேபிள் காலில் இரத்தக்கறை உள்ளதா என கண்டறிய இயலவில்லை என அறிக்கை அ.சாஆ.264ல் 8.2 ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

183.5 19.06.2020 ஆம் தேதி இரவு குற்ற சம்பவம் நடந்ததாக கூறப்படுகின்ற நிலையில் 29.06.2020 ஆம் தேதி தான் மேற்படி லத்திகள் கைப்பற்றப்பட்டுள்ளது மரடேபிள் 15.07.2020–ம் தேதி கைப்பற்றப்பட்டுள்ளது. எனவே அவற்றில் உள்ள இரத்தக்கறைகள் அழிக்கப்பட்டு இருக்க வாய்ப்புள்ளது. எனவே இந்நிலையில் மற்ற லத்திகளிலும் மரடேபிளிலும் இரத்தக்கறை இல்லை என்பதை மட்டும் வைத்து குற்றம் எதுவும் நிகழவில்லை என கூற முடியாது.

183. 6 In Rakesh Vs State of UP,(2021) 7 SCC 188 என்ற வழக்கில் When there is ample unimpeachable ocular evidence corroborated by medical evidence, mere non recovery of weapon from the accused does not affect the prosecution case relating to murder என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

எனவே ஒரு வழக்கில் கண்ணுற்ற சாட்சியங்கள் இருக்கும் போது அவர்களது சாட்சியம் மருத்துவ சாட்சியத்துடன் ஒத்துபோகும்போது வழக்கில் தொடர்புடைய ஆயுதங்களை கைப்பற்றவில்லை என்றாலும் அது அரசுத்தரப்பு வழக்கை பாதிக்காது என்பது தெளிவாகும்.

183.7 மேலும், ஜெயராஜ், பென்னிக்ஸ் இருவரையும் கிளைச்சிறைச்சாலைக்கு அழைத்து செல்லப்பட்டபோது பயன்படுத்தப்பட்ட TN–92–9302என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் சீட்டின் கவர் கைப்பற்றப்பட்டு சா.பொ.11 ஆக குறியிடு செய்யப்பட்டுள்ளது. அ.சாஆ.244ல் Q–8 ஆக அது ஆய்வு செய்யப்பட்டுள்ளதில் அதில் இரத்தம் இருப்பதாக கண்டறியப்படவில்லை. ஆனால் சீட்டின் மேலே விரிக்கப்பட்டிருந்த போர்வையில் இரத்தக்றை இருப்பதும் அது B group என்பதும் கண்டறிப்பட்டதாக அ.சாஆ.245ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

183.8 சாத்தான்குளம் காவல்நிலையத்தில் சந்தேகத்திற்கிடமான 20 இடங்களிலும் கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலையில் சந்தேகத்திறகிடமான 8 இடங்களிலும் இருந்த கறைகள் பருத்தி நூலில் தொய்தெடுக்கப்பட்டு தடய அறிவியல் ஆய்வுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

183.9 செல்வராணியிடமிருந்து கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அ.சா.50 பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் சம்மந்தமான இறப்பு குறித்த நீதி விசாரணையின்போது கைப்பற்றியுள்ள இளமஞ்சள் நிற சட்டை அ.சா.பொ.28 அகவும் செல்வராணியிடமிருந்து கோவில் பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அ.சா.50 பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் சம்மந்தமான இறப்பு குறித்த நீதிவிசாரணையின் போது கைப்பற்றியுள்ள இரத்தம் படிந்த போர்வை அ.சா.பொ.27ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

183.10 பிரேத பரிசோதனையின் போது ஜெயராஜ் உடுத்தியிருந்த உடைகள் கைப்பற்றி அ.சா.27 கருப்பசாமி, நீதித்துறை நடுவரிடம் ஒப்படைத்துள்ளார். அந்த சட்டை அ.சா.பொ.2 ஆகவும் லுங்கி அ.சா.பொ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

183.11 பிரேத பரிசோதனையின்போது ஜெயராஜ் உடுத்தியிருந்த ஆடைகளை கைப்பற்றி அ.சா.27 கருப்பசாமி, நீதித்துறை நடுவரிடம் ஒப்படைத்துள்ளார். அந்த கைலி அ.சா.பொ2 ஆகவும் சட்டை அ.சா.பொ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனையின் போது பென்னிக்ஸ் உடுத்தியிருந்த ஆடைகளை கைப்பற்றி அ.சா.28 சிவக்குமார் நீதித்துறை நடுவரிடம் ஒப்படைத்துள்ளார். அந்த கைலி அ.சா.பொ4 ஆகவும் சட்டை அ.சா.பொ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

183.12 மேற்படி தடய பொருட்களில் உள்ள சந்தேகத்திற்கிடமான கறைகளுடன் ஒப்பீடு செய்ய ஜெயராஜின் மனைவியும் பென்னிக்சின் தயாரும் செல்வராணியிடமிருந்து மாதிரி இரத்தம் பெற 01.09.2020ம் தேதிய அ.சா.ஆ.228 கடிதம் மூலம் FTA கார்டு கோரி பெறப்பட்டு அன்று செல்வராணியின் சம்மதம் பெறப்பட்டு அவருடைய புகைப்படம் ஒட்டி உரிய படிவத்தில் மருத்துவர் கே.பிரகாஷ் போஸ், என்பவரால் மாதிரி இரத்தம் சேகரிக்கப்பட்டு தடய அறிவியல் ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது செல்வராணியின் இரத்த மாதிரி சேகரிக்கப்பட்டது சம்மந்தமான படிவம் அ.சா.ஆ.229 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த படிவத்தில் தேசிங்குராஜா சாட்சியாக கையெழுத்திட்டுள்ளார். செல்வராணியின் சம்மத கடிதம், PAN கார்டு உள்ளிட்ட நான்கு பக்கம் கொண்ட ஆவணம் அ.சாஆ.226 ஆக குறியீடு

செய்யப்பட்டுள்ளது. அ.சாஆ.240–ஐ பரிசீலித்து பார்க்கும் போது மேற்படி செல்வராணியிடமிருந்து சேகரிக்கப்பட்ட இரத்த மாதிரி தல்ஜீத் சிங் என்பவர் மூலம் மதுரை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவரால் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

183.13 மேற்படி பொருட்களை தடய அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்ததப்பட்டுள்ளதில் அ.சா.ஆ.244, 245, 246, 264, ஆகிய அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளது.

183.14 அவற்றில் அ.சாஆ.244ஐ பரிசிலித்து பார்க்கும் போது

(8.1) அழுக்கு படிந்த கறையுடைய கை இல்லாத வெள்ளை நிறபனியன், டவல் ஒன்று, பலவண்ணம் கொண்ட கட்டம் போட்ட சிவந்த பிரவுன் நிறமுடைய கறைகொண்ட லுங்கி, வெள்ளை கருப்பு கலர் கோடு போட்ட சிவந்த பிரவுன் நிறமுடைய கறைகொண்ட லுங்கி, பலவண்ணம் கொண்ட சிவந்த பிரவுன் நிறமுடைய கறைகொண்ட பெட்சீட் ,வெளிர் மஞ்சள் நிறமுடைய சிவந்த பிரவுன் நிறமுடைய கறைகொண்ட முழுக்ககை சட்டை, லாக்கப்அறையின் கிழக்கு புற சுவற்றில் 1 என குறியிடப்பட்டஇரத்த கறை, லாக்கப்அறையின் கிழக்கு புற சுவற்றில் 3 என குறிப்பிடப்பட்டஇரத்த கறை, லாக்கப்அறையின் கிழக்கு புற சுவற்றில் 5என குறிப்பிடப்பட்டஇரத்த கறை, லாக்கப்அறையின் கிழக்கு புற சுவற்றில் 6 என குறிப்பிடப்பட்டஇரத்த கறை, லாக்கப்அறையின் தெற்கு புற சுவற்றில் 7 என குறிப்பிடப்பட்டஇரத்த கறை, லாக்கப்அறையின் வடபுற வெளிபுற சுவறில் 11 என குறிப்பிடப்பட்டஇரத்த கறை, கழிவறை அருகே உள்ள மாடிப்படி சுவற்றில் 13 என குறிப்பிடப்பட்டஇரத்த கறை ஆய்வாளரது அறையுள் காலண்டர் அருகே 18 என குறிப்பிடப்பட்டஇரத்த கறை, கருப்பு வெள்ளை நிறமுடைய சிவந்த பிரவுன் நிறமுடைய கறைகொண்ட பூஞ்சை படர்ந்த பென்னிக்சின் லுங்கி, புளூ கலர் கட்டம் போட்ட சிவந்த பிரவுன் நிறமுடைய கறைகொண்ட துர்நாற்றம் அடித்த பென்னிக்ஸ் அணிந்திருந்த கிழிந்த முழுக்கை சட்டை, வெள்ளை நிற அழுக்கு கறை படிந்த பூஞ்சை படர்ந்த ஜெயராஜின் அரைக்கை சட்டை, பலவண்ணம் கொண்ட கட்டம் போட்ட கிழிந்த சிவந்த பிரவுன் நிறமுடைய கறைகொண்ட துர்நாற்றம் அடித்தஜெயராஜின் லுங்கி,

பலவண்ணம் கொண்ட கட்டம் போட்ட கிழிந்த சிவந்த பிரவுன் நிறமுடைய கறைகொண்ட துர்நாற்றம் அடித்த ஜெயராஜின் வெள்ளை கலர் அரைக்கை சட்டை Q–19–2 சாத்தான்குளம் சார்பு ஆய்வாளர் அறையிலிருந்து கைப்பற்றப்ட்ட மர லத்தி Q–20 ஆகியவற்றில் மனித இரத்தம் உள்ளது என கண்டறியப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(8.2) லாக்கப்அறையின் கிழக்கு புற சுவற்றில் 2, 4 தெற்கு புற சுவற்றில், 8 மேற்கு புற சுவற்றில் 9 என குறிப்பிடப்பட்ட இரத்த கறை டவல் சார்பு ஆய்வாளர் அறை முகப்பில் 10, கழிவறை உட்புற மேற்கு புற சுவறில் 12 கழிவறை உட்புற மேற்கு புற சுவறில் 15 கழிவறை அருகே உள்ள மாடிப்படி சுவற்றில் 13 ஆய்வாளரது அறை முகப்பருகே சுவற்றில் 17 என குறிப்பிடப்பட்ட இரத்த ஆகியவற்றில் குருதி நீர் பரிசோதனைக்கு சிறிய அளவிலான இரத்த இருப்பது கண்டறியப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(8.3) ல் குறிப்பிடப்பட்டுள்ள தடயங்களில் இரத்தம் காணப்படவில்லை.

(8.4).டவல், லுங்கி, லுங்கி, பெட்சீட், லக்கப் ரூமின் கிழக்குபுற உள் சுவற்றிலிருந்து 2 என எண்ணம்மிட்ட இடத்தில் இருந்த இரத்தக்கறையிலிருந்த தோய்த்தெடுக்கப்பட்ட பருத்தி நூல், லக்கப் ரூமின் கிழக்குபுற உள் சுவற்றிலிருந்து 4 என எண்ணம்மிட்ட இடத்தில் இருந்த இரத்தக்கறையிலிருந்த தோய்த்தெடுக்கப்பட்ட பருத்தி நூல், பருத்தி நூல் சாத்தான்குளம் காவல்நிலைய கழிவைவறையில் மேற்கு உட்புற சுவற்றில் 12 என எண்ணம்மிட்ட இடத்தில் இருந்த இரத்தக்கறையிலிருந்து தோய்த்தெடுக்கப்பட்ட பருத்தி நூல், சாத்தான்குளம் காவல்நிலைய கழிவைவறையில் கிழக்கு உட்புற சுவற்றில் 15 என எண்ணம்மிட்ட பகுதியில் இடத்தில் இருந்த இரத்தக்கறையிலிருந்து தோய்த்தெடுக்கப்பட்ட பருத்தி நூல், ஆகியவற்றில் இருப்பது ஆண் மனித இரத்தம் என கண்டறியப்பட்டுள்ளது. மேலும் அவற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மரபணுக்கள் ஜெயராஜின் லுங்கி மற்றும் ஜெயராஜின் சட்டை யில் உள்ள இரத்தத்தில் இருந்து எடுக்கப்பட்ட மரபணுவுடன் ஒத்துபோவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

(8.5).பென்னிக்சின் சட்டை, சாத்தான்குளம் காவல்நிலைய கழிவறை அருகே உள்ள படிகட்டின் சுவற்றில் 13 என எண்ணம்மிடப்பட்ட இடத்தில் இருந்த இரத்தக்கறையிலிருந்த தோய்த்தெடுக்கப்பட்ட பருத்தி நூல், சாத்தான்குளம் ஆய்வாளர் அறை முகப்பில் 16 என எண்ணம்மிடப்பட்ட இடத்தில் இருந்த இரத்தக்கறையிலிருந்த தோய்த்தெடுக்கப்பட்ட பருத்தி நூல், சாத்தான்குளம் ஆய்வாளர் அறை உள்ளே காலண்டர் சீட்டில் 18 என எண்ணம்மிடப்பட்ட இடத்தில் இருந்த இரத்தக்கறையிலிருந்த தோய்த்தெடுக்கப்பட்ட பருத்தி நூல், சாத்தான்குளம் சார்பு ஆய்வாளர் அறையில் கைப்பற்றப்பட்ட லத்தி, ஆகியவற்றில் இருப்பது ஆண் மனித இரத்தம் என்றும் அது பென்னிக்சின் லுங்கி, பென்னிக்சின் சட்டை ஆகியவற்றில் உள்ள இரத்தத்திலிருந்து எடுப்பப்பட்ட மரபணுவுடன் ஒத்துபோவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(8.6) சாத்தான்குளம் காவல்நிலைய லாக்கப் ரூமின் கிழக்கு சுவற்றில் 2 என எண்ணிடப்பட்ட இடத்தில் இருந்த இரத்தக்கறையிலிருந்த தோய்த்தெடுக்கப்பட்ட பருத்தி நூலில் இருப்பது ஆண் மனித இரத்தம் என்று கண்டறியப்பட்டுள்ளது.

(8.7) சாத்தான்குளம் காவல்நிலைய லாக்கப் அறையின் உள்புற கீழ்புற சுவற்றில் 3 என எண்ணிடப்பட்ட இடத்தில் இருந்த இரத்தக்கறையிலிருந்த தோய்த்தெடுக்கப்பட்ட பருத்தி நூல், சாத்தான்குளம் காவல்நிலைய லாக்கப் அறையின் உள்புற தென்புற சுவற்றில் 8 என எண்ணிடப்பட்ட இடத்தில் இருந்த இரத்தக்கறையிலிருந்த தோய்த்தெடுக்கப்பட்ட பருத்தி நூல், சாத்தான்குளம் ஆய்வாளர் அறையின் முகப்பில் 17 என எண்ணிடப்பட்ட இடத்தில் இருந்த இரத்தக்கறையிலிருந்த தோய்த்தெடுக்கப்பட்ட பருத்தி நூல் ஆகியவற்றில் இருப்பது ஆண் மனித இரத்தம் என்றும், அவற்றின் மரபணுக்கள் ஒன்றுக்கொன்று ஒத்துப்போவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(8.8) சாத்தான்குளம் காவல்நிலைய லாக்கப் அறையின் உள்புற கீழ்புற சுவற்றில் 5 என எண்ணிடப்பட்ட இடத்தில் இருந்த இரத்தக்கறையிலிருந்த தோய்த்தெடுக்கப்பட்ட பருத்தி நூல், சாத்தான்குளம் காவல்நிலைய லாக்கப் அறையின் உள்புற கீழ்புற சுவற்றில் 6 என எண்ணிடப்பட்ட இடத்தில் இருந்த இரத்தக்கறையிலிருந்த

தோய்த்தெடுக்கப்பட்ட பருத்தி நூல், ஆகியவற்றில் இருப்பது ஆண் மனித இரத்தம் என்றும், அவற்றின் மரபணுக்கள் ஒன்றுக்கொன்று ஒத்துப்போவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(8.9) சாத்தான்குளம் லாக்கப் அறையின் தெற்கு புற சுவற்றில் 7 என எண்ணிடப்பட்ட இடத்தில் இருந்த இரத்தக்கறையிலிருந்த தோய்த்தெடுக்கப்பட்ட பருத்தி நூலில் இருப்பது ஆண் மனித இரத்தம் என கண்டறியப்பட்டுள்ளது.

(8.10) சாத்தான்குளம் காவல்நிலைய லாக்கப் அறையின் வெளிபுற வடபுற சுவற்றில் 11 என எண்ணிடப்பட்ட இடத்தில் இருந்த இரத்தக்கறையிலிருந்த தோய்த்தெடுக்கப்பட்ட பருத்தி நூலில் இருப்பது ஆண் மனித இரத்தம் என கண்டறியப்பட்டுள்ளது.

(8.11) அழுக்கு படிந்த கறையுடைய கை இல்லாத வெள்ளை நிறபனியன், காரின் பின்னிருக்கை சீட் கவர், லாக்கப்அறையின் மேற்கு புற சுவற்றில் 9 என எண்ணிடப்பட்ட இடத்தில் இருந்த இரத்தக்கறையிலிருந்த தோய்த்தெடுக்கப்பட்ட பருத்தி நூல், கழிவறை உட்புற கிழக்கு புற சுவற்றில் 14 என எண்ணிடப்பட்ட இடத்தில் இருந்த இரத்தக்கறையிலிருந்த தோய்த்தெடுக்கப்பட்ட பருத்தி நூல், சிவந்த பிரவுன் நிறமுடைய கறைகொண்ட துர்நாற்றம் அடித்த பென்னிக்ஸ் அணிந்திருந்த கிழிந்த முழுக்கை சட்டை, வெள்ளை நிற அழுக்கு கறை படிந்த பூஞ்சை படர்ந்த ஜெயராஜின் அரைக்கை சட்டை, சாத்தான்குளம் சார்பு ஆய்வாளர் அறையிலிருந்து கைப்பற்றப்ட்ட மற்றொரு மர லத்தி, எதிரி முத்துராஜாவின் குடியிருப்பிலிருந்து கைப்பற்றப்பட்ட மர லத்தி, எதிரி செல்லதுரை குடியிருப்பிலிருந்து கைப்பற்றப்பட்ட மர லத்தி, காவலர் அழகுமாரிசெல்வம் குடியிருப்பிலிருந்து கைப்பற்றப்பட்ட மர லத்தி, காவலர் வினோத்குமார் குடியிருப்பிலிருந்து கைப்பற்றப்பட்ட மர லத்தி, காவலர் ஜேசுராஜ் குடியிருப்பிலிருந்து கைப்பற்றப்ட்ட மரலத்தி, எதிரி சாமதுரை குடியிருப்பிலிருந்து கைப்பற்றப்பட்ட மர லத்தி, எதிரி சாமதுரை குடியிருப்பிலிருந்து கைப்பற்றப்ட்ட கிரே கலர் பிவிசி பைப், எதிரி வெயிலுமுத்து குடியிருப்பிலிருந்து கைப்பற்றப்ட்ட மர லத்தி எதிரி வெயிலுமுத்து குடியிருப்பிலிருந்து கைப்பற்றப்பட்ட, 2 அடி 8இன்ஞ் நீளம் , 6

இன்ஞ் சுற்றளவு கொண்ட மர லத்தி ஆகியவற்றின் இரத்த மாதிரிகள் DNA பரிசோதனைக்கு உட்படுத்த இயலவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

183.15 இந்நிலையில் குருதி நீர் அறிக்கை அ.சா.ஆ.245ஜ பரிசிலித்து பார்க்கும் போது அழுக்கு படிந்த கறையுடைய கை இல்லாத வெள்ளை நிறபனியன் பலவண்ணம் கொண்ட கட்டம் போட்ட சிவந்த பிரவுன் நிறமுடைய கறைகொண்ட லுங்கி, வெள்ளை கருப்பு கலர் கோடு போட்ட சிவந்த பிரவுன் நிறமுடைய கறைகொண்ட லுங்கி, பலவண்ணம் கொண்ட சிவந்த பிரவுன் நிறமுடைய கறைகொண்ட பெட்சீட், வெளிர் மஞ்சள் நிறமுடைய சிவந்த பிரவுன் நிறமுடைய கறைகொண்ட முழுக்ககை சட்டை, லாக்கப்அறையின் கிழக்கு புற சுவற்றில் 6 என எண்ணிடப்பட்ட இடத்தில் இருந்த இரத்தக்கறையிலிருந்த தொய்தெடுக்கப்பட்ட பருத்தி நூல், ஆய்வாளரது அறையினுள் காலண்டர் அருகே 18 என எண்ணிடப்பட்ட இடத்தில் இருந்த இரத்தக்கறையிலிருந்த தொய்தெடுக்கப்பட்ட பருத்தி நூல், கருப்பு வெள்ளை நிறமுடைய சிவந்த பிரவுன் நிறமுடைய கறைகொண்ட பூஞ்சை படர்ந்த பென்னிக்சின் லுங்கி, புளூ கலர் கட்டம் போட்ட சிவந்த பிரவுன் நிறமுடைய கறைகொண்ட துர்நாற்றம் அடித்த பென்னிக்ஸ் அணிந்திருந்த கிழிந்த முழுக்கை சட்டை, வெள்ளை நிற அழுக்கு கறை படிந்த பூஞ்சை படர்ந்த ஜெயராஜின் அரைக்கை சட்டை, பலவண்ணம் கொண்ட கட்டம் போட்ட கிழிந்த சிவந்த பிரவுன் நிறமுடைய கறைகொண்ட துர்நாற்றம் அடித்த ஜெயராஜின் லுங்கி பலவண்ணம் கொண்ட கட்டம் போட்ட கிழிந்த சிவந்த பிரவுன் நிறமுடைய கறைகொண்ட துர்நாற்றம் அடித்த ஜெயராஜின் வெள்ளை கலர் அரைக்கை சட்டை, சாத்தான்குளம் சார்பு ஆய்வாளர் அறையிலிருந்து கைப்பற்றப்பட்ட மர லத்தி, ஆகியவற்றில் உள்ளது மனித இரத்தம் என கண்டறியப்பட்டுள்ளது.

183.16 மேலும் அந்த அறிக்கையில் லாக்கப்அறையின் கிழக்கு புற சுவற்றில் 1 என எண்ணிடப்பட்ட இடத்தில் இருந்த இரத்தக்கறையிலிருந்த தொய்தெடுக்கப்பட்ட பருத்தி நூல், லாக்கப்அறையின் கிழக்கு புற சுவற்றில் 5என எண்ணிடப்பட்ட இடத்தில் இருந்த இரத்தக்கறையிலிருந்த தொய்தெடுக்கப்பட்ட பருத்தி நூல், லாக்கப் அறையின் தெற்கு புற சுவற்றில் 7என எண்ணிடப்பட்ட இடத்தில் இருந்த

இரத்தக்கறையிலிருந்த தொய்தெடுக்கப்பட்ட பருத்தி நூல், சாத்தான்குளம் காவல்நிலைய கழிவறை அருகே உள்ள படிகட்டு சுவற்றில் 14 என எண்ணிடப்பட்ட இடத்தில் இருந்த இரத்தக்கறையிலிருந்த தோய்த்தெடுக்கப்பட்ட பருத்தி நூலில் இருப்பது என்ன வகை ரத்தம் என்பதை கண்டறிய இயலவில்லை என்றும் பெட்சீட்டில் இருப்பது B–Group இரத்தம் என்றும், பென்னிக்ஸ் அணிந்திருந்த கிழிந்த முழுக்கை சட்டையில் இருப்பது O Group என்றும், வெள்ளை நிற அழுக்கு கறை படிந்த பூஞ்சை படர்ந்த ஜெயராஜின் அரைக்கை சட்டையில் இருப்பது A Group இரத்தம் என்றும் கண்டறியப்பட்டுள்ளது தெரியவருகிறது.

183.17 சாத்தான்குளம் காவல்நிலையத்தில் இருந்த சந்தேகத்திற்கிடமான கறைகளிலிருந்து தொய்தெடுக்கப்பட்ட பருத்தி நூல்கள் Exh .P.1 முதல் Exh.P.20 ஆகவும் கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலையில் அறை எண்.3ல் இருந்த சந்தேகத்திற்கிடமான கறைகளிலிருந்து தொய்தெடுக்கப்பட்ட பருத்தி நூல்கள்Exh.P.21 முதல் Ex.hP.28 ஆகவும் குறியீடு செய்யப்பட்டு தடய அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதில் கிடைக்கப்பெற்றுள்ள மரபணு அறிக்கை அ.சாஆ.264ல் சார்பு ஆய்வாளர் அறையில் உள்ள கப்போர்டின் கதவருகே இருந்த கறையிலும் சார்பு ஆய்வாளர் அறையிலிருந்த மரமேசையின் காலிலிருந்த கறையிலும் இரத்தம் உள்ளதா என்பதை கண்டறிய இயலவில்லை என குறிப்பிடப்பட்டிருந்தாலும் அந்த அறிக்கையில் சார்பு ஆய்வாளர் அறையிலிருந்து கைப்பற்றப்பட்ட லத்தி Exh P.2 சாத்தான்குளம் காவல்நிலைய லாக்அப் அறையின் மேற்கு புற சுவரின் 4 இடங்களில் காணப்பட்ட சந்தேகத்திற்கிடமான கறைகளிலிருந்து தொய்தெடுக்கப்பட்ட பருத்தி நூல் Exh P.4 to P.7 சாத்தான்குளம் காவல்நிலைய லாக்அப் அறையின் வட புற சுவரின் 4 இடங்களில் காணப்பட்ட சந்தேகத்திற்கிடமான கறைகளிலிருந்து தொய்தெடுக்கப்பட்ட பருத்தி நூல் Exh P.8 to P.11, சாத்தான்குளம் காவல்நிலைய லாக்அப் அறையின் இரும்பு கதவில் 2 இடங்களில் காணப்பட்ட சந்தேகத்திற்கிடமான கறைகளிலிருந்து தொய்தெடுக்கப்பட்ட பருத்தி நூல் Exh .P.12, Exh P.13 , சாத்தான்குளம் காவல்நிலைய லாக்அப் அறையின் கிழக்குபுற சுவரின் 3 இடங்களில் காணப்பட்ட

சந்தேகத்திற்கிடமான கறைகளிலிருந்து தொய்தெடுக்கப்ட்ட பருத்தி நூல் Exh P.14 to Ex.P.16 , சாத்தான்குளம் காவல்நிலைய லாக்அப் அறையின் ஆயுத அறை அருகே காணப்பட்ட சந்தேக்த்திற்கிடமான கறைகளிலிருந்து தொய்தெடுக்கப்ட்ட பருத்தி நூல் Exh P.17, சாத்தான்குளம் காவல்நிலைய லாக்அப் அறையின் வெளிப்புறவடபுற சுவரின் 3 இடங்களில் காணப்பட்ட சந்தேக்த்திற்கிடமான கறைகளிலிருந்து தொய்தெடுக்கப்ட்ட பருத்தி நூல் Exh P.18 to Exh P.20 மற்றும் கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலையின் கைதி அறை எண்.3ன் தென்புற சுவரில் உள்ள காணப்பட்ட சந்தேக்திற்கிடமான கறையில் தொய்தெடுக்கப்ட்ட பருத்தி நூல் Exh P.21 கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலையின் கைதி அறை எண்.3ன் கிழபுற சுவரில் உள்ள காணப்பட்ட 3 சந்தேக்திற்கிடமான கறையில் தொய்தெடுக்கப்ட்ட பருத்தி நூல் Exh P.22 முதல் Exh P.24 கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலையின் கைதி அறை எண்.3ன் வடபுற சுவரில் உள்ள காணப்பட்ட 3 சந்தேக்திற்கிடமான கறையில் தொய்தெடுக்கப்ட்ட பருத்தி நூல் Exh P.25 முதல் Exh.P.27 கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலையின் கைதி அறை எண்.3ன் மேற்குபுற சுவரில் சந்தேக்திற்கிடமான கறையில் தொய்தெடுக்கப்ட்ட பருத்தி நூல் Exh P.28 ஆகியவற்றில் இருப்பது இரத்தம் என்பது கண்டறியப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதில் Ex.P.4, P.11, 14, 15, 16, 24, 26ல் இருப்பது ஆண் மனித இரத்தம் என்பது கண்டறியப்பட்டுள்ளது தெரியவருகிறது.

183.18 மேலும் அ.சாஆ.264ல் 8.3ல் லத்தியில் உள்ள கறையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மரபணுவும், பென்னிக்சின் லுங்கியில் உள்ள கறையிலிருந்து எடுக்கப்பட்ட மரபணுவும், இளம் மஞ்சள் நிற முழுக்கை சட்டையில் உள்ள மரபணுவும், சாத்தான்குளம் காவல்நிலைய கழிவறைக்கும் அருகே உள்ள மாடிப்படியின் சுவரில் 13 என குறிப்பிடப்பட்ட இடத்திலிருந்த சந்தேகத்திற்கிடமான கறையிலிருந்து தொய்தெடுக்கப்ட்ட பருத்தி நூலிலிருந்து பிரிதெடுக்கப்பட்ட மரபணுவும், ஆய்வாளரது அறை முகப்பில் 16 குறியீடு செய்யப்ட்ட இடத்திலிலிருந்த சந்தேகத்திற்கிடமான கறையில் தொய்தெடுக்கப்ட்ட கறையிலிருந்து பிரித்தெடுக்கப்ட்ட மரபணுவும், சாத்தான்குளம் லாக்அப் அறையின் மேற்கு புற சுவரில் இருந்த சந்தேக்திற்கிடமான

கறையில் தொய்தெடுக்கப்பட்ட பருத்திநூலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மரபணுவும் ஒத்துபோவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

183.19 மேலும் அ.சா.ஆ.264 அறிக்கையில் சாத்தான்குளம் லாக்அப் அறையின்வட புற சுவர் கீழ்புற சுவரில் 2 இடங்கள் மேல்புற சுவர் கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலை அறை எண்.3ன் கீழ்புற சுவர் மற்றும் வடபுற சுவர் ஆகியவற்றில் ஆண் மனித இரத்தம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

183.20 குருதிநீரியல் அறிக்கையில் 3 குருப் ரத்தம் இருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தாலும் பெட்சீட் பென்னிக்ஸ் அணிந்திருந்த கிழிந்த முழுக்கை சட்டை ஜெயராஜின் அரைக்கை சட்டை தவிர மற்ற பொருட்களில் உள்ள ரதத்ம் இரத்த வகை என்ன என்பது நிரூபிக்கப்பட்வில்லை என வைத்துக்கொண்டாலும் மேற்படி மரபணு சாட்சியங்களின் அடிப்படையில் பார்க்கும் போது

183.20 A :– அ.சா.ஆ.244ன் முடிவு (8.4) ன் படி கைப்பற்றப்பட்ட டவல் லுங்கிகள் பெட்சீட் மற்றும் சாத்தான்குளம் காவல்நிலைய லக்கப் ரூமின் கிழக்குபுற உள் சுவரில் 2 என எண்ணம்மிட்டபகுதி லாக்கப் ரூமின் கிழக்குபுற உள் சுவற்றில் 4 என எண்ணம்மிட்டபகுதி சாத்தான்குளம் காவல்நிலைய கழிவைறையில் மேற்கு உட்புற சுவற்றில் 12 என எண்ணம்மிட்ட பகுதி சாத்தான்குளம் காவல்நிலைய கழிவைறையில் கிழக்கு உட்புற சுவற்றில் 15 என எண்ணம்மிட்ட பகுதி ஆகியவற்றில் இருப்பது ஆண் மனித இரத்தம் என கண்டறியப்பட்டுள்ளது என்பதும் அவற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மரபணுக்கள் ஜெயராஜின் லுங்கி மற்றும் ஜெயராஜின் சட்டையில் உள்ள இரத்தத்தில் இருந்து எடுக்கப்ட்ட மரபணுவுடன் ஒத்துபோயுள்ளதும் தெரியவருகின்றது. இது ஜெயராஜ் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் வைத்து தாக்கி காயப்படுத்தப்பட்டுள்ளார் என்பதை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

183.20 B– மேலும் அ.சாஆ.244ன் முடிவு (8.5) ன் படி பென்னிக்சின் சட்டை சாத்தான்குளம் காவல்நிலைய கழிவறை அருகே உள்ள படிகட்டின் சுவற்றில் 13 என

எண்ணிடப்பட்ட இடம் சாத்தான்குளம் ஆய்வாளர் அறை முகப்பில் 16 என எண்ணம்மிடப்பட்ட இடம் சாத்தான்குளம் ஆய்வாளர் அறை உள்ளே காலண்டர் சீட் சாத்தான்குளம் சார்பு ஆய்வாளர் அறையில் கைப்பற்றப்பட்ட லத்தி ஆகியவற்றில் இருப்பது ஆண் மனித இரத்தம் என்பதும் அது பென்னிக்சின் லுங்கி Q–16–1 , பென்னிக்சின் சட்டை Q–16–2 ஆகியவற்றில் உள்ள இரத்தத்திலிருந்து எடுப்பப்பட்ட மரபணுவுடன் ஒத்துபோயுள்ளது தெரியவருகின்றது. இது பென்னிக்ஸ் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் வைத்து தாக்கி காயப்படுத்தப்பட்டுள்ளார் என்பதை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

183.20 C:– மேலும் அ.சாஆ.264ல் DNA பரிசோதனை சம்மந்தமான அறிக்கையை பரிசிலித்து பார்க்கும் போது அதில் 8.3ல் Ex.P5 ஆக குறியீடு செய்யப்ட்ட சாத்தான்குளம் லாக்அப் அறையின் மேற்கு புற சுவரில் இருந்த சந்தேக்திற்கிடமான கறையில் தொய்தெடுக்கப்பட்ட பருத்திநூலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மரபணுவும் Q–20 லத்தியில் உள்ள கறையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மரபணுவும், Q–16–1 என குறியீடு செய்யப்பட்ட பென்னிக்சின் லுங்கியில் உள்ள கறையிலிருந்து எடுக்கப்பட்ட மரபணுவும், இளம் மஞ்சள் நிற முழுக்கை சட்டை Q–7 உள்ள மரபணுவும், சாத்தான்குளம் காவல்நிலைய கழிவறைக்கும் அருகே உள்ள மாடிப்படியின் சுவரில் 13 என குறிப்பிடப்பட்ட இடத்திலிருந்த சந்தேகத்திற்கிடமான கறையிலிருந்து தொய்தெடுக்கப்ட்ட பருத்தி நூலிலிருந்து பிரிதெடுக்கப்பட்ட மரபணுவும், ஆய்வாளரது அறை முகப்பில் 16 குறியீடு செய்யப்பட்ட இடத்திலிலிருந்த சந்தேகத்திற்கிடமான கறையில் தொய்தெடுக்கப்ட்ட கறையிலிருந்து பிரித்தெடுக்கப்ட்ட மரபணுவும், ஒத்துபோயுள்ளதும் தெரியவருகிறது.

183.20 D :–அ.சா.ஆ.246–ல் – Q–7 வெளிர் மஞ்சள் கலர் சட்டை Q–13–1 சாத்தான்குளம் காவல்நிலைய கழிவறை அருகே மாடிப்படி சுவர், Q–15 ஆய்வாளரது அறையில் காலண்டர் Q–14–1 ஆய்வாளர் அறையின் முகப்பு பகுதி, Q–20 சார்பு ஆய்வாளர் அறையிலிருந்து கைப்பற்றப்பட்ட 73 செ.மீ லத்தி, Q–16–1 பென்னிக்சின் லுங்கி Q–16–2 பென்னிக்சின் சட்டை ஆகியவற்றில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட

மரபணுவும் செல்வராணியின் மாதிரி இரத்ததிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மரபணுவும் Q–3 டவல், Q–4 லுங்கி , Q–6 பெட்சீட், Q–9–1 லாக்அப் அறையின் கீழ்புற சுவர், Q–9–4 லாக்அப் அறையின் கீழ்புற சுவர், Q–12–1 சாத்தான்குளம் காவல்நிலைய கழிவறையின் மேல்புற சுவர், Q–12–2 சாத்தான்குளம் காவல்நிலைய கழிவறையின் கீழ்புறசுவர், Q–19–1 ஜெயராஜின் லுங்கி, Q–19–2 ஜெயராஜின் சட்டை ஆகியவற்றில் உள்ள மரபணுக்கள் ஒத்துபோவதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

184. எனவே முன்னிடப்பட்டுள்ள வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் மேற்படி மரபணு சாட்சியங்களின் அடிப்படையில் பார்க்கும் போது ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் அடித்து காயப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதும் அப்போது அவர்களது உடலில் இருந்து, தரையிலும் அவர்களது ஆடைகளிலும் காவல்நிலைய சுவர்களிலும் இரத்தம் பட்டுள்ளது என்பது தெளிவுபட நிருபணமாகின்றது.

185. இவ்வழக்கில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு ஏற்பட்ட காயங்கள் லத்தியால் ஏற்பட்டிருக்க கூடும் என பல்நோக்கு மருத்துவர் குழுவை சார்ந்த மருத்துவர் அ.சா.49 தெளிவுபட சாட்சியம் அளித்துள்ளனர். ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை அடிக்க அ.சா.பொ.21 மற்றும் அ.சா.பொ.22 பயன்படுத்தப்பட்டதாக அ.சா.47 சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகள் மாறி மாறி அடித்ததாக அ.சா.47 சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி டேபிள் பென்னிக்ஸ், ஜெயராஜை குப்புற படுக்க வைத்து அடித்த டேபிள் என அ.சா.47 அடையாளம் காட்டியுள்ளார். எனவே மற்ற லத்திகளில் மற்றும் டேபிளில் இரத்தக்கறை கண்டறிய இயலவில்லை என்பது சிபிஐ தரப்பு வழக்கை எவ்வகையிலும் பாதிக்காது என்றே இந்த நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

186. எனவே மேற்படி சாட்சியங்களின் அடிப்படையில் பார்க்கும் போது ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் 19–6–20 மற்றும் 20–6–20 க்கு இடைப்பட்ட இரவில் சாத்தான் குளம் காவல்நிலையத்தில் வைத்து சாத்தான்குளம் காவல்நிலைய போலீசாரால் இடைவெளிவிட்டு இடைவெளிவிட்டு பலமணி நேரம் அடித்து காயப்படுத்தப்பட்டு

சித்ரவதை செய்யப்பட்டுள்ளனர் என சிபிஐ தரப்பில் தெளிவுபட நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

யாரால் ,எப்படி

187 . இனி சாத்தான் குளம் காவல் நிலையத்தில் எந்த போலீசாரால் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு மேற்படி காயங்கள் ஏற்பட்டது எப்படி ஏற்பட்டது என்பதை பற்றி விரிவாக தீர்மானிக்கலாம்

188. சாத்தான்குளம் காவல் நிலையத்தை சார்ந்த 10 காவல்துறையினருக்கு எதிராக மட்டுமே இவ்வழக்கு தகவல் செய்யப்பட்டுள்ளது அதில் பத்தாம் எதிரி பால்துரையும் விசாரணை காலத்திலேயே இறந்துள்ளார் தற்போது ஒன்பது எதிரிகளுக்கு எதிராக மட்டுமே இந்த வழக்கு நடைபெற்று வருகிறது, மற்ற நபர்கள் மீது அவர்கள் குற்ற மனதுடன் குற்றம் ஏதும் செய்ததாக சிபிஐ தரப்பில் குறிப்பிட்டு குற்றச்சாட்டு எதுவும் முன் வைக்கப்படவில்லை. இவ்வழக்கில் ஏற்கனவே சாட்சி விசாரணை முடிக்கப்பட்டு எதிரிகள் தரப்பு சாட்சியமும் முடிக்கப்பட்டுவிட்டது. அ.சா.20 குற்ற எண்.312/2020 புகாரை தயாரித்துள்ளார் என்றும் பென்னிக்சை காவலநிலையத்தில் வைத்து அமுக்கியுள்ளார் என்றும் எனவே அவரையும் எதிரியாக சேர்க்கவேண்டும் என்றும் 4ம் எதிரி தரப்பில் CrmP.60/2022 தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அமர்வு வழக்குடன் சேர்ந்து தீர்வு காண முடிவுசெய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டு 28.03.2023ம் தேதி அம்மனு முடிக்கப்பட்டுள்ளது.

189 ப்யூலா, ரேவதி மேற்படி குற்ற எண்.312/2020 வழக்கில் உயர் அதிகாரிகளுக்கு வாசித்துள்ளார்கள் என்றும் FIR Index ல் குறிப்பு எழுதியுள்ளார்கள் என்றும் எனவே அவர்களையும் எதிரிகளாக சேர்க்கவேண்டும் என்றும் எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. ஒரு வழக்கை பதிவு செய்த பின் அதை ஆவணங்களில் பெயர்த்து எழுதுவதையோ வாசிப்பதையோ குற்றமாக கருத முடியுமா என்பது சந்தேகத்திற்குரியதே ஆகும். ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை வேறு எவரும் அடித்து காயப்படுத்தியதாக குறிப்பிட்டு எவரும் சாட்சியமளித்துள்ளதாக தெரியவில்லை.

190. பென்னிக்சை அமுக்கி பிடித்ததாக அ.சா.20 சாட்சியம் அளிக்கவில்லை. என்ன நோக்கத்திற்காக அ.சா.20 அமுக்கி பிடித்தார் என்றும் அ.சா.9 தெளிவுபட சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.20 ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு உடலில் காயம் எதையும் ஏற்படுத்தியதாக குறிப்பிட்டு சாட்சியம் எதுவும் முன்னிடப்படவில்லை. அழகுமாரிசெல்வம் ஒத்த கருத்து எதையும் மற்ற எதிரிகளுடன் பகிர்ந்து கொண்டதாக தெளிவான சாட்சியம் எதுவும் இல்லை. கொரோனா வாலண்டியர் எவரும் காயம் எதையும் ஏற்படுத்தியதாக நிருபிக்கவும் தக்க சாட்சியங்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லை. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள கண்ணுற்ற சாட்சிகள் எவரும் ஊர்க்காவல் படை சார்ந்த எவரும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை அடித்து காயப்படுத்தியதாக பெயர் எதுவும்குறிப்பிட்டு சாட்சி எதுவும் அளிக்கவில்லை, ,ஊர்க்காவல் படை சார்ந்தவரும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை அடித்து காயப்படுத்தியதாக எதிரிகள் எவரும் முன்வந்து சாட்சியமும் அளிக்கவில்லை. இந்நிலையில் போதிய சாட்சியமின்றி எவரையும் எதிரியாக சேர்க்க இயலாது.

191. இவ்வழக்கில் சாத்தான்குளம் நீதித்துறை நடுவர் சாத்தான்குளம் அரசு மருத்துவமனை மருத்துவர் கோவில்பட்டி அரசு மருத்துவமனை மருத்துவர் கோவில்பட்டி கிளை சிறைச்சாலை கண்காணிப்பாளர் ஆகியோர்களும் கவன குறைவாக செயல்பட்டுள்ளனர் என்றும் எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது எம் ஐ எம் பி அறிக்கையில் மருத்துவர்கள் மீதும் கிளை சிறைச்சாலை காவலர்கள் மீதும் கவனக்குறைவு எதுவும் இருப்பதாக தெரியவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இவ்வழக்கில் மருத்துவர்கள் அசா 45, 18, 21 ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு ஏற்பட்டுள்ள முழுமையான காயங்களை கவனிக்க தவறியுள்ளனர், மேலும் நீதித்துறை நடுவரும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு காயங்கள் இருந்துள்ளதை கவனிக்க தவறியுள்ளார் , அசா 2 மற்றும் 24ம்கூட ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு காயங்கள் இருந்துள்ளதை கவனிக்க தவறியுள்ளனர். எனினும் மேற்படி காயங்கள் மருத்துவமனைக்கு வருவதற்கு முன்பும் நீதித்துறை நடுவரிடம் ஆஜர் படுத்துவதற்கு முன்பும் ஏற்பட்டுள்ளது மேற்படி காயங்கள் ஏற்பட்ட சமயத்தில்

மேற்படி மருத்துவர்கள் கிளை சிறைசாலை காவலர்கள் நீதித்துறை நடுவர் சம்பவ இடத்தில் இருந்திருக்கவில்லை. ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை காயப்படுத்துவதற்கு முன் எதிரிகள் மேற்படி நபர்களுடன் தங்களுடைய எண்ணத்தை பகிர்ந்து கொண்டதாகவும் எவ்வித சாட்சியமும் முன்னிடப்படவில்லை. எனவே அவர்கள் தரப்பில் உள்ள கவன குறைவு நிர்வாக துறை நடவடிக்கைக்கு உகந்ததாக இருக்குமே தவிர அதற்காக அவர்கள் மீது குற்ற நடவடிக்கை எடுக்க இயலாது என்றே இந்த நீதிமன்றம் கருதுகின்றது இந்நிலையில் இவ்வழக்கில் மேற்படி நபர்களை எதிரிகளாக சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை இவ்வழக்கின் சங்கதி சூழ்நிலைகளுக்கு ஏற்புடையதாக தோன்றவில்லை.

192. (2015) 7 SCC 497 Dinesh Kumar @ Dina Vs State represented by Inspector of Police என்ற வழக்கில்

Evidence Act, 1872 – S.132 proviso – " Answers that witness is compelled to give" – Compulsion envisaged – source of – Held said compulsion is the obligation of law of a witness to answer every question put to him, truthfully – It is not the compulsion imposed by the judge in the facts of a case – In India the privilege of refusing to answer questions put to a witness has been abrogated so that temptation to tell a lie may be avoided but it was necessary to give protection as provided under S.132 proviso – Hence mere amounts to "answers that the witness is compelled to give" – Thus any evidence that becomes available from such answers is inadmissible against such witness under S.132 proviso என்றும்

Further it has been stated that Section 132 of the evidence Act 1872 grants immunity to such a witness by declaring that no such answer. given by the witness shall subject him to any arrest or prosecution or be proved. against him in any criminal proceeding என்றும்

The deposition cannot be treated as evidence within the meaning of that expression occurring in section 319 CrPC in order to summon him as an accused. என்றும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது,

193. மேற்படி முன் தீர்ப்பின் அடிப்படையில் பார்க்கும் போது நீதிமன்றத்தில் கூண்டேறி சாட்சியமளிக்கும் எவரும் உண்மையையே கூற வேண்டும் என்ற சட்ட கட்டப்பாடு உள்ளது. இந்நிலையில் அவ்வாறு சாட்சியம் அளிக்கும் பட்சத்தில் அவர் அளிக்கும் சாட்சியத்தை அவருக்கு எதிராக பயன்படுத்த முடியாது என்பதும் அவர் அளித்த வாக்குமூலம் குற்றச்சாட்டை வனைய சாட்சியமாக பயன்படுத்த முடியாது என்பதும் தெரியவருகின்றது.

194, மேற்படி முன்தீர்ப்பின் அடிப்படையில் பார்க்கும் போது அ.சா.20, 44, 47 இவ்வழக்கில் சாட்சியம் அளித்துள்ள நிலையில் அவர்கள் அளித்துள்ள சாட்சியத்தை அவர்களுக்கு எதிராக பயன்படுத்த முடியாது ,மற்ற நபர்களுக்கு எதிராகவும் தெளிவுபட சாட்சியங்கள் முன்னிடப்படவில்லை. எனவே மற்ற நபர்களுக்கெதிராகவும் குற்றசாட்டுவனைய போதிய முகாந்திரம் இருப்பதாக தோன்றவில்லை.

195. இந்நிலையில் நீதியின்பால் 1 முதல் 9 எதிரிகள் மீது சுமத்தப்பபட்டுள்ள குற்றச்சாட்டுகள் சிபிஐ தரப்பில் நிருபிக்கப்பட்டுள்ளதா– என்பதே மிக முக்கியமாக தீர்மானிக்க வேண்டிய விஷயமாக இருக்கிறது,

196. அ.சா.5 தானும் தன் பெரியப்பா மகன் தாவீதும் சாத்தான்குளம் போலீஸ் ஸ்டேசனுக்கு தன்னுடைய மோட்டார் சைக்கிளில் 9.10 மணிக்கு சென்றதாகவும், உள்ளே போன தன் அண்ணன் திரும்பி வந்து வெளியில் உள்ள லைட்டும் ஆப் ஆகியுள்ளது என்றும், கதவும் பூட்டியுள்ளது என்றும், உள்ளே அடிக்கும் சத்தம் மற்றும் கதறல் சத்தம் கேட்பதாகவும் சொன்னார் என்றும், உள்ளே செல்வதற்கு காவலர் யாரும் அனுமதிக்கவில்லை என்றும், அதனால் திரும்பி வந்துவிட்டதாகவும் சொன்னார் என்றும், 9.30 மணியளவில் உதவி ஆய்வாளர் ரகுகணேஷ் உள்ளே போனார் என்றும், அவர் உள்ளே போய் கொஞ்சநேரத்தில் உள்ளே இருந்து ஒரு லேடி கான்ஸ்டபிள் ஸ்கூட்டி வண்டியில் வெளியே சென்றார் என்றும், வக்கீலிடம் கேட்ட போது அவர் பெயர் ப்பூலா என்று சொன்னார் என்றும், ராஜாராம் உள்ளே போய்விட்டு வந்துவிட்டு, ரகுகணேசும் சேர்ந்து இரண்டு பேரை அடிக்கிறார் என்று சொன்னார் என்றும்,

அதன்பிறகு சுமார் 11.30 மணியளவில் உள்ளே இருந்து தாமஸ் என்ற போலீஸ்காரர் வந்தார் என்றும், அவரிடம் தான் உதவி கேட்டதாகவும், அவர் ஹெல்ப் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டார் என்றும், அதன்பிறகு சுமார் 12.30 மணியளவில் உள்ளே இருந்து ஒரு போலீஸ்காரர் வந்து இனிமேல் உங்கள் அத்தானை விடுவது கஷ்டம், நீங்கள் காலையில் வாருங்கள் என்று சொன்னார் என்றும், சுமார் 11 மணியளவில் ஒரு போலீஸ்காரர் ஸ்டேசனில் இருந்து வெளியே வந்து கைகழுவியதாகவும், ராஜாராமிடம் கேட்ட போது அவர் பாலகிருஷ்ணன் என்று சொன்னார் என்றும் சாட்சியமளித்துள்ளார், மேற்படி சாட்சியத்திலிருந்து பாலகிருஷ்ணன் ரகுகணேஷ் தாமஸ் ப்யூலா சம்பவ தேதியன்று இரவு காவல் நிலையத்தில் இருந்துள்ளனர் என்பதும் கதவு பூட்டியிருந்துள்ளது என்பதும் நிரூபணமாகின்றது.

197. அ.சா.7 சங்கரலிங்கம் தானும் ராஜ்குமாரும் ராஜ்குமாரின் காரில் போலீஸ்ஸ்டேசனுக்கு 9.15 மணியளவில் சென்றதாகவும், தாங்கள் போகும் போது ஸ்டேசன் வாசல் கதவு பூட்டியிருந்தது என்றும், அப்போது உள்ளே இருந்து எங்களை விட்ருங்க, எங்களால் தாங்க முடியவில்லை, அடிக்காதீர்கள், அம்மா, அப்பா என்று அலறல் சத்தம் கேட்டது என்றும், அப்போது ஆய்வாளர் ஸ்ரீதர் வெளியே சுமோ பக்கத்தில் நின்று போன் பேசி கொண்டிருந்ததாகவும், பின்னர் மறுபடியும் உள்ளே சென்றுவிட்டார் என்றும், 9.30 மணியளவில் எஸ்.ஐ ரகுகணேஷ் உள்ளே போனார் என்றும், 11.00 மணிவரை உள்ளேயிருந்து தொடர்ந்து அடிக்காதீர்கள் விட்டுவிடுங்கள் என்று பத்துநிமிடம் இடைவெளிவிட்டு இடைவெளிவிட்டு இரண்டு, மூன்று தடவை கேட்டது. என்றும் பின்னர் 20.06.2020 அன்று காலை 6.30 மணியளவில் தானும் தன் நண்பர் சுடலைமுத்து, நாகராஜன், போலீஸ் ஸ்டேசனுக்கு சென்றதாகவும், அப்போது ஸ்டேசன் பூட்டப்பட்டிருந்தது என்றும், நாகராஜன் டீயை உள்ளே கொண்டு சென்று ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு கொடுத்துவிட்டு வந்தார் என்றும், வெளியே வரும் போது மிகவும் சோகமாக இருந்தார் என்றும், என்னவென்று கேட்ட போது உள்ளே பென்னிக்ஸ் மற்றும் அவரது அப்பாவை ஜட்டியோடு உட்கார வைத்திருப்பதாக சொன்னார் என்றும், அதன் பிறகு உள்ளேயிருந்து எஸ்.ஐ பாலகிருஷ்ணன் வந்தார்

என்றும், அவர் வெளியே வந்து இருவருக்கும் சட்டை, லுங்கி, பனியன் வாங்கி வரச்சொன்னார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி சாட்சியின் சாட்சியத்தின் படி பாக்கும் போது 19-6-20 அன்று ஆய்வாளர் ஸ்ரீதர் எஸ்.ஐ ரகுகணேஷ் காவல் நிலையத்தில் இருந்துள்ளனர் என்பதும் மறுநாள் 20-6-20ம்தேதி காலை வரை காவல் நிலையத்தில் கதவு பூட்டப்பட்டு இருந்துள்ளது என்பதும் அடிப்பதை தாங்கமுடியாமல் ஜெயராஜ் மற்றும் பெனிக்ஸ் அலறிய சத்தத்தை அ.சா.7 கேட்டுள்ளார் என்பதும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் மனிதாபிமானமற்ற முறையில் ஜட்டியுடன் காவல் நிலையத்தில் இரவு முழுவதும் வைக்கப்பட்டு இருந்துள்ளனர் என்பதும் மறுநாள் எஸ்.ஐ பாலகிருஷ்ணன் சட்டை, லுங்கி, பனியன் வாங்கி வரச்சொல்லியுள்ளார் என்பதும் நிருபணமாகின்றது.

198. அ.சா.8 ரவிசங்கர், தான் ராஜாராம் வண்டியில் பென்னிக்சை அழைத்துக் கொண்டு ஸ்டேசன் சென்றதாகவும், காவல்நிலையத்திற்கு வெளியே வண்டியை நிறுத்திவிட்டு உள்ளே தானும், பென்னிக்சும் போனதாகவும், மணிமாறன் ஏற்கனவே போலீஸ் ஸ்டேசன் வராண்டாவில் நின்று கொண்டிருந்தார் என்றும், பென்னிக்ஸ் அப்பாவை லாக்அப்பில் தள்ளினார்கள் என்றும், அப்போது இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர் இவர்களை ரிமாண்ட் செய்தால்தான் புத்தி வருமென்று சொன்னார் என்றும், பென்னிக்ஸ் ஸ்டேசன் வாசலில் இருந்து உள்ளே எட்டிப் பார்த்தாகவும், உனக்கு என்ன வேண்டுமென்று உள்ளே இருந்து எஸ்.ஐ பாலகிருஷ்ணன் கேட்டார் என்றும், ஒன்றும் பேசாதே என்று பென்னிக்சை தானும், மணிமாறனும் வெளியே கையை பிடித்து படிக்கட்டை விட்டு கீழே இறக்கியதாகவும், அதற்குள் வெளியே இருந்து சத்தம் போடுகிறான் அவனை உள்ளே கூப்பிடுங்கள் என்று எஸ்.ஐ பாலகிருஷ்ணன் சொன்னதாகவும், உள்ளே இருந்து போலீசார்கள் வந்து பென்னிக்சின் கையை பிடித்து உள்ளே அழைத்துச் சென்றார்கள் என்றும், கூட மணிமாறனும் உள்ளே சென்றார் என்றும், தான் வராண்டாவில் நின்று கொண்டதாகவும், எஸ்.ஐ.சார் பென்னிக்சிடம் உனக்கு என்ன வேண்டும், எதற்கு சத்தம் போடுகிறாய் என்று கேட்டார் என்றும், எதற்கு சார் என் அப்பாவை பிடித்து வந்தீர்கள் என்று பென்னிக்ஸ் கேட்டதாகவும்,

உனக்கு என்ன செய்யணும் என்று சொல்லி அடிக்க கையை ஓங்கியதாகவும், அப்போது பென்னிக்ஸ் அதை தடுத்ததாகவும், அப்போது எஸ்.ஐ.சார் தடுமாறி சேரில் உட்கார்ந்தார் என்றும், பின்னர் எஸ்.ஐ.சார் எழுந்து ஓங்கி பென்னிக்சை அடித்தார் என்றும், பென்னிக்ஸ் தடுமாறி அங்கிருந்த டேபிள் மீது விழுந்தாகவும், மணிமாறன் தடுக்க முயற்சி செய்ததாகவும், அதற்குள் 2, 3 போலீசார்கள் சேர்ந்து பென்னிக்சை அடிக்க ஆரம்பித்தார்கள் என்றும், பென்னிக்சை அடிக்கிறார்கள், உடனே வா என்று ராஜாராமுக்கு போன் செய்ததாகவும், ராஜாராம் வருவதற்கு முன்னர் மணிமாறனை வெளியே தள்ளி ஸ்டேசன் கதவை பூட்டிவிட்டார்கள் என்றும்,

அதன்பின்னர் 8.10 மணியில் இருந்து வெளியேதான் நின்று கொண்டிருந்ததாகவும், சுமார் 10.30 மணிவரை அடிக்கும் சத்தமும், அம்மா அப்பா, அடிக்காதீங்க, அடிக்காதீங்க என்ற சத்தமும் கேட்டது என்றும், பத்து பத்து நிமிடம் இடைவெளியில் விட்டுவிட்டு அம்மாதிரி சத்தம் கேட்டது என்றும், 9.30 மணியளவில் எஸ்.ஐ ரகுகணேஷ் உள்ளே சென்றார் என்றும், அவர் போன பிறகும் சத்தம் கேட்டது என்றும், 10.30 மணிக்கு மேல் சத்தம் இல்லை என்றும், 11.30 மணிக்கு வீட்டிற்கு திரும்பிவிட்டதாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

இதிலிருந்தே பாலகிருஷ்ணன் பென்னிக்சை அடித்துள்ளார் என்பதும் மணிமாறனை வெளியே தள்ளி ஸ்டேசன் கதவை பூட்டியுள்ளார்கள் என்பதும் பத்து பத்து நிமிடம் இடைவெளியில் விட்டுவிட்டு அடித்துள்ளனர் என்பதும் நிருபணமாகின்றது.

199. அசா.9 மணிமாறன் 18.06.2020 அன்று பேய்க்குளத்தில் உள்ள ஒரு இடப்பிரச்சனை சம்பந்தமாக சாத்தான்குளம் காவல்நிலைய விசாரணைக்கு போயிருந்ததாகவும், 19.06.2020 அன்று இரவு சுமார் 7.30 மணியளவில் தன்னுடைய ஜூனியர் வழக்கறிஞர் ரவிச்சந்திரன் தனக்கு போன் செய்து அந்த வழக்கு சம்பந்தமாக மீண்டும் விசாரணைக்கு வரும்படி தன்னை அழைத்தார் என்றும் அதன்பிறகு சுமார் 5 நிமிடத்தில் தான் காவல்நிலையம் சென்றுவிட்டதாகவும், 7.45 மணியளவில் ராஜாராம் என்ற வழக்கறிஞர் தனக்கு போன் செய்ததாகவும் பென்னிக்ஸ் கடை அருகே பேசிக்

கொண்டிருக்கும் போது ஆய்வாளர், சப் இன்ஸ்பெக்டர் மற்றும் போலீசார் வந்து சுமோவில் பென்னிக்ஸ் அப்பாவை காவல்நிலையம் அழைத்துச் சென்றதாகவும், என்ன ஏது என்று கேட்ட போது காவல்நிலையம் வந்து பேசிக் கொள்ளுமாறு சொன்னதாகவும் கூறியதாகவும், தான் ஒரு வழக்கு சம்பந்தமாக ஸ்டேசனில்தான் இருப்பதாக சொன்னதாகவும், டிரஸ் மாற்றிவிட்டு வந்துவிடு விடுவதாக ராஜாராம் சொன்னதாகவும், போனை கட் பண்ண சமயத்தில் சுமோவில் இருந்து ஆய்வாளர், உதவிஆய்வாளர், டிரைவர், ஒரு போலீஸ்காரர் மற்றும் ஜெயராஜ் ஆகியோர் இறங்கினார்கள் என்றும், ஜெயராஜ் நல்லமனுசன், எதற்கு அழைத்து வந்திருக்கிறீர்கள் அவர் எந்த பிரச்சனையிலும் ஈடுபடாத நபர் என்று சொன்னதற்கு ஆய்வாளர் மணிகண்டா அவனைப் பற்றி உனக்குத் தெரியாது, எதுவாக இருந்தாலும் பிறகு பேசிக் கொள்ளலாம் என்று லாக்அப்பில் வையுங்கள் என்று போலீசாரிடம் சொல்லிவிட்டு அவர் ரூமுக்கு சென்றுவிட்டார் என்றும், தான் வெளியே வந்ததாகவும், அப்போது பென்னிக்ஸ் அவர் நண்பர் ரவிசங்கருடன் பைக்கில் காவல்நிலையம் வந்து வெளியே இருந்தார்கள் என்றும், உள்ளேயிருந்து முத்துராஜா என்ற கான்ஸ்டபிள் வந்து எஸ்.ஐ கூப்பிடுவதாக சொன்னார் என்றும், அப்போது பென்னிக்ஸ் தன் கையை தட்டிவிட்டு காவல்நிலையத்திற்கு உள்ளே போய்விட்டான் என்றும், தான் பின்னாலேயே போனதாகவும், உதவிஆய்வாளர் பாலகிருஷ்ணன் டேபிள் முன்பு என் அப்பா என்ன தப்பு செய்தார், ஏன் உள்ளே வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு கோபப்பட்டு பென்னிக்சை பாலகிருஷ்ணன் அடிக்க முற்பட்டார் என்றும், அந்த அடி பென்னிக்சின் மீது விழவில்லை என்றும், டேபிளை மறுபடி சுற்றி வந்து அவர் பென்னிக்சை மறுபடியும் அடிக்க முற்பட்டார் என்றும், தான் அப்போது பென்னிக்ஸ் பின்னால் இருந்ததாகவும், பென்னிக்ஸ் அதை கையை வைத்து தடுத்தார் என்றும், எஸ்.ஐ நிலைதடுமாறி டேபிளில் சரிந்துவிட்டார் என்றும், உள்ளேயிருந்த ரைட்டர் ரூமில் இருந்து ப்யூலா செல்வகுமாரி போலீஸ்ஸ்டேசன் உள்ளே வந்து, போலீஸ்கிட்டயே தகராறு செய்கிறாயா என்று கத்தினார் என்றும், மறுபடியும் சுதாரித்து எஸ்.ஐ அடிக்க முயற்சி செய்யும் போது பென்னிக்ஸ் பின்னால் பால்துரை, அழகுமுத்து என்ற போலீஸ், டிரைவர் ஜெயசேகர், முத்துராஜா ஆகியோர்கள் மேலே விழுந்து பென்னிக்சை அமுக்கி

பிடித்தார்கள் என்றும், மேலே விழவும் தான் நகன்று வெளியே வந்துவிட்டதாகவும், அப்போது இன்ஸ்பெக்டர் ரூமில் இருந்து இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர் வெளியே வந்தார் என்றும், வக்கீலை வெளியே அனுப்பு, கதவை மூடு என்று சொன்னார் என்றும், நான் வெளியே வந்த மறுகணத்தில் இருந்து அம்மா அடிக்காதீர்கள், அப்பா அடிக்காதீர்கள் வலி தாங்க முடியவில்லை என்ற சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது என்றும் அசா.9 சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி சாட்சியின் சாட்சியத்தின் அடிப்படையில் பார்க்கும்போது ஜெயராஜை, ஸ்ரீதரும் சாத்தான்குளம் காவல் நிலையத்திற்கு கொண்டு வந்துள்ளார் என்பதும் ஜெயராஜை லாக் அப்பில் வையுங்கள் என்று ஸ்ரீதர் சொல்லியுள்ளார் என்பதும் ஜெயராஜை பாலகிருஷ்ணன் அடித்துள்ளார் என்பதும் அதை பார்த்து பென்னிக்ஸ் கேள்வி எழுப்பியுள்ளார் என்பதும் அப்போது பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்பதும் கதவை மூடும்படி ஸ்ரீதர் சொல்லியுள்ளார் என்பதும் பின்னர் எதிரிகள் கதவை மூடி ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை அடித்து சித்திரவதை செய்துள்ளனர் என்பதும் தெரிய வருகிறது.

200. அ.சா.10 ராஜாராம் 19.06.2020 ஆம் தேதி இரவு சுமார் 7.15-7.30 மணியளவில் தானும், ரவிசங்கர், கல்யாணசுந்தரம் மற்றும் ஆட்டோடிரைவர்கள் இரண்டு பேரும் பென்னிக்ஸ்கடைக்கு எதிரில் ஆட்டோஸ்டாண்ட் அருகில் பேசிக் கொண்டிருந்தபோது வண்டிமறிச்சி அம்மன்கோவில் அருகில் இன்ஸ்பெக்டரின் சுமோ வண்டி வந்து நின்றது என்றும், அங்கு எஸ்.ஐ பாலகிருஷ்ணன் மற்றும் மூன்று போலிசார்கள் இருந்தார்கள் என்றும், இன்ஸ்பெக்டரும் இருந்தார் என்றும், அப்போது ஒரு போலீசார் ஆட்டோஸ்டாண்ட் அருகில் மணி என்பவரிடம் விசாரித்துக் கொண்டிருந்தார் என்றும், 7.45 மணியளவில் ஆட்டோடிரைவர் பாண்டி என்பவர் கடைக்குள் வந்து பென்னிக்ஸ் உன் அப்பாவை வண்டியில் உட்கார வைத்துள்ளார்கள் என்று சொன்னதாகவும், உடனே தானும், ரவிசங்கரும் வெளியே வந்து எட்டிப் பார்த்துவிட்டு, ஆமாம் பென்னிக்ஸ் வண்டியில் உட்கார வைத்துள்ளார்கள் என்று சொன்னதாகவும், பென்னிக்ஸ் உடனே சுமோ அருகில் சென்றதாகவும், தானும்,

பின்னாடியே சென்றதாகவும், பென்னிக்ஸ் எதற்காக என் அப்பாவை பிடித்திருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு ஆய்வாளர் எதுவாக இருந்தாலும் ஸ்டேசனில் வந்து பேசிக் கொள்ளுங்கள் என்று சொன்னார் என்றும், நான் அட்வகேட், எதற்காக பிடித்து வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு ஸ்டேசனில் வந்து பேசிக் கொள்ளுங்கள் என்று அவர் சொன்னதாகவும்,பின்னர் உடைமாற்ற அசா 10 வீட்டிற்கு சென்றதாகவும் அதன்பின் ரவிசங்கர் போன் செய்து பென்னிக்சை அடிக்கிறார்கள் சீக்கிரம் வா என்று சொன்னதன் பேரில் இரவு 8.05 மணியளவில் ஸ்டேசன் போனதாகவும் தான் போய் பார்க்கும் போது ஸ்டேசன் கதவு அடைத்திருந்தது என்றும் தான் பார்க்கும் போது எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் லத்தியால் பென்னிக்ஸ் கையில் அடித்துக் கொண்டிருந்தார் என்றும் அதை கண்ணாடி வழியாக பார்த்ததாகவும் 9.30 மணியளவில் எஸ்.ஐ.ரகுகணேஷ் பைக்கில் ஒரு ப்ரண்ட்ஸ்ஆப் போலீஸ் நபருடன் வந்து, காவல்நிலையத்திற்கு உள்ளே போனதாகவும் எஸ்.ஐ.ரகுகணேஷ் ப்ரண்ட்ஸ்ஆப்போலீஸ் நபரிடம் வண்டியிலிருந்து லத்தியை எடுத்து வரச் சொன்னார் என்றும் லத்தியை எடுத்துக்கொண்டு போனவுடன் ரகுகணேஷ் வாங்கி கொண்டு பென்னிக்சை கையை நீட்டச் சொல்லி அடித்தார் என்றும் தான் அங்கு நிற்க முடியாமல் காம்பவுண்டிற்கு வெளியே வந்துவிட்டதாகவும் அப்போது அப்பா, அம்மா அடிக்காதீர்கள் என்ற சத்தம் கேட்டது என்றும் அதற்கு முன்பும் அந்த சத்தம் கேட்டது. பத்து நிமிடம் விட்டுவிட்டு அந்த சத்தம் கேட்டது. அம்மாதிரி 10.30 மணி வரை சத்தம் கேட்டது என்றும் அ.சா.10 சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி சாட்சியின் சாட்சியத்தில் இருந்து 19– 6 –20 அன்று இரவு ஜெயராஜை சுமோவில் ஏற்றும்போது 1ம் எதிரியும் அந்த வாகனத்தில் இருந்துள்ளார் என்பதும் ஜெயராஜை மட்டும் அவர் தனது வாகனத்தை ஏற்றிச் சென்றுள்ளார் என்பதும் பென்னிக்சை அப்போது ஏற்றிச் செல்லவில்லை என்பதும் அப்போது எதுவாக இருந்தாலும் ஸ்டேஷனில் வந்து பேசிக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு ஆய்வாளர் சென்றுள்ளார் என்பது உடைமாற்ற அசா 10 வீட்டிற்கு சென்றுள்ளார் என்பதும் அதன்பின் ரவிசங்கர் போன் செய்து பென்னிக்சை அடிக்கிறார்கள் சீக்கிரம்

வா என்று சொன்னதன் பேரில் இரவு சுமார் 8.05 மணியளவில் ஸ்டேசன் போயுள்ளார் என்பதும் அப்போது ஸ்டேசன் கதவு அடைத்திருந்துள்ளது என்பதும் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் லத்தியால் பென்னிக்ஸ் கையில் அடித்துள்ளார் என்பதும் இரவு சுமார் 9.30 மணியளவில் எஸ்.ஐ.ரகுகணேஷ் பைக்கில் ஒரு ப்ரண்ட்ஸ்ஆப் போலீஸ் நபருடன் காவல்நிலையத்திற்கு வந்துள்ளார் என்பதும் ப்ரண்ட்ஸ்ஆப்போலீஸ் நபரிடம் வண்டியிலிருந்து லத்தியை எடுத்து வரச் சொல்லி லத்தியை வாங்கி கொண்டு பென்னிக்சை கையை நீட்டச் சொல்லி அடித்துள்ளார் என்பதும் அப்போது அப்பா, அம்மா அடிக்காதீர்கள் என்ற சத்தம் கேட்டுள்ளது என்பதும் பத்து நிமிடம் விட்டுவிட்டு அந்த சத்தம் கேட்டுள்ளது என்பதும் அம்மாதிரி 10.30 மணி வரைஅடிக்கும் சத்தத்தை அசா 10 கேட்டுள்ளார் என்பதும் நிரூபணம் ஆகிறது.

201. அ.சா.11, 12,13 ம் 19.06.2020ம் தேதி இரவு 7.30 மணியளவில் போலீஸ் ஜீப்பில் இன்ஸ்பெக்டர், எஸ்.ஐ பாலகிருஷ்ணன், மற்றும் கான்ஸ்டபிள்கள் இருந்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளனர்.

மேற்படி சாட்சியின் சாட்சியத்தில் இருந்து 19– 6 –20 அன்று இரவு ஜெயராஜை ஆய்வாளரது வண்டியில் ஏற்றும்போது இன்ஸ்பெக்டர் ஸ்ரீதரும் சுமோவில் இருந்துள்ளார் என்பது நிரூபணம் ஆகிறது.

202. 19.06.2020 ஆம் தேதி சாத்தான்குளம் காவல்நிலையத்தில் தானும் ஆய்வாளர் ஸ்ரீதர், உதவிஆய்வாளர் பாலகிருஷ்ணன், உதவி ஆய்வாளர் ரகுகணேஷ், உதவி ஆய்வாளர் பால்துரை, தலைமைக்காவலர் முருகன், தலைமைக்காவலர் சாமதுரை, முதல்நிலைக்காவலர் வெயில்முத்து, முதல்நிலைக்காவலர் செல்லத்துரை, முதல்நிலைக்காவலர் தாமஸ்பிரான்சிஸ் மற்றும் தலைமைக்காவலர் ப்யூலாசெல்வகுமாரி, தலைமைக்காவலர் ரேவதி, தலைமைக்காவலர் ஜெயசேகர், முதல்நிலைகாவலர் அழகுமாரிசெல்வம், காவலர் முத்துராஜ் ஆகியோரும் பணியில் இருந்ததாகவும் 19.06.2020 ஆம் தேதி தான் காவல்நிலையத்தில் மாடியிலுள்ள அறையில் CCTNS பணி பார்த்துக் கொண்டிருந்ததாகவும், வெயிலுமுத்துவும், தாமஸ்பிரான்சிஸ்சும் முதல்மாடி அறையில் இருந்ததாகவும், சுமார் 8.30 மணியளவில்

தரைதளத்தில் அடிக்கும் சத்தமும், அய்யோ அம்மா என்று அலறும் சத்தமும் கேட்டது என்றும், உடனே வெயிலுமுத்துவும, தாமஸ்பிரான்சிசும் கீழே பார்க்கச் சென்றார்கள் என்றும், மீண்டும் அடிக்கும் சத்தம் கேட்டதால் தான் 20 நிமிடம் கழித்து கீழே சென்றதாகவும், அப்போது உதவிஆய்வாளர் பாலகிருஷ்ணன் அவரது இருக்கையில் இருந்தார் என்றும், அவர் அருகில் சுவர் ஓரம் பென்னிக்சும், லாக்அப் அறை அருகில் ஜெயராஜும் நின்று கொண்டிருந்தார்கள் என்றும், பின்னர் தான் தன்னுடைய வேலையைப் பார்க்க மாடிக்கு சென்றுவிட்டதாகவும், பின்னர் 9.30 மணியளவில் ஆய்வாளர் ஸ்ரீதர் என்னை அழைத்ததாகவும், ஆய்வாளர் அறையில் ஆய்வாளர் ஸ்ரீதர், உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன், தலைமைக்காவலர் முருகன், காவலர் முத்துராஜ் ஆகியோர்கள் இருந்தார்கள் என்றும், அப்போது ஆய்வாளர் பென்னிக்சும், ஜெயராஜும் உதவிஆய்வாளரை அடிக்கப் போய், காவலர் முத்துராஜின் சட்டையை கிழித்ததால், ஜெயராஜையும், பென்னிக்சையும் அடிக்க வேண்டியதாயிற்று என்றும், அடித்ததில் அவர்களுக்கு இரத்தக்காயம் ஏற்பட்டதால் இப்போது வெளியில் அனுப்ப முடியாது என்றும், அவர்களை ரிமாண்ட் செய்ய வேண்டும் என்றும், முருகனும், முத்துராஜும் புகார் கொடுப்பார்கள் என்றும், அந்தப்புகாரை பதிவு செய்து, ரிமாண்டிற்கு அனுப்ப வேண்டும் என்றும் சொன்னார் என்றும், தான் முருகனும், முத்துராஜும் சொன்ன விபரத்தை எழுதிக் கொண்டு ஆய்வாளர் சொன்னதன் பேரில் கணினியில் அழகுமாரிச்செல்வம் என்பவர் தட்டச்சு செய்து புகார் தயார் செய்ததாகவும், தானும், அழகுமாரிச்செல்வமும் புகார் தட்டச்சு செய்து கொண்டிருக்கும் போது காவல்நியைத்தில் கதவு பூட்டப்பட்டிருந்தது என்றும், அப்போது உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் ஜெயராஜையும்,பென்னிக்சையும் லத்தியால் அடிக்க அங்கிருந்த முருகன், முத்துராஜ், வெயிலுமுத்து, தாமஸ்பிரான்சிஸ், செல்லத்துரை, சாமத்துரை ஆகியோர்கள் பிடித்துக் கொண்டார்கள் என்றும், அசா.20 சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி அ.சா.20–ன் சாட்சியத்தின் அடிப்படையில் பார்க்கும்போது காவல்நியைத்தில் கதவைபூட்டி பாலகிருஷ்ணன் ஜெயராஜையும்,பென்னிக்சையும் லத்தியால் அடித்துள்ளார் என்பதும் முருகன், முத்துராஜா வெயிலுமுத்து,

தாமஸ்பிரான்சிஸ், செல்லத்துரை, சாமதுரை ஆகியோர்கள் ஜெயராஜையும்,பென்னிக்சையும் பிடித்து பாலகிருஷ்ணன் அடிப்பதற்கு உதவியுள்ளனர் என்பதும் தெரிய வருகின்றது.

203. அசா 25 ஆரோக்கியசாமி 19.6.2020 அன்று இரவு சுமார் 7.45 மணியளவில் காவல்துறை ஜீப் ல் இன்ஸ்பெக்டர் பாலகிருஷ்ணனுடனும் 2 காவலர்களுடனும் ஒரு வெள்ளைவேஷ்டி வெள்ளைசட்டை அணிந்தவரை அழைத்து வந்ததாகவும் பின்னால் மோட்டா் சைக்கிளில் ஒருவர் வந்ததாகவும் அசா 25 ன் வழக்கறிஞர் வெளியே வந்த பின்னர், காவல் நிலையத்தின் கதவு மூடப்பட்டது என்றும் மூடியவுடன் உள்ளே இருந்து அடிக்கும் சத்தம் கேட்டது என்றும் உள்ளே இருந்த நபர்கள் அய்யோ, அப்பா, அம்மா என்று கத்தினார்கள் என்றும் இரண்டுநாட்கள் கழித்தபின் அந்த விசாரணக்கு வந்த நபர்கள் இறந்துவிட்டதாக தன் வழக்கறிஞர் மூலம் தெரிந்துகொண்டதாகவும் , எதிரிகளை அடையாளம் காட்டி சாட்சியமளித்துள்ளார்.

மேற்படி சாட்சியின் சாட்சியத்தில் இருந்து 1ம் எதிரியும் தான் 19– 6 –20 அன்று இரவு ஜெயராஜை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்துள்ளார் என்பதும் காவல் நிலையத்தில் வைத்து கதவை பூட்டி ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அடித்து காயப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதும் நிரூபணம் ஆகிறது.

204. 1ம்எதிரி ஸ்ரீதரின் வாகன ஓட்டுநர் அசா 26 ஜெயசேகர் மாலை 4.30 மணியளவில் ஆய்வாளர் அவர்களை அழைத்துக் கொண்டு காவல்நிலையம் வந்ததாகவும் அப்போது காவலர் முத்துராஜ் டாடாசுமோவில் வந்தார் என்றும் பஜாரில் ரோந்து செய்து, அருணா டீக்கடை முன்பு வரும் போது எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் வாகனத்தில் ஏறிக் கொண்டார் என்றும் செட்டிகுளத்தில் நடந்த மணல் பிரச்சனை சம்பந்தமாக இடத்தை பார்வையிட பண்ணம்பாறை விளக்கு வழியாக செட்டிகுளம் சென்று விசாரித்து, சாத்தான்குளம் பேருந்துநிலையம் வழியாக காமராஜர் சிலை முன்பு வண்டிமறிச்சிஅம்மன் கோவில் அருகில் சுமார் 7.15 மணியளவில் வாகனத்தை நிறுத்தியதாகவும் அப்போது ஆய்வாளர் வாகனத்தின் முன்புறம் உட்கார்ந்திருந்தார் என்றும் எஸ்.ஐ. பாலகிருஷ்ணன், காவலர் முத்துராஜா ஜெயராஜை அழைத்து வந்து

வாகனத்தின் பின்புறம் ஏற்றினார்கள் என்றும் அப்போது மணி 7.45 இருக்கும் என்றும் ஆய்வாளர் வாகனத்தை நிலையத்திற்கு கொண்டு போகச் சொன்னார் என்றும் நிலையம் சென்று கொண்டிருக்கும் போது எஸ்.ஐ பாலகிருஷ்ணன் ஜெயராஜிடம் போலீசை ஏசினாயா என்று கேட்டார் என்றும் அதற்கு ஜெயராஜ் ஏசவில்லை என்று சொன்னார் என்றும் அதற்கு எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் பொய் சொல்கிறாய் என்று சொன்னார் என்றும் சாத்தான்குளம் காவல்நிலையம் வந்தவுடன், ஆய்வாளர், எஸ்.ஐ.பாலகிருஷ்ணன், ஜெயராஜ், முத்துராஜ் ஆகியோர்கள் காவல்நிலையத்திற்குள் சென்றார்கள் என்றும் தான் வாகனத்தை திருப்பி நிறுத்திவிட்டு பக்கத்திலுள்ள குடியிருபிற்கு இயற்கை உபாதைக்காக சென்று, மீண்டும் 8.05 மணியளவில் காவல்நிலையம் வந்ததாகவும் காவல்நிலையக் கதவு சாத்தப்பட்டிருந்தது. என்றும் தான் உள்ளே போனதாகவும் பதற்றமாக இருந்தது என்றும் பென்னிக்ஸ் உள்ளே இருந்தார் என்றும் தான் போகும் போது ஆய்வாளர், எஸ்.ஐ.பாலகிருஷ்ணன், தலைமைக் காவலர் முருகன், சாமத்துரை, வெயில்முத்து, தாமஸ், செல்லத்துரை, ப்யூலா, பால்துரை, முத்துராஜ் ஆகியோர்கள் காவல்நிலையத்தில் இருந்தார்கள் என்றும் முத்துராஜிடம் என்ன என்று கேட்டதற்கு ஜெயராஜ் போலீசை ஏசியதால் காவல்நிலையம் அழைத்து வந்ததாகவும், ஜெயராஜை ஏன் அடிக்கிறீர்கள் என்று பென்னிக்ஸ் கேட்டு, தன்னை தள்ளிவிட்டதாகவும் சட்டைபட்டன் அறுந்துவிட்டதாகவும் முத்துராஜா சொன்னார்

என்றும் ஆய்வாளர் போலீஸ் மேல் கை வைத்தால் சும்மா விடக் கூடாது என்று சொன்னார் என்றும் தன்னை இரவு உணவு ஆய்வாளர் வாங்கி வரச் சொன்னார் என்றும் தான் சாத்தான்குளம் பஜார் சென்று, உணவருந்தி, ஆய்வாளருக்கு உணவு வாங்கி வந்ததாகவும் இரவு 9.15 மணிக்கு காவல்நிலையம் உள்ளே செல்லும் போது பென்னிக்ஸ் ஜட்டியுடன் இருந்தார் என்றும் ஜெயராஜ் ஜட்டியுடன் லாக்அப் அருகில் இருந்தார் என்றும் தான் ஆய்வாளரிடம் உணவைக் கொடுத்துவிட்டு பார்க்கும் போது தலைமைக்காவலர் முருகன், முத்துராஜா பென்னிக்ஸ் கையை பிடித்துக் கொண்டார்கள் என்றும் எஸ்.ஐ பாலகிருஷ்ணன் லத்தியால் பென்னிக்ஸ் ஓங்கி புட்டத்தில் அடித்தார். அங்கிருந்த காவலர்கள் மாறி மாறி பிடிக்க அடித்தார்கள் என்றும்

ஆய்வாளர் அவர்கள் அடிக்கச் சொன்னார்கள் என்றும் மனக்கஷ்டமாக இருந்ததால் காவல்நிலையத்தை விட்டு 9.25 மணியளவில் வெளியே வந்துவிட்டதாகவும் 9.30 மணியளவில் எஸ்.ஐ.ரகுகணேஷ் காவல்நிலையம் உள்ளே சென்றார் என்றும் அவர் சென்ற சிறிது நேரத்தில் அடிக்கும் சத்தமும், அலறும் சத்தமும் கேட்டது என்றும் அய்யோ, அம்மா என்று அலறும் சத்தம் கேட்டது என்றும் 9.45 மணியளவில் சிறப்பு சார்பு ஆய்வாளர் செல்வின் சாமர்வேல் காவல்நிலையம் உள்ளே போனார் என்றும் எஸ்.ஐ.ரகுகணேஷ் 10.30 மணியளவில் வெளியே சென்றுவிட்டு, 11 மணியளவில் உள்ளே வந்தார் என்றும் 11.30 மணியளவில் தான் வாகனம் பக்கத்தில் இருக்கும் போது ஆய்வாளர் வெளியே வரும் போது, வழக்கறிஞர் மணிமாறன் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை வெளியேவிடுங்கள் என்று கேட்டார் என்றும் ஆய்வாளர் வழக்குப் பதிவு செய்து, Remand செய்கிறேன் என்று சொன்னார் என்றும் இரவு சுமார் 2.15 மணியளவில் ஆய்வாளரை பஜாரிலுள்ள அவருடைய வீட்டில் இறக்கிவிட்டதாகவும் மறுநாள் காலையில் 6.30 மணியளவில் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் அவர்கள் அரசு மருத்துவமனைக்கு போக வேண்டுமென்று சொன்னார் என்றும் பாராவில் ரேவதி இருந்தார் என்றும் பென்னிக்சின் உறவினர்கள் உடைகளை மாற்றுவதற்கு கொடுத்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

மேற்படி சாட்சியத்திலிருந்து 19-6-20ம் தேதி இரவு 7-45 மணியளவில் வண்டிமறிச்சியம்மன் கோவில் அருகே பாலகிருஷ்ணன், மற்றும் முத்துராஜா ஜெயராஜை அழைத்து வந்து வாகனத்தின் ஏற்றியுள்ளனர் என்பதும் காவல் நிலையம் கொண்டு சென்றுள்ளனர் என்பதும் எஸ்.ஐ பாலகிருஷ்ணன் லத்தியால் பென்னிக்சை ஓங்கி புட்டத்தில் அடித்துள்ளார் என்பதும் தலைமைக்காவலர் முருகன், முத்துராஜா பென்னிக்ஸ் கையை பிடித்திருந்துள்ளனர் என்பதும் பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜை ஜட்டியுடன் காவல் நிலையத்தில் வைத்து கொடூரமாக தாக்கி சித்ரவதை செய்துள்ளனர் என்பதும் இரவு சுமார் 9:30 மணிளவில் எஸ்.ஐ.ரகுகணேஷ் காவல் நிலையத்திற்குள் சென்றுள்ளார் என்பதும் அதன்பின் உள்ளே அடிக்கும் சத்தமும், அலறும் சத்தமும் கேட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது.

205. அ.சா.30 தாவீது 9.10 மணியளவில் சாத்தான்குளம் காவல்நிலையம் சென்றதாகவும் அங்கு அடிக்கும் சத்தமும், அலறல் சத்தமும் கேட்டது என்றும் கண்ணாடி கதவு வழியே பார்த்த போது, பென்னிக்சை சில போலீசார்கள் பிடித்துக் கொண்டிருந்தார்கள் என்றும் சில போலீசார் அடித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

206. அ.சா.44 சாத்தான்குளம் காவல்நிலையத்தில் 12.08.2019 முதல் 30.06.2020 வரை நிலைய எழுத்தராக பணிபுரிந்து வந்ததாகவும், 19.06.2020ம் தேதியன்று காலை 8 மணியில் இருந்து இரவு 9 மணி வரை நிலைய எழுத்தராக பணி புரிந்ததாகவும் அப்போது தலைமைக்காவலர் 860 ரேவதியை மாலை 17.30 மணிக்கு பாராவில் இருந்து இரவு உணவிற்காக வீட்டிற்கு அனுப்பிவிட்டு, தான் பாராபணியையும் சேர்த்து பார்த்ததாகவும், தான் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் பாராபணி ஏற்கும் போது S.S.I. ரவிச்சந்திரன், தாமஸ்பிரான்சிஸ், வெயிலுமுத்து, சாமத்துரை ஆகியோர் நீதிமன்ற பணியை முடித்து விட்டு அவரவர் பணியை பார்த்து கொண்டிருந்தனர் என்றும், அன்று இரவு 7.45 மணிக்கு காவல்ஆய்வாளர் அவர்கள் வாகனத்தில் இருந்து பாலகிருஷ்ணன், இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், பின்னர் பெயர், விலாசம் கேட்டுத் தெரிந்த ஜெயராஜ் என்பவரை அழைத்து காவல்நிலையம் வந்தனர் என்றும், அதன் பின்னர் காவலர் முத்துராஜ் காவல்நிலையம் வந்தார் என்றும், அவரைத் தொடர்ந்து காவலர்கள் முருகன், செல்லத்துரை ஆகியோர் வந்தனர் என்றும், உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் அவர்கள் ஜெயராஜ் என்பவரை கைது அறைக்கும், மாடிப்படி அறைக்கும் இடையில் நிற்க வைத்து, ஜெயராஜ் என்பவரை கையை நீட்டச் சொல்லி, லத்தியால் கையில் சாத்தான்குளத்தில் நீ பெரிய ரவுடியா, போலீசை அடிக்க வேண்டும் என்று சொன்னீங்களாமே, இப்போ போலீசை அடிங்க என்று சொல்லி ஜெயராஜை நான்கு, ஐந்து அடிகள் அடித்தார் என்றும், ஜெயராஜை அடித்துக் கொண்டிருக்கும் போது அவருடைய மகனான பென்னிக்ஸ் என்பவர் காவல்நிலையத்திற்குள் வந்தார் என்றும், உள்ளே வந்து தன்னுடைய அப்பாவை எதற்கு அழைத்து வந்தீர்கள், ஏன் அடிக்கிறீர்கள்

என்று கேட்டார் என்றும், எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் காவலர் முத்துராஜிடம் பென்னிக்சை வெளியில் இருக்கும்படியும், பின்னர் அழைப்பதாகவும் கூறினர் என்றும், காவலர் முத்துராஜா பென்னிக்சை வெளியில் இருக்கும்படி கூறினார் என்றும், பென்னிக்ஸ் வெளியில் செல்லாமல் காவலர் முத்துராஜா என்பவருடைய காலர்சட்டையை வலதுகையில் பிடித்து தள்ளிவிட்டார் என்றும், பின்னர் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் பென்னிக்ஸ் என்பவரை அடிக்க சென்றார் என்றும், பென்னிக்சை பிடிக்க காவலர்கள் முத்துராஜா முருகன், செல்லத்துரை, பால்துரை எஸ்.ஐ., ஆகியோர் பென்னிக்சை பிடிக்க முயன்றார்கள் என்றும், அவரை பிடிக்க முடியவில்லை என்றும், எஸ்.ஐ.பால்துரை வலது முழங்கையை வைத்து பென்னிக்சின் முதுகின் பின்புறத்தில் குத்தினார் என்றும், பென்னிக்ஸ் நிலைதடுமாறி நின்றுவிட்டார் என்றும், காவல்ஆய்வாளர் ஸ்ரீதர் அவருடைய அறையில் இருந்து வெளியே வந்து, போலீசை தள்ளிவிட்டு விட்டான். நீங்கள் சும்மாவா இருக்கிறீர்கள் என்று போலீசாரைசத்தம் போட்டார் என்றும், பின்னர் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன், ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோரை உடைகளை கழற்றி விட்டு வரும்படி கூறியதாகவும், அவர்கள் உடைகளை கழற்றிவிட்டு மேற்படி உடைகளை காவல்நிலையத்தில் இருந்த கூடையில் உடைகளை போடச் சொன்னார்கள் என்றும், பின்னர் ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகிய இருவரையும் காவல்நிலையத்தில் கைதி அறைக்கும், மாடிப்படி ஏறுவதற்கும் இடையே உள்ள இடத்தில் நிற்க வைத்து எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் அடித்தார் என்றும், காவலர்கள் முருகன், சாமத்துரை, வெயிலுமுத்து, செல்லத்துரை ஆகியோர் கையைப் பிடித்துக் கொண்டார்கள் என்றும், எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் லத்தியால் பிட்டப்பகுதியில் அடித்ததாகவும், ஜெயராஜை எஸ்.ஐ பாலகிருஷ்ணன் அடிக்கும் போது தனக்கு சுகர், பிரஷ்ஷர் உள்ளது என்று கூறியதால் அதன்பிறகு அவரை அடிக்கவில்லை என்றும், காவல்ஆய்வாளர் ஸ்ரீதர் தன்னுடைய அறையில் இருந்து வெளியே வந்து பாலு என்ன சத்தம் கேட்கவில்லை என்று கேட்டார் என்றும், அதன் பிறகு பென்னிக்சை மாடிப்படிக்கும், கைதிஅறைக்கும் இடையே உள்ள சுவற்றிற்கு கீழே உட்கார வைத்தனர் என்றும், எஸ்.ஐ.பாலகிருஷ்ணன், எஸ்.ஐ.பால்துரை, காவலர்கள் முருகன், சாமத்துரை, வெயிலுமுத்து ஆகியோர்கள்

பென்னிக்சின் இரண்டு கால்களையும் விரித்தார்கள் என்றும், பென்னிக்ஸ் வலிக்குது, அய்யோ அம்மா என்று கத்தினார் என்றும், அப்போது ஜெயராஜ் கைதிஅறையில் இருந்தார் என்றும், அப்போது அவர் தனக்கு டி.எஸ்.பி. தெரியும் என்றும், அவரை வைத்து உங்களுடைய வேலையை காலி செய்துவிடுவேன் என்று சொன்னார் என்றும், சிறிது நேரத்தில் பென்னிக்ஸ் அங்கிருந்த அனைத்து காவலர்களிடமும் காலில் விழுந்து தான் தெரியாமல் செய்துவிட்டேன். தன்னை மன்னித்துவிடுங்கள் என்று மன்னிப்பு கேட்டார் என்றும், அதன்பிறகு சிறிதுநேரம் கழித்து காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் அவரது அறையில் இருந்து வந்து என்ன பாலு சத்தம் கேட்கல, இன்னும் அடிக்காமல் இருக்கீங்க என்று கூறினார் என்றும், அதன்பிறகு  உதவி ஆய்வாளர் அறைக்கும், எழுத்தர் அறைக்கும் இடையில் உள்ள சுவற்றில் வைத்து பென்னிக்சின் வலது கையை தாமசும், செல்லத்துரையும், இடது கையை சாமத்துரை, வெயிலுமுத்து ஆகியோர் பிடித்திருந்தனர் என்றும், பென்னிக்சின் காலை நகர்ந்து போகாமல் இருக்க முருகன் காலை பிடித்துக் கொண்டார் என்றும், எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜை பிட்டப்பகுதியில் லத்தியால் மாறிமாறி அடித்தார் என்றும், கொஞ்ச நேரம் இடைவேளை விட்டார்கள் என்றும், பின்னர் பத்து நிமிடம் கழித்து பென்னிக்சையும் அதே இடத்தில் ஜட்டியை கழற்றிவிட்டு வைத்து அடித்தார்கள் என்றும், அவ்வாறு அடிக்கும் போது தன்னை வெளியில் செல்லும்படி எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் கூறினார் என்றும், தான் அவ்வாறு போகும் போது இரவு சுமார் 8.30 மணிக்கு மேலே இருக்கும் என்றும், அதன்பின்பு தான் வெளியே வந்து ரேவதிக்கு கைபேசியில் காவல் நிலையத்தில் பிரச்சனையாக உள்ளது, நீ எங்கே இருக்க சீக்கிரம் வா என்று கூறியதாகவும், சிறிதுநேரத்தில் ரேவதி காவல்நிலையத்திற்கு வந்தார் என்றும், ரேவதி இரவு 9 மணிக்கு காவல்நிலையம் வந்தார் என்றும், ரேவதி வந்தவுடன் தான் வீட்டிற்கு செல்வதற்காக தன்னுடைய கைப்பையை எடுக்க  காவல்நிலையத்தில் உள்ளே சென்றதாகவும், அவ்வாறு போகும் போது ஹாலில் உள்ள டேபிளில் பென்னிக்சை குப்புறபடுக்க வைத்திருந்தார்கள் என்றும் மற்ற காவலர்கள் பென்னிக்சை பிடித்திருந்தனர் என்றும், எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் அவரை அடித்தார்.என்றும்,  அவ்வாறு அடிக்கும் போது நீ செத்தாலும் பரவாயில்லை, என்

சொத்தை விற்றாவது தான் வெளியே வந்துவிடுவேன் என்று கூறி அடித்தார் என்றும், சம்பவம் நடக்கும் போது காவல்நிலையம் பூட்டப்பட்டிருந்தது என்றும், அ.சா.44 சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி சாட்சியத்தின் அடிப்படையில் பார்க்கும்போது ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகிய இருவரையும் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் லத்தியால் பிட்டப்பகுதியில் அடித்ததுள்ளார் என்பதும் காவலர்கள் முருகன், சாமத்துரை, வெயிலுமுத்து, செல்லத்துரை ஆகியோர் கையைப் பிடித்துள்ளார்கள் என்பதும் பென்னிக்சின் வலது கையை தாமசும், செல்லத்துரையும், இடது கையை சாமத்துரை, வெயிலுமுத்து ஆகியோரும் பிடித்திருந்துள்ளனர் என்பதும் பென்னிக்சின் காலை நகர்ந்து போகாமல் இருக்க முருகன் காலை பிடித்திருந்துள்ளார் என்பதும் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜை பிட்டப்பகுதியில் லத்தியால் மாறிமாறி அடித்துள்ளார் என்பதும் பின்னர் பென்னிக்சையும் ஜட்டியை கழற்றிவிட்டு வைத்து அடித்துள்ளார்கள் என்பதும் ஹாலில் உள்ள டேபிளில் பென்னிக்சை குப்புறபடுக்க வைத்து அடித்துள்ளார்கள் என்பதும் மற்ற காவலர்கள் பென்னிக்சை பிடித்திருந்துள்ளனர் என்பதும் நீ செத்தாலும் பரவாயில்லை, என் சொத்தை விற்றாவது நான் வெளியே வந்துவிடுவேன் என்று பாலகிருண்ணன் மமதையாக கூறி அடித்துள்ளார் என்பதும் அப்போது காவல்நிலையம் பூட்டப்பட்டிருந்ததுள்ளது என்பதும் நிருபணமாகின்றது,

207. அ.சா.47 தான் 2016 முதல் 2020 வரை சாத்தான்குளம் காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்ததாகவும் சி.பி.ஐ.போலிசார் சி.பி.சி.ஐ.டி போலீசார் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் விசாரணை செய்ததாகவும் 19.06.2020ம் தேதி சாத்தான்குளம் காவல் நிலையத்தில் காலை 8 மணி முதல் 20.06.2020ம் தேதி காலை 8 மணி வரை தனக்கு பாராகாவல் பணி ஒதுக்கப்பட்டது என்றும், 19.06.2020ஆம் தேதி நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரிகள் அனைவரும் 19.06.2020 அன்று பணியில் இருந்தனர் என்றும், 19.06.2020ம் தேதியன்று மாலை 6 மணியிலிருந்து 8 மணி வரை தனக்கு ஓய்வு நேரம் என்றும், 8.50 மணியளவில் தான் சாத்தான்குளம் காவல்

நிலையத்திற்கு சென்றதாகவும், தான் சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு செல்லும் போது வெளியிலுள்ள விளக்குகள் அணைந்திருந்தது என்றும் ,காவல் நிலைய கதவு உட்புறமாக பூட்டப்பட்டிருந்தது என்றும், காவல்நிலையத்திற்குள் யாரும் உள்ளே செல்லாதவாறு காவலர் தாமஸ் என்பவர் நின்று கொண்டிருந்தார் என்றும், தாமஸ்சிடம் காவல்நிலையத்திற்குள் செல்ல வேண்டுமென்று கூறியதாகவும், அப்போது தாமஸ் தன்னிடம் உள்ளே காவல்ஆய்வாளர் ஸ்ரீதர் மற்றும் உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் இரண்டு ஆண்களையும் ஜட்டியுடன் நிற்க வைத்து விசாரித்து கொண்டிருப்பதாகவும், அதனால் தன்னை வெளியில் நிற்கும்படியும் கூறினார் என்றும், அதனால் தான் சுமார் 10 நிமிடங்கள் காவல்நிலைய வாசலில் நின்று கொண்டிருந்ததாகவும், ஏற்கனவே தாமதமாக வந்துள்ளேன், காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் தன்னை ஏசுவார், எனவே உள்ளே விடு என்று கூறியதாகவும், அப்போது தாமஸ் காவல்நிலைய கதவுகளை தட்டியவுடன் கதவு திறக்கப்பட்டது என்றும், தான் உள்ளே சென்ற போது இடதுபக்கத்தில் பெரிய மேஜை இருந்தது என்றும், அந்த மேஜையில் ஒரு வாலிப பையனை ஜட்டியுடன் குப்புற படுக்க வைத்திருந்தார்கள் என்றும், அந்த பையனின் ஒரு கையை சாமத்துரையும், மற்றொரு கையை வெயிலுமுத்துவும் பிடித்திருந்தார்கள் என்றும், வாலிபர் ஜட்டியுடன் படுக்க வைக்கப்பட்டிருந்ததால் காலை பிடித்தவர்கள் யார் என்று தான் கவனிக்கவில்லை என்றும், அப்போது எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் ஒரு நீளமான கம்பை வைத்து பென்னிக்சை புட்டப்பகுதியில் அடித்துக் கொண்டிருந்தார். என்றும், பாலகிருஷ்ணனிடம் கூறியதாகவும், அவர் என்ன பிரச்சனை வந்தாலும் தனது சொத்தை விற்று தான் பார்த்துக் கொள்வேன் என்று தன்னிடம் சொன்னார் என்றும், ஸ்ரீதர் தன்னுடைய அறையில் இருந்து என்ன முருகா, என்ன பாலா சத்தம் கேட்கல என்று சொன்னார் என்றும், திரும்பவும் போலீசார் அனைவரும் அதே மேஜையில் பென்னிக்சை குப்புற படுக்க வைத்து அடித்தார்கள் என்றும், இவன் நல்ல அடி தாங்குவான், நல்ல குண்டா இருக்கான், நல்லா நூறு இட்லி சாப்பிடுவான் போல என்று சொல்லி சுழற்சிமுறையில் போலீசார் அனைவரும் மாற்றி மாற்றி அடித்தார்கள் என்றும், முதலில் முருகன் அடித்தார் என்றும், பின்னர் பாலகிருஷ்ணன், முத்துராஜா வெயிலுமுத்து, சாமத்துரை, தாமஸ், செல்லத்துரை

ஆகியோர் மாற்றி மாற்றி பிடிக்க மாற்றி மாற்றி அடித்தார்கள் என்றும், அவ்வாறு அடித்த போது பென்னிக்சின் உடம்பிலிருந்து இரத்தம் சுவற்றில் சிதறியது என்றும்ஜெயராஜ், பென்னிக்சை காவல்ஆய்வாளர் அறைக்கு காவலர்கள் கூட்டி சென்றார்கள் என்றும், அப்போது ரகுகணேஷ் அவர்களிடம் நாளை நீதிபதியிடம் ரிமாண்டிற்கு கூட்டி செல்வார்கள் அப்போது நீங்கள் நீதிபதியிடம் என்ன சொல்வீர்கள் என்று கேட்டதற்கு ஜெயராஜ் அப்போது ஒன்றும் சொல்லாமல் நின்று கொண்டிருந்தார். என்றும், ஆனால் பென்னிக்ஸ் போலீஸ் ரொம்ப அடித்தார்கள் என்று சொல்வேன் என்று சொன்னார் என்றும், அப்போது ரகுகணேஷ் போலீஸ் அடிச்சாங்களா இனிமேல் தான் போலீஸ்அடியே இருக்கு என்று சொல்லி ஜெயராஜ், பென்னிக்சை கைதிஅறைக்கும், மாடிப்படிக்கும் இருக்கும் சுவற்றில் வைத்து கையை நீட்ட சொல்லி அடித்ததாகவும், கையை மேலே தூக்க சொல்லி இப்படி சொல்வியா என்று ஜெயராஜ் முன் பென்னிக்சையும், பென்னிக்ஸ் முன் ஜெயராஜையும் மாறி மாறி அடித்தார் என்றும், அவர் புட்டப்பகுதி, கை மற்றும் அவர் மனம் போன போக்கில் எல்லா இடத்திலும் அடித்தார் என்றும், பென்னிக்சை அடிக்கும் போது பென்னிக்ஸ் உடம்பிலிருந்து இரத்தம் சொட்டு சொட்டாக தரையில் வடிந்து கொண்டிருந்தது என்றும், அப்போது பென்னிக்ஸ் நான் தெரியாமல் சொல்லிவிட்டேன் என்று அங்கு நின்று கொண்டிருந்த அனைத்து காவலர்களின் கால்களிலும் விழுந்தார் என்றும், சொட்டு சொட்டாக தரையில் விழுந்த இரத்தத்தை ரகுகணேஷ் பென்னிக்சிடம் துடைக்குமாறு சொன்னார். என்றும் பிறகு ரகுகணேஷ் கைதிஅறைக்கு சென்று ஏன் சாப்பிட மாட்டீர்களா என்று அவர்களை அடித்தார் என்றும், அந்த அடிக்கிற சத்தம் தனக்கு கேட்டது என்றும், அப்போது பென்னிக்ஸ் நான் சாப்பிடுகிறேன் என்று சொன்னார் என்றும், அவ்வாறு பென்னிக்ஸ் சொன்னவுடன் ரகுகணேஷ் வெளியே வந்துவிட்டார் என்றும், , அ.சா.47 சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.47-ன் சாட்சியத்தின் அடிப்படையில் பார்க்கும்போது 19- 6 -20 ஆம் தேதி இரவு சுமார் 8:50 மணியளவில் ரேவதி காவல் நிலையத்திற்கு சென்றுள்ளார் என்பதும் அப்போது காவல் நிலையத்தின் கதவு பூட்டப்பட்டு

இருந்துள்ளது என்பதும் காவல் நிலையத்தின் உள்ளே ஜெயராஜ் மற்றும் பெனிச்சை போலீசார் அடித்துள்ளனர் என்பதும் தாமஸ் யாரும் உள்ளே செல்ல முடியாதபடி கதவருகே காவலுக்கு நின்று கொண்டு காவல் காத்து உதவியுள்ளார் என்பதும் ரேவதி உள்ளே சென்று பார்த்தபோது பென்னிக்சை மேஜையில் வைத்து ஒரு கையை சாமத்துரையும், மற்றொரு கையை வெயிலுமுத்துவும் பிடித்துக்கொண்டிருந்துள்ளனர் என்பதும் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் ஒரு நீளமான கம்பை வைத்து பென்னிக்சை புட்டப்பகுதியில் அடித்துள்ளார் என்பதும் என்ன பிரச்சனை வந்தாலும் தனது சொத்தை விற்று தான் பார்த்துக் கொள்வேன் என்று எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் சொல்லியுள்ளார் என்பதும் ஸ்ரீதர் என்ன முருகா, என்ன பாலா சத்தம் கேட்கல என்று சொல்லி அடிக்க தூண்டியுள்ளார் என்பதும் திரும்பவும் போலீசார் அனைவரும் அதே மேஜையில் பென்னிக்சை குப்புற படுக்க வைத்து அடித்துள்ளார்கள் என்பதும் இவன் நல்ல அடி தாங்குவான், நல்ல குண்டா இருக்கான், நல்லா நூறு இட்லி சாப்பிடுவான் போல என்று சொல்லி சுழற்சிமுறையில் போலீசார் அனைவரும் மாற்றி மாற்றி அடித்துள்ளனர் என்பதும், முருகன், பாலகிருஷ்ணன், முத்துராஜ், வெயிலுமுத்து, சாமத்துரை, தாமஸ், செல்லத்துரை ஆகியோர் மாற்றி மாற்றி பிடிக்க மாற்றி மாற்றி அடித்துள்ளார்கள் என்பதும் ரகுகணேஷ் சாப்பிடமாட்டீர்களா என்றும், போலீஸ் அடிச்சாங்களா இனிமேல் தான் போலீஸ் அடியே இருக்கு என்றும் சொல்லி ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை அடித்துள்ளார் என்பதும் பென்னிக்சின் உடம்பிலிருந்து இரத்தம் வந்துள்ளது என்பதும் அதை துடைக்கசொல்லியுள்ளனர் என்பதும் ஜெயராஜ் முன் பென்னிக்சையும், பென்னிக்ஸ் முன் ஜெயராஜையும் மாறி மாறி அடித்துள்ளனர் என்பதும் நிருபணமாகின்றது.

208. முதல் தகவல் அறிக்கை பிரேத விசாரணை மற்றும் நீதி விசாரணைகளில் எதிரிகள் பற்றி குறிப்பிடவில்லை என்றும் அதனால் பின்னிட்டு கொடுக்கப்பட்டுள்ள வாக்குமூலங்கள் தங்களை கட்டுப்படுத்தாது என்றும் சிபிஐ சிபிசிஐடி கோவில்பட்டி நீதித்துறை நடுவர் ஆகியோர்களிடம் அளித்துள்ள வாக்குமூலங்களில் மேற்படி சாட்சிகள் முதல்விசாரணையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை

தெரிவித்திருக்கவில்லை என்றும் குவிமுச பிரிவு 164 ன் கீழான வாக்குமூலத்தில் நான்கு எதிரிகளைப் பற்றி மட்டுமே ரேவதி குறிப்பிட்டுள்ளார் என்றும் மற்ற எதிரிகளைப் பற்றி அவர் குறிப்பிடவில்லை என்றும் இந்நிலையில் மேற்படி சாட்சியங்களை கருத்தில் கொள்ளக்கூடாது என்றும் வெகு நாளுக்கு பிறகு, ரேவதி மற்றும் பியூலா 28-6-20 மற்றும் 1-7-20 20 அன்று விசாரிக்கப்பட்டுள்ளனர் என்றும், எனவே அவர்களது சாட்சியங்கள் ஏற்கதக்கதல்ல என்றும் எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது.

209. உயர் அதிகாரிகள் வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள நிலையில் பயத்தின் காரணமாக அவர்களுக்கு எதிராக உடனடியாக சாட்சிகள் சாட்சியமளிக்க தயங்கியிருக்கலாம், ரேவதி பயத்தில் வாக்குமூலத்தில் கையொப்பமிட முதலில் தயக்கம் தெரிவித்தார் என அ.சா.50 ம் சாட்சியமளித்துள்ளார். மேலும் வெகுநாள் கழித்து சாட்சியமளித்துள்ளதால் உண்மையில் சிலவற்றை நீதித்துறை நடுவரிடம் குற்றவியல் விசாரணை நடைமுறைச்சட்டம் பிரிவு 164-ன் கீழ் அளித்துள்ள வாக்குமுலத்தில் குறிப்பிட இயற்கையாகவே மறந்திருக்கலாம், இந்நிலையில் காலங்கடந்து சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ளதாகவும் அதனை நிராகரிக்கவேண்டும் என்றும் கோருவது ஏற்புடையதாக இல்லை. குறிப்பாக இந்ததகைய வழக்குகளில் எந்த காவல்துறையினரும் மற்ற காவல்துறையினருக்கு எதிராக சாட்சியம் அளிக்க முன்வருவதில்லை. இந்நிலையில் இத்தகயை வழக்குகளில் முதன் முதலாக நீதிமன்றத்தில் ஒரு சங்கதி குறித்து சாட்சியம் அளித்தாலும் அதை எளிதில் புறந்தள்ளிவிட முடியாது. இந்தவழக்கில் பின்னர் சிபிஐ விசாரணையில் மற்ற எதிரிகளை பற்றியும் ரேவதி குறிப்பிட்டுள்ளார்

210. இவ்வழக்கில் சாட்சிகள் கீழ் கண்டவாறு, புலன்விசாரணை காலங்களில் வாக்குமூலம் அளித்துள்ளனர். மேற்படி சாட்சியங்கள் ஒருபோதும் நிலையுறுத்து சாட்சியங்கள் ஆகாது, எனினும் அவர்கள் ஏற்கனவே சாட்சியம் ஏதும் அளிக்காதது போலவும் முதல் முறையாக அனைத்தையும் நீதின்றத்தில் அளித்துள்ளதுபோவும்

எதிரிகள் தரப்பில் வாதிட்டுள்ளதில் சாரம் இல்லை என்பதை வெளிப்படுத்தவே அவை கீழே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

210.1 19-6-20ஆம் தேதி தேசிங்கு ராஜாவுடன் சாத்தான்குளம் காவல் நிலையத்திற்கு இரவு 9.10 மணியளவில் சென்றதாகவும் காவல் நிலைய கதவு பூட்டப்பட்டிருந்ததாகவும் அலறல் சத்தம் கேட்டதாகவும் அசா 30 தாவீது சிபிஐ விசாரணையில் வாக்குமூலமும் கொடுத்துள்ளார்.

210.2 19-6-20ம் தேதி சுமார் 08 மணியளவில், எஸ்.ஐ. பாலகிருஷ்ணனும் கான்ஸ்டபிள் முத்துராஜும் பின்னர் ஜெயராஜ் என்று அறியப்பட்டவரை இன்ஸ்பெக்டரின் வாகனத்திற்கு அழைத்து வந்து, அவரை வாகனத்தின் பின் இருக்கையில் அமர வைத்தனர் என்றும் உடனடியாக இன்ஸ்பெக்டர் வாகனத்தை காவல் நிலையத்திற்கு எடுத்துச் செல்லுமாறு தன்னிடம் கூறினார் என்றும் கான்ஸ்டபிள் முத்துராஜும் தங்களைப் பின்தொடர்ந்து ஒரு பைக்கில் காவல் நிலையத்திற்கு வந்தார் என்றும் அவர்கள் ஜெயராஜை காவல் நிலையத்திற்குள் அழைத்துச் சென்றனர். என்றும் சாப்பிட்டுவிட்டு ஆய்வாளருக்கு இரவு உணவு கொண்டு காவல் நிலையத்திற்குள் சென்றபோது, உள்ளாடைகளுடன் இருந்த பென்னிக்ஸின் கைகளைப் தலைமைக் காவலர் முருகனும் காவலர் முத்துராஜும் பிடித்துக்கொண்டு நின்றதாகவும் உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் ஒரு மர லத்தியால் பென்னிக்ஸின் பிட்டத்தில் அடிப்பதையும் கண்டதாகவும் ஜெயராஜும் உள்ளாடைகளுடன் லாக் அப் அறைக்கு அருகில் நின்று கொண்டிருந்தார் என்றுமு அசா 26 ஜெயசேகர் சிபிஐ விசாரணையில் குறிப்பிட்டுள்ளார்.

210.3 19.06.2020 அன்று, 19:45 மணி முதல் 20:00 மணிக்குள், இந்த காவல் நிலையத்தின் ஆய்வாளர் ஸ்ரீதர் மற்றும் உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் ஜெயராஜை சாத்தான்குளம் காவல் நிலையத்திற்குக் கொண்டு வந்தனர் என்றும் அதன்பிறகு, ஜெயராஜை உள்ளங்கையைக் காட்டும்படி சொல்லி உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் அடித்தாகவும் எஸ்ஐ பாலகிருஷ்ணன், எஸ்ஐ பால்துரை, முருகன் பென்னிக்ஸை அடித்ததாகவும் காலணிகளால் அவரது இரண்டு கால்களையும்

அகலமாகப் பிடித்து இழுத்தனர் என்றும் முதல் சுற்று சித்திரவதை முடிந்து சுமார் 10 நிமிடங்களுக்குப் பிறகு, காவல் நிலைய அதிகாரி ஸ்ரீதர் தனது அறையிலிருந்து வெளியே வந்து, சித்திரவதை ஏன் நிறுத்தப்பட்டது என்றும், அலறல் சத்தம் ஏன் கேட்கவில்லை என்றும் உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் மற்றும் மற்றவர்களைக் கடிந்துகொண்டார் என்றும் இதற்குப் பிறகு உடனடியாக இரண்டாவது சுற்று சித்திரவதை தொடங்கியது. என்றும் காவலர்கள் செல்லத்துரை மற்றும் தாமஸ் பிரான்சிஸ் ஆகியோர் பென்னிக்சின் வலது கையையும், மற்ற இரண்டு காவலர்களான வெயிலுமுத்து, தலைமை காவலர்கள் முருகன் மற்றும் சாமத்துரை ஆகியோர் அவரது இடது கையையும் பிடித்துக்கொண்டனர் என்றும் இதனால் பென்னிக்ஸால் அந்த இடத்திலிருந்து நகர முடியவில்லை. என்றும் அதன்பிறகு, உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் ஒரு மர லத்தியால் அவரது பிட்டப் பகுதியில் கடுமையாகத் தாக்கத் தொடங்கினார் என்றும் இது சுமார் 5 முதல் 10 நிமிடங்கள் நீடித்தது என்றும் ரேவதி சுமார் 21.00 மணியளவில் காவல் நிலையத்திற்கு வந்து சேர்ந்தார் என்றும் அந்த நேரத்திலும் காவல் நிலையத்தின் வாசல் பூட்டப்பட்டிருந்தது என்றும் தனது பையை எடுப்பதற்காக மீண்டும் காவல் நிலையத்திற்குள் நுழைந்தபோது, பென்னிக்ஸை உதவி ஆய்வாளரின் அறைக்கு வெளியே இருந்த ஒரு மர மேஜையின் மீது குப்புறக் குனிய வைத்து இரண்டு காவலர்கள் மேஜையின் மறுபுறத்திலிருந்து அவரது இரு கைகளையும் பிடித்துக்கொண்டிருந்தனர். அதனால் பென்னிக்ஸால் நகர முடியவில்லை. என்றும் உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் ஒரு மர லத்தியால் அவரது பிட்டங்களில் கடுமையாகத் தாக்கிக்கொண்டிருந்தார் என்றும் அ.சா.44 பியுலா செல்வகுமாரி 21-7-2020-ம் தேதி சிபிஐ-யில் வாக்குமூலம் அளித்துள்ளார்.

210.4 ஆய்வாளர் ஸ்ரீதர், உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன், உதவி ஆய்வாளர் ரகுகணேஷ், தலைமை காவலர் முருகன் மற்றும் காவலர் முத்துராஜா ஆகியோர் 19/20.06.2020 அன்று நள்ளிரவில் தூத்துக்குடி, சாத்தான்குளம் காவல் நிலையத்தில் ஜெயராஜ் மற்றும் அவரது மகன் பெனிக்ஸ் ஆகியோரை கொடூரமாக தாக்கி சித்திரவதை செய்துள்ளனர் என்றும், உதவி ஆய்வாளர் பால் துரை, தலைமை காவலர்

சாமதுரை, காவலர் தாமஸ் பிரான்சிஸ், காவலர் வெயிலுமுத்து மற்றும் காவலர் செல்லத்துரை ஆகியோரும் பென்னிக்ஸை தாக்கும்/சித்திரவதை செய்யும் செயலில் பங்கேற்றனர் என்றும் அவர்கள் பென்னிக்ஸின் கைகளையும் கால்களையும் பிடித்துக் கொண்டும் மற்றும் பிற வழிகளிலும் ஆய்வாளர் ஸ்ரீதர், உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன், உதவி ஆய்வாளர் ரகு கணேஷ், தலைமை காவலர் முருகன் மற்றும் காவலர் முத்துராஜா ஆகியோருக்கு பென்னிக்சை அடிக்க உதவியுள்ளனர் என்றும் இறந்தவர்கள் இருவரையும் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் சட்டவிரோதமாக தடுத்து வைத்தது, தலைமை காவலர் முருகன் அளித்த தவறான புகாரின் அடிப்படையில் அவர்கள் மீது பொய் வழக்கு பதிவு செய்துள்ளனர் என்றும் ரேவதி சிபிஐயில் வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

210.5 ரேவதி குவிமுச பிரிவு 164–ன் கீழான வாக்குமூலத்தில் தான் காவல்நிலையத்திற்கு சென்றபோது 21.00 மணி இருக்கும் என்றும் கதவு பூட்டப்பட்டப்பட்டிருந்தது என்றும் CCTNS போலீஸ் தாமஸ் வாசலில் நின்றிருந்தார் என்றும் உள்ளே போகவேண்டும் என்று கூறியதற்கு ஸ்டேசன் உள்ளே 2 ஆம்பளங்கள விசாரித்துக்கொண்டிருக்கிறார்கள் நீங்க வெளியே நில்லுங்க என்று சொன்னதாகவும் சிறிது நேரம் வெளியே நின்றிருந்ததாகவும் வலதுபக்க சாய்வு தளத்தில் பியூலா செல்வக்குமாரி நின்றிருந்தார் என்றும் ஸ்டேசன் உள்ளே சென்றபோது மேஜையில் குண்டான நபரை 4 பேர் பிடித்திருந்ததாகவும் பாலகிருஷ்ணன் மூங்கில் கம்பியால் அடித்துக்கொண்டிருந்ததாகவும் இன்ஸ்பெக்டர் உள்ளே இருந்துகொண்டு என்ன முருகா சத்தம் கேட்கல என சொன்னார் என்றும் உடனே 4 போலீசார் பிடித்து அதே மேஜையில் வைத்து HC 258 முருகன் அதே மூங்கில் கம்பால் அடித்ததாகவும் இன்ஸ்பெக்டர் எனக்கு சத்தம் கேட்கல அடி என்று சொன்னதாகவும் அடிக்காதீங்க என்று தான் சொன்னதாகவும் ஆனால் இன்ஸ்பெக்டர் இன்னும் சத்தம் கேட்கல அடி முருகா என்று சொன்னதாகவும் 11.30 மணிக்கு ரகுகணேஷ் வந்ததாகவும் போலீசார் அடித்தார்களா என்று கேட்டதற்கு பென்னிக்ஸ் அடித்தார்கள் என சொல்வேன் என சொன்னதற்கு போலீசார்கள் அடித்தார்கள் என்றா சொல்வாய் இனிமேல் தான் போலீஸ்

அடியே இருக்கு என சொல்லி மூங்கில் கம்பால் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை கையை நீட்டச்சொல்லி கையிலும் பின்புற புட்டத்தில் அடித்ததாகவும் ஒவ்வொரு முறை அடிக்கும்போது இன்ஸ்பெக்டர் அடிக்கும் சத்தம் கேட்கவே இல்லை நல்லா அடி என்று சொல்லிக்கிட்டே இருந்ததாகவும் சாப்பிடவில்லை என தெரிந்ததும் ரகுகணேஷ் லாக் அப் உள்ளே சென்று மறுபடியும் அடித்ததாகவும் கிளம்பும் போது இன்ஸ்பெக்டர் இன்னொரு ரவுண்டு அடிக்கலாமா என்று கேட்டதாகவும் ரேவதி வாக்குமூலம் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

210.6 தான் இரவு சுமார் 08.50 க்கு காவல் நிலையம் சென்றதாகவும் தாமஸ் வாசல் கதவருகே உள்ளே யாரும் சென்றுவிடாதவாறு தடுக்கும்படிக்கு நின்று கொண்டிருந்தார் என்றும் உள்ளே யாரோ ஒருவர் அம்மா வலிக்குது விட்டுருங்க என சொன்னதாகவும் உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் ஸ்டேசன்குள்ளேயே வந்து தகராறு பண்ணுவியா நீ பெரிய ஆளா என்று கூறும் சத்தம் கேட்டதாகவும், உள்ளே தான் நுழைந்த போது டேபிளில் ஒரு ஆளை படுக்க வைத்து 4 புறமும் நான்கு பேர் நின்றுகொண்டு இவன் நல்லா குண்டா இருக்கான் நல்லா அடி தாங்குவான் என்று சொல்லி அடித்ததாகவும் அப்போது அந்த நபருக்கு இரத்தம் சொட்டியதாகவும் கீழே வழிந்த இரத்தத்தை இன்ஸ்பெக்டர் துடைக்க சொன்னார் என்றும் சாமதுரை ஒரு கையையும் வெயில்முத்து கால்களையும் பிடித்திருந்ததாகவும் பாலகிருஷ்ணன் அடித்துக் கொண்டிருந்ததாகவும் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், முருகனை பார்த்து என்ன முருகா சத்தம் நின்றுவிட்டது அடுத்த ரவுண்டு போகலாமா என கேட்டதாகவும் உடனே பென்னிக்சை மீண்டும் அழைத்து வந்து அதே டேபிளில் வைத்து முருகன், தாமஸ் முத்துராஜா, சாமதுரை, வெயிலுமுத்து மற்றும் பாலகிருஷ்ணன் மாற்றி மாற்றி ஒருவர் அடிக்க மற்றவர் பிடிக்க மீண்டும் மீண்டும் சுழர்ச்சியாக லத்தியை கொண்டு அடித்துக் கொண்டிருந்தார் என்றும் இன்ஸ்பெக்டர் எஸ்,எஸ்,ஐ ரவிச்சந்திரனை அழைத்து இவர்களுக்கு ரொம்ப காயம் ஆகிவிட்டது இவர்களை சும்மா விடமுடியாது அதனால் இவங்க மேல நல்லா கேஸ் போட நல்ல பெட்டிசன் டிராப்ட் பண்ணுங்க என்று சொன்னதாகவும் ரகுகணேசும் அடித்ததாகவும் இன்ஸ்பெக்டர் கிளம்பும்போது

இன்னொரு ரவுண்ட் அடிப்போமா என்று சொன்னதாகவும் நீதித்துறை விசாரணையில் கொடுத்துள்ள வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

210.7 ரகுகணேஷ் லத்தியை கொண்டு பென்னிக்சை அடித்ததாகவும், அதை கண்ணாடி கதவு வழியே பார்த்தாகவும் மணிமாறனை வெளியேற்றி கதவை பூட்டி ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை அடித்தார்கள் என்றும் அவர்கள் அலறும் சத்தம் கேட்டதாகவும் அடித்து பழகுவதற்கு புதிய பீஸ் ஒன்று கிடைத்துள்ளதாக முருகன் சொன்னதாகவும் ரவிசந்திரன் சிபிஐ–யில் வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

210.8 அசா 26, 30, 44, 47 ன் குவிமுச பிரிவு 161 கீழான வாக்குமூலங்கள் மற்றும் ரேவதியின் குவிமுச பிரிவு 164–ன் கீழான வாக்குமூலம் மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களை பெருமளவு ஒத்துரைப்பதாகவே அமைந்துள்ளது.

211. a) In Malkhansingh v. State of M.P., (2003) 5 SCC 746 it has been held that As a general rule, the substantive evidence of a witness is the statement made in court.என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பார்க்கும்போது நீதிமன்றத்தில் அளிக்கப்படும் சாட்சியமே நிலையுறுத்து சாட்சியமாகும்

b) In Esher Singh Vs. State of A.P., AIR 2004 SC 3030 என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம்

The evidence of a witness cannot be discarded merely because he has made improvements over his police statements by stating some of the facts for the first time in his deposition before the court. If the facts stated for the first time before the court are in the nature of elaboration, do not amount to contradiction, and the evidence of the witness does not militate against his earlier version, his evidence cannot be discarded. என தீர்ப்பளித்துள்ளது,

எனவே முந்தைய விசாரணைகளில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் குறித்து விளக்கமாக சாட்சியம் அளித்துள்ளதை முரண்பாடாக கருதமுடியாது.

212. மேலும் Alamgir Vs. State of NCT, Delhi, (2003) 1 SCC 21 என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம்

"If a relevant fact is not mentioned in the statement of the witness recorded under Section 161 CrPC but the same has been stated by the witness before the court as P.W., then that would not be a ground for rejecting the evidence of the P.W. if his evidence is otherwise creditworthy and acceptable.Omission on the part of the police officer would not take away the nature and character of the evidence எனத் தீர்ப்பளித்துள்ளது.

எனவே முதன்முறையாக நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருந்தாலும் அது நம்பத்தகுந்ததாக இருக்கும் பட்சத்தில் அதனை நிராகரிக்க முடியாது என்பது தெரிய வருகிறது

213. சாட்சியின் சாட்சியத்தை அவரது சாட்சியத்திலிருந்தும் முந்தைய காலகட்டங்களில் அவர் அளித்துள்ள வாக்குமூலங்களிலிருந்தும் முரண்படுத்த முடியுமே தவிர வேறொரு சாட்சியின் சாட்சியத்தை வைத்து ஒரு சாட்சியினுடைய சாட்சியத்தை முரண்படுத்த முடியாது.

214. மேலும் In Mahendran Vs. State of Tamil Nadu, AIR 2019 SC 1719 எனற் வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் Even if a major portion of the evidence is found to be deficient, in case residue is sufficient to prove guilt of an accused conviction can be maintained. It is the duty of the court to separate the grain from the chaff. Where chaff can be separated from the grain, it would be open to the court to convict an accused notwithstanding the fact that evidence has been found to be deficient to prove guilt of other accused persons. Falsity of a particular material witness or material particular would not ruin it from the beginning to end. The maxim "falsus in uno, falsus in omnibus" has no application in India and the witnesses cannot be branded as liar என தீர்பளித்துள்ளது. அதனடிப்படையில் பாரக்கும்போது ஒரு சாட்சியின் சாட்சியத்தில்

பகுதி பொய்யாக இருந்தாலும் எஞ்சிய பகுதி உண்மையாக இருக்கும் பட்சத்தில் அதனை ஏற்றுக்கொள்ளலாம் என்பது தெரியவருகின்றது.

215 . மேலும் Ramesh and another –vs– State of Uttar Pradesh with Maniram –vs– State of Uttar Pradesh with Ramkumar –vs– State of Uttar Prades (2009) 15 SCC 513 என்ற வழக்கில்

The Hon'ble Supreme Court has held that Minor contradictions in testimonies of PWs and non–examination of independent witness, on facts, was insignificant . Contradiction in the testimony of PW's are bound to be there and infact go to support that truthfullness of the witnesses. . என மாண்புமிகு உச்சநீமன்றம் தீர்ப்பளித்துள்ளது அதன் அடிப்படையில் பார்க்கும்போது சிறு–சிறு முரண்பாடுகளுக்காக ஒரு சாட்சியின் சாட்சியத்தை நிராகரிக்க முடியாது என்பதும் தெரியவருகின்றது.

216. ஒரு செயல் நீண்ட நேரம் நடக்கையில் பெரும் எண்ணிக்கையிலான எதிரிகள் ஈடுபடும்போது யார் எங்கு அடித்தார் எதனால் அடித்தார் எத்தனைமுறை அடித்தார் என்றெல்லாம் ஒருவர் கணக்கு எடுத்துக்கொண்டு இருக்கமுடியாது, பலநாட்களுக்கு முன் நடந்ததை அப்படியே பிரதிபலிக்க மனிதமூளை புகைப்படசுருளல்ல. எனவே சாட்சியங்களை பொதுவாகதான் கூறமுடியுமே தவிர எத்தனை முறை அடித்தார் எதனால் அடித்தார்கள் என வரிசைக்கிரமமாக எவராலும் கூறமுடியாது .

In Masalti vs State of Uttar Pradesh என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் when there are large number of assailants it is often not possible to witness to describe accurately the part played by each one of the asailant என தீர்ப்பளித்துள்ளது.

217. மேலும் இந்த குற்றம் காவல் நிலையத்தில் நடைபெற்றுள்ளது. அசா 20,26,44,47 எதிரிகளுடன் அதே காவல் நிலையத்தில் ஒன்றாக பணிபுரிபவர்கள். அசா 20, 26,44,47ன் சாட்சியப்படியும் 1 முதல் 9 எதிரிகள் சம்பவ தேதியில் காவல் நிலையத்தில் இருந்துள்ளனர். அசா 20,26,44,47, எதிரிகள் தான் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை தாக்கி காயப்படுத்தியதாகவும் மற்ற எதிரிகள் தாக்க 1,8 எதிரிகள் உடந்தையாக

இருந்ததாகவும் சாட்சியமளித்துள்ளனர், அவர்களது சாட்சியம் மரபணுசாட்சியம் மூலமும் உறுதிபடுத்தப்பட்டுள்ளது. அசா 20 ,26,44,47க்கும் எதிரிகளுக்கும் முன் விரோதம் இருப்பதாகவும் எதிரிகள் தரப்பில் சாட்சியம் ஏதும் முன்னிடப்படவில்லை. இந்நிலையில் அசா 20 ,26,44,47ன் சாட்சியத்தை நிராகரிக்க போதுமான காரணம் ஏதுமில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

218. இரவு 11:30 மணிக்கு தான் சாத்தான்குளம் காவல் நிலையத்திற்கு ரேவதி வந்ததாக 3ம்எதிரி தரப்பில் வாதிக்கப்பட்டுள்ளது ,இந்நிலையில் ரேவதி 19 –6 –20 ஆம் தேதி இரவு 11.30 மணிக்கு தான் பணிக்கு வந்தார் என நிரூபிக்க 3ஆம் தேதி தரப்பில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இருப்பினும் 19 –6 –20 ஆம் தேதி இரவு 11.30 மணிக்கு தான் ரேவதி வந்ததாக வாதத்திற்காக வைத்துக் கொண்டாலும் ரேவதி அளித்துள்ள சாட்சியத்தின்படி பாக்கும்போது 19.06.2020 அன்று காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ், தலைமைக்காவலர் முருகன், சாமத்துரை, பெண் தலைமைக்காவலர் ப்யூலாசெல்வகுமாரி, த.கா. ஜெயசேகரன், சிறப்பு உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன், செல்வின், மு.நி.கா.செல்லத்துரை, தாமஸ், அழகுமாரிச்செல்வம், மகாராஜா, காவலர் முத்துராஜா ஆகியோர் தன்னுடன் அன்றைய தினம் பணியில் இருந்துள்ளனர் என்றும் இரவுபணிக்கு சுமார் 9 மணியளவில் காவல் நிலையம் சென்றபோது காவல்நிலைய கதவு உட்புறமாக பூட்டப்பட்டிருந்துள்ளது என்றும் காவல்நிலையத்திற்குள் யாரும் உள்ளே செல்லாதவாறு காவலர் தாமஸ் என்பவர் நின்று கொண்டிருந்துள்ளார் என்றும் உள்ளே செல்லவிடாமல் சிறிது நேரம் அவர் ரேவதியை தடுத்துள்ளார் என்பதும் மேஜையில் பென்னிக்சை ஜட்டியுடன் குப்புற படுக்க வைத்து அவரது ஒரு கையை சாமத்துரையும், மற்றொரு கையை வெயிலுமுத்துவும் பிடித்திருந்துள்ளனர் என்றும் அப்போது எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் ஒரு நீளமான கம்பை வைத்து பென்னிக்சை புட்டப்பகுதியில் அடித்துள்ளார் என்றும் பாலகிருஷ்ணன் தன்னிடம் உன் பங்கிற்கு நீயும் அடி என்று என்னிடம் சொன்னார் என்றும் நான் யாரையும் அடிக்க மாட்டேன் நீங்களும் அடிக்காதீர்கள் என்று பாலகிருஷ்ணனிடம் கூறியதாகவும் என்ன

பிரச்சனை வந்தாலும் எனது சொத்தை விற்று நான் பார்த்துக் கொள்வேன் என்று பாலகிருஷ்ணன் கூறியதாகவும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஜட்டியுடன் காவல் நிலையத்தில் மோசமான முறையில் சித்ரவதை செய்யப்பட்டுள்ளனர் என்றும் ஸ்ரீதர் என்ன முருகா, என்ன பாலா சத்தம் கேட்கல என்று திரும்ப திரும்ப சொல்லி போலீசார் அனைவரும் அதே மேஜையில் பென்னிக்சை குப்புற படுக்க வைத்து அடித்தார்கள் என்றும் இவன் நல்ல அடி தாங்குவான், நல்ல குண்டா இருக்கான், நல்லா நூறு இட்லி சாப்பிடுவான் போல என்று சொல்லி சுழற்சிமுறையில் போலீசார் அனைவரும் மாற்றி மாற்றி அடித்துள்ளார்கள் என்றும் முருகனும் அடித்துள்ளார் என்றும் பாலகிருஷ்ணன், முத்துராஜ், வெயிலுமுத்து, சாமத்துரை, தாமஸ், செல்லத்துரை ஆகியோர் மாற்றி மாற்றி பிடிக்க மாற்றி மாற்றி அடித்துள்ளார்கள் என்றும் அவ்வாறு அடித்த போது பென்னிக்சின் உடம்பிலிருந்து சிதறியுள்ளது என்றும் ரகுகணேஷ் சிவில் டிரஸ்சில் வந்து நீதிபதியிடம் என்ன சொல்வீர்கள் என்று கேட்டுள்ளார் என்றும் பென்னிக்ஸ் போலீஸ் ரொம்ப அடித்தார்கள் என்று சொன்னதற்கு ரகுகணேஷ் இனிமேல் தான் போலீஸ் அடியே இருக்கு என்று சொல்லி ஜெயராஜ், பென்னிக்சை கைதி அறைக்கும், மாடிப்படிக்கும் இருக்கும் சுவற்றில் வைத்து கையை நீட்ட சொல்லி அடித்துள்ளார் என்றும் கையை மேலே தூக்க சொல்லி ஜெயராஜ் முன் பென்னிக்சையும், பென்னிக்ஸ் முன் ஜெயராஜையும் புட்டப்பகுதி, கை ஆகிய இடங்களில் மாறி மாறி அடித்துள்ளார் என்றும் ஏன் சாப்பிட மாட்டீர்களா என்றும் ரகுகணேஷ் அடித்துள்ளார் என்றும் என்றும் ஜெயராஜ், பென்னிக்சை இடைவெளி விட்டு விட்டு சுமார் 1 மணி வரை அடித்துள்ளார்கள் என்றும் 1ம் எதிரி என்ன முருகா, என்ன பாலா சத்தம் கேட்கல என்று அடிக்கடி சொல்லி அடிக்க தூண்டியுள்ளார் என்றும் எதிரிகள் அனைவரும் மாற்றி மாற்றி பிடிக்க ஒவ்வொருத்தராக அடித்துள்ளார்கள் என்றும், விடியற்காலை 1.30 மணி வரை காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் என்ன பாலா, முருகா சத்தம் கேட்கல என்று அடிக்கடி சொல்லியுள்ளார் என்றும் விடியற்காலை சுமார் 2.30 – 3 மணியளவில் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், உதவி ஆய்வாளர் ரகுகணேஷ், பாலகிருஷ்ணன் ஆகியோர் வெளியே கிளம்பியபோது காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் டேபிளில் குப்புற போட்டு அடிப்பது புது டிராக்கா இருக்குல்ல இன்னொரு

ரவுண்டு அடிப்போமா என்று கேட்டார். என்றும் சிபிஐ தரப்பில் நிருபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது,

219. மேலும் ஸ்ரீதர் அடிக்கவில்லை என ரேவதி சாட்சியம் அளித்திருந்தாலும் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், ரகுகணேஷ் மற்றும் பாலகிருஷ்ணன் பென்ஞ்சில் குப்புற படுக்க வைத்து பிட்டத்தில் அடித்ததாக ஜெயராஜ் தன்னிடம் கூறியதாக அசா 46 சாட்சியம் அளித்துள்ளார். மேலும் 1ம் எதிரி என்ன பாலா என்ன முருகா என கூறி மற்ற எதிரிகளை ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை அடிக்க தூண்டியுள்ளார் என்பது ரேவதியின் சாட்சியத்லிருந்து தெரியவருகிறது. மேலும் 1ம் எதிரி காவல் நிலையத்திற்கு ஜெயராஜை அழைத்து சென்றுள்ளார், மேலும் மறுநாள் காலை சுமார் 02.30 மணியளவில் செல்லும் போது டேபிளில் வைத்து அடிப்பது புது ட்ராக்கா இருக்கல என்றும் சொல்லிவிட்டு சென்றுள்ளாார், இதிலிருந்தே 1ம் எதிரியும் ஜெயராஜை அடித்துள்ளார் என்பதும் மற்றும் ஜெயராஜையும் பென்னிக்சை அடிக்க தூண்டி உள்ளார் என்பது நிரூபணம் ஆகிறது.

220. தாமஸ் பென்னிக்சின் நண்பர் என்றும், அதனால் அவர் அடிக்க மாட்டேன் என கூறிவிட்டார் என்றும் சிபிஐ தரப்பு சாட்சியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் எனவே குற்றத்தை செய்ய வேண்டும் என்ற எண்ணம் 8ம் எதிரிக்கு இருந்திருக்கவில்லை என்றும் 8ம் எதிரி தரப்பில் வாதிடகூடும். சித்ரவதை பலமணிநேரம் நிகழ்ந்துள்ளது. அதை தடுக்க 8ம் எதிரி முயற்சித்திருக்கவில்லை. மேலும் 8ம் எதிரியும் மாறி மாறி பிடித்தும் மாறி மாறி அடித்துள்ளார், இதிலிருந்தே மற்ற எதிரிகளுடன் ஒருமித்தகருத்துடன் தான் மேற்படி குற்றச்செயலில் 8ம் எதிரி ஈடுபட்டுள்ளாார் என்பது நன்கு நிருபணமாகின்றது.

எனவே முன்னிடப்பட்டுள்ள சாட்சியங்களின் அடிப்படையில் பார்க்கும் போது ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு ஏற்பட்டுள்ள காயங்கள் அனைத்தையும் 1 முதல் 9 எதிரிகள் ஒருமித்த கருத்துடன் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சைத் தாக்கி ஏற்படுத்தியுள்ளனர் என்றும் மீண்டும் மீண்டும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை அடிக்கும்படி மற்ற எதிரிகளை தூண்டியுள்ளதன் மூலம் 1ம் எதிரியும் ஜெயராஜ் மற்றும்

பென்னிக்சை மற்ற எதிரிகள் அடித்து காயத்தை ஏற்படுத்த உதவியாக வாசல் அருகே நின்று யாரும் வராமல் காவல் காத்திருந்துள்ளதன் மூலம் 8ம் எதிரியும் உடந்தை குற்றவாளிகள் என்ற முறையிலும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு ஏற்பட்டுள்ள காயங்களுக்கும் அதன் பின் விளைவுகளுக்கும் பொறுப்பாவார்கள் என்று சிபிஐ தரப்பில் நிருபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

இந்நிலையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் அவர்களுக்கு மரணத்தை விளைவிக்க போதுமானதா என்பது குறித்து தீர்மானிக்கலாம்.

221. இவ்வழக்கில் மண்மிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவின்படி குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 176 இன் கீழ் நீதி விசாரணை நடத்தி உள்ள கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்கள் அளித்துள்ள அறிக்கையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அவர்களுக்கு ஏற்பட்ட காயங்களினாலும் அதன் பின் விளைவுகளினாலும் இறந்துள்ளனர் என தெளிவுபட தெரிவித்துள்ளார். நீதி விசாரணையின் நோக்கம் இறப்பிற்கான காரணம் என்ன என்பதை கண்டறிவது தான். யார் குற்றம் இழைத்தார்கள் என்பதை கண்டறிவது நீதி விசாரணையில் நோக்கம் அல்ல. எனவே யார் குற்றம் இழைத்தார் என நீதி விசாரணை நடத்தியுள்ள நீதித்துறை நடுவர் அளித்துள்ள பகுதியை ஏற்க இயலாது. எனவே இறப்பிற்கான காரணத்தை மட்டும் பார்த்தாலும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அவர்களுக்கு ஏற்பட்ட காயங்களாலும் அதன் பின் விளைவுகளாலும் இறந்துள்ளதாக அவரது விசாரணையில் தெரியவந்துள்ளது என்பது தெளிவாகின்றது.

222. இறப்பிற்கான காரணம் குறித்து தீர்மானிக்கையில் பிரேத பரிசோதனை நடத்தி உள்ள மருத்துவர்கள் கருத்து மிகவும் இன்றியமையாததாகும்.

223. இவ்வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவின்படி மூன்று மருத்துவர்கள் கொண்ட கொண்ட மருத்துவ குழு அமைக்கப்பட்டு அவர்கள் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் 1 அவர்கள் முன்னிலையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் உடலை பிரேத பரிசோதனை செய்துள்ளனர். அது

குறித்து வீடியோ பதிவும் புகைப்படமும் எடுக்கப்பட்டுள்ளது. ஜெயராஜ் போஸ்ட்மார்டம் போட்டோ அ.சா.பொ–6 ஆகவும் ஜெயராஜ் போஸ்ட்மார்டம் வீடியோஅ.சா.பொ–7ஆகவும் பென்னிக்ஸ் போஸ்ட்மார்டம் போட்டோ அ.சா.பொ–8ஆகவும் பென்னிக்ஸ் போஸ்ட்மார்டம் வீடியோ அ.சா.பொ–9 ஆகவும் குறியீடுசெய்யப்பட்டுள்ளன.

224. ஜெயராஜின் முதற்கட்ட பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ86 ஆகவும் பென்னிக்ஸ்–ன் முதற்கட்ட பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ87ஆகவும் ஜெயராஜ்–ன் பிரேத பரிசோதனை இறுதி அறிக்கை அ.சா.ஆ93 பென்னிக்ஸ்–ன் பிரேத பரிசோதனை இறுதி அறிக்கை அ.சா.ஆ 90ஆகவும் குறியீடுசெய்யப்பட்டுள்ளன.

225. மேற்படி மூவர் மருத்துவர் கொண்ட மருத்துவ குழுவில் இடம் பெற்றுள்ள மருத்துவர் திரு.கலைச்செல்வன் ஆசா43–வது விசாரிக்கப்பட்டுள்ளார் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அவர்களுக்கு ஏற்பட்டிருந்த ஊமைக்காயங்களினால் உண்டான பின்விளைவுகளினால் இறந்திருக்கலாம் என சாட்சியமளித்துள்ளார். அது குறித்து ஜெயராஜ் மற்றும் பெனிக்சின் பிரேத பரிசோதனை இறுதி அறிக்கையிலும் தெளிவுபட குறிப்பிடப்பட்டுள்ளது.

226. இந்நிலையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் இறப்பிற்கு வேறு சிறப்பு காரணங்கள் ஏதேனும் உள்ளதா என்பது குறித்து கண்டறியவும் மேற்படி இருவரது இறப்பிற்கான காரணத்தை ஊர்ஜிதம் செய்யவும் மூன்று மருத்துவர்கள் அடங்கிய பல்நோக்கும் மருத்துவ குழு அமைக்கப்பட்டு அந்த குழு சாத்தான்குளம் அரசு மருத்துவமனை, கோவில்பட்டி அரசு மருத்துவமனை, சாத்தான்குளம் காவல் நிலையம் ஆகியவற்றை பார்வையிட்டும், மருத்துவர் விசாரித்தும் கிளை சிறைச்சாலை அதிகாரிகளையும் சாட்சிகளையும் விசாரித்து இரண்டு அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளனர். அவை அ.சாஆ.121 மற்றும் அ.சா.ஆ.122 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன. அது குறித்து இந்திய அரசின் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் சுகாதார சேவைகள் இயக்குநர் ஜெனரலின் உத்தரவின் பேரில் அமைக்கப்பட்டுள்ள MIMB பல்நோக்கு மருத்துவ குழுவின் தலைவராக செயல்பட்டுள்ள மருத்துவர் திரு.அர்விந்த்குமார் அசா 48வது விசாரிக்கப்பட்டுள்ளதில் ஜெயராஜ் மற்றும்

பென்னிக்ஸ் இருவருக்கும் பிட்டம் மீது பரவலான கன்றிய காயங்கள் இருந்துள்ளது என்றும் கைபாதம் உள்ளங்கால்கள் மற்றும் மொலிகளில் பல்வேறு காயங்கள் இருந்துள்ளது என்றும் மேற்படிகாயங்கள் குச்சி/ தண்டம்/ /லத்தி/தண்டா போன்ற நீண்ட உருளைப் பொருளால் மீண்டும் மீண்டும் மழுங்கிய பலத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது என்றும் காயங்களின் தன்மை, தீவிரம் மற்றும் காயங்களின் வடிவம் ஆகியவற்றை வைத்து பார்க்கும் போது காவல் அடைப்பு சித்திரவதை/முறையாக அடிப்பது அல்லது மற்ற வகையில் காயம் ஏற்பட்டதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன என்றும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இருவருக்கும் ஏற்பட்ட காயங்கள் கூட்டாக இயற்கையின் சாதாரண போக்கில் மரணத்தை ஏற்படுத்தும் அளவுக்கு போதுமானதாக இருந்தன என்றும் மருத்துவர்களிடம் அலட்சியம் எதுவும் இல்லை என்றும் மேற்படி இருவரும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள "பல மழுங்கிய காயங்களினால் ஏற்பட்ட ரத்தக்கசிவு அதிர்ச்சியாலும் அதன் தாமத விளைவுகளாலும் ஏற்பட்டிருக்கலாம் என பல் நோக்கு மருத்துவ குழு முடிவுக்கு வந்துள்ளது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

227. In Sahebrao Mohan Berad –vs– State of Maharashtra,CDJ 2011 SC 271 என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம்,

It is needles to say that the doctor who has examined the deceased and conducted the postmortem is the only competent witness to speack abut the nature of injuries and the cause of death. Unless there is something inherently defective the court cannot substitute its opinion for that of the doctor" என தீர்ப்பளித்துள்ளது

மேற்படி முன்தீர்ப்பின் அடிப்படையில் பார்க்கும் போது பிரேத பரிசோதனை நடத்தியுள்ள மருத்துவர்களே இறப்பிற்கான காரணம் குறித்து கருத்து தெரிவிக்க தகுதியான நபர்கள் என்பதும் தகுந்த சாட்சியங்களின்றி அவர்களுடைய கருத்துக்கு மாற்றுக்கருத்தை எட்டமுடியாது என்பதும் தெரியவருகிறது.

228. இந்நிலையில் ஜெயராஜிற்கு சர்க்கரை வியாதியும், கொப்புளமும் இருந்ததாகவும் பென்னிக்சிற்கு இதய கோளாறு, நுரையீரல் பிரச்சனை கல்லீரல் பிரச்சனையும், கல்லடைப்பும், சர்க்கரை நோய் இருந்ததாகவும் சாட்சியங்கள் முன்னிடப்பட்டிருந்தாலும் சர்க்கரை வியாதியாலோ கொப்புளத்தாலோ இதய கோளாறாலோ நுரையீரல் பிரச்சனையாலோ கல்லீரல் பிரச்சனையாலோ கல்லடைப்பாலோ ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இறந்தததாக பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. சர்க்கரை வியாதியாலோ கொப்புளத்தாலோ இதய கோளாறாலோ நுரையீரல் பிரச்சனையாலோ கல்லீரல் பிரச்சனையாலோ கல்லடைப்பாலோ ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இறந்தததாக அ.சா.43 மற்றும் அ.சா.48 குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. இந்நிலையில் பிரேத பரிசோதனை நடத்தியுள்ள மூன்று மருத்துவர்கள் கொண்ட மருத்துவ குழு மற்றும் MIMB பல்நோக்கு மருத்துவ குழுவை சார்ந்த மூன்று மருத்துவர்கள் கொண்ட மருத்துவ குழு ஆக மொத்தம் ஆறு மருத்துவர்கள் அளித்துள்ள கருத்துருக்களுக்கு முரணாக ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள காயங்களாலும் அதன் பின்விளைவுகளாலும் இறக்கவில்லை என எதிரிகள் தரப்பில் வாதிட்டுள்ளது ஏற்புடைய வாதமாக தோன்றவில்லை.

229. எனவே ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இருவரும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள "பல மழுங்கிய காயங்களினாலும் அதனால் ஏற்பட்ட ரத்தக்கசிவு மற்றும் அதிர்ச்சியின் தாமத விளைவுகளாலும் இறந்துள்ளனர் என்றும் அவர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் கூட்டாக இயற்கையின் சாதாரணபோக்கில் மரணத்தை ஏற்படுத்தும் அளவுக்கு போதுமானதாக இருந்தன என்றும் சிபிஐ தரப்பில் நிருபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

<u>இனி ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் மரணம் கொலையா என்பது குறித்து தீர்மானிப்போம்</u>

230. ஒரு மரணம் கொலையா என முடிவு செய்யப்படுவதற்கு முன் எதிரிகளின் செயல் இதச பிரிவு 299 கீழ் அமைந்து வருகிறதா என்பதை முதலில் கவனிக்க வேண்டும்

அதன் பின் அது இதச பிரிவு 300–ல் அடங்கி வருகிறதா என்பதை கவனிக்க வேண்டும் அதன் பின் 300க்கு கொடுக்கப்பட்டுள்ள விதிவிலக்குகளுக்கு உட்பட்டு அது அமைந்து வருகிறதா என்பதை கவனிக்க வேண்டும் மேலும் மேற்படி வழக்கு இதச பிரிவு 76லிருந்து 106 க்குள் குறிப்பிடப்பட்டுள்ள விதிவிலக்குகளுக்கு உட்பட்டு அமைந்து வருகிறதா என்பதையும் கவனிக்க வேண்டும் அதன் பிறகு தான் அது கொலையா இல்லையா என்பதை தீர்மானிக்க முடியும்,

299. Culpable homicide.–

Whoever causes death by doing an act with the intention of causing death, or with the intention of causing such bodily injury as is likely to cause death, or with the knowledge that he is likely by such act to cause death, commits the offence of culpable homicide. Illustrations

மரணத்தை உண்டாக்க வேண்டும் என்ற உட்கருத்துடன் ஒரு செயலைப் புரிதல் அல்லது மரணம் விளைவிக்கக் கூடிய உடல் காயத்தை உண்டு பண்ண வேண்டும் என்ற உட்கருத்துடன் ஒரு காரியத்தைச் செய்தல் அல்லது தன்னுடைய செய்கையால் மரணம் சம்பவிக்கும் என்று தெரிந்தும் அந்த செயலை புரிதல் ஆகியவற்றால் மரணம் ஏற்பட்டால், அது மரணம் விளைவிக்கும் குற்றமாகும்

a) A lays sticks and turf over a pit, with the intention of thereby causing death, or with the knowledge that death is likely to be thereby caused. Z believing the ground to be firm, treads on it, falls in and is killed. A has committed the offence of culpable homicide

(b)A knows Z to be behind a bush. B does not know it A, intending to cause, or knowing it to be likely to cause Z's death, induces B to fire at the bush. B fires and kills Z. Here B may be guilty of no offence; but A has committed the offence of culpable homicide.

(c)A, by shooting at a fowl with intent to kill and steal it, kills B who is behind a bush; A not knowing that he was there. Here, although A was doing an unlawful act, he was not guilty of culpable homicide, as he did not intend to kill B, or to cause death by doing an act that he knew was likely to cause death.

Explanation 1.– A person who causes bodily injury to another who is labouring under a disorder, disease or bodily infirmity, and thereby accelerates the death of that other, shall be deemed to have caused his death.

Explanation 2.– Where death is caused by bodily injury, the person who causes such bodily injury shall be deemed to have caused the death, although by resorting to proper remedies and skilful treatment the death might have been prevented.

விளக்கம் – 2: உடல் காயத்தால் மரணம் உண்டாக்கினால் காயத்தை உண்டாக்கியவர் அந்த மரணத்தை விளைவித்ததாகக் கருதப்படுவார் . காயம்பட்டவுடன் மருத்துவ உதவியை நாடிச் சென்றிருந்தால் மரணம் விளைந்திருக்காது என்றாலும், மரணத்தின் பொறுப்பு அவரையே சாரும்

Explanation 3.– The causing of the death of child in the mother's womb is not homicide. But it may amount to culpable homicide to cause the death of a living child, if any part of that child has been brought forth, though the child may not have breathed or been completely born.

இதச பிரிவு 299 இரண்டாம் பகுதின் படி பார்க்கும்போது கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஒருவருக்கு இல்லை என வைத்துக் கொண்டாலும் காயம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் காயத்தை ஏற்படுத்தியிருந்து அந்த காயங்கள் இறப்பை ஏற்படுத்துவதற்கு போதுமானதாக இருக்கும் பட்சத்தில் அந்த நபர் பிரிவு 299 கீழான குற்றத்தை புரிந்தவராகவே கருதப்படுவார் மேலும் கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஒருவருக்கு இல்லை என வைத்துக் கொண்டாலும் இதச பிரிவு 299ன் மூன்றாம் பகுதியின் படி தனது செயலால் ஒரு நபருக்கு மரணம் ஏற்படக்கூடும் என்ற அறிவு எதிரிக்கு இருந்தாலே அவர் இதச 299 ன் கீழ் குற்றத்தை புரிந்தவராகவே கருதப்படுவார்

231. In Anda and Others –vs– State of Rajasthan–(1966 AIR SC 148) என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம்

When the injuries intended to be caused were sufficient in the ordinary course of nature to cause death the assault is murderous and it must have been apparent to all the assailants that the injuries they were inflicting in furtherance of the common intention of all were sufficient in the ordinary course of nature to cause death. In these circumstances it cannot be said that the offence was not murder but only culpable homicide not amounting to murder. என தீர்ப்பளித்துள்ளது.

மேற்படி முன்தீர்ப்பின் அடிப்படையில் பார்க்கும் போது ஏற்படுத்த விளைந்த காயங்கள் இயற்கையின் சாதாரண போக்கில் மரணத்தை ஏற்படுத்த போதுமானதாக இருந்தால் அது கொலை ஆகும் என்பதும் மரணத்தை விளைவிக்கும் குற்றம் என்று அதை கூறமுடியாது என்பதும் தெளிவாகிறது. இந்த வழக்கில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு ஏற்பட்டுள்ள காயங்கள் இயற்கையின் சாதாராண போக்கில் மரணத்தை விளைவிக்க போதுமானது என பல்நோக்கு மருத்துவர் குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் அடிப்படையில் பார்க்கும்போது ஜெயராஜ் மற்றும் பென்னிக்வின் இன் மரணம் கொலை என சிபிஐ தரப்பில் வாதிட்டுள்ளது ஏற்புடைய வாதமாகவே உள்ளது

232. In Virsa Singh –vs– State of Punjab AIR 1958 SC 465 என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம்

To bring a case U/s.300 thirdly

(a) First, it must be established, quite objectively, that a bodily injury is present.

(b) Secondly the nature of the injury must be proved; These are purely objective investigations.

(c)Thirdly, it must be proved that there was an intention to inflict that particular bodily injury. That is to say, that it was not accidental or unintentional, or that some other kind of injury was intended.

(d) Once these three elements are proved to be present, the enquiry proceeds further and.

(e)Fourthly, it must be proved that the injury of the type just described made up of the three elements set out above is sufficient to cause death in the ordinary course of nature. This part of the enquiry is purely objective and inferential and it has nothing to do with the intention of the offender.

Once these four elements are established by the prosecution (and, of course, the burden is on the prosecution throughout) the offence is murder under section 300 "thirdly". It does not matter that there was no intention even to cause an injury of a kind that is sufficient to cause death in the ordinary course of nature (not that there is any real distinction between the two). It does not even matter that there is no knowledge that an act of that kind will be likely to cause death. Once the intention to cause the bodily injury actually found to be present is proved, the rest of the enquiry is purely objective and the only question is whether, as a matter of purely objective inference, the injury is sufficient in the ordinary course of nature to cause death. No one has a licence to run around inflicting injuries that are sufficient to cause death in the ordinary course of nature and claim that they are not guilty of murder. If they inflict injuries of that kind, they must face the consequences; and they can only escape if it can be shown, or reasonable deducted, that the injury was accidental or otherwise unintentional. என தீர்ப்பளித்துள்ளது ,

மேற்படி முன்தீர்ப்பின் அடிப்படையில் பார்க்கும் போது ஒரு குற்றம் இதச பிரிவு 300ன் வரையறைக்குள் அமைந்துவரவேண்டும் எனில் இறந்தவர்களுக்கு உடலில் காயம் இருந்ததா? அதன் தன்மை என்ன? காயம் விளைவிக்க வேண்டும் என்ற எண்ணம் எதிரிகளுக்கு இருந்ததா? வேறு காயம் எதையும் ஏற்படுத்த எண்ணியிருந்தார்களா? மேற்படி காயங்கள் இயற்கையின் சாதாரண போக்கில் மரணத்தை விளைவிக்க போதுமானதா? என்பதே தீர்மானிக்க வேண்டிய காரணிகள் ஆகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

Step –: I இந்த வழக்கை பொருத்தவரை ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு உடலில் காயங்கள் இருந்துள்ளது பிரேத விசாரணை அறிக்கையிலும் பிரேத பரிசோதனை அறிக்கையிலும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. பிட்டத்திலும் உடலிலும் ஏற்பட்டுள்ள காயங்கள் சாதாரண காயங்கள் போல்தோன்றினாலும் பிரேத பரிசோதனை குறித்த வீடியோ மற்றும் புகைப்படங்களையும் பிரேத விசாரணை அறிக்கை மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கையையும் மருத்துவர்களது சாட்சியத்தில் பரிசீலித்து பார்க்கும் போது பலமுறை அடித்ததால் அது ஏற்பட்டுள்ளது என்பதும் மேற்படி காயங்கள் தீவிரமான காயங்கள் என்பதும் தெரியவருகிறது.

Step–: II. இருவரது பிரேத பரிசோதனை குறித்த வீடியோ மற்றும் புகைப்படங்களை பரிசிலித்து பார்க்கும் போது அந்த காயங்கள் மரணம் விளைவிக்க தக்க அளவிற்கு கொடூர காயங்களாக உள்ளன எனவே இதச பிரிவு 320 (8) ன் வரையறையின்படி பார்த்தாலும் அவை மரணம் விளைவிக்கும் கொடுங்காயங்கள் என்பதில் ஐயம் எதுவும் இல்லை.

Step :–III இனி மேற்படி காயங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் எதிரிகள் ஏற்படுத்தியுள்ளனரா என்பது அடுத்த தீர்மானிக்க வேண்டிய விஷயமாகும்.

a) In Rajkishore Purohit Vs Stat Of Mp reported in( 2017) 9 SCC 483 It has been held that absence of any overt act of assault , exhortation or possession of weapon cannot be singularly determinative of absence of Common intention,

b) In Balu @ Balasubramaniam and another Vs State (UT ) of Pondicherry reported in 2016 15 SCC 471 it has been held that for deciding applicability of section 34 totality of the circumstances must be taken n to consideration

<u>ஒரு நபருடைய எண்ணத்தை அவருடைய சொல் செயல் மற்றும் நடத்தையின் அடிப்படையில் தீர்மானிக்க முடியும். இவ்வழக்கில்</u>

1) போலீசார் இராத்திரி முழுவதும் தன்னை ஈவு இரக்கம் பார்க்காமல் அடித்துவிட்டார்கள் என்று தன் அத்தான் சொன்னதாக அசா.7 சாட்சியம் அளித்துள்ளார்.

2) 10 நிமிடம் இடைவெளி விட்டு விட்டு அடித்தார்கள் என அசா.44 சாட்சியம் அளித்துள்ளர்.

3) 238.3. சாத்தான்குளம் போலீஸ்காரர்கள் லாக்அப்பில் கையை பிடித்து வைத்துக் கொண்டு பின்னால் அடித்ததாகவும், பின்னால் அடித்ததால் தனக்கு இரத்தம் வருவதாகவும் இருநூறு அடிக்கு மேல் அடித்திருப்பார்கள் என்றும் விலா எலும்பில் வலிப்பதாகவும் மூச்சு விட முடியவில்லை, என்றும் பென்னிக்ஸ் சொன்னார் என்றும் கையை இரண்டையும் கட்டி, மேலே தூக்கி வைத்து மண் வைத்து, பைப்பால் அடித்ததாக சொன்னார் என்றும் அ.சா.17 சாட்சியம் அளித்துள்ளார். 23–9–20 மற்றும் 6–3–21ம் தேதி பல்நோக்கு மருத்துவ குழு அறிக்கைகளில் நாலாவது வினாவிற்கு பதில் அளிக்கையில் வலது மணிக்கட்டு மூட்டு அருகே காயம் இருந்ததாகவும், கயிற்றால் கட்டப்பட்டதற்கான அடையாளங்கள் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது கையை இரண்டையும் கட்டி, மேலே தூக்கி வைத்து மண் வைத்து, பைப்பால் அடித்ததாக பென்னிக்ஸ் சொன்னதாக அ.சா.17 அளித்துள்ளசாட்சியத்தை ஒத்துரைப்பதாக உள்ளது.

4) என்னிடமே இவ்வளவு திமிராக பேசுவாயா என்று கூறி தன்னுடைய மகனையும் அதே பெஞ்சில் குப்புற படுக்க வைத்து அடித்து விட்டார்கள் என்றும், ஆய்வாளர் ஸ்ரீதர், ஜெயராஜ், பென்னிக்சை அடிக்க சொன்னதாகவும், விடிய விடிய குப்புற படுக்க வைத்து அடிக்க சொன்னதாகவும் தன்னிடம் சொன்னார் என்றும், மேலும் தாங்கள் கெஞ்சியும் தங்களை இன்ஸ்பெக்டர் அடிங்க என்று அவர்களிடம் சொன்னதன் பேரில் அவர்கள் அடித்தார்கள் என்று ஜெயராஜ் சொன்னதாகவும், அ.சா.46 சாட்சியம் அளித்துள்ளார்.

5)அடிக்காதீர்கள் என்றதற்கு எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் என்ன பிரச்சனை வந்தாலும் எனது சொத்தை விற்று தான் பார்த்துக் கொள்வேன் என்று சொன்னதாக அ.சா.47 சாட்சியம் அளித்துள்ளார்.

6) மேலும் சம்பவம் நடக்கும் போது காவல்நிலையம் பூட்டப்பட்டிருந்தது என்றும் அ.சா.47 சாட்சியம் அளித்துள்ளளார்.

7) 1ம் எதிரி உள்ளே இருந்து தூண்டிவிட்டு என்ன முருகா, என்ன பாலா சத்தம் கேட்கல என்று அடிக்கடி சொல்லி அடிக்க சொன்னார் என்றும் அசா 47 சாட்சியமளித்துள்ளளார்.

8) நீ செத்தாலும் பரவாயில்லை, என் சொத்தை விற்றாவது நான் வெளியே வந்துவிடுவேன் என்று கூறி எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் பென்னிக்சை அடித்ததாக அ.சா. 44 சாட்சியமளித்துள்ளார்.

9) ரகுகணேஷ் போலீஸ் அடிச்சாங்களா இனிமேல் தான் போலீஸ் அடியே இருக்கு என்று சொல்லி ஜெயராஜ், பென்னிக்சை அடித்ததாக அ.சா.47 சாட்சியமளித்துள்ளளார்.

10), காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் அவர்களை டேபிளில் குப்புற போட்டு அடிப்பது புது டிராக்கா இருக்குல்ல இன்னொரு ரவுண்டு அடிப்போமா என்று கேட்டார் என்றும் அசா 47 சாட்சியமளித்துள்ளளார்.

11) முருகன் போலீஸ் வெளியே வரும் போது கேட்டதற்கு ப்ரஸ் பீஸ் கிடைத்துள்ளது, அடிப்பதற்கு டிரைனிங் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார் என்றும் அ.சா.9 சாட்சியம் அளித்துள்ளார்.

12) சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண் 41/2020 கைதி எண் 3603 சுந்தரலிங்கம் என்பவருக்கு தொடையிலும் இரண்டு புட்டங்களிலும் அடிபட்ட இரத்தக்காயம் இரண்டு கைகளில் அடிபட்ட வீக்க காயம் இருந்துள்ளது மேலும் சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண் 237/2020 கைதி எண் 3608 இராஜாசிங் என்பவருக்கு வலது புட்டத்தில் அடிபட்ட பழைய காயம் ஆறாத நிலையில் 4 செ,மீ

நீளம் 3 செ,மீ அகலம் 2 செ.மீ ஆழம் இருந்துள்ளது தெரியவருகின்றது, தன்னை எஸ்.ஐ பாலகிருஷ்ணன், ரகுகணேஷ் ஆகியோர் இதே போல் தான் அடித்ததாகவும் அப்போது ஆய்வாளர் ஸ்ரீதர் இதேபோல் தான் தூண்டி விட்டதாகவும் அசா 46 சாட்சியம் அளித்துள்ளார். இது சாத்தான்குளம் காவல் நிலையத்தில் கைதிகளை பிட்டத்தில் அடித்து கொடுமைபடுத்துவதை சாத்தான்குளம் போலீசார் ஒரு வழக்கமாகவே கொண்டிருந்துள்ளனர் என்பதும் அது விபத்து அல்ல என்பதும் தெரிய வருகிறது.

13) அடித்தபிறகு காவல் நிலையத்தைவிட்டு செல்லும்போது டேபிளில் குப்புற போட்டு அடிப்பது புது டிராக்கா இருக்குல்ல இன்னொரு ரவுண்டு அடிப்போமா என்று ஸ்ரீதர் சொன்னதாக அசா 47 சாட்சி அளித்துள்ளார்.

14) மேலும் 19–6–20 மற்றும் 20–6–20 தேதிக்கு இடைப்பட்ட இரவில் இடைவெளி விட்டு விட்டு எதிரிகள் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை பலமுறை அடித்து சித்திரவதை செய்துள்ளனர்,

15) ஜட்டியை கழற்றி பிட்டத்தில் அடித்துள்ளனர்.

16) வாசலில் 8ம் எதிரியை காவலுக்கு நிறுத்தி வைத்து அடித்துள்ளனர்.

17) பஜாரில் எப்படியிருக்கிறார்கள் என்று 1ம் எதிரி கேட்டதற்கு கப்சிப் என இருக்கிறார்கள் என 2ம் எதிரி சொன்னதாக ரேவதி சாட்சியமளித்துள்ளார், இதிலிருந்தே அதிகாரதோரணையுடன் இருக்வேண்டும் பொதுமக்கள் தங்களை கண்டால் பயப்படவேண்டுமென்ற எண்ணம் எதிரிகளுக்கு இறந்துள்ளதும் தெரியவருகின்றது.

மேலும் நீண்ட நேரம் அடித்துள்ளதும் கதவைபூட்டி காவலுக்கு ஆள்வைத்து இடைவேளிவிட்டு இடைவெளிவிட்டு தோல்உரியும் அளவிற்கு பலநூறு அடிகள் அடித்துள்ளதும் கையை கட்டி வைத்து அடித்துள்ளதையும் வைத்து பார்க்கும்போது ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு அடித்து காயத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற ஒத்த எண்ணத்திலேயே எதிரிகள் அனைவரும் அடித்து காயப்படுத்தப்பட்டுத்தியுள்ளனர்

என்பதும் மேலும் 1ம் எதிரி அடிக்க தூண்டியும் 8ம் எதிரி யாரும் வராமல் காவல்காத்து அடிக்க உதவியும் உடந்தையாக இருந்துள்ளனர் என்பதும் தெளிவுபட நிரூபணமாகிறது.

மேலும் மேற்படி காயங்கள் கூட்டாக இயற்கையின் சாதாரண போக்கில் மரணத்தை விளைவிக்க போதுமானது என பல்நோக்கு மருத்துவர் குழு அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுகுறித்து அ.சா.48ம் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியங்களை கருத்தில் கொண்டு பார்க்கும் போது ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் மரணம் கொலை என சிபிஐ தரப்பில் வாதிட்டுள்ளது ஏற்புடைய வாதமாகவே உள்ளது.

233. In State of Andhra Pradesh –vs– Rayavarapu Punnayya and another 1977 SCR 1 601 என்ற வழக்கில்

உடலில் முக்கிய உறுப்புகளில் குறிப்பிட்ட அளவில் காயம் இல்லாதபோது லத்தி போன்ற ஆயுதம் உபயோகப்படுத்தப்பட்ட வழக்குகளில் இதச பிரிவு 299 மற்றும் 300 குறித்து வேறுபடுத்தி காட்டுகையில் மாண்புமிகு உச்சநீதிமன்ற நீதியரசர் திரு.ஹிதயதுல்லா அவர்கள் கீழ்கண்டவாறு விளக்கி கூறியுள்ளார்.

If the injuries were not on a vital part of the body and no weapon was used which can be described as specifically dangerous It cannot, therefore, be said that there was an intention to cause the death At the same time, it is obvious that his hands and legs were smashed and numerous bruises and lacerated wounds were caused. The number of injuries shows that everyone joined in beating him. It is also clear that the assailants aimed at breaking his arms and legs. Looking at the injuries caused to Bherun in furtherance of the common intention of all it is clear that the injuries intended to be caused were sufficient to cause death in the ordinary course of nature even if it cannot be said that his death was intended. This is sufficient to bring the case within thridly of Section.300". என தீர்பளித்துள்ளார்கள்.

இந்த வழக்கிலும் மரணத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் எதிரிகளுக்கு இல்லை என வைத்துக்கொண்டாலும் இரவு முழுவதும் இடைவெளிவிட்டு

இடைவெளிவிட்டு அடித்து சித்ரவதை செய்துள்ளதை கருத்தில் கொண்டு பார்க்கும் போது மேற்படி காயங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடனேயே எதிரிகளால் அவை ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பது நிரூபணமாகிறது. மேலும் மேற்படி காயங்கள் கூட்டாக இயற்கையின் சாதாரண போக்கில் மரணத்தை விளைவிக்க போதுமானது என்றும் நிருபிக்கப்பட்டுள்ளது. அ.சா.பொ.21 மற்றும் 22 ஆயுதங்களால் எதிரிகள் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை அடித்ததாக அ.சா.47 ரேவதி சாட்சியமளித்துள்ளார். அந்த ஆயுதங்களில் சார்பாய்வாளர் அறையில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ள லத்தி Q-20 ஆக குறியீடு செய்யப்பட்டு மரபணுபரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதில் சார்பு ஆய்வாளரது அறையில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ள லத்தி Q-20-ல் மனித இரத்தம் இருப்பதாக தடய அறிவியல் ஆய்வறிக்கை அ.சா.ஆ.244-ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் மற்றொரு தடய அறிவியல் அறிக்கை அ.சா.ஆ.246-ல் Q-20 லத்தியில் உள்ள இரத்தக்கறையில் உள்ள மரபணுவும் பென்னிக்சின் ஆடை Q-16-1 மற்றும் Q-16-2ல் உள்ள இரத்தக்கறையில் உள்ள மரபணுவும் செல்வராணியின் மாதிரி இரத்தத்தில் உள்ள மரபணுவும் ஜெயராஜின் ஆடைகள் Q-19-1 Q-19-2 -ல் உள்ள இரத்தக்கறைகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட மரபணுவும் Q-13-1, Q-14-1, Q-9-1, Q-9-4, Q-12-2, Q-6 பெட்சீட், Q-4 லுங்கியில் உள்ள இரத்தத்தில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட மரபணுவும் ஒத்துபோவதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே உடலில் முக்கிய உறுப்புகளில் குறிப்பிட்ட அளவில் காயம் இல்லாத போதும் லத்தி போன்ற ஆயுதம் உபயோகப்படுத்தப்பட்டபோதும் மேற்படி காயங்கள் கூட்டாக இயற்கையின் சாதாரண போக்கில் மரணத்தை விளைவிக்க போதுமானது என நிருபிக்கப்படடுள்ளதால் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் மரணம் கொலைதான் என்பது தெளிவுபட நிருபணமாகின்றது.

234. In Mritunjoy Biswas Vs. Pranab alias Kuti Biswas & another, AIR 2013 SC 3334 என்றவழக்கில் When there is ample unimpeachable ocular evidence corroborated by medical

evidence, mere non–recovery of weapon from the accused does not affect the prosecution case relating to murder. என மாண்புமிகு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இவ்வழக்கிலும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு ஏற்பட்டுள்ள காயங்கள் குறித்து கண்ணுற்றுள்ள சாட்சிகள் அ.சா.20, 26, 44, 47, சாட்சியம் அளித்துள்ளனர், அவர்களது சாட்சியங்களும் மருத்துவ சாட்சியங்கள் மற்றும் தடய அறிவியல் சாட்சியங்களும் ஒத்துப் போய் உள்ள நிலையில் மற்ற லத்திகளில் ரத்தக்கரை இல்லை என்பது சிபிஐ தரப்பு வழக்கை எவ்வகையிலும் பாதிப்பதாக இல்லை என்றே இந்த நீதிமன்றம் தீர்மானிக்கின்றது

235. In Nankaunoo –vs– State of Uttar Pradesh, (2016) 3 SCC 317 என்ற வழக்கில்

That regarding intention to cause injury is concerned the prosecution has to prove from the given facts and circumstances that the intention of the accused was to cause that particular injury and regarding whether said injury was sufficient in ordinary course of nature to caus death whether said injury/injuries are sufficient to cause death, an objective enquiry has to be conducted and it is a matter of inference or deduction from the particulars of the injury.என மாண்புமிகு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது

இவ்வழக்கில் இரவு 08.00 மணியிலிருந்து காலை சுமார் 02.30 வரை பலமுறை எதிரிகள் தாக்கி காயத்தை ஏற்படுத்தியுள்ளனர். ஜட்டியுடன் காவல் நிலையத்தில் வைத்து அடித்து கொடுமைப்படுத்தியுள்ளனர் எஸ்.ஐ.பாலகிருஷ்ணன் அடிக்கும் போது நீ செத்தாலும் பரவாயில்லை, என் சொத்தை விற்றாவது நான் வெளியே வந்துவிடுவேன் என்று கூறி அடித்துள்ளார், என்ன முருகா, என்ன பாலா சத்தம் கேட்கல என்று 1ம் எதிரி அடிக்கடி சொல்லி அடிக்க தூண்டியுள்ளார், இனிமேல் தான் போலீஸ் அடியே இருக்கு என்று சொல்லி ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை அடித்துள்ளார், காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் அவர்கள் டேபிளில் குப்புற போட்டு அடிப்பது புது டிராக்கா இருக்குல்ல இன்னொரு ரவுண்டு அடிப்போமா என்று கேட்டுள்ளார். அடிக்க புது பீஸ் கிடைத்துள்ளதாக முருகன் கூறியுள்ளார். மேலும் அ.சா.46ன்

சாட்சியத்தை பரிசிலித்து பார்க்கும் போது ஸ்ரீதர் தூண்டுதலின் பேரில் பாலகிருஷ்ணன் மற்றும் ரகுகணேஷ் தன்னை பிட்டத்தில் அடித்து காயப்படுத்தியதாக அ.சா.46 சாட்சியம் அளித்துள்ளார். இது எதிரிகள் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை அடித்து காயப்படுத்த வேண்டும் என்ற ஒருமித்த எண்ணத்துடன் செயல்பட்டுள்ளனர் என்பதை நிருபிப்பதாக உள்ளது.

தரையில் உருண்டு பிரண்டதால் பிட்டத்தில் காயம் ஏற்பட்டதாக எதிரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் முன்னிடப்பட்டுள்ள சிசிடிவி காட்சி பதிவுகளில் இருந்து 19 –6 –20 ஆம் தேதி இரவு 7:30 மணிக்கோ 9:15 மணிக்கோ ஜெயராஜ் மற்றும் பெனிக்ஸ் தரையில் உருண்டு புரண்டதாக காட்சி பதிவு எதுவும் காணப்படவில்லை. குறிப்பாக ஜெயராஜ் 19–6 –20 ஆம் தேதி இரவு ஆய்வாளர் வாகனத்தை நோக்கி செல்கையில் அவரது பிட்டத்தில் எவ்வித காயமும் காணப்படவில்லை அதனைத் தொடர்ந்து பென்னிக்ஸ் அவருடைய நண்பருடன் காலை மேலே தூக்கிப்போட்டு இருசக்கர வாகனத்தில் செல்கின்ற காட்சியை பரிசீலித்து பார்க்கும்போது அவருக்கும் அப்போது பிட்டத்தில் காயம் ஏதும் ஏற்பட்டதாக தெரியவில்லை. இதிலிருந்து மேற்படி காயங்களுக்கு எதிரிகள் தரப்பில் கூறப்பட்டுள்ள விளக்கம் பொய்யானது என்பது நன்கு நிருபணம் ஆகிறது, இந்நிலையில் வேறு வகையில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் எதிரிகள் தரப்பில் நிருபிக்கப்படவில்லை.

236. In State of M.P. v. Shyamsunder Trivedi, (supra); State of U.P. v. Ram Sagar Yadav, (1985) 1 SCC 552 என்ற வழக்கில் If there is evidence to show that the accused has fabricated evidence to absolve himself from the offence, that circumstance will also point towards his guilt. மாண்புமிகு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது

இந்நிலையில் முன்னிடப்பட்டுள்ள சாட்சியங்களின் அடிப்படையில் பார்க்கும்போது ஜெயராஜ் மற்றும் பென்னிசுக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் குறித்து

பொய்யான தகவலை எதிரிகள் தெரிவித்துள்ளதையும் பரிசீலித்து பார்க்கும்போது அது எதிரிகள் மீதான குற்றச்சாட்டை நிருபிப்பதாகவே உள்ளது

237. இவ்வழக்கு சங்கதிகள் மட்டைப்பந்து வீரர் சித்து வழக்கிலிருந்து வேறுபட்டதாக உள்ளது. மட்டைப்பந்து வீரர் சித்து வழக்கில் கையால் அடித்ததாகவும் ஆயுதம் உபயோகப்படுத்தப்படவில்லை என்றம் இறப்பிற்கான காரணம் மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்விலலை என்றும் குறிப்பிடப்படவில்லை. இந்த வழக்கில் லத்தியால் அடித்ததாக நிரூபிக்கப்பட்டுள்ளது. MIMB அறிக்கையில், கையில் கட்டி தொங்கவிட்டதற்கான தடயம் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இறப்பிற்கான காரணம் குறித்து பிரேத பரிசோதனை நடத்தியுள்ள 3 மருத்துவர்களும் பல்நோக்கு மருத்துவ குழுவை சார்ந்த 3 மருத்துவர்களும் இருவரது இறப்பு பலதரப்பட்ட மழுங்கிய காயங்களாலும் அதனால் ஏற்பட்ட இரத்தப்போக்கு மற்றும் அதிர்ச்சியாலும் அதன் பின் விளைவுகளாலும் மரணம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மட்டைப்பந்து வீரர் சித்து வழக்கின் தீர்ப்பு இந்த வழக்கின் சங்கதிகளுக்கு பொருந்துவதாக இல்லை என இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

238. எதிரிகள் தரப்பில் முன்னிடப்பட்டுள்ள 2024 (SC) 554 வழக்கில் கண்ட சங்கதிகளும் இவ்வழக்கில் கண்ட சங்கத்திகளும் வெவ்வேறானவை. இந்த வழக்கில் ஜெயராஜ் மற்றும் பெனிக்சின் அலறல் சத்தத்தை வெளியில் இருந்துள்ள நபர்கள் கேட்டுள்ளனர் எதிரிகள் ஜெயராஜ் மற்றும் பெனிக்சைத் தாக்கி காயப்படுத்தியது குறித்தும் 1ம் எதிரி தூண்டியது குறித்தும் 8ம் எதிரி உதவியது குறித்தும் கண்ணுற்ற சாட்சிகள் சாட்சி அளித்துள்ளனர். எதிரிகள் மாறி மாறி பிடித்தும் மாறி மாறி அடித்தும் உள்ளார். மேற்படி கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியம் அது மருத்துவ சாட்சியங்கள் மூலமும் தடை அறிவியல் சாட்சிகள் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன எனவே 2024 (SC) 554 முன் தீர்ப்பு இந்த வழக்கி பொருந்துவதாக இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

239. எதிரிகள் தரப்பில் முன்னிடப்பட்டுள்ள The State of Haryana –vs– Chandvir and other வழக்கின் சங்கதி சூழ்நிலைகளும் இந்த வழக்கின் சங்கதி சூழ்நிலைகளும் வெவ்வேறானவை. மேற்படி வழக்கு, திடீரென எழுந்த சண்டை சம்பந்தமான வழக்கு, அதில் எதிரிக்கும் காயம் ஏற்பட்டுள்ளது. அது விளக்கப்படவில்லை, இவ்வழக்கில் அவ்வாறான சூழ்நிலை இல்லை எனவே மேற்படி முன் தீர்ப்பு இந்த வழக்கிற்கு சங்கதி சூழ்நிலைக்கு பொருந்துவதாக இல்லை என இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

240. எதிரிகள் தரப்பில் முன்னிடப்பட்டுள்ள (2025) 2 SCC (Cri) 222 வழக்கின் சங்கதி சூழ்நிலைகளும் இந்த வழக்கின் சங்கதி சூழ்நிலைகளும் வெவ்வேறானவை மேற்படி வழக்கில் இறப்பு தீவிர காச நோயால் கூட ஏற்பட்டிருக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது இவ்வழக்கில் அவ்வாறான சூழ்நிலை இல்லை எனவே மேற்படி முன் தீர்ப்பு இந்த வழக்கிற்கு சங்கதி சூழ்நிலைக்கு பொருந்துவதாக இல்லைஎன இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ,

241 . எதிரிகள் தரப்பில் முன்னிடப்பட்டுள்ள (2025) 2 SCC (Cri) 552,வழக்கின் சங்கதி சூழ்நிலைகளும் இந்த வழக்கின் சங்கதி சூழ்நிலைகளும் வெவ்வேறானவை மேற்படி வழக்கில் இறப்பிற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை ஆனால் இவ்வழக்கில் இறப்புக்கான காரணம் குறித்து பிரேத பரிசோதனை செய்த மூன்று மருத்துவர் கொண்ட மருத்துவர் குழுவும் பல்நோக்கு மருத்துவ குழுவை சார்ந்த மூன்று மருத்துவர்கள் இறப்பு காண காரணம் குறித்து விளக்கிக் கூறியுள்ளனர் எனவே எனவே மேற்படி முன் தீர்ப்பு இந்த வழக்கிற்கு சங்கதி சூழ்நிலைக்கு பொருந்துவதாக இல்லை என இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

242. எதிரிகள் தரப்பில் முன்னிடப்பட்டுள்ள (2018) 3 MLJ (Crl) 727 (SC) வழக்கின் சங்கதி சூழ்நிலைகளும் இந்த வழக்கின் சங்கதி சூழ்நிலைகளும் வெவ்வேறானவை, மேற்படி வழக்கில் ஆயுதம் எதுவும் பயன்படுத்தப்படவில்லை ஒரே ஒரு முறை தான் தாக்கப்பட்டுள்ளார் இறப்பிற்கான காரணம் தெளிவுபடுத்தப்படவில்லை, இவ்வழக்கில்

ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்க்கு தீவிர காயங்கள் ஏற்பட்டுள்ளன அவை லத்தியால் ஏற்படுத்தப்பட்டதாகவும் மரபணு சாட்சியம் மூலமும் நிரூபிக்கப்பட்டுள்ளது இறப்பிற்கான காரணம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது, எனவே மேற்படி முன் தீர்ப்பும் 2023 (SC) (Online) (MAD) 1356, 2025 (SC) 1063,முன்தீர்ப்பும் இந்த வழக்கின் சங்கதி சூழ்நிலைகளுக்கு பொருந்துவதாக இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

243. In King v. Aung Nyug, AIR 1940 Rang 259. என்ற வழக்கில் It is not necessary that the consequences of the injury are foreseen, it would be sufficient that there is an intention to cause injury, which injury is likely to cause death.என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது

ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை 19 –6 –20 மற்றும் 20– 6– 20 ஆம் தேதிக்கு இடைப்பட்ட இரவில் பலமுறை இடைவெளி விட்டு இடைவெளி விட்டு எதிரிகள் அடித்து சித்திரவதை செய்துள்ளனர். பிரேத பரிசோதனை சம்பந்தமான வீடியோ மற்றும் புகைப்படங்களை பரிசளித்து பார்க்கும்போது காயங்களின் தீவிர தன்மையை தெரிய வருகிறது, 200 அடிக்கு மேல் அடித்தாக பென்னிக்ஸ் கூறிதாக அசா 17ம் சாட்சியமளித்துள்ளார், இந்நிலையில் மேற்படி காயங்கள் ஜெயராஜ் மற்றும் பென்னிசுக்கு இறப்பை ஏற்படுத்த கூடும் என்பதை நன்கு அறிந்தே அந்த காயங்களை எதிரிகள் ஏற்படுத்தியுள்ளனர் என்பது நன்கு நிரூபணமாகின்றது ,

244. Maniklal Sahu v. State of2025 INSC 1107 என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்ற நீதியரசர்கள் திரு. JB Pardiwala மற்றும் திரு. R Mahadevan ஆகியோர்கள் அளித்துள்ள தீர்ப்பில்

1. A delayed death from complications like septicemia does not reduce the culpability from murder. if the original injuries were sufficient in the ordinary course of nature to cause death would come under clause "Thirdly" of Section 300 of the IPC.

2. If it is proved that the injuries were imminently dangerous to life, though the death had occurred after septicaemia or other complications had supervened, yet the act of the accused

would squarely fall under the fourth limb of Section 300 of the IPC, provided, the other requirements like knowledge on the part of the accused, etc. are satisfied and so the accused would be liable to be punished under Section 302 of the IPC. Here also, the primary cause of the death is the injuries and septicemia.

3. In judging whether the injuries inflicted were sufficient in the ordinary course of nature to cause death, the possibility that skillful and efficient medical treatment might prevent the fatal result is wholly irrelevant.

4. If the supervening causes are attributable to the injuries caused, then the person inflicting the injuries is liable for causing death, even if death was not the direct result of the injuries.

5 Even when the medical evidence does not say that any one of the injuries on the body of the deceased was sufficient to cause death in the ordinary course of nature, yet it is open to the Court to look into the nature of the injuries found on the body of the deceased and infer from them that the assailants intended to cause death of the deceased. If none of the injuries alone were sufficient in the ordinary course of nature to cause the death of the deceased, cumulatively, they may be sufficient in the ordinary course of nature to cause his death.

6. That when a victim dies after a lapse of considerable time due to injuries inflicted by an accused, it would not diminish the liability of the perpetrator in a murder case.

7, It further added that the adequacy or otherwise of medical attention is not a relevant factor in this case, because the doctor who conducted the post-mortem clearly deposed that death was caused due to cardio respiratory failures, as a result of the injuries inflicted upon the deceased.

என தீர்ப்பளித்துள்ளனர்.

மருத்துவர்கள் பின்விளைவுகள் பற்றி விளக்கமாக குறிப்பிடவில்லை என எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. இறப்புக்கான காரணம் குறித்து மருத்துவர்கள் தெளிவாக கூறவில்லை என்றாலும் நீதிமன்றமே கூட முன்னிடப்பட்ட ஆவணங்களிலிருந்து

அறிந்து கொள்ள முடியும் என்பது மேற்படி முன் தீர்ப்பில் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இரத்தப்போக்கும் அதிர்ச்சியுமே கூட ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு ஏற்பட்டுள்ள காயங்களின் பின்விளைவாக நிகழ்ந்துள்ளவை தான்.

( British ) ஆங்கிலேயர் காலத்திற்கு பின்னரும் இன்றளவும் காவல் நிலையத்திற்கு ஒருவரை அழைத்து செல்வது நம் நாட்டில் ஒரு மானக்கேடான விசயமாகவே பார்க்கப்படுகிறது. அதுவும் கிராமபுறங்களில் ஒருவரை காவல்நிலையத்றிற்கு அழைத்து செல்வது என்பது மனதளவிலும் உடலளவிலும் மிகுந்த வேதனையை ஏற்படுததக்கூடிய செயலாகும். வேதனையும் துக்கமும் ஏற்படும் போது மன அழுத்தம் ஏற்படுவது இயற்கையாகும். பிரேத பரிசோதனை சம்மந்தமான புகைப்படங்களையும் மற்றும் வீடியோவையும் பரிசீலித்து பார்க்கும் போது ஏற்படுத்தப்பட்ட காயங்களின் தீவிர தன்மை புரிகிறது. லத்தியால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என பல்நோக்கு மருத்துவர்க குழு அறிக்கையில் தெரிவித்துள்ளது. அசா.45 வினிலாவும் போலீஸ் அடிச்ச காயம் போல் உள்ளது என கருத்து தெரிவித்துள்ளார். எதிரிகள் தான் தாக்கி காயப்படுத்தினார்கள் என அசா.20,26,44,,47ம் சாட்சியம் அளித்துள்ளனர் . அதனை ஒத்துரைக்கும் வகையில் அ.சா.5 முதல் 10 சாட்சியம் அளித்துள்ளனர்.

மருத்துவர் அசா 18ம் கூட மேற்படி காயங்கள் மாரடைப்பை ஏற்படுத்த வாய்ப்புள்ளது என்றே சாட்சியமளித்துள்ளார், அதன்படி பார்த்தாலும் அந்த காயங்களை ஏற்படுத்தியவர்களும் அதற்கு உடந்தையாக இருந்தவர்களும் மட்டுமே அதன் விளைவிற்கு பொறுப்பாவார்கள், எனவே எதிரிகள் கொடூரமாக அடித்து காயப்படுத்தியதால் தான் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இறந்துள்ளனர் என்று சிபிஐ தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது,

இந்நிலையில் முன்னிடப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் பார்க்கும்போது ஆயுதமின்றி இருந்துள்ள ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் கிட்டத்தட்ட இரவு முழுவதும் எதிரிகளால் காவல் நிலையத்தில் சட்டவிரோதமாக அடைத்து வைக்கப்பட்டு எண்ணில்

அடங்கா முறை அடித்து காயத்தை ஏற்படுத்தி கொடுமை படுத்தப்பட்டுள்ளனர் என்பதை கருத்தில் கொண்டு பார்க்கும் போது மேற்படி காயங்களை ஏற்படுத்துவதால் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு மரணத்தை விளைவிக்க கூடும் என்பதை நன்கு அறிந்திருந்தே மேற்படி காயங்களை எதிரிகள் ஏற்படுத்தி உள்ளனர் என்று சிபிஐ தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவுபட நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே இந்த நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

245. பென்னிக்ஸ் காவல்நிலையத்திற்கு வந்து போலீசாரை எதிர்த்துள்ளார் என்றும் அதனால் ஆத்திரத்தில் எதிரிகள் மேற்படி காயத்தை ஏற்படுத்தியிருக்க கூடும் என்றும் எதிரிகள் தரப்பில் வாதிடக்கூடும். ஆனால் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் மீது போடப்பட்ட வழக்கு பொய் வழக்கு என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது, இந்நிலையில் தன் தகப்பனாரை கைது செய்தது சம்மந்தமாக பென்னிக்ஸ் ஆட்சேபனை எழுப்பியுள்ளதை ஆத்திரமூட்டும் செயலாக கருத இயலாது.

246. மேலும் இரவு 08.00 மணியிலிருந்து காலை சுமார் 02.30 வரை பலமுறை எதிரிகள் தாக்கி காயத்தை ஏற்படுத்தியுள்ளனர். இடைப்பட்ட நேரத்தில் தங்களைது உணர்ச்சிகளை கட்டுப்படுத்திகொள்ளவும் தங்களை திருத்திக்கொள்ளவும் எதிரிகளுக்கு போதுமான அவகாசம் இருந்துள்ளது எனவே உணர்ச்சிவசத்தால் மேற்படி செயல் நடந்ததாக கருத முடியாது.

247. இந்நிலையில் முன்னிடப்பட்டுள்ள சாட்சியங்களின் அடிப்படையில் பார்க்கும்போது இதச பிரிவு 300ன் விதிவிலக்குகள் எதுவும் இந்த வழக்கிற்கு பொருந்துவதாக இல்லை என்றே இந்த நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

248. இவ்வழக்கில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆயுதம் எதுவும் இல்லாமல் இருந்துள்ளனர். 2ம் எதிரி தான் பென்னிக்சைத் தாக்கியுள்ளார் அதை பென்னிக்ஸ் தடுத்துள்ளார், மேலும் இரவு முழுவதும் ஜட்டியுடன் காவல் நிலையத்தில் வைத்து ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அடித்து கொடுமைப்படுத்தியுள்ளதை கருத்தில் கொண்டு பார்க்கும் போது தங்களை தற்காத்துக் கொள்ள எதிரிகள் ஜெயராஜ் மற்றும்

பென்னிக்ஸை அடித்து காயப்படுத்தியதாகவும் கருதமுடியாது. இந்நிலையில் எதிரிகள் தரப்பில் முன்னிடப்பட்டுள்ள 2024 (2) MWN (Cr.) 39 (DB) வழக்கின் சங்கதி முன் தீர்ப்பு இந்த வழக்கத்திற்கு பொருந்துவதாக இல்லை என்றே நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

249. இந்நிலையில் முன்னிடப்பட்டுள்ள சாட்சியங்களின் அடிப்படையில் பார்க்கும்போது இதச பிரிவு 75 முதல் 106ன் கீழான பொது விதிவிலக்கு எதுவும் எதிரிகளுக்குப் பொருந்துவதாக இல்லை.

250. எனவே முன்னிடப்பட்டுள்ள சாட்சியங்களின் அடிப்படையில் பார்க்கும்போது ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள காயங்களாலும் அதன் பின் விளைவுகளாலும் இறந்துள்ளனர் என்பதும் அவர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் கூட்டாக இயற்கையின் சாதாரண போக்கில் இறப்பை ஏற்படுத்த போதுமானதாக இருந்துள்ளது என்றும் மேற்படி காயங்கள் இறப்பு ஏற்படுத்தக் கூடும் என்பதை நன்கு அறிந்திருந்தும் எதிரிகள் மேற்படி காயங்களை ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸுக்கு ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்திலேயே பலமுறை இடைவெளி விட்டு இடைவெளி விட்டு ஒருமித்த எண்ணத்துடனும் அடித்து சித்திரவதை செய்து உள்ளனர் என்றும் சிபிஐ தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் இந்நிலையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இருவரது மரணமும் கொலையாகும் என்றும் அதை எதிரிகள் புரிந்துள்ளனர் என்றும் 1,8 எதிரிகள் உடந்தையாகவும் இருந்துள்ளனர் என்றும் சிபிஐ தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

<u>அயலிடவாதம் (Alibi evidence )</u>

251. சம்பவ தேதியில் சம்பவ நேரத்தில் தான் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் இல்லை என்றும் ரோந்து பணியில் இருந்ததாகவும் 1ம் எதிரி வாதமொன்றை முன் வைத்துள்ளார்,.அதேபோல் தான் கொரோனா பணியில் இருந்ததாகவும் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் 19 –6 –20 ஆம் தேதி இரவு தான் இல்லை என்று–7ம் எதிரி தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது இத்தகைய அயலிட வாதம் (Alibi evidence )

அரசு தரப்பு வழக்கை நிருபித்த பின்னரே பரிசலீக்க வேண்டிய ஒன்றாகும் எனவே அது குறித்து இனி தீர்வு காணலாம்.

252. சிசிடிவி காட்சி பதிவுகளில் உள்ள உருவ அமைப்புகளுடன் ஜெயராஜ் பெனிக்ஸ் மற்றும் எதிரிகளுடய புகைப்படங்கள் ஒப்பீடு செய்ய தடய அறிவியல் ஆய்வுக்கு அனுப்பப்பட்டு கிடைக்கப்பட்டுள்ள அறிக்கை அ.சா.ஆ.265ல் ஜெயராஜ், பென்னிக்ஸ், உருவங்கள் மட்டுமே ஒத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது அதில் கேமராவிலிருந்து துாரமாக உள்ளதாலும் சிலரது உருவம் Frameக்குள் அடங்கிவரவில்லை என்பதாலும் சில உருவங்கள் முகத்தில் துணியால் மூடியிருந்ததாலும் அவற்றை அடையாளம்காண இயலவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

253. மற்றொரு அறிக்கை அ.சா.ஆ.266ல் அந்த வீடியோ கோப்பில் உள்ள உள்ள உருவங்களுடன் ஜெயராஜ், பென்னிக்ஸ், பாலகிருஷ்ணன், முருகன் ஆகியோரது புகைப்படங்களில் உள்ள உருவங்கள் மட்டுமே ஒத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது

254. Frameக்குள் உருவம் அடங்கிவரவில்லை என்பதாலோ துாரமாக உள்ளதாலோ முகத்தை துணியால் மூடியுள்ளதாலோ ஒரு குறிப்பிட்ட நபர் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இல்லை என கூற முடியாது, இத்தகைய சூழ்நிலையில் நேரடியாக கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியங்களை வைத்தே அந்த இடத்தில் அந்த எதிரி இருந்தாரா இல்லையா என்பதை தீர்மானிக்கவேண்டும், எனினும் தற்போது இந்தவழக்கை பொருத்தவரை புகைப்படங்கள் குறித்த சாட்சியங்கள் 19–6 – 20 ஆம் தேதி 8:00 மணி வரையான சங்கதிகளுக்கு மட்டுமே பொருந்துவதாகும். சாத்தான்குளம் காவல் நிலையத்தில் உள்ள சிசிடிவி காட்சிகளை பொறுத்தவரை அதன் ஹார்ட் டிஸ்கில் உள்ள காட்சி பதிவுகளை மீட்டெடுக்க இயலவில்லை என அ.சா.ஆ.249–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் எதிரிகளின் புகைப்படங்களை மேற்படி Hard Disk – பதிவாகியிருந்துள்ள காட்சிகளுடன் ஒப்பீடு செய்ய இயலாத சூழ்நிலை உள்ளது. இந்நிலையில் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் 19– 6– 20 மற்றும் 20– 6 –20 ஆம்

தேதிக்கு இடைப்பட்ட இரவில் என்ன நடந்தது என்பது குறித்து கண்ணுற்ற நேரடி சாட்சிகளின் சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க வேண்டி உள்ளது.

255. எதிரிகளின் கைபேசி எண்களுக்கு உண்டான C.D.R விபரங்கள் அடங்கிய ஆவணங்கள் அடங்கிய கோப்பு அ.சா.ஆ.71 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஸ்ரீதர் | 19.06.2020ம் தேதி 19.45.59 முதல் 20.55.58 வரை சாத்தான்குளம் டவர் எல்லையிலும் 19.06.2020 21.00.59 முதல் 71 விநாடி பண்ணம்பாறையிலும் 21.33.44 முதல் 20.06.2020ம் தேதி 11.16.54 வரை சாத்தான்குளம் டவர் எல்லைக்குள் இருந்துள்ளது தெரியவருகிறது. |
| பாலகிருஷ்ணன் | 18.06.2020ம் தேதி 20.31.29 மணிக்கு 21.48.16 வரை சாத்தான்குளம் டவர் எல்லைக்குள்ளும் இருந்துள்ளது தெரியவருகிறது.<br>19.06.2020ம் தேதி 18.57.17 முதல் 20.06.2020ம் தேதி 10.14.18 வரை சாத்தான்குளம் டவர் எல்லைக்குள் இருந்துள்ளது தெரியவருகிறது. |
| ரகுகணேஷ் | 19.06.2020ம் தேதி 21.19.35 மணிமுதல் 21.55.45 க்கு இடைப்பட்ட காலத்தில் சாத்தான்குளத்தில் இருந்ததாக சிடிஆரில் குறிப்பிடப்பட்டுள்ளது. 22.00.24 மணிக்கு 28 விநாடி பண்ணம்பாறையிலும் அதன்பின் 22.08.07 முதல் 20.06.2020 காலை 06.58.57 வரை சாத்தான்குளம் டவர் எல்லைக்குள்ளும் இருந்ததாக தெரியவருகிறது.<br>19.06.2020ம் தேதி 21.19.35க்கு பிறகு 22.00.24 மணிக்கு 28விநாடிக்கு பண்ணம்பாறை டவர் எல்லையிலும் அதன்பின் 20.06.2020 அதிகாலை 06.56.44 மணிவரை சாத்தான்குளம் டவர் எல்லைக்குள்ளும் இருந்துள்ளது தெரியவருகிறது. |

| | |
|---|---|
| | |
| முருகன் | 18.06.2020ம் தேதி 20.47.17 லிருந்து 19.06.2020 08.12.36 வரை சாத்தான்குளம் டவர் எல்லைக்குள் இருந்துள்ளது தெரியவருகிறது மேலும் 19.06.2020ம் தேதி 11.34.41 லிருந்து 20.06.2020ம் தேதி 17.07.08 வரை சாத்தான்குளம் டவர் எல்லைக்குள் இருந்துள்ளது தெரியவருகிறது. |
| சாமதுரை | 19.06.2020ம் தேதி 19.00.26 முதல் 20.06.2020ம் தேதி 08.32.27 வரை சாத்தான்குளம் டவர் எல்லைக்குள்ளும் இருந்துள்ளது தெரியவருகிறது. |
| முத்துராஜா | 19.06.2020ம் தேதி 12.42.26 முதல் 20.06.2020ம் தேதி 11.40.57 வரை சாத்தான்குளம் டவர் எல்லைக்குள் இருந்துள்ளதாக தெரியவருகிறது. |
| செல்லதுரை | 19.06.2020ம் தேதி 19.43.04 முதல் 22.41.22 வரை சாத்தான்குளத்திலும் 23.55.52க்கு 60 விநாடி பேய்குளத்திலும் 206–20ம் ம்தேதி 00.53.09லிருந்து 20.06.2020ம் தேதி 10.45.29 வரை சாத்தான்குளம் டவர் எல்லைக்குள்ளும் இருந்துள்ளது தெரியவருகிறது. |
| தாமஸ்பிரான்சிஸ் | 19.06.2020ம் தேதி 18.26.44 முதல் 22.36.29 வரை சாததான்குளம் டவர் எல்லையிலும் 20.06.2020ம் தேதி 07.30.08லிருந்து கொம்மாடிக்கோட்டை டவர் எல்லைக்குள் 11.03.41 வரையிலும் முடலூர் டவர் எல்லைக்குள் 11.06.36 429 விநாடியும் இருந்துள்ளது தெரியவருகிறது. |
| வெயிலுமுத்து | 19.06.2020ம் தேதி 09.00.37 முதல் 20.06.2020ம் தேதி முழுவதும் வரை சாத்தான்குளம் டவர் எல்லைக்குள்ளும் இருந்துள்ளது |

| | |
|---|---|
| | தெரியவருகிறது. |

256. மேற்படி சாட்சியங்களின் அடிப்படையில் பார்க்கும்போது சம்பவம் நடந்ததாக கூறப்படும் இரவில் பெரும் பகுதி எதிரிகளின் செல்போன் சாத்தான்குளம் டவர் எல்லைக்குள்ளேயே இருந்துள்ளது தெரிய வருகிறது. ஒருவருடைய செல்போனை வேறொருவரும் பயன்படுத்த முடியும். ஒரே இடத்தில் இருந்து கொண்டும் அருகிலுள்ளவர்களுடன் தொடர்பு கொள்ள முடியும் எனவே செல்போன் டவரின் அடிப்படையில் ஒருவர் எந்த இடத்தில் இருந்தார் என்பதை அறுத்திட்டு தீர்மானிக்க முடியாது, மேலும் இரு டவர்கள் உள்ளபோது எந்த டவரின் அலைகற்றை செறிந்து காணப்படுகின்றதோ அந்த டவரை செல்போன் காட்டும் என அ.சா.40 சாட்சியமளித்துள்ளார். எப்போது எந்த டவரின் அலைகற்றை செறிந்திருந்தது என்பது குறித்து சாட்சியங்கள் ஏதும் முன் வைக்கப்படவில்லை.

257. அயலிட வாதம் குறித்து 1 மற்றும் 7ம் எதிரி தரப்பில் மட்டுமே சாட்சியமளித்துள்ளனர்.

a) In Binay kumar Singh vs State of Bihar, AIR 1997 SC 322 என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம்

Strict proof is required for establishing the plea of Alibi என தீர்ப்பளித்துள்ளது.

b) In Shaikh Sattar Vs. State of Maharashtra, (2010) 8 SCC 430. என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம்

Plea of alibi has to be proved with absolute certainty so as to completely exclude possibility presence of accused at place of occurrence at the relevant time. என தீர்ப்பளித்துள்ளது.

258. குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 172 இல் கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது

Section 172 and by Act 5 of 2009, sub-sections (1A) and (1B) of Section 172 of Cr.P.C., came to be inserted. A bare reading of sub-section (1A) would indicate it casts a duty on the investigating officer to record all the statement of the witnesses in a case Diary. Sub-section (1B) makes obligatory for the investigating officer to keep the case Diary in a bound volume and duly paginated.

259. அதன் அடிப்படையில் பார்க்கும்போது வழக்கு நாட்குறிப்பு என்பது தொடர்ச்சியாக எண்ணிடப்பட்டதாகவும் அதில் விசாரணை சம்பந்தமான விஷயங்கள் வரிசைக்கிரமப்பட்டு பைண்ட் செய்யப்பட்டதாகவும் இருக்கவேண்டும் என்பது தெரிய வருகிறது. ஆனால் 1ம் எதிரி தாக்கல் செய்துள்ள கேஸ் டைரி என்பது தனித்தனி தாள்களாக உள்ளது. அதில் 19.06.2020ம் தேதிக்கு முந்தைய தேதி பக்கம் எண் என்ன என்பது பற்றி குறிப்பிடப்படவில்லை. அது தொடர்ச்சியாக எண்னிடப்பட்டதாக நிரூபிக்கப்படவில்லை. மேலும் பொதுவாக விசாரணை சம்மந்தமான விவரம் தான் கேஸ் டைரியில் குறிப்பிடப்படும். அதில் யார் சாப்பாடு கொண்டு வந்தார் என்பதெல்லாம் குறிப்பிடுவது இயல்பானதல்ல. மேலும் லொகேஷன் பொருத்தவரை DSP பழனிகுமாருக்கு தெரிவித்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுகுறித்து நிரூபிக்க DSP பழனிகுமார் எதிரி தரப்பில் சாட்சியாக அழைத்து விசாரிக்கப்படவில்லை. அந்த டைரி 1ம் எதிரியால் கைப்பட எழுதப்படவில்லை, இந்நிலையில் அது யாரால் தட்டச்சு செய்யப்பட்டது என்று 1ம் எதிரி குறிப்பிட்டு சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை எ.சா.ஆ.19 மற்றும் 20 உண்மையில் கணிணியில் எந்த தேதி தட்டச்சு செய்யப்பட்டது யாரால் தட்டச்சு செய்யப்பட்டது என நிருபிக்க 1ம் எதிரி கணிணி எதையும் நீதிமன்ற ஆய்விற்கு உட்படுத்தவில்லை, அதுகுறித்து 1ம் எதிரி எவரையும் சாட்சியாகவும் அழைத்து விசாரித்து கொள்ளவில்லை, இந்நிலையில் அந்த ஆவணம் ஏற்புடையதாக தோன்றவில்லை. மேலும் அன்று முழுவதும் பகல் ரோந்து சென்றதாக கூறப்படுகின்ற நிலையில் வெறும் 4 லிட்டர் மட்டுமே எரிபொருள் செலவானதாக குறிப்பிடுவதும் நம்பத்தகுந்ததாக தோன்றவில்லை. மேலும் சம்பவம் 19.06.2020 இரவு

07.30 மணியிலிருந்து காலை 03.00 மணிவரை நடைபெற்றதாக கூறப்படுகின்ற நிலையில் இடைப்பட்ட காலத்தில் சிறிது நேரம் 1ம் எதிரி வெளியே சென்றதாக வைத்துக் கொண்டாலும் இடைப்பட்ட மற்ற நேரத்தில் குற்றம் புரிவதற்கான வாய்ப்பு இல்லை என கூறமுடியாது.

260. 19.06.2020ம் தேதி 18:10 மணிக்கு பண்ணம்பாறை விளக்கு சென்றதாகவும், 18:18 மணிக்கு செட்டியபத்து சென்றதாகவும், நொச்சிகுளம் சென்றதாகவும், பின்னர் மீண்டும் 18:30 மணிக்கு சாத்தான்குளம் பஸ் ஸ்டாண்ட் வந்து மேற்படி பணியை செய்ததாகவும், பின்னர் மீண்டும் 19:26 மணிக்கு மீண்டும் பண்ணம்பாறை சென்றதாகவும் எ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். அதுவரை உள்ள சங்கதிகள் இந்த வழக்கிற்கு தொடர்பற்றது.

261. பின்னர் அங்கிருந்து புறப்பட்டு 19:30 மணிக்கு சாத்தான்குளம் பஸ் ஸ்டாண்ட் வந்ததாகவும், சுமார் 19:30 மணியளவில் சாத்தான்குளத்தைச் சேர்ந்த பாலசுந்தரம், த.பெ.மாணிக்கம், அம்மன் கோவில் காலனி, சாத்தான்குளம் என்ற விலாசத்தை சார்ந்தவரை விசாரித்து அவருக்கு மாஸ்க் கொடுத்ததாகவும், அவர் எந்த ஊர்காரர் என பரிசோதிக்க அவரது ஆதார் கார்டை வாங்கி தணிக்கை செய்ததாகவும், அது சம்பந்தமாக அவர் கொடுத்த ஆதார் கார்டின் ஜெராக்ஸ் நகலை தாக்கல் செய்ததாகவும், அது எ.சா.ஆ.11 என்றும் எ.சா.1 சாட்சியம் அளித்துள்ளர். பாலசுந்தரத்தை பஸ்டாண்டில் எந்த இடத்தில் வைத்து விசாரித்தார் என எ.சா.1 குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எதற்காக பாலசுந்தரம் கொரோனா காலத்தில் அந்த இடத்திற்கு அந்த நேரத்தில்வந்தார் என எ.சா.1 குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. பாலசுந்தரம் எசா 2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் டீ சாப்பிட போயிருந்ததாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் எந்த டீ கடைக்கு டீ சாப்பிட போனார் என அவர் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் எ.சா.2 தனது டீ கடைக்கு டீ சாப்பிட வந்ததாக 1ம் எதிரி தரப்பில் டீ கடைகாரர் எவரும் சாட்சியாக அழைத்து விசாரிக்கப்படவில்லை. 1ம் எதிரியை இறக்கி விட்டு வண்டி மேற்கே போய்விட்டதாகவும் 1ம் எதிரி ஒருவர் மட்டும் அங்கு இருந்தார் என்றும் எ.சா.2 சாட்சியம் அளித்துள்ளார். ஒரு ஆய்வாளர் எவ்வித காவலருமின்றி தனியாக நடு

ரோட்டில் நின்றதாகவும், சிறுநீர் கழிக்க தனது வண்டியை டிரைவரிடம் கொடுத்து அனுப்பியதாகவும் கூறுவது நம்பத்தகுந்ததாக இல்லை. குறிப்பாக 1ம் எதிரியின் வண்டியை அ.சா.26 ஓட்டினார் என்று 1ம் எதிரி தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில் இரவு 07.30 மணிக்கு 1ம் எதிரியை பஸ்டாண்டில் இறக்கிவிட்டதாகவோ, பின்னர் மீண்டும் போய் பஸ்டாண்டில் ஏற்றிக்கொண்டு ரோந்து போனதாகவோ, அசா 26 குறிப்பிட்டு சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. பஸ்டாண்டில் 1ம் எதிரியையும் எ.சா.2ஐயும் எவரும் பார்த்தாகவோ, எ.சா.2 1ம் எதிரியிடம் ஆதார் ஜெராக்ஸ் நகலை கொடுத்ததாக கூறப்படுவதை கண்ணுற்றதாகவோ வேறு மூன்றாம் தரப்பினர் எவரும் 1ம் எதிரி தரப்பில் சாட்சியாக அழைத்து விசாரிக்கப்படவில்லை. இந்நிலையில் 19 6 20 ஆம் தேதி இரவு 7:30 மணிக்கு 1ம் எதிரியும் எசா2ம் சாத்தான்குளம் பஸ் ஸ்டாண்டில் இருந்ததாக எசா 1 மற்றும் 2 அளித்துள்ள சாட்சியம் நம்பதகுந்ததாக இல்லை.

262. 20:30மணிக்கு அதே பஸ் ஸ்டாண்டில் வைத்து சிலுவைராஜ் என்பவரை பரிசோதித்ததாகவும் அவர் கொடுத்த ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் எ.சா.ஆ.12 என்றும் எ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சிலுவைராஜ் எ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் அவர் தாக்கல் செய்த ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் எ.மா.சா.ஆ.22ல் ஆதார் எண் ஒன்றுபோல் காணப்பட்டாலும் அந்த ஆதார் அட்டை ஒன்று போல் காணப்படவில்லை. அதில் முகவரி மாறியுள்ளது. மேலும் பஸ்டாண்ட் அருகே அந்த சமயத்தில் எதற்காக எ.சா.3 நின்றிருந்தார் என்பதற்கு நம்பத்தகுந்த காரணம் எதுவும் எ.சா.3 கூறவில்லை. எதற்காக அந்த இடத்தில் அவர் நின்றிருந்தார் என எ.சா.1ம் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. இந்நிலையில் 19–6–20ம்தேதி இரவு 08.30 மணி வரை 1ம்எதிரி சாத்தான்குளம் பஸ் ஸ்டாண்டில் இருந்ததாக எசா 1 மற்றும் 3 அளித்துள்ள சாட்சியம் நம்பதகுந்ததாக இல்லை, அ.சா.26 ஜெயசேகர் 8.30 மணிக்கு 1ம் எதிரியை சாத்தான்குளம் பஸ் ஸ்டாண்டிற்கு அழைத்து சென்றதாக குறிப்பட்டு சாட்சியம் அளிக்கவில்லை GD–ல் 08:30 மணிக்கு 1ம் எதிரி பஸ் ஸ்டாண்டிற்கு ரோந்த சென்றதாக குறிப்பிடவில்லை.

263. 19.06.2020ம் தேதி 21:00 மணிக்கு பண்ணம்பாறை விளக்கில் தணிக்கை செய்ததாக எசா. 1 சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அது குறித்து நிரூபிக்க வேறு எவரையும் எ.சா.1 எவரையும் சாட்சியாக அழைத்து விசாரிக்கவில்லை. சிடிஆர் படி 19.06.2020ம் தேதி 21:00 மணிக்கு 1ம் எதிரி பண்ணம்பாறையில் இருந்ததாக வாதத்திற்காக வைத்துக்கொண்டாலும் அதன் பின் 20.06.2020ம் தேதி அதிகாலை 02:29:26 வரை அவர் சாத்தான்குளத்தில் இருப்பதாகவே CDRல் குறிப்பிடப்பட்டுள்ளது.

264. 21:30 மணிக்கு ரோந்து பணியை முடித்து தனது குடியிருப்புக்கு வந்ததாகவும், அந்த சமயம் சாத்தான்குளத்தை சார்ந்த குருசாமி என்பவர் தனக்கு சப்பாத்தி கொண்டு வந்து கொடுத்தார் என்றும், அவரது ஆதார் கார்டை தணிக்கை செய்ததாகவும், 21.30 மணிக்கு அவர் கொடுத்த ஆதார் கார்டின் ஜெராக்ஸ் நகலின் ஒருபக்கம் மட்டுமே தன்னிடம் உள்ளது என்றும் அது எ.சா.ஆ.13 என்றும், எ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் குருசாமி எ.சா.1 ன் வீட்டிற்கு வந்ததாகவோ சாப்பாடு கொடுத்துவிட்டு சென்றதாகவோ நிரூபிக்க மூன்றாம் தரப்பினர் எவரும் எதிரி தரப்பில் சாட்சியாக அழைத்து விசாரிக்கப்படவில்லை. குருசாமி எ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் 19.06.2020ம் தேதி இரவு 09.00 மணிக்கு சாத்தான்குளம் மெயின் ரோட்டில் ஜோதி ஸ்டோர் அருகே நின்றுகொண்டிருந்ததகவும், இன்ஸ்பெக்டர் சாருக்கு சாப்பாடு கொடுக்கவேண்டும் நான் வெளியில் போகிறேன் நீ ரெடி செய்து கொடுத்துவிடு என்று மார்ட்டின் தன்னிடம் சொன்னதாகவும், எ.சா.4 சாட்சியம் அளித்துள்ளார். கொரோனா காலகட்டத்தில் 08.00 மணியுடன் கடை அடைக்கப்பட்டுவிடும் இந்நிலையில் ஜோதி ஸ்டோர் அருகே எதற்காக எ.சா.4 நின்று கொண்டிருந்தார் மற்றும் அங்கு எ.சா.4 இருப்பதாக எப்படி மார்ட்டினுக்கு தெரிந்தது, என்பது குறித்து எ.சா.4 தரப்பில் குறிப்பிட்டு சாட்சியம் எதுவும் அளிக்கப்படவில்லை. இந்நிலையில் மார்ட்டினும் 1ம் எதிரி தரப்பில் சாட்சியாக அழைத்து விசாரிக்கப்படவில்லை. இந்நிலையில் 21:30 மணிக்கு 1ம் எதிரி சாத்தான்குளம் அவரது குடியிருப்பில் இருந்ததாக எசா 1 மற்றும் 4 அளித்துள்ள சாட்சியம் நம்பதகுந்ததாக இல்லை.

265. 19.06.2020ம் தேதி இரவு 22:00 மணி முதல் 20.06.2020 அதிகாலை 02.00 மணி வரை தனது போலீஸ் வாகனமான TN– 59 –0635 என்ற வாகனத்தில் ஜெயசேகர் ஓட்ட ரோந்து பணிக்கு சென்றதாகவும், அன்றைய தினம் 20:45 மணிக்கு A2 பாலகிருஷ்ணனை தொடர்பு கொண்டதாகவும், பின்னர் பண்ணம்பாறை, தச்சமொழி, அமுதன்னகுடி, சாத்தான்குளம் பஜார், சாத்தான்குளம் பஸ் ஸ்டாண்ட் ஆகிய இடங்களில் ரோந்து செய்ததாகவும் அப்போது முத்து என்பவரை தணிக்கை செய்து அவரது ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகலை பெற்றதாகவும், அதில் தான் கையெழுத்து செய்துள்ளதாகவும், அது எ.சா.ஆ–14 என்றும், எ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். எ.சா.14ல் முத்துசுடலை 37/50 சி, தச்சன்மொழி நாடார் தெற்கு தெரு, சாத்தான்குளம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதுசம்மந்தமாக முத்துசுடலை என்பவர் எ.சா.6 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் 19.06.2020ம் தேதி இரவு 11:30 மணிக்கு வெங்கடேஷ் என்பவருக்கு போன் செய்து அவரது குடோனில் காய் இறக்க வேண்டும் என்று சொன்னதாகவும், 12:55 மணிக்கு குடோனிலிருந்து வேலையை முடித்துவிட்டு 01.00 மணி வாக்கில் சுப்பராயபுரம் மெயின் ரோட்டில் வைத்து 1ம் எதிரி தன்னை பிடித்துக் கொண்டதாகவும், இரவு அடிக்கடி போலீஸ்சார் பிடிப்பார்கள் என்பதால் ஆதார் ஜெராக்ஸ் –ஐ வைத்திருந்ததகவும், அதை காட்டியதாகவும், சாட்சியம் அளித்துள்ளார். வெங்கடேஷ் எ.சா6 க்கு போன் செய்ததாக நிரூபிக்க 1ம் எதிரி தரப்பில் சாட்சியம் எதுவும் முன்வைக்கப்படவில்லை. மேலும் கொரோனா காலத்தில் இரவில் குடோனில் காய்கறி வந்து இறங்கியதாக கூறப்படுவது குறித்து நிரூபிக்க 1ம் எதிரி தரப்பில் குடோன் உரிமையாளர் மற்றும் லாரி ஓட்டுநர் சாட்சியாக அழைத்து விசாரிக்கப்படவில்லை. இந்நிலையில் 20.06.2020ம் தேதி அதிகாலை 01.00 மணி வாக்கில் சுப்பராயபுரம் மெயின் ரோட்டில் வைத்து 1ம் எதிரி மற்றும் எசா6 ஐ பார்த்ததாக நிரூபிக்க 3–ம் தரப்பினர் எவரும் சாட்சியமளிக்கவில்லை. இந்நிலையில் 1 மற்றும் எசா 6 அளித்துள்ள சாட்சியம் நம்பதகுந்ததாக இல்லை.

266. 20.06.2020ம் தேதி அதிகாலை 01.00 மணிக்கு சுப்புராயபுரத்தில் சுரேஷ், த.பெ.சுடலைமணி என்பவரை தணிக்கை செய்ததாகவும், அவர் கொடுத்த ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகலை பெற்று அதில் நேரம் குறிப்பிட்டு கையெழுத்து செய்துள்ளதாகவும், அது எ.சா.ஆ.15 என்றும்,எ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் எ.சா.ஆ.15ல் நேரம் 00.30 என குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் இடம் பண்ணம்பாறை விளக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது. 00.30 மணிக்கு 1–ம் எதிரியும் எ.சா.7–ம் பண்ணம்பாறையில் இருந்ததாக நிரூபிக்க 3–ம் தரப்பினர் சாட்சியம் எதுவும் முன்னிடப்படவில்லை. உண்மையில் 20.06.2020–ம் தேதி அதிகாலை 01.00 மணிக்கு சுப்பராயபுரத்தில் 1ம் எதிரியும் எ.சா.7ம் இருந்ததாக நிரூபிக்க வேறு மூன்றாம் தரப்பினர் சாட்சி எதுவும் முன்வைக்கப்படவில்லை.

267. இந்நிலையில் 20.06.2020ம் தேதி அதிகாலை 01.00 மணி வாக்கில் சுப்பராயபுரம் மெயின் ரோட்டில் வைத்தோ பண்ணம்பாறையில் வைத்தோ 1ம் எதிரி எசா 7 ஐ சந்தித்ததாக 1ம் எதிரி தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவுபட நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. மேலும் மற்றொரு இடத்தில் 1ம் எதிரி அதிகாலை 1.00 மணிக்கு பண்ணம்பாறை சென்றதாகவும் அங்கு ஒரு நபர் கொடுத்த ஆதார் அட்டையின் ஜெயராக்ஸ் நகலை பெற்றதாகவும் 1ம் எதிரி முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார் மேலும் அந்த நபரின் பேரும் தனக்கு ஞாபகமில்லை என்று குறிப்பிட்டுள்ளார் அந்த ஆவணம் எ.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் எ.சாஆ.18ல் 2024/07/09 என்று இடைச்செருகலாக தேதியும் காணப்படுகிறது.அதனடிப்படையில் பார்க்கும் போது 2020ம் வருடம் அப்படி ஒரு ஜெராக்ஸ் நகல் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை.

268. 20–6–2020 அதிகாலை 01.30 மணிக்கு தச்சமொழி சென்று முத்து, த.பெ.செல்லப்பா என்பவரை தணிக்கை செய்து அவர் கொடுத்த ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகலை பெற்று நேரம் குறித்து கையெழுத்து செய்துள்ளதாகவும், ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் எ.சா.ஆ.16 என்றும், எ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார்.

அதுகுறித்து நிரூபிக்க முத்து என்பவரை எ.சா.1 சாட்சியாக அழைத்து விசாரிக்கவில்லை. முத்துவையும் எ.சா.1ஐம் அதிகாலை 01.30 மணிக்கு தச்சமெழியில் பார்த்ததாக வேறு மூன்றாம் தரப்பினர் எவரும் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. 1ம் எதிரி 20-6-2020 அதிகாலை 01.30 மணிக்கு தச்சமொழி சென்று முத்து, என்பவரை சத்தித்தாக 1ம் எதிரி தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவுபட நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

269. 20-6-20ம்தேதி அதிகாலை 02.00 மணிக்கு சாத்தான்குளத்தை சேர்ந்த மாசாணிமுத்து என்பவரை தணிக்கை செய்ததாகவும், அவரை மாஸ்க் கொடுத்து அதிகாலை என்பதால் வீட்டிற்கு செல்ல அறிவுறித்தியதாகவும், அவர் கொடுத்த ID cardல் 02.00 மணிக்கு கையெழுத்து செய்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார். போனிலிருந்து சினாப்சாட் எடுக்கப்பட்டது போல் உள்ள அந்த ஆவணம் எ.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து மாசாணிமுத்து என்பவர் எ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் தண்ணீர் பாய்ச்சிவிட்டு திரும்ப வந்தபோது 02.00 மணிக்கு எதிரி தன்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அதிகாலை 02.00 மணிக்கு காமராஜர் சிலை அருகே 1ம் எதிரியையும் எ.சா.5ஐயும் பார்த்தாக பொது நபர் எவரும் எதிரி தரப்பில் சாட்சியாக அழைத்து விசாரிக்கபடவில்லை. ஜான் டிரான்ஸ்போர்டு கம்பெனியில் விண்ணப்பித்தற்காக வைத்திருந்த ஜெராக்சை எ.சா.1டம் கொடுத்ததாக எ.சா.5 சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அது செல்போனில் உள்ள Screenshot போல் உள்ளது. அதிலும் நேரம் 11.09. AM என குறிப்பிடப்ட்டுள்ளது . அதிலும் முகவரி 29/12 வீரஇடையக்குடி தெரு, சாத்தான்குளம் என்று உள்ளது. பிறந்ததிலிருந்து அங்கு தான் குடியிருந்ததாக எ.சா.5 சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் எ.ச5 சமர்பித்துள்ள ஆதார் அட்டை எ.சா.ஆ.24ல் உள்ள முகவரி 4/73/1 கீழத்தெரு காமராஜன் நகர இளங்குளம் என்று உள்ளது.இந்நிலையில் 20-6-20ம்தேதி அதிகாலை 02.00 மணிக்கு மாசாணிமுத்து என்பவரை தணிக்கை செய்ததாக எசா 1 மற்றும் எசா 5 அளித்துள்ள சாட்சியம் நம்ப தகுந்ததாக இல்லை . மேலும் இரவு 10.00 மணி முதல் 10.30 மணியளவில் ஆய்வாளரை பார்த்தாக எ.சா.5 சாட்சியமளித்துள்ளார். அது சம்மந்தமான

எ.சா.ஆ.17–ல் 23.30 மணிக்கு சாத்தான்குளம் பஜாரில் ஆவணம் பெற்றதாக 1–ம் எதிரி கையெழுத்திட்டதாக உள்ளது.

270. மேலும் அதில் எ.சா.ஆ.18ல் முத்துகுமார் என்பவரின் முகவரி அமுதன்னக்குடி என்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது' அமுதுன்னகுடியில் 23.00 மணிக்கு அவரை சோதனை செய்தததாக எ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். மேலும் 1ம் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணம் எசா 18 பரிசீலித்து பார்க்கும்போது அதில் 2024 ஆம் வருட பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது நேரம் 11:30 AM என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது அதற்கு 1ம் எதிரிதரப்பில் தகுந்த விளக்கம் எதுவும் அளிக்கப்படவில்லை. உண்மையில் மேற்படி ஆவணம் 2020 வருடம் பெறப்பட்டிருந்தால் அதில் 2024 என்ற தேதி நிச்சயமாக குறிப்பிடப்பட்டிருக்காது எனவே அந்த ஆவணம் இந்த வழக்கத்திற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ள ஆவணம் என்பது தெளிவுடபட நிரூபணம் ஆகிறது.

271. கொரோனா தடுப்பு சம்மந்ததாக ரோந்து சென்றதாக கூறும் 1–ம் எதிரி எதிரிகள் எவரிடமிருந்தும் கொரோனா பரிசோதனை அறிக்கை எதுவும் கேட்டு பெற்றதாகவே பரிசீலித்ததாகவோ அவ்வாறு கொரேனா பரிசோதிக்காத நபரை மருத்துவ பரிசோதனைக்கு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவோ எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. அதற்கு 1ம் எதிரி தரப்பில் தகுந்த விளக்கம் எதுவும் அளிக்கப்படவில்லை. 19.06.2020 ஆம் தேதி இரவு 7.30 மணிமுதல் இரவு 10 மணிவரை 1ஆம் எதிரி மருத்துவமனையில் யார் யார் கொரோனாவினால் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விபரங்களை எடுத்துக் கொண்டிருந்தார் என 1ம் எதிரி அ.சா.14ஐ குறுக்கு விசாரணை செய்துள்ளார், இந்நிலையில் கொரோனா தடுப்பு சம்மந்தமாக ரோந்து போனதாக 1–ம் எதிரி முரணபட்டவாதத்தை முன்வைத்துள்ளது ஏற்புடைய வாதமாக இல்லை. மேலும் 19–6–20ம்தேதி இரவு சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் கொரோனா பணி

சம்பந்தமாக 1ம் எதிரி கணக்கெடுத்ததாக நிரூபிக்கவும் 1ம் எதிரி தரப்பில் சாட்சியம் எதுவும் முன்னிடப்படவில்லை.

272. In State of M.P. v. Shyamsunder Trivedi, 1995 (4) SCC 262 என்ற வழக்கில் if there is evidence to show that the accused has fabricated evidence to absolve himself from the offence, that circumstance will also point towards his guilt, என மாண்புமிகு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

273. மேலும் ஒரு காவல் நிலையத்தின் ஆய்வாளர் 24 மணி நேரமும் வெயியில் ரோந்து சென்றதாக கூறப்படுவது இயற்கையில் நம்பத் தகுந்ததாக இல்லை. அதுவும் 18- 6-20 அன்றும் 19 -6 -20 அன்றும் அதன் பிறகும் இரண்டு நாட்களும் ரவுண்டிலேயே ஆய்வாளர் இருந்ததாக கூறப்படுவதும் பென்னிக்ஸ் இறந்த பிறகு தான் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் மீது போடப்பட்ட வழக்கு விபரம் பற்றியே தனக்கு தெரிய வந்தது என்றும் கூறுவது இயற்கையில் நம்பதகுந்ததாக தோன்றவில்லை, ஜெயசேகருக்கும் தனக்கும் விரோதம் எதுவும் இருப்பதாகவும் 1ம் எதிரி குறிப்பிட்ட சாட்சியம் எதையும் முன்னிடவில்லை.

274. எனவே முன்னிடப்பட்டுள்ள சாட்சியங்கள் மற்றும் மேற்படி முன் தீர்ப்புகளின் அடிப்படைடையில் பார்க்கும்போது சம்பவ தேதியில் சம்பவ இடத்தில் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் 1ம் எதிரி இல்லை என்ற 1ம் எதிரி தரப்பு வாதம் ஏற்புடையதாக இல்லை.

275. 19-6-20ஆம் தேதி கொரோனா பணி சம்பந்தமாக ஒருவரை தனிமைப்படுத்த அரசுகல்லூரியில் ஒப்படைத்துவிட்டு வந்ததாகவும் அது குறித்து தனது மனைவிக்கு வாட்ஸ் அப்பில் செய்தியை பகிர்ந்து கொண்டதாகவும் 7ம் எதிரி சாட்சியம் அளித்துள்ளார், 19.06.2020 ஆம் தேதி இரவு 8 மணி லிருந்து 20.06.2020 ஆம் தேதி காலை 2.15 க்கு இடையே மேற்படி குற்ற சம்பவம் நடந்ததாக சிபிஐ தரப்பில்

கூறப்படுகிறது 7ம் எதிரி சொன்ன ஊருக்கும் சாத்தான் குளம் காவல் நிலையத்திற்கும் இடையே வெகு தூரம் இல்லை அந்த புகைப்படம் இருபதாம் தேதி பகிர்வு செய்யப்பட்டதாக காணப்பட்டாலும் உண்மையில் எந்த தேதி எடுக்கப்பட்டது என நிரூபிக்கப்படவில்லை, ஒரு புகைப்படம் எந்த செல்போனிலிருந்து எடுக்கப்பட்டதோ அந்த செல்போனிலுள்ள பதிவைத்தான் முதல் நிலை சாட்சியமாக கருத முடியும் அவ்வகையில் பார்க்கும் போது எந்த செல்போனிலிருந்து எடுக்கப்பட்டதோ அந்த செல்போனை தாக்கல் செய்திருக்க வேண்டும் மற்றும அவரை சாட்சியாக விசாரித்து அவரிடம் சாட்சிய சட்டம் 65 B படியான சான்றிதழை பெற்று தாக்கல் செய்திருக்க வேண்டும். ஆனால் எந்த போனில் அந்த எடுககப்பட்டதாக கூறப்படுகிறதோ அந்த போனை 7ம் எதிரி தாக்கல் செய்யவில்லை. அந்த செல்போன்க்கு உரிய நபரை சாட்சியாக விசாரிக்கவில்லை மாறாக தனது செல்போனை தாக்கல் செய்துள்ளார். மேலும் வாட்ஸ் அப் செய்திகளை பொய்யாக உருவாக்கவும் முடியும், 7ம் எதிரி சம்பவத்தில் ஈடுபட்டதாக அ.சா. 20, 26, 44, 47 குறிப்பிட்டு சாட்சி அமைத்துள்ளனர், அவர்களுக்கும் 7ம் எதிரிக்கும் தனித்த விரோதம் இருப்பதாக நிரூபிக்கப்படவில்லை. மதுக்கடைக்கு ரோந்து போனதாக நிரூபிக்க 7ம் எதிரி தரப்பில் ஆவணசாட்சியம் எதுவும் முன்னிடப்படவில்லை. அதுகுறித்து 7-ம் எதிரி தரப்பில் மதுக்கடைகாரரும் சாட்சியாக அழைத்து விசாரிக்கப்படவில்லை. இந்நிலையில் 7ம் எதிரி சம்பவ சமயத்தில் தான் வெளியூரில் இருந்ததாக கூறப்படுவதும் ஏற்புடைய வாதமாக தோன்றவில்லை.

276. பாக்கெட் நோட்புக் சிபிஐ தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. நோட்புக் சிபிஐயிடம் ஒப்படைக்கப்பட்டதாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல் எசா ஆ ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது ஆனால் நோட்புக் சிபிஐயிடம் ஒப்படைக்கப்பட்டதாக நிருபிக்க அந்த தகவலை அளித்துள்ள காவல்துறை அதிகாரியை எதிரிகள் தரப்பில் சாட்சியாக அழைத்து விசாரிக்கவில்லை ஒரு சாட்சி குறிப்பிட்ட இடத்தில் இருந்துள்ளாரா என்பதற்கு பாக்கெட் நோட்புக் அவசியப்படலாம் ஆனால் பாக்கெட் நோட் எதிரியால்

தயாரிக்கப்பட்ட நிலையில் அதில் உண்மை சங்கதிதான் குறிப்படிபட்டிருக்கும் என கூறமுடியாது எனவே அதனை எதிரி தனக்கு சாதகமாக பயன்படுத்த முடியாது. இந்நிலையில் Krishnamoorthy Vs. State என்ற வழக்கின் தீர்ப்பு எதிரி தரப்புக்கு உதவுவதாக இல்லை என்றே இந்த நீதிமன்றம் தீர்மானிக்கின்றது

277. 19-6-20ம்தேதி இரவு 1-ம் எதிரி ஸ்ரீதர் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் இருந்ததாக அசா 9, 10, 13,20, 25, 26, 44, 47 சாட்சியம் அளித்துள்ளனர்.

278. குறிப்பாக ஓட்டுநர் துணை இன்றி 1ம் எதிரி ரோந்து சென்று இருக்க முடியாது இந்நிலையில் 1ம் எதிரியின் வாகன ஓட்டுனரான அசா 26 வாகன நோட்டு புத்தக்தில் பல இடங்களுக்கு சென்றதாக குறிப்பிட்டிருந்தாலும் நீதிமன்றத்தில் அளித்துள்ள சாட்சியத்தில் இரவு ரோந்து சென்றதாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. Rough Duty Register ல் பக்கம் 62-63ல் 19.06.2020 அன்று இரவு ரோந்து ஆய்வாளருக்கு ஒதுக்கப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை. ஆய்வாளருக்கு பகல் ரோந்து என்று தான் குறிப்பிடப்பட்டுளளது. மேலும் காவல் அதிகாரி எப்போது காவல் நிலையத்தை விட்டு வெளியே செல்கிறார் என்பது குறித்து எப்போது திரும்பி வருகிறார் என்பது குறித்தும் பொது நாட்குறிப்பில் குறிப்பிட வேண்டியது மிக அவசியமாகும் ஆனால் பொது நாட்குறிப்பில் 1ம் எதிரி இரவு ரோந்து சென்றதாக குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை.

279. மேலும் அ.சா.20, 44 மற்றும் 47ல் செல்லத்துரை சம்பவத்தில் ஈடுபட்டதாக குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளனர்.

280. Section 34 of the Indian Penal Code regarding common intention, is a rule of evidence that establishes joint liability for criminal acts committed by multiple persons. Hence seperate charge need not be framed. It is sufficient if common intension is established.

281. எனவே அயலிட வாதத்தை எதிரிகள் நிரூபிக்க தவறியுள்ள நிலையில் முன்னிடப்பட்டுள்ள சாட்சியங்களின் அடிப்படையில் பார்க்கும் போது ஏற்கனவே சிபிஐ தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ள படி 2 முதல் 7, 9 எதிரிகள் இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்) கீழும் மற்றும் 1,8 எதிரிகள் இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34 மற்றும் இதச பிரிவு 302 உ/இ 34 மற்றும் இதச பிரிவு 302 இதச பிரிவு 109 உ/இ இதச பிரிவு114 (2 எண்ணம்)ன் கீழும் குற்றம் இழைத்துள்ளதாக இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

<u>இதச பிரிவு 342</u>

282. அ.சா.ஆ.61 ஆவணத்தை பரிசிலித்து பார்க்கும் போது கோவிட் காலத்தில் அத்யாவசிய கடைகள் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை திறந்திருக்க அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், மற்ற கடைகள் காலை 10.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை திறந்திருக்க அனுமதிக்கப்பட்டிருந்தது தெரியவருகிறது. இதுகுறித்து தூத்துக்குடி மாவட்ட ஆட்சியாளரது மேலாளர் 01.06.2020 முதல் 30.06.2020 வரை கோவிட் தொற்று காரணமாக பொதுமக்கள் வெளியில் செல்லக்கூடாது என்றும், அத்தியாவசிய தோவைகளுக்கு மட்டும் வெளியே செல்லலாம் என்றும், மேலும், உணவகங்கள், டீ ஸ்டால் ஆகியன காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்க அனுமதி வழங்கியும் இதர கடைகள் மற்றும் டாஸ்மாக் கடைகள் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கலாம் என்றும், அனுமதித்து மாவட்ட ஆட்சியரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று சாட்சியம் அளித்துள்ளார். மொபைல் கடை அத்யாவசிய கடையில் வராது என்றும், மற்ற கடை இனங்களில் வரும் என்றும் வைத்துக்கொண்டாலும் காலை 10.00 மணிமுதல் இரவு 08.00 மணி வரை அது திறந்திருக்க அனுமதிக்கப்ட்டுள்ளது தெரியவருகிறது.

283. அ.சா.பொ.57 ல் Annexure B Pendrive ல் – 19.06.2020–ம் தேதி CH03 கோப்பில் உள்ள 4வது Video பதிவில் 19.06.2020ம் தேதி சுமார் 21:45:55 மணிக்கு ஜெயராஜ்

காவல்துறை சுமோ வண்டியை நோக்கி செல்வதாக பதிவு காட்சிகள் காணப்படுகிறது. அ.சா.பொ.57 ல் Annexure B Pendrive ல் – 19.06.2020–ம் தேதிய CH03 கோப்பில் உள்ள 4வது Video பதிவில் 21:48:38க்கு ஜீப் கிளம்புவது தெரிகிறது.

284. அ.சா.பொ.57 ல் Annexure B Pendrive ல் – 19.06.2020–ம் தேதிய CH03 கோப்பில் உள்ள 4வது Video பதிவில் 21:50:38க்கு பென்னிக்ஸ் தனது நண்பருடன் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்றதற்கான காட்சிகள் பதிவாகியுள்ளது.

285. எனவே முன்னிடப்பட்டுள்ள சாட்சிகளின் அடிப்படையில் பார்க்கும்போது 19–6–20ம் தேதி இரவு 08.00 மணிக்கு முன்பே ஜெயராஜ் ஆய்வாளரது ஜீப்பில் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் என்பதும், அதன் பின் பென்னிக்ஸ் அவரது நண்பருடன் இருசக்கர வாகனத்தில் சென்றுள்ளார் என்பதும் தெரிய வருகிறது.

286. அதனடிப்படையில் பார்க்கும் போது கோவிட் காலத்தில் அரசு விதிமுறைக்கு முரணாக ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் கடையை திறந்து வைத்திருந்ததாகவும், கடையை மூடும் படி சாத்தான்குளம் போலீசார் சொன்னதாகவும், மற்றவர்கள் அங்கிருந்து சென்றுவிட்டதாகவும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் மட்டும் அசிங்கமாக பேசியதாகவும், கொலை மிரட்டல் விடுத்ததாகவும், போலீசாரைபணி செய்யவிடாமல் தடுத்ததாகவும், தரையில் உருண்டு பிரண்டதாகவும், சாத்தான்குளம் காவல்நிலையத்தில் பதியப்பட்டுள்ள குற்ற எண்.312/2020 தொடர்பான வழக்கு பொய்யன சங்கதிகளின் அடிப்படையிலான என்பது நிருபணமாகின்றது.

287. முன்னிடப்பட்டுள்ள சாட்சியங்களின் அடிப்படையில் பார்க்கும் போது 19.06.2020ம் தேதி இரவு சாத்தான்குளம் காவல்நிலையத்தின் கதவை பூட்டி ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ்சை அடித்து காயப்படுத்தியுள்ளனர் என்பது ஏற்கனவே முந்தைய பாராக்களில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

288. உண்மையான வழக்கில் கூட கைதியை அடிக்க போலீசாருக்கு அதிகாரம் கிடையாது, இந்நிலையில் நியாயமான காரணமின்றி காவல் நிலையத்தில் அடைத்து வைத்து அடித்து காயப்படுத்தியுள்ளதையும் அதை நியாயப்படுத்த ஒரு பொய்யான வழக்கை பதிவு செய்துள்ளதையும் கருத்தில் கொண்டு பார்க்கும்போது 1 முதல் 9 எதிரிகள் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை சட்ட விரோதமாக சாத்தான்குளம் காவல்நிலையத்தில் தடுத்து வைத்து இதச பிரிவு 342 (2 எண்ணம்) ன் கீழ் தண்டிக்கதக்க குற்றத்தை இழைத்துள்ளனர் என்றும் சிபிஐ தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் இந்த நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

<u>இதச பிரிவு 201</u>

289. கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண் 1 அசா 50 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவுப்படி காவல்நிலையத்தின் சி.சி.டி.வி கேமரா பதிவுகளை கைப்பற்ற வேண்டி அதன் D.V.R–யை தூத்துக்குடி மாவட்ட நீதிமன்றத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்த கணினி அலுவலர் சுரேஷ் முன்னிலையில் பார்வையிட்ட போது அது 1T.B. அளவுடைய Hard Disk ஆக இருந்த போதிலும் அதன் பதிவுகள் தினமும் அழியும் வண்ணம் அமைக்கப்பட்டிருப்பதும் அதில் 19.06.2020ம் தேதி தொடர்புடைய பதிவுகள் எதுவும் இல்லை என்பதும் தெரிய வந்தது என்றும் அவ்வாறு அழியப்பட்டிருந்த பதிவுகளை கணினி தடயவியல் துறை மூலம் மீட்டெடுக்க அதை சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியதாகவும் சாட்சியமளித்துள்ளார், அந்த 1 TB hard disk அ.சா.பொ.26 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த Hard Disk தடய அறிவியல் ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளதில் அது Sl.No.–1/Q–1 ஆக குறியிடப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு கிடைக்கப்பெற்றுள்ள அறிக்கை அசா ஆ 249ல் 1 TB hard disk ல் 03–01–2020 முதல் 11–06–2020 வரையான காட்சிபதிவுகள் காணப்பட்டதாகவும் 24–06–2020 முதல் 28–06–2020 வரையான காட்சிபதிவுகளும் காணப்பட்டதாகவும் 13–6–2020 முதல் 23–6–2020 வரையான காட்சி பதிவுகள் காணப்படவில்லை என்றும் அந்த காலகட்டத்தில் காட்சிகள் ஏதேனும் அழிக்கப்பட்டிருந்தால் அதை மீட்டெடுக்க இயலவில்லை என்றும் , DVR இல்லாத நிலையில் அது அழிக்கப்பட்டதா இல்லையா

என்பது பற்றி கருத்துரைக்க இயலாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது, இந்நிலையில் சாத்தான்குளம் நீதித்துறை நடுவர் மூலம் மேற்படி டி வி ஆர் வரவழைக்கப்பட்டு இயக்கி பார்த்தபோது அது இயங்காமல் போய் உள்ளது, அதன் user name, password குறித்து எதிரிகளிடம் வினவியதில் அவர்கள் user name, password எதுவும் சமர்பிக்கவில்லை. தூத்துக்குடி SP அலுவலகத்தில் தொழில்நுட்பப் பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றியுள்ள திரு.மாரியப்பன் காவல் ஆய்வாளராக பணியாற்றியுள்ள திரு.கிருஷ்ணசாமி நீ.ம.சா.2 மற்றும் நீ.ம.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் user name, password தற்போது ஞாபகம் இல்லை என சாட்சியமளித்துள்ளனர், எனினும் அசா 50 ன் சாட்சியத்தின் படி பார்க்கும்போது 28.06.2020ம் தேதி கோவில்பட்டி நீதித்துறை நடுவர் அ.சா.50 சாத்தான்குளம் காவல் நிலையத்தை சோதனையிட்டபோதே அதில் 19.06.2020ம் தேதி தொடர்புடைய சிசிடிவி காட்சி பதிவுகள் எதுவும் இல்லை என்பது நிருபணமாகின்றது, ,மேற்படி சிசிடிவி எதிரிகளின் கட்டுப்பாட்டில் இருந்துள்ள நிலையில் அதில் 19– 6 –20 மற்றும் 20 –6– 20 ம் தேதிக்கான காட்சி பதிவுகள் என்ன ஆனது என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு சாட்சிய சட்டம் பிரிவு 106ன்படி எதிரிகளுக்கே உள்ளது. இந்நிலையில் அந்த சிசிடிவி காட்சிபதிவுகள் எப்போது அழிக்கப்பட்டது என சிபிஐ தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என எதிரிகள் தரப்பில் வாதிட்டுள்ளது ஏற்புடைய வாதமாக இல்லை. தடய அறிவியல் அறிக்கை அ.சா.ஆ.249–ன் படி 13–6–2020 முதல் 23–6–2020 வரை சுமார் 10 நாட்கள் மட்டும் காட்சிபதிவுகள் காணப்படவில்லை என்பது தெரியவருகின்றது. மேற்படி காலகட்டத்தில் சிசிடிவியில் தொழில்நுட்ப கோளாறு எதுவும் இருந்ததாகவோ அது குறித்து சரிசெய்ய நடவடிக்கை எதுவும் எடுத்ததாகவோ நிருபிக்க எதிரிகள் தரப்பில் தக்க சாட்சியம் ஏதும் முன்னிடப்படவில்லை. பத்து நாட்கள் மின் தடை இருந்ததாகவும் நிரூபிக்கப்படவில்லை. 19–6–20 ஆம் தேதி சாத்தான்குளம் காவல் நிலையத்தில் CCTNS பணிகள் நடைபெற்றதாக கூறப்படுவதையும் எஸ்பி அலுவலகத்திற்கு மைக்கில் தகவல்கள் தெரிவிக்கப்பட்டதாக கூறப்படுவதையும் வழக்கு சம்பந்தமான ஆவணங்கள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதாக கூறப்படுவதையும் கருத்தில் கொண்டு பார்க்கும் போது சம்பவ தேதியில் மேற்படி காவல் நிலையத்தில் மின்சாரம் இருந்துள்ளது

நிருபணமாகின்றது. மேலும் காவல் நிலையத்தின் உள்ளே மின்சாரம் இருந்ததாக அசா 47 சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் மின் தடையாலோ தொழில்நுட்பக் கோளாறாலோ சிசிடிவியில் சம்பவ தேதியில் காட்சி பதிவுகள் பதிவாகாமல் போயிருக்கலாம் என எதிரிகள் தரப்பில் மழுப்பலாக வாதிட்டுள்ளது ஏற்புடைய வாதமாக இல்லை என்றே இந்த நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

290. காவல் நிலைய நடவடிக்கைகளை உறுதி செய்யவே சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் அதன் பதிவுகள் தினமும் அழியும்வண்ணம் ஏன் அமைக்கப்பட்டிருந்தது என்பதற்கு எதிரிகள் தரப்பில் ஏற்கதக்க விளக்கம் எதுவும் அளிக்கப்படவில்லை. மேலும் அவ்வாறு ஒரு நாளைக்கு பதிவு செய்வது போல் வடிவமைத்தாலும் அதனை பேக்அப் எடுத்து வைத்திருக்க வேண்டிய பொறுப்பும் அது குறித்து சர்ச்சை எழும்போது அதை தாக்கல் செய்யவேண்டிய பொறுப்பும் எதிரிகளுக்கு உள்ளது. குறிப்பாக 1ம் எதிரி மேற்படி காவல்நிலையத்தின் ஆய்வாளர் ஆவார். மேலும் இந்த வழக்கில் 8,9 ம் எதிரி மேற்படி காவல்நிலையத்தில் கம்பியூட்டர் பிரிவில் பணியாற்றி உள்ளார். இந்நிலையில் சிசிடிவி காட்சி பதிவுகள் பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என எதிரிகள் தரப்பில் வாதிடுவது ஏற்புடைய வாதமாக தோன்றவில்லை.

291. 22.06.2020ம் தேதியன்று இரவு தான் வேலை முடித்து கிளம்பும் சமயத்தில் பென்னிக்ஸ் இறந்துவிட்டார் என்று தகவல் வந்தது என்றும், அப்போது காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் காவல் நிலையத்தில் அனைத்து காவலர்களையும் அழைத்து ஸ்டேசனில் எதுவும் நடக்காதது போல் காண்பித்துக் கொள்ள வேண்டும் ஸ்டேசனில் யாரும் அடிக்காதது போல் காண்பித்துக் கொள்ள வேண்டும் என்றும், கோவில்பட்டி கிளைச்சிறையில் தான் அவர்கள் இறந்துவிட்டார்கள் அங்கு நடந்த சம்பவம் போல் இருக்கட்டும் என்றும் தங்களிடம் சொன்னார் என்றும், மேலும், பென்னிக்ஸ் இறந்த தகவல் கேட்டவுடன் காவல்நிலையத்தில் இருந்த ஆவணங்களை மாற்றினார்கள் என்றும், G.D., Rough Duty Roaster மாற்றினார்கள் என்றும், குற்ற எண்.312/2020 வழக்கு

சம்பந்தப்பட்ட ஆவணங்களை அவர்களுக்கு தகுந்தாற் போல் மாற்றிக் கொண்டார்கள் என்றும், அவர்களுக்கு தெரிந்த நபர்கள் பெயர்களை போட்டு Statement எழுதிக் கொண்டார்கள் என்றும், காவல் ஆய்வாளர் அந்த சமயத்தில் சி.சி.டி.வி கேமராவில் உள்ள பதிவுகளை அழித்துவிடணும் என்று வெயில்முத்து மற்றும் தாமஸ் அவர்களிடம் சொன்னார் என்றும், வெயில்முத்து மற்றும் தாமஸ் ஆகியோர் சி.சி.டி.வி கேமராவில் இருந்த பதிவுகளை அழித்துவிட்டார்கள் என்றும் அ.சா.47 சாட்சியம் அளித்துள்ளார். அசா 47க்கும் எதிரிகளுக்கும் தனிப்பட்ட விரோதம் எதுவும் இல்லை. இந்நிலையில் அசா 47 ரேவதியின் சாட்சியத்தை கருத்தில் கொண்டு பார்க்கும் போது 19.06.2020ம் தேதி இரவு சாத்தான்குளம் காவல் நிலையத்தில் நடந்துள்ள நிகழ்வுகள் குறித்த சிசிடிவி காட்சிகளை தடயத்தை அ்ழிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் 1ம் எதிரி ஸ்ரீதர் சொன்னதன் அடிப்படையில் வெயில்முத்து மற்றும் தாமஸ் அழித்துள்ளதாக சிபிஐ தரப்பில் நிருபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

292. மேலும் திருநெல்வேலி வட்டார தடயஅறிவியல் ஆய்வகத்தில் துணை இயக்குநரான திருமதி விஜயலாத அ.சா.42 ஆக விசாரிக்கப்பட்டுளள்தில் காவல்நிலையத்தை சுற்றியுள்ள இடங்களை தடயப்பொருட்கள் ஏதாவது காணப்படுகிறதா என்று தேடிப் பார்த்ததில் காவல்நிலையத்திற்கு பின்பக்கத்தில் உள்ள காலியிடத்தில் குவிக்கப்பட்டிருந்த குப்பைகளின் நடுவே காணப்பட்ட வெள்ளைசட்டை – 1, பச்சை பார்டர் போட்ட வெள்ளை வேட்டி – 1, நீலக்கலர் ஜட்டி – 1, வெள்ளைகலர் கையில்லாத முண்டாபனியன் – 1, நீலம் வெள்ளை கட்டம் போட்ட கைக்குட்டை – 1, வெள்ளை மற்றும் yellowish orange கட்டம் போட்ட முழுக்கை சட்டை – 1, கருப்பு நிற பேண்ட் – 1, பச்சைநிற ஜட்டி – 1, buckle இல்லாத பெல்ட் – 1 ஆகியவற்றை குப்பையின் நடுவே கைப்பற்றியதாகவும் சாட்சிமளித்துள்ளார். திருநெல்வேலி தடய அறிவியல் ஆய்வக துணை இயக்குநர் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களிடம் சமர்பித்துள்ள தடயப்பொருட்கள் சம்மந்தமான பட்டியல் அசா ஆ 146 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது சாத்தான்குளம் காவல்நிலைய குப்பையில் இருந்து CBI அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ள மஞ்சள் மற்றும் ஆரஞ்சு

சட்டைஅ.சா.பொ–12 ஆகவும் சாத்தான்குளம் காவல்நிலைய குப்பையில் இருந்து CBI அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ள வெள்ளை நிற Sam, STKM என எழுதப்பட்ட சட்டைஅ.சா.பொ–13 ஆகவும் சாத்தான்குளம் காவல்நிலைய குப்பையில் இருந்து CBI அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ள வேஸ்டிஅ.சா.பொ–17 ஆகவும் சாத்தான்குளம் காவல்நிலைய குப்பையில் இருந்து CBI அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ள கருப்பு கலர் பேண்ட்அ.சா.பொ–20 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

293. தான் பார்க்கும் போது ஜெயராஜ் என்பவர் வெள்ளைவேஷ்டி, அரைக்கை வெள்ளை சட்டை, வெள்ளை கலர் பனியன், ப்ளூ கலர் டிரவுசர் மாதிரியான ஜட்டி அணிந்திருந்தார் என்றும் பென்னிக்ஸ் பிளாக் கலர் பேண்ட், வெள்ளை நிற பனியன், மஞ்சள்நிற மற்றும் ஆரஞ்சு நிற உடைய கட்டம் போட்ட சட்டை, ப்ளூ கலர் ஜட்டி அணிந்திருந்தார் என்றும்,அசா 44 சாட்சியம் அளித்துள்ளார்.

294. அரசு தரப்பு சான்று பொருள் 57 இல் பி இணைப்பில் உள்ள சிசிடிவி காட்சிகளை பரிசீலித்து பார்க்கும் போது 19–6–20 ஆம் தேதி ஜெயராஜ் காவல்துறை ஜீப்பை நோக்கி செல்கையில் வெள்ளை வேஷ்டி வெள்ளை சட்டையும் அணிந்திருந்தது தெரிய வருகிறது. அதன்பின் பென்னிக்ஸ் அவரது நண்பருடன் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது கருப்பு கலர் பேண்ட் மஞ்சள் கலர் சட்டை அணிந்து இருந்துள்ளது தெரிய வருகிறது

295. சாத்தான்குளம் காவல்நிலையம் PSR அ.சா.ஆ.99ஐ பரிசிலித்து பார்க்கும் போது ஜெயராஜ் வெள்ளை வேஷ்டி சட்டை, வெள்ளை பனியன், ஜட்டி அணிந்திருந்ததாகவும், பென்னிக்ஸ் மஞ்சள் சட்டை, வேஷ்டி, வெள்ளை பனியன், ஜட்டி அணிந்திருந்ததாகவும், குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பாக்கும்போது ஜெயராஜ் அணிந்திருந்த வெள்ளை வேஷ்டி சட்டை, வெள்ளை பனியன், ஜட்டி மற்றும்

பென்னிக்ஸ் அணிந்திருந்த மஞ்சள் சட்டை, வேஷ்டி, வெள்ளை பனியன், ஜட்டி அணிந்திருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது,

296. அதன் அடிப்படையில் பார்க்கும்போது ஜெயராஜ் மற்றும் பெனிக்ஸ் அணிந்திருந்துள்ள ஆடைகள் சாத்தான்குளம் காவல் நிலைய குப்பையில் போடப்பட்டுள்ளது தெரிய வருகிறது. சாத்தான்குளம் காவல் நிலையத்திற்குள் நடந்த நிகழ்ச்சிகள் குறித்து எதிரிகளுக்கு தான் தெரியும் அது குறித்து விளக்க வேண்டிய பொறுப்பு எதிரிகளுக்கே உள்ளது இந்நிலையில் அந்த பொருள்கள் எவ்வாறு சாத்தான்குளம் காவல் நிலைய குப்பைக்கு சென்றது என்பது குறித்து எதிரிகள் தரப்பில் தக்க விளக்கம் எதுவும் அளிக்கப்படவில்லை. அதன் அடிப்படையில் பார்க்கும்போது அதனை அழிக்கும் நோக்கத்திலேயே 1 முதல் 9 எதிரிகள் அங்கு கொண்டு போய் போட்டுள்ளதாக சிபிஐ திறப்பில் வாதிடுவது ஏற்புடைய வாதமாக உள்ளது.

297. மேலும் அத்தானின் வேஷ்டியிலும், அவர் மகன் லுங்கியிலும் இரத்தம் ஊறிப்போயிருந்தது என அ.சா.5 சாட்சியமளித்துள்ளார். அதனை கைப்பற்றி கிளை சிறைசாலையிலோ நீதிமன்றத்திலோ எதிரிகள் ஒப்படைத்திருக்கவேண்டும். ஆனால் அதை கைப்பற்றவுமில்லை அதை அவர்கள் சிறைசாலையிலோ நீதிமன்றத்திலோ ஒப்படைத்திருக்கவுமில்லை. மருத்துவமனையில் சாமத்துரை, செல்லத்துரை, முத்துராஜ், எஸ்.ஐ பாலகிருஷ்ணன் இருந்ததாகவும், பென்னிக்சின் சட்டையில் இரத்தக்கசிவு இருந்ததால் திக்கான கலரில் மாற்றச் சொன்னார்கள் என்றும், டார்க் ப்ளூ கலரில் சட்டையை மாற்றிக் கொடுத்து வண்டியில் ஏற்றி கோர்ட்டிற்கு போனார்கள் என்றும் அசா 7 சாட்சியம் அளித்துள்ளார். திக்கான கலரில் ரத்தம்படிந்த துணிகளை மருத்துவமனையில் வைத்து மாற்றியதாக அசா 5 சாட்சியம் அளித்துள்ளார். அப்போது ரத்தம் படிந்த துணிகளை பென்னிக்சின் உறவினர்கள் ஒருவேளை குப்பையில் போட்டிருந்தாலும் வழக்கிற்கு ஆதாரமான மதிப்புமிக்க சாட்சியமான அந்த துணிகளை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்க எதிரிகள் நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும்

ஆனால் அவற்றை ஏன் கைப்பற்றவில்லை என்பதற்கு எதிரிகள் தரப்பில் தக்க விளக்கம் எதுவும் அளிக்கப்படவில்லை,இந்நிலையில் தங்களை பாதுகாத்து கொள்ளவே தடையங்களை மறைக்க அவற்றை எதிரிகள் கைப்பற்ற தவறியுள்ளனர் என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

298. பென்னிக்ஸ் மற்றும் அவரது அப்பாவின் புட்டத்தில் இரத்தக்கசிவு இருந்ததால் பையில் இருந்த போர்வையை எடுத்து பின்சீட்டில் விரித்தார்கள் என்று அசா 7 சாட்சியமளித்துள்ளார். செல்லத்துரை மற்றும் முத்துராஜ், ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை கோவில்பட்டி கிளை சிறைச்சாலைக்கு கொண்டு சென்றதாக கூறப்படுகின்ற நிலையில் அவற்றை அவர்கள் பத்திரப்படுத்தி நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு தாக்கல் செய்யாததை கருத்தில் கொண்டு பார்க்கும் போது தடயங்களை அழிக்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே அவற்றை எதிரிகள் கைப்பற்றாமல் இருந்துள்ளனர் என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

299. மறுநாள் காலை 8.30 மணியளவில் காவல்நிலையம் வந்ததாகவும், காவல்நிலையத்தில் கவுச்சி வாடை அடித்தது. என்றும், துப்புரப்பணியாளர் வேல்முருகன் என்பவர் துடைத்துக் கொண்டிருந்தார் என்றும், அவருக்கு வாய் பேச முடியாது என்றும், காதும் கேட்காது என்றும், துடைப்பதற்கு பயன்படுத்திய Harpic, Lizol ஆகியவற்றை சைகையின் மூலமாக யார் வாங்கி கொடுத்தது என்று கேட்டதாகவும், காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் வாங்கி கொடுத்ததாக கூறினார் என்றும் அசா 44 சாட்சியமளித்துள்ளார்,

300. ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இருவரது புட்டத்திலும் இரத்தம் கசிந்திருந்ததாக அ.சா.45 சாட்சியம் அளித்துள்ளார். ஆடைகளிலும் ஆய்வாளரது அறையின் காலண்டிரிலும், காவல் நிலைய சுவர்களிலும் சார்பு ஆய்வாளர் அறையிலிருந்து கைப்பற்றப்பட்ட லத்தியிலும் இரத்தம் படிந்திருந்துள்ளது மரபணு பரிசோதனை மூலமும் நிருபணமாகியுள்ளது. இரத்த வாடை அடித்ததாகவும் சுவர்களில் இரத்தத்தை துடைத்ததாகவும், லைசால் போட்டதாகவும் அ.சா.33 சாட்சியம் அளித்துள்ளார்.

இந்நிலையில் தரையில் இரத்தம் வழியவில்லை என எதிரிகள் தரப்பில் வாதிட்டுள்ளது ஏற்புடைய வாதமாக இல்லை. மேலும் நீதிமன்ற கூண்டிலிருந்து ஸ்ரீதரை அடையாளம் காட்டி ரத்த கரையை தொடைக்க சொன்னதாக சாட்சியமளித்துள்ளார், பின்னிட்டு பொதுவாக துடைக்க சொன்னதன்பேரில் துடைத்தது போல் சாட்சியம் அளித்துள்ளார். எது எப்படி இருப்பினும் மேற்படி காவல் நிலையத்தில் ரத்தம் இருந்துள்ளதும் அது துடைக்கப்பட்டுள்ளது என்பதும் நிருபணமாகின்றது. 20-6-2020 அன்று காலை 07.00 மணிக்கு பொதுநாட்குறிப்பில் 1-ம் எதிரி காவல் நிலையம் வந்ததாக குறிப்பு உள்ளது. எனவே அது அழிக்கப்பட்டது தனக்கு தெரியாது என்றும் 1-ம் எதிரி கூறுவது ஏற்புடையதாக இல்லை.

301. பாலகிருஷ்ணன் வாகனத்திற்கு ஏற்பாடு செய்யச் சொன்னதாக அசா 7 சாட்சி அளித்தள்ளார். நாகராஜன் என்பவரது வாகனத்தில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் கோவில்பட்டி கிளை சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். அதன் அடிப்படையில் பார்க்கும்போது அரசு வாகனத்தை பயன்படுத்தினால் இரத்தக்கறை தெரியவந்துவிடும் என்பதால் தனியார் வாகனத்தில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை கிளை சிறைச்சாலைக்கு கொண்டு சென்றுள்ளனர் என்பது நிரூபணம் ஆகிறது அதுவும் சாட்சியத்தை மறைத்த குற்றமாகவே கருதப்படுகிறது.

இந்நிலையில் முன்னிடப்பட்டுள்ள சாட்சியங்களின் அடிப்படையில் பார்க்கும் போது 1 முதல் 9 எதிரிகள் இதச பிரிவு 201 (2 எண்ணம்) ன் கீழ் தண்டிக்கதக்க குற்றத்தை இழைத்துள்ளனர் என சிபிஐ தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் இந்த நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

<u>இதச பிரிவு 195</u>

302. இதச பிரிவு 195 ல் Whoever gives or fabricates false evidence intending thereby to cause, or knowing it to be likely that he will thereby cause, any person to be convicted of an offence which by the law for the time being in force in India is not capital, but punishable with imprisonment for life, or imprisonment for a term of seven years or upwards, shall be punished as a person convicted of that offence would be liable to be punished. என குறிப்பிடப்பட்டுள்ளது.

303. புகார்கொடுத்தால் பதிய வேண்டியது கடமை என்றும் உண்மைதன்மைகுறித்து பிறகு தான் தீர்மானிக்கமுடியும் என்றும் இதச பிரிவு 193 to 196, 199, 200, 205 to 211 and 228ன்கீழ் வழக்கு பதிவுசெய்ய நீதிமன்ற புகார் அவசியம் என்றும் ஒரே சங்கதி குறித்து இரு முறை தீர்மானிக்முடியாது என்றும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இறந்துவிட்டதால் இந்தவழக்கு அற்றுபோய் விட்டது என்றும் அது குறித்து ,இந்நீதிமன்றத்தில் தீர்மானிக்க முடியாது என்றும் எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. புகாரிலுள்ள சங்கதி உண்மை என்பது போல் 4 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது, குற்ற எண் 312/2020 வழக்கு கோப்பு எதையும் தான் தயாரிக்கவில்லை என்றும் அதற்கும் 1ம் எதிரிக்கும் சம்மந்தம் ஏதமில்லை என்றும் 1ம் எதிரி தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. K.Ammaiappan Vs. P.Suresh CDJ 2025 SC 1186 ஆகிய முன்தீர்ப்புகள் எதிரிகள் தரப்பில் முன்னிடப்பட்டுள்ளது.

304. குற்ற எண் 312/2020 புகார் பொய்யானது என்பது குறித்து ஏற்கனவே விரிவாக தீர்வு கண்டுள்ளோம்

305. a) K.Ammaiappan Vs. P.Suresh என்றவழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் As per section 195 Cr.P.C in order to take cognizance for the offence under Sections 193 to 196, 199, 200, 205 to 211 and 228 IPC, the complaint has to be given in writing by the court or some other court. Which is subordinate. But in this case, procedures under Sections 195 and 340 Cr.P.c were not followed to take cognizance for the offence under Sections 193, 196, 200, 206, 207, 209. என தீர்ப்பளித்துள்ளது.

b) CDJ 2025 SC 1186 Anurag Bhatnagar & another Vs. State (Nct of Delhi) & Another, என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதி மன்றம் successive FIRs in respect of a same cognizable offence are not maintainable provided that on the basis of the earlier FIR, investigation have been completed and the trial had either resulted in conviction or acquittal of the accused. என தீர்ப்பளித்துள்ளது.

306. இந்த வழக்கில் குற்ற எண் 312/20 வழக்கு சம்பந்தமாக வேறு எந்த நீதிமன்றத்திலும் விசாரணை நடத்தப்படவில்லை எதிரிகள் விடுவிக்கப்பட்டிருக்கவும் இல்லை.

307. இந்த வழக்கை பொறுத்தவரை குற்ற எண் 312–20 தொடர்பான பொய்புகார் நீதின்றத்திற்கு வெளியே காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டுள்ளது. எங்கு தீங்கு நிகழ்கிறதோ அங்கு தீர்வும் இருக்க வேண்டும். இந்த வழக்கில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இறந்துவிட்ட நிலையில் அவர்கள் மீது போடப்பட்ட வழக்கு உண்மையா பொய்யா என்பதை தீர்மானிக்க வேண்டியது அவசியமானது என்பதால் அது குறித்து குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. அதை எதிர்த்து சீராய்வு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

308. இவ்வழக்கில் 3ஆம் எதிரி, ஜெயராஜ் மற்றும பென்னிக்சை அடித்து காயப்படுத்தி உள்ளார், இந்நிலையில் மேற்படிப்பு புகாரியில் உள்ள சங்கதி பொய்யானது என தெரிந்து 3ஆம் எதிரி குற்ற எண் 312/2020 வழக்கை பதிவு செய்துள்ளார். எனவே மேற்படி முன் தீர்ப்பு இந்த வழக்கின் சங்கதி சூழ்நிலைகளுக்கு பொருந்துவதாக இல்லை என இந்த நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

309. 1ம் எதிரியை பொருத்தவரை அவர் சாத்தான்குளம் காவல் நிலைய அதிகாரி ஆவார் மேற்படி பொய் வழக்கு பதிவு செய்யப்பட்ட சமயத்தில் அவர் காவல் நிலையத்தில் இருந்து உள்ளார். மேலும் அ.சா.47 இன் சாட்சியத்தை பரிசீலித்து பார்க்கும்போது அந்த புகாரை கொடுப்பதற்கு 1ம் எதிரி ஆலோசனையும் கூறியுள்ளார் என்பது நிருபிக்கப்பட்டுள்ளது.

310. ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு எதிராக சாத்தான்குளம் காவல்நிலையத்தில் தொடரப்பட்ட குற்ற எண். 312/2020 வழக்கில் கூறப்பட்டுள்ள இதச பிரிவு 506(2)–ன்

கீழான குற்றம் 7 வருடம் வரை தண்டிக்கத்தக்கதாகும். அதனடிப்படையில் பார்க்கும்போது சுமார் 7 வருடம் வரை தண்டிக்கதக்க பொய்யான குற்ற வழக்கு ஒன்றை ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு எதிராக தொடர்ந்து 1,3,4,6 எதிரிகள் இதச பிரிவு 195 உ/இ இதச பிரிவு 34 (2எண்ணம்)ன் கீழ் தண்டிக்கதக்க குற்றத்தை இழைத்துள்ளனர் என சிபிஐ தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் இந்த நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

<u>இதச பிரிவு 211</u>

311. இதச பிரிவு 211 ல் Whoever with intent to cause injury to any person, institutes or causes to be instituted any criminal proceeding against that person, or falsely charges any person with having committed an offence, knowing that there is no just or lawful ground for such proceeding ro charge against that person, shall be punished with imprisonment of either description for a term which may extend to two years or with fine or with both. And if such criminal proceeding be instituted on a false charge of an offence punishable with death imprisonment for life or imprisonment for seven years or upwards, shall be punishable with imprisonment of either description for a term which may extend to seven years and shall also be liable to fine. கூறப்பட்டுள்ளது,

பொய்யான வழக்கை தொடர்வதால் அதில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும், பொருள் ரீதியாகவும் தீங்கு ஏற்படும் என்பதை எவரும் மறுக்க முடியாது. அந்த வழக்கில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ரிமாண்ட் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுமிருந்துள்ளனர். மேலும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் உறவினர்களிடமே கோவில்பட்டி கிளைசிறைச்சாலைக்கு கொண்டு செல்ல வாகன ஏற்பாடு செய்யும்படி கூறி தனியார் வாகனத்தில் கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலைக்கு ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை கொண்டு சென்றுள்ளனர். இந்நிலையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் கொடுமை ஏற்பட்டுள்ளது என்பதை மறுக்க முடியாது. ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு எதிராக சாத்தான்குளம் காவல் நிலையத்தில் தொடரப்பட்ட குற்ற எண்.

312/2020 வழக்கில் இதச பிரிவு 506(2) கீழான குற்றம் 7 வருடம் வரை தண்டிக்கத்தக்கதாகும் அதனடிப்படையில் பார்க்கும்போது ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு தீங்கு ஏற்படும் என்பதை தெரிந்து சுமார் 7 வருடம் வரை தண்டிக்கத்தக்க பொய்யான குற்ற வழக்கு ஒன்றை ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு எதிராக தொடர்ந்துள்ளதன் மூலம் 1,3,4,6 எதிரிகள் இதச பிரிவு 211 உ/இ இதச பிரிவு 34 (2எண்ணம்)ன் கீழ் குற்றம் இழைத்துள்ளதாக சிபிஐ தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

## இதச பிரிவு 218

312, இதச பிரிவு 218 ல் Whoever being a public sevant and being as such public servant charged with the preparation of any record or other writing, frames that record or writing in a manner which he knows to be incorrect, with intent to cause or knowing it to be likely that he will thereby cause loss or injury to the public or to any person or with intent thereby to save or knowing it to be likely that he will thereby save any person from legal punishment or with intent to save, or knowing that the is likely thereby to save any property from forfeiture or other charge to which it is liable by law, shall be punished with imprisonment of either description for a term which may extend to three years or with fine or with both என குறிப்பிடப்பட்டுள்ளது.

குற்றத்தை தடுப்பவரும் குற்றம் பற்றி தகவல் அளிக்க வேண்டியவர்களும் பொது ஊழியரே ஆவார். சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 வழக்கு ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை தாக்கி காயப்படுத்தியதிலிருந்து தப்பித்துக்கொள்ளவேண்டும் தங்களையும் மற்ற எதிரிகளையும் காப்பாற்ற வேண்டி பொய்யாக வனையப்பட்டுள்ளது நிரூபிக்கப்பட்டுள்ளது. மேற்படி பொய் புகாரில் 4ம் எதிரி கையெழுத்திட்டுள்ளார். அதில் 6ம் எதிரி அறிவேன் சாட்சி என கையெழுத்திட்டுள்ளார். மேலும் அதனை பெற்று 3ம் எதிரி அந்த வழக்கை பதிவு செய்துள்ளார். அதனடிப்படையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் சிறையிலும் அடைக்கப்பட்டுள்ளனர். நீ.சா.ஆ.1 ஆவணத்தை பரிசிலித்து பார்க்கும்போது குவிமுச

161(3)ன் கீழான வாக்குமூலங்களும் ரிமாண்ட் செய்யும் சமயத்தில் சாத்தான்குளம் நீதித்துறை நடுவரிடம் சமர்பிக்கப்பட்டிருக்கப்படவில்லை என்பது தெரியவருகிறது. அதற்கு எதிரிகள் தரப்பில் தக்க விளக்கம் எதுவும் அளிக்கப்படவில்லை. மேலும் பார்வை மகஜரில் 3ம் எதிரியின் கையெழுத்து கூட காணப்படவில்லை. மேலும் அ.சா.பொ.57 சிசிடிவி காட்சிகளை பரிசிலித்து பார்க்கும் போது 20.06.2020ம் தேதி அதிகாலை 00.30 மணிக்கு மேற்படி பார்வை மகஜரில் குறிப்பிடப்பட்ட சாட்சிகளின் முன்னிலையில் 3ம் எதிரி சம்பவ இடத்தை பார்வையிட்டதாக வீடியோ பதிவு எதுவும் காணப்படவில்லை. மேலும் கோவிட் சமயத்தில் அதிகாலை 00.30 மணிக்கு சாட்சிகள் இருந்ததாகவும் அவர்கள் முன் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாகவும் கூறப்படுவது நம்பத்தகுந்ததாக தோன்றவில்லை. மேற்படி சாட்சியங்களின் அடிப்படையில் பார்க்கும்போது 1,3,4,6 எதிரிகள் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு எதிராக பொய்யான குற்ற வழக்கை தொடர்ந்துள்ளனர் என்பதும் அதன் முலம் 1,3,4,6 எதிரிகள் இதச பிரிவு 218 உ/இ இதச பிரிவு 34 (2எண்ணம்)ன் கீழ் தண்டிக்கதக்க குற்றம் இழைத்துள்ளனர் என்பதும் சிபிஐ தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என இந்த நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

313. மேலே கண்டவாறு சாட்சிகளை பரிசீலித்த வகையில்

1ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ 34 மற்றும் இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 109 உ/இ இதச பிரிவு 114, (2எண்ணம்) ன் கீழும்

2ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201(2 எண்ணம்),, இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்)–ன் கீழும்

3ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்) ன் கீழும்

4ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்) இதச பிரிவு 201 (2 எண்ணம்), , இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்) ன் கீழும்

5ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்),, இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34 (2எண்ணம்)ன் கீழும்

6ம் எதிரி இதச பிரிவுகள் 342 (2 எண்ணம்), 201 (2 எண்ணம்), இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்) ன் கீழும்

7ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201(2 எண்ணம்),, இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்)—ன் கீழும்

8ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201(2 எண்ணம்),, இதச பிரிவு302 உ/இ இதச பிரிவு 34 மற்றும் இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 109 உ/இ இதச பிரிவு 114(2 எண்ணம்) ன் கீழும்

9ம் எதிரி இதச பிரிவுகள் 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201(2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்)— ன் கீழும்

குற்றம் இழைத்துள்ளதாக அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிருபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. அவ்வாறே தீர்வு காண வேண்டிய வினாவிற்கு தீர்வு காணப்படுகின்றது.

314. எனவே 1ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ 34 மற்றும் இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 109 உ/இ இதச பிரிவு 114, (2எண்ணம்) ன் கீழும்

2ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201(2 எண்ணம்),, இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்)–ன் கீழும்

3ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்), இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்) ன் கீழும்

4ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்) இதச பிரிவு 201 (2 எண்ணம்), , இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்) ன் கீழும்

5ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201 (2 எண்ணம்),, இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34 (2எண்ணம்)ன் கீழும்

6ம் எதிரி இதச பிரிவுகள் 342 (2 எண்ணம்), 201 (2 எண்ணம்), இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்) ன் கீழும்

7ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201(2 எண்ணம்),, இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்)–ன் கீழும்

8ம் எதிரி இதச பிரிவு 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201(2 எண்ணம்),, இதச பிரிவு302 உ/இ இதச பிரிவு 34 மற்றும் இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 109 உ/இ இதச பிரிவு 114 ன் கீழும் (2 எண்ணம்)

9ம் எதிரி இதச பிரிவுகள் 342 (2 எண்ணம்), இதச பிரிவு 201(2 எண்ணம்),, இதச பிரிவு302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்)– ன் கீழும் குற்றவாளிகள் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது

315. எ.சா.ஆ.18 பொய் ஆவணம் என தெரியவருவதால் அதுகுறித்து 1ம் எதிரிக்கு எதிராக வழக்கு தொடர உரிய நீதிமன்றத்தில் புகார் அளிக்க நீதிமன்ற கண்காணிப்பாளருக்கு சமர்பிக்கும் படி உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பரை என்னால் சுருக்கேழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பிரதி எடுக்கப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு, கையெழுத்திடப்பட்டு, இன்று 23.03.2026–ம் தேதி இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

தண்டனை குறித்து தீர்மானிக்க இவ்வழக்கு 30.03.2026–ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகின்றது.

ஒப்பம். க.முத்துக்குமரன்

முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி

மதுரை.

**<u>30.03.2026</u>**

A1 to A9 produced. Report of state and central await. At request of PP call on 02.04.2026. Remand extended by then.

ஒப்பம். க.முத்துக்குமரன்

முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி

மதுரை.

**<u>02.04.2026</u>**

State and Union report received. A1 to A9 produced. Questioned on sentence, answer recorded. A4 and PP side written submission filed. Heard both side argument on sentence and heard argument of amicus for A9 and heard A4 argument of Victum counsel. For perusal of records and for sentence call on 06.04.2026. Remand extended for A1 to A9 till 06.04.2026. (Answers of accused annexed).

ஒப்பம். க.முத்துக்குமரன்

முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி

மதுரை.

A1 - [illegible]

(199)

1. Age : [illegible] வயது 56
2. Dependent : [illegible]
3. Income : [illegible] 61,000/-
4. Educational Qualification : MA [illegible]
5. Previous Conviction : இல்லை
6. Illness : [illegible] plate [illegible] plate [illegible]
7. Any Other Particular :

[illegible] 62 [illegible]

[illegible]

2/4/26

[illegible]

1. Age : [illegible] 43
2. Dependent : [illegible]
3. Income : [illegible]
4. Educational Qualification : BBA
5. Previous Conviction : [illegible]
6. Illness : [illegible]
7. Any Other Particular :

[illegible]

203

[illegible]

1. Age : [illegible] 50
2. Dependent : [illegible]
3. Income : [illegible]
4. Educational Qualification : BSc, [illegible]
5. Previous Conviction : [illegible]
6. Illness : [illegible]
7. Any Other Particular :

[illegible]

[illegible signature] 02/4/2026

[illegible]

205

1. Age : [illegible] 51
2. Dependent : [illegible]
3. Income : [illegible] 51,000/-
4. Educational Qualification : 10 [illegible]
5. Previous Conviction : [illegible]
6. Illness : [illegible]
7. Any Other Particular :

[illegible]

[illegible]

02.04.2026

A5 [illegible]

1. Age : 51
2. Dependent : மனைவி - 1 இருக்கிறார்
3. Income : Security வேலை ரூ. 5100 உள்ளது
4. Educational Qualification : 12 படித்துள்ளேன்
5. Previous Conviction : இல்லை
6. Illness : இல்லை
7. Any Other Particular :

[illegible]

A. Soundar
2-4-2026

[illegible]

1. Age : [illegible] 36
2. Dependent : [illegible]
3. Income : [illegible]
4. Educational Qualification : Diploma electrical
5. Previous Conviction : [illegible]
6. Illness : [illegible]
7. Any Other Particular : [illegible]

[illegible]

A7- [illegible]

211

1. Age : [illegible] 42
2. Dependent : [illegible]
3. Income : [illegible] 40,000/-
4. Educational Qualification : B Com
5. Previous Conviction : [illegible]
6. Illness : Back pain [illegible]
7. Any Other Particular :

[illegible]

[signature]

2/4/2026

A8 [illegible]

1. Age : [illegible] 38.
2. Dependent : [illegible]
3. Income : [illegible] 35 [illegible]
4. Educational Qualification : BA History [illegible]
5. Previous Conviction : [illegible]
6. Illness : [illegible]
7. Any Other Particular :

[illegible] CCTNS [illegible]

[illegible]

K. [signature]
02/04/2020

[illegible]

1. Age : 42 [illegible]
2. Dependent : [illegible]
3. Income : [illegible] 35,000/-
4. Educational Qualification : [illegible]
5. Previous Conviction : [illegible]
6. Illness : [illegible]
7. Any Other Particular : [illegible]

[illegible]

[illegible signature] 02.04.2026

6.4.2026

தண்டைண குறித்த தீர்ப்பு

316. எதிரிகளுக்கு வழங்கவிருக்கும் தண்டனை குறித்து எதிரிகளிடம் 02.04.2026 அன்று வினவப்பட்டுள்ளதில் எதிரிகள் கீழ்கண்டவாறு பதில் அளித்துள்ளார்கள்.

1ம் எதிரி

குற்ற சம்பவம் நடந்ததாக கூறப்படும் சமயத்தில் தனக்கு வயது சுமார் 56 என்றும், தனக்கு ஒரு மகள் உள்ளார் என்றும் அவர் திருமணமாகி அவரது கணவருடன் மனஸ்தாபத்தில் உள்ளார் என்றும், பிழைப்பூதிமாக சுமார் 61,000/– பெற்று வருவதாகவும், தான் M.A வரலாறு படித்துள்ளதாகவும், தனக்கு முன் தண்டனை எதுவும் இல்லை என்றும், கழுத்தில் பிளேட் உள்ளது என்றும், தண்டுவடத்தில் சி4, சி5–ல் பிளேட் இருப்பதாகவும், குற்றம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் 1ம் எதிரிக்கு இல்லை என்றும், அரசுத்தரப்பில் கூறப்படுவது போல் குற்றம் ஏதும் நடக்கவில்லை என்றும், சம்பவம் இடத்தில் தான் இல்லை என்றும் தான் நிரபராதி என்றும், தண்டனை ஏதும் கொடுக்காதீர்கள் என்றும் தனக்கு தற்போது 62 வயதாகிறது என்றும் தண்டிக்கவேண்டாம் என்றும் எடுத்துரைத்துள்ளார்.

2ம் எதிரி

2ம் எதிரி தனக்கு தற்போது 43 வயதாகிறது என்றும், தனக்கு மனைவியும் 2 பெண் குழந்தைகளும் உள்ளனர் என்றும் பிழைப்பூதியமாக சுமார் ரூ.58,000/– பெற்று வருவதாகவும் தான் B.B.A படித்துள்ளதாகவும், தனக்கு முன் தண்டனை எதுவும் இல்லை என்றும், மூத்த பெண்ணிற்கு 12 வயது என்றும் 2வது பெண்ணிற்கு 8 வயது என்றும், இந்த வழக்கிற்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை என்றும், தான் குற்ற

சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றும், தான் நிரபராதி என்றும், தான் சம்பாதித்துதான் மனைவி பிள்ளைகளை காப்பாற்ற வேண்டும் என்றும் தனக்கு சொத்து எதுவும் இல்லை என்றும் தான் வாடகை வீட்டில் குடியிருந்ததாகவும் குறைந்த பட்சம் தண்டனை வழங்க வேண்டுவதாகவும் மீதி காலத்தில் குழந்தைகளுடன் வாழ விரும்புவதாகவும், எடுத்துரைத்துள்ளார்.

<u>3ம் எதிரி</u>

தற்போது தனக்கு சுமார் 50 வயதாகிறது என்றும் தனக்கு அம்மா, அப்பா, மனைவி, ஒரு பெண் மற்றும் ஒரு ஆண் குழந்தை உள்ளது என்றும், பிழைப்பூதியமாக சுமார் ரூ.46,000/– பெற்று வருவதாகவும், B.Sc., M.L படித்துள்ளதாகவும், தனக்கு முன் தண்டனை எதுவும் இல்லை என்றும், தனக்கு இதய நோய் உள்ளது என்றும், தான் நிரபராதி என்றும், உடல்நலம் சரியில்லை என்றும், ஸ்டன்ட் வைத்துள்ளதாகவும், தண்டனை வழங்குவதாக இருந்தால் குறைந்தபட்ச தண்டனை வழங்கவேண்டும் என்றும், எடுத்துரைத்துள்ளார்.

<u>4ம் எதிரி</u>

தனக்கு தற்போது 51 வயதாகிறது என்றும், தனக்கு அம்மா, மனைவி மற்றும் 4வது படிக்கும் பெண் குழந்தை உள்ளது என்றும் பிழைப்பூதியாக மாதம் சுமார் ரூ.51,000/– பெற்று வருவதாகவும், பத்தாம் வகுப்பு படித்து ITI படித்துள்ளதாகவும், கண் சரியாக தெரியவில்லை என்றும், தான் நிரபராதி என்றும், தன் குடும்பம் கஷ்டப்படுகிறது என்றும் தான் தான் குடும்பத்தை பார்த்துக்கொள்ளவேண்டும் என்றும் எனவே குறைந்த பட்சதண்டனை வழங்க வேண்டும் என்று 4ம் எதிரி தரப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும் 4ம் எதிரி தரப்பில் எழுத்துமூலமான பதில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் அழகுமாரிச்செல்வம், ரவிச்சந்திரன், ரேவதி ஆகியோர்களும் குற்றவாளிகள் என்றும் , 4ம் எதிரியும் அவருக்கு பின் உள்ள எதிரிகளும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை அடிக்க வில்லை என்றும், பென்னிக்ஸ், எஸ்ஜ ரெம்பவும் அடிக்கிறார் உதவி செய்யுங்கள் என்று கேட்டதாகவும் தான் பென்னிக்சை அழைத்துக்கொண்டு ஸ்ரீதர் அறைக்கு சென்றதாகவும் தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்க வந்துள்ளார் என்று சொன்னதாகவும் ஸ்ரீதர் காலை பிடித்து பென்னிக்ஸ் மன்னிப்பு கேட்டதாகவும் ஆனால் ஸ்ரீதர் பென்னிக்சை காலால் அடித்து தள்ளிவிட்டு குற்றவாளிக்கு நீயும் சப்போர்ட் பன்றியா என்று தன்னை திட்டியதாகவும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை ஜட்டியை கழற்றி அம்மனமாக லாக்கப்பில் போடவேண்டும் என இன்ஸ்பெக்டர் கூப்பிடுவதாக ஜெயசேகர் சொன்னதாகவும், அது தன் வேலை இல்லை என்று சென்றுவிட்டதாகவும், தனக்கு எந்த குற்ற வழக்கும் இல்லை என்றும், சிறு தண்டனை கூட பெற்றதில்லை என்றும், சிபிஐயில் உண்மையை தெரிவித்திருந்ததாகவும் தான் நிரபராதி என்றும் தன் மனைவி நூறு நாள் திட்டத்தில் வேலை செய்து குடும்பம் நடத்துவதாகவும், எழுத்து மூலமாக தெரிவித்துள்ளார்.

<u>5ம் எதிரி</u>

தனக்கு 51 வயதாகிறது என்றும், மனைவி 2 குழந்தைகள் உள்ளனர் என்றும் பிழைப்பூதியமாக ரூ.51,410/– பெற்று வருவதாகவும் 12ஆம் வகுப்பு வரை படித்துள்ளதாகவும், தனக்கு முன் தண்டனை எதுவும் இல்லை என்றும் 6 வருடமாக

சிறையில் இருப்பதாகவும், குறைந்த பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்றும், இந்த வழக்கிற்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை என்றும் எடுத்துரைத்துள்ளார்.

6ம் எதிரி

தனக்கு தற்போது 36 வயதாகிறது என்றும் தனக்கு அம்மா, மனைவி மற்றும் 6 வயதுள்ள மகன் இருப்பதாகவும் பிழைப்பூதியமாக சுமார் ரூ.24,000/- பெற்று வருவதாகவும், Diploma Electrical படித்துள்ளதாகவும், தனக்கு முன் தண்டனை எதுவும் இல்லை என்றும், தான் நிரபராதி என்றும், தன்னை நம்பித்தான் தன் குடும்பம் உள்ளது என்றும் எனவே தனக்கு குறைந்த பட்ச தண்டனை வழங்கவேண்டும் என்றும், தன் பெயரில் சொத்து எதுவும் இல்லை என்றும் எடுத்துரைத்துள்ளார்.

7ம் எதிரி

தனக்கு தற்போது 42 வயதாகிறது என்றும் அம்மா, அப்பா, மனைவி மற்றும் 2 ஆண் குழந்தைகள் உள்ளனர் என்றும் பிழைப்பூதியமாக சுமார் ரூ.40,000/- பெற்று வருவதாகவும், தனக்கு முதுகு வலி இருப்பதாகவும் , தான் B.Com படித்துள்ளதாகவும், தன் பேரில் சொத்து எதுவும் இல்லை என்றும், ஏற்கனவே 6 வருடமாக உள்ளே இருப்பதாகவும், அதனால் குறைந்த பட்சதண்டனை வழங்கவேண்டும் என்றும், எடுத்துரைத்துள்ளார்.

8ம் எதிரி

தனக்கு தற்போது 38 வயதாகிறது என்றும் மனைவி, 2 குழந்தைகள் மற்றும் உடன் பிறந்தவர்கள் 6 பேர் உள்ளனர் என்றும் பிழைப்பூதியமாக சுமார் ரூ.35,544/– பெற்று வருவதாகவும், B.A வரலாறு படித்ததாகவும் ஆனால் முடிக்கவில்லை என்றும் , தனக்கு முன் தண்டனை எதுவும் இல்லை என்றும், Appendix operation செய்துள்ளதாகவும் தான் நிரபராதி என்றும் CCTNS பணி செய்ததாகவும் , தண்டனை வழுங்கதுவதாக இருந்தால் குறைந்த பட்ச தண்டனை வழங்கவேண்டும் என்றும் 8ம் எதிரி எடுத்துரைத்துள்ளார்.

9ம் எதிரி

தனக்கு தற்போது 42 வயதாகிறது என்றும், தனக்கு மனைவியும், 1 பெண் மற்றும் 1 ஆண் குழந்தையும் உள்ளனர் என்றும், கணவரால் கைவிடப்பட்ட மனநலம் பாதிக்கப்பட்ட தங்கையும் உள்ளதாகவும் தான் BBA வரை படித்துள்ளதாகவும் 10 வருடமாக மூல நோயால் அவதிப்பட்டு வருவதாகவும், தான் நிரபராதி என்றும், தன்னை நம்பி குடும்பம் உள்ளது என்றும் தண்டனை வழங்குவதாக இருந்தால் குறைந்த பட்ச தண்டனை வழங்கவேண்டும் என்றும், தன் குடும்பத்தில் வேறு யாரும் வேலைக்கு போகவில்லை என்றும், தங்கைக்கு மனநலம் சரியில்லை என்றும் எடுத்துரைத்துள்ளார்.

317. தண்டனை குறித்து முன்வைக்கப்பட்ட வாதங்கள்

சிபிஐ தரப்பு வாதம்

காவல் நிலைய மரணம் என்பது மனித உரிமையை அப்பட்டமாக மீறுவதாகும் என்றும் அது அரிதிலும் அரிதான வழக்கு என்ற வரையறைக்குள் வரும் என்றும், காவல் நிலைய மரணம் என்பது பண்பட்ட சமுதாயத்தில் மிக மோசமான குற்றம் என்றும், இத்தகைய குற்றங்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்க வேண்டும் என்றும்,

போலீசாரைப் பற்றி விமர்சித்து பேசியதற்காக எவ்வித குற்றமும் செய்யாத ஜெயராஜ் அவரது மகன் பென்னிக்சை சாத்தான்குளம் காவல்நிலையத்தில் சட்டவிரோதமாக அடைத்து வைத்து எதிரிகள் இடைவெளிவிட்டு இடைவெளிவிட்டு பலமணிநேரம் லத்தியால் கொடூரமாக அடித்து காயப்படுத்தி அதன்மூலம் மரணத்தை விளைவித்துள்ளனர் என்றும் இத்தகைய குற்றங்களில் ஈடுபடுபவருக்கு கருணை காட்டக்கசுடாது என்று Mehboob Batcha Vs. State represented by S.P என்ற வழக்கில் பாரா 12ல் மாண்புமிகு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது என்றும் மேலும் காவல்துறை மரணங்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்படும் என்பது குறித்து மேற்படி தீர்ப்பை அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச காவல்துறை தலைவருக்கும் உள்துறை அமைச்சகம் மூலம் அனைத்து காவல்நிலைய அதிகாரிகளுக்கும் சுற்றறிக்கையாக அனுப்பும்படியும் 2011ஆம் வருடமே உத்தரவிட்டுள்ளது என்றும் இருந்தும் எதிரிகள் இந்த குற்றத்தை இழைத்துள்ளனர் என்றும், குற்றம் எந்த விதத்தில் நிகழ்ந்து என்பதை கருத்தில் கொள்ளவேண்டும் என்றும் இவ்வழக்கில் தந்தை முன் மகனும் மகன் முன் தந்தையும் நிர்வாணப்படுத்தப்பட்டு அடித்து கொடூரமாக சித்ரவதை செய்யப்படுள்ளனர் என்றும், நிராயுதபாணியாக இருந்துள்ள நிலையில்கூட எதிரிகள் கருணை எதுவும் காட்டாமல் கொடூரமாக அடித்து சித்ரவதை செய்து தகப்பன் மகன் இருவருக்கும் மரணத்தை ஏற்படுத்தியுள்ளனர் என்றும், ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு ஏற்படத்தப்பட்ட கொடுமைகள் குறித்து மேற்படி சம்பவத்தை நேரில் கண்ணுற்றுள்ள சாட்சிகள் தெளிவுபட சாட்சியம் அளித்துள்ளனர் என்றும் எனவே சமூகத்தை பாதுகாக்க எதிரிகளுக்கு உட்சபட்சபட்ச தண்டனை

வழங்க வேண்டும் என்றும் குறைந்த பட்சம் வாழ்நாள் முழுவதும் சிறை தண்டனை வழங்கவேண்டும் என்றும் சிபிஐ தரப்பில் கற்றறித்த வழக்குரைஞர் வாதிட்டுள்ளார். சிபிஐ தரப்பில் Mehboob Batcha Vs. State represented by S.P 2011 7 SCC 45, Macchi Singh and others Vs State of Punjab 1983 3 SCC 470, Dharma Rama Bhagare Vs. State of Maharashtra (1973) 1 SCC 537.Bachan Singh Vs State of Punjab (1980) 2 SCC 684 ஆகிய முன் தீர்ப்புகள் முன்னிடப்பட்டுள்ளன.

<u>பாதிக்கப்பட்டவர் தரப்பு வாதம்</u> ஜெயராஜ்-ன் மனைவி செல்வராணி, தன் கணவரும் மகனும் எந்த தப்பிற்கும் போனதில்லை என்றும் அவர்கள் எந்த தப்பும் செய்யவில்லை என்றும், உறவினர்கள் விட்டுவிடும்படி கெஞ்சி கேட்டும் எதிரிகள் காவல்நிலையத்தில் வைத்து பூட்டி அடித்து கொடுமைபடுத்தியுள்ளனர் என்றும், இனி யாருக்கும் இதுபோல் நிகழாமல் இருக்க அதிக பட்ச தண்டனை வழங்கவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

<u>பாதிக்கப்பட்டவரது வழக்குரைஞர் தரப்பு வாதம்</u> ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் எந்த தவறும் செய்யவில்லை என்றும் தங்களது அதிகாரத்தை காட்டுவதற்காக எதிரிகள் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை அடித்து கொடுமைப்படுத்தி அதன் மூலம் மரணத்தை விளைவித்துள்ளனர் என்றும் மருத்துவ உதவி கூட செய்து கொடுக்கவில்லை என்றும் சுமார் பத்து இருபது அடிகள் அடிக்கும் போதே கூட இனியும் அடித்தால் அவர்கள் தாங்கமாட்டார்கள் என்பதையும் அவர்களுக்கு மரணம் ஏற்படக்கூடும் என்பதையும் நன்கு அறிந்திருந்தும் எதிரிகள் ஜெயராஜ் மற்றும் பெனிக்சை இரவுமுழுவதும் கொடூரமாக தாக்கி அவர்களுக்கு மரணத்தை விளைவித்துள்ளனர் என்றும் தங்களை திருத்திக்கொள்ள போதிய அவகாசம் இருந்தும் எதிரிகள் இறக்கமற்ற முறையில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை தாக்கி காயப்படுத்தி மரணத்தை விளைவித்துள்ளனர் என்றும், எனவே எதிரிகளுக்கு உச்சபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட நபர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர்

வாதிட்டுள்ளார்.

<u>1ம் எதிரி தரப்பு வாதம்</u>

தான் குற்றவாளி இல்லை என்றும், தனக்கு வயது 62 ஆகிறது என்றும், 6 வருடமாக சிறையில் இருந்துவருவதாகவும், தண்டனை வழங்குவதாக இருந்தால் குறைந்த பட்ச தண்டனை வழங்கவேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

<u>2ம் எதிரி தரப்பு வாதம்</u>

2ம் எதிரிக்கு முன் தண்டனை எதுவும் இல்லை என்றும், 2ம் எதிரியை நம்பி இரண்டு குழந்தைகள் உள்ளனர் என்றும், நீண்டகாலமாக இந்த வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது என்றும், 6 வருடங்களாக சிறையில் இருந்து வருவதாகவும், தண்டனை வழங்குவதாக இருந்தால் குறைந்த பட்ச தண்டனை வழங்கவேண்டும் என்றும் வாதிடப்பட்டுள்ளது.

<u>3ம் எதிரி தரப்பு வாதம்</u>

இந்த வழக்கிற்கும் 3ம் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், ஏற்கனவே 3ம் எதிரிக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது என்றும் ஸ்டன்ட் மாற்றப்பட்டுள்ளது என்றும், சிபிஐ தரப்பு வழக்கு படியே பார்த்தாலும் கோபத்தால் மேற்படி குற்றம் இழைக்கப்பட்டதாக கூறப்படுகின்ற நிலையில் உச்ச பட்ச தண்டனை வழங்க இயலாது என்றும், உடலில் முக்கிய உறுப்பு எதிலும் காயம் இருப்பதாக நிரூபிக்கப்படவில்லை என்றும், மரணம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் எதிரிக்கு இல்லை என்றும், சிபிஐ தரப்பு வழக்கு படியே காவல்நிலையம் சென்றது வரை பிரச்சனை எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை என்றும், பென்னிக்ஸ் காவல்நிலையம் சென்றபின் பிரச்சனை ஏற்படுத்தியுள்ளார் என்றும், அரிதிலும் அரிதான வழக்கு என ஒருவேளை இந்த நீதிமன்றம் தீர்மானித்தாலும் எதிரியின் குடும்ப பின்னணி கருதி குறைந்த பட்ச தண்டனை வழங்கவேண்டும் என்று வாதிடப்பட்டுள்ளது.

<u>4ம் எதிரி தரப்பு வாதம்</u>

பொதுவாக இத்தகைய வழக்குகளில் ஆயுள் தண்டனை மட்டுமே கொடுக்கப்படவேண்டும் என்பது பொதுவான விதி என்றும், அரிதிலும் அரிதான வழக்காக இருந்தால் கூட ஆயுள் தண்டனை வழங்குவது போதுமானதாகாது என்றால் மட்டுமே மரண தண்டனை வழங்க முடியும் என்றும், பச்சன் சிங் வழக்கில்

குறிப்பிட்டுள்ளது போல் கடுமையான காரணிகள் மற்றும் மிதமான காரணிகளை அட்டவணை படுத்தி சீர்தூக்கிப்பார்த்து அதன் பின் திருத்துவதற்கான வாய்ப்பு இல்லை என்றால் மட்டுமே மரண தண்டனை வழங்க முடியும் என்றும், ஆயுள் தண்டனை வழங்குவதாக இருந்தால் கூட அமர்வு நீதிமன்றம் ஆயுள் காலம் வரை சிறை தண்டனை என தீர்ப்பளிக்கமுடியாது என்றும், தண்டனை வழங்கும் போது நோக்கம் , குற்றம் செய்யப்பட்ட விதம், ஆகியவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் குற்றம் செய்யவேண்டும் என்ற எண்ணம் எதிரிகளுக்கு இல்லை என்றும், எனவே குறைந்த பட்ச தண்டனை வழங்கவேண்டும் என்றும், 4ம் எதிரி தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. 4ம் எதிரி தரப்பில் RamNaresh Vs. State of Chattisgarh,(2012 2 SCC Cri 382) Santhosh kumar Santhi Bhusan Bariyar Vs, State of Maharastra (2009 2 SCC Cri 1150), Bacchan Singh Vs. State of Punjab (1980 2 SCC 684), 2025 LIVE LAW SC 1231 ஆகிய முன் தீர்ப்புகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

<u>5ம் எதிரி தரப்பு வாதம்</u>

5ம் எதிரியின் குடும்ப சூழ்நிலை கருதி குறைந்த பட்ச தண்டனை வழங்கவேண்டும் என்றும் வாதிடப்பட்டுள்ளது.

<u>6ம் எதிரி தரப்பு வாதம்</u>

குற்றம் திட்டமிட்டு செய்யப்பட்டதாக நிரூபிக்கப்படவில்லை என்றும், அரசுக்கு எதிரான வழக்கு மற்றும் தீவிரவாதத்திற்கு எதிரான வழக்கிற்கு மட்டுமே அதிக பட்ச தண்டனை வழங்கலாம் என்றும், இவ்வழக்கில் அபாயகரமான ஆயுதம் எதுவும் பயன்பட்டதாக நிருபிக்கப்படவில்லை என்றும், உடலின் முக்கிய உறுப்பில் காயம் எதுவும் ஏற்படவில்லை என்றும், குற்றத்தின் தன்மை மற்றும் தீவிரத்தை அறிந்து தண்டனை வழங்கவேண்டும் என்றும் இவ்வழக்கு அரிதிலும் அரிதான வழக்கு என்ற வரையறைக்குள் அமைந்து வரவில்லை என்றும் எதிரி ஏற்கனவே 6 வருடங்கள்

சிறைதண்டனை அனுபவித்து வருவதாகவும், எனவே தண்டனை வழங்குவதாக இருந்தால் குறைந்த பட்ச தண்டனை வழங்கவேண்டும் என்று வாதிடப்ப்டடுள்ளது.

<u>7ம் எதிரி தரப்பு வாதம்</u>

ஒவ்வொரு வழக்கின் சூழ்நிலைகளை முழுமையாக பரிசிலிக்க வேண்டும் இவ்வழக்கில் அபாயகயரமான ஆயுதம் பயன்பட்டதாகவோ, முன்திட்டமிடுதல் இருந்தாகவோ நிரூபிக்கப்படவில்லை எ ன்றும் Macchi Vs. State of Punjab என்ற வழக்கில் ஒவ்வொரு வழக்கும் அதன் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில் தீர்மானிப்படவேண்டும்எ ன்றும் முன் தண்டனை எதுவும் இல்லை என்றும், குடும்பம் கஷ்டப்படுகிறது என்றும் எதிரியின் நன்நடத்தையை கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும், Bacchan Singh Vs. State of Punjab என்ற வழக்கில் கடுமையான காரணிகள் என்ன மற்றும் மிதமான காரணிகள் என்ன என்பது குறித்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்றும், தண்டனை வழங்குவதாக இருந்தால் அவற்றை பரிசீலித்து குறைந்த பட்ச தண்டனை வழங்கவேண்டும் என்றும் வாதிடப்பட்டுள்ளது.

<u>8ம் எதிரி தரப்பு வாதம்</u>

8ம் எதிரி skilled labor என்றும், இதச பிரிவு 109ன் கீழ் மட்டுமே குற்றச்சாட்டு வனையப்பட்டிருந்தது என்றும் பின்னிட்டு இதச பிரிவு 34ம் இணைக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் தண்டனை வழங்குவதாக இருந்தால் குறைந்த பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்றும், வாதிடப்பட்டுள்ளது.

<u>9ம் எதிரி தரப்பில்</u> Amicus வாதிடுகையில் 9ம் எதிரிக்கும் எதிராக சாட்சியம் எதுவும் இல்லை என்றும், 9ம் எதிரி நிரபராதி என்றும், தண்டனை வழங்குவதாக இருந்தால் குறைந்த பட்ச தண்டனை வழங்கவேண்டும் என்று வாதிடப்பட்டுள்ளது.

318. எதிரிகளுக்கு வழங்கவிருக்கும் தண்டனையைக்குறித்து தீர்மானிக்க எதிரிகளுடைய சம்பளப்பட்டியல் GPF /CPS விவரம் மற்றும் சொத்து் பட்டியல் கோரியதில் தூத்துக்குடி மாவட்ட கண்காணிப்பாளரது அறிக்கை 30.03.2026 அன்று கிடைக்கப்பெற்றுள்ளது. அதில் 1ம் எதிரியை தவிர மற்றவர்களுக்கு சொத்து இருப்பதாக குறிப்பிடப்படவில்லை, சம்பளம் GPF /CPS விவரம் எதிரிகளின் வயது , வருமானம், சொத்து, கல்விதகுதி மனநலம் மற்றும் எதிரிகளை சார்ந்துள்ள நபர்கள் குறித்த சுருக்கம் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது

| | |
|---|---|
| A1– S.Sridhar | 1.Age – 55<br><br>2. Dependent – Wife, One Daughter<br><br>3.Income – Rs.61,913/-<br><br>4.Educational Qualification – B.A<br><br>5. GPF Amount – Rs.16,94,894/-<br><br>6. Property – Nil<br><br>Purchased a house site measuring 7 cents and 348 Sq.ft (3400 Sq.ft) in survey No.720/2/B2 Kamarajar Nagar, Andipatti from Tr.D.Rengarajan, Andipatti at the cost of Rs.43,053/- from his savings as per the permission of the Deputy Inspector General of Police, Madurai Range vide proceedings in 7659/A3-905/96, dated 25.09.1996.<br>7. Medical Report – Not suffering with any primary psychiatric illness at present |
| A2– K.Balakrishnan | 1.Age – 36<br><br>2. Dependent – Wife, Two Daughters<br><br>3.Income – Rs.54,289/-<br><br>4.Educational Qualification– B.B.A |

| | |
|---|---|
| | 5. CPS Amount – Rs.16,78,826/-<br><br>6. Property – NIL<br><br>7. Medical Report – Not suffering with any primary psychiatric illness at present |
| A3-P.Raghu Ganesh | 1.Age – 45<br><br>2. Dependent – Wife, One daughter, One Son and his Parents<br><br>3.Income – Rs.46,470/-<br><br>4.Educational Qualification- B.Sc., M.A.,<br><br>5. GPF Amount – Rs.5,28,950/-<br><br>6. Property – NIL<br><br>7. Medical Report – Not suffering with any primary psychiatric illness at present |
| A4-S.Murugan | 1.Age – 45<br><br>2. Dependent – Wife, One daughter and his mother<br><br>3.Income – Rs.51,410/-<br>4.Educational Qualification- SSLC<br><br>5. GPF Amount – Rs.10,19,117/-<br><br>6. Property – NIL<br><br>7. Medical Report – Not suffering with any primary psychiatric illness at present |

| | |
|---|---|
| A5-A.Samadurai | 1.Age - 45<br><br>2. Dependent - Wife, One daughter and one son<br><br>3.Income - Rs.51,410/-<br><br>4.Educational Qualification- SSLC<br><br>5. GPF Amount - Rs.5,64,969/-<br><br>6. Property - NIL<br><br>7. Medical Report - Not suffering with any primary psychiatric illness at present |
| A6-M.Muthuraja | 1.Age - 30<br><br>2. Dependent - Wife, One daughter and his mother<br><br>3.Income - Rs.24,513/-<br><br>4.Educational Qualification- SSLC<br><br>5. CPS Amount - Rs.3,39,146/-<br><br>6. Property - NIL<br>7. Medical Report - Not suffering with any primary psychiatric illness at present |
| A7-S.Chelladurai | 1.Age - 36<br><br>2. Dependent - Wife, two sons and his parents<br><br>3.Income - Rs.40,362/-<br><br>4.Educational Qualification- B.Com., |

| | |
|---|---|
| | 5. CPS Amount – Rs.14,58,078/-<br>6. Property – NIL |
| A8-X.Thomas Francis | 1.Age – 32<br>2. Dependent – Wife, two sons and his mother<br>3.Income – Rs.35,544/-<br>4.Educational Qualification– H.Sec.,<br>5. CPS Amount – Rs.10,59,900/-<br>6. Property – NIL<br>7. Medical Report – Not suffering with any primary psychiatric illness at present |
| A9-S.Veilmuthu | 1.Age – 35<br>2. Dependent – Wife, One daughter, one son and his mother<br>3.Income – Rs.35,544/-<br>4.Educational Qualification– B.B.A.,<br>5. CPS Amount – Rs.10,62,108/-<br>6. Property – NIL<br>7. Medical Report – Not suffering with any primary psychiatric illness at present |

319. எதிரிகளது மனநலம் குறித்து மருத்துவ பரிசோதனை செய்து மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனை மருத்துவர் குழு அனுப்பியுள்ள அறிக்கை 30.03.2026 அன்று கிடைக்கப்பெற்றுள்ளது. அதில் 1 முதல் 9 எதிரிகளுக்கு தற்போது மனநல குறைபாடு எதுவும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

320. 1ம் எதிரிக்கு 26.03.2026 அன்று உசிலம்பட்டி நன்னடத்தை அலுவலரிடமிருந்தும் 27.03.2026 அன்று கோயம்புத்தூர் நன்னடத்தை அலுவலரிடமிருந்தும் அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது. 2ம் எதிரிக்கு 30.03.2026 அன்று தூத்துக்குடி நன்னடத்தை அலுவலரிடமிருந்தும் அறிக்கை கிடைக்கப்பபெற்றுள்ளது. 30.03.2026 3, 4-ம் எதிரிக்கு 30.03.2026ம் தேதி நாங்குநேரி நன்னடத்தை அலுவலரிடமிருந்தும், 5ம் எதிரிக்கு தூத்துக்குடி நன்னடத்தை அலுவலரிடமிருந்து 30.03.2026 ம் தேதி அறிக்கையும், 6ம் எதிரிக்கு 30.03.2026ம் தேதி கோவில்பட்டி நன்னடத்தை அலுவலரிடமிருந்தும் , 7ம் எதிரிக்கு 30.03.2026 அன்று கோவில்பட்டி நன்னடத்தை அலுவலரிடமிருந்தும் , 8ம் எதிரிக்கு 30.03.2026 அன்று தூத்துக்குடி நன்னடத்தை அலுவலரிடமிருந்தும், 9ம் எதிரிக்கு 30.03.2026 அன்று கோவில்பட்டி நன்னடத்தை அலுவலரிடமிருந்தும் அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது. மேற்படி அறிக்கைகளில் எதிரிகளுக்கு முன் தண்டனை எதுவும் இருப்பதாக குறிப்பிடப்படவில்லை.2 முதல் 8 எதிரி களுக்கு சொத்து எதுவும் இருப்பதாக தெரியவில்லை என அந்தஅறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

321. தமிழ்நாடு அரசு சார்பில் சமர்பிக்கப்பட்டுள்ள அறிக்கை 01.04.2026 அன்று கிடைக்கப்பெற்றுள்ளது. அதில் 1ம் எதிரிக்கு 2 குற்றவழக்குகள் இருப்பதாகவும், 2ம் எதிரிக்கு ஒரு குற்ற வழக்கு இருப்பதாகவும், 3ம் எதிரிக்கு 2 குற்ற வழக்குகள் இருப்பதாகவும், குறிப்பிடப்பட்டுள்ளது . மற்ற குற்றவாளிகளுக்கு குற்ற வழக்கு எதுவும் இருப்பதாக குறிப்பிடப்படவில்லை. மேலும் காவல் நிலைய மரணங்களை பொறுத்தவரை எவ்விதத்திலும் சகித்துக் கொள்ள முடியாது என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

322. மத்திய அரசின் குறிப்பாணையின் படி மத்திய அரசு சார்பில் சிபிஐ தரப்பில் அறிக்கை 2-4-2026ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் காவல்நிலைய மரணங்கள் மிகவும் கொடூரமானது என்றும், 1 முதல் 9 எதிரிகள் மீது சுமத்துப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு உட்ச பட்ச தண்டனை வழங்கலாம் என்றும், கருணை எதுவும் காட்ட தேவையில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

323. In 2025 Live Law SC 1231 என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பிறப்பித்துள்ள முன் தீர்ப்பை பரிசீலித்துப் பார்க்கும்போது மாநில அரசுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனைக் குறைப்பு அல்லது மாற்றியமைக்கும் அதிகாரத்தை அமர்வு நீதிமன்றத்தால் பறிக்க இயலாது' என்றும் மாற்றுத் தண்டனை'

(alternate sentencing) வழங்கும் அதிகாரம், அமர்வு நீதிமன்றங்களுக்கு இல்லை என்று மாண்புமிகு உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. எனவே, சாகும் வரை ஆயுள் தண்டனை விதிக்க அமர்வு நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்பது தெளிவுபட தெரிய வருகிறது

324. In Bachan singh vs State of Punjab reported in 1980 2 SCC 684 and in Macchi Singh and others Vs State of Punjab 1983 3 SCC 470 the foundational facts has been explained in awarding sentence

1) It has been held that the court has to evaluate the Manner of Commission of the crime the Motive and should see whether it is a Anti Social or Socially abhorrent nature of the crime and has held that the extreme penalty of death need not be inflicted except in gravest cases of extreme culpability and before opting for the death penalty the circumstances of the 'offender' along with the circumstances of the 'crime' has to be taken in to consideration and has held that Life imprisonment is the rule and death sentence is an exception. In other words death sentence must be imposed only when life imprisonment appears to be an altogether inadequate punishment having regard to the relevant circumstances of the crime, and when imprisonment for life cannot be conscientiously exercised having regard to the nature and circumstances of the crime and all the relevant circumstances.

2) Further it has held that a balance sheet of aggravating and mitigating circumstances has to be drawn up and in doing so the mitigating circumstances has to be accorded full weightage and a just balance has to be struck between the aggravating and the mitigating circumstances before the option is exercised.

3) Further it has been held that in order to apply these guidelines inter-alia the following questions may be asked and answered

a) Is there something uncommon about the crime which renders sentence of imprisonment for life inadequate and calls for a death sentence?

b) Are the circumstances of the crime such that there is no alternative but to impose death sentence even after according maximum weightage to the mitigating circumstances which speak in favour of the offender

In that further it has been held that. If upon taking an overall global view of all the circumstances in the light of the aforesaid proposition and taking into account the answers to the questions posed here in above, the circumstances of the case are such that death sentence is warranted, the court would proceed to do so.

325. In Dharma Rama Bhagare Vs. State of Maharashtra (1973) 1 SCC 537 the Hon'ble Supreme Court has held that in determining the sentence the Motive, magnitude of the offence and the manner of its commission has to be considered.

326. In RamNaresh Vs. State of Chattisgarh,(2012 2 SCC Cri 382)

For better understanding the Illustration of agravating and mitigating factors are given in this Judgment and it may be summarised as follows :-

Aggravating Circumstances :

1) The offences relating to the commission of heinous crimes like murder, rape, armed dacoity, kidnapping etc. by the accused with a prior record of conviction for capital felony or offences committed by the person having a substantial history of serious assaults and criminal convictions.

2) The offence was committed while the offender was engaged in the commission of another serious offence.

3) The offence was committed with the intention to create a fear psychosis in the public at large and was committed in a public place by a weapon or device which clearly could be hazardous to the life of more than one person.

4) The offence of murder was committed for ransom or like offences to receive money or monetary benefits.

5) Hired killings.

6) The offence was committed outrageously for want only while involving inhumane treatment and torture to the victim.

7) The offence was committed by a person while in lawful custody.

8) The murder or the offence was committed to prevent a person lawfully carrying out his duty like arrest or custody in a place of lawful confinement of himself or another. For instance, murder is of a person who had acted in lawful discharge of his duty under Section 43 Cr.P.C.

9) When the crime is enormous in proportion like making an attempt of murder of the entire family or members of a particular community.

10) When the victim is innocent, helpless or a person relies upon the trust of relationship and social norms, like a child, helpless woman, a daughter or a niece staying with a father/uncle and is inflicted with the crime by such a trusted person.

11) When murder is committed for a motive which evidences total depravity and meanness.

12) When there is a cold blooded murder without provocation.

13) The crime is committed so brutally that it pricks or shocks not only the judicial conscience but even the conscience of the society.

Mitigating Circumstances :

1) The manner and circumstances in and under which the offence was committed, for example, extreme mental or emotional disturbance or extreme provocation in contradistinction to all these situations in normal course.

2) The age of the accused is a relevant consideration but not a determinative factor by itself.

3) The chances of the accused of not indulging in commission of the crime again and the probability of the accused being reformed and rehabilitated.

4) The condition of the accused shows that he was mentally defective and the defect impaired his capacity to appreciate the circumstances of his criminal conduct.

5) The circumstances which, in normal course of life, would render such a behavior possible and could have the effect of giving rise to mental imbalance in that given situation like persistent harassment or, in fact, leading to such a peak of human behavior that, in the facts and circumstances of the case, the accused believed that he was morally justified in committing the offence.

6) Where the Court upon proper appreciation of evidence is of the view that the crime was not committed in a pre-ordained manner and that the death resulted in the course of commission of another crime and that there was a possibility of it being construed as consequences to the commission of the primary crime.

7) Where it is absolutely unsafe to rely upon the testimony of a sole eye-witness though prosecution has brought home the guilt of the accused.

While determining the questions relateable to sentencing policy, the Court has to follow certain principles and those principles are the loadstar besides the above considerations in imposition or otherwise of the death sentence

Principles :

(1) The Court has to apply the test to determine, if it was the ச case for imposition of a death sentence.

(2) In the opinion of the Court, imposition of any other punishment, i.e., life imprisonment would be completely inadequate and would not meet the ends of justice.

(3) Life imprisonment is the rule and death sentence is an exception.

(4) The option to impose sentence of imprisonment for life cannot be cautiously exercised having regard to the nature and circumstances of the crime and all relevant considerations.

(5) The method (planned or otherwise) and the manner (extent of brutality and inhumanity, etc.) in which the crime was committed and the circumstances leading to commission of such heinous crime.

327. In Santhosh Kumar SathishBhushan Bariyar Vs State of Maharastra with State of Maharastra Versus Sanjeevkumar Mahendraprasad Roy and another reported in (2009) 2 Supreme Court Cases (Cri) 1150 the Hon'ble Supreme Court case has held that

In essence, the rarest of rare dictum imposes a wide-ranging embargo on award of death punishment, which can only be revoked. If the facts of the case successfully satisfy double qualification enumerated below:

1. that the case belongs to the rarest of rare category,
2. and the alternative option of life imprisonment will just not suffice in the facts of the case. என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது

328. மேற்கண்ட முன்தீர்ப்பை பரிசிலித்து பார்க்கும் போது ஒரு வழக்கில் ஆயுள் தண்டனை விதிப்பதா அல்லது மரண தண்டனை விதிப்பதா என்ற கேள்வி எழும்போது ஆயுள் தண்டனை விதிக்கவேண்டுமேன்பதே பொதுவான விதியாகும் என்றும், மரண தண்டனை என்பது ஒரு விதிவிலக்கே என்றும், பச்சன்சிங் எதிர் பஞ்சாப் மாநிலம் என்ற வழக்கில் குறிப்பிட்டுள்ளபடி அரிதிலும் அரிதான வழக்கில் மட்டுமே மரண தண்டனை விதிக்க முடியும் என்றும் அதிலும் ஆயுள் தண்டனை விதிப்பது போதுமானதல்ல என்ற நிலை இருந்தால் தான் மரண தண்டனை விதிக்க முடியும் என்றும் அப்போதும் எதிரியை திருத்துவதற்கான வாய்ப்பு இல்லை என்றால் தான் மரண தண்டனை வழங்க முடியும் என்பது தெளிவாகின்றது.

<u>எனவே இவ்வழக்கு அரிதிலும் அரிதான வழக்கா என்பதையும் ஆயுள் தண்டனை விதிப்பது போதுமானதா இல்லையா என்பதையும் எதிரிகள் திருந்துவதற்கு வாய்ப்பு உள்ளதா இல்லையா என்பது பற்றியும் இனி தீர்மானிக்கலாம்</u>

<u>329. குற்றம் செய்யப்பட்ட விதம்:-</u> ஒரு குற்றம் உணர்ச்சிவசத்தால் செய்யப்பட்டால் அதை மிதமான காரணியாக கருத முடியும். ஆனால் இந்த வழக்கை பொறுத்தவரை ஜெயராஜ் 18- 6 -20 ஆம் தேதி போலீசாரை ஏசினார் என்பதற்காக காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு பழிவாங்கும் நோக்கத்தில் அடித்து துன்புறுத்தப்பட்டுள்ளார் அது குறித்து கேட்கச் சென்ற பென்னிக்சை எதிரிகள் ஆத்திரத்தால் அடித்து துன்புறுத்தி உள்ளனர். ஜெயராஜ் மற்றும் பெனிக்ஸ் கோவிட் விதிமுறைகளை மீறியதாக நிருபிக்கப்படவில்லை, மேலும் முன்னிடப்பட்டுள்ள சாட்சியங்கள் அடிப்படையில் பார்த்தாலும் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் மீது தொடரப்பட்டுள்ள வழக்கு பொய்யானது என நிரூபிக்கப்பட்டுள்ளது, இந்நிலையில்

ஜெயராஜை சாத்தான்குளம் காவல் நிலையத்தில் தடுத்து வைத்திருந்துள்ளது சட்டவிரோதமானதாகும். இந்நிலையில் தனது தகப்பனாரை சட்டவிரோதமா தடுத்து வைத்திருந்தது குறித்து பென்னிக்ஸ் கேள்வி எழுப்பியுள்ளதை ஆத்திரமூட்டும் செயலாக கருத முடியாது. மேலும் தங்களை திருத்திக் கொள்ளவும் தங்களது உணர்ச்சிகளை கட்டுப்படுத்திக் கொள்ளவும் எதிரிகளுக்கு போதிய வாய்ப்பு இருந்தும் எதிரிகள் தகப்பன் முன் மகனையும் மகன் முன் தகப்பனையும் ஆடைகளை களைந்து அடித்துக் கொடுமைப்படுத்தி சித்ரவதை உள்ளனர் இது மனித மாண்புக்கு முற்றிலும் முரணான செயலாகும் ஜெயராஜ் மற்றும் பெனிக்ஸ் சம்பவ சமயத்தில் நிராயுதபாணியாக இருந்துள்ளனர். மேலும் அவர்கள் வெளியே ஓடிவிடாதபடி கதவை பூட்டியும் கையில் கயிற்றை கட்டியும் அடித்து கொடுமைப்படுத்தி உள்ளனர். இவ் வழக்கில் தந்தை மகன் இருவருமே இறந்துள்ளனர் எனவே குற்றத்தின் தன்மையை கருத்தில் கொண்டு பார்க்கும் போது இந்த வழக்கு அரிதிலும் அரிதான வழக்கு என்ற கோட்பாட்டிற்குள் அமைந்து வருவதாகவே தெரிகிறது.

<u>330. குற்றத்திற்கான நோக்கம்:</u>–ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் மீது சாத்தான்குளம் காவல் நிலையத்தில்தொடரப்பட்ட குற்ற எண் 312/20 வழக்கு பொய்யானது என நிரூபிக்கப்பட்டுள்ளது, ஒருவர் தவறே செய்தாலும் சட்டப்படி தான் தண்டனை வழங்க முடியும். ஏசினார் என்ற காரணத்திற்காக பழிவாங்கும் நோக்கத்தில் எதிரிகள் ஜெயராஜை சட்விரோதமாக அழைத்து சென்று அடித்துள்ளனர் அது குறித்து கேள்விகேட்ட அவரது மகனையும் அடித்து கொடுமைப்படுத்தியுள்ளனர். சட்டம் எதிரிகளுக்கு அளித்துள்ள அதிகாரத்தை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் எதிரிகள் தவறான பயன்படுத்தி உள்ளனர்

<u>331. குற்றத்தின் தன்மை</u> – கைதிகளை அடிக்க காவல் துறையினருக்கு எவ்வித உரிமையும் இல்லை. ஒன்பது பேர் ஒன்று கூடி இந்த குற்றத்தை இளைத்துள்ளனர் பொது மக்களுடைய உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டிய காவல்துறையினரே சட்டவிரோதமாக ஜெயராஜையும் பென்னிக்சையும் காவல் நிலையத்தில் வைத்து தகப்பன் முன் மகனையும் மகன் முன் தகப்பனையும் ஆடைகளைக் களைந்து இரவு முழுவதும் இடைவெளி விட்டு இடைவெளி விட்டு அடித்துக் கொடுமைப்படுத்தி உள்ளனர் இது சமூகத்தால் அருவருக்கத்தக்க தன்மையுள்ள குற்றமாகவே கருதப்படுகிறது.

<u>332. குற்றத்தின் அளவு–</u> இந்த வழக்கில் ஒரே குடும்பத்தை சேர்ந்த இரண்டு நபர்கள் ஒரே நேரத்தில் இறந்துள்ளனர் ஒரு குடும்பத்தின் ஆணிவேரே பிடுங்கப்பட்டுள்ளது.

333. பாதிக்கப்பட்டவரின் குண நலன் மற்றும் நிலை – ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இருவருமே வியாபாரிகள். உழைத்து வாழும் சாதாரண குடிமக்கள். சமூகத்தில் அந்தஸ்து பெற்றவர்கள் ஜெயராஜ் மற்றும் பெனிக்சுக்கு குற்றப்பின்னணி எதுவும் இருப்பதாகவும் நிரூபிக்கப்படவில்லை. குற்றம் நிகழ்ந்துள்ளபோது ஜெயராஜ் பென்னிக்ஸ் நிராயுத பாணியாக இருந்துள்ளார்கள் கைகள் கட்டப்பட்டு தப்பிச் செல்ல முடியாதபடிஉதவியற்ற நிலையில் இருந்துள்ளனர் ,குற்றத்தின் பிரேத பரிசோதனை வீடியோ மற்றும் புகைப்படங்களை பரிசீலித்து பார்க்கும் போது மிகக் கொடூரமாக சித்ரவதை செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

334. Bachan Singh v. State of Punjab, (1980) Machhi Singh v. State of Punjab, (1983) என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் பிறப்பித்துள்ள தண்டனை வழங்கும்போது குற்றத்தின் தன்மை குற்றத்தின் நோக்கம் மேற்படி குற்றம் சமூகத்தில் ஏற்படும் தாக்கம் குற்றத்தின் அளவு பாதிக்கப்பட்டவரின் தன்மை குற்றவாளியின் வயது படிப்பு மனநிலை குற்றவாளியின் குடும்ப பொருளாதாரம் ஆகியவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது, இனி மேற்படி காரணிகளை பட்டியலிட்டு பரிசீலிப்போம்

| காரணி | மிதமானதா | கடுமையானதா | முடிவு |
|---|---|---|---|
| குற்றத்தின் தன்மை | தகப்பன் முன் மகனும் மகன் முன் தகப்பனும் ஜட்டியுடன் காவல் நிலையத்தில் சட்ட விரோதமாக அடைத்து வைக்கப்பட்டு இரவு முழுவதும் அடித்து சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர்,, இதை ஒரு மிதமான காரணியாக கருத முடியாது | நீண்ட நேரம் இடைவெளிவிட்டு இடைவெளியிட்டு அடித்து சித்ரவதை செய்யப்பட்டுள்ளனர். In D.K Basu Vs State of West Bnegal the Honourable Supreme court has held that custodial death is one of the most heinous crimes in a civilised society<br><br>அரசியலமைப்பு குடிமக்களுக்கு | கடுமையான தண்டனைக் குரியது |

| | | | |
|---|---|---|---|
| | | அளித்துள்ள வாழ்வுரிமைக்கான உத்தரவாதத்தை மீறி அரசு அதிகாரத்திருந்துள்ள பொது ஊழி யர்களான எதிரிகள் ஈவு இரக்கமின்றி தந்தை மகன் இருவரும் அடித்து காயப்படுத்தி உள்ளது கொடுமையான காரணியாகவே பார்க்கப்பட வேண்டியுள்ளது | |
| குற்றத்தின் நோக்கம் | ஜெயராஜ் காவல்துறையினரை ஏசி விட்டார் என்ற காரணத்திற்காக பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த குற்றம் செய்யப்பட்டுள்ளது மேலும் சட்டவிரோதமாக தனது தகப்பனாரை காவலில் அடைத்து வைத்திருந்ததை தட்டிக் கேட்டுள்ள பென்னிக்சைப் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த குற்றம் செய்யப்பட்டுள்ளது , பழிவாங்கும் நோக்கில் ஒருவரை காவல் நிலையத்தில் சட்ட விரோதமாக தடுத்து வைத்து தாக்கப்படுவதை ஒருபோதும் மிதமான காரணியாக கருத முடியாது | எங்கு அதிகாரம் உள்ளதோ அங்கு பொறுப்பு அதிகமாக இருக்க வேண்டும், உச்சநீதிமன்றமும் உயர்நீதிமன்றங்களும் ஒரு கைதியை எவ்வாறு நடத்த வேண்டும் என பல வழிமுறைகளை எடுத்துச் சொல்லியும் அவற்றை காற்றில் பறக்க விட்டு தங்களை யாரும் எதுவும் செய்ய முடியாது என்ற எண்ணத்தில் , தங்களைப் பார்த்து பொதுமக்கள் அச்சப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த குற்றம் அதிகார போதையில் நிகழ்த்தப்பட்டுள்ளது எனவே இது கடுமையாக பார்க்க வேண்டிய குற்றமாகும் | கடுமையான தண் டனைக்குரியது |

| | | | |
|---|---|---|---|
| சமூகத்தில் ஏற்படும் தாக்கம் | காவல்துறை மரணங்கள் பொது மக்களிடையே காவல்துறை மீது மிகுந்த அச்சத்தையும் அருவறுப்பையும் ஏற்படுத்துவதாக உள்ளது, எனவே எதிரிகளின் செயல்பாடுகள் தண்டனையை தணிப்பதாக இல்லை | "காவல்துறை சித்திரவதை" என்பது மனித கண்ணியத்தை அப்பட்டமாக மீறுவதாகவும் . இது மனித கண்ணியத்தின் மீதான திட்டமிட்ட தாக்குதலாகும். மனித கண்ணியம் பாதிக்கப்படும் போதெல்லாம், நாகரிகம் பின்னோக்கி செல்கிறது என்பதை எவரும் மறுக்கமுடியாது , நீதிமன்றங்கள் தண்டனையை நிர்ணயிக்கும் போது பொதுமக்களின் சீற்றத்தையும் குற்றத்தின் சமூக தாக்கத்தையும் கணக்கில்எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது அவசியமாகின்றது, எதிரிகளின் தனிப்பட்ட வாழ்உரிமைக்கும் சமூகத்தின் பாதுகாப்பிற்கும் இடையியேயான போரட்டமாகும் . ஒரு குற்றத்தை ( அதன் கொடூரம், தாக்கம் அல்லது ஒழுக்கக்கேடு காரணமாக) சமூகம் கொடூரமாகப் பார்க்கும்போது, அதனை | கடுமையான தண் டனைக்குரியது |

| | | | |
|---|---|---|---|
| | | பொதுவாக கடுமையான தண்டனையை நியாயப்படுத்தும் சூழ்நிலையாகவே பார்க்க்வேண்டியுள்ளது | |
| குற்றத்தின் அளவு | இந்த வழக்கில் இரண்டு நபர்கள் இறந்துள்ளனர் அதுவும் குற்றத்தின் அளவு கடுமையானது என உணர்ந்தே மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை இந்த வழக்கின் புலனாய்வை தனது நேரடி கண்காணிப்பிற்கு கொண்டுவந்தது அதனால் தான் இந்த வழக்கில் உண்மையும் புலனாகியுள்ளது. | தகப்பன் முன் மகனும் மகன்முன் தகப்பனும் ஜட்டியுடன் காவல் நிலையத்தில் சட்டவிரோதமாக அடைத்து வைக்கப்பட்டு இரவு முழுவதும் கடுமையாக அடித்து துன்புறுத்தப்பட்டுள்ளனர் அதில் ஒரு உயிர் அல்ல இரண்டு உயிர் பலியாகி உள்ளது.<br><br>ஒருவேளை மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை புலனாய்வை தனது நேரடி கண்காணிப்பிற்கு கொண்டு வராமல் இருந்திருக்கும் பட்சத்தில் ஜெயராஜ் மற்றும் பெனிக்ஸின் பிரேதம் அடக்கம் செய்யப்படுவதற்கு முன்பே இந்த வழக்கின் உண்மை அடக்கம் செய்யப்பட்டிருக்கும்.<br><br>ஜெயராஜ் மற்றும் பெனிக்ஸ் மீதே பொய் | கடுமையான தணடனைக்குரியது |

| | | | |
|---|---|---|---|
| | | வழக்கு போடப்பட்டுள்ளது தடயங்கள் அழிக்கபட்டுள்ளது எனவே இது கடுமையாக பார்க்க வேண்டிய குற்றமாகும் குற்றத்தின் அளவைப் பொறுத்தவரை எதிரிகளுக்கு சாதகமான விஷயம் எதுவும் இல்லை | |
| பாதிக்கப்பட்டவரின் நிலை | இறந்து போன நபர்கள் ஆயுதம் இன்றி நிராயுத பாணியாக இருந்துள்ளனர். மேலும் ஜெயராஜ் மற்றும் பென்னிக் சால் எதிரிகளின் உயிருக்கு அச்சுறுத்தல் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை , இருந்தும் இரவு முழுவதும் தாக்கி காயப்படுத்தி உள்ளனர், அதை மென்மையான காரணியாக கருத முடியாது | ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் இருவருமே வியாபாரிகள். உழைத்து வாழும் சாதாரண குடிமக்கள். சமூகத்தில் அந்தஸ்து பெற்றவர்கள் ஜெயராஜ் மற்றும் பெனிக்சுக்கு குற்றப்பின்னணி எதுவும் இருப்பதாகவும் நிரூபிக்கப்படவில்லை. குற்றம் நிகழ்ந்துள்ளபோது ஜெயராஜ் பென்னிக்ஸ் நிராயுத பாணியாக இருந்துள்ளார்கள் கைகள் கட்டப்பட்டு தப்பிச் செல்ல முடியாதபடிஉதவியற்ற நிலையில் இருந்துள்ளனர் | கடுமையான தணடனைக்குரியது |
| குற்ற சம்பவத்தின் போது | குற்றம் நடைபெற்ற சமயத்தில் ஒருவர் இளம் | குற்றம் நடைபெற்ற சமயத்தில் இந்த வழக்கில் | கடுமையான தணடனைக்குரிய |

| | | | |
|---|---|---|---|
| குற்றவாளிகளின் வயது<br>A1-56<br>A2-36<br>A3-45<br>A4-45<br>A5-45<br>A6-30<br>A7-36<br>A8-32<br>A9-35 | வயதினராகவோ மூத்த குடிமக்களாகவோ இருந்தால் அதனை மிதமான கருணையாக கருத முடியும் ஆனால் குற்றம் நடைபெற்ற சமயத்தில் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் 60 வயதுக்கு குறைவானவர்கள் எனவே எதிரிகளின் வயது குற்றத்தை குறைப்பதற்கு ஒரு விதமான காரணியாக அமையவில்லை<br><br>முதிர்ச்சியடைந்த, பட்டறிவு மிக்க அரசு அதிகாரிகள் | குற்றம் சாட்டப்பட்டவர்கள் 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் 60 வயதுக்கு குறைவானவர்கள் நன்கு மன வளர்ச்சி அடைந்த வர்கள் தங்களது செயல் உச்சநீதிமன்ற உயர் நீதிமன்ற அறிவுரைகளுக்கு விரோதமானது என நன்கு தெரிந்தே எதிரிகள் இந்த குற்றத்தை புரிந்துள்ளனர் எனவே வயது படி பார்த்தாலும் எதிரிகள் இழைத்துள்ள குற்றத்தை கடுமையான தண்டனை வழங்கதக்க குற்றமாகவே கருத வேண்டி உள்ளது | து |
| குற்றவாளியின் படிப்பு | படிக்காத பாமரனாக இருந்தால் அதை மிதமான காரணியாக கருத முடியும் இரக்கம் காட்டும் அளவிற்கு இந்த எதிரிகள் படிக்காத பாமரர்கள் அல்ல, எனவே குற்றவாளிகளின் கல்வி தகுதியை குற்றத்தை குறைப்பதற்கான ஒரு காரணியாக கருத இயலவில்லை | எதிரிகள் படித்தவர்கள் குற்றம் நடந்துள்ள சமயத்தில் அரசுப் பணியில் இருந்துள்ளனர், பொதுமக்கள் சம்பளத்தில் பொது மக்கள் உயிரை பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளவர்கள் படித்த அறிவாளிகளாக இருந்தும் வேலியே பயிரை மேய்ந்த கதையாக அதிகார துஷ்பிரயோத்தால் ஆணவத்தில் இந்த | கடுமையான தணடனைக்குரிய து |

| | | | |
|---|---|---|---|
| | | குற்றத்தை இழைத்துள்ளனர்,இது கடும் தண்டனைக்குரியது | |
| குற்றவாளியின் மனநிலை | குற்றம் நடந்த சமயத்தில் மனக்கோளாறு எதுவும் இருந்ததாகவோ அதற்கு சிகிச்சை எதுவும் எடுத்ததாகவோ எதிரில் தரப்பில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை,தற்போதும் மனநலகுறைபாடு இல்லை என தற்போது மருத்துவ அறிக்கையும் கிடைக்கப்பெற்றுள்ளது | இரவு முழுவதும் காவல் நிலையத்தில் சட்டவிரோதமாக வைக்கப்பட்டு ஜெயராஜ் மற்றும் பெனிக்ஸ் அடிக்கப்பட்டுள்ள நிலையில் அவரைக் காப்பாற்ற வேண்டும் என்றோ அவர்களுக்கு சரியான மருத்துவம் செய்ய வேண்டும் என்றோ எவருக்கும் தோன்றியிருக்கவில்லை இது ஈவு இரக்கமற்ற மனநிலையுடன் எதிரிகள் இருந்துள்ளனர் என்பதை நிரூபிப்பதாக உள்ளது | கடுமையான தணடனைக்குரியது |
| குற்றவாளிகளின் குடும்ப பொருளாதாரம் | குற்றம் நிகழ்ந்த சமயத்தில் எதிரிகள் அரசு பணியில் இருந்துள்ளனர் அரசு சம்பளம் பெற்றுள்ளனர், இந்த குற்றம் ஏதோ பொருளாதாரம் ரீதியாக மன அழுத்தத்தால் ஏற்பட்ட குற்றமல்ல , எனவே | இந்த குற்றத்திற்கு இரண்டு தண்டனைகள் தான் ஒன்று மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை ஆயுள் தண்டனை வழங்கப்பட்டால் ஆயுள் முழுவதும் சிறையில் | இவ்வழக்கின் சங்கதிகளை கருத்தில் கொண்டு பார்க்கும்போது குற்றவாளியின் குடும்ப பொருளாதாரம் |

| | | | |
|---|---|---|---|
| | எதிரிகளின் குடும்பம் பொருளாதார சூழ்நிலை மிதமான கரணியாக தென்படவில்லை | இருக்க வேண்டியிருக்கும் எனவே இவர்தான் பொருளாதார ரீதியாக இனி குடும்பத்தை காப்பாற்ற வேண்டியுள்ளது என்ற வாதம் ஏற்புடையதல்ல,இந்தியா வில் பெரும்பாலும் அனைத்து குற்றவாளிகளும் பொருளாதார ரீதியாக பின்தங்கியர்களே எனவே „இத்தகைய மனிதஉரிமை மீறல் குற்றங்கள் புரிவதை ஊக்கப்படுத்து வகையில் குறைந்த பட்ச தண்டனை வழங்குவது நீதியின்பால் சரியான அனுகுமுறையாகாது. | தண்டணையை குறைப்பதற்கு போதுமான காரணமல்ல , |

335. In Mukesh and another –vs– State (NCT of Delhi) (2017) 6 SCC 1 The Hon'ble Supreme Court has held :– that court should consider cumulative effect of both factors is aggravating and mitigating circumstances and has to strike a balance between two to see towards which side scale/balance of justice tilts. In Present case even if there were mitigating circumstances like young age of victims, dependents and ailing parents, post crime remorse and good behavior in jail and absence of criminal antecedents, aggravating circumstances outweighed them, warranting confirmation of death sentence.

மேற்படி முன் தீர்ப்பின் அடிப்படையில் பார்க்கும்போது சிறையில் ஒருவருடைய நன்னடத்தை நல்ல முறையில் உள்ளது என்பதாலோ ஒரு நபருக்கு முன் தண்டனை எதுவும் இல்லை என்பதாலோ ஒருவருக்கு வயதான பெற்றோர்கள் உள்ளார்கள் என்பதாலோ ஒருவரது குடும்பம் எதிரியை சார்ந்து உள்ளது என்பதாலோ குறைந்தபட்ச தண்டனையை வழங்க வேண்டும் என்பது கட்டாயம் அல்ல. ஒவ்வொரு வழக்கிலும் சங்கதி சூழ்நிலையை பொறுத்து குறைந்தபட்ச தண்டனை வழங்குவதா இல்லையா

என்பது முடிவு செய்யப்பட வேண்டும். இந்த வழக்கை பொறுத்தவரை இது சாதாரண இரண்டு குடிமகன்களுக்கு இடையே உள்ள வழக்கு அல்ல குடிமக்களை பாதுகாக்க வேண்டிய காவலர்களே செய்துள்ள கொடூர குற்றமாகும் மனித உரிமை மீறல்களிலேயே இது உச்சபட்ச மனித உரிமை மீறலாகும் எனவே இத்தகைய வழக்குகளில் குறைந்த பட்ச தண்டனையை வழங்குவது நீதியின் பால் சரியானதாகாது என இந்த நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

336. Purushottam Dashrath Borate vs State Of Maharashtra என்ற வழக்கில்
Insofar as Accused No.2 is concerned, he has two sisters who are looking after his widowed mother. Lack of criminal antecedents also cannot be considered as mitigating circumstance, particularly taking into consideration, the nature of heinous offence and cold and calculated manner in which it was committed by the accused persons.

மேற்படி முன் தீர்ப்பை பரிசீலித்து பார்க்கும்போது முன் தண்டனை இல்லை என்ற காரணத்தினால் குறைந்தபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று கூற முடியாது குறிப்பாக முன்தண்டனை இல்லாதவர்கள் தான் அரசு ஊழியர்களாக இருக்க முடியும் அப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசின் நம்பிக்கைக்கு விரோதமாக ஒரு குற்றத்தை இழைத்து விட்டு தனக்கு முன் தண்டனை இல்லை என வாதிடுவது ஏற்புடைய வாதமாகாது

337. Prakash Kadam & Etc. Etc vs Ramprasad Vishwanath Gupta AIR 2011 SC 1945 என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம்

We warn policemen that they will not be excused for committing murder in the name of encounter' on the pretext that they were carrying out the orders of their superior officers or politicians, however high.
Further it has been held that brutal murder by persons who are supposed to uphold the law. In our opinion if crimes are committed by ordinary people, ordinary punishment should be given, but if the offence is committed by policemen much harsher punishment should be given to them because they do an act totally contrary to their duties என தீர்ப்பளித்துள்ளது.

மேற்படி முன் தீர்ப்பின் அடிப்படையில் பார்க்கும்போது இத்தகைய குற்ற செயலை செய்பவர்கள் உயர் அதிகாரிகள் சொன்னதன் பேரில் செய்து விட்டதாக கூறி தப்பித்துக் கொள்ள முடியாது என்பது நன்கு விளங்கும்

சட்டத்தைக் காக்க வேண்டியவர்களாலேயே கொடூரமான கொலை நிகழ்த்தப்பட்டுள்ளது. எங்களைப் பொறுத்தவரை, சாதாரண மக்கள் குற்றமிழைத்தால்

அவர்களுக்குச் சாதாரணமான தண்டனையே வழங்கப்பட வேண்டும்; ஆனால், காவல்துறையினரே குற்றமிழைக்கும் பட்சத்தில், அவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். ஏனெனில், அவர்கள் தங்கள் கடமைகளுக்கு முற்றிலும் முரணான ஒரு செயலைச் செய்திருக்கிறார்கள்.

338. In D.K. Basu v. State of W.B this Court took the view that custodial torture and consequential death in custody was an offence which fell in the category of the rarest of rare cases. While specifying the reasons in support of such decision, the Court awarded death Penalty in that case எனவே மேலே கண்டவாறு இவ்வழக்கில் மிதமான காரணிகளையும் கடுமையான காரணிகளையும் பரிசளித்துப் பார்க்கும்போது கடுமையான காரணிகளே மேலோங்கி உள்ளது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கின்றது அவ்வகையில் பார்க்கும்போது இது அரிதிலும் அரிதான வழக்கு என்றே இந்த நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

339. இந்த வழக்கில் இரண்டு சாமானிய குடிமகனின் உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன இந்நிலையில் இந்தவழக்கை பொறுத்தவரை குற்றவாளிக்குச் சாதகமான தணிக்கும் சூழ்நிலைகளுக்கு அதிகபட்ச முக்கியத்துவம் அளித்த பிறகும் கூட, மரண தண்டனை விதிப்பதைத் தவிர வேறு வழியே இல்லை என்ற அளவுக்கு அந்தக் குற்றத்தின் சூழ்நிலைகள் உள்ளது என்றும் இந்நதீமின்றம் தீர்மானிக்கின்றது எனவே இந்த வழக்கு அரிதிலும் அரிதான வழக்கு என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

<u>அடுத்ததாக இந்த வழக்கு அரிதினும் அரிதான வழக்காகவே இருந்தாலும் ஆயுள் தண்டனை போதுமானதா– இல்லை மரண தண்டனைதான் விதிக்க வேண்டுமா– என்பதையும் மரண தண்டனை தான் வழங்க தக்கது எனில் மரண தண்டனையை வழங்க அப்படி என்ன ஒரு அசாதாரணமான அம்சம் என்ன இந்தவழக்கில் உள்ளது என்பதையும் அடுத்து தீர்மானிக்கலாம்</u>

340. எதிரிகள் படித்தவர்கள் அரசு அதிகாரத்தில் இருந்துள்ளவர்கள். பொதுமக்களுக்கு பாதுகாவலராக இருக்க வேண்டியவர்கள் ஆனால் இந்த வழக்கில் வேலியே பயிரை மேய்ந்த கதையாக பாதுகாவலனாக இருக்க வேண்டிய காவல்துறையினரே இந்த குற்றத்தை நிகழ்த்தியுள்ளனர் அதிலும் தகப்பன் முன் மகனையும் மகன் முன் தகப்பனையும் நிர்வாணமாக்கி அடித்து கொடுமைப்படுத்தி உள்ளனர் மேலும் பல மணி நேரமாக இடைவெளி விட்டு இடைவெளி விட்டு மனம் போன போக்கில் காயத்தை ஏற்படுத்தி உள்ளனர் பிரேத பரிசோதனை குறித்த வீடியோ மற்றும் புகைப்படங்களை பரிசீலித்து பார்க்கும்போது மனமே வெம்பிவிடும் அளவிற்கு உள்ளது இறந்து போன பென்னிக்சின் தாயாரும் இறந்து போன ஜெயராஜின் மனைவியுமான செல்வராணியின் துக்கத்தை எவ்வகையிலும் நீக்க முடியாது இந்திய வரலாற்றில் இந்த வழக்கு முதல் முறையானது அல்ல இந்த வழக்கே இறுதியானதும் அல்ல இது இந்தியாவில் உள்ள

நிலை மட்டுமல்ல உலகத்தின் ஒவ்வொரு மூலையிலும் உள்ள நிலையாகும் இந்த குற்ற சம்பவம் நிகழ்வதற்கு முன்பு ஒரு மாதத்திற்கு உள்ளாக அதாவது 25 –5– 2020 அன்று அமெரிக்காவில் நடைபெற்றுள்ள ஜார்ஜ் பிளாய்டு அவர்களது மரணமும் இந்த

வழக்கிற்கு பின் சிவகங்கை மாவட்டம் மடப்புரத்தில் நடந்துள்ள அஜித் குமார் மரணமும் இதற்கு சான்றாகும், தமிழ்நாடு காவல்துறை பல திறமை வாய்ந்த நேர்மையான கடமைமிக்க அதிகாரிகளை கொண்டது, ஸ்காட்லாந்து யார்டுக்கு இணையாக புகழ்பெற்றது, அதில் இவ்வழக்கின் எதிரிகளைப் போல் ஒரு சிலர் செய்யும் தவறு தமிழ்நாடு காவல்துறைக்கே களங்கத்தை ஏற்படுத்துவதாக உள்ளது, இந்த கொடிய பழக்கம் எல்லாக் காவலர்களுக்கும் பற்றி விடக்கூடாது இத்தகைய குற்றங்களை புரிபவர்களுக்கு குறைந்தபட்ச தண்டனை வழங்கினால் மற்ற காவல்துறையினரிடையே நீதிமன்றத்தால் நம்மை என்ன செய்துவிட முடியும் ஆயுள் தண்டனை தானே வழங்குவார்கள் , இறந்தவர்கள் மீதே வழக்கு பதிவு செய்து தப்பித்து விடலாம் அல்லது சாட்சியங்களை அழித்து தப்பித்துவிடலாம் அதிகபட்சம் நம்மை திருத்த முயல்வார்கள் நாமும் 14 வருடத்தில் வெளியில் வந்துவிடலாம் என்ற தவறானதொரு எண்ண ஓட்டத்தை உருவாக்கி விடும்.

341. 1ம் எதிரி துாண்டியதால் அச்சத்தால் தங்கள் இந்த குற்றத்தை செய்து விட்டதாகவும் எனவே மன்னித்து குறைந்தபட்சதண்டனை வழங்க வேண்டுமென்றும் மற்ற எதிரிகள் வாதிட கூடும் ஆனால் அச்சம் என்பது உண்மையான அச்சமாக இருக்க வேண்டும் 1ம் எதிரி உயர் அதிகாரியாகவே இருந்தால் கூட கடமை மிக்க காவலர்களாக மற்ற எதிரிகள் இருந்திருந்தால் 1ம் எதிரியை பற்றி உயர் அதிகாரிகளிடம் முறையிட்டு ஜெயராஜையும் பென்னிக்சையும் காப்பாற்ற நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும், அதை செய்யாமல் ஏதோ பயந்துவிட்டதாக கூறுவதை ஏற்க்க இயலாது. மேலும் ஜெயராஜ் மற்றும் பென்னிஸ்க்கு உரிய மருத்துவத்தை அளிப்பதற்கு தக்க நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் ஆனால் அதை எதையும் செய்யாமல் கொஞ்சம் கூட ஈவு இரக்கம் இல்லாமல் எதிரிகள் நடந்துள்ளனர், இந்நிலையில் இந்த எதிரிகளுக்கு எவ்வகையிலும் கருணை காட்டுவது சரியானதாகாது.

342. மேலும் இந்த வழக்கில் கோவில்பட்டி கிளை சிறைச்சாலை கைதிகள் அனுமதி பதிவேடு அ.சா.ஆ.1 ஐ பரிசீலித்துப் பார்க்கும்போது இதே போல் மேலும் இரண்டு வழக்குகளில் கைதிக்கு புட்டத்தில் காயம் இருப்பது பதிவு செய்யப்பட்டுள்ளது , இது இத்தகைய குற்றங்களின் கொடூர முகத்தை காட்டுவதாக உள்ளது, இதை சாதாரணமாக கருதி விட முடியாது. எல்லா வழக்குகளிலும் கைதிகள் பிட்டங்களில் தனக்குத்தானே காயங்களை ஏற்படுத்திகொண்டதாக கூறமுடியாது, இந்தக் காவல்

நிலையம் சம்பந்தப்பட்ட மற்ற வழக்குகளிலும் எதிரிகளுக்கு எவ்வாறு புட்டத்தில் காயம் ஏற்பட்டது என்பது குறித்தும் எதிரிகள் தரப்பில் விளக்கம் எதுவும் அளிக்கப்படவில்லை.

343. பொதுவாக காவல் நிலையங்களில் இழைக்கப்படும் கொடுமையை பொருத்தவரை நேரிடை சாட்சியங்கள் மிகவும் அரிதிலும் அரிதானதே ஆகும் இந்த வழக்கில் சிசிடிவி காட்சிகளும் அழிக்கப்பட்டுள்ளன. மேலும் கொடுமையிலும் கொடுமையாக ஜெயராஜ் மற்றும் பென்னிக்சுக்கு எதிராக பொய்யான வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனை குறித்த வீடியோ பதிவிலும் பிரேத பரிசோதனை குறித்த புகைப்படத்தையும் பரிசீலித்து பார்க்கும்போது குறைந்த பட்ச தண்டனையை வழங்கவேண்டும் என்ற எண்ணம் எவருக்கும் ஏற்படாது. இதே போன்ற பல நூறு வழக்குகள் விசாரணை கட்டத்தைக் கூட உருப்படியாக தாண்டியதாக தெரியவில்லை , இத்தகைய வழக்குகளில் நீதி அலைக்கழிக்கப்பட்டுள்ளது, திரும்பத் திரும்ப உச்சநீதிமன்றம் கடுமையாக சாடியும் இத்தகைய வழக்குகளில் மென்மை தன்மையுடனும் மேம்போக்காகவுமே காவல் துறையினர் விசாரணை நடத்துவது பண்பாட்டாலும் நாகரீகத்தாலும் முன்னேறிய சமுகத்தில் கவலைக்குரியதாக பார்க்கப்படுகின்றது, இந்த வழக்கில் இறந்து போன நபர்கள் இருவரும் நிராயுத பாணியாக இருந்துள்ளனர் ஒரே நேரத்தில் தந்தை மகன் என ஒரு குடும்பத்தின் ஆணிவேரே பிடுங்கப்பட்டுள்ளது எதிர்காலத்தில் இத்தகைய குற்றங்கள் நிகழாது என அறுதியிட்டு எவராலும் கூற இயலாது என்றாலும் இத்தகைய குற்றத்தை இனிமேலும் செய்ய ஒருவர் அச்சப்படும் வகையில் இந்த தீர்ப்பு இருக்க வேண்டும் என இந்த நீதிமன்றம் கருதுகிறது உடல் ரீதியாக மட்டுமல்ல பொருளாதார ரீதியாகவும் கடுமையான தண்டனை வழங்கினால் தான் இத்தகைய குற்றத்தை இனி ஓரளவாவது கட்டுப்படுத்த முடியும்.

344. ஆயுள் தண்டனை வழங்கி விட்டால் அவர்களால் பணி செய்ய முடியாது அதனால் இதே போல் வேறு ஒரு குற்றத்தை இவர்கள் செய்ய வாய்ப்பு இல்லை என வாதிட கூடும். இத்தகைய வாதங்களை ஏற்றுக் கொண்டால் அதிகார போதையில் உள்ள சில காவல்துறையினர் மத்தியில் தங்களை எவரும் எதுவும் செய்ய முடியாது என்றும் இத்தகைய குற்றங்களில் தடயங்களை அழித்துவிட்டு தப்பித்துக் கொள்ளலாம் என்றும் அதிகபட்சமாக ஆயுள் தண்டனை வழங்கினால் கூட 14 ஆண்டுகளில் எப்படிப்பட்ட பகிரதன முயற்சியை செய்தாவது வெளியில் வந்து விடலாம் என்றும் ஒரு எண்ணப் போக்கை அவர்கள் மனதில் விதைத்து விடும் மாறாக இத்கைய வழக்குகளில் மிகக் கடுமையாக தண்டனையை விதித்தால் தான் இனியும் இத்தகைய குற்றங்கள் நிகழாமல் ஓரளவிற்கு கட்டுப்படுத்த முடியும்.

345. தனி நபர் ஒருவர் தவறிழைப்பதற்கும் அதிகார அமைப்பில் உள்ள ஒருவர் தவறிழைப்பதற்கும் பெருத்த வேறுபாடு உள்ளது வாழ்வுரிமையும் கண்ணியத்துடன் நடத்தப்பட வேண்டும் என்ற உரிமையும் அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு 21 இல் அரசால் இந்த நாட்டின் குடிமக்கள் ஒவ்வொருவரும் உறுதியளிக்கப்பட்ட ஒரு உரிமையாகும், இந்த அடிப்படை உரிமையை கூட கருத்தில் கொள்ளாமல் ஒரு புழு பூச்சியை போல் இரண்டு குடிமக்களை அதுவும் தகப்பன் முன் மகனையும் மகன் முன் தகப்பனையும் ஆடைகளை அவிழ்க்க வைத்து அநாகரிக்க படுத்தி அடித்து சித்திரவதை செய்துள்ளது கொடுமைபடுத்தி அவர்களுக்கு மரணத்தை ஏற்படுத்தியுள்ளதையும் நீதியின் மனசாட்சியையும் சமூகத்தின் மனசாட்சியையும் உலுக்குவதாகவே உள்ளது.

346. அரசு ஊழியர்களால், அரசு கட்டிடத்திற்குள், முற்றிலும் அப்பாவியான கைதிகளை திட்டமிட்டுக் அடித்து மரணத்தை விளைவித்துள்ளது. ஆயுள் தண்டனை போதும் என்று கூறுவதற்கு வழியே இல்லாத வகையில் – இந்த வழக்கை 'அரிதிலும் அரிதான' பிரிவுக்குள் கொண்டு வருகிறது என்றே இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

347. காவல் நிலையம் மரணங்கள் என்பது மனித உரிமை மீறல்களிலேயே உச்சபட்ச மனித உரிமை மீறலாகும் அதற்கு குறைந்தபட்ச தண்டனை அளிப்பது மனித உரிமை மீறல்களை ஊக்குவிக்கும் செயலாகிவிடும்

எனவே இந்த வழக்கில் ஆயுள் தண்டனை விதிப்பது போதுமானதாகாது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கின்றது

348. In Jasnupna Bharat Singh and others vs. State of Gujarat (1994(4) SCC 353) என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் The object should be to protect the society and to deter the criminal in achieving the avowed object of law by imposing appropriate sentence. It is expected that the courts would operate the sentencing system as to impose such sentence which reflects the conscience of the Society and the sentencing process has to be stern where it should be என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது

349. In suraja Ram versus state of Rajasthan என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் மேல்முறையீட்டாளர் இதற்கு முன்னர் வேறு எந்தக் குற்றத்திற்காகவும் தண்டிக்கப்படவில்லை என்பது உண்மைதான். கொலைக் குற்றம் முற்றிலும் அப்பாவி நபர்கள் மீது கொடூரமாகவும் இரக்கமின்றியும் இழைக்கப்பட்டுள்ளன. தூண்டுதல் ஏதுமின்றி உதவியற்ற அப்பாவி நபர்கள் மீது இழைக்கப்படும் இத்தகைய கொடூரமான குற்றம் சமூகத்தின் மனசாட்சியை உலுக்காமல் இருக்க முடியாது. குற்றம் சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனையைக் கருத்தில் கொள்ளும்போது, குற்றவாளிக்கு எதிராகச் சமூகம் எழுப்பும் நீதிக்கான குரலுக்கும் தண்டனை பதிலளிக்க வேண்டும். என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

350. In Mehboob Batcha Vs. State represented by S.P 2011 7 SCC 45 என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம்

எங்கள் கருத்துப்படி, காவலர்களால் செய்யப்படும் கொலை என்பது அரிதிலும் அரிதான வழக்குகளின் வகையைச் சேர்ந்தது. மரண தண்டனைக்குத் தகுதியானது குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது எந்தக் கருணையும் காட்டப்படக்கூடாது என்றும் அண்ணாமலை நகர் காவல் நிலைய வளாகத்திற்குள் நடந்த வழக்கு ஒன்றில் தீர்பளித்துள்ளது

மேலும், பத்தி 17-ல், இந்த உத்தரவின் நகல் ஒன்று உள்துறைச் செயலாளருக்கும், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் காவல்துறை தலைமை இயக்குனர்களுக்கும் அனுப்பப்பட்டு அவர்கள் அதனை காவல் நிலைய அதிகாரி (SHO) வரையிலான அனைத்து காவல்துறை அதிகாரிகளுக்கும் அனுப்பி, டி.கே.பாசு வழக்கில் இந்த நீதிமன்றம் வழங்கிய வழிகாட்டுதல்களை அவர்கள் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என்றும், காவலில் நிகழும் வன்முறைக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படும் என்று அறிவுறுத்தியும் இத்தகயை மரணங்கள் ஏற்படுவது வருத்தத்தை அளிக்கின்றது ,

351. மேலே கண்ட முன் தீர்ப்பின் அடிப்படையில் பார்க்கும் போது காவல் நிலைய மரணங்கள் கொடூரமானது என்றும் மரண தண்டனை விதிக்க தக்கது எந்த

கருணையும் காட்டப்படக்கூடாது என்றும் உச்சநீதிமன்றம் 2011ம் வருடமே தெரிவித்திருந்தும் அதனை சுற்றறிக்கையாக அனைத்து காவல்நிலையங்களும் அனுப்பிட அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் உள்துறைச் செயலாளர் மற்றும் காவல்துறைத் தலைவர்களுக்கு உத்தரவிட்டிருந்தும் இருந்தும் இத்தகைய குற்றங்கள் நடைபெறுவதை வைத்து பார்க்கும் போது உட்ச பட்ச தண்டனை வழங்குவது சரியானதாக இருக்கும் என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறத. இனியும் இத்தகைய குற்றங்களை செய்ய நினைப்பவர்களுக்கு தூக்கு தண்டனை ஒன்றுதான் பரிசாக கிடைக்கும் என்பதை அவர்கள் உணர்ந்தால் தான் இனிமேலாவது இத்தகைய குற்றங்களை ஓரளவாவது கட்டுப்படுத்த முடியும் என இந்த நீதிமன்றம் கருதுகிறது.

352. இந்த வழக்கை பொருத்தவரை யார் அதிகமாக காயப்படுத்தினார்கள் என்றெல்லாம் வேறுபடுத்தி பார்க்கமுடியாது. எதிரிகள் அனைவரும் ஒருமித்த கருத்துடன் கூட்டாக இணைந்தே குற்றத்தை இழைத்துள்ளனர். எனவே அனைத்து எதிரிகளுமே சமமாக தண்டிக்கப்படவேண்டியவர்கள் என்றும் அவரவர் பொருளாதார சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு பொருத்தமான அபராதத்தை விதிக்கலாம் என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

353. எனவே இந்த வழக்கின் சங்கதி சூழ்நிலைகளையும் முன்னிடப்பட்டுள்ள சாட்சியங்களையும் முன் தீர்ப்புகளையும் தண்டனை வழங்குவதற்கான கடுமையான மென்மையான காரணிகளையும் பரிசீலித்த வகையில் இந்த வழக்கு அரிதிலும் அரிதான வழக்கு என்றும் இதில் ஆயுள் தண்டனை வழங்குவது உசிதமானது அல்ல என்றும் மரண தண்டனை வழங்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் இந்த நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

354. எனவே 2 முதல் 7 மற்றும் 9 எதிரிகளுக்கு இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34 (2 எண்ணம்) ன் கீழான குற்றத்திற்கும் 1,8 எதிரிகளுக்கு இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34–(2 எண்ணம்) மற்றும் இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 109 உ/இ இதச

பிரிவு 114-ன் கீழும் சாகும்வரை தூக்கிலிடும்படி மரணதண்டனையும் அபராதமும் விதித்து தண்டிக்கலாம் என இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

355. எனவே 1 முதல் 9 எதிரிகளுக்கு கீழ் கண்ட குற்றங்களுக்கு கீழ் கண்டவாறு தண்டனையும் அபராதமும் விதித்து குவிமுச பிரிவு 235(2)-ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.

1ம்எதிரி

| | |
|---|---|
| இதச பிரிவு 342 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் ஓராண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 342 (2 count) Rs 1000+1000= Rs 2000/-<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 201 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் 7 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 201 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000/-<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் தலா 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் |

| | |
|---|---|
| | விதிக்கப்படுகின்றது.<br>Total fine for offence u/s 195 r/w 34 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000 தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் தலா 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 211 r/w 34 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது. |
| இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் தலா 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 218 r/w 34 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 109 உ/இ இதச பிரிவு 114, இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் சாகும் வரை தூக்கிலிடும்படி மரண தண்டனையும் அபராதமாக தலா ரூபாய் 12,00,000 விதிக்கப்படுகின்றது தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |

| | |
|---|---|
| | Total fine for offence u/s 302 r/w 109 r/w 114, (2எண்ணம்) IPC Rs 12,00,000+ Rs12,00,000<br>= Rs 24,00,000/ |

For A1 total fine Rs 24,10,000/

2ம் எதிரி

| | |
|---|---|
| இதச பிரிவு 342 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் ஓராண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 342 (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 201 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் 7 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 201 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்)– | ஒவ்வொரு எண்ணத்திற்கும் சாகும் வரை தூக்கிலிடும்படி மரண தண்டனையும் அபராதமாக தலா ரூபாய் 8,25,000 விதிக்கப்படுகின்றது |

| | |
|---|---|
| | தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 302 r/w 34 (2எண்ணம்) IPC Rs 8,25,000+8,25,000<br><br>= Rs 16, 50, 000 / |

For A2 total fine Rs 16,54.000

3ம் எதிரி

| | |
|---|---|
| இதச பிரிவு 342 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் ஓராண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 342 (2 count) Rs 1000+1000= Rs 2000<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 201 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் 7 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 201 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |

| | |
|---|---|
| இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் தலா 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 195 r/w 34 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் தலா 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 211 r/w 34 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் தலா 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 218 r/w 34 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் |

| | |
|---|---|
| | சாகும் வரை தூக்கிலிடும்படி மரண தண்டனையும் அபராதமாக தலா ரூபாய் 2,60.000 லட்சமும் விதிக்கப்படுகின்றது தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது<br>Total fine for offence u/s 302 r/w 34 (2எண்ணம்) IPC Rs 2,60,000+2,60,000= Rs 5,20,000 |

For A3 total fine Rs 5,30,000./

4ம் எதிரி

| | |
|---|---|
| இதச பிரிவு 342 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் ஓராண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 342 (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 201 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் 7 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 201 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000 |

| | |
|---|---|
| | தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் தலா 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 195 r/w 34 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் தலா 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 211 r/w 34 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் தலா 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 218 r/w 34 IPC (2 |

| | |
|---|---|
| | count) Rs 1000+1000= Rs 2000<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் சாகும் வரை தூக்கிலிடும்படி மரண தண்டனையும் அபராதமாக தலா ரூபாய் 5.00,000லட்சமும் விதிக்கப்படுகின்றது தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 302 r/w 34 (2எண்ணம்) IPC Rs 5,00,000+5,00,000= Rs 10,00,000 |

For A4 total fine Rs 10,10,000/

5ம் எதிரி

| | |
|---|---|
| இதச பிரிவு 342 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் ஓராண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 342 (2 count) Rs 1000+1000= Rs 2000<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 201 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் 7 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது |

| | |
|---|---|
| | Total fine for offence u/s 201 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34 (2எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் சாகும் வரை தூக்கிலிடும்படி மரண தண்டனையும் அபராதமாக தலா ரூபாய் 2,75,000/ விதிக்கப்படுகின்றது தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது<br>Total fine for offence u/s 302 r/w 34 (2எண்ணம்) IPC Rs 2,75,000/+ 2,75,000= 5,50,000 |

For A5 total fine Rs 5,54,000/

6ம் எதிரி

| | |
|---|---|
| இதச பிரிவு 342 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் ஓராண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 342 (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 201 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் 7 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத |

| | |
|---|---|
| | தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 201 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 195 உ/இ 34 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் தலா 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 195 r/w 34 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 211 உ/இ 34 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் தலா 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 211 r/w 34 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 218 உ/இ 34 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் தலா 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் |

| | |
|---|---|
| | அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 218 r/w 34 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 302 உ/இ 34 (2எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் சாகும் வரை தூக்கிலிடும்படி மரண தண்டனையும் அபராதமாக தலா ரூபாய் 1,60,000/ விதிக்கப்படுகின்றது தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 302 r/w 34 (2எண்ணம்) IPC Rs 3,20,000 |

For A6 total fine Rs 3,30,000/

7ம் எதிரி

| | |
|---|---|
| இதச பிரிவு 342 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் ஓராண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 342 (2 count) Rs 1000+1000= Rs 2000<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 201 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் 7 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் |

| | |
|---|---|
| | அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 201 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் சாகும் வரை தூக்கிலிடும்படி மரண தண்டனையும் அபராதமாக தலா ரூபாய் 7,20,000/ விதிக்கப்படுகின்றது தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது<br>Total fine for offence u/s 302 r/w 34 (2எண்ணம்) IPC Rs 7,20,000+ 7,20,000= Rs 14,40,000 |

For A7 total fine Rs 14,44,000./

8ம்எதிரி

| | |
|---|---|
| இதச பிரிவு 342 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் ஓராண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br>Total fine for offence u/s 342 (2 count) Rs 1000+1000= Rs 2000<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 201 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் |

| | |
|---|---|
| | 7 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 201 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 109 உ/இ இதச பிரிவு 114 மற்றும் 302 உ/இ 34 (2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் சாகும் வரை தூக்கிலிடும்படி மரண தண்டனையும் அபராதமாக தலா ரூபாய் 5,25,000/- விதிக்கப்படுகின்றது தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 302 r/w 34 & 302 r/w 109 r/w 114, (2எண்ணம்) IPC Rs 5,25,000+ /-= 5,25,000= Rs 10,50,000 |

For A8 total fine Rs 10,54,000/-

9ம்எதிரி

| | |
|---|---|
| இதச பிரிவு 342 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் ஓராண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 342 (2 count) Rs 1000+1000= Rs 2000 |

| | |
|---|---|
| | தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 201 (2 எண்ணம்), | ஒவ்வொரு எண்ணத்திற்கும் 7 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் அபராதம் ரூபாய் ஆயிரமும் அபராத தொகையை கட்ட தவறினால் இரண்டு மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 201 IPC (2 count) Rs 1000+1000= Rs 2000<br><br>தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது |
| இதச பிரிவு 302 உ/இ இதச பிரிவு 34(2 எண்ணம்) | ஒவ்வொரு எண்ணத்திற்கும் சாகும் வரை துாக்கிலிடும்படி மரண தண்டனையும் அபராதமாக தலா ரூபாய் 5,25,000/- விதிக்கப்படுகின்றது தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகின்றது<br><br>Total fine for offence u/s 302 r/w 34 (2எண்ணம்) IPC Rs 5,25,000+ /-= 5,25,000= Rs 10,50,000 |

For A9 total fine Rs 10,54,000/

* மேற்படி எதிரிகள் அபராத தொகையை கட்டதவறினால் RRAct -ன் அடிப்படையில் மேற்படி எதிரிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் இருந்தோ GPF தொகையிலிருந்தோ CPS தொகையிலிருந்தோ வசூலிக்க தமிழக அரசுக்கு உத்தரவிடப்படுகின்றது.

* எதிரிகள் ஏற்கனவே விசாரணை காலத்தில் சிறையிலிருந்துள்ள நாட்களை தண்டணை காலத்திலிருந்து கழித்துக்கொள்ள குவிமுச பிரிவு 428 படி உத்தரவிடப்படுகின்றது.

* மேல்முறையீடு செய்யப்படவில்லை எனில் மேல் முறையீட்டு காலத்திற்குப் பின் அ.சா.பொ.10, அ.சா.பொ.21, அ.சா.பொ.22, அ.சா.பொ.26 அதன் DVRஆகியவற்றை தூத்துக்குடி காவல்துறை கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது. மேல்முறையீடு செய்யப்படவில்லை எனில் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் *அ.சா.பொ. 24–ஐ சாட்சி பிரபுவிடம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

மேல்முறையீடு செய்யப்படவில்லை எனில் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் அ.சா.பொ. 39 முதல் 45 மற்றும் 47 முதல் 50–ஐ செல்வராணியிடம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

மேல்முறையீடு செய்யப்படவில்லை எனில் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் அ.சா.பொ.1 முதல் 9, 11 முதல் 20, 23, 25, 27 முதல் 38, 46 51 முதல் 57 ஐ அழிக்க உத்தரவிடப்படுகிறது.
மேல்முறையீடு செய்யப்படவில்லை எனில் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் எ.சா.பொ.1 முதல் 4–ஐ எ.சா.8–யிடம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.
மேல்முறையீடு செய்யப்பட்டால் தரப்பினர்கள் வழக்கு சொத்துக்களை பொறுத்து மேல்முறையீட்டு நீதிமன்ற உத்தரவுப்படி நடந்து கொள்ள உத்தரவிடப்படுகிறது.

RPR.No.1/2026–மேல்முறையீடு செய்யப்படவில்லை எனில் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் தூத்துக்குடி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

RPR.No.5/2021, 6/2021, 7/2021, 8/2021 மற்றும் 9/2021

மொத்த அபராத தொகை ரூ.1,00,40,000/–ஐ அசா 3 செல்வராணிக்கு இழப்பீடாக வழங்க உத்தரவிடப்படுகின்றது. மேற்படி இழப்பீடு போதுமானதாக இல்லாதிருக்கும் பட்சத்தில் மதுரை மாவட்ட இலவச சட்ட உதவி மையத்தை நாடி victim compensation Scheme– ன் கீழ் கூடுதல் இழப்பீடு பெற்றுக் கொள்ள பாதிக்கப்பட்ட தரப்பினர்களுக்கு உத்தரவிடப்படுகிறது. அதற்கு ஏதுவாக இந்த தீர்ப்பின் நகல் ஒன்றை மதுரை மாவட்ட இலவச சட்ட உதவி ஆணையத்திற்கு அனுப்பி வைக்க உத்தரவிடப்படுகிறது.

எ.சா.ஆ.18 பொய் ஆவணம் என தெரியவருவதால் அதுகுறித்து 1ம் எதிரிக்கு எதிராக வழக்கு தொடர உரிய நீதிமன்றத்தில் புகார் அளிக்க நீதிமன்ற கண்காணிப்பாளருக்கு சமர்பிக்கும் படி உத்தரவிடப்படுகிறது.

மற்ற தண்டனைகளை நிறைவேற்ற உத்தரவிடப்படுகிறது. தூக்கு தண்டனையை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உறுதிபடுத்திய பிறகு நிறைவேற்ற உத்தரவிடப்படுகிறது. தூக்கு தண்டனையை உறுதி செய்வது சம்மந்தமாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளைக்கு இவ்வழக்கு கோப்பை BNSS பிரிவு 407 (366 Cr.P.C.) –ன்படி உடனடியாக அனுப்ப கண்காணிப்பாளருக்கு உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பிரதி எடுக்கப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு என்னால் இந்த திறந்த நீதிமன்றத்தில் இன்று 06.04.2026 அன்று அவையறிய பகரப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

மதுரை

I) அரசு தரப்பு சாட்சிகள்

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திருமதி. ப்யூலா | இறந்துபோன ஜெயராஜின் மகள் பென்னிக்சின் சகோதரி |
| அ.சா.2 | திரு. சங்கர் | கோவில்பட்டி கிளை சிறைச்சாலை கண்காணிப்பாளர் |
| அ.சா.3 | திருமதி. செல்வராணி | இறந்துபோன ஜெயராஜின் மனைவி பென்னிக்சின் தாயார் |
| அ.சா.4 | திரு. பெர்சிஸ் | இறந்துபோன ஜெயராஜின் மகள் பென்னிக்சின் சகோதரி |
| அ.சா.5 | திரு. தேசிங்குராஜா | இறந்துபோன ஜெயராஜின் மனைவியின் சகோதரர் |
| அ.சா.6 | திரு.ஜோசப் | இறந்துபோனஜெயராஜின் சகோதரியின் |

| | | |
|---|---|---|
| | | கணவர் |
| அ.சா.7 | திரு. சங்கரலிங்கம் | இறந்துபோன பென்னிக்சின் நண்பர் |
| அ.சா.8 | திரு. ரவிசங்கர் | இறந்துபோன பென்னிக்சின் நண்பர் |
| அ.சா.9 | திரு. மணிமாறன் | வழக்குரைஞர் மற்றும் இறந்துபோன பென்னிக்சின் பள்ளி தோழர் |
| அ.சா.10 | திரு. ராஜாராம் | வழக்குரைஞர் மற்றும் இறந்துபோன பென்னிக்சின் பள்ளி தோழர் |
| அ.சா.11 | திரு. அர்வின் | இறந்துபோன பென்னிக்சின் மொபைல் கடைக்கு பக்கத்து கடையில் வேலை பார்க்கும் அன்னமரியாள் என்பவரின் மகன் |
| அ.சா.12 | திரு. இசக்கிதுரை | இறந்துபோன பென்னிக்ஸ் கடைக்கு அருகே உள்ள GG பாக்கியம் Hard Warse கடையில் வேலை பார்க்கும் நபர் |
| அ.சா.13 | திரு. பேச்சிப்பாண்டி | இறந்துபோன ஜெயராஜ் கடைக்கு எதிரே உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டி வருபவர் |
| அ.சா.14 | திரு. நடராஜன் | சாத்தான்குளம் அரசு மருத்துவமனை OP சீட்டு கொடுக்கும் பணியாளர் |
| அ.சா.15 | திரு. கிருபை | சாத்தான்குளம் அரசு மருத்துவமனையின் செவிலியர் |
| அ.சா.16 | திரு. இன்ஃபென்ட் அந்தோணி பிஜு | சாத்தான்குளத்தில் சிசிடிவி கேமரா உதிரி பாகம் விற்பனை செய்பவர். |
| அ.சா.17 | திரு. கருப்பசாமி, த.பெ.முருகன் | இறந்துபோன ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அடைக்கப்பட்ட கோவில்பட்டி கிளை சிறைச்சாலையில் வேறொரு வழக்கில் விசாரணை கைதியாக இருந்துள்ளவர் |
| அ.சா.18 | மருத்துவர் திரு. வெங்கடேஷ் | கோவில்பட்டி கிளை சிறைச்சாலையில் 20.06.2020–ம் தேதி ஜெயராஜ் மற்றும் பென்னிக்சிற்கு மருத்துவம் சிகிச்சை அளித்துள்ள கோவில்பட்டி அரசு மருத்துவமனை மருத்துவர் |
| அ.சா.19 | திரு. பொன்ராஜ் | சாத்தான்குளம் காவல்நிலையத்தில் Mail முதலிய கடித தொடர்புகளை பராமரித்து வந்துள்ளவர் |

| | | |
|---|---|---|
| அ.சா.20 | திரு. ரவிச்சந்திரன் | சாத்தான்குளம் காவல் நிலையத்தில் CCTNS பணி பார்த்துள்ளவர் |
| அ.சா.21 | திரு. பாலசுப்பிரமணியன் | 22.06.2020–ம் தேதி இரவு பென்னிக்ஸ் இறப்பதற்கு முன் பென்னிக்சிற்கு மருத்துவ சிகிச்சை அளித்துள்ள கோவில்பட்டி அரசு மருத்துவமனை மருத்துவர் |
| அ.சா.22 | திருமதி. புகழ்வாசுகி | கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு 22.06.2020 அன்று இரவு ஜெயராஜ் கொண்டு வரப்பட்டபோது செவிலியம் பார்த்துள்ள செவிலியர் |
| அ.சா.23 | திரு. அருணாச்சலபெரு மாள் | கோவில்பட்டி அரசு மருத்துவமனை க்கு 22.06.2020 அன்று பென்னிக்ஸ் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டபோது செவிலியம் பார்த்துள்ள Male Nursing Assistant |
| அ.சா.24 | திரு. மாரிமுத்து | கோவில்பட்டி கிளை சிறைச்சாலையில் 20.06.2020 அன்று வாயில் பாராவில் இருந்துள்ள காவலர் |
| அ.சா.25 | திரு. ஆரோக்கியசாமி | 19.06.2020–ம் தேதி இரவு 07.00 மணியளவில் நில பிரச்சனை சம்மந்தமான புகார் ஒன்று சம்மந்தமாக சாத்தான்குளம் காவல்நிலையத்தில் விசாரணைக்கு சென்றுள்ள நபர் |
| அ.சா.26 | திரு. ஜெயசேகர் | சாத்தான்குளம் காவல்நிலையத்தில் பணியாற்றியுள்ள 1–ம் எதிரியின் ஜீப் ஓட்டுநர் |
| அ.சா.27 | திரு. கருப்பசாமி | ஜெயராஜின் உடலை பிரேத பரிசோதனை செய்தபோது உடன் இருந்தது குறித்தும் விசராவை ஆய்வகத்திற்கு எடுத்து சென்றது குறித்தும் ஜெயராஜின் உடைகளை பெற்று கோவில்பட்டி நீதித்துறை நடுவரிடம் ஒப்படைத்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ள காவலர் |
| அ.சா.28 | திரு. சிவக்குமார் | பென்னிக்சின் உடலை பிரேத பரிசோதனை செய்தபோது உடன் இருந்தது |

| | | |
|---|---|---|
| | | குறித்தும் விசராவை ஆய்வகத்திற்கு எடுத்து சென்றது குறித்தும் பென்னிக்சின் உடைகளை பெற்று கோவில்பட்டி நீதித்துறை நடுவரிடம் ஒப்படைத்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ள காவலர் |
| அ.சா.29 | திரு. முருகன் | பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜின் இறப்பு குறித்து புகாரை பெற்று கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண் 649/2020 மற்றும் 650/2020 வழக்கை பதிவு செய்துள்ள உதவி காவல் ஆய்வாளர் |
| அ.சா.30 | திரு. தாவீது | ஜெயராஜின் மனைவி செல்வராணியின் உறவினர் |
| அ.சா.31 | திரு. சுதேசன் | ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் வழக்கை முதலில் புலனாய்வுக்கு எடுத்துக்கொண்டு பின்னர் சிபிசிஐடியிடம் வழக்கை ஒப்படைத்துள்ள கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய ஆய்வாளர் |
| அ.சா.32 | திரு. சுப்பிரமணியன் | சாட்சி வேல்முருகனின் வாக்குமூலத்தை பதிவு செய்ய உதவியுள்ள நல்லாயன் செவித்திறன் குறைவுடையோர் பள்ளி ஆசிரியர் |
| அ.சா.33 | திரு.வேல்முருகன் | சாத்தான்குளம் காவல்நிலையத்தில் துப்புரவு வேலை பார்த்துள்ள நபர் |
| அ.சா.34 | திரு.ஜான்சன் தேவசகாயம் | தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரது அலுவலக மேலாளர். இவர் கோவிட்–19 தொடர்பாக தூத்துக்குடி மாவட்ட பிறப்பித்துள்ள செயல்முறை உத்தரவுகள் குறித்து சாட்சியம் அளித்துள்ளார் |
| அ.சா.35 | மருத்துவர் திரு. தாம்சன் | சாத்தான்குளம் காமராஜர் சிலை அருகே ரத்னா பல் மருத்துவமனை என்ற பெயரில் மருத்துவமனை வைத்துள்ள மருத்துவர் |
| அ.சா.36 | திரு. சக்திவேல் | சாட்சி ரேவதியின் குவிமுச பிரிவு 164–ன் கீழான வாக்குமூலத்தை பதிவு செய்துள்ள தூத்துக்குடி நீதித்துறை நடுவர் எண்.3 |
| அ.சா.37 | திரு. கோபி | பிரேத பரிசோதனையின் போது அதனை வீடியோ பதிவு செய்துள்ள தூத்துக்குடி |

| | | |
|---|---|---|
| | | மாவட்ட ஆயுத படையை சார்ந்த 2–ம் நிலை இடைக்காவலர் |
| அ.சா.38 | திரு. டேவிட் ஜோசப் பால்ராஜ் | பென்னிக்சின் கைபேசி தொடர்பான CDR தகவல் அளித்துள்ள BSNL Nodel Officer |
| அ.சா.39 | திரு.முரளிதரன் | ஜெயராஜின் கைபேசி தொடர்பான CDR தகவல் அளித்துள்ள BSNL Nodel Officer |
| அ.சா.40 | திருமதி. திலகவதி | எதிரிகளின் CDR சம்மந்தமான தகவல்களை அளித்துள்ள BSNL GDM |
| அ.சா.41 | திருமதி. உமா சிதம்பரம் | வருமானவரித்துறை அலுவலர் சிபிஐ போலிசார் சாத்தான்குளம் காவல்நிலையத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்தபோது உடன் இருந்துள்ளவர் |
| அ.சா.42 | திருமதி. விஜயலதா | திருநெல்வேலி வட்டார தடய ஆய்வக துணை இயக்குநர். சாத்தான்குளம் காவல்நிலையம் மற்றும் கோவில்பட்டி கிளை சிறைச்சாலையில் தடய ஆய்வு செய்தபோது தடயங்களை கைப்பற்றியது குறித்து சாட்சியம் அளித்துள்ளார். |
| அ.சா.43 | திரு. செல்வமுருகன் | ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை பிரேத பரிசோதனை செய்துள்ள மூவர் மருத்துவக்குழுவை சார்ந்த மருத்துவர் |
| அ.சா.44 | திரு. ப்யூலா செல்வகுமாரி | சாத்தான்குளம் காவல்நிலையத்தில் சம்பவத்தை நேரில் கண்ணுற்றதாக விசாரிக்கப்பட்டுள்ள தலைமை காவலர் |
| அ.சா.45 | மருத்துவர் திருமதி. வினிலா | ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ரிமாண்ட் செய்யப்படுவதற்கு முன் அவர்களை 20.06.2020–ம் தேதி மருத்துவ பரிசோதனை செய்துள்ளார். சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் பணியாற்றியுள்ள அரசு மருத்துவர் |
| அ.சா.46 | திரு. ராஜாசிங் | ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அடைக்கப்பட்ட கோவில்பட்டி கிளை சிறைச்சாலையில் மற்றொரு வழக்கில் விசாரணை கைதியாக இருந்துள்ள சிறைவாசி. இவர் தன்னையும் மேற்படி |

| | | |
|---|---|---|
| | | காவல்நிலையத்தில் வைத்து போலிசார் பிட்டத்தில் அடித்ததாக சாட்சியம் அளித்துள்ளார். |
| அ.சா.47 | திருமதி. ரேவதி | வழக்கு சம்பவத்தை நேரில் கண்ணுற்றதாக கூறப்படும் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் பணியாற்றியுள்ள காவலர் |
| அ.சா.48 | திரு.அர்விந்த்குமார் | ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் இறப்பிற்கான காரணம் குறித்து கண்டறிய அமைக்கப்பட்ட MIMB மருத்துவக்குழுவில் இடம் பெற்றுள்ள மருத்துவர் |
| அ.சா.49 | திரு. பிரபு | பென்னிக்ஸ் கடைக்கு அருகே உள்ள King Electricals கடையின் உரிமையாளர் |
| அ.சா.50 | திரு. பாரதிதாசன் | ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் இறப்பு சம்மந்தமாக குவிமுச பிரிவு 176 (1) (A) (i) –ன் கீழ் விசாரணை நடத்தியுள்ள கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 |
| அ.சா.51 | திரு. அனில்குமார் | இவ்வழக்கை விசாரித்துள்ள சிபிசிஐடி புலனாய்வு அதிகாரி |
| அ.சா.52 | திரு. விஜய்குமார் சுக்லா | இவ்வழக்கை விசாரித்துள்ள சிபிஐ புலனாய்வு அதிகாரி |

அரசு <u>தரப்பு சான்றாவணங்கள்</u>

| வ.எண் | தேதி | ஆவணவிவரம் | குறிப்பு | |
|---|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | -- | கோவில்பட்டி சிறையில் பராமரிக்கப்படும் சிறைவாசி அனுமதி பதிவேடு (Admission Register) | அசல் | கோவில் பட்டி கிளை சிறைச் சாலை கண்காணிப்பாளர் அ.சா.2 மூலம் |
| அ.சா.ஆ2 | -- | கோவில்பட்டி சிறையில் பராமரிக்கப்படும் மருத்துவர் பதிவேடு (Doctor Register) | அசல் | –do– |
| அ.சா.ஆ3 | 22.06.2020 | மேற்படி அ.சா.ஆ.2 பதிவேட்டில் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் | அசல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆகியோருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்த விபரங்கள் (பக்கம்–81) | | |
| அ.சா.ஆ4 | –– | கோவில்பட்டி சிறைச்சாலையில் அதிகாரிகள் உள்ளே மற்றும் வெளியேறும் நேரம் குறித்து பராமரிக்கப்படும் பதிவேடு (In Out Register) | உண் மைநகல் | –do– |
| அ.சா.ஆ5 | 22.06.2020 | பென்னிக்ஸ் இறப்பு குறித்து கோவில்பட்டி தாலுகா காவல்நிலையத்தில் அ.சா.2 சங்கர் கொடுத்துள்ள புகார் | அசல் | –do– |
| அ.சா.ஆ6 | 23.06.2020 | ஜெயராஜ் இறப்பு குறித்து கோவில்பட்டி தாலுகா காவல்நிலையத்தில் அ.சா.2 சங்கர் கொடுத்துள்ள புகார் | அசல் | –do– |
| அ.சா.ஆ7 | 18.07.2020 | ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் உடன் கோவில்பட்டி கிளை சிறைச்சாலையில் அறை எண் 3–ல் இருந்த மற்ற சிறைவாசிகள் குறித்த ஆவணம் (தனித்தாள்களாக உள்ளது 6 பக்கம்) | அசல் | –do– |
| அ.சா.ஆ8 | 18.07.2020 | சிபிஐ கூடுதல் காவல் துறை கண்காணிப்பாளர் திரு,விஜய்குமார் சுக்லாவிடம் கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலை கண்காணிப்பாளர் சங்கர் Admission Book, Doctors Register, Nominal Roles of Prisiners Certified copy of In and out Register list of prisoners lodged with deceased, Cerified copy of Remand Warrant, Proforma Health screening of Prisioners of Jeyaraj and Bennicks ( total seven documents) ஆகிய ஆவணங்களை | அசல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஒப்படைத்ததற்குரிய கைப்பற்றுகை குறிப்பாணை | | |
| அ.சா.ஆ9 | 18.07.2020 | சிபிஐ அதிகாரிகள் கோவில்பட்டி கிளைச்சிறை சாலையை பார்வையிட்டு தயாரித்துள்ள பார்வை மகசர் | அசல் | –do– |
| அ.சா.ஆ10 | 18.07.2020 | சிபிஐ அதிகாரிகள் கோவில்பட்டி கிளைச்சிறை சாலையை பார்வையிட்டு தயாரித்துள்ள வரைபடம் | அசல் | –do– |
| அ.சா.ஆ11 | 20.06.2020 | பென்னிக்ஸ் கோவில்பட்டி கிளைச் சிறைச்சாலைக்கு கொண்டு வரப்பட்டபோது, பெறப்பட்டுள்ள ரிமாண்ட் வாரண்ட் | உண்மை நகல் | –do– |
| அ.சா.ஆ12 | 20.06.2020 | ஜெயராஜ் கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலைக்கு கொண்டு வரப்பட்டபோது பெறப்பட்டுள்ள ரிமாண்ட் வாரண்ட் | உண்மை நகல் | –do– |
| அ.சா.ஆ13 | --- | 16.06.2020 முதல் 21.06.2020 வரை சிறையில் இருந்த சிறைவாசிகளின் விவரங்கள் அடங்கிய ஆவணங்களின் சான்றிட்ட நகல்களின் தொகுப்பு (தனித்தாளாக உள்ளது பக்கம் 1 முதல் 64) | உண்மை நகல் | –do– |
| அ.சா.ஆ14 | --- | கோவில்பட்டி கிளை சிறைச்சாலையின் சிறைவாசி<br><br>சிறை அடைப்பு பதிவேட்டின் 17.06.2020 முதல் 26.06.2020 தேதிய காலத்திற்கான பதிவுகள் (பக்கம் 353 முதல் 358 வரை) | உண்மை<br><br>நகல் | –do– |
| அ.சா.ஆ15 | 20.06.2020 | ஜெயராஜ்–ன் புறநோயாளி பதிவு சீட்டு | அசல் | சாத்தான்குளம் அரசு மருத்துவமனை ஊழியர் அ.சா.14 நடராஜன் மூலம் குறியீடு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ16 | 20.06.2020 | பென்னிக்ஸ்–ன் புறநோயாளி பதிவு சீட்டு | அசல் | –do– |
| அ.சா.ஆ17 | 20.06.2020 | சிறைவாசிகளை சிறையில் அனுமதிக்கும் படிவத்தில் உள்ள சாத்தான்குளம் அரசு மருத்துவமனை உதவி மருத்துவ அதிகாரியின் கையெழுத்து மட்டும் | அசல் | –do– |
| அ.சா.ஆ18 | 20.06.2020 | சிறைவாசிகளை சிறையில் அனுமதிக்கும் படிவத்தில் உள்ள சாத்தான்குளம் அரசு மருத்துவமனை உதவி மருத்துவ அதிகாரியின் கையெழுத்து மட்டும் | அசல் | –do– |
| அ.சா.ஆ19 | 20.06.2020 | சிறைவாசிகளை சிறையில் அனுமதிப்பதற்காக செய்யப்பட்டுள்ள மருத்துவ பரிசோதனை Health Screening குறித்த படிவம் (ஜெயராஜ் தொடர்பானது) | அசல் | சாத்தான்குளம் அரசு மருத்துவமனை செவிலியர் கிருபை கிரனேப்பு அ.சா.15 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ20 | 20.06.2020 | சிறைவாசிகளை சிறையில் அனுமதிப்பதற்காக செய்யப்பட்டுள்ள மருத்துவ பரிசோதனை Health Screening குறித்த படிவம் (பென்னிக்ஸ் தொடர்பானது) | அசல் | –do– |
| அ.சா.ஆ21 | 31.05.2020 | 30.06.2020ம் தேதி 24.00 மணிவரை கோவிட் Lockdown–ஐ நீட்டித்து குவிமுச 144–ன் கீழ் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் பிறப்பித்துள்ள ROC.No.C2/8583/2020 | உண்மை நகல் | சாத்தான்குளம் காவல்நிலைய Mail முதலிய கடிதங்களை பராமரிக்கும் அ.சா.19 பொன்ராஜ் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.ஆ22 | 19.06.2020 | சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 தொடர்பான புகார் | ஜெராக்ஸ் நகல் | சாத்தான்குளம் காவல் நிலைய CCTNS பணி பார்த்துள்ள அ.சா.20 ரவிசந்திரன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ23 | 19.06.2020 | சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 தொடர்பான முதல் தகவல் அறிக்கை | ஜெராக்ஸ் நகல் | –do– |
| அ.சா.ஆ24 | 19.06.2020 | சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 வழக்கு சம்மந்தமான காவல் அடைப்பு வேண்டுகோள் அறிக்கை | நகல் | –do– |
| அ.சா.ஆ25 | 19.06.2020 | சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 வழக்கு சம்மந்தமான ஜெயராஜ்–ன் கைது படிவம் | நகல் | –do– |
| அ.சா.ஆ26 | 19.06.2020 | சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 வழக்கு சம்மந்தமான பென்னிக்ஸ்–ன் கைது படிவம் | நகல் | –do– |
| அ.சா.ஆ27 | 19.06.2020 | சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 வழக்கு சம்மந்தமான ஜெயராஜ்–ன் கைது குறிப்பாணை | நகல் | –do– |
| அ.சா.ஆ28 | 19.06.2020 | சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 வழக்கு சம்மந்தமான பென்னிக்ஸ்–ன் கைது குறிப்பாணை | நகல் | –do– |
| அ.சா.ஆ29 | 19.06.2020 | சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 வழக்கு சம்மந்தமான ஜெயராஜ்–ன் குவிமுச 41(1) (b)(II) படிவம் | நகல் | –do– |
| அ.சா.ஆ30 | 19.06.2020 | சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 வழக்கு | நகல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சம்மந்தமான பென்னிக்ஸ்–ன் கு.வி.மு.ச 41(1)(b)(II) படிவம் | | |
| அ.சா.ஆ31 | 19.06.2020 மற்றும் 20.06.2020 | சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 வழக்கு சம்மந்தமான சாட்சிகளின் குவிமுச பிரிவு 161–ன் கீழான வாக்குமூலங்கள் (6 வரிசை) | அசல் | –do– |
| அ.சா.ஆ32 | 20.06.2020 | சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 வழக்கு சம்மந்தமான பார்வை மகசர் | அசல் | –do– |
| அ.சா.ஆ33 | 20.06.2020 | சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 வழக்கு சம்மந்தமான வரைபடம் | அசல் | –do– |
| அ.சா.ஆ34 | 19.06.2020 | சாத்தான்குளம் காவல்நிலைய பொதுநாட்குறிப்பு (GD) | அசல் | –do– |
| அ.சா.ஆ35 | 19.06.2020 | சாத்தான்குளம் காவல்நிலைய Rough Duty Register | அசல் | –do– |
| அ.சா.ஆ36 | --- | சாத்தான்குளம் காவல்நிலை நிலைய Duty Roaster Register (பக்கம் 60 முதல் 63) | அசல் | –do– |
| அ.சா.ஆ37 | 20.07.2020 | கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் கைப்பற்றப்பட்ட 8 ஆவணங்கள் சம்மந்தமான கைப்பற்றுகை அத்தாட்சி | அசல் | 22.06.2020–ம் தேதி பென்னிக்ஸ் இறப்பதற்கு முன் அவருக்கு மருத்துவ சிகிச்சை அளித்துள்ள கோவில்பட்டி அரசு மருத்துவமனை மருத்துவர் அ.சா.21 திரு.பாலசுப்பிரமணிய ன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ38 | 20.07.2020 | Martuary Register (1ம் தாள் Front and Back –2 Pages) | ஜெராக்ஸ் நகல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.ஆ39 | 22.6.2020 | Discharge Summary (Bennicks) (பக்கம் 80, 81) | அசல் | –do– |
| அ.சா.ஆ40 | 22.06.2020 | ஜெயராஜின் இறப்பு சம்மந்தமான பதிவு அடங்கிய Inpatient slip | அசல் | –do– |
| அ.சா.ஆ41 | 22.06.2020 | பென்னிக்ஸ்க்கு ஏற்பட்ட காயம் குறித்து கோவில்பட்டி அரசு மருத்துவமனையிலிருந்து காவல் துறைக்கு அனுப்பியுள்ள குறிப்பாணை (வரிசை எண்.5367) | கார்பன் நகல் | –do– |
| அ.சா.ஆ42 | 22.06.2020 | ஜெயராஜிற்கு ஏற்பட்ட காயம் குறித்து கோவில்பட்டி அரசு மருத்துவமனையிலிருந்து காவல் துறைக்கு அனுப்பியுள்ள குறிப்பாணை (வரிசை எண்.5369) | கார்பன் நகல் | –do– |
| அ.சா.ஆ43 | 22.06.2020 | கோவில்பட்டி அரசு மருத்துவ மனையில் வழுங்கப்பட்டுள்ள பென்னிக்ஸ்–ன் காயச்சான்று நகல் | கார்பன் நகல் | –do– |
| அ.சா.ஆ44 | 22.06.2020 | கோவில்பட்டி அரசு மருத்துவ மனையில் வழுங்கப்பட்டுள்ள ஜெயராஜ்–ன் காயச்சான்று நகல் | கார்பன் நகல் | –do– |
| அ.சா.ஆ45 | 20.07.2020 | கோவில்பட்டி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை மருத்துவர் பணி விவர சான்று (தனித்தாள்) | நகல் | –do– |
| அ.சா.ஆ46 | 20.07.2020 | கோவில்பட்டி அரசு மருத்துவ மனையில் வழுங்கப்பட்டுள்ள மருத்துவர் வார்டு பணி பதிவேடு (தனித்தாள்) | நகல் | –do– |
| அ.சா.ஆ47 | 22.06.2020 | கோவில்பட்டி அரசு மருத்துவ மனையில் வழுங்கப்பட்டுள்ள | அசல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பென்னிக்ஸ் OP Ticket, ECG, Casuality, Ward Death Register (4 Pages) | | |
| அ.சா.ஆ48 | 01.07.2020 | பென்னிக்ஸின் ஆடைகளை நீதித்துறை நடுவர் அவர்களிடம் அ.சா.28 சிவக்குமார் ஒப்படைத்தது சம்மந்தமான கடிதம் | உண்மை நகல் | பென்னிக்சின் உடலை பிரேத பரிசோதனை செய்தபோது உடனிருந்து விசராவை ஆய்வகத்திற்கு எடுத்துச் சென்றுள்ள காவலர் அ.சா.28 திரு.சிவக்குமார் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ49 | 01.07.2020 | ஜெயராஜின் ஆடைகளை நீதித்துறை நடுவர் அவர்களிடம் கருப்பசாமி ஒப்படைத்தது சம்மந்தமான கடிதம் | உண்மை நகல் | –do– |
| அ.சா.ஆ50 | 22.06.2020 | கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண்.649/2020 தொடர்பான முதல் தகவல் அறிக்கை. | அசல் | கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய உதவி காவல் ஆய்வாளர் அ.சா.29 திரு.முருகன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ51 | 22.06.2020 | கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண்.650/2020 தொடர்பான முதல் தகவல் அறிக்கை. | அசல் | –do– |
| அ.சா.ஆ52 | 24.06.2020 | ஜெயராஜ் பிரேத விசாரணை அறிக்கையில் உள்ள சாட்சி தாவீதின் கையெழுத்து | உண்மை நகல் | பிரேத விசாரணை குறித்த சாட்சி ஜெயராஜின் மனைவி செல்வராணியின் உறவினரான அ.சா.30 தாவீது மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.ஆ53 | 24.06.2020 | ஜெயராஜின் இறப்பு சம்மந்தமான குவிமுச பிரிவு 176(1–A) கீழான விசாரணை குறித்த தகவலில் உள்ள சாட்சி தாவீதின் கையெழுத்து | உண்மை நகல் | –do– |
| அ.சா.ஆ54 | 24.06.2020 | பெனிக்ஸ் பிரேத விசாரணை அறிக்கையில் உள்ள சாட்சி தாவீதின் கையெழுத்து | உண்மை நகல் | –do– |
| அ.சா.ஆ55 | 24.06.2020 | பென்னிக்ஸின் இறப்பு சம்மந்தமான குவிமுச பிரிவு 176(1–A) கீழான விசாரணை குறித்த தகவலில் உள்ள சாட்சி தாவீதின் கையெழுத்து | உண்மை நகல் | –do– |
| அ.சா.ஆ56 | 25.06.2020 | கோவில்பட்டி நீதித்துறை நடுவர் அசா 50 பாரதிதாசன் அவர்களிடம் குவிமுச பிரிவு 176(1–A) கீழான விசாரணையில் அ.சா.30 தாவீது கொடுத்துள்ள Statement–ல் உள்ள சாட்சி அசா.30 தாவீதின் கையெழுத்து | உண்மை நகல் | –do– |
| அ.சா.ஆ57 | –– | கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண்.649/2020 தொடர்பான கோப்பின் நகல் | நகல் | ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் வழக்கை முதலில் புலனாய்வுக்கு எடுத்துக்கொண்டு பின்னர் சிபிசிஐடியிடம் வழக்கை ஒப்படைத்துள்ள கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய ஆய்வாளர் அ.சா.31 திரு.சுதேசன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ58 | –– | கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண்.650/2020 தொடர்பான கோப்பின் நகல் | நகல்– | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.ஆ59 | 12.09.2020 | விசாரணைக்கு மொழிப்பெயர்ப்பு சிறப்பு ஆசிரியர் நியமிக்கப்பட்டது சம்மந்தமான மின்னஞ்சல். | நகல் | சாட்சி வேல்முருகனின் வாக்குமூலத்தை பதிவு செய்ய உதவியுள்ள நல்லாயன் செவித்திறன் குறையுடையோர் பள்ளி ஆசிரியர் அ.சா.32 திரு.சுப்பிரமணியன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ60 | 02.07.2020 | கோவில்பட்டி நீதித்துறை நடுவர் அசா 50 பாரதிதாசன் அவர்களிடம் அ.சா.33 ரா.வேல்முருகன் கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள அ.சா.33 ரா.வேல்முருகன் என்பவரது கையெழுத்துகள் | அசல் | சாத்தான்குளம் காவல் நிலையத்தில் துப்புரவு வேலை பார்த்துள்ள அ.சா.33 திரு.வேல்முருகன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ61 | 31.05.2020 | தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் 31.05.2020 ன் தேதி குவிமுச பிரிவு 144–ன் கீழ் பிறபித்துள்ள ROC.No.C2/8583/20 | உண்மை நகல் | தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரது அலுவலக மேலாளரான அ.சா.34 திரு.ஜான்சன் தேவசகாயம் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ62 | 29.06.2020 | தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் நிர்வாக நடுவர் பணி நியமனம் செய்தல் சம்மந்தமாக பிறப்பித்துள்ள நகசி2/12206/20 நாள்.29.06.20 உத்தரவு | உண்மை நகல் | –do– |
| அ.சா.ஆ63 | 03.07.2020 | தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர், நிர்வாக நடுவர் பணி நியமணம் செய்திருந்ததை விடுவித்து பிறப்பித்துள்ள நகசி.2/12206/20 நாள்.03.07.20 உத்தரவு | உண்மை நகல் | –do– |
| அ.சா.ஆ64 | 26.08.2020 | தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் சிபிஜ கூடுதல் காவல்துறை | நகல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கண்காணிப்பாளருக்கு அ.சா.ஆ.61 முதல் 63 ஆவணங்களை வழங்கியது தொடர்பான C2/12206/2020 dt.26.08.2020 செயல்முறை உத்தரவு | | |
| அ.சா.ஆ65 | 27.03.2020 | கொரோனா காலத்தில் ஊரடங்கு நடவடிக்கையை மீறும் நபர்கள் குறித்து நடவடிக்கை எடுக்க அலுவலர்களை நியமித்து தூத்துக்குடி கூடுதல் மாவட்ட நடுவர் பிறப்பித்துள்ள செயல் முறை ஆணை C2/8583/2020 dt.27.03.2020 | உண்மை நகல் | –do– |
| அ.சா.ஆ66 | 03.07.2020 | அ.சா.47 ரேவதி தூத்துக்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்ற எண்.3–ன் நடுவர் திரு.சக்திவேல் அவர்களிடம் கொடுத்துள்ள குவிமுச பிரிவு 164–ன் கீழான வாக்குமூலம். | உண்மை நகல் | தூத்துக்குடி நீதித்துறை நடுவர் எண்.3 திரு.சக்திவேல் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ67 | 20.07.2020 | கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 ன் நடுவர் திரு.பாரதிதாசன் அவர்களிடம் குவிமுச பிரிவு 176(1–A) கீழான விசாரணையில் அ.சா.37 கோபி கொடுத்துள்ள வாக்குமூலத்தில் உள்ள அ.சா.37 கோபி–ன் கையெழுத்து. | அசல் | பிரேத பரிசோதனையை வீடியோ பதிவு செய்துள்ள தூத்துக்குடி மாவட்ட ஆயுத படை 2–ம் நிலை காவலர் அ.சா.37 திரு.கோபி மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ68 | 16.09.2020 | பென்னிக்ஸின் customer applicant form and call data records–ஐ Bharathi Airtel Limited நோடல் ஆபிசர் 65(B) சான்றிதழுடன் அனுப்பியது தொடர்பான கடிதம் | நகல் | BSNL Nodel Officer அ.சா.38 திரு.டேவிட் ஜோசப் பால்ராஜ் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ69 | 14.09.2020 | 18.06.2020 முதல் 24.06.2020 வரையான தேதிக்கு கைப்பேசி எண்.9498139704, 949819430, | ஜெராக்ஸ் நகல் | BSNL Nodel Officer அ.சா.39 திரு.முரளிதரன் மூலம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 8300040800, 9443446371, 9498206358, 9498195523, 9498196032, 9498192918, 9498195257, 9498195527, 9443871591 ஆகிய எண்களுக்கு customer applicant form and call data records கேட்டு அ.சா.39 BSNL Nodal officer க்கு அனுப்பியுள்ள கடிதம் Letter NO.1293/2003, dt.14.09.2020 | | குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ70 | --- | 18.06.2020 முதல் 24.06.2020 வரையான தேதிக்கு கைப்பேசி எண்.9443871591-க்கான கைப்பேசி அழைப்பு விவரம் குறித்து BSNL Divisional Engineer (LEA & LI) வழங்கியுள்ள ஆவணம். | நகல் | -do- |
| அ.சா.ஆ71 | 18.09.2022 | கைப்பேசி எண்.9498139704, 9498194320, 8300040800, 9443446371, 9498206358, 9498195523, 9498196032, 9498192918, 9498195257, 9498195527 ஆகிய எண்களுக்கு CDR விபரங்கள் அடங்கிய ஆவணம் அளித்தது சம்மந்தமாக திருமதி Thilagavathi வழங்கியுள்ள சான்றிதழ் (Page 3 to 64) | நகல் | BSNL DGM அ.சா.40 திருமதி.திலகவதி மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ72 | --- | ரகுகணேஷ் BNSL விண்ணப்ப படிவம், முருகன், பாலகிருஷ்ணன், ஸ்ரீதர், முத்துராஜா, செல்லதுரை, சாமதுரை, பால்துரை, தாமஸ் பிரான்சிஸ், வெயிலுமுத்து ஆகியோர்களது BNSL விண்ணப்ப படிவம் | நகல் | -do- |
| அ.சா.ஆ73 | 18.09.2020 | மேற்சொன்ன 10 தொலைபேசி நம்பர்கள் தொடர்பான CDR | அசல் | -do- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விவரத்தை BNSL DGM BNSL Nodal அலுவலருக்கு DGM (B and CCS) திருமதி Thilagavathi வழங்கியுள்ளது சம்மந்தமான கடிதம் | | |
| அ.சா.ஆ74 | 12.07.2020 | சாத்தான்குளம் காவல்நிலையத்தில் சம்பவ இடத்தை சாட்சி ரேவதி முன்னிலையில் மறுகட்டமைப்பு செய்து பார்த்தது சம்மந்தமாக சிபிஐ அதிகாரிகள் தயாரித்துளள மாதிரி வரைபடம் | நகல் | சிபிஐ போலிசார் காவல் நிலையத்தை பார்வையிட்ட போது உடனிருந்துள்ள வருமானவரித்துறை அலுவலர் அ.சா.41 திருமதி.உமா சிதம்பரம் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ75 | 12.07.2020 | சாத்தான்குளம் காவல்நிலையத்தில் சம்பவ இடத்தை சாட்சி ப்யூலா செல்வ குமாரி முன்னிலையில் மறுகட்டமைப்பு செய்து பார்த்தது சம்மந்தமாக சிபிஐ அதிகாரிகள் தயாரித்துள்ள மாதிரி வரைபடம் | நகல் | –do– |
| அ.சா.ஆ76 | 15.07.2020 | 15.07.2020ம் தேதி மரமேஜை சிபிஐ அதிகாரிகளால் கைப்பற்றது சம்மந்தமான கைப்பற்றுகை மகஜர். | அசல் | –do– |
| அ.சா.ஆ77 | 22.09.2020 | சிபிஐ அதிகாரிகள் தடய அறிவியல் வல்லுநர்களுடன் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் படிந்திருந்த இரத்தக்கறைகளை சேகரித்தது சம்மந்தமான நடவடிக்கை சம்மந்தமான மகசர். | அசல் | –do– |
| அ.சா.ஆ78 | 11.08.2022 | நீதிமன்றத்திற்கு அனுப்பி வைப்பதற்காக சாத்தான்குளம் காவல்நிலையத்தில் மரமேசை கைப்பற்றப்பட்டது சம்மந்தமாக தயாரிக்கப்பட்டுள்ள படிவம் 91 மற்றும் அது சம்மந்தமான | அசல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடவடிக்கை தொடர்பான மகசர் | | |
| அ.சா.ஆ79 | 30.06.2022 | சாத்தான்குளம் காவல்நிலையத்தை தடய ஆய்வு செய்தது சம்மந்தமாக JM.1 கோவில்பட்டி அவர்களுக்கு திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வக இணை இயக்குநர் சமர்பித்துள்ள அறிக்கை | உண்மை நகல் | திருநெல்வேலி வட்டார தடய ஆய்வக துணை இயக்குநர் அ.சா.42 திருமதி.விஜயலதா மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ80 | --- | சாத்தான்குளம் காவல்நிலையத்தில் சுவற்றில் ரத்தக்கறை இருந்தது சம்மந்தமாக தடய ஆய்வு சோதனையின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் | அசல் | -do- |
| அ.சா.ஆ81 | 02.07.2020 | பென்னிக்ஸின் Visecera அறிக்கை | உண்மை நகல் | -do- |
| அ.சா.ஆ82 | 02.07.2020 | ஜெயராஜின் Visecera அறிக்கை | உண்மை நகல் | -do- |
| அ.சா.ஆ83 | 24.06.2020 | ஜெயராஜின் உடலை பிரேத பரிசோதனைக்கு JM.1 கோவில்பட்டி அவர்கள் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி தடய அறிவியல் பேராசிரியர் அவர்களுக்கு கொடுத்துள்ள வேண்டுகோள் கடிதம் (D.No.635/2020 தேதி 24.06.2020) | உண்மை நகல் | ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் உடலை பிரேத பரிசோதனை செய்துள்ள மருத்துவர்களில் ஒருவரான அ.சா.43 திரு.செல்வமுருகன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ84 | 24.06.2020 | பென்னிக்ஸின் உடலை பிரேத பரிசோதனைசெய்ய JM.1 கோவில்பட்டி அவர்கள் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி தடய அறிவியல் பேராசிரியர் அவர்களுக்கு | அலுவலக நகல் | -do- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொடுத்துள்ள வேண்டுகோள் கடிதம் (D.No.634/2020 தேதி 24.06.2020) | | |
| அ.சா.ஆ85 | 24.06.2020 | பிரேத பரிசோதனைக்கு மூவர் மருத்துவர் குழு அமைக்கப்பட்டது சம்மந்தமாக திருநெல்வேலி மருத்துவ கல்லூரி மருத்துவமனை டீன் பிறப்பித்துள்ள உத்தரவு. | உண் மை நகல் | –do– |
| அ.சா.ஆ86 | 24.06.2020 | ஜெயராஜின் முதற்கட்ட பிரேத பரிசோதனை அறிக்கை | அசல் | –do– |
| அ.சா.ஆ87 | 24.06.2020 | பென்னிக்ஸ் முதற்கட்ட பிரேத பரிசோதனை அறிக்கை | அசல் | –do– |
| அ.சா.ஆ88 | 29.06.2020 | மேற்படி முதற்கட்ட பிரேத பரிசோதனை அறிக்கையின் நகல்களை திருநெல்வேலி மருத்துவ கல்லூரி மருத்துவமனை டீன் உயர்நீதிமன்ற மதுரை கிளை கூடுதல் அரசு வழக்குரைஞருக்கு அனுப்பியுள்ளது சம்மந்தமான கடிதம் (L.Dis.No.5489/S4/2020 தேதி 29.06.2020) | அசல் | –do– |
| அ.சா.ஆ89 | 02.07.2020 | ஜெயராஜின் Visera அறிக்கை | அசல் | –do– |
| அ.சா.ஆ90 | 24.06.2020 | பென்னிக்ஸ்–ன் பிரேத பரிசோதனை இறுதி அறிக்கை | அசல் | –do– |
| அ.சா.ஆ91 | 25.06.2020 | பென்னிக்ஸ்–ன் கொரோனா பரிசோதனை அறிக்கை | அசல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.ஆ92 | 24.06.2020 | பென்னிக்ஸ் – ன் Histo pathalogy report | அசல் | –do– |
| அ.சா.ஆ93 | 24.06.2020 | ஜெயராஜ்–ன் பிரேத பரிசோதனை இறுதி அறிக்கை | அசல் | –do– |
| அ.சா.ஆ94 | 25.06.2020 | ஜெயராஜ்–ன் கொரோனா பரிசோதனை அறிக்கை | அசல் | –do– |
| அ.சா.ஆ95 | 24.06.2020 | ஜெயராஜ்– ன் Histo pathalogy report | அசல் | –do– |
| அ.சா.ஆ96 | ––– | சாத்தான்குளம் காவல்நிலைய FIR index Register | அசல் | சாத்தான்குளம் காவல் நிலையத்தை சார்ந்த தலைமை காவலர் அ.சா.44 திருமதி.பியூலா செல்வக்குமாரி மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ97 | ––– | சாத்தான்குளம் காவல்நிலைய (DSR) Daily Situation Report (Page 623) | அசல் | –do– |
| அ.சா.ஆ98 | ––– | சாத்தான்குளம் காவல்நிலைய Sentry Relief Book (பக்கம் 213 முதல் 218 வரை) | அசல் | –do– |
| அ.சா.ஆ99 | ––– | சாத்தான்குளம் காவல்நிலைய Prisoner Search Register | அசல் | –do– |
| அ.சா.ஆ100 | ––– | சாத்தான்குளம் காவல்நிலைய Duty Roaster Register (பக்கம் 60 முதல் 63 தவிர) | அசல் | –do– |
| அ.சா.ஆ101 | 20.06.2020 | சாத்தான்குளம் குற்ற எண்.312/2020 வழக்கு தொடர்பான வழக்கு நாட்குறிப்பு | நகல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.ஆ102 | 15.07.2020 | சாத்தான்குளம் காவல்நிலையத்தை சிபிஐ அதிகாரிகள் பார்வையிட்டது சம்மந்தமாக தயாரிக்கப்பட்ட பார்வை மகஜர் | அசல் | –do– |
| அ.சா.ஆ103 | 01.07.2020 | அ.சா.44 பியூலா செல்வகுமார் நீதித்துறை நடுவர் பாரதிதாசன் அவர்களிடம் குவிமுச பிரிவு 176(1–A) கீழான விசாரணையில் கொடுத்துள்ள வாக்குமூலம் | அசல் | –do– |
| அ.சா.ஆ104 | ––– | தாமஸ் பரான்சிஸ் –ன் பாக்கெட் நோட்புக் | அசல் | –do– |
| அ.சா.ஆ105 | ––– | சாமதுரையின்– பாக்கெட் நோட்புக் | அசல் | –do– |
| அ.சா.ஆ106 | ––– | பால்துரையின்– பாக்கெட் நோட்புக் | அசல் | –do– |
| அ.சா.ஆ107 | 19.06.2020 | சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.311/2020 வழக்கு சம்மந்தமான Daily Situation Report | அசல் | –do– |
| அ.சா.ஆ108 | ––– | சாத்தான்குளம் காவல்நிலைய பொது நாள் குறிப்பு முழுவதும் (பக்கம் 1 முதல் 603 வரை) General Diary (Full Register) | அசல் | –do– |
| அ.சா.ஆ109 | ––– | சாத்தான்குளம் காவல்நிலைய FIR index Register (full) | அசல் | –do– |
| அ.சா.ஆ110 | ––– | சாத்தான்குளம் காவல்நிலைய Rough Duty Register (Full) | அசல் | –do– |
| அ.சா.ஆ111 | ––– | சாத்தான்குளம் காவல்நிலைய Medical memo Book | அசல் | 20.06.2020–ம் தேதி ஜெயராஜ் மற்றும் பென்னிக்சை மருத்துவ பரிசோதனை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | செய்துள்ள சாத்தான்குளம் அரசு மருத்துவமனை மருத்துவர் அ.சா.45 திருமதி.வினிலா மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ112 | --- | சாத்தான்குளம் அரசு மருத்துவமனை A.R. Book (தனித்தாள்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது) | உண்மை நகல் | -do- |
| அ.சா.ஆ113 | --- | சாத்தான்குளம் அரசு மருத்துவமனை NCD Screening ( National programme for prevention and control of cancer and diabetic screening ) Register | உண்மை நகல் | -do- |
| அ.சா.ஆ114 | 01.07.2020 | கோவில்பட்டி நீதித்துறை நடுவர் திரு. பாரதிதாசன் அவர்களிடம் குவிமுச பிரிவு 176(1-A)-ன் கீழான விசாரணையில் மருத்துவர் வினிலா கொடுத்துள்ள வாக்குமூலம் | அசல் | -do- |
| அ.சா.ஆ115 | --- | கோவில்பட்டி கிளை சிறை அனுமதி பதிவேட்டில் உள்ள அ.சா.46 எஸ்.ராஜாசிங்-ன் கையெழுத்து மற்றும் கைரேகை | அசல் | ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் அடைக்கப்பட்ட கோவில்பட்டி கிளை சிறைச்சாலையில் வேறொரு வழக்கில் விசாரணை கைதியாக இருந்துள்ள அ.சா.46 திரு.ராஜாசிங் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ116 | 08.07.2020 | கோவில்பட்டி நீதித்துறை நடுவர் திரு. பாரதிதாசன் அவர்களிடம் குவிமுச பிரிவு 176(1-A)-ன் கீழான விசாரணையில் சாட்சி ராஜாசிங் கொடுத்துள்ள | ஜெராக்ஸ் நகல் | -do- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வாக்குமூலம். | | |
| அ.சா.ஆ117 | 03.07.2020 | தூத்துக்குடி CBCID–க்கு காவல்நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள குற்ற எண்.03/2020 வழக்கின் முதல் தகவல் அறிக்கை | உண்மை நகல் | –do– |
| அ.சா.ஆ 118 | 19.06.2020 | சாத்தான்குளம் காவல்நிலைய Medical memo உள்ள ரேவதியின்–கையெழுத்து மட்டும் | கார்பன் நகல் | சாத்தான்குளம் காவல்நிலைய காவலர் அ.சா.47 திருமதி.ரேவதி மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ 119 | 28.06.2020 | கோவில்பட்டி நீதித்துறை நடுவர் திரு. பாரதிதாசன் அவர்களிடம் குவிமுச பிரிவு 176(1–A)–ன் கீழான விசாரணையில் அ.சா.47 ரேவதி கொடுத்த வாக்குமூலம் | உண்மை நகல் | –do– |
| அ.சா.ஆ 120 | ––– | சாத்தான்குளம் காவல்நிலைய Prisoner Search Register (Entire Register) | அசல் | –do– |
| அ.சா.ஆ 121 | 23.09.2020 | MIMB Primilinary Report | அசல் | MIMB மருத்துவக்குழுவில் இடம் பெற்ற மருத்துவர் அ.சா.48 திரு.அர்விந்த்குமார் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ 122 | 06.03.2021 | MIMB Final Report | அசல் | –do– |
| அ.சா.ஆ123 | ––– | King electricals CCTV பதிவு காட்சிகள் சம்மந்தமாக பிரபு வழங்கியுள்ள 65–B–ன் கீழான சான்றிதழ். | அசல் | பென்னிக்ஸ் கடைக்கு அருகே உள்ள IKing electricals கடையின் உரிமையாளர் அ.சா.49 திரு.பிரபு மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.ஆ 124 | 24.06.2020 | ஜெயராஜின் இறப்பு குறித்து கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 திரு.பாரதிதாசன் சமர்பித்துள்ள பிரேத விசாரணை அறிக்கை படிவம் 85, 86 உடன் | நீதிமன்ற சான்றிட்ட நகல் | கோவில்பட்டி நீதித்துறை நடுவர் அ.சா.50 திரு.பாரதிதாசன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ 125 | --- | ஜெயராஜின் இறப்பு சம்மந்தமான பிரேத விசாரணை நடவடிக்கை சம்மந்தமாக குவிமுச பிரிவு 176(4)-ன் கீழ் கொடுக்கப்பட்ட தகவல் சம்மந்தமாக சாட்சி தாவீது செய்துள்ள கையெழுத்து | நீதிமன்ற சான்றிட்ட நகல் | -do- |
| அ.சா.ஆ 126 | 24.06.2020 | பென்னிக்சின் இறப்பு குறித்து நீதித்துறை நடுவர் திரு.பாரதிதாசன் சமர்பித்துள்ள பிரேத விசாரணை அறிக்கை படிவம் 85, 86உடன் | நீதிமன்ற சான்றிட்ட நகல் | -do- |
| அ.சா.ஆ 127 | 24.06.2020 | பென்னிக்சின் இறப்பு சம்மந்தமான பிரேத விசாரணை நடவடிக்கை சம்மந்தமாக குவிமுச பிரிவு 176(4) ன் கீழ் கொடுக்கப்பட்ட தகவல் சம்மந்தமாக சாட்சி தாவீது செய்துள்ள கையெழுத்து | நீதிமன்ற சான்றிட்ட நகல் | -do- |
| அ.சா.ஆ 128 | 13.08.2020 | பென்னிக்ஸின் இறப்பு தொடர்பாக குவிமுச 176(1-A)-ன் கீழ் நடைபெற்ற விசாரணை சம்மந்தமாக கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 திரு.பாரதிதாசன் சமர்பித்துள்ள நீதி விசாரணை அறிக்கை மற்றும் இணைப்பு ஆவணம் A to J வரை | அசல் | -do- |
| அ.சா.ஆ 129 | 13.08.2020 | ஜெயராஜ்-ன் இறப்பு தொடர்பாக குவிமுச 176(1-A)-ன் கீழ் நடைபெற்ற விசாரணை சம்மந்தமாக கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 | அசல் | -do- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திரு.பாரதிதாசன் சமர்பித்துள்ள நீதி விசாரணை அறிக்கை மற்றும் இணைப்பு ஆவணம் A to J வரை | | |
| அ.சா.ஆ 130 | 06.07.2020 | கோவில்பட்டி JM.1 அவர்கள் பென்னிக்ஸ் இறப்பு தொடர்பான கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய குற்ற எண்.649/2020 தொடர்பான CBCID குற்ற எண்.01/2020 வழக்கு கோப்பை CJM தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பியது சம்மந்தமான கடிதம் | அசல் | –do– |
| அ.சா.ஆ 131 | 25.06.2020 | கோவில்பட்டி JM.1 பென்னிக்சின் விசரா சம்மந்தமாக அறிக்கை கேட்டு வட்டார தடயவியல் துணை இயக்குநருக்கு அனுப்பியுள்ள வேண்டுகோள் கடிதம் | அசல் | –do– |
| அ.சா.ஆ 132 | 29.06.2020 | விசராவை பெற்றுக்கொண்டது சம்மந்தமாக திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வக துணை இயக்குநர் அனுப்பியுள்ள ஒப்புகைச் சீட்டு (1 தாள்) | அசல் | –do– |
| அ.சா.ஆ 133 | 24.06.2020 | பென்னிக்சின் உடலை பிரேத பரிசோதனை செய்ய திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி பேராசிரியரிடம் பிரேதத்தை ஒப்படைக்க கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 காவலர் சிவக்குமாருக்கு அளித்துள்ள கடவுச்சீட்டு (1 தாள்) | அசல் | –do– |
| அ.சா.ஆ 134 | 01.07.2020 | பென்னிக்சின் பிரேதத்தில் இருந்த உடைகளை கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய காவலர் மு.சிவக்குமார் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களிடம் ஒப்படைத்தது | அசல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சம்மந்தமான கடிதம் | | |
| அ.சா.ஆ 135 | 23.06.2020 | கோவில்பட்டி கிளை சிறையில் நீதித்துறை நடுவர் எண்.1 குவிமுச 176(1–A)–ன் கீழ் நடைபெற்ற விசாரணையின் போது கைப்பற்றியுள்ள 27 பொருட்கள் சம்மந்தமான அத்தாட்சி | அசல் | –do– |
| அ.சா.ஆ 136 | 28.06.2020 | சாத்தான்குளம் காவல்நிலையத்தில் கைப்பற்றப்பட்ட Hard Disk தொடர்பான அத்தாட்சி. | அசல் | –do– |
| அ.சா.ஆ 137 | 29.06.2020 | சாத்தான்குளம் காவல்நிலையத்தில் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 குவிமுச 176(1–A)–ன் கீழ் நடத்திய விசாரணையின் போது கைப்பற்றப்பட்ட 10 லத்திகள் மற்றும் 1 PUC பைப் கைப்பற்றியுள்ளது தொடர்பான அத்தாட்சி | அசல் | –do– |
| அ.சா.ஆ 138 | 29.06.2020 | கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 குவிமுச 176(1–A)–ன் கீழ் நடத்திய விசாரணையின் போது செல்வராணியிடமிருந்து கைப்பற்றியுள்ள இரத்தம் படிந்த ஆடை மற்றும் போர்வைகள் தொடர்பான அத்தாட்சி | அசல் | –do– |
| அ.சா.ஆ 139 | 30.06.2020 | சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 வழக்கு தொடர்பாக சேகரிக்கப்பட்ட மாதிரிகளை வட்டார தடய ஆய்வகத்தின் துணை இயக்குர் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களிடம் ஒப்படைத்தது சம்மந்தமான கடிதம். | அசல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.ஆ 140 | 13.08.2020 | ஜெயராஜ்–ன் இறப்பு சம்மந்தமாக குவிமுச பிரிவு 176(1–A) ன் கீழ் நடத்திய நீதித்துறை விசாரணை அறிக்கையுடன் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்கள் சமர்ப்பித்துள்ள 30 ஆவணங்கள் கொண்ட தொகுப்பு | உண் மை நகல் | –do– |
| அ.சா.ஆ 141 | 13.08.2020 | பென்னிக்சின் இறப்பு சம்மந்தமாக குவிமுச பிரிவு 176(1–A)–ன் கீழ் நடத்திய நீதித்துறை விசாரணை அறிக்கையுடன் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்கள் சமர்ப்பித்துள்ள 30 ஆவணங்கள் கொண்ட தொகுப்பு | உண் மை நகல் | –do– |
| அ.சா.ஆ 142 | 24.06.2020 | பென்னிக்ஸ்–ன் முதன்மை பிரேத பரிசோதனை அறிக்கை | அசல் | –do– |
| அ.சா.ஆ 143 | 30.06.2020 | பென்னிக்சின் இறப்பு சம்மந்தமாக தூத்துக்குடி தெற்கு CBCID பதிவு செய்துள்ள குற்ற எண்.01/2020 வழக்கு தொடர்பான முதல் தகவல் அறிக்கை. | நகல் | –do– |
| அ.சா.ஆ 144 | 30.06.2020 | மாண்புமிகு சென்னை உயரநீதிமன்ற மதுரை கிளை WP.(MD)No.7042/20–ல் தாமாக முன்வந்து பிறப்பித்த உத்தரவு. | நகல் | –do– |
| அ.சா.ஆ 145 | 30.06.2020 | கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்கள் DNA மாதிரி எடுக்க பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜின் எஞ்சிய விசரா பகுதியை மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்க திருநெல்வேலி தடய அறிவியல் ஆய்வக துணை இயக்குநருக்கு அனுப்பியுள்ள | அசல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டுகோள் கடிதம். | | |
| அ.சா.ஆ 146 | 30.06.2020 | திருநெல்வேலி தடய அறிவியல் ஆய்வக துணை இயக்குநர் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களிடம் சமர்பித்துள்ள தடயப்பொருட்கள் சம்மந்தமான பட்டியல் | அசல் | –do– |
| அ.சா.ஆ 147 | 01.07.2020 | பென்னிக்சின் ரத்தம் படிந்த உடைகளை காவலர் சிவக்குமார் கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களிடம் ஒப்படைத்தது சம்மந்தமான பட்டியல் | அசல் | –do– |
| அ.சா.ஆ 148 | 06.07.2020 | கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண்.649/2020 வழக்கு சம்மந்தமாக கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 தூத்துக்குடி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு பிரேத விசாரணை அறிக்கையை படிவம் 85, 86உடன் அனுப்பியது சம்மந்தமான கடிதம் | அசல் | –do– |
| அ.சா.ஆ 149 | 06.07.2020 | RPR.No.377/2020 முதல் 343/2020 வரையான சொத்துக்களை கோவில்பட்டி நீதித்துறை நடுவர்க எண்.1 தூத்துக்குடி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு அனுப்பியது சம்மந்தமான கடிதம் | அசல் | –do– |
| அ.சா.ஆ 150 | 02.07.2020 | கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்கள் குவிமுச பிரிவு 176(1–A)–ன் கீழ் நடத்திய நீதித்துறை விசாரணையில் சாட்சி ரேவதி அளித்துள்ள வாக்குமூலம். | அசல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.ஆ 151 | 06.07.2020 | கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண்.650/2020 வழக்கு சம்மந்தமான ஆவணங்களை தூத்துக்குடி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியது சம்மந்தமான கடிதம் | அசல் | –do– |
| அ.சா.ஆ 152 | 24.06.2020 | கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1, ஜெயராஜின் உடலை பிரேத பரிசோதனை செய்ய திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் சட்டம் சார்ந்த மருத்துவதுறை பேராசிரியருக்கு அனுப்பியுள்ள வேண்டுகோள் கடிதம் D.No.635/2020 தேதி 24.06.2020 | அசல் | –do– |
| அ.சா.ஆ 153 | 25.06.2020 | கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 ஜெயராஜின் விசராவை ஆய்வுக்கு அனுப்புவது சம்மந்தமாக வழக்கின் சரித்திரத்தையும் திருநெல்வேலி வட்டார தடவியல் ஆய்வக இணை இயக்குநருக்கு அனுப்பியுள்ள கடிதம் கடித எண் 643/2020 தேதி 25.06.2020 | அசல் | –do– |
| அ.சா.ஆ 154 | 24.06.2020 | ஜெயராஜ்–ன் முதல் கட்ட பிரேத பரிசோதனை அறிக்கை | அசல் | –do– |
| அ.சா.ஆ 155 | 29.06.2020 | Viscera–ஐ பகுப்பாய்வுக்கு பெற்றுக் கொண்டதற்கு திருநெல்வேலி வட்டார தடவியல் ஆய்வகத்தில் வழங்கியுள்ள ஒப்புகை சீட்டு | அசல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.ஆ 156 | 24.06.2020 | ஜெயராஜின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி பேராசிரியரிடம் ஒப்படைக்க காவலர் கருப்பசாமி அவர்களுக்கு கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 வழங்கியுள்ள கடவுச்சீட்டு | அசல் | –do– |
| அ.சா.ஆ 157 | 01.07.2020 | ஜெயராஜின் பிரேதத்தில் இருந்த உடைகளை காவலர் கருப்பசாமி கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களிடம் ஒப்படைத்தது தொடர்பான கடிதம் | அசல் | –do– |
| அ.சா.ஆ 158 | 30.06.2020 | ஜெயராஜின் இறப்பு தொடர்பாக தூத்துக்குடி CBCID தெற்கு காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள குற்ற எண்.2/2020 வழக்கு தொடர்பான முதல் தகவல் அறிக்கை | அசல் | –do– |
| அ.சா.ஆ 159 | 30.06.2020 | DNA பகுப்பாய்வுக்கு பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜின் எஞ்சிய விசராவை மதுரை, தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்க திருநெல்வேலி வட்டார தடவியல் ஆய்வகத்திற்கு கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அனுப்பியுள்ள கடிதம் | ஜெராக்ஸ் நகல் | –do– |
| அ.சா.ஆ 160 | 24.06.2020 | ஜெயராஜின் பிரேத விசாரணை சம்மந்தமாக அறிக்கை படிவம் 85, 86 உடன் | அசல் | –do– |
| அ.சா.ஆ.161 | --- | கோவில்பட்டி கிளை சிறைச்சாலையில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் மற்றும் சாத்தான்குளம் | அசல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காவல்நிலையத்தில் கைப்பற்றப்பட்ட லத்திகள் பிளாஸ்டிக் பைப் போர்வை சட்டை ஆகியவை குறித்த மொத்தம் 17 புகைப்படங்கள் | | |
| அ.சா.ஆ.162 | 01.07.2020 | CBCID குற்றப்பிரிவு காவல்துறை துணை கண்காணிப்பாளர் மேற்படி காவல்நிலைய குற்ற எண் 1/2020 மற்றும் 2/2020 வழக்கு சம்மந்தமாக சாத்தான்குளம் காவல் நிலையத்தை பார்வையிட்டு தடயங்களை சேகரிக்க அனுமதி கோரி கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களிடம் கொடுத்துள்ள வேண்டுகோள் கடிதம் | அசல் | –do– |
| அ.சா.ஆ.163 | 01.07.2020 | சாத்தான்குளம் காவல்நிலைய மேற்கு பக்க கம்பிவேலிக்கு அருகே கைப்பற்றப்பட்டுள்ள அறுந்த நிலையில் உள்ள கருப்பு கலர் செருப்பு ஒரு ஜோடி குறித்த கைப்பற்றுகை அத்தாட்சி | அசல் | சிபிசிஐடி புலனாய்வு அதிகாரி அ.சா.51 திரு.அனில்குமார் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ.164 | 01.07.2020 | மேற்படி செருப்பு குறித்த படிவம் 91 | அசல் | –do– |
| அ.சா.ஆ.165 | 01.07.2020 | சாத்தான்குளம் காவல்நிலையத்தில் CBCID DSP திரு.சரவணன் கைப்பற்றிய சொத்துக்கள் சம்மந்தமான கைப்பற்றுகை அத்தாட்சி (தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது) | அசல் | –do– |
| அ.சா.ஆ.166 | 01.07.2020 | திரு.பிரபு என்பவரிடமிருந்து HIK Vision DVR 2 TB internal hard disk CD DC adaptor கைப்பற்றியது சம்மந்தமான கைப்பற்றுகை | அசல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மகசர் | | |
| அ.சா.ஆ.167 | 10.07.2020 | தூத்துக்குடி CBCID துணை காவல்துறை கண்காணிப்பாளரிடமிருந்து CBI கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர் கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண் 649/2020, 650/2020 மற்றும் தூத்துக்குடி CBCID காவல்நிலைய குற்ற எண் 1/2020, 2/2020 வழக்கு கோப்பை பெற்றுக்கொண்டது சம்மந்தமான குறிப்பாணை | அசல் | –do– |
| அ.சா.ஆ.168 | 06.07.2020 | காவலர் கருப்பசாமி ஒப்படைத்த ஜெயராஜின் உடைகளை கோவில்பட்டி நீதித்துறை நடுவர் தூத்துக்குடி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு அனுப்பி வைத்தது சம்மந்தமான கடிதம் | உண் மை நகல் | –do– |
| அ.சா.ஆ.169 | 10.07.2020 | தூத்துக்குடி CBCID துணை காவல்துறை கண்காணிப்பாளரிடமிருந்து CBI கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர் 8 ஆவணங்கள் பெற்றுக் கொண்டது சம்மந்தமான குறிப்பாணை | அசல் | –do– |
| அ.சா.ஆ.170 | 01.07.2020 | தூத்துக்குடி CBCID துணை காவல்துறை கண்காணிப்பாளர் சாத்தான்குளம் காவல்நிலையத்தை பார்வையிட்டது சம்மந்தமான பார்வை மகசர் | அசல் | –do– |
| அ.சா.ஆ.171 | 01.07.2020 | தூத்துக்குடி CBCID துணை காவல்துறை கண்காணிப்பாளர் சாத்தான்குளம் காவல்நிலையத்தை | 1 –அசல் 2 – கார்பன் நகல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பார்வையிட்டது சம்மந்தமான வரைபடங்கள் 2 | | |
| அ.சா.ஆ.172 | 01.07.2020 | தூத்துக்குடி CBCID காவல்துறை கண்காணிப்பாளர் சாத்தான்குளம் காவல்நிலையம் மற்றும் அதன் சுற்றுப்புறமும் APJ மொபைல் கடை King Electricals ஆகியவற்றை பார்வையிட்டு சொத்துக்கள் கைப்பற்றியது சம்மந்தமான செயல்முறை அறிக்கை | அசல் | –do– |
| அ.சா.ஆ.173 | 01.07.2020 | செல்வராணியிடமிருந்து தூத்துக்குடி CBCID காவல்துறை துணை கண்காணிப்பாளர் பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜின் மாதிரி புகைப்படங்களை பெற்றது சம்மந்தமான குறிப்பாணை | அசல் | –do– |
| அ.சா.ஆ.174 | 06.07.2020 | தமிழ்நாடு மொர்க்கண்டைல் வங்கி மேலாளர் வழங்கியுள்ள 65 பி சான்றிதழ் | அசல் | –do– |
| அ.சா.ஆ.175 | 06.07.2020 | சுப்புலெட்சுமி சில்க்ஸ் நிறுவனர் மோதிலால் வழங்கியுள்ள 65 பி சான்றிதழ் | அசல் | –do– |
| அ.சா.ஆ.176 | 06.07.2020 | சாத்தான்குளம் கூட்டுறவு சிக்கன சங்க தலைவர் வழங்கியுள்ள 65 பி சான்றிதழ் | அசல் | –do– |
| அ.சா.ஆ.177 | 06.07.2020 | சாத்தான்குளம் அரசு மருத்துவமனை மருத்துவர் வழங்கியுள்ள 65 பி சான்றிதழ் | அசல் | –do– |
| அ.சா.ஆ.178 | 06.07.2020 | திருநெல்வேலி CBCID OCU Inspector சாத்தான்குளம் அரசு மருத்துவமனை மருத்துவரிடம் CCTV காட்சிகளை கோரி குவிமுச 91 ன் கீழ் கொடுத்த அறிவிப்பு | அசல் | –do– |
| அ.சா.ஆ.179 | 23.07.2020 | திருநெல்வேலி சரக CBCID | அசல், | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காவல்துறை துணை கண்காணிப்பாளர் CBI புலனாய்வு அதிகாரிக்கு ஆவணங்கள் மற்றும் வழக்கு சொத்துக்களை ஒப்படைத்தது சம்மந்தமான கோப்பு | நகல், மற்றும் கார்பன் நகல் | |
| அ.சா.ஆ.180 | 01.07.2020 | தூத்துக்குடி CBCID குற்ற எண் 1/2020 சட்டப்பிரிவை குவிமுச பிரிவு 176(1A) (i)–ல் இருந்து இதசபிரிவு 342, 302, 201–ன் கீழ் மாறுதல் செய்து திருநெல்வேலி சரக குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு துறை காவல்துறை துணை கண்காணிப்பாளர் தூத்துக்குடி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு அனுப்பியுள்ள அறிக்கை | அசல் | –do– |
| அ.சா.ஆ.181 | 28.10.2010 | தூத்துக்குடி CBCID கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 –ன் ஆள்வரைக்குள் வருவது சம்மந்தமாக தூத்துக்குடி மாவட்ட அரசிதழில் பிறப்பிக்கப்பட்டுள்ள சிறப்பு அரசாணை | நகல் | –do– |
| அ.சா.ஆ.182 | 01.07.2020 | சாத்தான்குளம் காவல்நிலையத்தை ஆய்வு செய்ய தூத்துக்குடி CBCID DSP கோவில்பட்டி நீதித்துறை நடுவருக்கு குவிமுச 165(3)ன் கீழ் அனுப்பியுள்ள அறிக்கை | அசல் | –do– |
| அ.சா.ஆ.183 | 08.07.2020 | தூத்துக்குடி CBCID குற்ற எண் 1/2020 சட்டப்பிரிவை இதசபிரிவு 342, 302, 201–ல் இருந்து இதச பிரிவு 342, 302, 201 உடன் இணைந்து 109–ன் கீழ் மாறுதல் செய்து திருநெல்வேலி சரக குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு | அசல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | துறை காவல்துறை துணை கண்காணிப்பாளர் தூத்துக்குடி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு அனுப்பியுள்ள அறிக்கை | | |
| அ.சா.ஆ.184 | 01.07.2020 | தூத்துக்குடி CBCID குற்ற எண் 1/2020, 2/2020 வழக்கு சம்மந்தமாக ஆவணங்கள் மற்றும் சொத்துக்களை திருநெல்வேலி சரக குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை DSP மதுரை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஒப்படைத்தது சம்மந்தமான கடிதம் | அசல் | –do– |
| அ.சா.ஆ.185 | 01.07.2020 | தூத்துக்குடி CBCID குற்ற எண் 1/2020 சட்டப்பிரிவை குவிமுச பிரிவு 176(1A) (i)–ல் இருந்து இதசபிரிவு 342, 302, 201–ன் கீழ் மாறுதல் செய்து திருநெல்வேலி சரக குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு துறை காவல்துறை துணை கண்காணிப்பாளர் தூத்துக்குடி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு அனுப்பியுள்ள அறிக்கை | அசல் | –do– |
| அ.சா.ஆ.186 | 01.07.2020 | ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் போட்டோ சம்மந்தமான படிவம் 91 | அசல் | –do– |
| அ.சா.ஆ.187 | 07.07.2020 | சாத்தான்குளம் TMB வங்கி கூட்டுறவு சிக்கன நாணய சங்கம் சுப்புலட்சுமி சில்க்ஸ் அரசு மருத்துவமனையில் உள்ள CCTV கேமரா பதிவுகளில் இருந்து Pen Drive–ல் நகல் தொடர்பான படிவம் 91 | அசல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.ஆ.188 | 01.07.2020 | சாத்தான்குளம் காவல்நிலையத்தில் கைப்பற்றப்பட்ட ஜெயராஜின் உடமைகள் குறித்து படிவம் 91 | அசல் | –do– |
| அ.சா.ஆ.189 | 01.07.2020 | சாத்தான்குளம் காவல்நிலையத்தில் கைப்பற்றப்பட்ட 3 துண்டு சீட்டு மற்றும் ரூ.2,330/– சம்மந்தமான படிவம் 91 | அசல் | –do– |
| அ.சா.ஆ.190 | 01.07.2020 | சாத்தான்குளம் Kings Electricals–ல் கைப்பற்றப்பட்ட Video Recorded 2 TB internal Hard Disk AC DC Adapter தொடர்பான படிவம் 91 | அசல் | –do– |
| அ.சா.ஆ.191 | 22.06.2020 | கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண் 649/2020 தொடர்பாக சிபிஐ–ல் பதிவு செய்யப்பட்டுள்ள RC 0502020S0008 வழக்கின் முதல் தகவல் அறிக்கை | ஜெராக்ஸ் நகல் | சிபிஐ புலனாய்வு அதிகாரி அ.சா.52 திரு.விஜய்குமார் சுக்லா மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.ஆ.192 | 07.07.2020 | கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண் 650/2020 தொடர்பாக சிபிஐ–ல் பதிவு செய்யப்பட்டுள்ள CBI வழக்கு எண் RC 0502020S0009 தொடர்பான வழக்கின் முதல் தகவல் அறிக்கை | நகல் | –do– |
| அ.சா.ஆ.193 | 29.06.2020 | கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண் 649/2020 மற்றும் 650/2020 வழக்கின் விசாரணையை CBI–க்கு மாற்றி தமிழ்நாடு அரசு பிறப்பித்துள்ள அரசாணை | நகல் | –do– |
| அ.சா.ஆ.194 | 06.07.2020 | கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண் 649/2020 மற்றும் 650/2020 வழக்கின் விசாரணையை CBI–க்கு மாற்றி இந்திய அரசு | நகல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பிறப்பித்துள்ள அரசாணை | | |
| அ.சா.ஆ.195 | 09.07.2020 | கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண் 649/2020 மற்றும் 650/2020 தொடர்பான வழக்கு கோப்பை CBI நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கக்கோரி CBI கூடுதல் துணை கண்காணிப்பாளர் மதுரை, தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு அனுப்பியுள்ள கடிதம் | அசல் | –do– |
| அ.சா.ஆ.196 | 11.07.2020 | CBI அதிகாரிகள் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையை பார்வையிட்டது சம்மந்தமாக தயாரிக்கப்பட்டுள்ள பார்வை மகசர் | அசல் | –do– |
| அ.சா.ஆ.197 | 11.07.2020 | CBI அதிகாரிகள் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையை பார்வையிட்டது சம்மந்தமாக தயாரிக்கப்பட்டுள்ள வரைபடம் | அசல் | –do– |
| அ.சா.ஆ.198 | 12.07.2020 | CBI அதிகாரிகள் சாத்தான்குளம் காவல்நிலையத்தை பார்வையிட்டது சம்மந்தமாக தயாரிக்கப்பட்டுள்ள வரைபடம் | அசல் | –do– |
| அ.சா.ஆ.199 | 12.07.2020 | Nominal roll of sathankulam p.s. (தனித்தாள்) | நகல் | –do– |
| அ.சா.ஆ.200 | 14.07.2020 | 9498139704, 9498194320, 8300040800, 9443446371,9498206358,9498195523,9498196032,9498192918,9498195257,9498195527, 9498195980 ஆகிய கைபேசி எண்கள் சம்மந்தமான விண்ணப்பம் Call Data SDR விவரம் கோரிBSNL Nodel Officer–க்கு CBI கூடுதல் காவல்துறை | அசல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | துணை கண்காணிப்பாளர் அனுப்பியுள்ள கடிதம் | | |
| அ.சா.ஆ.201 | 15.07.2020 | மேற்படி வழக்கின் புலன் விசாரணை சம்மந்தமாக தமிழ் அறிந்த அலுவலர்களை உதவிக்கு நியமிக்கக்கோரி joint commissioner IT Department, Madurai அவர்களுக்கு CBI கூடுதல் காவல்துறை துணை கண்காணிப்பாளர் அனுப்பியுள்ள கடிதம் | அசல் | –do– |
| அ.சா.ஆ.202 | 15.07.2020 | மேற்படி வழக்கின் புலன் விசாரணை சம்மந்தமாக தமிழ் அறிந்த அலுவலர்களை உதவிக்கு நியமிக்கக்கோரி joint commissioner central excise department, Maduraiஅவர்களுக்கு CBI கூடுதல் காவல்துறை துணை கண்காணிப்பாளர் அனுப்பியுள்ள கடிதம் | அசல் | –do– |
| அ.சா.ஆ.203 | 15.07.2020 | சாத்தான்குளம் காவல் நிலைய துணை ஆய்வாளர் அறையில் சீல் வைக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்ட மேஜையை பாதுகாப்பாக வைத்திருக்கவும், தேவைப்படும்போது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் கோரி சாத்தான்குளம் காவல் நிலைய பொறுப்புஅதிகாரிக்கு CBI கூடுதல் காவல்துறை துணை கண்காணிப்பாளர் அனுப்பியுள்ள கடிதம் | அசல் | –do– |
| அ.சா.ஆ.204 | 16.07.2020 | எதிரிகள் ரகுகணேஸ், பாலகிருஸ்ணன், ஸ்ரீதர், முருகன், முத்துராஜா ஆகியோர்களுடைய புகைப்படம் மற்றும் கைவிரல் ரேகையை விசாரணைக்கு பதிவு செய்ய மதுரை, தடய அறிவியல் | அசல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆய்வகத்திற்கு CBI கூடுதல் காவல்துறை துணை கண்காணிப்பாளர் அனுப்பியுள்ள கடிதம் | | |
| அ.சா.ஆ.205 | --- | கோவில்பட்டி கிளைச் சிறைச்சாலையில் சிறைவாசிகள் அனுமதிக்கப்படுவதற்கான பதிவேடு முழுவதும் | அசல் | -do- |
| அ.சா.ஆ.206 | 20.06.2020 | பென்னிக்ஸ் சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 கைது செய்யப்பட்டு ரிமாண்ட் செய்யப்பட்டது சம்மந்தமான வாரண்ட் கோப்பு (அ.சா.ஆ.11,16,18,20 ஐ உள்ளடக்கியது) | ஜெராக் ஸ் நகல் | -do- |
| அ.சா.ஆ.207 | 20.06.2020 | ஜெயராஜ் சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 கைது செய்யப்பட்டு ரிமாண்ட் செய்யப்பட்டது சம்மந்தமான வாரண்ட் கோப்பு (அ.சா.ஆ.12, 15, 17 , 19 ஐ உள்ளடக்கியது) | ஜெராக்ஸ் நகல் | -do- |
| 208 | 03.07.2020 | சாட்சி ரேவதி தூத்துக்குடி நீதித்துறை நடுவர் எண்.3 முன்னிலையில் குவிமுச பிரிவு 164ன் கீழ் கொடுத்துள்ள வாக்குமூலத்தின் உண்மை நகல் | உண் மை நகல் | -do- |
| அ.சா.ஆ.209 | 30.06.2020 | மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை பதிவாளர் (Judicial ) அவர்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை WP(MD) NO.7042/2020ல் 30.06.2020-ம் தேதி தாமாக முன்வந்து பிறப்பித்துள்ள உத்தரவை திருநெல்வேலி சரக | அசல் | -do- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | DIGக்கு அனுப்பியுள்ளது சம்மந்தமான கடிதம் | | |
| அ.சா.ஆ.210 | 22.07.2020 | எதிரிகள் சாமதுரை, பெயிலுமுத்து, செல்லதுரை ஆகியோர்களது கைவிரல் ரேகை பதிவு செய்ய மதுரை வட்டார தடய அறிவியல் துறைக்கு CBI கூடுதல் காவல்துறை துணை கண்காணிப்பாளர் அனுப்பியுள்ள கடிதம் | அசல் | –do– |
| அ.சா.ஆ.211 | 31.07.2020 | 15.06.2020 முதல் 30.06.2020 வரையிலான காலத்திற்கு தூத்துக்குடி காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் சாத்தான்குளம் காவல்துறை துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பணிப்பதிவேடு DSR –ஐ சமர்ப்பிக்கக்கோரி CBI கூடுதல் காவல்துறை துணை கண்காணிப்பாளர் தூத்துக்குடி காவல்துறை கண்காணிப்பாளருக்கு அனுப்பியுள்ள கடிதம் | அசல் | –do– |
| அ.சா.ஆ.212 | 31.07.2020 | Lock Down தொடர்பாக பிறப்பிக்கப்பட்ட அனைத்து உத்தரவுகள் சுற்றறிக்கைகள் ஆகியவற்றை சமர்ப்பிக்கக்கோரி தூத்துக்குடி மாவட்ட ஆட்சியருக்கு CBI கூடுதல் காவல்துறை துணை கண்காணிப்பாளர் அனுப்பியுள்ள கடிதம் | அசல் | –do– |
| அ.சா.ஆ.213 | 31.07.2020 | 1 முதல் 10 எதிரிகளின் பணிப்பதிவேடு கேட்டு தூத்துக்குடி காவல்துறை கண்காணிப்பாளருக்கு CBI கூடுதல் துணை | அசல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கண்காணிப்பாளர் அனுப்பியுள்ள கடிதம் | | |
| அ.சா.ஆ.214 | 01.08.2020 | 1 முதல் 10 எதிரிகளின் பணிப்பதிவேடு நகல்கள் அடங்கிய கோப்பு | நகல் | –do– |
| அ.சா.ஆ.215 | 14.07.2020 | ஜெயராஜின் இறுதி பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் | நீதிமன்ற சான்றிட்ட நகல் | –do– |
| அ.சா.ஆ.216 | 14.07.2020 | பென்னிக்ஸின் இறுதி பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் | நீதிமன்ற சான்றிட்ட நகல் | –do– |
| அ.சா.ஆ.217 | 24.06.2020 | ஜெயராஜின் முதல் பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் | உண்மை நகல் | –do– |
| அ.சா.ஆ.218 | 24.06.2020 | பென்னிக்சின் உடலை பிரேத பரிசோதனை செய்ய கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சட்டம் சாாந்த மருத்துவ பேராசிரியர் அவர்களுக்கு கொடுத்துள்ள வேண்டுகோள் கடிதம். | உண்மை நகல் | –do– |
| அ.சா.ஆ.219 | 24.06.2020 | பென்னிக்சின் முதல் பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள். | உண்மை நகல் | –do– |
| அ.சா.ஆ.220 | 06.08.2020 | சாத்தான்குளம் காவல்நிலையத்தில் கைப்பற்றப்பட்ட Hard Disk. ஜெயராஜ் , பென்னிக்ஸ், பாலகிருஷ்ணன், முருகன், ஸ்ரீதர் ஆகியோரது புகைப்படங்கள் ரத்தம் தோய்ந்த ஆடைகள் | ஜெராக்ஸ் நகல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெட்சீட் மற்றும் சாத்தான்குள காவல்நிலையத்தில் சேகரிக்கப்பட்ட ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் உடைகள், லத்தி பிவிசி பைப், செல்போன், பென்டிரைவ், Hard Disk முதலிய பொருட்கள் ரசாயன பகுப்பாய்வுக்கு மதுரை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவரால் புதுடெல்லி மத்திய ரசாயன பரிசோதனை ஆய்வக இயக்குநருக்கு அனுப்பிவைக்கப்பட்டது சம்மந்தமான கடிதம், வழக்கு சரித்திரம் மற்றும் இணைப்பு 1 மற்றும் 2 உடன் | | |
| அ.சா.ஆ.221 | 06.08.2020 | புதுடெல்லி மத்திய ரசாயன பரிசோதனை ஆய்வக இயக்குநருக்கு மேலும் இரண்டு பொருட்களை பரிசோதனைக்கு அனுப்பியது சம்மந்தமாக சிபிஐ தரப்பில் சமர்பிக்கப்பட்டுள்ள வேண்டுகோள் கடிதம் | ஜெராக் ஸ் நகல் | –do– |
| அ.சா.ஆ.222 | 10.08.20 | சிபிஐ ஆய்வாளர் அனுராக் சிம்கா விடமிருந்து கரிசோதனைக்கு பொருட்களை பெற்றுக்கொண்டதற்கு புதுடெல்லி மத்திய ரசாயன பரிசோதனை ஆய்வகத்திலிருந்து அனுப்பட்டுள்ள ஒப்புகை ரசீது | அசல் | –do– |
| 223 | 27.08.2020 | எதிரி பால்துரையின் இறப்பு சான்றிதழ் | ஆன் லைன் நகல் | –do– |
| அ.சா.ஆ.224 | 31.05.2020 | குவிமுச பிரிவு 144 மற்றும் பிரிவு 75 TN Public Health Act ன் படி பிறப்பித்துள்ள செயல்முறை | உண் மை நகல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆணைகளை நிறைவேற்ற நிர்வாக நடுவர்களை பணிநியமனம் செய்து தூத்துக்குடி கூடுதல் மாவட்ட நடுவர் பிறப்பித்துள்ள செயல்முறை ஆணை | | |
| அ.சா.ஆ.225 | 09.06.2020 | குவிமுச பிரிவு 144 மற்றும் பிரிவு 75 TN Public Health Act ன் படி பிறப்பித்துள்ள செயல்முறை ஆணைகளை நிறைவேற்ற நிர்வாக நடுவர்களை பணியிலிருந்து விடுவித்து தூத்துக்குடி கூடுதல் மாவட்ட நடுவர் பிறப்பித்துள்ள செயல்முறை ஆணை | உண்மை நகல் | –do– |
| அ.சா.ஆ.226 | 01.09.2020 | DNA பரிசோதனைக்கு இரத்த மாதிரி எடுக்க சம்மதம் தெரிவித்து செல்வராணி மதுரை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு சமர்பித்துள்ள கடிதம் | ஜெராக்ஸ் நகல் | –do– |
| அ.சா.ஆ.227 | 01.09.2020 | DNA பரிசோதனை செய்ய FTA Card கோரி சிபிஐ கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர் திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை டீன் அவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதம் | அசல் | –do– |
| அ.சா.ஆ.228 | 01.9.20 | FTA Card அனுப்புவது சம்மந்தமான மதுரை வட்டார தடய அறிவியல் அய்வக துணை இயக்குநர் மதுரை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு அனுப்பியுள்ள கடிதம் மாதிரி எடுப்பதற்கான அறிவுறுத்தல்களுடன் | அசல் | –do– |
| அ.சா.ஆ.22 | 01.09.2020 | DNA மாதிரி சேகரித்தது | அசல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | | சம்மந்தமான படிவம் செல்வராணியின் புகைப்படத்துடன் | | |
| அ.சா.ஆ.230 | 20.06.20 | சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண். 312/2020 பென்னிக்சின் காவல் அடைப்பு வாரண்ட் | அசல் | –do– |
| அ.சா.ஆ.231 | --- | Nominal roll of police personnel of Sathankulam P.S. (3papers) | நகல் | –do– |
| அ.சா.ஆ.232 | --- | சாத்தான்குளம் காவல்நிலைய மெடிக்கல் மெமோ புத்தகம் | அசல் | –do– |
| அ.சா.ஆ.233 | 03.07.2020 | தூத்துக்குடி நீதித்துறை நடுவர் எண்.3 அவர்களிடம் ரேவதி குவிமுச பிரிவு 164–ன் கீழ் கொடுத்துள்ள வாக்குமூலம் | உண்மை நகல் | –do– |
| அ.சா.ஆ.234 | 07.09.20 | Acknowledgement receipt dt.of CFSL, New Delhi | ஜெராக்ஸ் நகல் | –do– |
| அ.சா.ஆ.235 | 08.09.20 | New delhi MIMB தலைவர் ஆகாஷ்குமார் அவர்களுக்கு இறப்பு குறித்த அறிக்கையை விரைவில் சமர்பிக்க கோரி சிபிஐ தரப்பில் அனுப்பபட்டுள்ள e–mail. | ஜெராக்ஸ் நகல் | –do– |
| அ.சா.ஆ.236 | 08.09.2020 | புகைப்பட நிபுணர், உயிரியல் சாட்சிய சேகரிப்பு நிபுணர் கைவிரல் நிபுணர் ஆகியோர்களை விரைந்து அனுப்பிவைக்குமாறு கோரி புதுடெல்லி மத்திய ரசாயன பரிசோதனை ஆய்வக இயக்குநருக்கு சிபிஐ தரப்பில் அனுப்பபட்டுள்ள கடிதம் | ஜெராக்ஸ் நகல் | –do– |
| அ.சா.ஆ.237 | 07.09.2020 | சிபிஐ சார்பு ஆய்வாளர் தல்ஜீத் சிங் என்பவரிடமிருந்து | அசல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முத்திரையிட்ட பார்சல் ஒன்றை ரசாயன பரிசோதனைக்கு பெற்றுக்கொண்டது சம்மந்தமாக புதுடெல்லி மத்திய ரசாயன பரிசோதனை ஆய்வகதிலிருந்து அனுப்பட்டுள்ள ஒப்புகை கடிதம் | | |
| அ.சா.ஆ.238 | 14.09.2020 | கைப்பேசி எண். 9994068656க்கு CDR /CAF சமர்பிக்ககோரி Bharathi Airtel Nodal Officer க்கு சிபிஐ தரப்பில் அனுப்பப்பட்டுள்ள கடிதம் | ஜெராக்ஸ் நகல் | –do– |
| அ.சா.ஆ.239 | 03.09.20 | செல்வராணின் இரத்த மாதிரி எடுக்கப்பட்ட FTA Card ஐ இர்த்தம் படிந்த மற்ற வழக்கு சொத்துடன் மரபணு ஒப்பீடு செய்து அறிக்கை தாக்கல் செய்யக்கோரி சிபிஐ கூடுதல் துணை கண்காணிப்பாளர் புதுடெல்லி மத்திய தடய அறிவியல் ஆய்வக இயக்குநர் கொடுத்துள்ள கடிதம் | அசல் | –do– |
| அ.சா.ஆ.240 | 03.09.20 | செல்வராணின் இரத்த மாதிரி எடுக்கப்பட்ட FTA Card ஐ இர்த்தம் படிந்த மற்ற வழக்கு சொத்துடன் மரபணு ஒப்பீடு செய்து அறிக்கை தாக்கல் செய்யக்கோரி மதுரை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் புதுடெல்லி மத்திய தடய அறிவியல் ஆய்வக இயக்குநருக்கு அனுப்பியுள்ள கடிதம் | அசல் | –do– |
| அ.சா.ஆ.241 | 18.09.2020 | புதுடெல்லி மத்திய தடய அறிவியல் பரிசோதனை ஆய்வகத்திலிருந்து பொருட்கள் திரும்பப்பெறப்பட்டது சம்மந்தமாக மதுரை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் | ஜெராக்ஸ் நகல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அனுப்பியுள்ள ஒப்புகை கடிதம் | | |
| அ.சா.ஆ.242 | 22.9.2020 | புதுடெல்லி தடய அறிவியல் ஆய்வக வல்லுநர் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் சுவர்களில் 20 இடங்களில் படிந்திருந்த இரத்த தடய மாதிரிகளை சேகரித்தது தொடர்பான கைப்பற்றுகை அத்தாட்சி | அசல் | –do– |
| அ.சா.ஆ.243 | 22.9.2020 | புதுடெல்லி தடய அறிவியல் ஆய்வக வல்லுநர் கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலை சுவர்களில் 8 இடங்களில் படிந்திருந்த இரத்த தடய மாதிரிகளை சேகரித்தது தொடர்பான கைப்பற்றுகை அத்தாட்சி | அசல் | –do– |
| அ.சா.ஆ.244 | 08.9.2020 | Biological examination and DNA Profiling Report | அசல் | –do– |
| அ.சா.ஆ.245 | 04.9.2020 | குருதி நிணநீர் பரிசோதனை அறிக்கை (Serological Report) | அசல் | –do– |
| அ.சா.ஆ.246 | 17/9/2020 | மரபணு பரிசோதனை அறிக்கை | அசல் | –do– |
| அ.சா.ஆ.247 | 1/10/2020 | தேசிங்குராஜாவிடமிருந்து ஜெயராஜ் மற்றும் பென்னிக்சின் புகைப்படங்கள் கைப்பற்றப்பட்டதற்கான குறிப்பாணை | அசல் | –do– |
| அ.சா.ஆ.248 | 19/5/2021 | பென்னிக்சின் கடைக்கு அருகேயுள்ள கடையில் இருந்த DVR மற்றும் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையிலிருந்த CCTV Hard Disk ஆகியவற்றை தடய அறிவியல் பரிசோதனை செய்ய | அசல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சிபிஐ துணை கண்காணிப்பாளர் புதுடெல்லி மத்திய தடய அறிவியல் ஆய்வகத்திற்கு ஆய்வக இயக்குநர் அனுப்பியுள்ள கடிதம் | | |
| அ.சா.ஆ.249 | 8/6/2021 | Hard Disk, Cellphone, DVR ஆகியவற்றை பரிசோதனை செய்தது சம்மந்தமாக குஜராத் தடய அறிவியல் ஆய்வக இயக்குநரிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ள அறிக்கை | அசல் | –do– |
| அ.சா.ஆ.250 | 13.07.2020 | கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண்.649/2020 தொடர்பான தூத்துக்குடி CBCID காவல்நிலைய குற்ற எண். 1/2020 வழக்கின் சட்டப்பிரிவை குவிமுச பிரிவு 176 (1–A) விலிருந்து இதச பிரிவு 342, 302, 201 r/w 109 ஆக மாறுதல் செய்தது சம்மந்தமாக மதுரை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு சிபிஐ கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர் சமர்பித்துள்ள விண்ணப்பம். | அசல் | –do– |
| அ.சா.ஆ.251 | 13.07.2020 | கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய குற்ற எண்.650/2020 தொடர்பான தூத்துக்குடி CBCID காவல்நிலைய குற்ற எண். 1/2020 வழக்கின் சட்டப்பிரிவை குவிமுச பிரிவு 176 (1–A) விலிருந்து இதச பிரிவு 342, 302, 201 r/w 109 ஆக மாறுதல் செய்தது சம்மந்தமாக மதுரை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு சிபிஐ | அசல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர் சமர்பித்துள்ள விண்ணப்பம். | | |
| அ.சா.ஆ.252 | 25/9/2020 | கோவில்பட்டி காவல்நிலைய குற்ற எண்.649/2020 and 650/2020 வழக்குகளை ஒன்றாக இணைக்க சிபிஐ கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர் சமர்பித்துள்ள விண்ணப்பம் | அசல் | –do– |
| அ.சா.ஆ.253 | 6/8/2020, | RPR.No. 11/2020 முதல் 14/2020ல் கண்ட சொத்துக்களை தடய அறிவியல் ஆய்விற்கு உட்படுத்த மதுரை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் புதுடெல்லி மத்திய தடய அறிவியல் ஆய்வக இயக்குநருக்கு அனுப்பியுள்ள கடிதம் D.No.1391, dated : 06.08.2020 of CJM, Madurai | அசல் | –do– |
| அ.சா.ஆ.254 | 15/7/2020 | சாத்தான்குளம் காவல்நிலையத்தில் கைப்பற்றப்பட்ட மரடேபிள் சம்மந்தமான கைப்பற்றுகை அத்தாட்சி | அசல் | –do– |
| அ.சா.ஆ.255 | 22/9/2020 | சாத்தான்குளம் காவல்நிலையம் மற்றும் சாத்தான்குளம் பழைய பேருந்து நிலையம் அருகே காமராஜர் சிலை வளாகம் ஆகியவற்றை பார்வையிட்டது சம்மந்தமான சிபிஐ அதிகாரிகள் தயாரித்துள்ள குறிப்பாணை | அசல் | –do– |
| அ.சா.ஆ.256 | 29.09.2020 | சாத்தான்குளம் காவல்நிலையம் மற்றும் கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலையில் சேகரிப்பட்ட இரத்த மாதிரிகளை தடய அறிவியல் பரிசோதனைக்கு மதுரை | அசல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் புதுடெல்லி மத்திய தடய அறிவியல் ஆய்வக இயக்குநருக்கு அனுப்பியுள்ளது சம்மந்தமான கடிதம் Letter No.1706, dated 29/9/2020 of CJM, Madurai | | |
| அ.சா.ஆ.257 | 1/9/2020 | FTA Card அனுப்பக்கோரி மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வக துணை இயக்குநருக்கு மதுரை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு அனுப்பியுள்ள கடிதம் D.No.1524/2020, dated by CJM, Madurai | அசல் | –do– |
| அ.சா.ஆ.258 | 20/6/2020 | சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ள பென்னிக்ஸ் சம்மந்தமான விபத்து பதிவேடு | அசல் | –do– |
| அ.சா.ஆ.259 | 20/6/2020 | சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ள ஜெயராஜ் சம்மந்தமான விபத்து பதிவேடு | அசல் | –do– |
| அ.சா.ஆ.260 | -- | ஜெயராஜின் புகைப்படம் | அசல் | –do– |
| அ.சா.ஆ.261 | --- | பென்னிக்சின் புகைப்படம் | அசல் | –do– |
| அ.சா.ஆ.262 | 23/9/2020 | கோவில்பட்டி கிளைச்சிறைசாலையில் செல் எண்.3ல் சுவர்களில் படிந்துள்ள இரத்தம் கைப்பற்றப்பட்டது சம்மந்தமான கைப்பற்றுகை அத்தாட்சி | அசல் | –do– |
| அ.சா.ஆ.263 | 29.09.2020 | சாத்தான்குளம் காவல்நிலையத்தின் சுவர்கள் | அசல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மற்றும் கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலை செல் எண்.3ல் சுவர்களில் இருந்து சேகரிக்கப்பட்ட இரத்த மாதிரியை செல்வராணியின் இரத்த மாதிரியுடன் ஒப்பீடு செய்து மரபணு அறிக்கை தாக்கல் செய்யக்கோரி புதுடெல்லி மத்திய தடய அறிவியல் ஆய்வக இயக்குநர் சிபிஐ கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர் அனுப்பியுள்ள கடிதம் | | |
| அ.சா.ஆ.264 | 2/11/2020 | Biological examination and DNA Profiling Report | அசல் | –do– |
| அ.சா.ஆ.265 | 20/12/2021 | சிசிடிவி காட்சிகளுடன் புகைப்படங்களை ஒப்பீடு செய்து குஜராத் தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து கிடைக்கப்பெற்றுள்ள அறிக்கை | அசல் | –do– |
| அ.சா.ஆ.266 | 7/2/2022 | சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்து புதுடெல்லி மத்திய தடய அறிவியல் ஆய்வகம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மதுரை அவர்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கை | அசல் | –do– |
| அ.சா.ஆ.267 | 19/6/2020 | சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.312/2020 சம்மந்தமான சிடி file பக்கம் 1 முதல் 47 | ஜெராக்ஸ் நகல் | –do– |
| அ.சா.ஆ.268 | 23.09.2020 | 1 முதல் 10 எதிரிகள் தொடர்பான CDR, CAF குறித்த விவரங்கள் அடங்கிய முழு கோப்பு | நகல் | –do– |
| அ.சா.ஆ.269 | --- | ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் மரணம் குறித்து கோவில்பட்டி மருத்துவமனையில் பராமரிக்கப்பட்ட இறப்பு பதிவேடு | நகல் | –do– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2ம் தாள் | | |
| அ.சா.ஆ.270 | 25/2/2022 | தடய அறிவியல் பரிசோதனை முடித்து எஞ்சிய பொருட்களை மதுரை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு புதுடெல்லி தடய அறிவியல் ஆய்வக இயக்குநர் பொறுப்பு அவர்கள் அனுப்பியுள்ளதற்கான கடிதம் CFSL-2020/B-0390/655, dated | அசல் | -do- |
| அ.சா.ஆ.271 | --- | 19.06.2020ம் தேதிய சாத்தான்குளம் காவல்நிலைய பொது நாட்குறிப்பு Government College Quarentine duty PC 2509 என்று உள்ள பகுதி | அசல் | எ.சா.1 ஸ்ரீதர் மூலம் எ.சா.1-ன் குறுக்கு விசாரணையில் குறியீடு செய்யப்பட்டுள்ளது |

<u>அரசு தரப்பு சான்று பொருள்கள்: -</u>

| M.O.s | Name of Material Objects | |
|---|---|---|
| அ.சா.பொ1 | சாத்தான்குளம் அரசு மருத்துவமனை சிசிடிவி சம்பந்தப்பட்ட பதிவு கொண்ட பென்டிரைவ் | சாத்தான்குளத்தில் சிசிடிவி கேமரா உதிரி பாகம் விற்பனை செய்யும் அ.சா.16 திரு.இன்பெண்ட் அந்தோணி பிஜீ மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.பொ-2 | ஜெயராஜின் இரத்தம் படிந்த வெள்ளை கலர் அரைக்கை சட்டை -1 | ஜெயராஜின் பிரேத பரிசோதனையின் போது உடனிருந்த காவலர் அ.சா.27 திரு.கருப்பசாமி மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.பொ-3 | ஜெயராஜின் சிமெண்ட் கலர், புளூ கலர், வெள்ளை, கருப்பு கட்டம் போட்ட ரத்த கரை படிந்திருந்த கைலி - 1 | -do- |
| அ.சா.பொ-4 | பென்னிக்ஸின் வெள்ளை கலரில் கருப்பு கலர் போட்ட ரத்தம் படிந்த கைலி - 1 | பென்னிக்சின் பிரேத பரிசோதனையின் போது உடனிருந்த காவலர் அ.சா.28 திரு.சிவக்குமார் மூலம் |

| | | |
|---|---|---|
| | | குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.பொ–5 | பென்னிக்ஸின் ஊதா கலரில் நீலம், வெள்ளை கோடு மற்றும் கட்டம் போட்ட ரத்தம் படிந்திருந்த முழுக்கை சட்டை – 1 | –do– |
| அ.சா.பொ–6 | ஜெயராஜ் போஸ்ட்மார்டம் போட்டோ | பிரேத பரிசோதனையின் போது புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்துள்ள அ.சா.37 திரு.கோபி மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.பொ–7 | ஜெயராஜ் போஸ்ட்மார்டம் வீடியோ | –do– |
| அ.சா.பொ–8 | பெனிக்ஸ் போஸ்ட்மார்டம் போட்டோ | –do– |
| அ.சா.பொ–9 | பெனிக்ஸ் போஸ்ட்மார்டம் வீடியோ | –do– |
| அ.சா.பொ–10 | சாத்தான்குளம் காவல்நிலையத்தில் CBI சார்ந்த கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர் திரு.G.கலைமணி அவர்களால்ாகைப்பற்றப்பட்டுள்ள மரடேபிள் | சிபிஐ விசாரணையின்போது உதவியாக இருந்துள்ள வருமான வரித்துறை அலுவலர் அ.சா.41 திருமதி.உமா சிதம்பரம் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.பொ–11 | பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் – ஐ கோவில்பட்டி கிளைச்சிறைக்கு கொண்டு சென்றுள்ள கார் சீட்டின் இரத்தம் படிந்த கவர் உறை | திருநெல்வேலி வட்டார தடய ஆய்வக துணை இயக்குநர் அ.சா.42 திருமதி.விஜயலதா மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.பொ–12 | சாத்தான்குளம் காவல்நிலைய குப்பையில் இருந்து CBI அதிகாாகளால் கைப்பற்றப்பட்டுள்ள மஞ்சள் மற்றும் ஆரஞ்சு சட்டை | –do – |
| அ.சா.பொ–13 | சாத்தான்குளம் காவல்நிலைய குப்பையில் இருந்து CBI அதிகாாகளால் கைப்பற்றப்பட்டுள்ள வெள்ளை நிற Sam, STKM என எழுதப்பட்ட சட்டை | –do – |
| அ.சா.பொ–14 | சாத்தான்குளம் காவல்நிலைய குப்பையில் இருந்து CBI அதிகாாகளால் கைப்பற்றப்பட்டுள்ள பனியன் (முன்டா) | –do – |
| அ.சா.பொ–15 | சாத்தான்குளம் காவல்நிலைய குப்பையில் இருந்து CBI அதிகாாகளால் | –do – |

| | | |
|---|---|---|
| | கைப்பற்றப்பட்டுள்ள கர்சிப் | |
| அ.சா.பொ–16 | சாத்தான்குளம் காவல்நிலைய குப்பையில் இருந்து CBI அதிகாாகளால் கைப்பற்றப்பட்டுள்ள நீல நிற ஜட்டி | –do – |
| அ.சா.பொ–17 | சாத்தான்குளம் காவல்நிலைய குப்பையில் இருந்து CBI அதிகாாகளால் கைப்பற்றப்பட்டுள்ள வேஸ்டி | –do – |
| அ.சா.பொ–18 | சாத்தான்குளம் காவல்நிலைய குப்பையில் இருந்து CBI அதிகாாகளால் கைப்பற்றப்பட்டுள்ள பெல்ட் (பக்கில் இல்லாமல்) | –do – |
| அ.சா.பொ–19 | சாத்தான்குளம் காவல்நிலைய குப்பையில் இருந்து CBI அதிகாாகளால் கைப்பற்றப்பட்டுள்ள பச்சை ஜட்டி | –do – |
| அ.சா.பொ–20 | சாத்தான்குளம் காவல்நிலைய குப்பையில் இருந்து CBI அதிகாாகளால் கைப்பற்றப்பட்டுள்ள கருப்பு கலர் பேண்ட் | –do – |
| அ.சா.பொ–21 | சாத்தான்குளம் காவல்நிலைய நிலையத்தில் இருந்து CBI அதிகாாகளால் கைப்பற்றப்பட்டுள்ள கம்புகள் (11) (சின்னது 1 + பிளாஸ்டிக் பைப் 1 + லத்தி மற்றும் கம்பு 9) | சாத்தான்குளம் காவல் நிலைய தலைமை காவலர் அ.சா.44 திருமதி. பியூலா செல்வக்குமாரி மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.பொ–22 | சாத்தான்குளம் காவல்நிலைய நிலையத்தில் இருந்து CBI அதிகாாகளால் கைப்பற்றப்பட்டுள்ள கம்பு ஒன்று | சாத்தான்குளம் காவல் நிலைய காவலர் அ.சா.47 திருமதி. ரேவதி மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.பொ–23 | King Electricals CCTV மற்றும் சாத்தான்குளம் அரசு மருத்துவமனை சிசிடிவியில் பதிவான காட்சிகள் அடங்கிய சிடி | –do– |
| அ.சா.பொ–24 | சாட்சி பிரபுவிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ள Hard Disk DVDR and Adopter (King Electrical) | King Electricals உரிமையாளர் அ.சா.49 திரு.பிரபு மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.பொ–25 | சாத்தான்குளம் காவல்நிலையத்தில் இரத்தக்கரைகளை துடைத்தது சம்மந்தமான வேல்முருகன் அளித்துளள வீடியோ பதிவு | கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அ.சா.50 திரு.பாரதிதாசன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| | அடங்கியுள்ள பென்டிரைவ் | |
| அ.சா.பொ–26 | சாத்தான்குளம் காவல்நிலைய Hard Disk | –do– |
| அ.சா.பொ–27 | செல்வராணியிடமிருந்து கோவில் பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அ.சா.50 பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் சம்மந்தமான இறப்பு குறித்த நீதிவிசாரணையின்போது கைப்பற்றியுள்ள இரத்தம் படிந்த போர்வை | –do– |
| அ.சா.பொ–28 | செல்வராணியிடமிருந்து கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அ.சா.50 பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் சம்மந்தமான இறப்பு குறித்த நீதிவிசாரணையின்போது கைப்பற்றியுள்ள இளமஞ்சள் நிற சட்டை | –do– |
| அ.சா.பொ–29 | சாத்தான்குளம் காவல்நிலைய சுவர்களிலிருந்து 18 இடங்களில் கைப்பற்றப்பட்டுள்ள ரத்த தடய மாதிரிகள் | –do– |
| அ.சா.பொ–30 | கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 கோவில்பட்டி கிளைச்சிறைசாலையில் கைப்பற்றியுள்ள ஜட்டிகள் (3) | –do– |
| அ.சா.பொ–31 | கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அ.சா.50 பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் சம்மந்தமான இறப்பு குறித்த நீதிவிசாரணையின்போது கோவில்பட்டி கிளைச்சிறைசாலையில் கைப்பற்றியுள்ள துண்டு | –do– |
| அ.சா.பொ–32 | கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அ.சா.50 பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் சம்மந்தமான இறப்பு குறித்த நீதிவிசாரணையின்போது கோவில்பட்டி கிளைச்சிறைசாலையில் கைப்பற்றியுள்ள வெள்ளை மற்றும் நீல நிற பெரிய கட்டம் போட்ட லுங்கி | –do– |

| | | |
|---|---|---|
| அ.சா.பொ–33 | கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அ.சா.50 பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் சம்மந்தமான இறப்பு குறித்த நீதிவிசாரணையின்போது கோவில்பட்டி கிளைச்சிறைசாலையில் கைப்பற்றியுள்ள வெள்ளை அரைக்கை சட்டை | –do– |
| அ.சா.பொ–34 | கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அ.சா.50 பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் சம்மந்தமான இறப்பு குறித்த நீதிவிசாரணையின்போது கோவில்பட்டி கிளைச்சிறைசாலையில் கைப்பற்றியுள்ள வெள்ளை கலரில் கருப்பு கோடு போட்ட லுங்கி – 1 | –do– |
| அ.சா.பொ–35 | கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அ.சா.50 பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் சம்மந்தமான இறப்பு குறித்த நீதிவிசாரணையின்போது கோவில்பட்டி கிளைச்சிறைசாலையில் கைப்பற்றியுள்ள மாத்திரை அட்டைகள் – 4 | –do– |
| அ.சா.பொ–36 | கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அ.சா.50 பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் சம்மந்தமான இறப்பு குறித்த நீதிவிசாரணையின்போது கோவில்பட்டி கிளைச்சிறைசாலையில் கைப்பற்றியுள்ள பிஸ்கட் – 3, பிரட், ரஸ்க், சேவு, முறுக்கு, சீவல், வாழைப்பழம் – 1 | –do– |
| அ.சா.பொ–37 | கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அ.சா.50 பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் சம்மந்தமான இறப்பு குறித்த நீதிவிசாரணையின்போது கோவில்பட்டி கிளைச்சிறைசாலையில் கைப்பற்றியுள்ள தேங்காய் எண்ணெய் – 1, சோப்பு – 1, பேஸ்ட், கம்பு நீக்கப்பட்ட பை – 1 | –do– |
| அ.சா.பொ–38 | சாத்தான்குளம் காவல்நிலைய நிலைய குப்பையில் இருந்து CBI | சிபிசிஐடி புலனாய்வு அதிகாரி அ.சா.51 திரு.அனில்குமார் |

| | | |
|---|---|---|
| | அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ள ஒரு ஜோடி கருப்பு செப்பல் – 1 | மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.பொ–39 | சாத்தான்குளம் காவல்நிலைய நிலையத்தில் இருந்து CBI அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ள சாம்சங் கருப்பு கலர் செல்போன் | –do– |
| அ.சா.பொ–40 | சாத்தான்குளம் காவல்நிலைய நிலையத்தில் இருந்து CBI அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளசாம்சங் கோல்டு கலர் சென்போன் | –do– |
| அ.சா.பொ–41 | சாத்தான்குளம் காவல்நிலையத்தில் CBCID போலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ள ஜெயராஜ் –ன் இரண்டு TMB விசா கார்டுகள் | –do– |
| அ.சா.பொ–42 | சாத்தான்குளம் காவல்நிலையத்தில் CBCID போலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ள பிரவுன் கலர் ATM கார்டு பவுச் | –do– |
| அ.சா.பொ–43 | சாத்தான்குளம் காவல்நிலையத்தில் CBCID போலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ள பெனிக்ஸ் IOB Rupay card | –do– |
| அ.சா.பொ–44 | சாத்தான்குளம் காவல்நிலையத்தில் CBCID போலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ள பெனிக்ஸ் TMB விசா கார்டு | –do– |
| அ.சா.பொ–45 | சாத்தான்குளம் காவல்நிலையத்தில் CBCID போலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ள ஜெயராஜ் Pan card, நலவாரிய அடையாள அட்டை, ஆதார் அட்டை, ஓட்டுனர் உரிமம் | –do– |
| அ.சா.பொ–46 | செல்வராணியிடமிருந்து CBCID புலனாய்வு அதிகாரி அ.சா.51 கைப்பற்றியுள்ள ஜெயராஜ் போட்டோ, பெனிக்ஸ் போட்டோ | –do– |
| அ.சா.பொ–47 | சாத்தான்குளம் காவல்நிலையத்தில் CBCID போலிசாரால் | –do– |

| | | |
|---|---|---|
| | கைப்பற்றப்பட்டுள்ள Titan கோல்டு கலர் வாட்ச் | |
| அ.சா.பொ–48 | சாத்தான்குளம் காவல்நிலையத்தில் CBCID போலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ள கோமேதக கல் பதித்த தங்க மோதிரம் | –do– |
| அ.சா.பொ–49 | சாத்தான்குளம் காவல்நிலையத்தில் CBCID போலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ள வெள்ளி அரைஞான் கொடி | –do– |
| அ.சா.பொ–50 | சாத்தான்குளம் காவல்நிலையத்தில் CBCID போலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ள ரூபாய் நோட்டுகள் மொத்தம் 2,330/– | –do– |
| அ.சா.பொ–51 | சாத்தான்குளம் காவல்நிலைய சுவற்றில் இருந்து சேகரிப்பட்ட இரத்த தடய மாதிரிகள் 1 முதல் 20 | சிபிஐ புலனாய்வு அதிகாரி அ.சா.52 திரு.விஜய்குமார் சுக்லா மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| அ.சா.பொ–52 | கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலை கைதிகள் அறை எண்.3ன் சுவற்றில் இருந்து சேகரிப்பட்ட இரத்த தடய மாதிரிகள் ( மொத்தம் 8) 21 முதல் 28 | –do– |
| அ.சா.பொ–53 | 1 முதல் 10 எதிரிகளின் புகைப்படங்கள் | –do– |
| அ.சா.பொ–54 | கிங் எலக்ரிக்கல்ஸ் சிசிடிவி காட்சிகளில் உள்ள 18.06.2020, 19.06.2020–ம் தேதிய வீடியோ பதிவு தொடர்பான புகைப்படங்கள் மற்றும் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையின் 20.06.2020–ம் தேதிய சிசிடிவி பதிவிலிருந்து எடுக்கப்பட்டுள்ள புகைப்படங்கள் | –do– |
| அ.சா.பொ–55 | Cooperative Society, Kings Electricals, சாத்தான்குளம் அரசு மருத்துவமனை, Subbulakshmi textiles, TMT Bank, CCTV சம்மந்தமான காட்சி கோப்புகள் அடங்கிய Sony 2 GB Pendrive | –do– |
| அ.சா.பொ– | வீடியோ பதிவு தொடர்பான | –do– |

| | | |
|---|---|---|
| 56 | காட்சிகளுடன் ஒப்பாய்வு செய்ய அனுப்பிவைக்கப்பட்டுள்ள பென்னிக்ஸ், ஜெயராஜ் , ஸ்ரீதர், பாலகிருஷ்ணன், முத்துராஜ் ஆகியோரது புகைப்படங்கள் | |
| அ.சா.பொ–57 | Pendrive containing Annexure 1, A, B & C (4 envelopes) mentioned in ExP 249 | –do– |

IV) எதிரி தரப்பு சாட்சிகள்

| | | |
|---|---|---|
| எ.சா.1 | திரு.ஸ்ரீதர் | 1–ம் எதிரி |
| எ.சா.2 | திரு.பாலசுந்தரம் | Alibi குறித்த 1–ம் எதிரி தரப்பு சாட்சி |
| எ.சா.3 | திரு.சிலுவைராஜ் | Alibi குறித்த 1–ம் எதிரி தரப்பு சாட்சி |
| எ.சா.4 | திரு.குருசாமி | Alibi குறித்த 1–ம் எதிரி தரப்பு சாட்சி |
| எ.சா.5 | திரு.மாசாணமுத்து | Alibi குறித்த 1–ம் எதிரி தரப்பு சாட்சி |
| எ.சா.6 | திரு.முத்துசுடலை | Alibi குறித்த 1–ம் எதிரி தரப்பு சாட்சி |
| எ.சா.7 | திரு.சுரேஷ் | Alibi குறித்த 1–ம் எதிரி தரப்பு சாட்சி |
| எ.சா.8 | திருமதி.இசக்கியம்மாள் | 7–ம் எதிரியின் மனைவி |
| எ.சா.9 | திரு.செல்லதுரை | 7–ம் எதிரி |
| எ.சா.10 | திருமதி.ஜெயந்தி | நிர்வாக அலுவலர் Directorate of Medical and Rural Health Service Department |

V) எதிரி தரப்பு சான்றாவணங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| எ.சா.ஆ.1 | ––– | சாத்தான்குளம் காவல் நிலைய Sentry relief book | அசல் | அ.சா.44 ப்யூலா செல்வகுமாரியை 7ம் எதிரி தரப்பு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | குறுக்கு விசாரணை செய்கையில் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| எ.சா.ஆ.2 | --- | சாத்தான்குளம் காவல் நிலைய போது நாட்குறிப்பு | அசல் | அ.சா.44 ப்யூலா செல்வகுமாரியை 5ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை செய்கையில் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| எ.சா.ஆ.3 | 09.12.2022 | குவிமுச பிரிவு 164ன் கீழான விசாரணைக்கு13.12.2022 ன் தேதி ஆஜராக சாட்சி ரேவதிக்கு அனுப்பப்பட்டுள்ள அழைப்பாணை | அசல் | அ.சா.47 ரேவதியை 4ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை செய்கையில் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| எ.சா.ஆ.4 | 15.02.2023 | 1ம் எதிரியின் வாகன ஓட்டுநர் எழுதிய தினசரி டைரியை ஒப்படைக்கக்கோரி 1ம் எதிரி சமர்பித்துள்ள மனு மற்றும் அது தொடர்பாக சமர்பிக்கப்பட்டுள்ள RTI பதில் | அசல் | அ.சா.26 ஜெயசேகரை 1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை செய்கையில் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| எ.சா.ஆ.5 | | Remand report-ல் நீதித்துறை நடுவர் எழுதியுள்ள குறிப்பு | | அ.சா 50 பாரதிதாசன் 1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை செய்கையில் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| எ.சா.ஆ.6 | --- | சாட்சி செல்வராணி, | நீதிமன்ற | அ.சா.51 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஜோசப், துரை, அர்வின், வீரபாண்டியன் ஆகியோர்களது குவிமுச பிரிவு 161 (3 ) ன்கீழான வாக்குமூலம் | சான்றிட்ட நகல் | அனில்குமாரை 3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை செய்கையில் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| எ.சா.ஆ.7 | 02.07.2020 | எதிரிகள் முருகன், பாலகிருஸ்ணன், ஸ்ரீதர் ஆகியோர்களது காவல் அடைப்பு உத்தரவு | அசல் | அ.சா.51 அனில்குமாரை 1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை செய்கையில் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| எ.சா.ஆ.8 | 02.07.2020 | கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களிடம் நீதிசார் பிரேத விசாரணையில் ஜெயசேகர் கொடுத்துள்ள வாக்குமூலம் | உண்மை நகல் | அ.சா.52 விஜய்குமார் சுக்லாவை 1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை செய்கையில் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| எ.சா.ஆ.9 | 27.08.2020 | இரவிச்சந்திரன் CBI விசாரணையில் குவிமுச பிரிவு 161(3) ன் கீழ் கொடுத்துள்ள வாக்குமூலம் | அசல் | அ.சா.52 விஜய்குமார் சுக்லாவை 1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை செய்கையில் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| எ.சா.ஆ.10 | | குவிமுச பிரிவு 161(3) ன் கீழ் ரேவதி கொடுத்துள்ள வாக்குமூலம் | அசல் | அ.சா.52 விஜய்குமார் சுக்லாவை 1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை செய்கையில் குறியீடு செய்யப்பட்டுள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| எ.சா.ஆ.11 | --- | 1ம் எதிரி தாக்கல் செய்துள்ள எ.சா.2ன் ஆதார் அட்டை | ஜெராக்ஸ் நகல் | 1ம் எதிரி மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| எ.சா.ஆ.12 | --- | 1ம் எதிரி தாக்கல் செய்துள்ள எ.சா.3ன் ஆதார் அட்டை | ஜெராக்ஸ் நகல் | -do- |
| எ.சா.ஆ.13 | --- | 1ம் எதிரி தாக்கல் செய்துள்ள எ.சா.4ன் ஆதார் அட்டை | ஜெராக்ஸ் நகல் | -do- |
| எ.சா.ஆ.14 | --- | 1ம் எதிரி தாக்கல் செய்துள்ள எ.சா.6ன் ஆதார் அட்டை | ஜெராக்ஸ் நகல் | -do- |
| எ.சா.ஆ.15 | --- | 1ம் எதிரி தாக்கல் செய்துள்ள எ.சா.7ன் ஆதார் அட்டை | ஜெராக்ஸ் நகல் | -do- |
| எ.சா.ஆ.16 | --- | திரு.முத்து- ஆதார் அட்டை | ஜெராக்ஸ் நகல் | -do- |
| எ.சாஆ.17 | --- | 1ம் எதிரி தாக்கல் செய்துள்ள ஆவணம்- போனிலிருந்து எடுக்கப்பட்ட சினாப்சாட் போல் உள்ளது | ஜெராக்ஸ் நகல் | -do- |
| எ.சா.ஆ.18 | --- | 1ம் எதிரி தாக்கல் செய்துள்ள திரு.முத்துகுமார் என்பவரது ஆதார் அட்டை | ஜெராக்ஸ் நகல் | -do- |
| எ.சா.ஆ.19 | --- | 1ம் எதிரி தாக்கல் செய்துள்ள 19.06.2020ம் தேதியிட்ட Daily diary (2 pages) | அசல் தனிதாள்கள் | -do- |
| எ.சா.ஆ.20 | --- | 1ம் எதிரி தாக்கல் செய்துள்ள 20.06.2020ம் | அசல் தனிதாள்கள் | -do- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தேதியிட்ட Daily diary (1 page) | | |
| எ.சா.ஆ.21 | --- | சாட்சி எ.சா.2 தாக்கல் செய்துள்ள எ.சா.2ன் ஆதார் அட்டை | ஜெராக்ஸ் நகல் | எ.சா.2 பாலசுந்தரம் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| எ.சா.ஆ.22 | --- | சாட்சி எ.சா.3 தாக்கல் செய்துள்ள எ.சா.3ன் ஆதார் அட்டை | ஜெராக்ஸ் நகல் | எ.சா.3 சிலுவைராஜ் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| எ.சா.ஆ.23 | --- | சாட்சி எ.சா.4 தாக்கல் செய்துள்ள எ.சா.4ன் ஆதார் அட்டை | ஜெராக்ஸ் நகல் | எ.சா.4 குருசாமி மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| எ.சா.ஆ.24 | --- | சாட்சி எ.சா.5 தாக்கல் செய்துள்ள எ.சா.5ன் ஆதார் அட்டை | ஜெராக்ஸ் நகல் | எ.சா.5 மாசாணமுத்து மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| எ.சா.ஆ.25 | --- | எ.சா.6ன் ஆதார் அட்டை | ஜெராக்ஸ் நகல் | எ.சா.6 முத்துசுடலை மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| எ.சா.ஆ.26 | --- | எ.சா.7ன் ஆதார் அட்டை | ஜெராக்ஸ் நகல் | எ.சா.7 சுரேஷ் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| எ.சா.ஆ.27 | --- | எ.சா.பொ.1ல் உள்ள 6 ஆவணங்கள் | CD-ல் உள்ளது | எ.சா.8 இசக்கியம்மாள் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| எ.சா.ஆ.28 | --- | 7ம் எதிரியின் மனைவி இசக்கியம்மாள் சமர்பித்துள்ள BNS 63(4)(C)(part A) சான்றிதழ் | அசல் | -do- |
| எ.சா.ஆ.29 | --- | 7ம் எதிரி RTI-ல் கோரியுள்ள விண்ணபத்தை சிறைத்துறை | அசல் | எ.சா.9 செல்லதுரை மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதிகாரிகள் சம்மந்தப்பட்ட துறைக்கு அனுப்பி வைத்துள்ளதற்கான ஆவணம் | | |
| எ.சா.ஆ.30 | --- | RTI மூலம் 7ம் எதிரி பெற்றுள்ள பதில் | அசல் | -do- |
| எ.சா.ஆ.31 | --- | 7ம் எதிரியிடமிருந்து CBI வழக்குறைஞர் பெற்று சமர்பித்துள்ள ஆவணம் | அசல் | -do- |
| எ.சா.ஆ.32 | --- | 7ம் எதிரி சமர்பித்துள்ள BNS 63(4)(C)(part A) சான்றிதழ் | அசல் | -do- |
| எ.சா.ஆ.33 | | சாத்தான்குளம் காவல்நிலைய சுற்றுக்காவல் விடுப்பு பதிவேட்டில் பக்கம் 215ல் உள்ள முதலாவது கையெழுத்து | அசல் | -do- |
| எ.சா.ஆ.34 | | கோவில்பட்டி கிளைச்சிறைச்சாலை கைதிகள் அனுமதி பதிவேட்டில் பக்கம் 37ல் உள்ள 7ம் எதிரி செல்லதுரையின் கையெழுத்து | அசல் | -do- |

எதிரி தரப்பு சான்று பொருள்கள்: -

| | | |
|---|---|---|
| எ.சா. பொ.1 | 7ம் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 6 ஆவணம் அடங்கிய CD-1 | எ.சா.8 இசக்கியம்மாள் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| எ.சா. பொ2 | 7ம் எதிரியின் மனைவி சமர்பித்துள்ள Vivo செல்போன் | எ.சா.8 இசக்கியம்மாள் மூலம் குறியீடு |

| | | |
|---|---|---|
| | | செய்யப்பட்டுள்ளது |
| எ.சா. பொ.3 | 7ம் எதிரியின் மனைவி சமர்பித்துள்ள Vivo செல்போனுக்கான Charger | எ.சா.8 இசக்கியம்மாள் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |
| எ.சா. பொ.4 | 7ம் எதிரியின் மனைவி சமர்பித்துள்ள Vivo செல்போனுக்கான Cable | எ.சா.8 இசக்கியம்மாள் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது |

<u>நீதிமன்ற சாட்சிகள்</u>

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.1 | திருமதி.தேவி ரக்ஷா | 12.01.2026 தேதி சாத்தான்குளம் நீதித்துறை நடுவராக பணியாற்றியுள்ள நீதித்துறை நடுவர் |
| நீ.ம.சா.2 | திரு.மாரியப்பன் | 19.01.2020ம் தேதி தூத்துக்குடி SPஅலுவலகத்தில் தொலைநுட்பப் பிரிவில் பணியாற்றியுள்ள உதவி ஆய்வாளர் |
| நீ.ம.சா.3 | திரு.கிருஷ்ணசாமி | 19.01.2020ம் தேதி தூத்துக்குடி SPஅலுவலகத்தில் தொலைநுட்பப் பிரிவில் பணியாற்றியுள்ள காவல் ஆய்வாளர் |
| நீ.ம.சா.4 | திருமதி. சுதர்சனா | 06.02.2026ம் தேதி மதுரை மாவட்ட Cyber Crime காவல் நிலையத்தில் பணியாற்றியுள்ள சார்பு ஆய்வாளர் |
| நீ.ம.சா.5 | திருமதி.ஜெயந்தி | |
| நீ.ம.சா.6 | திரு.ஹிட்டேஸ் | |

| | Chief Examination | Cross Examination |
|---|---|---|
| Pw−1 | 08.04.2021 | 08.04.2021 |
| PW−2 | 21.04.2021 | 22.04.2021<br>23.04.2021 |

| | | |
|---|---|---|
| | | 27.04.2021 |
| PW-3 | 04.08.2021 | 04.08.2021 |
| PW-4 | 11.08.2021 | 11.08.2021 |
| PW-5 | 19.08.2021 | 23.08.2021 |
| Pw-6 | 31.08.2021 | 31.08.2021 |
| PW-7 | 04.09.2021 | 04.09.2021 |
| PW-8 | 17.09.2021 | 17.09.2021 |
| PW-9 | 21.09.2021 | 21.09.2021 |
| PW-10 | 28.09.2021 | 28.09.2021 |
| PW-11 | 04.10.2021 | 04.10.2021 |
| PW-12 | 08.10.2021 | 08.10.2021 |
| PW-13 | 28.10.2021 | 28.10.2021 |
| PW-14 | 12.11.2021 | 12.11.2021 |
| PW-15 | 16.11.2021 | 16.11.2021 |
| PW-16 | 22.11.2021<br>21.01.2026<br>29.01.2026 | -- |
| PW-17 | 26.11.2021 | 26.11.2021 |
| PW-18 | 04.12.2021 | 04.12.2021 |
| PW-19 | 10.12.2021 | 10.12.2021 |
| PW-20 | 16.12.2021 | 21.12.2021 |
| PW-21 | 25.02.2022 | 25.02.2022 |
| PW-22 | 05.03.2022 | 05.03.2022 |
| PW-23 | 10.03.2022 | 10.03.2022 |
| PW-24 | 24.03.2022 | 24.03.2022 |
| PW-25 | 05.04.2022 | 05.04.2022 |
| PW-26 | 07.04.2022 | 14.02.2023<br>16.02.2023<br>21.02.2023<br>22.02.2023<br>24.02.2023 |

| | | |
|---|---|---|
| | | 01.03.2023 |
| PW-27 | 18.04.2022 | 18.04.2022 |
| PW-28 | 23.04.2022 | 23.04.2022 |
| PW-29 | 25.04.2022 | 25.04.2022 |
| PW-30 | 10.06.2022 | 10.06.2022 |
| PW-31 | 14.06.2022 | 14.06.2022 |
| PW-32 | 17.06.2022 | 17.06.2022 |
| PW-33 | 17.06.2022 | 24.06.2022 |
| PW-34 | 12.07.2022 | 12.07.2022 |
| PW-35 | 15.07.2022 | 15.07.2022 |
| PW-36 | 22.07.2022 | 23.06.2023 |
| PW-37 | 29.07.2022 | 29.07.2022 |
| PW-38 | 12.08.2022 | 12.08.2022 |
| PW-39 | 18.08.2022 | 18.08.2022 |
| PW-40 | 23.08.2022 | 10.12.2025 |
| PW-41 | 02.09.2022 | 02.09.2022 |
| PW-42 | 06.09.2022 | 15.12.2025 |
| PW-43 | 13.09.2022 | 07.03.2023<br>14.03.2023<br>21.03.2023<br>28.03.2023<br>31.03.2023<br>10.04.2023<br>18.04.2023 |
| PW-44 | 20.09.2022 | 23.09.2022<br>26.09.2022<br>27.09.2022<br>28.09.2022<br>29.09.2022<br>14.10.2022 |
| PW-45 | 18.10.2022 | 19.10.2022<br>20.10.2022 |

| | | |
|---|---|---|
| PW-46 | 01.11.2022 | 04.11.2022 |
| PW-47 | 13.12.2022 | 16.12.2022<br>20.12.2022<br>23.12.2022<br>03.01.2023<br>06.01.2023<br>09.01.2023<br>10.01.2023<br>20.01.2023<br>23.01.2023<br>27.01.2023<br>31.01.2023<br>01.02.2023<br>06.02.2023<br>10.02.2023 |
| PW-48 | 11.07.2023 | 11.07.2023<br>04.08.2023<br>05.08.2023 |
| PW-49 | 01.09.2023 | 12.09.2023<br>13.09.2023 |
| PW-50 | 25.09.2023<br>26.09.2023<br>04.10.2023<br>05.10.2023 | 06.10.2023<br>16.10.2023<br>17.10.2023<br>18.10.2023<br>19.10.2023<br>20.10.2023<br>06.11.2023<br>07.11.2023<br>12.12.2023<br>13.12.2023<br>14.12.2023<br>15.12.2023<br>20.12.2023<br>21.12.2023<br>22.12.2023<br>03.01.2024<br>04.01.2024<br>05.01.2024 |

| | | |
|---|---|---|
| | | 06.01.2024<br>11.01.2024<br>12.01.2024<br>31.01.2024<br>01.02.2024<br>02.02.2024 |
| PW-51 | 29.02.2024 | 18.03.2024<br>26.03.2024<br>27.03.2024<br>28.03.2024<br>24.04.2024<br>29.04.2024<br>14.06.2024<br>18.06.2024<br>25.06.2024<br>28.06.2024<br>06.08.2024<br>09.08.2024<br>30.08.2024<br>24.09.2024<br>25.09.2024<br>26.09.2024 |
| PW-52 | 26.11.2024<br>27.11.2024<br>07.01.2025<br>08.01.2025<br>22.01.2025<br>23.01.2025<br>12.02.2025<br>13.02.2025<br>17.03.2025 | 17.03.2025<br>18.03.2025<br>19.03.2025<br>03.06.2025<br>05.08.2025<br>06.08.2025<br>07.08.2025<br>02.09.2025<br>03.09.2025<br>04.09.2025<br>16.09.2025<br>17.09.2025<br>18.09.2025<br>19.09.2025<br>20.09.2025<br>19.12.2025 |

| | | |
|---|---|---|
| Dw–1 | 30.01.2026 | 02.02.2026 |
| DW–2 | 04.02.2026 | 04.02.2026 |
| DW–3 | 04.02.2026 | 04.02.2026 |
| DW–4 | 04.02.2026 | 04.02.2026 |
| DW–5 | 04.02.2026 | 04.02.2026 |
| DW–6 | 05.02.2026 | 05.02.2026 |
| DW–7 | 05.02.2026 | 05.02.2026 |
| DW–8 | 06.02.2026 | 06.02.2026 |
| DW–9 | 06.02.2026 | 07.02.2026 |
| DW–10 | 13.02.2026 | Nil |
| CW–1 | 12.01.2026 | Nil |
| CW–2 | 28.01.2026 | Nil |
| CW–3 | 28.01.2026 | Nil |
| CW–4 | 06.02.2026 | Nil |
| CW–5 | 09.02.2026 | Nil |
| CW–6 | 13.02.2026 | 13.02.2026 |

முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

மதுரை